இந்திய அரசாங்கம்

सत्यमेव जयते

ஆட்சி மொழிக் கழக அறிக்கை.

1956

தமிழாக்கம் :

திரு. அ. ச. ஞானசம்பந்தம், எம்.ஏ.

சொல் என்பதில்லையானால் நல்லொழுக்கம், தீயொழுக்கம் என்பவற்றையும், உண்மை, பொய்மை என்பவற்றையும், நன்மை, தீமை என்பவற்றையும், இன்பம், துன்பம் என்பவற்றையும் பகுத்து அறிந்து கொள்ள முடியாது. இவை அனைத்தையும் அறியுமாறு செய்வது சொல்லே. சொல்லைத் தியானம் செய்க.

சாந்தோக்ய — உபநிஷதம், 7–2–1.

சென்னை அரசாங்க செய்தித்துறை வெளியிட்டது.

(ஆ) நீதித் துறையிலும், நீதி வழங்கும் துறையிலும் ஆங்கிலத்தின் பிரத்யேகமான இடம்; இத்துறைகளில் ஏனைய மொழிகள் ஆங்கிலத்தின் இடத்தை எடுத்துக்கொள்வதற்கு ஆகின்ற நீண்ட காலம்;	பகுதி 9, பாரா 3 பகுதி 10, பாரா 4. பகுதி 11, பாரா 1.
(இ) இன்றைய சூழ்நிலையில் ஹிந்தி மொழியின் வளர்ச்சிபற்றிருக்கும் இயல்பு (இந்தியாவிலுள்ள ஏனைய மொழிகளைப் பற்றியும் இவ்வாறு சொல்ல நான் தயார்) அந்தந்தத் துறைகளில் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தி மொழி நுழைவதற்கு முன்னர் அதனை வளர்க்கவேண்டிய தேவை;	பகுதி 4, பாரா 1-ம், 6-ம் பகுதி 5, பாரா 1, பகுதி 15, பாரா 7.

இன்னும் குறிப்பாக ஜனாதிபதிக்கு இந்த இரண்டு மாறுபாட்டுக் குறிப்பெழுதும் அங்கத்தினர்களும், தாங்கள் செய்துள்ள "சிபார்சுகளில் கூட" (டாக்டர் சட்டர்ஜியின் குறிப்பில் "ஆ" பகுதி, டாக்டர் சுப்பராயனின் குறிப்பில் 25) கீழ்க் கண்ட சிபார்சுகள் இந்த அறிக்கையின் சிபார்சுகளைக் காட்டிலும் வேறானவையல்ல :—

(1) யூனியன் ஆட்சி விவகாரங்களில் அனைத்திற்குமோ அன்றி ஒரு சிலவற்றிற்கோ ஆங்கிலத்தைப் பயன் படுத்த எவ்வித தடையும் இருத்தல் கூடாது.	பகுதி 7, பாரா 9.
(2) உயர் நீதி மன்றங்களிலும் மிக உயர் நீதி மன்றத்திலும் இன்னும் நீண்ட காலத்திற்கு ஆங்கிலத்தையே இப்பொழுது உள்ளது போலத் தொடர்ந்து பயன் படுத்தி வரலாம். ராஜ்ய அரசாங்கங்கள் தங்களுடைய கீழ் நிலை நீதி மன்றங்களில் ஆங்கிலத்தோடு சேர்த்துப் பிராந்திய மொழிகளைத் தொடர்ந்து பயன் படுத்தி வரலாம். டாக்டர் சுப்பராயனின் குறிப்பில் பாரா 25 ஆ (2) காண்க.	பகுதி 10, பாராக்கள் 8, 9, 15. பகுதி 11, பாரா 1.
(3) இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தை சௌகரியம் கருதியும் விஞ்ஞானக் காரியங்களுக்காகவும் அகில இந்தியாவிலும் வழங்கும் ஹிந்திக்குப் பயன்படுத்திக்கொள்ள ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆனால் பிராந்திய மொழியாகவுள்ள ஹிந்தியில் எண்களின் ஹிந்தி வடிவத்தையே தொடர்ந்து பயன்படுத்தவும் அவ்வாறு பயன்படுத்தும்பொழுது பன்னாட்டு வடிவத்தைப் பக்கத்திலேயோ அன்றி அடுத்தடுத்தோ பயன்படுத்தவும் வேண்டும்.	பகுதி 8, பாராக்கள் 8, 9.
(4) ஒரு மொழியை நாம் வேண்டுகின்ற முறையில் வளர்த்தல் இயலாத காரியம். எனவே அந்த மொழி தானாக வளர்ச்சியடைவதற்கு முன்னர்க் கால அட்டவணை தயாரித்தல் பயனற்றதும் பொறுமையைச் சோதிப்பதுமாகும். எனென்றால் கொண்டு செலுத்த முடியும் என்பது பற்றி உறுதியாக ஒன்றும் சொல்வதற்கில்லை.	பகுதி 15, பாரா 10. பகுதி 7, பாரா 17.
(5) ராஜ்யங்கள் தம்முடைய ஆட்சி விவகாரங்கட்குத் தேவையென்று விரும்பினால் தம்முடைய பிராந்திய மொழியையே பயன் படுத்திக் கொள்ளலாம். ராஜ்யப் பொதுப் பணிக் கழகம் நடத்தும் தேர்வுகள் அப்பிராந்திய மொழியிலேயே இருக்கலாம். மாணவர்கள் விரும்பினால் ஆங்கிலத்திலேயோ அல்லது ஹிந்தியிலேயோ விடை எழுத உரிமை இருக்க வேண்டும்.	பகுதி 8, பாரா 2. பகுதி 12, பாரா 19.

பின் குறிப்பு.—மேல் (5)-ல் கூறப்பட்டுள்ளது டாக்டர் சுப்பராயனின் குறிப்பில் இல்லை.

8. இந்த இரண்டு மாறுபாட்டுக் குறிப்புகளும் எந்த அடிப்படையில் மாறுபடுகின்றன என்ற விவரம் கீழ்க்கண்ட குறிப்பில் காணப்படுகிறது :—

" யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்தும் செய்கையை இப்பொழுதைக்கு ஒத்திப் போட வேண்டும். . . . . . . பல்வேறு பிராந்திய மொழிகளையும் பயன் படுத்துகின்ற ராஜ்யங்கள் தாமே ஹிந்தி மொழியை ஏற்றுக்கொண்ட பிறகு அம்மொழி அந்நாட்டிலுள்ள அறிவாளிக் கூட்டத்தில் / அந்நாடு முழுவதிலும் பரவி உள்ளதா என்பதை அந்த ராஜ்யங்களே முடிவு செய்ய வேண்டும்.

அதன் பின்னரே யூனியனுக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்கும் இடையேயும் ராஜ்ய அரசாங்கங்கள் தம்முள்ளும் வழங்குவதற்கு இம்மொழியை எவ்வளவு தூரம் பயன் படுத்தலாம் என்று அந்த ராஜ்ய அரசாங்கங்களே முடிவு செய்ய வேண்டும்."

மேலும் ஆங்கில மொழி 8-வது ஷெட்யூலில் ஒரு மொழியாக இடம் பெற வேண்டும் என்று சிபாரிசு செய்கிறார். டாக்டர் சட்டர்ஜி இந்த ஷெட்யூலில் ஒரு பெரிய மொழிப் பட்டாளத்தையே நுழைக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

அடிப்படையான கருத்து மாறுபாடுகளைப் பொறுத்த மட்டில் இவைகளெல்லாம் இந்த உறுப்பினர்களால் விரிவாக எடுத்துக் கூறப்பட்டன என்றும் கழகத்தார் விரிந்த முறையில் இவற்றை விவாதித்து (கழகத்தின் மே, ஜூன் கூட்டங்களின் குறிப்புக்களைக் காண்க) இறுதியாகத் தன்னுடைய முடிவுகளைச் செய்துள்ளது என்று மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்ளுகிறேன்.

ஷெட்யூலில் புதிய மொழிகளைச் சேர்ப்பது பற்றி இவ்வறிக்கையின் பகுதி 4, பாரா 19-ஐ கவனிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். அதில் இவ்விஷயம் நன்கு பேசப்படுகிறது. மாறுபாட்டுக் குறிப்பு எழுதும் உறுப்பினர்கள் அதில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்காவது விடை அளித்திருக்கலாம். மீண்டும் ஒரு முறை சொல்லப்பட்டதைத் திருப்பிச் சொல்வதனால் விஷயம் நன்கு விளங்கிவிடும் என்று எதிர்ப்பார்ப்பது பொருத்தமற்றது.

பொதுவாக அம்மாறுபாட்டுக் குறிப்புக்களைப் படிப்பவர்கள் கீழ்க் கண்ட கருத்துக்களைப் பெறுவார்கள். (1) முக்கிய அறிக்கை ஆங்கிலத்தை ஒழித்துவிட முயலுகின்றது. (2) அவ்வாறு செய்ய முயலும்பொழுது வேறு காரணங்களில்லாமல் ஆங்கிலத்தின் மேல் கொண்ட வெறுப்புக் காரணமாகவும் உணர்ச்சி காரணமாகவுமே இது செய்யப்படுகிறது. (3) பிராந்திய மொழிகளுக்குரிய பகுதிகளில் ஹிந்தியைத் திணிக்க இம்த அறிக்கை முயலுகிறது. (4) ஹிந்தியினுடைய வளர்சியற்ற இன்றைய[1] நிலையை கவனிக்காமலேயே இம்முயற்சிகளை இவ்வறிக்கை செய்கிறது. (5) ஆங்கிலத்தை உடனடியாக நீக்கி ஹிந்தியை அவ்விடத்தில் வைக்க முயலுகின்றது. சாதாரணமாக இவ்வறிக்கையை மேலாகப் படிக்கின்ற ஒருவர்கூட இக்கருத்துக்கள் இவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளவற்றிற்குப் புறம்பானவை, நியாயமற்றவை என்பதை அறிய முடியும்.

9. ஸ்ரீ மகன் பாய் தேசாயின் நீண்ட விளக்கக் குறிப்பைப் பொறுத்த மட்டில் அது அறிக்கையில் அந்த அந்த இடங்களில் கூறப்பட்டிருப்பதைத் திருப்பிக் கூறுவதாகவே உள்ளது. இந்தக் குறிப்பில் மாறுபாட்டுப் பகுதியாக நாம் காணுகின்றவை இவைதாம் :—

(1) ராஜ்ய அரசாங்கங்கள் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் கடமையை மேற்கொள்ளத் தக்கபடி அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க வேண்டும்.

(2) முக்கிய அறிக்கையில் ஹிந்தி பேசும் மாணவர்கள் ஹிந்தியல்லாத ஒரு இந்திய மொழியை கற்றுக்கொள்வதைப் பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்கு மாறுபடுகிறார் ஸ்ரீ மகன் பாய். இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள சில சொற்கள் சொல்லாட்சிகள் ஆகியவை பற்றித் தம மனக் கருத்தையும் மாறு பாட்டையும் தெரிவித்துள்ளார். இங்ஙனம் எடுத்துக்

---

[1] இந்த மேற்கோளிலும், இதனை அடுத்து வருகின்ற மேற்கோளிலும் டாக்டர் சுப்பராயன் பயன்படுத்திய வார்த்தைகள் டாக்டர் சாட்டர்ஜியின் வார்த்தைகளிலிருந்து மாறுபட்டிருக்குமேயானால் அவை கோட்டின் கீழ்ப் பகுதியாகக் குறிக்கப்பட்டுள்ளது.

காட்ட வேண்டுமேயானால் இவ்வறிக்கை தயாரிக்கப்படும்பொழுது எடுத்துக் காட்டி இருக்க வேண்டும் என்று அவருக்குக் கூறியுள்ளோம். ஏனையோருடன் அவருடைய ஒத்துழைப்பும் பெற்றே இது தயாரிக்கப்பட்டது.

ஸ்ரீ மகன் பாய் தேசாய் அவர்களை இவ்வளவு பெரிய குறிப்பை எழுதி அதனால் கற்பவர் மனத்தில் குழப்பம் உண்டாகாமல் செய்ய என்னால் முடிந்த அளவு தடுத்தேன். அவரைத் தடுக்க முடியாமல் போனதற்குப் பெரிதும் வருந்துகிறேன்.

10. டாக்டர் சுப்பராயன், டாக்டர் சாட்டர்ஜி ஆகிய இருவரின் குறிப்புக்களைப் பொறுத்த மட்டில் நான் எவ்வளவு வேண்டிக்கொண்டும் அவர்களுடைய குறிப்பிலுள்ள சில வருந்தத் தகுந்த கருத்துக்களை எடுக்க மறுத்துவிட்டார்கள் என்பதையும் மிக்க வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்தியாவில் " இரண்டு வகையான பிரஜைகள் " தோன்றுவார்கள் என்றும் "ஹிந்தி ஏதேச்சாதிகாரம்" என்றும் சொல்லப்பட்டவற்றையும், ஹிந்தி மொழியின் பண்பாட்டு மதிப்பு, அதனுடைய அறிவு மரபு ஆகியவற்றைப் பற்றிச் சொல்லப்பட்டிருப்பதும் மிகவும் துர்ரதிர்ஷ்டமானவை.

அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்று அவர்கள் கூறியது ஒரு புறம் இருக்கக் கீழ் கண்ட சொற்களால் அரசியலமைப்பையே குறிப்பாக குற்றஞ்சாட்டப் புகுந்தார்கள் அவர்கள் என்பதையும் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன் :—

" அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் எடுத்துக் கூறப் பெற்றுள்ள 14 முக்கிய மொழிகளிலிருந்து ஹிந்தி மொழி இந்தியாவின் அரசியல் சபையால் பொறுக்கியெடுக்கப்பட்டதே தவிர நியாயமான முறையில் / நேரடியான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய பாராளு மன்றத்தால் அன்று.[1] " (கீழ்க் கோடிட்டுள்ளது நானாகச் செய்துள்ளது.) டாக்டர் சுப்பராயனின் குறிப்பில் எட்டாவது பாராவையும், டாக்டர் சுனீதி குமார் சட்டர்ஜியின் குறிப்பு இ(2) யும் காண்க.

11. முக்கிய அறிக்கையைப் பொறுத்த மட்டில் அதன் பல பகுதிகளைத் தவறான முறையிலும், நிரூபிக்க முடியாத முறையிலும் இக் குறிப்புகள் பேசுகின்றன. அவற்றை எடுத்துக் காட்டியும்கூட அவர்கள் அவற்றைத் திருத்த மறுத்து விட்டார்கள். அத்தகையவற்றுள் சிலவற்றை இங்கே உதாரணமாகக் காட்டுகிறோம் :—

(1) டாக்டர் சாட்டர்ஜியின் குறிப்பு பிரிவு ஏ, பாரா 3-லும், டாக்டர் சுப்பராயனுடைய குறிப்பு பாரா 2-லும் கீழ்க்கண்டவாறு எழுதப்பெற்றுள்ளது :—

" அது (இந்த அறிக்கை) ஹிந்தி பேசாத மக்களின் எதிரே முடிவான சில கருத்துக்களை வைத்து ஆங்கில மொழியை ஹிந்தியின் மூலம் நீக்குவதற்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் செய்வது தேசப் பற்றோடு கூடிய கடமையாகும் என்று சொல்வதுபோல உள்ளது. மேலும், நீதி ஆட்சித்துறைகளில் அடிப்படையில் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு ஹிந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், கல்வித் துறையிலும் அவ்வாறே செய்ய வேண்டுமென்றும் அதன் பயனாக வாழ்க்கையின் அகத்துறைப் பகுதிகளிலும் கூட "

வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் கூட

இந்த அறிக்கையை மேலாகப் படிக்கின்றவர்களும் கூடக் கோடிட்டுள்ள பகுதிகள் அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதற்கு எவ்வாறு முற்றிலும் முறணாக உள்ளது என்பதை அறிந்து கொள்வர்.

---

[1] ஆறும் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைத் தயவு செய்து காண்க.

(2) டாக்டர் சாட்டர்ஜி தம்முடைய குறிப்பில் " இ " (12)-ல் அகில இந்தியப் பொதுப் பணிப் பரீட்சைகளுக்கு ஹிந்தியை மட்டும் இடைநிலை மொழியாக வைப்பதன் நியாயமற்ற தன்மையை விவாதித்துள்ளார். மேலும் ஹிந்தி மொழி பேசாதவர்கள் ஹிந்தியின் மூலமே அனைத்தையும் படித்து வினாக்களுக்கு ஹிந்தியிலேயே விடை அளிக்க வேண்டிய சூழ் நிலை எற்படும் என்றும் கூறியுள்ளார். இத்தகைய ஒரு கருத்து அறிக்கையில் கூறப்படவில்லை. மேலும் ஏனைய பிராந்திய மொழிகளும்கூட இப்பரீட்சைகளுக்கு இடை நிலை மொழியாக ஆவதற்குரிய தகுதியுடையவை என்று சொல்லப்பட்டுள்ளது.

(3) " அரசியலமைப்பில் யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தியைப் பயன் படுத்த வேண்டும் என்று சொல்லியுள்ள பகுதிகள் சில சந்தர்ப்பங் களில் இந்த அறிக்கையில் நீட்டப்பட்டுள்ளன." (அடிக்கோடு என்னுடையது) இவ்வாறு சொல்வது முற்றிலும் தவறானது.

இந்தப் குறிப்புக்களில் பெரும் பகுதி புதுமையான சில கருத்துக்களை வெளியிட்டு அவற்றிற்கு எதிராக விவாதம் செய்யத் தொடங்குகிறது. அக்கருத்துக்கள் இந்த அறிக்கையில் உள்ளவையல்ல. இந்த அறிக்கை அத்தகைய கருத்துக்களை எப்பொழுதும் சிந்தித்ததும் இல்லை. எனவே முக்கிய அறிக்கையோடு சேர்ந்து இக்குறிப்புக்கள் ஒட்டப்பட்டிருத்தலின் முக்கிய அறிக்கையின் உட் கருத்துப் பற்றிய தவறான எண்ணத்தையும் இது உண்டாக்கக்கூடும்.

12. டாக்டர் சுப்பராயன் தம்முடைய குறிப்பில் தாம் சொல்லிய கருத் துக்களை " வங்காளம், சென்னை, மைசூர் ஆகிய பகுதிகளில் சான்று பகர்ந்த பலரும், ஏனைய ராஜ்யங்களிலுள்ள சிறந்த அனுபவசாலிகளும் கற்றறிந்த பெரியோர்களும் " ஆதரிக்கின்றார்கள் என்று கூறியுள்ளார். மெய்ம்மையை எடுத்துச் சொல்ல வேண்டிய நான் இவ்வாறு அவர் பொதுப் படை யாகச் சொல்லியது மெய்ம்மைக்குப் புறப்பானது என்று மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மேலும் (அவருடைய குறிப்பின் 18 பாராவின் முடிவில்) அவர் தம்முடைய கருத்து சான்று பகர்ந்தவர்கள் சிலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றும் சொல்லியுள்ளார். மாறுபாட்டுக் குறிப் பெழுதிய இந்த இரண்டு உறுப்பினர்களும் சான்று பகர்ந்த பிரசித்தி பெற்ற பெரியோர்களின் கூற்றுக்களை இங்ஙனம் அவற்றின் சூழ்நிலையி லிருந்து பிரித்துக் காட்டுவது எவ்வளவு தூரம் தவறான எண்ணத்தை உண்டாக்கும் என்பதையும் அறிய வேண்டும்.

13. கீழ்க்கண்டவற்றையும் நான் எழுதவேண்டும். இந்த அறிக் கையைத் தயாரித்து முடிவுகளைச் சொல்ல வேண்டிய சந்தர்ப்பத்தில் இந்த இரண்டு உறுப்பினர்களும் மொழியைப் பற்றிப் பேசும் அரசிய லமைப்பின் 17-வது பிரிவைத் தக்க முறையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறினார்கள். இந்தக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கை என்ன வென்றால்: அரசியலமைப்பின் சில குறிப்பிட்ட எற்பாடுகளை எங்ஙனம் கொண்டு செலுத்த வேண்டும் என்பதை ஆராய்வதற்கே ஆகும். ஆனால் இந்த உறுப்பினர்கள் அதே எற்பாடுகளைத் திருத்தி மாற்றி அமைக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆதலால் இக்கூற்றைக் கழகம் நிராகரிக்க உரிமையுண்டு. மெய்ம்மையைக் கூறுமிடத்துக் கழகத்தின் ஏனைய உறுப் பினர்கள் இதை முன்னரே தெரிவித்தார்கள். இவ்விஷயம் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்த பிறகு—இவ்வாறு கருதுவது நியாயமானதும், சட்ட பூர்வமானதும் ஆகுமா என்பதை முடிவு செய்யும் உரிமையை நானே வைத்துக் கொள்கிறேன். இதனை அறிக்கையில் எற்றுக் கொள்ளாமல் விடுவது பொருத்தமில்லை என்ற முடிவுக்கு வந்தேன். குறிப்பிட்ட சில பிரச்னைகளை மறைப்பதும், அவற்றை வெளியிடவேண்டாம் என்று தடுப் பதும் நன்மையைவிட அதிகம் தீமையையே செய்யும் என்று உறுதியாக நம்புகிறேன். நாட்டு மக்கள் " ஒருவருக் கொருவர் சொந்தமானவர் " என்ற மனப்பான்மையோடு வாழ்கிறார்கள் என்பதை நான் நம்பு

கிறேன். எனவே ஒருவருடைய கருத்து எவ்வளவு முறணனதாக இருப்பினும் அதனைத் தடைசெய்யக்கூடாதென்றும் நம்புகிறேன். ஆழ்ந்து சிந்திக்கும் சக்தியுடைய பொது மக்கள் விஷயத்தின் தரம் அறிந்து முடிவு செய்வார்கள் என்று நம்பலாம். இக்காரணங்களினல் இந்த இரண்டு மாறுபாட்டுக் குறிப்புக்களும் வெளியிடப்படுவதை நான் தடுக்க வில்லை. இந்தக் கழகம் தன்னுடைய விசாரணை நடத்தும் பொழுது கழக உறுப்பினருள் இதனைப் பிரசாரம் செய்த இவ்விருவரையும் நான் தடைசெய்ய வில்லை.

14. இந்திய அரசாங்கத்தின் அனுமதியை ஏற்று இக்கழகத்தின் செயலாளர் யூ.எஸ்.எஸ்.ஆர்.-க்கு அனுப்பப்பட்டார். அந்த நாட்டில் மொழிப் பிரச்னை எவ்வாறு தீர்க்கப்படுகிறதென்பதை அறிந்து வந்து சொல்லுமாறு ஒரு குறிப்பிட்ட குறைந்த கால அளவு அவருக்கு ஒதுக்கப்பட்டது. அவர் தந்த குறிப்பும் இதனுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுகிறது.

தங்கள் அன்புள்ள,

பி. ஜி. கர்,

தலைவர்,

ஆட்சி மொழிக் கழகம்.

உள்ளுறை

I. முகவுரை

II தற்கால உலகில் மொழியின் இடம்

III இந்தியாவில் பல்வேறு மொழிகளின் நிலை

IV இந்திய மொழிப் பிரச்னையும் அதற்குக் காணும் முடிவின் உருவமும்

VII பொது ஆட்சித் துறையில் மொழியின் இடம்–1

1. யூனியன் ஆட்சி மொழி.

VIII பொது ஆட்சித் துறையில் மொழியின் இடம்–2

ராஜ்ய ஆட்சி விவகாரங்களில் ஹிந்தியை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி.

XI நீதிமன்றங்களும் சட்ட மொழியும்–3

மாற்றத்தின் இயக்க வகை இயல்.

பகுதி. பக்கம்.

பிற்சேர்க்கைகள்

பகுதி I

முகவுரை

1. இந்திய அரசியல் அமைப்பின் 344-வது பிரிவு வருமாறு :—

"இந்த அரசியல் அமைப்புத் தொடங்கிய 5 வருஷங்களின் முடிவிலும், அதனை அடுத்து, இந்த அமைப்புத் தொடங்கிய 10 வருஷங்களின் முடிவிலும் ஜனாதிபதி ஒரு கழகத்தை நியமிப்பார். அந்தக் கழகத்தில் ஒரு தலைவரும் பல்வேறு மொழிகளின் பிரதிநிதிகளாகவுள்ள உறுப்பினர்களும் இருப்பார்கள். இவர்கள் 8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள பிரிவின்படி ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர் . . ." மேலும், அதே பிரிவு கூறுவதாவது : "ஜனாதிபதி, மேலும் ஒரு குழுவை நியமிப்பார். அதில் 30 அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்களுள் மக்கள் சபையிலிருந்து 20 பேரும், ராஜ்ய சபையிலிருந்து 10 பேருமாக, அந்த அந்த சபைகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இத்தேர்வு முறை மாற்று முறை ஒற்றை ஓட்டுக்களால் தெரிவு செய்யப்படும்". இப்படித் தெரிவு செய்யப்பட்ட குழு, கழகத்தார் செய்கின்ற சிபார்சுகளை ஆராய்ந்து தம்முடைய முடிவை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கும். ஜனாதிபதி அந்த முடிவை ஆராய்ந்து முழுவதும் அதனை ஏற்றுக்கொண்டோ அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டோ தம் உத்தரவைப் பிறப்பிப்பார். அரசியல் அமைப்பு 343-ல் சொல்லப்பட்ட யூனியன் ஆட்சி மொழிக்குச் சம்பந்தமான கொள்கைகளுக்கு இது புறம்பாகவும் இருக்கலாம்.

344-வது பிரிவின்படி இந்தக் கழகம் "ஆட்சிமொழிக் கழகம்" என்ற பெயரில் 1955-ம் வருஷம் ஜூன்மீ மாதம் 7-ம் தேதி ஜனாதிபதியின் ஆணையின்மேல் நிறுவப்பெற்றது. இந்திய யூனியனின் உள்நாட்டிலாகாவின் அறிக்கை நெம்பர் : 43/9/55-பொதுத்துறை-1 (பிற்சேர்க்கை 2)-ல் இந்த உத்திரவு உள்ளது. இந்தக் கழகத்தின் அமைப்பு முறையும், செய்யவேண்டிய தொழில் முறையும் குறித்துக் கீழ்க்கண்ட நிர்மாணக் கோரிக்கைகள் தரப்பட்டுள்ளன.

நிர்மாணக் கோரிக்கைகள்

ஜனாதிபதி அவர்கட்கு இந்தக் கழகம் கீழ்க்கண்டவைகள் பற்றிச் சிபார்சுகள் செய்யவேண்டும் :—

(அ) யூனியன் ஆட்சி முறைக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துவது ;

(ஆ) யூனியன் ஆட்சி முறையில் ஆங்கில மொழி உபயோகத்தைப் படிப்படியாகக் குறைப்பது ;

(இ) அரசியல் அமைப்பின் 348-வது பிரிவில் கூறப்பெற்றுள்ள காரியங்களுக்கு எந்த மொழியை உபயோகிப்பது ? ....

(ஈ) யூனியன் விவகாரங்களுக்கு எந்த வகையான இலக்கங்களை உபயோகிப்பது ?

(உ) யூனியனுக்கும் ராஜ்ய சர்க்கார்களுக்கும் இடையேயும் ; ராஜ்ய சர்க்கார்களுக்கிடையேயும் நடத்தும் கடிதப்போக்குவரத்துகளில் படிப் டியாக ஆங்கிலத்தைக் குறைத்து, ஹிந்தியைப் பயன்படுத்த ஒரு காலவரையறையும் வழிமுறையும் வகுப்பது.

இந்தக் கழகத்தார் தம்முடைய சிபார்சுகளைச் செய்யும்பொழுது ஹிந்தி மொழி வழங்காத பகுதியில் உள்ளவர்களுடைய பொதுப்பணி பற்றிய நியாயமான கோரிக்கைகளையும், நலன்களையும் கவனிப்பதோடு, இந்திய நாட்டின் தொழில்துறை, பண்பாட்டுத்துறை, விஞ்ஞான வளர்ச்சி என்பவற்றையும் கவனத்தில் கொண்டு தம் சிபார்சுகளைச் செய்யவேண்டும்.

இக்கழகம் கீழ்க்கண்டவற்றைப் பெறவும், செய்யவும் உரிமை பெறுகிறது :—

(அ) மத்திய சர்க்காரிடமிருந்தும், ராஜ்ய அரசினரிடமிருந்தும், சுப்ரீம் கோர்ட்டினிடமிருந்தும், உயர்நீதி மன்றங்களிடமிருந்தும், சட்டசபைகளிலிருந்தும், இன்னும் தனிப்பட்ட சங்கங்கள், அமைப்புகளிலிருந்தும், தனிப்பட்ட மனிதரிடமிருந்தும், தங்களுக்குத் தேவைஎன்றுபடும் தகவல்களையும், தங்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படும் தகவல்களையும் எழுத்து மூலம் பெறவோ ; விசாரித்து அறியவோ ; வேறு எந்தெந்த வகைகளில் வேண்டுமானாலும் பெறவோ உரிமை பெறுகிறது ;

(ஆ) தாங்கள் செயற்படும் முறையை வகுக்கவும், கூடுகின்ற இடம், காலம் முதலியனவற்றை முடிவு செய்யவும், பிறர் அறியவோ அறியாமலோ கூடவும், வேண்டிய ஏற்பாடுகளைத் தானே செய்துகொள்வது ;

(இ) கழகத்தார் பிரித்துக்கொடுக்கின்ற தனிப்பட்ட அலுவல்களைக் கவனிக்கவும், அதற்குரிய அதிகாரத்தைப் பெறவும், அந்தக் கொண்டு செலுத்தவும், தகுதி உடைய துணைக் குழுக்களை தன்னுடைய அங்கத்தினர்களிலிருந்தே தெரிவு செய்யும் உரிமையையும் பெறுகிறது ;

(ஈ) இந்தியாவின் எந்த பாகத்திற்கும் போகவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால் இக்கழகமோ அல்லது இதன் துணைக் குழுக்களோ போக உரிமை பெறுகிறது ;

(உ) சட்டத்தில் கூறப்பட்டதற்குப் புறம்பாக எந்த ஒரு அங்கத்தினரும் வாராமல் இருப்பினும், ஒரு ஸ்தானம் காலியாக இருப்பினும், அதுபற்றி அக்கரைப்பட வேண்டியதில்லை.

இந்தக் கழகத்தார், தாங்கள் பெறும் சான்றுகளைக்கொண்டு, தங்கள் சிபார்சுகளை ஜனாதிபதி அவர்கட்கு 1956 வருஷம் ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குப் பிற்படாமல்—வசதிப்பட்டால் முற்கூட்டியே—தெரிவிக்கவேண்டும்.

இக்கழகம் தோன்றிய காலத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் இருந்தார்கள் :-—

கழக உறுப்பினர்கள்.

1 ஸ்ரீ பி. ஜி. கேர், தலைவர்.

2 டாக்டர் பிரிஞ்சி குமார் பருவா, அசாம் மொழித்துறை தலைவர், கௌஹாத்தி பல்கலைக்கழகம், கௌஹாத்தி, அசாம்.

3 டாக்டர் எஸ். கே. சட்டர்ஜி, தலைவர், மேற்கு வங்காள சட்ட மேலவை கல்கத்தா, மேற்கு வங்காளம்.

4 ஸ்ரீ மகன்பாய் தேசாய், குஜராத் வித்யாபீடம், அஹமதாபாத், பம்பாய்.

5 ஸ்ரீ டி. வி. பவதே, துணைவேந்தர், கர்நாடக பல்கலைக்கழகம், பம்பாய்.

6 பேராசிரியர் பி. என். புஷ்ப், அமார்சிங் கல்லூரி, ஸ்ரீநகர், காஷ்மீரம்.

7 ஸ்ரீ எம். கே. ராஜா, ஆசிரியர், தீனபந்து, எர்ணுகுளம், திருவி தாங்கூர்-கொச்சி.

8 டாக்டர் பி. சுப்பராயன், உறுப்பினர் மக்கள் அவை, சென்னை, சென்னை.

9 ஸ்ரீ ஜி. பி. நேநே, ராஷ்டிரபாஷா பவனம், பூனு, பம்பாய்.

10 டாக்டர் பி. கே. பரிஜா, கூட்டுவேந்தர், உட்கல் பல்கலைக்கழகம், கட்டாக், ஒரிசா.

11 சர்தார் தேஜாசிங், முன்னுள் முதல் நீதிபதி, பெப்சு, பேட்டி யாலா, பெப்சு.

12 ஸ்ரீ எம். சத்யநாராயணு, உறுப்பினர், மக்கள் சபை, சென்னை, சென்னை.

13 டாக்டர் பாபுராம் சாக்ஸேனு, வடமொழித் துறைத் தலைவர், அலகா பாத் பல்கலைக்கழகம், அலகாபாத், உத்திரப்பிரதேசம.

14 டாக்டர் ஹபீத் உஸேன், ஜமியா மிலியா, டெல்லி, டெல்லி.

15 டாக்டர் அமர்னுத் ஜா, தலைவர், பொதுப்பணிக் கழகம், பேட்னு, பீஹார்.

16 டாக்டர் ஆர். பி. திருபாதி, துணைவேந்தர், சாகூர் பல்கலைக் கழகம், சாகூர்—மத்தியப்பிரதேசம்.

17 ஸ்ரீ பாலகிருஷ்ண ஷர்மா, எம்.பி., டெல்லி, டெல்லி.

18 ஸ்ரீ மவுலீ சந்தர் ஷர்மா, டெல்லி, டெல்லி.

19 டாக்டர் ஹஸரீ பிரசாத் திவிவேதி, ஹிந்தித் துறைத் தலைவர், காசிப் பல்கலைக்கழகம், காசி—உத்திரப்பிரதேசம்.

20 ஸ்ரீ நாராயண் வியாஸ், ஜெயப்பூர், ராஜஸ்தான்.

21 ஸ்ரீ எம். அனந்தசயனம் ஐயங்கார், துணைத்தலைவர், மக்கள் சபை, டெல்லி மதராஸ்.

1955-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 2-ம் தேதியன்று பீஹார் பொது நலப்பணி கழகத்தலைவர் டாக்டர் அமர்நாத் ஜா காலமாகிவிட்டார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். டாக்டர் ஜா அவர்கள் கல்வித் துறையில் நீண்ட கால அனுபவம் பெற்று, ஒரு சிறந்த இடத்தை வகித்ததோடு இலக்கிய சேவையிலும், பொதுநலப் பணியிலும் அனுபவம் பெற்றிருந்தமையால், இந்தக் கழகம் தன்னுடைய நுணுக்கமான பலதிறப் பட்ட அலுவல்களைச் செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்தார். அத் தகையவர் காலஞ்சென்றது கழகத்திற்கு பெரு நஷ்டமாகும். 1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 25-ம் தேதியன்று பேராசிரியர் ராம்தாரி சின்ஹா (தின்கர்) (மக்கள்சபை உறுப்பினர்) காலஞ்சென்ற டாக்டர் ஜாவின் இடத்திற்கு ஜனுதிபதியால் நியமனம் செய்யப்பெற்றுர். (பிற்சேர்க்கை 2).

1956-ம் வருஷம் மார்ச்சு மாதம் 8-ம் தேதியன்று ஸ்ரீ எம். அனந்த சயனம் ஐயங்கார் பாராளுமன்றத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பை யின் கழகத்தில் தம்முடைய பதவியை இராஜினுமா செய்துவிட்டார். அவர் பாராளுமன்றத்திலும் பதவி வகித்துக்கொண்டு, கழகத்திலும் அங்கம் வகிப்பது பொருத்தமில்லை என்ற காரணம் அவர் ராஜினுமாச் செய்வதற்கு ஏதுவாக இருந்தது. ஸ்ரீ அய்யங்கார் அவர்கள் இக்கழகத்தின் உறுப்பினராக இருந்த காலத்தில் செய்த உதவிக்கும் தந்த ஒத்துழைப்பும் இக்கழகம் நன்றி பாராட்டுகிறது.

முதலில், கழகம் சேகரிக்க வேண்டிய சான்றுகளையெல்லாம் சேகரித்துத் தன்னுடைய சிபார்சுகளை 1956 . வருஷம் ஏப்ரல் மாதம் 30ந்தேதிக்குப் பிற்படாமல் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கக் கருதியிருந்தது. ஆனால், 1955-ம் வருஷம் ஜூலை மாதத்தில்தான் கழகம் வேலை செய்யத் தொடங் கினதால் கழகத்தின் தலைவர், பதவி ஏற்றவுடன், 1956-ம் வருஷம் ஜூலை மாதம் 31-ம் தேதி வரையில் இக்காலம் நீடிக்கப்படலாம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (பிற்சேர்க்கை 2). குறிக்கப்பட்ட இக்கால அளவில் எங்களுடைய சிபார்சுகளை சமர்ப்பிக்க முடிந்தது பற்றி மகிழ்ச்சி அடைகிறோம்.

2. கழகத்தின் முதல் கூட்டம் 1955-ம் வருஷம் ஜூலை மாதம் 15, 16 தேதிகளில் நடைபெற்றது. உடனே கழகம் ஒரு பெரிய கேள்வித்தாளை தயாரித்து வெளியிட்டது (பிற்சேர்க்கை 3) இக்கேள்வித்தாள் எல்லா ராஜ்யங்களுக்கும், ராஜ்ய அதிகாரிகளுக்கும், பெருவாரியான பொதுக் கழகங் களுக்கும், தனிப்பட்ட கழகங்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் விடுக்கப் பட்டது. மொத்தத்தில் 1,094 பதில்களும், மகஜர்களும் பதிலாகக் கிடைத் தன. இந்த எண்ணிக்கையில் மத்ய அரசாங்க அமைச்சர்களும், "ஏ" பிரிவு ராஜ்ய சர்க்கார்களும், "பி" பிரிவு ராஜ்ய சர்க்கார்களும், "ஸி" பிரிவு ராஜ்ய சர்க்கார்களில் பெரும்பாலானவும், சுப்ரீம் கோர்ட்டும், யூனியன் பொதுப் பணிக் கழகமும் (Union Public Service Commission), பெரும்பாலான ராஜ்யப் பொதுப் பணி கழகங்களும் (State Public Service Commission), பல்கலைக் கழகங்களும், உயர்நீதி மன்றங்களும், பெரும்பாலான சங்கங் களும், மன்றங்களும், அனுப்பிய விடைகள் சேர்ந்துள்ளன. இறுதியாகக் கூறிய சங்கங்களும், மன்றங்களும் கல்வித்துறை இலக்கியத் துறையிலும் ஏனைய துறைகளிலும் ஈடுபட்டுள்ளவைகள். பொதுப் பணி அதிகாரிகளும், பொதுப் பணிச் சங்கங்களும் அல்லாமல் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த மந்திரிகளும், உதவி மந்திரிகளும், ராஜ்ய கவர்னர்களும், முதல் அமைச் சர்களும், ஏனைய சாதாரண அமைச்சர்களும், துணை வேந்தர்களும், உயர் நீதி மன்ற நீதிபதிகளும், தங்கள் தனிப்பட்ட ஹோதாவில் சான்றுகள் பகர்ந்துள்ளனர். மேலும், பாராளுமன்ற அங்கத்தினர்களும், சட்டசபை அங்கத்தினர்களும், அரசாங்க அலுவலாளர்களும் இலக்கியத் துறையிலும், தொழில் துறையிலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களும், வழக்கறிஞர் களும், விஞ்ஞானிகளும், பேராசிரியர்களும், வாணிகர்களும், சான்று பகர்ந்துள்ளார்கள்.

எழுத்து மூலமாகப் பெற்ற சான்றுகளையல்லாமல் பெரிய ராஜ்யங்கள் அனைத்திற்கும் கழகம் நேரடியாகச் சென்று அங்கங்கே வாய்மொழிச் சான்றுகளையும் சேகரித்துள்ளது. அம்மாதிரி செல்லுகின்ற இடங்களில் இக்கழகம் வருவதைப்பற்றி பத்திரிகைகளின் மூலம் விரிவாகப் பிரசாரம் செய்து, ராஜ்ய அரசாங்கத்தின் உதவிகொண்டு, பல்வேறு மக்களைச் சந்தித்துச் சான்றுகள் பெற்றதோடு, பொதுவாகக் கழகத்தாரிடம் சான்று பகரவேண்டும் என்ற விருப்பத்துடன் தாமே முன்வந்தவர்கள்; அனைவ ரிடமும் சான்றுகள் பெற்றுள்ளது. மொத்தத்தில் தனிப்பட்டவர்களும், சங்கங்களின் பிரதிநிதிகளும், சங்கங்களுமாக 930 பேரிடமிருந்து கழகம் வாய்மொழிச் சான்றைப் பெற்றுள்ளது.

மொழிப் பிரச்னை என்பது ஒவ்வொரு தனிமனிதனையும் மிகவும் பாதிக் கக்கூடியதாதலால், கழகம் மேற்கொண்ட பணியில் அதிகப்படியான ஆர்வம் காட்டப்பட்டது எதிர்பார்த்ததும், இயல்பும் ஆகும். இத்தகைய பிரச்னை எக்காலத்திலும் மக்கள் கவனத்தைக் கவரக்கூடியதே. மேலும் கழகம் தன்னுடைய பணியை நடத்திக்கொண்டிருக்கும்பொழுது ஏற்பட்ட சூழ்நிலையும், மக்கள் வாழ்க்கையில் மொழி எந்த இடத்தை பெற்றிருக் கிறது என்பதை அறிய மக்கள் காட்டிய ஆர்வமும் கழகத்தாரினுடைய ஆராய்ச்சிக்கு மிகவும் உதவியாக இருந்தன. 1955 அக்டோபரில் வெளியான ராஜ்ய புனர் அமைப்புக் கழகத்தின் அறிக்கையும், அது வெளியாகும் காலத்தில் மொழிவாரி அடிப்படையில் ராஜ்யங்கள் அமைக்கப்படவேண்டும்

என்பதற்காகச் செய்யப்பட்ட பிரசாரமும், அதனை அடுத்து ராஜ்ய சட்டசபைகளில் இதுபற்றி நடந்த விவாதங்களும், பத்திரிகைகளிலும், பொது மேடைகளிலும் இதுபற்றி எழுந்த பேச்சுக்களும், அதனை ஒட்டி நிகழ்ந்த ஏனைய நிகழ்ச்சிகளும், மக்கள் வாழ்க்கையில் மொழியின் இடம் என்ன என்பது பற்றியும் பல மொழி பேசப்படுகின்ற நம்முடைய நாட்டில் இதன் இடம் என்ன என்பது பற்றியும் மக்கள் ஆர்வத்துடன் ஆராயப் பேருதவி புரிந்தன. எனவே, மிகப் பெரும்பாலான மக்களின் அபிப்பிராயம் எங்ஙனம் வெளிப்படுகிறது என்பதைப்பற்றி அறிய இக்கழகம் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏன் எனில் நாட்டின் ஒவ்வொரு மனிதனையும் இந்தப் பிரச்சினை பாதிக்கக்கூடியது என்ற காரணம் கழகம் அறிந்ததே.

3. கழகத்தின் அறிக்கை (report) எதுபற்றி பேச எழுந்தது என்பது பற்றி தொடக்கத்திலேயே ஒரு வார்த்தை கூறவேண்டும். கழகம் ஆராய கொடுக்கப்பட்டுள்ள விஷயம் மிகவும் சுருக்கமானது என்பது தெரியும். உதாரணமாகச் கல்வித் துறையில் போதனு மொழிப் பிரச்சனை. இந்திய அரசியல் அமைப்பின் 351-ம் பிரிவில் சொல்லப்பட்ட ஹிந்தி மொழி இலக்கிய வளர்ச்சிக்குரிய வழி துறைகள், பிராந்திய மொழி வளர்ச்சிக்குரிய வழி துறைகள், கல்வித் துறையிலும், தேசீய வாழ்விலும் ஆங்கில மொழி பெறும் இடம் முதலான அடிப்படைப் பிரச்சனைகள், இக்கழகத்தின் ஆராய்ச்சிக்கு நேரடியாக உட்பட்டவை அல்ல. என்றாலும், இந்தச் செய்திகளும் இது போன்ற மற்றவைகளும் நேரடியாக இல்லாவிட்டாலும், கழகம் ஆராய எடுத்துக்கொண்ட பிரச்சனைகளில் மறைமுகமாகச் கலந்து உள்ளன. மொழிப் பிரசசனை என்பது மக்களின் தேசீய முயற்சியில் பல்வேறு வகையிலும் தொடர்பு கொண்டிருப்பதாலும், பல்வேறு துறைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன ஆதலாலும், ஒரு பிரச்சனையை தனியே எடுத்துக்கொண்டு, மற்றவற்றில் இருந்து பிரித்து ஆராய்தல் என்பது இயலாத காரியம். எனவே இக்கழகம், தன்னுடைய ஆராய்ச்சியில, மிகப் பரந்த முறையில் சென்று, நேரடியாகக் கோரப்படாதவற்றையும், ஓரளவு ஆராய்ந்திருக்கிறது. இந்தப் பரந்த நோக்கத்துடனேயே கழகத்தின் வினாத்தாள் தயாரிக்கப் பெற்றது ; சான்றுகள் சேகரிப்பதிலும் இம்முறையே கையாளப்பெற்றுள்ளது. என்றாலும், கழகம் நேரடியாகக் காணவேண்டும் என்று கோரப்படாதவற்றைத் தனியே "முடிவுகள்" (Concl sions) என்றும், கோரப்பட்டவற்றிற்கு கண்ட விடைகளை "சிபார்சுகள்" (recommendations) என்றும், தனியே பெயரிட்டு, "கழகங் கண்ட முடிவுகளும், சிபார்சுகளும்" என்று அறிக்கையின் முடிவில் பற்சேர் கை I தரப்பட்டுள்ளன. தனிப்பட்ட சிபார்சுகளைச் செய்யும்பொழுது, கழகம் எதனை ஆராயவேண்டும் என்று கோரப்பட்டுள்ளதோ அதுபற்றி மட்டுமே ஆராய்ந்து சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன. என்றாலும், இந்த அளவோடு நிறுத்தாமல், அவசியங் காரணமாகக் கழகம் ஆராய்ந்து கண்ட பிற முடிவுகளையும், மொழிப்பிரச்சினையில் ஏனைய பகுதிகளையும், கழக அமைப்பாளர்கள் கோராவிட்டாலும், கோரப்பட்டவற்றோடு தொடர்புள்ளவை என்ற காரணத்தால் தந்துள்ளோம். கழகம் செய்துள்ள சிபார்சுகளை அறிந்துகொள்ளவேண்டுமானால் "முடிவுகள்" என்ற தலைப்பில் தந்துள்ளவற்றின் தொடர்புகொண்டு பார்த்தால்தான் முற்றிலும் விளங்கிக் கொள்ள முடியும்.

4. கழகத்தார் ஆராய எடுத்துக்கொண்ட பொருளைக் கூறு கூறாகப் பிரித்து ஆராய்தல் இயலாத காரியம். ஒவ்வொரு பிரிவும் மற்றொரு பிரிவோடு தொடர்பு கொண்டிருத்தலினாலும், பல பிரிவுகளை மற்றவற்றோடு தொடர்புபடுத்தி காணவேண்டிய இன்றியமையாமை உள்ளமையாலும், பிரித்து ஆராய்தல் இயலாத காரியம். ஆட்சி முறையில் மொழிப்பிரச்சனை, சட்டசபை, நீதிமன்றம் இவற்றில் மொழிப்பிரச்சனை, கல்வித்துறையில் மொழிக் கல்வி, உத்யோகங்களுக்காக ஏற்பட்டுள்ள போட்டித் தேர்வுகளில் பயன்பட வேண்டிய மொழி என்ற இவையெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடைய பிரச்சனைகளாகும். இவை எல்லாவற்றிற்கும் முடிவு காணும்போது பொதுவான ஒரு பிரச்சனையை கவனித்தல் வேண்டும். அதாவது கலைச் சொற்களின் வளர்ச்சி, யூனியன் மொழி, பிராந்திய மொழிகள் வளர்ச்சி என்ற இவற்றின்

அடிப்படையில் மேற்கூறியவை கவனிக்கப்படவேண்டும். இவை எல்லா வற்றையும் அடிப்படையில்கொண்டு இந்திய நாட்டின் மொழிப் பிரச்சனையை ஆராயவேண்டும். இந்நாட்டின் பல்வேறு மொழிகளின் இடையேயுள்ள தொடர்பு, ஒற்றுமை, பொதுத்தன்மை முதலியவற்றை இதே அடிப்படையில் ஆராயவேண்டும். இவை அனைத்தும் ஒரே பிரச்சனையின் உறுப்புக்களாக இருப்பினும் ஆராயும் சௌகரியத்திற்காக தனித்தனியாக ஆராயப்படவேண்டும். இதன் காரணமாக இந்த அறிக்கையில் பலவேறு பகுதிகளில் ஒரே பொருளைத் திருப்பித் திருப்பிக் கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டுள்ளது. இறுதிப் பகுதியில் எல்லா வாதங்களும் எடுதது ஆராயப்பட்டு, இவற்றின் விளைவான முழுத்தன்மை பெற்ற ஒரு பிரச்சனையையும், அந்தப் பிரச்சனைக்கு காணப்பெற்றுள்ள விடையும் தரப் பெற்றுள்ளன.

இந்த அறிக்கைக்குத் தொடர்புடையதாக அடுத்து ஒரு [1] அறிக்கையும் தயாரிக்கப்பெற்றுள்ளது. இதில் கழகத்தாரின் கண்காணிப்பில் பணியாற்றும் ஆராய்ச்சிக் குழு சேகரித்த சில செய்திகள் பேசப்படுகின்றன. இச் செய்திகள் இது விஷயம் பற்றிப் பிற்காலத்தில் ஆராய்பவர்களுக்கு மிகவும் பயன்படும். இந்த நாட்டின் மொழிப் பிரச்சனை ஒரு நிலைப்படுகின்ற வரையில் இவ்வாராய்ச்சிகளும் அதனால் விளைந்த விளைவுகளும் பெரிதும் பயன்படும்.

அரசியல் அமைப்புத் தொடங்கி 10 வருஷங்கழித்து, அதாவது 1960-ல், மறுபடியும் ஜனாதிபதியின் உத்தரவின்பேரில் இதுபற்றி ஆராய இது போன்ற ஒரு கழகம் நியமிக்கப்படும் என்று அரசியல் அமைப்புக் கூறுகிறது. அந்தக் கழகம் சமர்ப்பிக்கும் அறிக்கையையும் ராஜ்ய சபை, மக்கள் சபை பொறுக்கி எடுக்கும் ஒரு குழு ஆராயும். இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக்கொண்டு இந்தக் கழகம் தான் சமர்ப்பித்துள்ள சிபார்சுகளோடு எதிர் காலத்துக்குப் பயன்படும் என்ற கருத்தால்தான் சேகரித்துள்ள எல்லாச் சான்றுகளையும் முறைப்படுத்தி வைத்துள்ளது. [1] இரண்டாவது அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள அனைத்தும் அச்சியற்றப்படவேண்டும் என்று நினைக்காததால், அவற்றை எல்லாம் ஒரு வரனமுறைக்கு உட்பட்டு ஒழுங்குபடுத்தி அரசியலாரிடம் சேர்த்துள்ளோம்.

நன்றியுரை.

5. கழகத்தார் தங்கள் கடமையைச் செய்வதற்கு உதவி செய்த எல்லா அதிகாரிகளுக்கும், தனிப்பட்டவர்கட்கும் கழகம் தன் நன்றியைச் செலுத்திக் கொள்கிறது. சான்றுகள் தந்தவர்களுள் பெரும்பாலோர் தங்கள் சான்றுகளை மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டு, நன்கு சிந்தித்து, விரிவாகவே தந்துள்ளார்கள். அதிகாரிகளிடமிருந்து கிடைத்த தேவையான செய்திகள் மிகவும் விரிவாக இருந்தன. ராஜ்ய சபைகளிலிருந்தும், பல் கலைக் கழகங்களிலிருந்தும், நீதி மன்றங்களிலிருந்தும் பொதுப் பணிக் கழகங்களிலிருந்தும், கிடைத்த மகசர்களும் இப்படியே இருந்தன. இவர்கள் அனைவர்களுக்கும் கழகம் தனது ஆழ்ந்த நன்றியை செலுத்திக் கொள்கிறது.

கழகத்தார் ராஜ்யங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொழுது அவர்கள் தங்குவதற்கும், சான்று கூறுபவர்களைச் சந்திப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்ததற்கும் ராஜ்ய சர்க்கார்களுக்குக் கழகம் நன்றி பாராட்டுகிறது. தலைவர் உள்ளிட்ட 21 அங்கத்தினர்கள் (அனந்தசயனம் அய்யங்கார் ராஜினாமாச் செய்தபிறகு 20) சுற்றிவரும்பொழுது எவ்வளவோ தொல்லைகள் இருந்தும், இட நெருக்கடி இருந்தும், எல்லா ராஜ்ய சர்க்கார்களும் திருப்தியான முறையில் கழகத்தார் தங்கள் வேலையைச் செய்ய உதவி புரிந்தார்கள். கழகத்திற்கு முழுநேர அமைச்சர் ஏற்படுகிற வரையில் அதாவது $2\frac{1}{2}$ மாத காலம் ஸ்ரீ டி. எஸ். ஜோஷி, ஐ.ஸி.எஸ். (செயலாளர்,

[1] இது அச்சிடப்படவில்லை.

உள்துறை நிர்வாகம், பம்பாய் ராஜ்யம்) செயலாளராக இருந்து பணியாற்றினார்கள். கழகம் வேலைசெய்யத் தொடங்கியபொழுது அவர் ஆற்றிய தொண்டுக்கு இக்கழகம் நன்றி பாராட்டுகிறது.

கழகத்தின் செயலாளராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றிய ஸ்ரீ எஸ். ஜி. பார்வே. ஐ.சி.எஸ். அவர்களுக்கும் கழகம் நன்றி பாராட்டுகிறது. இந்தப் பெரிய கழகம் நாடு முழுவதையும் சுற்றித் தன்னுடைய கடமையைச் செய்ய நல்ல முறையில் வழி வகுத்து வேலையை முடிக்குமாறு உதவியவர் அமைச்சர். அமைச்சராக இருந்து பணியாற்றியதோடு அல்லாமல் இந்தியன் சிவில் சர்வீசில் மிக நீண்ட காலம் உழைத்ததால் தாம் பெற்ற அனுபவத்தைக் கழகத்திற்கு வரையாது வழங்கினார் ஸ்ரீ பார்வே. அவருடைய பரந்துபட்ட அறிவும் பிரச்சனைகளை விரைவாகப் புரிந்துகொள்ளும் ஆற்றலும், எல்லோரிடத்திலும் அன்பாக நடந்துகொள்ளுகின்ற பண்பாடும் கழகத்தின் உறுப்பினர்கள் அவரிடத்தில் சிறந்த மதிப்புக்கொள்ளச் செய்தன. இதனால், நாங்கள் நல்ல முறையில் தொழில்பட முடிந்தது. நல்ல முடிவுகளைக் காணவும், சிபார்சுகளைச் செய்யவும், வேறுபட்ட கருத்துக்களினிடையே நிறைந்த அளவு ஒற்றுமையைக் காணவும் அவர் பெரிதும் உதவினார். அவருடைய வேலை மிகவும் கடினமானது என்பதில் ஐயமில்லை. அவருடைய ஒத்துழைப்பு இல்லாதிருப்பின் குறித்த காலத்தில் இந்த முறையில் நாங்கள் வேலை செய்திருக்க இயன்றிராது.

கழகத்தாரின் ஏனைய அலுவலாளர்கள், செயலாளரின் கண்காணிப்பின் கீழ் மிக நல்லமுறையில் பணியாற்றினார்களாதலின் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரியதாகும். பேராசிரியர் ஜி. ஜே. சோமையாஜி அவர்களையும், டாக்டர் மேத்தா பிரசாத் குப்தா அவர்களையும், ஸ்ரீ வி. ஆர். தலசிகார் அவர்களையும் எங்களுக்கு உதவக் கொடுத்தமைக்கு முறையே ஆந்திரப் பல்கலைக் கழகத்திற்கும், அலஹாபாத் பல்கலைக் கழகத்திற்கும், பம்பாய் உயர்நீதி மன்றத்திற்கும், எங்கள் நன்றி உரியதாகும். இவர்கள் ஆராய்ச்சிக் குழுவல் சிறந்த பணியாற்றி உள்ளார்கள்.

பகுதி II

தற்கால உலகில் மொழியின் இடம்

1. மனிதனுக்கு மனிதத் தன்மையைத் தருவது அவனுடைய பேசும் சக்திதான் என்று அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏனைய துறைகளில் விலங்கினங்களுக்கும் மனிதனுக்கும் அதிக வேறுபாடு இல்லை. பேச்சாகிய கருவி இல்லாவிடின், மக்களுக்குள் கூட்டுறவு, அதனால் ஏற்படுகின்ற மனித சமுதாயம், என்பவை இல்லாமல் போய்விடும். இக்கருவி இல்லா விடின் மனிதன் தன்னுடைய மனோ சக்தியை வளர்த்து அறிவைப் பெருக்கி, அதனால் எல்லையற்ற வளர்ச்சியைப் பெற்று, நாகரிகம் உடைய சமுதாயத்தைச் சமைப்பதும் இயலாத காரியம். எனவே, மொழியின் கதைதான் நாகரிக வளர்ச்சியின் கதை என்றுகூடச் சொல்லிவிடலாம்.

மொழியைப் பற்றி சிந்தனையும், அதனுடைய தொடக்கமும், மனித மனத்தின் வளர்ச்சிக்கு அது செய்யும் உதவியும், மனத்தின் அனுபவங் களை வகைப்படுத்திப் பார்ப்பதற்கு மொழி செய்கின்ற உதவியும் பற்றிய ஆராய்ச்சிதான் மிகப் பழைமையானதும் இன்றுவரை மனிதன் விடாது செய்துகொண்டிருப்பதும் ஆகும். எங்ஙனம் மனிதன் பேச ஆரம்பித் தான் என்பது பற்றி நாம் இப்பொழுது ஆராயப் போவதில்லை. விலங்கைப் போல சப்தம் செய்ய ஆரம்பித்து அதுவே மொழியாக வளர்ந்திருந்தாலும், தன்னுடைய உள்ளக் கருத்தை வெளியிடுவதற்கு, வேண்டும் என்றே அறிவின் துணைகொண்டு மொழியை மனிதன் உண்டாக்கி இருந்தாலும், மனித வர்க்கத்திற்கு மொழி மிகச் சிறந்த சாதன மாக, இலக்கணமாக அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. எந்த ஒரு பழைய சமுதாயமும் பேச்சுக்கலை இல்லாது இருந்ததாக குறிக்கப் படவேயில்லை. சமுதாய நிலைபேற்றுக்குப் பேச்சு மொழி, எழுத்து மொழி என்ற இரண்டுமோ அல்லது பேச்சு மொழி மட்டுமோ இன்றி யமையாதது. மனிதர்கள், தங்களுக்குள் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள உதவியாக இருக்கின்ற மொழி இல்லாமல், சேர்ந்து ஒத்துழைத்து ஒழுங்கு பட்ட சமுதாயததைச் சமைப்பது என்பது இயலாதது. மனிதனுடைய ஒத்துழைப்பு முழுவதற்கும் தவிர்க்க முடியாத ஊடு-நிலைப் பொருளாக மொழி அமைந்திருப்பதனால் சமுதாயத் திட்டங்களுக்கும் உலகியல், பண் பாட்டு, ஆன்மீகத் துறைகளுக்கு இதன் உதவி இன்றியமையாததாக அமைகின்றது.

மொழி நூல் வல்லார்கள் எழுத்து மொழி வருவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்போ அல்லது பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்போ பேச்சு மொழி வந்திருக்கவேண்டும் என்று கூறுகின்றனர். சரித்திர காலத்தின் தொடக்கத்தில் எதிர்பாராத விதமாக ஓர் ஒப்பற்ற அறிவாளி யினால் எழுத்து முறை திடீரென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்க வேண்டும். வாய் மொழிப் பேச்சுக்குத் துணையாகவும் பதிலாகவும் எழுத்துத் தோன்றியதனால் அது மிக விரைவில் வளர்ச்சி அடைந்து காலம், இடம் என்பவற்றை வென்று மனிதன் கருத்தை வளர்க்க உதவிற்று. ஒரு மனிதன் தன் னுடைய உள்ளக் கருத்தை வாய்மொழி மூலம் வெளியிடும்பொழுது அதை அழிந்துபோகாமல் காப்பாற்றிப் பிற்காலக்காரர் அறிந்துகொள்ள உதவுவது எழுத்தாகும். ஒரு காலத்தில் தோன்றிய கருத்துக்களை எதிர் காலத்திற்குக் காப்பாற்றித் தருகிறது என்பதோடு மட்டுமல்லாமல், எழுத்து, ஒரே காலத்தில் வாழுகின்ற பல்வேறு இடங்களில் உள்ளவர்களுக்கும் கருத்தைப் பரப்புவதற்குச் சாதனமாக அமைகின்றது. ஒரே காலத்தில் கருத்தைப் பரப்புவதற்கு எழுத்துப் பயன்படுவதுபோல வாய்மொழி அதிகம் பயன்பட முடியாது. கூர்மையான கருத்துக்களை ஐயத்துக்கிட மின்றிச் சுருங்கிய அளவில் தெரிவிக்கவும் எழுத்துப் பயன்படுகிறது.

எழுத்துக்கலை இரண்டு முக்கியமான வழிகளில் வளர்ந்திருக்கலாம். கருத்துக்களை நேரடியாக அது தெரிவிக்கலாம். எண்ணங்களையும், பொருள்களையும் இதே முறையில் நேரடியாகத் தெரிவிக்கும் முறை ஒன்று. அல்லாவிடில் இவற்றை ஒலியின் மூலம் மறை முகமாகத் தெரிவிக்கலாம். உலகத்திலுள்ள பெரும்பாலான எழுத்து மொழிகள் இவ் விரண்டாவது முறையைப் பின்பற்றியே வளர்ந்துள்ளன. இதனை ஒலி—இயல் phonetic) முறை என்று சொல்லலாம். இவ்வாறு வளர்ச்சி அடைந்திருந் தாலும் முதல் முறையில் ஏரளவு பழகிய பின்னரே இவ்விரண்டாவது முறை தோன்றியிருக்கவேண்டும். சீன மொழியும் ஜப்பானிய மொழியும் இவை போன்ற பல மொழிகளும் முதல் முறைக்குத் தக்க உதாரணங் களாக அமைகின்றன. மொழிகள் எழுத்துத்தன்மை அடையும்போதுதான் நிலைக்கின்ற தன்மையைப் பெறுகின்றன. எழுத்துமுறை யில்லாது பேச்சு வழக்கில் மட்டும் உள்ள மொழிகள் காலாந்தரத்தில் மாறுபடும் இயல்பு உடையன. சீன மொழியைப் போல எழுத்து மொழி உடையவை பல வகையிலும் மாறுபடும் இயல்புடையன. ஆனால் அதே மொழி எழுத்து மொழிக்கும் பேச்சு மொழிக்கும் அதிகத் தொடர்பு இல்லாமையினால் நிலைபேற்றைப் பெற்றிருக்கிறது.

எழுத்து மொழி வளர்ச்சி அடைந்த காரணத்தால், தனிப்பட்டவர் களுடைய அனுபவத்தைப் பிறருக்கு அறிவிக்கும் சாதனமாக அமைந்த தோடு ஒரு தலைமுறையாருடைய அனுபவத்தைப் பிற்காலத் தலைமுறை யாருக்கு அறிவிக்கும் கருவியாகவும் அமைந்தது. எனவே, காலத்தின் ஊடே புகுந்து மனித அனுபவத்தை நிலைபெறச் செய்ய எழுத்துக்கலை மிகுதியும் உதவிற்று. இதனால் ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த மனி தர்கள் பெற்ற அனுபவங்களைப் பிற்கால சந்ததியார்கள் அறிந்து கொண்டு மலும் தங்கள் ஆராய்ச்சியைத் தொடர்வதற்கு எழுத்து மொழி மிகவும் உதவி செய்தது. தனிப்பட்டவர் பெறுகின்ற அனுபவத் தைச் சமுதாயம் பெறுகின்ற அனுபவத்தோடு சேர்த்து வைத்துக்கொள்ள உதவியதும் எழுத்து மொழிதான். இங்ஙனம் சேரச் சேரப் பிற்காலத்தில் வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் மொத்தமாகச் சேர்ந்த இந்த அனுபவங்கள் எழுத்து மொழி மூலம் கிடைக்கத் தொடங்கின.

ஒரு மொழியின் வரலாறு என்பது அந்த மொழியைப் பேசுகின்ற மனித சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சியே யாகும். இலக்கியம் என்பது அந்த சமுதாயத்தில் உள்ள சிறந்த மக்களினுடைய சிந்தனைகள், எண் ணங்கள், கற்பனைகள் என்பவற்றை அறிவிப்பன ஆகும். அங்ஙனம் இல் லாவிடினும் வாய்மொழி மூலம் உள்ளக் கருத்தை வெளியிட்டவர் களுடைய பேச்சுக்களேயாகும் அவை. மொழி என்பது அந்த சமுதாயத் தார் அனைவருடைய பேச்சுக்களும் நிறைந்த ஒன்று. பேராசிரியர் எமர்சன் "மொழி என்பது ஒரு நகரமாகும்; அந்த நகரத்திற்கு ஒவ்வொரு மனிதனும் ஒரு சிறு கல்லையாவது கொண்டு வந்திருக்கிறான்" என்றார். இந்த முறையில் பார்க்கப்போனால், மொழி என்பது ஜனநாயக வழியைப் பின்பற்றியது என்பது தெரியும். இலக்கியம் என்பது சக்தி வாய்ந்த ஒரு சில மக்களினுடைய அனுபவங்களும், எண்ணங்களுமேயாகும்.

மொழி மக்களினுடைய அனுபவத்தைப் பிறர் அறிந்துகொள்ள உதவு வதினால் மிகவும் வளர்ச்சிபெற்ற நவீன கால சமுதாயங்களில் கூட சமுதாய வளர்ச்சிக்கு மிகுதியும் உதவுகிறது. மொழி ஒருவர் கருத்தை மற்றவருக்கு அறிவிக்கும் கருவி மட்டும் அன்று. நாளாவட்டத்தில் நம் முடைய எண்ணத்தில் புகுந்து எண்ண வளர்ச்சியைச் செய்வதற்கும் மொழியே உதவுகிறது. தொடக்கத்தில் இருந்ததுபோல, மொழிகள் பொருள்களையும், எண்ணங்களையும், தொடர்புகளையும் மட்டும் குறிக்க வில்லை என்பது வெளிப்படை.

2. இந்த முறையில் மொழிகளின் இயல்பையும், பல்வேறு மொழிகள் ஒன்றுக்கொன்று எங்ஙனம் எதிர்மாற்றம் பெற்றன என்பதையும், புதிய அனுபவங்களையும், புதிய கருத்துக்களை வெளியிடுவதற்குரிய புதிய சொற்களை எங்ஙனம் பழைய சொற்களிலிருந்து புதிய சொற்கள் பெற்றன

என்பதையும், புதிய சொற்களை எங்ஙனம் கடன் வாங்கின என்பதையும், எங்ஙனம் வார்த்தைகள் மாற்றம் பெற்றன என்பதையும், ஒரே பிராந்தியத்தில் பல்வேறு இடங்களில் வழங்கும் ஒரு மொழி எங்ஙனம் சிறிய சிறிய மாற்றங்களையும் வளர்ச்சியையும் பெற்றன என்பதையும், ஒலிவேறுபாட்டை எங்ஙனம் பெற்றன என்பதையும் ஆராயவேண்டியது மொழியியலைச் சேர்ந்தது. ஆதலால் நேரடியாக நம்மைப் பொறுத்தவரை அதுபற்றிக் கவலைப்படவில்லை.

அச்சுக்கலை மனிதனுடைய அறிவை வளர்த்துக் கொள்ளுவதற்குப் பழைய சந்ததியார்களின் எழுத்துக்களையும், கருத்துக்களையும் பிற்கால சந்ததியாருக்குத் தருவதிலும் ஒரு பெரிய சாதனமாக இருந்தது என்பதும், மனிதனுக்குக் கிடைத்துள்ள வசதிகளில் ஒரு பெரிய புரட்சியையே உண்டாக்கிவிட்டது என்பதும் உறுதி. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள புதிய சாதனங்களாகிய வானொலி, திரைப் படங்கள், செய்தித் தாள்கள் முதலியவைகளும் மொழிப் பிரச்சனையை இப் புதிய கோணங்களிலிருந்து ஆராய்வதற்கும் மொழி வளர்ச்சிக்கும் இடந்தருகின்றன. இப் புதிய சாதனங்கள் முன்னர் இருந்த முறையை விட, ஒரு காலத்தில் ஓர் இடத்தில் வழங்கும் மொழியை அதிகம் மாறுபாடு அடையாமல் காக்க உதவுகின்றன. இயல்பாகவே பலவிடங்களிலும் பழகுகின்ற ஒரு மொழி காலாந்தரத்தில் அடைகின்ற சிறிய மாற்றங்களையும், வேறுபாடுகளையும் குறைத்து, ஒரே வகையான மொழி எங்கும் வளருவதற்கு மேற்கண்ட சாதனங்கள் அதாவது ஆங்கில நாடு முழுதிலும் "கிங்ஸ் இங்லீஷ்" என்பது அனுபவத்திற்கு வந்ததுபோல உதவுகின்றன.

கல்வித் துறையில், மொழி, பெரும் பங்கு கொள்கிறது என்பது உறுதி. எந்தப் பொருளாக இருந்தாலும் அந்தப் பொருளைப் பற்றிய அறிவைப் பெறுவதற்குத் துணையாக இருப்பது மொழிதான். எனவே, கற்பிக்கும் முறையில் எல்லாவகையிலும் மொழி புகுந்து கொள்ளுகிறது. இதை அல்லாமல் சாதாரணக் கல்வி முறையிலும் மொழியைப் பற்றியே அந்த மொழியின் மூலம்தான் அறியவேண்டியுள்ளது. தற்கால சமுதாயத்தில் அனைவருக்கும் எழுத்தறிவு என்பது இன்றியமையாது வேண்டப்படுவதொன்று. தனிப்பட்டவர் ஒவ்வொருவரும், சமுதாயத்தில் உறுப்பினராக வேண்டுமானால் ஓரளவு எழுத்தறிவு பெற்றிருக்கவேண்டும். தற்கால சமுதாயம், நுணுக்கமானதும் பல்வேறு பிரிவினைகளை உடையதும் ஆக இருக்கிறது. வாழ்க்கைக்கு வேண்டிய சாதனங்கள் மிகவும் உயர் தரத்தில் இருப்பதனால் அவற்றைப் பயன்படுத்துகின்ற சமுதாயம் அவற்றைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டிய கூர்மையான அறிவும் திறமும் படைத்தாக இருக்கவேண்டி உள்ளது. எனவே, இவற்றைப் பற்றி அறியவும், அவற்றைப் பயன்படுத்தும் சக்தியைப் பெறவும் எழுத்தறிவு மிக இன்றியமையாதது ஆகிறது. கூர்மையான சக்தி பெற்ற எழுத்தறிவோடு கூடிய தொழிலாளர்களும் குடியானவர்களும் இல்லாவிட்டால், இந்த நவீன உலகில், ஒரு தேசம் முன்னேற முடியாது. பெரும்பான்மையான மக்கள் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கின்ற ஒரு நாட்டில் புதிய சாதனங்களைப் பயன்படுத்தித் தொழிலாளர்களோ குடியானவர்களோ முன்னேறுதல் என்பது இயலாத காரியம். ஒரு நாட்டில் வசதிகளின் வளர்ச்சியும், வாழ்க்கைத் தரமும் உயரும்பொழுது எழுத்தறிவு உடையவர்களின் எண்ணிக்கையும் உயருவது என்பது முற்றிலும் ஒன்றுக்கொன்று தொடர்பு உடையது. இதை நன்கு அறிந்த காரணத்தால்தான் இக் காலத்து ஒவ்வொரு அரசியலாரும் பொதுமக்களுக்குள் எழுத்தறிவைப் பரப்பி ஓரளவு கல்வி அறிவையும் வளர்த்துவிடவேண்டும் என்று முயல்கின்றனர்கள்.

3. மொழிக்கும் ஒரு தேசத்துக்கும் உள்ள தொடர்பைப்பற்றி ஒரு வார்த்தை: சிறப்பாகத் தேசீய ராஜ்யம் என்று சொல்லப்படுகின்ற அரசியல் அமைப்பில் சமுதாயத்திற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். தேசீயம் என்பது, பலருக்கும் பொதுவான தாய் நாட்டைப் பற்றிய எண்ணத்திலிருந்தோ பொதுவான சரித்திரத்திலிருந்தோ பொதுவான நாகரீகத்திலிருந்தோ, பொதுவான சமய சாதனங்களி

லிருந்தோ அல்லது பொதுவான ஒரு மொழியிலிருந்தோ பிறக்கின்றது. தேசிய மனப்பான்மை தோன்றுவதற்கு மொழி என்பது மிக அடிப்படையான ஒன்று. அந்த மொழி தேசிய மனப்பான்மையை நிர்ணயிப்பதற்கு முடிவான ஒரு சாதனமாக இல்லாமல் இருப்பினும், முக்கியமானதென்பது அறியப்படவேண்டும். தற்காலத்தில் தேசிய அரசாங்கம் என்பது அரசியல் அடிப்படையில் பெரிதாக வளர்ச்சி அடைந்திருப்பினும் சிறுபான்மையினரின் மொழிப் பிரச்சனை, பல்மொழிப் பிரச்சனை என்பவை பல்வேறு தேசங்களிலும் தோன்றியுள்ளன. நாகரீகம் பெற்ற சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் கருத்தைப் பரிமாறிக்கொள்ள ஒரே கருவியாக இருப்பது மொழிதான். தற்கால அரசாங்கம் சமுதாயத்தின் ஒவ்வொரு துறையிலும், தனிப்பட்டவர்களுடைய வாழ்க்கையிலுங்கூட பங்கெடுத்துக் கொள்ளுகிறதாதலால் சமுதாயத்திற்கும் மக்களுக்கும் இன்றியமையாததாகிய மொழிப் பிரச்சனை அரசாங்கத்தின் பிரச்சனையாகவும், அரசாங்கத்தார் கவனிக்கவேண்டிய ஒன்றாகவும் ஆகிவிடுகிறது. சட்ட சபை விவகாரங்களிலும், ஆட்சி நடத்துவோர் அன்றாடம் பொதுமக்களிடம் கொள்ள வேண்டிய தொடர்புகளிலும் நீதி வழங்குவதிலும், கல்வித் துறையிலும், தொழில் துறையிலும், வாணிகத் துறையிலும் இன்னும் கூறப்போனால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இவை எல்லாவற்றிலும் மொழி இடை நிலையில்லாமல் ஒன்றுஞ் செய்ய இயலாது. தேசீய சமுதாயத்தில் இப்படித் தோன்றுகின்ற மொழித் தடைகளை அல்லாமல் உணர்ச்சி உலகத்திலும் ஒரு கூட்டத்தாரின் உள்ளத்துணர்ச்சியை வெளியிடுகின்ற கருவியாகவும் மொழி அமைந்துவிடுகிறது. தேசீய இனம் என்பதும், ஜாதிபற்றி வருகின்ற பிரிவினைகளும் பல சமயங்களில் மொழிபற்றி வருகின்ற பிரிவினைகளோடு ஒன்றாக வைத்துத் தவறுதலாக எண்ணப்படுகின்றன. உதாரணமாக ஐரோப்பா தேசத்தில் ஜாதிபற்றி வருகின்ற எல்லைகளும், அரசாங்க எல்லைகளும், தேசீய இனம் பற்றி வருகின்ற எல்லைகளும், மொழிபற்றி வருகின்ற எல்லைகளும், சம்பந்தப்படுவதில்லை. அரசாங்க எல்லைகள் சரித்திர சம்பந்தமுடையனவாய் எதேச்சாதிகாரமாக வகுக்கப்பட்டனவாயும் உள்ளன. ஜாதிபற்றி எடுத்துக்கொண்டால் பல ஜாதிகள் ஒன்று சேர்ந்து கலந்து வாழ்வதால் அந்த முறையில் எல்லை வகுப்பதென்பது முடியாததாக உள்ளது. தேசீய மனப்பான்மை என்பது உள்ளத்து உணர்ச்சியைப் பொறுத்தது. மொழி என்பது வேறுபாட்டை நிதர்சனமாக வெளிப்படுத்திக் காட்டக்கூடிய கருவியாக இருத்தலின் ஜாதி உணர்ச்சிகள் வெளிப்படும்பொழுது மொழிப் போர்வைப் போர்த்து வெளிவருகின்றன. மேலும், தேசீய இனத்தின் இலக்கணமாகவும் மொழி அமைந்துவிடுகிறது. அடுத்த பகுதியில், உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இப்பிரச்சனை தோன்றும்பொழுது எங்ஙனம் அதனைச் சமாளித்தார்கள் என்பது பற்றி அறிவிக்கப்படும். இவ்விடத்தில் ஒன்று குறிப்பது போதுமானது. சிறுபான்மையினோர் மொழிப் பிரச்சனை என்பது, உலகத்தின் பல பாகங்களில் உள்ள பல நாடுகளிலும் உள்ள பிரச்சனைதான் என்பதை இப்பொழுது அறிந்துகொள்ளுவது போதுமானது. உதாரணமாக ஐரோப்பா தேசத்திலுள்ள சில நாடுகளை எடுத்துக்கொள்ளுவோம். பிரான்ஸ் தேசத்தில் ஆறுக்கும் மேற்பட்ட சிறுபான்மையோர் மொழிப் பிரச்சனை உண்டு. சுவிட்சர்லாந்து தேசத்தில் 4 மொழிகள் பேசப்படுகின்றன. அந்த 4 மொழிகளுமே தேசீய மொழிகளாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. பெல்ஜிய நாட்டில் 3 மொழிகள் உள்ளன. ஸ்பெயின் நாட்டில் 3 அல்லது 4 சிறுபான்மையோர் மொழிகள் உள்ளன. பிரிட்டனில் கூட சிறுபான்மை மொழிப் பிரச்சனை இல்லாமல் இல்லை. கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த செக்கோஸ்லேவிகியா. போலந்து, ஆஸ்திரியா, ஹங்கேரி என்ற நாடுகளிலும் பல்மொழிப் பிரச்சனையும் சிறுபான்மையோர் மொழிப் பிரச்சனையும் இன்றளவும் விடாமல் இருந்து வருகின்றன. சமுதாயக் கூட்டுறவுக்கு மொழி என்பது இன்றியமையாதது. ஆதலால் ஒருவர் பேசும் மொழி மற்றவருக்குப் புரியாதபொழுது அவர்களுக்குள் கூடிப் பழகுவதற்கு அது பெரும் தடையாகவே உள்ளது. நவீன சமுதாயத்தில் அரசியல் தொடர்பு மிகுதியாக இருத்தலினால் ஒரு மொழியையோ, பல

மொழிகளையோ ஆட்சி மொழியாகவோ, ஆட்சி மொழிகளாகவோ செய்வ தற்கு முன்னால் தீவிரமாகச் சிந்தித்து செய்யவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. இச் செய்கை சிறுபான்மை மொழி பேசுபவர்களின் கவனத்தை மிகவும் கவருவதாகவும் இருக்கிறது. பல்வேறு நாடுகள் ஆட்சித் துறையில் ஒரு பொது மொழியைப் பயன் படுத்தவும், சிறுபான்மை மொழிப் பேசுவோர் மொழிகளை நிலைக்கச் செய்யவும், அவற்றின் மூலம் கல்வி புகட்டவும், அவர்களுடைய பண்பாடும், நாகரீகமும் வளர்ச்சி அடையவும் பல்வேறு வழிகளைக் கையாண்டுள்ளன.

4. இந்தப் பிரச்சனை மிகுதியாகத் தோன்றுகின்ற நாடுகளில் எங்ஙனம் இந்தப் பிரச்சனையை அவர்கள் தீர்க்கிறார்கள் என்பது பற்றிச் சுருக்கமாகக் கீழே அறிவிக்கிறோம் : பல்வேறு மொழிகள் வழங்குகின்ற ஒரு நாட்டில் எங்ஙனம் சிறந்த முறையில் ஒரு முடிவைக் காணலாம் என்பதற்கு சுவிட்சர்லாந்து நாட்டையே எப்பொழுதும் உதாரணமாக எடுத்துக் காட்டு கிறார்கள். ஜர்மானிய மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி, உரோமானிய மொழி ஆகிய நான்கும் சுவிட்சர்லாந்தில் பேசப்படுகின்றன. இந்த நான்குமே அங்கு "தேசீய மொழிகள்" என்ற பெயரைப் பெற் றுள்ளன. இந்த நாட்டில் ஆட்சி மொழிகள் என்று சொல்லப்பெறுபவை பெரும்பான்மையினரால் பேசப்படுகின்ற ஜர்மன், பிரெஞ்சு, இத்தாலிய மொழிகளாகும். ஜர்மன் மொழி பேசுகின்ற ஜனத்தொகை, மொத்தத் தில் 72·1 சத வீதம் ; பிரெஞ்சு மொழி பேசுவோர் 20·1 சத வீதம் ; இத்தாலிய மொழி பேசுவோர் 5·9 சத வீதம் ; உரோமானிய மொழி பேசு வோர் 1 சத வீதம் ; ஏனைய மொழி பேசுவோர் எண்ணிக்கை 0·7 சத வீதம். சுவிஸ் கூட்டாட்சியில் உள்ள 22 கேண்டன்களில் 14 ஜர்மன் மொழி பேசுபவையாகவும், 3 பிரெஞ்சு மொழி பேசுபவையாகவும, 1 இத்தாலிய மொழி பேசுவதாகவும், 3 ஜர்மனும் பிரெஞ்சும் கலந்து பேசுவனவாகவும், ஒன்று ஜர்மன், இத்தாலியன், உரோமானியன் மொழி பேசுவதாகவும் அமைந்துள்ளன. 4 தேசீய மொழிகளும் ஒரேவகை யான மதிப்பைப் பெற்று முற்றிலும் சமத்துவம் உடையனவாய் உள்ளன. ஆட்சி மொழி மூன்றும் கேண்டன்களுக்கும் மத்ய சர்க்காருக்கும் இடையே யும், கேண்டன்களுக்குமிடையேயும் பயன்படுத்தப்ப கின்றன. மத்திய ஆட்சியின் சட்டங்கள், திட்டங்கள், அறிவிப்புகள், சுற்றறிக்கைகள் ஆகிய அனைத்தும் இம்மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுகின்றன. மத்திய அரசாங்கத்தின் சட்டங்கள் அனைத்தும் இம் மூன்று மொழிகளிலும் உள்ளன. இம்மூன்றுமே அதிகார பூர்வமானவை. சுவிஸ் பாராளு மன்றத்தில் உறுப்பினர்கள் அந்த 4 மொழிகளிலும் பேசலாமாயினும் நடவடிக்கைகளை ஆட்சி மொழிகள் 3-லும் மட்டுமே குறிக்கின்றார்கள். சட்ட பூர்வமாக 3-ல் ஏதாவது ஒரு மொழியில் பேசுகின்ற அங்கத்தினர் மற்ற இரண்டு மொழிகளிலும் தம்முடைய பேச்சு மொழி பெயர்க்கப்படவேண்டும் என்று வற்புறுத்தலாமாயினும் நடைமுறையில் 3 மொழிகளுமே சொற் போட்டிகளில் தாராளமாக வழங்கப்படுகின்றன. சுவிஸ் அரசாங்கத்தின் வெளிநாட்டு விவகாரங்களில் பிரெஞ் மொழியே வழங்கப்பெறுகிறது. ஏனென்றால் : பரம்பரையாக ராஜதந்திர அலுவல்களுக்கு பிரெஞ்சு மொழி வழங்கப்பட்டதே காரணம். காண்டன்களில் அந்தக் காண்டனுக்குரிய மொழியே ஆட்சி மொழியாகும். இருமொழி பேசப்படுகின்ற காண்டன்களில் இரண்டு மொழிகளும் சம உரிமையுடைய ஆட்சி மொழிகளாகும். அந்தக் காண்டகளுக்குள் சட்டமன்றங்களில் வழங்குகின்ற மொழிகளும் அன்றாட ஆட்சி அலுவல்களில் பயன்படுகின்ற மொழிகளும், அந்தக் கேண்டன்களில் வழங்கப்படுகின்ற மொழிகளேயாகும். ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளில் போதனா மொழியாக உள்ளவை அந்தந்தக் கேண்டனின் ஆட்சிமொழியே யாகும். ஒரு மொழி, மும் மொழி பேசப்படுகின்ற கேண்டன்களில் அந்தந்தப் பள்ளிக்கூடங்கள் அமைந்திருக்கின்ற இடத்திகேற்ப அந்த இடங்களில் பேசப்படும் மொழியே பள்ளிக்கூடத்தின் போதனா மொழியாகவும் உள்ளன. இரு மொழி பேசப்படுகின்ற கேண்டன்களில் இரண்டு மொழி களுக்கும் தனித்தனியே பள்ளிக்கூடங்கள் உள்ளன. எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் தேசீய மொழி 4-ல் ஏதாவதொன்று கட்டாயமாக

இரண்டாம் மொழியாக படிக்கப்படவேண்டும். அதாவது ஜர்மானிய மொழி பேசும் கேண்டன்களில் பிரெஞ்சு கட்டாய மொழியாகப் படிககப்படவேணடும். அதேபோலப் பிரெஞ்சு மொழி பேசும் கேண்டன்களில் ஜர்மன் மொழி கட்டாயமாகப் படிக்கப் படவேண்டும். இத்தாலிய மொழி பேசும் கேண்டன்களில் ஜர்மன் மொழியையோ அல்லது பிரெஞ்சு மொழியையோ கட்டாயத் துணை மொழியாகப் படித்துத் தீர வேண்டும். 5-வது படிவத்தில் தொடங்கி மெட்ரிகுலேஷன் முடியத் துணை மொழி கட்டாயமாகும். பல்கலைக் கழகங்கள் கேண்டன்களாலேயே நடத்தப்படுகின்றன. ஆதலால், அந்தந்த கேண்டன் மொழியே பல்கலைக் கழகத்தின் போதனு மொழியாகும். வழக்கத்தில் பிரெஞ்சு, ஜர்மானிய மொழிகளை பொறுத்தமட்டில் தொல்லை ஏற்படவில்லை. ஏனென்றல், பேராசிரியர்களும், மாணுக்கர்களும் இரண்டு மொழியிலும் வல்லவர்களாக இருக்கின்றார்கள். உயர் நீதி மன்றத்தில் ஆட்சி மொழியாக உள்ள ஜர்மன், பிரெஞ்சு, இத்தாலியன் ஆகிய மூன்றுமே நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படலாம். என்றாலும், ஒவ்வொரு சுவிஸ்காரனும் நீதிபதி வழங்குகின்ற முடிவை இந்த 3 மொழிகளுக்குள் ஏதாவது ஒன்றில்தான் தரவேணடும் என்று கோரலாம். கேண்டன் நீதி மன்றங்களில் அந்த கேண்டனுக்குரியமொழியே நீதிமன்ற மொழியாகும்.

கனடா தேசத்தில் (1951-ம் வருஷ ஜனத்தொகைக் கணக்குப்படி) 14 மிலியன் ஜனததொகையில் 9·4 மிலியன் ஆங்கிலம் பேசுபவர்களாகவும், 2·7 மிலியன பிரெஞ்சு பேசுபவர்களாகவும், 1·7 மிலியன் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டுமே பேசுபவர்களாகவும் உள்ளனர். பிரெஞ்சு பேசும் பெரும்பான்மையோர் (80 சத வீதம்) கானடா நாட்டின் குபெக் மாகாணத்தில் வசிக்கிறார்கள். கானடா நாட்டில் ஆங்கிலம் பிரெஞ்சு என்ற இரண்டுமே ஆட்சி மொழிகளாகும். பாராளு மன்றத்தின் நடைமுறைகளிலும் குபெக் மாகாணத்தின் சட்டசபை நடைமுறையிலும் இவற்றின் நடைமுறைகளைக் குறிக்கின்ற அறிக்கைகளிலும் இரண்டு மொழிகளும் பயன்படுத்தப்படுகன்றன. நீதி மன்றத்தில் வழக்காடுவோர் கானடா முழுவதிலும் இந்த இரண்டு மொழிகளில் எதை வேண்டுமானுலும் பயன்படுத்தலாம். கனடியா ஐக்ய அரசாங்கத்திலும், குபெக் அரசாங்கத்திலும் வெளியிடப்படுகின்ற வெளியீடுகள் எல்லாம் இந்த இரண்டு மொழிகளிலுமே வெளியிடப்படுகின்றன. காகித நாணயங்களும், தபால் தலைகளும், பிரெஞ்சு ஆங்கிலம் என்ற இரண்டிலும் குறிக்கப்படுகின்றன. ஐக்கிய அரசாங்கம் அன்றாட முறையில் பயன் படுத்துவது ஆங்கிலமேயாயினும் அரசாங்கத்திற்கு வரும் பிரெஞ்சு மொழியில் உள்ள கடிதங்கள் பிரெஞ்சு மொழியிலே பதிலைப் பெறுகின்றன. குபெக் மாகாணத்தின் நடைமுறைகள் பிரெஞ்சு மொழியில் இருப்பினும் அந்த அரசாங்கத்திற்கு வரும் ஆங்கில மொழியில் எழுதப்பெற்ற கடிதங்கள் ஆங்கில மொழியிலேயே பதில் அளிக்கப்படுகின்றன. ஐக்கிய அரசாங்கத்தின் கீழ் மொழி பெயர்ப்பு இலாகா ஒன்று நிறுவப்பட்டுள்ளது. எல்லாத் துறையிலும் பொதுப் பணித் துறையிலும் உள்ளவர்கள் விரும்புகின்ற மொழி பெயர்ப்புக்களை எல்லாம் இந்த மொழி பெயர்ப்பு இலாகா மொழி பெயர்த்து உதவுகிறது. கல்வித் துறையில் ஆங்கிலம், பிரெஞ்சு என்ற இரண்டுமே போதனு மொழியாக உள்ளன. இவற்றை அல்லாமல் ஆங்கிலம் மட்டுமே போதனு மொழியாக உள்ளதும், பிரெஞ்சு மட்டுமே போதனு மொழியாக உள்ளதுமான பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. என்றாலும், இப் பல்கலைக் கழகங்களில் போதனுமொழியாக உள்ள மொழியைத் தவிர, அடுத்த மொழியில் போதிக்கவும் ஏற்பாடுகள் உள்ளன. வாணிகத் துறையில் ஆங்கிலமே தலைமை இடம் பெற்றிருந்தாலும், பிரெஞ்சு மொழி பேசும் வாணிகர்கள் பிரெஞ்சு மொழியை வழங்கவும், குபெக் மாகாணத்தில் வாணிபம் செய்யும் ஆங்கிலம் பேசும் வாணிகர்கள் பிரெஞ்சு மொழியில் அன்றாடக் காரியங்களை நிறைவேற்றவும் வசதி உண்டு. பிரெஞ்சு மொழி பேசும் கனடியர்கள் சமுதாய, பொருளாதாரக் கழகங்களும். பள்ளிக்கூடங் களும், மருத்துவசாலைகளும், கூட்டுறவுப் பண்டகசாலைகளும், செய்தித் தாள்களும், நிரம்ப நிறுவியுள்ளார்கள். பாராளு மன்றத்திலும் அவர்கள் கணிசமான அளவுக்குப் பிரதிநிதிகளைப் பெற்றுள்ளார்கள்.

பிரெஞ்சு மொழி பேசும் வழி வந்த கனடியர்கள், ஆங்கிலம் பேசும் கனடியர்களைக் காட்டிலும் அதிகமான அளவிற்கு இரு மொழி பேசுபவர் களாக உள்ளார்கள். இரு மொழி பேசும் சக்தி நாட்டுப்புறங்களைவிட நகர்ப்புறங்களில் அதிகமாகவும், பெண்களைவிட ஆண்களில் அதிக மாகவும், கல்லாதவர்களைவிடக் கற்றவர்களில் அதிகமாகவும் காணப் படுகிறது. என்றாலும், சமீப காலத்தில் அதிகப்படியான மக்கள் இரு மொழி பேசும் சக்தி பெறுகிறார்கள் என்பதும் அறியப்படுகிறது. பலசெய்தித் தாள்கள் இரண்டு மொழிகளிலுமே கட்டுரைகளை அச்சிடுகின்றன.

பெல்ஜிய நாட்டில் பிளம்மிஷ், பிரெஞ்சு, ஜர்மன் ஆகிய 3 மொழி களும் வழங்குகின்றன. பிரெஞ்சு மொழியும், பிளம்மிஷ் மொழியும் ஆட்சி மொழிகளாகி அரசாங்க அறிக்கைகளில் இடம்பெறுகின்றன. பொது வாகக் கூறுமிடத்து பெரும்பாலான மக்கள் இரண்டு அல்லது மூன்று மொழியும் பேசுபவர்களாக இருத்தலினால் இந் நாட்டில் இப் பிரச்சனை சுலபமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

ரஷிய நாட்டில் மொத்தம் 200க்கு மேற்பட்ட மொழிகளும், தனித்தனி மொழி-இனத்தாரால் பேசப்படுகின்றன. இந்த 200 மொழிகளில் மிகப் பல வளர்ச்சி பெறாதனவும், பழக்கத்தில் இல்லாதனவும், இலக்கிய வளம் இல்லாதனவும் ஆகும். இன்னும் சில அக்டோபர் மாதப் புரட் சிக்குப் பிறகே எழுத்து வடிவம் பெற்றன. 16 முக்கியமான மொழி களுள் ரஷிய மொழி என்பது தனி இடத்தைப் பெற்றுள்ளது. 180 மிலியன் ஜனத்தொகை உள்ள ரஷிய நாட்டில் ஏறத்தாழ 100 மிலியன் மக்கள் தாய்மொழியாகப் பேசுவது ரஷிய மொழியாகும். ஏனைய மொழிகள் எல்லாம் சேர்ந்து மீதமுள்ளவர்களால் பேசப்படுகின்றன. ரஷிய மொழிக்கடுத்து அதிகப்படியான மக்களால் பேசப்படுவது உக்ரேனி யன் மொழியாகும். 1939-ம் வருஷ ஜனத்தொகைக் கணக்குப்படி உக்ரே னியன் மொழி பேசுவோர் ஜனத்தொகை 36·5 மிலியன். இதற்கு அடுத்த படி 8·7 மிலியன் மக்கள் பேசும் பைலோரஷியன், 4·9 மிலியன் மக்கள் பேசும் உஷ்பெக் மொழி, 4·3 மிலியன் மக்கள் பேசும் டாட்டார் மொழி என்பனவையாகும். மேலும், ஜார்கள் கால ஆட்சியிலிருந்த ரஷ்யாவில் ரஷிய மொழி ஒன்றே போதனா மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருந்து வந்துள்ளது. ரஷிய நாட்டில் ரஷிய மொழி மிக முக்கியமான இடம் பெற்றுள்ளதனாலும் அந்த நாட்டில் உள்ள ஏனைய மொழிகளோடு இந்த மொழிக்குள்ள தொடர்பு முற்றிலும் மாறுபட்டுள்ளது ஆதலாலும், இந்தியாவில் உள்ள சூழ்நிலையோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ரஷிய நாட்டைப் பொறுத்தவரை ரஷிய மொழியைத் தவிர வேறு எந்த மொழியும் நாட்டின் பொதுமொழியாக இருந்து அந் நாட்டில் பல் வேறு ராஜ்யங்களிடையே தொடர்புகொள்ள முடியாது என்று பெரும் பாலும் நம்பப்படுகிறது.

ரஷியாவின் பழைய ஆட்சி முறைக்கு முற்றிலும் மாறுபட்ட சோவியத் அரசாங்கம், சிறுபான்மையோர் மொழி விஷயத்தில் மிகவும் தாராள நோக்கத்துடனும், முன்னேற்ற முறையிலும் நடந்துகொண்டிருக்கிறது. எல்லா மொழி பேசுபவர்களுடைய நாகரிகமும், பண்பாடும், மொழிகளும் தாமே வளர இடங்கொடுப்பதோடு அல்லாமல், அக்டோபர் புரட்சிக்குப் பிற்பட்ட ரஷிய அரசாங்கம், நேரடியாகவும் உதவியுள்ளது. பள்ளிக்கூடங் களைத் திறந்தும் செய்தித் தாள்களை ஆரம்பித்தும், புதிய இலக்கியங்களைத் தோற்றுவித்தும் பலமொழிகளை வளம்படுத்தி உள்ளார்கள். ரஷிய ஜனநாயக யூனியனுக்குள் பிராந்திய மொழிகளுக்கு அதிக சலுகை காட்டப்படுகிறது. இந்த ஜனநாயக ராஜ்யங்களில் அதிகப்படியான மக்கள் எந்த மொழியைப் பேசுகிறார்களோ அந்த மொழியிலேயே அனைத்தும் நடைபெறுகின்றன.

கல்வித் துறையிலும், பிராந்திய மொழிகள் ஒப்புக்கொள்ளப்பட்டு எல்லா இடங்களிலும், சோவியத் அரசாங்கதாரால் ஆதரிக்கப்பட்டும் வருகிறது. மேலும், அந்தந்தப் பிராந்தியமொழிகளில் விஞ்ஞான

இலக்கியங்களை உண்டாக்கி அதனைப் போதிப்பதற்குரிய ஆசிரியர்களையும் கூடு மானவரை தந்துள்ளார்கள். உதாரணமாக, ஜியார்ஜியா மாகாணத்தில் பள்ளிக்கூடங்கள், கழகங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகிய எல்லாவற்றிலும் ஜியார்ஜிய மொழியே பயன்படுத்தப்படுகிறது. காசாக் மாகாணத்தில் அனைத்தும் காசாக் மொழியிலேயே நடைபெறுவதோடு எந்த ஒரு மாகாணத்தின் மொழி இலக்கிய வளம் பெறவில்லையோ அந்த மாகாணம், அதனை அடுத்துள்ள மாகாணத்தின் வளம் பெற்ற மொழியைப் போதனு மொழியாகக் கைக்கொண்டு நடைபெறுகின்றன. அதுவும் இயலாத இடத்து, ரஷிய மொழி ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

ரஷிய மத்திய அரசாங்கமும் மாகாணங்களும், மாகாணங்கள் தங்களுக் குள்ளும், நடைமுறையில் ரஷிய மொழியையே பயன்படுத்துகின்றன. தலைமை சோவியத் கூட்டத்தில் எந்த ஒரு பிராந்தியத்தைச் சேர்ந்த உறுப்பினரும் அந்தப் பிராந்திய மொழியிலேயே பேசலாம். மேலும், அந்தப் பிராந்தியத்தில் உள்ள சட்டசபைகளிலும், பிராந்திய மொழியே பயன்படுத்தப் பெறுகிறது. நீதிமன்றங்களிலும், அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும்பொழுதும், அவரவர்கள் பிராந்திய மொழியிலேயே பேசலாம். மாஸ்கோவில் உள்ள மத்திய அரசாங்கம் வெளியிடும் எல்லா அறிக்கைகளும், முடிவுகளும், மாகாண அறிக்கைகளும், நீதி மன்ற அறிக்கைகளும், எல்லா இலாகாக்களுடைய கடிதங்களும், ரஷிய மொழி யிலேயே வழங்கப்பெறுகின்றன. முக்கிய சோவியத்தில் நிறைவேற்றப்படும் எல்லாச் சட்டங்களும் யூனியனில் வழங்கப்பெறும் முக்கியமான 16 மொழிக ளிலும் மொழி பெயர்த்து வெளியிடப்படுகின்றன. முக்கிய சோவியத்தின் கெஜட்டும் 16 மொழிகளில் வெளியிடப்படுகின்றது. கொள்கை அளவில் எந்த ரஷ்ய பிரஜையும் ரஷியாவில் வழங்கும் எந்த மொழியில் வேண்டுமானாலும் தன்னுடைய மகஜரை எழுதலாமென்றாலும், வசதியை நோக்கி ரஷிய மொழியையே பெரும்பான்மையானவர்கள் பயன்படுத்து கிறார்கள். ரஷிய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற விருப்பம் வேற்று மொழி பேசும் மாகாணத்தார்களிடம் மிகுதியாக இருக்கின்ற தென்றும் சொல்லப்படுகிறது.

ரஷியா தேசத்தைப் பொறுத்தமட்டில் மொழிப் பிரச்சனையால் ஏற்படும் மனக்கசப்பைத் தவிர்ப்பதற்காக அரசாங்கத்தார் ஒவ்வொரு மொழியையும் தாய்நாட்டின் பண்பாட்டை வளர்க்கக்கூடிய மொழி என்ற கருத்தில் நன்முறையில் ஆதரித்துப் போற்றுகிறார்கள். ரஷிய மொழி பெற்றிருக் கின்ற தனிப்பட்ட சிறப்புக் காரணமாக, இரண்டு மொழிகளுக்கிடையே ஏற்படக்கூடிய போராட்டம் தவிர்க்கப்படுகிறது.

5. மொழிச் சீர்திருத்தம் என்பது பற்றியும், ஏனைய நாடுகளில் இது எவ்விதம் கொண்டு செலுத்தப்பெற்றது என்பது பற்றியும் ஓர் இரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம். துருக்கி நாட்டைப் பொறுத்த வரை முதலாவது உலக யுத்தம் முடிந்த பிறகு அந்த நாட்டின் சமுதாய, பண்பாட்டுப் புரட்சியைத் தோற்றுவித்த, முஸ்தாபா கமால் ஆட்டாடுர்க், துருக்கி மொழியிலேயும் முறைப்படி சீர்திருத்தத்தைத் தோற்றுவித்தார். 1928-ம் வருஷம் லத்தீனிய எழுத்து முறை புகுத்தப்பெற்று மேல்நாட்டு முறையில் எண்களைக் குறிக்கின்ற பழக்கத்தையும் உண்டாக்கினார்கள். இதனோடு கூடவே, அராபிய, ரஷிய அடிப்படையிலிருந்து தோன்றிய "ஒட் டோமா துருக்கிச்" சொற்களை மெள்ள ஒதுக்கிவிட்டுப் பழைய துருக்கிய சொற் கள் புகுத்தப்பட்டன. மொழிச் சீர்திருத்தம் என்பது அரசாங்கத்தாரால் துருக்கிய மொழிக் கழகம் என்ற கழகத்தின் வாயிலாக செய்யப்பெற்றது. இக்கழகம் கல்வி இலாகாவுடனும். அமைச்சர் அவையினுடனும் மிகுதியும் ஒத்துழைத்தது. பிற்காலத்தில் மொழியைத் தூய்மைப் படுத்துகின்ற வேகம் ஓர் அளவு குறைந்து மொழிக்கொள்கை ஓரளவு தளர்த்தப்பெற்றது என்றும் அறிகிறோம்.

ஜப்பானிய மொழியைப் பொறுத்தவரையில் 1868-ம் ஆண்டில் "நெ ஜிமீட்சி" என்ற புரட்சியின் காரணமாக ஜப்பானிய மொழி முற்றிலு

புதுப்பிக்கப்பெற்றது. இதன் பிறகு தான் ஜப்பானிய தேசம் புதுமை பெற்ற இனமாகவும் மாறி, ஆச்சரியப்படத்தகுந்த முறையில் மிக வேகமாகவும் சிறந்த முறையிலும் முன்னேற்றத்தையும், வெற்றியையும் பெற்றது. ஜப்பானிய எழுத்து முறை சீன எழுத்து முறையைப் போன்றதே. வரை எழுத்துக்கள் எனறு சொல்லப்படும் இவ்வெழுத்துக்கள் மொத்தம் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்டவை. வரை எழுத்து முறையைப் பின்பற்றி ஜப்பானியர்கள் புதிய ஒலி முறையை ஏற்படுத்தினார்கள். "கடகன்" "உறிாகவா" என்று பெயர்களையுடைய ஒவ்வொன்றும் 73 எழுத்துக்கள் கொண்ட இரண்டு முறைகள், தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் 48 பழைய எழுத்துக்களும் ஏனையவை கூட்டெழுத்துக்கள் ஆகவும் உள்ளன. இந்தக் கூட்டெழுத்துக்களை இந்திய ஒலி இயலில் கணங்கள், மாத்திரைகள் என்பவற்றோடு ஒப்பிடலாம். மொழியை இங்ஙனம் புதுப்பித்ததனால் ஜப்பானிய தேசம் கல்வியறிவில் எல்லையற்ற வளர்ச்சியைப் பெற்று இப்பொழுது 90 சதவிகிதம் கல்வி அறிவு பெற்றவர்களைக் கொண்டிருக்கிறது. இந்த சத விகிதம் எந்த மேலே நாட்டுத் தேசத்தோடும் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. ஜப்பான் தேசத்தில் கல்வித் துறையில் ஜப்பானிய மொழியே போதனு மொழியாக இருக்கிறது. மேல் நாட்டு மொழிகளும், முக்கியமாக ஆங்கில மொழியும், விஞ்ஞான கல்வி முறையிலும், வாணிகக் கல்வி முறையிலும் பயன்படுகிறது. விஞ்ஞான அடிச் சொற்கள் பழைய சீன மொழியின் வேர்ச் சொற்களிலிருந்தே பெறப் பெற்றுள்ளன.

சீன தேசத்தில் மொழிப் பிரச்சனை வேறு வகையில் காட்சி அளிக்கிறது. 460 மிலியன் ஜனத்தொகை உள்ள அந்த நாட்டில் 24 வகைக் "கிளை மொழிகள்" வேறுபாட்டோடு விளங்கினாலும், எல்லாவற்றிற்கும் எழுத்து முறை ஒன்றுதான். எழுத்துக்களை கணக்கிடும்பொழுது எத்தனை சொற்கள் உண்டோ அத்தனை எழுத்துக்கள் உள்ளன என்று சொல்லலாம். எல்லா வேறுபட்ட மொழிகளுக்கும் ஒரே வகையான எழுத்துக்கள் இருப்பதால் வாயினால் பேசும் முறையில் வேறுபாடு இருப்பினும், இரண்டு சீனர்கள் வாய் மொழியால் பேசும்பொழுது ஒருவரையொருவர் புரிந்துகொள்ளாவிடினும், எழுத்து மூலமாகப் புரிந்துகொள்ளலாம். வரை எழுத்துக்கள் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த பயன் அளிக்காது என்பதுபோல் தோன்றுகிறது. இம் முறையில் விரிவானதும் ஆழமானதுமான கல்வியைப் பெற முடிவதில்லை. ஏனென்றால் ஆரம்பப் பள்ளியின் பெரும்பகுதியான காலம் ஆயிரக்கணக்கான வரை எழுத்துக்களைக் கற்றுக்கொள்வதிலேயே செலவழிந்து விடுகிறது. இத்தகைய தொல்லை கல்வி அறிவு வளர்ச்சிக்குத் தடையாக அமைந்துள்ளது.

சீன எழுத்துக்களை மாற்றி அமைக்கின்ற முயற்சி பல்லாண்டுகளாக நடை பெற்று வந்து இப்பொழுது ஒரு முடிவான கொள்கை ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. முடிவாக ஆராயுமிடத்துச் சீன மொழிச் சீர்திருத்தம் என்பது இப்பொழுதுள்ள வரைப்பட முறையை மாற்றி அமைத்து எழுத்துக்களைத் தருவதே யாகும் என நினைக்கவேண்டி உள்ளது. பேச்சு வழக்கில் சீன மொழியும் இத்தாலி மொழியைப்போல, நவீன கால நாகரீக வாழ்க்கைக்கேற்றபடியும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றபடியும், தொழில் துறை வளர்ச்சிக்கு ஏற்றபடியும் நூற்றுக்கணக்கான புதிய சொற்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது.

6. நம்முடைய நாட்டில் தோன்றியுள்ள மொழிப் பிரச்சனை ஒரு புது மாதிரியான இடைஞ்சலோடு கூடியதாகத் தெரிகிறது. அடுத்த பகுதியில் இந்திய நாட்டின் மொழிகளைப்பற்றிய நிலை விரிவாக ஆராயப்படுகிறது. சுருக்கமாகக் கூறுமிடத்து இந்தியாவில் 12-க்கும் மேற்பட்ட நன்கு வளர்ச்சி அடைந்த மொழிகள் பேசப்படுகின்றன என்பதும், ஒவ்வொரு மொழியும் மிகுதியான மக்களால் பேசப்படுகின்றன என்பதும், இவர்கள் அனைவரும் மொழிவாரி மாகாணங்களில் வாழ்ந்து வருகிறார்கள் என்பதும், இவர்கள் ஒவ்வொருவருக்கும் பழமையான சரித்திரமும், இலக்கிய மரபுகளும்

உள்ளன என்பதும், இம்மரபுகள் ஒவ்வொரு வகுப்பாருக்கும் பல நூறு ஆண்டுகட்கு முற்பட்டதாக உள்ளது என்பதும் சொல்லப்படலாம். ஒவ்வொரு மொழிக்கும் தனித்தனியே வரி வடிவ எழுத்துக்கள் அமைந்துள் ளன. அதிகப்படியான மொழிகள் இருக்கின்ற காரணத்தால் சுவிட்சர் லாந்திலும், பெல்ஜியத்திலும், கானடாவிலும் செய்யப்பெற்றதுபோல் இந்த நாட்டில் மொழிப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ரஷிய நாட்டில் செய்யப் பெற்றதுபோல் ஏதாவது ஒரு மொழி தனிச்சிறப்பு பெற்றிருக்கின்ற காரணத்தால் மற்றைய மொழிகளைவிட உரிமை பெற்றிருக்கவும் இல்லை. எண்ணிக்கை அளவைத்தவிர எந்த வகையிலும் எந்த ஒரு மொழியும் இந்நாட்டில் தனிச்சிறப்புப் பெற்றிருக்கவில்லை. எனவே, எல்லா மொழி களையும் ஒருசேர வளர்த்தால் அவற்றினுடைய லாபத்தைக் கருதியும், பொதுத் தன்மையைக் கருதியும் எல்லா மொழி பேசுபவர்களும் இறுதி யாக ஒரு மொழியைக் தாமே கையாள தொடங்குவார்கள் என்று சொல்லு கின்ற சூழ்நிலையும் இந்திய நாட்டில் இல்லை. இந்தியாவைப் பொறுத்த மட்டில் இரண்டு மொழிகள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கின்ற பிரதேசங்களிலாவது எந்த அளவுக்கு யூனியன் மொழி தேவைப்படலாம்; எந்த அளவுக்கு பிராந்திய மொழி தேவைப்படலாம் என்பதை கவனத்துடன் ஆராயவேண்டும்.

எல்லாத் துறைகளிலும் எந்த அளவுக்கு யூனியன் மொழியும், பிராந்திய மொழியும் இடம் பெறலாம் என்பதையும், இவை இரண்டிற்கும் ஏற்ப நடு நிலைமையை ஆராய்வதும், இந்த அறிக்கையின் உரிய இடங்களில் ஆராயப்படுகின்றன. எவ்வாறுயினும் இந்தப் பிரச்சனை எத்தனையோ இடை யூறுகள் பெற்றிருந்தாலும் ஒரு பொதுத் தன்மை காண முடியாது என்று சொல்லுவதற்கில்லை. ஒரு மொழி என்பது அந்த மொழி பேசுகின்ற இனத்தாரால் தங்களுடைய பண்பாட்டின் அடையாளமாகக் கொள்ளப்பட்டி ருக்கிறது. எனவே, அந்த இனத்தாரின் கௌரவம் முதலியன மொழி யைப்பற்றிய பிரச்சனை எழும்பொழுது பாதிக்கப்படுவதாகவே கருதப்படுகிறது. ஒவ்வொரு இனத்தாருக்கும் பண்பாட்டைத் தெரிவிப்பதற்கு அவர்கள் மொழி தேவைப்பட்டாலும் பல சமுதாயங்கள் ஒன்று கூடி ஒரு அரசியலின் கீழ் வாழ்கின்ற இக்காலத்தில் அனைவருக்கும் பொதுவான ஒரு மொழி தேவை என்பதும் பல்வேறு மொழி பேசுபவர்கள் இடையே தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளுவதற்கு இத்தகைய ஒரு மொழி இன்றியமையாது என்பதும் விளங்கும். அத்தகைய ஒரு பொது மொழியைப் பெறுவது ஒவ்வொரு மொழி இனத்தாருக்கும் இன்றியமையாததேயாகும். எனவே இந்தப் பிரச்சனையை சகிப்புத்தன்மையோடும் பிறருடைய கருத்தைப் புரிந்து கொள்ளுகின்ற பரந்த மனப்பான்மையோடும் ஆராய முற்பட்டால் இதற்கு ஒரு முடிவு காணுவது என்பது இயலாதகாரியமன்று. பல மொழி பேசப்படும் பிற நாடுகளில் இங்ஙனம் ஒரு முடிவைக் காண்பதற்கு முன்னர் எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்பதையும் சரித்திரங் கற்றோர் உணர்வர்.

7. பிற நாட்டவர்கள் பெற்றுள்ள அனுபவத்தை மற்றொரு பகுதி யிலும் நாம் அறிவது பொருத்தமுடையதாகும். பிற மொழிகளைத் "துணை மொழி" என்ற முறையில் கல்வித் துறையில் கற்பது விஞ்ஞான வளர்ச்சி, தொழிலியல் நுட்பம் என்பவற்றை அறிந்துகொள்ள உதவியாகிறது. இம்முறையில் ஆங்கிலம் தாய்மொழியாக இல்லாத பிற நாடுகளில் ஆங்கிலத்தை எவ்வாறு கற்கின்றார்கள் என்பதை இதுவரையில் ஆங்கிலங் கற்றுக்கொண்டு வந்த காரணத்தாலும், உலகம் முழுவதிலும் அதிகமான மக்களால் துணை மொழியாக அது கற்கப்படுகிறது என்ற காரணத்தாலும், நாம் அறியவேண்டியது இன்றியமையாதது ஆகும். பிரான்ஸ் தேசத்தில் 1918-ம் ஆண்டிலிருந்து ஆங்கிலம் துணை மொழியாகக் கற்கப்பட்டு வருகி றது. ஸ்கேண்டிநேவிய நாடுகளில் இரண்டாம் உலக யுத்தத்திலிருந்து ஆங்கிலம் துணை மொழியாக இருந்து வருகிறது. துருக்கி, கிரீஸ், ஆகிய தேசங்களிலும் இரண்டாம் உலக யுத்தத்திலிருந்து ஆங்கிலம் துணை மொழி யாக இருக்கின்றது. இவ்விரு நாடுகளிலும் 1939-க்கு முன்னர் பிரெஞ்சு மொழி துணை மொழியாக இருந்தது என்பதும் அறியப்படவேண்டும்.

இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுகல் ஆகிய நாடுகளில் பிரெஞ்சு மொழி அதிக முக்கியத்துவம் பெற்றிருந்தபோதிலும், கற்க எளிதான காரணத்தால் இப்பொழுது ஆங்கிலம் முன்னேறி வருகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் இதுவரையிலும் பிரெஞ்சு மொழி அதிகச் செல்வாக்குப் பெற்றிருந்தபோதிலும் இப்பொழுது ஆங்கிலமே முன்னேறி வருகிறது. சோவியத் ரஷியாவிலும் ஆங்கில மொழி முன்னேறி வருவதோடு 10 மிலியன் குழந்தைகள் இப்பொழுது ஆங்கிலம் கற்று வருகிறார்கள் என்றும் சோவியத் யூனியனில் உள்ள பள்ளிக்கூடங்களில் 40 சத வீதம் ஆங்கிலத்தைக் கற்பிக்கின்றன என்றும் அறிகிறோம். "வெளி நாட்டு மொழி"களுள் ஒன்று கட்டாய பாடமாக ரஷியாவில் உள்ளது என்றும், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன் ஆகிய மூன்று மொழிகளுள் ஏதாவது ஒன்றைத் துணை மொழியாக எடுத்துக் கொள்ளலாமென்றும், இம் மூன்றனுள் ஆங்கிலமே பெரும்பாலான மக்களால் விரும்பிக் கற்கப்படுகின்றது என்றும் தெரிகிறது. போலந்து, செக்கோஸ்லோவேஸ்கியா, இன்னும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ரஷிய மொழி முதலாவது துணை மொழியாக இருந்தபோதிலும், ஆங்கிலத்தைப் பலரும் கற்கவும், தெரிந்துகொள்ளவும் செய்கின்றார்கள். ஜப்பானிய தேசத்தில் மிக நீண்ட காலகமாகவே ஆங்கிலம் கற்கும் வழக்கம் இருந்து வருகிறது. ஜப்பானில் பள்ளிக்கூடக் குழந்தைகள் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜர்மன் ஆகிய மூன்று மொழிகளுள் ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் என்றாலும், பெரும்பான்மையானவர் ஆங்கிலத்தையே எடுத்துக் கொள்ளுகின்றார்கள். முதலாவது துணை மொழியாக ஜப்பான் தேசம் மேற்கொண்டிருப்பது ஆங்கிலத்தையேயாகும். நடுத்தரப் பள்ளிகளில் 10 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிக்கப்படுவதோடு பல்கலைக் கழகங்களில் முதல் இரண்டு ஆண்டுகளில் படிக்கின்ற மாணவர்கள் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுத்திருந்தாலும் ஆங்கிலத்தைக் கட்டாயம் படித்தே தீர வேண்டும். இதன் காரணமாக ஜப்பானியப் புலவர்களும், விஞ்ஞானிகளும் பேசப்படுகின்ற ஆங்கில மொழியைக்காட்டிலும், எழுதப்படுகின்ற ஆங்கில மொழியை எளிதில் புரிந்து கொள்ளுகிறார்கள். தனிப்பட்ட விஞ்ஞானிகள் ஆங்கிலம் தெரிந்த காரணத்தால் தங்கள் ஆராய்ச்சிகளை ஆங்கிலத்தில் வெளியிடுவது போக, ஜப்பான் தேசத்திலுள்ள பல்கலைக் கழகங்களும், அரசியலார் ஆராய்ச்சிக் கழகங்களும், விஞ்ஞானக் கழகங்களும், கல்விக் கழகங்களும், ஆங்கில மொழியில் பத்திரிகைகளை வெளியிடுவதோடு ஜப்பானிய மொழியில் நடைபெறுகின்ற பத்திரிகைகளிலும், சுருங்கிய முறையில் ஆங்கிலக் கட்டுரைகளை வெளியிட்டு உலக விஞ்ஞான வளர்ச்சியோடு ஜப்பான் தேசம் உடன் செல்லுமாறு செய்கின்றார்கள். ஜப்பான் தேசத்தில் உள்ள பெரும் வாணிக ஸ்தலங்களில் உள்ளவர்கள் அனைவரும் ஓர் அளவு ஆங்கில ஞானம் படைத்தவர்களாக இருக்கின்றார்கள்.

இதுவரை கூறியவற்றைக் கொண்டு உலக நாடுகளில் ஆங்கிலம் எப்படித் துணை மொழியாக உள்ளது என்பதை விரிவாக முற்றிலும் கூறிவிட்டதாக யாரும் நினைக்கவேண்டாம். இதுவரை கூறியவற்றால் தற்காலத்தில் மிகுதியும் வளர்ச்சி அடைந்துள்ள ஒரு பிற நாட்டு மொழியை கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவு இன்றியமையாதது என்பதும், அங்ஙனம் கற்றுக் கொள்வதால் எப்படி விஞ்ஞான அறிவையும், தொழில் நுட்ப அறிவையும் வளர்க்க முடியும் என்பதும் அவை இரண்டையும் வளர்ப்பதற்கு வேறு எந்த வளர்ச்சி பெற்ற மொழியைக்காட்டிலும் ஆங்கிலம் எப்படிப் பயன் படுகிறது என்பதும் ஒருவாறு விளங்கும். இங்கே சொல்லிய கருத்துக்கள் நம்முடைய நாட்டின் கல்வித் துறையில் ஆங்கிலம் எத்தகைய இடத்தைப் பெற வேண்டும் என்பதைப்பற்றிப் பின்னால் விரிவாக ஆராயும் பொழுது பயன்படும்.

இதில் கூறப் பெற்ற சில விஷயங்களை எங்கட்கு உதவியமைக்கு பிரிட்டிஷ் கௌன்சிலுக்கு நன்றி பாராட்டுகிறோம்.

பகுதி III

இந்தியாவில் பல்வேறு மொழிகளின் நிலை

இந்தப் பகுதியில் இந்தியாவின் பல்வேறு மொழிகளின் நிலையையும், அவை எங்ஙனம் தோன்றி வளர்ந்தன என்பதையும், இன்றைய சூழ் நிலையில் அவற்றின் கூறுபாடுகளையும், எல்லைகளையும், அவற்றால் விளையப் போகின்ற விளைவுகளையும் சுருங்கிய அளவில் ஒருவாறு காணலாம்.

1. இந்திய நாடு தெற்கு வடக்கிலும், கிழக்கு மேற்கிலும் ஏறத்தாழ இரண்டு ஆயிரம் மைல்கள் நீண்டு விரிந்து உள்ள நாடு. சரித்திர காலத்தின் முன்னரே நான்கு அல்லது ஐந்து மில்லினியங்களில் பல்வேறு வகைப்பட்ட நாகரிகங்களும், பண்பாடுகளும் வெற்றிகரமாக இந்நாட்டில் வளர்ச்சி அடைந்தன என்றும் அறிகின்றோம். ரஷியாவை நீக்கிய ஐரோப்பா தேசத்தில் மூன்றில் இரண்டு பங்கு பரப்புள்ள இந்நாட்டில் உலக ஜனத்தொகையில் எழில் ஒரு பாகம் இருக்கிறது. இந்நாட்டின் பூகோள அமைப்பு உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் உள்ள வேறுபட்ட ஜாதியார்களும், ஒன்றுகூடுவதற்கு இடந் தந்ததாகலின் இந் நாட்டில் வழங்கப் போகின்ற பல்வேறு வகையான மொழிகள் வியப்பை விளைப்பதற்கில்லை.

இந் நாட்டில் மிக மிகப் பழங்காலத்தில் தங்கி வாழ்ந்த மக்கள் நீக்ராயிட் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அந்தமான் தீவுகள் போன்ற இடங்களில் வாழ்கின்ற மிகச் சிலரைத்தவிர, இந்த இனம் இன்று இல்லை யென்றும், பிற்காலத்தில் தோன்றிய இந்திய சமுதாயத்தோடு ஒன்றிப்போனவர்களைத் தவிர, இப்பொழுது இந்த இனம் தனியே இல்லையென்றும் நம்பப்படுகிறது. இவர்களை அடுத்து புரோடோ அஸ்டர் லாயிட் என்ற பெயர் கூறப்படுகின்ற ஒரு இனத்தார் இந்நாட்டின் பெரும் பகுதியில் வாழ்ந்திருக்கவேண்டும். இந்த மக்கள் பேசிய மொழி வழக்குகள், ஆஸ்டிரிக் மொழிக் குடும்பத்தோடும், அதனுடைய கிளை மொழிகளோடும் சம்பந்தமுடையனவாய் உள்ளன என்பதும் அறியப்படுகிறது. இந் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், இந்து சமுதாயத்தின் ஜாதிப் பிரிவினைகளில் தாழ்ந்த இனத்தார் என்று சொல்லப்படுகிறவர்களில், இந்தப் பழமை இனத்தின் சில அடிப்படைகள் இன்றும் இருந்து வருகின்றன. பிற்காலத்தில் இந் நாட்டினுள் புகுந்த திராவிடர்களும், ஆரியர்களும் முன்னரே இங்கிருந்தபுரோடோ ஆஸ்டர்லாயிடுகளை ஒருவாறு அமிழ்த்திவிட்டார்கள் என்றாலும், இன்றும், முண்டாக்கள், சாந்திலிகள், முண்டாரிகள், காசிகள் என்று சொல்லப்படுகின்ற கூட்டத்தார் பேசும் மொழிகளில் புரோடோ ஆஸ்டர்லாயிடுகள் பேசிய மொழி வழக்கின் சிற்சில பகுதிகள் இருக்கக் காண்கிறோம். இந்தப் பேச்சு வடிவங்கள் கிராமியக் கதைகளிலும், நாடோடிப் பாடல்களிலும், கதைப் பாட்டுக்களிலும் நன்றாகக் காணப் பட்டாலும் இலக்கிய வளம் பெற்றதாக சொல்வதற்கில்லை. மேலும், 19-ம் நூற்றாண்டில் கிருஸ்துவ பாதிரியார்களின் முயற்சியால்தான் இவை வரி வடிவம் பெற்றன. இம்மொழிகள் பேசுகின்ற கூட்டத்தார்கள் தங்களுக்கு அருகே உள்ள வளர்ச்சி அடைந்த மொழியைக் கற்றே அதன் மூலம் பண்பாட்டையும் இலக்கியத்தையும் பெருக்கிக் கொண்டார்கள். இது பலகாலமாக நடைபெற்று வந்த ஒன்று. இவர்களைப் பின்பற்றி இந்நாட்டுள் வந்த திராவிடர்களும் ஆரியர்களும் இப்பொழுது பெரும்பான்மையானவர்களாகவும் அவர்கள் பேசும் மொழிகளே பெரும்பான்மையானவையாகவும் உள்ளன. என்றாலும், சரித்திரத்தில் நிகழ்வதுபோல இந்த திராவிடர்களும் ஆரியர்களும் கூடப் பெரிய அளவுக்கு இங்கு பழமையாக வாழ்ந்த குடிகளால் பாதிக்கப்பட்டு உள்ளார்கள். அவர்களுடைய மொழிகளும் அப்படியே.

2. இந்தியாவின் மொழிவாரிக் கணக்குப்படி 179 முக்கிய மொழிகளும் 544 கிளை மொழிகளும் இங்கு உள்ளன. மொழி நூல் வல்லவர்கள் இவற்றை நான்கு குடும்பங்களாக பிரித்துள்ளார்கள். அவையாவன: இண்டோ-ஆரியன் குடும்பம், திராவிடக் குடும்பம், ஆஸ்ட்ரோ-ஏஷியாடிக் குடும்பம், திபெத்தோ-பர்மன் குடும்பம் என்பவையாம். மொழி வளர்ச்சியில் சமீப சரித்திரக் காலத்தில் இந்தோ-ஆரியக் குடும்பமும், திராவிடக் குடும்பமுமே . முக்கியமானவைகளாக உள்ளன. தற்காலத்தில் திராவிட மொழிகள் தென் பிராந்தியத்திலேயே மிகுதியாக உள்ளன என்றாலும், மொழி நூல் வல்லவர்கள் கருத்துப்படி திராவிட மொழிகளின் சில கூறுபாடுகள் இந்திய நாட்டின் வட பிராந்தியங்களிலும் உள்ளனவாம். அதாவது, மத்ய மாகாணத்தில் உள்ள கோண்டு மொழியும், ஒரிசா மாகாணத்தில் உள்ள கூய் மொழியும், பலுஜிஸ்தானத்தில் உள்ள பிராஹி மொழியும் திராவிட மொழி மிகப் பரந்துபட்டு இந்நாடு முழுவதும் பரவியிருந்த ஒரு காலத்தை குறிப்பிடுகின்றன. ஆஸ்ட்ரோ ஏஷியாடிக் குடும்ப மொழிகளின் செல்வாக்கு இந்தோ-ஆரியக் குடும்பத்தையும், திராவிட மொழிக் குடும்பத்தையும் ஓரளவு பாதித்துள்ளது என்பதும், இண்டோ ஆரியப் பேச்சு வழக்கும், திராவிடப் பேச்சு வழக்கும் ஒன்றையொன்று மிகவும் பாதித்துள்ளன என்பதும் அறிஞர்கள் ஒப்புக்கொள்ளுகின்ற ஒன்று. பண்பாட்டு முறையில், திராவிடர்கள் இந்து சமயத்தின் அடிப்படையான கருத்துக்கள் சிலவற்றையும், சில நாகரிகத்தையும் தந்துள்ளார்கள். திராவிட மொழிகளுள் சிறந்த இலக்கிய வளம் வாய்ந்ததும் வளர்ச்சி பெற்றதுமான ந ன்கு மொழிகளுள் தமிழ் மொழி மட்டும் மிகப் பழங்காலந் தொட்டுத் தொடர்பான இலக்கியத்தைப் பெற்றுள்ளது. அதனுடைய இலக்கியங்கள் ஏறத்தாழ கிருஸ்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் இருந்து உள்ளன. கன்னட மொழியும், பழமையானதுதான் என்றாலும், தெலுங்கு மொழி ஓரிரண்டு நூற்றாண்டுகள் பிற்பட்டதாகும். மலையாள மொழி தமிழ் மொழியாகக் கருதப்பட்டாலும் இலக்கிய வளத்தில் மிக மிக இளமையுடையது. தென்னாட்டு மொழிகளுள் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்திருப்பது (ஒவ்வொரு மொழிக்கும் இந்த அளவு மாறுபடலாம்) திராவிடப் பண்பாடும் ஆரியப் பண்பாடும் காலாந்தரத்தில் ஒன்று கலந்தன என்பதையும், இந்த இரண்டினத்தாரும் ஒன்று கலந்தனர் என்பதையும் வெளிக்காட்டுகிறது. உண்மையைக்கூறப்போனால் பிற்காலத்தில் அதாவது 11-ம் நூற்றாண்டை அடுத்து, துருக்கியர்களும், இரானியகளும், முகலாயர்களும் வடமேற்கு வழியாக இந்நாட்டினுள் நுழைந்த பொழுது பர்ஷிய, அராபிய மொழிகளும், சமயங்களும், பண்பாடுகளும், இந்தியாவில் வந்து தங்க நேரிட்டது. எனவே, தெற்கிலும், தென் மொழிகள் பேசப்படுகின்ற இடங்களிலுந்தான் வடமொழிப் பண்பாட்டு அடிப்படை கலப்பில்லாதபடி காப்பாற்றப் பெற்றது. தென் பகுதியும் ஏனையப் பகுதிகளைப்போல, வடமொழியிற் காணப்படும் தத்துவ சாஸ்திரம், இலக்கணம், புராணம், இலக்கியம் ஆகியவற்றில் பங்கு கொள்ளுகிறது, என்பதோடு மட்டுமல்லாமல் இவையனைத்திற்கும் தன்னுடைய பங்கையும் தந்து பல நூற்றாண்டுகளாக அவற்றைத் தூய்மையாக காப்பாற்றவும் செய்திருக்கிறது.

இந்தோ–ஆரிய மொழியைப்பற்றிய மிகப் பழமையான ஆதாரங்கள் ரிக்வேதத்தில் காணப்படுகின்றன. வேதப் பாடல்களில் பயன்படுத்தப் பெற்ற மொழியைத் தவிர, அக்காலத்தில் வழக்கில் இருந்த மொழியில் கிளை மொழி வேறுபாடுகளும் இருந்திருக்கும். அவற்றை அறிஞர்கள் வேதப் ப்ராக்ருத மொழி என்று சொல்கிறார்கள். இவை பயிற்சியில் இருந்த காலத்தில் வேத மொழியானது தலைமுறைக்குத் தலைமுறை வாய் மொழியாகப் வழங்கப்பெற்று, அதிக மாறுபாடு இல்லாமல் உயர் வகுப்பு மக்களால் காப்பாற்றப்பெற்று வந்தது. ஏறத்தாழ கி. மு. 7-ம் நூற்றுண்டு அளவில் இந்த அடிப்படையில் இருந்து இப்பொழுது வடமொழி என்று வழங்கப்படுகின்ற சமஸ்கிருதம் ஒரு வடிவு பெற்றுத் தோன்றலாயிற்று. பாணினிக்கு முற்பட்ட தலைமுறைகளில் பல ஆராய்ச்சியாளர்கள் பல்வேறு இலக்கண ஆராய்ச்சிகள் நடத்தியுள்ளார்கள் எனினும், பாணினியால் வகுக்கப்பட்ட இலக்கணமும், சொல் அதிகாரமும், சமஸ்கிருத

மொழிக்கு நிலைத்துவிட்டன. அதனை அடுத்துப் பல நூற்றாண்டுகளுக்குச் சிறந்த மொழி என்றும், இலக்கிய வளம் நிறைந்த மொழி என்றும் பெயர் பெற்று, இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் வடமொழி வழங்கலாயிற்று.

பண்பாட்டு மொழி என்று அனைவராலும் ஒப்புக் கொள்ளப் பெற்றாலும் உயர் வகுப்பினராலும், அறிஞர்களாலும் நாடு முழுவதிலும் கையாளப் பெற்றாலும், உயர்தனி வடமொழி பொதுமக்களினுடைய மொழியாக இருந்ததே யில்லை. சமயத் தலைவர்களான மகாவீரரும், புத்தரும் தங்களுடைய உபதேசங்கள் பொதுமக்களுக்குப் பயன்படவேண்டும் என்ற காரணத்தால் மிக முயன்று பிராகிருத மொழியிலேயே பேசினார்கள் என்பதும், ஜெயின், புத்த இலக்கியங்கள் இந்த மதக் கொள்கைகளை இந்நாட்டிலும், பிற நாடுகளிலும் பரப்ப முயன்ற பொழுது பாலி மொழியையும், அர்த்தமகதி மொழியையும் கையாண்டன என்பதும் நன்கு அறியப்பட்ட உண்மைகள். அசோகனுடைய ஆணைகள் அனைத்தும் பொது மக்களுக்குப் பரப்பப்பட்ட காரணத்தால், இந்தோ–ஆரிய பிராகிருத கிளை மொழிகளிலேயே வழங்கப்பெற்றன.

வடமொழியும் அதனுடைய இலக்கிய மரபுகளும் இந்திய எல்லைக்குள் மட்டும் நில்லாமல் பழைய இந்தியப் பண்பாட்டை வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லும் கருவியாகவும் அமைந்துவிட்டன. வடமொழிக் கல்வெட்டுக்களும், இந்துப் பண்பாட்டின் செல்வாக்கும், இலக்கிய மரபுகளும் பர்மா, இந்தோ–சீனா, மலேயா, இந்தோநேஷியா, ஆகிய இடங்களிலும் மத்திய ஆசியாவின் பல பகுதிகளிலும் இன்றும் காணப்பெறுகின்றன. இவற்றை அல்லாமல் பெரிய சமய கொள்கைகள், புத்த சமய காலத்தில் இந்தியாவின் தூதாக ஆசியா, இலங்கை, திபேத், கொரியா, சீனா, ஜப்பான், சீன துருக்கிஸ்தானம் முதலிய இடங்களுக்குப் பரவின.

மிகப் பழைய இந்தோ–ஆரியப் ப்ராகிருத மொழி, பிற்காலத்தில் மக்கள் பேசுகின்ற அப-பிரும்ம-ஷாஸ் மொழியாக மாறி அவற்றிலிருந்தே இக்காலம் பேசப்படுகின்ற இந்திய மொழிகள் தோன்றலாயின. இக்கால இந்தோ–ஆரிய மொழிகள் சவுராஸனி, மகாராஷ்டிரா, மகதா, விரச்சாதா, கேகயா ஆகிய மொழிகளிலிருந்து தோன்றின என்று நம்பப்படுகிறது. அதாவது சவுராஷன் அபப்பிரும்மாஷ்லிருந்து மேற்கத்திய இந்தியும், ராஜஸ்தானியும், பஞ்சாபியும், குஜராத்தியும் தோன்றலாயின. மகாராஷ்டிராவிலிருந்து மராத்தியும், பிரசாதாவிலிருந்து சிந்தி மொழியும், மகத அபப்பிரும்மாஷிலிருந்து வங்காளி, அஸாமிய மொழி, ஒரிய மொழி ஆகியவைகளும் தோன்றலாயின.

துருக்கியர்களும், இரானியர்களும் 11-ம் நூற்றாண்டில் வடநாட்டிலும், 13-ம் நூற்றாண்டில் தென்னாட்டிலும், புகுந்த பிறகு புதியதொரு கிளர்ச்சி தோன்றி இந்திய மொழிகள் நிலையில் பெரிய மாற்றத்தை உண்டாக்கின. இதுவரையில் இந்தியா முழுவதற்கும் பொதுமொழியாக வடமொழி இருந்து வந்தது. துருக்கிய இரானிய சக்தி இந்தியாவில் பரவியதும், பர்ஷிய மொழி ஆட்சி மொழியாக வரவே, அராபிய மொழியிலிருந்து கடனாகப் பெற்ற பல சொற்கள் வெவ்வேறு அளவில் இந்திய மொழிகளில் புகலாயின. பர்ஷிய, அராபிய, துருக்கிய தொடர்புகள் அராபிய மொழியிலிருந்தும், பர்ஷிய மொழியிலிருந்தும் பல்வேறு அளவுக்கு ஒவ்வொரு மொழியிலும் சொற்களைப் புகுத்தலாயின. இக்காலத்தில் தென்னாட்டில் வளமுடைய திராவிட மொழிகள், வடநாட்டில் ஏற்பட்டதுபோன்ற முஸ்லீம்களின் படையெடுப்பு இல்லாத காரணத்தால், வடமொழியை நன்கு பாதுகாத்துப் பராமரித்து வந்தன. இந்த இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அனைத்தும் திராவிட இலக்கியத்தில் எவ்வளவு தூரம் வடமொழியின் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதற்குச் சான்று பகருகின்றன. திராவிட மொழிகளிலும் திராவிடருடைய எண்ணங்களிலும்கூட வடமொழிச் செல்வாக்கு ஊறியிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால், தென்னாடுதான், இந்தோ–ஆரிய நாகரிகத்திற்குத் தங்குமிடமாக யிருந்த தோடல்லாமல், பிராமண ஹிந்து சமயத்திற்கு ஜெயின் சமயத்தாலும்

பௌத்த சமயத்தாலும் ஏற்பட்ட போட்டிகளில் எல்லாம் தீங்கு ஒன்றும் வராமல் காப்பாற்றியது என்றும் சொல்லலாம். பிராமண ஹிந்து சமயம் மகத நாட்டில் தொடங்கி இந்தியா முழுவதும் பரவியது. துருக்கியர்களும் முகலாயர்களும் அமைத்த அரசாங்கம் அவர்களைச் சுற்றியுள்ள கிளை மொழிகளைப் பாதித்து அவர்கள் அதிகாரத்தில் எல்லையிலிருந்த மொழிகளில் எல்லாம் தங்களுடைய மறைமுகமான ஆதிக்கத்தை செலுத்தின என்று சொல்லலாம். வடநாட்டில் முதலில் ஹிந்தி என்றும், ஹிந்தூயி என்றும், ரெக்தா என்றும் சொல்லப்பட்ட ஒரு மொழி பிற்காலத்தில் சமீபே உருது என்ற பெயருடன் வளரத் தொடங்கலாயிற்று. தென் மாகாணங்களில் கோல்கொண்டா, பீஜப்பூர் அரசர்களுடைய அவைகளில் 14-ம் நூற்றுண்டை அடுத்து இலக்கிய வளம் நிறைந்த "தக்கனி" என்ற மொழி சுயேச்சையாக வளரலாயிற்று. காலாந்திரத்தில் அவை பல மாறுபாடுகளை அடைந்து அவற்றின் இலக்கியங்கள் பர்ஷிய எழுத்துக்களையும், பர்ஷிய மொழிச் சொற்களையும் பர்ஷிய இலக்கிய வளங்களையும் இறுதியில் இஸ்லாமிய நம்பிக்கையையும், பண்பாட்டையும் பெற்று வளரலாயின. உருது மொழியின் இலக்கணமும், சொல்லிலக்கணமும் எப்பொழுதும் போல் ஹிந்தியைத் தழுவியே இருந்தன. முதலில் உருது என்றும், பிறகு ஹிந்துஸ்தானி என்றும் சொல்லப்பட்ட மொழியில் உள்ள இலக்கியங்கள் எல்லாம் ஓரளவு அதிகத் தூய்மை உடையனவாக இருந்தன. உதாரணமாக, அமீர் கஷ்ரால்லினுடைய நூல்களைக் காணலாம். எத்தனையோ ஹிந்துக்கள்கூட ஹிந்துஸ்தானி அல்லது உருது மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கு பேருதவி புரிந்து இருக்கிறார்கள்.

முஸ்லீம்களுடைய ஆட்சியில் இருந்த பிராந்தியங்களில் இத்தகைய வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் நாட்டின் பெரிய மொழிகளிலும் புதிய சில மாற்றங்கள் ஏற்படலாயின. [1]திராவிட மொழிகளை அல்லாத பிற பிராந்திய மொழிகள் 'இந்தக்காலச் சூழ்நிலையில் இருந்துதான் இலக்கிய வளம் பெறலாயின.

---

[1] பல்வேறு மொழிகளைப்பற்றி நாங்கள் பயன்படுத்தியிருக்கின்ற பெயர்களைப்பற்றி ஒரு சிறு விளக்கம் தேவைப்படுகிறது.

இந்திய அரசியல் அமைப்பில் ஹிந்தியைக் குறிக்கும் இடத்தில் எந்த இடத்திலும் "தேசிய மொழி" என்ற குறிப்பே தரப்படவில்லை. அதற்குப் பதிலாக "யூனியன் மொழி" அல்லது "யூனியன் ஆட்சி மொழி" என்றே சொல்லப்பட்டு இருக்கிறது. ராஜ்ய ஆட்சி விஷயங்களில் பேசும்போது "அந்த ராஜ்ய ஆட்சி மொழி" என்ற பெயரே தரப்பட்டுள்ளது. 17-வது பகுதியின் இரண்டாவது அதிகாரம் "பிராந்திய மொழிகள்" என்ற தலைப்புடன் காணப்படுகிறது. "பிராந்திய மொழி" என்ற இந்தச் சொல்லைத் தவிர வேறு எங்கும் இந்தப் பெயர் மறுபடியும் வழங்கப்பெறவில்லை.

அமைச்சர்கள் பேச்சில் யூனியன் மொழியாகிய ஹிந்தியை "தேசிய மொழி" என்று பேசக் கேட்டு இருக்கிறோம். மேலும், ஆங்கில ஷெட்யூலில் எல்லா மொழிகளுமே "தேசிய மொழிகள்" என்றும் குறிப்பிட்டிருக்கக் காண்கின்றோம். சமீப காலத்தில் ஐரோப்பாவில் தேசிய ராஜ்யங்களில் ஏற்பட்ட அரசியல் சரித்திரத்தைக்கொண்டு பார்க்கும்பொழுது "தேசிய மொழி" என்ற சொல் ஒருவகையான, ஆனால், இன்னதென்று நிர்ணயிக்கப்பட முடியாத பொருளைப் பெற்றுள்ளது என்பது விளங்கும். யூனியன் மொழிக்கும் ராஜ்யங்களின் ஆட்சி மொழிகளுக்கும் 8-வது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளுக்கும் இந்தக் குறிப்பிட்ட பொருளை உடைய சொல்லைப் பயன்படுத்த முடியாது ஆதலால் "தேசிய மொழி" என்ற சொல்லையே நாங்கள் பயன்படுத்தவில்லை. சில சமயங்களில் "தேசிய மொழிக் கொள்கை" என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளோம். அந்தச் சொல்லை இவ்வாறு பயன்படுத்தியபோது அது குறிக்கும் பொருள் முற்றிலும் வேறுபட்டது என்பதும் "மொழிகளைப் பற்றிய தேசியக் கொள்கை" என்ற பொருளே இங்கு பெறப்படுமென்பதும் நன்கு விளங்கும்.

எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளை "பிராந்திய மொழிகள்" என்று சொல்வது வழக்கமாகிவிட்டது. இவற்றுள் 555 பேர்களே பேசுவதாக 1951 ஜனக் கணக்கில் குறிக்கப்பட்டுள்ள வடமொழிக்கு எந்த ஒரு பிராந்தியமும் குறிப்பிடப்பட முடியாது. அதேபோல உருதுவைத் தாய் மொழியாகக் கொண்டு பேசுகிறவர்களுக்கும் ஒரு குறிப்பிட்டப் பிராந்தியத்தைச் சொல்ல முடியாது. இந்தக் காரணங்களினால் 8-வது ஷெட்யூலில் "பிராந்திய மொழிகள்" என்று குறிப்பிடுவது ஓரளவு பொருத்தமில்லை என்பதையும் அறியலாம். எவ்வாறு இருப்பினும் விவாதத்தை நடத்துவதற்கும், சில வசதியான சொற்கள் தேவையாதலால் 8-வது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளைக் குறிப்பதற்கு வட மொழியைத் தவிர, பாக்கி எல்லா மொழிகளையும் "பிராந்திய மொழிகள்" என்றே நாங்களும் குறிப்பிடுகிறோம். "பிராந்திய மொழிகள்" என்ற பெயர் ஒரு பிராந்தியத்தில் பேசப்படுகின்ற மொழி என்ற பொருளை உடையது.

மராத்தி மொழியில் ஜ்ஞானேஸ்வரரும், அவதி மொழியில் துளசி தாசும், பிரஜா பாஷாவில் சூர்தாஸரும், மேற்கு ஹிந்தி, பஞ்சாபி மொழிகளில் குரு நானக்கும், மைதிலியில் வித்தியாபதியும், வங்காளியில் சண்டிதாஸரும், அஸ்ஸாமியாவில் ஷங்கரதேவும், ஒரியா மொழியில் சரளதாஸரும், குஜராத்தி மொழியில் நரசிமேதாவும், இன்னும் இவர்கள் போன்ற பலரும் இந்த நூற்றுண்டுகளில்தான் அதிகப்படியான இலக்கிய, சமய சம்பந்தமான, கற்பனை இலக்கியங்களையும் ஆக்கினார்கள். இவற்றில் பெரும்பாலானவை கவிதை வடிவிலே உள்ளன. நமது தற்கால இலக்கியம் என்று சொல்லப்படுபவை இவைதாம். இந்த வெளிப்பாடு இதற்கு முன் வடமொழி மரபையே ஒட்டி இலக்கியம் செய்ததிலிருந்து பிரிந்து போன நிலையைக் குறிக்கும். வடமொழியும் பாலியும், அபாப்பிரமாஷாவும், பண்பாட்டை வளர்க்கும் மொழி என்றும், அறிவுடையவர்களுக்கு மட்டுமே விளங்கக்கூடிய மொழி என்றும், இருந்த சூழ்நிலையில் அவற்றிலிருந்து இப்புது முறை ஏற்படலாயிற்று. மேலும் இம்மொழிகளில் இலக்கியம் தோன்றிய அடிப்படையில் மற்றொரு காரணமும் உண்டு. முஸ்லீம்கள், துருக்கியர்கள், பாரசீகர்கள், முதலானவர்கள் அரசியல் அதிகாரத்தோடு கூடி இருந்த நிலையில் இவர்கள் தங்களுடைய பண்பாட்டைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும் இந்த மொழிகளில் இலக்கியம் செய்தார்கள் என்று சொல்லலாம். இதே காலத்தில் மகமதிய அரசர்கள் பலர் இந்த மொழிகளை போற்றி வளர்த்தார்கள் என்றதற்கும் பல உதாரணங்கள் உண்டு.

ஒவ்வொரு மொழியையும் பிரித்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய ஒலி இயல் மாறுபாட்டுச் சட்டங்களும், கிளை மொழித் தோற்றச் சட்டங்களும் உண்டு. இந்த சக்திகள் இந்திய மொழிகளைப் பொறுத்தமட்டில் அதிகம் வெளியே தெரியாவிட்டாலும் இத்தனை நூற்றுண்டுகளாகத் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி வந்தன. பூகோள அடிப்படையும், செய்தி பரிமாறிக் கொள்கிற சாதனங்களும், பேச்சுக்கருவியான நாக்கின் வேறுபாடுகளும், ஒலியை உண்டாக்குகின்ற கண்டம் முதலானவற்றின் வேறுபாடுகளும், ஒவ்வொரு இடத்தின் சீதோஷ்ண நிலையால் இவைகள் அடைகின்ற மாறுபாடுகளும், இனத்துக்கு இனம் மாறுபட்டுள்ள பேச்சு முறையும், ஓரளவுக்கு தங்களுடைய செல்வாக்கை மொழி இயலில் காட்டியுள்ளன. ஒரே மொழி பேசுகின்ற இரண்டு பேருக்குள்ளாகக் கூடப் பேசும் முறையில் சொற்களின் உருவம் மாறுபடுவதையும் சில சமயங்களில் சொற்களின் வடிவமே மாறுபடுவதையும் காண்கிறோம். இந்திய மொழி இயலில் இச்சக்திகள் அனைத்தும் தங்களுடைய திறத்தைக் காட்டவே இன்றுள்ள நிலையில் மொழி இயல் நிற்கக் காண்கிறோம்.

உலகத்தில் எந்த இடமாயினும் சரி ஒவ்வொரு பத்து மைலுக்கும் மொழி மாறுபடுகிறது என்று சொல்லப்படுகிறது. இதனால் பன்னூறு ஆண்டுகளான இந்தியாவின் பழைய சரித்திரத்தில், ஒரே கிளையிலிருந்து தோன்றி இருப்பினும், பலவேறு மொழிகள் பலவிதமான மாறுபாடுகளைப் பெற்றுக் காலமாறுபாட்டாலும் இட மாறுபாட்டாலும் முதலில் சிறிய வேற்றுமைகளோடு ஆரம்பித்துக் காலாந்தரத்தில் தனித்தன்மை பெற்று விளங்கக் காண்கிறோம். இங்ஙனம் வேறுபட்ட வடிவங்கள் இறுதியாக தனித்தன்மை பெற்று, ஒருவருக்கொருவர் புரியமுடியாதபடி வேறுபட்ட வடிவத்தோடு நிலைத்துவட்டன. இன்று கூட, மொழிவாரி எல்லைகள் என்று நாம் பேசும்பொழுது ஏதோ அவைகள் அறுதியிட்டுக் கூறப்படுகின்ற எல்லைகள் என்றும், அவற்றை விளக்கிக்காட்டவும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்துக்காட்டப் படங்கள் வரையலாம் என்றும் நினைக்கின்றோம். உண்மையை ஆராயுமிடத்து ஒவ்வொரு மொழியின் எல்லையிலும் ஒரு மொழி முடிந்து மற்றொரு மொழி எல்லை திடீர் என்று தொடங்கப்படுவதில்லை. அதற்குப் பதிலாக மிக மெள்ளமாக அறிந்துக் கொள்ள முடியாதபடி அடுத்த எல்லை தொடங்குகிறது. ஒருவர் இந்தப் பெரிய நாட்டில் ஒரு எல்லையிலிருந்து மற்றொரு எல்லைக்கு ஒவ்வொரு கிராமமாகச் சென்றால் ஒரு மொழி எல்லையை விட்டு மற்றொரு மொழி

எல்லைக்குச் செல்லும்பொழுது, ஒவ்வொரு சில மைலுக்கும் மென்மை யான முறையில் மாறுதலடைந்து செல்லக் காணலாம். உதாரணமாக மேற்கு நோக்கிச் செல்லும்பொழுது வங்காள மொழி மைதிலி மொழி யாக மாறுவதையும், தென் திசையிலுள்ள மைதிலிமொழி போஜ்புரி மொழியாக மாறுவதையும், வங்காளி மொழி தென்மேற்கில் ஒரியா மொழியாக மாறுவதையும் காண்கிறோம். திராவிட மொழிகள் என்று சொல்லப்படுபவைகள்கூட இந்த விதிக்கு மாறுபட்டவை அல்ல. இலக்கிய வடிவம், சொற்கள், இலக்கணம், சொல்லிலக்கணம் என்பவற்றோடு ஏனைய அடிப்பட்ட இயல்புகளும் எல்லா மொழிகளையும் பொறுத்தமட்டில் அச்சு இயந்திரம் வந்த பிறகு ஓரளவு நிலை பெற்றுவிட்டன. ஒரியா மொழி வங்காளியிலிருந்தும், தெலுங்கிலிருந்தும் மாறுபட்டது என்று நாம் சொல் லும்பொழுது இவற்றின் இலக்கிய மாறுபாட்டைதான் குறிக்கின்றோம். ஆனால் இங்ஙனம் கூறுவது உண்மையை மிகவும் சுருக்கிக் கூறுவதாக வும், பொதுத் தன்மையைச் சொல்வதாகவும் உள்ளதே தவிர இதனிடைப்பட்ட பிராந்தியத்தில் ஒரு மொழி கொஞ்சங் கொஞ்சமாக மற்றொரு மொழியில் அமிழ்ந்துவிடுகிறது.

பல்வேறு இந்திய மொழிகளுக்குள்ளும் நெருங்கி இருக்கின்ற தொடர்பு பற்றியும், ஒன்று மற்றொன்றாக அறிந்துகொள்ள முடியாத நிலையில் மாறுபடுகின்ற இயல்புபற்றியும் "கிரேயர்ஸன்" இங்ஙனம் கூறுகிறார் :—

"மராத்தி மொழியிலிருந்து அஸ்ஸாமிய மொழி பெரிதும் மாறு பட்டிருப்பினும், ஒரு மொழி பேசுகின்றவனை மற்றொரு மொழி பேசு கிறவன் புரிந்துகொள்ள முடியாது என்றாலும், ஒரு மனிதன் திம்புரு காரிலிருந்து இரண்டாயிரத்து எண்ணூறு மைல் நடந்து பம்பாயை அடைந்து அங்கிருந்து டாரிட்ஸன் சென்றாலும் வழியில் எந்த இடத்தில் ஒரு மொழி முடிந்து மற்றொரு மொழி தொடங்கிற்று என்பதை உறுதி யாகச் சொல்லமுடியாது."

3. மேலை நாடுகளிலிருந்து வாணிபம் செய்வதற்காக இந்தியாவுக்குள் நுழைந்த பல்வேறு வாணிகக் கூட்டங்களும், இவற்றுள் முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கிந்தியக் கம்பெனியும், அந்த கிழக்கிந்தியக் கம்பெனி 1623-ல் தன்னுடைய தொழிலை தொடங்கி இந்தியா முழுவதையும் தன்கீழ்க் கொணர்ந்த பிரிட்டானிய சாம்ராஜ்யத்தை பெற்றுத்தந்து, இந்திய மொழியியலில் ஒரு புதிய சூழ் நிலையை உண்டாக்கின. இக் கம்பெனிகள் எங்கே எங்கே தொழில் பட்டனவோ அங்கேயெல்லாம் மொழியியலில் கூட அவற்றின் செல்வாக்கைக் காண்கிறோம். உதாரண மாக மராத்தி மொழியிலும், இன்னும் அதிகமாகக் கொங்கணி மொழி யிலும், போர்ச்சுகீசிய மொழியிலிருந்து பிறந்த பல்வேறு சொற்கள் புகுந்துவிட்டன. ஆனால் பிரிட்டானியர்களுடைய ஆட்சி இந்தியா முழு வதும் ஏற்பட்ட பிறகு ஆங்கில மொழியால் ஏற்பட்ட விளைவுகள் மிகவும் ஆழ்ந்தும், விரிந்தும் உள்ளன. இவர்கள் ஆட்சித் தொடக்கத்தி தில் 'ஆங்கிலக் கல்வியை' அதாவது ஆங்கில மொழிக் கல்வியையும், விஞ்ஞான அறிவையும் போதிப்பதைக்காட்டிலும், இந்தியக் கல்வியை போதிப்பதிலேயே அதிகக் கவனம் செலுத்தினார்கள். ஆயிரத்து எழு நூற்று எண்பத்தொன்றில் வாரன்ஹேஸ்டிங்ஸ் கல்கத்தா மதரஸாவைத் தோற்றுவித்தார். ஆயிரத்து எழுநூற்று தொண்ணூற்றிரண்டில் காசி வடமொழிக் கல்லூரி நிறுவப் பெற்றது. ஆயிரத்து எண்ணூற்று பதின் மூன்றும் ஆண்டில் ஏற்பட்ட கிழக்கிந்தியக் கம்பெனி சட்டத்தில் ஆண்டு தோறும் கல்வி வளர்ச்சிக்காக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அக்காலத்தில் ஆங்கில அரசாங்கத்தார் நாடு முழுவதற்கும் ஒரு பொதுக் கல்வித் திட்டத்தை ஏற்படுத்தி அதை அரசியலாரின் பொறுப்பில் கொண்டு வர நினைத்தார்கள் என்பதற்கு இந்தச் சட்டம் ஒரு அடையாளமாகும். இச்சட்டம் தோன்றிய காலத்தில் இப் பணம் சம்ஸ்கிருதம், பார்சியம், அராபிய மொழிகளின் வளர்ச்சிக்கே என்று கருதப்பட்டது. இக்காலத் தில் ஓர் அறிஞர் 'ஹிந்துக்கள் ஏனைய மக்களைப்போல ஒரு முறைப்பட்ட

கொள்கையும், ஒழுக்கக் கோட்பாடும் பெற்று இருக்கிறார்கள். அவர்கள் இடத்தில் இருக்கும் கல்வியைத் தவிர வேறு ஒன்றை அவர்களுக்கு தர நினைப்பது பைத்தியக்காரத்தனம்' என்று கூறினார். மற்றொரு வகையில் இதே கருத்தைக் கிழக்கிந்தியக் கம்பனியின் இயக்குனர் ஒருவர் கீழ் வருமாறு குறிப்பிட்டதாகத் தெரிகிறது. 'பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் நிறுவித்தான் அமெரிக்காவை ஆங்கிலேயர்கள் இழந்தார்கள். இந்தியாவை பொறுத்தமட்டில் இதே பைத்தியக்காரத்தனத்தை அவர்கள் மீண்டும் செய்யவிடக்கூடாது'.

1813-ம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனியின் உரிமைப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டபொழுது இந்தியாவின் கல்விக் கொள்கை எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதைப்பற்றிப் பெரிய சொற் போர்கள் நிகழ்ந்தன. இச்சொற்போரில் கீழ் நாட்டுக் கல்வி முறைக் கொள்கை என்ற ஒன்றும், ஆங்கிலக் கல்விக் கொள்கை என்ற ஒன்றும் முக்கியத்துவம் பெறப் போட்டியிட்டன. சுருங்கிய முறையில் இக் கொள்கைகளைப்பற்றிச் சொல்ல வேண்டுமேயானால் கீழ் நாட்டுக் கல்விக் கொள்கை என்பது இந்நாட்டிலுள்ள இலக்கியங்களையும், இலக்கிய அறிவையும் போற்றி வளர்க்க வேண்டும் என்பதாகும். ஆங்கிலக் கல்விக் கொள்கை என்பது புதிய விஞ்ஞான முறைகளையும், மேனாட்டு அறிவையும். ஆங்கில மொழியின் மூலம் கற்பிக்க வேண்டும் என்பதாகும். இவ்விரண்டாம் முறையை மிகவும் போற்றி முன் மொழிந்தவர் மெகாலே பிரபு ஆவார். இந்நாட்டை பொறுத்த வரை ராஜாராம் மோகன் ராய் இக்கொள்கைக்கு மிகவும் உதவியாக இருந்தார். இதுபற்றி மெகாலே பிரசித்தி பெற்ற தம்முடைய குறிப்பை எழுதிய பிறகு, 1835-ல் கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு வில்லியம் பெண்டிங் அரசியலாரின் கையில் கல்விக்காக இருந்த பணம் முழுவதையும் ஆங்கிலக் கல்வியையும், விஞ்ஞானத்தையும் போதிப்பதற்கே செலவழிக்க வேண்டும் என்று சட்டம் செய்தார். இதுவும், இதன் பின்னர் 1854 ல் சொல்லப்பட்ட 'உட்ஸ் டெஸ்பாட்சு' என்ற கொள்கையும், பிற்கால கல்விக் கொள்கைக்குக் கடைகாலாக அமைந்தன. இக்கொள்கையே பல ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்தது.

4. இந்திய நாட்டின் கல்வி வளர்ச்சி வரலாறு பற்றி இந்த சந்தர்ப்பத்தில் நாம் ஆராயத் தேவையில்லை. என்றாலும், நாளாவட்டத்தில் 1854-ல் ஏற்பட்ட "உட்ஸ் டெச்பாட்சுக்குப்" பிறகு கல்விக் கொள்கையில் உள்ள சில இன்றியமையாத கொள்கைகள் மறக்கப்பட்டன. இந்த உட்ஸ் டெஸ்பாட்சை இந்திய ஆங்கிலக் கல்வி வளர்ச்சியில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதுகிறார்கள். இதில் இந்தியாவில் வழங்குகின்ற மொழிகளின் முக்கியத்துவமும் அவை பொதுக் கல்வித் திட்டத்தில் இடம் பெற வேண்டிய அவசியம் பற்றியும், நன்கு எடுத்துப் பேசப்பட்டுள்ளது. இந்த டெஸ்பாட்சில் கல்வியின் நோக்கத்தைப் பற்றிச் சொல்லும் பொழுது ஐரோப்பியக் கலை, விஞ்ஞானம், தத்துவ சாஸ்திரம், இலக்கியம் என்பவற்றை அதாவது சுருங்கச் சொன்னால் ஐரோப்பா தேசத்திய அறிவை, இந்நாட்டில் புகுத்துவதோடு, இந்தியாவில் விளங்கும் மொழிகளையும் மேலும் வளர்த்து இந்த மொழிகளையும், ஆங்கில மொழியையும் மேற்கண்டவைகளை போதிப்பதற்குப் போதனா மொழிகளாகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லி இருக்கின்றது. மேலும் இந்த டெஸ்பாட்சில் "இந்த நாட்டு மொழிகளை நீக்கி அவற்றின் இடத்தில் ஆங்கிலத்தைப் புகுத்தவேண்டும் என்பது, நம்முடைய கொள்கையோ விருப்பமோ அல்ல. பொது மக்களில் அனைவருமே புரிந்து கொள்ளக்கூடிய அவர்களுடைய மொழியின் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் எப்பொழுதுமே அறிந்து இருக்கிறோம். ஆட்சி முறையிலும் மக்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வதிலும், அதிகாரிகள் மக்களிடம் பேசும்பொழுதும், நியாயம் வழங்குவதிலும், பர்சிய மொழியை நீக்கி அவர்கள் நாட்டு மொழியை புகுத்தி இருக்கிறோமே தவிர ஆங்கிலத்தை புகுத்தவில்லை. எனவே எந்தக் கல்வி முறையிலும், அந்த மொழிகளை அவர்கள் நன்கு படிக்கச் செய்யவேண்டும். எனவே வளர்ச்சி அடைந்துள்ள ஐரோப்பிய அறிவைப் பெரும்பாலான மக்கள் பெற வேண்டுமேயானால்

அதற்கு ஒரே வழிதான் உண்டு. உயர்ந்த கல்வியை அவர்கள் பெறமுடியாதபொழுது வேற்று மொழியில் அவர்கள் அதிகப் பயிற்சி பெற வழியில்லை. அந்த நிலையில் அவர்களுடைய தாய் மொழியின் மூலமாகத்தான் இந்த மேனாட்டு அறிவை அவர்களுக்குச் செலுத்த முடியும்". இக்காலத்தில் இக்கல்வி முறையில் "பற்குலேஷன் கொள்கை" என்ற ஒன்று தோன்றிற்று. இந்தியக் கல்வி வளர்ச்சி வரலாற்றில் இது ஒரு புகழ் பெற்ற குறிப்பாகும். இதன்படி, மேற்கத்திய கலை, விஞ்ஞானம் முதலியவை இந்தியர்களுக்குப் புரிகின்ற அவரவர்கள் மொழியின் மூலமே பரப்பப்படவேண்டும். இதன்படி ஒரு சிலர் உயர்தரக் கல்வி பயின்று ஆங்கில மொழியின் மூலம் இந்த அறிவை எல்லாம் பெற்று, அவர்கள், மக்களுக்கு இந்த அறிவை மக்கள் மொழி மூலம் வழங்கவேண்டும். இந்தக் கொள்கை ஆங்கிலக் கல்வியைப் போதிக்கின்ற அளவிற்குத்தான் கொண்டு செலுத்தப்பெற்றது. இந்தக் காலத்தில் இந்திய மொழி இலக்கியங்கள் நல்ல வளர்ச்சியைப் பெற்றாலும், இருபதாம் நூற்றாண்டில் 1930 வரையில் கல்வித் துறையில் போதனா மொழியாக ஆங்கிலமே இருந்த வந்தது. இந்திய மொழிகள் கல்வித் துறையில் போதனா மொழியாக அமையாத காரணத்தாலும், நீதி வழங்குவதிலும் ஆட்சித் துறையிலும் சட்டத்துறையிலும், பொது இந்திய வாழ்விலும் நுழையாத காரணத்தாலும் வாழ்க்கையில் பல்வேறு துறைகளுக்குத் தேவையான சொற்களும், இலக்கியங்களும் இம்மொழிகளில் தோன்றாமல் போயின.

5. இந்திய மொழிகளின் வளர்ச்சியில் இன்று ஏற்பட்டுள்ள குறைகள் பல. இதனை அடுத்து உயர்தரக் கல்வி பெற்ற தற்காலத்திய சந்ததியார்கள் தாமே சிந்தித்துச் சொந்தமாக ஆராய்ச்சி செய்யும் திறத்தை மிகுதியும் பெறாமல் உள்ளனர். சர் சார்லஸ் உட்டினுடைய டெஸ்பாட்சில் சொல்லப்பட்ட இரண்டாவது பகுதியை, முதற்பகுதியைக் கடைப்பிடித்தது போல நல்ல முறையில் கடைப்பிடித்திருந்தால், மேலே கூறிய இந்த இரண்டு நிலைகளும் இல்லாமல் தவிர்த்திருக்கலாமா ? என்பது சிந்தனைக் குரியது. டெஸ்பாட்சில் சொல்லப்பட்ட இரண்டாவது விஷயம் விஞ்ஞானத்தைப் போதிப்பதற்குப் போதனா மொழியாக இந்திய மொழிகளைக் கைக்கொண்டிருக்கவேண்டும் என்பதாகும். முதற் பகுதியில் சொல்லப் பட்டது மேலை நாட்டு விஞ்ஞானத் துறையை பார்சிய மொழி, வட மொழி ஆகிய இரண்டையும் தள்ளி விட்டுப் போதிப்பதாகும். இதே அளவு முயற்சியை போதனா மொழி விஷயத்திலும் கையாண்டு இருந்திருக்க லாம். ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்து ஏழாம் ஆண்டு கம்மடோர் பெரி என்பவர் ஜப்பானியக் கடற்கரையில் புகுந்த பொழுதுதான், ஜப்பானிய மக்கள் தற்கால விஞ்ஞான அறிவில் எவ்வளவு தாங்கள் குறைந்து காணப்படுகிறார்கள், என்ற உண்மை அவர்களுக்கே பிடிபட்டது. இதனை அறிவது நமக்குப் பயன் தருவதாகும். கூட்டங் கூட்டமாக ஜப்பானிய இளைஞர்களை மேல் நாடுகளுக்கு அனுப்பி விஞ்ஞானக் கல்வி பெறச் சீரிய முயற்சிகள் செய்யப்பட்டன. அப்பொழுது விஞ்ஞானத் துறையில் மேலை நாடு மிகவும் முன்னேறி இருந்தது. இவர்கள் பெற்ற அறிவெல்லாம் பிற்காலத்தில் ஜப்பானிய மக்களுக்கு ஜப்பானிய மொழியிலேயே கிடைக்குமாறு செய்யப்பட்டது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்திரண்டில் ஜப்பானில் உள்ள நிலைமைக்கும், நம்முடைய நாட்டில் உள்ள நிலைமைக்கும் உள்ள வேறுபாட்டைச் சீர்தூக்கி மகாத்மா காந்தி அடிகள் "ஹரிஜன்" பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார். அவர் எழுதியதாவது :—

"ஜப்பானில் என்ன நிகழ்ந்து இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஜப்பானியப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் ஆயிரக் கணக்கான மாணவர்கள் கல்வியை ஜப்பானிய மொழி மூலம் பெறுகிறார்களே தவிர ஆங்கில மொழி மூலம் அன்று. அவர்களுடைய எழுத்து முறை மிகவும் கடினம் ஆனதுதான் என்றாலும், அவர்கள் கல்வி வளர்ச்சிக்கு அது தடையாக இல்லை. மேலும் அந்த எழுத்துக்களை விட்டுவிட்டு ரோமன் எழுத்துக்களை அவர்கள் விரும்பவும் இல்லை. இதனால்

அவர்கள் ஆங்கிலத்தையோ அல்லது மற்ற ஐரோப்பிய மொழிகளையோ ஒதுக்குகிறார்கள் என்பது கருத்தில்லை. ஆனால் அவர்கள் தங்கள் சக்திகளை வீணாக்காமல் சேமிக்கின்றார்கள். மேலை நாடுகளிலிருந்து பெற்ற அறிவை ஜப்பானிய அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்துகிறார்கள். மேலை நாடுகளிலிருந்து எவை எவை எடுத்துக்கொள்ளத் தகுதி பெற்றவையோ அவற்றையெல்லாம் ஜப்பானிய மொழிக்குத் திருப்பிவிடுகிறார்கள். ஜப்பானிய இளைஞர்களுடைய மனம் புதுமையுடனும், விழிப்புடனும் இருப்பதனால் இது முடிகிறது. இங்ஙனம் பெற்ற அறிவு மக்களினுடைய தேசிய சொத்தாக மாறிவிடுகிறது. ஜப்பானியர்களுடைய விரைவான முன்னேற்றத்திற்கு, மேலை நாட்டுக் கல்வி முறையை ஒரு சிலருக்கே பயன்படும்படி கட்டுப்பாடு செய்ததுதான் காரணமாகும். இங்ஙனம் கற்ற அந்த ஒரு சிலர் தாய் மொழியின் மூலமாகத் தங்கள் அறிவை யெல்லாம் பிறர் பெறச் செய்கிறார்கள். இவ்வாறு இல்லாமல் வேற்று மொழி மூலமாகவே கல்வியைப் பெற்றிருக்கவேண்டிய இன்றியமை ஜப்பானியர்களுக்கிருந்திருந்தால் இவ்வளவு விரைவில் முன்னேறி இருக்க முடியாது என்பதை மிக எளிதில் நாம் அறிந்துகொள்ளலாம்."

நம் இந்திய நாட்டைப் பொறுத்தவரை நாடு முழுவதற்கும் ஒரு தேசிய மொழி இல்லாமல் 12 பிராந்திய மொழிகள் பேச்சு வழக்கில் இருத்தலினால் ஜப்பானில் செய்ததுபோலச் செய்வது கடினம் என்று நினைக்கலாம். கடினம் என்றாலும் முடியவே முடியாது என்று நினைப்பதற்குக் காரணமில்லை. மிக நீண்ட காலமாக, பழைய காலத்திய அரசியல் அறிவு பெற்ற இந்தியர்கள், ஆங்கில மொழியைக் கற்பதற்கும் மேற் கல்வியைக் கற்பதற்கும் அதிக சந்தர்ப்பம் வேண்டும் என்றே கூறப்பட்டது, என்பதை மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டும். ஆங்கில மொழி அறிவு உத்தியோகத் துறைக்கு உதவியது என்பது ஒரு புறம் இருக்க நாட்டின் அரசியல் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது என்பதும், இந்திய சமுதாய வளர்ச்சியில் சிறந்த விடுதலை சக்தியாக இருக்கிறது என்பதும் பலரால் கருதப்பெற்றது.

இந்த முறையில் கல்வி வளர்ச்சி பெற்றிருந்தால் இந்திய மொழிகள் மிகச் சிறந்த முறையில் வளர்ச்சி பெற்றிருக்கும் என்பது உண்மையானாலும் 19-ம் நூற்றாண்டில் இந்திய இலக்கிய வளர்ச்சியில் ஒரு பெரும் புரட்சி ஏற்பட்டதை அறிவிக்கின்றது. பல்வேறு இந்திய மொழிகளில் இதற்கு முற்பட்ட இலக்கியங்கள் பெரும்பாலும் மரபுபற்றிய பாடல்களாகவும், சமய சம்பந்தமுடையனவாகவுமே இருந்துள்ளன. அந்தக் காலத்தில் இந்நாட்டு மொழிகள் பலவும் ஆரம்பப் பாடசாலைகளுக்கு அப்பால் கற்கப்படவில்லை. உயர்தரக் கல்வி என்பது வடமொழி, பார்சியின் என்பவற்றோடு மதரஸாக்களில் அரபிக் மொழி மூலமாகவும் இருந்து வந்தது. ஆங்கில மொழி அறிவும், ஆங்கில இலக்கியமும் புகுந்தவுடன் இந்திய மொழிகள் பலவும் புதிய இலக்கியத் துறைகள் பல்வற்றிலும் முன்னேற ஆரம்பித்தன. உதாரணமாக சமுதாய நாடகங்கள், சிறு கதைகள், புதினங்கள், கட்டுரைகள் என்பனவாம். இதற்கு முன்னர் பல இந்திய மொழிகளில் உரை நடை எழுதுதல் என்பது சரித்திர நிகழ்ச்சிகளை அறிவிப்பதற்கு அல்லாமல் மற்றத் துறையில் இல்லை. உதாரணமாக மராத்தி, ஒரியா, அஸ்ஸாமிய மொழிகளைக் காண்க. அச்சு இயந்திரம் வந்தவுடன் இலக்கியத் துறையில் புதிய வழிகளும், புதிய முறைகளும், ஆங்கிலத்தைப்போல் தலையெடுக்க ஆரம்பித்தன. இதற்கு முன்னர் காணப்படாத அளவு பிராந்திய மொழிகளில் வளர்ச்சியைக் காண்கிறோம். நவீன சமுதாயம் தன்னுடைய கருத்துக்களைத் தாய் மொழி மூலம் தெரிவிப்பதற்குரிய கருவிகளை இன்னும் பெறவில்லை என்று வருந்தலாமே யானாலும் எல்லாத் துறைகளிலும் தாய் மொழி மூலம், ஓரளவு முன்னேற்பாட்டுடன் போதனை செய்யப்படலாம் என்று நினைக்கின்ற அளவுக்கு வந்ததே இந்த மொழிகளில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சிக்குச் சான்றாகும். இந்நிலை ஏற்பட்டது மேலைநாட்டு விஞ்ஞானமும், ஆங்கிலக் கல்வியும் இந்நாட்டு அறிவுத்துறையில் கலந்ததனால் ஏற்பட்ட பயனாகும்,

6. இந்தியாவின் மொழிவாரி கணக்கெடுப்பின்படி இப்பொழுது இந் நாட்டில் 179 மொழிகளும், 544 கிளை மொழிகளும் வழங்கிவருகின்றன. இந்த எண்ணிக்கையைக் கொஞ்சம் கவனத்துடன் பார்க்கவேண்டும். உதாரணமாக இந்தக் கிளை மொழிகள் கணக்கில் 116 கிளை மொழிகள் சிறு சிறு மலை ஜாதியினர் பேசுகின்ற மொழிகளாகும். இம்மொழிகள் இந்தியாவின் வடக்கு, வடகிழக்கு மூலைகளில் மொத்த ஜனத் தொகையில் மிகமிகக் குறைந்த எண்ணிக்கை உடையவர்களால் பேசப்பட்டு வருகிறது. இம் மொழிகள் திபெத்தோ சீனமொழி குடும்பத்தைச் சேர்ந்தவைகளாகும். இவற்றை யல்லாமல் பெரிய அளவில் பேச்சு வழக்கிலும் சில உள்ளன. இவற்றை இக்காலத்திய வளர்ச்சி பெற்ற இலக்கிய மொழிகளோடு வைத்து எண்ணவும் முடியாது. உதாரணமாக ராஜஸ்தானி, பிலி, மத்தியபகாரி, மேற்கத்திய பகாரி, கிழக்கத்திய பகாரி, கோசலி, மைதிலி, போஜ்புரி, மார்வாரி, முதலியவைகள் பேச்சு வழக்கில் இருப்பினும், இவற்றுள் சில இலக்கிய வளர்ச்சியை ஒரு காலத்தில் பெற்றிருப்பினும், இப்பொழுது இலக்கிய வளம்பெற்ற மொழிகள் என்று எண்ணப்பட வேண்டா. ஏனென்றால், இம்மொழி பேசுகின்றவர்கள் பொதுவாக ஹிந்தி மொழியையே தங்களுடைய இலக்கிய மொழியாகக் கருதுகிறார்கள். இந்தியாவைப் போன்ற பெரிய நாட்டில் நாம் எடுத்துக்கொண்டு இருக்கிற பிரச்னைக்குப் பெரும்பான்மையான மக்களுக்கு உரியதாகவும் வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் இலக்கிய வளம் பெற்றதாகவும், பழைய மரபுகளைப் பெற்றதாகவும், உள்ள மொழிகளையே எடுத்துக்கொள்ள வேண்டும். வடமொழியையும் சிறப்பு முறையில் எடுத்துக்கொண்டால் இவ்வாறு உள்ள மொழிகள் 14 என்று அரசியல் அமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் கொடுக்கப்பட்டுள்ளது. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொன்று ஜனக் கணக்கின்படி இம்மொழிகளைப் பேசுகின்றவர்கள் எண்ணிக்கை வருமாறு :—

மொழி.	பேசுபவர் எண்ணிக்கை.	மொத்த ஜனத் தொகையின் சத விகிதம்.
அஸ்ஸாமி	4,988,226	1·39
வங்காளம்	25,121,674	7·03
குஜராத்தி	16,310,771	4·57
ஹிந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாப் * ..	149,944,311	42·09
கன்னடம்	14,471,76	4·05
காஷ்மீரி †	..	..
மலையாளம்	3,380,109	3·69
மராத்தி	7,049,522	7·57
ஒரியா	13,153,909	3·68
வடமொழி	555	0·00010
தமிழ்	26,546,764	7·04
தெலுங்கு	32,900,916	9·24
ஏனைய மொழிகளைத் தாய் மொழியாகப் பேசும் மக்கள்.	32,906,787	9·22
மொத்தம் ..	356,879,394	

குறிப்பு.—அவரவர்கள் எந்த மொழியைப் பேசுவதாகக் குறிப்பிட்டுள்ளார்களோ அதே மொழியை அவர்கள் பேசும் மொழியாக ஜனத்தொகைக் கணக்கெடுப்பு அதிகாரிகள் குறித்துள்ளார்கள்.

* பஞ்சாப், பெப்சு, டெல்லி, ஹிமாசலப் பிரதேசம், பில்சாப்பூர் ஆகிய ராஜ்யங்களில் தவிர மற்ற இடங்களில் கணக்கெடுப்பில் தொல்லை ஒன்றும் இல்லை. இந்த ராஜ்யங்களில் பஞ்சாபியையும், ஹிந்தியையும் தாய் மொழியாக உடையவர்கள் எண்ணிக்கையில் தவறு நேர்ந்துவிட்டதால் கணக்கெடுப்பு அதிகாரிகள் இவற்றைச் சேர்த்தே கணக்குத் தந்துள்ளார்கள்.

† 1951 ஜனத்தொகைக் கணக்கில் காஷ்மீர் மொழி பேசுபவர் கணக்குக் கிடைக்கவில்லை.

இம் மொழிகளுள் வட மொழியைத் தாய் மொழி என்று கணக்குக் கொடுத்த 500 சொச்சம் பேர்களை நாம் கவனிக்க வேண்டியதில்லை. மீதமுள்ள இம் மொழிகளுள் பொதுத் தன்மையும் ஒற்றுமையும் ஓரளவு குறைந்தும், ஓரளவு மிகுதியாகவும், இருக்கக் காண்கிறோம். ஏறத்தாழ இந்த எல்லா மொழிகளுமே வடமொழி இலக்கிய மரபிலிருந்து நிரம்பப் பெற்றுள்ளன. ஒரு பொதுத் தன்மையான எண்ணக் கோவையும், அனுபவமும், "இந்திய வாழ்வு முறை" என்று சொல்லத் தகுந்த அளவுக்கு இம் மொழிகளில் உள்ளன. இவற்றினுடைய எழுத்துக்களிலும், வரிவடிவங்களிலும், உருது மொழியைத் தவிர மற்றவற்றிற்கெல்லாம் ஒரு பொதுத் தன்மை உண்டு. இந்திய மொழி இயல் முறையின் பல்வேறு மாறுபாடுகள், என்று இவற்றைச் சொல்லாம். ஒரியாவும், அஸ்ஸாமீசும், வங்காளியும் தமக்கெனத் தனியான இலக்கியத்தைப் பெற்றிருப்பினும் ஒன்றுக்கொன்று மிகவும் தொடர்புடையன. ஹிந்தியின் கிழக்கித்தியக் கிளை மொழி, ஒரியாவுக்கும், வங்காளிக்கும், அஸ்ஸாமீசுக்கும், மிகவும் தொடர்புடையது. உருதுவும் ஹிந்தியும் இலக்கணம், சொல்லியல், என்பவற்றில் பொதுத் தன்மை பெற்றுள்ளன. இவற்றின் வேறுபாடு நெடுங்கணக்கில் தான் இருக்கின்றது. உருது மொழியின் நெடுங்கணக்கு பர்சிய மொழியிலிருந்தும், ஹிந்தியின் நெடுங்கணக்கு வட மொழியிலிருந்தும் அதிகம் பெறப் பெற்றுள்ளன. ஹிந்தி பேசப்படும் பகுதி என்று சொல்லப்படுவதில் கூட பல்வேறு கிளை மொழிகள் பேசப்பட்டு வந்தன. இக்கிளை மொழிகளில் இலக்கிய வளர்ச்சியும் ஒரு காலத்தில் அமைந்திருப்பினும் 19-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஹிந்தியின் ஒரு கிளை மொழியாகிய **கரி போலி** என்பது தனித்தன்மை பெற்றதாய் ஹிந்தி மொழி பேசும் எல்லா இடங்களுக்கும் பொதுத் தன்மை பெற்றதாய்த் தோன்றிற்று. தமிழும் மலையாளமும், குஜராத்தியும் மராத்தியும், தெலுங்கும் கன்னடமும், மிகுதியும் தங்களுக்குள் ஒற்றுமைத் தன்மை உடையன. பரந்த முறையில் காணும்பொழுது பொதுத் தன்மை மிகுதியாக உடைய மொழிகள் பூகோள முறையில் மிகவும் சமீபத்தில் உள்ளவைகளாக இருக்கும் என்று சொல்லலாம். பல்வேறு இந்திய மொழிகளின் இடையே உள்ள ஒற்றுமைகளின் வகைப்பாடு பூகோள அடிப்படையையும் சரித்திர சம்பந்தத்தையும் கொண்டு விளங்கக் காண்கிறோம்.

எல்லை முறையில் பார்த்தால் வட மொழியையும், நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வாழுகின்ற முஸ்லீம்களின் தாய் மொழியான உருதுவையும் தவிர ஏனைய மொழிகளெல்லாம் இருக்கமான பிராந்தியங்களில் பேசப்படுகின்றன. பிராந்திய மொழிகள் பேசுகின்ற கூட்டத்தாரினிடையே வேற்று மொழியைப் பேசுகின்ற சிறுசிறு கூட்டங்களும் நாட்டின் எல்லா பாகங்களிலும் இருக்கும் என்பது எதிர்பார்க்கப்படுவதே. இந்த எல்லா மொழிக் கூட்டங்களும் இந்திய நாட்டின் பூகோள, பண்பாட்டு, அரசியல் ஒற்றுமையினிடையே, பன்னூறு ஆண்டுகளாக ஒன்று சேர்ந்து வாழ்ந்து வருகின்றன. இடையறுத அரசியல், சமுதாய, சமய, கொள்வினை, கொடுப்பனைகளும் இவர்களுக்குள் இருந்து வருகின்றன. பழைய நூற்றுண்டுகளில் ஒரு பிராந்திய மொழி பேசும் கூட்டத்தாரிடையே மற்றொரு மொழி பேசும் கூட்டம் வந்து கலந்துவிட்ட சூழ்நிலை போக சமீப காலத்தில் ஏற்பட்ட தொழில் வளத்தாலும், நகர வளர்ச்சியாலும், பெரிய நகரங்களில் மொழிக் கலப்பு மிகுதியாகியுள்ளது. நாடு முழுவதிலுமுள்ள பெரிய நகரங்களிலும், சிறப்பாக, கல்கத்தா, பம்பாய், மதராஸ், ஹைதராபாத், டெல்லி, பங்களூர் போன்ற பெரும் நகரங்களிலும் பன்மொழிக் கூட்டம் இருந்து வருகிறது. மேலும் நகர வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும் பெறப்பெற இப் பன்மொழிக் கூட்டம் சந்தேகத்துக்கு இடமின்றி மேலும் வளர்ச்சி அடையும்.

பொதுவாகக் கூறுமிடத்துப் பிராந்திய மொழி வட்டாரங்களில் மக்களிடையே இரு மொழி பேசும் இயல்பு இருந்துவருகிறது. 1951 ஜனக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட "இரு மொழி பேசுவோர்" புள்ளி

விவரம் மிகுதியும் பயனபடுவதாகும். கணக்கெடுப்பில் இரு மொழி பேசுவோர் என்ற தலைப்பு கீழ் வரும் கேள்விக்கு விடையாக அளிக்கப்பட்ட தொன்றுகும்.

கேள்வி எண். 8 : இரு மொழிப் பேச்சு :

ஒருவர் தம் தாய் மொழியைத் தவிர வேறு எதாவது ஒரு இந்திய மொழியை பேசுவதானுல் அதனைக் குறித்து வைக்கவும்.

இதனை அடுத்த அறிவிப்பில் இம்மாதிரி பேசப்படும் மொழிகளுள் ஒருவர் பல மொழிகள் பேசுவதானுல் ஒன்றைமட்டும் குறிக்க என்று அறிவிக்கப்பட்டது.

எனவே இங்கே சேகரிக்கப்பட்ட செய்திகள் ஒரே ஒரு துணை மொழியைப் பற்றியதே என்பதும், தங்கள் தாய் மொழியை அல்லாமல் மற்ஞெரு இந்திய மொழியைப் பேசுகின்றவர்கள் கணக்கை மட்டும் குறிக்கின்றது என்பதும் விளங்கும், இந்தக் குறிப்பு, தாய் மொழியை அல்லாத மற்ற ஒரு இந்திய மொழியை தெரிந்திருந்து ஆனுல் அதைப் பேச சந்தர்ப்பம் இல்லாமல் இருந்தாலும், தாய் மொழியை அல்லாமல் ஒன்றுக்கு மேற் பட்ட பல இந்திய மொழிகளைத் தெரிந்திருந்தாலும் அது இந்தக் கணக்கில் வரவில்லை ஆதலால் இந்தக் குறிப்பு முழுத்தன்மை உடையதாகாது. இரு மொழிகள் அறிந்தோர் பற்றிய தகவல் அதிலும் சிறப்பாக ஹிந்தி மொழியை அறிந்தோர் பற்றிய தகவல் மொழிப் பிரச்னையை ஆராயும் நமக்குப் பின்னர்ப் பெரிதும் பயன்படும். அடுத்து வருகின்ற ஜனத்தொகைக் கணக்கில் ஹிந்தி மொழி அல்லாத பிற மொழிகளைத் தாய் மொழியாக உடையவர்கள் எவ்வளவு தூரம் ஹிந்தி மொழி பேசுவதில் வல்லவர்களாக உள்ளார்கள் என்பதை ஜனக் கணக்கெடுப்பு அதிகாரிகள் அறியக்கூடிய முறையில் ஒரு கேள்வியையும் சேர்க்கவேண்டும் என்பது எங்களுடைய அபிப்பிராயம். எனவே இந்திய மொழியியலில் முக்கிய உறுப்புக்களும் குறிக்கத்தகுந்த பகுதிகளும் கீழ்க் கண்டவைகளாகும். கணக்கெடுப்பு முறையில் கொடுக்கப்பட்டுள்ள மொழிகளும், கிளை மொழிகளும் பல நூருக இருப்பினும், முக்கியமாக, நெருக்கமான பிராந்தியங்களில் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் வழங்கும் மொழிகள் ஏறத்தாழப் பன்னிரண்டுதான். இம்மொழிகள் அனைத்தும் பல்வேறு அளவில் ஒற்றுமையும், ஒருமையும் தமக்குள் உடையன. நவீன சமுதாயத்தில் புதிய கருத்துக்களை வெளியிடுவதற்குரிய சொல்லாகிய கருவியை பொறுத்தமட்டில் இந்த எல்லா மொழிகளுமே குறையுடையன. இவ்வெல்லா மொழிகளுமே சென்ற சில பத்தாண்டுகளில் சிற்சில துறைகளில் அமிழ்த்தப்பட்டுவிட்டன. இம்மொழிகளுள் ஹிந்தி மொழி மட்டுமே மிகப் பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்றது. ஏனைய மொழிகள் பேசுகின்றவர்களை எல்லாம் ஒன்ருகச் சேர்த்துப் பார்த்தால் ஹிந்திமொழி பேசுகின்றவர்களுடைய எண்ணிக்கை சிறு பான்மையாக மாறிவிடும் என்பது உண்மைதான். முழு அளவாக நோக்கும் பொழுது விகிதாசார முறை ஒரு புறம் இருக்க மிகப் பெரும் அளவுடைய மக்களால் இப் பிராந்திய மொழிகள் பேசப்படுகின்றன என்பதும், உலகத்தின் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் இப் பிராந்திய மொழிகள் பேசுவோர் எண்ணிக்கை மிக உயர்ந்த இடத்தைப்பெறும் என்பதும் அறியப்பட வேண்டும். இந்திய மொழியியல் அடிப்படையில்தான் பிராந்தியங்களில் பேசப்படுகின்ற மொழிகளை உள்ளிட்டும் இப் பிராந்தியங்களை உறுப்புக்களாக உள்ள யூனியனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான ஒரு முறையை வகுக்கவேண்டும்.

பகுதி IV

இந்திய மொழிப் பிரச்சனையும் அதற்குக் காணும் முடிவின் உருவமும்

இந்திய மொழியியலை ஒருவாறு அளந்து கண்டோம். நாட்டின் வெவ்வேறு, தனித்தனியான இருகலான பகுதிகளில் 12-க்கும் மேற்பட்ட பிராந்திய மொழிகளை, மேலே நாட்டில் மிகவும் வளர்ச்சி அடைந்த மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் காட்டிலும் அதிகமான எண்ணிக்கையுள்ளவர்கள் பேசிக்கொண்டிருத்தலையும் கண்டோம். ஓரளவு, பேசுகின்ற முறையில் வேறுபாடும் தனித்தன்மையும் இப்பேச்சுக்களுள் இருந்தாலும் இவ்வெல்லா மொழிகளுள்ளும் ஓரளவு ஒற்றுமையும், ஒப்புமையும் இருக்கின்றன. வெளித் தோற்றத்தில் இம்மொழிகளுள்ளும், இந்திய இனங்களினிடையே காணப்படும் பண்பாட்டினுள்ளும், வேறுபாடு காணப்பட்டாலும் மொழிகளினிடையே காணப்படுகின்ற ஒற்றுமை இந்தியாவின் பொதுப் பண்பாட்டின் அடிப்படையில் தோன்றியது என்பது தெரிய வரும். சென்ற 100 ஆண்டுகளில் ஆங்கில அரசாட்சி நடைபெறும் பொழுது எத்தனையோ வகையான மாற்றங்கள் நாட்டில் ஏற்பட்டுக் கொண்டிருந்தன. என்றாலும், இந்தப் பெரிய மொழிகள் மக்கள் வாழ்க்கை முறையில் முக்கியமான பகுதிகளிலிருந்து வெட்டப்பட்டுவிட்டன. அரசியல் துறையிலும், தனிப்பட்ட வாழ்க்கைத் துறையிலும் இந்த இந்திய மொழிகளை மெள்ள, மெள்ள ஒதுக்கிவிட்டு மக்களினுடைய அலுவலிலும் இன்னும் சொல்லப் போனால் அறிவு வளர்ச்சித் துறையிலும், எண்ண வளர்ச்சித்துறையிலும் ஆங்கிலம் மெள்ள மெள்ளப் புகலாயிற்று. நாளாவட்டத்தில் அனைத்திந்தியக் கடிதப்போக்குவரத்துத் துறையில் ஆங்கிலம் ஒன்றுமட்டுமே ஆட்சிபெற்று அதிகாரத் துறையிலும், உயர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்களுடைய வாழ்க்கைத் துறையிலுங்கூட ஆங்கிலமே புகுந்தது. **தேசிய மொழி** என்று சொல்லப்படுகின்ற அளவுக்கு ஆங்கிலம் நுழைந்தது. நல்ல வளமுடையதும், வளர்ச்சி பெற்றதுமான ஆங்கிலம் அனைத்திந்தியாவிலும் வசதியாகப் பயன்படவே, ஆட்சி முறையிலும் அதே மொழி புகுந்துவிடவே உயர்தரக் கல்விக்குள்ள போதனமொழியாகவும், அறிவு வளர்ச்சியின் அடிப்படையிலுள்ள எல்லாத் தொழில் துறைக்கும் ஆங்கிலமே இடைநிலை மொழியாகவும் ஆகிவிட்டமையால் பிராந்திய மொழிகள் நவீன சமுதாய வாழ்க்கைத் துறையில் தேவைப்படுகின்ற எல்லாச் சொற்களையும் பெறமுடியாமலும், வளர்ச்சியில்லாமலும் குன்றிவிட்டன. இக்காலத்தில்தான் நிறைந்த விஞ்ஞான அறிவு வளர்ச்சியும் நம்மைச் சுற்றியுள்ள பௌதீக உலகில் பெரும் புரட்சியும் ஏற்படலாயிற்று. பொதுவாக நோக்குமிடத்து ஒரு மொழியைப் பேசுகின்ற சமுதாயத்தின் செய்திப் போக்குவரத்துத் தேவைக்கேற்பவே அந்த மொழியும் வளர்ச்சியடைகிறது. சுதந்திரம் பெற்றுவிட்ட இந்த நிலையில் நம்முடைய தேசிய ஒற்றுமைக்கு ஏற்ற ஒரு இடைநிலை மொழியைக் காணவேண்டியது இப்பொழுதைய பிரச்சனையாகும். அதாவது, இந்திய அரசியல் அமைப்பின் 351-வது விதியின்படி "இந்தியாவின் பல்வேறுபட்ட பண்பாடுகளையும் வெளியிடக் கூடிய ஒரு பொது இடைநிலை மொழி" ஆகும் இது. இந்தப் பிரச்சனையில் மற்றொரு பகுதியும் உண்டு. எல்லாப் பிராந்திய மொழிகளையும் வளர்ப்பதோடு, ஹிந்தியையும் யூனியன் மொழியாக வளர்த்துத் தற்கால எண்ண வளர்ச்சியை வெளியிடும் சக்தி வாய்ந்தவைகளாக அவற்றை மாற்றி அந்தந்த மொழி வழங்குகின்ற இடங்களில் நாளாவட்டத்தில் ஆங்கில மொழியின் இடத்தை அவை பெறக்கூடிய நிலைமையைச் செய்யவேண்டும். சுருங்கக் கூறுமிடத்து இந்தியாவின் மொழிப் பிரச்சனை என்பது இதுதான்.

2. இவ்விடத்தில் முதலாவது தோன்றுகின்ற வினா, சென்ற 150 வருஷங்களாக ஆட்சி செய்த ஆங்கிலேயர்கள் நமக்கு விட்டுச் சென்ற சொத்தாகிய

ஆங்கில மொழியைப் பொதுமொழி என்ற இடத்திலிருந்து மாற்ற வேண்டிய இன்றியமையாமை என்ன? என்பதாகும். இதற்காகப் பேசப்படும் விவாதம் பின்வருமாறு : ஆங்கிலம் உலக மொழிகளுள் முதன்மை பெற்றதாக இருக்கிறது. அகில உலக மாநாடுகளில் சென்ற 10 ஆண்டுகளில், அதற்கு முன்னர் வழங்கி வந்த மொழிகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு இப்பொழுது முன்னேறிவிட்டது. சந்தேகத்துக் கிடமின்றி அனைத்துலகச் செய்திப் போக்குவரத்து மொழியாக ஆங்கிலம் முதன்மை இடம் பெற்றுள்ளது உலகின் பல்வேறு நாடுகளில் கல்வித் துறையில் ஆங்கிலம் கட்டாய இரண்டாம் மொழியாகப் போதிக்கப்பெற்று வருகிறது. விஞ்ஞான முன்னேற்றமும், புதிய கண்டுபிடிப்புகளும் அதுபற்றிய செய்திகளும், ஆங்கில மொழியில் விரைவாகக் கிடைப்பதுபோல வேறு எந்த மொழியிலும் கிடைப்பதில்லை. இப்பொழுதே கூட, விஞ்ஞானிகளும், தொழில் துறை நிபுணர்களும் எந்த நாட்டில் எந்தத் துறையில் இருந்தாலும் தங்கள் துறையில் உலகில் ஏற்படுகிற முன்னேற்றங்களை அறிந்துகொள்ளுவதற்கு ஆங்கிலத்தின் இன்றியமையாமையை அறியத்தொடங்கிவிட்டார்கள். இந்தியாவிலுள்ள நாம் இரண்டு நூற்றாண்டு ஆங்கில ஆட்சியின் பயனாக ஆங்கில மொழியில் ஓரளவு வல்லமை பெற்றிருக்கிறோம். இங்ஙனம் பெற்ற வசதியை வேண்டுமென்றே ஒதுக்கித் தள்ளுவது அறியாமையாகும். இன்றைய நிலையில் இந்தியாவில் ஆட்சி மொழி ஆங்கிலமாக இருப்பதுமட்டுமல்லாமல் உயர்தரக் கல்வித்துறையிலும் அதுவே ஆட்சி செலுத்துகிறது. அன்றியும், எந்த மொழி பேசுகின்ற இனமாயினும் நாகரிகமுடைய கூட்டத்தில் சாதாரண விஷயங்களுக்கும்கூட ஆங்கிலமே பயன்படுத்தப்படுகிறது. உண்மையைக் கூறுமிடத்து ஆங்கில மொழியைத் தவிரப் பொதுமொழி என்று சொல்லக்கூடிய ஒன்று இன்று நம்மிடையே யில்லை. தெய்வாதீனமாக நம்முடைய ஆங்கில அறிவைத் திடீரென்று நாம் இழந்துவிடுவதாக வைத்துக்கொண்டால் பலமொழி பேசும் இந்நாட்டு இனத்தார்கள் ஒருவொருக்கொருவர் செய்தி பரிமாறிக்கொள்ள முடியாமல் திண்டாடுவார்கள் என்பது உறுதி. உண்மையைக் கூறுமிடத்து, இந்திய நாட்டின் அறிவுடைப் பெருமக்கள் பலரும் நாட்டின் பல்வேறு பாகங்களில் வாழ்ந்தாலும் ஒன்று கூடி நாட்டின் தேசீயக் கோரிக்கைகளை முடிவு செய்ததும், அதன் பயனாக நாட்டிற்கு விடுதலைக் கிடைத்ததும், ஆங்கிலமாகிய பொதுமொழியை அறிந்திருந்ததின் பயனே என்று கூறலாம். ஆங்கில அரசாட்சியின் பயன்களில் ஆங்கில மொழியை நமக்குத் தந்ததற்காக நாம் பெரிதும் நன்றி பாராட்ட வேண்டும். ஆங்கிலேயர்கள் நம்மை விட்டுச் சென்றுவிட்டார்கள் எனவே ஆங்கிலமொழி மட்டும் நாட்டிலிருந்து நமக்கு எவ்விதமானதீமையையும் செய்துவிடாது. எனவே, இந்தச் செல்வத்தை முழுவதும் உதறி விடுவது என்பது அறிவற்ற செயலாகும். கல்வித் துறையில் முன்னேற்றமும், விஞ்ஞானத் துறையிலும் ஆராய்ச்சித் துறையிலும் ஏற்படுகின்ற முன்னேற்றங்களும் ஆங்கிலத்தை ஒதுக்கிவிட்டால் எவ்வளவு தூரம் பாதிக்கப்படும் என்பதுப்பற்றிப் பலர் தங்களுடைய சந்தேகங்களை இக்குழுவினரிடம் தெரிவித்துள்ளனர். ஆங்கில மொழியை விட்டுவிடுவதென்பது விஞ்ஞான வளர்ச்சித்துறையில் பலப்பல ஆண்டுகள் நம்மைப் பின்னே கொண்டுதள்ளிவிடும் என்றும், இப்பொழுதேகூட வளர்ச்சி அடைந்த உலக நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது நாம் பின்தங்கியிருக்கிறோம் என்றும், பிரசித்திபெற்ற ஒரு விஞ்ஞானி இக்குழுவினரிடம் தெரிவித்தார்.

3. இந்தக் கட்சியை எடுத்துப் பேசினவர்கள் காட்டிய வாதங்களை அவற்றின் வேகம் குறையாதபடி நாங்கள் இங்கே எடுத்துக்காட்டியுள்ளோம். இவ்வாதங்களில் சிறந்த நியாயம் ஓரளவு உள்ளது என்பது மறுக்கப்படவில்லை. நாங்கள் கண்ட மொழிப் பிரச்சனையின் முடிவில் இந்த வாதக்காரர்களுடைய கட்சியையும், நன்கு சீர்தூக்கிப் பார்த்திருக்கிறோம் என்பதையும் எடுத்துக்காட்ட முடியும். ஆங்கிலமொழி எல்லாக் காலத்துக்கும் ஆட்சி மொழியாக இருக்க முடியாதென்றும் ; நாளாவட்டத்தில் ஆங்கிலத்தின் இடத்தை, யூனியன் மொழியும், பல்வேறு பிராந்திய மொழிகளும் பெறவேண்டும் என்றும் சொல்லும்பொழுது ஆங்கில மொழியில் நிறைந்த இலக்கியங்களும், விஞ்ஞான வளர்ச்சியும் இருக்கின்றன

என்பதை யாரும் மறுக்கவில்லை. மேலும், இன்றைய உலகில் செய்தி அறிவிப்புக்கு மிக முக்கியமான ஒரு இடைநிலை மொழியாக அது உள்ளது என்பதையும், இந்தியாவின் தேசிய மேடைகளில் பலமொழி பேசுகிறவர்களும் ஒன்றுகூடித் தேசியக் கோரிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு ஆங்கிலமே பயன்பட்டது என்பதையும் யாரும் மறுக்கவில்லை. ஆங்கிலம் வேற்று நாட்டு மொழியாதலால், இந்தியா விடுதலை அடைந்த பிறகு, இந்திய மொழிகளால் ஆங்கிலம் பெற்றிருந்த இடத்தை நிரப்பவேண்டுமென்று சொல்வது வெறும் தேசபக்தியினால் மட்டும் சொல்லப்படுகின்ற ஒரு கட்சி அன்று. உண்மையைச் சொல்லப்போனால் தேசிய சுயமரியாதை என்பது, தேசிய வாழ்வு முழுவதையும் நெருங்கிய முறையில் பற்றிக்கொண்டிருக்கின்ற மொழியோடு தொடர்புடையது என்பதில் சந்தேகமில்லை. உலகத்தின் பல்வேறு மக்களோடு பழகும்பொழுது, மொழி, அந்த நாட்டுமக்களின் கௌரவத்திற்கு எவ்வளவு துணையாக உள்ளது என்பதும் விளங்கும். என்றாலும், நம்முடைய பிரதிநிதிகள் அனைத்துலகத் தொடர்புகளில் தங்களுடைய மொழி என்று ஏதாவது ஒரு மொழியைத்தான் சொல்லிக் கொள்ளவேண்டும் என்ற காரணத்திற்காக மட்டும் ஆங்கில மொழியை இந்திய மொழிகளால் நீக்கவேண்டும் என்ற வாதம் தோன்றவில்லை. ஆங்கிலம் வேற்று நாட்டுமொழி என்பதற்காக மட்டும் அதனை ஒதுக்கி விடவேண்டும் என்று யாரும் கூறவில்லை. ஏனென்றால் எந்த ஒரு மொழியும் அதனைப் பேசுபவர்களுக்குரிமை உடையதே தவிர, தனிப்பட்ட ஒரு இனத்தாரின் சொந்த சொத்து இல்லை—என்ற வாதத்தை நாங்கள் முழுவதும் ஒப்புக்கொள்ளுகிறோம். மேலும், மொழிப்பிரச்சனைக்கும் காணும் முடிவில் கல்வியின் தரமும், விஞ்ஞானத் தரமும், கேடு அடைந்துவிடாமல் இருப்பதற்குப் போதிய அளவு ஆங்கில அறிவோ அல்லது வேற்று நாட்டு மொழிகளின் அறிவோ இருக்கும்படி செய்ய வேண்டும். இத்துறையில் உழைக்கின்றவர்கள் அதிகாரத்துறையில் இருப்பினும் சரி; தனிப்பட்டத் துறையில் இருப்பினும் சரி; வெளிநாடுகளில் முன்னேறி வருகின்ற தொழில் துறை நுணுக்கங்களையும், விஞ்ஞான அறிவையும் இவர்கள் அறிந்துகொள்வதற்கு வேண்டிய ஒரு "சாவியாக"வும் அம்முன்னேற்றத்தைக் காணும் "ஜன்னலாகவும்" வேண்டிய அளவுக்கு பிறமொழிகளில் இவர்கள் அறிவு பெறவேண்டிய வசதி செய்து தரப்படவேண்டும். நம் நாட்டுத் தலைவர்களைப் பொறுத்தமட்டில் விஞ்ஞானத் துறையிலும், ஏனைய தொழில் துறையிலும், பல்கலைக்கழகங்களிலும் மற்றப் பொதுத் துறைகளிலும், ஆட்சித் துறையிலும் கல்வி புகட்டுகின்ற தரம் குறையாமல் இருக்கவேண்டுமென்பதில் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், ஒரு வேற்று மொழியைத் தனிப்பட்ட சில காரியங்களுக்கும், தனிப்பட்ட காரியத்தைச் செய்கின்ற சிலருக்கும், பயன்படும் இரண்டாம் மொழியாக உபயோகப்படுத்துவதற்கும், அதேமொழியை கல்வித் துறையில் முக்கியமான போதனா மொழியாகக் கொள்வதற்கும் அன்றாடச் செயல்முறைகளை நாட்டில் கொண்டு செலுத்தும் மொழியாகக் கொள்வதற்கும் முக்கியமான வேறுபாடு உண்டு. யார் யாருக்கு ஆங்கில அறிவு இன்றியமையாது தேவைப்படுகிறதோ அவர்களுக்கு அதைப் புகட்டவும், அதே நேரத்தில் கல்வித் துறையிலும், சட்ட மன்றங்களிலும் நாட்டு மொழியைப் பயன்படுத்திச் சாதாரண மக்களுக்குப் புரிகின்ற முறையில் இவற்றை நடத்தவும், இவை இரண்டுக்கும் முரண் ஏற்படாமல் ஒரு முடிவைக் காணவும் நன்றாக முடியும்.

அரசியல் அமைப்பில் கீழ்க்கண்டவாறு சொல்லப் பெற்றதற்கு இதுவே காரணம். அதாவது: இந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக வைத்துத்தான் நாட்டு மக்களைத் தட்டியெழுப்ப முடியும் என்பதும், வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை கொடுத்ததின் பயனும், இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதின் பயனும், உண்மையில் பயனதர வேண்டுமேயானால் இந்திய மொழிகளே இடைநிலை மொழிகளாக அமையவேண்டும். எல்லாருக்கும் சமத்துவமான சந்தர்ப்பங்கள் அளிக்கவேண்டும்; சமுதாய நியாயம் வழங்கவேண்டும்; அடிப்படை உரிமை வழங்கவேண்டும் என்று அரசியல் அமைப்பில் கூறப்பட்ட காரணமும் இதுபற்றியேயாகும்.

4. 1951-ம் ஆண்டு ஜனத்தொகைக் கணக்குப்படி ஓரளவு ஆங்கில அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை நாடு முழுவதிலும் [1]38 லட்சமாகும். அதாவது 100-க்கு ஒருவராவர். இந்தக் காரியத்திற்கு, "ஆங்கில மொழியில் ஓரளவு பயிற்சி பெற்றவர்கள்" என்ற அளவுகோலாக ஸ்கூல் லீவிங் சர்ட்டிபிகேட் அல்லது அய்யர் சகண்டரி பரிட்சைகளில் வெற்றி பெற்றவர்களையே எடுத்துக்கொண்டிருக்கிறோம். 1951 ஜனத்தொகைக் கணக்கின்படி கல்வி அறிவு பெற்றவர்களின் சதவிகித சராசரி 16·6 ஆகும். எனவே, ஒன்றரை நூற்றாண்டுகளில் முழுவதும் ஆங்கிலம், சட்ட மன்றங்களிலும், உயர்தரக் கல்வியிலும், பொதுமக்கள் வாழ்க்கையிலும், ஆட்சி மொழியாக இருந்தபோதிலும் ஓரளவு ஆங்கில அறிவு பெற்றவர்கள் 38 லட்சமாகவே இருக்கின்றனர். ஆறு கோடிப்பேர் கல்வி யறிவு உடையவர்களாக யிருந்தும் அவர்களுள் ஆங்கில அறிவு பெற்றவர் இந்த 38 லட்சம் பேர்தான். எஸ்.எஸ்.எல்.ஸி. அளவுக்கு ஆங்கில அறிவு பெற்றவர்களையே சாதாரண இந்திய மொழிக் கல்வி அறிவு பெற்றவர்களோடு இங்கே ஒப்பிட்டிருக்கிறது. இவ்வாறு ஒப்பிடுவது முற்றிலும் நியாயமானதென்றே நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால், சாதாரணக் கல்வி அறிவு பெற்றவனாக இருப்பினும் ஓர் இந்தியன் தன் தாய் மொழியில் பெற்றிருக்கின்ற அறிவு மிகுதியானதாகும். மொழி யறிவைச் சோதிக்கின்ற முறையில் ஒரு எஸ்.எஸ்.எல்.ஸி. மாணவனுக்கும், சாதாரணக் கல்வி அறிவு பெற்ற ஒருவனுக்கும் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஒரு தேர்வு நடத்தினால், அதில் எஸ்.எஸ்.எல்.ஸி. மாணவன் ஆங்கிலத்திலும், சாதாரண மனிதன் தாய் மொழியிலும் விடை கூறுவதாக யிருந்தால், எஸ்.எஸ்.எல்.ஸி. மாணவனுடைய தரம் சாதாரண மனிதனுடைய தரத்தைக் காட்டிலும் அனேகமாகக் குறைந்தே காணப்படும். இதுவரையில் சொல்லப்பட்ட புள்ளி விவரங்களை அல்லாமல் இந்தப் பிரச்சனைக்கு முடிவு கூற மற்றொரு விவாதமும் உள்ளது. அரசியல் அமைப்பின் 45-வது விதி ராஜ்ய முறைகளின் வழிகாட்டி என்ற தலைப்பின் கீழ் கீழ்வருமாறு பேசுகிறது: "எல்லா ராஜ்யங்களும் அரசியல் அமைப்பு ஆரம்பித்த 10 வருஷங்களுக்குள் அந்த ராஜ்யத்திலுள்ள 10 வயதுக்கு மேற்பட்ட எல்லாக் குழந்தைகளுக்கும் 14 வயது முடிகின்ற வரையில் கட்டாய இலவசக் கல்வி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்." இந்த வழிகாட்டி எல்லையற்ற கல்விப் பெருக்கத்தையும், ஆரம்பக் கல்வியையும் மனத்துட்கொண்டு பேசுகிறது. இது இந்திய மொழிகளை மனத்துட்கொண்டு செய்யப் பெற்றதே தவிர, ஆங்கில மொழியை வைத்து அன்று என்பது நன்கு விளங்கும். சாதாரண முறையில் அந்தந்தக் குழந்தையினுடைய தாய்மொழியின் மூலமாகவோ அல்லது பிராந்திய மொழியின் மூலமாகவோதான் ஆரம்பக் கல்வி வழங்கப்படவேண்டும். ஆங்கிலத்தைத் துணை மொழியாக ஆரம்பக் கல்வி முடிந்து 14-வது ஆண்டுவரையில் போதித்தாலுங்கூட ஆங்கில மொழியை அறிந்துகொள்வதில் ஏற்படுகின்ற கஷ்டங்களையும் ஆங்கில மொழியின் அடிப்படை இந்திய மொழிகளின் அடிப்படையோடு முற்றிலும் மாறுபட்டுள்ளது என்பதையும் வைத்துக் காணுமிடத்து இந்தக் குறுகிய கால அளவில் போதிக்கப்படும் ஆங்கிலக் கல்வி நிலைத்து நிற்கக்கூடிய அளவுக்குப் பயன்படாது என்பது உறுதி.

இப்பொழுதேகூட யூனியனின் எல்லா ராஜ்யங்களிலும் அரசியல் அமைப்பின் இந்த வழிகாட்டியை யொட்டி ஆரம்பக் கல்வி வளர்ச்சி மிகுதியாக ஏற்பட்டுள்ளது. 1951 ஜனத்தொகைக் கணக்கில் கல்வி அறிவுடையவர்கள் சதவிகிதம் காட்டப்பட்டிருப்பது இப்பொழுதே கூட மிகுதியும் வளர்ச்சி அடைந்து, இந்திய மொழிக்கல்வி அறிவில் மிகுதியும் வளர்ச்சி ஏற்பட்டிருக்குமென்பது உறுதி. அரசியல் அமைப்பின் வழிகாட்டிவிதி மேலும் மேலும்

---

[1] பிற் சேர்க்கை 12-ஐக் காண்க.

பிற் குறிப்பு: 1951 ஜனத் தொகைக் கணக்கில் 171,742 பேர்கள் ஆங்கிலம் தங்கள் தாய் மொழி என்று கூறியுள்ளார்கள். இந்த எண்ணிக்கையில் கல்வித் தகுதி பெற்றவர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளார்கள். மற்றையோர் ஆங்கிலமொழி அறிந்திருந்தாலும் இதில் சேர்க்கப்படவில்லை.

கையாளப்பட, புள்ளி விவரக் கணக்கில் இந்தியமொழிகளின் கல்வி வளர்ச்சி மிகுதிப்பட்டுக்கொண்டே சென்று, ஆரம்பக் கல்வி, வளர்ச்சி அடைய அடைய ஆங்கில மொழி கற்றோரின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வரும்.

5. மேலும், 1947 வரை நடைபெற்ற ஆட்சி முறைக்கும் அதன் பின்னர், இந்திய அரசியல் அமைப்பின்படி நாம் வகுத்துக்கொண்ட ஆட்சி முறைக்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு. அன்றியும் நம்மை ஆளும் அதிகாரிகள் 1947-க்கு முன்னர் வேற்றவர்களாக இருந்தார்கள். ஆங்கில அரசாங்கம் இந்தியப் பொதுமக்களோடு கொண்டிருந்த தொடர்பு ஒரு வகையானது. வெளி நாட்டவர்களாய், ஆளுங்கட்சியினராக இருந்த அவர்கள் இன்று நாம் கொண்டிருக்கின்ற குறிக்கோளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகக் குறுகிய குறிக்கோளும், செயலும் உடையவர்கள் என்பது விளங்கும். நம்முடைய அரசியல் அமைப்பு வயது வந்த எல்லா ஆண்களேயும், பெண்களேயும் ஓட்டுரிமை பெற்றவர்களாக ஆக்கியதால், உலக சரித்திரத்திலேயே காணப்படாத ஒரு பெரிய அளவு ஜனநாயக வாக்காளர்களே உண்டாக்கிவிட்டது. நம்முடைய அரசியல் அமைப்பின் வழிகாட்டியின் பயனுகவும், ஏனைய அரசியல் கொள்கைகளின் பயனுகவும், ஒரு பெரிய ஜனநாயக சமுதாய நலத் திட்டத்தை வகுத்தள்ளோம். அதன்படி ஒவ்வொரு தனி மனிதனும் வேறு எந்தத் தனிமனிதனேயும் போல மதிக்கப்பட வேண்டியவனுகிறுன். ஜனநாயக முறையற்ற வேற்று ஆட்சியில் அன்று இருந்த இந்தியனுக்கும், இன்றைய இந்தியனுக்கும் ஆட்சியாளர்களேப் பொறுக்கி எடுக்கின்ற பொறுப்பிலும், அரசாங்கத்தின் அலுவல்களேக் கொண்டு செலுத்துகின்ற பொறுப்பிலும் நிறைந்த வேறுபாடு உண்டு. ஆங்கில அரசாங்கம் தன்னுடைய அதிகாரத்தை நடத்தும் பொழுது, இங்கே உள்ள மக்களிடமிருந்து தங்களுடைய அதிகாரத்தைப் பெறுமையினுலும், பாராளு மன்றத்தில் பெரும்பான்மையானவர்களுளுடைய உதவியைப்பெறத் தேவையில்லாமையினுலும், ஆட்சியை நடத்தப் பொதுமக்களுக்குப் புரியாததும் புரிந்துகொள்ள முடியாததுமான மொழியில் நடத்த முடிந்தது. ஆனுல் இன்று, ஒவ்வொரு இந்தியனும் ராஜ்ய நலத்தால் பயன் அடைகிறுன் ஆதலாலும் அதை நடத்த ஒரு வாக்குரிமையைப் பெற்றுள்ளான் ஆதலாலும் அரசாங்கத்தின் தொழில், ஒவ்வொரு இந்தியனும் புரிந்துகொண்டு பங்கெடுத்துக்கொள்ளக்கூடிய மொழியிலோ, மொழிகளிலோ நடைபேற வேண்டுமென்பது உறுதி. அப்பொழுது தான் அவனுடைய ஓட்டுரிமையை நன்கு புரிந்துகொண்டு ராஜ்ய நலனுக்காக அவன் வழங்க முடியும். இதுபற்றி மகாத்மா காந்தி எழுதிய பொருத்தமான சில குறிப்புகளே இங்கு எடுத்துக்காட்ட உரிமை யெடுத்துக் கொள்ளுகிறேம். 1921-ம் வருஷம் "யங் இந்தியாவில்" இங்ஙனம் அவர் எழுதினுர் :—

"அனைத்துலக வியாபார மொழியாக ஆங்கிலம் உள்ளது. ராஜ தந்திர மொழியாகவும் உள்ளது அது. மேலும், நிறைந்த இலக்கிய வளம் உடையதாகவும் மேலே நாட்டு எண்ண வளர்ச்சியையும், பண்பாட்டையும் நாம் அறிய வாய்ப்பைத் தருகிறது. எனவே, நம்மில் சிலருக்கு ஆங்கில மொழி அறிவு மிகவும் இன்றியமையாதது. தேசீய வாணிகத்தையும் ராஜதந்திரப் பகுதியையும் மேலே நாட்டு இலக்கியங்களில் உள்ள சிறந்த பகுதியையும், எண்ண வளர்ச்சியையும், விஞ்ஞானத்தையும் கொண்டு செலுத்த அவ்வறிவு பெற்றவர்கள் இருந்தால் போதுமானது. இந்த அளவுதான் ஆங்கில மொழிக்குள்ள நியாயமான உபயோகமாகும். ஆனுல் இன்றே, நம்முடைய விருப்பத்துக்கு மிகவும் உகந்த தாய் மொழி இருக்க வேண்டிய இடத்தை ஆங்கிலம் பற்றிக் கொண்டது. ஆங்கிலேயர்களுக்கும், நமக்கும் உள்ள உறவு எப்படிப் பொருத்தமற்றதோ அதேபோல ஆங்கிலம் பெற்றிருக்கின்ற இந்த இடமும் இயற்கைக்குப் பொருத்த மில்லாதது. இந்திய மனத்தின் மிக உயர்ந்த வளர்ச்சி, ஆங்கில அறிவில்லாமலே பெறக்கூடிய ஒன்று. நம்முடைய நாட்டு இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் சிறந்த கூட்டங்களுள்ள ஆங்கில அறிவில்லாமல் நுழைய முடியாது என்ற எண்ணம் உண்டாகுமேயானுல்,

அது அவர்களுடைய ஆண் தன்மையையும், பெண் தன்மையையும் கொலை செய்தது போலாகும். பொறுக்க முடியாத கீழ்த்தரமான எண்ணமாகும் இது. ஆங்கிலத்தின் மேல் கொண்ட இந்த மோகத்தைத் தவிர்ப்பதே சுயராஜ்யத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்று."

1947 செப்டம்பர் 21-ம்தேதி அதாவது நாடு விடுதலை அடைந்தவுடன் "ஹரிஜன்" பத்திரிகையில் அவர் இங்ஙனம் எழுதினார் :—

"மாகாண அரசாங்கங்கள் அனைத்தும் மாகாண மொழிகளின் மூல மாகவே அன்றாட அரசியல் அலுவல்களைச் செய்து முடிப்பது மிகவும் எளிதாகும். மற்ற மாகாணங்களோடு தொடர்பு கொள்ளும்போது பல மாகாணப் பொது மொழியினாலேயே இதனைச் செய்யலாம். இம்மொழி என்னுடைய கருத்துப்படி நாகரியிலோ, உருதுவிலோ வரிவடிவத்தில் எழுதப்பெற்ற ஹிந்துஸ்தானியேயாகும்."

இந்த முடிவைச் செய்வதற்குக் காலந் தாழ்த்துகின்ற ஒவ்வொரு நாளும் தேசத்தின் பண்பாட்டிற்கு ஏற்படுகின்ற நஷ்டமேயாகும். முதலா வதும் முக்கியமானதுமாகிய வேலை, வளம்பெற்ற மொழிகளைப் புதுப்பித்த லாகும். இந்திய நாடு இப்படிப்பட்ட மொழிகளைப் பெறத் தவம் செய்திருக் கிறது. நம்முடைய பள்ளிக்கூடங்களிலும், நீதி மன்றங்களிலும், செய லாளர் அலுவலகங்களிலும் இந்த மாறுபாட்டைச் செய்வதற்குச் சில ஆண்டு களாவது கழியவேண்டுமென்று சொல்லுவது சோம்பல் மனப்பான்மையே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை. பலமொழி பேசும் மதராஸ், பம்பாய் போன்ற மாகாணங்களில் இதனைச் செய்வது ஓரளவு கடினமாக இருக்க லாம். இதுவும் மாகாணங்களை மொழிவாரி அடிப்படையில் பிரிக்கின்ற வரையில்தான். இங்ஙனம் செய்வதனால் அந்த மாகாணங்களில் உள்ள மக்கள் தங்கள் சொந்த உரிமையைப் பெற்றதாகவே நினைப்பர்.

இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு மாகாணங்கள் மத்திய சர்க்காரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டியதில்லை. மாகாண மொழி மாகாண ஆட்சியில் உடனே புகுத்தப்படுமேயானால் பல மாகாணப் பொது மொழி விரைவில் வந்துசேரும். மாகாணங்கள்தாம் மத்திய அரசினரோடு தொடர்புகொள்ளவேண்டும். மத்திய அரசாங்கம், பொதுமக்கள் பலருக் கும் புரிகின்ற ஒரு மொழியைப் படித்துக்கொள்வதற்கு சோம்பல்படுகின்ற ஒரு சில அதிகாரிகளுக்காக, தேசத்தின் பண்பாட்டை ஆங்கிலத்தைத் தொடர் வதின்மூலம் குலைக்கக்கூடாது என்ற உண்மையை விரைவில் தெரிந்து கொள்வார்கள். என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் "அரசியல் துறையில் நம்முடைய உரிமையைப் பறித்துக்கொண்டிருந்த ஆங்கிலேயர் களை வெருட்டியதுபோல பண்பாட்டுத் துறையில் நம்முடைய உரிமையைப் பறித்துக்கொண்டுள்ள ஆங்கிலத்தையும் வெருட்டிவிடவேண்டும். வளம் பெற்ற ஆங்கில மொழி உலகத் தொடர்பு கொள்ளுகின்ற மொழியாகவும், வாணிகத் துறை, ராஜதந்திரத் துறை மொழியாகவும் அதனுடைய இயல் பான இடத்தில் என்றும் இருக்கும்."

6. இந்தக் காரணங்களுக்காக ஆட்சி மொழியாக உள்ள ஆங்கிலத்தை யூனியன மொழியால் மாற்றவேண்டும். அந்தந்தப் பிராந்திய மொழிகள் ராஜ்யங்களில் ஆங்கிலத்தின் இடத்தைப் பெறவேண்டும். பல்கலைக் கழகத் தில் உயர்தரக் கல்வி போதிக்கின்ற போதனா மொழியாக ஏதாவது ஒரு இந்திய மொழியோ அல்லது மொழிகளோ வந்து விட்டாலும், ஆங்கிலம் தேவைப்படுகின்ற துறையில், கற்கின்றவர்களுக்கு, பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் போதிக்கப்படும். இனி வருங்காலத்தில் கல்வித் துறையில் ஆங்கிலம் மேற்கொள்ளுகின்ற கடமைக்கேற்ப ஆங்கிலம் கற்பிக்கும் முறையும் மாறுபடவேண்டும். இனி "இலக்கிய மொழியாக" அல்லா மல் ஆங்கிலம் "புரிந்துகொள்ளும் மொழியாகவே" போதிக்கப்பட வேண் டும். 6-வது பகுதியில் இந்தியக் கல்வித் திட்டம் என்ற தலைப்பில் இது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

யூனியனிலும், ராஜ்யங்களிலும், சட்ட மன்றங்களிலும் இதுவரையில் இடைநிலை மொழியாக இருந்த ஆங்கிலத்தையே இனியும் கால வரையறை யன்றிக் கொண்டு செலுத்த முடியாது என்றால், யூனியனைப் பொறுத்த மட்டில் எந்த மொழி இடைநிலை மொழியாக இருக்க வேண்டுமென்பது இனி ஆராயப்படவேண்டிய விஷயமாகும்.

அரசியல் அமைப்பின் விதிகளின்படி யூனியனிலும், ராஜ்யங்களின் இடையேயும் ஆட்சி மொழியாக அமையவேண்டியது ஹிந்தி மொழியாகும்.

ஹிந்தி மொழி ஏனைய பிராந்திய மொழிகளோடு அடிக்கடி ஒப்பிடப் பட்டு ஹிந்தி மொழியின் தரக் குறைவு எடுத்துக்காட்டப்படுகிறது. இந்நிலை யில் ஒன்றை மறவாமல் நினைக்கவேண்டும். யூனியனிலும், ராஜ்யங்களி னிடையேயும் ஹிந்தியை ஆட்சி மொழியாக ஆக்கியது ஏனைய பிராந்திய மொழிகளைக் காட்டிலும் அது மிகவும் வளர்ச்சி அடைந்திருக்கிறது என் பதனால் அல்ல. பல்வேறு வகையான இலக்கியச் செல்வம் அதில் இருக்கிறது என்பதனாலும் அல்ல. நவீன விஞ்ஞானத் துறையிலும், அறிவியல் துறையிலும் அதிகப்படியான நூல்கள் அம்மொழியில் உள்ளன என்பதனாலும் அல்ல. அகில இந்திய முறையில் ஆட்சி மொழியாக இருந்து கடமையை செய்யக்கூடும் என்பதற்காக ஹிந்தி மொழியைப் பொறுக்கி எடுப்பதினுடைய காரணம் என்னவென்றால் பிராந்திய மொழி களுள் மிகப் பெரும்பாலான மக்களால் பேசப்பட்டும், புரிந்துகொள்ளக் கூடிய நிலையிலும் உள்ளது என்பதுதான். மொத்த ஜனத் தொகையில் 42 சதவிகிதம் ஹிந்தியைத் தாய் மொழியாக உடையவர்கள் என்பது ஒரு புரம் இருக்க ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களிலும்கூட உள்ள நகரங்களின் கடைத் தெருவுகளிலும், புகை வண்டி நிலையங்களிலும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகின்ற மக்கள் கூடுகின்ற யாத்திரை ஸ்தலங்களிலும், இம்மொழி புரிந்துகொள்ளப்படுகிறது. மேலும் மராத்தி, குஜராத்தி, ஒரியா, வங்காளி, ஆகிய மொழிகளோடு மிகுதியும் ஒற்றுமை உடையதாதலால் அதிகப்படியான ஜனங்களுக்கு எளிதில் கற்றுக் கொள்ளக்கூடிய மொழியாகவும் இது அமைந்திருக்கிறது. உண்மையைக் கூறுமிடத்து அகில இந்திய முறையில் ஏதாவது ஓர் உள் நாட்டு மொழி வழங்கப்பட வேண்டும் என்பது பற்றிய பிரச்சனை இந்தியப் பொது மேடை களில் ஆராயப்பட்ட பொழுதெல்லாம், எந்த ஒரு மொழி இந்த நிலை அடையக்கூடும் என்பது பற்றி அதிகச் சந்தேகம் வந்ததேயில்லை. ஆட்சி மொழியாக இருக்கவேண்டிய தகுதி இலக்கிய மதிப்புடைய ஒரு மொழிக்கு தரப்படும் வெகுமதி அன்று. ஒரு தாகூரோ, துளசிதாஸோ, ஜயதேவரோ, கபீரோ, இவருள் ஒவ்வொருவரும் எந்த ஒரு மொழி எல்லைக்கும் அப்பாற் பட்டவராகித் தமக்குத்தாமே வகுத்துக்கொண்ட சட்டத்தில், நமக்கு பிடி படாத சட்டத்துள் விளங்குகின்ற ஒரு "இலக்கிய கொள்கை" என்றுதான் கருத வேண்டும். இலக்கியக் கொள்கைகள் என்று பெருமைப் படுத்தக் கூடிய எந்த மொழியில் தங்களுடைய கருத்தைத் தெரிவித்துள்ளார் களோ அந்த மொழி அதற்கு முன்னர்க் காணப்படாத அளவு அவர் களுடைய எல்லை அற்ற அறிவுத் திறமையால் வளர்ச்சி யடைகின்றது. அன்றாட அலுவல்களுக்கும், நாட்டை ஆள்வதற்கும், சட்டங்களைக் குறிப் பதற்கும், சட்ட மன்றங்களில் நீதி வழங்குவதற்கும் இத்தகைய பெரு மக்களால் பேசப்பட்ட ஒரு மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்பது கட்டாயம் இல்லை. வேறு முறையில் நோக்கும்பொழுது இவர்களால் ஏற்பட்ட பெருமை அதிகமாயினும், மேற்சொன்ன காரியங்களுக்கு இப் பெருமையுடைய ஒரு மொழி வேண்டும் என்பது இல்லை. எந்தெந்தத் துறைக்கு எந்தெந்த மொழி அதிகப்படியாகப் பயின்று வருகின்றதோ அதைத்தான் நாம் கவனிக்கவேண்டும். அங்ஙனம் எடுத்துக் கொண்டால் ஜனத் தொகையில் வருகின்ற எண்ணிக்கை அளவுதான் நமக்கு வேண்டப் பட்ட வழிகாட்டியாகும்.

பிராந்திய மொழிகளைப் பொறுத்தவரை அரசியல் அமைப்பின் 345-வது விதி அந்தந்த ராஜ்யத்தின் சட்டசபை, சட்ட பூர்வமாக அந்தப் பிராந்திய

மொழியையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ அந்த ராஜ்ய ஆட்சி மொழியாக, அதிகார பூர்வமான காரியங்கள் அனைத்திற்கும் அன்றி ஒரு சிலவற்றிற்கோ பயன் படுத்தலாமென்று வகுக்கிறது. எனவே ஹிந்தியை ஏற்றுக்கொண்டு யூனியனைப் பொறுத்தவரை ஆங்கிலத்தை ஒதுக்கவேண்டும் என்று சொல்கின்ற அரசியல் அமைப்பின் பகுதிகள், பிராந்திய மொழிகளும் அந்தந்தப் பிராந்தியங்களில் ஆட்சி மொழியாக அமைவதற்கு உரிமை தருகின்றன.

உண்மையைக் கூறுமிடத்து யூனியன் மொழிக்கும் பிராந்திய மொழிகளுக்கும், போட்டி இருப்பதாகக் கருதுவது தவறான கருத்தாகும். யூனியன் மொழியும் பிராந்திய மொழிகளும், அவ்வவற்றிற்கு உரிய இடங்களில் புகுந்து, ஆங்கிலத்தை அதனுடைய உரிமையற்ற இடத்திலிருந்து நீக்கி, இம்மொழிகள் அவ்விடங்களைப் பிடித்துக்கொள்ளக் கூடுமேயானால் அதுவே இந்திய மொழிப்பிரச்னைக்குத் தகுந்த முடிவாகும். இந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் யூனியன் மொழியோடு சேர்த்து எல்லாப் பிராந்திய மொழிகளையும் வளர்ப்பதற்கும், இவற்றுள்ளே புது முறையில் ஒரு உறவை ஏற்படுத்துவதற்கும் சில சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன.

சென்ற ஒன்றரை நூற்றாண்டில் ஒரே மாதிரியான காரணங்களினால் யூனியன் மொழியும், பிராந்திய மொழிகளும் ஒரே மாதிரியான குறைபாட்டுடன் இருக்கின்றன. இதன் காரணம் ஒரே வகையான சூழ்நிலையில் அவை வளர்ந்ததுதான். ஒவ்வொரு மொழியும் இனி வருங்காலத்தில் எந்தெந்தக் கடமைகளை நிறைவேற்ற வேண்டி நேருமோ அதற்கு ஏற்ற சொற்களைப் பெற்று இலக்கியங்களையும் பெற்று வளர்ச்சி அடைய உதவ வேண்டும். அப்பொழுதுதான் முழு வளர்ச்சி பெற்ற மொழிகளால் ஆங்கிலத்தை இப்பொழுதுள்ள இடத்திலிருந்து பெயர்க்க முடியும். இதைக் கருதித்தான் அரசியல் அமைப்பு, யூனியன் மொழியைப் பொறுத்த வரை, இடைக்காலமாகவும் தயார் செய்துகொள்ளும் காலமாகவும் பதினைந்து ஆண்டுகளை ஒதுக்கி வைத்துள்ளது. ராஜ்ய ஆட்சி முறையைப் பொறுத்தமட்டில் அந்தந்த ராஜ்ய சட்ட சபைகள் தகுந்த அளவு இடைக்காலத்தை ஏற்படுத்திக்கொள்ளலாம். நாளாவட்டத்தில் ஆங்கில மொழியை ஆட்சி மொழிப் பீடத்திலிருந்து இறக்கி அந்தந்தப் பிராந்திய மொழிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நினைக்கிற ராஜ்ய அரசாங்கங்கள் இத்தகைய ஒரு செயல் முறையைத்தான் மேற்கொண்டுள்ளன.

7. இந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் நாட்டைச் சுற்றி வருங்கால் நாட்டின் ஒரு பகுதியில் வாய் மொழிச் சான்றுகளைச் சேகரிக்கும்பொழுது சிலர் கூறிய சான்றுகளை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறோம். இவர்கள் கருத்துப்படி ஒரு மொழியை யூனியன் மொழியாக ஏற்றுக்கொள்வதை விட இந்தோ-ஆரிய மொழிக் குடும்பத்திற்கும் திராவிட மொழிக் குடும்பத்திற்கும் பிரதிநிதிகளாக இரண்டைப் பொறுக்கி எடுத்து அவற்றை ராஜ்ய மொழிகளாக ஏற்றுக்கொள்ளலாம் என்பதாகும். இவர்கள் கருத்தின்படி சம உரிமை பெற்ற யூனியன் மொழிகளாக இவை இரண்டுமே ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். மேலும் ராஜ்யங்களுக்குள் கடிதப் போக்குவரத்திற்கு இவ்விரண்டு மொழிகளையுமே பயன்படுத்தப்படலாம். இக்கருத்து மேலாகப் பார்க்கும்பொழுது பொருத்தமுடையதுபோலக் காணப்பட்டாலும் சிறிதளவு சிந்தித்துப் பார்த்தவுடன் மொழிப் பிரச்னைக்கு, அரசியல் அமைப்பில் காணப்படுகின்ற முடிவுகளை விடச் சிறந்த முடிவாக ஆகாது என்பது விளங்கும். மொழி வல்லவர்கள் மொழிக் குடும்பங்களைப் பிரித்து இந்தோ-ஆரிய மொழிக்கூட்டம் என்றும், திராவிட மொழிக்கூட்டம் என்றும் பெயரிட்டு வழங்கினாலும் ஒவ்வொரு கூட்டத்தினுள்ளும் ஒருவர் பேசும் மொழி மற்றொரு மொழி பேசுவோருக்கு விளங்காததாய் தனிப்பட்ட ஒரு மொழியாகவே இருக்கக்காண்கிறோம். இம்முறையில் நான்கு திராவிட மொழிகளில் ஏதாவது ஒன்றை ஆட்சி இடைநிலை மொழியாக ஆக்கினாலும், ஏனைய மூன்று திராவிட மொழிகளும் வழங்குகின்ற பிராந்தியங்களுக்கு பிரச்னை முடிவாக அமையாது. இந்தோ-ஆரியகுடும்ப மொழிகளுள்

பொறுத்தமட்டிலும் இதே நிலைதான் ஏற்படுகின்றது. இரண்டு மொழிகளைப் பொறுக்கி எடுப்பதினால் இரண்டாவது மொழி வழங்குகின்ற பிராந்தியத்திற்கு ஒரு நலமை ஏற்படுவது உண்மைதான் என்றாலும் ஏனைய மொழிப் பிராந்தியங்களைப் பொறுத்தமட்டில் இரண்டு வகையான பொறுப்பை ஏற்றிவிடுகின்றது. ஏனென்றால், இரண்டு மொழிகளுள் ஆட்சி மொழியாக எதனை ஏற்றுக்கொள்வது என்ற பிரச்னை உண்டாகும். எனவே இந்தக் கருத்து அதிகப் பயனை விளைவிப்பதன்று.

ஆங்கிலம் இந்தியாவுக்குள் நுழைந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர், பல நூற்றாண்டுகளாகப் பல மொழிகள் வழங்குகின்ற இந்தியாவின் பிராந்தியங்களுக்குள் வட மொழியே கருத்தை அறிவிக்கின்ற பொது மொழியாக இருந்துவந்தது. எல்லாக் காலத்திலும் பிற மொழிகளை வளர்க்கவும் சக்தி உள்ள ஒரு மொழியாக இருந்தது இது. தன்னுடைய பரந்து, விரிந்த கருவூலத்திலிருந்து எல்லா மொழிகளுக்கும் தேவைக்கு ஏற்றபடி சொற்களைக் கடன் கொடுக்கக்கூடிய மொழியாகவும் வட மொழி இருந்துவந்தது. இந்த அடிப்படையில்தான் சிலர் அகில இந்திய பொது மொழியாக வடமொழியையோ அன்றி அதிலிருந்து சுருக்கி எடுக்கப்பட்ட ஒரு மொழியையோ கையாளலாம் என்று கூறுகின்றனர். சில சமயங்களில் இந்தியாவில் வழங்குகின்ற மொழிக்குள் ஒன்றைப் பொறுக்கி எடுக்கின்ற தொல்லையிலிருந்து விடுவித்துக்கொள்வதற்காக "தப்பித்துக்கொள்ளும்" வழியாக இம்முறை பேசப்படுகிறது. இந்தத் தப்பித்துக்கொள்ளும் முறை நம்மைக் கவரவில்லை. மிகமிகச் சிலரே அறிந்த இந்த ஒரு மொழியை யூனியன் மொழியாக ஆக்கிக்கொண்டு ஜனத்தொகையில் நாற்பத்திரண்டு சதவிகிதம் பேசப்படுகின்ற ஒரு மொழியை ஒதுக்கவேண்டும் என்று நினைப்பதில் எவ்வித சிறப்பும் இல்லை. பிரச்னையைப் புறக்கணிப்பதை விட்டுவிட்டு நேர் நின்று பார்க்கக்கூடுமேயானால் சில பிராந்தியங்களில் உள்ளவர்களுக்கு அதிகப்படியான தொல்லையைத் தருவதானாலும், ஒரு முடிவு அனைவருக்கும் நியாயமானதென்று காணப்படும். அகில இந்திய மொழிக்குத் தற்காலம் ஏற்படுகின்ற தேவைகள் ஒருபுறம் இருக்க, வடமொழியை இதற்குப் பயன்படுத்துவதில் வேறு தொல்லைகளும் உண்டு. 1951 ஜனக்கணிப்பில் 500 சொச்சம் பேர்களே வட மொழியைத் தாய் மொழி என்று கொடுத்துள்ளார்கள். இன்றைய சூழ் நிலையில் ஆட்சியையும், பொது வாழ்க்கையையும் சாதாரண மனிதனின் பக்கத்திலே கொண்டுவரக்கூடிய ஒரு மொழியைத் தேடுகின்றோமாதலால் ஜனத்தொகையில் ஒரு சதவிதத்தார் மட்டுமே அறியக்கூடிய ஆங்கிலத்தை எந்தக் காரணத்தால் பொருத்தமில்லை என்று தள்ளுகிறோமோ அதே காரணத்தால் வடமொழியையும் தள்ளவேண்டி நேரிடும். வடமொழி மிகச் சிறப்புடன் வாழ்ந்த காலத்தில்கூட உயர்ந்த வகுப்பார் சிலருக்குப் பயன்பட்டதே தவிர, அப்பொழுதும் பிராகிருத மொழிகளும் அப்பிரம்ம ஷாக்களுமே பொது மக்களால் பயன்படுத்தப்பெற்றுவந்தன.

8. இன்றைய நிலையின் பல்வேறு பகுதிகளையும் ஆழ்ந்து சிந்தித்த பிறகும் பல்வேறு முடிவுகளையும் தீவிரமாக ஆராய்ந்தபிறகுந்தான் அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இன்றைய நிலையின் சிக்கல்களை மனத்தில் கொண்டுதான் பலவற்றோடு, இடைக்காலத் தயாரிப்புக் காலம் என்ற ஒன்றையும், அரசியலமைப்பில் சேர்த்திருக்கிறார்கள் என்பதை மிக்கப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறோம். யூனியன் மொழி வளர்ச்சி அடைவதற்கும் அது நாளாவட்டத்தில் பரந்து விரிவதற்கும் ஒரு இடைக்காலம் வேண்டும் என்பதை அரசியலமைப்பு ஏற்றுக்கொள்கிறது. இந்தப் 15 ஆண்டு இடைக்காலத்தில் ஆங்கிலத்தோடு சேர்த்து யூனியன் மொழி வழங்கப்படுவதற்கும் யூனியன் மொழி முழு வளர்ச்சி அடைவதற்கும் சந்தர்ப்பம் வேண்டும் என்பதற்காகத்தான், அரசியலமைப்பு, ஜனாதிபதியானவர் தம் உத்தரவின்பேரில் இந்த இரண்டு மொழிகளையும் பதினைந்து ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம் என்று அவருக்கு அதிகாரம் அளிக்கிறது. இந்தப் பதினைந்து வருஷ கால அளவில் எல்லாத் துறைகளிலும் முழு வளர்ச்சியைப் பெற்றுவிட முடியு

தாதலால் அதற்கப்பாலுங்கூடச் சில குறிப்பிட்ட காரியங்களுக்கு ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாமென்று பாராளுமன்றம் சட்டம் இயற்ற அரசியலமைப்பு இடங்கொடுக்கிறது. சட்டஞ் செய்வதிலும், நீதி மன்றங்களிலும், ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாறுவதிலுள்ள இடைஞ்சல்களை உத்தேசித்துச இவை இரண்டையும் அரசியலமைப்பு பதினைந்து வருட கால அளவிற்குள் சேர்க்கவில்லை. மேலும் பாராளுமன்றம் இன்றியமையாமையை உத்தேசித்துச் சட்டம் இயற்றினால் ஒழிய, இவை இரண்டு இடங்களிலும் பதினைந்து ஆண்டுகள் கழித்துக்கூட ஆங்கில மொழியே வழங்கப்படும். மேலும் அரசியலமைப்பின் 351-வது விதி யூனியன் மொழி, அதாவது ஹிந்தி மொழி இந்தியாவின் பொதுப் பண்பாட்டை எடுத்துக்காட்டும் மொழியாக அமையவேண்டும் என்றும், பல்வேறு பிராந்திய மொழிகளில் வழங்குகின்ற நடை, கருத்து முதலியவற்றைப் பெற்றுக்கொண்டும், வடமொழியிலிருந்தும் இவற்றைப் பெற்றுக்கொண்டும் வளர்ச்சி அடையவேண்டும் என்று அறிவிக்கின்றது. வரிவடிவ எழுத்துக்களைப் பொறுத்தமட்டில் யூனியன் மொழி தேவநாகரிக எழுத்துக்களோடு இருக்கவேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் எண்களைப் பொறுத்தமட்டில் யூனியன் ஆட்சிக் காரியங்களுக்கு அகில உலகத்தாரும் ஏற்றுக்கொள்கின்ற இந்திய எண்களே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. தென் பிராந்தியத்தார் மிகுதியும் உபயோகப்படுத்துகிறார்கள் என்பதற்காகவும் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காகவும் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசியலமைப்பின் 344-வது விதியின்படி (அந்த விதியின்கீழ்தான் இந்தக் கழகம் நிறுவப்பட்டுள்ளது) அமைக்கப்படுகின்ற கழகத்தில் ஒரு தலைவரும், ஆங்கில ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு மொழிக்கும் பிரதிநிதியாக ஒவ்வொரு உறுப்பினரும் இருக்கவேண்டும் என்பதும் அறியப்படவேண்டும். மேலும் இக்கழகம் செய்கின்ற சிபார்சுகளை ஒரு குழு பரிசீலனை செய்யவேண்டும் என்பதும் அக்குழுவிலுள்ள முப்பது உறுப்பினரில் இருபது பேர் பாராளுமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும், பத்துப்பேர் ராஜ்ய சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் இத் தேர்வு முறை மாற்றப்படக்கூடிய ஒற்றை ஓட்டுக்களால் ஆனது என்றும் அறியப்படவேண்டும். இக்குழுவினர் ஆராய்ந்து கண்ட முடிவின் பேரில்தான் ஜனாதிபதி தம்முடைய ஆணையைத் தெரிவிப்பார். மேலும் இந்தப் பிரச்னையில் அதிகப்படியானவர் எண்ணிக்கைக் கொண்டுமட்டும் முடிவு செய்யப்படக்கூடாது என்பதையும் முக்கியமான சூழ்நிலைக்கு ஏற்ப முடிவு செய்யப்படவேண்டும் என்பதையும் அரசியலமைப்பு அறிந்து ஏற்றுக்கொள்கிறது.

முழுவதையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது அரசியலமைப்பின் பகுதிகள் விரிந்து கொடுக்காதவை அல்ல என்பதையும், சில அடிப்படைத் தத்துவங்களை விடாமல், அடிக்கடி சூழ்நிலைக்கு ஏற்பவும் வளர்ச்சிக்கு ஏற்பவும் ஏற்படும் மாறுபாடுகளை ஒத்துக்கொள்கிறது என்பதும் அறியப்படவேண்டும். அரசியலமைப்பின் இப்பகுதிகள் வளர்ச்சிக்குரிய வழிகளைமட்டும் வகுக்கின்றன. அவ்வழிகளில் முன்னேறுகின்ற வேகம் நம்முடைய முயற்சியை மட்டுமே பொறுத்தாகும்.

9. அரசியல் அமைப்பில் மொழிப் பிரச்சனைக்குக் காணப்பட்ட முடிவு தற்காலத்திலுள்ள சிக்கல்களையெல்லாம் நோக்கச் சிறந்த முடிவுதான் என்பதை ஏற்றுக்கொள்ளுவதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. அது சிறந்ததா இல்லையா என்பதைப்பற்றி முடிவு கூறுவதற்கு நாங்கள் உரிமையற்றவர்கள் என்ற போதிலும், அதன் தகுதி நோக்கி இதனைக் கூறலாம். உண்மையைக் கூறுமிடத்து இடைக்காலமாகத் தரப்பட்ட 15 ஆண்டுகள் என்பது மிகவும் குறுகிய கால அளவு என்றும், அந்தக் கால அளவு நீடிக்கப்படவேண்டும் என்றும் சொல்லுகிறவர்களைத் தவிர, எங்களுக்குச் சான்று பகர்ந்த பெரும்பான்மையான மக்கள் அரசியலமைப்புச் சொல்லும் இந்த முடிவை முற்றிலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கால வரையறையை நீட்டவேண்டுமென்பது இந்த அறிக்கையின் பிற்பகுதியில் நாங்கள் கொடுக்கின்ற காரணங்களையொட்டி முடிவு செய்யப்படலாம். ஆதலால், இந்த

சந்தர்ப்பத்தில் அதுபற்றி ஆராய்வதும், அந்தக் கால எல்லைக்குள் குறித்தபடி முடித்துவிடலாமா இல்லாவிட்டால் எவ்வளவு காலம் நீடிக்கப்படவேண்டும் என்பதுபற்றியெல்லாம் ஆராய்வதும் தேவையில்லையென்றே படுகிறது. நம்முடைய முயற்சி எவ்வளவு உண்மையுடனும், வேகத்துடனும் நடைபெறுகிறது என்பதையும், எவ்வளவு சக்தியுடனும், உறுதிப்பாட்டுடனும் இந்தத் திட்டங்களை நிறைவேற்ற நாம் முயல்கிறோம் என்பதையும் பொறுத்தே கால அளவின் எல்லையை நிர்ணயிக்கவேண்டும். நீண்ட இடைக் காலம் தயாரித்துக்கொள்ளவேண்டும் என்று நினைக்கின்றவர்கள்கூட, அதற்காக இப்பொழுது நாம் செய்கின்ற முயற்சி தளர்த்தப்படவேண்டும் என்று நினைக்கவில்லை. எனவே, அரசியல் அமைப்பின் எல்லைகளுக்குட் பட்டு, அவற்றின் கருத்துக் கிணங்க, அரசியல் அமைப்புத் தருகின்ற இடைக்கால அளவையும் மனத்தில் கொண்டு, அவற்றை நிறைவேற்ற என்ன என்ன வழிகளைக் கையாளலாம் என்று நாங்கள் நினைக்கின்றோமோ அவற்றைச் சிபார்சு செய்துள்ளோம்.

10. யூனியனைப் பொறுத்தமட்டிலும், எல்லா ராஜ்யங்களையும் பொறுத்த மட்டிலும் ஆங்கில மொழியே ஆட்சிமொழியாக இன்று இருந்து வருகிறது. ராஜ்ய சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும், நீதி மன்றங்களிலும், கல்வி அளிக்கின்ற பெரும்பாலான உயர்தரக் கல்வி மன்றங்களிலும், பல்கலைக் கழகங்களிலும், இன்றளவும் ஆங்கிலமே இருந்து வருகிறது. இவற்றோடன்றி அறிஞர்கள் நாட்டின் பல்வேறு மொழி பேசப்படுகின்ற பிராந்தியங்களிலிருந்து ஒன்றுகூடியபொழுது அகில இந்தியத் தொடர்பு மொழியாகவும் பெரிய அளவுக்கு ஆங்கிலமே இருந்து வருகிறது. சிறப் புடைய உலக மொழிகளுள் ஒன்றாக இருத்தலினால் இந்தியர்கள் வெளி நாடுகளில் சென்று அகில உலகப் பங்கூட்டு மகாநாடுகளிலும், கூட்டங் களிலும் பங்கு கொள்ளும்பொழுது எளிதாகப் பங்கு கொள்ளுவதற்கு இம் மொழியையே பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆங்கிலத்தின் இடத்திற்கு இந்திய மொழிகளைக் கொண்டுவரவேண்டும் என்று நினைக்கும்பொழுது பிரச்சனையின் இம்மாதிரி சந்தர்ப்பங்களையெல்லாம் மனத்தில் கொண்டு ஆராயவேண்டியுள்ளது.

மேலே கூறிய காரணங்களால் நீதி மன்றங்களில் நீதி வழங்குவதற்கு ஆங்கிலத்தை நீக்கி யூனியன் மொழியையும், பிராந்திய மொழிகளையும் அந்த இடத்தில் நுழைக்க முயலும்பொழுது படிப்படியாக நுழைக்க முயல வேண்டும். இந்த இடத்தில் ஆட்சித்துறையிலும், நீதி மன்றங்களிலும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு யூனியன் மொழி மட்டுமே புகுத்தப்படப் போவ தில்லை என்பதை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இந்தத் துறையில் யூனியன் மொழியாகிய ஹிந்தி நிச்சயமாக ஆங்கிலத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளப்போவதில்லை என்பதைச் சென்னை அரசாங்கத்தின் சொற்களால் சொல்லவேண்டுமேயானால் இது "பிரிக்கப்படமுடியாத சொத்தாகும்."

ராஜ்ய ஆட்சியைப் பொறுத்த துறைகளில் ஆங்கிலத்தை நீக்கும்பொழுது அதனை அடுத்து வரவேண்டிய இயல்பு பிராந்திய மொழிகளுக்குத் தான் உண்டு. யூனியன் ஆட்சியைப் பொறுத்தவரையிலும், அகில இந்திய செய்திப் போக்குவரத்துக்கும், யூனியனுக்கும், ராஜ்யங்களுக்குமிடையே கடிதப்போக்குவரத்துக்கும் ஆங்கிலத்தின் வாரிசாக ஹிந்தி மொழி வரும். நீதி மன்றங்களும், சட்ட மன்றங்களும் அந்தந்த இடத்திற்கேற்பப் பிராந்திய மொழிகளிலும், யூனியன் மொழியிலும் நடைபெறும். இவ்வாறு செய்வ தனால் இப்படிப்பட்ட வேறுபட்ட காரியங்களுக்கு எளிதான ஒரு பொது மொழியைக் கொள்ளாமல் ஆங்கிலமாகிய ஒரு மொழியை நீக்கிவிட்டு அந்த இடத்தில் பல்வேறு மொழிகளை வைக்கவேண்டுமென்பது பல சிக்கல்களை உண்டாக்கும். இதுபற்றிய விரிவான ஆராய்ச்சியும், இந்தச் சிக்கல்களை கூடிய அளவு எவ்வாறு போக்கலாம் என்பது பற்றியும் இந்த அறிக்கையில் பின்வரும் பகுதிகளில் உரிய இடங்களில் ஆராயப்பட்டுள்ளன.

11. மொழிப் பிரச்சனையைப் பற்றி ஆராயும்பொழுது மிக முக்கியமாக ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது. நம்முடைய ஆட்சியாளருக்குப் பல்வேறு வகைப்பட்ட அலுவல்கள் நிறைந்திருக்கின்ற இக்காலத்தில் மொழிப் பிரச சனையை எடுத்துக்கொண்டு மொழி மாற்றம் செய்யவேண்டும் என்ற தொரு புதிய பாரத்தை ஏன் ஏற்படுத்தவேண்டும்? அதுவும் இந்த சூழ் நிலையில்? என்ற கேள்விதான் அது. நாடு விடுதலை அடைந்தபிறகு எத்தனையோ வகையான பிரச்சனைகள், ஒவ்வொன்றும் அப்பொழுதே அரசியலாரின் கவனத்தைக் கவரக்கூடிய அளவில் தோன்றியிருக்கின்றன. யூனியன், ராஜ்ய அரசாங்கங்களைப் பொறுத்தமட்டில் விடுதலை வந்த பிறகு தவிர்க்க முடியாத காரணங்களால் ஆட்சி முறை பலங்குறைந்து இருக்கின்றது. என்றாலும், மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் நிர்வகிக்க வேண்டிய பொறுப்புக்கள் இதற்கு முன்னர் இருந்த அரசாங்கத்தை விட பலமடங்கு அதிகமாகியுள்ளன: மிகவும் உயர்ந்த குறிக்கோளோடு பொரு ளாதார வளர்ச்சிக்குரிய திட்டங்களை நிறைவேற்றுவதிலும், முதலாவது ஐந்தாண்டு திட்டத்தை இப்பொழுதுதான் முடித்து, அதைவிடப் பெரியதும், விரிந்ததுமான 2-வது ஐந்தாண்டுத் திட்ட வளர்ச்சிக்கு அடிகோலுவதிலும் ஈடுபட்டிருக்கிறோம். தேசம் முழுவதும் இதில் ஈடுபட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அரசாங்கத்தை மொழிமாற்றம் செய்யத் தூண்டுவது அறிவுடைமையா, இந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொறுத்தமானதா என்பது அந்த வினா? அவ்வாறு மொழி மாற்றம் செய்வது என்றாவது ஒரு நாள் வந்தே தீரவேண்டும் என்றாலும் இப்பொழுது அதனைச் செய்ய முயல்வது பொருத்தமுடையதா என்று கேட்கப்படுகிறது. இவ்வாறு செய்ய முயன்றால் அது ஆட்சித் துறையைக் குழப்பத்திற்குள்ளாக்கி நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்காதா?

இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில், பொருத்தமான முடிவான விடை இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். நம்முடைய அரசியல் அமைப்பு வயது வந்த ஆண்கள் பெண்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கி யுள்ளது. ராஜ்ய முறை பற்றி அறிவிக்கும் வழிகாட்டிப் பகுதிகள், ராஜ்ய அரசாங்கங்கள் அனைவருக்கும் சமமான உரிமை வழங்குவது, கட்டாய இலவசக் கல்வி போதிப்பது, மதுவிலக்குச் செய்வது ஆகியவற்றை, நிறை வேற்றக் குறிக்கோள்களாகக் கொள்ளவேண்டுமென்று சொல்கின்றன. இவற்றை நிறைவேற்றுகையில் இந்தியாவில் உள்ள ராஜ்ய ஆட்சி உறுப் புக்கள் அனைத்தும் உறுதியாக முன்னேறிச் சென்று அதன் பயனாக ஒவ்வொரு மனிதனும் ராஜீய முன்னேற்றத்தில் ஓர் உறுப்பினனாகவும் இருந்து அதன் பயனையும் சமமாக அடையவேண்டும் என்பதே. இந்தச் சூழ்நிலையில் மக்களுள், 99 சதவிகிதத்தாருக்குப் புரியாத ஒரு மொழியில் நாட்டின் ஆட்சி முறையை அதனுடைய உயர்ந்த இடங்களிலெல்லாம் நடத்த லாம் என்று சொல்வது பொருத்தமுடையதா? நாடு முழுவதிலும் எல் லாத் துறைகளிலும் ஜனநாயக ஆட்சி நடைபெற்று வருகிறது. கிராமப் பஞ்சாயத்து முதல் பாராளு மன்றம் வரையில் ஜனநாயக ஆட்சி நிலவும் பொழுது உயர்ந்த ஆட்சித்துறையிலும், நீதி மன்றங்களிலும், உயர்ந்த அதிகாரிகளுடைய பொது வாழ்க்கையிலும் பேசப்படுகின்ற மொழி ஏறத்தாழ எல்லா மக்களுக்குமே புரியாத ஒரு மொழியாக இருந்தால் ஜனநாயகம் சிறந்த முறையில் அமைதியாக முன்னேற முடியுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். யாராகயிருப்பினும் இந்தப் பிரச்னையை நடு நிலைமையோடு ஆராய்வார்களேயானால், அதிகாரிகளுக்கும், பொதுமக்களுக் கும் இடையேயுள்ள தடைபோன்றிருக்கின்ற இந்த மொழிப்பிரச்சனை மிக விரைவில் தீர்த்துவைக்கப்படவேண்டிய ஒன்று என்ற முடிவுக்கே வருவார்கள் என்பதில் எங்களைப் பொறுத்தமட்டில் சந்தேகமில்லை. இது எவ்வளவு அதிகத் தேவையுடையதாக இருக்கிற தென்பதை அறிந்துகொள்ளப் பல உதாரணங்கள் உண்டு. தற்போதைய அரசியல் கட்சிகள் அனைத்தும் தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்வதற்குப் பிராந்தியங்களைப் பொறுத்தமட்டில் ஆங்கிலத்தை நீக்கிவிட்டுப் பிராந்திய மொழிகளின் மூலமா கவும், அகில இந்தியக் காரியங்களுக்கு இந்தி அல்லது இந்துஸ்தானியைப் பயன்படுத்துவதன் மூலமாகவும் செல்வாக்கைப் பெருக்க முயல்கின்றன.

இம்முறையில்தான் 1925-ல் கான்பூரில் கூடிய அகில இந்திய தேசியக் காங்கரஸ் மகாணக் கமிட்டிகள் குழுக்கள் தாங்கள் கூடும்பொழுது அந்தந்தப் பிராந்திய மொழிகளையோ அல்லது ஹிந்துஸ்தானியையோ பயன்படுத்தவேண்டுமென்றும், தேசியக் காங்கிரஸும், அதனுடைய குழுக்களும் அகில இந்திய முறையில் கூடும்பொழுதும் பெரும்பாலும் ஹிந்துஸ்தானி மொழியைப் பயன்படுத்தவேண்டுமென்றும் முடிவு செய்தது.

இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் எந்த இடைஞ்சல் வந்தாலும் அதனைப் பொறுத்துக்கொண்டு மொழி மாற்றத்தை உடனே செய்யவேண்டுமென்று மகாத்மா காந்தி விரும்பினார். இம்மாற்றம் நடைபெறாமல் கழிகின்ற ஒவ்வொரு நாளும் பெரிய நஷ்டம் என்றே கூறினார். இந்த மாற்றம் செய்வதனால் நம்முடைய ஆட்சி முறையில் ஏற்படுகின்ற சிறு இடையூறுகளும், சிறு தொல்லைகளும் செயலின் முக்கியத்வத்தை நோக்க, இரண்டாவதாகவே கருதப்படவேண்டும். மேலும், இம்மாற்றம் ஏற்படும் பொழுது, எவ்விதக் குழப்பமோ அல்லது நாட்டின் முன்னேற்றத்தில் பிற்போக்கோ அல்லது ஆட்சிக்கருவிகளில் முன்னேற்றத் தடையோ ஏற்பட வேண்டுமென்ற இன்றியமையாமை இல்லை. ஆட்சியில் இத்தகைய இடையூறுகள் ஒன்றும் நேராதபடி பார்த்துக்கொள்ளுவதற்கு என்னென்ன இடைக்காலக் காரியங்கள் செய்யப்படவேண்டுமென்பதையும், எளிய முறையில் எப்படி மொழி மாற்றத்தைக் கொண்டுவரலாமென்பதையும் அவ்வவற்றிற்குரிய இடங்களில் இந்த அறிக்கையில் ஆராய்ந்து கூறியுள்ளோம். மொழி மாற்றம் ஏற்படுகின்ற அந்தக் கால எல்லை நீங்கியவுடன் இம்மாற்றம் ஏற்பட்டதால் ஆட்சி முறை மேலும் வளர்ச்சி அடையத்தான் காரணங்கள் உள்ளன. பலகாலம் பழகிப்போய்விட்ட காரணத்தால் இன்று காணப்படுகின்ற எத்தனையோ இடையூறுகளும், பொருத்தமின்மையும் நம்முடைய கவனத்திற்கு வரவில்லை. ஏன் என்றால், மக்களுள் 99 சதவிகிதத்தாருக்குப் புரியாத ஒரு மொழியில் ஆட்சி நடைபெற வேண்டுமேயானால் எத்தனையோ பொருத்தமின்மைகள் இருக்கத்தான் செய்யும். நாம் அவற்றை அன்றாடம் அறிய முடியாவிட்டாலும்கூட எங்கே எங்கே மொழி மாற்றம் நடைபெற்றுள்ளதோ அந்தந்தத் துறைகளில் எல்லாம் தொடக்க காலத்திற்குப் பிறகு அது கல்வித் துறையாயினும் சரி, ஆட்சித் துறையாயினும் சரி பிற்போக்குக்குப் பதிலாக நல்ல வளர்ச்சியே கிடைத்திருக்கிறது என்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. உதாரணமாக, ஹிந்திப் பிராந்தியத்தில் உள்ள ராஜ்யங்களில் ராஜீய ஆட்சி முறை, பிராந்திய மொழியில் மாற்றப்பட்ட பிறகு கீழ்த்தர அலுவலாளர்கள் எழுதுகின்ற வரைவுகளிலும் குறிப்புக்களிலும் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்றும், புரிந்து கொண்டு எழுதுகின்ற காரணத்தால் விளங்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகிறது. போதனா மொழியை மாற்றிய பல்கலைக் கழகங்களில் மற்றவை ஒன்றாக இருப்பினும் மாணவர்கள் புரிந்து கொள்ளுகின்ற இயல்பும், புரிந்துகொண்டவற்றை வெளியிடும் இயல்பும் மிகவும் முன்னேறி யிருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. இந்தப் பயன்களைக் கண்டு யாரும் வியப்படையவேண்டியதில்லை. ஏனென்றால் இத்தகைய முன்னேற்றம் ஏற்படும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகும். எனவே மாற்றம் செய்யும்பொழுது ஒருவகைப்படுத்திக்கொண்டு சாதாரண முறையில் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ற முன்னேற்பாடுகளுடன் மாற்றத்தைக் கொண்டுவரக் கூடுமானால் ஆட்சி முறையில் எவ்விதமான குழப்பமோ பிற்போக்கோ ஏற்படவேண்டிய காரணமே இல்லை. மேலும் சொல்லப் போனால் மாற்றக் காலமாகிய “பல் முளைக்கும் தொல்லை” தீர்ந்து விட்ட பிறகு, மிக வேகமாகவும், சிறந்த முறையிலும் முன்னேறுவதற்குரிய வாய்ப்பாக இந்த மொழி மாற்றம் அமைந்துவிடும். ஆட்சி முறையில் ஏற்பட வேண்டிய இந்த மாற்றம் இதைவிட முக்கியமான ஏதாவது காரியங்களிருப்பின், இதைவிடப் பெரிய பிரச்னைகளுக்கு இடங்கொடுத்து இரண்டாவதான இடத்தைப் பெற வேண்டியதுதான். இந்த மாற்றத்தை மிக விரைவாகக் கொண்டுவரவேண்டிய மிக அடிப்படையான காரணம் ஒன்று உண்டு. ஆட்சி முறை நடைபெறுகின்ற மொழியும், நீதி மன்றங்களில் வழங்குகின்ற மொழியும் மக்கள் நலனை நாடுகின்ற ஜனநாயக ஆட்சியில், சாதாரண

மனிதனுடைய அறிவின் எல்லைக்குட் பட்டதாக இருத்தல்வேண்டும். ஏனென்றால் இத்தகைய ஒரு ஜனநாயகத்தில் அரசியல் நீதிபற்றி முடிவு கூறுகின்றவன் சாதாரண மனிதனே ஆவான்.

12. சட்டம், நீதி மன்றம், பொதுப் பணி ஆட்சி முறை ஆகிய துறைகளைப் பொறுத்த மட்டில் இதுவரை பேசினோம். மொழிப் பிரச்னையைப் பொறுத்தமட்டில் "பொதுத் துறை" என்பதாகும் இது. இனி இந்தப் பிரச்னையின் "உள் துறை" என்பது கல்வி, செய்தித் தாள், வாணிகம், தொழில், உயர்தரக் கல்வித் துறைகள் என்பவைகளாகும்.

கல்வி அமைப்பில் எல்லா உயர்தரக் கல்வியிலும் ஆங்கிலமே போதனா மொழியாக உள்ளது என்பது முன்னரே சொல்லப்பட்டது. இத்துறையிலும் ஆங்கிலத்துக்கு வாரிசாக யூனியன் மொழி மட்டும் அல்லாமல் அந்தந்தப் பிராந்தியத்திற்கு ஏற்றபடி யூனியன் மொழியும், பிராந்திய மொழிகளும் அமையும். ஏற்கனவே சென்ற 20 சொச்சம் ஆண்டுகளில் நடுத்தரக் கல்வியைப் பொறுத்தமட்டில் ஆங்கிலம் போதனா மொழியாக இருந்தது மாறி அந்தந்த பிராந்தியங்களில் பிராந்திய மொழிகளே போதனா மொழிகளாக ஆகிவிட்டன. இப்பொழுது கவனிக்கப்படவேண்டியது பல்கலைக் கழகக் கல்வித் துறையைப் பொறுத்ததுதான்.

பல்கலைக் கழகப் போதனா மொழியை ஹிந்தியிலோ, அந்தந்த பிராந்திய மொழிகளிலோ, அல்லது இவ்விரண்டிலுமோ மாற்றுவதற்கு உரிய அடிப்படைத் தேவைகள் என்னென்ன என்பது பற்றி விரிவாக இந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் ஆராயப்பட்டுள்ளன. வேற்று மொழியின் மூலமாகக் கல்வியைப் போதிப்பது எவ்வளவு கடினமான காரியம் என்பதை மட்டும் இங்கே சொல்லியுள்ளோம். மொழி மாற்றம் செய்வதிலுண்டான இடையூறுகளை நல்ல முறையில் தீர்க்கக்கூடுமேயானால் மொழி மாற்றத்தினால் கல்வித் துறையில் நன்கு புரிந்துக்கொள்ளக்கூடிய நிலையும், தாமே சிந்திக்கின்ற சிந்தனா சக்தியின் வளர்ச்சியும் எல்லாத் துறைகளிலும் ஆராய்ச்சி செய்கின்ற சக்தியும் இதுவரை இருந்ததைவிடப் பன்மடங்கு வளர்ச்சி அடைவதைக்காணலாம். கல்வித் துறையில் மொழி மாற்றம் செய்வதினால் ஆங்கில மொழியிலுள்ள வளர்ச்சியை எல்லாம் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்கின்ற "குழாய்" அடைபட்டுப் போய்விடாது, அல்லது சுருங்கிப்போய் விடாது என்பதை நாங்கள் நன்கு உணர்கிறோம்.

13. எல்லாத் துறைகளிலும் மொழி மாற்றம் செய்வதானால் அதற்குத் தேவையான மொழி பெயர்ப்பு வேலையைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். ஆங்கில மொழியில் இன்று வெளியாகின்ற எல்லை மீறிய இலக்கியம், புதிய வெளியீடுகளின் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவும் எல்லாத் துறைகளிலும் வெளி வருவதை மொழிப் பெயர்ப்பு மூலமாகத் தருதல் என்பது இயலாத காரியம் என்பதை நாங்கள் அறிவோம். இந்திய விஞ்ஞானிகள் அனைவருக்கும் பிரதிநிதியாக உள்ள இந்தியன் சயன்ஸ் கா்ங்கிரஸ் அஸோசியேஷன், ஒரு மாதமொன்றுக்கு 600 விஞ்ஞான, தொழில் நுட்பப் பத்திரிகைகளையும், 12,000-த்துக்கு மேல் 13,000 வரை ஆங்கில நூல்களையும் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலிருந்து வரவழைக்கின்றோம் என்று அறிவிக்கின்றது. என்றாலும், இங்ஙனம் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற இலக்கியத்தைப் பயன் படுத்துக்கொள்ளக்கூடிய தகுதியும், இயல்பும் உடையவர்களுக்கு வேண்டுமான அறிவை வழங்க ஏற்பாடு செய்யப்படுகின்றதாதலின் மொழி மாற்றம் செய்வதினால் நம்முடைய கல்வியின் தரங் குறைந்து போய்விடுமென்று அஞ்சவேண்டியதில்லை. மொழி பெயர்ப்பு முயற்சி என்பது பாடப் புத்தகங்களையும், அதனை அடுத்துள்ள "உதவி இலக்கியங்களையும்" பற்றியதேயாம். முடிவாகக் கூறுமிடத்து இப்பல்வேறு முயற்சிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து அவற்றின் லாப நஷ்டங்களைக் காண்பதே இப்பொழுது செய்யப்பட வேண்டியதாகும். இன்றுள்ள நிலையில் ஒவ்வொருவருடைய கல்வி முயற்சியிலும் பெரும் பகுதியான நேரத்தை ஆங்கில

மொழியை புகட்டுவதற்கே பயன் படுத்துகிறோம். இதனுடைய பயன் ஒவ்வொருவரும் **ஓரளவுக்குத் தமக்குத்தாமே மொழிப் பெயர்ப்பாளராக அமைகின்றார்கள்.** அதாவது ஆங்கிலத்தின் மூலமாக அறிவை அடைந்து அதனுடைய கருத்தை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்து அவன் அறிந்து கொண்டு வளர்ச்சிபெற வேண்டியுள்ளது. இதில் உண்மையாகப் பயன் பெற வேண்டுமேயானால் அவனுடைய மன சக்தியும், ஏனைய சக்திகளும் எல்லையற்ற அளவுக்குச் செலவழிந்த பிறகு அவன் இந்தப் பயனை அடைகின்றான். பொதுவான இடைநிலை மொழி ஒரு இந்திய மொழியாக மாற்றப்பட்டுவிட்டால் மொழி பெயர்ப்புகள் அனைத்தையும் ஒரு சிறு கூட்டத்தாரே இருந்து செய்துவிட, பெரும்பான்மையான மக்கள் மொழி பெயர்க்கும் வேலையில் அறிவுத்திறனை வீணடிக்காமல் விஷயத்தைப் புரிந்து கொள்வதற்கு முழு சக்தியையும் பயன்படுத்தக்கூடும். இடைநிலை மொழியை நம்முடைய மொழியாக மாற்றி விட்டால் இந்நாட்டில் எழுதப்படுகின்ற பாடப்புத்தகங்கள் வெறும் மொழி பெயர்ப்பு நூல்களாக இல்லாமல் சொந்தமாகவே எழுதப்பட்டவைகளாக ஆய்விடும். எனவே பொதுவாக இடைநிலை மொழியை மாற்றுவதன் மூலம் கல்வித் தரம் குறையவேண்டிய காரணமும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் இங்ஙனம் மாற்றுவதன் மூலம் மாற்றுகின்ற காலத்தின் தொல்லை முற்றிலும் தீர்ந்துவிட்ட பிறகு, சொந்த மொழியின் மூலமே கற்றுக்கொள்கின்ற நிலை வருகின்ற பொழுது, கல்வித் துறையில் தர உயர்வை நாளாவட்டத்தில் உறுதியாக அடையமுடியும்.

14. இது சம்பந்தமான பேச்சுக்களில் ஒரு தவறான கருத்து வெளியிடப்படுவதை இங்கே குறிப்பிடவேண்டும். ஆங்கில மொழி இடைநிலை மொழியாக இருப்பதைத் தவிர்த்து இந்திய மொழிகளைப் போதனா மொழிகளாக ஆக்குவதன் மூலம் விஞ்ஞான வளர்ச்சியைத் தவிர்த்து உலகத் தொடர்பு இல்லாமல் இந்தியாவை "மூடிவிடப் போவதாக" நினைப்பது பொறுத்தமற்ற ஒன்று. விஞ்ஞான, தொழில் நுட்ப - வளர்ச்சியினால் சமுதாயத்தில் ஏற்படும் மாறுதல்கள் உலகத்தை எவ்வளவு தூரம் பாதித்துள்ளன என்று அவற்றின் குறைவு நிறைவுகளை ஆராய்வதும் ; விஞ்ஞான வளர்ச்சி நம்முடைய பழைய பண்பாட்டோடும், ஒழுக்கங்களோடும் எப்படிப் பொருத்திக் காட்டப்படவேண்டும் என்பதும் முற்றிலும் வேறு பட்ட பிரச்னைகளாகும். இப்பிரச்னைகளில் எவ்வித மான முடிவுக்கு நாம் வந்தாலும் போதனா மொழி என்பது இது பற்றிக் கவலைப்படப் போவதில்லை. மேற்கத்திய விஞ்ஞான வளர்ச்சிக்கும் ஆங்கில மொழிக்கும் தொடர்பு இருந்தே தீரவேண்டும் என்று நினைக்கின்றவர்கள் தவறு செய்கின்றார்கள். மொழி என்பது "சாதனமே" தவிர "உட் பொருள்" அன்று. இவ்விரண்டையும் அவர்கள் குழப்புகின்றார்கள். சூழ்நிலையின் காரணமாகவே மேற்கத்திய அறிவு, ஆங்கில மொழி மூலமாக நமக்குக் கிடைத்தது. ஆனால் இந்த மொழிச் சாதனத்தைக் கொண்டே உலகின் ஏனைய பாகங்களுக்கு அது பரவிற்று என்று சொல்வதற்கில்லை. பிரஞ்சு, டச்சு, ஸ்பானிஷ் முதலிய மொழிகள் ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் அரசியல் அதிகாரம் பெற்றிருந்த வரையில் அவைகளின் மூலமாகவே அந்நாடுகளில் விஞ்ஞான அறிவு பரவிற்று. ஆனால் ஜப்பானை பொறுத்த மட்டில், ஜப்பானிய வாழ்வை வளம்படுத்தச் சென்ற இந்த மேற்கத்திய விஞ்ஞான அறிவு, ஜப்பானிய மொழி என்னும் "குழாய்" வழி சென்றதே தவிர, வெளி நாட்டு மொழிகளின் மூலமாக அல்ல. மேனாட்டில் வளர்ச்சி அடைந்துள்ள விஞ்ஞான, தொழில் நுட்பங்கள் ஆங்கில மொழியாகிய சாதனம் இல்லாவிட்டால் இந்தியாவிற்குள் வந்திருக்க முடியாது என்று நினைப்பதற்குக் காரணம் இல்லை. ஆங்கில ஆட்சியாளர்களின் கல்விக் கொள்கை வேறு விதமாக இருந்திருப்பின் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்திய மொழிகளின் மூலமே மேற்கத்திய விஞ்ஞான அறிவ இந்திய வாழ்வில் நுழைந்திருக்கும். சரித்திர மூலமான "இங்கிலாந்துத் தொடர்பு" இந்தியாவிற்கு ஏற்பட்டிராவிட்டாலும் கூட, இவ்வளவு பெரியதும், ஜனத்தொகை நிறைந்ததுமான இந்தியாவைப் போன்ற உப கண்டம் ஏனைய உலகின் தொடர்பற்று இருந்திருக்க முடியாது. ஆதலால்

தொழிற் புரட்சியும், விஞ்ஞான வளர்ச்சியும் எப்படியும் இந்த நாட்டிற்கு எட்டி இருக்கும். எனவே " ஆங்கில மொழி " என்றும், " புகை வண்டி " என்றும், " தந்தி " என்றும், " பாராளுமன்ற ஜனநாயகம் " என்றும் கூறி இவை எல்லாம் ஆங்கிலத்தின் தொடர்புடைய கூறுபாடுகள் என்றும் நினைப்பவர்கள் பிரச்னையைக் குழப்பிக் கொள்கிறார்கள்.

இதே முறையில் நம்முடைய பொது இடை நிலை மொழி உயர்தரக் கல்வியிலும் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலமாக இருக்கின்ற நிலைமை மாறின உடன் மேல் நாடுகளின் அறிவு வளர்ச்சியோடு நமக்குள்ள அன்றுடத் தொடர்பு அற்றே போய்விடும் என்று நினைக்கின்றவர்கள் தவறே செய்கின்றார்கள். நம்மைப் பொறுத்தவரையில் பல காரணங்களினால் மேற்கத்திய விஞ்ஞான அறிவை இறக்குமதி செய்கின்ற " குழாயாக " ஆங்கிலம் இருந்து வருவது இன்றியமையாததாக இருக்கலாம். அதனால் தான் யார்யாருக்கு இது தேவைப்படுகிறதோ அவர்களுக்கெல்லாம் ஆங்கில மொழியைப் புரிந்து கொள்கின்ற அளவுக்கு அதைக் கற்றுத்தரவேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். எனவே மொழி மாற்றத்தைப் பேசும்பொழுது இவ்வாறு செய்வது தற்கால விஞ்ஞான வளர்ச்சியிலிருந்து நம்மைத் தடுத்துப் பழைய இருண்ட காலத்திற்கு அழைத்துச் செல்வதாகும் என்று கூறிக் களேபரப்படுத்துவது உண்மையை வேண்டுமென்றே திருத்திச் சொல்வதாகும்.

15. தேசிய வாழ்க்கையில் " பொதுத்துறை " என்றும், ஓரளவு பொதுத்துறை என்றும் சொல்லப்படக்கூடிய கல்வித்துறை முதலியவற்றை மொழிப் பிரச்னை எவ்வாறு பாதிக்கும் என்பதை முன்னர்க் கூறினோம். இனித் தேசீய வாழ்க்கையின் " உள் துறையில் " எவ்வாறு இப்பிரச்னையின் முடிவு பாதிக்கும் என்பதை ஆராயவேண்டும். அகில இந்திய அளவிலும், ஒரே மொழி பேசப்படுகின்ற பிராந்திய அளவிலும் கூட, மக்கள் கூடும் பொழுது அவர்கள் உயர்தரக் கல்வி பெற்றவர்களாக இருந்தாலும், உயர்தர அதிகாரம் செலுத்தப்படுகின்ற நிலையிலும் அரசியலிலும் பல்வேறு தொழில் துறைகளிலும் ஏன் ? பொது வாழ்விலுங்கூட ஆங்கிலமே வழங்கப்பட்டு வந்தது. பொதுத் துறையில் ஆங்கிலத்தை நீக்கி விடுவதால் மட்டும் போதாது. உள் துறையிலுங்கூட தேசத்திற்கு ஒரு பொது இடைநிலை மொழி வேண்டும். இந்த இடத்திலுங்கூட ஆங்கிலத்தின் வாரிசாக யூனியன் மொழி வந்துவிடும் என்று நினைப்பதற்கில்லை. பிராந்தியங்களில் அந்தந்தத் துறைக்கு ஏற்பப் பிராந்திய மொழிகளே வாரிசாக வரும்.

எவ்வாறுயினும் தேசத்தின் ஆட்சித் துறையில் ஆங்கிலத்தின் இடத்தில் ஓர் இந்திய இடை நிலை மொழி வேண்டும் என்ற அளவிலேயே அரசியலமைப்பு நிறுத்திக் கொள்கிறது. கல்வித் துறை, அரசியலமைப்பில் சொல்லப்பட்ட ஆட்சித் துறைக்குப் புறம்பானதாக இருப்பினும், நீதி மன்றங்கள் முதலான வற்றில் பயன் படுத்தப்படுகின்ற இடைநிலை மொழி ஆட்சித் துறையோடும் பல்கலைக் கழகங்களில் போதனா மொழியாகவுள்ள மொழியோடும் மிகவும் தொடர்பு கொண்டதாக இருக்குமாதலால் கல்வித் துறையில் நம்முடைய மொழிக் கொள்கை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை மேலும் விரிவாக ஆராய நேரிடும். இதுவரையில் எவ்வாறுயினும், தேச வாழ்வில் முற்றிலும் உள் துறையாகிய பத்திரிகைகளின் மொழி, தொழில், வாணிகம் என்பவற்றில் வழங்கப்படுகின்ற மொழி, இலக்கியங்கள் தோன்றுகின்ற மொழி அல்லது மொழிகள், சினிமாப் படங்களில் பயன் படுத்தப்படுகின்ற மொழி ஆகிய இவை அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டது ஆதலால் எந்த ஒரு மொழிக் கொள்கையையும் திட்டம் செய்து வரையறுத்தல் என்பது இயலாத காரியம். இந்தத் துறைகளில் வெவ்வேறு மொழிகளுக்குள் தோன்றுகின்ற பிரச்னைகள் இந்த சக்திகள் ஒன்றோடொன்று மோதி விளைகின்ற பயனாக அமையட்டும் என்று விட்டுவிடுவது சிறந்ததாகும். இந்தத் துறைகளில் இறுதியாக அமையப்போகின்ற மொழிச் சமநிலை இந்தியா முழுவதற்கும் கருத்துப்

பரிமாறிக்கொள்ள ஒரு மொழி தேவையா என்பதையும், தேசத்தின் மொழிப் படத்தில் ஹிந்தி மொழி எவ்வளவு தூரம் இடம் பெறும் என்பதையும் ஒருவாறு அறிவிக்கும் என்று எண்ணலாம். அரசியலமைப்பின் ஏற்பாடுகள், யூனியன் ஆட்சி மொழி, ராஜ்யங்களுக்குள் கருத்துப் பரிமாறுகின்ற மொழி, யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையே தேவைப்படுகின்ற மொழி என்பவை பற்றியே தவிர வேறில்லை.

இவ்வாறு சொல்வதால் தேசிய மொழிக் கொள்கையின் நிறைவேற்றத்தில் "தேசவாழ்க்கையின் உள் துறையின்" இன்றியமையாமையை குறைத்து மதிப்பிட்டுவிட்டோம் என்பது கருத்தில்லை. நம்முடைய கருத்து முற்றிலும் வேறானது. இந்தத் துறையின் மொழிக் கொள்கை எங்ஙனம் வளர்ச்சி அடைய வேண்டும் என்பது, மக்கள் தாங்களே தேர்ந்தெடுக்கும் வகையைப் பொறுத்தது ஆதலால் அரசியலமைப்பு இதில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்கிறது.

ஆங்கில செய்தித்தாள்கள் இப்பொழுது அகில இந்திய விளம்பரத்திற்குக் காரணமாக உள்ளன. இந்திய மொழிப் பத்திரிகை வளர்ச்சி உறுதியாக ஏற்படும் பொழுது யூனியன் மொழிப் பத்திரிகைகள் வெளி வந்து ஆங்கிலப் பத்திரிகைகளின் வளர்ச்சியைக் குறைக்குமா குறைக்காதா என்ற கேள்வி தேசத்தின் ஒற்றுமையையும், நலனையும் பெரிதும் பாதிக்கக் கூடியது ஒன்றாகும். எவ்வாறாயினும் மக்களின் விருப்பம் தானே ஒரு முழு வளர்ச்சியை அடைந்து ஒரு வழியை வகுத்துக் கொள்ள வேண்டுமே தவிர அரசியல் குறுக்கீட்டுக்கோ சட்டம் செய்வதற்கோ இது ஏற்ற துறையன்று. ராஜ்யங்களுக்குள் நடைபெறுகின்ற வாணிக, வியாபாரங்களுக்கு எந்த மொழி பயன் படக்கூடும்? வாணிபமும் தொழிலும் வளர்ச்சி அடைய, அதனால் பெருவாரியான அளவில் ஏற்படப் போகின்ற மக்கள் குடியேற்றம் ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொரு பிராந்தியத்துக்கு நடைபெறும்பொழுது எது இடைநிலை மொழியாக அமையும்? பிற பிராந்தியங்களிலிருந்து வந்து குடியேறிய மக்கள் தங்களுக்குள் பொது மொழியாக ஹிந்தியை அமைத்துக் கொள்ளமாட்டார்களா? சினிமாப் படங்களும், அவை போன்ற பிறவும் பல பிராந்திய மக்களை வைத்து வேலை வாங்குகின்ற பெரிய தொழிற்சாலைகளும், அகில இந்தியாவிலும் வாணிகஞ் செய்கின்ற அலுவலகங்களும், எந்த மொழியைக் கைக்கொள்ளும்? சினிமாப் படங்களைப் பொறுத்தவரையில் ஒரு பிராந்தியத்திற்கு மட்டும் பயன் படுகின்ற பழக்கம் இல்லை யாதலால் அகில இந்தியாவுக்கும் பயன் படுகின்ற அளவில் ஒரு மொழியை அது கைக்கொள்ளும் என்று நினைக்கலாம். மத்தியப் படத்தணிக்கைக் கழகத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ள புள்ளி விவரங்களின்படி 2,835–35 மில்லி மீட்டர் படங்களும், 236—16 மில்லி மீட்டர் படங்களும், 15—1—1951 முதல் 31—12—1955 வரை உள்ள ஐந்து வருஷங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் 1,597—35 மில்லி மீட்டர் படங்களும், 129—16 மில்லி மீட்டர் படங்களும் ஹிந்தி மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனைய எல்லா மொழிகளுக்கும் சேர்ந்து மீதியுள்ள படங்களின் எண்ணிக்கை ஆகும். இதே காலத்தில் 644—35 மில்லி மீட்டர் படங்களும், 119—16 மில்லி மீட்டர் படங்களும் ஆங்கில மொழியில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. எண்ணிக்கையால் இவ்வளவு அதிகமாக உள்ள ஹிந்திப் படங்களில் பெரும் பகுதி பூகோள முறையில் ஹிந்தி பேசப்படாத பிராந்தியங்களிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன என்பதும் அறியப்படவேண்டிய ஒன்று. நாட்டின் போக்கு வரத்து மிகுதிப் படவே ஹிந்தியின் தேவை மிகுதிப்பட்டு அந்தத் தேவையை பூர்த்தி செய்கின்ற முறையில் வளர்ச்சித் துறை ஏற்படாதா என்பது ஆராய்வதற்குரியது. ஒருவருடைய மொழியைப் பிறர் புரிந்து கொள்கின்ற பல மொழி அறிவு என்பது எவ்வளவு தூரம் ஹிந்தி பொது மொழியாகும் இயல்புக்குத் துணை செய்யும் அல்லது அதற்குப் பதிலாக இருக்கும் என்பதும் ஆராயப்படவேண்டிய ஒன்று. இவ் விஷயங்களெல்லாம், மிகவும் இன்றியமையாதனவாயும், நம்முடைய கவனத்தைக் கவரக்கூடியனவாயும் இருந்தாலும் அரசாங்கத்தின் செயல்களுக்கு அப்பாற்பட்டவையாகும்.

“ஹிந்தித் திணிப்பு” என்ற தவறான கூக்குரலை எழுப்புகின்றவர்களுக்கு விடைகூறு முகமாக ஒன்று சொல்ல விரும்புகிறோம். அரசியலமைப்பின் ஏற்பாடுகள் ஆட்சி விஷயங்களில் ஒவ்வொரு துறையையும் பொறுத்தமட்டில் எவ்வளவு **குறைந்த** அளவுக்குத் தேவை என்பதையே பேசுகறது. மற்றவற்றைப் பொறுத்த மட்டில் எல்லா மொழிகளும் வளர்ச்சி அடைந்து தம்தமக்கு உரிய இடங்களில் சுதந்திரமான முறையில் தேசத்தின் மொழி அமைப்பை வளங்கச் செய்யலாம். எங்களைப் பொறுத்த மட்டில் அரசியலமைப்பின் ஏற்பாட்டில் ஆட்சித் துறைகளுக்கு மொழிப் பிரச்னையை முடிவு செய்ய எவ்வளவு தேவையோ அந்த அளவில் நிறுத்திக் கொண்டிருக்கிறோம். இதற் கப்பால் கல்வித் துறையில் இந்திய மொழிகள் அடைந்திருக்க வேணடிய, ஆனால் இதுவரை அடையாத வளர்ச்சியைப் பற்றியும் வழி துறைகளைக் காட்டியிருககிறோம். மீதமுள்ள துறைகளில் இயற்கைச் சக்திகள் தாமே ஒரு முடிவுக்கு வரவேண்டும். இன்றியமையாத இந்தத் தேவைகள் தவிர அரசியலமைப்புக் கூறும் “மொழிகளின் ஜனநாயகம்” என்பதை நாங்கள் முழு மனத்துடன் ஏற்றுக்கொள்கிறோம். இதன்படி ஆங்கிலம் உள்ளிட்ட எல்லா மொழிகளும் நாட்டின் தேசிய வாழ்வில் தத்தமக்குரிய இடத்தைப் பெறும்.

இந்தியக் கூட்டமைப்பில் பல பகுதிகளுக்குள்ளும் ஏற்பட வேண்டிய சில அரசியல் தொடர்புகள் பற்றியும் இந்திய அரசியலமைப்புப் பேசுகிறது. இந்தப் பகுதிகள் ஏறத்தாழ ஒரு மொழி பேசும் பிராந்தியங்களாகப் பிரிந்து அமைய வேண்டும். பிரதம மந்திரி அவர்கள் கூறும் “உணர்ச்சிப் பூரணத்துவத்திற்கு” இந்தச் சூழ்நிலைகள் அதிகப்படியான தேவையை உண்டாக்குகின்றன. என்றாலும் மன ஒற்றுமையை உண்டாக்குவதைக் காட்டிலும் அரசியல் ஒற்றுமையை உண்டாக்கும் காரியம் மிகவும் எளிதானது. இந்தக் கழகம் அமைக்கப்பட்டதன் காரியம் அரசியல் அமைப்பில் கூறப்பட்ட அரசியல் ஒற்றுமை உண்டாவதற்கு உள்ள மொழித் தேவைகளைப் பூர்த்தி செய்வதே யாகும். மன ஒற்றுமை உண்டாவதற்கு மொழியின் உதவி எவ்வளவு தேவையோ அந்தத் தேவையை அறிந்து பூர்த்தி செய்ய, பண்டிதர்களும், கலைஞர்களும் பல பிராந்தியங்களிலுள்ள தலைவர்களும், முயல வேண்டும். சந்தேகத்திற்கு இடமின்றி அவர்கள்தாம் நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் “ஒருவருக்கொருவர் சோதரர்” என்ற எண்ணத்தை இந்நாட்டுப் பொது மக்களிடையே, இவ்வெண்ணம் எவ்வளவு பரவியிருந்தபோதிலும், இவர்கள் எந்த மொழிகளைப் பேசினாலும், மேலும் வளர்க்க முயலவேண்டும்.

16. அகில உலக (பன்னாட்டு) தொடர்புக்கு ஆங்கில மொழியின் உபயோகத்தைப் பற்றி எழும் கேள்விக்கு விடை எளிதாகக் கூறிவிடலாம். இந்நிலையில் இடைநிலை மொழியின் இடம் யாது என்பது பற்றி எவ்விதமான ஐயமும் தேவையில்லை. உலக இனத்தார்களுக்குள் நாம் இன்று பெற்றிருக்கின்ற மிக உயர்ந்த இடம் எதனால் வந்தது ? அகில உலகப் பிரச்னைகளில் நடு நிலைமையோடு நாம் நுழைந்து சகிப்புத் தன்மை, அமைதியோடு சேர்ந்து வாழுதல் ஆகிய கருத்துக்களை, நம்முடைய பண்பாட்டின் காரணமாக நாம் பெற்ற இவற்றை, பிறருக்கு எடுத்துச் சொல்வதனாலும்தான் இந்நிலைமையை நாம் அடைந்துள்ளோம். எல்லா அகில உலகப் பிரச்னைகளைப பொறுத்த மட்டிலும் நாம் மேற்கொள்ளும் கட்சியின் இயல்பு மேலே கூறியனவாகவே உள்ளன. என்றாலும் நம்முடைய நாட்டின் பிரதிநிதிகள் அகில **உலக** மகா நாடுகளில் நல்ல முறையில் ஆங்கிலத்தைப் பேசுவதே நலமென்று கருதுகிறோம். இந்த மாநாடுகளில் அதிகம் பேசப்படுகின்ற இரண்டு மூன்று மொழிகளில் ஆங்கிலமும் ஒன்று. ஒரே நேரத்தில் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கக்கூடிய வசதிகளை இத்தகைய மகா நாடுகளிலும், குழுக்களிலும் செய்து தருகின்றார்கள் என்றாலும், மாநாடுகளில் பங்கெடுத்துக் கொள்கிறவர்கள் பெரும்பாலான மக்களுக்கு நேரடியாகப் புரியக்கூடிய ஒரு மொழியில் பேசுவதற்கு, இம்மொழி பெயர்ப்பு முறை ஈடாகாது. இங்ஙனம் அகில உலக மாநாடுகளில் பங்கு கொள்ள வேண்டிய கடப்பாடு உடையவர்கள் ஆங்கில மொழியைப்

பேசும் சக்தியையும், அதனை வளர்த்துக் கொள்ளும் சக்தியையும் பெறுவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. வழக்கமாக இத்தகைய மாநாடுகளில் பங்கு கொள்கின்ற சிலரைத் தவிர ஒரொரு சந்தர்ப்பங்களில் இவற்றில் பங்கு கொள்ள வேண்டியவர்களும் சிலர் இருக்கலாம். மேற்படிப்பைப் பொறுத்தமட்டில் நாம் அமைக்க விரும்புகின்ற அமைப்பு முறையில் இங்ஙனம் ஒரொரு முறை அகில உலகக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய கட்டுப்பாடு உடையவர்களும் ஆங்கில மொழியில் தக்க பயிற்சி பெற்றவர்களாக அமைய இடமுண்டு. இஃது எவ்வாறிருப்பினும் இந்தப் பிரச்னை மிகச் சிறுபான்மையோருக்கே தவிர அனைவருக்கும் அன்று. இந்தச் சிறுபான்மையோரின் வசதிக்காகப் பொதுவாகவே போதனை மொழி இதுவாக இருக்கவேண்டும் என்று சொல்வதும், ஆட்சி மொழி இதுவாக இருக்கவேண்டும் என்று சொல்வதும் நியாயமானதன்று.

17. இதுவரைக் கூறப்பெற்றவற்றிலிருந்து ஏற்படுகின்ற முடிவு என்னவெனில் பல்வேறு காரணங்களால் ஆங்கில மொழி இன்றைய சூழ்நிலையில் ஆட்சிபீடத்திலிருந்து மெள்ள இறங்கவும், பிராந்திய மொழிகள் அவற்றின் முழு வளர்ச்சியை பெறவும் வேண்டும் என்பதுதான். ராஜ்யப் புனரமைப்பு, மொழி அடிப்படையில் நடைபெறுவது இப்பிராந்திய மொழி வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாகும். இதுவரை மறுக்கப்பட்ட இம்மொழி வளர்ச்சி இனி நன்கு நடைபெறலாம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரை தமிழ் மொழியை, கல்வித் துறையிலும், ஆட்சித் துறையிலும் பயன் படுத்தும் முறை வேகமாக இதுவரை நடைபெறவில்லை[1]. பல்வேறு காரணங்களுள் புனரமைப்பு செய்யப்பட்ட ராஜ்ய முறை இதுவரையில் அங்கு சரியாகக் கால் கொள்ளாததும் ஒரு காரணமாகும்[1] இது சம்பந்தமாகச் சென்னை அரசாங்கத்தார் கல்லூரித் தலைவர்களையும், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களையும், ஏனைய கல்வி அதிகாரிகளையும், கல்வியில் அக்கறை கொண்டுள்ளவர்களையும், கொண்ட ஒரு கூட்டம் கூட்டிப் பிராந்திய மொழியின் மூலமே கல்வி புகட்டப்படவேண்டும் என்ற முடிவுக்கு வந்ததென்றும், அதற்காக ஒரு வல்லுநர் குழுவை அமைத்து எவ்வாறு இதனைச் செய்யலாம் என்பதை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்ல அமைத்துள்ளது என்றும் தெரிவித்திருக்கிறது. மாற்றத்தால் உண்டாகும் தொல்லைகள் நீங்கியவுடன் ஆட்சித் துறை, கல்வித் துறை ஆகிய துறைகளில் பிராந்திய மொழியின் முன்னேற்றம் மிக விரைவாக இருக்கும் என்பதில் நமக்குச் சிறிதும் ஐயமில்லை.

விதிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிகமான துறைகளில் புகுந்துள்ள ஆங்கிலம் நாட்டின் பிராந்திய மொழிகளால் நீக்கப்பட்ட பிறகு, ஒரு பொது இடைநிலை மொழியின் தேவை மிகுதிப்படும். ஏனென்றால் ஆங்கிலம் இருந்த இடத்திலிருந்து நீக்கப்படுவதால் பொது இடைநிலை மொழியின் தேவையை அது பூர்த்தி செய்ய முடியாது. இந்த இடத்தில் தான் ஹிந்தியை யூனியன் மொழியாக ஏற்பதின் அவசியம் ஏற்படுகிறது. ஹிந்தியை ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் “ திணித்தல் ” என்று தவருகப் பேசப்படுவது பிரச்னையில்லை ; அது என்றும் பிரச்னையாக இருக்க முடியாது. பிராந்திய மொழிகள் பலவற்றைப் பேசுகின்ற இந்தியாவின் ஜனத்தொகையில் ஹிந்தி மொழி பேசுகின்றவர்கள் தனிப்பட்ட முறையில் அதிகமானவர்கள் என்றாலும், மொத்த ஜனத்தொகையில் 42 சதவிகிதமே இருத்தலினால் சிறு பான்மையினரே ஆவர். ஆங்கில ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளைப் பேசுவோர்களில் 46 சத விகிதமே ஆவர். மேலே கூறிய காரணங்களினால் நாட்டின் பொது மொழியாக ஆங்கிலம் இருக்க முடியாது என்றால், அந்த இடத்தை ஒரு இந்திய மொழி பெறவேண்டும் என்றால், அது ஹிந்தியைத் தவிர வேறொன்றாக இருக்க முடியாது. இந்த மொழியை வளர்க்க வேண்டிய இன்றியமையாமையை, (எல்லாப் பிராந்திய மொழிகளும், வளரவேண்டிய அவசியம் போல) உணர்ந்த அரசியலமைப்பு அதற்குரிய துறையில் யூனியன் மொழியாக ஹிந்தி மொழி ஏற்படும் என்றும், மொழி மாற்ற காலத்தில் இதன்

[1] இதுபற்றிய முழு விவாதத்தைப் பகுதி எட்டு, பரிவு இரண்டில் காண்க.

வளர்ச்சியைப்பற்றிக் கவனிக்கவேண்டும் என்றும் கூறுகிறது. இந்த நாட்டின் பல் வேறு மொழிகளின் நிலைமைக்கு ஏற்ற வழியில், பல லக்ஷக்கணக்கான ஹிந்தி பேசாத ஜனத்தொகைக்கும் ஏற்ற முறையில், யூனியன் மொழியாகிய ஹிந்தியை வளர்த்து வளம்படுத்த வேண்டும். இதனைக் வளர்க்கின்ற முறையில் மற்றவற்றிற்கு ஏற்படுகின்ற பாதகங்களைக் கவனித்து நீக்குவதற்காக, ஹிந்தியை ஆட்சி மொழியாக்கும் சிபார்சுகளை செய்ய வேண்டி அமைக்கப்பட்ட இது போன்ற கழகங்கள் கவனிக்க வேண்டிய காரியங்கள் சில உள. ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ள மக்களின் நியாயமான கோரிக்கைகள், தேவைகள், பொதுப் பணியில் ஈடுபடுவதற்கு இம் மொழிப் பிரச்னையின் சாதக பாதகங்கள் என்பவற்றைக் கவனிப்பதோடு ஆங்கிலத்தை உடனடியாக நீக்கி அதனால் கோளாறுகளை விளைவிக்காமல இந்திய நாட்டின் தொழில் துறை, பண்பாட்டுத் துறை, விஞ்ஞான முன்னேற்றம் ஆகியவற்றையும் கண்காணித்துச் சிபார்சுகள் செய்ய வேண்டும். இந்தப் பாதுகாவல்கள், தேசத்தின் நலனையும், கவனித்து ஜனத்தொகையின் ஒரு சில பகுதிக்கும் பாதகம் விளையாதபடி பாதுகாப்பதற்கேயாகும்.

யூனியன் ஆட்சித் தேவைகளுக்கு ஒரு பொது மொழி தேவையாகையால் (ஆட்சித் துறை அல்லாத பகுதிகளில் ஒருவர் எத்தகைய கொள்கையை மேற் கொண்டாலும் சரி) ஹிந்தி மொழியை இதற்கு மேற்கொள்வது தேசத்தின் அரசியல் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கும், நேர்மையைப் பாதுகாப்பதற்கும் தேவைப்படுவதாகும். இம்மொழியைக் கைக்கொள்வது இதனைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு அதிக உழைப்பை உண்டாக்கும். இந்த உழைப்பைக் குறைப்பதற்கும், போக்குவதற்கும் இயன்றவற்றையெல்லாம் செய்த பிறகும்கூட மேற் கொண்டும் உழைப்பு இருக்குமேயானால் நேரடியாக தேசத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்கு அந்த உழைப்புத் தேவை என்றே கொள்ளவேண்டும். நம்முடைய அரசியல் வாழ்க்கையில் குறிப்பிட்ட பிராந்தியங்கள், உள்ளதும் இல்லாததுமான குறைகளை எடுத்துச் சொல்லி எவ்வளவு சலுகைகளைக் கேட்டாலும், அந்தச் சலுகைகளை நிறைவேற்றுவது, விட்டுவிடுவது என்பது பற்றிய கருத்து வேறுபாடுகள் இருப்பினும் ஒரு பொது மொழி தேவை என்பதும், அது ஹிந்தியாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் மறுக்க முடியாதவை. கொண்டு செலுத்த வேண்டிய முறையில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். கொண்டு செலுத்த வேண்டிய காலம் பற்றியும், அதனுடைய பயன் பற்றியும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாமென்றாலும் இந்தக் கொள்கையைப் பொறுத்தமட்டில் கருத்து வேறுபாடு இருப்பதற்கில்லை. தேசத்தின் அரசியலமைப்பையும், அரசியல் வடிவத்தையும் ஒப்புக்கொள்வதானால் ஹிந்தியை அரசியல் மொழியாக ஆக்குவது பற்றியும் அதனை கொண்டு செலுத்த வேண்டிய வழி துறைகள் பற்றியும், கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இந்த உண்மை நிலை மக்களால் அறியப்படுகின்ற நிலைமை வரும்பொழுது அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளில் மொழிக் கொள்கைகள் பற்றிச் சொல்லப்பட்டவற்றைத் தேசத்தின் எல்லா மக்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

18. இப்பகுதியின் நாலவது பிரிவில் 1951-ம் வருஷ ஜனக்கணக்குப்படி கற்றவர்கள் என்று கணக்கிடப்படும் 16·6 சத விகிதத்தில் ஆங்கிலம் கற்றவரின் எண்ணிக்கை ஒரு சத விகிதம்தான் என்பது எடுத்துச் சொல்லப்பட்டது. இந்தியா முழுவதற்கும் ஆங்கிலத்தைப் பொது மொழியாகக் கொள்ளலாமா என்பது பற்றியே இந்தப் புள்ளி விவரம் தரப்பட்டது. சில சமயங்களில் தேச முழுவதையும் எடுத்துக் கொண்டால் இந்தப் புள்ளி விவரம் சரிதான் என்றும், சில பிராந்தியங்களில், சிறப்பாக தென்னிந்தியாவில் ஆங்கிலம் கற்றவரின் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும் என்றும், ஆங்கிலத்தைப் பொது மொழியாக வைப்பதற்கு ஏற்றதாக இருக்கும் என்றும், சிலர் கருதுகிறார்கள். பிற் சேர்க்கை 12-ல் "ஆங்கிலக் கல்வியறிவு" என்ற தலைப்பில் ஒரு அட்டவணை தரப்பட்டுள்ளது. அதில்

ஒவ்வொரு ராஜ்யத்திலும் கல்வி அறிவு பெற்றவரின் எண்ணிக்கை தரப் பட்டுள்ளதாதலால், பல்வேறு பிராந்தியங்களில் நிலைமையை அறிந்து கொள்ள உதவுகிறது.

இந்த அட்டவணையிலிருந்து "ஆங்கிலக் கல்வியறிவு பெற்றவர்" எண்ணிக்கை பொதுக் கல்வியறிவு பெற்றவர் எண்ணிக்கையோடு ஒப்பு நோக்கப் பல பிராந்தியங்களில் சிறு சிறு வேறுபாட்டுடன் காணப்படுகிறதே யன்றிக் "ஆங்கிலக் கல்வியறிவு" பெற்றவர் எண்ணிக்கை தென்னாட்டி லுள்ள நான்கு பிராந்தியங்களில் எந்தப் பிராந்தியத்திலும் மிக அதிகமாக உள்ளது என்று சொல்ல முடியாது.

தென்னிந்தியா முழுவதிலுங்கூட நிலைமை இப்படித்தான். பல பிராந் தியங்களில், உதாரணத்திற்குப் பொருத்தமில்லாத நகரங்களைத் தவிர, 1951 ஜனக்கணிதப்படி ஆங்கிலம் கற்றவர்களின் எண்ணிக்கையைவிட, கற்றவர்களின் எண்ணிக்கை 15 முதல் 20 மடங்கு அதிகம் என்று தெரி கிறது. எனவே நாடு முழுவதற்கும் இல்லாவிட்டாலும் சில பிராந்தியங் களுக்காவது ஆங்கிலம் பொது மக்கள் மொழியாக இருக்கலாம் என்று கருதுவதற்குக் காரணமே இல்லை. பொது மக்கள் கல்வி அறிவு மேலும் மேலும் வளர்ச்சி அடைய அடைய அந்த வளர்ச்சி பிராந்திய மொழியி லும், சில சமயங்களில் யூனியன் மொழியிலுந்தான் இருக்க முடியுமே தவிர, நிச்சயமாக ஆங்கிலத்தில் இருக்க முடியாது. ஆதலால் இந்த ஆங்கிலம் கற்றவரின் எண்ணிக்கை மொத்த எண்ணிக்கையோடு ஒப்பு நோக்க மிகவும் குறைவாகவே கருதப்படும்.

கடைசியாக யூனியன் மொழியாகிய ஹிந்தி மொழி வழங்கப்படும் அளவு இப்பொழுது ஆங்கில மொழி வழங்கப்படும் அளவைவிட மிகுதியாக இருக்குமா, குறைவாக இருக்குமா என்ற ஒரு வினா எழுப்பப்படுகிறது. ஆனால், நாங்கள், ஹிந்தி மொழியானது எல்லாத் துறையிலும் ஆங்கிலத் தின் வாரிசாக நுழையாது என்றும், சில துறைகளில் பிராந்திய மொழி கள் ஆங்கிலத்தின் வாரிசாக அமையும் என்றும், விஞ்ஞான, ஆராய்ச்சித் துறை போன்ற பகுதிகளில் ஆங்கிலமே தொடர்ந்து இருந்துவரும் என்றும் முன்னமே விவாதித்திருக்கிறோம். எனவே இந்த வகையில் யூனியன் மொழியாகிய ஹிந்தி மொழியின் உபயோகம் ஆங்கிலத்தைவிடச் சிறிய தாகவே இருக்கும். ஆனால் மற்றொரு வகையில் ஆங்கிலம் என்றுமே இருந்திராத, இருந்திருக்க முடியாத அளவுக்கு முக்கியமானதும், பெரி யதுமான ஓர் இடத்தை நாட்டின் அரசியல் வாழ்வில் ஹிந்தி மொழி பெற்றுவிடும். ஜனத்தொகையில் ஒரு சத விகிதத்திற்கும் மேற்படாதவர் கள்தாம் ஆங்கிலத்தில் போதிய அறிவு பெற்றிருந்தார்கள். நாங்கள் எதிர்ப்பார்க்கின்ற அமைப்பில் அனைவருக்கும் இலவச, கட்டாய, ஆரம்பக் கல்வி அளிக்கப்படும் நேரத்தில் ஓரளவு நிலை பெற்ற ஹிந்திக் கல்வி அறிவைப் பெற்றுவிடுவார்கள். அகையால் இந்தப் பரந்த உபகண்டத்தின் எல்லா மக்களுக்கும் பரந்து விரிந்து பயன்படுவதால் ஹிந்தி மொழி யானது மக்களுடைய தேசிய வாழ்வில் ஆங்கிலம் என்றுமே அடைய முடியாத இடத்தைப் பெற முடியும். உண்மையைக் கூறுமிடத்து இன்று ஆங்கிலம் பயன்படுகின்ற அளவையும் எதிர் காலத்தில் ஹிந்தி பயன்படப் போகின்ற அளவையும், ஒப்பிட்டுப் பார்க்கவே கூடாது. ஏனென்றால் இரண்டு மொழிகளும் இரண்டு வேறுபட்ட நிலைகளில் தொழிற்படுவனவாம்.

19. ஏனைய பல்வேறு மொழி பேசுகின்றவர்கள் அம்மொழிகளை அர சியல் அமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் சேர்க்கவேண்டும் என்று கோரினதை நாங்கள் அறிவோம். சிந்தி மொழி பேசுகின்றவர்களாலும், இவ்வித கோரிக்கை செய்யப்பட்டது. ஆங்கிலத்தைத் தாய் மொழியாக உடையவர்களும் இவ்விதம் கோரினார்கள்.

அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூல் அந்த அமைப்பின் 344 (1) விதியின்படி அமைக்கப்பட்டதாகும். அந்த விதியின்படி அரசியலமைப் புத் தொடங்கிய ஐந்து ஆண்டுகளின் முடிவிலும், பத்து ஆண்டுகளின் முடிவிலும் கழகங்கள் நியமிக்கப்படவேண்டும். மேலும் 351-வது விதி,

ஹிந்துஸ்தானி மொழியின் வடிவங்களையும், நடையையும், சொல் ஆட்சியையும், ஜீரணித்து ஹிந்தி மொழியை வளப்படுதத வேண்டும் என்றும், இதே முறையில் ஷெட்யூலில் குறிக்கப்பட்ட மொழிகளின் வடிவம், நடை, சொல் ஆட்சி இவைகளையும் ஜீரணித்து ஹிந்தி மொழியை வளம்படுத்த வேண்டும் எனறும் வகுகிறது. இதையல்லாமல் எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்ட எந்த மொழிக்கும் தனிப்பட்ட சிறப்போ, உரிமையோ, உத்திரவாதமோ அளிக்கப்படவில்லை. அரசியலமைப்பில் மொழிகளைக் குறித்துச் சொல்லப்பட்ட எல்லா அரசியல் சலுகைகளும் எட்டாவது ஷெட்யூலில் சேராத மொழிகளுக்கும், சேர்ந்த மொழிகளுக்கும் பொதுவாகவே உள்ளன. இவ்விதம் கோரப்படுவதன் காரணம், ஒரு மொழி எட்டாவது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டால் அதற்கு ஏற்படுவதாகக் கருதப்பட்ட "கௌரவம்" ஆகவே, இருக்கலாமென்று நினைக்க இடமுண்டு.

1951 ஜனக் கணக்குப்படி சிந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர் எண்ணிக்கை 7,45,434. ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்டவர் எண்ணிக்கை 1,71,742. 1951 ஜனக் கணக்கு 23 மலைஜாதி மொழிகளையும் (கிளை மொழிகள்) 24 மற்ற மொழிகளையும், (கிளை மொழிகள்), குறிப்பதோடு சிந்தி மொழியையும் சேர்த்து இவற்றைப் பேசுபவரின் எண்ணிக்கையாக ஒரு லக்ஷத்துச் சொச்சம் என்று குறிக்கிறது. மேலும் ஆங்கிலம் உள்பட 63 வேற்று நாட்டு மொழிகளையும் அது குறிக்கிறது. எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்ட மொழிகளை அல்லாமல் வேறு மொழிகளையும் அதனுள் சேர்க்கவேண்டுமா என்பது பற்றிய ஆராய்ச்சி எங்களைக் கோரப்பட்ட வினாக்களுள் ஒன்றன்று. மேலும் எங்களுடைய கடமையை முடிக்கிற அந்த நேரத்தில்தான் சிந்தி, ஆங்கில மொழிகள் பற்றிய இந்தப் பிரச்னை எழுப்பப்பெற்றது. ஆதலால் இதுபற்றி நாங்கள் சான்றுகள் ஒன்றும் சேகரிக்கவில்லை. எனவே, இந்த, மொழிகளை எட்டாவது ஷெட்யூலில் சேர்ப்பது நியாயமா என்ற கோரிக்கை பற்றித் தெரிவிப்பதற்கு எங்களுக்கு ஒருவித அபிப்பிராயமும் இல்லை [1].

இந்தச் சந்தர்ப்பத்தில் ஆங்கில மொழியைப் பொறுத்த மட்டிலும் எட்டாவது ஷெட்யூலில் அது சேர்க்கப்படாவிட்டாலும், அவசியமான பொழுதும் விரும்பப்பட்ட பொழுதும், ஆங்கிலச் சொற்களை ஹிந்தியில் சேர்த்துக் கொள்வதற்கு எவ்விதத் தடையும் இல்லை என்பதைத் தெரிவிக்கவேண்டும். அரசியலமைப்பின் 351-வது விதியைச் சரியாகப் புரிந்து கொண்டால் நிலைமை நன்கு விளங்கும். அந்த விதியை மட்டும் சரிபார்ப்பதற்காக இங்கே அப்படியே எடுத்து எழுதுகிறோம்.

> "351. ஹிந்தி மொழியை வளர்த்துப் பரவச் செய்ய வேண்டியது யூனியனின் கடமையாகும். இந்தியாவின் கலப்புப் பண்பாட்டை வெளியிடக்கூடிய சாதனமாக அது வளர்க்கப்பட வேண்டும். அதனுடைய வளர்ச்சியைக் கருதி, அதனுடைய மரபுக்கு மாறுபடாமல் ஹிந்துஸ்தானியிலும், எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பெற்ற இந்திய மொழிகளிலிருந்து வடிவங்களையும், நடைகளையும், சொல்லாட்சிகளையும் சேர்த்துக் கொண்டு ஹிந்தி மொழியை வளம்படுத்துவதோடு தேவையும், விருப்பமும் இருக்கின்ற இடத்தில் அதனுடைய நெடுங்கணக்கில் முக்கியமாக வட மொழியிலிருந்தும் அடுத்தபடியாக மற்ற மொழிகளிலிருந்தும் வேண்டுமானவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்".

---

1. —டாக்டர் ஆர். பி. திருபாதி அவர்கள் ஆங்கிலத்தை எட்டாவது ஷெட்யூலில் சேர்க்க வேண்டும் என்ற தம் கருத்தை நாங்கள் குறித்துக்கொள்ள விரும்பினார். ஏனென்றால் எட்டாவது ஷெட்யூலில் இந்திய மொழிகள் என்றே சொல்லப்படுகிறது. இந்திய மொழிகள் என்றால் இந்தியாவில் வழங்கும் மொழிகள் என்றும் பொருள் கொள்ளலாம், ஆதலாலும், இந்தியாவில் தோன்றிய மொழிகள் என்றே பொருள் கொள்ளவேண்டிய அவசியம் இல்லையாதலாலும் அவர் இங்ஙனம் கூறினார். ஷெட்யூலில் ஆங்கிலத்தைச் சேர்ப்பதன் மூலம் இந்தியாவிலுள்ள ஆங்கிலம் பேசுகின்ற இனத்தாருக்கு ஒரு ஊக்கத்தைத் தரமுடியும் மேலும் இந்தியக் கிருஸ்துவர்களுடைய சமய நூல்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே உள்ளன. ஆங்கிலத்தை ஷெட்யூலில் சேர்ப்பதன் மூலம் நாட்டின் பிராந்திய மொழிகளுக்கு எவ்வித தீமையும் நேராது என்ற தம் கருத்தையும் இங்கே குறிக்க டாக்டர் திருபாதி விரும்பினார்.

இந்த விதியின் ஏற்பாடுகளைக் கீழ் கண்ட முறையில் நாங்கள் புரிந்து கொள்கிறோம். ஹிந்தியை வளம்படுத்த "அதனுடைய மரபுக்கு மாறு படாமல், மற்ற மொழிகளின் வடிவங்களையும், நடைகளையும், சொல்லாட்சி களையும் பயன் படுத்தலாம்" என்று சொல்லும் பொழுது ஹிந்துஸ்தானி யையும், எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்ட மொழிகளையுமே அது குறிக்கிறது. "நெடுங்கணக்கு" என்று சொல்லும்பொழுது "வடிவம், நடை, சொல்லாட்சி" என்பவற்றிலிருந்து வேறு படுத்தவே இங்ஙனம் சொல்லப்பட்டது. இதே விதியில் நெடுங்கணக்கை வளம்படுத்த முக்கிய மாக வடமொழியிலிருந்தும், அடுத்தபடியாக மற்ற மொழிகளிலிருந்தும், என்று சொல்லப்பட்டுள்ளது. இதனுடைய பொருள் மற்ற மொழி கள் என்பதே தவிர, எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்ட இந்திய மொழிகளே என்பது பொருளன்று. இங்ஙனம் கூறுவதன் அடிப்படை நோக்கம் நன்கு விளங்கக் கொள்ளக்கூடியதே. வடிவம், நடை, சொல் லாட்சி முதலியவற்றைப் பொறுத்தமட்டில் எட்டாவது ஷெட்யூலில் குறிக் கப்பட்ட மொழிகளிலிருந்தும், (ஹிந்துஸ்தானி, இந்திய மொழியாக இருப் பினும் ஷெட்யூலில் குறிக்கப்படவில்லை). ஹிந்துஸ்தானியில் இருந்தும் சேர்த்துக் கொள்ளப்படலாம். இங்ஙனம் சேர்க்கப்படும்பொழுது "ஹிந்தி மொழியின் மரபு கெடாதபடி" என்பது கவனத்திற்குரியது. நெடுங் கணக்கை வளர்க்கின்ற முறையில் மற்ற மொழிகளின் சொற்களைப் பயன் படுத்தலாம் என்பது விரிந்த கருத்தில் ஷெட்யூலில் சேர்க்கப்பட்டதும் படாததும் ஆன எல்லா மொழிகளையும் உட்கொண்டு நிற்கிறது. அவை "இந்திய மொழிகளாக" இருப்பினும் இல்லாவிடினும் சரியே. இங்கே சிறப்பாகச் சொல்லப்பட்டது என்னவென்றால் வடமொழிக்கு முக்கியத்துவ மும், ஏனைய மொழிகளுக்கு இரண்டாம் இடமும் தரப்பட்டுள்ளது. எனவே இங்ஙனம் சேர்த்துக் கொள்ள ஆங்கிலம் விலக்கப்படுமாறு இல்லை. ஐந்தாவது பகுதியில் குறியீடுகள் பற்றிப் பேசும்பொழுது இது எவ்வளவு தூரம் தேவைப்படும் என்பது பற்றி ஆராய சந்தர்ப்பம் ஏற்படும்.

20. யூனியன் மொழியைப் பொறுத்தமட்டில் அரசியலமைப்பின் ஏற்பாடுகள் எவ்வளவு பரந்த நோக்கத்தோடும், தூய்மையோடும் செய்யப் பட்டுள்ளனவோ அதே முறையில்தான் ஏனைய மொழிகளுக்கும் ஏற்பாடுகள் அரசியலமைப்பில் செய்யப்பட்டுள்ளன. இந்தியப் பண்பாட்டின் பரம்பரை பல்வேறு தோற்றத்திற்கும், வகைகளுக்கும் சிறப்புவாய்ந்தது. இந்த வேறுபாடுகளை யெல்லாம் ஒன்றுவிக்கின்ற சிறப்புத்தான் இந்திய மரபில் தனிப்பட்ட சிறப்பாகும். மொழி என்ற தறியில்தான் பண்பாட்டின் வகை கள் நெய்யப்படுகின்றன. இந்தியாவின் பண்பாட்டு வாழ்க்கையில் புகுந்த பொருள்களை யெல்லாம் எங்ஙனம் நிலை பெறச் செய்து காப்பாற்று கிறோமோ அதே போல் அந்தப் பொருள்களைக் கொண்டுவருகின்ற மொழி களையும், அந்தப் பண்பாடுகளைத் தாங்கிவரும் சாதனங்களாகவே கருதிப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். பண்பாட்டின் உரிமைகளை முரட்டுத் தனமான, அதிகம், குறைவு என்ற எண்ணிக்கைகளை வைத்துக்கொண்டு முடிவு செய்து விடக்கூடாது. எனவே சிறுபான்மையினரின் பண்பாட் டுரிமை, கல்வி உரிமை ஆகிய இவற்றைத் தனிப்பட்ட உத்தரவாதங்களினால் அரசியலமைப்பு காப்பாற்றுகிறது. அரசியலமைப்பின் 29-வது விதி "இந் திய எல்லைக்குள் வாழும் எந்த இனத்தாரும் தங்களுக்கென ஒரு மொழியையும், இந்த மொழிக்குரிய வரிவடிவங்களையும், தனிப் பண்பாட் டையும் பெற்றிருப்பார்களேயானால் அதனைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு" என்று சொல்கிறது. 30-வது விதி "எல்லாச் சிறுபான்மையினரும் அவர்கள் சமய மாறுபாட்டால் அல்லது மொழி மாறுபாட்டால் சிறுபான்மையினராக இருப்பினும், தங்களுக்குத் தேவை யான கல்விக் கழகங்களை அமைத்து அதனை ஆட்சி செய்யும் உரிமையை யும் பெறுகிறார்கள்" என்று விதிக்கிறது. மேலும் "கல்விக் கழகங் களுக்கு உதவி நிதி அளிக்கும் பொழுது ஒரு கல்விக் கழகம் சிறுபான் மையினரால் நடத்தப்படுகிறது என்பதற்காகவும், அந்தச் சிறுபான்மை யினர் சமயம் அல்லது மொழி சம்பந்தமாகன சிறுபான்மையினர்

என்பதற்காகவும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற உதவி நிதியில் எவ்வித மான வேறுபாடும் காட்டப்படக்கூடாது" என்பதும் விதிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்புக்குச் சமீபத்தில் செய்யப்படப்போவதாக உள்ள திருத்தங்களில்'[1] "ஒவ்வொரு ராஜ்யமும், ஒவ்வொரு உள்ளூர் அதிகாரியும் சிறுபான்மை மொழி பேசுகின்ற கூட்டத்தாரின் குழந்தைகளுக்கு அவர்களுடைய தாய் மொழியிலேயே ஆரம்பக் கல்வி அளிக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்ய முயலவேண்டும். ஜனாதிபதியானவர் எந்த ஒரு ராஜ்யத்திற்கும், தேவைப்படும் என்று நினைத்தால் இத்தகைய ஒரு வசதியைச் செய்து கொடுக்குமாறு ஆணை பிறப்பிக்கலாம்." இவ்விதமாக ஒவ்வொரு ராஜ்யமும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சிக்கு, ஆரம்பக் கல்வி நிலையில், தாய்மொழி மூலமே அதனைப் போதிப்பதற்குரிய வசதியைச் செய்து கொடுக்க வேண்டிய கடமை விதிக்கப்படுகிறது. இந்த வசதி அந்தச் சிறுபான்மையினர் தாங்களே நிறுவி ஆட்சி செய்கின்ற கல்விக் கழகங்களை அல்லாமல் அதற்கு மேலும் உள்ள வசதியாகும்.

ஒரு ராஜ்யத்தின் ஆட்சி மொழி அல்லது மொழிகள்பற்றி குறிப்பிடும் பொழுது 345-வது விதி "அந்த ராஜ்யத்தின் சட்ட சபை அந்த ராஜ்யத்தில் வழங்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ அல்லது ஹிந்தி மொழியையோ ராஜ்யத்தின் ஆட்சிக் காரியங்களில் சிலவற்றிற்கோ அன்றி அனைத்திற்குமோ பயன்படுத்தச் சட்டம் செய்யலாம்." என்று விதிக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில் "மொழிகள்" என்று பொதுப் படையாக குறிப்பிடப்படுகிறதே தவிர அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகள் என்று எங்கும் பேசப்படவில்லை. அரசியலமைப்பின் இந்த ஏற்பாட்டிற்கு ராஜ்யங்களில் வாழும் சிறு பான்மை மொழி பேசுபவர்களுக்கு ஏற்ப ஒரு பாதுகாவலான சட்டமும் செய்யப் பட்டுள்ளது. 347-வது விதி "ஜனாதிபதியானவர் தம்மிடம் கோரப் பட்டால், ஒரு ராஜ்யத்தில் வழங்கும் ஒரு மொழியை அதற்குத் தகுதியான நிறைந்த அளவு மக்கள் பேசுவதாயிருப்பின், அந்த ராஜ்யத்தார் அந்த மொழியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அந்த ராஜ்யம் முழுவதற்கும் ஆட்சி பூர்வமாக அந்த மொழியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும், எந்தக் காரணங்களுக்காக அவற்றை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் குறிக்கிறாரோ அந்தக் காரியத்திற்கு அது பயன்பட வேண்டும்" என்றும் விதிக்கிறது.

ராஜ்யப் புனரமைப்புக் கழகம் இந்த ஏற்பாட்டைப்பற்றிப் பேசுகையில் அந்த ராஜ்ய ஜனத்தொகையில் 70 சத விகிதம் மக்களால் ஒரே மொழிபேசப் பட்டால்தான் ஒரு மொழி பேசும் ராஜ்யமாக கருதப்படவேண்டும் என்று கூறுகிறது. மேலும் சிறுபான்மையினரில் மொத்த ஜனத்தொகையில் முப்பது சதவிகிதத்தார் வேறொரு மொழியைப் பேசுபவர்களாக இருந்தால் ஆட்சி முறையைப் பொறுத்தமட்டில் அந்த ராஜ்யம் இரு மொழி ராஜ்யமாகவே கருதப்படவேண்டும்.

இதே கொள்கையை அடியொற்றி ஒரு ஜில்லாவைப் பொறுத்தமட்டில் அந்த ஜில்லா ஜனத்தொகையில் எழுபது சத விகிதம் ஒரு மொழி பேசுபவர்களாக இருந்து, ஆனால் ராஜ்யத்தின் மொத்த ஜனத்தொகையில் இவர்கள் சிறுபான்மையினராக இருந்தாலும் அந்த ஜில்லாவைப் பொறுத்த மட்டில் அந்தச் சிறுபான்மையினர் பேசும் மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமே தவிர, அந்த ராஜ்யத்தின் மொழி ஆட்சி மொழியாக அந்த ஜில்லாவிற்கு இருக்கமுடியாது.

350-வது விதி மேலும் ஒரு சிறப்பு ஏற்பாட்டைப் பேசுகிறது. அதன்படி "ஒவ்வொரு மனிதனும் எந்த அதிகாரியினிடமும் தன்னுடைய குறைகளை போக்கவேண்டும் என்று தெரிவிக்கும் பொழுது, அவர் ராஜ்ய அதிகாரியாக இருப்பினும், யூனியன் அதிகாரியாக இருப்பினும் யூனியன் மொழியையோ அல்லது அந்த ராஜ்யத்தில் வழங்கும் மொழியையோ பயன்படுத்தலாம்."

---

[1] இந்தத் திருத்தம் ராஜ்ய புனரமைப்புச் சட்ட மூலத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

யூனியன் அளவிலும், ராஜ்யங்கள் ஒன்றுக்கொன்று கருத்தைத் தெரிவிக்கின்ற அளவிலும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய இடைநிலை மொழி யாது என்பது பற்றி உள்ள பிரச்னையும், பிராந்திய மொழிகள் பற்றிய பிரச்னையும் ஒரு புறம் இருக்க, தேசத்தின் சில பாகங்களில் அந்தந்த பாகத்திற்கு ஏற்பத் துணைப்பிரச்னைகள் தோன்றியுள்ளன.

உதாரணமாக அஸ்ஸாம் ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் மலை ஜாதியினரின் மொழிகள் பற்றிய பிரச்னை யுள்ளது. அதிலும் சிறப்பாக மலை ஜாதியினரின் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விக்கு மேற்பட்ட கல்வியை அஸ்ஸாமிய மொழியில் கற்பிப்பதா அல்லது ஹிந்தி மொழியில் கற்பிப்பதா என்ற பிரச்னையுள்ளது. மலைஜாதியினரின் குழந்தைகள் ஏனைய பகுதிகளில் வாழும் குழந்தைகளைப் போல யூனியன் மொழியில் கல்வி புகட்டப்படுவது தேவையென்றாலும், அவர்களுடைய சொந்த லாபத்தைப் பொறுத்தமட்டில் அஸ்ஸாமிய மொழியில் அவர்கள் அறிவு பெறவேண்டியது இன்றியமையாததாகும். மலைப் பிராந்தியங்கள் அவைகளோடு நெருங்க இருக்கின்ற அஸ்ஸாம் சமவெளியில் பொருளாதார தொடர்பு முதலியவற்றைக் கொண்டிருக்கின்றன. இந்தச் சமவெளியில் அஸ்ஸாமிய மொழியும், வங்காள மொழியும் பேசப்படுகின்றன. ஆதலால் இந்தப் பிராந்தியங்களோடு பொருளாதார, பண்பாட்டுத் தொடர்புகள் கொள்ளவேண்டிய மலைஜாயினரின் தேவையை நினைக்கும்பொழுது இந்தச்சமவெளிகளில் பேசும் மொழிகளில் அவர்கள் அறிவு பெறவேண்டும் என்பது விளங்கும். இதே போல மலை ஜாதியினரும் அதிக வளர்ச்சி அடையாத இனத்தாரும் பேசுகின்ற மொழிகள் பெரிய அளவினதாகிய பிராந்திய மொழிகள் பேசப்படுகின்ற இடங்களில் புகும்பொழுது பிரச்னைகள் தோன்றுகின்றன. பஞ்சாபில் பஞ்சாபி, ஹிந்தி, குருமுகி என்ற மொழிகள் தேவநாகரி எழுத்துக்களில் எழுதப்படுகின்றன. இதில் தோன்றுகின்ற பிரச்னைகள் எங்களுக்குத் தெரிந்தவரையில், இரண்டு கூட்டத்தாருக்கும் திருப்தி அளிக்கின்ற வகையில் சில தனிப்பட்ட ஏற்பாடுகளுடன் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இதனை அடுத்து ஹிந்திப் பேசப்படும் ராஜ்யங்களில் வாழும், உருது பேசுகின்ற கூட்டத்தாரின் பிரச்னை எழுகின்றது. உருது மொழியைப் பொறுத்தமட்டில் முற்றிலும் இந்திய மொழி தான் என்பதும் அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழி என்பதிலேயானாலும் இந்தச் சூழ்நிலையில் ஏனைய மொழிகளெல்லாம் எங்ஙனம் நடத்தப்படுகின்றனவோ அதே நிலையில் நடத்தப்படவேண்டும் என்பதும் உண்மையே. உண்மையைக் கூறுமிடத்து இந்திய அரசியலமைப்பின் உத்தரவாதங்களின் படி "இந்திய மொழிகள்" என்பவை மட்டும் அல்லாமல் சில இந்தியர்களுக்குத் தாய் மொழியாக உள்ள ஆங்கிலம் போன்ற வெளி நாட்டிலிருந்து தோன்றிய மொழிகளும் ஒரே முறையில் காக்கப்படுகின்றன. எனவே இருபத்தொன்பது, முப்பதாவது விதிகள் இந்தியாவில் வாழும் எந்த இனத்தாரும் தங்களுக்குரிய மொழியையும், அதற்குரிய வரி வடிவங்களையும் பாதுகாப்பதற்குரிய உரிமைகளைத் தருவதோடு எல்லாச் சிறுபான்மையினரும், அவர்கள் சமய அல்லது மொழிச் சிறுபான்மையினராக இருப்பினும் தங்களுக்கேற்ற கல்விக் கழகங்களை அமைத்துப் பாதுகாக்கவும் உரிமை தருகின்றது.

நாங்கள் சென்ற ராஜ்யங்கள் பலவற்றிலும் உருது மொழியைப்பற்றிய பிரச்னை தனிப்பட்டவர்களாலும், சங்கங்களாலும் சமர்ப்பிக்கப்பட்டதைப் பற்றி இங்கே குறிப்பிடவேண்டும். அவர்கள் இந்த ராஜ்யத்தின் ஆட்சிக் காரியங்களுக்கு உருது மொழியைப் பயன்படுத்த முடியாத நிலைமையையும், இன்னும் சில இடங்களில் அவர்கள் குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வி நிலையில் அவர்கள் தாய் மொழியாகிய உருது மூலம் கல்வி புகட்டமுடியாத நிலைமையையும் தெரிவித்தார்கள். இக்குறைபாடுகளைப் போக்கச் சில ராஜ்யங்களில் உருதுவை இரண்டாவது ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்வதிலிருந்து, சில ராஜ்யங்களில் சில குறிப்பிட்ட காரியங்களுக்கு அந்த மொழியைப் பயன்படுத்தலாம் என்ற உரிமை வழங்கப்படவேண்டும் என்பது வரை பலவேறு குறைநீக்க வழிகளைத் தெரிவித்தார்கள்.

இவர்களுடைய குறைகளையெல்லாம் நாங்கள் பரிவோடு கேட்டுவிட்டு, எங்கள் கழகம் நியமிக்கப்பட்டதன் கோரிக்கை யூனியன் ஆட்சி மொழியைப் பற்றிய நேரடியானதும் அதனோடு தொடர்பு உடையதுமான பிரச்னைபற்றிய ஆராய்ச்சிதான் என்று தெரிவித்தோம். அன்றியும் ராஜ்யங்களைப் பொறுத்த ஆட்சி மொழிகள் பற்றிய பிரச்னைகளையும் அவர்கள் குறைகளின் தகுதி பற்றியும், மொழிச் சிறுபான்மையினரின் குறை நீக்க வழிகளின் தகுதி பற்றியும், எங்களுக்கு ஆராய உரிமை இல்லை என்பதையும் தெரிவித்தோம். ராஜ்யப் புனரமைப்புக் கழகம் அதனுடைய அறிக்கையில் சிறுபான்மை மொழிகள் பற்றியும், சில விடங்களில் உருது மொழியின் நிலைமைபற்றிச் சிறப்பாகவும் தன்னுடைய கருத்தைத் தெரிவித்துள்ளது. பாராளு மன்றமும், யூனியன் அரசாங்கமும், ராஜ்ய சட்டசபைகளும், அரசாங்கமும் உருது மொழியின் நியாயமான கோரிக்கைகளுக்குத் தகுந்த இரக்கம் காட்டுவதுடன் ஏனைய ராஜ்யங்களிலுள்ள சிறுபான்மை மொழிகளுக்கும் இவ்விதமே செய்யும் என்னும் உறுதியுடையோம். இவையும், இவைபோன்ற பல கேள்விகளும் எங்கள் நிர்மாணக் கோரிக்கைகளின் உள் வராததால் இவற்றைப் பற்றிய முடிவான கருத்துக்களை நாங்கள் தரவேண்டியதில்லை. எங்களைப் பொறுத்தமட்டில் இந்தப் பிரச்னைகளை அரசியலமைப்பில் மொழிகளைப் பற்றியும், அவற்றிற்குத் தேவையான உத்திரவாதங்கள் பற்றியும் அவற்றின் ஏற்பாடுகள் பற்றியும், எவ்வளவு பரந்த மனப்பான்மையோடு பேசப்பட்டுள்ளதோ அந்த அளவு பரந்த மனப்பான்மையோடு இந்தப் பிரச்னைகளையும் தீர்க்க முனைந்தால் அனைவருக்கும் திருப்தி அளிக்கும் முறையில் வழி காணலாம் என்பதைமட்டும், நாங்கள் எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

பகுதி V

கலைச் சொற்கள்.

1. இந்திய மொழிகளின் வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது கலைச் சொற்கள் பற்றிய வினவும், அடிப்படையாக கவனிக்கப்பட வேண்டும் என்பது நன்கு விளங்கிக்கொள்ளக் கூடியதே. இதற்கு முன்னர்ச் சொல்லப்பட்ட காரணங்களினால் இந்திய மொழிகள் தற்போதைய வடிவத்தில், இத்துறையில் மிகவும் குறைபாடு உடையனவாக உள்ளன.

ஓர் இனத்தாருக்குக் கருத்தைத் தெரிவிக்க எந்த மொழி தேவைப்படுகிறதோ அந்த மொழியில் இயல்பாகவே அவர்களுக்குத் தேவையான அளவு புதிய சொற்கள் தோன்றுகின்றன. இத்தேவை புதிய பொருள்களையும், கருத்துக்களையும் வெளியிடுவதற்கு வேண்டிய இன்றியமையாமை ஏற்படும்பொழுது அதற்கேற்ற மொழிகளைத்தேடுவதில் பூர்த்தியாகிறது. சென்ற ஒன்றரை நூற்றாண்டுகளில் இந்திய மொழிகள் ஆட்சித் துறை, கல்வித்துறை, பொது வாழ்வு ஆகியவற்றிலிருந்து முற்றிலும் விலக்கப்பட்டிருந்த நிலைமை அறியப்பட்டதே. இதே காலத்தில்தான் உலகம் முழுவதிலும் இதற்கு முன்னர் காண முடியாத அளவிலும், எண்ணிக்கையிலும் விஞ்ஞானத் துறையிலும், தொழில் நுட்பத்துறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன, ஜப்பானிலும், ஜப்பானிய சமுதாயத்திலும், ஜப்பானியப் பொருளாதாரத்திலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் மேல் நாட்டு விஞ்ஞானம் ஜப்பானிய மொழி மூலம் பரவியது போல, இந்திய சமுதாயத்திலும், இந்திய மொழிகள் மூலம் பரவியிருக்குமேயானால் இந்த நாட்டு மொழி இயல்பு இன்று முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். விஞ்ஞானம் வளர்ச்சி அடைய அடைய இந்த வளர்ச்சி பற்றிய அறிவு இந்திய சமுதாயத்திற்கு இந்திய மொழிகள் மூலம் "இறக்குமதி" செய்யப்பட்டு இருக்குமேயானால், இந்த மொழிகள் இத்துறையில் தேவைப்படுகின்ற சொற்களையும், புதிய பொருள்களையும் கருத்துக்களையும் விளக்கும் சொற்களையும், பெற்று வளர்ந்துகொண்டே சென்றிருக்கும். இவ்வளர்ச்சி வெளி நாட்டுக் கலைச் சொற்களைப் பெற்றேனும் அல்லது வேறு வழிகளில் அவற்றைச் சேர்த்துக்கொண்டேனும் அல்லது சந்தர்ப்பத்திற் கேற்றபடி வடமொழியிலிருந்தோ பிறவற்றிலிருந்தோ புதிய சொற்களைப் படைத்துக் கொண்டேனும் நடைபெற்றிருக்கும். அங்ஙனம் படைக்கப்பட்ட ஒவ்வொரு சொல்லும் இறுதியாக அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் என்று சொல்ல முடியாவிட்டாலும், இவற்றிலிருந்து நாளா வட்டத்தில் இயல்பாகவே அனைவரும் ஏற்றுக்கொள்கின்ற தன்மை பெற்ற சொற்கள் ஏற்பட்டிருக்கும். நாளாவட்டத்தில் இந்தச் சொற்கள் குறிக்கும் சூழ்நிலையும், எண்ணத்திற்கேற்ப விரிந்துகொடுக்கும் இயல்பும் பெற்றுப் பல்பல கருத்துக்களை வெளியிடும் வழக்கத்தால் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கும். இது நடைபெறாததால் இப்பொழுது ஏற்பட்டுள்ள குறைபாடுகளையும், விரிசல்களையும் போக்கி இந்திய மொழிகளின் நெடுங்கணக்கைச் சீர்செய்ய வேண்டும். மேலும் இதனை விரைவாகவும் பொருத்தமாகவும், பயன்படும் முறையிலும், முன்னேற்ற எத்தகைய முயற்சி கையாளப்பட வேண்டும் என்று சிந்திக்கப்படவேண்டும். இந்திய மொழிகளை ஆட்சி, சட்டம், கல்வி ஆகிய துறைகளில் இன்று பயன்படுத்த முடியாது தடை செய்தது இக்கலைச் சொற்களின் குறைவே யாதலால் நம்முடைய மொழிக் கொள்கையை நல்ல முறையில் நிறைவேற்ற இந்தக் குறைபாட்டைப் போக்குவது மிகமிக இன்றியமையாதது ஆகும்.

2. "விஞ்ஞானக் கலைச் சொற்கள்" என்று கூறும் பொழுது நாம் எதனைக் கருதுகிறோம் என்பதைப் பற்றி முதலில் சிந்திக்கவேண்டும். எந்த ஒரு துறையிலும், பெற்றுள்ள அறிவு என்பது, தீர்மானமான

அனுபவத்தையோ ஆலோசனையையோ ஒன்று சேர்த்து வகைப்படுத்திச் சொல்வதாகும். இந்த அறிவுத் துறையில், எந்தத் துறையையும் பற்றி எழுதவேண்டுமேயானால் எண்ணத்தை வெளியிடும் கருவியாக உள்ள குறிப்பிட்ட சொற்களும், சொல்லாட்சிகளும் தேவை. நினைப்பதை வெளியிடுவதற்குரிய இலக்கணத்தோடு அமைந்துள்ள சொல்லாட்சிகள் இருந்து அந்தச் சொற்களின் மூலம் ஐயத்திற்கு இடமின்றி, செம்மையான சொல்லைக் கூறினால் ஒழிய அனுமானம் செய்வதும், முடிவுகளைப் பெறுவதும் இயலாது. தற்கால விஞ்ஞான ஆராய்ச்சியில் ஒரு குறிப்பிட்ட துறை இவ்விதக் கண்டிப்பை மிகுதியும் நாடி நிற்கின்றது. இன்று வானளவு வளர்ந்துள்ள நவீன விஞ்ஞான வளர்ச்சி ஒரு சில அறிவாளிகள் திடீர் என்று விளக்கம் பெற்றதினால் கிடைத்த பயனன்று. அதற்கு மறுதலையாக உலகம் முழுவதிலும் பல துறைகளில் உழைக்கின்றவர்கள் தங்கள் உழைப்பின் பயனை எல்லாம் ஒன்று சேர்த்துக் குறைவு நிறைவுகளை ஆராய்ந்து கண்டு, அனுபவங்களைப் பரிமாறிக்கொண்டு, அதன் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிறு சிறு கண்டுபிடிப்புகளை யெல்லாம் ஒன்றாக ஒட்டியதின் பயனே இன்றைய விஞ்ஞான வளர்ச்சியாகும். அன்றொரு நாள் ஆப்பிள் மரத்தடியில் படுத்துக்கொண்டிருந்த நியூட்டன் பழம் விழுவதைக் கண்டு தம் இயற்கை அறிவின் துணையையும், காரணகாரிய ஆராய்ச்சியையும் கொண்டு கிரகங்கள், ஒன்றை யொன்று ஆகர்ஷிக்கும் சக்தியைப் பற்றிச் சட்டங்கள் இயற்றியதைப் போல இக்காலத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இருப்பதில்லை. அன்றைய விஞ்ஞான அறிவின் எல்லை மிகமிக வளர்ந்து சென்று மிகவும் உயர்ந்த பிரத்தியேக நிலையை அடைந்துள்ளது. இதனைப் பெறக் கணக்கற்ற சோதனைகளும், சோதனைச் சாலைகளும் அவற்றில் நடைபெறும் வேலையும் தேவைப்படுகிறது. இந்த அறிவில் ஓரளவு வளர்ச்சி ஏற்படுவதற்கு எல்லையற்ற முயற்சி செய்து, அதனால் பெறுகின்ற ஒரு சில முடிவுகளை வைத்துக்கொண்டே காணவேண்டியுள்ளது. இந்த எல்லையற்ற முயற்சியை, உலகின் பல்வேறு பாகங்களில் உள்ள உழைப்பாளிகள் ஏறத்தாழ ஒரு குறுகிய துறையிலேயே ஆராய்ச்சி செய்து அதனால் காணும் பயன் என்று சொல்லாம். எனவே மின்னலைப்போலத் தோன்றுகின்ற எண்ணங்களால் பெரும்பாலும் புதிய உண்மைகள் காணப்படுவதில்லை. “கடலில்” அடிக்கும் அலைகள், மாறி மாறிக் கரையில் மோதினாலும் ஒரு அங்குலங்கூட முன்னேற வில்லையோ என்று சந்தேகப்படும்படி இருப்பினும், எங்கோ ஒரு மூலையில் வெள்ளச் சந்து பொந்துகளில் நுழைந்து முன்னர்க் காணாத கரைகளை யெல்லாம் அடைவதைப் போலத் தற்கால விஞ்ஞான அறிவின் வளர்ச்சியும் இருக்கிறது என்று சொல்லலாம். இந்தச் சூழ்நிலையில் இத்தனை மக்களினுடைய கூட்டுறவும், அறிவு வளர்ச்சிக்கு தேவையென்றால், குறிப்பிட்ட பொருளைக் குறிக்கும் இயல்பும் எல்லையுடைமையும், கலைச் சொற்களும் சொல்லாட்சிகளும் எவ்வளவு தேவை என்பது சொல்லாமலே விளங்கும்.

3. முழுவதையும் எடுத்துச் சொல்லும் நோக்கம் இல்லாவிட்டாலும், உதாரணத்திற்காகவாவது இந்திய மொழிகளிலுள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கு எத்தகைய கலைச் சொற்கள் வேண்டும் என்பதைச் சற்றுச் சிந்திக்கலாம். உதாரணமாகப் பருமையும் தன்மையும், இயல்பான தன்மையும் உடைய பௌதிகப் பொருள்களுக்குப் பெயர்கள் தேவை. அறுதியிட்ட பொருளோடுகூடிய இத்தகைய பெயர்கள் இந்திய மொழிகளில் வழங்க வில்லை என்பதும் யாவரும் அறிந்ததே. புதிய மூலப் பொருள்கள் அல்லாது கூட்டுப் பொருள்கள் கண்டு பிடிக்கப்படும் பொழுது இப்பெயர்கள் தேவைப்படும். உதாரணமாக புரோட்டான். (பரமாணு) எலக்ட்ரான் (மின்னணு), எக்ஸ்ரே, பீடா ரே, காஸ்மிக் ரே, ஆல்பா துகள்கள், ஸ்பெக்ட்ரம், ரேடியம் வைடமின், க்ரோமஸோம் என்னபோன்ற விஞ்ஞான அறிவியலால் காணப்படுகின்ற பொருள்களுக்குப் பெயர்கள் தேவை. மனிதர்களால் செய்யப்படுகின்ற கருவிகள், யந்திரங்கள், உபகரணங்கள் ஆகிய வற்றிற்கும் பெயர்கள் வேண்டும். உதாரணமாக பராமீட்டர் (பாரமானி), டெலஸ்கோப் (தொலை நோக்கி) மைக்ராஸ்கோப் (பெருக்காடி), கால்வனோ மீட்டர், ஸ்க்ரூ, எக்ஸன்டிரிக் சக்கரம், கலோரி மீட்டர்

ஆகியவை. மேலும், கருத்துக்கள், நுண்ம கருத்துக்கள், பொருள்களின் இயல்புகள், ஆகியவை விஞ்ஞானக் கொள்கைகளுக்குத் தேவை. உதாரணமாக விலாசிடி, வால்யூம் (கனபரிமாணம்), ஸ்பீட் (வேகம்), ஆக்ஸலரேஷன் (உந்தல்), டார்க், ரேடியேஷன் (வீசும் முறை), டிச்பர்ஷன் (சிதறல்), ரொடேஷன், ரெவில்யூஷன், மொமெண்டம் (ஊற்றம்) ஆம்பியர், எலெக்ட்ரோலைஸிஸ் (மின் பகுசுகை). போலரைஸேஷன் (வலுக்குறைதல்), மெடபாலிஸம், ரேடியோ ஆக்டிவிட்டி, ரிப்ராக்ஷன் (ஒளி விலகம்) என்பன போன்ற சொற்களுக்கும் இந்திய மொழிச் சொற்கள் தேவை. ஒவ்வொரு பிரத்தியேகமான அறிவுத்துறைக்கும் பிரத்தியேகமான கலைச் சொற்கள் தேவைப்படுகின்றன எனினும் நன்கு வளர்ச்சி அடையாத மொழிகளில் இவை கிடைப்பது கடினம். ஒரோவழி அந்த மொழிகளில் உள்ள சில கலைச் சொற்கள் இந்தப் பொருளோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தாலும் விஞ்ஞானக் கொள்கையையும் ஆராய்ச்சியையும் வெளியிடுவதற்குத் தகுந்த பொருள்செறிவு பெற்றிரா.

4. மேலும் "சாதாரண வழக்கிலுள்ள சொற்களையும் சொல்லாட்சிகளையும்" "பிரத்தியேகமான விஞ்ஞானக் கலைச் சொற்களினின்று பிரித்துக் காட்டுவதற்கு "எல்லைக்கோடோ" அன்றி "வேலியோ" இல்லை. சாதாரண உபயோகங்களுக்குப் பொருள் செறிவு இல்லாததும், வரையறுத்த பொருளில்லாததும், ஆகிய சொற்களும் சொல்லாட்சிகளும் பயன் படுத்தப்பட்டாலும் அவற்றை ஆராய்ச்சிக் கருவியாக பயன்படுத்தும்பொழுது வரையறுத்தவிஞ்ஞானச் சொற்களாகவே பயன் படுத்தவேண்டும். இந்நிலை சமுதாய விஞ்ஞானத்தில் மிகுதியும் ஏற்படுகின்றது. ஏனென்றால் அன்றாட வாழ்க்கைச் செயல்களிலிருந்து கொள்கைகளை ஏற்படுத்த வேண்டியுள்ள சூழ் நிலை ஏற்படுவதினால், இந்தத் துறைகளில் சாதாரண பேச்சு வழக்கிற்கும் விஞ்ஞான ஆராய்ச்சித் துறைக்கும் பொதுவான சொற்கள் பல இருக்கின்றன. உதாரணமாக சமுதாய சாஸ்திரத்திலும், மானிட சாஸ்திரத்திலும் "உறவு" "சகோதரத்துவம்", அல்லது "ரத்தத் தொடர்பு" என்ற சொற்களை அன்றாட வாழ்க்கையில் பயன் படுத்தாத பொருளில் வரையறுத்த பொருளுடன் பயன் படுத்தலாம். அரசியல் சாத்திரத்தில் "பாராளுமன்ற ஜனநாயகம்", "அதிகாரப் பிரிவினை", "பிரபுத்துவம்" "நீதித்துவம்", "பிரதிநிதித் தத்துவ ஆட்சி முறை" "விகிதாசார பிரதிநிதித்துவம்" என்ற சொற்கள் ஒரு வரையறுத்த பொருளைத் தெரிவிக்கின்றன. ஆனால் பேச்சு வழக்கில் இவை உதிரியான பொருளைக் குறிக்கின்றனவே தவிர மேற்கண்ட பொருளைக் குறிக்கவில்லை. உதாரணமாக, பொருளாதார சாத்திரத்தில் "மார்ஜினல் டிமாண்டு", "எலாஸ்டிசிடி ஆப் சப்ளை", "மல்டிப்ளையர்", "ரெண்டு (வாடகை)", "லாண்டு (நிலம்)", "காப்பிடல் பார்மேஷன் (முதல் ஆக்கம்)", இன்வெஸ்ட்மெண்டு (முதலீடு)", "சேவிங்ஸ் (சேமிப்பு)", "பராபிட்ஸ் (இலாபம்)", "புரோக்கிரஸிவ் டாக்ஸேஷன் (படத்தர வரி)" "டிவிடண்டு" ஆகிய சொற்கள் தனிப்பட்ட பொருளில் வழங்குகின்றன. சட்டத்துறையிலும், தர்ம சாத்திரத் துறையிலும், இத்தகைய தொல்லை இன்னும் அதிகமாக இருக்கக் காண்கிறோம். "நோயிங்லி" (அறிந்தே செய்தல்), "இன்டென்ஷனல் (வேண்டுமென்றே செய்தல்)", "டிஸ் ஹானஸ்டிலி (நேர்மை யற்ற)", "இன் குட்பெய்த்து (நல்லெண்ணத்துடன்)", "எஸ்டோபல் (இடையூறு உண்டாக்கல்)", "லிமிடேஷன் (கால எல்லை)", "அட்மிசபிள் இன் எவிடன்ஸ் (சான்றுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய)", "இன்டெண்டு (கருது)" என்பன போன்ற சொற்கள் சட்ட உலகில் ஒரு தனிப்பட்ட பொருளுடன் வழங்கக் காண்கிறோம். இச்சொற்கள் மிகுதியான சந்தர்ப்பப் பொருளையும், எண்ண ஊட்டுச் சக்தியையும் பெற்று வளர்ச்சியடைந்துள்ளன.

எனவே கலைச் சொற்களை வளர்க்கும்பொழுது புதிய பொருள்களுக்கும், கருத்துக்களுக்கும் புதிய சொற்களை அமைக்கும் பிரச்னையோடு வழக்கத்திலுள்ள சொற்களைப் பொறுக்கி அவற்றிற்கு வரையறுத்த பொருளை வழங்கும் பிரச்னையும் சேர்ந்துள்ளன.

5. இந்த நாட்டில் ஆங்கில மொழி வருவதற்கு முன்னர் அறிவுடைய பெருமக்கள் அறிந்திருந்த விஞ்ஞானங்களிலும், ஆலோசனைகளிலும் அந்தந்தப் பிராந்திய மொழிகளிலும், வடமொழியிலும் தற்காலக் கருத்துக்களையும், புதிய எண்ணங்களையும் இத்துறையில் வெளியிடப் பொருத்தமான மூலப்பொருள்கள் நிரம்ப இருக்கும். உதாரணமாக "நியாயம்" "மீமாம்சை", "வியாகரணம்", "தர்ம சாத்திரம்", சமய சம்பந்தமான அல்லது தத்துவ சாத்திர சம்பந்தமான ஆலோசனைகள் ஆகிய துறைகளில் உள்ள நூல்களில் நிரம்பக் கலைச் சொற்கள் கிடைக்கும். நல்ல காலமாக இந்தக் கலைச்சொற்கள் அனைத்தும் பொதுவாக வடமொழியிலிருந்தும், வடமொழி நூல்களிலிருந்துமே பெறப்பட்டனவாதலின் இவற்றுள் பொதுத்தன்மை நிரம்ப உண்டு. இன்னும் சொல்லப்போனால் கலைச் சொற்கள் பற்றிய பிரச்னை இந்திய மொழிகளைப் பொறுத்தவரை இப்பொழுதுதான் முதல் முறையாகத் தோன்றிற்று என்று சொல்வதற்கில்லை. அறிவுடைய பெருமக்கள் எழுத்தெல்லாம் கல்வியெல்லாம் வடமொழியிலேயே இருத்தல் வேண்டும், என்னும் பழைய மரபைப் பெயர்த்துவிட்டுப் பிராந்திய மொழிகளில் தம் கருத்துக்களைச் சொல்லவேண்டும் என்று நினைத்த எல்லா எழுத்தாளர்களுக்கும் இப்பிரச்னை தோன்றியே இருக்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் இந்தியப் பிராந்திய மொழி எழுத்தாளர்கள் வடமொழிக் கருவூலத்திலிருந்து வேண்டுமான அளவு எடுத்துக்கொண்டுள்ளார்கள். அம்மொழியில் உப சர்க்கங்களும், உருபிடைச் சொற்களும் விகுதிகளும் நிரம்ப உள்ளன. கலைச் சொற்கள் வடமொழியிலும், வடமொழி இலக்கியத்திலும் நிரம்ப இருந்த காரணத்தால் நம் மொழிகள் அவற்றைக் "கடன் வாங்கின வே" அன்றித் தம்மிடத்தில் இச்சொற்களை "வளர்க்கவில்லை". உண்மையைக் கூறுமிடத்து ஒரு மொழியானது மற்றொன்றிலிருந்து சொற்களையும், சொல்லாட்சிகளையும் கடன் பெறுவது மதிப்பு குறைவன்று. சொற்களை வெறும் சொற்களாக மட்டும் கடன் கொள்ளாமல் வழக்கத்தில் அவற்றிற்கு உள்ள சந்தர்ப்பப் பொருளோடு மற்றொரு மொழிக்குக் கொண்டு செல்ல வேண்டுமேயானால் கடன் பெறுவது ஒன்றுதான் வழி. ஆங்கிலத்தில் எழுதும்போது கூட இந்திய ததத்துவ சாஸ்திர முறையையும், தத்துவ ஆலோசனைகளையும் பற்றிக் கூற வேண்டுமேயானால் "ஆத்மன்" "கர்மா" "ஜன்மா" "முக்தி" "இந்திரியம்", "தர்மம்", "பக்தி", "நிக்கிரகம்" ஆகிய சொற்களை அவற்றின் முழுப்பொருளோடு தெரிவிக்கவேண்டுமேயானால், அப்படியேதான் பயன்படுத்த வேண்டியுள்ளது. அதே போல மக்களுக்குள்ள உறவுமுறையில் பழைய இந்து சாத்திரங்களையொட்டித் தோன்றிய இந்திய சட்டங்களில் ஆங்கிலத்தில் தீர்ப்புக் கூறப்படும் பொழுது "கர்தா", "சம்பந்தம்", "தத்துவ விதி" ஆகிய சொற்களை அப்படியே எழுதுதல் உண்டு. ஜைனர்களும், பௌத்தர்களும் ஒரு சிலருக்கே பயன்படும் வட மொழியை விட்டுவிட்டுப் பொது மக்களுக்குப் புரியும்படியான மொழியில் பேச விரும்பியவுடன் அவர்களுடைய பாலி மொழியிலும், அர்தமகதி எழுத்துக்களிலும் எழுதினாலும் வடமொழியில் பயன்பட்ட சமய, தத்துவ சாத்திர, சொற்களை அப்படியே பயன் படுத்திக்கொண்டார்கள். ஆங்கிலர்கள் வருவதற்கு முன்னர் முஸ்லீம்களின் ஆட்சி நடைபெற்ற பல நூற்றுண்டுகளில் அவர்களுடைய ஆட்சி நடைபெற்ற பிராந்தியங்களிலும், அவர்கள் செல்வாக்குப் பரவிய பகுதிகளிலும், நீதி மன்றங்கள், ஆடசித் துறை, சட்டத்துறை, தூதுத்துறை ஆகியவற்றில் பார்சிய மொழியே பொது மொழியின் இடத்தைப் பெற்றிருந்தது. இக்காலங்களில் பல இந்திய மொழிகள் குறைவாகவும், மிகுதியாகவும் பல பர்சிய சொற்களைத் தத்சமமாகவும் தத்பவமாகவும், பயன் படுத்தின. உதாரணமாக, ஆங்கில மொழி கடன் பெற்ற பிறமொழிகளை ஜீரணித்து மற்றய மொழிகளின் மூலம் தன்னை வளம்படுத்திக் கொள்வதில் நிறைந்த சக்தி யுடையது என்று சொல்லப்படுகிறது. ஆங்கில மொழியிலுள்ள பாதிக்கு மேற்பட்ட சொற்கள் இம்முறையைச் சேர்ந்தவையே. அரசியின் ஆங்கில மொழியில் பலநூறு இந்தியச் சொற்கள் ஏறி உள்ளன என்பதும், அவை ஆங்கிலச் சொற்களாகவே பெரும்பாலும் ஆகிவிட்டன என்பதும் அறியப்படவேண்டும்.

ஆங்கில மொழியில் இந்திய மூலப்பொருள் மிகுதியாக உள்ளது என்பதற்கு ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதியே சான்று பகரும். இந்திய மூலத்தி லிருந்து புறப்பட்ட தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட சொற்களுக்கு அந்நூல் மதிப்புத் தருகிறது. வளரும் எல்லா மொழிகளும் இம்முறையில் சொற்களை உறிஞ்சிக் கொள்கின்றன. நம்முடைய மொழிகளுக்குத் தேவைப் பட்ட கலைச் சொற்களைத் தேடி எடுக்கையில், மொழியின் தனித் தன்மை என்று சொல்லப்படும் கொள்கைக்குப் பொருளே இல்லை. அப்படிப்பட்ட புதிய சொற்களும், சொல்லாட்சிகளும் ஒரு புதிய கருத்தை தெரிவிப்ப தற்குத் தேவைப்பட்டால் எந்த இடத்திலிருந்து அவை கிடைத்தாலும் ஏற்றுக் கொள்கின்ற மொழியோடு ஒத்துப் போகும் இயல்புடையனவாக இருப்பின் அவற்றைக் கடன் வாங்குவதனால் தவறு ஒன்றும் இல்லை. அரசியலமைப்பின் 351-வது விதி ஹிந்தி மொழியை வளம்படுத்த வழிகள் கூறும்பொழுது "அதனுடைய மரபுக்கு மாறுபடாமல் நடைகள், சொல் லாட்சிகள் முதலியவற்றை ஹிந்துஸ்தானி மொழியிலிருந்தும், எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்ட ஏனைய மொழிகளிலிருந்தும் தேவைப்படும் பொழுது கடன் வாங்கிக் கொள்ளலாம் என்றும் அதனுடைய நெடுங் கணக்கை வளர்ப்பதற்கு முக்கியமாக வடமொழியிலிருந்தும், அடுத்த படியாக ஏனைய மொழிகளிலிருந்தும் கடன் பெறலாம் என்றும்" சொல் கிறது. இந்தக் கொள்கை எல்லா இந்திய மொழிகளைப் பொறுத்த மட்டிலும் நிறைவேற்றப்படலாம். வடமொழிக்குக் கொடுக்கப்பட்டுள்ள தனியான இடம், ஏனைய இந்திய மொழிகளோடு அதற்குள்ள தொடர்பு கருதியும், பழங் காலத்தில் இம்முறையில் அது பயன்படுத்தப்பெற்ற சூழ்நிலையைக் கருதியும் ஆகும்.

"வாழும் மொழிகள் அனைத்தும் சொற்களைக் கடன் பெற்று அதனைச் ஜீரணித்துக்கொள்ளக்கூடும் என்பது மறுக்கமுடியாத ஒன்று. ஆனால் சூழ்நிலைக்கு ஏற்றபடி எவ்வளவு தூரம் ஒவ்வொரு மொழியில் இதனைச் செய்யமுடியும் என்பது மாறுபடும். . . . . மனிதனைப் போலவே தனிப்பட்ட ஆனால் மாறுப்பட்ட அமைப்பு மொழிகளுக்கும் உண்டு . . . . . . ஒரே இனத்தைச் சேர்ந்த மொழிகள் ஒன்றுக் குள் ஒன்று இடையூறு இல்லாமல் எளிதாகக் கடன் பெறமுடியும். ஆனால் வேறு இன மொழிகளிலிருந்து அதிகமான அளவுக்குக் கடன் பெற முடி யாது. அங்ஙனம் பெற்றால் அது பெரும் தீங்கை உண்டாக்கும். கடன் பெறுவது ஒரு மொழியைப் பொறுத்தமட்டில் தூக்கத்தில் நெஞ்சில் பாரம் அழுத்தும் துயில் நோயாகவும், மற்றொரு மொழியைப் பொறுத்தமட்டில் வளர்ச்சியைத் தரக்கூடிய சிறந்த சாதனமாகவும் அமையலாம். ஒட்டல் முறையில் சொல்லப்போனால் ஒரே இன மொழியில் கடன் பெறுவது "யூஜனிக்காகவும்" மாறுப்பட்ட இனத்தில் பெறுவது "எகனிசிக்" காகவும் ஆகிவிடுகிறது.[1]"

6. நம்மைப் பொறுத்தவரை கலைச் சொற்களின் கூர்தல் (Evolution) முறைபற்றிப் பேசவர வில்லை. இந்த விஷயம் பல காலத்துக்குத் தகுதி யுடைய ஒரு குழுவால் ஆராயப்படவேண்டியதாகும். நம்மைப் பொறுத்த வரையில் பரந்த முறையிலும், பொதுவான முறையிலும் புதிய கலைச் சொற் களை உண்டாக்கும் கொள்கையைத் திறனாய்ந்து இதுவரை ஏற்பட்ட வளர்ச் சியைப்பற்றி மதிப்பிட்டு இறுதியில் இது எங்ஙனம் செய்யப்படவேண்டும் என்பதற்குரிய வழிகளை வகுப்பதும் ஆகும்.

எங்களுடைய ஆராய்ச்சியில் கலைச் சொற்களை ஆக்குகின்ற முயற்சி இந்திய மொழிகளை பொறுத்தமட்டில் எவ்வளவு தூரம் நடைபெற்றிருக்

---

[1] இந்தக் குறிப்பு ராஜ் ராஜேந்திரலால் மித்திரா அவர்கள் 1877-ல் எழுதிய "ஐரோப்பிய விஞ்ஞானக் கலைச் சொற்களை இந்திய மொழிகளில் ஆக்குவதற்குரிய வழித்துறைகள்" என்னும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பெற்றது. அவ்வளவு பழைய காலத்தில் கூட கல்வித் துறையில் ஈடுபட்டவர்கள் இடையே இந்த முக்கியமான பிரச்னைபற்றி விசாரணை இருந்து வந்தது எனத் தெரிகிறது. ஆனால் மிகச் சமீப காலம் வரை இந்திய மொழிகளில் விஞ்ஞான விஷயங்கள் பற்றி எழுதப்பெற்ற நூல்கள் மிகக் குறைவானவையே.

கிறது என்பதை விசாரித்துக் கிடைத்த தகவல்களையெல்லாம் ஒரு தனிப்பட்ட குறிப்பாக எழுதியுள்ளோம். இது அனுபந்த நூலில் 8-வது பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது.[1]

எங்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மொழிகளில் புதிய கலைச் சொற்களைப் பெருக்குவதற்கு மற்றொரு வழியும் உள்ளது என்று நினைக்கின்றோம். எங்களுக்குத் தெரிந்த வரையில் ஒன்றிரண்டு பல்கலைக் கழகங்கள் இத்துறையில் வேலை செய்திருப்பினும் இன்னும் பெரிய அளவில் ஆராய்ச்சி செய்வதற்கு இடம் இருக்கிறது. நம்முடைய நாட்டிலுள்ள தொழில் நிபுணர்களும் சாதாரணத் தொழிலாளர்களும் அவர்கள் கைதேர்ந்தவர்களாக இருப்பினும் சரி, சாதாரணமானவர்களாக இருப்பினும் சரி பல துறைகளில் பலவேறு துறைகளில் ஈடுபட்டு காரியங்களைச் செய்திருப்பார்கள். அதாவது அவர்கள் தொழில்களைச் செய்துகொண்டு வந்திருந்த முறையில் இத்தனை ஆண்டுகளில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி ஓரளவாவது புதிய நுணுக்கங்களை அவர்களுடைய தொழில் இயலில் புகுத்தியிருக்கும். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் பேசுகின்ற “கிளை மொழி” களில் இதற்கு ஏற்ற சொற்களைக் கண்டிருப்பார்கள். இந்தத் தொழில் வல்லவர்களைப் பொறுத்தமட்டில் ஓரளவுக்குக் கீழ் ஆங்கில அறிவு செல்லவேயில்லை யாதலால் அந்நிலைக்குக் கீழ் உள்ள தொழிலாளர்கள் அவர்களுடைய அன்றாடத் தேவைகளைப் பொறுத்தமட்டில் புதிய சொற்களையும் சொல்லாட்சிகளையும் பல சந்தர்ப்பங்களில் ஆங்கிலச் சொற்களின் “திரிபு மொழிகளாக” உண்டாக்கி இருப்பார்கள். அதாவது தச்சன், கருமான், நீர்க்குழாய் சரி செய்பவன், கொற்றன், யந்திரம் பழுது பார்ப்பவன், நெசவாளி, வழக்கறிஞர்களிடம் குமாஸ்தாவாக இருப்பவன் ஆகியோர் பல துறைகளிலும் தொழிற்படும்பொழுது தங்கள் தொழிலுக்குச் சம்பந்தமுடைய பல சொற்களை ஆக்கியிருப்பார்கள். அவை இன்னும் இந்திய மொழி அகராதிகளில் இடம் பெற வில்லை. நாட்டின் பல பாகங்களில் ஆங்கிலம் அறியாத வக்கீல்களும், முக்தியார்களும் சட்டத் துறையில் தாழ்ந்த படிகளில் ஒரு தலைமுறைக்கு முன்னர்க்கூடப் பணியாற்றிக் கொண்டு வந்தார்கள். நாங்கள் விசாரித்தவரையில் இந்த மக்கள் வளர்த்த சங்கள் தங்கள் தொழிலைப் பொறுத்தமட்டில் பயன்படுத்திய சொற்களிலிருந்து இன்று நமக்குப் பயன்படக்கூடிய பரிபாஷை சொற்களைப் பெறக்கூடும் என நம்புகிறோம். இதையல்லாமல் முன்னைச் சிற்றரசர்கள் ஆட்சி செய்த சில சுதேசி சமஸ்தானங்களில் சட்ட மன்றங்களிலும், ஆட்சித் துறையிலும், அந்தப் பிராந்திய மொழியிலேயே சட்டங்கள் இயற்றப்பெற்றன. சில சந்தர்ப்பங்களில் மிக உயர்ந்த நீதி மன்றம் உள்பட அனைத்திலும் தங்கள் நடவடிக்கைகளையும், தீர்ப்புக்களையும் அந்தந்தப் பிராந்திய மொழியிலேயே வழங்கினார்கள் என்றும் அறிகிறோம். எனவே சட்டத் துறையில் பயன்பட்ட கலைச் சொற்கள் பரோடா சமஸ்தானம், ஹைதராபாத் ராஜ்யம், குவாலியர், இன்டோர், அல்லது ஜயப்பூர் ராஜ்யங்களில் இத்துறையில் புதிய கலைச் சொற்களை ஆக்குவதற்கு நிரம்ப மூலச் சொற்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாம். எனவே கலைச் சொற்களை உண்டாக்கவேண்டிய கடப்பாட்டை மேற்கொள்கின்றவர்களுக்கு இந்தத் துறைகளில் தங்களுடைய ஆராய்ச்சியைச் செலுத்தவேண்டும் என்றும், செலுத்தினால் நல்ல பயன் கிடைக்கும் என்றும் சொல்ல விரும்புகிறோம்.

7. இந்திய மொழிகளுக்குப் புதிய கலைச் சொற்களைப் பெற்றுத் தருகின்ற முயற்சியில் ஒரு பகுதி மிக முக்கியமானது என்றும் அனைவருடைய கவனத்தையும் அதில் செலுத்தவேண்டும் என்றும் நாங்கள் சொல்ல விரும்புகிறோம். எங்களுடைய விசாரணையில் அனைவரும் ஏக மானதாக ஒப்புக்கொண்ட ஒரு கருத்தை இங்கே வெளியிட விரும்புகிறோம். அதாவது புதிய கலைச் சொற்களை உண்டாக்கும் பொழுது கூடுமான வரை யூனியன் மொழிகளுக்கும், பிராந்திய மொழிகளுக்கும் பொதுவானவையாக அவை அமைக்கப்படவேண்டும். முன்னரே குறிப்பிட்டபடி “சாஸ்திரங்களைப்”

---

[1] இது அச்சேறவில்லை.

பொறுத்தமட்டில் இந்திய மொழிகள் அனைத்துள்ளும் கலைச் சொற்கள் ஒன்றாக உள்ளன என்று அறிகிறோம். இந்தியாவின் மொழிப் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு இந்த ஒற்றுமைக் கொள்கையை எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் பயன்படுத்தி நம்முடைய மொழிகளின் கலைச் சொற்களை வளர்க்கவேண்டும் என்பதே எங்கள் அபிப்பிராயம்.

மேலே சொன்ன கொள்கையைக் கடைப்பிடிக்கும் பொழுது ஏற்படக் கூடிய ஒன்றிரண்டு நடைமுறை இடையூறுகளைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம். இவற்றுள் ஒரு இடையூறு வருமாறு: நாளா வட்டத்தில் இந்திய மொழிகளுள் சிலவற்றில் வடமொழி வார்த்தைகளைப் பலவேறுபட்ட பொருளிலும் சில சமயங்களில் நேர்மாறான பொருளிலும் வழங்கிவந்துள்ளார்கள். ஒவ்வொரு மொழியிலும் புகுகின்ற சொற்கள் தனிப்பட்ட பொருள் சிறப்பையும் எண்ண ஊட்டுச் சக்தியையும் பெற்று வளர்ச்சி அடைந்து, சில காலத்திற்குப் பிறகு அந்தச் சொல்லின் பழமை யான பொருளுக்கும் புதிய பொருளுக்கும் சம்பந்தமில்லாத முறையில் வளர்ந்துவிடுகின்றன என்பது நன்கு அறியப்பட்டதே. இத்தகைய ஒரு இடையூற்றை எதிர்பார்த்து அதற்குரிய மாற்றமைப்புகளைத் தேவைப்படும் பொழுது ஏற்படுத்துவதோடு எப்பொழுதுமே இப்படி ஆவதில்லை என்பதும் ஒவ்வொரு சமயத்தில்தான் இது நடைபெறுகிறது என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டும். இதனால் பாதிக்கப்படும் துறைகள் மிகக்குறைவாத லால் பெரும்பான்மையான அளவுக்கு எல்லா மொழிகளிலும் ஒரே மாதிரியான கலைச் சொற்களைப் பொறுக்கி எடுக்கும் நம்முடைய முயற்சியை இது பாதிக்க வேண்டியதில்லை.

சில சமயங்களில் வடமொழியிலிருந்து பெறப்பட்ட இரட்டைச் சொற் களில் உள்ள ஒற்றைச் சொல் சில மொழிகளில் மிகவும் எளிமையானதாக வும், இன்னுஞ் சில மொழிகளில் இயற்கைக்கு விரோதமானதாகவும் கருதப்படுகின்றன. என்றாலும் ஒரேவழி வருகின்ற இத்தகைய இடையூறு கள் கவனித்துக்கொள்ளப்படவேண்டும் என்பது தவிர மேற்கண்ட கொள் கையை நிறைவேற்றம் செய்வதற்கு இது ஒன்றும் பெரும் தடையாக இராது.

8. இதனை அடுத்துத் தோன்றும் வினா ஒன்று உண்டு. வடமொழி யிலிருந்து பெறப்பட்ட சொற்களையும், அந்தச் சொற்களிலிருந்து தோற்று விக்கப்பட்ட புதிய கலைச் சொற்களையும் உண்டாக்குவதை விட்டுவிட்டு அகில உலகமும் ஏற்றுக்கொண்ட விஞ்ஞானக் கலைச் சொற்களை அப்படியே ஒரு சேர ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது ? என்பதே அந்த வினாவாகும்.

இந்திய அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்ட விஞ்ஞானக் கலைச் சொல் குழு இந்திய மொழிகளின் மாபுக்கு ஏற்ற முறையில் அகில உலக (பன்னாட்டு) கலைச் சொற்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய வழி துறைகளை வகுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் வகுத்த வழி துறைகள் வருமாறு :—

(1) பன்னாட்டுச் கலைச் சொற்கள் என்று சொல்லும்போது, விஞ்ஞான தொழில் நுட்ப கலைச் சொற்களை இண்டர் நேஷனல் கவுன்ஸில் ஆப் சயின்டிபிக் யூனியன் தன்னுடைய நடை முறையில் எந்தச் சொற்களை பயன் படுத்துகிறதோ அந்தச் சொற்களையே பன்னாட்டுக் கலைச் சொற்கள் அல்லது அகில உலகக் கலைச் சொற்கள் என்று சொல்கிறோம்.

(2) பல்கலைக் கழகமும், மத்திய கல்வித் துறை அறிவுரைக் கழகமும் கூடுமானவரை ஹிந்தியிலும் இந்தியாவின் முக்கிய மொழிகளிலும் எழுதப் படுகின்ற புத்தகங்களில் பன்னாட்டு விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலைச் சொற்களையே பெரும்பாலும் பயன் படுத்தவேண்டும் என்று சிபார்சு செய்ததை இந்தக் கழகமும் ஆதரிக்கின்றது. நில நூல், உயிர் நூல், தாவர நூல் ஆகிய மூன்றிலும் பன்னாட்டுக் கலைச் சொற்களை அப்படியே பயன்படுத்தவேண்டும்.

(3) கணக்கிலும், மற்றய விஞ்ஞானங்களிலும், குறியீடுகளும், அடையாளங்களும், சூத்திரங்களும் எவ்வித மாறுபாடுமின்றி அதாவது ரோமன் எழுத்துக்களால் ஹிந்தி மொழியில் அப்படியே எழுதப்பட வேண்டும்.

(4) விஞ்ஞானக் கலைச் சொற்களைக் கொண்ட அகராதியைத் தயாரிக்கும்பொழுது பண்டைட்டுக் கலைச் சொற்களை, தேவநாகரி எழுத்துக்களில் எழுதுவதோடு பழைய வடிவத்தை ரோமன் எழுத்துக்களிலும், பக்கத்தில் வளைவு கோடுகளுக்குள் எழுதவேண்டும். தேவைப்பட்ட இடங்களில் மொழி பெயர்ப்பும், விளக்கமும் தரப்படவேண்டும்.

பலமுறை கூறப்பட்டதும், அனைவருக்கும் தெரிந்ததுமான ஒன்றை இங்கு மீண்டும் கூறத் தேவையில்லை. மொழியின் தூய்மையைக் காப்பாற்றவேண்டும் என்று வெறும் கொள்கைக்காக சொல்கிற ஒரு சிலரைத் தவிர ஏனையோர் தேவைப்பட்ட இடங்களிலும், இயன்ற இடங்களிலும் பண்டைட்டுக் கலைச் சொற்களை அப்படியே பயன் படுத்தவேண்டும் என்று சொல்வதில் தவறு கூறமாட்டார்கள். தனிப்பட்ட இடங்களில் தனிப்பட்ட சந்தர்ப்பத்திற்கு ஏற்ப இக்கொள்கையை நிறைவேற்றும்பொழுதுதான் கருத்து வேற்றுமை ஏற்படுகிறதாதலின் ஒவ்வோரு சந்தர்ப்பத்திலும் அந்த சந்தர்ப்பத்திற் கேற்ப இதனை ஆராய்ந்து செய்யவேண்டும். இதுபற்றிய பொதுவான சில கருத்துக்களைத்தாம் நாங்கள் கூறமுடியும். புதிய கலைச் சொற்களை ஆக்கும் பொழுது எந்த வகையில் எந்த அளவில் அவை பயன் படப் போகின்றன என்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். விஞ்ஞானத்தின் உயர்ந்த படிகளில் ஆராய்ச்சி செய்பவர்கள் பல்வேறு நாடுகளில் இருப்பினும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டு ஒருவருக் கொருவர் அடிக்கடி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு தொழிற் படுகிறார்கள். அத்தகைய துறைகளில் ஒரே மொழியில் அவர்கள் பேசிக் கொள்வதனால் நிறைந்த அனுகூலம் உண்டு என்பதும் விளங்கும். இந்தத் துறையில் பயன்படுத்தப்பெறும் கலைச் சொற்கள், மொழிப் பிரச்னையைப் பாதிக்காத காரணத்தால் பண்டைட்டுக் கலைச் சொற்களைப் பயன் படுத்திக்கொள்வதே நலம் என்றும், அது இயலாதவிடத்துப் பெரும்பான்மையான விஞ்ஞானிகள் இடையே வழக்கத்திலிருந்து வரும் கலைச் சொற்களையே பயன் படுத்திக்கொள்வது நலம் என்றும் நினைக்கிறோம்.

செயல் முறையில் ஒரு குறிப்பிட்ட கலைச் சொல்லை ஆங்கிலத்திலிருந்தோ பண்டைட்டுக் கலைச் சொல்லிலிருந்தோ மொழி பெயர்ப்பதா அன்றி அப்படியே ஏற்றுக்கொள்வதா என்பது பற்றி நடை முறையில் செயற்படும் பொழுது எத்தனையோ தொல்லைகள் வரும் என்பதை நாங்கள் அறிகிறோம். மேலும் இச்சொற்களை வேர்ச்சொல்லாக வைத்துக்கொண்டு இந்திய மொழிகளின் இலக்கணச் சட்டங்களை இவற்றிற்கு ஏற்றுவதா அல்லது வேற்று மொழியிலுள்ள இச்சொற்களின் குடும்பத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதா என்பதும் மற்றொரு பிரச்னை. இதுவும் ஒவ்வொரு சொல்லாக எடுத்து முடிவு செய்யப்படவேண்டிய பிரச்னையே, ஆனாலும் பொதுவாக நோக்குமிடத்து முதலில் சொல்லப்பட்ட முறையே நலம் எனத் தோன்றுகிறது.

சில சமயங்களில் ஆங்கில மொழியில் வழக்கில் தோன்றும் கலைச் சொற்கள் எழுத் திலக்கணப்படி வேறு பொருள் உடையதாகவு மிருக்கலாம். ரசாயன, தாவர சாஸ்திரங்களில் தோன்றும் பெயர்கள் வெறும் குறியீடுகளாக மட்டும் இல்லாமல் இன்ன தொகுப்பைச் சேர்ந்தவை என்பது பற்றியும், இன்ன குணங்களையுடையன என்பதுபற்றியும் ஓரளவு அறிவிப்பவையாகவும் உள்ளன. எங்கே ஆங்கிலக் கலைச் சொற்கள் சரித்திர காரணங்களால் சரியான பொருளைக் குறிக்கவில்லையோ அங்கேயும் கூட அந்தச் சொல்லை அப்படியே ஏற்றுக்கொள்வது பொருத்தமற்றதாகும். எனவே இம்மாதிரி இடங்களில் அறிவுக்கு பொருத்தமானதும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் உள்ள ஒரு சொல்லைப் புதிதாக உண்டாக்கிக்கொள்வது பொருத்த முடையதே.

சில சமயங்களில் பொருள்களின் குணங்களை அறிவிக்கும் சொற்களை, மொழி பெயர்த்துக்கொள்வதும், பொருள்களின் பெயர்களாக உள்ள வற்றை அப்படியே ஆங்கிலத்தில் இருந்தோ அன்றிப் பண்டைட்டு மொழியி லிருந்தோ, இந்திய மொழிச்சொற்கள் கிடைக்காதபொழுது அப்படியே எடுத்துக்கொள்வதும் நலமாக இருக்கும் என்று எங்களுக்குச் சொல்லப் பட்டது. எங்களுக்குத் தெரிந்த வரையில் தனிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் வேறு பல சூழ்நிலையுங் கொண்டு முடிவுக்கு வரவேண்டி இருத்தலின் மேலே சொன்ன சட்டம் சில சமயங்களில் பொருத்தமுடையது போல இருப்பினும் எல்லாவிடத்திற்கும் ஏற்றது என்று சொல்லிவிட முடியாது.

புதிய கலைச்சொற்களைப் படைக்கும் கடமையை மேற்கொண்டவர்கள் மிகவும் கடினமானதும் நுணுக்கமானதும் அதிக மதிப்பு வாய்ந்ததும் ஆகிய ஒரு காரியத்தை மேற்கொண்டுள்ளார்கள் என்பது அனைவரும் அறிந்த உண்மையே. இதனை மேற்கொண்டவர்கள் நிறைந்த புலமை யோடு, விருப்பு வெறுப்பற்ற முறையில் எதனையும் கூர்மையாக ஆராய்ந்து எடுத்துக்கொள்ளும் திறத்துடன் மொழியின் மரபு கெடாதபடி புதிய கலைச்சொற்களை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.

9. சௌகரியத்தை முன்னிட்டும் ஒரு வரன் முறையை உத்தேசித்தும் புதிய கலைச்சொற்கள் படிப்படியாக ஆக்கப்படலாம். அதாவது முதலில் பள்ளிக்கூட இடைநிலை வகுப்புக்களுக்கும், அடுத்தபடியாகப் பல்கலைக் கழகங்களுக்கும் ஆக்கப்படலாம். என்றாலும் இடைநிலை வகுப்புகளுக்கு ஏற்றுக்கொள்ளும் கலைச்சொற்களுக்கும் பிற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்படும் கலைச்சொற்களுக்கும் ஒரு தொடர்பு இருத்தல் வேண்டும். இடைநிலைப் பள்ளியில் தான் கற்றவற்றை மேல்படிப்புப் படிக்கச் செல்லும்பொழுதும் மாணவன் கொண்டு செல்கிறான் ஆதலின் இடைநிலையில் அவன் கற்ற கலைச்சொற்கள் மேல் படிப்பு நிலையில் மாறுபடுமேயானால் அனைத்தையும், “மீட்டும் கற்கும்” நிலை ஏற்படும். இத்தகைய ஒரு சூழ்நிலையை முற்றிலும் நீக்கிவிடுதல் இயலாத காரியம் என்பதை நாங்கள் அறிவோம். கீழ் நிலைக் கல்வியில் முன்னரே உள்ளவைகளும் இப்பொழுது ஆக்கப்படும் புதிய சொற்களும் மாணவர்கள் தரங்கருதி எளிமையானவைகளாக ஆக்கப் பட்டுள்ளன. மிக உயர்ந்த படிப்பில் மிகச் சிலரே இதில் ஈடுபடுகின்றார்கள் ஆதலின் பண்டைட்டுக் கலைச்சொற்களை அப்படியே பயன்படுத்திக் கொள்ளு தல் பொருத்தமுடையதாகும். இவை இரண்டு நிலைகளுக்குமிடையே வளர் சிக்கு ஏற்றபடி பிராந்திய மொழிகளில் பயன்படுத்தப்பட்ட எளிய கலைச் சொற்களிலிருந்து பிரத்தியேகமான உயர்ந்த கலைச்சொற்களுக்கு மாற்றம் செய்துகொள்ளலாம். இங்கேயும்கூட நேரிடையாகக் கலைச்சொற்களை உண் டாக்குகின்றவர்கள் மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சியே தவிர, இது பற்றிப் பொதுவான கருத்துக்களைத் தருவதும், எல்லா வகையான சந்தர்ப் பங்களை எதிர்பார்த்து இதுதான் முடிவு என்று சொல்வதும் கடினமான காரியம்.

புதிதாக ஆக்கப்படும் கலைச்சொற்கள் பல்வேறு மொழிகளோடும் தொடர் புடையதாக இருக்க வேண்டுமானால் அது செய்யப்படுகின்ற காலத்தில் ஒவ்வொரு மொழியின் பிரதிநிதியும், அந்த மொழியின் தேவைகளைக் கவனித்துக்கொள்வதற்கு இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் இதை மேற் கொள்ள வேண்டும். அவ்வாறு ஆனால் இக்காரியம் மத்திய அரசாங்கத் தின் கண்காணிப்பிலேயே நடைபெற வேண்டும் என்பது விளங்கும்.

10. இந்தக் கழகத்தார் கல்வி அமைச்சுக்கு அனுப்பிய வினாத்தாளுக்குக் கிடைத்த விடைகளிலிருந்தும் கல்வி அமைச்சின் பிரதிநிதிகளால் நேரடி யாகக் கொடுக்கப்பட்ட சான்றுகளிலிருந்தும் கீழ்க்கண்ட செய்திகளைத் திரட்ட முடிகின்றது :—

1950 ஆண்டில் மத்திய அரசாங்கத்தார் விஞ்ஞானக் கலைச்சொற்கள் கொண்ட அகராதிகளைத் தயாரிப்பதற்காக விஞ்ஞானக் கலைச்சொற்கள்

கழகம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். வல்லுநர்கள் குழுக்கள் பல அவ்வப் பொழுது நியமிக்கப்பட்டன. அம்முறையில் 19 குழுக்கள் இப்பொழுது கீழ்க்கண்ட பகுதிகள் பற்றி வேலை செய்கின்றன :—

கணிதம், பூதநூல், வேதி நூல், இயற்கை நூல், சமுதாய விஞ்ஞானங்கள், ஆட்சி முறை, வேளாண்மை, நில நூல், உயிர் நூல், மருத்துவம், பாதுகாவல், தபால் தந்தி, போக்குவரத்து, பொருளாதாரம், புகையிரதம், வெளிநாட்டு விவகாரம், செல்வ ஆதாரம், செய்தி-ஒலி பரப்பு, பொறியியல், சட்டம் ஆகியவைகளே அந்தப் பகுதிகளாகும்.

இடைநிலை வகுப்புக்களைப் பொறுத்தமட்டில் கணிதம், பூத நூல், இயற்கை நூல், வேதி நூல், சமுதாய விஞ்ஞானம் ஆகியவற்றிற்குக் கலைச் சொற்கள் தொகுப்பு ஹிந்தி மொழியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கீழ்க் கண்ட விஷயங்களுக்கு ஓரளவு சேகரித்த பட்டியலும் ஏறத்தாழ முடிந்துள்ளது:—

தபால் தந்தி, புகை யிரதம், போக்குவரத்து, பாதுகாவல், வேளாண்மை.

இந்த இரண்டாவது பட்டியலைத் தவிரப் பாதுகாவல், உயிர் நூல், தபால் தந்தி, போக்குவரத்து ஆகியவற்றிற் குரிய கலைச்சொற்கள் பலவற்றைச் சேர்த்து மூன்றுவது பட்டியலாக ஆக்கிப் பல்கலைக் கழகங்களுக்கும் இராஜ்ய அரசாங்கங்களுக்கும் ஆராய்ச்சிக் கழகங்களுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் அனுப்பப்பட்டு அவர்களுடைய கருத்துக்கள் கோரப்பட்டுள்ளன. பொது ஆட்சித் துறை, பொறி யியல், செய்தி ஒலிபரப்பு, கல்வித் துறை, கப்பல் துறை ஆகியவற்றிற்கு ஹிந்தியில் கலைச்சொற்கள் தயாராய்க் கொண்டு வருகின்றன. இது வரையில் மொத்தம் 35,000 விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைச்சொற்கள் கீழ்க் கண்டவாறு ஹிந்தியில் தயாரிக்கப் பட்டுள்ளன.

தயாராகி முடிந்த சொற்கள்—5,500.

அமைச்சர் குழுவுக்கு அனுப்பப்பட்ட சொற்கள்—3,147.

தற்காலிகமாக தயாரித்து வெளியிடப்பட்ட சொற்கள்—7,000.

எஞ்சிய சொற்கள் கழகத்தாருடைய ஒப்புதலையும் வல்லுநர் குழுக்களினுடைய ஒப்புதலையும் எதிர் நோக்கி இருக்கின்றன.

இப்பொழுது ஆண்டுதோறும் 20,000 சொற்கள் வீதம் தயாரிக்கப் படுகின்றன. வேலை செய்கின்றவர்களை மிகுதிப்படுத்துவதன் மூலம் இவ்வெண்ணிக்கையை அதிகப்படுத்த இடமுண்டு.

இவ்வேலை 1952-ல் தான் தொடங்கப்பட்டது. அந்த ஆண்டில் தயாரிக்கப்பட்ட சொற்கள் 2,000. 1953-ல் 6,323 சொற்களும், 1954-ல் 15,692 சொற்களும், 1955-ல் 23,145 சொற்களும் தயாரிக்கப்பட்டன. மேலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு வேலை செய்கின்றவர்களின் எண்ணிக்கையை மிகுதிப்படுத்த இடம் தந்திருப்பதாகவும் எங்களுக்குச் சொல்லப்பட்டது. ஐந்து அதிகாரிகளையும், ஒம்பது உதவி ஆராய்ச்சியாளர்களையும் அதிகப்படுத்த ஏற்பாடாகி இருக்கிறது. மேலும் சராசரிக் கணக்கில் 2½ முதல் மூன்று லட்சம் கலைச்சொற்களைச் சேகரித்துப் பிறகு போதனு மொழியை மாற்றுவது வசதியுடையதாக இருக்குமென்பதையும், வேலை செய்யும் ஆட்களை மிகுதிப்படுத்துவதன் மூலம் 1955-ல் 23,000 சொற்கள் சேகரிப்பதைப் போல் வரும் ஆண்டுகளில் 50,000 சொற்கள் சேகரிக்க முடியும் என்று அமைச்சு எதிர்பார்ப்பதாகவும் எங்களுக்குச் சொல்லப்பட்டது.

11. இந்தக் கழகம் இந்திய அரசாங்கத்துக்குக் கீழ்க்கண்ட வினுக்களை விடுத்தது :—

"(1) யூனியன் ஆட்சித் தேவைகளுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துவதற்குரிய அட்டவணை எதையாவது அரசாங்கம் வகுத்திருக்கிறதா ? அவ்வாருனுல் அதுபற்றிய விரிவான திட்டம் எங்களுக்குத் தரப்படவேண்டும்.

(2) ஆட்சித்துறைக் கலைச்சொற்கள் ; கடிதப் போக்குவரத்து முதலியன செய்வதற்குரிய கலைச்சொற்களும் சொல்லாட்சிகளும் நிர்ணயிக்கப்பட்டு நடவடிக்கைகள், அறிவிப்புகள், நடைமுறைத் தேவைக்கான சிறு குறிப்புக்கள் நிலைபெற்ற சட்டங்கள் ஆகியவை மொழி பெயர்க்கப்பட்டாலொழிய மொழிமாற்றம் செய்வது கடினமானது.

இங்ஙனம் சொற்களைக் காணும் முயற்சிக்குச் செலவாகும் வேலை, காலம் முதலியன பற்றியும் இவற்றின் பல்வேறு படிகள் பற்றியும் ஆராயப்பட்டனவா ? யூனியனைப் பொறுத்தமட்டில் ஆட்சிக் காரியங்களுக்கு இந்தி மொழியைப் பயன் படுத்தும் இந்த அட்டவணையோடு பொருத்தப் பட்டுள்ளதா ?

சில இராச்சியங்கள் கலைச்சொற்களை ஹிந்தியிலோ அல்லது தங்கள் பிராந்திய மொழிகளிலோ தயாரிப்பதாலுல் கூடுமானவரை எல்லா மொழிகளுக்கும் பொதுவான புதிய கலைச் சொற்களையே தயாரிக்க வேண்டுமென்ற கொள்கையோடு இதனை ஒருமைப்படுத்தக் (Co ord n.t o ı) கருவிகள் அமைக்கப்பட்டுள்ளனவா ? இங்ஙனம் ஒருமைப்படுத்தும் கருவிகள் ஒருமைப் படுத்தும் காரியங்களைச் செய்து முடிக்கின்றனவா ?

(3) ஆட்சித் துறைக்கும் மற்றத் துறைகளுக்கும் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு படியிலும் எவ்வளவு கலைச்சொற்கள் தேவைப்படும் என்பதையும் அவற்றை நிறைவேற்றுதற்குரிய அட்டவணையையும் தயாரித்துள்ளதா என்பது சிறப்பாக அறியப்படவேண்டியது."

இக்கேள்விகளுக்கு உள் துறை அமைச்சிலிருந்து 19 ஜனவரி 1956-ல் கீழ்க்கண்ட முறையில் விடை தரப்பட்டது :—

"(2) கீழே கூறப்பட்டுள்ள இரண்டு நிலைகள் உண்டு :—

(அ) 31 மார்ச்சு 1956-ல் பொது ஆட்சித் துறைச் சொற்களும் பிறவும் தயாராவதோடு, சில அமைச்சுக்களைப் பொறுத்தமட்டில் தேவையான 15,000 கலைச்சொற்கள் முடிவாய்விடும்.

(ஆ) 26 ஜனவரி 1960-ல் தேவைப்பட்ட கலைச்சொற்கள் அனைத்தும் ஹிந்தியில் தயாரிக்கப்பட்டு சட்டங்கள், நடைமுறைக் குறிப்புக்கள், ஆகிய அனைத்தும் இந்த இந்திய கலைச்சொற்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுவிடும். 26 ஜனவரி 1960-ல் இருந்து இந்திய அரசாங்கத்தின் அலுவல்களில் ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியையும் பயன்படுத்தப்படும். இக் கேள்வியின் இரண்டாம் பகுதிக்கு அதாவது ஒரேமாதிரியான கலைச்சொற்களை எல்லா மொழிகளுக்கும் பொதுவாகத் தயாரிக்கப்படுவதைக் கவனிப்பது பற்றிய குறிப்பு, ஆட்சிமொழிக் கழகத்திற்குக் கல்வி அமைச்சினுல் தரப்பட்டுள்ளது. அந்தத் தகவலை அப்படியே கீழே தந்துள்ளோம்:—

'மத்தியக் கல்வி அமைச்சினுல் 1950 நிறுவப்பெற்ற விஞ்ஞானக் கலைச்சொற்கள் கழகம் இவ்வேலையை மேற்கொண்டு ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் தயாரிக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப, விஞ்ஞான கலைச் சொற்களை ஒருமைப்படுத்தும் அலுவலை மேற்கொண்டுள்ளது. இது வரையில் இத்துறையில் நடைப்பெற்ற எல்லா வேலைகளும் இக்கழகத்தின் கையிலுள்ளது. இப்பொழுது இந்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரை ஒரே தன்மையும் தரமும் இருப்பதற்காக ஹிந்தி மொழியில் தேவைப்படும் எல்லாக் கலைச் சொற்களையும், எல்லாத் தொழில்நுட்பச் சொற்களையும் தானே காண முடிவு செய்துள்ளது.'

(3) இந்தக் காரியத்திற்கு ஏறத்தாழ 4,000 ஆட்சிச் சொற்களும் குறியீட்டுச் சொற்களும் தேவைப்படலாம். மற்றச் சொற்களைப் பொறுத்த மட்டில் பல்வேறு விஷயங்களைத் தழுவியனவாதலால் எத்தனைச் சொற்கள் தேவைப்படும் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாது.

மேற்கண்ட பதிலில் விஞ்ஞானச் சொற்களையும் தொழில் நுட்பச் சொற்களையும் பொறுத்தமட்டில் ஹிந்தி மொழிக்கும் பிராந்திய மொழிக்கும் ஏற்ற சொற்கள் அமைக்க வேண்டுமென்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகவே தெரிகிறது. மேலும் கல்வித் துறை அமைச்சினுல் நிறுவப் பெற்ற விஞ்ஞானக் கலைச்சொற் கழகம் இவ்வேலையை ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது, என்றும் சொல்லப்பெற்றுள்ளது.

இதனை அடுத்த வாக்கியத்தில் "இந்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தேவையான விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைச் சொற்களை இந்தக் கழகம் தானே தயாரித்து கொடுப்பதாக ஏற்றுக்கொண்டுள்ளது" என்ற தகவல் அறிவிக்கப்படுகிறது. மேலும் "இத்துறையில் இதுவரை செய்யப்பட்டுள்ள வேலைகள் முழுவதும் கழகத்தின் கையில் உள்ளது" என்றும் சொல்லியிருக்கிறது.

எவ்வளவு தூரத்திற்கு ஒருமை படுத்தும் தேவை ஏற்பட்டுள்ளது என்பதை முற்றிலும் அறிந்துகொண்டுள்ளார்களா என்பது பற்றி நாம் ஒன்றும் அறியக்கூடவில்லை. ஹிந்தி மொழியில் தயாரிக்கப்படும் விஞ்ஞான தொழில் நுட்பக் கலைச்சொற்கள் ஒன்றாகவே இருக்கவேண்டும். இவ்வாறு இருப்பதற்கு ஹிந்தி பேசும் ராஜ்யங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் நடைபெற்ற வேலையை ஒன்றுசேர்த்துப் பார்க்கவேண்டும். அன்றியும் ஹிந்தியில் ஆக்கப்பட்ட சொற்கள் கூடுமானவரை மற்ற மொழிகளிலும், மொழிகள் பேசும் ராஜ்யங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் வழங்கப்படும் சொற்களோடு ஒத்துப்போகவேண்டும். நாங்கள் கேள்விப்பட்டதிலிருந்தும் நேரே கண்டதிலிருந்தும் வந்த முடிவை இங்கே தெரிவிக்க வேண்டும். இது வரை பெரிய முறையில் பிராந்திய மொழிகளுக்கும் ஹிந்தி மொழிக்கும் இடையேயுள்ள இக்கலைச்சொற்களைப் பெரியளவில் ஒருமைப்படுத்த எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதும் ஹிந்தி மொழியை வளர்ப்பதற்குத் தேவைப்பட்ட கலைச்சொற்களை ஆக்கித்தரும் பல்வேறு தரத்தாரும் தந்துள்ளவற்றை ஒருமைபடுத்தும் வேலை முற்றிலும் செய்யப்படவில்லை என்பதும் ஆகும். ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் ராஜ்யங்கள், பல்கலைக் கழகங்கள், இலக்கிய கழகங்கள் ஆகியவற்றின் சார்பாக எங்களிடம் சான்று பகர்ந்த அனைவரும் அவர்கள் மிகுதியும் எதிர்பார்த்த உதவி மத்திய அரசாங்கத்திலிருந்து வேகமாக முன்வராமையால் தாங்களே இக் கலைச் சொற்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டதாகவும், ஆட்சித்துறையிலும் உயர்ந்த கல்வித் துறையிலும் இது தேவைப்படும் என்று உணர்ந்ததால் இங்ஙனம் செய்ததாகவும் கூறினர்கள். இதனுடைய பயன் என்னவென்றால் ஒற்றுமைப்படுத்தப்படாத பல கலைச்சொல் அகராதிகள் தனித்தனியே தயாரிக்கப்பெற்றுச் சிலரால் ஒப்புக்கொள்ளப்பெற்று இருக்கின்றன என்பதாகும். இதனுடைய விளைவு பொருத்தமில்லாத பலவற்றைப் பெற்றது தான். இதனை விளக்குமுகமாக மத்திய பிரதேசமும், மத்திய பாரதமும், பீஹாரும், உத்திரப்பிரதேசமும் அவரவர்கள் வெளியிட்டுள்ள ஆட்சிச் சொல் பட்டியலைக் கீழ்க்கண்டவாறு பெயரிட்டுள்ளார்கள் :—

१. प्रशसन शब्दावली (मध्य प्रदेश) ।

२. शमान शब्द प्रकाश ।

३. बिहार राजकीक प्रशसन ।

४. அவர்களுடைய निर्देशिका என்ற அட்டவணையில்.

இவற்றை ஒற்றுமைபடுத்துவதின் அவசியம் பற்றி அனைவரும் நன்கு அறிந்திருப்பினும் மத்திய அரசாங்கம் உடனே இதற்குரிய ஏற்பாட்டைச் செய்து நல்முறையில் ஒருமைத்தன்மையைப் பெறவேண்டுமென்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

பல்வேறு பிராந்திய மொழிகளிலும் ஏற்படுத்தப்படவேண்டிய ஒருமைத் தன்மைபற்றியும் ஒன்றும் தெளிவாக இல்லை. இதுவும் இப்பொழுதே செய்யப்பட வேண்டுமாதலின் இதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ள வல்லுநர் குழுக்கள் ஏற்ற சொற்களை நிறைந்த அளவுக்குப் பிராந்திய மொழிகளில் தயாரித்துள்ளனவா என்பதே ஐயத்திற்கு இடமாகிறது. இந்த ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொரு முக்கியமான மொழியைப் பொறுத்த மட்டிலும் ஒரு பிரதிநிதி இருக்கவேண்டுமெனத் தெரிகிறது. எனவே இந்த குழுக்களில் ஒவ்வொன்றிலும் ஒருசில பிராந்திய மொழிப் பிரதிநிதிகளை வைத்துக்கொண்டிருப்பதில் பயன் இல்லை. இதற்கேற்ற தகுதியுடைய தக்கவர்கள் நிறைந்த அளவில் கிடைப்பது கடினமென்பதையும் எல்லாக் குழுக்களிலும் எல்லா மொழிப் பிரதிநிதிகளையும் இடம்பெறச் செய்வது கடினமென்பதையும் நாங்கள் அறிவோம். இந்தத் துறையில் அடிப்படை வேலைகளில் அந்தந்தப் பிராந்திய மொழிகள் வழங்கும் பிரதேசங்களில் அந்தப் பிராந்திய அரசாங்கமாவது பல்கலைக்கழகமாவது இலக்கிய கழகங்களாவது இவ்வேலையைச் செய்ய அனுமதிக்கப்படவேண்டும். இதனைக் கொண்டு செலுத்துகின்ற அதிகாரிகள்தாம் இங்ஙனம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அறிவார்கள் ஆதலால் ஒருமைப்படுத்தப்பட்ட கலைச் சொற்களையே பயன்படுத்த வேண்டும் என்பதைக் குறிப்பிடுவதோடு நாங்கள் நிறுத்திக்கொள்கிறோம்.

இந்திய அரசாங்கத்தாரால் குறிக்கப்பட்ட தேதிக்குள் இவ்வேலை செய்து முடிக்கப்பட வேண்டுமேயானால் வேலை நடைபெறும் வேகம் இன்னும் துரிதமாக்கப்படவேண்டும். இந்திய அரசாங்கத்தின் கல்வித் துறை அமைச்சர் 1955-ல் வெளியிட்ட, முதல் ஐந்தாண்டுகளில் செய்யப்பட வேண்டிய "ஹிந்தி மொழியின் வளர்ச்சி, பரப்புதல் பற்றிய நிகழ்ச்சி நிரல்" என்பதில் ஹிந்திக் கலைச் சொற்களின் "பெரும்பகுதி அளவு வேலை" முதல் ஐந்து ஆண்டுகளில் முடிந்துவிடும் என்று கூறப்பட்டுள்ளது. அரசியலமைப்புத் தொடங்கி இப்பொழுது ஆறுண்டுகளுக்கு மேல் ஆனாலும் இதுவரை நடைபெற்றுள்ள வேலையை ஹிந்திக் கலைச் சொல்லாக்கத்துக்கு தேவையான வற்றில் "பெரும்பகுதி" என்று சொல்ல முடியாது. இந்த வல்லுநர் குழுக்களில் கடமை யாற்றுகின்ற சிலர் எங்களுக்கு முன் கொடுத்த சாட்சியங்களிலிருந்து, உபகாரச் சம்பளம் பெற்றுக் கொண்டு முழு நேரமாக இதில் உழைக்கின்றவர்களின் எண்ணிக்கையை மிகுதிப் படுத்தினால் விரைவாகவும், பெருவாரியான அளவிலும் வேலை நடைபெறும் என்ற எண்ணம் எங்களுக்கு உண்டாயிற்று. இங்கேயும் கூடத் தகுதியான ஆட்களைப் பெறுவதில் உள்ள தொல்லையை நாங்கள் உணராமலில்லை. என்றாலும் எடுத்துக்கொண்ட காரியத்தைப் பெரிய அளவில் விரைவாக முடிப்பதற்கு எவ்வளவு பேர்கள் அகப்படுகிறார்களோ அவ்வளவு பேர்களையும் எடுத்துக்கொண்டு குறித்த காலத்திற்குள் வேலையை முடிக்கவேண்டும் என்று சிபாரிசு செய்கிறோம். ஆனாலும் ஆட்சித் துறையிலுள்ளவர்களின் பொறுப்பு இது என்பதையும், இது சம்பந்தமான அலுவலில் ஈடுபட்டுள்ளவர்கள் இதைப்பற்றிக் கவனிக்கவேண்டும் என்பதையும் நாங்கள் அறிவோம்.

கலைச் சொற்களைக் கண்டுபிடிக்கின்ற வேலையை மிகவும் துரிதப்படுத்த வேண்டும் என்று நாங்கள் சொல்லும்பொழுது ராஜ்யங்களையும், பல்கலைக் கழகங்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டியதன் அவசியத்தையோ, மற்ற வற்றையோ ஒதுக்கி விடுகிறோம் என்பது கருத்தில்லை. அதற்குப் பதிலாக தரக்குறைவு ஏற்படாத முறையில் ஆனால் இன்னும் விரைவாக வேலை நடைபெற வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகிறோம்.

ஒருமைப்பாட்டைக் காண்பதில் எங்கே எந்தவிதமான காரணத்தால் தொல்லை ஏற்படுகிறது என்பதை நாங்கள் அறிந்துகொள்ள முடியவில்லை. ஒருவேளை இந்திய அரசாங்கத்தின் அமைச்சுகளுக்குள்ளேயே இங்ஙனம் ஒருமைப்பாட்டைக் காண்பதில் இடர்ப்பாடு இருக்குமோ என எண்ணுகிறோம், ராஜ்யங்களைப் பொறுத்தமட்டில் மிகவும் விரைவில் தங்களுடைய

ஆட்சி மொழியை ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிக்கு மாற்றவேண்டும் என்று அவர்கள் நினைப்பதற்கும் அவ்வளவு விரைவாக மத்திய அரசாங்கம் அதனோடு ஒத்துப்போக முடியாதிருப்பதற்கும் அடிப்படையில் இவ்வொருமைப்பாடின்மையே காரணமாக இருக்கலாம். ஒருமைப்பாடு தக்க அளவில் இல்லையானால் விளையப்போகின்ற மொழிக் குழப்பமும் அதனால் விளைகின்ற ஆபத்தும் எங்களுக்கு நன்றாக விளங்குகிறதோடு அதிகாரிகளுக்கும் நன்கு விளங்கும் எனவும் நினைக்கின்றோம். தகுந்த முறையில் மத்திய அரசாங்கம் வழிகாட்டக் கூடுமேயானால், பல்வேறு ராஜ்யங்களும் இந்திய மொழிகளை ஆட்சி மொழிகளாக மேற்கொள்வதற்கு எவ்வளவு விரைவாக முன்னேற வேண்டும் என்று நினைக்கின்றனவோ அந்த விரைவுக்கு ஏற்றபடி இந்த வழிகாட்டும் செயல் பொருத்தமாக இருக்குமேயானால் இதுவரையில் பெற்றதை விட இன்னும் அதிகப்படியான அளவில் ஒருமைப்பாட்டைப் பெறமுடியும். இது மிகவும் தேவை என்பதையும் நடைபெறக் கூடியதுதான் என்பதையும் நாங்கள் நன்கு உணர்கின்றோம். இதற்குரிய அமைப்பு முறையை நாங்கள் சிபார்சு செய்திருப்பது அதிகப்படியான அளவு ஒருமைப்பாட்டைச் செய்வதற்கு உதவியாக இருக்குமென நாங்கள் நம்புகிறோம்.

12. மிக்க கவனத்தோடும், மிகப் பெரும்பான்மையானவர்களைக் கலந்தும் கலைச் சொற்களின் அகராதியைத் தயாரித்து வெளியிடுவதோடு இக் காரியம் முடிந்து விட்டதாக நினைக்கவேண்டாம். உண்மையைக் கூறுமிடத்து இது ஆரம்பமே தவிர வேறில்லை. சொற்களும், சொல்லாட்சிகளும் நிலையான பொருளைப் பெறவேண்டும். சில கருத்துக்களை உடன் கவனத்திற்குக் கொண்டுவரக்கூடிய சக்தியைப் பெறவேண்டும். ஒவ்வொரு சொல்லுக்கும் உள்ள நுண்மையான பொருள் வேறுபாட்டையும், பெற்ற பிறகுதான் பேச்சு வழக்கில் அவை முற்றிலும் பயன் படமுடியும். எல்லாச் சொற்களும் வெறும் குறியீடுகள்தாம். நாம் அவற்றின் மேல் ஏற்றுகின்ற பொருளை வைத்துத்தான் நம்முடைய எண்ணத்தை வெளியிடும் கருவிகளாக அவை பயன்படுகின்றன. மேலும் இப் புதிய சொற்களை நம்முடைய மொழி மரபுக்கு மாறுபடாமல் எவ்வளவு கவனத்தோடு நாம் பொறுக்கி எடுத்தாலும் இலக்கண ஒலியியல் பகுதிகளில் இவை ஓரளவு மாறுபாட்டை பெறத்தான் செய்யும். எனவே இந்தச் சொற்கள் "புகுந்த மொழிகளுள்" முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்னர் இரண்டு நிலைகளை அடையும். முதலாவது இப்புதிய கலைச் சொற்களைப் பயன்படுத்தத் தொடங்குவது. இரண்டாவது நாளாவட்டத்தில் அவற்றின் பொருளை அளந்து, அறுதியிட்டுக் கணிப்பது.

இந்தப் பிரச்னையின் இயல்பிலிருந்து, இறுதிக் கலைச் சொல் கண்டு பிடித்து முடிகின்ற வரையில் நாம் காத்திருக்க வேண்டியதில்லை என்பது நன்கு விளங்கும். ஓரளவுக்கு பொருத்தமான சொற்களைக் கண்டுபிடித்தவுடன் அந்தந்தத் துறைகளில் உள்ள பாடபுத்தகங்களிலும், சட்ட புத்தகங்களிலும் நீதி மன்றங்களிலும் ஆட்சி, நாள் கடிதப் போக்குவரத்துகளிலும், செய்தித் தாளிலும் இவற்றைப் பயன்படுத்த வேண்டும். பல்வேறு வகையான இந்த வழிகளும் ஒரே காலத்தில் கடைப் பிடிக்கப்பட வேண்டும். சில காலத்திற்குப் பிறகு இவற்றின் பொருளை நிர்ணயிக்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

இந்தக் கலைச் சொற்களை ஏற்றுக்கொண்ட பிறகு அனைவரும் இதனை பயன்படுத்தவேண்டும் என்று கட்டாயப்படுத்த வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி முக்கியமாக ஆராயப்படவேண்டும். இவற்றை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் பல்வேறு பகுதியினரையும் மிகுதியான அளவு கலந்து ஆலோசிக்கவேண்டும். ஒருவாறு ஏற்றுக்கொண்ட பிறகு ஒரு சில பிரிவினர் வரையறுக்கப்படாத சொற்களையே மறுபடியும் பயன் படுத்திக் கொண்டு இருப்பார்களேயானால் அது மொழிக் குழப்பத்தை வரவேற்பதாகும். இங்ஙனம் கூறுவதில் ஓரளவு உண்மையுள்ளது என்றாலும் மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள், கலைக்கழகங்கள், கல்வி அதிகாரிகள்,

இலக்கிய கழகங்கள் ஆகியவர் எல்லாம் சேர்த்து கலந்து ஆலோசித்து அதன் பயனுக்க் கலைச்சொற்கள் பொறுக்கி எடுக்கப் படுமேயானால் இவற்றை அனை வரும் உபயோகப்படுத்தவேண்டும் என்று கட்டுப்பாடு செய்யவேண்டிய தேவை யிராது. மேலும் சில புதிய சொற்களை அவற்றை உபயோகப்படுத்தவேண்டிய கடமையுடையவர்கள் உபயோகப்படுத்திப் பரீட்சித்துப் பார்த்து அதனுடைய பயனை அறிந்து கொள்வதற்கு ஏற்ற முறையில் விட்டுக் கொடுக்கும் இடல்பும் ஓரளவு இருத்தல் வேண்டும். இங்ஙனம் பரீட்சித்துப் பார்த்து மாறுபாடுகள் தேவைப்பட்டால் அவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்தை உத்தேசித்தே சில காலங் கழித்து மறு மதிப்பீடு செய்யவேண்டும் என்று கூறியுள்ளோம். சாதாரண நிலையில் அனை வரும் ஏற்றுக்கொள்கின்ற சொற்களைப் பயன்படுத்தவேண்டும் என்ப தோடு அதனை மேலும் வளர்ப்பதற்கும், பரீட்சித்துப் பார்த்துப் புதிய சொற்களை ஏற்றுக்கொள்வதற்கும் உரிமை வழங்கப்பட வேண்டும். இப் புதிய கலைச் சொற்களைப் பற்றி, செய்தித் தாள்களிலும், வகுப்பு அறைகளிலும், நீதி மன்றங்களிலும், சட்ட சபைகளிலும், பலர் கூடுகின்ற இடங்களிலும் விரிவான முறையில் ஆராயவேண்டும். மறு மதிப்பீடு செய்யப்பட்ட கலைச் சொற்களை இறுதியாகப் பெற்ற வடிவத்தோடு இந்த ஆராய்ச்சிகளின் பின்னர் முடிவு செய்ய வேண்டும். மொழிக் கொள்கை யைப் பற்றிச் சிந்திக்கும் பொழுதெல்லாம் ஒரு தர்ம சங்கடமான நிலைமை நம் கவனத்திற்கு வருகிறது. “கட்டளைகள்” மூலம் மொழியைப் புகுத்த முடியாது. ஆனால் அதே நேரத்தில் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் கருவியில் ஒரே நிலையான தன்மை இல்லையானால் மொழிக் குழப்பம்தான் மிஞ்சும். இவை இரண்டினிடையேதான் தர்ம சங்கட நிலை ஏற்படுகிறது. இது பற்றி இந்த சந்தர்ப்பத்தில் முடிவான கருத்தாக ஒன்றையும் கூறாமல் பிரச்னைகள் எழும்பொழுது முடிவு செய்துகொள்ளப்பட விட்டு விடுகிறோம். பலரையும் கலந்து ஆலோசித்துக் கலைச் சொற்களைப் பொறுக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு எல்லாத் துறையிலும் இருத்தலி னால் இங்ஙனம் பொறுக்கி எடுக்கப்பட்ட சொற்களை அனைவரும் ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்தப்படுத்தும் நிலை அநேகமாக வராது என்றே நினைக் கிறோம்.

கலைச் சொற்களைத் தேடிப் பிடிக்கும் வேலைக்கு ஓரளவு தன்னிச்சை யான அதிகாரங் கொண்ட ஒரு குழு இருப்பது, மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள ஒரு அமைச்சின் கீழ் இவ்வேலை நடைபெறுவதைவிட அதிக நன்மை பயக்காதா, என்ற வினவை நாங்கள் ஆராய்ந்துள்ளோம். இன்றுள்ள முறையில், எங்களுக்குத் தெரிந்த வரையில், தேர்ந்தெடுக்க பட்ட கலைச் சொற்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளப்படுமுன் அமைச்சர் குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அனுப்பப்படவேண்டுமாம். அமைச்சர் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாதிரி வேலையைக் கண் காணிப்பதற்கு நேரம் கிடைக்காது என்பது சொல்லத் தேவையில்லை. உண்மையைச் சொல்லப் போனால் இங்ஙனம் கலைச் சொற்களைத் தேடி எடுக்கும் கடமை அரசியலாரின் எல்லைக்குட்பட்டது அன்று ஆதலால், இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றை யெல்லாம் ஒவ்வொரு முறையும் அமைச்சர் குழுவுக்கு அங்கீகாரம் பெற அனுப்புவது என்பது பொருத்த மான செயலா என்று நாங்கள் சந்தேகிக்கிறோம்? இதற்குப் பொறுப் பேற்றுக்கொண்டுள்ள மத்திய அரசாங்க அமைச்சு எந்தெந்த வழிகளை மேற்கொள்ளவேண்டும், எந்தப் பயனை அடைய முயலவேண்டும் என்ற வழி துறைகளை வகுத்து அதற்கு ஏற்ப ஒரு அமைப்பை ஏற்படுத்துவதோடு நிறுத்திக்கொண்டு ஏனைய காரியங்களை யெல்லாம் அந்த அமைப்பையே செய்யுமாறு விட்டுவிடுவதே இலாபகரமானது. அரசாங்கத்தின் ஒரு இலாகா இத்தகைய ஒரு காரியத்தை மேற்கொள்வது பொருத்தமா அன்றி ஓரளவு அதிகாரம் பெற்ற ஓர் அமைப்பு இதனைச் செய்வது பொருத்தமா என்ற கேள்வி ஒருபுறம் இருக்க, இத்துறையில் மிக நீண்டகாலத் திட்டம் ஒன்றை வகுத்துக்கொண்டு இது பற்றியும் இன்னும் இதனைத் தொடர்ந்த மொழி வளர்ச்சி திட்டங்கள் பற்றியும் ஒரு தொடர்ந்த

கொள்கையை மேற்கொள்வது உசிதம் என்றே நாங்கள் நினைக்கிறோம். நம்முடைய மொழிக் கொள்கையை முற்றிலும் நிறைவேற்றுவதற்குத் தகுதியான மொழிச் சீர்திருத்தமும், மொழி வளர்ச்சியும் இருபது அல்லது முப்பது ஆண்டுகளுக்கு விரித்து வைத்துக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாகச் செய்யப்படவேண்டிய காரியங்களாகும். இந்த வேலையில் ராஜ்ய அரசாங்கங்களும், யூனியன் அரசாங்கமும், ஏனைய அதிகாரிகளும் சிரத்தை எடுத்துக்கொண்டு ஈடுபடவேண்டும். எந்த ஒரு அரசியல் சூழ்நிலையின் சாதாரணமாக ஒரு அரசாங்கம் தொழிற் படுகிறதோ அதனைக் கடந்து அப்பாலும் செல்லுகின்ற முயற்சி இது என்பதை அறியவேண்டும். எனவே இவ்வேலை பற்றிய திட்டம் மிக முக்கியமானது. என்று நாங்கள் கருதுகின்றோம். பதினைங்காவது பகுதியில் நம்முடைய மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதற்கு எந்த அமைப்புத் தகுதியானது என்ற பிரச்னையை ஆராயும்பொழுது இத்தகைய வேலை எங்கே நிகழ்த்தப்படவேண்டும் என்பது பற்றியும் எங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளோம்.

பகுதி VI

யூனியன் மொழியும் கல்வி முறையும்

1. நாட்டின் கல்வி முறையில் யூனியன் மொழி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் இவற்றின் இடம் யாவை என்பது பற்றி முடிவான திட்டத்தை வகுக்கவேண்டும் என்று எங்கள் நிர்மாணக் கோரிக்கை சொல்லவில்லை என்றாலும் எங்கள் நிர்மாணக் கோரிக்கையை நிறைவேற்றும்பொழுது இந்தப் பிரச்னைகளை நேரடியாக ஆராயவேண்டியது கடமையாகிறது. எங்கள் நிர்மாணக் கோரிக்கைகளில் யூனியன் ஆட்சிக் காரியங்களில் ஹிந்தியைப் படிப்படியாகப் பயன் படுத்த வேண்டிய வழி துறைகள் பற்றிய சிபார்சுகளும், ஹிந்தியை ராஜ்யங்களுக்குள் கருத்து பரிமாறிக்கொள்ளப் பயன் படுத்துவது பற்றியும், சட்ட சபைகள் சட்டம் வகுப்பதற்கு இம்மொழியைப் பயன்படுத்துதுவபற்றியும், சட்டத் துறையில் உயர்ந்து நிற்கின்ற உயர் நீதி மன்றங்களிலும் மிக உயர் நீதி மன்றத்திலும் (சுப்ரீம்) கோர்ட்டிலும், இம்மொழியை வழங்கும் வழி துறைகள் பற்றியும் ஆராய்ந்து சிபார்சு செய்வதே எங்கள் நிர்மாணக் கோரிக்கைகள் ஆகும். ஆட்சித் துறையிலும், நீதித் துறையிலும் இங்ஙனம் மொழி மாற்றம் செய்வதனுடைய கருத்து இம் முக்கியமான துறைகளில் நடைபெறும் வேலையைப் பொது மக்களுக்குப் புரியக் கூடிய முறையில் நடத்த வேண்டும் என்பதேயாகும். இந்நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலை வரையில் உள்ள மக்கள் அனைவராலும் புரிந்து கொள்ளப்படக் கூடிய ஒரு மொழி இருந்திருக்குமேயானால் ஆட்சித் துறையிலும், சட்டத் துறையிலும் மொழி மாற்றம் செய்கின்ற இதனைப்போல, தேச மக்கள் அனைவரையும் பாதிக்கின்ற ஒரு பிரச்னை தோன்றியிருக்கப் போவதில்லை. அது அவ்வாறு இல்லாமையினால் குறைந்த எல்லையையுடைய இந்தப் பிரச்னையை ஆராயும்பொழுது கூட, அது "தேசிய வாழ்க்கையின் உள் துறையை" பாதிப்பதாக உள்ளது. ஒரு நாட்டில் மொழி யறிவை வளர்ப்பதற்கும், இன்னும் சொல்லப்போனால் எல்லாத் துறைகளிலும் அறிவை வளர்ப்பதற்கும் அந் நாட்டின் கல்வி முறைதான் மிகவும் முக்கியமான காரணமாக இருக்கிறது. யூனியன் அரசாங்கத்தில் ஆட்சி செலுத்துபவர்களும், ராஜ்ய அரசாங்கத்திலும், நீதி மன்றங்களிலும், நீதியைத் தழுவிய பல துறைகளிலும் கடமை யாற்றுகின்றவர்களனைவரும் நாட்டின் கல்வி முறையில் பயின்று பல்வேறு வகையான அறிவோடு அவர்கள் கடமையைச் செய்வதற்குரிய மொழி யறிவையும் பெற்றுத் தேர்ந்து வருகின்றவர்களே யாவார்கள். எனவே கல்வி முறையில் ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் என்பவற்றைப் பற்றி, அவையே போதிக்கப்படினும் அன்றி இவை போதனு மொழியாக இருப்பினும் இம்மொழியறிவு போதிக்கப்படும் நிலையைப் பற்றி ஆராய்வது நம்முடைய கடமையாகிறது.

அதே நேரத்தில் நாட்டின் கல்வி முறையின் பல்வேறு உறுப்புக்களையும், பகுதிகளையும் ஆராய்வதற்காக இக்கழகம் நிர்மாணிக்கப்படவில்லையென்பதையும் எங்கள் கருத்தில் கொண்டுவந்திருக்கிறோம். கல்வித் துறை மிக விரிந்துள்ளது என்பதும், சிக்கலான பல பிரச்னைகளை உடையது என்பதும் நாங்கள் அறிந்ததே. இவற்றை ஆராய்ந்து அறிக்கைகள் வெளியிடக் கணக்கற்ற குழுக்களும், கழகங்களும் முயன்றுள்ளன. சமீப காலத்தில் பல்கலைக் கழகக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆகிய இரண்டு முக்கியமான பகுதிகள் பற்றி இரண்டு கழகங்கள் ஆராய்ந்து தம்முடைய முடிவைத தெரிவித்துள்ளன. பல்கலைக் கழகக் கல்விபற்றிய கழகம் 1949 ஆகஸ்டில் அறிக்கையை வெளியிட்டது. அதாவது 26 ஜனவரி 1950-ல் இந்திய அரசியலமைப்பு தொடங்குவதற்குச் சற்று முன்னராகும். இக்கழகத்தின் சிபார்சுகளில் இந்திய மொழிப் பிரச்னை நன்கு ஆராயப் பெற்று, எந்த வழிகளில் இவற்றிற்கு முடிவு காணலாம் என்பதும்

பேசப்பெற்றுள்ளது. என்றாலும் அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் மொழிப் பிரச்னைபற்றி என்ன முடிவுகள் காணவேண்டும் என்றுள்ள குறிப்புகள் இந்தக் கழகம் தன்னுடைய அறிக்கையை சமர்ப்பிக்கும் பொழுது இல்லை. இடைநிலைக் கல்விபற்றிய கழகம் தன் அறிக்கையை 1953 ஜூன் மாதத்தில் வெளியிட்டது. அதாவது இந்திய அரசிய லமைப்பில் மொழிப் பிரச்னையின் முடிவை நாடு ஏற்றுக்கொண்ட பிறகு பல நாட்கள் கழித்தாகும் இது. எங்கள் கழகத்தின் முக்கியமான நோக்கம் யூனியனுக்கும் ராஜ்யங்களுக்குள்ளும் எந்த மொழி தேடலாம் என்பதைப்பற்றி மட்டுமே ஆராயவேண்டியதாகும். அதுபற்றி ஆராய்கையில், இனி வருங்காலத்தில் நாட்டில் எத்தகைய மொழியிடல் நிலவும் என்பது பற்றியும், அதனுடைய பொது அமைப்பு எப்படி இருக்கும் என்பதுபற்றியும் ஆராயவேண்டியிருந்தது. இத்துறையில் நாட்டின் பல்வேறு மொழிகள் நாட்டின் கல்வி முறையில் எந்த இடத்தைப் பெற வேண்டும் என்பது பற்றியும், சில கருத்துக்கள் எங்களுக்குத் தோன்றின. இந்த சந்தர்ப்பத்தில் இந்தக் கருத்துக்களையும் நாங்கள் வெளியிட விரும்புகிறோம். பொதுப்படையாகப் பல்வேறு மொழிகளும், எந்த அளவுக்கு அறிவை வளர்க்கக் கல்வி முறையில் பயன்படுத்தப் படலாம் என்பதைப்பற்றியே இங்கு கூறியுள்ளோம். மேலும் எவ்வளவு காலத்திற்கு, எந்த நிலையில், பலவற்றிற்கும் தேவைப்படுகின்ற மொழி யறிவைப் போதிக்கலாம் என்பதுபற்றியும், எங்கள் கருத்தை வெளியிடத் துணிந்துள்ளோம். எனவே பொதுவான தராதரத்தை பற்றியே எங்கள் சிபார்சுகள் பேசுகின்றன. கல்வி முறையை வகுக்கின்றவர்கள் இந்தச் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு பல்வேறு வகுப்புக்களுக்கும் பாடத் திட்டங்கள் வகுப்பதற்கு முன்னால் ஏனைய கல்வி சம்பந்தமான பகுதிகளையும் மனத்திற் கொண்டு முடிவுக்கு வரவேண்டும்.

2. இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் "மத்திய அரசாங்கத்தாலும், மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் பெற்றவர்களாலும், தொழிற் கல்வி, கைத்தொழில் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றைப் போதிக்கின்ற பகுதிகள் தவிர, பல்கலைக் கழகங்கள் உள்ளிட்ட எல்லாக் கல்வியும்"[1] ராஜ்ய சட்டசபைகளின் அதிகாரத்திற்கும், நிறைவேற்று அதிகாரிகளுக்கும் உட்பட்ட ஒரு விஷயமாகும். பனாரஸ் ஹிந்துப் பல்கலைக் கழகமும், அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகமும், டில்லி பல்கலைக் கழகமும், சாந்தினி கேதனிலுள்ள விஸ்வ பாரதி பல்கலைக் கழகமும், மற்றும் பாராளு மன்றத்தால் தேசீயச் சிறப்புடையன என்று சட்டஞ் செய்யப்பெற்ற ஏனைய கழகங்களும், யூனியன் பட்டியலில் இடம் பெறுகின்றன. விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வியை போதிக்கின்ற அமைப்புக்கள் மத்திய அரசாங் கத்தால் முழுவதுமோ அன்றி ஒரு பகுதியோ பண உதவி பெற்றுப் பாராளுமன்றத்தால் தேசீயச் சிறப்புடையன என்று சட்டம் செய்யப்பெற்ற அமைப்புக்களும் யூனியன் லிஸ்டில் இடம் பெறுகின்றன. மேலும் "யூனியன் அதிகாரம் பெற்ற பிராந்தியங்களில் உள்ளவையும், தொழிற் கல்வி, கைத் தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி தருகின்ற அமைப்புக் களும், பிரத்தியேகமான ஒரு துறையிலோ அல்லது ஆராய்ச்சித் துறை யிலோ கவனம் செலுத்த ஏற்பட்ட அமைப்புக்களும், யூனியன் பட்டியலில் இடம் பெறுகின்றன. யூனியன் பட்டியலில் 66-வது உறுப்பின்படி உயர் தரக் கல்வி போதிக்கின்ற அல்லது ஆராய்ச்சி செய்கின்ற அல்லது விஞ் ஞானம், தொழில் நுட்பக் கல்வி தருகின்ற அமைப்புகளிலெல்லாம் தராதரத்தை நிர்ணயிப்பதும், ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதும் பற்றிய குறிப்பு சேர்க்கப்பட்டுள்ளது. யூனியன் அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங் களும் அவற்றின் சட்டம் இயற்றும் சக்தியாலும், நிறைவேற்று அதிகாரத் தாலும் தேவையான பகுதிகளில் எங்களுடைய சிபார்சுகளை ஆராய்ந்து கல்வி முறையில் தேவைப்பட்ட இடங்களில் சிபார்சுகளை நாட்டின் மொழிப் பிரச் னையைத் தீர்ப்பதற்குரிய முறையில் நிறைவேற்றவேண்டும்.

3. அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் மிக முக்கியமான ஒன்று நம் முடைய கவனத்தைக் கவர்வதாக உள்ளது. நாட்டின் கல்வி முறையில்,

---

[1] ஏழாவது ஷெட்யூலில் "ராஜ்யப் பட்டியல்" என்பதில் பதினொன்றுவது உறுப்பைக் காண்க.

மொழிக் கல்வியைப்பற்றி அது பெரிதும் தொடர்புடையதாக உள்ளது என்பது எங்கள் கருத்தாகும். இந்திய அரசியலமைப்பின் ராஜ்ய கொள்கைகள் வழிகாட்டியில் 45-வது விதியில் "ஒவ்வொரு ராஜ்யமும், அரசியலமைப்பு ஆரம்பித்த பத்து வருஷங்களுக்குள் பதினாலு வயது முடிகின்ற வரையில் இலவச, கட்டாயக் கல்வி எல்லோருக்கும் வழங்க முற்படவேண்டும்," என்று பேசுகிறது. இதனையொட்டி தேசம் முழுவதிலும் வியக்கத்தக்குந்த முறையில் ஆரம்பக் கல்வி வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ராஜ்யமும் அரசியலமைப்பில் சொல்லப் பட்ட இந்த வழிகாட்டித் துறையை மேலும் எங்ஙனம் கொண்டு செலுத் தலாம் என்று ஆராய்ந்துகொண்டு இருக்கின்றன. பகுதி நாலில் இத்தகைய முக்கியமான ஒரு கொள்கை அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள காரணத்தை நாங்கள் ஆராய்ந்துள்ளோம். அதாவது நாட்டின் ஆட்சி முறையில் அதிக கவனம் செலுத்தக்கூடிய அளவிற்கு இந்திய வாக் காளர்கள் அனைவரையும் ஓரளவு கல்வி பெற்றவர்களாக ஆக்குவதை இதனுடைய நோக்கம் என்றும், பிராந்திய மொழிகளைத் தவிர அகில இந்திய மொழியாகக் கருதப்படுகின்ற ஒரு மொழியில் அறிவு பெற்றால்தான் இது சாத்தியம் என்றும், அப்படிப்பட்ட ஒரு மொழியாக ஆங்கிலம் இருக்க முடியாது என்றும் கூறப்பெற்றது. எனவே நம்முடைய கல்வி முறை எங்ஙனம் அமைய வேண்டுமெனில் பதினாலு வயது முடிகின்ற பொழுது ஒவ்வொருவனும் ஹிந்தி மொழியில் தேவையான அளவுக்குப் பயிற்சி பெறக்கூடிய முறையில் கல்வி அமைப்பு இருத்தல்வேண்டும். அங்ஙனம் இருந்தால் ஒவ்வொரு இந்தியப் பிரஜையும் அவன் விரும்பினால் அகில இந்திய முறையில் நடைபெறுகின்ற பொது வாழ்க்கையோடும், நடைமுறைகளோடும் தொடர்பு கொள்ளவும், அதனைப் புரிந்து கொள்ளவும் அவனால் முடியும். அன்றியும் யூனியன் அரசாங்கத்தின் செயல் முறைகளை அறிந்துகொண்டு அதற்கு ஏற்ப அவன் கருத்துக்களைச் சிந்திக்கவும் இது உதவும். அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள ஏற்பாட்டின்படி பல்வேறு ராஜ்யங்களில் 1960-குள் இதனை எவ்வளவு தூரம் செய்து முடிக்க முடியும் என்பது பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. சில ராஜ்யங்களில் ஓரளவு காலதாமதம் இருப்பினும் எங்கள் வாதத்தின் அழுத்தம் குறையாது.

4. மொழிக் கல்வியிலும், போதனா மொழியாகப் பயன் படுவதிலும் இன்றைய நிலையில் ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் என்பவை இன்று பெற்றுள்ள இடம் பற்றி ஒன்பதாவது பிற் சேர்க்கையாக இந்த அறிக்கையில் ஒரு பகுதியை சேர்த்திருக்கிறோம். இது பற்றி இன்னும் விரிவானதும் குறிப்பிட்டதுமான பல சமாசாரங்கள் பல்வேறு ராஜ்யங்களைப் பற்றியும், பல்கலைக் கழகங்கள் பற்றியும் அட்டவணையைத் தயாரித்து "அனுபந்தம்[1]" மூன்றுவது உறுப்பில் சேர்த்துள்ளோம். பொதுவாகப் பேசுமிடத்து தேசம் முழுவதிலும் ஆரம்பக் கல்வியை பொறுத்தமட்டில் பிராந்திய மொழியே போதனா மொழியாகவும், பிராந்திய மொழியைத் தாய் மொழியாக இல்லாத குழந்தைகள் உள்ள இடத்தில் தகுந்த அளவு எண்ணிக்கையுடையவர்களாக அவர்கள் சேர்ந்தால் அவர்கள் தாய் மொழியே போதனா மொழியாகவும் அமைந்துள்ளன. தேசத்தின் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் அது பிராந்திய மொழியாக இருக்கின்ற காரணத்தால் போதனா மொழியாக இருந்து வருகிறது. பஞ்சாப், பெப்சு ஆகிய இரண்டு இடங்களிலும் தனிப்பட்ட சூழ் நிலை காரணமாக பஞ்சாபி பேசுகின்ற குழந்தைகளுக்கு ஹிந்தி கட்டாய பாடமாகவும் ஹிந்தி பேசுகின்ற குழந்தைகளுக்குப் பஞ்சாபி கட்டாய பாடமாகவும் ஆரம்பக் கல்வி நிலையி லிருந்தே இருந்து வருகின்றன. சில பகுதிகளில் இந்தப் பிராந்திய மொழியினின்றும் வேறு மொழியைத் தாய் மொழியாக உடைய கூட்டத் தாரின் குழந்தைகள் பற்றிய பிரச்னை எழுகிறது. மத்திய கல்விக் கழக அறிவுரைக் கழகம் 1949-ல் இதனை ஆராய்ந்து கீழ்கண்ட முடிவைச் செய்துள்ளது.

சிறியவர் அடிப்படைக் கல்வி நிலையில் போதனா மொழி குழந்தையின் தாய் மொழியாகவே இருக்கவேண்டும். எங்கே தாய் மொழியானது

[1] அச்சு இயற்றப்படவில்லை.

ராஜ்ய மொழி அல்லது பிராந்திய மொழியிலிருந்து வேறு பட்டதாக உள்ளதோ அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் நாற்பது, பிள்ளைகளுக்குக் குறையாமல் இருந்தால் எல்லா வகுப்புக்களிலும் சொல்லித்தரக்கூடிய ஒரு ஆசிரியரையாவது நியமித்து அந்த குழந்தைகளின் தாய் மொழியில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். தாய் மொழியிலிருந்து வேறு பட்டதாகப் பிராந்திய அல்லது ராஜ்ய மொழி இருக்குமேயானால் அதனை மூன்றாவது வகுப்புக்கு முற்படாமலும், சிறியவர் அடிப்படைக் கல்வி நிலைமைக்குப் பிற்படாமலும் புகுத்தவேண்டும். இடைநிலைக் கல்வி பிராந்திய மொழி நிலையில் போதனா மொழியாக இருத்தலினால் குழந்தைகள் சிறியவர் அடிப்படை நிலைக்கு மேல் இரண்டு வருஷங்கள் வரை அவர்களுடைய தாய் மொழியிலேயே விடை எழுத அனுமதிக்கப்பட வேண்டும்.

“ஒரு பகுதியில் பிராந்திய, அல்லது ராஜ்ய மொழியினின்றும் வேறு மொழியைப் பேசும் பிள்ளைகளின் எண்ணிக்கை ஒரு தனிப்பட்ட பள்ளிக் கூடம் ஏற்படுத்துவதற்கு வேண்டிய அளவு இருக்குமேயானால் அத்தகைய ஒரு பள்ளிக்கூடத்தில் போதனா மொழி அந்தக் குழந்தைகளின் தாய் மொழியாகவே இருக்கலாம். இத்தகைய ஒரு ஏற்பாடு சிறப்பாகப் பெரிய நகரங்களிலும், பிற மொழி பேசும் கூட்டத்தார் பெருவாரியாகத் தங்கி யிருக்கின்ற பகுதிகளிலும், இடம் மாறுகின்ற பிற மொழி பேசுகின்ற ஜனத்தொகை தங்கியுள்ள இடங்களிலும் செய்யப்படலாம். பிராந்திய அல்லது ராஜ்ய மொழியினின்றும் மாறுபட்ட போதனா மொழியின் மூலம் கல்வி கற்பிக்கும் இத்தகைய பள்ளிக்கூடங்களை ஏற்றுக்கொண்டு நிலைக்கச் செய்ய ராஜ்ய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.”

இங்கு மேற்கொண்டுள்ள தீர்மானத்தின் மூலம் இந்தப் பிரச்னையை திருப்திகரமாக தீர்த்துவிட்டப்படியால் இது பற்றி நாம் கவலைப்படவேண்டிய தில்லை. நம்முடைய நோக்கப்படி ஹிந்தி பேசாத பகுதிகளில் ஆரம்பக் கல்வி நிலையில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கவேண்டுமா என்ற கேள்வி பற்றியே நாம் ஆராயவேண்டும்.

சில ராஜ்யங்களில் ஆரம்பக் கல்வி நிலையில் கடைசி வகுப்பிலிருந்து ஹிந்தியும் ஒரு பாடமாக கற்பிக்கப்படுகிறது. குழந்தைகள் மிக இளைய வர்களாக இருக்கும் பொழுதுதான் மொழியைக் கற்றுக்கொள்ள மிகவும் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தால் ஹிந்தியை ஆரம்பக் கல்வி நிலையிலேயே புகுத்த வேண்டும் என்று எங்களுக்கு சொல்லப்பெற்றது. கல்வித் துறையில் இக்கூற்றின் குறைவு, நிறைவு பற்றி எங்களுக்கு ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. மேலும் ஆரம்பக் கல்வி நிலை வயதாகிய ஐந்து அல்லது ஆறில் தொடங்கிப் பத்து வயதுவரையில் உள்ள குழந்தைகளுக்குத் தங்கள் தாய் மொழியைக் கற்பதோடு மற்றொரு மொழியைக் கற்பது பாரமாக இருக்கும் என்ற பொதுவான நம்பிக்கையைப் போக்குவதற்கு இவர்கள் கூற்று வலிமையுடையதா என்பது பற்றியும் எங்களுக்கு ஒன்றும் தெளிவாகவில்லை. ஹிந்தியை ஆரம்பக் கல்வி நிலையின் முடிவிடத்திலிருந்து தொடங்குவதா வேண்டாமா என்பது பற்றிய முடிவைக் கல்வி வல்லுநர்களுக்கு விட்டுவிடுகிறோம். எங்களைப் பொறுத்த மட்டில் இங்ஙனம் செய்வது அவசியமில்லை என்றே படுகிறது.

இடைநிலைப் பள்ளிக்கூடங்களில் அதாவது நடுத்தரக் கல்வி நிலையிலும், உயர்தரக் கல்வி நிலையிலும் ஏறத்தாழ எல்லாவிடங்களிலும் போதனா மொழி பிராந்திய மொழியாகவே இருந்துவருகிறது. பல்கலைக் கழகங் களைப் பொறுத்தமட்டில் போதனா மொழி இடைநிலை வகுப்பிலும், பெரும்பான்மையும் ஆங்கிலமாகவே இருந்து வருகிறது. என்றாலும் பல பல்கலைக்கழகங்கள் ஒரு இந்திய மொழியைப் போதனா மொழியாக ஆக்கத் தொடங்கியுள்ளன. சில பல்கலைக் கழகங்கள் ஒரு காலத்தைக்

குறிப்பிட்டுக் கொண்டு அந்தக் கால எல்லைக்குள் படிப்படியாக ஆங்கிலத்தைப் போதனை மொழி நிலையிலிருந்து மாற்றிப் பல்கலைக் கழகக் கல்வி நிலையில் சில பகுதிகளிலாவது சில துறைகளிலாவது இந்திய மொழி ஒன்றைப் போதனை மொழியாக்க முயன்று வருகின்றன. சிறப்பாக ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் சில பல்கலைக் கழகங்களில் கலைத் துறைப் பகுதிகளில் பட்ட மளிப்புக் கல்விவரையில் ஹிந்தியையே போதனை மொழியாக ஆக்கியுள்ளார்கள். தவிர்க்க முடியாத சில சந்தர்ப்பங்களில் இவ்விடங்களில் ஆங்கிலத்தையும் போதனை மொழியாகக் கொள்ளலாம். இங்ஙனம் ஹிந்தியைப் போதனை மொழியாகக் கொண்ட இடங்களில் ஹிந்தி மூலம் கற்பவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. பி.எஸ். ஸி. படிப்பிற்கும், வாணிகத்துறை பட்டத்திற்கும் மட்டுமே பெரும்பாலும் ஆங்கிலம் போதனை மொழியாக இருந்து வருகிறது. ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள சில பல்கலைக் கழகங்களில் ஹிந்தியோடு ஆங்கிலமும், விருப்பப் பாடமாக அமைந்துள்ளது. பட்டப் படிப்புக்கு மேற்படி பகுதியிலும் தொழில் நுட்பப் படிப்பிலும் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலமே போதனை மொழியாக இருந்து வருகிறது.

ஆங்கிலத்தை மொழியாகக் கற்பிக்கும் பிரச்னையைப் பொறுத்தமட்டில் ஆரம்பக் கல்வி நிலையில் மொழியாகக் கூட ஆங்கிலம் கற்பிக்கப்பட வில்லை, என்பது தெரியவரும். நடுத்தர வகுப்புகளில்தான் பெரும்பான்மையான ராஜ்யங்களில் ஆங்கிலம் தொடங்கப்படுகிறது. ஒரு சில ராஜ்யங்களில் உயர்தரக் கல்வி நிலையில்தான் இது தொடங்கப்படுகிறது. பெரும்பான்மையான ராஜ்யங்களில் இடைநிலை வகுப்புக்களுக்குத்தான் இது கட்டாய பாடமாக அமைந்துள்ளது என்றாலும் ஒரு சில ராஜ்யங்களில் இடைநிலைப் பகுதி முழுவதிலுமோ அன்றி ஒரு பகுதியிலோ இதனை விருப்பப்பாடமாக வைத்து இது பற்றிய சோதனை நடைபெறுகின்றது.

ஹிந்தி பேசும் எல்லா ராஜ்யங்களிலும் ஹிந்தி மொழி கட்டாய பாடமாக அமைவதோடு போதனை மொழியாகவும் உள்ளது. ஹிந்தி பேசாத ராஜ்யங்கள் சிலவற்றிலும் இது கட்டாய பாடமாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ராஜ்யங்களில் வெவ்வேறு நிலைகளில் இது விருப்ப பாடமாக அமைக்கப்பட்டுள்ளது. சில ராஜ்யங்களில் இது விருப்ப பாடமாக இருப்பினும் இதற்குரிய ஆசிரியர்களை நியமிப்பது பள்ளிக்கூட நிர்வாகஸ்தர்களைப் பொறுத்தது. இறுதியாகச் சொல்லப்பட்ட ராஜ்யங்களில் இது விருப்ப பாடமாக இருப்பினும் பரீக்ஷையில் “தேறுவதற்கோ” அல்லது “முதலாவது, இரண்டாவது இடத்தைப்” பெறுவதற்கோ இது தேவைப்பட வில்லை. மற்றும் சில ராஜ்யங்களில் இவை ஒன்று அல்லது இரண்டு காரியங்களுக்குமே இப்பாடத்தைக் கணக்கெடுத்துக்கொள்கிறார்கள்.

5. கல்வி முறையைப் பொறுத்தமட்டில் நம்முடைய கவனம் என்ன வென்றால் மேலே சொல்லப்பட்ட ஹிந்தி மொழி பற்றிய அறிவைத் தருவதும், ஆங்கிலம், பிராந்திய மொழிகள் இதனோடு பெற்றுள்ள தொடர்புபற்றியும்தான். கல்வி ஏணியில் எந்தெந்த நிலையில் ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் எந்த அளவுக்குப் போதிக்கப்படலாம் என்பதை நிர்ணயிப்பதே இப்பொழுது நாம் எடுத்துக் கொண்டுள்ள கணிப்பாகும். நம்முடைய கொள்கைக்கு ஏற்ப எந்த அளவு எந்த முறையில் இந்த மொழிகளைப் பற்றிய அறிவு பல்வேறு நிலைகளில் தரப்படலாம் என்பதை குறிப்பிடுவோம். அரசியலமைப்பால் எடுத்துச் சொல்லப்பெற்ற கட்டாய, இலவச ஆரம்பக் கல்வியை ஒவ்வொரு ராஜ்யமும் அமைத்துக் கொடுக்கும் பொழுது கீழ்க்கண்ட அளவு, மொழியறிவு தரப்படவேண்டும். பதினான்காவது வயது முடிகின்ற வரையில் ஏறத்தாழ எட்டு வருஷப் பள்ளிப் படிப்பைக் குழந்தைகள் பெற்றிருப்பார்கள். இந்தக் கால அளவு முழுவதும் அவர்கள் பிராந்திய மொழியை (அல்லது தாய் மொழியை) மற்றப் பாடங்களை அறிவுறுத்தும் போதனை மொழியாகவும், அதையே ஒரு பாடமாகவும் கற்கின்றார்கள். ஆரம்பக் கல்வியின் முதல் நான்கு ஆண்டுகளில் பிராந்திய மொழியை மட்டுமே

கற்று இருக்கிறார்கள். இந்நிலையில் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் குறைந்த அளவு யூனியன் மொழியாகிய ஹிந்தி மொழியைக கற்பதற்கு எல்லாக் குழந்தைகளுக்கும் வசதி செய்யவேண்டும். இதுவும் கட்டாயக் கல்வி வயதாகிய பதினாலு வயது முடிவதற்குள் இருத்தல் வேண்டும். ஹிந்திக்கும், இந்தியாவின் பெரும்பாகங்களில் வழங்கும் பிராந்திய மொழிகளுக்கும் இடையே சொல்லாட்சிகள் மரபுகள் ஆகியவற்றின் ஒற்றுமை உண்டு. இந்தியாவின் வாழ்க்கைப் பண்பாட்டிலும், சமுதாய அமைப்பிலும் உள்ள ஒற்றுமையை இவை எடுத்துக் காட்டுவதினாலும், இவை அனைத்தையும் மனத்தில் கொண்டு குழந்தைக்கு ஹிந்தியைப் பொறுத்தமட்டில் நிலைத்த அளவு அறிவு பெறுவதற்கு இந்தக் கால அளவு போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம். பல்வேறு பிர ந்திய மொழிகள் வழங்குகின்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் கூட்டத்தில் பெரும்பான்மையானவர்கள் அவர்கள் அன்றாட வாழ்க்கைக்குப் பிராந்திய மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் பயன் படுத்தும் சந்தர்ப்பத்தையே பெறமாட்டார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அவர்களுடைய அப்பொழுதைய, அன்றாடத் தேவைகளைப் பற்றி மட்டும் கவலைப் படாமல் ஒவ்வொரு குழந்தையும் இந்தியக் குடியரசின் வருங்காலப் பிரஜை என்ற முறையில் இந்திய யூனியன் நடவடிக்கைகளிலும், அகில இந்திய நிலையில் ஆட்சித் துறை, அல்லாத துறை ஆகிய வற்றிலும் நடவடிக்கைகளை அறிந்துகொள்ள வேண்டுமேயானால் ஹிந்தி மொழி அறிந்திருக்கவேண்டும். தற்காலத்தில் வளர்ந்துள்ள போக்கு வரவு வசதிகளும், செய்தித் தாள்களும், அச்சிட்ட நூல்களும், வானொலி ஒலி பரப்பும், படக் காட்சிகளும் எங்கோ மூலையில் ஒதுங்கி யிருக்கின்றவர்களைக் கூட அகில இந்திய வாழ்வு, எண்ணம் என்பவற்றோடு, தொடர்பு கொள்ளச் செய்கிறது. ஒவ்வொரு ராஜ்யமும் இந்த அளவு கட்டாய, இலவசக் கல்வியை அளிப்பதற்குரிய மிகப் பெரிய பொதுச் செலவை எற்றுக் கொள்வதானால் இதனைத் தொடர்ந்து மற்றொரு காரியமும் செய்யவேண்டும். பலவிடங்களிலும் நூல் நிலையங்களை வைத்துப் பல்வேறு வகையான நூல்களைப் புதிதாகக் கற்றுக் கொண்டவர்கள் மேலும் தங்கள் கல்வி அறிவை வளர்த்துக்கொள்வதற்கு உதவியாக நிறுவ வேண்டும். இத்தகைய வசதிகள் பிராந்திய மொழிகளில் மட்டும் அல்லாமல் யூனியன் மொழியிலும் கிடைக்குமாறு செய்யவேண்டும். ஏனென்றால் எந்த இனத்தை ஒரு பிரஜை சேர்ந்தவனோ அந்த இனத்தின் பொது வாழ்வை அறிந்து கொள்ளவும், அகில இந்திய நடவடிக்கைகளிலும் எண்ண வளர்ச்சியிலும் அவன் பங்கு கொள்ளவும் இவை இரண்டு மொழிகளும் தேவைப்படும். இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்ட ஜனநாயக ஆட்சி முறையில் நாட்டின் எல்லாப் பாகங்களிலும், மூலை முடுக்குகளிலும் வாழ்கின்றவர்களுக்குக் கூட அரசியல் அறிவு கொஞ்சங் கொஞ்சமாகச் சென்று அடையும். ஏனெனில் நாட்டாண்மை, நகராண்மைக் கழகத் தேர்தல்களும், ராஜ்ய சட்டசபைத் தேர்தல்களும, பாராளு மன்றத் தேர்தல்களும் ஜன நாயக ஆட்சியிலிருந்து பிரிக்கப்பட முடியாதசால் இந்தத் தேர்தல்கள், அவற்றின் பிரசாரங்கள் நடக்க நடக்க எவ்வளவு பிற்பட்ட ஒரு இனமும் கூட இந்த அரசியல் அலுவல்களில் ஈடுபடாமல் இருத்தல் இயலாது என்பது தெளிவு.

6. மற்றொரு புறத்தில் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவருகின்ற பட்டம் பெற்றவர்களைப் பொறுத்த வரையில், அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டிய ஆங்கில அறிவைப் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. கல்வி முறையில் பல்கலைக்கழக நிலையில் கூட நாளாவட்டத்தில் ஆங்கிலத்தைப் போதனா மொழி நிலையிலிருந்து நீக்கிவிடுவது பற்றி அடுத்து ஆராய்கின்றோம். இங்ஙனம் செய்யவேண்டும் என்று கருதுகின்றவர்களின் கூட்டம் மிகுதிப்படுகிறது என்பதிலும் (ஒரு சிலர் இதற்கு மாறுபாடாக இருப்பினும்) இதனால் தொடக்கத்தில் விளைகின்ற விளைவும் அதனால் எற்படுகின்ற குறைபாடுகளும் ஓரளவு இருப்பினும், மிகுந்த அவசரப் படாமல் இதனை செய்யக்கூடுமானால் இக்கிளர்ச்சி நேர்மையான வழியில் செல்கின்ற ஒன்றுதான் என்பதிலும் எங்கட்கு நம்பிக்கை உண்டு. என்றாலும்

பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் போதனு மொழியாக இல்லாமல் போயினும் அதன் பிறகும் பல காலத்திற்குப் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியே வருகின்ற விஞ்ஞானப் பட்டதாரிகளுக்குப் போதுமான அளவு ஆங்கில அறிவு கிடைக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும் (ஆங் கிலம் இல்லாவிடினும் தகுந்த ஒரு வெளிநாட்டு மொழியறிவு வேண்டும்) இவ்வறிவு கிடைப்பதன் மூலம் இந்திய மொழிகளில் இன்னும் பூரண மாகக் கிடைக்காத மேலை நாட்டு அறிவுக்கு இது ஒரு திறவுகோலாகவும், வேகமாக வளருகின்ற தொழில் நுட்ப, விஞ்ஞான வளர்ச்சியைக்காணும் ஜன்னலாகவும் இது பயன்படும். அன்றியும் கல்வியின் தரம் கீழே போய்விடாமல் பார்த்துக்கொள்வது நம்முடைய கடமையாகும். நம்முடைய நாட்டின் தொழில் நுட்ப வளர்ச்சிக்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் சுதந்திரம் கிடைத்ததிலிருந்து அதிக வாய்ப்புக்கள் இருத்தலின் எப்பொழுதையும் விட இப்பொழுதுதான் நம் அறிவின் தரம் மிகவும் உயர்வாக இருக்கவேண்டும். அதனுடைய சொந்தத் தகுதியின் மூலமாகவும் உலகம் முழுவதிலும் இன்றுள்ள மொழிகளில் தலைமை இடம் பெற்றது, என்பதற்காகவும் எல்லா வகையான விஞ்ஞானத் துறைகளைப் பற்றியும் அதில் நிறைந் திருக்கின்ற விஷயங்கள் காரணமாகவும் இன்று கிடைக்கின்ற புத்தம் புதிய விஞ்ஞான வளர்ச்சி அனைத்தும் அந்த மொழியில் உடனே கிடைக் கின்றது என்பதற்காகவும், இன்னும் பல காலத்திற்கு மேனுட்டு அறிவுத் திறமையும் விஞ்ஞான அறிவையும் இந்த நாட்டுக்கு இறக்குமதி செய்யும் தகுந்த ஒரு சாதனம் வேறு இல்லை என்பதற்காகவும் நம்முடைய இந்தியப் பட்டதாரிக்கு ஆங்கில அறிவு ஒரு பகுதியாக இருந்தே தீரல் வேண்டும். விஞ்ஞான விஷயங்களைப் பொறுத்தமட்டிலும் அல்லது தொழில் நுட்ப அறிவைப் பொறுத்தமட்டிலும், ஓரளவு குறைவாக வேறு எந்தத் துறையாயினும், இந்த அறிவு இருந்தே தீரல் வேண்டும். ஆங்கிலத்தைத் "துணை மொழியாக" இவற்றிற்குப் பயன்படுத்துவதற்கும், பல்கலைக் கழக நிலையில் எல்லாப் பாடங்களையும் புகட்டும் போதனு மொழியாகப் பயன்படுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டை இங்கே நாங்கள் குறிப்பிட விரும்புகிருேம். போதனு மொழி நிலையிலிருந்து படிப்படியாக அம்மொழி விலக்கப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும், பல் கலைக்கழக நிலையில் மொழி என்ற அளவில் அதனைப் போதிப்பதற்கும் வேண்டுமான துறைகளுக்கு அதனைப் பயன்படுத்துவதற்கும் வாய்ப்பு இருந்து தீரவேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிருேம்.

7. இந்த நேரத்தில் பொதுவாகக் கல்வித் துறையில் காணப்படும் தரக் குறைவைப் பற்றியும் சிறப்பாக ஆங்கில அறிவில் காணப்படும் தரக் குறைவைப் பற்றியும் எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிருேம். இதனை அதிகம் குறை கூறுபவர்களின் மனத்தின் அடிப்படையில் இருப் பது இந்தத் தரக்குறைவைப் பற்றிய கருத்தே ஆகும். எங்களைப் பொறுத்த வரையில் பல்கலைக் கழகக் கல்வி நிலையில் ஏதாவது தரக்குறைவு இருந்ததா, இருந்துகொண்டிருக்கிறதா என்பது பற்றி முடிவுகட்ட வாய்ப் புக்கள் ஒன்றும் இல்லை. எனவே தரக்குறைவு என்பது எங்கே தொடங் கியது என்பது பற்றியும் நாங்கள் ஒன்றும் சொல்ல இயலாதிருக்கிருேம். எங்களுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சியங்களின்படி பார்த்தால் இந்திய மொழி களின் மூலம் கல்வி புகட்டப்படுகின்ற ஒரு சில பல்கலைக் கழகங்களில் மாணவர்கள் புரிந்துக்கொள்வதும் அவர்கள் புரிந்துகொண்டவற்றை வெளி யிடுவதும் இம்மொழி மாற்ற காலத்திலிருந்து பெரிதும் வளர்ச்சியடைந் திருக்கிறது என்றே தெரிகிறது. உண்மையைக் கூறப்போனுல் இம்முடிவு வேறுவிதமாக இருக்குமென்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். பல்கலைக்கழகங்களில், பல்வேறு நிலைகளிலும் பல்வேறு துறைகளிலும் இம் மொழி மாற்றம் செய்யும்பொழுது தேவைப்படுகின்ற, பாடப் புத்தகங்கள் துணைக் கருவிகள் என்பவை பற்றிச் சில சொல்லவேண்டும். தேவையான பாடப் புத்தகங்களும் புதிய மொழி மூலம் கற்றுத் தரக்கூடிய ஆசிரியர் களும் இருந்தாலன்றி இப்பொழுது உள்ள போதனு மொழியை மாற்றிப் புதிய போதனு மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்று யாருமே

கூறமாட்டார்கள். ஆதலால் இம் மொழி மாற்றம் படிப்படியாச் செய்யப்பட்டுப் போதனா மொழியை ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிக்கு படிப்படியாக மாற்றக்கூடுமேயானால் என் தரங்குறைய வேண்டுமென்று எங்களுக்கு விளங்கவில்லை ?

8. ஆங்கில அறிவைப் பொறுத்த மட்டில், அதனுடைய தரம் பற்றிச் சில சொல்ல விரும்புகிறோம். பல்கலைக் கழக உதவிநிதிக் கழகம் சமீபத்தில் ஒரு குழுவை நியமித்து இதுபற்றி ஆராய ஆணையிட்டு உள்ளதென்று நாங்கள் அறிகிறோம். ஆங்கில அறிவில் தரக்குறைவு இருக்குமேயானால் அதனைப் போக்குவதற்குரிய வழி துறைகளை ஆராய்ந்து அக்குழு சமர்ப்பிக்கும். ஆங்கிலம் நாட்டின் பெரும் பாகத்தில் இடைநிலைக் கல்வியில் சென்ற பதினைந்து இருபது ஆண்டுகள் வரையில் போதனா மொழியாக இருந்து வந்தது. ஒருவர் எல்லாப் பாடங்களையும் ஒரே மொழியின் மூலம் படிக்கும் பொழுது அந்த மொழியில் அவருக்கு ஏற்படும் அறிவுத்திறன் அதிகமாக இருக்குமென்றும் அவ்வாறு இல்லாமல் அதனை ஒரு மொழி என்றளவில், பாட நேரத்தில் ஒரு பகுதியில் மட்டும் படிக்கும்பொழுது அந்த மொழி பற்றிய அறிவுத்திறன் குறைவாகத்தான் இருக்குமென்பதும் யாவரும் அறிந்ததே. இதனை யல்லாமல் இன்னும் சமீப காலத்தில் சிலவிடங்களில் ஆங்கிலமொழிப் போதனையை வேண்டுமென்றே குறைத்து அதனைப் போதிக்க ஆரம்பிக்கின்ற காலத்தையும் தள்ளிப் போட்டிருக்கின்றார்கள். இதனையடுத்துப் பல்கலைக்கழக நிலையிலும் கலைத்துறையில் இடைநிலை வகுப்புக்களுக்குப் போதனா மொழி மாற்றம் செய்யப்பெற்றுள்ளது. இவற்றை யெல்லாம் நோக்கும்பொழுது இவற்றை நாளை பல்கலைக் கழகப் பட்டதாரியோ, பல்கலைக் கழகத்தில் படிக்கின்றவரோ குறைந்த அளவு ஆங்கில மொழியறிவு பெற்றிருந்தால் அதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை.

9. ஆங்கில மொழிக்கு நம்முடைய கல்வி முறையில்[1] ஏற்பட்டிருக்கின்ற புதிய மாற்றத்தையொட்டி ஆங்கில போதனா முறையையும் அம்மொழியில் எதனை எப்படி போதிப்பது என்பது பற்றியும் மறுபடியும் ஆராய்ந்து தீர்மானித்தல் மிகவும் தேவையென்று கருதுகின்றோம். இதுவரை இங்கிலாந்தில் எவ்வாறு ஆங்கில மொழி கற்பிக்கப்பட்டு வந்ததோ ஏறத்தாழ அதே முறையில்தான் இந்நாட்டிலும் கற்பிக்கப்பட்டு வந்தது. இடைநிலை வகுப்பில் தொடங்கிக் கல்வி முறையின் முடிவு வரையில் ஆங்கிலமே போதனா மொழியாக இருந்ததாகலின் இம்முறை அவ்வளவு தவறானதாகாது. இனிப் பல்வேறு காரணங்களுக்காக ஆங்கில அறிவு தேவைப் படுகிறதாதலின் அந்த அறிவின் வகையும் உள்ளீடும் மாறுபடவேண்டும். மேலும் அந்த அறிவைக் கற்பிக்கக்கூடிய முறையும் மாறுபட்டுத் தீரவேண்டும். இனி ஆங்கிலத்தைப் "புரிந்துகொள்ளும் மொழி" என்றளவில்தான் கற்பிக்க வேண்டுமே தவிர, இலக்கிய மொழியாகவோ ஆங்கில இலக்கியத்தை அனுபவிப்பதற்குரிய சாதனமாகவோ கற்பிக்கவேண்டியதில்லை. இவ்வாறு செய்தாலும், ஒரு குறுகிய அளவிற்கு, ஆங்கில மொழியின் மூலம் எண்ணத்தை வெளியிடும் சக்தி கிடைக்கும் என்பதும், புரிந்து கொள்ளும் சக்தியோடு இதனையும் சேர்த்து வளர்க்கலாம் என்பதும் உறுதி. எவ்வாறாயினும் இதுவரை நாம் கற்ற ஆங்கில மொழி யறிவுக்கும் இனி நமக்குத் தேவைபடும் அம்மொழி யறிவுக்கும் வேறுபாடு உண்டு என்பது நன்கு விளங்கும். ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ளும் மொழியாக கற்றல் என்பது அம்மொழி இலக்கணத்தையும் வடிவத்தையும் ஓரளவு அறிந்த பிறகு எந்தத் துறையில் நமக்கு தேவை ஏற்படுகிறதோ அதற்குரிய சொற்களை அறிந்துகொள்ள முயல்வதே யாகும். ஷெல்லியின் இசைப் பாடல்களையோ ஷேக்ஸ்பியரின் கவிதை

[1] இந்த விஷயத்தைப் பற்றி இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சிலோடு ஆராயும் வாய்ப்பைப் பெற்றோம். உலகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆங்கிலத்தைக் கற்பிக்கும் வழி துறைகள் பற்றி நிறைந்த அனுபவம் பெற்றிருக்கிறார்கள் அவர்கள். எனவே அவர்கள் எங்களுக்கு அளித்த உதவிக்கு நாங்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

பணிகளையோ அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பது இத்துறையில் செல்பவர்களுக்குத் தேவையில்லை. நாட்டிலுள்ள ஒரு சில மக்கள் பல் நாட்டுப் போக்குவரத்துக்கும் வாணிகத்துக்கும் தொழில் துறைக்கும் மற்றும் பந்நாட்டுத் தொடர்புக்கும் தேவைப்படுகின்ற அளவு ஆங்கில மொழியில் பொது அறிவையும் இலக்கிய அறிவையும் பெறலாம். அப்படிபட்டவர்களுக் குத் தேவையான அந்த அறிவைத் தருவதற்குத் தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு அவர்களுக்கு வேண்டிய பயிற்சியைத் தருவதற்குக் கல்வி முறையின் உள்ளேயோ அன்றி அதற்குப் புறம்பாகவோ இந்த வசதிகளைச் செய்து தரலாம். மேலும் நம்முடைய பல்கலைக்கழகங்களில் ஏனைய முக் கியமான மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் கற்பிப்பதற்குரிய வசதிகள் இருப்பது போல ஆங்கில மொழியையும் அதன் இலக்கியங் களையும் கற்பிப்பதற்குரிய வசதிகள் இருக்கும். இந்தத் தனிப்பட்ட தேவை கல்வி முறையின் பொதுத் தன்மையைப் பாதிக்கக்கூடாது.

இதுவரையில் நம்முடைய பள்ளிக்கூடங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் பரம்பரையாகப் போதிக்கப்பட்டு வந்த போதன முறைக்கும் இனி மொழிப் போதனையை செய்யும் முறைக்கும் என்ன என்ன மாறுபாடுகள் தேவை ? இதுவரையில் மொழியை இலக்கிய மொழியாகப் போதித்து வந்தோம். இனி அதே மொழியைப் புரிந்துகொள்ளும் மொழியாகமட்டும் போதிக்க வேண்டி இருத்தலின் இந்த அடிப்படை வேறுபாட்டை உத்தேசித்து இதனை கற்றுத் தரும் வழிகளில் என்னென்ன மாறுபாடுகள் செய்ய வேண்டுமென்பதை கல்வித் துறை வல்லுநர்கள் முடிவு கட்டவேண்டும். இத்துறையில் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று சொல்லுகின்ற அளவோடு நாங்கள் நிறுத் திக்கொள்கிறோம். பொதுவாக ஒரு சில குறிப்பிட்ட காரியங்களுக்குத் தான் இனி ஆங்கில அறிவு தேவைப் படுமாதலின் புதிய கல்வி முறையில் இந்தத் தேவையான ஆங்கில அறிவைக் குறுகிய கால அளவிற்குள் கொடுத்துவிடலாம் ஆதலின் இடைநிலைக் கல்வியில் நாள் கழித்து ஆங்கில போதனை தொடங்கப்படலாம்.

பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தேவையான அளவு ஆங்கில அறிவோடு வெளியே வர வேண்டுமானால் பல்கலைக்கழகங்களில் படிக்கின்ற காலங் களில் அவர்கள் மேற்கொண்டுள்ள துறையில் பாட புத்தகங்களையல்லாமல் அத்துறையிலுள்ள நூல்கள் பலவற்றையும் படிக்கவேண்டும். அத்துறை நூல்கள் இந்திய மொழிகளில் இன்னும் கொஞ்ச காலத்திற்குக் கிடைக்க மாட்டா ஆதலால் அதுவரையில் ஆங்கிலத்தில் அவற்றைப் படித்துப்பயன்பெற வேண்டிய அளவுக்கு ஆங்கில அறிவு அவர்களுக்குத் தேவைப்படும். அந்த அறிவைப் பெற இடைநிலைக் கல்விக் காலத்தில் அவர்கள் தகுந்த ஆங்கில அறிவைப் பெற்றிருந்தால்தான் பல்கலைக்கழகக் கல்வி நிலையில் அதனை வளர்த்துக்கொள்ள முடியும். இதுபற்றிய பாடத் திட்டம் முதலியன அமைப்பது கல்வித்துறை வல்லுநர்களின் கடமையாகும் என்றாலும் இக் கருத்தை நிறைவேற்ற எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புக்கு ஐந்து வருடங்களுக்கு முன்னால் ஆங்கிலம் கற்பிக்கப்படுமேயானால் போதுமானது என்ற எங்கள் கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

10. பதினான்கு வயது வரை, கட்டாய இலவச ஆரம்பக் கல்வி கற்கின்ற வர்களின் ஹிந்தி மொழித் தேவை எவ்வளவு என்று முன்னர் ஆராயப் பட்டது. அதில் ஹிந்தியைத் துணை மொழியாகப் பத்தாவது வயதில் தொடங்கலாமென்றும், அதாவது நடுத்தரப் பள்ளி நிலையில் அதைத் தொடங்கினால் போதுமானது என்றும் கூறினோம். பல்கலைக்கழகங்களில் படிக்கின்றவர்களுக்கும் அதில் பட்டம் பெற்று வருகின்றவர்களுக்கும் தேவையான ஆங்கில அறிவைக் கணக்கிட்டு ஆங்கில போதனை தொடக்கம் எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கு ஐந்து ஆண்டுகளின் முன்னர் அதாவது குழந் தைக்கு 12 வயது முடியும்பொழுது தொடங்கலாமென்றும் கூறினோம். அரசியல் அமைப்பு 45-வது விதியில் கூறியபடி குழந்தை கட்டாய இலவசக் கல்வி பெறுங் காலத்தில் அக்குழந்தை ஆங்கிலம் கற்குமாறு செய்வது வீணாகும். முற்றிலும் புதிதான ஆங்கிலம் போன்ற ஒரு மொழியை இவ்வளவு

குறுகிய காலத்தில் கற்பிக்கத் தொடங்குவது பயனற்றுப் போவதோடு ஏனைய பாடங்களுக்கும், பிராந்திய மொழி, ஹிந்தி மொழி, கற்பிக்கும் நேரத்தையும் இது குறைத்துவிடுகின்றது. எனவே கட்டாய இலவசக் கல்வி முடிந்தவுடன் படிப்பை விட்டுவிடுகின்ற கூட்டத்தாரையும் இந்த நிலைக்குப் அப்பாலும் தொடர்ந்தும் கல்வியை மேற்கொள்கின்ற கூட்டத்தாரையும் ஏறத்தாழப் பிரித்து முதல் வகைக் கூட்டத்தாரின் மேல் கல்வியை வீணாக்காமல் ராஜ்ய அரசாங்கத்தாரும் கல்வி அதிகாரிகளும் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கூறுகிறோம். இந்த இரண்டு கூட்டத்தாரையும் முற்றிலும் வேருகப் பிரித்துவிடாதபடி ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிச் செல்ல வாய்ப்புக்கள் அளிக்கவேண்டும். முதற் பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு இந்த நிலையில் ஆங்கிலக் கல்வி போதிப்பதை நிறுத்திவிட்டு வேறு பயனுள்ள கல்வியை, அதாவது ஹிந்தியில் அதிகப்படியான போதனையைத் தரலாம். இவ்வாறு செய்வதற்குப் பள்ளிக்கூட அதிகாரிகளுக்குக் கொண்டு செலுத்த முடியாத பெரிய இடையூறுகள் ஒன்றும் இருத்தற்கில்லை.

நம்முடைய கல்வி முறையில் இங்ஙனம் மாணவர்களை இரண்டு கூறுகளாகப் பிரிப்பதிலுள்ள எல்லையற்ற பிரச்னைகளையும் சிக்கல்களையும் நாங்கள் அறியாமலில்லை. நன்கு அமைக்கப்பட்ட ஒரு கல்வித் துறையில் செல்லக்கூடிய "குறிக்கோள்" பல மாணவர்களிடம் காணப்படவில்லை. இதை யல்லாமல் பெரும்பான்மையானவர்கள் இந்தப் பிரிநிலை ஏற்பட வேண்டிய காலத்தில் அவர்களுடைய விருப்பம் என்ன என்பதையும் நன்கு தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் நாங்கள் பிரிப்பதைப் பற்றிச் சொல்வது கட்டாயக் கல்வி பெறுகின்ற நிலைக் கப்பாலும் தங்கள் படிப்பை மேற்கொண்டு நடத்துபவர்களைக் குறித்தேயாகும். எல்லாக் குழந்தைகளும் தாங்கள் பெறும் கல்வியில் அதிகப்படியான பயன்களைப் பெறவும் ஆங்கிலம் கற்கக்கூடிய வாய்ப்பை ஒரு குழந்தையும் இழந்து விடாமல் இருக்கவும் வழி செய்ய விரும்புகிறோம். முன்னே சொல்லியபடி பிரிவை ஏற்படுத்தும்பொழுது அதிகக் கட்டுப்பாட்டோடு கூடியதாக இராமல் ஒரு பகுதியில் உள்ளவாகள் மேற்கொண்டு படிக்க விரும்பினுல் அப்பகுதியிலிருந்து மாற்றிக்கொண்டு புதிய பகுதியின் பாடத்திட்டங்களைப் பற்றிக்கொண்டு மேலேற வாய்ப்பளிப்பதாக இருத்தல் வேண்டும். ஒரு சிலருக்கு இந்த வசதியைத் தராமல் "ஒதுக்கப்படும்" சூழச்சியல்ல இது என்பதைத் தெரிவிப்பதற்காக ராஜ்ய அதிகாரிகள் பெற்ருேர்களுக்கு இரண்டு வருஷங்களில் அவர்கள் குழந்தைகளுக்கு ஆங்கிலப் படிப்பு வேண்டுமா அல்லது அவ்வாங்கிலப் படிப்பு நடைபெறும் நேரத்தில் வேறு ஏதாவது பயனுள்ள பாடங்கள் பற்றிச் சொல்லிக்கொடுக்க வேண்டுமா என்பதை முடிவு செய்யுமாறு ஒரு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

இந்த இரண்டு பிரிவினர்களுக்கும் ஹிந்திப் படிப்பு ஒரே நேரத்தில் தொடங்கப்படவேண்டும். கட்டாயக் கல்வி நிலைக்கப்பாலும் மேற்கொண்டு பள்ளிப் படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு ஹிந்திக் கல்வியும் தொடரும்.

11. இனி அடுத்தப்படியாக இடைநிலைப் பள்ளியில் இருக்கும் மாணவர்களுக்கு எந்த அளவு ஹிந்தி மொழிக் கல்வி தரப்படவேண்டும் என்பதைச் சிந்திக்கவேண்டும். பொதுவாகப் பேசுமிடத்து ஆரம்பக் கல்வியின் முடிவிலோ அல்லது இடை நிலைக் கல்வியின் தொடக்கத்திலோ தொடங்கப்பட்ட ஹிந்தி மொழிப் பாடம் எஸ்.எஸ்.எல்.ஸி. நிலை வரையில் தொடர வேண்டும் என்பது எங்கள் கருத்தாகும்.

எஸ்.எஸ்.எல்.ஸி. பல்வேறு துறைகளில் புகுவதற்கும் பிரத்தியேகமான தொழில் நுட்ப அமைப்புக்களில் நுழைவதற்கும் நிலைக் களம். மேலும் இவற்றுள் பலவற்றில், நாங்கள் கீழே சொல்லப்போகும் காரணங்களால் போதனுமொழி ஹிந்தி மொழியாக இருத்தல் கூடும். எஸ்.எஸ்.எல்.ஸி. நிலையின் முடிவில், ஆறு அல்லது ஏழு ஆண்டுகள் ஹிந்தி மொழியைக் கற்றுக்கொண்டு விட்டதனுல் போதனு மொழியாக

உள்ள ஹிந்தியை அவன் மேற்கொண்டுள்ள பிரத்தியேகமான தொழில் நுட்ப அமைப்புக்களில் அறிந்துக் கொள்ளக்கூடுமென நாங்கள் நினைக்கிறோம். அடுத்தப்படியாக நாங்கள் சொல்லியிருப்பதுபோல் உயர் தரப் பள்ளிகளில் கல்வி போதிக்கும் கால அளவை இன்னும் ஒரு ஆண்டு மிகுதிப்படுத்தினால் அதன் பயனாக மாணவன் பல்கலைக் கழகத்தில்கூட ஹிந்தி போதனா மொழியாக இருந்தால் அதை புரிந்துகொள்ள முடியும். உயர் நிலைப் பள்ளியில் ஒரு ஆண்டை இங்ஙனம் மிகுதிப்படுத்தும்பொழுது பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்புக்கள் மூன்று ஆண்டுகளாக மாற்றப் பட்டு இப்பொழுதுள்ள இடைநிலை வகுப்பு நீக்கப்பட்டுவிடும்.

இடைநிலை வகுப்புக்களில் இப்பொழுதுள்ள ஆங்கிலக் கல்வி போதனைக்கும் ஹிந்திக் கல்வி போதனைக்கும் உள்ள ஒரு முக்கியமான வேறுபாட்டைக் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஹிந்தி மொழி போதனையைப் பொறுத்தவரை அம் மொழியைப் புரிந்து கொள்வதோடு, எழுத்தாலும், பேச்சாலும் அவன் எண்ணத்தை வெளியிடக்கூடிய அளவில் கற்பிக்கப்படவேண்டும். தேசத்தின் வாழ்வில் ஹிந்தி பெறப் போகின்ற இடத்தை உத்தேசித்து அந்த மொழியின் மூலம் தம் கருத்துக்களை வெளியிடும் சக்தியை அகில-இந்திய வேலைகளில் பங்கு கொள்ளவேண்டிய ஒவ்வொருவரும் பெற்றே தீரவேண்டும். இதை மனத்தில் கொண்டு பள்ளிக்கூட நிலையிலும் பின்னர் பல்கலைக் கழக நிலையிலும்கூட மாணவர்கள் தங்கள் உள்ளக் கருத்தை ஹிந்தி மொழியில் வெளியிடக் கூடிய வாய்ப்பை அளிப்பதற்காகச் சொற்போர் கழகங்களும், மனனம் செய்து கூறும் திறமும் வளர்க்கப்படவேண்டும்.

பிராந்திய மொழிகளைப் பொறுத்தமட்டில் ஆரம்பக் கல்வி நிலையில் அதை மட்டுமே கற்றமையாலும் இடைநிலைக் கல்வி நிலையில் போதனா மொழியாகவும் கற்றமையாலும் இடைநிலைக் கல்விக் காலத்தில் பெரும் பகுதியில் மொழியாகவே படித்தமையாலும் எஸ்.எஸ்.எல்.ஸி. தேறி வருகின்ற மாணவன் அந்த மொழியைப் பொறுத்தமட்டில் ஒரு உயர்ந்த அளவு அறிவு பெற்றவனாக ஆவான். எனவே பல்கலைக் கழக நிலையில் பிராந்திய மொழி, ஆங்கிலம், ஹிந்தி ஆகிய இவற்றைத் தனிப்பட்ட மொழிகளாகக் கற்பிக்க வேண்டுமா என்பது சிந்தனைக்குரியது. பிராந்திய மொழியைப் பொறுத்தமட்டில் அதனைக் கட்டாய பாடமாக ஆக்கவேண்டியதில்லை என்று நினைக்கிறோம். எங்கே ஹிந்தி மொழி போதனா மொழியாக இருக்கிறதோ அந்தத் துறைகளில் பிராந்திய மொழியை மேற்கொண்டு படிக்க ஏற்பாடு செய்யலாம். ஆங்கில மொழியைப் பொறுத்தமட்டில் எந்தத் துறைகளில் ஆங்கில அறிவு தேவைப்படவில்லையோ அவற்றையல்லாத எல்லாத் துறைகளிலும் ஆங்கிலம் போதிக்கப்படவேண்டும். ஹிந்தியைப் பொறுத்தமட்டில் போதனா மொழியாக ஹிந்தி இல்லாத இடங்களில் மட்டும் ஹிந்தி மொழி போதனை நடைபெறவேண்டும்.

12. இந்த நிலையில் இடைநிலைக் கல்வி புகட்டப்படும் காலத்தில் ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாகப் போதிப்பது முக்கியமான பிரச்னையாதலால் அது பற்றிக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். பல ராஜ்யங்கள் இடைநிலைக் கல்வியில் பல்வேறு வகுப்புக்களில் ஹிந்தி மொழிப் போதனையைத் தொடங்கியுள்ளன. இந்திய அரசாங்கம் எல்லா ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலும் இடைநிலை வகுப்புக்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கவேண்டும் என்பதையும், அதன் பயனாக அடுத்த தலைமுறையில் எல்லா இந்தியர்களும் ஹிந்தி தெரிந்தவர்களாக ஆகிவிடுவார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு ராஜ்ய அதிகாரிகளுக்கு இக்கருத்தை வலியுறுத்தி வருகிறார்கள். அஸ்ஸாம், பம்பாய், கூர்க், ஹைதராபாத், சௌராஷ்டிரா, திருவாங்கூர்-கொச்சி ஆகிய இவற்றை உள்ளிட்ட பல ராஜ்யங்களில் இடைநிலைக் கல்வியில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கியுள்ளார்கள். இன்னும் சில ராஜ்யங்களில் இடைநிலைக் கல்விக் காலத்தில் ஹிந்தி போதனை தரப்பட்டாலும் கீழ்க் கண்ட பல வழிகளில் அதனை விருப்ப பாட அளவிலேயே வைத்திருக்கிறார்கள். சில ராஜ்யங்களில் தேர்வுக்குரிய

பாடமாகவோ அல்லது தரம் பிரிப்பதற்குரிய பாடமாகவோ எஸ்.எஸ்.எல்.ஸி. பரிட்சையில் அதனை வைக்கவில்லை. எஸ்.எஸ்.எல்.ஸி.-க்கு முற்பட்ட வகுப்புக்களிலும் தேர்வு முதலியவற்றிற்கு இப் பாடத்தைக் கணக்கெடுப்பதில்லை. இன்னும் சில ராஜ்யங்களில், மாணவர்களைப் பொறுத்தவரையில் ஹிந்தியைப் படிக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லாவிடினும் எல்லாப் பள்ளிக்கூடங்களும் ஹிந்தியைக் கற்பிப்பதற்குரிய வசதிகளைச் செய்து தர வேண்டிக் கட்டாயப் படுத்தப்படுகின்றன. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் பரீக்ஷைக்குத் தேவைப்படாத விருப்ப பாடமாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வைக்கப்பட்டிருப்பினும் பள்ளிக்கூடங்களில் ஹிந்தி போதனைக்கு வழி செய்யவேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறதே தவிரப் **பிள்ளைகள் ஹிந்தியைப் படிக்துத்தீர வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.** சென்னை அரசாங்கத்தார், ஹிந்தி அங்கு விருப்பப் பாடமாக இருப்பினும் மிக அதிகப்படியான குழந்தைகள் உண்மையில் ஹிந்தியைக் கற்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். இதுபற்றி அவர்கள் தந்த புள்ளி விவரம் வருமாறு.[1]

வருஷம்.	இடைநிலைக் கல்வி பயிலுகின்ற மாணவர்கள் ஒன்று முதல் ஆறும் பாரம் வரை.	ஹிந்தி பயிலுகின்ற மாணவர்கள் ஒன்று முதல் ஆறும் பாரம் வரை.	சத விகிதம்.
1952–53*	725,806	570,800	78·6
1953–54†	458,679	378,965	82·6
1954–55†	468,409	374,137	79·9

சென்னை அரசாங்கம் ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக ஆக்காமையை சரியென்று சொல்லும் முறையில் கீழ்க் கண்ட வாதங்களைத் தந்துள்ளது. முதலாவது விருப்பப் பாடமாக இருக்கும்பொழுதே மாணவர்களில் மிகப் பெரும்பான்மையானவர் அதனைப் படிக்கின்றார்கள் ஆதலின் கட்டாயமாக்குவதன் பயனை எறத்தாழப் பெற்றுவிட முடிகிறது. மேலும் எங்களுடைய கேள்விக்கு (18) சென்னை அரசாங்கம் அளித்த பதில் வருமாறு :—

இந்த ராஜ்யத்தில் இடை நிலைக் கல்வி நிலையில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்காமைக்கு காரணங்கள் வருமாறு :—

(அ) இப்பொழுதுள்ள கல்வித் திட்டத்தின்படி, இடைநிலை வகுப்புகளில் இரண்டு கட்டாய மொழிகளைக் கற்கின்றார்கள். அவையாவன (1) தாய் மொழி அல்லது பிராந்திய மொழி, (2) ஆங்கிலம். இந்நிலையில் மூன்றாவது மொழியாகிய ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்குவது அந்த ராஜ்ய மாணவர்களுக்குக் கடுமையானதாகும்.

(ஆ) தாய் மொழியையோ அல்லது ஆங்கிலத்தையோ போல வீட்டிலோ வெளியிலோ ஹிந்தி மொழிப் பேசப்படுவதை மாணவர்கள் கேட்க முடியாது. இதனால் ஹிந்தி மொழியில் தேர்வு பெறுவதற்குரிய சக்தியைப் பெறுவது இந்த ராஜ்ய மாணவர்களுக்குக் கடினமாகும்.

(இ) ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக வைப்பது, பரீக்ஷையில் தேருவதற்குத் தகுந்த அம்சங்கள் எடுக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டை உண்டாக்குமாதலால் மாணவர்கள் பரீக்ஷையில் தவறிவிடுவதற்குரிய சந்தர்ப்பங்களை மிகுதிப்படுத்துவதாகும். இத்தகைய தொல்லையான பயனை மாணவர்களின் பள்ளிக்கூட வாழ்க்கையில் இது உண்டாக்கும் என்பதே ஹிந்தியைப் பரீக்ஷைக்குரிய பாடமாக வைக்கக்கூடாது என்ற பொது மக்களின் கிளர்ச்சிக்குக் காரணமாகும்.

---

[1] கழகத்தாருக்குச் சென்னை அரசாங்கம் அளித்த பதிலில் உள்ளது.

* சென்னை ஆந்திர ராஜ்யப் பிரிவினைக்கு முன்னர்.

† ஆந்திர பிரிவினைக்குப் பிற்பட்ட ராஜ்யத்தில்.

1947-முதலே ஹிந்தி மொழி அதிக சிறப்புப் பெற்றுள்ளதனுல், எதிர்ப்பை வளர்த்துக்கொள்ளாத முறையில் படிப்படியாக அதனைப் பரப்பு வதும், அதனைக் கற்காமையினுல் ஒரு தண்டனை கிடைக்கும் என்று சொல்லாமல் பரப்புவதும் நன்மை பயப்பனவாகும்.

சென்னை அரசாங்கம் எங்கள் வினுக்களுக்கு அளித்த விடையில் உள்ள ஒரு விளக்கப் பகுதியில் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளது :—

கீழ்க்கண்ட இரண்டு கேள்விகள் கேட்கப்படலாம் :—

(1) தாய் மொழிக்குச் சிறப்பான இடம் தந்த பிறகு ஆங்கிலத் துக்குக் கொடுத்துள்ள இடத்தைப் போன்ற ஒன்றை ஹிந்தி மொழிக்குக் தரக்கூடாதா ?

(2) ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக ஆக்கக்கூடாதா ?

இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை எதிர் மறைதான். இதற்குரிய காரணங்களையும் எடுத்து விளக்கவேண்டும்.

முதலாவது.—ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும், ஹிந்தி மூன் றும் மொழியாகவும் கீழ்க்கண்ட காரணங்களுக்காக அமைய வேண்டும் :—

(அ) விஞ்ஞான, தொழில் துறைக் கல்வியைப் போதிக்கின்ற கல்லூரிகளில் ஆங்கிலம்தான் போதனு மொழியாக இருக்கமுடியுமே தவிர ஹிந்தி இருக்க முடியாது.

(ஆ) நவீன கால ஆக்க எண்ணங்களுக்கு நேரடியான வழியை, ஆங்கிலம் செய்து தருமே தவிர ஹிந்தி செய்து தரமுடியாது. ஹிந்தி, வளர்ச்சி அடைந்து ஒரு காலத்தில் இக்காரியங்களையும் செய்ய முடியும் என்பது உண்மையே. ஆனுல் இதே காரியத்தைத் தாய் மொழியும் வளர்ச்சியடைந்து இன்னும் குறுகிய காலத்தில் இக்காரியத்தைச் செய்து முடிக்கும் என்பதில் சந்தேக மில்லை. எவ்வாருயினும் இது பற்றிய ஆராய்ச்சி இப்பொழுதிலிருந்து 1965-வரை எடுத்துக் கொள்ள வேண்டிய நேரடிக் காரியங்களுக்கு ஒன்றும் பாதகம் விளைவிக்காது.

இரண்டாவது.—இடைநிலை வகுப்புக்களில் இந்த ராஜ்யத்தில் கீழ்க் கண்ட காரணங்களால் ஹிந்தி மொழியைக் கட்டாய பாடமாக ஆக்க முடியாது:—

(அ) ஒரு மொழியைக் கட்டாய பாடமாக ஆக்குவதனுல் அந்த மொழியில் ஒரு குறைந்த அளவு அம்சங்கள் பெருத பொழுது தகுந்த தண்டனை கிடைக்கும். அதாவது கல்லூரிகளிலும், கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு மேற்கொள்ளும் அலுவல் படிப்புக்களிலும் நுழைய முடி யாமல் போய்விடும். இத்தகைய ஒரு சக்தியை மூன்று மொழிகளைப் பொறுத்தவரை ஒரு மாணவன் பெறவேண்டும் என்று நினைப்பது அவ னுடைய சக்திக்கு மீறிய செயலில் ஈடுபடச் செய்வதாகும்.

(ஆ) ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கவேண்டும் என்று சொல்வ தனுடைய நோக்கம் மாணவர்கள் மிக்க ஊக்கத்தோடு அதனைக் கற்கும்படி செய்வதுதான். இந்த நோக்கம் நிறைவேருமல் போவதோடுகூடக் கட்டாய பாடமாக ஆக்கினுல் இந்த நோக்கத்தைத் தோல்வியடையச் செய்வதாகவும் முடியும். ஏனென்ருல் ஹிந்தியை "திணிக்கிருர்கள்" என்ற எண் ணத்தை உண்டாக்கி, விரோத மனப்பான்மையை வளர்க்கும். இதன் மறுதலையாக ஹிந்தியை விரும்பினுல் எடுத்துக் கொள்கின்ற மூன்ருவது மொழியாக எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வைத்துச் சிறந்த முறையில் ஹிந்தி மொழியைப் போதிப்பதற்குரிய வழிகளையும் வகுத்துவிட்டால் அது விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு பொருளாகி ராஜ்யத்தில் படிப் படியாக ஹிந்தி அறிவு வளர ஏதுவாகும். எதிர்பார்க்கின்றபடி இந்திய அரசாங்கத்தார் தன்கீழ் வேலை தேடிவருகின்றவர்கள் ஒரு குறைந்த அளவு ஹிந்திப் பரீக்ஷையில் தேர்ந்திருக்கவேண்டும் என்று வைத்தால் இயல் பாகவே உள்ள வசதிகளை வைத்துக்கொண்டு மாணவர்கள் பள்ளிக்கூடங் களிலுள்ள ஹிந்திப் பரீக்ஷையில் வெற்றி பெற முயல்வார்கள்.

பொது மக்களினுடைய மனோ தத்துவத்தையும் சந்தர்ப்பத்திற் கேற்ற படி நடந்து கொள்ளவேண்டிய சூழ்நிலையையும் கவனித்துப் பார்த்தால் நாம் கூறும் முடிவைவிடச் சென்னை அரசாங்கம் அந்த ராஜ்ய மக்களின் மனோநிலையை அளப்பதற்குத் தகுந்தவர்களாவார். எனவே எந்த நிலையிலும் சென்னை அரசாங்கமே இது பற்றி முடிவு செய்யவேண்டும் என்பது ஒரு புறம் இருந்தாலும், பொதுவான முறையில் நோக்கும் பொழுது இந்தப் பிரச்னையின் தராதரத்தை நாங்கள் காண்கின்ற முறையில் கூறவேண்டியுள்ளது. இங்ஙனம் கூறுவது அந்தந்தப் பிராந்தியங்களிலுள்ள நிலைகளைப் பற்றிக் கவலைப்படாமல் கூறுவதாகும். இன்னுஞ் சில பிராந்தியங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்குவதில் இது போன்ற ஒரு சூழ்நிலை ஏற்படலாமாதலால் அம்மாதிரி இடங்களுக்கெல்லாம் எங்களுடைய கருத்துக்களை வெளியிடுவது ஓரளவு பொருத்தமுடையதாகும். இது எவ்வாறாயினும் ஒவ்வொரு இடத்திலும் அந்தந்த இடத்திற்கேற்ற முடிவுகளைச் செய்ய அந்தந்த ராஜ்ய அரசாங்கம்தான் தகுதியுடையது என்பதை நாங்கள் அறிவோம்.

வாதங்களில் முதலாவது "இக்கால ஆக்க எண்ணங்களுக்கு ஆங்கிலம் தான் வழி வகுக்குமேதவிர ஹிந்தி மொழி வழி வகுக்காது" என்பதாகும். இப்பொழுது ஹிந்தி மொழியில் பல்வேறு வகைப்பட்ட துறைகளிலும் நிறைந்த இலக்கியம் இல்லை என்பதையும் விஞ்ஞானத் துறையிலும், மற்றப் பாடங்களிலும் வேண்டுமான அறிவைத் தரக்கூடிய நூல்கள் ஆங்கில மொழியில் உள்ளதுபோல் இல்லையென்பதையும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். எனவே உடனடியாக விஞ்ஞானக் கல்வியையும், தொழில் துறைக் கல்வியையும் கல்லூரிகளில் ஹிந்தி போதனா மொழி மூலம் தர முடியாது என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஹிந்தி மொழி இந்த சக்தியைப் பெற்ற பிறகு கல்லூரியின் பல துறைகளில் படிப்படியாகப் பல காலம் இதனைப் புகுத்தவேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் இந்த இரண்டு காரணங்களும் எடுத்துக்கொண்ட பிரச்னைக்கு மறுதலையாக இல்லையென்பதை வணக்கத்தோடு நாங்கள் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். ஹிந்தி மொழியை யூனியன் ஆட்சி மொழியாகவும், பல் வேறு ராஜ்யங்களிடையிலும், ராஜ்யங்களுக்கும் யூனியனுக்கும் இடையிலும் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் மொழியாகவும் அரசியலமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. நாளாவட்டத்தில் பல மொழி பேசும் இந்நாட்டு மக்கள் அகில இந்தியச் சூழ்நிலையில் கருத்துப் பரிமாறிக்கொள்ள இப்பொழுதுள்ள ஆங்கில மொழியை ஹிந்தி மொழியை நீக்கி விட்டுத்தான் அந்த இடத்தை ஏற்றுக்கொள்ளும். ஹிந்தி மொழி இந்தியாவிலேயே நன்கு வளர்ச்சி பெற்ற மொழி என்பதற்காகவோ, அல்லது ஆங்கிலத்தைப் போல வளம் பெற்றுள்ளது என்பதற்காகவோ அகில இந்தியாவிலுள்ள பிராந்திய மொழிகளைக் காட்டிலும் ஹிந்தி மொழியில் நிறைந்த பெரிய இலக்கியங்கள் உள்ளன என்பதற்காகவோ ஹிந்தி மொழியை அகில இந்திய மொழியாக ஆக்க யாரும் முயலவில்லை. ஆங்கில மொழி நீக்கப்பட்ட பிறகு தேசத்தில் ஒரு பொது மொழி இருக்கவேண்டும். இன்றுள்ள பல்வேறு பிராந்திய மொழிகளில் ஹிந்தி பேசுபவரின் எண்ணிக்கை, தனிப்பட்ட கூட்டமாக எடுத்துக் கொண்டு பார்க்கும்பொழுது அதிகப்படியாக உள்ளது. ஏனைய மொழி பேசுவோரின் எண்ணிக்கைகள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் பொழுது மொத்த ஜனத்தொகையில் 42 சத விகிதமே பேசும் இவர்கள் சிறு பான்மையினராக ஆகிவிடுகின்றார்கள். இந்த ஒரே காரணத்திற்காகத்தான் ஹிந்தி மொழியை யூனியன் மொழியாக அரசிலமைப்பு ஏற்றுக்கொண்டது. இதன் பயனாக என்றாவது ஒரு நாள் உள்நாட்டு மொழி ஒன்றைப் பொது மொழியாகஇந்தியா ஏற்றுக்கொள்ளுமே ஆனால் அது ஹிந்தி மொழியாகத் தான் இருக்கும். தொழில் இயல் விஞ்ஞான இயல் அறிவை பொறுத்தமட்டில் ஏனையோருக்கு இருப்பதைவிட எங்கள் கவலை குறைந்ததல்ல ஆதலால் கல்வியின் தரங் குறையாதபடி அது தேவைப்படுகிறவர்களுக்கு அந்தந்தத் துறையில் ஆங்கில மொழி கற்பிக்கப்பட வேண்டும் என்பதைச் சென்ற பகுதிகளில் விளக்கியிருக்கிறோம். சென்னை ராஜ்யத்திலுள்ள மாணவர்கள் ஹிந்தி

மொழி பேசப்படுவதை வீட்டிலும், வெளியிலும் கேட்கவில்லையாதலால் அந்த மொழியில் ஒரு சிறந்த சக்தியைப் பெறுவது இயலாது என்று சென்னை அரசாங்கம் சொல்லும்பொழுது ஒரு நல்ல காரணத்தை கூறியுள்ளது. ஹிந்தி மொழியறிவு வளர்ச்சி அடைந்து ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் நிலைமை சீர்படுகின்ற வரை இது ஒரு தவிர்க்க முடியாத குறையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் கல்வி கற்கின்ற மாணவர்கள் தங்கள் ஹிந்தி மொழியின் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும், அதனைக் கற்பிக்கிற ஆசிரியர்கள் தங்கள் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கும் இப்பிரந்தியங்களில் உள்ள மாணவர்கள் ஹிந்தி மொழி பேசப்படுவதைக் காதால் கேட்பதற்கும், ஒரு சிறந்த வழி இப் பல்கலைக் கழகங்களுள் மாணவர்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடம் சென்று கற்குமாறு செய்வதாகும் என்பதை இந்த அறிக்கையின் மற்றோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளோம். இந்த வழிகளையெல்லாம் மேற்கொண்டாலும்கூட அவற்றை மிக்க ஊக்கத்துடன் கொண்டு செலுத்தினாலும்கூட ஹிந்தி மொழி பேசப்படாத பிராந்தியங்களில், சிறப்பாகத் தென் பிராந்தியங்களில் அன்றாட வாழ்க்கையில் ஹிந்தி மொழியைப் பேசிக் கேட்க முடியாத காரணத்தால் ஒரு பெரிய முட்டுக் கட்டை இருந்தே தீரும். என்றாலும் எல்லா மாணவர்களுக்கும் இந்த முட்டுக் கட்டை பொதுவாக இருக்குமாதலாலும் மாணவர்கள் தேர்வு பற்றி ஆராயும்பொழுது அனைவருக்கும் பொதுவான இது ஒரு பெரிய தடையாக இராது என்று நாங்கள் கருதுகிறோம். எனவே சென்னை அரசாங்கத்தின் விடையில் "இந்த ராஜ்யத்திலுள்ள மாணவர்கள் தங்கள் பரீக்ஷைக்கு இடையூறு உண்டாக்காத அளவு அறிவை ஹிந்தி மொழியில் பெறுவது கடினம்" (கீழ்க் கோடிட்டது நாங்களே) என்று சொல்லி இருப்பதை நாங்கள் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலே கொடுத்துள்ள அவர்கள் விடையில் இதனை அடுத்து அவர்கள் தந்துள்ள வாதத்தையும் நாங்கள் புரிந்துகொள்ள முடியவில்லை. ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கிப் பரீக்ஷை தேறுவதற்கு அதில் அம்சங்கள் பெற வேண்டியது இன்றியமையாதது என்று ஆக்கினாலும் பரீக்ஷையில் தேர்வு கொடுக்கும்பொழுது ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் ஹிந்தியைக் கற்றுக்கொள்வதிலுள்ள இந்த இடையூறுகளை நினைந்து தேர்வுகள் தரலாம். அன்றியும் இந்த இடையூறுகளும், தேர்வு தருவதற்குரிய அடிப்படை விதிகளும் எல்லா மாணவர்களுக்கும் பொதுவாகத்தானே இருக்கும்? இந்தக் குறையைப் போக்குவதற்குச் சிறந்த வழி தமிழ் நாடு போன்ற ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் ஹிந்திப் பயிற்சியில் தொடக்கத்தில் ஓரளவு குறைந்த தரத்தை எதிர்பார்ப்பதில் தவறில்லை. நாளாவட்டத்தில் சூழ்நிலை மாறுபட்டுச் செல்லச் செல்ல இந்தத் தரத்தை உயர்த்திக் கொள்ளலாம். எனவே மாணவர்களுடைய கல்வி வாழ்க்கையில் கட்டாய பாடமாக்குவது எத்தகைய தீமையான விளைவை உண்டாக்கும் என்பது எங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மேலும் மாணவர்கள் தோல்வியடைவதற்குரிய சந்தர்ப்பங்களை இது அதிகமாக்கும் என்ற காரணத்தையும் எங்களால் அறிய முடியவில்லை.

கட்டாய பாடமாக ஆக்குவது பற்றி இங்கே குறிப்பிட்டுள்ளவற்றில் மற்றொரு குறிப்பையும் கவனிக்கவேண்டும். மொத்தக் கணக்கில் இருபது சத விகிதம் விருப்ப பாடமான ஹிந்தியைக் கற்கவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. இந்த இருபது சதவிகித மாணவர்கள் யாரென்று தெரிவிகப்படவில்லை. கல்வித் துறையில் பிற்போக்கான சமூகத்திலிருந்து வருகின்ற மாணவர்களாகவும் இருக்கலாம் இவர்கள். அவ்வாறனால் எந்த ஒரு இனத்தாருக்கு ஹிந்தியை விருப்ப பாடமாக எடுத்து கல்வித் துறையில் ஊக்கத்துடன் படிக்கவேண்டிய அவசியம் தேவையோ அவர்களுக்கு இதனை வழங்காது போய்விடுகிறது. கல்வித் துறையில் கீழ்ச் தாப் படிகளில் ஒன்றைக் கட்டாயமாகச் செய்வதுதான் கல்வியில் பிற்போக்கடைந்துள்ள இனத்தாருடைய நன்மையைக் கருதிச் செய்வதாகும். ஏனென்றால் கல்வித் துறையில் முன்னேற்றமடைந்தவர்கள் கட்டாயப்படுத்தப்படாமலே தங்கள் காரியத்தைக் கவனித்துக் கொள்வார்கள்.

குழந்தைகளுக்குத் தேவையான குறைந்த அளவில் ஒரு மொழி கற்பிக்கப்படுகின்ற வரையில் அந்த மொழியை "இரண்டாவது" மொழி என்றோ "மூன்றாவது" மொழி என்றோ சொல்வதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. இப்பொழுது நாங்கள் சொல்ல விரும்புவது என்ன வென்றால், ஒன்றை விருப்ப பாடமாக்கி அதில் பரீக்ஷையும் வைக்காத பொழுது அதனைக் கற்பிக்கின்றவர்களும், கற்றுக்கொள்கின்றவர்களும் மிகச் சாதாரண முறையில் அதனை எடுத்துக் கொண்டு தீவிர முயற்சியோ கவனமோ செலுத்த மாட்டார்கள் என்பதே. பள்ளிக்கூட அதிகாரிகளும், ஆசிரியர்களும், மாணவர்களும் இவ்வளவு பணத்தையும், சக்தியையும் ஹிந்தி போதனைக்குச் செலவழிக்கும்பொழுது அதனால் பெறுகின்ற பயன், பரீக்ஷை என்று ஒன்று இல்லாமையினால், எவ்வளவு என்று கணித்தறிய முடியாதபடி இருக்கின்றது. எனவே இதனைப் பரீக்ஷைக்குரிய பாடமாகப் பள்ளிக்கூடத்தில் படிப்பின் இறுதி ஆண்டில் வைக்கவேண்டியது மிக அவசியம். ஹிந்திப் பரீக்ஷையை "தேர்வு பெறுவதற்குரிய" பாடமாக மட்டும் வைப்பதா? இல்லை, "மாணவர்களைத் தரம் பிரிக்கும்" அளவிற்குக்கூட இந்தப் பரீக்ஷையை ஏற்றுக் கொள்வதா என்பதெல்லாம் அந்தந்தப் பிராந்திய அதிகாரிகள் முடிவு செய்யவேண்டும்.

சென்னை அரசாங்கம் தன்னிடமுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கட்டாயமாக ஹிந்தியைப் போதிப்பதற்குரிய வழிகளை வகுத்துக் கொடுத்தது போற்றத் தகுந்த ஆரம்பமாகும். இனி அடுத்து வரவேண்டிய ஹிந்தி மொழி பற்றிய நிறைவேற்றங்களெல்லாம் படிப்படியாக வரும் என்பதிலும், அதனை எப்பொழுது நிறைவேற்றலாம் என்பதைக் கூறுவதற்குச் சென்னை அரசாங்கமே தகுதியுடையது என்பதிலும் எங்களுக்கு எவ்வித ஐயமுமில்லை. ஜனத்தொகையில் பெருவாரியான மக்களால் தாய் மொழியாகப் பேசப்படுகின்ற காரணத்தாலும் மற்றும் பலரால் புரிந்துகொள்ளப் படுகின்ற காரணத்தாலும் ஹிந்தி மொழி அதற்குரிய மதிப்பையும் இடத்தையும் பெறும் என்பதிலும், யூனியன் மொழியாகவும், ராஜ்யங்களுக்குள் கருத்துப் பரிமாறிக் கொள்ளும் மொழியாகவும் ஆகுமென்பதிலும் ஐயமில்லை. இந்த உண்மையை அறிந்துகொள்ள தவறுகின்றவர்கள் தாங்களே இதனால் பாதிக்கப்படுவார்கள். பள்ளிப் பிள்ளைகளுள் மிகப் பெருவாரியானவர்கள் விருப்ப பாடம் என்று இருப்பினும்கூட ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்கிறார்கள் என்றால் இன்றையச் சூழ்நிலையையும், இதன் தேவையையும் மாணவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பதே காரணம். எங்களுடைய கருத்துப்படி ஒன்றைப் போதிப்பதற்கு வழி வகுத்துக் கொடுத்தால் அது செம்மையான முறையில் போதிக்கப்பட்டு நன்கு கற்றுக்கொள்ளப்படுகிறதா என்பதை அறிந்து கொள்வதும் முக்கியமானதாகும்.

13. இது சம்பந்தமான மற்றொரு வாதத்தையும் இங்கே குறிக்கவேண்டும். ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் ஹிந்தியை கற்றுக்கொள்வதைப்போல அதற்கு ஈடுசெய்யும் முறையில் ஹிந்தி மொழி பேசும் பிராந்தியங்களில் உள்ள மாணவர்கள் ஹிந்தி அல்லாத ஒரு பிராந்திய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இங்ஙனம் சொல்லப்படும் கட்சியில், சிலர், அங்ஙனம் ஹிந்தி பேசும் மாணவர்கள் கற்றுக்கொள்ளும் ஹிந்தி இல்லாத பிராந்திய மொழி, தென்னாட்டில் வழங்குகின்ற நான்கு மொழிகளுள் ஒன்றாகத்தான் இருக்கவேண்டும் என்றும் சொல்கிறார்கள். வடநாட்டில் எங்களை எதிர்ப்பட்டு சான்று பகர்ந்தவர்களுள் பெரும்பாலோர் இங்ஙனம் கட்டாயப் படுத்துவதை வரவேற்றார்கள். தென்னாட்டில் நாங்கள் சந்தித்தவர்களுள் பெரும்பாலோர் இவ்வாறு திணிப்பதில் அர்த்தமொன்றுமில்லை என்றும் கூறினார்கள்!

வளம் பொருந்தியனவும் பல்வேறு வகைப்பட்டனவும் ஆன பல மொழிகளுடைய இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில் தம் மொழியையல்லாத பிற இந்திய மொழிகளையும் இடைநிலைக் கல்விக் காலத்தில் அனைவரும் கற்பதற்குரிய நிறைந்த வாய்ப்புக்களை அளிக்க வேண்டியது மிகவும்

அவசியம். இவ்வறிக்கையின் மற்றொரு பாகத்தில் தென்னாட்டு வரலாறு இலக்கியங்கள், மொழிகள் ஆகியவற்றைப் பற்றிப் பிற பகுதியிலுள்ளவர்கள் ஒன்றும் அறியாது இருக்கின்ற நிலையை எடுத்துக் கூறி அதனை போக்கு வதற்கு எடுத்துக்கொள்ள வேண்டிய தனி முயற்சிகளையும் சொல்லி அப்பொழுதுதான் "உணர்ச்சி முறையால் நாட்டில் ஒருமைப்பாடு" ஏற்படும் என்றும் கூறியுள்ளோம். இந்திய மொழிகளில் பலவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டிய வாய்ப்புகளை நாட்டின் பல பாகத்திலும் மிகுதிபடுத்த வேண்டுவது பற்றிக் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை. ஹிந்தி பேசாத பிராந்தியங்களைப் பொறுத்த மட்டில் மாணவர்கள் தாய் மொழி, ஆங்கிலம் என்பவற்றோடு ஹிந்தியையும் கற்றுக்கொள்ள வேண்டி இருத்தலின் மற்றொரு இந்திய மொழியைப் பாடத் திட்டத்தில் புகுத்துவது கடினம் என்றே தோன்றுகிறது. இந்தக் கருத்து ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள இடைநிலைப் பள்ளிகளை சிறப்பாகக் கவனிக்க வேண்டிய ஒன்று. இப்பகுதிகளில் ஹிந்தி, ஆங்கிலம் என்ற இரண்டு மட்டுமே பள்ளிக்கூட பாடத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. இந்த பிராந்தியங்களிலுள்ள மாணவர்கள் ஏனைய இந்திய மொழிகளை கற்பதற்குரிய வாய்ப்புக்களை நிறைந்த அளவுக்கு இப்பிராந்திய கல்வி அதிகாரிகள் அளிக்க வேண்டுமென்றும் எங்கே தேவையோ அங்கே அரசாங்கத்தின் தனி உதவியையும் அளிக்க வேண்டுமென்றும் நாங்கள் சொல்ல விரும்புகின்றோம்.

ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள இடைநிலைக் கல்வி பயிலுகின்ற மாணவர்கள் தாங்களாக விருப்பப்பட்டு ஏனைய இந்திய மொழிகளைக் கற்பதற்கும், அதற்குரிய வசதிகளை அளிப்பதற்கும், அவர்கள் ஏனைய இந்திய மொழிகளை கட்டாயம் கற்க வேண்டும் என்று பள்ளிக்கூட பாடத் திட்டம் வகுப்பதற்கும் வேறுபாடு நிரம்ப உண்டு. இதே போன்ற ஒரு வினா யூனியன் பொதுப்பணி கழகம் நடத்துகின்ற போட்டித் தேர்வுகள் பற்றியும் எழுகின்றது. ஆதலின் 12-வது பகுதியில் இது பற்றி விரிவாக ஆய்ந்துள்ளோம். அங்கே ஹிந்தி பேசும் மாணவனோடு ஹிந்தி பேசாத மாணவனும் சேர்ந்து எழுதுகின்ற கட்டாய ஹிந்தி மொழி வினாத்தாளைப் பற்றிப் பேசியுள்ளோம். ஹிந்தி மொழி பேசாதவன் எழுதித் தீரவேண்டிய கட்டாய ஹிந்தி மொழி வினாத்தாளைப் போல ஹிந்தி மொழி பேசுபவன் இந்தியாவின் பண்பாடு, ஏனைய இந்திய மொழிகளுள் சிறப்பாக தென்னிந்திய மொழிகளுள் ஒன்று, ஆகிய இவை பற்றி ஒரு வினாத்தாளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதாவது ஹிந்தி பேசும் மாணவர்கள் ஏனைய இந்திய மொழிகளுள் சிறப்பாக தென்னிந்திய மொழிகள் பற்றி ஒரு வினாத்தாளை எடுத்துக்கொண்டுதான் தீரவேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்யவில்லை. ஒரு சில காலியான இடங்களை நிரப்புவதற்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் ஒரு கூட்ட மாணவர்கள் மற்றொரு கூட்ட மாணவர்களுக்கு இல்லாத தனிப்பட்ட ஒரு குறைபாட்டை பெறுவதை அனைவரும் அறிவர். இங்ஙனம் உள்ள குறைபாட்டைப் போக்க வேண்டும்; இரண்டு கூட்டத்தாருக்கும் சமமான சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. ஆனால் இடைநிலைக் கல்வியைப் பொறுத்த மட்டில் ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள மாணவர்களுக்கும் ஹிந்தி பேசாத மாணவர்களுக்கும் எவ்விதமான நேரிடைப் போட்டியும் இல்லை. ஆதலால் இப்படிப்பட்ட ஒரு குறைபாட்டைப் போக்க வேண்டிய வழிகளை வகுப்பதும் தேவைப்படாது. இடைநிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் போட்டிப் பரிட்சையில் இருப்பது போல் கட்டாயப் படுத்துவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை என நாங்கள் நினைக்கின்றோம். இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ள மாணவர்களுக்கு ஹிந்தி மொழியைக் கற்பிப்பதற்கு ஒரு குறைபாடாகவோ பாரமாகவோ கருதப்படாமல் அகில இந்தியாவிலும் ஆட்சி மொழியாக வழங்கப்படப் போகின்ற ஹிந்தி மொழியை அறிந்து கொள்வதற்குரிய வாய்ப்பாகவே இதைக் கருத வேண்டும். அவருடைய பிற்கால வாழ்வில் அகில இந்திய அலுவல்களில் கலந்து கொள்வதற்குரிய மொழி வன்மையைப் பெற்றுப் பயனடைய இது ஏதுவாகும்.

ஹிந்தி மொழி பேசும் மாணவர்கள் ஹிந்தி மொழி அல்லாத பிராந்தியங்களில் வழங்கும் திராவிட மொழியையோ அல்லது வேறொன்றையோ கட்டாயம் படித்துத் தீரவேண்டும் என்பது வேறு வகையைச் சார்ந்ததாகும். ஹிந்தி பேசும் பிராந்திய்ங்களிலிருந்து வெளியே அம்மொழி பேசப்படாத பிராந்தியங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையுடைய மாணவர்கள் அவர்கள் எந்தப் பிராந்தியங்களுக்குச் செல்ல வேண்டுமோ அந்தப் பிராந்தியத்தில் வழங்காத ஒரு மொழியை அவர்கள் கற்றிருத்தல் கூடும். மேலும் அவர்களுடைய மொழி வழங்கும் பிராந்தியங்களிலிருந்து வெளியே செல்ல வேண்டிய கட்டுப்பாடுடையவர்கள் அந்தப் பிராந்திய ஜனத்தொகையில் மிகக் குறைவான எண்ணிக்கை உடையவர்களாகவே இருப்பார்கள்.

ஹிந்தி பேசும் மாணவன் ஒருவனைப், பிற மொழியை கற்றுக்கொள்வதனால் அவனுக்கு ஏற்படப்போகின்ற பயன் மிக மிக குறைவாக இருக்கும்பொழுது அதனைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவனைக் கட்டாயப்படுத்துவது நியாயமற்றதாகவே தெரிகிறது. இந்நிலையில் இப்பிரச்சினையை நல்ல முறையில் தீர்ப்பது எவ்வாறெனில் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் பிற மொழிகளைக் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து விட்டு இந்த வசதிகளை பயன் படுத்துமாறு அவர்களை தூண்டுவதுதான் சிறந்ததே தவிரக் கட்டாயப்படுத்துவது முறையன்று.

இந்த விஷயத்தை முற்றிலும் வேறு விதமாக, அதாவது கல்வி முறை அல்லது கற்பிக்கும் முறை என்ற அளவில் பார்க்க வேண்டியது தவிர வேறில்லை. கல்வி முறை அல்லது கற்பிக்கும் முறைகளில் காணும் பொழுது ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள இடைநிலைப் பள்ளி வகுப்புப் பாடத் திட்டங்களில் மற்றொரு மொழியை கற்பிப்பதற்குரிய இடம் உண்டா என்று காண வேண்டும். அவ்வாறு இடமும் இருந்து கல்வித் துறை வல்லுநர்கள் இப்பிராந்திய மாணவர்கள் பாடத்திட்டத்தில் கிடைக்கும் அதிகப்பட்ட நேரத்தில் மற்றொரு மொழியையும் கற்பிக்கலாம் என்று கூறுவார்களேயானால் அப்பொழுது அதற்கேற்றபடி பாடத்திட்டத்தை மாற்றி அமைக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும் போது கட்டாயமாகக் கற்கப்பட வேண்டிய அந்த மொழி ஹிந்தி மொழியை அல்லாத வேறு ஒரு இந்திய மொழியாகவோ, வடமொழியாகவோ, பிரஞ்சு, ஜெர்மன், ரஷ்யன் போன்ற மொழிகளுள் ஒன்றாகவோ இருக்கலாம்.

பல்கலைக் கழகக் கல்வி.

14. பல்கலைக் கழகத்தில் போதனா மொழியைப் பற்றி இப்பொழுது நாம் ஆராய வேண்டும். இதுபற்றிப் பேசப்படும்பொழுது ஆங்கிலம், ஹிந்தி, பிராந்திய மொழிகள் என்பனவற்றுள் ஒன்று இருத்தல் வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சில சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பட்டால் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு இந்திய மொழிகளைப் போதனா மொழிகளாகக் கொள்ளலாம் என்பது பற்றி அதிகம் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை இல்லை. இந்த விவாதத்தில் இரண்டு பிரிவுகள் உண்டு. முதலாவது கற்கின்ற மாணவனுக்குப் போதனா மொழியின் மூலம் ஏற்படுகின்ற பயன்; இரண்டாவது சமுதாய முறையில் அந்த மாணவனால் சமுதாயத்திற்கு ஏற்படுகின்ற பயன் என்பனவாகும்.

இதுபற்றி என்ன என்ன சொல்ல வேண்டுமோ அவற்றை எல்லாம் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் மகாத்மா காந்தி அவர்கள் தம் எழுத்து மூலம் சொல்லியுள்ளார்கள். அதை அல்லாமல் பல்கலைக் கழகங்களில் கற்றுத் தேர்ந்த நாம் ஒவ்வொருவரும் நினைவுக்கு வீணை பாரத்தை ஏற்றிச் சொந்தமாகச் சிந்திக்கும் சக்தியை எவ்வளவு தூரம் இழந்து அறிவை எவ்வளவு தூரம் மழுங்கச் செய்து, வேற்று மொழி போதனா மொழியாக இருந்த காரணத்தால் அல்லல் பட்டோம் என்பதை நன்கு அறிவோம். உண்மையைக் கூறுமிடத்து, நாம் கல்விக்குச் செய்த முயற்சியில் பாதிக்கு மேல் போதனா மொழியைப் புரிந்து கொள்வதில் செலவழித்தோம். அதன் பயனாக விஷயங்களைக் கற்றுக்கொள்கின்ற சக்தியையும் சொந்தமாகச் சிந்திக்கின்ற சக்தியையும் எவ்வளவு இழந்தோம்

என்பதும் அறிந்த விஷயமே. இவ்வளவு சக்தியை அப்பழைய முறைக் கல்வியில் நாம் செலவழித்தும்கூட ஆங்கில மொழியில் தகுந்த அறிவு பெற்றோமா? நம்முடைய கருத்துக்களை எளிதாக வெளியிட முடிகின்றதா? என்பது பெரும்பான்மையான மாணவர்களுக்கும், பல்கலைக் கழகங்களிலிருந்து மிகச் சிறப்போடு தேறி வெளிவருகின்றவர்க்கும் சொல்ல முடியாத ஒன்றாகும். பல்கலைக் கழகப் படிப்பை முடித்த பிறகும்கூட வாழ்நாள் முழுவதிலும் தம் எண்ணத்தை இம்மொழியில் முற்றிலும் வெளியிட முடியாமல், நன்கு கற்றுக்கொள்ளப்படாத இம்மொழியை, எண்ணத்தைத் தடைச் செய்யும் ஒரு விலங்காகவே கருதுகின்றார்கள். மிகச் சிறந்த கல்விமானும், அவர் மேற்கொண்ட முறையில் தலை சிறந்து நிற்பவருமான ஒருவர் எங்களுக்கு முன் சான்று பகர்கையில் பின் வருமாறு கூறினார். இன்று வரையில் அவர் ஆங்கிலத்திலேயே நினைந்து பேசிப் பழகி வந்தாலும் மிக நுணுக்கமான விஷயங்களையும் கடினமான பிரச்சினைகளையும் சிந்திக்கும்பொழுது வேற்று மொழியால் ஏற்படக்கூடிய குறைபாட்டை அப்பொழுது அனுபவிப்பதாகக் கூறினார். வேற்று மொழியைப் போதனா மொழியாகக் கொள்வதால் ஏற்படும் இந்தக் குறைபாடு எப்பொழுதுமே முற்றிலும் போய்விடாது ஆகையால், இந்தியர்களில் சொந்தச் சிந்தனைக்குத் தடையாக இத்தனை நாட்கள் இருந்து வந்தது என்பதும், இந்திய பல்கலைக் கழகங்களிலிருந்து உயர்தரக் கல்வி பெற்று வெளிவருகின்ற மாணவர்கள் அனைவருக்குமே இது ஒரு பிற்போக்கு சக்தியாக இருந்து வந்தது என்பதும் உண்மையே. இக்கருத்தை ஒட்டி வாதிக்கின்றவர்கள், சென்ற சில பத்து ஆண்டுகளாக இந்தியர்களால் சொந்தமாகக் கண்டுபிடிக்கப்பட்டவை ஏனையவரால் இவ்வாராய்ச்சி உலக அறிவு விருத்திக்குப் பெரிதும் பயன்படும் என்று சொல்லப்பட்ட ஆராய்ச்சிப் பகுதிகளெல்லாம் பூத நூல், வேதி நூல், தாவர நூல் என்பவற்றிலேயே இருக்கின்றன என்று கூறுகிறார்கள். இத்தகையச் சொந்த ஆராய்ச்சிகள் "ஹியூமானிட்டீஸ்" என்று வழங்கப்படும் விஷயங்களில் மிகுதியாக இல்லை என்றும், பழங்காலத்தில் இத்தகைய விஷயங்களில் இந்நாடு ம்குதியான கவனம் செலுத்தியது என்றும் இத்தகைய விஷயங்களில் இந்த அறிவிற்க கவே இந்நாடு பெரிதும் மதிக்கப்பட்டது என்றும் தெரியும்பொழுது இதற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டும் என்றே நினைக்க வேண்டி உள்ளது. ஒன்றில் வளர்ச்சியையும், மற்றொன்றில் தளர்ச்சியையும் எடுத்து விளக்கும்பொழுது, விஞ்ஞான வளர்ச்சியைப் பொறுத்த மட்டில் இடைநிலை மொழியைப் பற்றி அதிகம் கவலை இல்லை. ஆதலால் அது வளர்ச்சி அடைந்தது என்றும், ஏனைய கலைப் பகுதிகளில் இடைநிலை மொழி மிகவும் நெருங்கிய தொடர்புடையது ஆதலால் அத்துறை நன்கு வளர்ச்சி அடைய இல்லை என்றும் பேசப்படுகிறது.

மகாத்மா காந்தி 1916-லேயே இவ்வாறு கூறினார்: "ஒவ்வொரு இந்திய இளைஞனும் அவனுடைய அறிவின் வளர்ச்சியை ஆங்கிலத்தின் மூலம் பெற வேண்டியுள்ளதாதலின் அவனது வாழ்நாளில் மிகச் சிறந்த 6 வருஷங்களை இழந்து விடுகிறான். இதனை நம்முடைய பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்களை வெளியேற்றுகிறதோ அத்தனை எண்ணிக்கையால் பெருக்கினால் தேசத்திற்கு அத்தனை ஆயிரம் ஆண்டுகள் வீணாயின என்று அறிந்து கொள்ளலாம். சுயமுயற்சி இல்லை என்ற குற்றச்சாட்டு நம்பேரில் சுமத்தப்படுகிறது. வெளிநாட்டு மொழியொன்றைத் தெரிந்து கொள்வதற்கே இவ்வளவு காலத்தை நாம் செலவழித்தால் சுயமுயற்சி எங்கே வரும்? இதிலும் நாம் தோல்வியை அடைகிறோம். . . . "[1] மேலும் அவர் எழுதுவதாவது: "வெளிநாட்டு மொழியைப் போதனா மொழியாகக் கொள்வதன் மூலம் மூளைச் சோர்வு ஏற்படுகிறது. குழந்தைகளின் நரம்புகளுக்கு அதிகமான பாரத்தை உண்டாக்குகிறது. வெறும் பொட்டையுருப்போடுகின்றவர்களாகவும், பிறரைப் பார்த்து நகல் செய்கின்றவர்களாகவும், சொந்தமாகச் சிந்திக்கவும், வேலை செய்யவும் சக்தியற்றவர்களாகவும், தங்களுடைய

[1] யங் இந்தியா—1-9-1921.

கல்வியை குடும்பத்திற்கும் உலகத்தாருக்கும் வழங்க முடியாதவர்களாகவும் குழந்தைகளைச் செய்து விடுகிறது. இந்த வெளிநாட்டுப் போதனு மொழி நம்முடைய குழந்தைகளை நம்முடைய நாட்டிலேயே வெளி நாட்டுக் காரர்களைப் போல பழகச் செய்து விட்டது. இன்றுள்ள முறையில் உள்ள பெரிய அவலம் இதுதான். இந்த வெளிநாட்டு இடைநிலை மொழி நம்முடைய தாய்மொழிகள் வளராமல் தடை செய்கிறது. நான் ஒரு சர்வாதிகாரியாக இருப்பனேயானுல் வெளிநாட்டு இடைநிலை மொழியின் மூலமாக நம்முடைய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்வி வழங்குவதை இன்றே நிறுத்தி விடுவேன். ஆசியர்களும் பேராசிரியர்களும் உடனே இதனை மாற்ற வேண்டும்; இன்றேல் வேலையை விட்டு நீங்கிவிட வேண்டும் என்றும் சட்டம் விதிப்பேன். பாடப் புத்தகங்கள் தயாராகும் வரையில் காத்திருக்க மாட்டேன். பாடப் புத்தங்கள் இம்மாற்றத்தின் பின்னர் தாமே வந்துவிடும். உடனடியாகத் தீர்க்க வேண்டிய ஒரு பிரச்னை யாகும் இது". மகாத்மா காந்தியின் வாயிலிருந்து இவை வருவதானுல் ஆங்கில மொழி போதனு மொழியாக இருப்பதைப் பற்றி அவர் எத்தகைய குற்றச்சாட்டைச் செய்கிறுர் என்பது விளங்கும்.

பல்கலைக் கழகங்களில் போதனு மொழியாக இருக்கின்ற ஆங்கிலத்தை நாளா வட்டத்தில் இந்திய மொழிகளின் மூலம் மாற்றி விடவேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கிறுர்கள். இன்னும் பல காலத் திற்குப் பல்கலைக் கழகப் படிப்பில் பொதுவாகப் பல துறைகளிலும், சிறப்பாக விஞ்ஞானத் துறைகளிலும் ஆங்கிலமே போதனு மொழியாக இருந்து வரவேண்டும். நாங்கள் எதிர் பார்க்கின்ற முறையில் கலைப் பாடங்களில் முதலில் போதனு மொழியை மாற்றி அமைக்கலாம். அதனை அடுத்துத் தொழில் துறைக் கல்விகளிலும் இறுதியாக விஞ்ஞானப் பாடங்களிலும் இதனை மாற்றி அமைக்கவேண்டும்.

15. கல்வியை வெளி நாட்டு போதனு மொழியின் மூலம் கற்பிப்பதன் பொருத்தமின்மையை மற்றொரு முக்கியமான காரணத்தாலும் காணலாம். இங்ஙனம் கல்வி பெறுகிறவர்கள் தங்கள் சமுதாயத்திலிருந்து முற்றிலும் வேறு பிரிந்து கற்றவர் கூட்டம் என்ற ஒன்றை உண்டாக்கிக் கொண்டு வாழவேண்டியது இன்றியமையாதது ஆகிறது. இந்த இடத்திலும்கூட மகாத்மா காந்தியின் வார்த்தைகளை அப்படியே எடுத்துச் சொல்வதைத் தவிர நாங்கள் அதிகமாக ஒன்றும் செய்வதற்கில்லை—

"உண்மையாகவே நாட்டின் இளைஞர் கூட்டம் பொது மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமேயானுல் பொது மக்களுக்குப் புரிகின்ற ஒரு மொழியின் மூலம் அவர்கள் கல்வி பெறவேண்டும். அவ்வாறில்லையானுல் அவர்களால் தொடர்பு கொள்ள முடியாது என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. நாட்டின் ஆயிரக் கணக்கான இளைஞர்கள் வெளி நாட்டு மொழி ஒன்றையும், அதன் மரபுகளையும் கற்றுக்கொள்வதற்குச் செலவழிக்கின்ற காலத்தையும், எல்லையில்லாத சக்தி நஷ்டத்தையும் யார் அளவிட்டுக் கூற முடியும். அவர்களுடைய வாழ்க்கையில் இங்ஙனம் பெறுகின்ற அந்த மொழி அறிவு ஒரு சிறிதும் பயன்படாமல் போவதோடு இந்த அறிவைப் பெறுவதற்காக அவர்களுடைய தாய் மொழியையும், அம் மொழியிலுள்ள இலக்கியங்களையும் கற்காமல் விட்டு விடுகிறுர்கள். ஒரு குறிப்பிட்ட மொழி வளர்ச்சி அடைய முடியாது என்றே, விஞ்ஞானக் கருத்துக்களையும், நுண்மையான கருத்துக்களையும் தெரிவிக்க முடியாதென்றே சொல்வதைக் காட்டிலும் குருட்டு நம்பிக்கை வேறு இருப்பதற்கில்லை. ஒரு மொழி என்பது அதனைப் பேசும் மக்களினுடைய பண்பாட்டையும் வளர்ச்சியையும் அப்படியே எடுத்துக் காட்டுகின்ற கருவியாகும்.

வெளியார்கள் ஆட்சி இந்த நாட்டில் திணித்த பல்வேறு கொடுமைகளுள் வெளிநாட்டு மொழியை இளைஞர்களின் கல்விக்குப் போதனு மொழியாக ஆக்கியது தலை சிறந்த ஒன்ருக வைத்து சரித்திரத்தில் எண்ணப்படும். இது இந்த தேசத்தின் சக்தியை உறிஞ்சி விட்டது. கற்கும் குழந்தைகளின் வாழ்க்கையைக் குறுக்கி அவர்களுக்குப் பொதுமக்கள் தொடர்பில்லாமல் செய்து கல்வியை வீணுன செலவுடையதாகச் செய்து

விட்டது. இம்முறையை மேலும் தொடர்ந்தால் நிச்சயமாக இந்த இனத்தின் உயிரையே அது வாங்கிவிடும். எவ்வளவு விரைவில் கற்றறிந்த இந்தியர்கள் வேற்று போதனா மொழியாகிய இந்த மாய மந்திரத்தை உதறத் தள்ளுகிறார்களோ அந்த அளவுக்கு அவர்களுக்கும், தேசத்திற்கும் நன்மை விளையும்."[1]

தற்கால இந்தியர்களில் பலர் பெறும் பல்கலைக் கல்வியை நிறைந்த விளக்குகளோடு வேகமாகக் கிராமந்தரப் பகுதியில் செல்லும் புகைவண்டியோடு ரவீந்திரநாத் தாகூர் ஒப்பிட்டார். ரயிலில் செல்கின்ற பிரயாணிகளுக்கு நல்ல வெளிச்சம் கிடைக்கும் முறையில் ரயில் முழுவதும் வெளிச்சம் போடப்பட்டிருப்பினும், எந்தப் பிராந்தியத்தின் வழியாக அந்த ரயில் செல்கிறதோ அந்தப் பிராந்தியக்காரர்களுக்கு பல சமயங்களில் கண்ணைக் குருடாக்குகின்ற அளவுக்கு ஒரு பேரொளி கிடைக்கின்றதே தவிர, இந்த ஒளியால் எந்தவிதப் பயனுமில்லை! உண்மையைக் கூறுமிடத்து உயர்தரக் கல்வி என்பது சமுதாயத்திலிருந்து பெரிதும் பிரிக்கப்பட்டுள்ளமையால் சமுதாயத்திற்கும், பொதுமக்களுக்கும் எவ்விதமான நன்மையையும் செய்யாததோடு அக்கல்வியைப் பெறுகின்றவர்களுக்கும் எவ்வளவு நன்மையைச் செய்ய வேண்டுமோ அவ்வளவு நன்மையை அது செய்வதில்லை.

இந்த வாதத்தை மேலும் கொண்டு செல்ல நாங்கள் விரும்பவில்லை.

16. போதனா மொழியாக உள்ள ஆங்கிலத்தை மாற்றுவதினால் கல்வித் தரத்தில் வீழ்ச்சி ஏற்படும் என்றும், சிறப்பாக விஞ்ஞானத் துறையிலும், தொழில் நுட்ப முன்னேற்றத்திலும் இவ்வீழ்ச்சி ஏறபடும் என்றும் இவ்விரண்டு துறைகளிலும் முன்னேறி உள்ள நாடுகளோடு ஒப்புமை செயது பார்த்தால் நாம் ஏற்கெனவே ஒரு தலைமுறை பின்னே இருக்கின்றோம் என்றும் இவ்வாறு செய்வதால் "கெடிகாரத்தைப் பின் தளளி வைப்பது போல் ஆகும்" என்றும் சிலர் அஞ்சுகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை விஞ்ஞானிகளும், தொழில் வல்லவர்களும் உலகம் முழுவதிலும் இவ்விரண்டு துறைகளிலும் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைத் தொடரக்கூடியவர்களாக இருக்கவேண்டும் என்ற வாதத்தை முழு மனத்துடன் ஒப்புக் கொள்கிறோம். உலகில் இங்ஙனம் ஏற்படுகின்ற முன்னேற்றங்கள், ஏறத்தாழ எல்லாத் துறைகளிலும் தோன்றுகின்ற முன்னேற்றங்கள், ஆங்கில மொழியிலுள்ள புத்தகங்கள், செய்தித்தாள்கள், மாத இதழ்கள், ஆகியவற்றின் மூலம் பெரும்பாலும் கிடைக்கின்றன என்று எங்களுககுத சொல்லப்பட்டது. இதற்கு முன்னாச் சொல்லப்பட்ட பகுதிகளில் நம்முடைய பட்டதாரிகளைச் சிறப்பாக விஞ்ஞானத் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் உள்ள பட்டதாரிகளை வேண்டுமான அளவு ஆங்கில அறிவு பெற்றுள்ளவர்களாகச் செய்வதன் அவசியத்தை எடுத்து வற்புறுத்தி உள்ளோம். இத்துறையில் பட்டப் படிப்புப் படிக்கின்றவர்களுக்கு ஆங்கில மொழி அறிவை தனிப்பட்ட முறையில் கற்றுக்கொடுக்க வேண்டுமேயானால் அத்துறையில் கற்கின்றவர்களுக்கு மேற்கொண்டு ஆங்கில மொழிக் கலவியைக் பல்கலைக் கழகத்தார் அளிக்கலாம். இன்னும்கூட ஆங்கிலத்தை அல்லாத மற்றொரு மொழியின் மூலம் அதிக லாபம் கிடைக்குமேயானால் அந்த மொழியையும் கற்பிக்கலாம். தற்காலத்தில் விஞ்ஞானத் துறையின் ஆராய்ச்சிப் பகுதி, உலகின் பல்வேறு பாகங்களில் அவரவர்கள் துறையில், அவரவர்கள் செய்கின்ற ஆராய்ச்சியைக் கொண்டும், கொடுத்தும் கொள்வதால் மேலும் வளர்கிறது என்பதை நாங்கள் உணர்கிறோம். வேறுவகையில் சொல்ல வேண்டுமேயானால் உலகின் பல்வேறு பாகங்களிலுள்ள விஞ்ஞானிகளோடு நம்முடைய நாட்டு விஞ்ஞானிகளும் அப் பிற நாட்டு விஞ்ஞானிகளின் மொழியிலேயே பேச வாய்ப்பு இருக்க வேண்டும். நாங்கள் கொடுத்துள்ள சிபார்சுகள் நாட்டிலுள்ள விஞ்ஞான அறிவை நிலை நிறுத்துவதற்கும், தரத்தை உயர்த்துவதற்கும் எந்த அளவிலும் இடையூறாகாது என்று கூற விரும்புகிறோம். ஒரு சில துறைகளில் உழைக்கின்ற சிலருக்கே தேவையான இந்த மொழி வல்லமைக்கும் பல்கலைக்

[1]யங் இந்தியா, 5–7–1928.

கழகத்தின் எல்லாத் துறைகளிலும் வேற்றுமொழியைப் பொது போதனு மொழியாக ஆக்குவதற்கும் உள்ள வேறுபாட்டை அறியாமையினுலேயே ஒரு சிலருக்கு இத்தகைய குழப்பம் ஏற்படுகிறது.

17. இது எவ்வாருயினும் பொதுப் போதனு மொழியாக உள்ள ஆங்கிலத்தைப் படிப்படியாக நீக்கி விட்டு இந்திய மொழி ஒன்றை வைக்க வேண்டும் என்ற கொள்கை வலுப்பட்டுக்கொண்டு வருகிறது. முற்றிலும் நம்மை நாம் திருப்திகரமான முறையில் தயார்செய்து கொண்டால் நாட்டின் கல்வித் தரம் குறையாத முறையில் இதனை மாற்றி அமைக்கக் கூடும் என்பதை நாங்கள் சந்தேகப்படவில்லை.

அடுத்தபடியாக நாம் சிந்திக்க வேண்டியது பல்கலைக் கழகப் போதனு மொழி ஹிந்தியாக இருக்க வேண்டுமா அல்லது பிராந்திய மொழியாக இருக்கவேண்டுமா என்பதாகும். இப்பிரச்னையின் பொதுவான தன்மையை ஆராயும்பொழுது, சில துறைகளில், சில பகுதிகளிலாவது எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஒரேமாதிரியான போதனு மொழி இருக்க வேண்டுமா என்றும் காணவேண்டும். அங்ஙனம் இருப்பதாளுல் அது ஹிந்தி மொழியாகத்தான் இருக்கக்கூடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கல்வி முறையிலேயே பல்கலைக் கழக நிலை உள்பட எல்லா நிலைகளிலும் போதனு மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று வாதிக்கப்படுவதைக் கேட்டுள்ளோம். இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிக்காரர்கள் இங்ஙனம் வாதிப்பது சற்று அதிகப்படியானது என்றே எங்களுள் சிலர் நினைக்கின்றோம். பல்கலைக் கழகக் கல்வி முறையில் மொழிக்காக மொழியைப் படிக்கின்ற துறைகள் நீங்கலாக மற்றத் துறைகளில் மொழி வல்லமை, பெரிதாகக் கருதப்படுவதில்லை. இத்துறைகளில் எடுத்துக்கொண்ட விஷயத்தை அறிந்துகொள்வதுதான் முக்கியமாகும். இந்நிலையில் இந்த அறிவைப் பெருவதற்குக் கருவியாக உள்ள மொழி அந்த அறிவைப் பெறுவதற்குத் தடையாக இருக்கக் கூடாது என்பதும் விரும்பத் தகுந்ததே. எல்லா இந்திய மொழிகளுள்ளும் இருக்கின்ற நெருங்கிய தொடர்பை உத்தேசித்தும் அவை எல்லாவற்றுள்ளும் ஒரேமாதிரியான கலைச் சொற்கள் வழங்கப்படப் போவதை உத்தேசித்தும் மரபுச் சொற்களும், சொல்லாட்சிகளும் இப் பல்வேறு மொழிகளுள்ளும் ஒற்றுமை உடையனவாக இருப்பதை உத்தேசித்தும், இம் மொழிகளெல்லாம் ஒரேவகையான இந்தியப் பண்பாட்டை வெளியிடுகின்ற கருவிகள் என்பதை உத்தேசித்தும், நாம் சொல்கின்ற முறைப்படி பல்கலைக் கழக நிலைக்கு வருகின்ற ஒவ்வொரு மாணவனும் தகுந்த அளவு ஹிந்தி மொழியில் அறிவு பெற்றிருப்பான் என்பதை உத்தேசித்தும், ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் பல்கலைக் கழக நிலையில் ஹிந்தி மொழியைப் போதனு மொழியாக ஆக்குவதில் தடையோ தொல்லையோ இருக்கும் என்று நாங்கள் நினைக்கவில்லை.

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் ஒரே போதனு மொழி இருக்கவேண்டும் என்று சொல்பவர்களுடைய வாதத்தில் ஒன்றை இங்கே குறிப்பிடுகிருேம். இந்திய நாட்டின் அறிவாளர்க் கூட்டம் பல்வேறு மொழி பேசுகின்ற இனங்களிலிருந்து தோன்றுவதால் பல்கலைக் கழகங்களில் போதனு மொழிகளும் பலவாக இருப்பின் இக்கூட்டம் துண்டாடப்பட்டு நாட்டின் ஒற்றுமையைக் குலைத்துவிடும் என்று சொல்லப்படுகிறது. நாங்கள் சொல்கின்ற கல்வி முறையில் பல்கலைக் கழகப் பட்டதாரிகள் அனைவரும் இடை நிலை வகுப்புகளிலேயே குறைந்த அளவு ஹிந்தியைக் கட்டாயமாகப் படித்திருக்கிருர்கள். ஆதலால் அகில இந்திய மொழியில் கருத்துப் பரிமாறிக்கொள்ளும் சக்தியை பெற்றிருப்பார்கள். உண்மையில் ஹிந்தி பேசாத ஒரு பட்டதாரி அவனுடைய பிராந்திய மொழியைக் கல்விக் காலத்தில் நீண்டகாலம் கற்றிருப்பான் ஆதலாலும் அதனையே போதனு மொழியாக பெற்றிருப்பான் ஆதலாலும் அம் மொழியில் அதிக வல்லமை படைத்திருப்பான். எனவே, பல்வேறு இனங்களிலிருந்து வருகின்ற இவ்வறிவாளிக் கூட்டத்தில் சொந்தமாக நினைப்பதற்கு அவரவர்கள்

பிராந்திய மொழிகளே அதிகமாகப் பயன்பட்டாலும் இப் பிராந்திய மொழிக் கூட்டங்களுள் ஓரளவு தொடர்பு ஏற்படுத்த அப்பொது மொழியால் முடியும். அகில இந்திய மொழியால்தான் நாட்டின் ஒற்றுமையைப் புரிந்துகொள்வதற்கும் அதனுடைய முக்கியமான பகுதிகளைக் காப்பாற்றுவதற்கும் முடியும். இப்பொழுது இந்தியாவிலுள்ள சூழ்நிலையில், எளிதான முறையில் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஒரே போதனு மொழியை வைக்கின்ற ஒரு முடிவு ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், கொஞ்சம் சிக்கலான ஒரு முடிவுடன் திருப்தி அடையத்தான் வேண்டும். முடிவாகப் பல்கலைக் கழகங்கள் பல்வேறு கல்வித் துறைகளுக்கு பல்வேறு போதனு மொழிகளை ஏற்படுத்திக்கொண்டாலும், சில பொதுப் படையான திட்டங்களை நாங்கள் சிபார்சு செய்கிறோம். அவையாவன, (1) இடைநிலைக் கல்வியில் குறைந்த அளவு கட்டாய ஹிந்தி போதனை ; (2) ஹிந்தி மூலம் கல்வி பெறுகின்ற மாணவர்களை எல்லாப் பல்கலைக் கழகங்களும் தங்கள் பரீக்ஷைகளுக்கு ஏற்றுக்கொள்ளுதல் ; (3) ஹிந்தியைப் போதனு மொழியாக உடைய அமைப்புக்கள் எங்கே தேவைப்படுகின்றனவோ அங்கே தேவைப்படுகின்ற அளவுக்குக் கல்வி முறையில் வேண்டுமான இடம் அளித்தல்.

பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் ஒரே மொழியைப் போதனு மொழியாக வைப்பது ஆசிரியர்களும், மாணவர்களும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பெயர்ந்து செல்லவேண்டிய நிர்பந்தத்தைப் போக்கி, இன்று ஆங்கிலம் போதனு மொழியாக இருக்கும்பொழுது எங்கேயும் செல்லத் தகுதி பெற்றிருப்பதுபோல ஒரு தகுதியை உண்டாக்கும். இங்கேயும் கூட நேரடித் தேவைகளுக்கு நாங்கள் சொல்லப் போகும் முடிவு போதுமானது. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் தாய் மொழி போதனு மொழியாக இருக்குமேயானால் அந்தத் துறையில் தம்முடைய கருத்துக்களை அந்தப் பிராந்திய மொழி மூலம் வெளியிட முடியாத ஆசிரியர்களுக்கு ஹிந்தி மூலம் பேச உரிமை தரப்படவேண்டும். இந்நிலை ஏற்படுமானல் இடைநிலைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாக ஹிந்தியைக் கற்ற மாணவர்கள் அந்தப் பேராசிரியரின் சொற்பொழிவுகளைப் புரிந்து கொள்வதற்குச் சிரமப்பட வேண்டியதில்லை. தனிப்பட்டவர்களுடைய சக்தியைப் பொறுத்து, அவர்கள் வேண்டுமானல், பிராந்திய மொழியிலோ ஹிந்தி மொழியிலோ தகுந்த முறையில் தங்கள் கருத்துக்களை வெளியிட முடியாத ஆசிரியர்கள் ஆங்கிலத்திலும் சொற்பொழிவு செய்யலாம் என்று உரிமை வழங்கப்பட வேண்டும். பொது முறையை மாற்றி அமைக்க விரும்புகிறோம் ஆதலின் தனிப்பட்டவர்களுக்கு இடையூறு மிகுதியும் விளையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கல்லூரிப் பேராசிரியர்களின் சொற்பொழிவுகள் அவற்றின் உட்பொருளை நோக்கி மதிக்கப்படுகின்றனவே தவிர, அவர்களுடைய மொழி வன்மைக்காக மதிக்கப்படுவதில்லை. பழைய முறையில் பயின்று ஆங்கிலத்தையே சிந்திக்கவும், பேசவும் பழகிக்கொண்டவர்கள் இந்திய மொழியின் மூலம் சிந்தித்து, பேசும் பயிற்சியை வேண்டுமான அளவு பெறுவதற்குப் பல காலம் செல்லும். உண்மையைக் கூறுமிடத்து மற்றொரு மொழிச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டுப் புதிதாகத் தோன்றுகின்ற ஒரு தலைமுறை இன்றுள்ள தலைமுறையைப் போக்கிவிட்டு முன்னேறி வருகின்ற வரையில் இத்துறையில் திருப்திகரமான மாற்றம் ஒன்றும் வரமுடியாது.

18. பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில், நாங்கள் சொல்கின்ற முறையில் ஹிந்தி போதனு மொழிக்கும் பிராந்திய மொழிகள் போதனு மொழிகளுக்கும் உள்ள தாரதம்மியம் கீழ்க்கண்டவாறு இருக்கும் :—

(1) பல்கலைக் கழகங்கள் பொதுப் போதனு மொழியாக ஹிந்தியை எடுத்துக்கொள்ளலாமா அல்லது பிராந்திய மொழிகளை ஏற்றுக்கொள்ளலாமா என்பது பற்றித் தாங்களே முடிவு செய்துகொள்ள உரிமை வேண்டும்.

(2) இந்தப் பல்கலைக் கழகங்கள் தங்களுக்குள் ஒன்றுகூடியும், அகில பல்கலைக் கழகத்தோடு கலந்து யோசித்தும், எந்தத் துறை

களிலும், சிறப்பாகத் தொழில் துறைகளிலும், விஞ்ஞானத் துறைகளிலும், எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலத்தை நீக்கிய பிறகு ஹிந்தி மட்டுமே போதனு மொழியாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்ய உரிமை வழங்கப்படவேண்டும். அதுவும் பட்டப் படிப்புக்கு மேற்படிப்பில் இவ்வாறே இருத்தல் வேண்டும்.

(3) எல்லாப் பல்கலைக் கழகங்களும் மாணவர்களைப் பரீக்ஷிக்கும் பொழுது ஹிந்தி போதனு மொழி மூலம் பரீக்ஷை எழுத வருகின்றவர்களை ஏற்றுக்கொண்டே தீரவேண்டும். எல்லாப் பல்கலைக் கழகங்களும் அவற்றினுடைய எல்லையில் எந்த ஒரு கல்லூரியாவது ஹிந்தி போதனு மொழி மூலம் கல்வி கற்பிக்க முன்வந்தால் அதற்கு உரிமை வழங்க வேண்டும்.

சட்டக் கல்வியைப் பற்றிப் பகுதி பதினென்றில் தனியே பேசியுள்ளோம். சட்டக் கல்வித் துறையில் போதனு மொழியை மாற்றும் நிலை வரும் பொழுது ஹிந்தியும், பிராந்திய மொழிகளும் எல்லாப் பிராந்தியங்களிலும் போதனு மொழியாக அமையவேண்டும். மேலே சொல்லிய முறைக்கு அம்முடிவு பொருத்தமானதே. மற்றைய தொழில் துறை கல்விகளைப் பொறுத்தமட்டில் நாங்கள் தனியே ஒரு முடிவைச் சொல்லாமல் அந்தந்தப் பல்கலைக் கழகங்களுக்கே ஒரு முடிவுக்கு வருமாறு விட்டு விடுகிறோம்.[1]

---

[1] டாக்டர் அர். பி. திருபாதி இந்தப் பகுதியில் கழகத்தின் சிபார்சுகளை ஏற்றுக்கொள்வதுடன் தம்முடைய கருத்துக்களையும் எழுதுமாறு விரும்பினர்.

பல்கலைக் கழக நிலையில் ஒரே ஒரு போதனு மொழிதான் இருக்கமுடியும் என்றும், அதுவும் ஹிந்தியாகத்தான் இருக்கமுடியும் என்றும் அவர் நம்புகிறார். இப்பொழுதைக்குப் பல்கலைக் கழகங்கள் அவசரப்பட்டுப் பிராந்திய மொழிகளை போதனு மொழியாகக் கொண்டு வராமல் ஆங்கிலத்தையே தொடர்ந்து வைத்திருக்கவேண்டும் என்றும், ஹிந்தி மொழியை தகுந்த அளவில் வளர்த்துப் பல்கலைக் கழகப் போதனு மொழியாக ஆகும் வரையில் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்றும், அவர் விரும்புகிறார். ஏனென்றால், மாற்றக் காலத்தில தரம் கெடாமல் காப்பாற்ற இதுவே வழி என்று நினைக்கிறார்.

2. கழகம் சொல்லிய இந்தச் சிபார்சுகளை ஏற்றுக்கொண்டு இந்தியா முழுவதற்கும் பல்கலைக் கழகங்களில் நேரே போதனு மொழி இருப்பதற்குக் கீழ்க்கண்ட திட்டத்தை சர்தார் தேஜா சிங் சிபாரிசு செய்ய விரும்புகிறார். இந்தத் திட்டம் அவருடைய கருத்துப்படி பிராந்திய மொழிகளுக்கும் ஹிந்திக்கும் போதனு மொழியாக இருக்கும் சக்தியைத் தந்து ஒன்றை ஒன்று தடை செய்யாமலும், தடை செய்வதுபோல காணப்படாமலும் இருக்கும் என அவர் நினைக்கின்றார். அரசியலமைப்பில் ஹிந்திக்கு கொடுக்கப்பட்டுள்ள இடத்தைக் கொண்டும், நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதற்குரிய தேவையைக்கொண்டும் பார்க்கும் அளவில் பல்கலைக் கழகங்களில் ஹிந்தியே போதனு மொழியாக இருக்கவேண்டும். அதே நேரத்தில் பல மொழி வழங்கும் நம்முடைய தேசத்தில் நாட்டின் பிராந்திய மொழிகளுக்கும் தகுந்த முறையில் ஒரு இடம் அளிக்கப்பட வேண்டும். ஆதலால் பல்கலைக் கழக நிலையில் அவையும் போதனு மொழியாக இருக்க உரிமை உண்டு. மேலும், ஹிந்தியும், பிராந்திய மொழிகளும் முறையே யூனியன், ராஜ்ய ஆட்சி முறைக்குப் பயன்படுவதலின் யூனியன், பொதுப் பணிக் கழகப் பரீக்ஷைகளுக்கும், ராஜ்யப் பொதுப் பணிக் கழகப் பரீக்ஷைகளுக்கும் இவை இரண்டும் தேவைப்படும். இவற்றை எல்லாம் மனத்தில் கொண்டு கீழ்க்கண்ட முடிவுகளை சர்தார் தேஜா சிங் பல்கலைக் கழகங்களின் சிந்தனைக்குச் சமர்ப்பிக்கிறார்.

(1) கலைப் பாடங்களைப் பொறுத்த வரை பட்ட படிப்பு முடிய பிராந்திய மொழிகளே போதனு மொழியாக இருத்தல் வேண்டும்.

(2) விஞ்ஞானப் பாடங்களுக்கும், பட்டப் படிப்புக்கு மேற் பட்ட படிப்புக்கும் எல்லாப் பாடங்களையும் போதிக்க ஹிந்தியே போதனு மொழியாக இருக்க வேண்டும்.

(3) தொழில் துறைப் படிப்புக்கும், தொழில் நுட்பப் படிப்புக்கும் அதாவது மருத்துவம், பொறியியல் போன்றவைகளுக்கு ஹிந்தியே போதனு மொழியாக இருக்க வேண்டும்.

இத்திட்டம் ஹிந்தியும், பிராந்திய மொழிகளும் நன்கு வளர்ச்சி அடைந்து தரம் குறைவாக முறையில் ஆங்கிலத்தை நீக்கி விடக்கூடிய சக்தியைப் பெறும்பொழுது அமுலுக்கு வரலாம். விஞ்ஞான, தொழில் நுட்பப் பாடங்களில் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாறுவதற்கு அதிக காலம் பிடிக்கலாம். சட்டக் கல்வியைப் பொறுத்த மட்டில் உயர் நீதி மன்றங்களும் மிக உயர் நீதி மன்றமும் ஆங்கிலத்தை உபயோகிக்கின்ற வரையில் சட்டக் கல்லூரிகளில் ஆங்கிலமே போதனு மொழியாக இருத்தல் வேண்டும். மேலும் நம்முடைய நாட்டின் சட்ட முறையையும், சட்ட அமைப்பையும் உத்தேசித்து எல்லாக் காலத்திற்கும் சட்டப் பட்டம் பெறுகின்றவர்கட்கு ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக ஆக்கவேண்டும்.

19. இதனை அடுத்துத் தோன்றுகின்ற வினா ஒன்று உண்டு. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஹிந்தி மூலம் கல்வி கற்கின்றவர்கள் எல்லாப் ப்ரிக்ஷைகளுக்கும் உட்காரலாம் என்று கூறிவிட்டால் இதன் பிறகு ஹிந்தியின் மூலமே பாடத்தைப் கற்பிக்கின்ற தனிப்பட்ட கல்லூரிகள் வைக்கப்பட வேண்டாமா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். இத்துறையில் நாங்கள் சொல்கின்ற சிபார்சைச் சிந்தினைக்கு விடுகின்றோம். எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஹிந்தி மூலம் கற்பிப்பதற்குரிய ஒரு வாய்ப்பை அளித்தல் வேண்டும். இது முடியாவிட்டால் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கல்லூரியாவது இங்ஙனம் அமைக்கப்பட வேண்டும். இம் முடிவு ஹிந்தி மூலம் பாடங்களைக் கற்றுத்தர வேண்டும் என்ற பிரச்னைக்கு முற்றிலும் விடையாகாவிட்டாலும் பல்கலைக் கழகங்கள் இந்தச் சிபார்சை விரும்பி ஏற்றுக் கொள்ளும் என்று நினைக்கின்றோம். இங்ஙனம் செய்வதால் கல்லூரிகளை வைத்து மட்டும் நடத்துகின்ற பல்கலைக் கழகங்கள் இதிலிருந்து விடுபெற்று விடும். மேலும் பலரும் விரும்பி படிக்கின்ற சில துறைகளில் ஒரே ஒரு கல்லூரி மட்டும் அங்ஙனம் ஹிந்தி போதனா மொழியை மேற்கொண்டால் அந்தப் பிராந்தியத்தில் மாணவர்கள் அனைவருடைய தேவையையும் பூர்த்தி செய்யமுடியாது மற்றொரு வகையில் கற்றுத்தரும் பல்கலைக் கழகங்களில் கூட பொதுச் சட்டத்திற்குச் சில புற நடைகள் செய்ய வேண்டிவரும். உதாரணமாகத் தனிப்பட்ட சில துறைகளில் ஏற்கனவே உள்ள கல்லூரிகள் மிகக் குறைவு. ஆதலால் ஹிந்தியைப் போதனா மொழியாகக் கொண்ட ஒரு கல்லூரி இருப்பினும் தாரதம்மியம் இல்லாத முறையில் அந்த ஒரு கல்லூரி அதிகச் செலவை உண்டாக்கும். கற்பிக்கும் கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் ஒரு சில பெரிய கல்லூரிகளில் ஹிந்தி மூலம் கற்க விரும்புகின்ற மாணவர்கள் தொகை மிகுதியாக இருக்கும். ஆதலால் ஹிந்தியைப் போதனா மொழியாகக் கொண்ட ஒரு தனி வகுப்பை உண்டாக்குவது எளிதாக இருக்கலாம். இங்ஙனம் இல்லாத கல்லூரிகளில் ஒரே கல்லூரியில் இரண்டு போதனா மொழிகளை வைப்பது பொருளாதாரத் துறையில் நடைமுறைக்கு ஒத்துவராது என்றும் சொல்லப்படுகிறது. எவ்வாறுயினும் இச்சிக்கலான பிரச்னைக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரே முடிவைக் காண்பது இயலாது. எனவே எங்கே தேவைப்படுகிறதோ அங்கே ஹிந்தி மொழி மூலம் கற்பிப்பதற்குரிய ஏற்பாடுகளை மாணவர்கள் நலம் கருதிப் பல்கலைக் கழகங்களும் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சிபார்சு செய்வதைத் தவிர மற்றவற்றை அந்தந்த அதிகாரிகளின் முடிவுக்கு விட்டு விடுகிறோம். எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஹிந்தி மூலம் பரீக்ஷை எழுத விரும்புகிற மாணவர்களுக்குச் சமமான சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்பதுடன் மத்திய அரசாங்கமே ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தியைப் போதனா மொழியாகக் கொண்ட மத்தியப் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தி நடத்த வேண்டும் என்றும் சிபார்சு செய்யப்பட்டது. இந்தச் சிபார்சு மேலும் கூறுவதாவது ; ஒரு பல்கலைக் கழகத்தின் எல்லையில் இருந்து கொண்டு ஏதாவது ஒரு கல்லூரி ஹிந்தியின் மூலம் கற்றுத் தருவதனால் அது வைக்கப்பட்டுள்ள பிராந்தியத்திலுள்ள பல்கலைக் கழகத்தைவிட்டு வேறு பிராந்தியத்திலுள்ள மத்திய ஹிந்திப் பல்கலைக்

கழகத்துடன் இணைந்து கொள்ள உரிமை வழங்கப்பட வேண்டும். இங்ஙனம் சொல்வதன் கருத்தென்னவென்றால் ஹிந்தி மூலம் கற்பிக்கும் கல்லூரிகள் அது இருக்கும் இடத்திலுள்ள பல்கலைக் கழகத்தோடு இணைய முடியாத பொழுது அவற்றிற்கு வேறு வாய்ப்பு ஒன்று அளிக்க வேண்டும். இந்தச் சிபார்சு சிறப்புடையதாயினும், இதில் சில தொல்லைகள் உண்டு. அங்ஙனம் "இருக்கும் இடத்தை விட்டு அப்பாலுள்ள" பல்கலைக் கழகத்தோடு ஒரு கல்லூரி இணைய விரும்புவது அந்தக் கல்லூரி இருக்கும் இடத்தில் ஆட்சி செய்யும் பல்கலைக் கழகத்தின் அதிகாரத்துள் தலையிடுவதுபோல் ஆகும். நம்முடைய பல்கலைக் கழகச் சட்டங்கள் அந்தப் பல்கலைக் கழகங்களின் அதிகார எல்லையை வகுத்து அந்த எல்லைக்குள் இருக்கின்ற கல்லூரிகள் எல்லைக்கு அப்பாற்பட்ட பல்கலைக் கழகத்தோடு இணைய முடியாதபடி தடை செய்கின்றன. எனவே மத்திய பல்கலைக் கழகங்களை அமைத்து அவை "எல்லைக்கு அப்பாற் பட்ட" இணைப்பதிகாரங்களோடு இருக்குமாறு செய்தல் பல்கலைக் கழக அமைப்பு முறைக்கே மாறானதாகும். மேலும் இந்த மத்திய ஹிந்தி போதனா முறை பல்கலைக் கழகங்கள் நீண்ட தூரத்தில் இருப்பதும் மற்றப் பல்கலைக் கழகங்களின் அதிகார எல்லைக்குள் இருக்கும் கல்லூரிகளைக் கவனித்துக் கொள்ளுதல் பல தொல்லைகளுக்கு இடந்தரும். நாங்கள் மேலே சொல்லிய முறைகளெல்லாம் முடியாது போன பொழுது, ஹிந்தி மூலம் கற்பிக்கும் கல்லூரிகள் அந்தப் பிராந்தியத்திலுள்ள பல்கலைக் கழகங்களில் இணைப்புப் பெற முடியாது போகும் நிலைமையில் இம்முறையைப் பற்றிச் சிந்திக்கலாம்.

20. எங்களுடைய கருத்துப்படி பதினெட்டாவது பாராவில் குறிப்பிட்ட குறுகிய அந்தக் திட்டத்தின்படி கூட ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரு பல்கலைக் கழகத்தைவிட்டு மற்றொரு பல்கலைக் கழகத்திற்குப் பெயர்ந்து செல்லுதல் நடைபெறக்கூடியதே. இம்முறையில் அதிக சிரமம் இல்லாமல் ஏதாவது ஒரு தாய் மொழி பேசும் பேராசிரியரை மற்றொரு பிராந்திய மொழியைப் போதனா மொழியாக உடைய பல்கலைக் கழகத்தில் ஏற்றுக் கொள்ள முடியும். இம்முறை, பல்கலைக் கழக, கல்லூரி அதிகாரிகள், எத்தனை கல்லூரிகளில் ஹிந்தி மூலம் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை, அவர்களே முடிவு செய்யுமாறு விட்டுவிடுகிறது. ஹிந்தி மூலம் கற்பிக்கும் கல்லூரிகளும் இணைப்பை பெறலாம் என்று செய்வதாலும், ஹிந்திப் பரிக்ஷை எழுதுபவர்களுக்கு எல்லாப் பல்கலைக் கழகங்களும் வாய்ப்பு அளிப்பதாலும், ஹிந்தி மூலமாகவோ, தாய் மொழி மூலமாகவோ தேவைப் படுகின்ற முறையில் கல்வி வழங்கும் எல்லாக் கல்லூரிகளும் தேவைக்குத் தகுந்தபடி விரிந்து கொள்ள இடமுண்டு. ஒரு இந்திய மொழியின் மூலம், போதனா மொழி நிலையிலிருந்து ஆங்கிலத்தை நீக்குவது பாடப் புத்தகம், அது சம்பந்தமான நூல்கள் ஆகியவை அந்த மொழியில் தயாராவதைப் பொறுத்திருக்கிறது. எந்த அளவிற்கு எந்தக் காலத்தில் இத்தகைய நூல்கள் கிடைக்கும் என்று சொல்வது முடியாத காரியம். இந்த முறையைத் தளர்த்தி விட்டு வைப்பதால் சூழ்நிலைக்கு ஏற்பப் பல்கலைக் கழக அதிகாரிகள் வேண்டுமான திருத்தங்களைச் செய்துகொள்ளலாம். அவர்கள்தாம் கல்வியின் தரத்தின் பொறுப்பாளி ஆவார்கள். ஆதலால் இதுபற்றி முடிவு செய்கின்ற உரிமையும் அவர்களிடமே விட்டுவிட வேண்டும். எந்த ஒரு மொழியின் மூலமும் கல்வி வழங்குகின்ற கல்லூரிகளின் எண்ணிக்கை அந்தப் பிராந்தியத்திலுள்ள மாணவர்களின் கோரிக்கையை பொறுத்தது. அந்த கோரிக்கை அந்தப் பிராந்தியத்தில் ஹிந்தி கற்றவர்களுக்கும், பிராந்திய மொழி கற்றவர்களுக்கும் கிடைக்கின்ற உத்தியோக சலுகைகளையும் சந்தர்ப்பங்களையும் பொறுத்ததாகும். இங்ஙனம் செய்வது பிராந்திய மொழிக்குப் பாதகம் விளைவிப்பதாகும் என்று நினைப்பதற்குக் காரணமில்லை. ஏனென்றால் ஆட்சித் துறையிலும், வாணிகம், தொழில் துறைகளிலும் அந்தந்தப் பிராந்தியங்களைப் பொறுத்த மட்டில் பிராந்திய மொழிதான் ஆங்கிலத்தின் இடத்தில் அமரப்போகிறது. ஏதாவது ஒரு பிராந்தியத்தில் ஏதாவது ஒரு கல்வித் துறையில் பெரும்பாலான மாணவர்கள் ஹிந்தி மூலம் கற்க விரும்பினால் அது அந்தத்

துறையில் கற்றவர்களுக்கு வேலைகள் கிடைக்க அதிக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்பதையே குறிக்கும். அவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பெறுமல் தடை செய்வது அந்தப் பிராந்தியத்திற்கு நஷ்டமே தவிர வேறில்லை. இரண்டு போதன மொழிகளுக்கும் சமமான இடம் தந்து எதன் மூலம் வேண்டுமானுலும் கல்வி பெறலாம் என்று கூறி விட்டால் எந்த மொழி மூலம் கற்ருல் உத்தியோகத் துறையில் அதிக சந்தர்ப்பம் கிடைக்குமோ அந்தத் துறைக்கு இயல்பாகவே அதிகப்படியான மாணவர்கள் செல்வார்கள். மாணவர்களின் இந்தத் தேவைதான் முக்கியமே தவிர மற்றவைபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை ஆதலின் எங்களுடைய சிபார்சு இந்த முறையில் செல்கிறது.

எங்களுடைய நிர்மாணக் கோரிக்கை, எங்கள் சிபார்சுகளைச் செய்யும் பொழுது "இந்தியாவின் தொழில், பண்பாட்டு, விஞ்ஞான வளர்ச்சியை" கவனத்தில் கொண்டு சிபார்சுகள் செய்ய வேண்டும் என்று கூறுகிறது. நாங்கள் சொல்லிய முறையில் கல்வித் துறையில் ஆங்கிலத்தை நீக்கி விட்டால் இந்தியாவின் தொழில், பண்பாட்டு, விஞ்ஞான வளர்ச்சிக்கு எவ்விதமான இடையூறும் ஏற்படாது. இன்னும் கூறப்போனுல் பண்பாட்டுத் துறையில் உடனே ஒரு வளர்ச்சியைக் காணவும், அது நாளா வட்டத்தில் தொழில், விஞ்ஞான வளர்ச்சிக்கு உதவுவதையும் காணலாம்.

21. சில சந்தர்ப்பங்களில், பிராந்திய மொழி மூலம் கற்கும் வசதியை ஒரு சிலரே மேற்கொண்டாலும், பெரும்பான்மையோர் ஹிந்தி மூலம் கற்க முடிவு செய்தாலும் சில இடங்களில் பிராந்திய மொழி மூலம் கற்பிக்கும் வாய்ப்பே இல்லை என்ருலும் அது பிராந்திய மொழியின் வளர்ச்சியை குறைக்காதா என்று கேட்கப்படுகிறது. எங்களுடைய கருத்துப் படி இப்பயம் மிகுதிப் படுத்தப்படுகிறது என்று நினைக்கிறேம். ஒரு மொழியானது அதனை பேசுபவர்களின் தேவைக்கு ஏற்ப வளர்ச்சி அடைகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறேம். பழங் காலத்தில் நம்முடைய பிராந்திய மொழிகளில் பல துறைகளில் முன்னேற முடியாமலும் சிறப்பாக உயர்ந்த கல்வித் துறையில் முன்னேற முடியாமலும் தடைப் படுத்தப் பட்டமையால் அதன் பயனுக நல்ல நெடுங்கணக்கு, கலைச் சொற்கள், வடிவங்கள், சொல்லாட்சிகள், என்பவை இல்லாமற் போய்விட்டதை அறிவோம். ஆனுல் ஹிந்தி மொழி உள்பட ஒரு பிராந்திய மொழி, சில தனிப்பட்ட விஞ்ஞான அறிவைப் பெறுவதற்குப் பயன் படுத்தப்பட வில்லையானுல் அந்த மொழி வளர்ச்சிக்கே ஒரு பெருந் தீங்கு நேர்ந்து விட்டதாக நினைக்கவேண்டாம். உதாரணமாக ஒரு பிராந்திய மொழி (அல்லது ஹிந்தி) அணு ஆராய்ச்சிக்குப் பயன் படுத்தப்பட வில்லையானுல் உயர்ந்த பட்சம், பன்னூட்டுக் கலைச் சொற்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படக் கூடிய சில சொற்கள் அந்தப் பிராந்திய மொழியில் வளர்ச்சி அடையாமல் போகும். அப்படியே இந்தச் சொற்கள் காணப்பட்டாலும் பொது மக்களின் பேச்சு வழக்கில் அவை வழங்கப்படப் போவதில்லை. அந்த மொழியின் பிரத்தியேகமான நெடுங் கணக்கின் வளர்ச்சியில் இந்தச் சொற்கள் இல்லாமல் போகுமே தவிர வேறு எந்த விதத்தில் அந்த மொழி வளர்ச்சிக்கு அது தீங்கு செய்யக் கூடும்? அதேபோலச் சட்டத் துறை ல் அம்மொழி மூலம் கல்வி கற்கின்ற மாணவர்கள் எண்ணூறு பேர் இருப்பதாகவும், மீதம் இருநூறு பேர் ஹிந்தி மூலம் கற்ருல் அதிக வாய்புக்கள் உண்டு என்று கருதி ஹிந்தி மூலம் கற்கத் தொடங்கி விட்டதாகவும் வைத்துக் கொண்டால் இந்த எண்ணிக்கை எந்த விதத்தில் அந்தப் பிராந்திய மொழியின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும்?

மேலும் உயர்தரக் கல்வியின் குறிக்கோள் அந்த மொழியின் வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டுமே தவிர அந்தக் கல்வியின் இலக்கணத்திற்கும், தேவைக்கும் தகுதியுடையதாக இருக்க வேண்டியதில்லை, எனறு சொல்கிறவர்கள் கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பல்கலைக் கழகங்கள் கல்வித் தாத்தை உயர்ந்த நிலைமையில் நிலை நிறுத்துவதற்கும் அறிவைத் தருவதற்கும் அதனைப் பெற வேண்டிய

உற்சாகத்தை மாணவர்களுக்குத் தரவும்தான் ஏற்பட்டிருக்கின்றனவே தவிர மொழி வளர்ச்சியை மட்டும் கருதி ஏற்பட்டவை அல்ல.

22. விஞ்ஞான, தொழில் நுட்ப அமைப்புக்களைப் பற்றித் தனியாக கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய அமைப்புக்கள் மத்திய அரசாங்கத்திடமிருந்து ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ பொருளாதார உதவி பெறுமானால் இந்த அமைப்புக்களில் எந்த மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதை மத்திய அரசாங்கம் சொல்ல உரிமை உண்டு. நாட்டின் பல வேறு பாகங்களிலிருந்து மாணவர்கள் இந்த அமைப்புக்களில் வந்து பயிற்சி பெறுவார்கள் ஆதலால் இங்கே ஹிந்தி மொழிதான் வழங்கவேண்டும். ஒரு பிராந்திய மொழி பேசும் கூட்டத்திலிருந்த மாணவர்கள் அனைவரும் இருப்பார்களேயானால் பிராந்திய மொழி மூலம் கல்வி கற்பிக்கலாம். இந்தப் பிரச்னையும் ஏனைய பிரச்னைகளைப் போல தனித் தனியாக முடிவு செய்யப்பட வேண்டியது ஆகும். அன்றியும் சில விடங்களில் ராஜ்யங்களால் நடத்தப்படும் இந்த அமைப்புக்கள் முற்றிலும் இந்த ராஜ்யப் பிள்ளைகளுக்கு மட்டும் இல்லாமல் பிறருக்கும் பயன் படக்கூடியனவாக இருக்கும். பிரத்தியேகமான தொழிற் கல்வியை வழங்கும் கால்நடைக் கல்லூரி, கனிப்பொருள்கள் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி போன்ற அமைப்புக்கள் இவற்றுள் செய்யப்படுகின்ற போதனு மொழி மாற்றம் காரணமாக ராஜ்யங்கள் முழுவதிலும் இரட்டிக்கப்பட முடியாது. மேலும் இத்தகைய அமைப்புக்களில், அவை இருக்கும் இடத்தில் வழங்குகின்ற மொழியைப் போதனு மொழியாகக் கொண்டு ஏனைய ராஜ்யங்களிலிருந்து வரும் மாணவர்களை வரவொட்டாமல் தடுப்பது அந்த ராஜ்யங்களுக்கே லாபகரமானது அல்ல. ஏனென்ருல் அத்தகைய கல்லூரி களில் அந்த ராஜ்ய மாணவர்கள் மட்டும் சேர்வதாக இருந்தால் பொருளாதார நெருக்கடி ஏற்பட ஏதுவாகும். இத்தகைய இடையூறுகளை எல்லாம் போக்கும் முறையில் அந்தந்த ராஜ்யங்கள் பொதுப் போதனுமொழியாகிய ஹிந்தியை மேற்கொள்ளும் என்பதில் எங்களுக்கு சந்தேகமில்லை.

23. எங்களில் பலர், எல்லாப் பல்கலைக் கழகங்களிலும், பல்கலைக் கழக கல்வித்துறைகள் பலவற்றிலும் ஒரே விதமான போதனு மொழியை ஏற்றுக் கொள்வதனுல் சில நன்மைகள் ஏற்படும் என்று நம்புகிருேம் ஆதலால் அதையும் இங்கே குறிக்கிருேம். இங்ஙனம் இருப்பதால் ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரு பிராந்தியத்திலிருந்து வேறு எந்தப் பிராந்தியத்திற்கும் வேண்டுமானுலும் "பெயர்ந்து செல்லலாம்" என்ற ஒரு நன்மை போக, எங்களில் சிலர் நாட்டின் தேசீய ஒற்றுமையைக் கருதும் பொழுது அறிவுடைய மக்கள் அனைவரும் எந்த மொழி இனத்தை சேர்ந்தவராய் இருப்பினும் ஒரு பொதுப் போதனு மொழியின் மூலம் கல்வி கற்றவர்களாக இருப்பது நலம் என்று நினைக்கிருேம். இந்தக் கருத்தில் சில மாறுபாடுகளும் உண்டு. எங்களில் சிலர், எல்லாப்பாடங்களையும் இந்த போதனு மொழியின் மூலம் கற்பிக்காவிட்டாலும், விஞ்ஞானப் பாடங்களையும், தொழில் துறைப் பாடங்களையும் ஒரு பொதுப் போதனு மொழி மூலம் எல்லாப் பல்கலைக் கழகங்களும் கற்பிக்க வேண்டும் என்று விரும்புகிருேம். இன்னும் சிலர் பிராந்திய மொழியின் மூலம் இடைநிலை வகுப்பு அல்லது பட்டப் படிப்பு வரையில் போதித்து, அதற்கும் மேற்கொண்ட படிப்பில் பொது போதனு மொழி அதாவது யூனியன் மொழி இருக்க வேண்டும் என்று நினைக்கிருேம். இத்தகைய கொள்கைகளில் பங்கு கொள்ளாமல் பிராந்திய மொழிகளே எல்லாக் காலத்திலும், எல்லாத் துறைகளிலும், எல்லா நிலைகளிலும் உயர்தரக் கல்வியைப் பெறுவதற்குப் போதனு மொழியாக இருத்தல் வேண்டும் என்று நினைப்பவர்களும் எங்களில் சிலர் உண்டு. இது எவ்வாருயினும் போதனு மொழியைத் தேர்ந்தெடுக்கும் வேலையை அந்தந்த பல்கலைக் கழகங்களுக்கே முடிவு செய்ய விட்டு விட வேண்டும் என்பதிலும், பாரா 18-ல் கூறியபடி பல்கலைக் கழக போதனு மொழி அமைய வேண்டும் என்பதையும், நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிருேம். அந்தப் பாராவில் கூறப்பட்டவை இப்பொழுது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய குறைந்த அளவு தேவை என்றும், நாட்டின் பல்கலைக்கழகக் கல்வி முறையில்

இப் போதைக்கு இதனைச்செய்துவிட்டால் மற்றவைகளைப் பொறுத்த மட்டில் காத்திருந்து சூழ்நிலை எங்ஙனம் வளர்கிறதோ அதற்கேற்ப முடிவு செய்யலாம் என்பதையும் நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம். அன்றியும் ஏறத்தாழ ஒரே மாதிரியான கலைச் சொற்களை யூனியன் மொழி உள்ளிட்ட பிராந்திய மொழிகளில் தேர்ந்தெடுத்து விட்டால் அதுவே நாளாவட்டத்தில் பல்வேறு போதனா மொழிகளுக்கும் இடையே உள்ள தூரத்தைக் குறைத்து பிராந்திய மொழிகளுக்கும், ஹிந்தி மொழிக்கும் உள்ள வேறுபாட்டைச் சுருக்கி இவற்றுள் ஏதாவது ஒன்றை பொறுக்கி எடுத்துக் கொள்வதில் உள்ள சிரமத்தைக் குறைக்கும் என்பதிலும் நாங்கள் அனைவரும் ஒரே கருத்துடையோம். எங்களுடைய கருத்துப்படி எங்கேயெல்லாம் முடியுமோ அங்கேயெல்லாம் நாளாவட்டத்தில் ஒரே போதனா மொழியைக் கைக்கொள்வது மிகவும் விரும்பத்தகுந்த குறிக்கோள், என்று நம்புகிறோம்.

எனவே இதற் கேற்றபடி பல்கலைக் கழகப் போதனா மொழிப் பிரச்னையைப் பல்கலைக் கழக அதிகாரிகளுக்கே விட்டு விடுவதென்றும், அவர்கள், பல்வேறு பல்கலைக் கழகங்களிலிருந்தும் வெளி வருகின்ற மாணவர்கள் கல்வி தரம் எறத்தாழ ஒன்றாக இருக்கவேண்டும் என்பதற்காகவாவது இதற்கேற்ற வழிகளை மேற்கொள்வார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம். கல்வித் தரம் குறையாமல் இருக்க வேண்டும் என்று கருதுவதில் பல்கலைக் கழக அதிகாரிகளை விட மற்றவர்களுக்கு அதிக அக்கறை இருக்கப் போவதில்லை. இப்பொழுது சந்தர்ப்பம், இது அது என்று முடிவு செய்ய முடியாமல் இருப்பதால் இன்றைய சூழ்நிலை எவ்வாறாயினும் ஒரு முறையில் முடிவாகட்டும் என்று விட்டு விட்டு மேலே சொல்லிய சில அடிப்படையான தத்துவங்களை மட்டும் மனத்தில் கொண்டு போதனா மொழி பற்றிய முடிவைப் பல்கலைக் கழக அதிகாரிகளே செய்யட்டும் என்று விட்டு விடுகிறோம். சமீபத்தில் பல்கலைக் கழகங்களில் எது போதனா மொழியாக இருக்க வேண்டும் என்பது பற்றி அரசாங்கத்தின் கொள்கை இதுதான் என்று முடிவு செய்யும் வேலையை, அரசாங்கம் மேற்கொள்ளவில்லை, என்ற கருத்தை இந்திய அரசாங்கம் அறிவித்தது.[1] இதுபற்றி மத்திய அரசாங்கம் மேலே சொல்லிய சிபார்சுகளின்படி செய்ய வேண்டிய குறைந்த அளவு சட்டம் ஒன்று உண்டு. "எல்லா அமைப்புகளிலும் உள்ள தரத்தை யெல்லாம் ஒருமைப்படுத்துவதும், உயர்தரக் கல்வி வழங்கும் இடம், ஆராய்ச்சி செய்யும் அமைப்புகள், விஞ்ஞான அமைப்புக்கள், தொழில் நுட்ப அமைப்புக்கள் ஆகிய இவற்றினிடையே தரங்களையெல்லாம் ஒன்று சேர்த்து நிர்ணயிப்பதும்" யூனியன் பட்டியலில் ஏழாவது ஷெட்யூலில் சேர்க்கப்பட்டிருத்தலினால் இது மத்திய அரசாங்கத்தின் சட்டம் செய்யும் சக்திக்கும், கொண்டு செலுத்தும் சக்திக்கும் உட்பட்டதே.

எதிர் காலத்தில் தோன்றக் கூடிய அடிப்படைக் கொள்கை ஒன்றைப் பற்றி, உடனடியாக அது தேவைப்படா விட்டாலும் எடுத்துச் சொல்ல வேண்டியது எங்கள் கடமை என்று கருதுகிறோம். மத்திய அரசாங்கம் பல்கலைக் கழகங்களின் போதனா மொழி பற்றித் தன் கோள்கையாக ஒன்றும் சொல்லாது என்பது மேலே சொல்லப்பெற்றது. இப்பிரச்னை பற்றிய பல்வேறு பகுதிகளும் இப்பொழுது குழப்பத்தில் இருப்பதால் அரசாங்கம் செய்த இம்முடிவு இப்பொழுதைக்கு நல்ல முடிவு என்றே நாங்கள் கருதுகிறோம். "பல்கலைக் கழகங்களின் தனி உரிமை" என்ற இப்பிரச்னை துர் அதிர்ஷ்ட வசமாக நாளாவட்டத்தில் திருப்திகரமாக முடிவு செய்யப்படா விட்டால் நாங்கள் இப்பொழுது சொல்லப்போகும் ஒன்று இரண்டு கருத்துக்கள் பொருத்தம் உடையனவாகக் காணப்படும். பல்கலைக் கழகங்களுக்கு சுய உரிமை வழங்குவது என்பது மிகவும் நல்ல கொள்கைதான். இக்கொள்கை, பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பாடங்களைக் கற்பிக்கும் தொழிலில், அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல்

---

1. 24 நவம்பர் 1955-ல் மத்திய அரசாங்கக் கல்வித் துணை அமைச்சர் ஸ்ரீ எம். எம். தாஸ் கொடுத்த அறிக்கையைக் காண்க.

செய்வதற்கும், பல்கலைக் கழகங்களுக்குள் கல்விச் சுதந்தரத்தைப் நிறுவுவதற்கும் மிகவும் ஏற்றது. போதிக்கப்படும் பொருள் எது என்பது பற்றிப் பல்கலைக் கழகங்களே இறுதியான முடிவைச் சொல்ல தகுதியுடையனவாயினும் போதனு மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றியும், எந்தச் சூழ்நிலையில் போதனை நடைபெற வேண்டும் என்பதையும், பல்கலைக் கழகமே நிர்ணயிக்கவேண்டும் என்று சொல்வதன் கருத்து விளங்கவில்லை. பல்கலைக் கழக அதிகாரிகள் இதற்குரிய முடிவுகளைச் செய்யும் பொழுது தேசத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட தேசீய மொழிக் கொள்கையை ஒட்டியே நடந்து கொள்வார்கள் என்னும் உறுதி உடையோம். இவ்விஷயம் பற்றி மகாத்மா காந்தி கீழ் வருமாறு கூறினர்:—

"கல்வித் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் இது பற்றி முடிவு செய்ய வேண்டும் என்று நான் கருதவில்லை. ஓர் இடத்தில் உள்ள பையன்களும், பெண்களும் எந்த மொழியின் மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்ய முடியாது. இந்த முடிவை உலகத்தின் எல்லா சுதந்திர நாடுகளும் முன்னரே முடிவு செய்து விட்டன. அன்றியும் எந்தப் பாடங்களை கற்பிக்க வேண்டும் என்பது பற்றியும் இவர்கள் முடிவு செய்ய முடியாது. எந்த நாட்டை அவர்கள் சேர்ந்தவர்களோ அந்த நாட்டின் தேவைகளைப் பொறுத்தது அது. அவர்களுடைய உரிமை என்னவென்றால் சிறந்த முறையில் நாட்டு மக்களின் எண்ணத்தைக் கொண்டு செலுத்துவது ஆகும். இந்த நாடு உண்மையாக விடுதலை அடையும் பொழுது போதனு மொழி பற்றிய கேள்வி ஒரே முறையில்தான் முடிவு செய்யப்படும். அதற்கேற்றபடிதான் கல்வித் துறையாளர்கள் பாடத்திட்டத்தையும், பாடப் புத்தகங்களையும் தயாரிக்கவேண்டும். கல்வியின் பயன் இன்று வேற்று நாட்டு ஆட்சியாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்வதுபோல் சுதந்திர இந்தியாவில் அன்றைய நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியதாக இருக்கும். நம்மைப் போன்ற கற்றறிந்தவர்கள் இந்த விஷயத்தில் பராமுகமாக இருந்துவிட்டால் நம்முடைய எண்ணப்படி உண்மை பொருந்திய சுதந்திர இந்தியா கிடைக்காமல் போய்விடும். கல்வித் துறையாயினும், பொருளாதாரத் துறையாயினும், சமுதாய, அரசியல் துறைகளாயினும் கடு முயற்சி எடுத்தே நாம் நம்முடைய அடிமைத் தளையிலிருந்து வளர்ச்சி அடைய வேண்டும். இதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிதான் போராட்டத்தின் முக்கால் பாகமாகும்."

24. பல்கலைக் கழக கல்வி முறைக் கழகமும், இடைநிலைக் கல்விக் கழகமும் செய்த சிபார்சுகளோடு எங்களுடைய முடிவுகள் எவ்வளவு ஒத்துப் போகின்றன என்டதை எடுத்துக் காட்ட விரும்புகிறேம். இந்தப் பிரச்னையை நாங்கள் எந்தக் கருத்தோடு சென்று கண்டோம் என்பதற்கும், எந்தக் கருத்தோடு அந்தக் கழகங்கள் கண்டன என்பதற்கும் வேறுபாடுகள் உண்டு. இந்தக் கழகங்கள் ஆங்கிலம், ஹிந்தி, பிராந்திய மொழி என்பவற்றின் போதனை வல்லுநர்கள் என்ற முறையிலும், கற்பிப்போர் என்ற முறையிலும் ஆராய்ந்தன. அவர்களுடைய ஆராய்ச்சி, பல்கலைக் கழகக் கல்வி, இடைநிலைக் கல்வி என்ற இரண்டு துறைகளிலும் பொதுப்படையான விசாரணையாகும். ஆனல் எங்களுடைய ஆராய்ச்சி கல்வி முறையில் இந்த மொழிகளின் போதனை எவ்வளவு தூரம் இருக்கலாம் என்பதையும், நாட்டின் மொழிப் பிரச்னையில் அரசியலமைப்பு ஏற்றுக் கொள்கின்ற மொழியின் அடிப்படையில் இந்தப் பிரச்னைகள் எங்ஙனம் தீர்க்கப்பட வேண்டும் என்பதையும் ஆராய்வதே எங்கள் நோக்கம். எனவே அவர்களுடைய சிபார்சுகளுக்கும் எங்களுடைய முடிவுகளுக்கும் ஓரளவு வேறுபாடு இருக்கத்தான் செய்யும் என்பது எதிர் பார்க்கப்பட்டதே. ஒரு சில துறைகளில் நாங்கள் ஆழ்ந்த முறையில் சென்று குறிப்பிட்ட முடிவுகளை சொல்ல வேண்டியுள்ளது என்றாலும், இந்தச் சிபார்சுகள் இக்கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளுள் அடங்கியனவே ஆகும்.

பல்கலைக்கழகக் கல்விக் கழகம், போதனு மொழி பற்றிப் கீழ்க் கண்ட முடிவுகளைச் சொல்லியுள்ளது.—

"உயர்தரக் கல்வியைப் பொறுத்த மட்டில் போதனு மொழியாக உள்ள ஆங்கிலம் ஏதாவது ஒரு இந்திய மொழியால் மாற்றப்பட வேண்டும். இது பல முக்கியமான இடையூறுகளால் வடமொழியாக இருக்கமுடியாது.

(1) உயர்நிலை வகுப்புக்களிலும், பல்கலைக் கழக நிலையிலும் மூன்று மொழிகளில் பழக்கம் கொள்ள வேண்டும். பிராந்திய மொழி, யூனியன் மொழி, ஆங்கில மொழி (இறுதியாக உள்ள மொழியில் ஆங்கிலப் புத்தகங்களை படிக்கும் அளவு அறிவு பெற்றால் போதுமானது).

(2) உயர்தரக் கல்வி பிராந்திய மொழியின் மூலமாகக் கற்பிக்கப்பட வேண்டும். விருப்பப்பட்ட பொழுது யூனியன் மொழியை, சில பாடங்களுக்கோ அல்லது எல்லாப் பாடங்களுக்குமோ போதனு மொழியாகக் கொள்ளலாம்.

உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் நாளும் நாளும் வளர்ச்சி அடைகின்ற அறிவுத்துறையோடு பழக்கம் வைத்துக் கொள்வதற்காக ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும்.

போதனு மொழி பற்றிச் சொல்லப்பட்ட எங்கள் சிபார்சுகள் பல்கலைக் கழகக் கல்விக் கழக சிபார்சுகளோடு முற்றிலும் ஒற்றுமைப் பட்டிருப்பதைக் காணலாம்.

இடைநிலைக் கல்விக் கழகம் செய்துள்ள சிபார்சுகள் வருமாறு:—

"இடைநிலைக் கல்வி நிலையில் ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்த அளவு இரண்டு மொழிகளாவது கற்பிக்கப்பட வேண்டும். ஜூனியர் அடிப்படை நிலை முடியும் பொழுது, ஆங்கிலமும், ஹிந்தியும் தொடங்கப் பட வேண்டும்; என்றாலும் ஒரே வருஷத்தில் இரண்டு மொழிகளை ஒன்றாகப் புகுத்தக்கூடாது."

ஹிந்திப் படிப்பை பொறுத்த மட்டில் அக்கழகம் கூறுவதாவது :

"ஹிந்தி மொழி மத்திய அரசாங்கத்திலும், சில ராஜ்யங்களிலும் ஆட்சி மொழியாக வரப்போவதை உத்தேசித்து இடைநிலைக் கல்வி நிலையில் உள்ள ஒவ்வொரு மாணவனும் இம்மொழியின் அடிப்படை அறிவைப் பெற ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். தேவைக் கேற்றபடி அதனை வளர்த்துக் கொள்ளும் இயல்பை அவனிடமே விட்டுவிட வேண்டும். இந்த முடிவிலிருந்து ஹிந்தி மொழி இடைநிலைப் பள்ளிக்கூடங்களிலும், சீனியர் அடிப்படை நிலையிலும் கற்பிக்கப்படுவது வற்புறுத்தப்பட்டுள்ளது."

மேலும் மொழிப் படிப்புப் பற்றி அக்கழகம் கூறுவதாவது :

"மேலும் தற்காலச் சூழ்நிலையில் ஒரு குழந்தை மூன்று மொழிகளைக் கற்றுக் கொள்வது முடியும் என்றே நாங்கள் கருதுகிறோம். இம்மொழிகளின் எழுத்துக்களுள் வரி வடிவ மாறுபாடுகள் இருப்பதால் குழந்தைகளுக்கு பாரம் மிகுதியாக இருக்குமேனும், வயது முதிர்ந்த பிறகு இம்மொழிகளைக் கற்றுக் கொள்வதைக் காட்டிலும் இளம் வயதில் கற்றுக் கொள்வது எளிது என்று நம்புகிறோம்."

நாங்கள் மேற்கொண்ட பிரத்தியேகமான சூழ்நிலையிலிருந்து இந்தப் பிரச்னையை ஆராய்ந்து சில பகுதிகளில் ஆழ்ந்து சென்றதின் பேரில் இடைநிலைப் பள்ளிக்கூடங்களில் ஒரு நிலையில் ஹிந்தியைக் கட்டாயபாடமாக ஆக்க வேண்டும் என்று ஒரு சிபார்சை செய்துள்ளோம்.

பாடப் புத்தகங்கள்.

25. பாடப் புத்தகங்கள் பிரச்னை பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். பல்கலைக் கழகங்களில் உள்ள போதனு மொழி அடிப்படையி

வேண்டுமான பாடப் புத்தகங்களைக் பெறுவதற்கு அடிப்படையான தொல்லை ஒன்றும் இல்லை. தேவை எவ்வளவு ஏற்படுகிறதோ அவ்வளவுக் கேற்ற படி வழங்கப்படும். பல்கலைக் கழகப் படிப்புக்களுக்குச் தேவையான பாடப் புத்தகங்கள் கிடைப்பது பற்றி இக்கழக அலுவலகத்தில் ஆராய்ந்து ஒரு கட்டுரை தயாரித்துள்ளோம். "அனுபந்த நூலில்" இது சேர்க்கப் பெற்றுள்ளது. (அச்சிடப்பட வில்லை). ஐந்து வருஷங்களுக்கு முன்னர், எந்த ஒரு பாடத்தையும் பற்றி ஹிந்தியிலோ அல்லது பிராந்திய மொழி களிலோ பட்டப் படிப்புக்கு வரையறுக்கக் கூடிய ஒரு பாடப் புத்த கமும் கிடையாது என்ற நிலை மாறி, இப்பொழுது பி. ஏ., பி. காம். ஆகிய பட்டப் படிப்புக்களுக்குத் தேவைப்படுகிற எல்லாத் துறைப் பாடப் புத்தகங்களும் நிறைந்த அளவு ஹிந்தியிலும், சிறுது குறைந்த அளவு பிராந்திய மொழிகளிலும் உள்ளன. ஹிந்தி மொழியில் நிறைந்த புத்த கங்கள் கிடைப்பதற்குக் காரணம் ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள் படிப்படியாக ஹிந்தியைப் போதன மொழியாக மேற்கொண்டதும், சிறப்பாக கலைத் துறைப்பகுதிகளில் இதனை மேற் கொண்டதும் ஆகும். இன்றைய நிலையில் பொதுவாகக் கூறுமிடத்து விஞ்ஞானத் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் பாடப் புத்தகங்கள் இல்லையே தவிர, கலைத் துறைப் பகுதிக்கு வேண்டுமான அளவு ஹிந்திப் புத்தகங்கள் உள்ளன.

இந்திய மொழிகளில் தயாரிக்கப்படும் பாடப் புத்தகங்களின் அளவுக்கும் அவற்றின் தரத்துக்கும் தொடர்பு ஒன்றும் இல்லை. இவற்றின் அளவை மிகுதப்படுத்துவது தரத்தை உயர்த்துவதைக் காட்டிலும் மிக எளிதான காரியம். தர முயர்ந்த பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதும், சொந்தமாக அவைகளைத் தயாரிப்பதும், வெறும் மொழி பெயர்ப்பாகத் தயாரிப்பதும் கல்வித் துறையில் ஈடுபட்ட நம்மவர்களின் சக்தியைப் பொறுத்ததே தவிர இவற்றில் காணப்படும் குறைபாடுகள் போதன மொழியைப் பொறுத்தவை அல்ல. ஆங்கில மொழியில் நல்ல பாடப் புத்தகங்களை தயாரிப்பவர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் ஹிந்தி மொழியிலோ பிராந்திய மொழி களிலோ இவற்றைத் தயாரிப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. இங்ஙனம் இம் மொழிகளில் தயாரிக்கும்பொழுது இவர்களோடு ஒத்துழைக்கின்றவர்களுடைய உதவியை நாடியும் இது செய்யப்படலாம். போதன மொழி மாறுபாடு இவர்கள் தயாரிப்பில் குறுக்கே புகுவதில்லை யாதலால் இப்புத்தகங்களில் உள்ள தரக் குறைவுக்கு அதனைக் குறை சொல்ல வேண்டியதில்லை. நாளா வட்டத்தில் போதன மொழி மாற்றம் விஷயங்களை நன்கு புரிந்து கொள்ள உதவுவதோடு சொந்தமாகச் சிந்திக்கவும் எழுதவும் உதவும்.

இந்தப் பிரச்னை பாடப் புத்தகங்களின் அளவோடு நின்று விடுவதில்லை. இதைவிட முக்கியமான ஒன்று பல்கலைக் கழகங்களில் பல்வேறு துறை களிலும் பயில்கின்ற மாணவர்களுக்குத் தேவைப்படுகின்ற மிகுதியான "மேற்கோள் இலக்கியம்" பற்றியதாகும். படிக்கும் பாடங்களுக்கு துணை செய்யும் முறையில் நிறைந்த அளவு குறிப்புப் புத்தகங்களும், சிந்தனை வரலாறுகளும், சிந்தனையாளர்களின் சரித்திரங்களும், இலக்கிய வரலாறு களும், இலக்கியத் திறனாய்வு நூல்களும், புள்ளி விவர நூல்களும், பூகோ ளப் பாட நூல்களும், கலைக் களஞ்சியங்களும், வேண்டும். தற்பொழுது எல்லா இந்திய மொழிகளிலும் இவை மிகமுகக் குறைவாகக் கிடைக்கின்றன.

ஹிந்தி மொழியிலோ பிராந்திய மொழிகளிலோ இவை பற்றிய நூல் களை, ஆங்கிலத்தில் கிடைப்பது போல கலைத் துறையளவிலேனும் நாம் பெறுவதற்குப் பலகாலம் செல்லும் என்பதில் ஐயமில்லை. என்றாலும் நம்முடைய திட்டத்தின்படி பல்கலைக் கழக மாணவர்கள் பெற்றிருக்கின்ற ஆங்கில அறிவு இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு உதவும். இன்னும் சொல்லப்போனால் இக்கருத்தை மனத்துள் கொண்டே திட்டம் வகுக்கப்பட் டுள்ளது. படிப்படியாகப் பல்கலைக் கழகங்களில் போதன மொழியை மாற்றி இந்திய மொழிகளை அந்த இடத்தில் கொண்டு வருவதற்கு நிறைந்த அளவு பாடப்புத்தகங்களும், மேற்கோள் இலக்கியங்களும் கிடைப்

பதற்கென்று தனியாக ஏதாவது ஏற்பாடுகள் செய்யவேண்டுமா ? "மேற்கோள் இலக்கிய"த்தைப் பொறுத்த மட்டில் அவை லாபகரமான முயற்சி இல்லையாதலால் இவற்றை வெளியிடுவதற்குத் தனிப்பட்ட முயற்சிகள் எடுத்துக் கொண்டால் ஒழிய நிறைந்த அளவில் இவை வெளிவரமாட்டா. பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டியிருத்தலினாலும், பின்னரும் தகுந்த அளவு ஊதியம் கிடைக்காது ஆதலாலும் தனிப்பட்டவர்கள் இம்முயற்சியில் ஈடுபடுவது இயலாத காரியம். எனவே ஏனைய வழிகளிலிருந்து நிறைந்த அளவு உதவி கிடைத்தால் ஒழிய இம்முயற்சி பயன்படாது. பாடப் புத்தகங்களைப் பொறுத்த மட்டில் தேவை நிரம்ப இருக்கும் ஆதலால் அதற்கேற்ப அவை வழங்கப்படும். தொடக்கத்தில் கல்வித் துறையில் உள்ள தக்கவர்கள் இம்முயற்சி எடுத்துக்கொள்ளத் தூண்டப்பட்டால் நாளாவட்டத்தில் நிறைந்த தேவை ஏற்படும்பொழுது இப்பிரச்னை நல்ல முறையில் தீர்க்கப்பட்டுத் தேவையும் வழங்குதலும் ஒரு நிலைப்படும்.

வேண்டுமான அளவு பாடப் புத்தகங்களைத் தயாரித்துத் தருபவர்களுக்கும், ஏனைய மேற்கோள் இலக்கியத்தைத் தயாரிப்பவர்களுக்கும் தனிப்பட நாங்கள் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. என்றாலும் பல்கலைக் கழக அதிகாரிகளோடு இவர்கள் தொடர்ந்த தொடர்பு கொண்டு தயாரிக்க வேண்டும். நமக்குத் தகுதியுடையவர்கள் கிடைக்கின்றது குறைவு ஆதலால் பல பல்கலைக் கழகங்களும் குறிப்பிட்ட ஒவ்வொரு துறையில் பேராசிரியர்களைக்கொண்டு பாடப் புத்தகங்கள் எழுத வேண்டும் என்று ஏற்பாடு செய்து விட்டால் குறைந்த காலத்தில் நிறைந்த அளவு துறைகளில் பயன் ஏற்படும். இத்தகைய ஓர் ஒருமைப் பாட்டை எல்லாப் பல்கலைக் கழகங்களும் அகிலப் பல்கலைக் கழகக் கழகத்தின் மூலமாகக் கொண்டு செலுத்த முடியுமா என்பது பற்றி எங்களுக்குத் தெரியாது. இத்தகைய பயனுள்ள ஒருமைப்பாட்டைச் செயல் படுத்துதவதற்கு மத்தியக் கல்வி அமைச்சின் கீழ் ஒரு தனிப்பட்ட ஒருமைப்படுத்தும் அமைப்பு நிர்மாணிக்கப்பட்டால் நலமாக இருக்கும் என்று எங்களிடம் சொல்லப் பெற்றது. நேரடியாக இவ்வேலையைக் கொண்டு செலுத்தும் முறையில், இவ்வேலையில் ஒரு பகுதியை, அதாவது மேற்கோள் இலக்கியம் தயாரிக்கின்ற துறையிலாவது இந்த அறிக்கையின் பதினைாவது பகுதியில் சொல்லப் பட்ட "நேஷனல் அகாடமி ஆப் லாங்வேஜ்ஸ்" ஓரளவு உதவலாம். இதற்குரிய விரிவான திட்டத்தை மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சு செய்ய வேண்டும். பல்கலைக் கழகங்களை அல்லாமல் ராஜ்ய, மத்திய அரசாங்கங்களும் தேசத்தின் மொழிக் கொள்கைகளோடு தொடர்பு கொண்டிருத்தலின் இவ்வேலையின் முக்கியத்துவத்தை வலியுறுத்த விரும்புகிறோம்.

பகுதி VII.

பொது ஆட்சித் துறையில் மொழியின் இடம்—1

(1) யூனியன் ஆட்சி மொழி.

இக்கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளில் கீழ்க்கண்டவைகள் பற்றிச் சிபார்சுகள் செய்யுமாறு கூறப்பட்டுள்ளது :—

(அ) யூனியன் ஆட்சித் துறையில் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துதல்.

(ஆ) யூனியன் ஆட்சித் துறையில் ஒரு சில பகுதிகளிலோ, எல்லாப் பகுதிகளிலுமோ ஆங்கிலத்தின் உபயோகத்தைக் குறைத்தல்.

* * * * * *

(உ) யூனியன் ஆட்சி மொழியாக உள்ள ஆங்கிலத்தை நீக்கி விட்டு ஹிந்தியை அமைக்கும் வழியையும், கால அளவையும் குறிப்பிடும் ஒரு கால அட்டவணை தயாரித்தல். இதே முறையில் யூனியனுக்கும், ராஜ்ய அரசாங்கங்களுக்கும் இடையில் கருத்துப் பரிமாறிக் கொள்ளவும், ஒரு ராஜ்ய சர்க்காருக்கும், மற்றொரு ராஜ்ய சர்க்காருக்கும் இடையே கருத்துப் பரிமாறிக் கொள்ளவும் ஒரு கால அட்டவணை தயாரித்தல்.

மேலும் "இக்கழகம் தன் சிபார்சுகளைச் செய்யும் பொழுது ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்களுடைய பொதுப் பணி அலுவல்களில் நுழைவதற்குரிய வாய்ப்புக்களையும், அவர்களுடைய தேவைகளையும் மனத்துட் கொண்டு சிபார்சுகளைச் செய்ய வேண்டும்" என்று சொல்லப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தியை உபயோகப் படுத்துகின்ற பிரச்னை பற்றியும், சிறப்பாக இந்திய தணிக்கை-கணக்கு இலாகாவில் மொழிப் பிரச்னையைப் பற்றியும் ஆராய்வோம். அடுத்த பகுதியில் யூனியன்-ராஜ்யங்களினிடையேயும், ராஜ்யங்களினிடையேயும் கருத்துப் பரிமாறிக் கொள்ளும் பொழுது ஏற்படும் மொழிப் பிரச்னைப் பற்றியும், எண்கள் பற்றிய பிரச்னையும் ஆராயப்படும். பன்னிரண்டாவது பகுதியில் பொதுப் பணிப் பரீக்ஷைகளில் மொழியின் நிலை பற்றியும் ஆராயப்படும்.

யூனியன் சம்பந்தப்பட்ட காரியங்களில் ஹிந்தியை ஏற்றுக் கொண்டு இதுவரை அடைந்துள்ள வளர்ச்சியைப் பற்றிக் கொஞ்சம் பேச விரும்புகிறோம்.

இதுவரை யூனியன் ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருந்து வருகிறது. மேலும் அரசியலமைப்பின் 343-வது விதியின்படி 1965-ம் வருஷம் வரையில் அதுவே இருந்து வரும். இந்த விதியின்படி 1965 வரை ஆங்கிலம் தொடர்ந்து யூனியன் ஆட்சி மொழியாக இருக்குமேயானால், அதன் பிறகு யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தி அமையும். அரசியலமைப்பு மேலும் தொடர்ந்து இந்தக் குறிப்பிட்ட 15 வருஷங்களுக்குள் யூனியனின் ஆட்சி விவகாரங்களில் ஆங்கிலத்தோடு ஹிந்தியையும் பயன் படுத்த ஜனாதிபதி ஆணையிடலாம் என்று தெரிவிக்கிறது.

இந்த ஏற்பாட்டின்படி ஜனாதிபதி யூனியன் ஆட்சி விவகாரங்களில் கீழ்க்கண்ட காரியங்களுக்கு ஆங்கிலத்தோடு ஹிந்தி மொழியையும் பயன் படுத்தலாம் என்று உத்திரவு[1] பிறப்பித்துள்ளார் :—

(1) பொது மக்களோடு கடிதப் போக்குவரத்துச் செய்வதற்கு ;

(2) ஆட்சி முறை அறிக்கை சமர்ப்பிக்கவும், ஆட்சியாளர் வெளியீடு களை வெளியிடவும், பாராளு மன்றத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கவும் ;

(3) அரசாங்கத்தின் தீர்மானங்களைச் சொல்லவும், சட்ட சபைகள் சட்டங்களை வெளியிடவும் ;

(4) எந்த ராஜ்ய அரசாங்கம் ஹிந்தியை ஆட்சி மொழியாகக் கொண் டுள்ளதோ அந்த ராஜ்யத்துடன் கடிதப் போக்கு வரத்து நடத்தவும் ;

(5) உடன்படிக்கைகளும், ஒப்பந்தங்களும் செய்து கொள்ளவும்.

(6) வெளிநாட்டு ராஜ்யங்களுடன் கடிதப் போக்கு வரத்து நடத்தவும். அந்நாட்டுத் தூதுவர்களுடனும், பன்னாட்டுக் கழகங்களுடனும் கடிதப் போக்குவரத்து நடத்தவும்.

(7) ராஜ தந்திரிகளுக்கும், அவர்களுடைய அலுவலகங்களுக்கும், சாதாரணச் செய்திப் போக்கு வரத்துச் செய்யவும், பன்னாட்டுக் கழகங்களில் இந்தியைப் பிரதிநிதிகளுக்குச் செய்தி தெரிவிக்கவும்.

(8) ராஜ்ய கவர்னர்களையும், நீதி மன்றங்களிலும், மிக உயர் நீதி மன்றத்திலும் நடுவணர்களையும் நியமிக்கும் பத்திரங்களிலும், ஆங்கிலத் தோடு ஹிந்தி மொழியைப் பயன்படுத்தலாம்.

ஆங்கிலத்தின் உபயோகத்தை யூனியன் ஆட்சி விவகாரங்களில் சில வற்றிலோ அல்லது எல்லாவற்றிற்குமோ குறைப்பது பற்றி அரசிய லமைப்புப் பின் கண்டவாறு கூறுகிறது. விதி 343-ம், விதி 344-லின் (6) பிரிவின் படியும், பதினைந்து ஆண்டுகளுக்கு அதாவது 1965 வரை ஹிந்தி மொழியை ஆங்கிலத்துடன் சேர்த்துப் பயன்படுத்தலாம் என்பதே சட்ட பூர்வமான நிலை. இந்த இரண்டாவது பிரிவின்படி இந்தக் கழகம் செய்யும் சிபார்சுகளை 30 பாராளுமன்ற அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து கொடுக்கும் முடிவுகளுக்கு ஏற்ப ஜனாதிபதி தேவையான உத்திரவுகளைப் பிறப்பிக்கலாம். எனவே இதுவரையில் ஆங்கில மொழியைப் பயன்படுத்து வதைத் தடை செய்யும் முறையில் யூனியன் ஆட்சி விவகாரங்களில் எதுவும் செய்திருக்க முடியாது என்பது உறுதி.

எங்களுடைய கேள்விகளுக்கு இந்திய அரசாங்கத்தின் பல்வேறு அமைச் சுக்களும் தந்த விடைகளிலிருந்து இது வரையில் யூனியன் ஆட்சி விவகார காரங்களில் கீழ்க் கண்ட அளவுக்கே ஹிந்தி மொழி பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரியவந்துள்ளது.

உள்துறை அமைச்சு அவர்களுடைய விடையில் கீழ்க் கண்டவாறு சொல்லியுள்ளார்கள் :—

"யூனியன் ஆட்சி முறையில் அரசியலமைப்புச் சொல்லும் வண்ணம் ஹிந்தி மொழியைப் பயன்படுத்த எல்லாவித முயற்சிகளும் செய்யப் படுகின்றன. கவர்னர்களையும், உயர்நீதி மன்ற நடுவணர்களையும் நியமிக்கும் முக்கியமான நியமன பத்திரங்கள் ஹிந்தி மொழியில் எழுதப்படுகின்றன. ராணுவம் சிரியல் ராணுவத் துறைகளில் கொடுக்கப்படும் பதக்கங்கள் கூடு மானவரை ஹிந்தியிலேயே எழுதப்படுகின்றன. அதேபோல ராஜ்ய பிரதான மான நிகழ்ச்சிகளில் பெரிய அளவுக்கு ஹிந்தி பயன்படுத்தப்படுகிறது.

---

[1] விஷயம் 1–7 . . . ஜனாதிபதி உத்திரவு எண் 59-2-54 பொது, 1935 டிசம்பர் 3-ந் தேதியிட்டது, விஷயம் 8 . . . ஜனாதிபதி உத்திரவு எண் எஸ்.ஆர்.ஓ. 938-எ, 1952-ம் மே 27-ந் தேதியிட்டது.

பிற்போக்கு இன ஆணையாளரினுடைய அறிக்கை போன்ற முக்கியமான அறிக்கைகள் ஆங்கிலத்தில் வெளியிடப்படுவதோடு ஹிந்தியிலும் வெளியிடப்படுகின்றன. மேலும் இந்திய அரசாங்கத்தின் எல்லா அமைச்சுக்களிலும் ஹிந்தி மொழியைப் படிப்படியாக அறிமுகம் செய்துவைக்கின்ற வேலை பற்றி உள்துறை அமைச்சு மிகுதியும் ஆராய்ந்துவருகிறது. பாராளுமன்றத்தில் ஹிந்தியில் கேட்கப்படும் வினுக்களுக்கு ஹிந்தியிலேயே விடை அளிக்கப்படுகிறது."

ஏனைய அமைச்சுக்களைப் பொறுத்தமட்டில் எங்கள் வினுக்களுக்கு அவர்கள் தந்த விடையிலிருந்தும், வாய்மொழி மூலம் அவர்களிடமிருந்து பெற்ற சாட்சியங்களிலிருந்தும் இந்நிலையின் முழு வடிவத்தை விரிவான முறையில் கீழ்க்கண்டவாறு கூறலாம் :

பாதுகாப்பு அமைச்சு, கவாத்துக்குரிய வார்த்தைகள் சிலவற்றை ஹிந்தியில் பெயர்த்துத் தரை, கடல், விமானப்படைகள் இவற்றை உபயோகிக்கச் செய்கிறது. இதுவரையில் ஹிந்தி மொழியில் பயின்று கலந்து, முற்றிலும் ஜீரணிக்கப்பட்ட சில ஆங்கிலச் சொற்களை அவற்றின் குறிப்பிட்ட பொருள் கருதி மொழிபெயர்க்க முடியாது ; அங்ஙனம் மொழிபெயர்த்தாலும் முழுப்பொருளைத் தராது என்று கருதி இத்தகைய ஆங்கிலச் சொற்களை அப்படியே பயன்படுத்துகிறார்கள். போர்ப் பயிற்சிக் கல்வித் திட்டத்தில் படைகளின் தொழில் நுட்பப் பகுதி தவிர ஏனையப் பகுதிகளில் ஹிந்தியே போதனு மொழியாக உள்ளது. கடற்படையைப் பொறுத்தமட்டில் மாணவர் பயிற்சித் திட்ட அமைப்புக்களில் உயர்தர வகுப்பில் படிக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் ஹிந்தி கட்டாய பாடமாகும். மேலும், சப்ளை அண்டு செக்ரடேரியட் பள்ளிக்கூடத்திலும் உயர்தரப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு ஹிந்தி கட்டாய பாடமாகும். தபால், தந்தி இலாகா ஹிந்தியில் தந்தி அனுப்பும் முறையைக் கண்டு அதனையே பயன்படுத்துகிறது. பண அஞ்சல், தந்தி முதலிய பாரங்களை ஹிந்தியில் வெளியிட்டுள்ளது. அரசியல் அறிவிப்புகள் நடைமுறைகள் முதலியவற்றை அறிவிக்க, அதாவது மக்களுக்காக ஏற்பட்டுள்ள குடியேற்றச் சட்டம், தொழில் முறையில் வேலைக்கமர்த்தும் சட்டம் (நிலையான உத்திரவுகள்), குறைந்த அளவு ஊதியக் கொள்கை, குழந்தைகளை வேலைக்கு அமர்த்தும் சட்டம், தொழில் நீதி மன்ற நடைமுறைகள் ஆகியவற்றில் எல்லாம் ஹிந்தி மொழி பயன்படுத்தப்படுகிறது. வருமான வரி கணிப்புப் பாரங்கள் ஹிந்தி மொழியில் வெளியிடப்படுகின்றன. இந்திய நாட்டை அளந்து காணும் இலாகா ஹிந்தியில் சில படங்களை வெளியிட்டுள்ளது. புகை இரதக் கழகம் கால அட்டவணை முதலியவற்றை ஹிந்திப் பிராந்தியங்களில் மட்டும் ஹிந்தியிலேயே வெளியிட்டுள்ளது. நிதி அமைச்சில் வருடாந்திர வரவு செலவுக் கணக்கை ஹிந்தி மொழியில் தயாரிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இயற்கைப் பொருள் அமைச்சு விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் யாவருக்கும் புரியும்படியான விஞ்ஞான இலக்கியங்களை ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் வெளியிடுவதுடன் அந்த அமைச்சின் வருடாந்திர அறிக்கை ஹிந்திமொழியிலும் வெளியிடப்பட்டு வருகிறது. அதிகக் குடியேற்ற அமைச்சு, உணவு, வேளாண்மை அமைச்சுக்கள் ஆகியவற்றால் கொண்டு செலுத்தப்படும் பல்வேறு திட்டங்களுக்கு ஹிந்தி மொழியைப் பயன்படுத்துகிறது. நீர்ப்பாசன, மின் சக்தி அமைச்சு பாராளுமன்றத்தில் ஹிந்தியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடை அளிக்க ஒரு தனி ஹிந்திப் பகுதியை வைத்துள்ளது. வெளி நாட்டுத் துறை அமைச்சும், ஹிந்தியைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. நியமனப் பத்திரம் முதலிய சில பத்திரங்களை ஹிந்திமொழியில் வெளியிடுகின்றது. வெளி நாட்டுத் தூதுவர்கள் நியமானங்களை ஒப்புக்கொள்ளும் பத்திரங்களும், வெளி நாட்டவர் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்வதை அறிவிக்கும் பத்திரங்களும் ஆங்கிலத்தோடு ஹிந்தியிலும் தயாராகின்றன. இந்தியாவிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களோடு செய்யப்படும் உடன்படிக்கைகள், ஹிந்தி, ஆங்கிலம் அந்த நாட்டு மொழி ஆகிய மூன்றிலும் தயாராகின்றன. நம் நாட்டுத் தூதுவர்களின் நியமானப் பத்திரம்

முதலானவையும் ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் தரப்படுகின்றன. நம் நாட்டுத் தூதுவர் ஆலயங்கள் வெளி நாட்டுக் கழகங்களிலிருந்து அவர்கள் தாய்மொழியில் எழுதப்பெற்ற அழைப்புக்களைப் பெற்றால், ஹிந்தி மொழியிலேயே அதற்கு விடை தருகின்றன. சீனாவிலுள்ள இந்தியத் தூதுவர் ஆலயம் தனிப்பட்ட ஒரு ஹிந்திப் பகுதியைத் தொடங்கப்போகிறது.

2. யூனியன் ஆட்சி முறையில் இந்திய அரசாங்கத்தார் இந்திய அரசியலமைப்பின்படி அதன் கொள்கைகளை நிறைவேற்றம் செய்வதற்கும், மத்திய சர்க்காரின் தலைமையின் கீழ் உள்ள ஏனையப் பகுதிகள் அரசியலமைப்பின் மொழிபற்றிய இந்த யோசனைகளை நிறைவேற்றம் செய்வதற்கும் எடுத்துக் கொண்ட முயற்சிக்களுக்கும் உள்ள வேறுபாட்டை கவனத்தில் வைக்கவேண்டும். உதாரணமாக அரசியலமைப்பில் மொழியைப்பற்றியுள்ள பிரிவு கல்வித் துறையில் செய்ய வேண்டிய சில ஏற்பாடுகள் பற்றிப் பேசுவதை முற்பகுதியில் கண்டோம். "கல்வி", விஷயம் பல்கலைக் கழகக் கல்வியுள்பட ராஜ்ய சட்ட சபை கொண்டு செலுத்தும் அதிகாரம் என்பவற்றின் கீழ் உள்ள ஒரு பகுதியாகும். யூனியன் அரசாங்கம் யூனியன் பட்டியலிலுள்ள 66-வது விஷயத்தின்படி "உயர்தரக் கல்வி ஆராய்ச்சித் துறை, விஞ்ஞானத் துறை, தொழில் நுட்பத் துறை என்பவற்றின் அடிப்படையிலுள்ள அமைப்புக்களின் ஒருமைப்பாட்டையும், தர ஏற்பாட்டையும்" செய்யவேண்டும் என்பதே ஆகும். மேலும் கல்வித் துறையில் பல்கலைக் கழகங்கள், இடைநிலைக் கல்விக் கழகங்கள், தனிப்பட்ட அமைப்புக்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பிராந்திய அதிகாரிகள் ஆகிய பலருடைய அதிகாரம் நிலை பெற்றுள்ளது. எனவே இந்தத் துறையில் யூனியன் அரசாங்கத்தின் பொறுப்பு நேரடியாக அதிகாரத்தைச் செலுத்தும் முறையில் இல்லை. அரசியலமைப்பில் சொல்லப்பட்டுள்ள மொழிப் பிரச்னையின் முடிவை இந்த அமைப்புக்கள் கொண்டு செலுத்துவதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து "ஒரு தலைமைத் தன்மையை" தருவதே ஆகும். இன்னும் சில செயல்துறைகளிலும் இங்கு சொன்ன முறை முற்றிலுமோ அல்லது ஓரளவுக்கோ பொருந்தும். உதாரணமாக மொழிப் பிரச்னை முடிவை இப்பொழுதுள்ள சட்ட திட்டங்கள் அளவில் நிறைவேற்றுவதானால், மத்திய அரசாங்கச் சட்டங்களும், ராஜ்ய அரசாங்கங்களின் சட்டங்களும் யூனியன் மொழியிலும் பின்னவைகளின் சட்டங்கள் அவற்றின் பிராந்திய மொழியிலும் ஹந்தியிலும் மொழிப் பெயர்க்கப்படவேண்டும் இவ்வேலையில் ஓரளவை ராஜ்ய அரசாங்கம் ஏற்றுக்கொண்டாலும், மத்திய அரசாங்கதைப் பொறுத்த வரை இம்முயற்சிகளையும், தொழில்களையும் ஒருமைப்படுத்தி எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் கூடுமானவரை ஒரே முறையில் வேலை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் ஹிந்தியைப் பரப்பும் விஷயமும், முதலில் அந்தந்தப் பிராந்தியங்களின் ராஜ்ய சர்க்கார்களின் வேலையாக அமையும். இங்கேயும் கூட மத்திய அரசாங்கம் தலைமைத்தன்மை தந்து, ஒருமைப்பாட்டைத் தந்து, நிதி உதவியும் அளிக்கவேண்டும். கலைச் சொற்களைப் பற்றிப் பேசிய பகுதிகளில் கூடுமானவரை எல்லாப் பிராந்திய மொழிகளிலும், யூனியன் மொழியிலும் ஒரே வகையான கலைச் சொற்களைக் கண்டு பிடிப்பது பற்றிப் பேசியுள்ளோம். இத்துறையிலும் மத்திய அரசாங்கமே தலைமைத் தன்மை பெறவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளோம். அரசியலமைப்பின் 345-வது விதியின்படி ராஜ்ய அரசாங்கத்தின் சட்ட சபைகள் அந்த ராஜ்யத்தில் வழங்கப்படும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ அல்லது ஹிந்தி மொழியையோ அந்த ராஜ்யத்தின் ஆட்சித் துறை அலுவல்களில் சிலவற்றிற்கோ அன்றி அனைத்திற்குமோ பயன்படுத்தலாம். எனவே இந்தப் பிராந்திய மொழியைப் பொறுத்தமட்டில், ராஜ்ய ஆட்சி முறைக்கு ஏற்றதாக அதனைத் தயார் செய்யும் கடமை முதலில் அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களின் பொறுப்பாகும். என்றாலும் புதிய கலைச் சொற்களை வேறுபட்ட இந்தப் பிராந்திய மொழிகளில் உண்டாக்கும் பொழுது, யூனியன் மொழியில் ஏற்படுத்தப் பட்டுள்ள கலைச் சொற்களோடு தொடர்புடையனவாக ஏற்படுத்த வேண்டும் என்பதை நினைத்துப் பார்க்கையில் இந்த விஷயம் யூனியன்

அரசாங்கத்திற்கு மிகவும் தொடர்புடையது என்பது விளங்கும். பன்னிரண்டாவது பகுதியில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ள காரணங்களுக்காகவும் பரந்த முறையிலும் ஆராயும்பொழுது பிராந்திய மொழிகளை வளர்க்கும் கடமையும் யூனியன் அரசாங்கத்தின் கவனத்தைக் கவருவது இன்றியமையாதது ஆகும். இந்தத் தேவை யூனியன் மொழியாக உள்ள ஹிந்தி மொழியே ஹிந்து பேசும் பிராந்தியங்களின் ராஜ்ய மொழியாகவும் உள்ளது என்பதைக் கருதும்பொழுது இப் பல்வேறு வேலைகளுள் ஒருமைப்பாடு இன்றியமையாதது என்பதை அறிவிக்கின்றது. தேவையான இடங்களில் விரிவான முறையில் இந்தப் பல்வேறு வேலைகளில் மத்திய அரசாங்கத்தின் பொறுப்புக்கள் எவ்வளவு தூரம் தேவைப்படும் என்பதையும், அந்தப் பொறுப்புக்களை எந்த முறையில் அவர்கள் நிறைவேற்ற வேண்டும் என்பதையும் தெரிவித்துள்ளோம். இந்தப் பகுதியில் யூனியன் தேவைகளைப் பொறுத்தமட்டில் படிப்படியாக ஹிந்தி மொழியை நுழைக்கும் செயலைப்பற்றி மட்டும் ஆராய்கின்றோம்.

3. இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சு 1955-ல் வெளியிட்ட “ஹிந்தி மொழியின் வளர்ச்சி, பரப்புதல் பற்றிய நிகழ்ச்சி நிரல்” என்ற வெளியீட்டில் ஒவ்வொரு நிலைக்கும் ஐந்து வருஷங்களாக மூன்று நிலைகள் பேசப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் பகுதிகளை விரிவாக இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறோம் :

“அரசியலமைப்பு, மத்திய அரசாங்கத்தின் எல்லாக் காரியங்களையும், ஆங்கிலத்தை விட்டுவிட்டு, பதினைந்து வருஷங்களுள் ஹிந்தியில் நடத்த வேண்டும் என்று தீர்மானித்துள்ளது. ஒரு ஆட்சி மொழியை எடுத்து விட்டு மற்றொரு மொழியை அதனிடத்தில் புகுத்துவது எளிதான காரியம் அன்று என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். இந்தியாவில் இன்றுள்ள சூழ்நிலையில் இதனைக்கொண்டு செலுத்துதல் மிகவும் கடினம். ஒரு முறையில் நீண்ட காலமாக நிலை பெற்றுள்ள ஆங்கில மொழியை நீக்கி விட்டு ஆட்சி முறைக்கு இதுவரை பயன்படுத்தப்படாத ஹிந்தி மொழியை வைக்க விரும்புகிறது. அடுத்தபடியாக, ஹிந்தியைப் போன்ற பெரிய இந்திய மொழிகள் பல இருக்கும்பொழுது, ஹிந்தி மொழியின் வளர்ச்சி அந்த மொழிகளின் வளர்ச்சியைக் குறுக்கிட்டுத் தடை செய்யுமோ என்ற அச்சத்தைப் போக்கவேண்டும்.

“எனவே பதினைந்து வருஷங்களுக்குப் பிறகு காலம் வரும்பொழுது ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாறும்பொழுது முழு வெற்றியுடன் இடையூறு ஒன்றும் இல்லாமல் இந்த மாற்றத்தைச் செய்வதற்காக முன்னரே குறிக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிரல் தேவைப்பட்டது. இந்த முடிவை நிறைவேற்றுவதற்கு இரண்டு காரியங்கள் மிக முக்கியமாகச் செய்யப்படவேண்டும். அவையாவன : மிக விரைவில் விஞ்ஞானச் சொற்களை வளர்ப்பதும், தொழில் நுட்ப ஆட்சிச் சொற்களைச் சேகரித்து நம்முடைய தேசியத் தேவைக்கு ஏற்ப இவற்றை விருத்தி செய்வதும் இம்மொழி தாய்மொழியாக இல்லாத பிராந்தியங்களில் இதனைப் பரப்ப ஏற்பாடு செய்வதும் ஆகும்.

“இந்தக் குறிக்கோளை மனத்தில் வைத்துக் கொண்டு கல்வி அமைச்சு பதினைந்து வருஷ நிகழ்ச்சி நிரலை ஐந்து ஆண்டுகள் வீதம் பிரித்து மூன்று படியாகக் கொண்டது. முதல் ஐந்து வருஷ நிகழ்ச்சி நிரல் திட்டம் வருமாறு :—

(1) ஹிந்திக் கலைச் சொற்களைத் தயாரித்தல். இந்த வேலையின் மிகப் பெரும் பகுதியை இந்தக் கால அளவுக்குள் முடித்துவிட வேண்டும். இந்த நேரத்தில் 26,000 கலைச் சொற்கள் ஆராயப்பட்டு இவற்றின் முடிவான பட்டியல் பல விஞ்ஞானத் துறைகளிலும், தயாரிக்கப்பட்டு அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைச் சொல்ல விரும்புகிறோம்.

(2) ஹிந்தி மொழி பேசப்படாத பிராந்தியங்களில் இடைநிலை வகுப்புக்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கி, வருகின்ற

தலைமுறையில் உள்ள படித்த இந்தியர்கள் அனைவரும் ஹிந்தி தெரிந்தவர்களாக இருக்கச் செய்தல். இம்முறையில் அஸ்ஸாம், பாம்பே, குடகு, ஹைதராபாத், சௌராஷ்டிரா, திருவாங்கூர்-கொச்சி, ஆகியவை உள்ளிட்ட பல ராஜ்யங்களில் இடைநிலைக் கல்வி வகுப்புக்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கியுள்ளார்கள் என்பது சொல்லப்படவேண்டும்.

(3) ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள மக்களிடையே ஹிந்தி மொழியைப் பரப்புதல். இந்த நிகழ்ச்சியை மிகவும் அழுத்திச் சொல்ல வேண்டும்; ஏனென்றால் நாட்டின் பெரும் பகுதிகளில் உள்ள மக்கள் ஹிந்தி மொழி அறியாதவர்களாக இருந்தால் அந்த மொழி தேசீய மொழியின் நிலையை அடைய முடியாது.

(4) இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தின் நிகழ்ச்சி முறைகள் வருமாறு:—

(1) இந்த இடைக்காலத்தில் ஹிந்திக் கலைச் சொற்களைச் சேகரிக்கும் வேலை முடிவடைந்து விடும்.

(2) ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ள மாணவர்கள் அனைவரும் ஹிந்தி மொழியில் பரிச்சியம் பெற வேண்டும்.

(3) ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் முதியோர்களுக்கு ஹிந்தி மொழித் திட்டம் ஒன்று செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட முறையில் அடிப்படையைத் தயார் செய்து கொண்ட பிறகு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் யூனியன் ஆட்சிக் காரியங்களில் ஹிந்தியை ஆங்கிலத்தோடு புகுத்தி, மத்திய அரசாங்கத்திற்கும் ராஜ்யங்களுக்கும் இடையே கருத்துப் பரிமாறிக்கொள்ள ஹிந்தியைப் பயன் படுத்த வேண்டும். இம்முறையில் ஹிந்தி ஆட்சி மொழியாக வளர்ச்சி அடைகையில் ஏற்படுகின்ற இடையூறுகளையும், குறைபாடுகளையும் போக்குவதற்கு ஐந்து வருஷ அவகாசம் கிடைக்கும். இந்நிகழ்ச்சிமுறை பதினைந்து வருஷங்களின் முடிவில் கல்வித் தரத்தைக் குறைக்காமலும், ஆட்சி முறை முறிந்து போகாமலும், ஆங்கிலத்தைக் நீக்கி ஹிந்தியைப் புகுத்த உதவி செய்யும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்ட நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றக் கீழ்க்கண்ட காரியங்கள் செய்யப்பெற்றுள்ளன:—

(1) பொருத்தமான விஞ்ஞான, தொழில் நுட்ப, ஆட்சித் துறை கலைச் சொற்களைத் தயாரித்துக் கல்வித் துறையிலும், விஞ்ஞான, தொழில் நுட்ப, ஆட்சித் துறைகளில் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியை விரைவாகவும் சுமுகமாகவும் கொண்டு செலுத்த வசதியளித்தல்.

(2) ஹிந்தி இலக்கியங்களை வளர்க்கவும், பெரு நூல்களை மலிவுப் பதிப்பில் கொண்டு வரவும், இந்திய மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும் உள்ள நூல்களை ஹிந்தியில் மொழி பெயர்க்கவும், புதிய நூல்களை இம்மொழியில் இயற்றவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல். இத்தகைய இலக்கியங்கள் பல்வேறு நிலைகளில் அதாவது குழந்தைகள் இலக்கியம், முதியோர் கல்வி இலக்கியம், ஹிந்தி மொழியை வளம்படுத்தும் இலக்கியம் ஆகிய பல நிலைகளில் தரப்படவேண்டும்.

(3) ஹிந்தி மொழியில் சிறந்த தரமுடைய இலக்கணங்களையும், அகராதிகளையும் தயாரித்தல்.

(4) இடைநிலை வகுப்புக்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைப்பதற்கும், பல்கலைக் கழகம் போன்ற உயர்தரப் படிப்புக்களில் ஹிந்திக்கு வளர்ச்சி தரவும், செய்த முயற்சிகள்.

(5) ஹிந்தி மொழியில்லாத பிராந்தியங்களில் ஹிந்தியைப் பரப்ப எடுத்துக்கொண்ட முயற்சிகள்; ஹிந்தி மொழி யறியாத மத்திய அரசாங்க ஊழியர்கள் ஹிந்தியை அறிந்து கொள்ளச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்."

இந்த நிகழ்ச்சியில் சொல்லப்பட்ட திட்டங்கள் எல்லாம் யூனியன் ஆட்சி முறைக்குப் படிப்படியாக ஹிந்தியை நுழைக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தோடு மட்டும் அல்லாமல் மேலே சொல்லிய முறையில் இந்திய மொழிப் பிரச்னைக்கு முடிவு காணும் வகையிலும், தேசீய தலைமைத் தன்மையை பெரும் முறையிலும் அமைந்துள்ளன என்பது அனைவரும் அறியக்கூடியதே. இத்திட்டங்களுள் ஒவ்வொரு துறைக்கும் தேவையான அளவு திட்டம் அமைந்துள்ளதா என்பது இந்த அறிக்கையின் அந்தந்த இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிக்கேற்ற சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல வேண்டும். இந்தத் திட்டத்தின்படி இரண்டு ஐந்தாண்டு திட்டங்கள் முடிந்த பிறகே மத்திய அரசாங்கத்தின் ஆட்சிக் காரியங்களுக்கும், மத்திய-ராஜ்யங்களினிடையே கருத்துப் பரிமாறிக்கொள்ளுவதற்கும் ஆங்கிலத்தோடு சேர்ந்து ஹிந்தி மொழி வழங்கப்படும் என்று தெரிகிறது. இந்நிலையில் பதினைந்தாண்டுகளின் முடிவில் கல்வி நிலையின் தரங் குறையாமலும், ஆட்சி முறையில் கேடு வராமலும், ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்தும் சூழ்நிலை நன்கு அமையும் என்று எதிர்பார்க்கிறோம். இது பற்றிப் பின்னரும் பேசுவோம்.

4. ஆட்சி மொழியில் மாற்றஞ் செய்வதற்குத் தேவையானவை யாவை ? எண்களைப் பொறுத்த மட்டில் கீழ்க்கண்ட முக்கியத் தேவைகளைக் குறிக்க விரும்புகிறோம் :—

(1) ஆட்சித் துறையில் வழங்கப்படும் தனிப்பட்ட கலைச் சொற்களைத் தயாரித்து ஒருமைப் படுத்துதல்.

(2) சட்டங்கள், ஒழுங்கு முறைகள், கைக் குறிப்புக்கள் இவை போன்ற ஆட்சி வெளியீடுகளையும், ஆட்சி முறையின் அன்றாட ஒழுங்கு முறைகளைக் குறிக்கும் நூல்களையும் ஹிந்தி மொழியில் மொழி பெயர்த்தல்.

(3) பல்வேறு நிலையிலும், துறையிலும் உள்ள ஆட்சியாளர்களை நல்ல மொழி வல்லமை பெற்ற இப்புதிய மொழியின் கலைக் சொற்களைச் சிறந்த முறையிலும் எளிதாகவும் பயன்-படுத்தப் பழக்குதல்.

(4) புதிய ஆட்சி மொழியில் அலுவலக வேலையை விரைவாகவும், எளிதாகவும் செய்வதற்குரிய உதவி நூல்களைத் தயாரித்தலும், வளர்த்தலும். அதாவது தட்டெழுத்து யந்திரங்கள், தட்டெழுத்து அடிப்போர், ஹிந்திச் சுருக்கெழுத்துக்கள், ஹிந்திச் சுருக்குத் தட்டெழுத்தாளர், ஹிந்தியில் அச்சு இயற்றும் இயந்திரம். பிரதி செய்யும் இயந்திரம், தொலை தூர அச்சு இயற்றி (teleprinter), ஆகிய இவைகளெல்லாம் இப்புது இடைநிலை மொழிக்கு ஏற்பத் தயாரித்தல் வேண்டும்.

தேசீய மொழிப் பிரச்னையில் " உள்துறை " என்று நாம் சொல்லிய பகுதிகளிலும் கூட மேலே சொல்லிய தேவைகள் உண்டு என்பதை இங்கே குறிக்கவேண்டும். அதாவது கலைச் சொற்களைப் பொறுத்த மட்டில், ஆட்சிக் கலைச் சொற்கள் என்பவை நாளாவட்டத்தில் " ஆட்சியாளர் கிளை மொழியாக " ஏற்படுவது ஒருபுறம் இருக்க, அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சுக்களும், அரசாங்க அமைப்புக்கள் பலவும், விஞ்ஞான விஷயங்களையும் தொழில் நுட்ப விஷயங்களையும் மேற்கொள்ளும் பொழுது இத்துறைகளில் உள்ள பிரத்தியேகமான கல்வித் துறைக் கலைச் சொற்களைப் பயனபடுத்த வேண்டி நேரிடும். ஆட்சித் துறையில் சட்டத் துறைக் கலைச் சொற்கள் மிகுதியும் தொடர்புடையன. நிலையான சட்டங்களையும், ஒழுங்கு முறைகளையும், ஹிந்தி மொழியில் மொழி பெயர்த்தல் சட்ட மன்றங்களில் நாளாவட்டத்தில் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தி மொழியை மேற்கொள்வதனோடு தொடர்புடையது என்றாலும், ஆட்சித் துறையோடும் நேரடி சம்பந்தமுடையது என்பது விளங்கும். பகுதி பதினொன்றில் இந்தப் பிரச்னையை விரிவாக ஆராய்ந்துள்ளோம். இந்தப் பகுதியில் எடுத்துப் பேசும் சௌகரியத்தைக் கருதி, ஆட்சித்துதுறைக் கலைச் சொற்களை மட்டும் இங்கே குறிப்பிட்டாலும் மற்றத்துறை கலைச் சொற்கள் ஆட்சிக் காரியங்களுடன்

எவ்வளவு தொடர்புடையன என்பதை மறந்துவிடக்கூடாது. சென்றநாலாவது பாராவில் (4)-வது தேவை என்று குறிப்பிட்டப்பட்ட பகுதியில் டெலிகம்யூனிகேஷன் பகுதி, ஆட்சியோடு தொடர்பில்லாத செய்தித் தாள்கள், அச்சு ஸ்தாபனங்கள், கப்பல் முதலிய போக்குவரத்து நிலையங்கள், இவற்றோடு தொடர்புடையது. ஹிந்தித் தட்டெழுத்து இயந்திர வளர்ச்சியும், ஹிந்திக் குறுக்கெழுத்து வளர்ச்சியும் ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்லாமல் பெருவாரியான வியாபாரிகளுக்கும் தேவைப்படுவனவாகும்.

5. ஆட்சிக் குறிப்புப் புத்தகங்கள், இவைபோன்ற அன்றடத் தேவை நூல்கள் இவைகளில் தேவைப்படும் ஆட்சிக் கலைக் சொற்களைப் பொறுத்த மட்டிலும், இந்தக் கழகத்தாரால் இந்திய அரசாங்கத்திற்கு 12 நவம்பர் 1955 எழுதப்பட்ட கடிதத்தில் கொடுத்த கேள்விகளையும், அதற்கு விடையாக உள்துறை அமைச்சு, 19 ஜனவரி 1956-ல் அனுப்பிய விடைகளையும் கீழே தந்துள்ளோம்—

கேள்விகள்.

(1) யூனியன் ஆட்சித் தேவைக்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்த அரசாங்கம் ஏதாவது திட்டம் வகுத்திருக்கிறதா ? அப்படியானல் அத்திட்டம் பற்றிய விவரங்களைத் தயவு செய்து தெரிவிக்கவும்.

(2) ஆட்சித் துறைக் கலைச் சொற்களை நிர்ணயித்தல், கடிதப் போக்குவரத்துக்குத் தேவையான ஹிந்திச் சொற்களை முடிவு செய்தல், ஒழுங்கு முறைகள், வழிமுறை நூல்கள் முதலியவற்றை மொழி பெயர்த்தல், நிலை பெற்ற சட்டங்கள், ஒழுங்கு முறைகள் முதலியவற்றை மொழி பெயர்த்தல் ஆகியவை மொழி மாற்றஞ் செய்வதற்குத் தேவையாக உள்ளவை.

இவற்றிலுள்ள வேலை, இவற்றைச் செய்யும் நேரம் ஆகியவை பற்றி சிந்திக்கப்பட்டதா ? யூனியன் ஆட்சிக் காரியங்களுக்கு ஹிந்தியைப் படிப்படியாகப் பயன் படுத்தும் பல நிலைகள் பற்றி ஆராயப்பட்டதா ? சில ராஜ்யங்களும், சில அமைப்புக்களும் ஹிந்தியிலும், பிராந்திய மொழிகளிலும் கலைச் சொற்களைத் தயாரிக்கின்றன என்பதையும் கூடுமானவரை பல மொழிகளிலும், ஒரே மாதிரியான கலைச் சொற்கள் தயாரிக்கப்படுவது நலம் என்பதையும் உத்தேசித்து இவை இரண்டையும் ஒருமைப்படுத்தும் கருவி ஏதாவது காணப்பட்டதா ? அங்ஙனம் காணப்பட்ட கருவி இந்த ஒருமைப் பாட்டு வேலையை செய்கிறதா ?

(3) சிறப்பாக ஆட்சித் துறைக் கலைச் சொற்கள், ஏனைய கலைச் சொற்கள் எவ்வளவு தேவைப்படும் என்பது பற்றியும், எந்தக் கால அளவில் இவை எவ்வளவு தூரம் தயாரிக்கப்படலாம் என்பது பற்றியும் ஆராயப்பட்டதா ?

(4) ஹிந்தியைப் படிப்படியாகப் பயன் படுத்தும் பொழுது எவ்வளவு குறிப்புப் புத்தகங்கள், வழிதுறைப் புத்தகங்கள், ஒழுங்கு முறைப் புத்தகங்கள் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்பது பற்றிக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டதா ? அவ்வாறு அட்டவணை விரைவில் தயாரிக்கும் எண்ணம் உண்டா ?

(5) சட்டத் துறை நூல்கள், நிலை பெற்ற சட்டங்கள் ஆகிய இரண்டும் மத்திய, ராஜ்ய அரசாங்கங்களைப் பொறுத்த மட்டில் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கும், பிராந்திய மொழிக்கும் மாற்றம் ஏற்படும் பொழுது மேற்கண்ட நூல்களுள் எத்தனை மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்பவை பற்றித் திட்டம் ஏதாவது உண்டா ? உயர் நீதி மன்றங்களில் மாற்றம் ஏற்படும் பொழுது இவை தேவைப்படுமே ? இம்மாற்றங்களைச் செய்ய எவ்வளவு காலம் தேவைப்படும் ? இதற்கு முதல் வேலையாகச் சட்ட அகராதி ஒன்றை உண்டாக்கி அதனை நிலை நிறுத்தும் கால அளவு, இவை பற்றிய

திட்டம் ஏதாவது உண்டா? இதனைச் செய்வதானால் எந்த அமைப்புகள் இந்த வேலையை மேற்கொள்ள வேண்டும்? இதுவரையில் எவ்வளவு தூரம் இத்துறைகளில் வேலை நடைபெற்றுள்ளது?

விடைகள்.

(1) கல்வி அமைச்சின் ஹிந்தி மொழி வளர்ச்சி, பரப்புதல் ஆகியவை பற்றி 1955-ல் வெளியிடப்பட்ட திட்டத்தின் நகல் ஒன்று ஆட்சி மொழிக் கழகத்தின் தலைவருக்கு ஏற்கெனவே அனுப்பப் பெற்றுள்ளது. அதன் மற்றொரு நகலும் இதனுடன் அனுப்பப்படுகிறது. ஹிந்தி மொழியை யூனியன் ஆட்சிக் காரியங்களுக்குப் படிப்படியாக பயன் படுத்துவது பற்றி அரசியலமைப்பு 343 விதி இரண்டாவது பிரிவின்படி ஜனாதிபதி ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியையும் பயன் படுத்தக்கூடிய யூனியன் ஆட்சிக் காரியங்கள் எவையெவை என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் குறிப்பு ஆணையின் ஒரு நகலும் அதனடிப்படையில் உள்துறை அமைச்சு மற்ற அமைச்சுக்களுக்கு அறிவித்த குறிப்பும் இதனுடன் அனுப்பப் பெற்றுள்ளது.

(2) கீழ்க்கண்ட இரண்டு படிகளில் அவை நடைபெறும்.

(அ) 31 மார்ச் 1956-க்குள் பதவிப் பெயர்களும், பொது ஆட்சித் துறைக் கலைச் சொற்களும், பதினாயிரம் கலைச் சொற்களும் முடிவாகிவிடும்.

(ஆ) 26 ஜனவரி 1960-க்குள் தேவையான கலைச் சொற்களை ஹிந்தியில் ஏற்படுத்தவும், கைக் குறிப்புகள், ஒழுங்கு முறைகள், வழிமுறை நூல்கள் முதலியவற்றை மேலே கண்ட கலைச் சொற்களைப் பயன்படுத்தி மொழி பெயர்க்கும் வேலை முடிந்து விடும்.

26 ஜனவரி 1956-லிருந்து இந்திய அரசாங்கத்தின் காரியங்களில் ஆங்கிலத்தோடுகூட ஹிந்தியும் நுழைக்கப்படும். இக்கேள்வியின் இரண்டாம் பகுதிக்கு அதாவது கலைச் சொற்களைத் தயாரிக்கும் பொழுது ஒருமைப்பாட்டைக் கவனிக்கின்ற செயல்பற்றிய பதிலை ஏற்கெனவே கல்வித் துறை அமைச்சு ஆட்சி மொழிக் கழகத்திற்குக் கொடுத்திருக்கிறது. என்றாலும் அதனை மட்டும் இங்கே எழுதுகிறோம் :—

கல்வி அமைச்சினால் 1950-ல் நிறுவப்பட்ட விஞ்ஞானக் கலைச் சொற் கழகம் ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் தயாராகின்ற கலைச் சொற்களையும், விஞ்ஞானச் சொற்களையும் ஒருமைப்படுத்துகின்ற வேலையைச் செய்து வருகிறது. இதுவரையில் இத்துறையில் நடந்த வேலைகளெல்லாம் இக்கழகத்தின் கையில் இருப்பதால் ஒரே தன்மை உடையதும், தர முடையதும் ஆகிய முறையில் இதனைக் கொண்டு முடிப்பதற்கு இந்திய சர்க்காருக்குப் பதிலாக இந்தக் கழகமே ஒருமைப்படுத்தப்பட்ட விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைச் சொற்களை ஹிந்தியில் செய்ய முன் வந்துள்ளது.

(3) ஏறத்தாழ நாலாயிரம் பதவிச் சொற்களும், பொது ஆட்சி சொற்களும் இக்காரியத்திற்குத் தேவைப்படும். ஏனைய கலைச் சொற்கள் பல வேறு விஷயங்களைக் குறிப்பதனால் எவ்வளவு தேவைப்படும் என்பதை அறுதியிட்டுச் சொல்லமுடியாது.

(4) கைக் குறிப்புப் புத்தகம், ஒழுங்கு முறைகள், சட்டங்கள் எத்தனை ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி அந்தந்த அமைச்சுக்கள் தம்முடைய தேவை எவ்வளவு என்று கூறும்பொழுதுதான் முடிவு செய்ய முடியும். அதுவும் கல்வி அமைச்சு கலைச் சொற்களை முடிவு செய்த பிறகே இது சாத்தியமாகும்.

(5) இது பற்றிச் சட்டத்துறை அமைச்சைக் கலந்து ஆலோசித்தபொழுது இக்கேள்வியின் முதல் பாராவில் உள்ள வினாவிற்கு விடை கூறுமுகமாக இது வரையில் எவ்விதமான திட்டத்தையும் அவர்கள் தயாரிக்கவில்லை

என்று கூறிவிட்டார்கள். மேலும் எவ்வளவு தேவை என்பது பற்றியும் இரண்டாவது பாராவில் கேட்கப்பட்ட கேள்வியின் சாராம்சங்களைப்பற்றிக் கூறத்தக்கவில்லை என்பது பற்றியும் கூறிவிட்டார்கள்.

ஆட்சித் துறைக் கலைச் சொற்களின் ஆக்கம் பற்றியும், பொதுவாக எல்லாக் கலைச் சொற்களின் ஆக்கம் பற்றியும் பிறிதோரிடத்தில் நன்கு ஆராய்ந்து இருக்கிறோம் ஆதலால் இங்கே ஆட்சிச் சொற்களின் ஆக்கம் பற்றி ஒன்றும் பேசவில்லை.

ஹிந்தித் தட்டெழுத்து யந்திரங்கள், ஹிந்திச் சுருக்கெழுத்து ஆகியவை பற்றிப் பகுதி பதின்மூன்றில் ஆராயப்பட்டுள்ளது.

ஆட்சிக் குறிப்புப் புத்தகம், வழிமுறை நூல்கள் ஆகியவை பற்றிப் பேசும்பொழுது இந்திய அரசாங்கத்தின் விடையில், எவ்வளவு நூல்கள் தேவைப்படும் என்ற வினாவிற்கு ஒவ்வொரு அமைச்சும் தனியே முடிவு செய்ய வேண்டிய காரியம் அது என்று சொல்லிவிட்டது. இவற்றை மொழி பெயர்க்கும் கடமை இந்திய அரசாங்கத்திற்கு ஏற்படும்பொழுது அதனை எவ்வாறு மேற்கொண்டாலும் அதுபற்றிய ஒன்றிரண்டு வார்த்தைகளை நாங்கள் சொல்ல விரும்புகிறோம். அதாவது இந்த மொழி பெயர்ப்பு வேலையை ஒரே அமைப்பு மேற்கொண்டாலும் அன்றி வெவ்வேறு அமைச்சுகளும், இலாகாக்களும் தங்களுக்குரியவற்றைத் தாங்களே மொழி பெயர்த்துக் கொண்டாலும் இவை எல்லாவற்றுள்ளும் ஒரு பொதுத் தன்மையும், ஒருமைத் தன்மையும் இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்துகிறோம். பிரத்தியேகமான கலைச் சொற்களைத் தவிரப் பலராலும் பயன்படுத்தப்படும் சில சொல்லாட்சிகள் புதிதாக ஆக்கப்படும் கலைச் சொற்களோடு தொடர்புடையனவாக இல்லாதிருப்பினும், அவை பலராலும் பயன் படுத்தப்படுகின்றன என்பதனால் வழிமுறை நூல்களில் அவை ஏற்றுக் கொள்ளப்படவேண்டும். ஆட்சித் துறையைப் பொறுத்த மட்டில் ஹிந்தி மொழியும் ஏனைய இந்திய மொழிகளும் இது வரை பயன் படுத்தப்படவில்லை ஆதலால் பொது வழக்கத்திலிருக்கின்ற சொற்கள் குறிப்பிட்ட ஒரு பொருளையும், ஓரளவு வேறுபாடுள்ள பொருள்களையும் உறுதியாக விளக்கும் என்ற கட்டுப்பாடு இல்லை. இந்த விஷயம் பற்றிச் சற்றுக் கவனமாகவே இருத்தல் வேண்டும். இதனால் யார் இந்தக் காரியத்தை மேற்கொண்டாலும் மத்திய அரசாங்கத்திற்கு உட்பட்ட ஓர் அமைப்பு இதனைக் கண்காணிக்கும் வேலையைச் செய்ய வேண்டும். தொடக்கத்தில் இம் மொழி பெயர்ப்பு வேலை செய்யும் கடமை அந்தந்த ஆட்சித்துறை இலாக்காக்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும் கண்காணிப்பு ஒரு மத்திய அமைப்பில் இருத்தல் வேண்டும்.

மூன்றாவது தேவை என்று நாங்கள் குறிப்பிட்டது : அதாவது தகுந்த ஆட்களைப் பொறுக்கி எடுப்பது இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். என்றாலும் சில பொதுவான விஷயங்களை ஆராய்ந்துவிட்டு இந்தப் பிரச்னைகளைப்பற்றி ஆராய்வது நலம் பயக்கும்.

6. தலைமை இடத்தில் இந்திய அரசாங்கம் இருபதுக்கும் மேற்பட்ட அமைச்சுகளுடனும், அவற்றோடு தொடர்புடைய அலுவலகங்களுடனும் தொழிற்படுகிறது. இந்த அமைச்சுக்களுடைய கிளைகளும் பிராந்திய அலுவலகங்களும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ளன. இந்தப் பெரிய மத்திய இலாக்காக்களின் ஆட்சி முறை, உதாரணமாக இரயில்வே, தபால்தந்தி, மத்திய அரசிறைக் கழகம் (வருமானவரி, கலால், சுங்கம், ஆகியவற்றைக் கவனிக்கும் துறை இது) ஆகியவை, மிகப் பெரியதாக இருந்து நாட்டின் எல்லாப் பாகங்களிலும் அமைந்துள்ளது. ஏறத்தாழ ஒன்பது லக்ஷம் தொழிலாளர்களையுடைய ரயில்வே நாட்டின் மிகப்பெரிய தொழிலகமாகும். தபால் தந்தி இலாகா மிகப் பெரிய ஸ்தாபனமாக இருந்து நாட்டில் எங்கெங்கே மக்கள் வாழ்கிறார்களோ அங்கேயெல்லாம் வந்து சென்று நாட்டின் ஒரு கோடி மூலையிலுள்ள சிறிய கிராமந்தரத்திலும் பரவி நிற்கின்றது. இவ்வளவு பரந்த ஓர் இடத்தில் பல்வேறு

வகையான வேலைகளைப் பலவேறு வகையான துறைகளில் செய்ய வேண்டி
யிருப்பதால் யூனியன் ஆட்சி விவகாரங்கள் மிகவும் பெரியது என்பது
விளங்கும். உதாரணமாகப் பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புப் படையி
லுள்ள காலாட்படை, கடற்படை, விமானப்படை என்ற மூன்றையும்
பொறுத்த தொழில் நுட்பங்களுக்குக் கருத்தைச் செலுத்த வேண்டி
யுள்ளது. இயற்கை வளத்தை ஆராயும் அமைச்சு, விஞ்ஞான வளர்ச்சி
யையும், முன்னேற்றத்தையும் கண்காணிக்க வேண்டி உள்ளது. பொரு
ளாதாரத் துறை இலாகாவும், வாணிக, தொழில் துறை அமைச்சும்
வரவு செலவுப் பணக் கொள்கை, பாங்கித் தொழில், தொழில் வளர்ச்சித்
திட்டம், வெளி நாட்டு வாணிகம், வெளிநாட்டு அமைப்புக்களோடு
தொழில் துறையில் ஒத்துழைத்தல் ஆகிய தொழில் நுட்ப விஷயங்களில்
கவனம் செலுத்து கிறது.

இந்திய அரசாங்கத்தின் வேலைகளும், தேவைகளும் மேலே சொல்லிய
சிக்கலான பல தொழில் நுட்பத் துறைகளில் ஈடுபடுவதால் இவற்றில்
ஈடுபட்டுள்ள இலாக்காக்கள் தம் வேலையில் ஈடுபடும் பொழுது மேல்
சொல்லிய தொழில் நுட்பத் துறையிலுள்ள எல்லாக் கலைச் சொற்களையும்
விரும்பி நிற்குமே தவிர " ஆட்சிக்குத் தேவையான சில சொற்களுடன் "
இருந்துவிடமுடியாது. கலைச் சொற்கள் பற்றிய பகுதியில், நாங்கள்
சொல்லியது போல எல்லாக் கலைச் சொற்களும் கிடைத்த பிறகுதான்
புதிய இடைநிலை மொழியில் வேலை தொடங்கவேண்டும் என்று இல்லாமல்,
சரியான பதங்கள் கண்டு பிடித்து நிர்ணயிக்கப்படாத கலைச் சொற்களுக்கு
ஆங்கிலச் சொற்களையே தாராளமாக வழங்கி இப்பொழுதே புதிய மொழி
யில் வேலை தொடங்கலாம். மேலும் தொழில் நுட்பத் துறையிலுள்ள
சில பிரத்தியேகமான பகுதிகளில் தேவைப்படுகின்ற கலைச் சொற்களை
இன்னும் பல காலத்திற்கு நாம் ஆங்கிலத்திலிருந்தோ, பன்னாட்டுச் சொற்
களிலிருந்தோ மொழி பெயர்க்கத் தேவையில்லை. ஏனென்றால் அத்
துறையில் ஈடுபடுகின்ற ஒரு சிலருக்குத்தான் அவை தேவைப்படும். விஞ்
ஞானம், உயர்தரக் கல்வி என்ற இரண்டிடங்களுக்கும் மேலே சொல்லியது
பொருந்துவது போல ஆட்சித் துறையிலும், இதனை ஏற்றுக்கொள்ளலாம்.
யூனியன் அரசாங்க ஆட்சித் துறைகளிலும், பல்வேறு பகுதிகளில் இன்னும்
பல காலத்திற்கு ஆங்கிலத்தையே பயன்படுத்தலாம். ஏனென்றால் இந்
தியக் கலைச் சொற்களையோ அல்லது அவைபோன்றவற்றையோ இதுவரை
யில் காணவில்லை. இனியும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் முடிக்கப்பட
வேண்டும் என்று நிர்ணயிக்கப்படாத துறைகளாகும் அவை.

இவற்றை யல்லாமலும் சில இலாக்கக்கள் அவர்களின் கடிதப் போக்கு
வரத்து வேலையில் ஒரு பகுதியை ஆங்கிலத்திலேயே செய்ய வேண்டி
நேரிடும். பன்னாட்டுக் கடிதப் போக்குவரத்துச் செய்ய வேண்டிய இலா
காவும், வாயு மண்டல ஆராய்ச்சி இலாகாவும், அடிக்கடி வெளி நாடுகளோடு
தொடர்பு கொள்ள வேண்டி இருத்தலினாலும், எல்லா நாடுகளும் ஆங்கிலத்
திலேயே இக்கருத்துப் பரிமாறுதலைச் செய்து கொள்வதினாலும் இவை
ஆங்கிலத்திலேயே செய்யப்படலாம். இனி, போக்குவரத்து அமைச்சின்
கீழ்ப் பணியாற்றுகின்ற நாவாய்த் துறையில், தொழிலாளர்கள் பன்னாட்டு
நாவாய்களில் பணி புரிய வேண்டியிருத்தலின் இவர்களுக்கும் ஆங்கில
மொழி இடைநிலை மொழியாக இருத்தல் இன்றியமையாதது. ஆட்சி
முறை செய்ய வேண்டிய வேலை, சில கடமைகளைச் செய்து முடிப்பதாகும்.
மொழி, இடைநிலை ஆக இருப்பது, ஒரு வழியே தவிரப் பயனன்று. இந்த
இடைநிலை மொழியை இந்திய மொழியாக மாற்றுவதன் நோக்கம் இந்திய
அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் ஒரு தொடர்பு ஏற்படுத்தவேண்
டும் என்பதே ஆகும். எந்தத் துறைகளில் ஆங்கிலத்தையல்லாத பிற
மொழிகளால் நல்ல முறையில் ஆட்சியைக் கொண்டு செலுத்த முடியாதோ
அந்தத் துறைகளில் ஆங்கிலத்தையே இடைநிலை மொழியாக வைத்துக்
கொள்வதில் எவ்வித தயக்கமும் கூடாது. இது நம்முடைய சௌகரியத்
தை உத்தேசித்ததே தவிர, விருப்பு, வெறுப்புக்கோ அல்லது விடாப்பிடி
யாகப் பிடிவாதம் செய்வதற்கோ ஒன்றும் இடமில்லை.

7. ஆட்சித் துறையின் மிகப் பிரத்தியேகமான இப்பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் மொழி மாற்றம் செய்வதை இரண்டு வகையாகப் பிரித்து எளிதாகக் காணலாம். முதலாவது அரசாங்கத்தாரின் செயலாளர் அலுவலக அமைப்பு. இது பெரும்பாலும் தலைநகரிலேயே இருக்கும். அடுத்துள்ளது செயலாளர் அகமல்லாத ஆட்சித் துறை இலாக்கக்கள் அமைப்புக்கள் முதலியவை ஆகும்.

அரசாங்கத்தின் செயலாளர் அகம் அதனுடைய கடமைகளையும் பொறுப்புக்களையும் அதிகாரத்தையும் செலுத்துவதற்குரிய "அலுவலகம் ஆகும்". அரசாங்கத்தைப்போலவே செயலாளர் அகமும் ஓரளவு உறுப்பு ஒற்றுமை உடையதாகும். அரசாங்கத்தின் அமைச்சுக்கள் என்பவை இந்த உடம்பின் பல்வேறு உறுப்புக்களே ஆகும். எனவே மொழி மாற்றம் என்பது எல்லா வகையான யூனியன் அமைச்சுக்களிலும் சேர்ந்தாற்போல் வர வேண்டிய ஒன்றாகும். ஏனென்றால் அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புக்களாகும் இவை. கணக்கில்லாத குறிப்புக்களும், நடவடிக்கைச் சுருக்கங்களும், ஞாபகக் குறிப்புக்களும் இந்த அமைச்சுக்களின் இடையே பல்வேறு நிலைகளிலும் ஓயாமல் போய் வந்து கொண்டிருப்பதால் அரசாங்கத்தின் முடிவுகள் என்று சொல்லும் பொழுது பல்வேறு அமைச்சுக்களும் கூறிய கருத்துக்களையும் ஒன்று சேர்த்து அவற்றிலுள்ள வேறுபாடுகளைப் போக்கி இறுதியாக எடுத்துக் கொண்ட முடிவான கருத்தையே குறிக்கும். எனவே பல்வேறு அமைச்சுக்களையும் அடுத்துள்ள செயலாளர் அகங்களில் படிப்படியாகப புதிய இடைநிலை மொழியைப் பயன்படுத்த வேண்டுமேயானால் ஒருமைப்பட்ட வழியில் அவற்றைச் சிந்தித்துச் செயல் முறைக்குக் கொண்டு வரவேண்டும். அந்தந்த அமைச்சு அவரவர்களுடைய காரியங்களைச் செய்து கொள்ளட்டும் என்று விடுவது கூடாது.

8. இந்திய அரசாங்கத்தைச் சேர்ந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்படுகின்ற ஆட்சி அமைப்புக்கள் அதாவது ரயில்வே, வருமானவரி, சுங்கவரி, கலால், அகில இந்திய வானொலி போன்றவைகளைப் பொறுத்தமட்டில் சில பிரத்தியேகமான கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை இங்கே குறிப்பிடுகிறோம். அகில இந்தியாவிலும் விரிந்துள்ள இந்தப் பகுதிகளின் இலாக்காக்கள் பொரும்பாலனவற்றில் யூனியன் மொழியினும் மாறுபட்ட பிராந்திய மொழிகள் பேசப்படுதலின் தனியான சில பிரச்னைகள் தோன்றுகின்றன. இந்தியாவின் இயல்பையும் சுதந்திர இந்தியாவின் அளவையும் எடுத்துக் கொண்டு பார்க்கும்பொழுது இதுவரையில் ஆட்சித் துறை அமைப்பில் காணப்படாத மிகப் பெரிய பல பிரச்னைகள் தோன்றலாமேனும் இவற்றிற்கு ஒரு முடிவு காண்பது முடியாத காரியம் என்று நாங்கள் நினைக்கவில்லை.

இந்த இலாக்கக்களின் பிராந்தியத் தொழில்களைப் பொறுத்த மட்டில் அதாவது பிராந்திய மொழிகள் வழங்கப்படும் இடங்களில் பொது மக்களோடு தொடர்பு கொள்ளும்பொழுது அந்த மக்களுக்குப் புரிகின்ற பிராந்திய மொழிகளிலேயே தொடர்பு கொள்ள வேண்டும். பெரும்பான்மையான பகுதிகளில் இது அப்பிராந்திய மொழியாகவே இருக்கும். அந்த இலாகா, தலைமைக் காரியாலயத்தோடு தொடர்பு கொள்ளும் பொழுதும் ஏனைய பிராந்தியங்களிலுள்ள இது போன்ற இலாக்கக்களோடு தொடர்பு கொள்ளும் பொழுதும் பயன்படுத்த வேண்டிய இடைநிலை மொழி யூனியன் மொழியாக இருக்க வேண்டும் என்பது சொல்லத் தேவையில்லை. இம்முறையில் இவ் விலாக்காக்களெல்லாம் நிரந்தரமாக இரட்டை மொழி அடிப்படையிலே அமையவேண்டும். அதாவது உள்துறை அலுவலுக்கு ஹிந்தி மொழியையும், வெளி அலுவலுக்கு அந்தப் பிராந்திய மொழியையும் பயன்டுத்த வேண்டும். உண்மையைக் கூறுமிடத்து இது ஏதோ புதிதாகச் செய்யப்பட்ட ஏற்பாடு என்றோ இதுவரையில் நடைபெறாத ஒரு வழிக்கு கொண்டு செல்லும் மாற்றம் என்றோ யாரும் நினைக்கவேண்டியதில்லை. அன்றாடத் தேவையை உத்தேசித்து இந்த இலாக்காக்கள் இதற்குள்ளாகவே இந்த இரட்டை மொழி முறையை மேற்கொண்டுள்ளன.

உதாரணமாகத் தபால தந்தி அமைப்பும், வருமானவரி இலாக்காவும், மத்திய கலால் இலாக்காவும் பொது மக்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது அந்தந்தப் பிராந்தியங்களில் எந்த மொழி வழங்குகிறதோ அந்த மொழியிலேயே பொது மக்களோடு தொடர்பு கொண்டுள்ளன. தபால் தந்தி நமூனுக்களும், வருமான வரி நமூனுக்களும், மத்திய கலால் இலாகா நமூனுக்களும் இவை போன்ற பிறவும் பல்வேறு பிராந்தியங்களிலுள்ள மக்களின் சௌகரியத்தை உத்தேசித்துப் பிராந்திய மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளன. இப்பொழுது செய்யப்பட வேண்டிய மாற்றம் என்னவென்றல் உள்துறை கடிதப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் தலைமைக் காரியாலயத்தோடு தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியைப் பயன்படுத்தவேண்டும்.

அங்கிலத்துக்குப் பதிலாக ஹிந்தியைப் புகுத்தும் இவ்வேலையில் ஒரு சிறு வேறுபாட்டை நாங்கள் குறிப்பிட விரும்புகிறேம். சில சந்தர்ப்பங்களில் மட்டும் இதற்கு ஒரு பொருள் இருக்கலாம். ஆங்கிலம் இதுவரையிலும். என் இன்றுங்கூடப் பெரும்பான்மையான அளவு யூனியன் மொழியாகவும், ராஜ்ய அரசாங்க மொழியாகவும், வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்துள்ளவர்கள் அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய மொழியாகவும் எல்லாப் பிராந்தியங்களிலும் இருந்துவந்திருக்கிறது. இதன் காரணமாகப் பல்வேறு உறுப்புக்களிலும், அமைப்புக்களிலும் பிராந்திய மொழிகள் பெற்றிருக்க வேண்டிய இடத்தை ஓரளவுக்கு ஆங்கில மொழி கவர்ந்துள்ளது என்றே சொல்ல வேண்டும். எனவே ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி வரும்பொழுது, ஹிந்தி "முற்றிலும் ஆங்கிலத்தின் இடத்தை எடுத்துக்கொளாமையினல்" பிராந்திய அலுவல்களிலும், ராஜ்ய அலுவல்களிலும் நன்கு ஆராய்ந்த புதிய முடிவுகளை ஏற்படுத்தாவிட்டால் ஓரளவு தொல்லை விளைவது நிச்சயம்தான். இவ்வாறு செய்யும் பொழுது இந்த அமைப்புக்களில், அமைப்புக்கள் பொது மக்களோடு கொள்ளும் தொடர்புக்குத் தேவையான முறையையயம், அமைப்புக்கள் வேறு இலாக்க க்களோடு தொடர்புகொள்ளும் மொழி பற்றியும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இதன் காரணமாக இந்த அமைப்புக்களின் வேலையைப்பற்றிய விரிவான ஆராய்ச்சியைச் செய்ய விரும்புகிறேம்.

இந்த சந்தர்ப்பத்தில் எங்களிடம் வந்த தபால் தந்தி இலாகா பற்றிய சில குற்றச்சாட்டுகளையும் தெரிவிக்க விரும்புகிறேம். ஹிந்தி பேசாத பிராந்கியங்களில் உள்ளவர்கள் அன்றுடம் பயன்படுத்தவேண்டிய தபால் தந்தி இலாகா நமூனக்களைப் பொறுத்தது இது. சில நமூனுக்கள் இதுவரையில் இரட்டை மொழிகளில் அச்சிடப்பட்டிருந்ததாகவும் அதாவது பிராந்திய மொழியிலும் ஆங்கில மொழியிலும் அவை இருந்தன என்றும் இப்பொழுது அவை ஹிந்கியில் மட்டிலுமோ, அன்றிப் பிராந்திய மொழியை நீக்கி விட்டு ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் மட்டுமோ அச்சிடப்பெற்றுள்ளன என்றும் சொல்லப்பட்டது. அவ்வாறு இருக்குமே அனல் அது நன்கு ஆராய்ந்து செய்யப்படாத ஒரு காரியம் என்றே சொல்ல வேண்டும். எல்லா ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலும் தொழிற்படுகின்ற இதுபோன்ற இலாக்கக்களில் அதாவது தபால் தந்தி இலாகா, ரயில்வே முதலியவற்றில் ஹிந்தி அறிவு நன்கு பரவாதவரையில் பிராந்திய மொழியை நீக்கிவிட்டு ஹிந்தியைப் பயன்படுத்துவது பொதுமக்களுக்கு இடையூற்றை விளைவித்து அவர்கள் மறுப்புக்கும் இடம் செய்யும். ஒரு சிலர், இந்த இலாக்கக்களின் மூலமாக ஹிந்தியை வளர்க்கும் செயல், பிராந்திய மொழிகளை அப்புறப் படுத்தித் திணிக்கப்படுகிறது என்று நினைப்பதற்குக்கூட இடந்தருவது, பொது மக்களினுடைய கஷ்டங்களை கவனிக்காத ஒரு செயலாகும். அரசாங்கத்தின் இந்த இலாக்காக்கள் பொது மக்களோடு தொடர்பு கொள்ளும் காரியங்களில் எந்தப் பொது மக்களுக்குப் பணி புரிய அவ்விலாக்காக்கள் ஏற்பட்டுள்ளனவோ அந்தப் பொது மக்களின் நலத்தையே கருத்தில் கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஒரு வேறுபாட்டைத் தேவைப்படும் பொழுதெல்லாம் கொண்டுச் செலுத்துதல் ஓரளவு கடினமாக இருக்கலாம். என்றாலும் இந்த வேறுபாடு உறுதியாக இருக்கின்றவரையில் இந்த சந்தர்ப்பங்களில் வேறுபாடு உள்ளன என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். ரயில்வே, தபால் தந்தி இலாக்கக்கள் பொது மக்களோடு பல்வேறு முறைகளில் தொடர்பு கொளவதால் இந்த இலாக்கக்களின் அலுவல்களில் ஹிந்திச் சொற்களைப் பயன்படுத்துவது அந்த மொழி பற்றி "அறிவைப் பெற" ஏதுவாகும். இந்த ஒரு காரியத்திற்காக யூனியன் மொழிச் சொற்களை குறிப்பீட்டுப் பலகைகளிலும், நமூனுக்களிலும், பொது மக்களிடம் பழக விடுவதற்காகப் பயன்படுத்துவது நியாயமானதும், செய்ய வேண்டியதும் ஆகும். ஆனால் இவ்வாறு உபயோகப்படுத்தும் பொழுதெல்லாம் பிராந்திய மொழியோடு "சேர்த்தே" பயன்படுத்தப்படவேண்டும். தேவைப்படும் இடங்களிலெல்லாம் ஆங்கிலத்தையும் உடன் பயன்படுத்தி யூனியன் மொழியில் பொது மக்களினுடைய அறிவு தகுந்த வளர்ச்சி பெறும் வரையில் ஆங்கிலத்தைப் பயன்படுத்ததும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். இதே கொள்கையின்படி வெளி நாட்டுப் பார்வையாளர்களும், யாத்திரிகர்களும் துன்பம் அடையாதபடி பல காலம் வரையில் ஆங்கிலத்தைப் பயன்படுத்த வேண்டுமா என்பதும் ஆராய்ச்சிக்கு உரியது. ஒரு தனிப்பட்ட அறிக்கையோ, குறியீட்டுப் பலகையோ அல்லது நமூனுவோ எந்தப் பயனை அளிப்பதற்காக ஏற்பட்டது என்பதையும் அதிலுள்ள இடைநிலை மொழி, விஷயத்தைப் புரிந்துகொள்வதற்காக ஏற்பட்டதே ஒழிய அந்த நமூனுவின் பயனை நோக்கும்பொழுது அதிலெழுதப்பட்ட மொழி தனிச் சிறப்பைப் பெறுமல் இரண்டாவது இடத்தைத்தான் பெறும் என்பதையும் மனத்தில் கொள்ள வேண்டும். பொதுப் பணிப் பரீக்ஷைகளில் ஹிந்தி மொழியைத் தெரிந்திருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி அதன் மூலமாக யூனியன் மொழியை வளர்ப்பது எவ்வளவு தவறோ அதேபோல, இந்த மத்திய அரசாங்க ஆட்சி முறை அமைப்புக்களும் அவற்றின் துறைகளில் அரசாங்கத்தின் கொள்கையை, அந்தக் கொள்கை எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும் வெளியிடுங் கருவியாக அமையக் கூடாது. இந்த சந்தர்ப்பங்களில் பொது மக்களின் மொழித் திறமையை கணக்கிட்டுத்தான் அறிக்கைகள், நமூனுக்கள், குறியீட்டுப் பலகைகள் முதலியன தயாரிக்கப்பட வேண்டும். அவர்களுக்குப் புரிகின்ற மொழிகளை மாற்றி விடுவதன் மூலம் புதிய இடைநிலை மொழிக்கு அவர்கள் கவனத்தைத் திருப்பும் வலுக்கட்டாயமான முயற்சி ஒன்றும் இருத்தல் கூடாது.

குறியீட்டுப் பலகைகளிலும், அறிக்கைகளிலும் நமூனுக்களிலும் எழுதப்பெற்றுள்ள ஹிந்தி மொழி பெயர்ப்புக்களைப் பற்றியும், பயன் படுத்தப் பட்டுள்ள புதிய சொற்களைப்பற்றியும், எங்களுடைய கவனத்திற்கு வந்த வரையில், அவை எவ்வளவு பொருத்தமற்றுள்ளன என்பது பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்லவேண்டும். சில சமயங்களில் இந்த மொழி பெயர்ப்புப் பொருத்தமற்ற வெறும் வார்த்தைக் கோவையாக இருப்பதோடு பொது மக்கள் இதனைக் கேவலமாக நினைக்கவும், எள்ளி நகையாடவும் காரணமாக அமைந்துள்ளது. மேலும் சில வடமொழிச் சொற்கள், சில பிராந்திய மொழிகளில் தனிப்பட்ட பொருளைப் பெற்றிருப்பதால் அந்தச் சொற்களைப் பயன்படுத்தும்பொழுது அவற்றின் பொருளை ஆராய்ந்து அந்த வட்டாரத்தில் வழங்கும் பொருளோடு மாறுபடாமல் இருக்கிறதோ என்பதையும் காண வேண்டும். புதிய சொற்களையும், சொல்லாட்சிகளையும் ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் இந்தக் கோணங்களை எல்லாம் நன்கு ஆராயவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். ஒரு சிறிது கவனமும், விழிப்புத் தன்மையும் இதில் செலுத்தப்படுமேயானல் நிறைந்த அளவு லாபத்தைத் தருவதோடு யூனியன் மொழியைப் பிறர் எள்ளி நகையாடும் ஒரு நிலைமையையும் போக்கலாம். மேலும் இப்புதிய சொற்கள் அன்றாடப் பேச்சில் எளிதாக நுழையுமாறும் செய்யலாம்.

9. இந்த இலாக்காக்களின் அமைப்புக்கள் செய்ய வேண்டிய மற்றொரு முக்கிய காரியம் அதனுடைய அலுவலாளர் நிலை பற்றியதாகும். சென்ற

காலத்தில் இந்தப் புதிய கோணத்தில் இந்தப் பிரச்னை ஆராயப்படாத காரணத்தால் இந்த அமைப்புக்களில் அலுவலாளர்களைப் பொறுக்கும் பொழுது அதிகமான அளவுக்கு ஓரிடத்து அதிகாரம் இருந்து வந்துள்ளது. இந்த அமைப்புகளுக்கு அலுவலாளர்களைப் பொறுககும் பொழுது கூடுமானவரையில் ஓரிடத்ததிகாரம் இல்லாமல் பிரிந்துள்ள அதிகார நிலையில் பொறுக்கப்பட வேண்டும். சிறப்பாகத் தேவைபடுகின்ற முறையில் அலுவலாளரைப் பொறுக்கும் வேலை பிராந்திய முறையிலோ, பெரும் பிராந்திய முறையிலோ அமைக்கப்பட வேண்டும். அகில இந்திய நிலைமையில் எவ்வளவுக்குச் செம்மையான முறையில் வேலை செய்யத் தேவையோ அந்த அளவுக்கு இந்த அமைப்புக்கள் இருந்தால் போதுமானது. சில குறிப்பிட்ட பகுதிகளில் குறிப்பிட்ட அலுவலாளர்களைப் பெரும் பிராந்திய நிலைமையிலும், பிராந்திய நிலைமையிலும் மாற்றினால் போதுமானது. நாடு முழுவதும் மாற்ற வேண்டிய தேவையில்லை. சில இலாக்காக்களில் இந்தப் பழக்கம் ஏற்கெனவே வந்துள்ளது. உதாரணமாக ரயில்வேக்கு அலுவலாளர்களைப் பொறுக்கும் வேலை நான்கு பிரிவுகளையுடைய பெரும் பிராந்திய நிலையில் நடைபெற்று வருகிறது. அலுவலாளர்களைத் தேர்நதெடுக்கும் கொள்கையை இந்த அடிப்படையில் கவனித்து மாற்றி அமைக்க வேண்டும். அப்பொழுதுதான் பல்வேறு பிராந்தியங்களிலிருந்தும், பெரும் பிராந்தியங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய பிராந்தியங்களுக்குள்ளேயோ பெரும் பிராந்தியங்களுக்குள்ளேயோ வேலை பெறக் கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள். அகில இந்திய அமைப்புக்களில் வேலை தேடிவரும் விண்ணப்பதார்கள் பல்வேறு பிராந்தியங்களிலிருந்தும் பல்வேறு மொழியினத்திலிருந்தும் வந்தாலும் தேவையான தகுதியைப் பெற்றிருக்கும்பொழுது சமமான சந்தர்ப்பத்தைப் பெறுவார்கள். பெரும் பிராந்திய, பிராந்திய அளவில் வேலை தேடுகின்ற விண்ணப்பதார்களும், அவர்கள் வேலைக்குச் செல்கின்ற அமைப்புக்கள் நன்கு தொழிற்படவேண்டுமேயானால் ஓரளவு ஹிந்தி மொழி அறிவு பெற்றவர்களாகவே இருக்க வேண்டும்; அமைப்பக்களுள் நடைபெற வேண்டிய கருத்துப்பரிமாறல் யூனியன் மொழியில் இருக்குமாதலால் பல்வேறு பிராந்தியங்களிலிருந்து வருகின்ற விண்ணப்பதார்களுக்கு வேலைச் சந்தர்ப்பம் சமமாக இருக்க வேண்டும் என்பதற்காக மாற்றக் காலத்தில் அந்தப் பிராந்தியத்தில் கல்வி முறையில் ஹிந்தி எந்த அளவில் உள்ளது என்பதைக் கவனித்து விண்ணப்பதார்களின் ஹிந்தி மொழித் தேவையை நிர்ணயிக்க வேண்டும். வேலைக்கு தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தில் ஏதாவது ஹிந்தி மொழி அறிவு குறைவாக இருக்குமானால் வேலையில் சேர்ந்த பிறகு அதனைச் சரிப்படுத்திக் கொள்ளலாம். அகில இந்திய முறையில் உள்ள அமைப்புக்களில் வேலைக்குப் பொறுக்கும்பொழுதே விண்ணப்பதார்கள் உயர்ந்த அளவு ஹிந்தி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப் படலாம். இம்மாதிரி அமைப்புக்களில் உள்ள பல இலாக்காக்களும், உள்துறை அலுவலில் நாளாவட்டத்தில் ஹிந்தி மொழியையே பயன் படுத்தப் போவதால் இந்த அமைப்புக்களில் அலுவல் தேடி வருகின்றவர்கள் உயர்ந்த அளவு ஹிந்தி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று சொல்வதில் நியாயம் இருக்கின்றது. என்றாலும் இத்தகைய இடங்களில் கூட கட்டாய பாடமாக வைக்கப்பட்ட ஹிந்தி எவ்வளவுக்கு முன்னேறி வருகின்றதோ அந்த அளவுக்கு விண்ணப்பதார்களின் ஹிந்தி அறிவையும் நிர்ணயப்படுத்தி இடைக் காலத்தில் அவர்களுக்கு இருக்கும் ஹிந்தி அறிவின் குறைவை அலுவலில் சேர்ந்த பிறகு வளர்த்துக்கொள்ள வேண்டும்.

10. மேலே ஐந்தாவது பாராவில் குறிப்பிட்டுள்ளதை நினைத்துப் புதிய இடைநிலை மொழியில் தங்கள் அன்றாடக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அலுவலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டியது மூன்றாவது தேவையாகும். யூனியன் அரசாங்கத்தார் ஹிந்தி மொழி பேசாத மத்திய அரசாங்க அலுவலாளர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொள்ளவேண்டியது பற்றிக் குறிப்பிட்ட கட்டுப்பாடு எதையும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. இந்த விஷயத்தில் ராஜ்ய அரசாங்கங்களைப் பொறுத்தவரையில் பதின்மூன்று

ராஜ்ய அரசாங்கங்கள் அந்த ராஜ்ய அலுவலாளர்கள் குறிப்பிட்ட ஒரு தேதிக்குள் ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கட்டுப் பாடு செய்துள்ளன. இவற்றுள் ஆறு ராஜ்யங்கள் இங்ஙனம் குறிப்பிட்ட தேதிக்குள் கற்றுக் கொள்ளாவிட்டால் அவர்களுடைய சம்பள உயர்வை நிறுத்துவது, வேலையைக் காயம் செய்வதைத் தடை செய்வது முதலான தண்டனைகளையும் விதித்துள்ளன.

இந்திய அரசாங்கம் 1952 ஜூலையிலிருந்து டில்லியில் அலுவல் பார்க் கும் மத்திய அரசாங்க அலுவலாளர்கள் ஹிந்தி கற்றுக்கொள்வதற்குரிய வசதிகளைச் செய்து தரும் ஒரு கொள்கையை மேற்கொண்டுள்ளது. அலுவலக நேரத்திற்கு முன்னும் பின்னும் அலுவலகத்தின் பக்கத்திலே உள்ள இடங்களிலும், மத்திய அரசாங்க ஊழியர்கள் நிரம்பக் குடியிருக்கின்ற இடங்களிலும் வாரத்திற்கு மூன்று சொற்பொழிவுகள் வீதம் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. ஆறு மாதத்திற்கு இவ்வாறு கற்பிக்கப்பட்டு ஜூனியர் ஆதாரக் கல்வி நிலைக்கு ஏற்ப ஹிந்தி பிரபோத் பரீக்ஷை என்ற ஒன்று இவர்களுக்கு வைக்கப்படுகிறது. நிறைந்த அம்சங்கள் பெறுகிறவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதில் சேர்ந்து படிப்பது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்ததே.

மற்றொரு விரிவான திட்டத்தை இந்திய அரசாங்கம் 1955 அக்டோபரில் தொடங்கியது. இந்தத் திட்டமும் டில்லியில் உள்ள மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு மட்டும்தான். ஆனால் இத்திட்டத்தின்படி ஹிந்தி வகுப்புக்கள் அலுவலகம் நடக்கின்ற நேரத்தின் ஒரு பகுதியில் நடைபெறுகிறதாத லின் அதுவும் அலுவலக வேலையாகவே கருதப்படுகிறது. இத்திட்டத்திற் காக மத்திய அரசாங்க ஊழியர்கள் அனைவரும் நான்கு பிரிவினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர்.

வகுப்பு அ.—ஹிந்தியைத் தாய்மொழியாக உடையவர்கள்.

வகுப்பு ஆ.—உருது, பஞ்சாபி, காஷ்மீரி, சிந்தி, புஷ்டு என்பவை போன்ற தொடர்புள்ள மொழிகளைத் தாய்மொழியாக உடையவர்கள்.

வகுப்பு இ.—மராத்தி, குஜராத்தி, வங்காளி, அஸ்ஸாமி, ஒரியா ஆகிய தொடர்புடைய மொழிகளைத் தாய்மொழியாக உடையவர்கள்.

வகுப்பு ஈ.—தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம் என்பவை போன்ற தொடர்புடைய மொழிகளைத் தாய்மொழியாக உடைய வர்கள்.

" ஆ " பிரிவிலுள்ளவர்கள் ஆறு மாதங்களிலும், " இ " பிரிவில் உள்ளவர்கள் பனிரண்டு மாதங்களிலும், " ஈ " பிரிவில் உள்ளவர்கள் பதினெட்டு மாதங்களிலும் குறிப்பிட்ட தகுதியை அடையவேண்டும். கற்பிக்கும் இந்தத் திட்டம் நிறைவேறியவுடன் எல்லாப் பயிற்சியாளர்களுக் கும் ஒரே தரமான தேர்வு வைக்கப்படுகிறது. " ஈ " பிரிவுப் பயிற்சியாளர் களுக்கு மூன்று பரீக்ஷைகள் உண்டு. ஆறுமாத முடிவில் ஹிந்தி பிர போத் பரீக்ஷை தரத்தில் ஒரு பரீக்ஷையும், ஒரு வருஷ முடிவில் இடை நிலைப் பரீக்ஷை தரத்தில் ஒன்றும், பதினெட்டு மாத முடிவில் உயர்நிலைப் பள்ளிப் பரீக்ஷை அளவில் ஒன்றுமாக மூன்று தேர்வுகள் உள்ளன. " இ " பிரிவில் உள்ளவர்களுக்கு ஆறு மாத முடிவில் இடை நிலைப் பரீக்ஷை ஒன்றும், ஓராண்டு முடிவில் உயர்தரப் பள்ளி அளவில் ஒன்றும் ஆக இரண்டு பரீக்ஷைகள் உள்ளன. " ஆ " பிரிவில் உள்ளவர்களுக்கு ஆறு மாத முடிவில் உயர்தரப் பள்ளிப் பரீக்ஷை அளவில் ஒரு தேர்வு உண்டு. சொந்த முறையில் ஹிந்தி கற்றுக் கொள்கிற சர்க்கார் ஊழியர்களும் கூட இந்தத் தேர்வு எழுதலாம். முன்னரே ஹிந்தியில் மெட்ரிகுலேஷன் அல்லது " ரத்ன " போன்ற பரீக்ஷைகளை எழுதியோ அதற்கு மேற்பட்ட ஹிந்திப் பரீக்ஷையில் தகுதி பெற்றவர்களும் இதில் எந்தப் பரீக்ஷையையும் எழுத வேண்டிய தேவையில்லை. " அ " பிரிவிலுள்ள அதிகாரிகள் ஆட்சி முறை,

தொழில் நுட்பக் கலைச் சொற்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற ஒரு வகுப்பில் பயின்று ஹிந்தி மொழியில் காரியாலயக் காரியங்களைக் கவனிப்பதற்குரிய பயிற்சியையும் பெறுகிறார்கள்.

பரீக்ஷையில் நூற்றுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட அம்சங்கள் பெறுகிறவர்களுக்குப் பணப் பரிசுகள் தரப்படுகின்றன.

உள்துறை அமைச்சுக் காரியாலயத்தார்கள் இங்ஙனம் பயிற்சி பெறும் ஊழியர்களைக் குறித்து (நாலாந்தர அதிகாரிகளையும், 1965-க்குள் ஓய்வு பெறுகின்றவர்களும் நீங்கலாக) டெல்லியில் வாழ்கின்ற மத்திய அரசாங்க ஊழியர்கள் பற்றிக் கீழ்க் கண்ட புள்ளி விவரங்களைத் தந்துள்ளார்கள்.

வகுப்பு அ : ஹிந்தி பேசுவோர்	6,606
வகுப்பு ஆ : பஞ்சாபி, உருது, காஷ்மீரி, சிந்தி, புஷ்டு பேசுவோர்.	9,595
வகுப்பு இ : மராத்தி, குஜராத்தி, வங்காளி, அஸ்ஸாமி, ஒரியா பேசுவோர்.	1,931
வகுப்பு ஈ : தென்னாட்டு மொழிகள் பேசுவோர்	1,619
மற்றையோர்	255
	20,006

1956 பிப்ரவரியில் டில்லியில் அரசாங்க ஊழியர்கள் ஹிந்தி கற்றுக் கொள்வதற்காக 75 வகுப்புக்கள் நடைபெற்றன என்றும் அதில் கல்வி பெற்றவர்கள் எண்ணிக்கை 2,500 என்றும், எங்களுக்குத் தெரிவித்தார்கள். இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சு, நாட்டின் ஏனைய பாகங்களில் இங்ஙனம் ஹிந்திக் கல்வி பெறுகின்ற மத்திய அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை தங்களுக்குத் தெரியாது என்றும் சொல்லி விட்டார்கள்.[1] மத்திய அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு பெரியது என்பதை அறிவிக்கக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்களைத் தருகின்றோம். மத்திய புள்ளி விவர அமைப்பாளர் தந்த புள்ளி விவரங்களின் படி 1953-ல் மத்திய அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை 16 லக்ஷம் ஆகும். இவர்களுள் ரயில்வே ஊழியர்கள் ஒன்பது லட்சம் பேர்கள் என்றாலும் இவர்களுள் மிகப் பெரும்பான்மையானவர்கள் நாலாந்தர ஊழியர்களாக அதாவது கொல்லர், உடலுழைப்பாளர், சிறு வாணிகம் செய்வோர் முதலானவர்களாக இருத்தலின் இவர்கள் தொழில்களைப் பொறுத்த மட்டில் புதிய இடைநிலை மொழியில் அறிவு பெறவேண்டும் என்பது தேவையில்லை.

அரசாங்கத்தின் ஊழியர்கள் பல்வேறு துறைகளிலும் தொழிற்படும் பொழுது இந்த மொழியில் தங்கள் கடமைகளைச் செலுத்த வேண்டுமானால் எந்த அளவுக்கு இவர்களுக்கு ஹிந்திப் படிப்புத் தேவைப்படும் என்பது ஆராயப்படவேண்டும். உத்தியோகங்களுக்கு ஆட்களைப் பொறுக்கி எடுக்கும்பொழுது ஆங்கில மொழி வன்மை அந்தந்த உத்தியோகங்களைப் பொறுத்தமட்டில் எவ்வளவு தேவைப்படும் என்று கேட்கப்படுகிறதோ அந்தத் தேவைக்கணக்கு ஹிந்தியில் எந்த அளவு அறிவு பெறவேண்டும் என்பதைக் கணிப்பதற்கு ஒரு 'கருவியாகும். மொழிமாற்றக் காலத்தில் ஹிந்தி மொழி பேசாத ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஓரளவு குறைந்த தரமுடையவர்களாக இருப்பினும் அதனை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். அவர்களுடைய அலுவல்களை ஹிந்தி மொழியில் செய்து பழக்கப் படப்பட அவர்களுடைய மொழியறிவு வளர்ச்சி அடையும்.

[1] இவற்றில் சில பகுதிகள் பற்றிய விரிவான தகவல்களை டிரக்டர் ஜெனரல் ஆப்-ரிசெட்டில்மெண்ட் அண்டு எம்ப்ளாய்மெண்டு, பிறகு கொடுத்தார். அது பிற்சேர்க்கை பதினைந்தில் உள்ளது.

அடுத்து வருகின்ற கேள்வி, இப்பொழுது நடைபெறுவதைப் போல மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு ஹிந்தியை விருப்ப பாடமாகத் தருவதா அல்லது ஒரு கால வரையறை செய்து எல்லா அரசாங்க ஊழியர்களும் தேவையான அளவு தகுதியை அதற்குள் பெற்றுத் தீர வேண்டும் என்று சொல்வதா என்பதே அந்த வினா. அனுபவ பூர்வமாகப் பார்க்கும் பொழுது, எதிர் பார்த்த பயன் கிடைப்பதானால் விரும்பிக் கற்கும் முறையே சிறப்புடையதாகும். என்றாலும் தேவைப்பட்ட அளவு தகுதி பெற்றவர்கள் வரவில்லையானால் வேண்டுமான கால அளவைத் தந்து அந்தக் கால எல்லைக்குள் கற்றுத்தீர வேண்டும் என்று கட்டாயப் படுத்துவதும், தவறினால் தண்டனை அளிப்பதும் சிறந்த வழிகள் அல்லவா, என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். கொள்கை அளவில் யூனியன் அரசாங்கத்தில் ஊழியம் செய்கின்ற ஒருவர் அவருடைய அலுவல்களைச் சரியானபடி கொண்டு செலுத்துவதற்கு எவ்வளவு தூரம் இந்த மொழிப் பயிற்சி தேவையோ அந்த அளவு பயிற்சி பெற்றுத் தீரவேண்டும் என்று கட்டாயப் படுத்துவதில் மறுப்பு எதுவும் இருக்க முடியாது. இந்த மொழியறிவைப் பெற்று, வளர்ச்சி அடையச் செய்வதற்கு வாய்ப்பு அளிக்கும் முகமாக வேண்டுமான சௌகரியங்களையும், வசதிகளையும் அரசாங்க ஊழியர்களுக்குச் செய்து தரலாம். அவையாவன, அலுவலக நேரத்தில் சௌகர்யமான இடத்தில் இலவசக் கல்வி அளித்தல், இந்தக் காரியத்திற்கு வேண்டிய அளவு ஓய்வு நேரத்தைத் தம்முடைய வேலையை செய்துகொண்டிருக்கும் ஒரு அதிகாரி பெறவில்லையானால் அவருக்கு வேண்டுமான அளவு அதிகப்படி விடுமுறை கொடுத்தல் முதலானவைகளாம். இங்ஙனம் கட்டாயப்படுத்தும்பொழுது தனிப்பட்ட சில அரசாங்க ஊழியர்கள் மிக உயர்ந்ததும், பொறுப்புள்ளதுமான பதவியிலிருந்துகொண்டு தங்களுடைய வேலையைச் செய்யும்பொழுது ஒரு புதிய மொழியைக் கற்றுக்கொள்வதற்குரிய அவகாசம் அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம் என்பதையும் மனத்துட்கொண்டு இக்கட்டாய முறையை அமல் செய்யவேண்டும். இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்து, தேவையான இடம் தந்து, வேண்டிய வசதிகளும் தரப்பட்டால் அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள மொழிக் கொள்கைக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட கால அளவில் மொழி மாற்றம் செய்யும்பொழுது அதற்குத் தகுதியுடையவர்களாக ஊழியர்கள் ஆகவேண்டும் என்பதற்காக, அவர்களை கட்டாயப்படுத்துவதில் தவறில்லை. அல்லாத ஊழியர்களும் தங்கள் கடமையைச் செய்வதற்கு இந்தப் புது மொழியறிவு தேவைப்படுமென்றமையால் வேண்டுமான முயற்சி எடுத்துக்கொண்டு தங்களைத் தகுதியுடையவர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டியது முறையாகும்.

ஒவ்வொரு அமைச்சையும் அடுத்து மொழி பெயர்ப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தி, முதலில் ஆங்கிலத்தில் செய்யப்படுகின்ற வேலையை ஹிந்தியில் மொழி பெயர்த்துத் தருகின்ற கடமையை இந்தக் குழுக்கள் மேற்கொள்ளலாம் என்றும், சிலர் கருதுவதாகத் தெரிகிறது. இந்த மொழி பெயர்ப்புக் குழு அமைப்புக்கள் நிரந்தரமாக இருப்பதோடு அல்லாமல் இந்த மாற்றக் காலத்தில் தேவைப்படும் அதிகப்படியான வேலைகளுக்கு ஏற்ப இடைக்காலக் குழுக்கள் பலவற்றை ஏற்படுத்தி அந்தத் தனிப்பட்ட அரசாங்க அலுவலகத்தில் உள்ளவர்கள் தகுந்த மொழியறிவு பெறுகின்றவரை இந்த இடைக்காலக் குழுக்களை வைத்திருக்க வேண்டும். ஆனால் அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள இடைநிலை மொழி மாற்றம், இவ்வாறு செய்வதை ஏற்றுக்கொள்ளுமா என்பதை நாங்கள் அறிய முடியவில்லை. அதாவது நிரந்தரமாக ஒவ்வொரு அமைச்சை அடுத்தும் ஒரு மொழி பெயர்ப்புக் குழுவை வைத்துக்கொண்டு இப்பொழுது நடைபெறுவதைப் போலவே ஆங்கிலத்தில் அனைத்தையும் நடத்தி, இன்னும் சில அரசாங்க ஊழியர்கள் பொதுப் பணத்தை பெற்றுக் கொண்டு ஒவ்வொரு பகுதியிலும் அதை மொழி பெயர்த்துத் தருவதற்காக இருப்பதை, அரசியலமைப்பு குறிப்பிட்டதா என்பதையும் நாங்கள் அறிய முடியவில்லை. இவ்வாறு செய்கின்றது தவிர்க்கக்கூடிய பொதுப் பணவீண் செலவே ஆகும் என்பதோடு அல்லாமல் மொழி மாற்றம் செய்வதனை டைய பின்னப் பொருமலவும் செய்துவிடும். இப்பொழுது எப்படி ஆங்கிலத்தில் வேலை நடைபெறுகிறதோ அதே முறையில் மாற்றப்பட்ட புதிய மொழியில்

லை நடைபெற்றால் ஒழிய அரசியலமைப்புக் கோரிய மொழி மாற்றம் நடைபெற்றதாக நாங்கள் நினைப்பதற்கில்லை.

யூனியன் அரசாங்க ஊழியர்களைக் கட்டாயப் படுத்தும் முறை ஒருபுறம் இருக்க, இம்மொழி மாற்றம் செய்யும்பொழுது சில தூண்டுகோல்களைத் தருவதும் தேவைப்படுவதாகும். எங்களைப் பொறுத்த மட்டில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் நல்முறையில் கடமையைச் செய்கின்றவர்களுக்குத் தூண்டுதல் தருவது நலமுடையதாகும். பணப் பரிசு தருதலும், ஏனைய பரிசில்கள் தருவதும், அந்த ஊழியர் பற்றிய மனறு முக ஏடுகளில் வேண்டுமான தகுதிகளை எழுதுவதும் சிறந்த முறைத்தூண்டுதல்களாகும்.

அடுத்து கவனிக்க வேண்டியது புதிய இடைநிலை மொழியை கற்றுக் கொள்ள வேண்டிய அதிகாரிகளுள் கட்டாயப் படுத்தப்பட வேண்டிய வயதுத் தொகுதி எது என்பது பற்றிய ஆராய்ச்சியாகும்.

11. அரசியலமைப்புக் குறித்துள்ள காலம் 1965-ம் ஆண்டு ஆகும். இந்த 1965-ம் ஆண்டுக்குப் பலகாலம் முன்னரே ஆட்சி யந்திரம் மொழி மாற்றத்தை ஓரளவு மேற்கொண்டு ஆங்கிலத்தோடு கூடவும், ஆங்கிலத்திற்குப் பதிலாகவும் வழங்கி வந்தாலொழிய 1965-ம் ஆண்டு பக்கத்தில் வரவர ஹிந்தியில் செய்யப்படுகின்ற காரியங்கள் மிகுதியாகவும் ஆங்கிலத்தில் செய்யப்படுகின்ற காரியம் குறைவாகவும் ஆகி இறுதியில் மொழி மாற்றம் அமைதியுடன் வரமுடியாது. கல்வி அமைச்சில் நிகழ்ச்சி நிரலை நாங்கள் கண்ட அளவில் மூன்றாவது ஐந்தாண்டு கால வரையறையில்தான் மத்திய அரசாங்க ஆட்சிக் காரியங்களுக்கு ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியையும் பயன் படுத்துவார்கள் என்று தெரிகிறது. அன்றியும் மத்திய அரசாங்கத்திற்கும், ராஜ்யங்களுக்குமிடையேயும் இம் மொழியைப் பயன் படுத்துகின்ற காலமும் அதுவேதான். இதிலிருந்து, இப்பொழுதிலிருந்து 1960-வரை யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியைப் பயன் படுத்த ஆரம்பிக்க மாட்டார்கள் என்று தெரிகிறது. எங்களைப் பொறுத்தவரை அரசியலமைப்பில் குறிப்பிட்ட கால அளவுக்குள் அந்தக் குறிக்கோள் நிறைவேறவேண்டுமானால் ஒரு தகுந்த அளவில் முன்னேற்பாடுகள் முடிக்கப்பட்டவுடன் கணிசமான அளவுக்கு உடனேயே செய்யத் தொடங்கிவிடவேண்டும். ஹிந்தி பேசும் ராஜ்யங்கள் சிலவற்றில் இந்த மொழி மாற்றம் செய்கின்ற வேலையில் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது, ஆதலின் அவர்கள் பெற்ற அனுபவம் பயனில்லாமல் போகாது. ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் உள்ள பிரச்னைகளை விட மத்திய அரசாங்கத்தின் பிரச்னைகள் சிக்கல் நிறைந்தவையாக இருப்பினும், இந்த ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் பெற்ற அனுபவம் யூனியன் பிரச்னைகளோடு தொடர்பு கொள்ளாமல் போகவில்லை. இந்த அனுபவத்தின்படி மாற்றம் செய்யப்படும் இடைக்காலத்தில் செயலாளர் அலுவலகத்தில் எல்லாக் குறிப்புக்களிலும் இரண்டு மொழிகளும் கலந்தே வரும் என்பதும் ஒன்று. சில அதிகாரிகளும், ஊழியர்களும் முன்னரே ஹிந்தி மொழியை அறிந்திருப்பார்கள். அன்றேல் தங்கள் தொழிலைச் செய்வதற்குரிய அளவு இந்த மொழி வன்மையை விரைவில் பெற்றுவிடுவார்கள். மற்றுச் சிலர் அவ்வளவு குறுகிய காலத்தில் அந்த அறிவைப் பெற முடியாமல் இருக்கலாம். இன்னும் சிலர் மிக நீண்ட காலத்தை எடுத்துக் கொள்ளலாம். எல்லோரும் வேண்டுமான அளவு இப்புது மொழியறிவு பெற்றால் ஒழிய மொழி மாற்றம் செய்யமுடியாது என்று சொல்வதில் பயனொன்றும் இல்லை. ஹிந்தி மொழியில் குறிப்புக்கள் எழுதவும், வரைவுகள் எழுதவும் தேவையான அளவு ஹிந்தி மொழிப் பயிற்சியைப் பெறுவதற்கு அதிகக் காலம் ஆனாலும் அம்மொழியைப் புரிந்துகொள்ளும் அளவு அறிவு பெற அதிகக் காலம் தேவையில்லை. புரிந்து கொள்கின்ற அளவுக்கு அனைவரும் அறிவு பெற்ற பிறகு இயன்றவர்கள் ஹிந்தி மொழியில் குறிப்புக்கள் போடவும், வரைவுகள் எழுதவும் முன் வந்தால் அவர்களுக்குரிமை கொடுத்து ஊக்கிவிட வேண்டும். அந்நிலையில் ஒரே பைலில் ஒரு பகுதி ஹிந்திக் குறிப்பாகவும், மற்றொரு பகுதி ஆங்கிலக்

குறிப்பாகவும் இருக்கும் சூழ்நிலை ஏற்படும். உண்மையைக் கூறுமிடத்து மொழி மாற்றக் கொள்கையை ஆட்சித் துறையில் அமலுக்குக் கொண்டு வந்த ராஜ்யங்களில் இப்பொழுது நடைபெறுவது இதுதான். உதாரணமாக மத்தியப் பிரதேசத்தில் ஹிந்தியும் மராத்தியும் ஆட்சி மொழிகளாக உள்ளன. அங்கே ஒரே பைலில் ஆங்கிலம், ஹிந்தி, மராத்தி ஆகிய மூன்று மொழிகளிலும் குறிப்புக்கள் போடப்படுகின்றன. மேலும் ஒரு அதிகாரியோ அல்லது ஊழியரோ தம் கருத்தை ஹிந்தியில் சொல்லும் பொழுது சில ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தவும், தம்முடைய கருத்தை வேறு வகையில் தெரிவிக்க முடியாத பொழுது ஒரு முழு ஆங்கில வாக்கியத்தையே பயன்படுத்தவும் உரிமை கொடுக்கப்பட வேண்டும்.

இதே போலச் சட்டத் துறையிலும், வழிமுறை இலக்கியங்களிலும் எல்லாக் கலைச் சொற்களும் மொழி பெயர்க்கப்பட்டு முடிகின்றவரையில் ஹிந்தியைப் புகுத்தாமல் இருப்பது பொருத்த முடையதல்ல; தேவையும் அல்ல. ஓரளவுக்கு "முன் தேவைகளை" தயாரித்துக் கொள்வதும், புதிய இடைநிலை மொழியைப் பயன்படுத்துவதும் ஏறத்தாழ ஒரே காலத்தில் நடைபெற வேண்டியன. ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தவும், ஆங்கிலத்திலுள்ள சட்டப் புத்தகங்களிலிருந்து வேண்டுமான மேற்கோள் சட்டத்தை எடுத்துச் சொல்லவும், தேவையான அளவு ஹிந்திச் சொற்களும் மொழி பெயர்ப்பு நூல்களும் கிடைக்காத வரை உரிமை உண்டு ஆதலால் இப்பொழுதே இதனைத் தொடங்குவதற்கு எவ்விதத் தொல்லையும் இல்லை. குறிப்பிட்ட மொழி மாற்றம் செய்வதற்கு எங்கெங்கே முடியுமோ அங்கேயெல்லாம் ஒரு தொடக்கத்தைச் செய்து பல்வேறு வகையான முன் தேவைகள் செய்யப்படும்பொழுதே இதனையும் புகுத்துதல்தான் ஒரே வழியும், சிறந்த வழியுமாகும்.

ஆட்சித் துறையில் சௌகர்யமான முறையில் மொழி மாற்றம் செய்வதற்கு இதுவே வழியென்றால் யூனியன் அரசாங்கத்தின் செயலாளர் அலுவலகத்தில் மிக விரைவாக ஹிந்தி மொழியைப் புகுத்தி ஊழியர்கள் எவ்வளவு விரைவாகப் புதிய மொழி யறிவைப் பெற்றுக்கொள்கிறார்களோ அவ்வளவு விரைவில் அவர்கள் இப்புது மொழியில் வேலை செய்யலாம் என்று செய்வதே சிறந்த வழியாகப்படுகிறது. செயலாளர் அலுவலகத்திற்கு சொல்லப்பட்ட இந்த வழியே ஏனைய பல ஆட்சித் துறை இலாக்காக்களுக்கும், இந்திய அரசாங்கத்தின் தொடர்புடைய மற்றைய அலுவலகங்களுக்கும் பொருந்தும்.

12. ஊழியர்களைப் புது மொழித் துறையில் கடமையைச் செய்ய மறு பயிற்சி அளிக்கும் பிரச்னை மிக நீண்ட காலத்திற்கு இருக்கும் ஒன்று என்பது இன்னும் நன்கு உணர்ந்து கொள்ளப்படவில்லை. இன்றைய வரையில் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் பல பகுதிகளில் இடைநிலைப் பள்ளிக் கூடங்களில் ஹிந்தி மொழிக் கல்வியைக் கட்டாயமாக ஆக்கியதாகத் தெரியவில்லை. இம்முறை இப்பொழுதே கைக்கொள்ளப் பட்டாற்கூட கட்டாய ஹிந்தி கற்கின்ற ஒரு மாணவன் பட்டப் படிப்பைப் பயின்று இந்திய அரசாங்கத்தின் உயர்தரப் பதவிகளுக்குப் பனிரண்டு வருஷங்களுக்குள் வரமுடியாது. இதனால் இந்திய அரசாங்கம் தற்பொழுது ஹிந்தி மொழிப் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கின்ற பல ஊழியர்களைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பதைத் தவிர, வரப்போகின்ற சில ஆண்டுகளிலும் புதிதாக ஊழியத்திற்கு வருகிறவர்களும் வேண்டுமான அளவு ஹிந்தி மொழிப் பயிற்சி இல்லாதவர்களாகவே இருப்பர் என்பது அடுத்த பாராவில் சொல்வதனால் நன்கு விளங்கும்.

இப்பொழுது அரசாங்க ஊழியத்திலிருக்கின்ற மிக இளம் வயதுடைய தொகுதியினரை எடுத்துக்கொண்டால் இன்றிலிருந்து முப்பது ஆண்டுகள் வரை அவர்கள் அந்த ஊழியத்தில் இருப்பார்கள். எனவே இப்பொழுது அரசாங்க ஊழியத்திலிருப்பவர்களை வேண்டுமான அளவு ஹிந்தி மொழி அறிவு பெறுமாறு செய்கின்ற பிரச்னை மிக முக்கியமானதாகும்.

இனி வருங்காலத்தில் மத்திய அரசாங்க ஊழியத்திற்கு எடுக்கப்படுகின்றவர்களும், இலாக்காப் பரீக்ஷைகளில் கட்டாய ஹிந்தியைப் படித்துத் தேறிய பிறகுதான வேலையில் காயம் செய்யப்படுவார்கள், என்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஐ.ஏ.எஸ். ஊழியத்தைப் பொறுத்த மட்டில் இங்ஙனம் ஒரு வழி செய்யப்பட்டிருப்பதாகவும், ஏனைய ஊழியங்களைப் பொறுத்த மட்டில் அந்தந்த அமைச்சுக்கள் இங்ஙனம் ஒரு கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சு அவர்களைக் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

இது சம்பந்தமாக உள்துறை அமைச்சு கீழ்க்கண்ட செய்தியை எங்களுக்குத் தெரிவித்துள்ளது :—

"யூ.பி.எஸ்.ஸி.யில் ஊழியர்களைத் தேர்ந்தெடுக்கும் பரீக்ஷையில் ஹிந்தியை ஒரு கட்டாயப் பாடமாக வைப்பது பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்தது. ஆனாலும் இப்பொழுதைக்குத் தேவையில்லை என்றும், இலாகாப் பரீக்ஷைகளில் அதற்கேற்பாடு செய்து கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பெற்றது".

அரசாங்கம் பொதுப் பணத்தைப் பெரிய அளவில் செலவழித்து ஆட்சி நேரத்தையும் செலவழித்து இப்பொழுதிருக்கின்ற சர்க்கார் ஊழியர்களுக்குப் புது மொழிப் பயிற்சி தருவதானால் அதே அரசாங்கம் புதிதாகத் தன்னிடம் ஊழியம் செய்ய வருகின்றவர்களுக்குத் தகுந்த அளவு முன்னறிவிப்புச் செய்து அவர்கள் செய்யப்போகின்ற வேலைக்கு ஹிந்தி அறிவு தேவையாதலினால் வேண்டுமான அளவு ஹிந்தி அறிவுடன்தான் அந்த வேலைக்கு வரவேண்டும் என்று கேட்பதில் தவறு ஒன்றுமில்லை. அல்லாவிடில் மறுபடியும் சர்க்கார் ஊழியர்களுக்குத் திருப்பிப் பயிற்சி அளிக்கும் தொல்லை பெரிதாக ஆகிவிடும். இப்பொழுது இருக்கின்றவர்களுக்குப் பயிற்சி அளித்துக்கொண்டிருக்கும் அந்தநேரத்தில் புதிதாக ஊழியத்திற்கு வருகின்றவர்களும் இம் மொழிப் பயிற்சி இல்லாதவர்களாக இருந்தால் ஊழியத்திற்கு வந்தபிறகு பயிற்சி அளிக்கும் வேலை நடந்துகொண்டே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். வேண்டுமான அளவு முன்னமே அறிவிப்புச் செய்துவிட்டுப் புதிதாக ஊழியத்திற்கு வருகின்றவர்கள் இந்த அளவு தகுதி பெற்றிருக்கவேண்டும் என்று சொல்லி உத்தியோகத்திற்குத் தேர்ந்தெடுக்கும் காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற மொழியறிவின் தரத்தையும், குறைந்ததாக ஆக்கி, குறைப் பகுதியை உத்தியோகத்திற்கு வந்த பிறகு நிறைவு செய்து கொள்ளலாம் என்றும் சொல்வதானால் அத்திட்டத்தில் யார் எவ்விதமான குறை சொல்வார்கள் என்பது எங்களுக்கு விளங்கவில்லை. இந்தத் தேவைகளை பூர்த்தி செய்துவிட்டால் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் பொதுப் பணி ஊழியத்தில் புகுவதற்கு உள்ள உரிமையும், தேவையும் பாதுகாக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம்.

13. நடுத்தர வயதைத் தாண்டியவர்கள் புதிய ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது என்பது மிகவும் கடினமான செயல் என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. நாற்பத்தைந்து வயதை இப்பொழுது அடைந்தவர்கள் ஏறத்தாழ 1965-ஐ அடுத்து ஓய்வு பெற வேண்டியவர்களாதலால் அவர்கள் மேற்கொண்டிருக்கிற பதவிகளில் ஓரளவு மொழி வன்மை பெற்றுக் கடமையைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துவது சற்றுக் கடினமானதாகும். ஏனென்றால் அவர்கள் மூத்த நிலை காரணமாக மிகவும் பொறுப்புள்ள பதவிகளை வகித்துக்கொண்டிருப்பார்கள். ஆதலினால் இதற்கேற்ற காலத்தைக் கடமைகளினிடையே பெறுவது கடினமாகும். இத்தகையவர்களைக் கட்டாயப்படுத்தாமல் அவர்களுடைய காரியங்களை ஆங்கிலத்திலேயே செய்யுமாறு அனுமதித்துவிட்டு அவர்கள் அலுவலகங்களில் மற்றையோர் எழுதுகின்ற குறிப்புக்களையும் ஹிந்தி மொழியில் வருகின்ற கடிதங்களையும் படித்து, "அறிந்து கொள்ளும்" சக்தியைப் பெற்றால் போதுமானது என்று சொல்லிவிடலாம். இந்த அளவை ஒருவா

பெறுவதற்கு ஏதாவது பரீக்ஷைகள் வைக்கவேண்டுமானால் அதனையும் வைக்கலாம். இப்படிப்பட்ட ஊழியர்கள் புது மொழியில் அதிகப்படியான அறிவைப் பெறுவதிலிருந்து விடுதலை அளிக்கப்பட்டாலும், ஏனையோர் ஹிந்தி மொழியில் ஆட்சிக் காரியங்களைச் செய்வதற்கு இவர்கள் ஒரு "பாரமாக" இருக்கக்கூடாது. அதற்காகவே "புரிந்துகொள்ளும் அறிவை" அவர்கள் பெறவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறோம். ஏனென்றால் மற்றையோர் முயற்சித்துப் பெற்ற ஹிந்தி அறிவினால் செய்யும் வேலையை இவர்கள் தடைப்படுத்தக்கூடாது.

சென்ற பதினோராவது பாராவில் மாற்றம் நடைபெறும் இடைக் காலத்தில் யூனியன் விவகாரங்களில் எப்படி ஆங்கிலமும், ஹிந்தியும் கலந்து காணப்படும் என்று கூறினோம். யூனியன் அரசாங்க ஊழியர்கள் முழு முயற்சியையும் செய்தும் கூட யூனியன் மொழியில் தங்கள் ஆட்சி அலுவல்களை நடத்திக்கொள்ள முடியாதவர்களாக இருப்பின் 1965-க்குப் பிறகு கூட இத்தகைய நிலைமைதான் நீடிக்கும். அத்தகையவர்களைப் பரிவோடு கவனித்து 1965-க்குப் பிறகுகூட ஒரு குறிப்பிட்ட கால வரையறையைத் தந்து அதுவரையிலும் யூனியன் காரியங்களில் ஆங்கிலத்தை அவர்கள் பயன் படுத்தலாம் என்று இடந்தரலாம். அப்படி இருந்தாலும் சென்ற பாராவில் குறிப்பிட்டது போல அவர்கள் குறைந்த பட்சம் "புரிந்து கொள்கின்ற அறிவையாவது" பெற்றிருக்கவேண்டும். ஏனென்றால் மற்றையோர்கள் புதிய மொழியில் செய்கின்ற காரியங்களுக்கு இவர்கள் தடையாக இருக்கக்கூடாது.

14. சுருக்கெழுத்தாளர்களைப் பொறுத்தமட்டில் ஒரு திட்டத்தைத் தயாரித்துப் புதிய மொழியில் பயிற்சி பெறுவதற்குரிய விடுமுறையையும் கொடுத்து அதற்குரிய பயிற்சியையும் அவர்களுக்கு அளிக்கலாம். ஒரு ராஜ்யத்தில் ஆங்கிலச் சுருக்கெழுத்து தெரிந்தவர்கள் தகுந்த அளவு ஹிந்தி மொழியில் பயிற்சி பெற்றிருந்தால் மிகவிரைவில் ஹிந்திச் சுருக்கெழுத்தையும் கற்றுக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். நடைமுறைக்கு ஏற்ப இப்பொழுது மத்திய அரசாங்கத்தில் ஊழியம் செய்யும் சுருக்கெழுத்தாளர்களையே இப்புது மொழியிலும் சுருக்கெழுத்தாளர்களாகச் செய்யலாம். அவர்கள் ஓய்வு பெறுகின்றவரையிலேயோ அல்லது அலை வரையும் நீக்கி விடுகின்ற வரையிலேயோ இப்புது மொழியைப் புகுத்த முடியாது என்று நினைப்பது பொருத்தமாக இல்லை. புது மொழியை மாற்றி அமைக்கும் பொழுது உயர்தர அதிகாரிகளைப் பொறுத்த மட்டில் சுருக்கெழுத்து வசதி இல்லையானால் அது ஒரு பெரும் குறையாகவே இருக்கும். இதற்கு வேண்டுமான அளவு நீண்ட விடுமுறை கொடுத்து ஹிந்தி மொழியைக் கற்றுக்கொண்டு பிறகு அதிலே சுருக்கெழுத்தையும் கற்றுக்கொள்வதற்குரிய வசதிகளை இப்போதுள்ளவர்களுக்குச் செய்து கொடுப்பதே சிறந்த திட்டம் என்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். இதே கருத்துக்கள் தட்டெழுத்தாளர்களுக்கும் உரியனவாகும்.

15. இந்திய அரசாங்கத்தின் வெளியீடுகள் எந்த மொழியில் இருத்தல் வேண்டும்? சட்ட முறை வெளியீடுகள் யூனியன் ஆட்சி மொழியில்தான் இருத்தல் வேண்டும். அதாவது இப்பொழுதைக்கு ஆங்கிலத்திலும், பின்னர் ஹிந்தியிலும் ஆகும். ஆனால் பொதுமக்களுக்குத் தேவையான செய்திகளை அறிவிக்கும் வெளியீடுகளைப் பொறுத்த மட்டில் ஒரு குறிப்பிட்ட வெளியீடு எந்தப் பகுதி மக்களுக்குப் பயன் படுகிறதோ அவர்களை வைத்து அது முடிவு செய்யப்பட வேண்டும். எல்லாப் பிராந்தியங்களில் உள்ள எல்லா மக்களும் மிகுதியான அளவு படிக்கப்பட வேண்டும் என்ற முறையில் வெளிவருகின்ற வெளியீடுகள் எந்தெந்தப் பிராந்தியத்திற்கு செய்யப்படுகின்றனவோ அந்தப் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட வேண்டும். வெளி நாட்டவர்களுக்காக வெளியிடப்படும் வெளியீடுகள் அதாவது யாத்திரிகர் இலக்கியம் போன்றவை ஆங்கிலம் அல்லது பிற வெளி நாட்டு மொழிகளில் வெளியிடப்பட வேண்டும். பெரும் பிராந்திய ரயில்வே அட்டவணையும் அகில இந்திய ரயில்வே அட்டவணையும் அந்த வெளியீடுகளைங்

பயனபடுத்துபவர்களின் தேவைக்கு ஏற்ப அந்தந்த மொழியில் வெளியிடப்பட வேண்டும். இது எவ்வாறுயினும் அந்த வெளியீடுகளில் பயன்படுத்தப்படும் எண்கள், வெளியீடுகள் ஹிந்தியிலோ அல்லது வேறு மொழிகளிலோ எதில் இருந்தாலும் இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தையே பயன்படுத்த வேண்டும்.

இந்திய அரசாங்கம் வெளியீடுகளைச் செய்யும்பொழுது அந்த வெளியீடுகள் அகில இந்திய நிலைமையில் பலராலும் படிக்கப்படவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டால் ஆங்கிலத்தோடு கூட ஹிந்தியிலும் அதனை வெளியிடவேண்டும். ஆங்கிலம் தெரியாத ஒரு பிராந்தியத்திலுள்ள மக்களுக்குத் அது தேவை என்று பட்டால், அந்த மக்கள் ஹிந்தி அறியாதவர்களாகவும் இருந்தால் அப்பொழுது அந்தப் பிராந்திய மொழியில் அது வெளியிடப்படவேண்டும். குறிப்பிட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட வெளியீட்டைப் படிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் அக்குறிப்பிட்டவர்கள் பேசும் மொழியிலேயே அதனை வழங்கவேண்டும் என்று சொல்வதைத் தவிர வேறு விரிவாக ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

இந்த வெளியீடுகளை ஹிந்தியிலும் வெளியிடவேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டால் நிறைந்த அளவில் மொழி பெயர்ப்பு முயற்சியை மேற்கொள்ள வேண்டிய கடமை அரசாங்க அலுவலகங்களுக்கு ஏற்படும். இப்படிப்பட்ட மொழி பெயர்ப்புகள் மக்களுக்குப் புரிகின்ற எளிய ஹிந்தியில் இருந்தால் ஒழிய அதனை மொழி பெயர்ப்பதின் பயன் ஏற்படாது என்பதையும் சொல்லவேண்டும்.

16. எங்கள் நிர்மாணக் கோரிக்கைகளின் படி நாங்கள் "யூனியன் ஆட்சிக் காரியங்களில் பலவற்றிலோ அன்றி எல்லாவற்றிலுமோ எவ்வாறு ஆங்கிலத்தின் உபயோகத்தைக் குறைப்பது" என்பது பற்றிச் சிபார்சு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சிபார்சை யூனியன் ஆட்சிக் காரியங்களில் எந்த ஒரு பகுதிக்கும் இப்பொழுது செய்வதால் லாபம் ஒன்றும் இல்லை என்பதைக் கருதி யாதொரு சிபார்சையும் செய்யவில்லை.

17. எங்களுடைய நிர்மாணக் கோரிக்கையின்படி "இக்கழகம் ஜனாதிபதி அவர்களுக்கு சிபார்சு செய்ய வேண்டிய காரியங்களுள் : இரண்டு

(அ) யூனியன் ஆட்சிக் காரியங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயனபடுத்துவது.

* * * * *

(ஊ) யூனியன் மொழியாகவும், யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையேயும், ராஜ்யங்களிடையேயும் கருத்துப் பரிமாறிக் கொள்ளப் படிப்படியாக ஆங்கிலத்தை நீக்கி விட்டு ஹிந்தியைப் புகுத்துவதற்குரிய ஒரு கால அட்டவணை தயாரித்தல்", என்பவைகளாகும்.

இதன்படி ஜனாதிபதியவர்களுக்கு நாங்கள் யூனியன் ஆட்சி மொழியைப் பொறுத்தமட்டில் "ஒரு கால அட்டவணை தயாரித்துக் தரவேண்டும்".

சென்ற ஏழாவது பாராவில் எப்படி யூனியன் அரசாங்கமும், அல்லது எந்த ஒரு அரசாங்கமும் "சேதனப் பொருளாக" உள்ளது என்பதை விளக்கியுள்ளோம். மொழி மாற்றம் செய்வது என்பது ஒரு அரசாங்கத்தின் தனிப்பட்ட அமைச்சுக்கள் தமக்கு வேண்டியவற்றை வகுத்துக் கொண்டு அதற்கேற்ற முறையில் நிகழ்ச்சி தயாரிப்பதன்று. இந்த மாற்ற இடைக்காலம் அமைதியான முறையில் இருக்கவேண்டுமானால் எல்லா அமைச்சுக்களும் ஒன்றுகூடி ஒன்றுகலந்த ஒரு கூட்டு நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கவேண்டும். ஒன்றுஞ் செய்யாமல் இருந்துவிட காரணம் உண்டு ஆதலால், ஏதாவது இதில் ஒரு முயற்சி நடைபெற வேண்டுமானால் அது கூட்டு முயற்சியாகவே இருத்தல் வேண்டும். நாங்கள் முன்னர்க்

கூறியபடி பல்வேறு அமைச்சுக்களின் இடையே ஓயாமல் குறிப்புக்களும், வரைவுகளும், கடிதங்களும் பல்வேறு நிலைகளிலும் சென்று வந்து கொண்டிருப்பதால் இதில் மொழி மாற்றம் செய்யப் புகும் பொழுது எல்லா அமைச்சுக்களும் ஒன்றுகூடிச் செய்ய வேண்டுமே தவிர ஒவ்வொரு அமைச்சும் தான் தனிப்பட்ட பகுதி என்று நினைத்துக் கொண்டும், தான் செய்கின்ற மொழி மாற்றம் பிறரைப பாதிக்காது என்று நினைத்தும் ஒன்றைச் செய்வது பொருத்தமுடையதன்று. எனவே கால அட்டவணை தயாரிக்கும் பொழுது செய்யப்படுகின்ற வேலையின் இயல்பை நோக்கியும், அதனைச் செய்கின்றவர்களின் தரத்தை நோக்கியும் அட்டவணை தயாரிக்கப் படவேண்டும். பல நிலைகளையும் நிர்ணயித்துக் காலவரையறை செய்யும் பொழுது, பல்வேறு அமைச்சுக்களும் ஒன்று கலந்து தங்கள் தொல்லைகளை எடுத்துக் கூறி, எப்படி இந்தக் கால அட்டவணை குறிப்பிட்ட வேலையை செய்வதற்குச் சாதகம் அல்லது பாதகம் செய்யும் என்பதைத் தெரிவித்த பிறகுதான் ஒரு முடிவுக்கு வரமுடியும்.

இந்தப் பகுதியின் முற்பிரிவில் மொழி மாற்றம் செய்வதற்குத் தேவை யான முன்னேற்பாடுகள் யாவை என்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். மேலும் எப்படி இந்த முன்னேற்பாடுகளும், படிப்படியாக ஹிந்தி மொழியின் நுழைவும் அரசாங்க அலுவல்களில் ஒரே நேரத்தில் செய்யப்படவேண்டும் என்பதையும் குறிப்பிட்டுள்ளோம். ஊழியர்கள் பயிற்சி பற்றியும் அதனை எங்ஙனம் செய்ய வேண்டும் என்பது பற்றியும், அகில இந்திய இலாகாக் கள் சில, எப்படி நிலையான இரட்டை மொழி அமைப்புக்களை அமைக்க வேண்டி நேரிடும் என்றும் ஆராய்ந்துள்ளோம். மேலும் ஊழியர் நிலைமை பற்றியும் அவர்களைப் பொறுக்கி எடுக்கும் கொள்கை பற்றியும் இந்த மொழி மாற்றம் எப்படி அதனைப் பாதிக்கும் என்றும் ஆராய்ந்துள்ளோம். பல்வேறு வகையான வேலைகளுக்கு விரிவான முறையிலும், குறிப்பிட்ட முறையிலும், கால அட்டவணை தயாரிக்க வேண்டுமானால் சில அடிப்படை யான விஷயங்கள் பற்றி எங்களுக்கு இதுவரையில் கிடைக்காத விரிவான சமாசாரங்கள் தேவைப்படுவதோடு ஒவ்வொரு அமைச்சின் குறிப்பிட்ட தொல்லை என்னென்ன என்பது பற்றியும் அறியக்கூடுமேயானால் சிபார்சு செய்யமுடியும். சட்ட அமைச்சு, குறைந்த அளவு தேவையான சட்ட இலக்கியம் எவ்வளவு என்று இதுவரையில் கணக்கிடவில்லை என்று தெரி வித்துவிட்டது. மத்திய ராஜ்ய அரசாங்கங்களுக்குத் தேவையான இந்தச் சட்ட இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட்டு அவை ஒப்புக்கொள்ளப்பட்ட சட்ட ரூபமாகவும், இருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதற்கு எவ் வளவு காலம் தேவை என்பது தெரியவில்லை. நாங்கள் மேலும் விசாரித்த பொழுது ஹிந்தியில் இதுவரையில் மொழி பெயர்த்துள்ள நூல்கள் "பொது மக்கள் மொழி பெயர்ப்பாக" உள்ளனவே அன்றி, அவை சட்ட பூர்வமான மொழி பெயர்ப்புக்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட முடியா தென்றும் சொல்லப்பட்டது. சட்ட அகராதி ஒன்றைத் தொகுப்பது பற்றிச் சட்ட அமைச்சைக் கலந்த பொழுது, இதற்கு என்னென்ன தேவை? இதனை யார் செய்து முடிக்கக் கூடியவர்கள்? என்பது பற்றித் தாங்கள் ஒன்றும் சிந்திக்கவில்லை என்று அந்த அமைச்சு விடை கூறிவிட்டது. ஒழுங்கு முறைச் சட்டங்கள், வழக்க முறைகள் ஆகியவற்றை ஹிந்தியில் மொழி பெயர்ப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்றும், எந்த அளவு காலமும் அதற்காக ஒதுக்கப்பட வில்லை என்றும், தெரிவிக்கப் பட்டதோடு இவற்றில் எத்தனை அளவு மொழி பெயர்க்கப்படவேண்டும் என்று கேட்டதற்கு அது அந்தந்த அமைச்சின் தேவையைப் பொறுத்தது என்றும் விடை கூறப்பட்டது. அதற்குரிய கலைச் சொற்களை எல்லாம் கல்வி அமைச்சு தயாரித்துத் தந்த பிறகு அது பற்றி ஆராயப்படும் என்றும் சொல்லப்பட்டது. பல்வேறு வகுப்புக்களில் உள்ள அரசாங்க ஊழியர்களுள் ஹிந்தி மொழி பயிற்சி பெறுபவர்கள் எத்தனை பேர் என்பதும், டில்லியில் உள்ள அரசாங்க ஊழியர்களைத் தவிர, மற்றவர் களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவற்றை யெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது இதைவிட விரிவாகக் குறிப்பிட்ட முறையில் சிபார்சு களைச் செய்து "கால அட்டவணை தயாரிக்க முடியவில்லை." என்றாலும்

இனி வரும் பகுதிகளில் முக்கியமான பிரச்னைகளை மனத்தில் கொண்டு அவற்றை எங்ஙனம் சந்திக்கவேண்டும் என்ற வழிகளையும் ஒருவாறு சொல்லியுள்ளோம். அந்தந்த அமைச்சுக்களை விட்டு அந்தந்தப் பிரச்னைகளை ஆராய்ச்சி செய்த பிறகு அவர்களுக்கு எதிர்ப்படுகின்ற தனிப்பட்ட தொல்லைகளையும், ஏதாவது இருந்தால் எடுத்துக் கூறினால் பின்னர் ஒரு குறிப்பிட்ட கால அட்டவணையைத் தயார் செய்ய முடியும். எங்களுக்கு இந்தத் தகவல்கள் கிடைக்காமையினால் இப்பொழுது யூனியன் அரசாங்கமே இவற்றை யெல்லாம் மனத்துட்கொண்டு ஒரு கால அட்டவணை தயாரிக்க வேண்டும். நாங்கள் எதிர்பார்க்கின்ற முறையில் அந்த வளர்ச்சி கீழ்க்கண்டவாறு இருக்கலாம் : எடுத்துக் கொண்ட முக்கியமான வேலையின் பல்வேறு தேவைகளையும் ஆராய்ந்து ஒரு பொதுவான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் : அவையாவன, கலைச் சொற்களை உண்டாக்குதல், புதிய மொழியில் சட்ட நூல்களையும், நடைமுறை நூல்களையும் எழுதுதல், ஊழியர்களைத் தயாரித்தல், சுருக்கெழுத்துக்களைத் தயாரித்தல், தட்டெழுத்து யந்திரத்தையும், பிரதி செய்யும் வசதிகளையும் செய்தல் ஆகியவைகளாம். இந்த நடைமுறையில் ஒவ்வொரு துறையிலும் மொழி மாற்றம் செய்யும் பொழுது அவற்றை இரண்டாவதாகக் கொண்டு யூனியன் விஷயங்களில் முக்கியமான வேலைக்குத் தடையில்லாமல் கொண்டு செலுத்த வேண்டும். உண்மையில் கால அட்டவணை ஒரு முறை தயாரித்துவிட்டால், அதை ஓயாது கவனத்தில் கொண்டு நடைமுறை அனுபவத்தை ஒட்டி அதனை மாற்றி அமைத்துக் கொண்டு ஊழியர்களின் பயிற்சியையும், ஆட்சித் துறை அல்லாத மற்றத் துறைகளில் ஏற்படுகின்ற வளர்ச்சியையும் மனத்துட்கொண்டு அட்டவணையை அமைத்துக் கொள்ளவேண்டும். ஒரு குறிப்பிட்ட அதிகாரியின் இடைவிடாத கவனத்தை, இது பெற வேண்டும் என்பதற்காகப் பதினைலாவது பகுதியில் இது சம்பந்தமான எல்லா வேலைகளையும் கொண்டு செலுத்தும் ஒரு குறிப்பிட்ட அதிகாரியினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்துள்ளோம். அந்த அதிகாரி எப்பொழுதும் இதனைக் கண்காணித்துக் கொண்டு நிலைமையைக் கவனித்துவர வேண்டும்.

உண்மையைக் கூறுமிடத்து இந்தக் கழகம் மத்திய அரசாங்கத்தை அணுகி அரசியலமைப்பின் திட்டங்களை யூனியன் ஆட்சிக் காரியங்களில் நிறைவேற்றும் முறையில் என்ன நடைமுறைத் திட்டம் எடுத்துக் கொள்ளப் பெற்றது என்று விசாரித்தபொழுது எவ்விதமான விடையும் பெற முடியவில்லை. மற்றவற்றிற்குத் தனித்தனி அமைச்சுக்களினிடமிருந்து நாங்கள் பெற்ற விடையை வைத்துக் கொண்டே மேலே செல்லவேண்டியிருந்தது. மொழி மாற்றம் செய்ய வேண்டிய திட்டம், எல்லா அமைச்சுகளும் ஒன்று சேர்ந்து நடைபெற வேண்டியதாதலின், தனிப்பட்ட அமைச்சுக்களின் விடையிலிருந்து இதனைச் செய்தல் இயலாத காரியம்.

இதன் மறுதலையாகப் பல ராஜ்ய அரசாங்கங்கள் இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்தியுள்ளன என்றும், தங்களுடைய ஆட்சி மொழியையும், ஆட்சிக் காரியங்களையும் இந்திய மொழியின் மூலம் நடத்த வேண்டும் என்று முடிவு செய்து அதற்குரிய நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துள்ளன என்பதையும், சில ராஜ்யங்கள் இதில் பெரும் பங்கு வெற்றியும் அடைந்துள்ளன என்பதையும் நாங்கள் காண நேர்ந்தது.

ராஜ்யங்களைப் பொறுத்தமட்டில் ஆட்சியை அந்தப் பிராந்திய மொழிக்கு மாற்றுவது மிகவும் எளிதானது என்பதை நாங்கள் உணராமலில்லை. ஏனென்றால் பொதுவாகப் பேசுமிடத்து ராஜ்ய அரசாங்க அமைப்பிலுள்ள ஊழியர்கள் அந்த ராஜயங்களிலிருந்தே வருகின்றார்கள் ஆதலால் மொழி மாற்றம் செய்யும் பொழுது அது அந்த ஊழியர்கள் அறிந்த மொழியாகவே உள்ளது. ஆனால் மத்திய அரசாங்கம் நாடு முழுவதிலும் தொழிற்படுவதினாலும் ராஜ்யங்களின் கூட்டு அணி ஆதலாலும் பெரிய அளவில் மொழிப் பிரச்னையைப் பெற்றுள்ளது. அதற்கேற்ப அதன் அலுவலாளர்களும், பல மொழி பேசும் கூட்டத்தார்களாக உள்ளார்கள்

என்பதும் அறியப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நடைமுறையில் மேற்கொள்ள வேண்டிய காரியத்தின் உட்கோள் எது என்பது ஒன்று. மத்திய அரசாங்கத்தை பொறுத்த வரை இப்படிப்பட்ட ஒரு காரியத்தை நடைமுறையில் மேற்கொள்ள வேண்டுமா என்பது மற்றொன்று. இவ்விரண்டிற்கும் உள்ள வேறு பாட்டை நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். இந்த மொழி மாற்றம் செய்வதில் மத்திய அரசாங்கத்தை பொறுத்த வரை மெதுவாகப் போவதற்குரிய தகுந்த காரணங்கள் பல இருக்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட நடைமுறைத் திட்டத்தை வகுத்துக் கொள்ளாமல் விட்டுவிடுவதற்கு இவை தகுந்த காரணங்களாகத் தெரியவில்லை. பிரத்தியேகமான காரணங்கள் இருக்குமானால் அவற்றையெல்லாம் கவனித்து கொண்டு அதற்கேற்ற முறையில் நடைமுறைத் திட்டத்தை வகுக்கலாம். அரசியலமைப்பில் கண்டபடி இறுதியாக மொழிமாற்றம் செய்வதற்குக் குறிப்பிட்ட ஒரு நடைமுறைத் திட்டத்தை இதுவரையில் வகுக்காமல் இருந்ததற்கு என்ன காரணங்கள் இருந்தாலும் அத்தகைய ஒரு திட்டத்தை குறிப்பிட்ட கால அட்டவணையோடு (இந்த அட்டவணை மாறுதலுக் குரியதாகவும் இருக்கலாம்) கால தாமதம் இன்றி இப்பொழுதாவது வகுத்து அதனை ஓயாமல் கவனித்து ஊக்கத்தோடு பின்பற்ற முயல வேண்டும்.

2. தணிக்கை-கணக்கு இலாகாக்களில் மொழிப் பிரச்னை.

18. அரசாங்கத் தணிக்கைத் தலைவருடைய அமைப்பு தனித்தன்மை வாய்ந்தது ஆதலால் அது பற்றிக் கொஞ்சம் தனியே சிந்திக்க வேண்டும். அரசியல் அமைப்பில் யூனியன் அரசாங்கம் சட்டம் செய்ய உரிமை பெற்ற பகுதிகள் என்ற பட்டியலில், "யூனியன், ராஜ்யக் கணக்குகளைத் தணிக்கை செய்தல்" என்ற பகுதி உள்ளது. இந்தியாவின் அரசாங்கத் தணிக்கைத் தலைவர் ஜனாதிபதியால் நேரிடையாக நியமனம் செய்யப் பெறுகிறார். இவருடைய உத்தியோகம் அரசாங்கத்தாரின் தலையீட்டைப் பெற முடியாதபடி மிக உயர்நீதிமன்ற நடுவணர்களைப் போல இருக்குமாறு அரசியல் அமைப்புப் பாதுகாவல் செய்கிறது. அரசியல் அமைப்பு 149-வது விதி கீழ்வருமாறு சொல்கிறது: இந்திய அரசாங்கத்தின் தணிக்கைத் தலைவர், யூனியன் கணக்குகளையும் ராஜ்யங்களின் கணக்குகளையும் மற்றைய எந்த அதிகாரிகளின் கணக்கையும் பாராளுமன்றம் சட்டம் செய்கின்ற முறையில் தணிக்கை செய்யும் அதிகாரத்தைப் பெறுகிறார். இந்த அரசியல் அமைப்பு செயற்படுவதற்கு முன்னர் இந்திய டொமினியன் கணக்குகளையும் மாகாணக் கணக்குகளையும் ஆடிட்டர் ஜனரல் எவ்வாறு தணிக்கை செய்து வந்தாரோ, என்ன அதிகாரங்களை அவர் பெற்றிருந்தாரோ அவை அனைத்தையும் பாராளுமன்றம் வேறு வகையான சட்டம் செய்கின்ற வரையில், (அத்தகைய சட்டம் இன்னும் செய்யப்படவில்லை என்று அறிகின்றோம்) "இந்திய அரசாங்கத்தின் தணிக்கைத் தலைவர் செய்துவருவார்." இந்திய அரசாங்கத்தின் தணிக்கைத் தலைவர் யூனியன் அரசாங்கத்தின் கணக்குகளைத் தணிக்கை செய்து தம்முடைய அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பார். அதனைப் பாராளு மன்றத்துக்குக் கிடைக்குமாறு ஜனாதிபதி செய்வார். ராஜ்யங்களின் கணக்குகளைப் பொறுத்தமட்டில் அவற்றைப் பரிசீலனை செய்து அந்த ராஜ்யத்தில் கவர்னரிடமோ அல்லது ராஜப் பிரமுகரிடமோ சமர்ப்பிப்பார். அவர்கள் அவற்றைச் சட்டசபைகளுக்கு அனுப்புவார்கள். நாட்டிலுள்ள எல்லாத் தணிக்கை அலுவலகங்களின் மேலும் இந்தியத் தணிக்கைத் தலைவர் தம்முடைய அதிகாரத்தை செலுத்துவார். ராஜ்யங்களின் மண்டலக் கணக்கர்கள் அலுவலகமும் மேலே சொல்லிய தணிக்கை அலுவலகங்களில் சேர்ந்தனவே. இந்த மண்டலக் கணக்கர்கள் ராஜ்யங்களின் தணிக்கை அதிகாரிகளாக இருந்து ராஜ்யக் கணக்குகளைத் தணிக்கை செய்யவும் கணக்குகளைத் தயார் செய்யவும் செய்கிறார்கள். இந்த மண்டலக் கணக்கர்கள், மத்திய வருமானத் துறை மண்டலக் கணக்கர்களுக்குப் பதிலாக இங்கேயிருந்து இவர்களுடைய எல்லையில் நடைபெறும் யூனியன் அரசாங்கம் சம்பந்தப்பட்ட கணக்குகளையும் பரிசோதிக்கின்றார்கள். இப்பொழுது எல்லா வகையான கணக்குகளும் மண்டல கணக்கர்களுக்கு ஆங்கில மொழியிலேயே வருகின்றன. இன்னும் சொல்லப் போனால் உதவிக்

கருவூலங்களிலிருந்து, மேலே எல்லாவற்றிற்கும் எழுதப்படுகின்ற கணக்குகள் எல்லா ராஜ்யங்களிலும் ஆங்கில மொழியிலேயே உள்ளன. இந்த ராஜ்யங்களில் பிராந்திய மொழிகள் ஆட்சித் துறையில் புகுத்தப்பட்டால் அப்பொழுது அகில இந்தியக் கணக்கு, தணிக்கை இலாகாவில் ஏதாவது மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராயவேண்டும்.

இந்தியக்கணக்கு, தணிக்கை இலாகா மத்திய அமைப்பாகச் செய்யப் பெற்று இந்திய அரசாங்கத்தின் தணிக்கைத் தலைவரின் கீழ் வேலை செய்கின்றது. என்றாலும் யூனியன் அரசாங்கத்திற்கும் பல்வேறு ராஜ்யங்களுக்கும் இந்த இலாகாவே தணிக்கை வேலையைச் செய்கிறது. ஒவ்வொரு மண்டலக் கணக்கர் அலுவலகத்திலுள்ளும் சில பகுதிகள் மத்திய அரசாங்கத்தோடு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களையும் ராஜ்யங்களுக்குள் நடைபெறும் கொடுக்கல் வாங்கல்களையும் கவனித்து வருகிறது. என்றாலும் பெரும்பாலான வேலை அந்த ராஜ்யங் அரசாங்கத்தின் கொடுக்கல் வாங்கல் பற்றிய கணக்கு தயாரிப்பதேயாகும். எஞ்சிய வேலை இந்தக் கணக்குகளைத் தணிக்கை செய்வதாகும்.

19. ஒவ்வொரு ராஜ்யமும் அதற்குரிய பிராந்திய மொழிகளை ஆட்சி மொழியாக மாற்றிக்கொண்ட பிறகு எல்லா ராஜ்யங்களைப் பொறுத்தமட்டில் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படும் கணக் இப்பொழுது இருப்பது போல ஒரே மொழியில் இருக்க வேண்டுமா என்பது ஆராய்ச்சிக் குரியது. அங்ஙனம் ஒரு முறையைக் கைக்கொள்ளக் கூடுமேயானால் இந்திய அரசாங்கத் தணிக்கை தலைவரின் அமைப்பில் எவ்விதமான குழப்பமும் நேராமல் பார்த்துக் கொள்ளலாம். இது நடைபெறுவதானால் ஆங்கிலம் உள்ள இடத்தில் யூனியன் கணக்குகள் எழுதப்படுகின்ற ஹிந்தி மொழியே வைக்கப்படும். (இந்த யூனியன் கணக்கும் பல்வேறு மண்டல கணக்கர்களால் ஓரளவுக்குக் கொண்டு செலுத்தப்படும்.)

இங்ஙனம் செய்வதற்குச் சில இடையூறுகள் இருக்குமென்று சொல்லப்படுகிறது. கணக்கு வைத்தல் என்பது ஆட்சி செய்வதன் "விளைவே" தவிர வேறு இல்லை. பல்வேறு ஆட்சித் துறை அதிகாரிகளும் தங்கள் கடமையை முடித்ததற்குப் பயனாக அமைவதே கணக்கு வைத்திருத்தலாகும். கிளைக் கருவூலங்கள் நிலையிலும் மாவட்டக் கருவூலங்கள் நிலையிலும், கணக்குகள் சேகரித்து அவற்றைத் தயாரிக்கும் தொழில் ஏனைய அலுவல்களையும் செய்துகொண்டு இதனையும் செய்கின்ற சில அதிகாரிகளின் கையில் உள்ளது. ராஜ்யங்களுக்குள் ஆங்கிலத்தை மாற்றபோகும் மொழி அனேகமாக அந்தப் பிராந்திய மொழியாகவும் இருக்கலாம். அரசியல் அமைப்பு, ராஜ்யங்கள் விரும்பினால் ராஜ்ய ஆட்சிமொழிக்குப் பதிலாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்தலாம் என்ற அதிகாரம் அளித்தாலும் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஆட்சித் துறையில் ஹிந்தி மொழியை பயன்படுத்துவார்களா என்பதைச் சொல்வதற்கில்லை. ராஜ்யங்களின் இடையேயும் ராஜ்யங்களுக்கும் யூனியனுக்கும் இடையேயும் கருத்துப் பரிமாறிக்கொள்ள மட்டுமே ஹிந்தி மொழி பயன்படுத்தப்படும். இம்முறையில்தான் இது நடைபெறும் என்ற முடிவிலேயே மேற்கொண்டு என்ன திட்டங்கள் வகுக்க வேண்டும் என்பது பற்றி ஆராயவேண்டும். மண்டலக் கணக்கர்களின் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள கணக்குகள் எல்லா நிலைகளிலும் ஹிந்தி மொழியில் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டால் இந்த அலுவலகங்களில் உள்ளவர்களிடம் தேவையான அளவு ஹிந்தி அறிவை எதிர்பார்க்கமுடியாது.

கணக்கு வைத்திருத்தல் என்றால் வெறும் எண்களை மட்டும் குறிப்பதில்லை என்றும் தலைப்புக்களை எழுதுதல், விளக்கம் எழுதுதல், மேற்கோள் எழுதுதல், இந்தக் கணக்குகள் பற்றிய விவரங்கள் கடிதம் மூலம் எழுதுதல் ஆகிய எழுத்துவேலைக்கும் அங்கே இடமிருக்கிறது. அரசியல் அமைப்பு யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தையும் தேவ நாகரியில் எழுதப்பெற்ற ஹிந்தி மொழியையும் மேற்கொள்ள

வேண்டும் என்று ஏற்றுக்கொண்டுள்ளது. பன்னாட்டு எண்களைப் பொறுத்த மட்டில் எல்லா ராஜ்யங்களிலுள்ள மக்களுக்கும் அது நன்கு தெரிந்திருக்கும் என்றாலும் கணக்கு வைத்திருப்பது என்பது வெறும் எண்களை தெரிந்திருந்தால் மட்டும் போதாது.

பிரச்னை இந்த அளவில் நின்றால், எல்லா ராஜ்யங்களிலும் உள்ள கணக்குகளை இந்திய அரசாங்கத் தணிக்கைத் தலைவருக்கு சமர்ப்பிக்கும் பொழுது யூனியன் மொழியில் அதாவது ஹிந்தியில் சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்வதில் அதிக தொல்லை ஒன்றும் இராது. இப்பொழுது இருப்பதைப் போலவே ராஜ்யங்களுக்கும் யூனியனுக்கும் இடையே இம்மொழியில் கணக்கு வைத்துகொண்டால் பொருள் சுருக்கம் முதலிய பல நன்மைகள் ஏற்படும். இவ்வாறு செய்வதால் தலைமைத் தணிக்கையாளருக்கு அனுப்பப்படுகின்ற கணக்குகளையும் அதனோடு சம்பந்தப்பட்ட கடிதப் போக்கு வரத்துகளையும் மாவட்டக் கருவூல நிலையிருந்து தொடங்கி ஹிந்தி மொழியிலேயே அனுப்ப ராஜ்யங்கள் ஏற்பாடு செய்யவேண்டும். இந்த அளவில் பிரச்னை முடிவதாயிருந்தால் தவிர்க்கமுடியாத இடையூறு ஒன்றும் இல்லை என்று கருதி ராஜ்யங்கள் இதனை மேற்கொள்ளுமாறு, நாட்டிலுள்ள தணிக்கைக் கணக்கு அமைப்பை இதற்கேற்றபடி மாற்றி அமைக்கலாம். இத்தகைய ஒரு முறை கைக்கொள்ளுவது போதாது என்பதைக் காட்டக் கூடிய வலுவான காரணங்கள் பல இருத்தலின் அவற்றையும் இங்கே சிந்திக்கவேண்டும்.

20. ராஜ்யங்களிலுள்ள மண்டலக் கணக்கர்கள் அகில இந்தியக் கணக்கு தணிக்கை இலாகாவின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் யூனியனிலும் ராஜ்யங்களிலும் கணக்குகளை சேகரிப்பதோடு கூட அவற்றைத் தணிக்கை செய்யும் அதிகாரிகளாகவும் உள்ளார்கள். இந்திய அரசாங்கத் தணிக்கைத் தலைவர் தனித்தனியாக ஒவ்வொரு ராஜ்யத்தின் கணக்கையும் யூனியன் கணக்கையும் தணிக்கை செய்பவர் ஆதலால் ராஜ்யங்களிலுள்ள மண்டல கணக்கர்கள் இந்திய அரசாங்கத் தணிக்கைத் தலைவரின் பிரதிநிதிகளாக இருந்து ராஜ்யங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்கிறார். அரசியல் அமைப்பின் 151 (2) விதியின்படி இந்தியத் தணிக்கைத் தலைவரின் ராஜ்ய சம்பந்தமான கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு கவர்னரிடமோ ராஜப்பிரமுகரிடமோ ஒப்படைக்கப்படுகின்றன. அவர்கள் அவற்றை ராஜ்ய சட்டசபைகளுக்கு அனுப்புகிறார்கள். தணிக்கை செய்வதற்காக ராஜ்ய அதிகாரிகளுடன் மிக அதிகப்படியான கடிதப் போக்குவரத்தைச் செய்கிறார் மண்டலக் கணக்கர். மேலும் அந்த அலுவலகங்களிலுள்ள பயில்களைப் பார்வை இடவும் செயலாளர் அலுவலகத்திலுள்ள பயில்களையும் இலாகாத் தலைவர்களினுடைய பயில்களையும் அவர் பார்க்கவேண்டியுள்ளது. ராஜ்ய அரசாங்கங்கள் பிராந்திய மொழிகளை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டவுடன் செயலாளர் அலுவலகங்களின் குறிப்பு எழுதுதல் பிராந்திய மொழியிலேயே நடைபெறும். யூனியனுடனும் மற்ற ராஜ்யங்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய பகுதிகளில் மட்டும் ஹிந்தி மொழி பயன்படுத்தப்படும். அதன் குறிப்புக்கள் மட்டும் ஹிந்தி மொழியில் எழுதப்படும். தணிக்கை செய்பவர்கள் ரசீது முதலியவற்றை மண்டலக் கணக்கரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்பார்கள். தணிக்கை செய்பவர்களின் சௌகரியத்தை உத்தேசித்து, இந்த ரசீது முதலியவைகளும் செயலாளர் அலுவலகத்தில் போடப்படுகின்ற நிப்புக்களும், மற்றவையும் ஹிந்தி மொழியில் இருக்கவேண்டும் என்று கேட்பது நியாயமாகாது. தணிக்கை செய்பவர்கள் எந்த விதமான குறிப்புக்களை அல்லது கடிதங்களைப் பார்க்க வருவார்கள் என்று முன்னரே அறுதியிட்டுச் சொல்வது இயலாத காரியம். தணிக்கை செய்பவர்கள் மொத்தம் உள்ள கடிதப் போக்குவரத்திலும் பயில்களிலும் ஒரு சிறு பகுதியையே பார்க்கின்றார்கள் என்றாலும் எந்தப் பகுதியை அவர்கள் பார்க்கப் போகிறார்கள் என்று கூற முடியாது. தணிக்கை செய்பவர்கள் எந்த நிலையிலும் தேவைப்பட்டால் எந்தக் கடிதத்தையும் பார்க்க கூடிய வாய்ப்பு இருத்தல்வேண்டும். எனவே ராஜ்ய ஆட்சியில் எழுதப்படுகின்ற கடிதங்களை மண்டலக் கணக்காகள்

தணிக்கை செய்தவற்கு வசதியாக யூனியன்மொழியில் வைத்துக்கொள்வது என்பது இயலாத காரியம். எனவே ஒரு ராஜ்யம் அதனுடைய பிராந்திய மொழியை ஆட்சிமொழியாக மாற்றிக் கொண்டவுடன் இந்தியக் கணக்கு தணிக்கை இலாகாவில் உள்ள ஊழியர்கள் அந்த ராஜ்யத்தின் அலுவல்களைக் கவனிக்கவேண்டுமானுல் அந்த ராஜ்யத்தில் வழங்கும் மொழியில் நல்ல தேர்ச்சி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

சில ராஜ்யங்களில் நாட்டாண்மை நிதியைக் கூட மண்டல கணக்கரே தணிக்கை செய்கிருர். ராஜ்ய சர்க்கார்களில் கணக்கை வைத்துக்கொள்வதற்கும் குறிப்பு எழுதுவதற்கும் எந்த முறை மேற்கொள்ளப்படுகிறதோ அதே முறையை நாட்டாண்மை நிதிக் கணக்கு ஆகியவற்றிற்கும் ஏற்றுக்கொள்ளலாம்.

21. முன்னர் சிற்றரசர்களால் ஆளப்பட்ட பகுதிகள் பி, சி ராஜ்யங்களாக யூனியனில் சேர்ந்த பிறகு, அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட தணிக்கைச் சட்டங்கள் இந்த ராஜ்யங்களிலும் மேற்கொள்ளப்படலாயின. மேலும் "ராஜ்யக் கணக்கு, தணிக்கை" உரிமை யூனியனுக்கு வந்து இந்திய அரசாங்கத் தணிக்கைத் தலைவரைத் தணிக்கை அதிகாரியாகப் பெற்றுள்ளது. இவ்வாறு செய்தவுடன் இந்தியக் கணக்கு தணிக்கை இலாகா எல்லாக் காரியங்களையும் ஆங்கில மொழியில் நடத்திக்கொண்டிருந்ததாலும் புதிதாகச் சேர்ந்த சிற்றரசர்களின் நாடுகளில் கணக்குகள் பிராந்திய மொழிகளில் வைக்கப்பட்டிருந்தமையாலும் ஒரு தொல்லை உண்டாயிற்று. இந்த நிலையில் நடைமுறைக்கு ஏற்ற முறையில் அந்தந்த ராஜ்யங்கள் மண்டல கணக்கருக்குத் தம் கணக்கை ஒப்பிக்கும்பொழுது ஆங்கிலத்தில் ஒப்பிக்கவேண்டும் என்று கூறப்பட்டது. இந்த முறையில் இந்தப் புது ராஜ்யங்களில் சிலவற்றில் உயர்நீதி மன்றங்களில் பின்னேக்கிச் செல்லும் நிலையும் ஏற்பட்டது. ஏனென்றல் இந்த ராஜ்யங்களில் யூனியனில் சேர்வதற்கு முன்னர் உயர்நீதி மன்றங்களில் இந்திய மொழிகளே வழங்கப்பட்டன. ஆனல் யூனியனில் சேர்ந்த பிறகு ஆங்கிலத்தை மீட்டும் இவற்றுள் புகுத்த வேண்டியுள்ளது. அந்த நேரத்தில் அதைத் தவிர வேறு நல்ல வழி இல்லாமையால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தணிக்கை முழுவதும் ஒரே பொது ஸ்தாபனத்திஞல் நடத்தப்படவேண்டும் என்ற பெரிய காரணத்தை உத்தேசித்து இங்ஙனம் பின்னேக்கிச் செல்லும் ஒரு கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ராஜ்யங்களில் இந்திய மொழிகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் புதிய முறையில் இது பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாகக் கொள்ளும் கொள்கையை ஏற்கனவே புகுத்திவிட்டபடியால், இவ்விஷயங்களில் தொல்லை ஏற்பட்டுத் தங்கள் மொழிக் கொள்கைக்கு இது குறுக்கே நிற்பதால் இதனைக் கொஞ்சம் தளர்த்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார்கள். யூனியனிலுள்ள மற்ற ராஜ்யங்களிலும் இத்தகைய நிலைமை வலுப்பட்டவுடன் அதாவது, புதிய முறையில் ராஜ்யப் பிரிவினை ஏற்பட்டவுடன் இந்தப் பிரச்னைக்குப் பூர்த்தியான ஒரு முடிவைக் கண்டாகவேண்டும்.

22. "தணிக்கை" என்பது யூனியன் விஷயங்களில் ஒன்றுகச் சேர்த்து அரசியல் அமைப்புக் கூறினுலும் தணிக்கை இலாகா ஏனைய அமைச்சர்களோ அன்றி மற்ற அமைச்சர்களோ மத்திய அரசாங்கத்தில் ஒட்டியுள்ளது போல, இது ஒட்டி இருப்பதில்லை. மத்திய அரசாங்கத்தின் தணிக்கைத் தலைவர் சட்டமுறைப்படி ராஜ்ய யூனியன் அரசாங்கங்களுக்குத் தணிக்கைத் தலைவர்தான். ராஜ்ய அதிகாரிகள் மண்டலக் கணக்கர்களை விளித்துக் கடிதங்கள் எழுதும்போது உண்மையிலேயே தங்கள் ராஜ்யத்தைச் சேர்ந்த தணிக்கை அதிகாரிக்கு எழுதுகிருர்களே தவிர யூனியன் அரசாங்கத்திற்கு அல்ல. இதை உத்தேசித்துதான் இந்தியத் தணிக்கைத் தலைவர் அரசியல்

அமைப்பில் சொல்லப்பட்ட யூனியனைச் சேர்ந்த மொழிக் கொள்கை, ராஜ்யங்களிலுள்ள மண்டலக் கணக்கர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவித்துள்ளார்.

இந்தியத் தணிக்கைத் தலைவரிடமிருந்தும் அவருடைய துணைவரிடமிருந்தும் மட்டும் அல்லாமல், இந்தியத் தணிக்கைத் தலைவரின் உத்திரவு பெற்ற பல்வேறு ராஜ்யங்களிலிருந்தும், மண்டல கணக்கர்களிடமிருந்தும் எங்களுக்கு எழுத்து மூலமாகவும், வாய் மொழியாகவும் சான்றுகள் கிடைத்துள்ளன.

இப்பிரச்னையை நோக்கும்பொழுது அரசயலமைப்பின்படி யூனியனிலும் ராஜ்யங்களிலும், கணக்குகளைத் தயாரித்துத் தணிக்கை செய்யும் ஒரே அதிகாரியின் கீழ் எவ்வாறு இந்த வேலைகள் செய்ய முடியும் என்பதே பெரிய பிரச்னையாக உள்ளது. ஏனென்றால், எழுத்து மூலமாக உள்ளதும், பதிவு செய்யப்பட்டதுமான, ரசீது முதலியவைகளைப் பார்த்துத் தணிக்கை செய்ய வேண்டியவர்கள் அந்தந்தப் பிராந்தியங்களில் அந்தந்த பிராந்திய மொழிகளை ஆட்சி மொழிகளாக ஆக்கினவுடன் எவ்வாறு இத்தனை மொழிகளிலும் தணிக்கைத் தலைவர் தணிக்கை செய்ய முடியும் என்பதுதான் அப்பிரச்னை. மத்திய அரசாங்கத்தின் பல்வேறு கிளைகள் பல மொழிப் பிராந்தியங்களில் இருப்பினும் அவற்றைவிட இந்தப் பிரச்னை சிக்கலானதும் கடினமானதும் ஆகும். இந்தியத் தணிக்கைத் தலைவர் ஒருவரே ஆதலாலும், ராஜ்ய யூனியன் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு அவர் ஒருவரே பொறுப்பு மேற்கொண்டுள்ளார் ஆதலாலும், மண்டலக் கணக்கர்கள் அனைவரும் அவருடைய பிரதி நிதிகளாக இருக்கின்றார்கள். ஆதலாலும், இந்தப் பிரச்னை பெரிதாகிறது. மண்டலக் கணக்கர்கள் தணிக்கை செய்து அந்தந்த ராஜ்யங்களின் கணக்குகளைப்பற்றிய அறிக்கையை வெளியிடும் பொழுது அந்த ராஜ்ய கவர்னரிடமோ அல்லது ராஜப் பிரமுகர் இடமோ கொடுக்கின்றார். கவர்னர் அதனைச் சட்ட சபைக்கு அனுப்பி, சட்ட சபையின் பொதுக் கணக்குக் குழுவால் அந்த அறிக்கை விவாதிக்கப்படுகிறது. சட்ட சபைகளில் பல்வேறு மொழிகளில் விவாதம் நடப்பதை பிற்குறிப்பு ஏட்டில் குறித்திருக்கிறோம். ஆதலின் அதனைப் பார்த்தால் இந்த விவாதங்களெல்லாம் அந்தந்தப் பிராந்திய மொழியிலேயே நடைபெறும் என்று தோன்றுகிறது.

சான்று பகர்பவர்களில் சிலர் வேறு வழியில்லாத காரணத்தால் தாங்கள் கூறுவதே சிறந்த வழி என்று நினைத்துத் தணிக்கை இலாகாவை அந்தந்த ராஜ்யங்களுக்கு மட்டும் உரிமை உடையாதாகச் செய்துவிடலாம், என்று கூறினார்கள். 1935-ம் வருஷத்திய இந்தியக் கவர்மெண்டின் 167-வது பிரிவின்படி ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒரு தலைமைத் தணிக்கையாளரை நியமித்து இந்தியத் தணிக்கைத் தலைவர் செய்கின்றது போலவே மாகாணங்களைப் பொறுத்த மட்டில் இந்தத் தலைமைத் தணிக்கையாளர்கள் அந்த மாகாணக் கணக்குகளைப் பொறுத்த மட்டில் அதிகாரம் செலுத்தலாம் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இங்ஙனம் தலைமைத் தணிக்கையாளர்களை நியமனம் செய்வது ஒரு கட்டுப்பாட்டுக்கு உள்ளடங்கியே ஆகும். அந்தக் கட்டுப்பாடாவது "இந்தியாவின் தணிக்கைத் தலைவர் மாகாணங்களினுடைய கணக்குப் பற்றி வேண்டுமான வழி துறைகள் காட்டவும், அதனைத் தக்க வழியில் செலுத்தவும் தமக்குள்ள அதிகாரத்தை இப்புதிய நியமனங்களின் மூலம் இழந்துவிடமாட்டார்." இந்தக் கட்டுப்பாடு இந்திய அரசியல் சீர்திருத்தக் குழுவின் ஆலோசனையின் பேரில் செய்யப்பட்டதாகும். இந்தக் குழுவின் அறிக்கையில், இந்தியாவின் பல்வேறு மாகாணங்களுக்கும் மாகாண சுயஆட்சி அளிக்கப்படுகையில், இந்த மாகாணங்கள் தங்களுடைய கணக்குகளைத் தாங்களே தணிக்கை செய்து கொள்ள விரும்பினால் அதனைத் தடுக்க முடியாமல் போய்விடும் என்ற கருத்திலேயே இந்தக் கட்டுப்பாட்டை விதித்தது.

இந்திய அரசியலமைப்பு "தணிக்கை" என்பதை யூனியனுக்குரிய விஷயங்களிலேயே சேர்த்துள்ளது. இந்திய அரசாங்கத்தின் சட்டத்தை நன்கு தெரிந்திருந்துங்கூட, வேண்டும் என்றே அங்ஙனம் தணிக்கையை யூனியன் விஷயங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை முழுவதிலும் நாங்கள் எங்களுடைய வினாக்களில் அரசியலமைப்பின் ஷரத்துக்களுக்கு அப்பால் போகாத நிலைமையிலிருந்தே விசாரணையை நடத்தியுள்ளோம். வேறு விதமாக நாங்கள் செய்திருக்கமுடியாது என்பதும் நன்கு விளங்கிக்கொள்ளக்கூடியதே. தணிக்கை செய்பவர்களின் வேலை மிகவும் முக்கியமானது என்பதையும், நன்கு அறிந்துகொண்டால் "தணிக்கையை ராஜாங்க விஷயமாக்குவது" என்பது போன்ற விஷயங்களை எளிதாகக் கூறிவிடமுடியாது. மேலும் இந்தியத் தணிக்கைத் தலைவரின் கீழ் இருந்து தொழிற் படக்கூடிய இந்தியக் கணக்கு தணிக்கை இலாகாவை அரசியலமைப்பின் ஷரத்துக்களுக்கு உட்பட்டே வேலை செய்யுமாறு சிறிது முயன்றால் ஒரு முடிவைக் கண்டுவிடலாம். இது பற்றிய விரிவான திட்டத்தை அதற்கு ஏற்ற அதிகாரிகளிடம் விட்டு விட்டு இந்தப் பிரச்னைக்கு நடைமுறையில் காணப்படக்கூடிய ஒரு முடிவின் அடிப்படையான பகுதிகளை இங்கே சொல்ல விரும்புகிறோம்.

23. இந்தியத் தணிக்கைத் தலைவர் ராஜ்யங்களைப் பற்றிச் சமர்ப்பிக்கின்ற அறிக்கை ஹிந்தி மொழியிலேயே இருக்கலாம். ஏனென்றால் பல்வேறு பிராந்திய மொழிகளில் இவை சமர்ப்பிக்கப்பட்டால் அந்த ஒரு மனிதர் இவை இத்தனைக்கும் பொறுப்பாளியாக இருக்கமுடியாது. அவர் கொடுக்கும் இந்த அறிக்கையைச் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், பொதுக் கணக்குக் குழுக்களுக்கும் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்த்துத் தரலாம். ஆனால் பொதுக் கணக்குக் குழு இதை அலசிப் பார்க்கும் பொழுது ஹிந்தி மொழியிலோ அல்லது பிராந்திய மொழிகளிலோ அவர்களுடைய வசதிபோல் பேசலாம். ஆனால் பிராந்திய மொழியில் பேசப்பட்டால் அந்தக்குழுவின் கூட்டத்தில் வந்திருக்கின்ற மண்டலக் கணக்குகளுக்கு இது உடனே ஹிந்தியில் மொழி பெயர்க்கப்படவேண்டும். ஏனெனில் இந்தக் குழுவின் ஆராய்ச்சிகளுக்குப் பெரிதும் துணை புரிபவர் மண்டலக் கணக்கரே ஆவார். இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகாவைப் பொறுத்த மட்டில் அந்த அமைப்பின் வடிவம், ஊழியர்களை நியமிக்க வேண்டிய முறை என்பவை பற்றி முன்னர் நாங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கின்ற மத்திய அரசாங்கத்தின் இலாகாக்களுக்கு என்னென்ன சிபார்சுகள் செய்தோமோ அதே முறையை இதற்கும் பின்பற்றலாம். மண்டலக் கணக்கரின் அலுவலகத்தில் மத்திய அரசாங்கத்தின் கணக்கைக் கண்காணிக்கின்ற பகுதிமட்டும் யூனியன் மொழியிலே இதனைச் செய்ய வல்லதாய் அமைந்திருத்தல் வேண்டும். மத்திய அரசாங்கத்தின் விஷயங்களைப் பொறுத்த மட்டில் கருவூலங்களிலிருந்து மண்டலக் கணக்கருக்கு அனுப்பப்படும் கணக்குகளை மட்டும் ஹிந்தி மொழியில் அனுப்பத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும். இல்லாவிடில் பிராந்திய மொழியில் வரும் இந்தக் கணக்குகளை ஹிந்தி மொழியில் மாற்றுவதற்கு மண்டலக் கணக்கரின் அலுவலகத்திலேயே தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும். ராஜ்யத்தின் கணக்குகள், தணிக்கைகள் என்பவற்றை மண்டல கணக்கர் செய்யும் பொழுது அந்தக் கணக்கு முதலியவை பிராந்திய மொழிகளில் இருக்கும் ஆதலால் அந்த மொழியிலேயே தணிக்கை செய்யக்கூடிய ஊழியர்கள் மண்டலக் கணக்கரின் அலுவலகத்தில் இருத்தல் வேண்டும். மண்டலக் கணக்கரின் அலுவலகத்திலிருந்து இந்தியத் தணிக்கைத் தலைவரின் தலைமை அலுவலகத்திற்குச் செய்யப்படும் கடிதப் போக்குவரத்து ஹிந்தி மொழியில் இருத்தல் வேண்டும். தற்பொழுது மண்டலக் கணக்கர் போன்ற மூத்த பதவிகள் இந்திய கணக்கு தணிக்கை இலாகாவில் இந்தியக் கணக்கு தணிக்கைப் பணியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றும் இந்த வகையில் இப்பொழுது 335 பதவிகள் உள்ளன என்றும் அறிகிறோம். இந்த வகைப் பதவிகளில் உள்ளவர்கள் நாட்டில் எந்தப் பாகத்திற்கு வேண்டுமானாலும் மாற்றப்பட்டு மண்டலக் கணக்கரின் அலுவலகங்களைத் தலைமையேற்று நடத்தவேண்டும். இந்த முறையில் இப்பதவி வகிக்கின்றவர்கள் இந்திய ஆட்சித் துறை

பணியாளர்களினின்றும் பெரிதும் மாறுபட்டுள்ளார்கள். எவ்வாறென்றால் இந்திய ஆட்சித் துறைப் பணியாளர்கள் பெரும்பாலும் அந்தந்த ராஜ்யங்களிலேயே பணியாற்றிச் சில சமயங்களில் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். இந்திய ஆட்சித் துறை பணியாளர்கள் பல மொழி "வல்லவர்களாக" இருக்கவேண்டும் என்பது மிகவும் இன்றியமையாதது அன்று. ஆனால் இந்தியக் கணக்குத் தணிக்கைப் பணியாளர்கள் பல மொழி வழங்குகின்ற சூழ்நிலையில் கடமை புரியவேண்டியிருத்தலின் ஒவ்வொரு அதிகாரியும் எல்லா மொழிகளிலும் பழக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்று நினைப்பது இயலாத காரியம். இந்தத் துறையில் உள்ளவர்களின் நிலைமைபற்றி விசாரித்துப் பார்க்கவேண்டும். இங்ஙனம் செய்தால் இந்தப் பணியாளர்களை எவ்வளவு தூரம் இது பாதிக்கும் ? இனி இவர்களைப் பொறுக்கி எடுக்கும்போது எந்த முறையில் பொறுக்கி எடுக்கவேண்டும் ? எவ்வாறு பயிற்சி யளிக்கவேண்டும் ? இவர்கள் மாற்றுதல் முதலானவற்றை எல்லாம் எவ்வாறு செய்யவேண்டும் என்பதோடு இந்திய கணக்குத் தணிக்கை இலாகாவின் சிறு அதிகாரிகளையும், எந்த முறையில் நாடு முழுவதிலும் நியமிக்கவேண்டும் என்பதையும், அந்தத் துறை அதிகாரிகளே கவனிக்கவேண்டும்.

யூனியனுக்கும், ராஜ்ய அரசாங்களுக்கும் இடையே "கணக்குத் தணிக்கைப் பிரிவினை" பற்றிய ஆராய்ச்சி ஏதோ நடைபெறுவதாக நாங்கள் அறிகிறோம். இது முடிந்தால் ராஜ்யங்களின் கணக்குகளை ராஜ்ய அரசாங்கங்களே கவனித்துக்கொண்டு இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகா ராஜ்ய சர்க்கார்களின் கணக்குகளை தணிக்கை செய்வதோடு நின்றுவிடும். இவ்வாறு செய்வதானால் ராஜ்யங்களில் அமைந்துள்ள மண்டலக் கணக்கர்களின் அமைப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படும். பிரச்னையின் அளவை ஒருவாறு இது குறைக்குமே தவிரப் பிரச்னையின் அடிப்படையிலுள்ள தொல்லையை, அதாவது இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகாவின் தணிக்கை செய்யும் வேலையை இது குறைக்க முடியாது. இறுதியாக இதனை ஆராயும்பொழுது மண்டலக் கணக்கர்களின் அலுவலகங்கள் பிராந்திய மொழிகளில் குறிக்கப்பட்டுள்ள கணக்குகளை ஒரு பக்கத்தில் தணிக்கை செய்து, இப்பொழுது உள்ளது போலவே யூனியன் ராஜ்ய கணக்கு தணிகைை பொறுப்புக்களுக்கு இந்திய தணிக்கைத் தலைவர் பொறுப்பள்ளவராக இருந்து, தம்முடைய கடமையைத் தம்முடைய பிரதிநிதிகளாகிய மண்டலக் கணக்கர்கள் மூலம் நிறைவேற்றலாம் என்றே தோன்றுகிறது.

பகுதி VIII

பொது ஆட்சியில் மொழி—(2)

ராஜ்ய ஆட்சியில் இந்திய மொழிகளைப் பயன்படுத்துவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி.

(அ) ஆட்சி மொழியாகப் பிராந்திய மொழிகளை ஏற்றுக் கொள்ளும் முறையிலும் ;

(ஆ) ராஜ்யங்களிடையேயும், ராஜ்யங்கள் யூனியனோடு தொடர்பு கொள்ளும் பொழுதும் ஹிந்தியைப் பயன் படுத்தும் முறையிலும்.

(அ)

யூனியனைப் பொறுத்த விஷயங்களில், படிப்படியாக ஹிந்தியை உபயோகப்படுத்தவது என்பதும், ராஜ்யங்கள் யூனியனோடு தொடர்புகொள்ளும் போதும் தமக்குள்ளேயே தொடர்பு கொள்ளும் போதும் ஹிந்தி மொழியைப் பயன்படுத்துவது என்பதும் தொடர்புடையனவே. வேறிடத்தில் நாங்கள் காட்டியிருக்கின்ற காரணத்தினாலும், ஹிந்தி பிராந்திய மொழியாக உள்ள ராஜ்யங்களில் அதனையே ஆட்சி மொழியாகக் கொண்டதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் இதனோடு தொடர்புடையதே. உண்மையைக் கூறுமிடத்து ஆட்சித் துறையில் இதுவரையில் எல்லா இந்திய மொழிகளும் இடமின்றி இருந்தமையினால், பிராந்திய மொழிகள், ஹிந்தி பேசப்படாத ராஜ்யங்களில் ஆட்சி மொழியாக மாறும்பொழுது ஏற்படும் வளர்ச்சி யூனியனில் ஹிந்தி மொழி பயன்படுத்துவதை ஓரளவு பாதிக்கத்தான் செய்யும்.

இதைக் கருதியே பல்வேறு ராஜ்யங்களில் ஆட்சித் துறைகளில் இந்திய மொழிகளைப் பயன் படுத்திய இப்போதய நிலை பற்றித் தனியே ஒரு குறிப்பு எழுதியுள்ளோம். அனுபந்த நூலில் இது தனியே ஐந்தாவது பகுதியாக உள்ளது. (அச்சிடப்படவில்லை.)

மொத்தமாகப் பார்க்கும் பொழுது ஹிந்தியைப் பிராந்திய மொழியாகவுடைய ராஜ்யங்களில் ஆங்கிலத்தை நீக்கி விட்டு ஹிந்தியை ஆட்சி மொழியாகச் செய்யும் முயற்சி பெரிதும் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த ராஜ்யங்களில் பல, ஆட்சி மொழிச் சட்டம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, ராஜ்ய ஆட்சி விவகாரங்களில் படிப்படியாக ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்துவதற்குரிய அட்டவணையையும் தயார்செய்துள்ளன. தனியே மொழி இலாகாக்களையும், ஒரு இலாகாவினுள்ளேயே இதனை கவனித்துக் கொள்ளக் கூடிய சிறு பகுதிகளையும், சில ராஜ்ய அரசாங்கங்கள் அமைத்துள்ளன. நடைமுறைக் குறிப்புக்களையும் ஆட்சித் துறைக் கலைச் சொல் அகராதிகளையும் வெளியிட்டு ஏற்றுக் கொண்டுள்ளன. ஊழியர்களை இத் துறையில் பயில்விக்கவும், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்களைப் பயில்விக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. முழுமையாக நோக்குமிடத்து இந்த ராஜ்யங்களில் பல, தங்கள் ராஜ்யங்களில் ஆங்கிலத்தை நீக்கி விட்டு ஹிந்தியை ஆட்சி மொழியாக ஆக்கும் முயற்சியில் பெரிதும் முன்னேறி உள்ளன.

ஹிந்தியோடு மராத்தியையும், ஆட்சி மொழியாகக் கொண்ட மத்தியப் பிரதேச ராஜ்யத்தில் மராத்தி மொழியைப் பொறுத்த மட்டிலும் இவ்வளவு முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது. ஒரிஸா, சௌராஷ்டிரா ஆகிய இடங்களிலும்

அந்தந்தப் பிராந்திய மொழிகளை ஆட்சி மொழியாக ஆக்குவதற்குரிய சட்டங்கள் இயற்றப்பட்டு ஓரளவு முன்னேற்றமும் கண்டிருப்பதாகத் தெரிகிறது.

2. ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் இவ்வளவு விரைவாக ஆட்சி மொழியை இந்திய மொழியில் மாற்றியதற்கும் நாட்டின் ஏனைய பாகங்களில் இவ்வளவு விரைவாக இது நடைபெறாமல் இருப்பதற்கும் தகுந்த காரணங்கள் உண்டு. முதலாவது ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் இந்தப் பிரச்னை எளிதாகத் தீர்ந்துவிடுகிறது. மற்றப் பகுதிகளில் ராஜ்ய ஆட்சி மொழியாக அந்தப் பிராந்திய மொழியை ஏற்படுத்துவதோடு அந்தந்த நிலைமையில் அகில இந்தியாவோடு தொடர்பு கொள்ளும் பொழுது தேவைப்படுகின்ற ஹிந்தி மொழிக்கும், இடந்தர வேண்டியிருத்த லின் வளர்ச்சி வேகமாகக் காணப்படவில்லை. இதை யல்லாமல் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் ராஜ்யங்களின் பெரும் பகுதி பல மொழி பேசும் பிராந்தியங்களாக இருத்தலின் ஆட்சித் துறையில் ஆங்கிலத்தைப் போக்குவதற்கு விரைவாக முயற்சிக்கவில்லை. உதாரணமாக சென்னை அரசாங்கம் இந்தக் கழகத்தின் கேள்விக்கு அளித்த விளக்க வுரையில் கீழ்வருமாறு சொல்லியுள்ளது :—

"இதுவரையில் இந்த ராஜ்ய சட்ட சபை ஆட்சி மொழியில் மாற்றம் செய்வதற்கு, எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. எனவே ஆங்கிலம்தான் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருந்துவருகிறது. சில வருஷங்களுக்கு முன்னர் ஒரு மாவட்டத்தில் ஆட்சி அலுவல்களை யெல்லாம் தமிழில் நடத்தும் பரிசோதனை நடைபெற்றது. இந்தப் பரிசோதனையின் பயனாகத் தேவையான கருவிகள், ஊழியர்கள் பயிற்சி, சில நடைமுறைத் தொல்லை களை எங்ஙனம் சமாளிக்க வேண்டும் என்பவையும் தெரிய முடிந்தன. இந்தப் பரிசோதனையை ராஜ்யத்தின் மற்ற மாவட்டங்களுக்கு விரிக்கவில்லை. இந் நிலையில் இந்த ராஜ்யத்தின் ஆட்சி மொழியை மாற்றுவதற்கு ஏன் தீவிர முயற்சி எடுக்கவில்லை என்பதைப் பற்றிச் சிறிது விரிவாகச் சொல்ல வேண்டும்.

. . . . மிகச் சமீப காலம் வரையில் இந்த ராஜ்யத்தின் பகுதியாகவே ஆந்திரா இருந்து வந்தது. இந்நிலையில் மொழி மாற்றம் செய்வது என்பது இயலாததாக இருந்தது. 'ராஜ்யத்தின் ஜனத் தொகை யில் கணிசமான அளவுடைய, மக்கள் கூட்டம் பல மொழிகளைப் பேசினமை யால் இந்த மொழி மாற்றம் செய்யப்படவில்லை. ஆந்திரா பிரிவதற் குரிய காலத்தை எதிர்பார்த்து, ராஜ்யப் புனரமைப்பு ஏற்பட்ட பின்னரே ஆட்சி மொழியில் முக்கியமான மாறுபாடுகளைச் செய்யவேண்டும் . . .

* * * *

ராஜ்யத்தின் ஆட்சி மொழி பற்றிய தீர்மானத்திற்கும், யூனியன் ஆட்சி மொழி பற்றிய தீர்மானத்திற்கும் ஒன்றும் தொடர்பில்லை என்றாலும், மத்திய அரசாங்கத்தில் மொழி மாற்றம் செய்யப்படும் பொழுது அதனால் ராஜ்ய ஆட்சியில் ஏற்படுகின்ற விளைவுகளையும், ராஜ்யக் கல்வி முறையில் ஏற்படுகின்ற விளைவுகளையும் சிந்தித்துப் பொறுத்திருப்பது நல்லது. ஆனால் ஆட்சி மொழிக் கழகம் இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்கின்றவரையில் மத்திய அரசாங்கத்தின் மாறுதல்கள் பற்றி ஒன்றும் அறியப்பட வில்லை. ராஜ்யத்தில் ஆட்சி மொழி மாற்றப்படாமல் இருப்பதற்கு இதுவே காரணம்."

ஏறத்தாழ ஒரு மொழி பேசும் ராஜ்யங்களாக இந்த ராஜ்யங்கள் புன ரமைப்புச் செய்யப்பட்டவுடன் விரைவாக ஆங்கில இடைநிலை மொழியை மாற்றி ஆட்சித் துறையில் பிராந்திய மொழிகளைக் கொண்டு வரவேண்டும், என்ற விருப்பம் மிகுதியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எங்களைப் பொறுத்த வரை அந்தந்த ராஜ்ய விவகாரங்களுக்கு எந்த இடைநிலை மொழியைப் பயன்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பற்றி நேரடியான கவலையில்லை. அரசியலமைப்பின் 345, 346, 347 ஆகிய விதிகளின்படி

ஒரு ராஜ்யத்தின் சட்ட சபை "தான் சட்டம் செய்வதன் மூலம் அந்த ராஜ்யத்தில் வழங்கும் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ, அல்லது ஹிந்தியையோ அந்த ராஜ்ய விவகாரங்கள் அனைத்திற்குமோ அன்றிச் சிலவற்றிக்கோ பயன்படுத்தலாம்". இந்த விதியிலேயே ராஜ்ய சட்ட சபைகள் இங்ஙனம் சட்டம் செய்தால் ஒழிய அந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் எல்லா ஆட்சித்துறைகளிலும் இந்த அரசியலமைப்பு அமலுக்கு வருவதன் முன்னர் இருந்ததுபோல ஆங்கிலமே தொடர்ந்து இருந்துவரும்.

இந்த அறிக்கையின் மற்றோர் இடத்தில் பிராந்திய மொழிகளையும், யூனியன் மொழியையும் வளர்ப்பதற்குரிய சிபார்சுகளைச் செய்துள்ளோம். இவற்றையல்லாமல் ராஜ்ய ஆட்சி முறைகளைப் பொறுத்தமட்டில் நாங்கள் வேறொன்றும் சொல்வதற்கில்லை. அரசியலமைப்பின் 346-வது விதியின்படி ராஜ்யங்களிடையேயும், ராஜ்யங்களுக்கும் யூனியனுக்கும் இடையேயும் பயன்படுத்தப்படவேண்டிய ஆட்சி மொழி யூனியனில் எது ஆட்சி மொழியாக இருக்கிறதோ அதுவாகவே இருக்கும். அதாவது வேறு வகையாகச் சட்டம் செய்யப்படாவிட்டால் 1950-ம் வருஷத்திலிருந்து பதினைந்து வருஷங்கள் கழித்து இம்மொழி தேவநாகரி வரிவடிவில் எழுதப்படும் ஹிந்தி மொழியாகவே இருக்கும்.

(ஆ) [1]

3. 346-வது விதியில் சொல்லப்பட்டதைக் கொண்டுசெலுத்தவேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டிய கடமை ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் உள்ள ராஜ்யங்களையே சாரும். ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள ராஜ்யங்களைப் பொறுத்தவரை உள்நாட்டு விவகாரங்களுக்கு ஹிந்தியைப் பயன் படுத்தும் பொழுதே ஆட்சிக் கருவி ஏனைய ராஜ்யங்களோடும், யூனியனோடும் தொடர்பு கொள்ளவேண்டிய மொழித் தேவையைப் பூர்த்தி செய்து விடுகிறது.

ஹிந்தி மொழிப் பேசப்படாத ராஜ்யங்களில் அரசியலமைப்பின் இந்தப் பகுதியை நிறைவேற்றத் தேவையானவை யாவை? ராஜ்யங்களைப் பொறுத்தமட்டில் ஆட்சி முறையில் எந்த நிலையில் எந்த அதிகாரிகள் மற்ற ராஜ்யங்களோடும், யூனியனோடும் தொடர்பு கொள்ளவேண்டும் என்பதை, அந்த ராஜ்யங்களே முடிவு செய்ய வேண்டும். இங்ஙனம் கொள்ள வேண்டிய தொடர்பு கடித முறையில்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல முடியாது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்ட வேண்டும். அகில இந்திய நிலையிலும், பலராஜ்ய நிலையிலும், ஒன்று கூடிக் கருத்துப் பரிமாறிக் கொள்ள, பலப்பல மாநாடுகளும் குழுக்களும் ஏற்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு ராஜ்யமும் இவற்றில் பங்கு கொள்கின்ற தன்னுடைய அதிகாரிகள் சிறந்த முறையில் இவற்றில் பங்கு கொள்ள வேண்டும் என்றே விரும்புவார்கள். இங்ஙனம் யூனியன் நிலையிலும், பலராஜ்ய நிலையிலும் பங்கு கொள்ளவேண்டிய அதிகாரிகளைத் தவிர யூனியனிலிருந்தும், மற்ற ராஜ்ய அரசாங்கங்களிலிருந்தும் வரும் கடிதங்கள் ஹிந்தி மொழியில் இருக்குமாதலால் இவ்வதிகாரிகளை அடுத்துக் கீழே உள்ளவர்களும், இதனைப் படித்து புரிந்து கொள்ள வேண்டிய நிலைமையில் இருக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்தியில் வரும் கடிதங்களைப் பிராந்திய மொழியில் மொழி பெயர்ப்பதற்கு அந்தந்த ராஜ்ய ஆட்சித் துறையில் சில "மொழிப் பெயர்ப்புப் பகுதிகள்" இருக்கலாம்

---

1. அரசியலமைப்பு 370-வது விதி தமக்குத் தந்திருக்கின்ற அதிகாரத்தை உபயோகித்து ஜனாதிபதி 1954-ம் ஆண்டு மேமீ 14உ அன்று ஆணை எண். ஜி. ஓ. 48-ன் மூலம் "அரசியலமைப்பு (ஜம்மு, காஷ்மீருக்கும் பொருத்துதல்) ஆணை, 1954" என்பதில் அரசியலமைப்பின் பகுதி 17-ஐ ஜம்மு காஷ்மீர் ராஜ்யங்களுக்குக் கீழ்கண்டவைகள் பற்றிப் பொருந்துமாறு செய்தார். (1) யூனியன் ஆட்சி மொழி. (2) ராஜ்யங்களினிடையேயும், ராஜ்யங்களுக்கும் யூனியனுக்கும இடையேயும் தொடர்புகொள்ளவேண்டி ஆட்சிமொழி, (3) மிக உயர் நீதி மன்றத்தில் பயன்படும் மொழி.

என்றும் சொல்லப்படுகிறது. அங்ஙனம் மொழி பெயர்ப்புப் பகுதியால் மொழி பெயர்க்கப்படும் கடிதங்கள் முற்றிலும் திருப்தி அளிக்கக் கூடியவையாக இருக்குமா என்பது பற்றி அந்த ராஜ்ய அரசாங்கமே முடிவு செய்யவேண்டும். ஏனையோருக்குப் புரிவிக்கின்ற முறையில் இந்த மொழி பெயர்ப்புப் பகுதி தொழிற் படலாமே தவிர இதில் சொல்லப்பட்ட காரியங்களை இருந்து கவனிக்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள், அதாவது இதில் சொல்லப் பட்ட காரியங்களைத் தொடங்க வேண்டியவர்கள், பதிலளிக்க வேண்டிய வர்கள் ஆகியோரை நோக்கும் இடத்து, பிறர்மொழி பெயர்த்ததைப் பார்க்காமல் தாங்களே நேரடியாக அதனைத் தெரிந்து கொள்ளும் பொழுதுதான் நன்கு கடமைகளைச் செய்யமுடியும். இம்மாதிரி சூழ்நிலையில் எந்தெந்த ஊழியர்கள் இதனை மேற்கொள்ளவேண்டும் என்பதையும், இதனைக் கவனிக்கும் முறையில் எந்தெந்த ஊழியர்களுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும் என்பதையும் ராஜ்ய அரசாங்கங்களே முடிவு செய்ய வேண்டும்.

4. ஹிந்தி யல்லாத பிராந்திய மொழிகளையுடைய ராஜ்யங்களில் சில, தன்னிடம் ஊழியம் செய்பவர்களில் சிலர்—இன்னும் சில ராஜ்யங்களில் அனைவரையுமே—ஹிந்திப் பரீட்சையில் குறித்த காலத்திற்குள் வெற்றி பெறவேண்டும் என்று கட்டுப்பாடு செய்துள்ளன. எந்தத் தரத்தில் உள்ள அரசாங்க ஊழியர்கள் பிற ராஜ்யங்களோடும், யூனியனோடும் தொடர்பு கொள்ளவேண்டிய இன்றியமையாமை உடையவர்களோ அவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் கடமையை நன்கு செய்வதற்கு இம்மாதிரிக் கட்டுப்பாடு செய்வது மிகவும் தேவையாகும். பிற ராஜ்யங்களோடு தொடர்பு கொள்ளவேண்டிய சந்தர்ப்பமே இல்லாத அரசாங்க ஊழியர்களும், இங்ஙனம் கட்டுப்படுத்தப்படுவது எந்தக் காரணத்தால் என்பது நன்கு விளங்க வில்லை. பிறிதோரிடத்தில் கட்டாய ஆரம்பக் கல்வி போதிக்கும்பொழுது அரசியலமைப்பில் கூறப்பட்டபடி 14 வயது முடிகின்ற வரையில் மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்குக் கட்டாய ஹிந்தியைக் கற்பிக்க வேண்டியது அவசியம் என்று கூறியுள்ளோம். இப்படி அகில இந்திய அல்லது பிற ராஜ்ய தொடர்பே ஏற்பட முடியாத அரசாங்க ஊழியர்கள் ஹிந்தி படிக்கவேண்டும் என்று சொல்வது, இந்தப் பள்ளிக்கூடங்களுக்குச் சொன்ன வாதங்களைப்போல, சர்க்கார் ஊழியர்கள் என்ற முறையில் இல்லாவிட்டாலும், இந்தியப் பிரஜைகள் என்ற முறையில் அவர்களுக்கு ஹிந்தி அறிவு தேவை என்ற கருத்தாலேயே கட்டுப்பாடு படுத்தப்பட்டதாகக் கூறப்படலாம். அரசாங்க ஊழியர்களை ஏனைய மக்களோடு வேறு பிரித்து இங்ஙனம் ஹிந்திப் பயிற்சி தருவது சரியா தவறு என்பதை ராஜ்ய அரசாங்கங்களே முடிவு செய்யவேண்டும். மேலும், குறைந்த அளவு தேவைக்கு மேற்பட்ட நிலையில் ஹிந்தியை "தூண்டுதலினாலும், பரிசுகளி னாலும்" வளர்ப்பதைவிட "கட்டாயத்தினாலும், தண்டனையினாலும்" வளர்ப்பது சரியா என்பதையும் ராஜ்ய அரசாங்கங்களே முடிவு செய்ய வேண்டும்.

5. 346-வது விதி இரண்டு ராஜ்யங்கள் தங்களுக்குள் தொடர்பு கொள்ள ஹிந்தியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டால் அவ்விதத் தொடர்புக்கு ஹிந்தியைப் பயன்படுத்தலாம் என்று சொல்கிறது. இம்முறை பற்றியே பிற ராஜ்யத் தொடர்புகளுக்கு ஹிந்தியைப் பயன்படுத்தலாம் என்று பீஹார், மத்திய பாரத், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தானம், ஆஜ்மீர், போபால், விந்தியப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்கள் முடிவு செய்துள்ளன.

இந்நிலையில் இன்னும் சிலவற்றைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு தங்களுக்குள் முடிவு செய்துகொண்ட இரண்டு ராஜ்யங்கள் இந்த விதி பற்றி ஹிந்தி மொழியைப் பயன் படுத்தலாமேனும், அந்த ராஜ்யத்துக்கும் யூனியனுக்கும் இடையேயும், இங்ஙனம் முடிவு செய்து கொள்ளாத பிற ராஜ்யங்களோடும் தொடர்பு கொள்ளும்பொழுது 1965 வரையில் ஆங்கிலத்திலேயே தொடர்பு கொள்ளவேண்டும்.

இங்கே கவனிக்க வேண்டிய குறிப்பு என்னவென்றால் : ஹிந்தி பேசும் ராஜ்யங்களுடன் யூனியன் அரசாங்கம் தொடர்புகொள்ளும்பொழுது 1965-க்கு முன்னரே ஹிந்தி மொழியின் மூலம் தொடர்புகொள்ள முடியுமா, முடிந்தாலும் செய்வது நியாயமா என்பதாகும். யூனியன் அரசாங்கத்தினுள்ளேயே ஹிந்திமொழி பேசாதவர்களின் அறிவு, ஹிந்தி ராஜ்யங்களிலிருந்து வரும் கடிதங்களைப் புரிந்து கொள்கிற அளவுக்கு இன்னும் வளர்ச்சி அடையவில்லை. ஆதலால் ஹிந்தி ராஜ்யங்களிலிருந்து வரும் கடிதங்கள் கூட இன்னும் ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும் அல்லது ஆங்கில மொழி பெயர்ப்போடு சேர்த்து வரவேண்டும். இந்திய அரசாங்கம் ஹிந்தி ராஜ்யங்களுக்குத் தான் அனுப்பும் கடிதங்களில் ஆங்கிலத்தில் அனுப்புவதோடு விரும்பினால் அதனுடைய ஹிந்தி மொழி பெயர்ப்பையும் அனுப்புவது முடியாமல் போகாது என்றாலும், இரண்டு முறைகளிலும், ஹிந்தியில் அனுப்பப்படும் கடிதங்கள் மொழி பெயர்ப்பு என்ற முறையில் இருக்கவேண்டுமே தவிர ஆதாரக் கடிதம் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் பிறிதோரிடத்தில் நாங்கள் சொல்லிய கருத்தை அடிப்படையில் கொண்டால் நேரடியான ஆட்சித் துறைகளில் ஹிந்தியைப் பயன் படுத்துவதன் மூலம் கருத்துக்களை எவ்வாறு அந்த மொழியில் வழங்கவேண்டும் என்பதற்கு நல்ல பழக்கம் ஏற்படும். ஆதலால் எப்பொழுதாவது ஒரு ராஜ்யம் அவ்வாறு விரும்பினால் யூனியன் அரசாங்கம் அத்தகைய ராஜ்யங்களுக்கு அனுப்பும் கடிதங்களில் ஆங்கில மூலக் கடிதத்தோடு ஹிந்தி மொழி பெயர்ப்பு ஒன்றையும் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். ஹிந்தியை ராஜ்ய மொழியாக ஏற்றுக்கொண்ட ராஜ்ய அரசாங்கங்களோடு மத்திய அராசாங்கம் தொடர்புகொள்ளும்பொழுது ஆங்கிலத்தோடு ஹிந்தியையும் பயன்படுத்தலாம் என்று ஜனாதிபதி ஏற்கனவே ஆணையிட்டுள்ளார். ஆதலின் இவ்வாறு செய்தால் அது அந்த ஆணையின் கீழே அடங்கிவிடும்.

எண்கள்.

6. எங்கள் நிர்மாணக் கோரிக்கைகளில் சிபார்சு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டவைகளுள் "யூனியன் விவகாரங்களில் குறிப்பிட்ட ஒன்று அல்லது பலவற்றிற்கு எந்தவகையான எண்களைப் பயன்படுத்த வேண்டும்" என்று சிபார்சு செய்வதும் ஒன்றாகும். இதுபற்றிய அரசியலமைப்பின் ஷரத்துக்கள் வருமாறு :—அரசியலமைப்பின் 343-வது விதி 1-வது பிரிவில் "யூனியன் ஆட்சி விவகாரங்களில் பயன் படுத்தப்படும் எண்கள் இந்திய எண்களின் பன்னாட்டு வடிவமே ஆகும்" என்று கூறியுள்ளது. இதன் அடுத்த பிரிவில் ஜனாதிபதி ஹிந்தி யூனியன் மொழியாக வருவதற்குரிய பதினைந்து ஆண்டுகளுள் "தம்முடைய ஆணையின் பேரில் தேவநாகரி எண்களையும், பன்னாட்டு எண்களோடு யூனியனின் ஆட்சிக் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம்." இந்த விதியின் மூன்றாவது பிரிவில் "இந்த விதியில் சொல்லப்பட்டவற்றிற்கு மாறாகப் பதினைந்து ஆண்டுகள் கழித்துப் பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் எந்த ஒரு காரியத்திற்கும் தேவநாகரி எண்களை பயன்படுத்துமாறு செய்யலாம்" என்றுள்ளது.

344-வது விதி கூறுகின்றபடி யூனியன் ஆட்சி விவகாரங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிப்பிட்ட காரியங்களுக்கு எந்தவிதமான எண்களை உபயோகப்படுத்தலாம் என்பதை இந்தக் கழகம் ஆராய்ந்து சிபார்சு செய்யவேண்டும். இந்தச் சிபார்சையும்கூடப் பாராளுமன்ற அங்கத்தினர்கள் முப்பது பேர் இருந்து ஆராய்ந்து முடிவு சொன்னதின் பேரில் ஜனாதிபதி வேண்டுமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

பதினைந்து வருஷங்கள் கழித்துப் பாராளுமன்றம் சட்டம் செய்வதன் மூலம் தேவநாகரி எண்களைப் பயன்படுத்தலாம் என்ற பிரிவினையைப் பற்றி நாங்கள் ஒன்றும் சிபார்சு செய்யத் தேவையில்லை. இன்னும் ஐந்து வருஷங்கள் கழித்து இதேபோன்ற நிர்மாணக் கோரிக்கைகளுடன் மற்றொரு கழகம் நிறுவப்பட்டு அதனுடைய சிபார்சுகளும் இவ்வாறே

பரிசீலிக்கப்படும். எனவே, பாராளுமன்றம் சட்டம் செய்து தேவநாகரி எண்களை உபயோகப்படுத்துவதன் முன்னர் இதுபற்றிச் சிந்திக்க அவகாசம் இருக்கிறது.

இப்பொழுது நாங்கள் ஆராய வேண்டிய ஒரே காரியம் என்னவென்றால் அடுத்த கழகம் 1960-ல் நிறுவப்பெற்று அதன் முடிவுகளைச் சொல்வதற்கு முன்னரே ஜனாதிபதி தேவநாகரி எண்களைச் சில காரியங்களுக்கு உபயோகப்படுத்தலாம் என்று ஆணை இடுமாறு செய்ய வேண்டுமா என்பது தான். ஜனாதிபதி ஆங்கிலத்தோடு ஹிந்தியையும் பயன்படுத்துவதுபற்றி வெளியிட்ட இரண்டு[1] ஆணைகளுள் ஒன்றில் பன்னாட்டு எண்களையல்லாமல் தேவநாகரி எண்களையும், கீழ்கண்டவற்றிற்குப் பயன்படுத்தலாம் என்று கூறியுள்ளார்:—

(1) ராஜ்ய கவர்னர்களையும்,

(2) மிக உயர் நீதி மன்ற நடுவணர்களையும்,

(3) உயர் நீதி மன்ற நடுவணர்களையும், நியமிக்கும் நியமானப் பத்திரங்களில் தேவநாகரி எண்களைப் பயன்படுத்தலாம்.

7. இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தையும், தேவநாகரியிலுள்ள எண்களின் வடிவத்தையும் ஒப்பிட்டு வேறுபாட்டைக் காண்பது மிகவும் சுவையுடையதாகும்.

எந்தக் காலத்தில் இப்பொழுது வழங்கப்படும் எண்களும், பின்னங்களும் கண்டு பிடிக்கப்பட்டன என்பது இன்று அறியமுடியாத பழைய வரலாறாக உள்ளது. குறியீடு கொண்டு எழுதுதலும், பூஜ்யத்தைப் பயன்படுத்துதலும் இந்தியர்களினுடைய கண்டு பிடிப்பு என்று கருதப்படுகிறது. டான்சிக் என்பவர் தம்முடைய "எண்கள்" என்ற நூலில் பின் வருமாறு எழுதுகிறார் :—

"மிக நீண்ட காலமாகிய ஐயாயிரம் வருஷங்களில் எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி மறைந்தன. இவை ஒவ்வொன்றும் இலக்கியம், கலை, தத்துவம், சமயம் என்பவற்றில் தம்முடைய சொத்தைக் கொஞ்சம் விட்டுச் சென்றுள்ளன. ஆனால், எண்களைப் பொறுத்தமட்டில் பழங்கால மனிதன் கண்டு பிடித்துப் பயன்படுத்திய முடிவான கண்டு பிடிப்பு யாது? விரிந்து கொடுக்காததும், வளர்ச்சியை தடை செய்வதுமான எண்களைக் கண்டு பிடித்து அதன் பயனாக மிக ஆரம்பக் கணக்குகளைக் கூட அறிவாளி ஒருவனே செய்ய முடியும் என்ற நிலையில் இருந்து வந்தது ... இத்தகைய ஒரு முறையைத்தான் மனிதன் பல ஆயிரம் ஆண்டுகள் பயன்படுத்தினான். இந்தக் கருவியில் எவ்வித மாறுதலும் இல்லாமல் இந்த முறைக்கு எவ்வித முன்னேற்றமும் இல்லாமல், இதனைப் பயன் படுத்தி வந்தான். கருத்துக்களெல்லாம் மெள்ளமாக வளர்ந்த இருண்ட காலத்தில்கூட கணக்கின் சரித்திரம் வளர்ச்சியே இல்லாமல் இருந்ததாகத் தெரிகிறது. இந்த நிலையில் பெயர் தெரியாத ஒரு ஹிந்து நம்முடைய காலத்தின் முதல் நூற்றாண்டுப் பகுதியில் எண்களின் இடத்தை நிர்ணயித்தது உலகம் போற்றும் ஒன்றாக விரிந்துவிட்டது."

இந்தக் கண்டுபிடிப்பின் புரட்சிகரமான பயன் இப்பொழுது பின் நோக்கிப் பார்க்கும்பொழுது மிகச் சாதாரணமானதுபோலக் காணப்பட்டாலும், மிகப் பெரிய கணித வல்லுநரும், வான நூல் வல்லாருமாகிய லாப்ளாஸ் என்பவரால் கீழ்க்கண்டவாறு பேசப்படுகிறது :—

"எல்லா எண்களையும் பத்துக் குறியீடுகளினால் குறித்து, அந்தக் குறியீடுகள் தாம் இருக்கும் ஸ்தானத்தை நோக்கி மதிப்பைப் பெறும் என்று சொல்லி, ஸ்தானம் இல்லாதபொழுதும் அவற்றிற்கு ஒரு

1 பகுதி 7, பாரா ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

முழுமதிப்பைத் தரும்படியான ஒரு புதிய முறையைக் கண்டு உலகத்திற்குத் தந்த பெருமை இந்தியாவிற்கு உரியது. இப்பொழுது நாம் பார்க்கும் பொழுது மிக எளிதாகக் காணப்பட்டாலும், மிக உயர்ந்ததும் சிறந்ததுமான இக்கருத்து நம்மால் இன்று உண்மையான முறையில் மதிக்கப் படாவிட்டாலும் மிக உயர்ந்ததே. மிக எளிமையான முறையில் கணிப்ப தற்குரிய வசதிகளைச் செய்து தரும் இப்புதுமுறை, பயன்படும் சிறந்த கண்டு பிடிப்புகளில் மிக உயர்ந்த இடத்தைப் பெறுவதாகும். இதனுடைய உண்மையான பெருமையை அறிய வேண்டுமேயானால், ஆர்க்கிமிடிஸ் போன்ற பழங்காலத்தின் மிகச் சிறந்த அறிவாளிகளுக்கும் இது அகப்பட வில்லை என்பதை நினைத்தால் போதுமானது."

இந்திய எண்கள், அதாவது குறியீடுகளும், அடையாளங்களும் இந்திய கணிதத்திலும், வான நூல்களிலும் மிகப் பலகாலமாக பயன் படுத்தப் பெற்றன என்றும், இவற்றை அரபிய நாட்டு அறிஞர்கள் இங்கிருந்து கொண்டு சென்றார்கள் என்றும், அரேபியாவிலிருந்து இவை ஐரோப்பா வுக்கு சென்றன என்றும் அறியமுடிகிறது. இங்ஙனம் சென்ற முறையில் இதில் பல மாறுதல்களும் ஏற்பட்டதுண்டு. இந்திய அரசியலமைப்பு இந்திய எண்களின் பன்னாட்டு வடிவம் என்று சொல்லப்படும் இந்த எண்களின் தோற்றம்பற்றி ஆங்கிலக் கலைக் களஞ்சியம் (என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிகா) பின்வருமாறு பேசுகிறது :—

" நம்முடைய எண்கள் அராபிய எண்கள் என்று சொல்லப்பட்டாலும் உண்மையில் இந்திய அராபிய எண்களேயாம். பெருவாரியான அளவில் இந்த எண்களை முதன் முதலில் பயன்படுத்திய நாடு நாம் அறிந்த வரையில் இந்தியாவேதான். இந்திய இலக்கியங்கள் பூஜ்யத்தை கிருஸ்து சகாப்தத்துக்கு முன்னரே அறிந்திருந்ததாகக் கூறுகின்றன. எட்டாவது நூற்றாண்டின் முடிவில் வான நூல் அட்டவணைகள் சில அராபிய மொழி யில் மொழி பெயர்க்கப்பட்டனவென்றும் அதன் மூலம் இந்திய எண்களைப் பற்றி அராபிய அறிஞர்கள் அறிந்து கொண்டார்கள் என்றும் தெரிகிறது."

இந்திய நாட்டில் எண்களின் குறியீடுகள் ஒவ்வொரு மொழிப் பிராந்தி யத்தைப் பொறுத்த மட்டிலும் ஏறத்தாழ ஒரே விதமாக, ஆனால் சிறு சிறு மாறுதல்களுடன் எழுதப் பெற்றன. பழைய பிராமிய எழுத்துக்கள் மாறு பாடடைந்து இக்கால இந்திய மொழிகளின் எழுத்துக்களுக்கு இடந் தந்தது போலவே இதுவும் நடை பெற்றது. இன்று எண்களின் பன்னாட்டு வடிவம் என்று சொல்லப்படுவதெல்லாம் பழைய இந்திய எண்களின் திரிந்த வடிவங்களேயாகும். பிற் சேர்க்கை 10-ல் ஒரு படத்தின் மூலம் இந்தியா விலுள்ள ஒவ்வொரு பிராந்திய மொழியிலும் இது எவ்வாறு எழுதப் படுகிறது என்பதை எடுத்துக் காட்டியுள்ளோம். இவ்விடத்தில் எண்களின் பன்னாட்டு வடிவம் தென் பிராந்தியங்களில் திராவிட மொழிகளில் இந்த எண்களுக்குரிய தனி வடிவங்களோடு சேர்த்து வழங்கப்படுகின்றன. இந்த எழுத்துக்களின் எண்ணிக்கையின் வடிவங்கள் நெடுங்கணக்கின் முதலெழுத்தைக் கொண்டே எழுதப் பெற்றுள்ளன. உண்மையைக் கூறு மிடத்துத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற மொழிகளில் எண்களுக்கு உள்ள வடிவு போக, பன்னாட்டு எண்களே மிகுதியாகப் பயன் படுத்தப்பெற்றுள்ளன.

எண்களின் தேவநாகரி வடிவத்தைப் பொறுத்தமட்டில் இரண்டு ஓரளவு மாறுபாடுடைய தொடர்ச்சி இருந்து வருவதாகத் தெரிகிறது. 1953-ல் தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தத்துக்காக லக்னோவில் கூடிய மாநாடு தேவநாகரி எண்களின் வடிவங்களை ஒரு வகையில் எழுத வேண்டும் என்று சிபார்சு செய்தது. எனவே, தேவநாகரி எண்களைப் பயன்படுத்த வேண்டுமானால் எந்த வடிவத்தைப் பயன்படுத்துவது என்ற வினாவை லக்னோ மகாநாடு தீர்த்து வைத்துவிட்டது. இந்த மாநாட்டின் சிபார்சுகளையே மத்திய அரசாங்கமும், பல ராஜ்ய அரசாங்கங்களும் பயன்படுத்துகின்றன.

8. 345-வது விதியின்படி ஒரு ராஜ்யத்தின் ஆட்சி விவகாரங்களுக்காகத் தேவநாகரியில் எழுதப்பட்ட ஹிந்தி மொழியை மேற்கொள்ளும் பொழுது ஹிந்தி எண்களோடு பன்னாட்டு எண்களையும் பயன் படுத்தவேண்டுமா என்பதுபற்றிக் கருத்து வேறுபாடு இருக்கிறது என்று நாங்கள் அறிகிறோம். 343-வது விதியின் ஒன்றாவது பிரிவினையின்படி எண்களின் பன்னாட்டு வடிவைப் பயன்படுத்த வேண்டியது யூனியன் ஆட்சி மொழியைப் பொறுத்த மட்டிலுமே தவிர ராஜ்யங்கள் ஆட்சி மொழியாக ஹிந்தியை பயன்படுத்தும் பொழுது தேவநாகரி எண்களையே பயன் படுத்தலாம் என்று ஒரு கட்சி சொல்கிறது. அரசியலமைப்பின் விதிகளைப் பொருள் செய்வதில் இங்ஙனம் கருத்து வேறுபாடு இருப்பதினால் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள ராஜ்ய அரசாங்கங்கள் உள்நாட்டு விவகாரங்களுக்கு எண்களின் தேவநாகரி வடிவத்தையும், யூனியன் அரசாங்கத்தோடு தொடர்பு கொள்ளும்போது எண்களின் பன்னாட்டு வடிவத்தையும் பயன் படுத்துகின்றன.

ஹிந்தியை ராஜ்ய மொழியாக ஏற்றுக் கொண்ட ராஜ்யங்கள் ராஜ்ய விவகாரங்கள் அனைத்திற்கும் எண்களின் தேவநாகரி வடிவத்தைப் பயன் படுத்தலாமா வேண்டாமா என்பதுபற்றியும், பன்னாட்டு எண்களோடு சேர்த்து பயன்படுத்த வேண்டுமா என்பது பற்றியும் முடிவு செய்வது அந்தந்த ராஜ்யங்களைப் பொறுத்ததாகும்.

9. எங்களுடைய கேள்விகளுக்குப் பதில் அளித்த பல ராஜ்யங்கள் ஹிந்தியைப் பயன்படுத்தும் யூனியன் அரசாங்கம் எண்களின் பன்னாட்டு வடிவத்தையே யூனியன் அரசாங்கம் பயன் படுத்தலாம் என்று தெரிவித்துள்ளன. ஹிந்தி பேசும் ராஜ்யங்களுள் சில எண்களின் பன்னாட்டு வடிவோடு தேவநாகரி வடிவையும், பயன்படுத்த வேண்டும் என்றும் சொல்லி உள்ளன. இன்னும் சில ராஜ்யங்கள் யூனியன் அரசாங்கத்தின் எல்லா விவகாரங்களுக்குமோ அன்றிச் சிலவற்றிற்கோ எண்களின் பன்னாட்டு வடிவை நீக்கி விட்டுத் தேவநாகரி வடிவையே பயன் படுத்த வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன. இன்னும் சில சமயங்களில் வளைந்த தன்மையுடைய தேவநாகரி வடிவோடுகூடிய எண்களே அழகு பொருந்தியவையாக உள்ளன என்றும், தேவநாகரியில் எழுதப்படும் பொழுது எண்களை மட்டும் பன்னாட்டு வடிவில் பயன் படுத்துவது கண்ணை "உறுத்துகிறது" என்றும் சொல்லப்படுகிறது. நடுநிலைமையில் இருந்து பேசினால் தேவநாகரி வடிவத்திற்கும், பன்னாட்டு வடிவத்திற்கும் எண்களைப் பொறுத்தமட்டில் அழகுத் துறையில் வேறுபாடு ஒன்றும் இல்லை என்றே எங்களுக்குத் தோன்றுகிறது. தேவநாகரி எழுத்தைப் படிக்கும்பொழுது இந்திய எண்களின் பன்னாட்டு வடிவம் அதனுடன் தோன்றுவது பொருத்தமற்றதாகக் காணப்படுகிறது என்று சொல்வதெல்லாம் பழக்க வசத்தினால் ஏற்பட்ட ஒன்றே தவிர அடிப்படையில் வேறுபாடு ஒன்றுமில்லை. தேவநாகரி எழுத்துக்களோடு சேர்த்து எண்களின் பன்னாட்டு வடிவைப் பயன் படுத்திப் பழகிவிட்டால் இந்தப் பொருத்தமின்மை பற்றிய நினைவு விரைவில் மறைந்துபோகும். எளிதாகப் படிப்பதற்கும், அதிலும் மோட்டார்கார் எண்கள், மைல் கற்கள் இவற்றிலும் எண்களின் பன்னாட்டு வடிவம் விரைவாகப் பார்த்துப் புரிந்து கொள்ளப் பயன் படுவதுபோல வளைந்த வடிவுடைய தேவநாகரி எண்கள் பயன் படமாட்டா என்றும் எங்களுக்குச் சொல்லப்பட்டது.

இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தின் சரித்திரத்தைக் காணும் பொழுது அதனைப் பயன் படுத்துவதற்கு எந்த விதமான தடையும் இருக்கக் கூடாது என்று தோன்றுகிறது. தென்னாட்டில் உள்ள பிராந்திய மொழிகளில் எண்களின் இப்பன்னாட்டு வடிவமே மிகுதியும் பயன்படுத்தப் படுகிறது என்பதனாலும், அரசியலமைப்பு யூனியன் விவகாரங்களுக்கும் ராஜ்யங்களினிடையே உள்ள தொடர்புகளுக்கும் இந்த எண்களையே பயன் படுத்த வேண்டும் என்று அரசியலமைப்பு கூறுவதனாலும் இந்தியா முழுவதிற்கும் ஒரேவகையான எண்களை ஏற்றுக் கொள்வதானால் இந்த எண்களையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அரசியலமைப்பு நினைக்கிறது.

எல்லா இந்திய மொழிகளுக்கும் தேவநாகரி எழுத்துக்களையே பயன் படுத்த வேண்டும் என்பதற்கு நாங்கள் காட்டியுள்ள[1] காரணங்களைக் கொண்டே எண்களிலும் இந்தியா முழுவதிற்கும் ஒரே வகையான எண்கள் இருக்குமேயானால் நல்லது என்று கருதுகிறோம். அப்படி நாடு முழுவ தற்கும் ஒரே வகையான எண்கள் பயன் படுத்தப்படுவதானால் ஹிந்தி எண்களின் பன்னாட்டு வடிவமே அதற்கு முற்றிலும் பொருத்தமானது என்பதற்கு, இந்தியா முழுவதற்கும் எல்லா மொழிகளுக்கும் பொதுவான எழுத்து முறையை ஏற்றுக்கொள்வதானால் தேவநாகரி எழுத்துக்களே சிறந்தவை என்பதற்குச் சொல்லிய காரணங்களே பொருத்தமானவை. ராஜ்யங்கள் அனைத்தும் இந்திய எண்களின் பன்னாட்டு வடிவங்களையே மேற்கொள்ள வேண்டும் என்றும் தேவைப்பட்டால் தங்கள் பிராந்திய எண்களின் வடிவங்களோடு இவற்றையும் பயன் படுத்தலாம்—சிறப்பாக மைல் கற்கள், மோட்டார்கார் எண்கள் என்பவற்றில் எளிதாகப் படிப்ப தற்காகவும், மற்ற மொழி பேசுகின்றவர்கள் எளிதில் புரிந்து கொள்வ தற்காகவும் இவ்வாறு பயன் படுத்த வேண்டும். அரசியலமைப்பின் வழி காட்டியின்படி கட்டாயக் கல்வி முறை வரும்பொழுது யூனியன் மொழியைப் போதிக்கும் பொழுது இந்திய எண்களின் பன்னாட்டு வடிவத்தையும், போதிக்க நேரிடும். அப்பொழுது இது அனைவரும் அறியக் கூடியதாக ஆகி இந்த எண்களை அனைவரும் உபயோகப்படுத்துவதற்கு இப்பொழுதுள்ள சிறு சிரமங்கள் எல்லாம் மாறிவிடும். தேவநாகரி எழுத்துக்களை அனைவரும் பயன் படுத்துவதில் ஏற்படுகின்ற தொல்லையும் இதேபோல கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிடும்.

தனிப்பட்டவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களுடைய சொந்த ஆவணங் களுக்கு அந்தந்தப் பிராந்திய மொழிகளில் வழங்கி வந்த எண்களின் வடிவங்களையே பயன்படுத்துவார்கள் என்று நினைக்கிறோம். ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ளவர்கள், அந்த ராஜ்ய அரசாங்கங்கள், இந்த எண்கள் வடிவத்தைப் பற்றி என்ன முடிவு செய்தாலும் அது பற்றிக் கவலைப்படாமல் எண்களின் தேவநாகரி வடிவங்களையே பயன்படுத்து வார்கள் என்று நம்புகிறோம்.

உண்மையில் எண்களின் இந்த வடிவத்தைப் பொது மக்கள் பலரும் நன்கு அறிந்து பயன்படுத்தி வருவதானால் அந்தப் பிராந்தியங்களில் உள்ள ராஜ்ய அரசாங்கங்களும் அவர்களுடைய வெளியீடுகளிலும் பொது மக்களுக்கு விடுக்கின்ற அறிக்கைகளிலும் இதே எண்களை, கூடுமானால் பன்னாட்டு எண்களோடு சேர்த்துப் பயன்படுத்தி வருவார்கள் என்றே நினைக்கின்றோம்.

இது பற்றி இந்திய அரசாங்கத்தின் இப்பொழுதைய கொள்கை கீழ் வருமாறு :—

"இந்திய எண்களின் பன்னாட்டு வடிவங்களையே கூடுமானவரை பயன் படுத்திப் பெருக்கவேண்டும் என்பதே கொள்கையாகும். என்றா லும் பல்வேறு அமைச்சுக்களையும் பொறுத்த மட்டில் அவர்களுடைய ஆவணங்களில் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்ட ஆவணங்களுக்கு எண் களின் தேவநாகரி வடிவை வேண்டுமானால் பயன் படுத்திக்கொள்ள லாம் என்று அமைச்சர் சபை விட்டு விட்டது."

இந்த முடிவின் மூலம் அமைச்சுச் சபை என்ன கருதுகிறது என்றால் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள பெருவாரியான பொது மக்களுக்குப் பன்னாட்டு எண் வடிவம் தெரியாது ஆகையால் ஹிந்தியில் மொழி பெயர்க் கப்படும் வெளியீடுகளில் எண்களின் தேவநாகரி வடிவைப் பயன் படுத்துவது நலம் என்றே கருவதுதாகத் தெரிகிறது. அமைச்சுக்கள் எந்த வகை யான வெளியீடுகளுக்குத் தேவநாகரி எண் வடிவங்களைப் பயன் படுத்த வேண்டும் என்பதை தாமே சிந்தித்து முடிவுசெய்ய உரிமை வழங்கப்படுகிறது.

---

[1] பகுதி XIII பாராக்கள் 8—12.

ஏற்கெனவே ஒப்புக்கொண்ட கொள்கைகளை எங்கு நிறைவேற்றலாம்; எங்கு விட்டுக் கொடுக்கலாம் என்பதை மட்டும் இந்த அமைச்சுக்களுக்குக் கொடுத்திருந்தால் மேலே கண்ட முடிவு பொருத்தமுடையதாக இருக்கும்.

இப்பொழுதைக்கும், 1960-ல் நியமிக்கப்படப் போகின்ற அடுத்த கழகம் இந்தக் கேள்வியைப் புனராலோசனை செய்வதற்கும் இடையில் யூனியனின் எந்த ஒரு காரியத்திற்காகவாவது எண்களின் தேவநாகரி வடிவைப் பயன் படுத்த வேண்டும் என்பதற்கு ஜனாதிபதி உத்திரவு பிறப்பிக்கவேண்டிய தேவை உண்டா என்பதுபற்றி நாங்கள் சிபார்சு செய்ய வேண்டும். யூனியனின் எந்த ஒரு காரியத்திற்கும் எண்களின் பன்னாட்டு வடிவைப் பயன் படுத்துவதை விட தேவநாகரி வடிவைப் பயன் படுத்துவது அதிகப் பயனளிக்கும் என்று சொல்லக்கூடிய எந்த ஒரு காரியத்தையும் நாங்கள் கண்டு பிடிக்காததால் இதுபற்றி நாங்கள் ஒரு சிபார்சும் செய்யவில்லை.

பகுதி IX

நீதி மன்றங்களும் சட்ட மொழியும்—(1)

சட்டம் செய்யும் மொழி

இந்தப் பகுதியிலும் இதனை அடுத்த இரண்டு பகுதிகளிலும் சட்டஞ் செய்வதற்குரிய மொழிபற்றியும், நீதி மன்றங்களுக்குரிய மொழிபற்றியும், சட்டக் கல்வி போதிப்பதற்குரிய மொழிபற்றியும், இவற்றில் மாற்றம் செய்வதுபற்றியும் ஆராயலாம். முதலில் பாராளு மன்றம், ராஜ்ய சட்ட சபைகள் ஆகிய இரண்டிலும் சட்டம் செய்யும் மொழிப் பிரச்னைபற்றி ஆராயலாம்.

இந்தச் சட்ட மன்றங்களில் பேசுவதற்கும், ஆராய்வதற்கும் உரிய மொழி எது என்பதற்கும், அவை சட்டம் செய்கின்ற பொழுது பயன்படுத்தும் மொழி எது என்பதற்கும் ஒரு வேறுபாடு காண்டல் வேண்டும். இங்ஙனம் வேறுபாடு காண்பதற்குரிய காரணத்தைக் கீழே விளக்குகிறோம் :—

1. பாராளு மன்றத்தைப் பொறுத்த மட்டில் அரசியலமைப்பின் 120-வது விதி அந்த அமைப்பின் 348-வது விதியின் பிரிவினைகளுக்கு உள்ளடங்கிப் பாராளு மன்ற அலுவல்கள் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ நடைபெறலாம் என்று பேசுகிறது. இதையல்லாமல் எந்த ஒரு உறுப்பினராவது ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோ தம்முடைய கருத்தைத் தெரிவிக்க முடியாவிட்டால் அவர் தம்முடைய தாய்மொழி மூலம் பேசலாம் என்ற ஒரு புறநடையும் உள்ளது. 120-வது விதியின் (2)-வது பிரிவுப்படி அரசியலமைப்புத் தொடங்கி பதினைந்து வருஷங்கள் கழித்து (அதாவது 1965-ம் வருஷம் ஜனவரி மாதம் 26-ந் தேதி) 120-வது விதியில் உள்ள "ஆங்கிலத்திலும்", என்ற வார்த்தையை விட்டுவிட வேண்டும். வேறு வகையாகப் பாராளு மன்றம் சட்டம் செய்தால் ஒழிய, ஆங்கிலத்திலும் என்ற சொல் போய்விட வேண்டும். எனவே நிகழ் காலத்திற்குப் பாராளு மன்ற அலுவல்களை ஹிந்தியிலோ, ஆங்கிலத்திலோ, சபா நாயகரின் உத்திரவு பெற்றுத் தாய்மொழியிலோ நடத்தினாலும் உட் பிரிவு (2)-ஐ ஒட்டி 1965-க்குப் பிறகு, பாராளு மன்றம் வேறு வகையாக சட்டம் செய்தால் ஒழிய, ஆங்கிலம் பெற்றிருக்கின்ற இடம் மறைந்து விடும்.

ராஜ்ய சட்ட மன்றங்களைப் பொறுத்த மட்டில், 210-வது விதி, சட்ட மன்றங்களின் அலுவல்கள் அந்த ராஜ்யத்தின் ஆட்சி மொழியிலாவது, அல்லது ஹிந்தியிலாவது, அல்லது ஆங்கிலத்திலாவது நடை பெறுவதுடன் மன்றத் தலைவரின் ஆணையின்படி வேண்டுமானபொழுது ஒரு உறுப்பினர் அவருடைய தாய்மொழியிலும் பேச உரிமை தருகிறது. விதி 210 (2)-ன்படி 1965-க்குப் பிறகு ராஜ்ய சட்ட மன்றங்களிலும், வேறு வகையாகச் சட்டம் செய்தால் ஒழிய, ஆங்கிலம் நீக்கப்பட்டுவிடும்.

தேவநாகரியில் எழுதப்படும் ஹிந்தியை ஆட்சி மொழியாகப் பீஹார், மத்திய பாரதம், ராஜஸ்தானம், உத்தரப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன. மத்தியப் பிரதேசம் பால்போத் எழுத்துக்களில் எழுதப்படும் மராத்தி மொழியையும், தேவநாகரி எழுத்துக்களில் எழுதப்படும் ஹிந்தியையும் ராஜ்ய ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளது. ஒரிஸா, ஒரிய மொழியையும், சௌராஷ்டிரா, குஜராத்தி மொழிகளையும், ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொண்டுள்ளன. ஜம்மு, காஷ்மீர் ராஜ்யம் அதனுடைய பழைய அரசியலமைப்பின்படி உருதுவை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ளது. ஏனைய ராஜ்யங்கள் இதுவரையில் ஹிந்தியையோ அல்லது அவற்றின் பிராந்திய மொழிகளையோ ஆட்சிமொழிகளாக ஏற்றுக்கொள்ளச் சட்டம் செய்யவில்லை.

2. பல்வேறு ராஜ்யங்களில் சட்ட மன்றங்களில் ஆங்கிலத்தையும், ஹிந்தியையும் பிராந்திய மொழிகளையும் பயன் படுத்துவது பற்றி எங்களுக்குத் தந்த அறிக்கைகளை பிற் சேர்க்கை எட்டில் சுருக்கித் தந்துள்ளோம். 1954-ல் பல்வேறு ராஜ்ய சட்ட மன்றங்களில் பேசப்பட்ட பேச்சுக்களின் சத விகிதக் கணக்கை எங்களுக்குக் கிடைத்த வரையில் இந்தப் பிற் சேர்க்கையிலேயே தந்துள்ளோம்.

மன்ற உறுப்பினர்கள் ஹிந்தியிலோ, ஆங்கிலத்திலோ அல்லது ராஜ்ய ஆட்சி மொழியிலோ பேச முடியாத பொழுது சபா நாயகரின் ஆணையைப் பெற்றுக்கொண்டு தாய்மொழி மூலம் பேசலாம் என்று விதி வகுத்ததில் சபைகளின் நடைமுறையைப் பொறுத்த மட்டில் எந்த விதமான இடையூறும் இருப்பதாகத் தெரியவில்லை. அன்றியும் இன்ன மொழிகளில்தாம் பேசலாம் என்று வரையறுத்தலினாலும் எந்த விதமான தொல்லையும் ஏற்பட்டதாக எங்களுக்குத் தகவல் கிடைக்கவில்லை. வினாக்களுக்கு பதிலளிக்கின்றபொழுது, அந்த முறை இடத்திற்கு இடம் மாறுபடுவதாகத் தெரிகிறது. சில விடங்களில் உறுப்பினர்களின் வசதிக்காக அந்தச் சட்ட மன்றங்கள் பயன் படுத்துகின்ற மொழியில் அல்லது மொழிகளில் மற்ற உறுப்பினர்களின் வசதிக்காக இவை மொழி பெயர்க்கப்படுவதாயும் தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு பழக்கத்தை அனைவருமே மேற்கொள்ளலாம் என்று நாங்கள் நினைக்கிறோம். சட்ட மன்றங்களின் நடைமுறையைப் பொறுத்த மட்டில் இம்முறை நன்கு விளங்கியதே. அரசிலமைப்புச் சட்ட மன்றங்களில் உறுப்பினராக வருபவர்கள் எந்த அடிப்படைத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்று ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆதலால் அந்தந்தத் தொகுதிகளில் வாழ்கின்ற மக்களுடைய பிரதிநிதிகளாகச் சட்ட மன்றங்களுக்கு வருகின்றவர்கள் சட்ட மன்றங்களில் பயிலும் மொழியில் பயிற்சி இல்லாதவர்களாக இருந்தால் அவர்களுக்குத் தெரிந்த மொழியிலேயே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். மன்றங்களின் நடைமுறைகளை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கவேண்டும். ஆதலால் நடைமுறைகளை அவர்களுக்குத் தெரிந்த மொழியில் கூடுமானவரை மொழி பெயர்த்துத் தர வழிதுறைகளை மேற்கொள்ள வேண்டும். 1965-ம் ஆண்டு ஜனவரி 25-க்குப் பிறகு 120-வது விதியின்படி பாராளு மன்றத்தில் ஒரு உறுப்பினர் ஹிந்தியில் தம் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாவிட்டால், பாராளு மன்றம் வேறு விதமான சட்டம் செய்தால் அன்றி, சபா நாயகரின் உத்திரவு பெற்று அவர் தம்முடைய தாய் மொழியில் பேசலாம். 1965-க்குப் பிறகு ஹிந்தியில் பேச முடியாத ஓர் உறுப்பினர் தாய் மொழி மூலமும் பேச முடியாமல் ஆங்கிலத்தில் பேச விரும்புகின்ற சூழ்நிலையைச் சில காலத்திற்குக் காணலாம். இந்த சந்தர்ப்பங்களில் சபா நாயகர் அந்த உறுப்பினரை ஆங்கிலத்தில் பேச அனுமதிக்கும்படி சபா நாயகருக்கு உரிமை வழங்க வேண்டும். இந்த உரிமை வழங்கக் கூடிய சட்டத்தை 120 (2) விதியின்படி பாராளு மன்றம் புதிய சட்ட மூலம் செய்யலாம். ஆதலால் 1965-க்குச் சற்று முன்னர் இத்தகைய ஒரு சட்டத்தை செய்வது பற்றிப் பாராளு மன்றம் சிந்திக்க வேண்டும். இதே காரணங்களுக்காக ராஜ்ய சட்ட மன்றங்களிலும், உறுப்பினர்கள் ஆட்சி மொழியிலோ, ஹிந்தியிலோ, தாய் மொழியிலோ பேச முடியாத பொழுது ஆங்கிலத்தை உபயோகிக்க உரிமை வழங்கப்பட வேண்டும். பாராளு மன்றம் போலவே இப்படி உரிமை வழங்க ராஜ்ய சட்ட மன்றங்களும் விதி 210 (2) மூலம் உரிமை பெற்றுள்ளன. ஆதலால் இந்த உரிமையை வழங்கலாமா வேண்டாமா என்பது பற்றி ராஜ்ய சட்ட மன்றங்கள் காலாகாலத்தில் ஆராய வேண்டும்.

ஓர் உறுப்பினர் ஏனைய உறுப்பினர்களுக்குப் புரியாத ஒரு மொழியில் பேசினால் இந்த இடையூற்றைப் போக்க அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே அப்பேச்சை மற்றவர்களுக்கு மொழி பெயர்த்துத் தரும் பிரச்னையை நாங்கள் ஆராய்ந்துள்ளோம். தற்காலத்தில் பன்னாட்டு மாநாடு

களில் இப்பழக்கம் சாதாரணமாக இருந்து வருகிறது[1]. இதன் தேவை ராஜ்ய சட்ட மன்றங்களைவிடப் பாராளு மன்றத்திற்கே மிகுதிப்படும். இவ்வாறு செய்வது தேவையா என்ற பிரச்னையே, பல உறுப்பினர்களுக்குப் புரியாத ஒரு மொழியில், அவசியம் காரணமாகச் சில உறுப்பினர்கள் எவ்வளவு தரம் பேச விரும்புவார்கள் என்பதைப் பொறுத்தே இருக்கிறது. இத்தகைய ஒரு தேவை பாராளு மன்றத்தில் தேவைப்பட்டால், சில உறுப்பினர்கள் பிராந்திய மொழிகளில் பேசும் பொழுது அதே நேரத்தில் அதை மொழிபெயர்த்துத் தரும் வசதிகளைச் செய்வது நடைமுறையில் முடியாத காரியமன்று. என்றாலும் மிகப்பல மொழிகளில் இவ்வாறு பேசப்பட்டால் ஒரே நேரத்தில் அவை அனைத்தையும் மொழி பெயர்த்துத்தர ஆட்கள், கருவிகள் என்ற முறையில் பெரிய அளவில் ஏற்பாடுகள்செய்ய வேண்டி நேரிடும்.

பாராளு மன்றத்திலும், ராஜ்யசட்ட மன்றங்களிலும் அன்றாட நடைமுறைகளில் ஏற்படும் மொழிப் பிரச்னைக்கு இவைகள் போதுமான ஏற்பாடுகள் ஆகும்.

3. இந்தச் சட்ட மன்றங்களில் நடை முறைக்கும், பேசுவதற்கும் உள்ள மொழித் தேவைக்கும், அவைகள் செய்யும் சட்டங்களின் மொழித் தேவைக்கும் ஒரு வேறுபாட்டைக் காணவேண்டும்.

கேள்வி கேட்டலும், விடை வாங்குதலும், தீர்மானங்களை நிறைவேற்றுதலும், சட்ட மூலத்தைப் பற்றி ஆராய்வதும், அதாவது "ஆராய்ச்சிப் பகுதிகள்" அனைத்தும் பங்கெடுத்துக் கொள்கின்ற எல்லா உறுப்பினர்களும், புரிந்து கொண்டு கடமையை நிறைவேற்ற வேண்டிய பகுதிகளாகும். ஆனால் சட்டத்தைச் செய்வதற்குரிய மொழித் தேவை வேறு வகைப்பட்டது. சட்டம் செய்யப்படுகின்ற மொழி தெளிவுடையதாக, சந்தேகத்துக்கு இடமில்லாததாக வரையறுத்ததாக இருத்தல் வேண்டும். அந்தச் சட்டங்கள், நாட்டிலுள்ள பல்வேறு நீதி மன்றங்களாலும் அர்த்தம் செய்யப்பட வேண்டியனவாகும். இந்தச் சட்டங்களை அர்த்தம் செய்யும் பொழுது இதனை இயற்றியவர்களின் எண்ணம் என்ன, எதற்காக இயற்றினார்கள், அவர்களுடைய கருத்து என்ன என்பதைப் பற்றி நீதி மன்றங்கள் கவலைப்படாமல் இந்தச் சட்டங்களின் வார்த்தைகளுக்கு இலக்கணப்படி என்ன பொருள் உண்டு என்பதையே ஆராயப் புகும். விவாதப் பகுதியில், விவாதத்தில் பங்கு கொள்கின்றவர்கள் பேசுவதற்குரிய வசதியே பெரிதாகக் கருதப்பட வேண்டும். அதற்குரிய மொழியையே மேற் கொள்ள வேண்டும். ஆனால் சட்டம் இயற்றப்படுகின்ற மொழியில் முக்கியமாகக் கருதப்பட வேண்டியவை வரையறுத்த பொருள், சுருக்கம், ஐயத்திற்கு இடமில்லாத தன்மை என்பவையே ஆகும்.

இந்த வேறுபாட்டைக் கருதியே அரசியலமைப்பின் விதி 348 (1) (பி) கீழ்க்கண்டவாறு பேசுகிறது: பாராளு மன்றத்தில் கொணரப்படும் சட்ட மூலத்தின் வாக்கியங்கள் அல்லது திருத்தங்கள் ஆகியவைகளும், ராஜ்ய சட்ட மன்றங்களில் புகுத்தப்படும் சட்ட மூலங்கள், திருத்தங்கள் ஆகியவைகளும், சட்டத்தின் பகுதியும், உடனடிச் சட்டம் முதலியவைகளும் ஜனாதிபதியினாலோ, கவர்னரினாலோ, ராஜப் பிரமுகரினாலோ வெளியிடப்பட்டாலும் ஆணைகள், விதிகள், ஒழுங்கு முறைகள், துணை விதிகள் ஆகிய அனைத்தும் சுருங்கச் சொன்னால் பாராளு மன்றமும், ராஜ்ய சட்ட மன்றங்களும் நிறைவேற்றுகின்ற அத்தனை விதிகளும், பாராளு மன்றம் வேறு வகையாக முடிவு செய்தால் அன்றி ஆங்கில மொழியிலேயே இருக்கும்.

---

[1] இந்தச் சமகால மொழிபெயர்ப்புகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது பற்றி யூனஸ்கோவிலும், ஐரோப்பிய கவுன்சிலிலும் மொழிப் பெயர்ப்பாளராக உள்ளவரும், மொழிப் பேராசிரியரும் ஆகிய எம். ஸ்டீபன் பிரயசல் என்பவரிடம் 1955 ஆம் அக்டோபர் மாதம் 15-ந் தேதி ஒரு சுவையான விவாதம் நடத்தினோம். அவர் எப். ஏ. ஓ. கூட்டத்தில் பங்கு கொள்வதற்காக இந்தியா வந்திருந்தார். இந்த கழகம் பூனாவுக்குச் சென்றிருந்த பொழுது அவரைச் சந்தித்துப்பேசியது. ஸ்டீபன் பிரயசல் பேசிய பேச்சின் பிரதி அனுபந்த நூலில் பதினோராவது பிரிவாகத் தரப்பட்டுள்ளது. (அச்சிடப்பட வில்லை.)

இந்நிலையில், யூனியன் ஆட்சி மொழியாகப் பதினைந்து வருஷ முடிவில் ஹிந்தி மொழியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற சட்டம் பாராளு மன்றத்தில் சட்ட மொழியாக எது இருக்க வேண்டும் என்பதைப் பாதிக்கவில்லை. சட்ட மொழியாக எந்த மொழி இருக்கவேண்டும் என்பதற்குப் பாராளு மன்றம் இனித்தான் புதிய விதி ஒன்று அமைக்க வேண்டும். அதாவது பதினைந்து வருட காலங் கடந்த பிறகு யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தி மொழி வருவது போல, சட்டம் செய்யும் மொழியாக ஹிந்தி இயல்பாகவே வந்துவிட முடியாது. இவ்வாறு வர வேண்டுமானால் இதற்கென்றே பாராளு மன்றம் தனிச் சட்டம் செய்ய வேண்டும். இதனுடைய அடிப்படைக் காரணம் சட்டம் செய்யும் மொழி ஆட்சி மொழியிலிருந்து தனிச் சிறப்புடையது என்பதே ஆகும். மேலும் சட்ட மொழிக்குத் தேவைப்படுகின்ற சில இன்றியமையாத இயல்புகள் 1949-ல் அரசியலமைப்புச் செய்யப்படும்பொழுது, ஹிந்தி மொழிக்கு எப்பொழுது வரும் என்று எதிர்ப்பார்க்க முடியவில்லை.

ராஜ்ய சட்ட மன்றங்களைப் பொறுத்த வரையிலுங்கூட, பாராளு மன்றம் சட்ட மூலமாக வேறு வழி செய்தால் அன்றிப் பாராளு மன்றத்தைப் போலவே ஆங்கில மொழியாகவே இருந்து வரும். 348-வது விதி உட்பிரிவு (3)-ன்படி ஒரு ராஜ்ய சட்ட மன்றம் ஆங்கிலத்தையல்லாத வேறு மொழியில் அதனுடைய சட்ட மூலம், சட்டம், உடனடிச் சட்டம், ஆணை, விதி, ஒழுங்குமுறை, துணைச் சட்டம் ஆகியவற்றை நிறைவேற்றினால் இவற்றில் ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்றையும் அந்த ராஜ்யத்தில் கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர் வெளியிட வேண்டும். இவ்விரண்டினுள் ஆங்கில மொழியிலுள்ள பகுதியே அதிகாரப் பதிப்பாகக் கருதப்படும். கீழே உள்ள அட்டவணையில் எந்தெந்த ராஜ்யங்கள் தங்களுடைய சட்ட மூலம் சட்டம் முதலியவற்றிற்கு எந்தெந்த மொழிகளைக் கைக்கொள்ளலாம் என்று சட்டம் செய்துள்ளன, என்பதைத் தெரிவித்துள்ளோம்.

ராஜ்யம்.	நியமிக்கப்பட்ட மொழி(கள்).	எந்த ஆணையின்படி.
(1)	(2)	(3)
	“ ஏ ” பிரிவு ராஜ்யங்கள்.	
பீஹார்	ஹிந்தி	பீஹார் ஆட்சி மொழிச் சட்டம் 1950, பீஹார் சட்ட மொழிச் சட்டம் 1955.
மத்தியப் பிரதேசம்.	ஹிந்தியும், மராத்தியும்.	மத்தியப் பிரதேச ஆட்சி மொழிச் சட்டம் 1950.
ஒரிஸா	ஒரியா	ஒரிஸா ஆட்சி மொழிச் சட்டம் 1954.
உத்தரப் பிரதேசம்	ஹிந்தி	உத்தரப் பிரதேச மொழிச் (சட்ட மூலம், சட்டம்) சட்டம் 1950, உத்தரப் பிரதேச ஆட்சி மொழி சட்டம் 1951.
	“ பி ” பிரிவு ராஜ்யங்கள்.	
ஜம்மு, காஷ்மீர் ..	உருது	ஜம்மு, காஷ்மீர் அரசியலமைப்புச் சட்டம் (விகே) 1996 (கி.பி. 1939).
மத்திய பாரத் ..	ஹிந்தி	மத்திய பாரத் ஆட்சி மொழிச் சட்டம் 1950.
ராஜஸ்தான் ..	ஹிந்தி	ராஜஸ்தான் ஆட்சி மொழிச் சட்டம் 1952.
சௌராஷ்டிரா ..	குஜராத்தி ..	சௌராஷ்டிர ஆட்சி மொழிச் சட்டம் 1950.

4. இந்த ஏற்பாடுகளின் பயன் என்னவென்றால் எந்த ராஜ்யங்களில் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்று சட்டம் செய்யவில்லையோ அந்த ராஜ்யங்களில் ஆங்கிலத்தின் மூலமே சட்டங்கள் செய்யப்படவும், எந்த ராஜ்யங்கள் பிராந்திய மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டுள்ளனவோ அந்த ராஜ்யங்களில் இயற்றப் படும் சட்டங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அந்த மொழி பெயர்ப்பைக் கவர்னர் அல்லது ராஜப் பிரமுகரின்[1] கையெழுத்தின் பேரில் வெளியிடப் பெற்று, அதுவே அதிகார பூர்வமானப் பிரதியாக கருதப்படும். நிறை வேற்றப்பட்ட ஒன்று சட்ட மூலமான அதிகாரத்தைப் பெறும்பொழுது அது எந்த மொழியில் ஆராய்ந்து சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்டதோ அந்த மொழியில் இல்லாமல் ஆங்கிலத்தில் இருப்பது பொருத்த மற்றது போலக் காணப்படும். இவ்வாறு மொழி பெயர்க்கப்படும் பொழுது சட்ட மன்றத்தார் எந்தக் கருத்தோடு இவற்றை நிறைவேற்றினார்களோ அந்தக் கருத்தை இந்த மொழி பெயர்ப்புகளும் கொண்டிருக்கும் என்று நம்புகிறோம்.

எங்களுடைய கருத்துப்படி அதிகார பூர்வமான நிறைவேற்றங்கள் எல்லாம் பாராளு மன்றத்திலும், ராஜ்ய சட்ட மன்றங்களிலும் ஹிந்தி மொழி யிலேயே இருக்க வேண்டும் என்பது ஒரு புறம் இருக்க, பொது மக்களி னுடைய வசதியைக் கருதிப் பல்வேறு மொழிகளிலும் அவை மொழி பெயர்த்து வெளியிடப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். ராஜ்ய சட்ட மன்றங்களைப் பொறுத்த மட்டில் இவற்றைப் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்த்தால் போதுமானது. ஆனால் பாராளு மன்றச் சட்டங்களைப் பொறுத்த மட்டில் நாட்டில் வழங்கி வரும் முக்கியமான மொழிகளிலெல் லாம் இவற்றை மொழி பெயர்த்து வெளியிடவேண்டும்.

5. அடுத்துள்ள கேள்வி மிகவும் முக்கியமானதொன்றாகும். ராஜ் யங்களின் நிறைவேற்றங்கள் அந்தந்த ராஜ்யங்களில் வழங்குகின்ற பிராந் திய மொழிகளில் இயற்றப்படலாமா அல்லது ஹிந்தியில் தான் இயற்றப்பட வேண்டுமா என்பதுதான் அந்த வினா. சட்ட மொழியாக இப்போழுதுள்ள ஆங்கிலம் நீக்கப்படும்பொழுது எந்த மொழியில் அது வரவேண்டும் என்பதே பிரச்னை.

பல்வேறு காரணங்களை முன்னிட்டு யூனியன் மொழியாகவும், ராஜ் யங்களின் இடையே வழங்குகின்ற மொழியாகவும் உள்ள ஹிந்தி மொழி யிலேயே நாட்டின் நிலையான சட்டங்கள் இருக்க வேண்டும் என்று கருது கிறோம். ஒரே மாதிரியான சட்டக் கொள்கையை கொண்டுள்ள நாம் மிக உயர் நீதி மன்றத்தையே தலையான நீதி வழங்கும் இடமாகக் கொண் டுள்ளோம். மேல் முறையீடு செய்வதற்கும், இறுதியான விடுதலைகள் பெறுவதற்கும் மிக உயர் நீதி மன்றமே பயன் படுகிறது. மிக உயர்நீதி மன்றம் ஒரே உறுப்பாகத் தொழிற்பட வேண்டுமேயானால் அதனுடைய நடைமுறைகள் ஒரே மொழியில்தான் இருத்தல் வேண்டும். ஏனென்றால் அங்குள்ள நடுவணர்கள் நாட்டிலுள்ள எல்லாப் பிராந்திய மொழிகளையும் கற்று இருத்தல் என்பது இயலாத காரியம்.

நீதி மன்றங்கள் தங்களுடைய முடிவுகளைத் தரும்பொழுது நிறை வேற்றங்களினுடைய அதிகார பூர்வமான சொற்களை வைத்தே தருகின்றன. ஆதலின் ஒரு நிறை வேற்றத்தை அதனுடைய மொழி பெயர்ப்பை படித்து உங்களுடைய முடிவுகளைத் தாருங்கள் என்று நீதி மன்றங்களைக் கேட்பது முறையற்றதாகும். சட்ட நிறை வேற்றங்கள் அனைத்தும் ஒரே மொழியில்

---

[1] இந்த விஷயம் பற்றி முடிவான அபிப்பிராயம் ஒன்றும் தெரிவிக்கப்பட்டாதாகத் தெரியவில்லை. இந்தக் குறிப்பிட்ட பிரச்னை பற்றி மிக உயர் நீதி மன்றத்தின் முடிவு எது என்றும் தெரியவில்லை. அலஹாபாத் உயர் நீதி மன்றம் ஸஹீர் அஹமத் வர்ஸஸ் உத்திர பிரதேச அரசாங்கம் என்ற வழக்கில கொடுத்துள்ள முடிவு ஒன்றுதான் எங்களுக்கு இதுவரை தெரிய வந்ததாகும். ஏ. ஐ. ஆர். 1954 அலஹாபாத், பக்கம் 257.

இது பற்றிய ஏனைய குறிப்புக்கள் அனுபந்த நூலில் பதினொலாவது பகுதியாக கொடுக்கப் பட்டுள்ளன. (அச்சிடப்படவில்லை.)

இருந்தால் ஒழிய நீதி முறையில் நாட்டின் ஒற்றுமையை நிலை நிறுத்த முடியாது. நிலையான சட்டங்களின் நூல் ஒரே மொழியில்இருக்க வேண்டும் என்பதற்கு இதனையல்லாத பல வலுவான காரணங்களும் உண்டு. இந்திய அரசியலமைப்பு அனைவருக்கும் பொதுவான பிரஜா உரிமையை வழங்குகிறது. அரசியலமைப்பின்படி எல்லா மனிதர்களும் சட்டத்தின் எதிரே சமமாகக் கருதப்படுகிறார்கள். இந்திய நாடு முழுவதிலும் எங்கு வேண்டுமானாலும் சுதந்திரமாகச் சென்று வரவும், எங்கு வேண்டுமானாலும் சென்று குடியிருக்கவும், எங்கு வேண்டுமானாலும் சொத்தை வாங்கி, பாதுகாத்து விற்கவும், எந்தத் தொழிலை வேண்டுமானாலும் மேற்கொள்ளவும் உரிமை பெறுகிறார்கள். எனவே ஒரு ராஜ்யத்தின் சட்டம் அந்த ராஜ்யத்தில் உள்ளவர்களுக்கு மட்டும் அல்லாமல், நாட்டில் உள்ள அனைவருக்கும் பொது ஆதலால் அந்த ராஜ்யத்தில் உள்ள மொழிக்கூட்டத்தாருக்கு மட்டும் புரிந்து மற்றவர்களுக்குப் புரியாத ஒருமொழியில் இருப்பது பொருத்தமற்றதாகும். மேலும் ஒரு ராஜ்யத்தில் இயற்றப்படும் சட்டம் நாட்டின் பிற ராஜ்யங்களில் உள்ளவர்களுக்கும் தேவைப்படலாம். ஒரு ராஜ்யத்தில் உள்ள நீதி மன்றங்கள், அந்த ராஜ்யத்தின் எல்லைக்கு அப்பால் உள்ளவர்களையும் அழைப்பதற்கு உரிமை பெற்றுள்ளது ஆதலின் வெளி ராஜ்யங்களில் உள்ளவர்களையும் வருமாறு பணிக்கலாம். நாட்டின் பல்வேறு பாகங்களிலுள்ள நீதி மன்றங்கள் தங்களுடைய எல்லைக்குள் உள்ள ராஜ்யங்கள் இயற்றிய சட்டங்களையல்லாமல் அடுத்த ராஜ்யங்களின் சட்டங்களையும் அர்த்தம் செய்ய வேண்டிய பொறுப்புடையன ஆதலால் சட்டங்கள் எந்த ராஜ்யத்தில் சட்ட மன்றங்கள் அவற்றை இயற்றினவோ அந்த எல்லையைத் தாண்டி அப்பாலும் செல்கின்றன. எங்கே இந்தச் சட்டங்கள் ஒன்றுக்கொன்று பொருந்தாமல் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் பாராளுமன்றச் சட்டங்களே நிலவும் என்றும், பேசப்படுகிறது. அதாவது கருத்து மாறுபாடு வரும்பொழுது ராஜ்ய சட்டங்களை நீக்கிப் பாராளுமன்றச் சட்டங்கள் வலிமை பெறும். எனவே சட்ட நூல்கள் பனிரண்டுக்கும் மேற்பட்ட பிராந்திய மொழிகளில் இருக்குமேயானால் ஒவ்வொரு நிறைவேற்றமும் பனிரண்டுக்கும் மேற்பட்ட மொழிகளில் அமைய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு அவற்றைக் கொண்டு செலுத்த வேண்டிய மிக உயர்நீதி மன்றம், கீழ் மன்றங்கள் ஆகியவைகள். கூடித் தொழிற்படமுடியாமல் போய்விடும். இவற்றை யெல்லாம் ஆராயும்பொழுது நாட்டின் நிலையான சட்ட புத்தகத்தை ஒரே மொழியில் தான் வைக்க வேண்டும் என்பதும், ராஜ்யங்கள் சட்டம் இயற்றும்பொழுது யூனியன் மொழியிலேயே அதாவது ஹிந்தி மொழியிலேயே சட்டங்களை இயற்ற வேண்டும் என்பதும் நமக்கு நன்கு விளங்குகிறது.

6. எங்களுடைய கருத்துப்படி சட்டமன்றங்களில் பேசப்படும் மொழி அனைவராலும் புரிந்துகொள்ளக் கூடியதாய் இருத்தல் வேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். அந்த ராஜ்யத்தின் ஆட்சி மொழியாகவே இது பெரும்பாலும் இருக்கும், என்றாலும் அதிகார பூர்வமான நிறைவேற்றங்கள் யூனியன் மொழியிலேயே இருத்தல் வேண்டும். இவ்விரண்டுக்கும் உள்ள மாறுபாட்டைப் போக்குவது முடியும். எப்படி என்றால் சட்ட மன்றங்கள் ஒரு விஷயத்தைக் குறித்து விவாதிக்கும் நிலையையும், சட்டங்கள் செய்யும் நிலையையும் வேறு பிரித்துவிடக் கூடுமேயானால் இது முடியும். உண்மையைக் கூறுமிடத்துப் பல்வேறு ராஜ்ய சட்ட மன்றங்களில் இப்பொழுதுகூட இது நடைபெற்று வருகிறது. விவாதிக்கும் பொழுது ராஜ்ய மொழியிலேயே விவாதங்கள் நடை பெற்று, சட்ட நிறைவேற்றங்கள் அனைத்தும் ஆங்கில மொழியிலேயே வெளியிடப்பெற்று, அவையே அதிகார பூர்வமானவைகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஆங்கிலம் மூலமாக வெளியிடுவதை ஹிந்தி மூலமாக வெளியிடவேண்டும் என்று சொல்வதில் ஒன்றும் தொல்லை இல்லை. இதே காரணங்களினால் எல்லாச் சட்டங்களும் நிலையான கட்டளைகளும், விதிகளும், ஒழுங்கு முறைகளும் துணைச் சட்டங்களும் பாராளு மன்றத்திலேயோ ராஜ்ய சட்ட மன்றங்களிலேயோ வெளியிடப்படும்பொழுது சட்டப் புத்தகம் எந்த மொழியில் உள்ளதோ அதே ஹிந்தி மொழியில் இவையும் இருக்கலாம்.

பகுதி X

நீதி மன்றங்களும் சட்ட மொழியும்—(2)

நீதி மன்றங்களில் வழங்கும் மொழி

சென்ற பகுதியில் சட்டம் செய்யவேண்டிய மொழி பற்றி ஆராய்ந்தோம். ஆதலின் இந்தப் பகுதியில் நாட்டிலுள்ள நீதி மன்றங்களில் எந்த மொழி வழங்கப்படவேண்டும் என்பதுபற்றி ஆராயலாம்.

"நீதி மன்றங்கள்" என்ற சொல்லில் எவ்வளவு விரிந்த பொருளைக் கொள்கிறோம் என்பது பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். அதாவது நீதி மன்றங்களின் பல்வேறு வகைகளையும், நடுவர் மன்றங்களையும், ஆதி வழக்கு, மேல் முறையீடு ஆகிய எல்லாவற்றையுமே இச் சொல்லில் குறிக்கின்றோம். எந்த நீதி மன்றங்கள் தீர்ப்புகளையும், முடிவுகளையும் வழங்குகின்றனவோ அவையெல்லாம் இந்த மொழிப் பிரச்னைக்கு உட்பட்டவையே.

இந்த நாட்டின் நீதி முறையில் கீழே உள்ள அமைதி நீதி மன்றம், குற்றம் கடியும் நீதி மன்றம், உயர் நீதி மன்றம் இவற்றில் தொடங்கி மிக உயர்நீதி மன்றம் வரையில் பல்வேறு படித்தரமான நீதி மன்றங்களும், நடுவர் மன்றங்களும் உள்ளன. ஏணியின் அடிப்படியில் கிராமப் பஞ்சாயத்துக்கள் நீதி செலுத்தும் சக்தியைக் கிராமங்களில் பெற்றுள்ளன. அரசியலமைப்பின் 40-வது விதி ராஜ்யங்களுக்கு வழிகாட்டித் துறையில் கீழ்க் கண்டவாறு பேசுகிறது. "ராஜ்யங்கள் கிராமப் பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி அவை ஸ்தல சுயாட்சி செலுத்தும் பகுதிகளாக நடைபெறுவதற்கு வேண்டிய அதிகாரத்தையும் சக்தியையும் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்." இந்த வழிகாட்டியை ஒட்டிப் பல்வேறு ராஜ்யங்களில் பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. இன்னும் சில ராஜ்யங்களில் இது ஆலோசனையில் இருந்து வருகிறது. இதன்படி கிராமப் பஞ்சாயத்துக்களுக்குக் குறிப்பிட்ட அளவு, அமைதி நீதி வழங்கவும், குற்றம் கடியும் நீதி வழங்கவும் உரிமைகள் வழங்க ஆலோசனை இருந்துவருகிறது. கிராமப் பஞ்சாயத்துக்களை அல்லாமல் அமைதி நீதி வழங்கவும், குற்றம் கடியும் நீதி வழங்கவும், அடிப்படையில் அமைந்துள்ள நீதி மன்றங்களில் அமைதி நீதிபதியும், குற்றங் கடியும் அதிகாரியும் உள்ளனர். அமைதி நீதிபதிகள் சிவில் வழக்குகளில் ஓரளவு எல்லை வரையில் வழக்குகளை விசாரிக்கும் உரிமை பெறுகிறார்கள். பல்வேறு ராஜ்யங்களில் நிறைவேற்று அதிகாரிகளிடமிருந்து, குற்றங் கடியும் மன்ற அதிகாரங்களை வெவ்வேறு அளவுக்குப் "பிரித்துள்ளார்கள்." நம்மைப் பொறுத்த வரையில் குற்றங் கடியும் நீதியை யார் வழங்குகிறார்கள் என்பதுபற்றிக் கவலையில்லை. அமைதி, குற்றங் கடியும் வழக்குகளை விசாரணை செய்யத் தாலூகாவின் மேற்பட்ட படிகளில், அதாவது மாவட்ட நிலைமையில் மாவட்ட நீதி மன்றங்களும், குற்றங் கடியும் மாவட்ட மன்றங்களும் உள்ளன. மாவட்ட நீதி மன்றங்கள் சிலவிடங்களில் முதல் விசாரணை அமைப்புக்களாகவும், இன்னும் சிலவிடங்களில் அமைதி வழக்குகளில் அமைதி நீதிபதியின் முடிவுகளுக்கு மேல் வழக்கீட்டை விசாரிக்கும் மன்றங்களாகவும் உள்ளன. மேல் முறையீட்டு மன்றங்கள் என்ற முறையில் மேல் முறையீடுகளை விசாரிக்கும் முறையோடு அத்தகைய மன்றங்களால் விசாரிக்கப்படுவதற்குரிய குற்றங்களை முதல் விசாரணையும் செய்கின்றன. இவற்றையல்லாமல் ராஜ்யத் தலை நகரங்களில் சிட்டி சிவில் கோர்ட்டுகளும் மாகாண மேஜிஸ்டிரேட் மன்றங்களும், சிறு வழக்கு மன்றங்களும், உள்ளன. இவற்றையல்லாமல் பிரத்தியேகமான சில

மன்றங்களும், அதாவது குழந்தைகளின் சட்டப்படி குழந்தைக் குற்ற விசாரணை மன்றங்களும் உள்ளன. உயர் நீதி மன்றம் என்பது ஒரு ராஜ்ய நீதித்துறையில் இம்மன்றங்களுக்கெல்லாம் தலைமையாக விளங்கு கிறது. சில உயர் நீதி மன்றங்கள் குற்ற முதல் விசாரணைப் பகுதி செய்யும் வேலையையும் சில குறிப்பிட்ட பிராந்தியங்களில் வைத்துள்ளன. ஏனையவற்றைப் பொறுத்தவரை உயர் நீதி மன்றங்களில் மேல் விசாரணை மட்டும் நடை பெறுவதோடு கீழ் மன்றங்களை மறு விசாரணை செய்ய உத்திரவும் இடும் ஆட்சியையும் செலுத்துகிறது. அரசியலமைப்பின் 215-வது விதியின்படி உயர் நீதி மன்றங்கள் "ஆவண மன்றங்கள்" ஆகும். இந்த உயர் நீதி மன்றங்கள் எல்லாச் சிறிய நீதி மன்றங்களையும், நடுவர் மன்றங்களையும் தன்னுடைய எல்லைக்குள் இருந்தால் கண் காணிப்பதற்குரிய அதிகாரத்தைப் பெற்றுள்ளன. இந்த உயர் நீதி மன்றங்கள் தங்களுடைய எல்லைக்குள் உள்ள தனிப்பட்டவரையோ, அதிகாரியையோ, அரசாங்கத்தையோ அழைப்பதற்கும், அவர்களுக்கு உத்திரவு இடுவதற்கும் வழி காட்டுவதற்கும் ஹாபியஸ் கார்ப்ஸ், மாண்டமஸ், புரொகிபிஷன், கோ வாரண்டோ, செரிடோரி, ஆகிய தடை மனுக்களை விதிக்கவும், அரசியலமைப்பு மூன்றும் பகுதியில் சொல்லப்பட்டபடி உரிமை பெறுகின்றன. இந்த நீதித் துறையின் முடிவில் அரசியலமைப்பினால் நிறுவப்பட்டு அதன் பகுதிகளின்படி அமைக்கப்பட்ட மிக உயர் நீதி மன்றம் இருக்கிறது. மிக உயர் நீதி மன்றம் ஒரு ஆவண மன்றத்திற் குரிய எல்லா அதிகாரங்களோடும் இயங்குகிறது. இந்திய அரசாங்கத் துக்கும், ராஜ்யங்களுக்கும் இடையே வழக்கு ஏற்பட்டாலும் இரண்டு ராஜ்யங்களினிடையே வழக்கு ஏற்பட்டாலும் உயர் நீதி மன்றங்கள் விசாரிக்க முடியாத இவ் வழக்குகளை மிக உயர்நீதி மன்றம் விசாரணை செய்யலாம். உயர்நீதி மன்றம் விசாரித்து முடிந்த அமைதி வழக்கு, குற்ற வழக்கு, ஏனைய எதுவாயினும் அரசியலமைப்பின் ஒரு பகுதிச் சட்டத்தை பொருள் செய்வதிலேயே இவ்வழக்கின் முடிவு அமைந்து கிடக்கிறது என்று சான்று பகருமேயானால் இந்த உயர்நீதி மன்றம் தீர்த்த வழக்கினை மிக உயர்நீதி மன்றத்திற்கு மேல் வழக்காட எடுத்துச் செல்லலாம். இவ்வாறு அத் தாட்சி கொடுக்க உயர்நீதி மன்றம் மறுத்துவிட்டால் மிக உயர்நீதி மன்றமே பிரத்தியேகமான உத்தரவின்பேரில் மேல் வழக்காட அனுமதி தரலாம். இவைகளை யல்லாமல் அரசியலமைப்பின் 133-வது விதியின்படி உயர் நீதி மன்றங்கள் விசாரித்த அமைதி வழக்குகளில் வழக்கின் மொத்த மதிப்பு ஓரளவுக்கு மேற்பட்டுப் போகிறது என்று அத்தாட்சி தருமேயானாலும், அல்லது மிக உயர்நீதி மன்றம் விசாரிப்பதற்குரிய தகுதியுடையதுதான் இந்த வழக்கு என்று அத்தாட்சி தந்தாலும் மிகஉயர் நீதி மன்றம் அந்த வழக்குகளை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம். சில வகையான குற்ற வழக்குகளிலும்கூட உயர் நீதி மன்றங்களின் முடிவை மேல் வழக்காட மிகஉயர் நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்ல லாம். இவை எல்லாவற்றையும் கடந்து அரசியலமைப்பின் 136-வது விதி இங்கே சொல்லப்பட்ட அனைத்திற்கும் எதிராக இந்தியாவில் உள்ள எந்த ஒரு நீதி மன்றமும் விசாரித்துச் செய்த முடிவையோ உத்தரவையோ, தண்டனையையோ மேல் விசாரணை செய்ய மிகஉயர் நீதி மன்றத்திற்கு உரிமை உண்டு. அரசியலமைப்பின் அடிப்படை உரிமை பற்றிச் சொல்லப் பட்ட பகுதிகளின்படி, மிகஉயர் நீதி மன்றத்தை அடிப்படை உரிமையை நிலை நாட்ட வேண்டி வேண்டலாம். அரசியலமைப்பின் மூன்றுவது பகுதி இந்த அடிப்படை உரிமையை அனைவருக்கும் தந்து உத்தரவாதம் செய் கின்றன. மிகஉயர் நீதி மன்றம் வழி காட்டிகள் அனுப்பவும், தடை மனுக்கள் போடவும், உத்தரவுகள் இடவும், ஹபியஸ் கார்ப்ஸ், மாண்டமஸ், புரொகிபிஷன், கோ வாரண்டோ, செரிடோரி ஆகிய தடை மனுக்களை இட்டு அரசியலமைப்பின் மூன்றுவது பகுதி தந்திருக்கின்ற உரிமைகளை நிலை நாட்டலாம். மேலும் பாராளுமன்றத்தின் சட்டத்தின் மூலம் மிக உயர்நீதி மன்றத்தின் அதிகார எல்லையை விரிவாக்கலாம். அரசியலமைப்பின் 141-வது விதியின்படி மிகஉயர் நீதி மன்றத்தின் சட்டம் இந்திய எல்லைக்குள் உள்ள எல்லா நீதி மன்றங்களையும் கட்டுப்படுத்துவது ஆகும்.

இயல்பாகவும், மரபு பற்றியும் வருகின்ற நீதி முறையின் இந்த வடிவை அல்லாமல், பிரத்தியேகமான நீதி மன்றங்கள் என்றும், நடுவணர் மன்றங்கள் என்றும் பல உள்ளன. ராஜ்ய சட்ட மன்றங்கள் நில வரி, குடியிருப்பு முறை, வாடகை முதலியவற்றை நிர்ணயிப்பதற்காக நிர்மாணிக்கின்ற வரி மன்றங்கள் பலவும் உள்ளன. வழக்கை விசாரிப்பது பற்றியும், மேல் முறையீடு பற்றியும் இவை தனிப்பட்ட முறைகளை உடையன. வருமான வரி நடுவணர் மன்றங்கள், விற்பனை வரி நடுவணர் மன்றங்கள், கூட்டுறவு நடுவணர் மன்றங்கள், விட்டுச் சென்றோர் சொத்துப் பற்றிய நடுவணர் மன்றங்கள் ஆகியவை பிரத்தியேகமாக நடுவணர் மன்றங்களாகும். இவற்றுள்ளேயே மேல் வழக்காடல் முதலிய வற்றிற்கும் வசதியுண்டு. இவற்றை யல்லாமல் தொழிலாளர் மன்றங்களும், பெருந்தொழில் நீதி மன்றங்களும், நடுவணர் மன்றங்களும் வேலை செய்வோரின் சம்பள நிர்ணய மன்றங்களும் உள்ளன. இந்த எல்லா மன்றங்களும் செலுத்துகின்ற நடை முறை, இடுகின்ற உத்தரவுகள், தீர்ப்புகள் ஆகியவற்றிற்கெல்லாம் எந்த இடைநிலை மொழியைப் பயன் படுத்த வேண்டும் என்பது நாம் இப்பொழுது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

2. இந்தப் பல்வேறு நீதி மன்றங்களும், நடுவணர் மன்றங்களும் எந்த இடைநிலை மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிய சட்டம் வருமாறு. அமைதி நீதி மன்றத்தில் குறிப்பிட்ட மொழியைப் பயன் படுத்த வேண்டும் என்பது சீரியல் நடவடிக்கை விதி முறை 137-வது பிரிவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு ராஜ்ய அரசாங்கம், உயர் நீதி மன்றத்திற்குட்பட்ட எந்த ஒரு நீதி மன்றமும் எந்த மொழியைக் கைக்கொள்ளலாம் என்பது பற்றி உத்தரவு பிறப்பிக்கலாம். குற்ற நடவடிக்கை விதி முறை 558-வது விதியின்படி ராஜ்ய அரசாங்கம் குற்றத் தடுப்பு நீதி மன்றங்கள் எந்த மொழியைப் பயன் படுத்தலாம் என்பது பற்றி உத்தரவு இடலாம். அரசியலமைப்பின் ஏழாவது ஷெட்யூலில் ராஜ்யப் பட்டியல் இரண்டாவது பட்டியலில் சீரியல் நெ. 3-ல் மிகஉயர் நீதி மன்றம், உயர் நீதி மன்றம், வரி மன்றம் ஆகிய மூன்றும் தவிர, மற்றவைகளெல்லாம் ராஜ்ய சட்ட மன்றத்திற்குட்பட்டவையாகச் சொல்லப் பட்டுள்ளன. இதே ஏழாவது ஷெட்யூல் யூனியன் பட்டியல், முதலாவது பகுதி பிரிவு 77-ன் படியும், 78-ன் படியும் மிகஉயர் நீதி மன்றம், உயர் நீதி மன்றங்கள் இவற்றினுடைய அமைப்புக்களும், இவற்றில் தொழில் செய்வோரின் தகுதி பற்றியும் குறிப்பிடுவதற்குப் பாராளு மன்றமே உரிமையுடையது என்று பேசுகிறது. அரசியலமைப்பு ஏழாவது ஷெட்யூல் யூனியன் பட்டியல் 95-வது பிரிவின்படியும், ராஜ்யப் பட்டியல் 65-வது பிரிவின்படியும் ஏக பாவப் பட்டியல் 46-வது பிரிவின்படியும், ஒவ்வொரு நீதி மன்றத்தின் "அதிகார எல்லை, அதிகார அளவு" ஆகியவற்றை வகுப்பது முறையே பாராளு மன்றத்திலும், ராஜ்ய சட்ட மன்றங்களிலும் ஆகும்.

3. இந்த நீதி மன்றங்களின் நடை முறை அனைத்தையும் கருத்தில் கொண்டு இவற்றிற்கு எந்த இடை மொழி சிறந்தது என்று ஆராய வேண்டும். வழக்கைச் சமர்ப்பிப்பது, விண்ணப்பம் செய்வது, விண்ணப் பத்தை நிறைவேற்றுவது, மேல் வழக்காடுவது ஆகியவற்றிலும், நீதி மன்றங்கள் வழங்கும் அறிவிப்புகள், அழைப்புகள், பற்றாணைகள், கைப் பற்றுதல்கள், ஆணை நிறைவேற்றங்கள் ஆகியவற்றிலும், நீதி மன்றங்கள் அன்றாட நடை முறைகளைக் கொண்டு செலுத்துவதிலும், வழக்கறிஞர்கள் விவாதத்தை எடுத்துச் சொல்வதிலும், இறுதியாக நீதி மன்றங்கள் உத்தரவு இடுவது, தீர்ப்புச் செய்வது முதலியவற்றிலும் எந்த மொழி பயன் படுத்தப்பட வேண்டும் என்பவற்றை ஆராய வேண்டும். அடுத்த படியாக நீதி மன்றங்கள் தம்முடைய ஆவணங்கள், குறிப்புப் புத்தகங்கள், பல்வேறு பட்டியல்கள், கணக்குப் புத்தகங்கள் முதலியவற்றை எந்த மொழியில் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதும் ஆராயப்படவேண்டும். சாட்சிகள் கூறும்பொழுது நீதி மன்றங்களின் ஆட்சி மொழி அல்லாத

மொழியில் பேசப்பட்டால் இதுவரையில் அவற்றை எந்த முறையில் கையாண்டார்களோ அதே முறை இனியும் இருக்கலாம். பொதுவாக வாய் மொழியாகச் சான்று பகர்கின்றவர்கள் வார்த்தைகள் ஒரு குமாஸ்தா வினுல் அதே மொழியில் அப்படியே எடுத்துக்கொள்ளப்பட்டும், நடுவணரால் ஆங்கிலத்தில் குறிப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டும் இதுவரை நடந்துவருகிறது. இனி இம்முறையில் ஓரளவு சௌகரியமும் ஏற்படலாம். சில சந்தர்ப்பங்களில் இங்ஙனம் இரண்டு பேர் இரண்டு முறையில் இரண்டு மொழிகளில் குறிப்பெடுத்துக்கொள்வதை நீக்கிவிடலாம். இந்தப் பழக்கம் எப்பொழுது ஏற்பட்டதென்ருல் நீதித் துறையில் உயர்ந்த பதவிகளில் இருந்தவர்கள் அந்தப் பிராந்திய மொழியில் நன்கு பயிற்சி அடையாது இருந்த காலத்தில் ஏற்பட்டதொன்ருகும். சூழ்நிலை மாறவும் உரிய இடங்களில் ஆங்கிலத்தை நீக்கிப் பிராந்திய மொழிகளும் ஹிந்தியும் வரவும் ஆங்கிலத்தில் குறிப்பெடுக்கும் பழக்கம் மெள்ளக் குறைந்து போகலாம். என்ருலும் இது அந்த அதிகாரிகளைப் பொறுத்ததாகலின் இது பற்றி நாங்கள் ஒன்றும் அதிகம் சொல்லத் தேவையில்லை.

பல்வேறு ராஜ்யங்களிலும், நீதிக் துறையில் எந்தெந்த இடைநிலை மொழிகள் எந்த அளவுக்குப் பயன்படுகின்றன என்பவற்றைப்பற்றி எங்களுக்குக் கிடைத்த தகவல்களை எல்லாம் சேர்த்து எழாவது பிற் சேர்கையில் தந்துள்ளோம். பெரும்பான்மையாகப் பேசுமிடத்து இந்தத் துறையின் கீழ்த்தரப் படிகளில் அதாவது கிராம பஞ்சாயத்துக்கள் தாலூக்கா நிலைமையிலுள்ள அமைதி மன்றங்கள், குற்றத் தடுப்பு மன்றங்கள் ஆகியவற்றில் இடைநிலை மொழியாக உள்ளவை அந்தப் பிராந்திய மொழிகளே. நீதித் துறையில் மேலே செல்லச் செல்ல ஆங்கிலம் அதிகமான இடத்தைப் பெற்றுவிடுகிறது. என்ருலும் இந்த நிலையில் "மொழிக் கலப்பு" ஒவ்வொரு ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் வெவ்வேறு அளவில் அமைந்துள்ளது. இன்னும் சொல்லப் போனுல் ஒரே ராஜ்யத்தில்கூட வெவ்வேறு மாவட்டங்களில் வெவ்வேறு அளவில் இம் மொழிக் கலப்பு இருந்துவருகிறது. பெரும்பான்மையாகக் கூறுமிடத்து ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் அதுவே பிராந்திய மொழி யாகவும் இருப்பதனுல் அந்த மன்றங்களைத் தவிர, ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலுள்ள நீதித் துறையில் இந்த எல்லையில் ஹிந்திக்கு இடமிருப்பதாகவே தெரியவில்லை. ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் மட்டும் நீதித் துறையின் மத்திய பாகம்வரை மெள்ள ஆங்கிலத்தை நீக்கி விடுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. எங்கே தீர்ப்புக்களும், முடிவு களும், உத்தரவுகளும் ஆங்கிலத்தில் தரப்படுகின்றனவோ அந்த மன்றங் களில்கூட, அன்ருடப் பழக்கத்தில் வழக்கறிஞர்களின் வாதங்கள் அனைவருக்கும் புரியும்படியான அதாவது பிராந்திய மொழியில் நடைபெற எற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தப் பழக்கம் 1947-க்கு முன்னர் குறைவாக இருந்த ஒரு பழக்கத்தின் விரிவே தவிரப் புதியது என்று கூறுவதற் கில்லை.

4. உயர் நீதி மன்றங்களைப் பொறுத்தவரை அரசியலமைப்பின் 348-வது விதி, யூனியன் மொழி எதுவாக இருப்பினும், பிராந்திய மொழி எதுவாக இருப்பினும் பாராளுமன்றம் தனியே சட்டம் செய்கிற வரையில் எல்லா உயர் நீதி மன்றங்களும் தங்கள் நடவடிக்கைகளை ஆங்கிலத்திலேயே நடத்த வேண்டும் என்று கட்டளை இடுகிறது. 348-வது விதியின் இரண்டாவது பிரிவின்படி மேலே சொல்லியதற்கு மாருக ஒரு ராஜ்யத்தின் கவர்னரோ அல்லது ராஜப் பிரமுகரோ ஜனுதிபதியின் உத்தரவின்மேல் ராஜ்யத்தின் ஆட்சிக் காரியங்களுக்குப் பயன் படுத்தப் படும் மொழியை, அதாவது ஹிந்தி அல்லது பிராந்திய மொழியை, உயர் நீதி மன்றங்களின் நடைமுறைக்கும் பயன்படுத்தலாம், என்று சொல் கிறது. என்ருலும் அந்த உயர் நீதி மன்றம் தருகின்ற தீர்ப்புக்கள், முடிவுகள், ஆணைகள் ஆகிய அனைத்தும் ஆங்கிலத்தில்தான் இருத்தல் வேண்டும். இதன்மூலம் அறியப்படுவது என்னவென்ருல் பாராளு மன்றம் தனியே சட்டம் வகுத்தால் ஒழிய, உயர் நீதி மன்றங்கள்,

வழங்கும் முடிவுகள், தீர்ப்புக்கள், ஆணைகள் ஆகிய அனைத்தும் ஆங்கில மொழியில்தான் இருக்கும். யூனியன் ஆட்சி மொழி பதினைந்து வருஷ முடிவில் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாறும் என்று சொல்லப்பட்ட நிலை உயர்நீதி மன்றக் கொள்கைக்கும், மிகஉயர் நீதி மன்றத்தின் கொள்கைக்கும், சட்டங்கள் செய்யப்படுகின்ற மொழிக்கும், ஏற்றுவராது.

சில ராஜ்யங்களில் 348-வது விதியின் 2-வது பிரிவைப் பயன்படுத்திக் கொண்டு உயர் நீதி மன்றங்களில் தீர்ப்புக்கள், முடிவுகள், ஆணைகள் தவிர மற்றவற்றிற்கு ஆங்கிலத்தையல்லாத பிற மொழியைப் பயன் படுத்த வழி தேடப்படுகிறது. உதாரணமாக மத்திய பாரதத்திலும், ராஜஸ்தானிலும் அவற்றின் ராஜப் பிரமுகர்கள் இந்த விதியை ஒட்டி உயர் நீதி மன்றங்களில் ஹிந்தி மொழியை வழங்கவும், ஹைதரா பாத்திலும், திருவாங்கூர் கொச்சியிலும் முறையே உருதுவையும், மலை யாளத்தையும் வழங்கவும், பெப்சு ராஜ்யத்தில் ஹிந்தியையும், பஞ்சாபி யையும் வழங்கவும் ஏற்பாடுகளாகியுள்ளன. விந்தியப் பிரதேசத்தில் ஜுடிஷியல் கமிஷனர் மன்றத்தில் ஹிந்தி வழங்கப்படுகிறது.

5. அரசியல்அமைப்பின் 348-வது விதி பாராளுமன்றம் வேறு வகையாக முடிவு செய்தால் ஒழிய மிக உயர்நீதி மன்றத்தின் நடை முறைகளெல் லாம், யூனியன் ஆட்சி மொழி எதுவாக இருப்பினும், ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டும் என்று விதிக்கிறது. எனவே மிக உயர்நீதிமன்றத் தின் வழக்காடும் பகுதியிலும், மேல் வழக்காடும் பகுதியிலும் கூட எல்லா நிலையிலும் ஆங்கிலமே இருந்துவருகிறது. விண்ணப்பங்களும், வேண்டு கோள்களும் ஆங்கிலத்தில் இருப்பது ராஜ்யங்களிலிருந்து வருகின்ற வழக்கு களின் ரிகார்டுகள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தே அச்சிடப்படுகின்றன. வழக்கறிஞர்கள் ஆங்கிலத்திலேயே வாதமிட நீதிபதிகள் உத்திரவுகள், ஆணைகள் ஆகிய வற்றை ஆங்கிலத்திலேயே தருகின்றார்கள். தீர்ப்புக்களெல் லாம் ஆங்கிலத்திலேயே வெளியிடப்படுகின்றன. எனவே ஹிந்தியோ, பிராந்திய மொழியோ மிகஉயர் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளில் இடம் பெறவில்லை.

அடுத்து நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் நாளாவட்டத் தில் மொழி மாற்றம் செய்வதற்குரிய முதல் தேவைகளெல்லாம் முடிந்து பிறகு பாராளுமன்றம் 348-வது விதியின்படி மிகஉயர் நீதிமன்றத்திலும் உயர்நீதிமன்றங்களிலும் எந்த மொழியைப் பயன்படுத்தவேண்டும் என்று சொல்கின்ற நிலை வரும்பொழுது, நீதித் துறையில் பல்வேறு பகுதிகளில் எந்த இடைநிலை மொழி வழக்கப்பட வேண்டும் என்ற பிரச்னையேயாகும். மற்றோர் இடத்தில், பதினைந்து ஆண்டுகள் கழித்து யூனியன் ஆட்சி மொழியாக அரசியல் அமைப்பில் சொல்லப்பட்டபடி, ஹிந்தி மொழி வந்த பிறகு நீதித் துறையில் மட்டும் ஆங்கிலமொழி காலவரையறை யின்றி ஆட்சி செலுத்துவது எவ்வளவு பொருத்தமில்லாதது என்பதை எடுத்துக்காட்டியுள்ளோம். மேலும் ராஜ்யங்களில் பிராந்திய மொழிகள் ஆட்சி மொழியாக வந்த பிறகும் நீதி மன்றங்களில் ஆங்கிலம் இருப்பது பொருத்தமற்ற ஒன்றே. இந்தத் துறையிலும் மாறுதல் ஏற்பட்டுத் தக்க காலம் வரும்பொழுது நீதித் துறையில் எந்த இடைநிலை மொழி இருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டிய காரியம் அன்று. ஆனாலும் தெளிவாக ஒரு ஏற்பாட்டுடன் பல்வேறு வேலைகளையும் இப்பொழுதே தொடங்கினால்தான் இறுதியாகக் குறிக்கோளை அடையமுடியும்.

6. சட்டம் என்பதும், நீதி மன்றங்களும், உரிமையை நிர்ணயிக்கின்ற அமைப்புகளும், நியாயம் வழங்குகின்ற அமைப்புக்களும் இந்திய நாட்டில் சமீப காலத்தில் புதிதாகத் தோன்றிய கருத்தல்ல என்பது பற்றி விரித்துப் பேச வேண்டிய அவசியமில்லை. உண்மையைக் கூறுமிடத்து மிகப் பழைய காலத்திலேயே சட்டம் செய்தவர்களும் நீதி கூறியவர்களும் மிக விரிவான முறையில், தனிப்பட்டவர்கள் சட்டம், சொத்துச் சட்டம் ஆகியவை பற்றி வரையறுத்துக் கூறியுள்ளார்கள். மனுவின் ஸ்மிருதிகளும், தர்ம

சூத்திரங்களும், யாஞ்ய வல்கியருடைய தர்ம சூத்திரங்களும் மிகப் பழைமையான நீதி நூல்களாகும். மிதசார தாய பாகம், தேவ காரமயுக்தம் ஆகிய நூல்களில் நிறைந்த சட்ட இலக்கியங்களும், நீதி முறைகளும் காணப்படுகின்றன. சட்டக் கொள்கைகளும், கருத்துக்களும் மிக நுணுகிய முறையினும், ஆழ்ந்த முறையிலும், வரையறையுடனும், சாட்சிச் சட்டம் முதலியவற்றில் ஏறத்தாழ நம் காலத்தில் உள்ளவற்றைப் போலவே பேசப்பட்டுள்ளன. எனவே மிக விரிந்த முறையில் விசாரணை மன்றம், மேல் வழக்காடும் மன்றம் ஆகியவைகளைக் கொண்ட நீதி முறை பல்வேறு ராஜ்யங்களிலும், பல்வேறு காலங்களில் இந்த உப கண்டத்தில் இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியுள்ளது. உண்மையைக் கூறுமிடத்து மிகக் கீழ் நிலையிலுள்ள நீதி மன்றங்களையல்லாமல் மற்றவற்றில் முழுவதும் பிராந்திய மொழிகளை நீக்கி விட்டு ஆங்கிலத்தையே கைக்கொண்டது ஆங்கிலேயரின் ஆட்சியில் கூட மிகப் பிற்பட்ட காலத்தில் வளர்ச்சி அடைந்த ஒன்றே ஆகும். கம்பெனியார்கள் ஆட்சி செய்த முற்பகுதியில் "அதலட்ஸ்"களும், நீதி மன்றங்களும் பர்சிய மொழியிலேயே பர்சிய பண்டிதர்கள், மௌல்விகள் ஆகியவர்களின் துணை கொண்டு நடைபெற்றன. 1836-ம் ஆண்டில்தான் சட்ட மன்றங்களிலிருந்து பர்சிய மொழி நீக்கப்பட்டது. பரோடா, குவாலியர், ஹைதராபாத், ஜம்மு-காஷ்மீர், பாட்டியாலா ஆகிய இந்தியச் சிற்றரசுகளில் நீதி மன்றங்கள் பெரும்பாலும் அந்தப் பிராந்திய மொழிகளிலேயே நடைப்பெற்றன. 1950-ல் இந்தச் சிற்றரசுகள் இந்திய யூனியனில் சேர்கின்றவரை மிக உயர்ந்த நீதி மன்றங்களில்கூட பிராந்திய மொழிகளே வழங்கப்பட்டன. இன்னும் சொல்லப்போனால் பழைய சிற்றரசுகளாக இருந்து இப்பொழுது ராஜ்யங்களாக மாறிய பகுதிகளில் நீதி மன்ற விவகாரங்களில் இருந்த பிராந்திய மொழியை நீக்கி விட்டு அரசியலமைப்பின் 348-வது விதியின் படி ஆங்கிலம் புகுத்தப்பட்டதை எடுத்துக் காட்டிக் குறை கூறினார்கள். பழைய சிற்றரசர்கள் ஒழிந்து, சுதந்திர இந்தியாவில் அவர்கள் நுழைந்த பிறகு பிராந்திய மொழிகளைப் போக்கிவிட்டு ஆங்கிலம் புகுத்தப்பட்டதைப் பற்றி வியப்படைந்தார்கள். அன்றையச் சூழ்நிலையில் இங்ஙனம் செய்ய வேண்டியது தேவைப்பட்டது. இப் பிற்போக்கு இடைக்காலத் தேவையே தவிர முன்னேக்கி பலப் படிகள் செல்வதற்கு எடுத்துவைத்த ஒரு பின்னடியாகும். எந்த அளவுக்கு நீதித்துறையில் இந்திய மொழிகளைப் பயன் படுத்தி உள்ளார்களோ அந்த அளவுக்கு சட்டத்துறைக் கலைச்சொற்களை நாம் உண்டாக்குவதற்கு இது உதவியாக இருக்கும் என்பது இன்னும் விரிவான முறையில் வேறொரிடத்தில் ஆராயப்பட்டுள்ளது. இங்கே நாங்கள் வலியுறுத்த வேண்டியது என்னவென்றால் சில பத்தாண்டுகளுக்கு முன்னர் இந்நாட்டின் நீதித்துறை ஆங்கிலத்தையல்லாத மொழிகளில் நடத்தப் பெற்றன என்பதாகும். எனவே நீதித்துறையில் மொழி மாற்றம் செய்வது என்று புறப்படுகையில் அது பெரிதும் அச்சத்தைத் தருவதுபோல இருந்தாலும் உண்மையில் பெரிய காரியம் அன்று என்பது விளங்கும்.

மக்களின் அன்றாட வாழ்கையில் வழங்கும் மொழிக்கும், இன்னும் சொல்லப்போனால் ஆட்சி மொழிக்கும், சட்டம் செய்யப்படுகின்ற மொழிக்கும் உள்ள வேற்றுமையை முன்னரே குறிப்பிட்டுள்ளோம். நீதி மன்றங்கள், தம்முடைய தீர்ப்புக்கள், முடிவுகள், உத்தரவுகளின் மூலம், தனிப்பட்டவர்கள், அமைப்புக்கள், அரசாங்கங்கள் ஆகியவர்களுடைய உரிமைகளை முடிவு செய்கின்றன. முன்னர் சட்ட மொழிகள் எதுவாக இருக்க வேண்டும் என்பதற்குக் கூறிய காரணங்களைக் கொண்டே நீதி மன்றங்களிலும், அவற்றின் தீர்ப்புகள் முதலியவற்றை வரையறுத்த முறையில் சுருக்கமாக ஐயத்திற்கு இடமின்றி வெளியிட என்ன மொழித் தேவை ஏற்படும் என்பதை அறியலாம்.

7. நாட்டின் சட்ட மன்றங்களைப் பற்றிப் பேசும்பொழுது இந்த மன்றங்களில் "விவாதத் தொழிலுக்கு" ஏற்ற மொழி என்றும், இந்த மன்றங்கள் இயற்றும் சட்ட நிறைவேற்றங்களுக்கு ஏற்ற மொழி என்றும்

வேறுபாடு படுத்திக் கண்டோம். விவாதம் செய்யும் பொழுது புரிந்து கொள்ளவேண்டிய இயல்புக்கு ஏற்ற முறையில் ஒரு மொழியும், சட்ட நிறைவேற்றங்கள் செய்யும் பொழுது வரையறுத்த பொருளுக்கு ஏற்ற ஒரு மொழியும் தேவை என்பதை உணர்ந்து இந்த வேறுபாட்டைக் கற்பித்துக்கொண்டோம். இதே போன்ற ஒரு வேறுபாட்டை நீதி மன்றங்களின் நடை முறைகளுக்கும் செய்யவேண்டும். இன்னும் சொல்லப் போனால் அரசியலமைப்பின் 348-வது விதி இந்த வேறுபாட்டைக் கண்டு ஆங்கிலத்தை அல்லாத பிற மொழிகளில் உயர் நீதி மன்றங்களின் நடைமுறைகள் இருக்கலாம் என்றும், ஆனால் அவற்றின் தீர்ப்புக்கள் மட்டும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும் என்றும் ஏற்றுக் கொள்கிறது. பிறிதோர் இடத்தில் இந்த வேறுபாட்டைப் பயன் படுத்திப் பலராலும் புரிந்துக்கொள்ளக்கூடிய ஒரு மொழியில் நீதி மன்ற நட வடிக்கைகள் நடத்தப்படலாம் என்றும், அந்த நீதி மன்றங்களின் தீர்ப்புக்கள் முதலானவை சட்டப் புத்தகம் எந்த மொழியில் எழுதப் படுகிறதோ அந்த மொழியில் இருக்கலாம் என்றும் பின்னர் விரிவாகப் பேசப்படுகிறது.

8. மிகஉயர் நீதி மன்றத்தைப் பொறுத்தமட்டில் அதனுடைய முழு நட வடிக்கைகளும், ஆவணங்களும், தீர்ப்புக்களும், உத்திரவுகளும் ஒரே மொழி யில் இருக்கவேண்டி இருத்தலின் அது ஹிந்தியாகவே இருக்க முடியும். மிக உயர் நீதி மன்றம் பத்துப் பனிரண்டு மொழிகளில் வேலை செய்வது என்பது இயலாத காரியம். காலம் வரும்பொழுது மிகஉயர் நீதி மன்றம் ஹிந்தி மொழியில்தான் வேலை செய்ய முடியும். அதாவது மேல் வழக் கீட்டு விண்ணப்பம், விண்ணப்பங்கள் முதலியவைகளெல்லாம் ஹிந்தி யிலும், வழி முறைகளெல்லாமும் ஹிந்தியிலும் இருப்பதோடு எல்லா ஆவணங்களேயும் ஹிந்தியில் மொழி பெயர்த்துத் தீர்ப்பு, முடிவு அனைத்தும் ஹிந்தியிலேயே வழங்கப்படவேண்டும். மிகஉயர் நீதி மன்றத்தின் அறிக்கைகளெல்லாம்கூட அதே மொழியில்தான் இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

மிகஉயர் நீதி மன்றம் ஹிந்தி பேசாத பிராந்தியத்தில் உள்ள ஒருவரையோ அல்லது ஹிந்தியை அல்லாத மற்றொரு மொழியைத் தாய் மொழியாக உள்ள ஒருவரையோ வரும்படி ஆணையிடும்பொழுது அந்த ஆணையை ஆங்கில மொழிப் பெயர்ப்போடு அனுப்புவதில் தவறில்லை. மிகஉயர் நீதி மன்றத்தின் தீர்ப்புக்களை ராஜ்யங்களின் பிராந்திய மொழி களில் மொழி பெயர்த்துத் தொடர்ந்து வெளி வரச் செய்வது தேவை என்பதோடு விரும்பத் தகுந்ததும் ஆகும்.

மிகஉயர் நீதி மன்றத்தில் முற்றிலும் ஆங்கிலத்தைப் போக்கிவிடாத இடைக் காலத்தைப்பற்றி அதாவது மொழி மாற்றக் காலம்பற்றிப் பேசும் பொழுது ஒரு பிரத்தியேகமான பிரச்னையை ஆராய்ந்துள்ளோம். மிகஉயர் நீதி மன்றத்தின் தலைவர்களில் இந்த இடைக் காலத்தில் தனிப்பட்ட நடுவணர்கள் ஆங்கிலத்தில் தம் தீர்ப்புக்களைக் கூறலாம். நாளாவட்டத்தில் ஹிந்தியில் அவர்கள் கூறுவதற்குரிய பக்குவம் வருகின்றவரையில் இதனை மேற்கொள்ளலாம்.

தனிப்பட்டவர்கள் இங்ஙனம் ஹிந்தியில் தீர்ப்புக்கூற முடியாமல் இருக் கின்ற நிலை நாளாவட்டத்தில் குறைந்துகொண்டு சென்றாலும் மிக நீண்ட காலத்திற்கு இருக்குமென்றே நம்புகிறோம். மிகஉயர் நீதிமன்ற நடுவணர்கள் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்கள். அவர்கள் நியமனம் பற்றிப் பேசுகின்ற அரசியலமைப்பு 124-வது விதி மிகஉயர் நீதி மன்றத்தில் நடுவணராக இருப்பதற்கு ஒருவர் ஏனைய தேவைகளோடு பதினைந்து வருஷம் ஓர் உயர் நீதி மன்றத்தில் நடுவணராக இருந்திருக்க வேண்டும் என்றோ அல்லது ஓர் உயர் நீதி மன்றத்தில் பத்தாண்டுகள் வழக்கறிஞராக இருந்திருக்கவேண்டும் என்றோ அல்லது ஜனாதிபதியின்

அபிப்பிராயத்தில் மிக உயர்ந்த சட்ட வல்லுனர் என்ருே இருக்க வேண்டும் என்று சொல்கிறது. இதுவரையில் உயர் நீதி மன்ற நடுவணர்கள் உயர் நீதி மன்றங்களிலிருந்தே பொறுக்கி எடுக்கப் படுகிருர்கள். மிகஉயர் நீதி மன்றத்தில் நடுவணராக வருவதற்கு வேண்டிய அனுபவம், தகுதி என்பவற்றைப் பார்க்கும்பொழுது அவர்கள் உயர் நீதி மன்றத்திலிருந்து வந்தாலும் அல்லது உயர் நீதி மன்ற வழக்கறிஞர் கூட்டத்திலிருந்து வந்தாலும் மிகுந்த வயதுடையவராக இருப்பார் என்பதும் ஐம்பது வயதுக்குட்பட்டவராக இருக்க மாட்டார் என்பதும் உறுதி. நாட்டின் மிக உயர்ந்த நீதித் துறை அதிகாரியாக இருப்பவர், அதாவது மிகஉயர் நீதி மன்ற நடுவணராக இருக்கவேண்டிய வருக்குத் தேவையான தகுதிகளை ஆராயும்பொழுது அவருடைய சட்ட ஞானமும் மற்றவையும்தாம் முதல் தேவைகளாக அமையும். எனவே சிறந்த தகுதி வாய்ந்த ஒருவர் ஹிந்தி மொழியில் பயிற்சி இல்லாதவர் என்ற ஒரு காரணத்திற்காக இப் பதவியை அடையாமல் இருப்பதும் அவருடைய அறிவுத் திறனை அல்லது தொண்டை, நாடு இழந்துவிடுவதும் பொருத்தமில்லை. தீர்ப்புக்களை அவரால் ஹிந்தியில் வழங்கமுடியாது என்ற குறைபாடு ஏனைய தகுதிகளோடு ஒப்புநோக்க மிக சாதாரணமான ஒன்ருகும். எனவே சட்ட நூல்கள் ஹிந்தியில் வந்த பிறகும், மிகஉயர் நீதி மன்றத்திலும், உயர் நீதி மன்றங்களிலும் ஆங்கிலம் மாறி அதனிடத்தில் ஹிந்தி மொழி வந்த பிறகும்கூட மிக நீண்ட காலத்திற்கு மிகஉயர் நீதி மன்றத்தில் நடுவணர்களாக வரக் கூடியவர்கள் ஹிந்தி மொழியை விட்டுவிட்டு ஆங்கிலத்திலேயே தமது தீர்ப்பைக்கூற விரும்பலாம். இவ்வாறு நடைபெறுவதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எங்களுடைய எண்ணம். இதுவரையில் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்ததைப் போல இந்தத் துறையில் எல்லா வகையிலும் பொதுவான மொழி மாற்றம் தேவை என்பதை இப்பொழுதும் வலியுறுத்துகிருேமே தவிரப் பிரத்தியேகமான சில சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற இதுபோன்ற புறநடைகளுக்கு நாங்கள் மறுப்புக்கூறவில்லை. இவ்வாறு செய்வதனுல் மொழி மாற்றம் செய் வதற்கு எவ்விதமான குறைபாடோ வேறு ஒன்ருே நிகழ்ந்து விடும் என்று நாங்கள் நம்பவில்லை. பொது நன்மையை உத்தேசிக்க, இவ்வாறு புற நடைகள் இருப்பது தேவை என்றே நாங்கள் கருதுகிருேம்.

இதே காரணங்களைக்கொண்டு வயது முதிர்ந்த வழக்கறிஞர்கள், நீதி மன்றம் நீதியை வழங்க உதவி செய்கின்றவர்கள் ஆதலின் அவர்கள் வேற்று மொழியில் பேச விரும்பினுல் நடுவணர் உத்திரவை ஏற்றுக் கொண்டு அவரும் பிற மொழியில் பேசுவதைத் தடுக்க வேண்டியதில்லை.

9. மிகஉயர் நீதி மன்றத்தில் மேற்கொள்ள வேண்டிய இடைநிலை மொழியைப்பற்றி ஒரு வகையில் மிக எளிதாக முடிவு செய்து விட்டாலும், கீழ்ப்பட்ட நீதித் துறைகளில் இடைநிலை மொழி பற்றிய நிலையும் நன்கு விளங்குகிறது. பஞ்சாயத்து, தாலுக்கா நிலையிலுள்ள அமைதி நீதி மன்றம், குற்றத் தடுப்பு நீதி மன்றம் ஆகிய இவைகள் அந்த மக்களால் புரிந்துகொள்ளப்படுகின்ற பிராந்திய மொழிகளிலேயே நடைபெற வேண்டும். இதே முறையில் செல்லும்பொழுது மாவட்ட நிலைமையில் உள்ள அமைதி, குற்றத் தடுப்பு நீதி மன்றங்களில்கூட அதிகத் தொல்லை ஒன்றும் இல்லை என்று சொல்லிவிடலாம். இம் முறையில் நாட்டின் சில பகுதிகளில் மாவட்ட நீதி மன்றங்களிலும், மாவட்டக் குற்றத் தடுப்பு நீதி மன்றங்களிலும் ஆங்கிலத்தை நீக்கிப் பிராந்திய மொழிகளைக் கைக் கொள்கின்ற முறை வந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும். நாளா வட்டத்தில் இம் முறை முற்றிலும் எல்லா விடங்களிலும் வந்துவிடுமே ஆனுலும் ராஜ்யங்களில் பல்வேறு காலங்களில் இது முழுத் தன்மை அடையும். நீதித் துறையின் கீழ்ப் பகுதிகள் அனைத்தும் அந்தந்த ராஜ்யங்களில் முற்றிலும் பிராந்திய மொழிகளிலேயே நடைபெறும் நிலைமை நாளாவட்டத்தில் வந்துவிடும்.

10. மிக உயர்நீதி மன்றம் ஹிந்தியிலும், பல்வேறு ராஜ்யங்களிலுள்ள கீழ் நிலை நீதி மன்றங்கள் பிராந்திய மொழிகளிலும் நடைபெறும் பொழுது பல்வேறு மொழிகளும் வழங்குகின்ற முறையை மாற்றி மிக உயர் நீதி மன்றம் வழங்குகின்ற மொழிக்கு கொண்டுவர வேண்டிய ஒரு சூழ்நிலை இடைப்பட்ட நீதி மன்றங்களுக்கு வேண்டும். அப்பொழுதுதான் மிகஉயர் நீதி மன்றத்தைத் தலைமையாக உடைய நீதித் துறைக்கும் யூனியன், ராஜ்யச் சட்டங்களைப் பொதுவாகக் கொண்டிருக்கின்ற நிலை பேற்றுச் சட்டப் புத்தகத்திற்கும் பொருத்தமாக இருக்க முடியும். இந்த மாற்றம் உயர் நீதி மன்ற நிலையில் வரவேண்டி இருக்கும். எனவே பல்வேறு ராஜ்யங்களிலுள்ள உயர் நீதி மன்றங்கள் நிலையில் இந்த மொழி மாற்றப் பிரச்னை வருவது நலம் என்றால் இந்த உயர் நீதி மன்றங்களில் எந்த இடைநிலை மொழி இருக்கவேண்டும் என்பது மிக மிக இன்றியமையாத ஒரு பிரச்னையாக அமைந்துவிடுகின்றது.

மற்றொரு புறத்தில் நோக்குமிடத்து மேல் வழக்காடும் இடமாகவும் கீழ் மன்றங்கள் தம் முடிவுகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கட்டளையிடும் உரிமையும் எல்லாவற்றையும் மேல் பார்க்கும் உரிமையும் பெற்ற இடமாகவும் உயர்நீதி மன்றங்கள் இருப்பதனால் உயர் நீதி மன்ற நடுவணர்கள் தம்முடைய தீர்ப்புக்களையும் முடிவுகளையும் ஆணைகளையும் கீழ்நிலை நீதித்துறையில் உள்ளவர்களுக்குப் புரியும்படியான மொழியில் கொடுப்பதே நியாயமாகும். மற்றொரு புறத்தில் நோக்குமிடத்து உயர்நீதி மன்ற முடிவுகள் மிகஉயர் நீதி மன்றத்துக்கு மேல் வழக்காடச் செல்ல வேண்டி இருத்தலின் மிகஉயர் நீதி மன்றம் புரிந்துக்கொள்ளக் கூடிய முறையில் அந்தத் தீர்ப்புக்கள் இருத்தல் வேண்டும். பல மொழி நிலையில் இருந்த நீதித்துறை உயர்நீதி மன்ற அளவில் இரு மொழிகளில் இருத்தல் வேண்டும். அதாவது மிக உயர்நீதி மன்றத் தேவையைப் பொறுத்த மட்டில் ஹிந்தி மொழியிலும் கீழ்நிலை நீதிமன்றங்களைப் பொறுத்தமட்டில் பிராந்திய மொழிகளிலும் இருத்தல் வேண்டும்.

நாங்கள் ஆராய்வதற்கு எடுத்துக் கொண்ட விஷயங்களில் மிக முக்கியமானதும் மிகவும் விளக்கமாக இல்லாததுமான இந்தப் பிரச்சினைக்கு மிகுதியாக நாம் சிந்தனையைச் செலுத்தவேண்டும். உயர்நீதி மன்றங்களின் நடவடிக்கைகள், தீர்ப்புகள், கட்டளைகள், ஆணைகள் ஆகிய அனைத்தும் அந்தந்தப் பிராந்திய மொழிகளிலேயே இருக்க வேண்டும் என்று வலுவான காரணங்களுடன் பேசப்படும் சில வாதங்களும் உண்டு. இதனை எதிர்த்து எல்லா ராஜ்யங்களிலும் உள்ள உயர்நீதி மன்றங்களில் நடைமுறை எவ்வாறு இருப்பினும் தீர்ப்புகள், முடிவுகள், ஆணைகள் ஆகியவை மட்டுமாவது ஹிந்தி மொழியில் இருக்க வேண்டும், என்று சொல்வதற்கும் வலுவான காரணங்கள் உண்டு. இவை இரண்டு கட்சியார்களும் கூறிய வாதங்களை நடுவுநிலைமையோடு அவற்றின் வலுக்குறையாதபடி கீழே விரிவாக எடுத்துக் கூறுகிறோம். இந்த இரண்டு வாதங்களின் இடையே ஒரு நடுத்தர வழியைக் காண முயன்று உயர்நீதி மன்றங்களின் சில தீர்ப்புகள் ஹிந்தி மொழியிலும் சில தீர்ப்புக்கள் பிராந்திய மொழிகளிலும் இருந்தால் என்ன என்ற பிரச்னையையும் நாங்கள் ஆராய்ந்திருக்கிறோம். இந்த யோசனை எங்களுடைய கருத்துப்படி பயன்படக் கூடியதாக இல்லை. நன்கு ஆராய்ந்த பிறகு உயர் நீதி மன்றங்களின் தீர்ப்புக்கள், முடிவுகள், ஆணைகள் ஆகியவை ஒரே பொதுவான மொழியில் தான், அதாவது ஹிந்தி மொழியில் தான் இருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

11. உயர் நீதி மன்றங்களின் தீர்ப்புக்களெல்லாம் பிராந்திய மொழியிலேயே இருத்தல் வேண்டும் என்று சொல்பவர்களின் வலுவான வாதம் என்னவென்றால் வழக்காட நீதிமன்றம் செல்கின்ற சாதாரண மனிதன் நீதிமன்றத்தில் தன்னுடைய உரிமையைப் பற்றி என்ன பேசப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் இருத்தல் வேண்டும்.

இந்தப் பயனை அடைய வேண்டுமேயானால் உயர்நீதி மன்றங்கள் தம் தீர்ப்புக்களை பிராந்திய மொழிகளில் வழங்க வேண்டும். பின்னர் நாம் எடுத்துக் காட்டப் போகின்ற இன்னும் வலுவான காரணங்களினால் இது முடியாது என்று நினைக்க வேண்டியுள்ளது. மேலும் இந்த வாதத் தின்படி ஏற்பட வேண்டிய பயனை நீதிமன்றம் அளிக்கின்ற தீர்ப்புக்கள் முதலானவற்றை நீதிமன்றத்திலேயே பிராந்திய மொழிகளில் மொழி பெயர்த்துக் கொடுத்துவிடுவதால் இந்தப் பயன் கிட்டிவிடும். இதில் முக் கியமான பகுதி என்னவென்றால் ஒன்று வழக்காட வருபவனுக்குப் பிராந்திய மொழியில் தீர்ப்பை மொழி பெயர்த்துக் கொடுக்க வேண்டும், இன்றேல் மிகஉயர் நீதி மன்றத்துக்கு அந்த தீர்ப்பு மேல் வழக்காடப் போவதானால் தீர்ப்பை ஹிந்தியில் மொழி பெயர்த்து அனுப்ப நேரிடும். இது இல்லாவிடினும் நாட்டிலுள்ள உயர்நீதி மன்றங்களில் நடைபெறும் வழக்குகளை எல்லாம் அறிக்கை மூலம் வெளியிடுவதற்கு இந்த வழக்கும் செல்ல வேண்டி இருத்தலின் அப்பொழுதும் இதனை ஹிந்தியில் மொழி பெயர்த்தே ஆக வேண்டும். ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி பெயர்க்கும்பொழுது அதனுடைய உள்ளீடு சற்றுக் குறைந்து போவதையும் பொருள் ஆழம் ஓரளவு மாறிப் போவதை யும் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். ஹிந்தியில் இருந்து பிராந்திய மொழிக்கு மொழி பெயர்க்கப்பட்டாலும் பிராந்திய மொழியிலிருந்து ஹிந்திக்கு மொழி பெயர்க்கப்பட்டாலும், இவ் விரண்டு மொழிகளிடையே பெரிய அளவில் ஒற்றுமை இருந்தாலும் இந்த வேறுபாடு வரத்தான் செய்யும். வழக்காடுபவனைப் பொறுத்த மட்டில் அவனுடைய உரிமை என்ன ஆயிற்று என்று அறிவதுதான் முக்கியமே தவிர நடைபெற்ற வாதங்கள் பற்றி அவன் பொதுவான முறையில் தான் கவலைப்படுவான். என்றாலும் இந்தத் தீர்ப்பை நிலை நிறுத்தவும் மாற்றியமைக்கவும் தள்ளிவிடவும் மிகஉயர் நீதி மன்றம் கோரப்படலாம். மேலும் ஏனைய உயர்நீதி மன்றங்கள் மற்ற வழக்குகளை ஆராயும் பொழுது இந்த வழக்கின் தீர்ப்பை எடுத்து அலசிப் பார்க்கவும் ஆராயவும் தேவைப்படலாம். எனவே யாருக்காவது மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்க வேண்டுமேயானால் அது வழக்காளிக்கு கொடுப்பது தேவலாமே தவிர மேல் வழக்கீடு மன்றங்களுக்கு அதாவது மிகஉயர் நீதிமன்றத்துக்கும் அல்லது மற்ற உயர்நீதி மன்றங்களுக்கும் தருவது சிறந்ததாகாது. உயர்நீதி மன்ற நிலையிலும் அதற்கு மேலும் வழக்காட வருகின்ற பிரச்சினைகள் சட்ட நுட்பங்களைப் பற்றியும், சட்டங்களை எவ்வாறு பொருள் கொள்ளவேண்டும் என்பது பற்றியும் தான். இந்த நிலையில் வழக்காட வருபவர்களில் எத்தனை பேர் இந்த நுட்பமான வாதங்களைப் புரிந்துக்கொள்ளக்கூடியவர்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் உயர்நீதி மன்றங்களில் நடைபெறும் மேல் வழக்காடல்களில் வழக்காளிகள் வந்து கேட்டுக் கொண்டிருப்ப தில்லை. வழக்காளிகள் இங்ஙனம் வந்து தம் வழக்குகளின் விசாரணை யின் போது இருந்து கேட்கும் உரிமையை நாங்கள் மறுக்கவில்லை. இந்தியாவில் மட்டும் அல்லாமல், உலக நாடுகளில் மிகவும் நாகரீகம் மிகுந்துள்ள நாடுகளில் கூட சாதாரண வழக்காளி சட்டங்களைப் பொருள் செய்யும் நுட்பத்தைப் புரிந்துக்கொள் ளமுடிவதில்லை. ஒரு வழக்காளி சட்ட வாதங்களைப் புரிந்துக்கொள்ளக் கூடிய நிலையில் இருப்பினும் அவனுக்குப் பிராந்திய மொழியில் மொழி பெயர்த்துக் கொடுப்பதே போதுமானதாகும். ஆனால் மிகஉயர் நீதி மன்றமும் ஏனைய உயர் நீதி மன்றங்களும் நேரிடையாக அந்தத் தீர்ப்பின் நுட்பங்களை ஆராய வேண்டிய கடப்பாடு உடையது ஆதலின் அவர்கள் புரிந்துக்கொள்ளக் கூடிய மொழியில் அந்தத் தீர்ப்பு இருத்தல் வேண்டும். மேலும் நாளா வட்டத்தில் கட்டாய ஆரம்பக் கல்வி முறையில் 14 வயதுக்கு உட்பட்ட வர்கள் அனைவரும் ஹிந்தியைப் படிப்பார்கள் ஆதலால் தீர்ப்புக்கள் வழங்கப்படும் ஹிந்தி மொழியைப் புரிந்துக்கொள்வது அனைவருக்கும் எளிதாகவே முடியும்.

கீழ் நிலை நீதிமன்றங்கள் உயர்நீதிமன்றங்கள் தரும் தீர்ப்பை யொட்டி நடந்து கொள்ளவேண்டி இருத்தலின் எல்லா உயர்நீதி மன்றத்

தீர்ப்புக்களையும் பிராந்திய மொழியில் மொழி பெயர்க்க வேண்டியது அவசியமாகும். இந்த மொழி பெயர்ப்புக்கள் நம்பத் தகுந்தவையாக இருக்க வேண்டுமாதலின் இதற்குரிய காலம் வரும்போது உயர்நீதி மன்றங்கள் தம்முடைய தீர்ப்புக்களை மோழி பெயர்ப்பதற்குரிய அமைப்புக்களை உயர்நீதி மன்றங்களிலேயே வைத்து இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கீழ்நிலை நீதிமன்றங்களிலுள்ள நடுவணர்களும் குற்ற இயல் நீதிபதிகளும் நாம் முன்னே காட்டிய கல்வி முறையில் பயன்று வருவார்கள் ஆதலின் சாதாரணமாகப் புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்கு ஹிந்தி மொழியில் போதிய அறிவு பெற்றவர்களாகவே இருப்பார்கள், என்பதில் ஐயம் இல்லை. மேலே சொல்லிய முறையில் பிராந்திய மொழியில் தீர்ப்புக்களை மொழி பெயர்த்தும் தந்துவிட்டால் உயர்நீதி மன்றங்களின் முடிவுகளைப் புரிந்துகொள்வதில் கீழ்நிலை நீதித்துறையில் உள்ளவர்களுக்கு அதிகத் தொல்லை இராது, என்றே நம்புகிறோம்.

12. இடை நிலை மாற்று வழிகளாக இது பற்றி எங்களுக்குச் சொல்லப் பெறற வழிகளைக் கீழே தருகிறோம் :—

(அ) உயர்நீதி மன்றங்களில் நடைபெறும் வழக்குகளில் எவை "அறிக்கையில்" செல்லக்கூடிய தகுதியுடையனவோ அவை மட்டும் ஹிந்தி மொழியிலும், ஏனையவை பிராந்திய மொழிகளிலும் இருக்கலாம்.

(ஆ) உயர்நீதி மன்றங்கள் வழங்குகின்ற தீர்ப்புக்களில் எவை "மேல் வழக்காட" செல்லக் கூடியனவோ அவை மட்டும் ஹிந்தி மொழியிலும் ஏனையவை பிராந்திய மொழிகளிலும் இருக்கலாம்.

முதல் வழியில் (அ) சொல்லப்பட்ட கருத்தின் நோக்கம் என்னவென்றால் உயர்நீதி மன்றங்கள் வழங்கும் தீர்ப்புக்களில் மிகச் சிலவற்றையே சட்ட இதழ்களில் வழக்குச் சட்டம் என்று வெயிடுகிறார்கள். இது பற்றி நாங்கள் விசாரித்ததில் நடுவணர்கள் தங்கள் தீர்ப்புக்களை எழுதி முடித்து, அவை தட்டெழுத்தில் அடிக்கப்பட்ட பிறகுதான் அவற்றைச் சட்ட இதழ்களில் அறிவிக்க வேண்டுமா வேண்டாமா என்று முடிவு செய்கிறார்கள். இவ்வாறு இல்லாமல் நடுவணர்கள் ஒரு குறிப்பிட்ட தீர்ப்பை அச்சிடுவதற்கு முன்னமேயே சட்ட இதழில் வெளி வர வேண்டியதா வேண்டாததா என்று முடிவு செய்துவிட்டாலும் கூட இந்த வழி நடைபெறக் கூடியதாக நாங்கள் கருதவில்லை. சட்ட இதழ்களில் வெளி வராத சில தீர்ப்புக்கள் கூட மேல் வழக்காட மிக உயர்நீதி மன்றத்துக்குச் செல்லக் கூடுமாதலால் மிகஉயர் நீதி மன்றத்தில் தீர்ப்பின் மூலம் பிரதி ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் ஆதலாலும், தீர்ப்பின் மொழி பெயர்ப்பு அங்கே பயன்படாது ஆதலாலும், இந்த வழி பயனுடையது என்று நாங்கள் நினைக்கவில்லை. மேலும் ஒரு தீர்ப்பின் அதிகார பூர்வமான தன்மை அது சட்ட இதழில் "அறிவிக்கப்பட்டதா" என்பது பற்றி முடிவு செய்யப்படுவதில்லை. அறிவிக்கப்படாத தீர்ப்புக்களை யாராவது எடுத்து மேற்கோள் காட்டினால் அந்த மேற்கோளை நிரூபிக்கும் பொறுப்பு காட்டுபவர்களைச் சார்ந்ததாகும். இரண்டாவது (ஆ) வழியாகச் சொல்லப்பட்டது பற்றிச் சிந்திக்கும்பொழுது இப்படி ஒரு வேறுபாட்டைத் தீர்ப்பு கூறும் மொழி பற்றிச் செய்வது இயலாது என்றே நினைக்கிறோம். ஒரு வழக்கைப் பற்றி முடிவு செய்யப்படுவதற்கு முன் அது மிக உயர் நீதி மன்றம் போகத் தகுதியுடையதா என்று நினைத்து பார்ப்பது கடினம். ஒரு வேளை அதற்குத் தகுதி இல்லை என்று அத்தாட்சிப் பத்திரம் வழங்க உயர்நீதி மன்றம் மறுத்துவிட்டாலும் மிகஉயர் நீதி மன்றம் பிரத்தியோக உத்திரவின் பேரில் அந்த வழக்கை ஏற்றுக்கொள்ளலாம். இவற்றை அல்லாமலும் அரசியல் அமைப்பின் 136–வது விதியின்படி எல்லாவற்றையும் மீறி மிக உயர்நீதி மன்றம் இந்திய எல்லையிலுள்ள எந்த ஒரு நீதிமன்றமும், நடுவணர் மன்றமும் கொடுத்த தீர்ப்புக்களையோ முடிவுகளையோ ஆணைகளையோ பிரத்தியேக உத்தரவின்பேரில் தான் எடுத்துக்கொண்டு ஆராயலாம். எனவே இப்படி ஒரு வேறுபாட்டைக் கற்பித்துக்

கொண்டு வழக்கின் தீர்ப்பைச் சொல்லும்பொழுது எந்த மொழியில் தீர்ப்பு வழங்கவேண்டும் என்று முடிவு செய்வது நடைமுறைக்கு முற்றிலும் இயலாத காரியம். மற்றொரு மாற்று வழி என்னவென்றால் உயர்நீதி மன்றங்கள் தொடக்க வழக்காக எடுத்துக்கொள்ளும் வழக்குகளின் முடிவுகளை யாவது பிராந்திய மொழியில் வெளியிடலாம் என்பது ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தில் தொடக்க வழக்கு என்பதும் எதிர் வழக்கு என்பதும் பொறுத்தமற்ற கூற்று ஆதலின் இந்த வழியையும் ஒதுக்கிவிட வேண்டும்.

13. உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புக்கள் முடிவுகள் ஆணைகள் என்பவை ஹிந்தி மொழியில்தான் இருக்கவேண்டும் என்பதற்கு எங்களுடைய கருத்துப்படி வலுவான, முடிவான காரணங்கள் உள்ளன. 10-வது பகுதியில் 5-வது பாராவில் சொல்லப்பட்ட காரணங்களைக் கொண்டு நாட்டின் நிலையான சட்டங்கள் புத்தகம், ராஜ்ய நிறைவேற்றங்கள உள்பட, அனைத்தும் ஹிந்தி மொழியில்தான் இருக்கவேண்டும் என்று கூறியுள்ளோம். மிக உயர்நீதி மன்றம் ஹிந்தியிலேயே வேலை செய்யும். மேலும் ஹிந்தியில் வழங்கப்பட்ட தீர்ப்புக்களைப் பற்றியே மிக உயர்நீதி மன்றம் ஆராயும். உயர்நீதி மன்ற நடுவணர்கள் தந்த தீர்ப்புக்களை நாட்டின் பிற பகுதிகளில் உள்ள நடுவணர்கள் மேற்கோளாக எடுத்துக் கொள்கிறார்கள். அந்நிலையில் அது எந்த மொழியில் வழங்கப்பட்டதோ அந்த மூலத்திலேயே இருப்பது நன்மை செய்யும். இன்றேல் மொழி பெயர்ப்பு சம்பந்தமான அனாவசியமான பல பிரச்சினைகளுக்கு அது இடம் தரும்.

நாட்டின் உயர்ந்த மன்றங்களாகிய மிக உயர் நீதி மன்றமும், உயர் நீதி மன்றங்களும் தங்களுடைய தீர்ப்புக்களைக் கூறும்பொழுது உண்மையில் "சட்டங்களைச் செய்கிறார்கள்". நாட்டின் சட்ட மன்றங்கள் சட்டங்களை நிறைவேற்றும்பொழுது, அந்தச் சட்டங்களைக் கொண்டு செலுத்தும்பொழுது எத்தனை விதமான சிக்கல்களை அது உண்டாக்கும் என்றும், தனிப்பட்டவர்களுடைய வாழ்வு தாழ்வுகளிலும் சமுதாய அமைப்பிலும் எத்தனை சிக்கல்களை உண்டாக்கும் என்றும் சட்ட மன்றங்கள் எதிர் பார்த்து அவை அனைத்திற்கும் ஏற்ற முறையில் சட்டம் செய்ய முடியாது. இந்தச் சூழ்நிலையில்தான் நீதிமன்றங்கள் தங்களுடைய தீர்ப்புக்களை வழங்கும்பொழுது "சட்டம் செய்யும்" வேலையைச் செய்கின்றன. இம்முறைதான் "வழக்குச் சட்டம்" என்று சொல்லப்பெற்று நீதிமன்றங்களில் பெருவாரியான அளவில் மேற்கோளாக எடுத்துக்காட்டப்படுகிறது. இந்த முக்கியமான காரணத்தைக் கருதித்தான் நிலையான சட்டப்புத்தகம் எந்த மொழியில் இருக்கிறதோ அந்த மொழியிலேயே நடுவணர்கள் செய்த சட்டங்களும் இருத்தல் வேண்டும் என்று கூறப்பெற்றது.

மற்றொருவகை பிரத்தியேகமான வழக்கும் உண்டு. அந்த வழக்கிற்கும் இந்த வாதங்கள் பொருந்தும். 7-வது ஷெட்யூலில் யூனியன் பட்டியலில் 79-வது பிரிவு, பாராளும் மன்ற சட்ட அதிகாரத்தின்கீழ் பேசும் ஒரு பகுதி. "ஒரு ராஜ்யத்தில் அமைக்கப்பட்டுள்ள உயர்நீதி மன்றத்தின் அதிகார எல்லை அந்த ராஜ்யத்தின் எல்லைகளுக்கு அப்பால் செல்லுதல்" என்பது அரசியல் அமைப்பில் 217-வது விதி உயர் நீதிமன்ற நடுவணர்களை ஒரு உயர் நீதிமன்றத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்ற ஜனாதிபதிக்கு அதிகாரம் தருகிறது. ராஜ்யப்புனர் அமைப்புக் கழகம் "ஒரு ராஜ்ய உயர்நீதி மன்றத்தில் இருக்கும் நடுவணர்களில் மூன்றில் ஒரு பங்காவது அந்த ராஜ்யத்தின் வெளியே இருந்து கொண்டுவரப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்" என்று சிபாரிசு[1] செய்துள்ளது. ஒரே உயர்நீதி மன்றம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ராஜ்யங்களுக்கும் ஏற்பட்டிருந்தால், அந்த ராஜ்யங்களில் வெவ்வேறு பிராந்திய மொழிகள் வழங்கினால், இவை இரண்டிலும் ஒரே உயர்நீதி மன்றம்

---

[1] ராஜ்யப்புனர் அமைப்புக் கழக அறிக்கை 861 பாரா.

வேலை செய்யும்பொழுது ஒவ்வொரு நடுவணரும் இரண்டு மொழி வல்லவராக இருக்க வேண்டும் என்று நினைப்பது பொருத்தமில்லை. ஆதலால் பல மொழி பேசும் பிராந்தியங்களில் உள்ள உயர் நீதிமன்றங்கள் இந்த ஓர் உதாரணத்தைக் கொண்டு ஹிந்தி மொழியையே வழங்க வேண்டும் என்று சொல்லுகிறோம்.

எல்லாவற்றையும் நோக்கும்பொழுது உயர்நீதி மன்றங்களில் தீர்ப்புக் கூறுவதற்கும் முடிவுகள், ஆணைகள் பிறப்பிப்பதற்கும் ஹிந்தி மொழியையே மேற்கொள்வது பொருத்த முடையது என்பதற்குக் காட்டப்பட்ட காரணங்கள் மிகவும் வலுவுடையன, ஆதலாலும் இவற்றுள் சில காரணங்களைத் தள்ள முடியாது ஆதலாலும் அதனால் ஏற்படப்போகின்ற முடிவுகள் பற்றி எங்களுக்கு எவ்விதமான ஐயமும் இல்லை.

14. உயர்நீதி மன்றங்களில் தீர்ப்புக்கள், முடிவுகள் உத்திரவுகள் ஆகியவைகள், எந்த மொழியில் இருக்க வேண்டும் என்பது ஒருபுறம் இருக்க அம்மன்றங்களின் மற்ற நடவடிக்கைகள் அதாவது விவாதம், விண்ணப்பங்கள், மனுக்கள், பிராது ஆகியவைகள் எந்த மொழியில் இருக்க வேண்டும் என்ற வினா அடுத்து வருகின்றது. பிராதுகள், முடிவுகள், உத்திரவுகள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் தேவைப்படும்பொழுது பிராந்திய மொழியில் மொழி பெயர்த்து இரண்டையுமே (ஹிந்தி மூலம் தமிழ்மொழி பெயர்ப்பு) வழங்கலாம்.

சாதாரணமாக ஒரு மொழி வழங்கும் ராஜ்யத்தில் வேலை செய்யும் உயர்நீதி மன்ற நடுவணர் அந்த ராஜ்யப் பிராந்திய மொழியை அறிந்தவராக இருந்து அந்தப் பிராந்திய மொழியில் நடைபெறும் அனைத்தையும் புரிந்துகொள்பவராகவே இருப்பார் என்று நம்புகிறோம். ராஜ்யப் புனர் அமைப்புக் கழகச் சிபாரிசுகளின்படி மூன்றில் ஒரு பங்கு நடுவணர்கள் அந்த ராஜ்யத்தின் வெளியே இருந்து கொண்டுவரப்படுவார்கள். ஆதலால் அங்ஙனம் வந்தவர்கள் அந்தப் பிராந்திய மொழியைப் பழகிக்கொள்ளுகின்ற காலம் வரையில் பிராந்திய மொழியில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பார். அகில இந்தியப் பணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டதுபோல் உயர் நீதிமன்ற நடுவணர்களுக்கும் பிராந்திய மொழிகளில் ஓரளவு அறிவு பெறும்படியான பரிக்ஷைகள் வைத்து எடுப்பது நல்லது என்று சிபாரிசு செய்கிறோம். பல மொழி பேசும் ராஜ்யங்களிலுள்ள உயர்நீதி மன்றங்கள் நடுவணரை நியமித்த சில காலம் வரை அல்லாமல் இன்னும் பல காலத்திற்கு மொழி பெயர்ப்புகளை வேண்டி நிற்கும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நடுவணர்களுக்கு மொழி பெயர்ப்புக்களைத் தந்தே ஆகவேண்டும். எவ்வாறுயினும் இதனால் ஏற்படுகின்ற கஷ்டங்கள் தவிர்க்க முடியாதவை அல்ல. தற்பொழுது பெரும்பாலன உயர்நீதி மன்றங்களில் ஆவணங்களும் விவாதங்களும் பிராந்திய மொழிகளில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்படுகின்றன. நாங்கள் சொல்லுகின்ற முறையில் மொழி பெயர்ப்பு வேலை இதைவிடக் குறைவாகவே இருக்கும். எனவே அந்த வழக்கை விசாரிக்கும் நடுவணருடைய ஆணையைப் பெற்று வழக்கறிஞர்கள் பிராந்திய மொழிகளில் விவாதத்தை நடத்தலாம். நடுவணர்களுக்குத் தேவையில்லாதபொழுது பிராந்திய மொழியிலிருந்து அதனை ஹிந்தியில் மொழி பெயர்க்கும் வேலை இல்லாமலும் போய்விடும்.

15. மேலே 8-வது பாராவில் சொல்லியுள்ளபடி மிக உயர்நீதி மன்ற நடுவணர்களுள் சிலருக்குச் தேவைப்பட்டால் மொழி மாற்றம் ஏற்படுகின்ற இடைக்காலத்தில், அதாவது புதிய மொழியில் முற்றிலும் மாற்றம் ஏற்படாத நிலையில், இந்தத் தனிப்பட்ட நடுவணர்கள் தங்கள் தீர்ப்புக்களை ஆங்கிலத்திலேயே வழங்கலாம் என்று சொல்லியுள்ளோம். அதே காரணங்களைக் கொண்டு அம்மாதிரியான ஒரு புறநடை, உயர்நீதி மன்றங்களுக்கும் வழங்கப்படலாம். மிக உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞர்களுக்குத் தரப்பட்ட புறநடைச் சட்டம் உயர்நீதி மன்றங்களில் உள்ள

வழக்கறிஞர்களுக்கும் தரப்படலாம். இந்த இடத்திலும் மொழி மாற்றம் முடிகின்ற வரையில் தனிப்பட்ட நடுவணர்கள் விருப்பப்பட்டால் ஆங்கிலத்தில் தங்கள் தீர்ப்பைத் தருவதற்கு மொழி மாற்றக் கொள்கைக் கேடு வராமல் உரிமை வழங்கப்படலாம் என்பது மிகமிக முக்கியமான ஒன்றாகும்.

உயர்நீதி மன்ற நிலையிலும் தனிப்பட்ட நடுவணர்கள் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ தம்முடைய கருத்தைத் தெரிவிக்க முடியாதபொழுது அந்தந்தப் பிராந்திய மொழிகளிலேயே தீர்ப்புக்களைக் கூறவும், அந்தத் தீர்ப்பின் ஹிந்தி மொழி பெயர்ப்பைத் (மொழி மாற்றக் காலத்தில் ஆங்கில மொழி பெயர்ப்பை) தாங்களே அதிகார பூர்வமானதென்று ஒத்துக் கொள்வதானால் அப்படியே செய்யுமாறு ஓர் உரிமை வழங்கலாமா என்பது பற்றியும் ஆராய்ந்துள்ளோம். நன்கு ஆராய்ந்த பிறகு நடுவணர்கள் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க முடியாமல் இருக்கமாட்டார்கள் என்றும், பிராந்திய மொழியில் தெரிவிக்க விரும்ப மாட்டார்கள் என்றும் முடிவுக்கு வந்தோம். ஒருவேளை அப்படி ஓர் உரிமை வழங்கினாலும் அந்த நடுவணர் ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ போதுமான அளவு அறிவு பெற்றவராக இருந்து அவருடைய மூலத் தீர்ப்பை மொழி பெயர்த்த ஒன்றுக்கு அத்தாட்சி வழங்கக் கூடியவராக இருப்பார் என்றே நம்புகிறோம். சட்ட இதழில் வெளி வருகின்ற இயல்புடைய வழக்குகள் மொழி மாற்றக் காலத்தில் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக ஆங்கிலத்தில் குறைந்து இறுதியில் ஹிந்தி மொழியில் மட்டுமே வரக்கூடிய நிலைமையை அடையும் என்று நம்புகிறோம்.

16. கீழ் நிலை நீதித் துறையைப் பொறுத்த மட்டில் பெரும்பான்மையான நடவடிக்கைகள் பிராந்திய மொழியிலேயே இருக்கும். என்றாலும் உயர் நீதி மன்ற நிலையில் இருப்பதைப்போல மாவட்ட நிலையிலும் கூட வழக்காளிகளோ, வழக்கறிஞர்களோ விரும்பினால் ஹிந்தி மொழியில் நடவடிக்கைகளை நடத்த உரிமை வழங்க வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்களைக் கேட்டுக் கொள்கிறோம். சில சமயங்களில் மற்றொரு ராஜ்யத்தில் உள்ள வழக்கறிஞர் ஒரு ராஜ்யத்தில் உள்ள உயர்நீதி மன்றத்திற்கும் கீழ் நிலையிலுள்ள நீதி மன்றங்களுக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பம் குறைவுதான் என்றாலும், அப்படி ஒரு வசதியைச் செய்து தருவது நாட்டின் நீதித் துறை ஒற்றுமைக்கும், வழக்கறிஞர் தொழில் அகில இந்தியாவுக்கும் பொதுவானது என்ற கொள்கைக்கும் ஏற்றதாகும். மேலும் பொருளாதார வளர்ச்சியும், போக்குவரத்து வசதியும் அதிகப்படவே பல்வேறு பிராந்தியங்களிலிருந்தும் ஒவ்வொரு பிராந்தியத்திலும் கலப்புக் கூட்டம் அதிகமாகுமென்று எதிர்பார்க்கின்றோம். அந்நிலையில் அங்ஙனம் வருகின்றவர்கட்கு, ராஜ்ய மொழி யல்லாத பிற மொழியில் அவர்கள் பேசுபவர்களாக இருந்தாலும் அந்த ராஜ்யத்தின் நீதித் துறையைப் பயன் படுத்திக்கொள்ளும்படி செய்ய வேண்டியது அந்த ராஜ்யத்தின் கடமை என்பதோடு கூட லாபகரமான செயலும் ஆகும். இத்தகைய ஒரு நிலை பெரிய நகரங்களில் முக்கியமாகத் தேவைப்படும் என்று கருதுகிறோம். ஆனால் சிறிய இடங்களிலும் இது தேவைப்பட்டால் இதே காரணங்களுக்காக இந்தக் கொள்கையையும் கொஞ்சம் நீட்டலாம். நாளாவட்டத்தில் எல்லாவிடங்களிலும் ஹிந்தியைப் புரிந்து கொள்கின்ற அளவுக்காவது ஹிந்தியறிவு வளர்ச்சி அடைந்து விடும். ஆதலால் இவ்வாறு செய்வது அந்த ராஜ்ய அரசாங்கங்களுக்குக் கடினமாக இருக்கும் என்று நாங்கள் எதிர் பார்க்கவில்லை.

17. பிரத்தியேகமான வருமான வரி நடுவணர் மன்றம், கூட்டுறவு நடுவணர் மன்றம் என்பவை போன்ற பிரத்தியேகமான நடுவணர் மன்றங்களில் என்ன மொழி வழங்கப்பட வேண்டும் என்ற பிரச்னையைத் தனியே எடுத்துக் கொண்டு விரிவாக ஆராய வேண்டியதில்லை. பாராளு மன்றமோ ராஜ்ய சட்டசபையோ எந்த ஒன்று இந்த மன்றங்களை நியமிக்

கின்றதோ அதுவே இந்த மன்றங்கள் என்ன இடைநிலை மொழியைப் பயன் படுத்த வேண்டும் என்பதையும் அறிவித்துவிடும். கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான கொள்கை நன்கு விளங்கக்கூடியதே. கூடுமானவரை வழக்காடுகின்ற கட்சிகள் அதிகப்படியாகக் புரிந்துக் கொள்ளக்கூடிய ஒரு மொழியிலேயே நீதி மன்ற நடவடிக்கைகள் நடைபெற வேண்டும். அதாவது பிராந்திய நிலையில் பிராந்திய மொழிகளிலேயே அவை இருக்கும். தீர்ப்புக்கள், ஆணைகளைப் பொறுத்த மட்டில் அவற்றை மற்றப் பிராந்தியங்களிலுள்ளவர்கள் மேற்கோள் காட்டுவனவாக இருக்குமே யானால் அவற்றை ஹிந்தி மூலத்தில் வழங்கி, கட்சிக்காரர்களின் சௌகரியத்தை முன்னிட்டுப் பின்னர் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டும்.

இத்தகைய பிரத்தியேகமான நடுவணர் மன்றங்களில்கூட உயர் நீதி மன்றங்களில் இருப்பதைப் போலத் தனிப்பட்ட நடுவணர்கள் விரும்பினால் பல காலத்திற்கு ஆங்கில மொழியை வழங்க உரிமை தரப்பட வேண்டும். இந்த உரிமை பிராந்திய மொழிகளிலோ ஹிந்தி மொழி யிலோ அவர்கள் தம் கருத்தைத் தெரிவிக்க முடியாத நிலையிலேயே வழங்கப்படும்.

18. பல்கலைக் கழகங்களில் சட்டக் கல்வி போதிப்பதைப் பற்றிய இது சம்பந்தமான ஒன்றையும் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். உயர் நீதி மன்றங்களிலும், மிக உயர்நீதி மன்றத்திலும் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் ஹிந்தி மொழியில் இருக்கும் ஒரு நிலைமையையும், அதிகார பூர்வ மான நிலையான சட்டப் புத்தகம் ஹிந்தி மொழியில் இருக்கும் ஒரு நிலைமையையும் எதிர்பார்க்கலாம். மிக உயர்நீதி மன்றத்திலும், உயர் நீதி மன்றங்களிலும் ஹிந்தியிலும், பின்னர் சொல்லியதில் சில சமயங் களில் பிராந்திய மொழிகளிலும் விவாதங்கள் நடைபெறும். இந்த இரண்டிடங்களிலும் தனிப்பட்டவர்கள் ஹிந்தியிலோ பிராந்திய மொழி களிலோ எடுத்து விவாதம் செய்ய முடியாத நிலையில் ஆங்கிலத்தில் பேச அனுமதிக்கப்பட்டாலும் அந்த நிலை நாளாவட்டத்தில் குறைந்து கொண்டே வந்துவிடும். குற்ற நீதிபதி நீதி மன்றத்திற்குக் கீழ் நிலையில் உள்ள மன்றங்களில் பெரும்பாலும் பிராந்திய மொழிகளே வழங்கப்படும். உயர்நீதி மன்றங்களில் விவாதங்கள் ஹிந்தியில் இருப்ப தோடு சில சமயங்களில் நீதிபதியின் ஆணையின் பேரில் பிராந்திய மொழி களிலும் நடைபெறும்.

இந்நிலையில் சட்டக் கல்விக்கு போதனு மொழியாக இருக்க வேண்டியது எது என்பதே ஆராயப்பட வேண்டிய விஷயம் ?

சட்டத் துறையில் பட்டப் படிப்புக்குப் பயின்று பட்டம் பெறுகின்றவர்கள் வெளியூர் நீதி மன்றங்களிலும், உயர்நீதி மன்றங்களிலும், சில சமயங்களிலும் மிக உயர் நீதி மன்றத்திலும் கூடத் தம் தொழிலை நடத்த வேண்டும். எங்களுக்குத் தெரிந்த வரையில் இந்தப் பிரச்னைக்குச் சிறந்த முடிவு என்னவென்றால் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஹிந்தி, பிராந் திய மொழி என்ற இரண்டிலுமே பரீக்ஷை எழுத அனுமதித்தால் அவர்கள் விருப்பப்படி எழுத ஏதுவாகும். சட்டக் கல்லூரிகளில் போதிப் பதற்குத் தேவைக்குத் தக்கபடி இந்த இரண்டு மொழிகளிலுமே போதிக்கப் படலாம். கல்லூரிகள் இந்த இரண்டு மொழிகளிலும் போதிப்பதைப் பல்கலைக் கழகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சட்டக் கல்லூரியில் சட்டப் பட்டம் பெறுவதற்காக நுழைகின்ற மாணவர்கள் தொடக்கத்தி லேயே உயர்நீதி மன்றம், மாவட்ட நீதி மன்றம், அதற்கும் கீழ்நிலையில் உள்ள நீதி மன்றம் ஆகியவற்றில் எதில் தாங்கள் தொழில் நடத்தப் போகிறோம் என்பது பற்றி முடிவு செய்ய முடியாது என்பதை நாங்கள் அறிவோம். உயர்நீதி மன்ற வழக்கறிஞர் குழுவிலிருந்தும், வெளியூர்க் குழுவிலிருந்தும் சில சமயங்களில் மாற்றங்கள் நடைபெறுவதுண்டு. என் றாலும் நாம் சொல்லிய கல்வித் திட்டம் வருமேயானால் இடைநிலைப்

பள்ளிகளில் போதுமான அளவு ஹிந்தி மொழிப் பயிற்சி கிடைத்திருப்ப தால் தாய் மொழியைப் போதனு மொழியாகக் கொண்ட சட்டப் பட்டத்தை உடைய மாணவன் தேவைப்பட்டபொழுது ஹிந்தி மொழியில் பேசுவதற்கு அதிகக் கஷ்டம் இராது.

கீழ் நிலை மாவட்ட நீதி மன்ற நிலையிலிருந்து உயர்நீதி மன்ற நிலைக்கு உயர்த்தப்படும் நடுவணர்கள் பற்றியும், இத்தகைய ஒரு பிரச்னை தோன்றுகிறது. மாவட்ட நடுவணர்கள் உயர்நீதி மன்ற நடுவணர்களாக வர விரும்பினுல் அங்ஙனம் பதவி கிடைத்த பொழுது ஹிந்தி மொழியில் தீர்ப்புக் கூறுவதற்குத் தம்மைத் தகுதியுடையவர் களாக ஆக்கிக்கொள்வார்கள். இதனையல்லாமலும் பதினைந்தாவது பாரா வில் கூறியபடி தனிப்பட்ட உயர்நீதி மன்ற நடுவணர்கள் விரும்பினுல் பிராந்திய மொழியிலேயே தீர்ப்புக் கூறும் உரிமையையும் சில காலத் திற்கு வழங்கியுள்ளோம். எதிர்காலக் கல்வித் திட்டத்தில் பயின்று வருகின்ற தலைமுறைகள் வேண்டுமான அளவு ஹிந்திக் கல்வி பெற்றி ருக்குமாதலால் அந்தத் தலைமுறை, மாவட்ட நடுவணர்களாக வருகின்ற காலத்தில் இந்தத் தொல்லை மறைந்துவிடும்.

பகுதி XI.

சட்ட மொழியும், நீதி மன்றங்களும்—(3)

மாற்றத்தின் இயக்கவகை இயல்.

1. மொழி மாற்றம் செய்வதில், சட்டம் செய்தல், நீதி மன்றங்கள் ஆகிய இரண்டையும் பொறுத்தவரை, எந்தெந்தப் படிகளில் அது செய்யப்படவேண்டும் என்பதை இப்பொழுது ஆராய விரும்புகிறோம். பின்னர் விளக்கியுள்ளபடி மொழி மாற்றத்தை நடைமுறைக்கு ஏற்றது என்று நினைப்பதற்கு முன்னர், நிறைந்த அளவு முன்னேற்பாடுகள் செய்ய வேண்டும். இந்த அறிக்கையில் பிறிதோர் இடத்தில் விளக்கப்பட்டுள்ள படி, எங்களுடைய கொள்கை ஒரு குறிப்பிட்ட மாற்றம் இன்ன தேதியில் தான் நடைபெற வேண்டும் என்று, வெறும் கற்பனை அளவில் சொல்லப்படவே இல்லை. இந்தக் கொள்கையை அனுசரித்தே நீதித் துறையிலும், மொழி மாற்றம் செய்வதற்குத் தேவையான முன்னேற்பாடுகள் எந்தெந்தக் காலத்தில் நடைபெற வேண்டும் என்று கால அட்டவணை ஒன்றும் தரவில்லை. தேவைபட்ட இடங்களில் எந்த முறையில், எந்தத் தன்மையில் மாற்றத்தின் பல்வேறு பகுதிகளும் செய்யப்படவேண்டும் என்று மட்டும் குறிப்பிட்டுள்ளோம்.

கலைச் சொற்கள் கிடைக்காத தொல்லை சிறப்பாகச் சட்டத் துறையிலும், நீதி வழங்கும் துறையிலும் மிகுதியாக உள்ளது. மேலும் நாடு முழுவதிலும் பெரும்பான்மையான மக்களுக்கு அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கக் கூடியதாக உள்ள பகுதியாகும் இது. சட்டத் துறையிலும், நீதி வழங்கல் துறையிலும் குறிப்பிட்ட பொருளைக் குறித்தலும், வரையறையும் மிகத் தேவையான ஒன்று. இவ்வாறு சொல்வது மாற்றதுக்குத் தயாரிக்கும் நம்முடைய முயற்சியைத் தளரவிடவேண்டும் என்பதற்காக அன்று. அதற்கு மறுதலையாக அது துரிதப்படுத்தப் படவேண்டும். என்றாலும் இந்தத் துறையில் தேவையான அடிப்படை வேலைகள் செய்யப் படாமல் திடீரென்று மாற்றத்தைக்கொண்டு வருவது யாதொரு லாபத்தையும் தராமல் பெரிய தொல்லையை விலைக்கு வாங்குவதாகும்.

2. அடுத்தபடியாகச் சட்டம் செய்யும் மொழியாகவும், நீதி மன்ற மொழியாகவும் எதிர்காலம் முழுவதிலும் ஆங்கிலமே இருந்துவிடலாம் என்ற ஒரு வாதம் எங்களுக்கெதிரே பேசப்பட்டதைக் குறித்து ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். சாதாரண மனிதனைப் பலவிடங்களிலும் சார்ந்துள்ள பெரிய தேசீயக் கொள்கையில் இப்படி ஒரு மாற்றம் செய்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு இந்த வாதம் நில்லாது என்றும் அறிவிக்க விரும்புகிறோம். அரசியலமைப்பில் யூனியன் மொழியாக ஆங்கிலத்திற்குப் பதிலாக (பாராளு மன்றச் சட்டத்தின் மூலம் எந்தத் துறைகளில் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்தத் துறைகள் தவிர) ஹிந்தி மொழி யூனியன் ஆட்சி மொழியாக 1965-ஜனவரி 26-ல் ஆகிவிட வேண்டும் என்று குறிக்கப்பட்டுள்ளது. அதேபோல இரண்டுராஜ்யங்களினிடையேயும், ஒரு ராஜ்யத்துக்கும் யூனியனுக்கும் இடையேயும் வழங்கப்படும் மொழி அதேநாளிலிருந்து ஹிந்தியாக இருக்கவேண்டும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. உண்மையைக் கூறுமிடத்து அரசியலமைப்பு 346-வது விதி உத்தரவிடுகின்றபடி பல ராஜ்யங்கள் தங்களுக்குள் வழங்குவதற்கு ஹிந்தி மொழியை ஏற்றுக் கொண்டுள்ளன. பல ராஜ்ய அரசாங்கங்கள் தம்முடைய ஆட்சி மொழியை அந்தந்தப் பிராந்திய மொழியாக் மாற்றுவதில் பெரிய அளவு முன்னேற்றம் அடைந்துள்ளன. இதுவரையில் இந்த மாற்றம் ஹிந்தி மொழி ராஜ்யங்களில்மட்டுமே மிகுதியாக நடைபெற்றுள்ளது என்றாலும்

ஏனைய இடங்களைப் பொறுத்தமட்டிலும் நாளாவட்டத்தில் ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களில்கூட ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஆட்சித் துறையின் கீழ்நிலை பாகங்களிலாவது பிராந்திய மொழியை வைக்க வேண்டும் என்பதற்கு வலுவான கட்சிகள் ஏற்படும். பிற்சேர்க்கை எட்டில் நாங்கள் கொடுத்துள்ள அறிக்கையின்படி ராஜ்ய சட்ட மன்றங்களில் பெரும்பான்மையான அளவு பேச்சுக்கள் ஆங்கிலத்தை அல்லாத பிராந்திய மொழிகளிலேயே நடைபெறுகின்றன என்பது விளங்கும். இப்பொழுதே கூட ஹிந்திப் பிராந்தியங்களில் உள்ள பல ராஜ்யங்களில் ஹிந்தியில் எழுதப்பட்ட சட்ட மூலங்களைக் கொண்டே சட்டங்கள் நிறைவேற்றப்படு கின்றன. என்றாலும் அரசியலமைப்பின் 348-வது விதி உப வகுப்பு (3)ன்படி அங்ஙனம் நிறைவேற்றப்படும் சட்டங்களின் ஆங்கில மொழி பெயர்ப்பே, கவர்னரின் கையெழுத்துடன் அதிகார பூர்வமானவை என்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எனவே பின்னர்ச் சொல்லிய முறை நடைமுறைக்கு ஏற்றதென்றோ, நியாயமானதென்றோ நாங்கள் கருதவில்லை. கல்வி முறையிலும் கூடப் பல்கலைக் கழகங்களைப் பொறுத்த மட்டில் போதனு மொழியை ஆங்கிலத்திலிருந்து மாற்றும் நிலை வந்து கொண்டிருக்கிறது. என்றாலும் இந்தத் துறையில் இரண்டு வேறுபட்ட கருத்துக்கள் இருந்துவருவதால் இறுதியாக நிலைமை எவ்வாறு முடியும் என்று நாங்கள் உறுதியாகக் கூறமுடியாது. முதலாவதுகருத்து ஆங்கிலத்தின் இடத்தைப் பிராந்திய மொழிகள் பெற வேண்டும் என்பதாகும், இரண்டாவது கருத்து இந்த இடத்தை ஹிந்தி மொழிபெறவேண்டும் என்பதாகும். இது எவ்வாறு முடிந்தாலும் மாறுதல் வெள்ளத்தை தடுத்தல் முடியாத காரியம். அவ்வாறு தடுப்பதை முறையானது என்றும் நாங்கள் கருதவில்லை. மேலும் கல்வித் துறையிலும், யூனியன் ராஜ்ய ஆட்சித் துறையிலும் ஆங்கிலம் போவதைத் தடுத்து நிறுத்துதல் விரும்பத் தகுந்ததும் அன்று. இந்நிலையில் நீதித் துறையை மட்டும் இந்த மாற்ற முன்னேற்றத்திலிருந்து " தடுத்து நிறுத்துதல் " செய்வதும், பலகாலத்திற்கு இன்றைக்குள்ள ஆங்கிலத்தையே வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பதும் நடைமுறைக்கு ஒவ்வாதவையாகும்.

இவ்வாறு செய்வதற்கு நல்ல காரணங்கள் இருப்பதாகவும் எங்களுக்குத் தெரியவில்லை. வேறு இடத்தில் நாங்கள் காட்டியுள்ள வாதப்படி சமுதாயத்தில் பெரும்பான்மையான மக்களுக்கு அவர்களுடைய வழக்குகளை எடுத்து விசாரித்துத் தீர்ப்புக் கூறுகின்றவர்கள் இந்தப் பெரும் பான்மையானவர்களுக்குப் புரியாத ஒரு மொழியில் ஒரு காரியத்தைச் செய்வது, அதிலும் ஒரு சிலரே இருந்து கொண்டு இதனைச் செய்வதும் முற்றிலும் பொறுக்க முடியாத ஒன்றாகும். ஒரு சிலர் இவ்வாறு பொது மக்களிடமிருந்து நிலையாகப் பிரிக்கப்பட்டுவிட்டால் மற்றவரிடத்திலிருந்து அவர்கள் பிரிந்து வெறுக்கப்பட ஏதுவாகும். பொது மக்களோடு நேரடியாகவும், நெருக்கமாகவும் தொடர்பு கொண்டுள்ள நீதித் துறையில் இவ்வாறு ஒரு தனித்தன்மை பாராட்டுவது விரும்பத்தகுந்தது அன்று ; நடைமுறைக்கு ஒவ்வாததும் ஆகும். நாளா வட்டத்தில் நீதித் துறையிலும், இம் மொழி மாற்றம் வந்தே தீரும் என்பதிலும், பொது ஆட்சித் துறையிலும் இதற்கு ஏற்ற முறையில் இம்மாற்றம் வரும் என்பதிலும் கல்வித் துறையிலும் இம்மாற்றம் வர வர விரைவாக வலுப் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதிலும் எங்களுக்கு எவ்வித ஐயமும் இல்லை.

சட்டத் துறை, பிரத்தியேகமானதும், கூர்மையான அறிவு தேவைப் படுகின்ற ஒரு பகுதியானதும் ஆனாலும் இடை நிலை மொழியை மாற்றுவதிலுள்ள தொல்லை, மிக முன்னேற்றமுடைய தொழில் நுட்பத் துறையிலோ, விஞ்ஞான ஆராய்ச்சித் துறையிலேயோ உள்ளது போல அவ்வளவு கடினமானதன்று. சட்டத் துறையும், விஞ்ஞானத் துறையும் கருத்துக்களை வெளியிட வரையறுத்த பொருளுடைய மொழிகள் தேவைப்படும் துறைகளாகும். என்றாலும் தற்காலச்சூழ்நிலையில் விஞ்ஞானத் துறையின் வளர்ச்சிக் கருவிகள் கிடைப்பதையும், சோதனை செய்வதற்குரிய சந்தர்ப்பங்களையும், பெரும் பொருள் செலவழிக்கின்ற வசதியையும்

பொறுத்துள்ளது. ஆனால் சட்டக் கல்வியும், நீதித் துறை வளர்ச்சியும் இவ்வாறில்லை. இயற்கை விஞ்ஞானத்தைப் பொறுத்த வரை, மிக நீண்ட காலத்திற்கு இந்திய விஞ்ஞானிகளுக்குக் கிடைக்கும் வசதிகள், ஏனைய நாடுகளிலுள்ள அவர்களைப் போன்ற விஞ்ஞானிகளை ஒப்பு நோக்கும் பொழுது மிகக் குறைந்ததாகவே இருக்கும். எனவே வெளி நாடுகளில் நடைபெறுகின்ற விஞ்ஞான வளர்ச்சியோடு வலுவான நேரடித் தொடர்பு கொள்வதும், விஞ்ஞானத் துறையில் வளர்ச்சி பெற்ற நாடுகளிலுள்ள வளர்ச்சிகள், இந்த நாட்டில் வந்து இறங்கி நம்முடைய விஞ்ஞானிகளுக்கும் போதிய அளவு முன்னேற்றம் தருவதற்கும் இந்தத் தொடர்பு இன்றியமையாத ஒன்றாகும். சட்டத் துறையில் நிலைமை சற்று மாறுதல் அடைந்துள்ளது. இந்த நாட்டில் சிறந்த சட்ட அறிவு உடையவர்களும், உண்மையான சட்டங்களை எடுத்து விவாதிப்பதற்குரிய அறிவாளிகளும் இங்கு இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. அன்றியும் சட்டத் துறை ஆராய்ச்சியும், உயர்ந்த சட்டப் படிப்பும், விலையுயர்ந்த கருவி கரணங்கள் கிடைத்தால்தான் நடத்த முடியும் என்று சொல்வதற்கில்லை.

நம்முடைய தற்காலச் சட்டத் துறை, நமக்கு மிகுதியாகக் கிடைக்கின்ற பழையகாலச் சட்ட முறையோடு பெரிதும் மாறுபட்டுள்ளது என்பது உண்மைதான். இன்று நமக்குள்ள சமுதாய அமைப்பு, வாணிக நிலைமை, பெருவாணிகம், தொழில் நிலைமை ஆகியவற்றோடு பெரிதும் மாறுபாடுடைய பழைய நிலையில் இந்தச் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. என்றாலும் சென்ற நாலாயிரம் ஆண்டுகளாக இந்த நாட்டில் நாகரிக வாழ்வு நடைபெற்று வந்ததாதலின் பல சட்ட முறைகளும் ஒரு வகையான சட்டம் இயற்றும் முறையும் இந்தக் காலம் முழுவதும் இருந்துவந்திருக்கிறது. தற்பொழுதுள்ள சட்ட மன்றங்கள் இதே போன்ற நிலையில் முன்னர் இருந்திரா என்றாலும் இன்றுள்ள சட்டங்கள் பழைய நூற்றாண்டுகளில் உள்ள சட்டங்களோடு பெரிதும் மாறுபட்டிருந்தாலும் பலவகையான ஒருமைப்பாடு இவ்விரண்டிற்கும் இருந்திருக்குமென்றே கருதுகிறோம். நியாயம் பற்றிய கொள்கை சமத்துவம், பொருத்தங்கள் பற்றிய சட்டம், சான்றுகள் பற்றிய நிரூபணம் ஆகியவற்றைப் பழங்காலத்தில் எங்ஙனம் கொண்டிருந்தார்கள் என்பதை ஆராயத் தொடங்கினால் இவற்றிற்கு ஏற்ற சொற்களும் இவை பற்றி இந்த நாட்டவர் கொண்டிருந்த கொள்கைகளும் நல்ல பயனளிக்கும். ஆங்கிலேயர்கள் இந்த நாட்டிற்கு வருவதற்கு முன்னர் நிச்சயமாக நீதி வழங்குவதற்குரிய முறை ஒன்று இந்த நாட்டில் இருந்திருக்கத்தான் வேண்டும். எனவே நியாயம் பற்றிய கருத்துக்கள் முதலானவை நம் நாட்டைப் பொறுத்த மட்டில் நிச்சயமாகப் புதுமையானவை அல்ல.

இதே நேரத்தில் நம்முடைய நியாயவாதிகள், நடுவணர்கள், வழக்கறிஞர்கள் ஆகியவர்கள், உலகத்தின் ஏனைய நாடுகளில் சட்டத் துறை எங்ஙனம் வளர்ச்சி அடைகிறது? அதிலும் சிறப்பாக ஆங்கிலம் பேசும் நாடுகளில் எங்ஙனம் வளர்ச்சி அடைகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டியது லாபகரமானதும், இன்றியமையாததும் ஆகும். ஏனென்றால் ஆங்கில முறையை ஒட்டியே நம்முடைய சட்ட முறைகள், அரசியலமைப்புக்கள் நிலையான சட்டங்கள் ஆகியவை செய்யப்பட்டுள்ளன. ஆங்கில அறிவு பெறுவதற்கு உயர்தரக் கல்வி முறையில் நாம் கொடுத்துள்ள ஏற்பாடு இதனை பொறுத்தவரைப் போதுமானதென்றே கருதுகிறோம்.

தர்ம சாத்திரங்களைப் பொறுத்த மட்டில் நம்முடைய சட்டங்களும், நீதி வழங்கு முறையும் பெரும்பாலும் ஆங்கிலோ-சாக்ஸன் முறையிலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன. நம்முடைய அரசியலமைப்பு வடிவமும், ஆங்கிலோ-சாக்ஸன் பாராளு மன்ற ஜனநாயக முறையிலிருந்தே மிகுதியும் எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உள்ளமையால் சட்டத் துறையிலும், அரசியல் சட்டத்திலும் ஆங்கிலத்தையே என்றைக்கும் இடைநிலை மொழியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இந்த வாதம் தவறாகக் கருதப்பட்டதென்றே நாங்கள் நினைக்கிறோம். நம்முடைய பழைய

கால நிலையிருந்தும் தர்ம சாஸ்த்திர முறையிலிருந்தும் அரசியல், சமுதாய அமைப்புக்களிலிருந்தும், இப்பொழுது மாறுபட்ட இவைகள் தோன்றினும், இன்றுள்ள அமைப்புக்கள் நம்முடைய பழைய அமைப்புக்களோடு ஒத்து இல்லாமல் உலகத்தின் பல நாடுகளில் இன்று காணப்படும் அமைப்புக்களோடு ஒத்திருக்க வேண்டும். ஆங்கிலேயர்களோடு நாம் கொண்டிருந்த இப்புதிய நீண்ட தொடர்பு நம்முடைய நீதித் துறை, அரசியலமைப்பு வடிவம் ஆகியவை அவர்களுடையதைப் போலிருக்கக் காரணமாகிறது. என்றாலும் பாராளு மன்ற ஜனநாயகம் என்பது ஆங்கிலத்தை அல்லாத மற்றொரு மொழியில் நடைபெற முடியாது என்று நினைப்பதற்குத் தகுந்த காரணம் இல்லை. அன்றியும் சட்ட முறைகள், நடைமுறைகள், நீதி அமைப்புக்கள் ஆகியவை ஆங்கில முறையில் அமைக்கப்பட்டிருப்பதனால் அந்த மொழியின் மூலமே நடைபெற்றால் ஒழிய வேறு வழியில்லை, என்று நினைப்பதற்கும் தக்க காரணம் இல்லை. ஆங்கிலோ-சாக்ஸன் அமைப்புக்களில் சொல்லப்பட்ட நீதிக் கொள்கை, உரிமை என்பவற்றைப் பெரிதும் மதிக்கின்ற அதே காலத்தில், நம்முடைய நாட்டிலுள்ள அமைப்புக்களை, ஆங்கிலோ-சாக்ஸன் நாட்டிலுள்ள அமைப்புக்களை அவர்கள் மொழியில் நடத்துவதுபோல, நம்முடைய மொழியில் நடத்த வேண்டும் என்று நினைப்பது முற்றிலும் பொருத்தமானதே.

ஏனைய துறைகளில் இருப்பதுபோலச் சட்டத் துறை சம்பந்தமான கலைச் சொற்களை உண்டாக்குவதில் அதே அளவு தொல்லை இருக்கும் என்பதை நாங்கள் உணர்ந்தாலும், இத்துறையில் தேவைப்பட்ட சொற்களையும் சொல்லாட்சிகளையும் தேடி எடுப்பதற்கு உள் நாட்டிலேயே தேவைப்பட்ட மூலப் பொருள்கள் நிரம்ப உண்டு என்பதையும் சொல்ல விரும்புகிறோம்.

3. சட்டம், சட்டம் செய்தல் ஆகிய துறைகளில் இடைநிலை மொழி மாற்றம் செய்வதற்குக் கீழ்க்கண்ட முன்னேற்பாடுகள் தேவையெனத் தெரிகிறது:—

(1) அதிகார பூர்வமான சட்ட அகராதி தயாரித்தல்.

(2) மத்திய சட்ட மன்றம், ராஜ்ய சட்ட மன்றம் ஆகியவைகளில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை ஹிந்தி மொழியில் ஆக்குதல்.

இவைபற்றிக் கீழ்க்கண்ட கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

4. கலைச் சொற்களைப் பொறுத்த வரை, சட்டத் துறைக் கலைச் சொற்களைத் தேடி வளர்த்தல் என்பது பொதுவாகக் கலைச் சொற்களைத் தேடுவதன் ஒரு பகுதியே ஆகும் ஆதலால் ஐந்தாவது பகுதியில் நாங்கள் சொல்லிய அனைத்தும் சட்டத் துறைக் கலைச் சொற்களுக்கும் முற்றிலும் பொருந்தும். எங்கெங்கே பொருந்துகின்றனவோ அங்கே எல்லாம் நம்முடைய பழைய நூல்களிலுள்ள பொருத்தமான சொல்லாட்சிகளை அப்படியே எடுத்து மீண்டும் உயிருண்டாக்கலாம். இதனை அடுத்து ஆங்கில ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் பிராந்திய மொழிகளில் பயன் படுத்தப்பட்ட பொருத்தமான பல கலைச் சொற்களை எடுத்துக் கொள்ளலாம். இத்துறையில் பழைய சுதேச மன்னர்கள் ஆட்சி செய்த பரோடா, குவாலியர், ஹைதராபாத் ஆகிய இடங்களில் பயன்படுத்தப்பட்ட பல சொல்லாட்சிகளும் அந்தப் பகுதிகளில் இந்திய மொழிகளிலேயே மிக உயர்ந்த நடுவணர் மன்றம் வரையில் நடைபெற்றன ஆதலின் இந்தச் சொற்களை நாம் எடுத்துக் கொள்வதில் இடையூறு ஒன்றும் இல்லை. எந்த வகையிலும் நம்முடைய கருத்துக்குப் பொருத்தமான அல்லது அதே போன்ற ஒரு சொல் கிடைக்காத பொழுது அந்தச் சொல்லை அப்படியே ஆங்கிலம், கிரேக்கம், லத்தீன் ஆகிய மொழிகளில் ஒரு மொழியிலிருந்து எடுத்துக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை.

இந்தக் கலைச் சொற்கள் எடுக்கப்படும் பொழுது ஹிந்தி மொழியிலும், பிராந்திய மொழிகளிலும் ஒரே வகைச் சொற்கள் சொல்லாட்சிகள் ஆகியவை எடுக்கப்பட வேண்டும் என்று கூறினது ஏனையத் துறைகளையெல்லாம்

விட சட்டத் துறைக்கு மிகுதியும் அவசியமாகும். நாட்டின் நீதித்துறை ஒற்றுமை, இந்திய அரசியலமைப்பு வடிவத்தில் மிக முக்கியமான ஒன்று. ஆதலால் சட்டச் சொற்களும், சொல்லாட்சிகளும் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் எல்லாராலும் ஒரே பொருளில் அறியப்பட வேண்டு வது நாட்டின் ஒற்றுமையை நிலை நிறுத்தத் தேவையானது.

பொதுவாகக் கலைச் சொற்களை ஆக்கும் பொழுது பெரிதும் கலந்து ஆலோசித்துச் செய்ய வேண்டும் என்ற விதி சட்டக் கலைச் சொற்களை ஆக்கும் பொழுதும் கடைப் பிடிக்கப்பட வேண்டும். அதன்பிறகே அதிகார பூர்வமான சட்ட அகராதி ஒன்றைத் தயாரித்து வெளியிட வேண்டும். வரையறுத்த பொருளுடைய சட்டச் சொற்களைச் கொண்டுள்ள ஒரு அகரா தியைப் பாராளு மன்றமே நிறைவேற்றவேண்டும் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. அப்படியே அந்தச் சட்ட அகராதி பாராளு மன்றத்தில் சட்டம் போல நிறைவேற்றப் பட்டாலும், ஒரு குறிப்பிட்ட வார்த்தை அல்லது சொற்றொடருக்கு வாழ்க்கையை ஒட்டிப் பொருள் காணும்பொழுது பலபடியாகப் பொருள் சொல்லக் காரணம் உண்டு ஆதலால் அதனுடைய வரையறுத்த பொருள் இதுதான் என்று சந்தர்ப்பத்திற்கு ஏற்றமுறை யில் விவாதிக்க இடமுண்டு. ஏனென்றால் இதனை நிறைவேற்றும் பொழுது எல்லா வகையான சந்தர்ப்பங்களையும், சூழ்நிலைகளையும் எதிர்பார்த்தல் என்பது இயலாத காரியம். எனவே இப்படிப்பட்ட ஒரு சட்ட அகராதியைப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றுவதனால் என்ன பிரத்தியேகமான லாபம் வரும் என்று எங்களுக்குத் தெரிய வில்லை. இப்படிப்பட்ட ஒரு அகராதி இந்திய அரசாங்கத்தின் சட்ட அமைச்சின் முத்திரையோடு வெளி வருமேயானால் அதிலுள்ள சொற்களும், அனுபவத்தில் வரையறுத்த பொருளுடைய சொற்களாக வழங்கப்படும். பாராளு மன்ற நிறைவேற் றங்களுக்குச் சொல்லப்படுகின்ற மீற முடியாத இயல்பு, விரிந்து கொடுக் காத தன்மை, ஆகியவை இவற்றிற்கு இரா. ஏனைய கலைச் சொற்களுக்கு நாங்கள் சொல்லியது போல, இந்தச் சொற்களும் பலகாலம் பயன் படுத்தப்பட்டு சட்ட மன்றங்களில் கிடைக்கின்ற தீர்ப்புக்களின் மூலம் பிரத்தி யேகமான நிலையான பொருளைப் பெற்று நாளாவட்டத்தில் "மறு திட்டம்" செய்வதற்கு ஏற்றவையாக ஆகும்.

இரண்டாவது முன்னேற்பாட்டைப் பொறுத்த வரை அதாவது நிலை யான சட்டங்களின் நூலை ஹிந்தியில் மொழி பெயர்ப்பது பற்றி நாங்கள் சில சொல்ல விரும்புகிறோம்.

நீக்கப்படாத எல்லா நிலைச் சட்டங்களும், அவை மத்திய சட்டமாயினும், ராஜ்ய சட்டமாயினும் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பெற்று அதிகார பூர்வமான படிகள் ஹிந்தி மொழியில் கிடைக்க வேண்டும். மத்திய ராஜ்ய அரசாங்கங்கள் பொது மக்களின் தேவையை முன்னிட்டுப் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பது போல "பலரும் அறியும்" மொழி பெயர்ப்புக்களைச் சட்ட மூலம், சட்டம் ஆகியவற்றிற்குச் செய்யக் கூடாது. ஏனென்றால் நாளா வட்டத்தில் ஹிந்தியிலுள்ள இந்த மூல வடிவமே அதிகார பூர்வமானது என்று கொள்ளப் போகிறோம் ஆதலின். நிலைச் சட்டங்களை ஹிந்தி மொழியில் ஆக்கிய பிறகு நாளா வட்டத்தில் அவை மறு படியும் சட்ட மன்றங்களில் நிறை வேற்றப்பட்டு அதாவது மத்திய சட்டங் கள் பாராளு மன்றத்திலும், ராஜ்ய சட்டங்கள் ராஜ்ய சட்ட மன்றங்களிலும் மறு-நிறைவேற்றம் செய்யப்படவேண்டும்.

இதை யல்லாமல் ராஜ்ய அரசாங்கங்கள் ராஜ்யச் சட்டங்களையோ மத்திய சட்டங்களையோ, அனைத்தையுமோ சிலவற்றையோ பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்க விரும்பலாம். இவை மொழி பெயர்க்கப்பட்டால் அவை பொது மக்கள் மொழி பெயர்ப்பாக இருக்குமே தவிர அதிகார பூர்வ மான படியாக இரா.

5. நீக்கப்படாத சட்டங்கள் என்று எடுத்துக் கொண்டால் அவை எண்ணாயிரத்து ஐந்நூறு பக்கங்கள் கொள்ளும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசாங்கத்தில் நிறைவேற்றப்படும் புதிய சட்டங்கள் ஏறத்தாழ ஐந்நூறு பக்கங்கள் உள்ளன. மத்திய சட்ட அமைச்சு நீக்கப்படாத மத்திய சட்டங்களை 7 ஆண்டுகளுக்கு முன்னர் மொழி பெயர்க்கத் தொடங்கி இதுவரையில் 183 நீக்கப்படாத சட்டங்களையும், 45 திருத்தச் சட்டங்களையும் 3,000 பக்கங்களில் மொழி பெயர்த்துள்ளதாக இந்தக் கழகத்திற்கு அறிவிக்கப்பட்டது. சட்ட அமைச்சின் ஒரு தனிப் பகுதி இதனைச் செய்வதாகவும் 1953 முதல் உதவிச் செயலாளர் தகுதியுடைய ஒரு தனிப்பட்ட அதிகாரி ஹிந்தி மொழி பெயர்ப்புப் பகுதியைக் கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளார் என்றும் எங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

மேலும், சட்ட அமைச்சை விசாரித்ததில் நீக்கப்படாத மத்திய சட்டங்களை ஹிந்தியில் மொழி பெயர்ப்பது ஏறத்தாழ "பொது மக்களின் உபயோகத்துக்காக சட்டங்களை ஹிந்தியில் மொழி பெயர்ப்பது" என்றே சொல்லப்பட்டது. மேலும் சட்ட அமைச்சு "இங்ஙனம் செய்த இந்த மொழி பெயர்ப்புக்கள் ஹிந்தி மொழியில் சட்ட பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய தகுதியுடையனவா என்று நாங்கள் சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை" என்று சொல்லிவிட்டது. எனவே இந்த மொழி பெயர்ப்புக்கள், நிலைச் சட்டங்களை ஹிந்தி மொழியில் புத்தக வடிவாகக் கொண்டு வருங்காலத்தில் பயன்படும் என்று சொல்வதற்கில்லை. இத்தகைய ஒரு தெளிவான குறிக்கோளை மனத்துட் கொண்டு இந்த மொழி பெயர்ப்பு வேலை தொடங்கப்பட்டதாகவும் தெரியவில்லை. மேலும் இது பற்றிச் சட்ட அமைச்சை விசாரித்தபொழுது அந்த அமைச்சிலுள்ள முதிய அதிகாரி எவரும் இந்தப் பகுதியைக் கண்காணிக்கவோ, இந்த மொழி பெயர்ப்புக்களின் தராதரத்தைக் கவனிக்கவோ இயலவில்லை ஆதலால், இந்த மொழி பெயர்ப்பை ஆங்கிலத்திற்குப் பதிலாக உபயோகப்படுத்தினால் அவை நிலைக்க முடியுமா ? என்பதற்கும் விடை கூறமுடியவில்லை. அந்த அமைச்சின் கருத்துப்படி, இந்த மொழி பெயர்ப்புக்களைப் பொது மக்களின் உபயோகத்துற்கென்றே எடுத்துக் கொள்ளவேண்டும். இது சம்பந்தமாக இந்தக் கழகத்துக்கும் சட்ட அமைச்சுக்கும் கடிதப்போக்கு வரத்தை அனுபந்த நூல் பகுதி 12-ல் அப்படியே தந்துள்ளோம். (அச்சிடப்படவில்லை.)

சட்டத் துறைக் கலைச் சொற்களை தேடும் வேலையைப் பொறுத்த மட்டில் பல்வேறு பகுதிகள் இவ்வேலையைச் செய்தாலும் நாங்கள் ஐந்தாவது பகுதியில் பொதுவாகக் கலைச் சொற்களைப் பற்றி எழுதும்பொழுது குறிப்பிட்ட ஒருமைப்பாடு இத்துறையில் குறைவாகவுள்ளதென்றே தெரிகிறது. 1956 மார்ச்சு மாதம் 9-ந் தேதி வரையில் சட்ட அமைச்சு 1,000 சட்டச் சொற்களைத் தயாரித்துள்ளது என்றும், சட்டங்களை மொழி பெயர்ப்பதில் இவற்றை கண்டுபிடித்தன என்றும், ஆனால் பரீக்ஷித்துப் பார்த்து முடிவாக எடுத்துக்கொள்ளப்பட்டவை 75 சொற்கள்தாம் என்றும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

எனவே நிலைச் சட்டங்களை மொழி பெயர்த்துள்ளதில் பயன்படுத்தப்பட்ட சட்டச் சொற்கள் பரீக்ஷித்துப் பார்த்து முடிவாக ஒப்புக் கொள்ளப் படாதவை என்று தெரிகிறது. எனவே இந்த மொழி பெயர்ப்புகளை மறுபடியும் திருப்பிப் பார்த்து இந்தக் கலைச் சொற்களை முடிவு செய்வதோடு இப்பொழுதுள்ள மொழி பெயர்ப்பு அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளத் தகுதியற்றது ஆதலின் இதனைத் திருத்தி அதிகார பூர்வமான ஹிந்தி மொழி பெயர்ப்புக்களாக ஆகவேண்டும். ராஜ்ய சட்டங்களை பொறுத்த மட்டில் பிராந்திய மொழிகளிலும் ஹிந்திலும் கூடச் சில ராஜ்ய அரசாங்கங்கள் நாளா வட்டத்தில் ஆங்கிலத்திலிருந்து மொழி மாற்றம் செய்யும்பொழுது உதவியாக இருக்கும் என்ற கருத்தில் மொழி பெயர்த்

துள்ளன. ஆனால் இதே முறையில் அவைகளும் மொழி பெயர்க்கப்பட்டிருக்குமானால் அந்த ஹிந்தி மொழி பெயர்ப்புக்களும் அதிகார பூர்வமான நிலைச் சட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்படத் தகுதியற்றவையேயாகும்.

6. கீழ்க்கண்ட தொழில் அட்டவணையை வைத்துக்கொண்டு இறுதி வரையில் அதனை விடாது பின்பற்றுவது தேவையான ஒன்று என்பது எங்கள் கருத்தாகும் :—

(1) இந்திய மொழிகளில் சட்டத் துறையில் எடுக்கப்பட வேண்டிய கலைச்சொற்களை எல்லா மொழிகளுக்கும் பொதுவான முறையில் விரைவாக எடுத்தல் வேண்டும்.

(2) இங்ஙனம் எடுக்கப்பட்ட கலைச்சொற்களை ஆராய்ந்து மதிப்பீடு செய்த பிறகு மத்திய அரசாங்கத்தின் பிரத்தியேகமான அதிகாரி ஒருவரின் கீழ்த்தயாரிக்கப்பட்ட சொற்களை அடிக்கடி நூல் வடிவாக வெளியிட வேண்டும்.

(3) நிலையான சட்டங்களை ஹிந்தியில் மொழி பெயர்த்து உடனே வெளியிடவேண்டும். இங்ஙனம் ஹிந்தியில் மொழி பெயர்த்த சட்டங்களை அவ்வவற்றிற்குரிய மத்திய அல்லது ராஜ்ய சட்ட மன்றங்களால் மீட்டும் நிறைவேற்றப்படுவதற்குரிய ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து அதனைத் தொடர்ந்து நடத்தவேண்டும்.

ஹிந்தி மொழியிலேயே சட்டங்களை எழுதுவதற்கு நல்ல பயிற்சியும் அனுபவமும் பெற்றவர்கள் வந்து ஹிந்தி மூலத்திலேயே அதனைச் செய்யத் தொடங்குகிற வரை, மத்திய அரசாங்கத்தின் ஆதரவின் கீழ் நிலைச்சட்ட புத்தகத்தை, ராஜ்ய சட்டங்கள் உள்பட ஹிந்தியில் மொழி பெயர்க்கும் வேலையைத் தொடங்கலாம் என்பது எங்களுடைய கருத்து.

மத்திய அரசாங்கச் சட்டங்களை ஹிந்தியில் மொழி பெயர்த்து அவற்றை மறுபடியும் சட்ட மன்றங்கள் நிறைவேற்றுவது பற்றி விரிவான ஒரு ஏற்பாடு செய்வதைப் பற்றியும் நாங்கள் கொஞ்சம் ஆராய்ந்துள்ளோம். இது இரண்டு வழிகளில் நிறைவேற்றப்படலாம். மத்திய அரசாங்கத்தில் ஹிந்தியில் எழுதப்பட்ட சட்டங்களை மறுபடியும் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்து முறைப்படி அவற்றை நிறைவேற்றலாம். இன்றேல் ஒரு பொதுச் சட்டத்தைப் பாராளு மன்றத்தில் நிறைவேற்றி ஹிந்தியில் எழுதப்பெற்றுள்ள எல்லா சட்டங்களும் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டனவாகவே கொள்ளவேண்டும் என்று சொல்லி அந்தப் பொதுச்சட்டத்தை இந்தியா கெஜெட்டில் வெளியிடுவதன் மூலம் அதிகார பூர்வமானதாக ஆக்கிவிடலாம். மத்திய அரசாங்கச் சட்டங்கள் ஹிந்தியில் வரும்போது 8,500 பக்கங்கள் கொண்ட பெரிய நூலாகுமாதலால் அதனை உத்தேசித்தும், சாதாரணமாக ஆண்டுதோறும் பாராளு மன்றம் 500 பக்கங்கள் கொண்ட சட்டங்களை நிறைவேற்றுகின்றது ஆதலாலும், இவை இரண்டையும் உத்தேசித்து ஹிந்தியில் எழுதப்பட்ட சட்டங்களைப் பாராளு மன்றம் முற்றிலும் ஒவ்வொன்றாக ஏற்றுக்கொள்வது என்பது இயலாத காரியம். அவ்வாறானால் ஒரே ஒரு வழிதான் உண்டு. ஒரு பொதுச் சட்டத்தை இயற்றி ஹிந்தியில் எழுதப்பெற்ற சட்டங்கள் அனைத்தும் அதிகார பூர்வமானவை என்று சொல்லிவிடுவது சிறந்த வழியாகும். இந்த முறையில் எங்களுக்கு ஒரு வழி கூறப்பட்டது. அதாவது ஹிந்தி சட்டக்குழு என்ற ஒன்றை ஏற்படுத்தி இப்பொழுதுள்ள மத்திய அரசாங்கச் சட்டங்களை எல்லாம் மொழி பெயர்க்கும் வேலையை அக்குழுவினிடம் ஒப்படைத்து அந்தக் குழு மொழி பெயர்த்து வெளியிட அவற்றை இந்தியா கெஜட்டில் வெளியிட்டு அப்படி வெளியிடுவதே அந்தச் சட்டத்தை அதிகார பூர்வமாக ஆக்கிவிட்டதாகும் என்று அறிவித்துவிடுவதே இந்த வழியாகும். இங்ஙனம் ஹிந்தியில் எழுதப்படும் சட்டங்கள் ஏற்கெனவே உள்ள நிலைச் சட்டங்களின் மொழி பெயர்ப்புகள் ஆதலால் இவற்றில் சட்ட மன்றம்

அடிப்படை அளவில் ஒன்றும் செய்யப்போவதில்லை. இவ்வாறு செய்வதானால்தான் இந்தப் பெரிய வேலையைச் செய்து முடிக்க இயலும். எனவே எவ்வித மறுப்பும் இல்லாமல் இதனை ஏற்றுக்கொள்ளலாம். இத்துறையில் மிக அவசரமாக வேலை நடைபெற வேண்டி இருத்தலின் இதனை செய்து முடிப்பதற்குரிய வழி துறைகளை எடுத்துக்காட்டுகின்ற அளவில் எங்கள் வேலை முடிந்துவிடுகிறது. இப்பிரச்னைக்கு முடிவு கண்டு அதனை விரிவான முறையில் கொண்டு செலுத்த வேண்டியது பாராளு மன்றத்தின் கடமையாகும்.

ராஜ்யங்களைப் பொறுத்த மட்டில் நீக்கப்படாத நிலைச் சட்டங்களை என்ன செய்வது என்ற பிரச்னை தோன்றும். அப்பொழுது இதே போன்ற ஒரு வழியை அதற்கும் மேற்கொள்ளலாம்.

1955 ஆகஸ்டு மாதம் இந்திய அரசாங்கம் ஒரு சட்டக் குழுவை நியமித்தது. இந்தக் குழுவின் நிர்மாணக் கோரிக்கைகளுள் ஒன்று " மத்திய அரசாங்க சட்டங்களை எடுத்து ஆராய்ந்து பொதுவாக அவற்றின் தேவை, இன்றியமையாமை, தற்காலத்துக்கேற்ப அவற்றை மாற்றியும் புதுக்கியும் அமைத்துக்கொள்ள வேண்டிய வழிகள் பற்றிச் சிபாரிசு செய்தல் " என்பதாகும். கூடுமானவரை இவ்வேலை விரைவாக நடைபெறுமேயானால் இச்சட்டங்களை ஹிந்தியில் மொழி பெயர்க்கும் வேலையைச் சட்டக்குழுவின் வேலைக்கு அடுத்தபடியாகச் செய்யலாம். ஏனென்றால் மொழி பெயர்ப்பு வேலை முன்னர் நடந்துவிட்டால் மறுபடியும் ஒரு முறை சட்டக்குழு செம்மையான வடிவத்தை உண்டாக்கிய பிறகு மொழி பெயர்க்கும் வேலை ஏற்படாமல் செய்யலாம். எங்கே ஒரு குறிப்பிட்ட சட்டத்தை மாற்றியமைக்கும் தேவை ஏற்படுகிறதோ அங்கேயும் கூட இதே முறையைக் கையாளலாம்.

7. இப்பொழுது ஆங்கிலத்தில் இருக்கின்ற " வழக்குச் சட்டம் " அடிக்கடி சட்ட மன்றங்களில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படுதலின் அவற்றையும் மொழி பெயர்க்க வேண்டிய இன்றியமையாமை உண்டா ? இவ்வாறு மொழி பெயர்ப்பதால் வேறு முக்கியமான பயன் ஒன்றும் விளையாவிட்டாலும் இவ்வாறு மொழி பெயர்ப்பது ஹிந்திச் சட்டங்களை மொழி பெயர்ப்பதற்குரிய பழக்கத்தைத் தருமாதலின் வழக்குச் சட்டங்களின் முக்கியமான பகுதிகளையாவது அதிகார பூர்வமான சட்ட அகராதியிலிருந்து எடுக்கப்பட்ட கலைச்சொற்களை உபயோகித்து மொழி பெயர்ப்பது நன்மை செய்வதாகும். என்றுலும் மொழி மாற்றம் செய்வதற்கு இதனை முதல் தேவை என்று நாங்கள் சொல்ல வரவில்லை. ஏனென்றால் இந்த வழக்குச் சட்டங்கள் மொழி பெயர்க்க முடியாதபடி அவ்வளவு மிகுதியாக உள்ளன. மேலும் நாம் சொல்லுகின்ற முறையில் சட்டப் பட்டம் பெற்று வருபவரும் நீதித்துறையில் உள்ள நடுவணரும் போதிய அளவு தங்கள் கல்லூரி வாழ்க்கையில் ஆங்கில அறிவு பெற்றிருப்பார்கள், ஆதலால் அவர்களின் எதிரே இந்த வழக்குச் சட்டங்களும் எடுத்துக் காட்டப்படும்பொழுது அதனை புரிந்துகொள்ளுகின்ற அளவுக்கு ஆங்கில அறிவு பெற்றிருப்பார்கள். எனவே வழக்குச் சட்டங்களில் முக்கியமான பகுதிகளை ஹிந்தியில் மொழி பெயர்த்துத் தருவது ஒரு வசதியைச் செய்து தருமானுலும் எல்லாவற்றையும் மொழி பெயர்த்தல் என்பது முடியாத காரியம் ; தேவையும் இல்லை.

8. இது சம்பந்தமாக எழும் மற்றொரு பிரச்னையையும் இங்கே எடுத்துச் காட்ட விரும்புகிறோம். சட்டங்களை ஒழுங்குபடுத்தி விட்டால் வழக்குச் சட்டங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டும் தேவை இராது என்று சிலர் கூறினார்கள். இன்னும் சிலர் ஆட்சி முறையில் எளிமையை உண்டாக்க வேண்டும் என்று கருதி " குறிப்பிட்ட ஒரு தேதிக்கு முன்னர் நீதிமன்றங்களில் தரப்பட்டத் தீர்ப்புகள் இப்பொழுது நடைபெறும் வழக்குகளில் சட்டங்களை பொருள் செய்வதற்கு எடுத்துக் காட்டாகக் காட்டப்பட முடியாது " என்று ஒரு சட்டம் இயற்றிவிட்டால் நலமாக இருக்கும் என்று கூறினார்கள். இந்தக் கருத்துக்கள் ஒரு தவருன எண்ணத்திலிருந்து தோன்றியவை

ஆகும். அரசியல் அமைப்பு 147-வது விதி மிக உயர் நீதி மன்றம் நிறைவேற்றும் சட்டங்கள் அனைத்தும் இந்திய எல்லையில் உள்ள எல்லா நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும் என்று சொல்கிறது. மேலும் வழக்குச் சட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட சட்டத்தை நிலைநாட்ட அதில் கொடுக்கப்பட்டுள்ள வாதத்தின் அடிப்படையில் தோன்றுகிறது. ஒரு சட்டத்தைப் பொருள் செய்வதில் கருத்து வேறுபாடு தோன்றுகிற வரையில் தாங்கள் மேற்கொள்ளும் பொருளுக்கு உதவியாக மற்ற வழக்குகளில் இந்தச் சட்டத்தை எவ்வாறு பொருள் கொண்டார்கள் என்பதை வழக்கறிஞர்கள் எடுத்துச் சொல்லத்தான் செய்வார்கள். ஆதலால் வழக்குச் சட்டங்களை ஒழித்துகட்டிவிடுவதும் இதன் மூலம் பெருகி வளர்ந்து இருக்கும் சட்ட மரபை அழித்துவிடுவதும் கூடாத காரியம். அதேபோலச் சட்டங்களை ஒழுங்குபடுத்திவிடுவதனால் மட்டும் வழக்குச் சட்டங்களுக்குத் தேவை இல்லாமல் போய்விடும் என்று நினைப்பதும் தவறு. ஒழுங்குபடுத்தப்பட்ட சட்டங்கள் மட்டும் எல்லாவித சூழ்நிலையையும் தனிப்பட்ட சந்தர்ப்பத்தையும் மனத்திற்கொண்டு ஐயத்திற் கிடமின்றி வரையறுத்த பொருளில் ஒன்றும் செய்துவிடுவதில்லை.

9. சட்டம் செய்கின்ற மொழி பற்றியும் சட்ட மொழி பற்றியும் மொழி மாற்றம் செய்வதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை எங்ஙனம் வரிசைப் படுத்த வேண்டும் என்பது பற்றி இப்பொழுது ஆராயவேண்டும்.

கலைச்சொற்களைத் தயாரிக்கின்ற செயலையும் சட்டங்களை ஹிந்தியில் ஆக்குகின்ற செயலையும் பொறுத்தமட்டில் முதலில் சொல்லியது முன்னர் நடைபெறவும், இரண்டாவது சொல்லியது பின்னர் நடைபெறவும் செய்ய வேண்டியது முறைதான் என்றாலும் கலைச் சொற்களில் கடைசிச் சொல்லை உண்டாக்கிய பிறகுதான் சட்ட மொழி பெயர்ப்பை மேற்கொள்ளவேண்டும் என்று நினைக்கவேண்டா. உண்மையைக் கூறுமிடத்து இவ்விரண்டு தொழில்களும் ஒன்றோடொன்று தொடர்புகொண்டு ஒரேநேரத்தில் நடைபெறலாம். அதேநேரத்தில் இம்முறையில் தேவைப்படும் மற்ற நிகழ்ச்சிகளும் தொடங்கப்படலாம். எந்த ராஜ்யங்கள் தங்களுடைய சட்ட மன்றங்களில் கொண்டுவரப்படும் சட்டங்களை ஹிந்தி மொழியிலேயே கொண்டு வரவேண்டும் என்று நினைத்து அதற்குரிய கருவிகளையும் பெற்றிருக்கின்றனவோ அந்த ராஜ்யங்களை அவ்வாறே செய்ய உத்திரவு இடலாம். ஹிந்தியில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களைப் பொறுத்தமட்டில் அரசியல் அமைப்பின் 348-வது விதி (3-வது உட்பிரிவு) மாற்றப்பட்டால் அன்றி அவை அதிகார பூர்வமான மதிப்பைப் பெறமாட்டா. எந்த ராஜ்யங்கள் சட்ட மூலம், சட்டம் ஆகியவற்றை ஹிந்தி மொழியில் சட்ட மன்றங்களில் கொண்டு வரலாம் என்று உத்திரவு இட்டனவோ அந்த ராஜ்யங்களில் கூட ஹிந்தியிலேயே இவற்றைச் செய்வதற்குரிய தகுதி முற்றிலும் வரவில்லை என்பதை எச்சரிக்க விரும்புகிறோம். பல சமயங்களில் முதலில் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட ஒன்றையே பின்னர் ஹிந்தியில் மொழி பெயர்ப்பதாகத் தெரிகிறது. ஹிந்தியில் மூலச் சட்டத்தை எழுதக்கூடிய தகுதி பெற்றவர்கள் இவ்வேலையைத் தொடங்கினாலன்றி மொழி பெயர்ப்பில் ஏற்படக்கூடிய தவறுகளைப் போக்குதல் இயலாத காரியம்.

சில ராஜ்யங்களில் சட்டங்களாவது ஹிந்தி மொழியில் செய்யப்பெற்று நிலைச்சட்ட புத்தகத்தில் அவை இடம் பெறும்பொழுதும், நாங்கள், கீழே சொல்லியபடி உயர்நீதி மன்றங்களில் நடுவணர்கள் தம்முடைய தீர்ப்புகளுள் சிலவற்றையேனும் ஹிந்தி மொழியில் வழங்க முற்படும்பொழுதும் தான் ஹிந்திச் சொற்களும் சொல்லாட்சிகளும் வழங்குவதற்குரிய தன்மையைப் பெற்று வரையறுக்கப்பட்ட பொருள் செறிவோடு வாழ முற்படும். இவ்வாறு நேரிடையாக வழங்கப்படும்பொழுதுதான் ஹிந்தியில் தோன்றும் சட்டக் கலைச் சொற்கள் வரையறுத்த பொருளைப் பெற்று பல்வேறு விதமான அர்த்த வேறுபாட்டையும் காட்டும் நிலைமையைப் பெறும். இப்பொழுதுதான வழக்குச் சட்டம் ஹிந்தியில் தோன்றி வளர ஆரம்பிக்கும்.

எங்கே தகுதிபெற்ற ஹிந்திச் சொல் அகப்படவில்லையோ அங்கே ஆங்கிலச் சொற்களையே ரோமன் எழுத்திலோ தேவநாகரி எழுத்திலோ எழுதிப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

10. மாற்றம் நேரும் இடைக்காலத்தில் நிலைச்சட்ட புத்தகமும், வழக்குச் சட்டமும் ஒரு பகுதி ஆங்கிலத்திலும் ஒரு பகுதி ஹிந்தியிலும் இருக்கக் கூடிய ஒரு காலம் வரலாம் என்றும் நாளாவட்டத்தில் ஹிந்தி மொழி பெரியதொரு இடத்தைப் பெறலாம் என்றும் நாங்கள் நம்புகின்றோம். இந்த இடைக்காலத்தில் உயர்நீதி மன்ற நடுவணர்கள் ஹிந்தியில் தங்களுடைய தீர்ப்புக்களைத் தந்தால், அவற்றினுடைய அதிகார பூர்வமான ஆங்கில மொழி பெயர்ப்புக்களை மற்றவருடைய சௌகரியத்தை உத்தேசித்துத் தர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறோம். இடைக்காலத்தில் நிலை மொழிச் சட்ட புத்தகமும் வழக்குச் சட்டங்களும் பாதி ஹிந்தியிலும் பாதி ஆங்கிலத்திலும் இருக்கின்ற காலத்தில் ஹிந்தியில் உள்ள பகுதிக்கு ஆங்கில மொழி பெயாப்பும், ஹிந்தியில் தரப்பட்ட தீர்ப்புக்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும், ஹிந்தி வழங்கப்படாத உயர்நீதி மன்றங்களிலும் மற்ற நீதி மன்றங்களிலும் உள்ளவர்களின் சௌகரியத்தை உத்தேசித்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தரப்படவேண்டும். ஆட்சித்துறையில் பல்வேறு பகுதிகளிலும் இருப்பதைப் போலவே நீதித் துறையிலும் நிலை மொழிச் சட்ட புத்தகத்திலும் ஆங்கிலத்தில் இருந்து ஹிந்திக்கு மொழி மாற்றம் நடைபெறும்பொழுது இரண்டு அல்லது மூன்று படிகளாக அவை வளர்ச்சியடைய வேண்டும். முதல் படியில் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் மொழி மாற்றம் செய்வதற்குரிய வசதிகள் இருத்தலின் அவை விரைவாக முன்னேற வேண்டும். இரண்டாவது படியில் ஏனைய பிராந்தியங்களில் ஓரளவு மெள்ளமாக இம்மாற்றம் ஏற்பட்டுக் கொண்டுவரும். இந்தப் படியில் கூட அந்த அந்த ராஜ்யத்திலுள்ள மொழி எவ்வளவு தூரம் ஹிந்தி மொழியுடன் தொடர்பு கொண்டு இருக்கிறதோ அந்த அளவுக்கு விரைவாகவும், மெள்ளமாகவும் இந்த மாற்றம் எறடடும். எந்த ராஜ்யங்களில் ஹிந்தி மொழி கட்டாயமாக இல்லாமல் விருப்ப மொழியாக இருக்கிறதோ அவை இந்த வேலையைத் தொடங்கும். முற்பகுதியில் சொல்லப்பட்ட ராஜ்யங்களில் இவ்வேலை நடைபெற்றதில் ஏற்பட்ட அனுபவம் பிறகு இவ்வேலையைத் தொடங்குவதர்குப் பேருதவியாக இருக்கும். இன்னும் பல காலத்திற்கு நடுவணர்கள் வழக்கறிஞர்கள் ஆகிய இரு கூட்டத்தாருக்கும் ஆங்கில மொழி பயன்படுமாதலால் அவர்களின் உதவியைக் கொண்டு இந்த இரண்டு மூன்று படிகளிலும் நாம் வேலையைத் தொடங்கி ஒரு மனிதன் தன்னுடைய பாரத்தை ஒரு காலிலிருந்து மற்றொரு காலுக்கு மாற்றுவது போல் ஆங்கில இடைநிலை மொழியிலிருந்து ஹிந்தி இடைநிலை மொழிக்கு எளிதாக மாறிவிடலாம். இறுதியாக எல்லாவற்றையும் ஹிந்தி இடைநிலைக்கு மாற்றிவிட்டுத் தனிப்பட்ட தேவைகளைத் தவிர மற்றவற்றில் ஆங்கிலத்தை முழுவதுமே விட்டுவிடலாம். மொழி மாற்றம் செய்வதற்குக் குறுக்கே நிற்காவிட்டால் தனிப்பட்டவர்கள் புறநடையை வேண்டுமான அளவு விட்டுக்கொடுக்கலாம்.

பகுதி XII

யூனியன் மொழியும் பொது ஊழியர் தேர்வுகளும்

இந்தக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளில் ஜனாதிபதி அவர்களுக்குச் சிபாரிசு செய்யவேண்டிய மற்றவற்றுள், கீழ்க்கண்டவைகள் பற்றியும் சிபாரிசு செய்யவேண்டும் :—

(அ) யூனியன் ஆட்சி விவாகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துவது.

* * * * *

(உ) யூனியனிலும், யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையேயும் ராஜ்யங்களின் இடையேயும் வழங்கும் மொழியாக உள்ள ஆங்கிலத்தை மாற்றி ஹிந்தியைக் கொணர்வதற்குரிய கால அட்டவணையைத் தயாரித்தலும் வழிகளை வகுத்தலும்.

" இந்தச் சிபாரிசுகளைச் செய்யும்பொழுது இந்தக் கழகம் இந்தியாவின் தொழில், பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்களுடைய பொது ஊழியத் துறைக்கு எவ்விதமான கோளாறும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் " என்றும் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில், ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் பொது ஊழியத் துறைக்கு உள்ள உரிமைகளும் தேவைகளும் பற்றி நாங்கள் என்ன சிபாரிசு செய்கிறோம் என்பதை இப்பகுதியில் ஆராய்கிறோம். அகில இந்திய பொது ஊழியத்துறைக்கு ஊழியர்களைப் பொறுக்கும்பொழுது யூனியன் பொது ஊழியப் பணிக்கழகம் வைக்கும் போட்டிப் பரீட்சைகளில்தான் இந்தப் புதுமாதிரியான பிரச்னை ஏற்படுகிறது.

இந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் மத்திய அரசாங்கத்தின் பெரிய இலாக்காக்களாகிய ரயில்வே, தபால் தந்தி, வருமானவரி, சுங்கமும் கலாலும் ஆகிய இலாக்காக்களில் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீக்கிய பிறகு வரப்போகின்ற வடிவத்தில் ஊழியர்கள் தன்மை எப்படி இருக்க வேண்டும் என்று கூறியுள்ளோம். நாங்கள் கூறியபடி இவ்விலாக்காக்களின் பிராந்திய அலுவலகங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களில் அமைந்து இருக்கும்பொழுது அதிகம் பொதுமக்களோடு தொடர்பு கொள்ள வேண்டி இருத்தலின் பிராந்திய மொழிகளிலேயே நடைமுறையைக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளோம். அதேநேரத்தில் இந்த அமைப்புக்கள், அமைப்புக்களின் உள் விவகாரங்களிலும் ஏனைய பிராந்தியங்களிலுள்ள இதே போன்ற அமைப்புக்களோடு தொடர்புகொள்வதிலும், ஏனைய இலாகாக்களோடும் யூனியன் அரசாங்க அமைச்சுக்களோடும் தொடர்பு கொள்வதிலும் ஹிந்தி மொழியிலேயே காரியங்களை நடத்தவேண்டும். ஊழியர்கள் நிலைமையில் இந்தத் தேவையை முன்னிட்டு இலாகாக்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு அந்த பிராந்தியங்களிலிருந்து ஊழியர்களைப் பொறுக்கி எடுக்கும். இவ்வாறு பொறுக்கி எடுக்கும்பொழுது அந்த ஊழியர்களுக்குத் தேவையான கல்வித்தகுதியும் நல்ல அளவு பிராந்திய மொழி அறிவும் இருப்பதோடு தேவையான குறைந்த அளவு ஹிந்தி மொழிப் பயிற்சியும் இருக்க வேண்டும் என அந்த இலாக்காக்கள் விரும்பலாம். இந்த ஊழியர்களுக்குத் தேவைப்படும் ஹிந்தி அறிவு தொடக்கத்தில் அவர்கள் வேலையை கவனித்துக்கொள்ள வேண்டிய அளவுக்குக் குறைந்ததாக இருந்தாலும் போதுமானது. நாளாவட்டத்தில் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி போதனை வளர்ச்சி அடையும் பொழுது மற்றொரு

முறையில் நாம் பிறிதொரு இடத்தில் கூறியுள்ள ஹிந்திப் படிப்புக் கற்பிக்கப்பட்டபொழுது ஊழியத்திற்கு வரும் அலுவலாளர்கள் ஓரளவு அதிகமான ஹிந்தி அறிவைப் பெற்றிருப்பார்கள். இந்த முறையில் ஹிந்தி பேசாத மாணவர்கள் இப்பொழுது செய்வதை விட அந்த பரீட்சைகளில் குறைந்துவிடப் போவதில்லை. உண்மையைக் கூறுமிடத்து அப்பொழுது, இப்பொழுதுள்ளதைப்போல எல்லோருக்கும் ஒரே இடத்திலிருந்து பரீட்சை நடப்பது போலில்லாமல் விரிந்த அளவில் நடைபெறும் ஆதலால் இவர்கள் இன்னும் நல்ல முறையில் அதில் வெற்றி பெறக்கூடும். தலைமை அலுவலகத்திற்கு ஊழியர்களைப் பொறுக்கும் முறை மத்திய அலுவலாளரகத்திற்கு பொறுக்கும் முறையைப் போன்றதே. அதுபற்றிக் கீழே பேசுவோம்.

2. யூனியன் பொதுப்பணிக் கழகம் கீழ்கண்ட அகில இந்திய ஊழியர் துறைகளுக்கும் மத்திய ஊழியர் துறைகளுக்கும் 12 போட்டிப் பரீட்சைகளை நடத்துகின்றது.

(1) இந்திய ஆட்சியாளர் ஊழியத்துறை முதலிய பரீட்சை—

இந்தியன் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்விஸ்.

இந்தியன் அயல்நாட்டு சர்விஸ்.

இந்தியன் போலீஸ் சர்விஸ்.

இந்தியன் ஆடிட் அண்டு அக்கௌண்ட் சர்விஸ்.

இந்தியன் டிபென்ஸ் அக்கௌண்ட் சர்விஸ்.

இந்தியன் ரயில்வே அக்கௌண்ட் சர்விஸ்.

இந்தியன் கஸ்டம்ஸ் அண்டு எக்சைஸ் சர்விஸ்.

இந்தியன் இன்கம்-டாக்ஸ் சர்விஸ் (கிளாஸ் 1).

இந்திய ரயில்வேயின் உயர்தர வருமானத்துறை அமைப்பில், போக்குவரத்து (டிராபிக்) வாணிகத்துறை இலாக்கா.

இந்தியன் போஸ்ட்டல் சர்விஸ் (கிளாஸ் 1).

தி மிலிடரி லேண்ட்ஸ் அண்டு கன்டோன்மென்ட்ஸ் சர்விஸ் (கிளாஸ் 1 அண்டு கிளாஸ் 2).

தி சென்ட்ரல் செகரிடேரியட் சர்விஸ் (கிரேட் 3).

(2) பொறியியல் துறை ஊழியர்கள் பரீட்சை—

இந்தியன் ரயில்வே சர்விஸ் ஆப் இன்ஜினியர்ஸ். எலெக்டிரிகல் இஞ்ஜினிரிங்டிபார்ட்மென்ட். சிக்னல் இஞ்ஜினிரிங் டிபார்ட்மென்ட். மெக்கானிக்கல் இஞ்ஜினிரிங் அண்டு டிரான்ஸ்போர்ட்டேஷன் (பவர்) டிபார்ட்மென்ட். தி சென்ட்ரல் இஞ்ஜினிரிங் சர்விஸ் (கிளாஸ் 1 அண்டு கிளாஸ் 2).	இந்தியன் ரயில்வேயின் உயர்தர வருமான அமைப்பையும் இந்தியன் ரயில்வேயின் ஸ்டோர்ஸ் இலாக்காவையும் சேர்ந்தவை.

தி சென்ட்ரல் எலெக்டிரிக்கல் சர்விசெஸ் (கிளாஸ் 1 அண்டு கிளாஸ் 2).

மிலிடரி இஞ்ஜினியரிங் சர்விசெஸ் (கிளாஸ் 1) (பில்டிங்ஸ் அண்டு ரோட்ஸ் கேடர்).

(3) தி சர்வே ஆப் இந்தியா (கிளாஸ் 1 அண்டு கிளாஸ் 2) பரீட்சைகள்.

(4) தி ஸ்பெஷல் கிளாஸ் அப்ரின்ட்டெஸ்செஸ் (கிளாஸ் 1 அண்டு கிளாஸ் 2) தேர்வு.

(5) தி மிலிடரி காலேஜ் அட்மிஷன் தேர்வு.
(6) தி நேஷனல் டிபென்ஸ் அக்காடமி அட்மிஷன் தேர்வு.
(7) தி இந்தியன் நேவி ஸ்பெஷல் என்ட்ரன்ஸ் கேடட்ஸ் தேர்வு.
(8) தி ஏர் போர்ஸ் அக்காடமி அட்மிஷன் தேர்வு.
(9) தி ஆர்மி மெடிக்கல் கோர் தேர்வு.
(10) தி அசிஸ்ட்டெண்ட் சூப்பரென்டென்டென்ஸ் (சென்ட்ரல் செகரிடேரியட் சர்விஸ்) ரெக்ரூட்மெண்ட் தேர்வு.
(11) கிரேட் 4 (அசிஸ்ட்டெண்ட் கேடர்) (சென்ட்ரல் செகரிடேரியட் சர்விஸ்) தேர்வு.
(12) கிரேட் 3 ஆப் தி சென்ட்ரல் செகரிடேரியட் ஸ்டெனோகிராப்ரஸ் சர்விஸ் தேர்வு.

இந்த எல்லா தேர்வுகளுக்கும் இடைநிலை மொழியாக உள்ளது ஆங்கிலமே யாகும். இவற்றில் 9 தேர்வுகளுக்கு ஆங்கிலமே ஒரு பாடமாகவும் வைக்கப் பட்டுள்ளது.

பிரத்யேகமான பணிகள், பயிற்சி அமைப்புக்கள் என்று சொல்லத் தகுந்த 2 முதல் 9 வரை உள்ளதும் 12-வது ஆக மேற்படி பட்டியலில் உள்ளவைகளுமான தேர்வுகளுக்கு ஆள் பொறுக்கும் முறையில் எத்தகைய போட்டிப் பரீட்சை வைக்க வேண்டும் என்பதில் அதிகத் தொல்லை ஒன்றும் இல்லை. ஏனென்றால் இத்துறைகளில் உள்ள ஒவ்வொரு பரீட்சைக்கும் தேவையான அடிப்படைக் கல்வி போக ஒவ்வொரு துறையில் பிரத்யேக மான ஒரு துறை அறிவும் சாமர்த்தியமும் எதிர்பார்க்கப்படுகிறது. இவர் களுக்குத் தேவையான, பிரத்யேகமான அறிவு சாமர்த்தியம் என்பவற்றோடு ஒரு குறைந்த அளவு ஹிந்தி அறிவும் இருக்கிறதா என்று எதிர்பார்க்கிறோம். தொழிலில் சேர்ந்த பிறகு மேற்கொண்ட பயிற்சியும் ஏனையவைகளும் தேவைப்படுமானால் அந்தப் பயிற்சியில் எந்த மொழியில் இவர்களுக்குப் பயிற்சி தரவேண்டும் என்று சொல்லவும் இவர்களை பொறுக்கி எடுக்கின்ற அதிகாரிகள் சொல்ல உரிமையுண்டு. நாங்கள் எதிர்பார்க்கின்ற அளவு கல்வித்துறையில் ஹிந்தி மொழியின் நிலைமை சீர்படுகின்ற வரையில் இவர் களுக்குத் தேவை என்று எதிர்பார்க்கின்ற ஹிந்தியின் அளவை மிகக் குறை வாக வைத்துக்கொண்டு மிகுந்துள்ளதை அவர்கள் பயிற்சி பெறுங் காலத்துத் தனிப்பட்ட முறையில் போதித்து ஈடு செய்து கொள்ளலாம். இதேபோல இவர்களைத் தேர்வு செய்யும் அதிகாரிகள் இவர்கள் எடுத்துக்கொள்ளும் துறைக்கு ஏற்ற ஆங்கில அறிவைப் பெற்றிருக்கவேண்டும் என்று எதிர் பார்ப்பதும் நியாயமானதே. இதனை அடுத்தபடியாக இவர்களைத் தேர்வு செய்வதற்கு உரிய போட்டி பரீட்சைகளில் இடைநிலை மொழி எதுவாக இருக்க வேண்டும் என்ற வினா வருகிறது. இப்பொழுது இடைநிலை மொழியாக உள்ளது ஆங்கிலமே; "யூனியன் மொழியும் கல்வி முறையும்" என்ற தலைப்பில் நாங்கள் எத்தகைய வளர்ச்சியை இத்துறையில் எதிர்பார்க்கிறோம் என் பதைப் பேசியுள்ளோம். போட்டிப் பரீட்சைகளில் இடைநிலை மொழியாக உள்ளது மாணவர்கள் எந்த மொழியில் கல்வி பயின்று வருகிறார்களோ அந்த மொழியிலேயே இருத்தல் வேண்டும். அதாவது அவர்களுடைய இடைநிலைக் கல்வியும் பல்கலைக்கழகக் கல்வியும் எந்த மொழியில் போதிக் கப் பெற்றதோ அதே மொழியில் போட்டி பரீட்சையும் இருத்தல் வேண்டும்.

3. மேலேசொல்லிய போட்டிப் பரிட்சைகளில் சில, இடைநிலைக் கல்வி பயின்று வருகின்றவர்களுக்கும் உரியனவாகும். இடைநிலைக் கல்வியைப் பொறுத்தமட்டில் நாடு முழுவதிலும் பல காலமாகப் பிராந்திய மொழி யிலேயே கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யும் அதிகாரிகள் இதுவரையிலும் இதுபற்றிச் சிந்திக்கவில்லையானாலும் இனியாவது பள்ளிக் கூடப் பாடத்திட்டத்தில் ஆங்கிலத்தின் அளவு மிகுதியும் குறைந்துவிட்டது என்பதை அறியவேண்டும். இதனைப்பற்றி ஆராய்ந்த பிறகு இந்த

பரீட்சைகளில் இடைநிலை மொழியை மாற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வந்தால் மற்றொன்றையும் கவனித்தல் வேண்டும். அதாவது மாற்றும் முடிவுக்கு வந்தவுடன் இப்பரீட்சைகளில் ஒரு பகுதியையாவது பிராந்திய மொழிகளில் நடத்த வேண்டும். விரிவாக ஆராயப் போகின்ற கீழ்வரும் காரணங்களுக்காக ஒரு முடிவு செய்ய வேண்டும். ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்களின் நலனைப் பாதுகாக்க வேறு வழியில்லையானால் இந்தத் தொழில்களுக்குத் தேர்வு செய்யும் பரீட்சைகளில் பல்வேறு பிராந்திய இடைநிலை மொழிகளும் கையாளப்படும் ஆதலின் ஒவ்வொரு பகுதியையும் பொறுத்தமட்டில் பங்கு முறையை மேற்கொள்ளவேண்டும். இந்திய ஆட்சித்துறைப் பணியாளர் (ஐ.எ.எஸ்.) போட்டிப் பரீட்சைகளில் பங்கு முறை எற்படுத்துவதனுடைய அவசியம் பற்றியும் அதனுடைய நலன்கள் பற்றியும் கீழே ஆராய்கிறோம். இந்த இடத்தில் பயிற்சிக் கழகங்களுக்கு ஆட்கள் பொறுக்கும்பொழுது பங்கு முறையைக் கையாள்வதற்கும், மிக உயர்ந்த அகில இந்திய ஆட்சித்துறைகளில் பங்கு முறை பற்றி நிரப்புவதற்கு பங்குமுறையைக் கையாள்வதற்கும் வேறுபாடு உண்டு.

இந்தப் பயிற்சி அமைப்புக்கள் பலவற்றில் இடைநிலை மொழியை மாற்றி அமைக்கும் வேலை இன்னும் பூர்ணமாக நடைபெறாமையின் பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே பயிற்சி அளிக்கப்படுகிறது. இதனைப் பற்றி ஆராய்கின்றபொழுது நாளாவட்டத்தில் ஹிந்தியில் புதிய கலைச் சொற்களும் புதிய புத்தகங்களும் படிப்பதற்குரிய நூல்களும் வரும் பொழுது மெள்ள ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியின் மூலமே இவற்றைக் கற்பிக்கலாம் என்பது பற்றி எங்களுக்கு ஐயம் ஒன்றும் இல்லை. இந்த படிப்புகளில் உள்ளீடுதான் முக்கியம் என்பதையும் அந்த உள்ளீட்டை வெளிக்கொணர்கின்ற கருவியாக உள்ள இடைநிலை மொழி அடுத்த நிலையில் உள்ளதுதான் என்பதையும் நாங்கள் அறிந்தாலும் நாடு முழுவதையும் இடைநிலைக் கல்வி அளவில் பற்றிக் கொண்டுள்ள மொழி மாறுதல் இதிலும் வரவேண்டும் என்பதே எங்கள் கருத்து. பல ராஜ்யங்களில் இடைநிலைக் கல்வி முறையில் ஆங்கிலக் கல்வியின் அளவு குறைக்கப்பட்டு அதனைத் தொடங்கும் காலமும் மிகவும் நீடிக்கப்பட்டு உள்ளது. ஆட்களைத் தேர்வு செய்யும்பொழுது இந்த இடைநிலை மொழியையும், தேர்வு செய்யும் முறையையும் காலமாறுபாட்டுக்கேற்ப மாற்றி அமைத்தால் ஒழிய அந்த ராஜ்யங்களிலுள்ள மாணவர்கள் இதனால் கஷ்டப்பட நேரிடும். ஏனைய அமைப்புக்களில் உள்ளது போல இந்தப் பயிற்சி அமைப்புக்களிலும் போதனா மொழித் துறையில் (இதுவரையில் வராவிட்டால்) மெள்ள மெள்ள ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி அடையவேண்டும். இதன் அளவுகோல் என்னவென்றால் கொடுக்கப்படும் கல்வியின், பயிற்சியின் தரங்குறையாதபடி இம்மொழி மாற்றம் நடைபெற வேண்டும். இது நடைபெற்றுத் தேர்வு செய்யும் முறைகளும் சரிப்படுத்தப்படும்பொழுது சில ராஜ்யங்களிலுள்ளவர்களுக்கு இப்பொழுது உள்ள கஷ்டங்கள் மறைந்து போய்விடும்.

4. அகில இந்திய ஆட்சித்துறைப் பணிகளில் உள்ள போட்டிப் பரீட்சைகளில் எந்த இடைநிலைமொழிவேண்டும் என்ற முக்கியமானதும் கடினமானதுமான பிரச்னையை ஆராயவேண்டும். (இங்கு செய்யப்படும் ஆராய்ச்சி பட்டியலில் 2-வது எண்ணில் கொடுக்கப்பட்டுள்ள பொறியியல் தேர்வுகளுக்கும் முற்றிலும் பொருந்தும்.) இந்த நாட்டின் அரசாங்கத்தில் மிக உயர்ந்த ஆட்சித்துறைகளில் ஆட்களைத் தேர்வு செய்வதற்கு யூனியன் பொதுப் பணிக் கழகத்தால் இந்தப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. இப் பரிட்சைகளில் வெற்றி பெறுபவர்களிலிருந்தே உயர்தர ஆட்சித்துறைகளில் யூனியன் அரசாங்கத்திலும் பெரும்பான்மையான அளவு ராஜ்ய அரசாங்கத்திலும் உள்ள பதவிகள் நிரப்பப்படுகின்றன. மேலும் ஐ.எ.எஸ்., ஐ.பி.எஸ். என்ற இரு துறைகளிலும் இதிலிருந்தே தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. இந்தப் போட்டி நாட்டிலுள்ள கல்வி அறிவைப் பெற்றவர்களில் மிகச் சிறந்த அறிவாளிகளைப் பொறுக்கி எடுக்கின்றதாதலின் இத்தேர்வுகள் மிகப் பெரிய—எங்களுடைய கருத்தில் அளவுக்கு

மிஞ்சிய—அளவில் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளிவருகின்ற இளைஞர் களை இழுக்கின்றது. கீழே இந்தப் பரீட்சைகளை எழுத விரும்பினவர்கள், எழுதியவர்கள் ஆகியவர்களின் கணக்கு சென்ற நான்கு ஆண்டுகளுக்குத் தரப்பட்டுள்ளது:—

ஆண்டு.	மாணவர்களின் எண்ணிக்கை.		
	விண்ணபித்த வர்கள்.	எழுதிய வர்கள்.	வெற்றி பெற்ற வர்கள்.
1952	4,427	3,341	232
1953	5,063	3,582	199
1954	6,627	4,471	186
1955	6,659	4,541	340

5. அகில இந்தியப் பணியாளர் பரீட்சை அளவு மீறிய முறையில் கற்றறிந்த இளைஞர்களுடைய கவனத்தைப்பற்றி இழுக்கின்றது உண்மை யாதலால் பல்கலைக் கழகங்களில் ஓரளவுக்குக் கல்வி முறையைக்கூட இது பாதித்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகுதிப்படவே கற்ற இளைஞர்களுக்குப் புகக் கூடிய துறைகளும் அதிகப்படும் ஆதலால் இந்த அகில இந்தியப் பணியாளர் பரீட்சை அந்நிலையில் இவ்வளவு அதிகப்படியான கற்றறிந்த இளைஞர்களை இழுத்துக்கொள்ளாது என்று நம்பலாம் என் றாலும் இப்பொழுது இன்றுள்ள நிலைமையையே நாம் சிந்திக்க வேண்டியதற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். தகுந்த முறையில் ஆட்சி செய்வதையே நல்லாட்சியின் தேவையாக இந்த நாட்டில் கருதிவந்துள் ளார்கள் ஆதலின் இனியும் இதை முறையில்தான் கருதுவார்கள் என்பதிலும் ஐயமில்லை. நாட்டின் ஆட்சி முறையில் இப்பொழுது உள்ள நிலையில் உயர்தர ஆட்சித்துறைப் பணியாளர்களின் "தகுதி" என்பதற்கு ஒரு தனிப் பொருள் கொள்ளவேண்டியது. அரசியலாரின் திட்டங்களும் குறிகோள்களும் பொருளாதாரம் இன்னும் மற்றத் துறைகளில் விரி வடைந்துகொண்டு செல்லவே உயர்தர ஆட்சித்துறைப் பணியாளர்களின் பாரமும் பொறுப்பும் நாளாவட்டத்தில் இன்னும் அதிகப்படுமே தவிரக் குறையப் போவதில்லை. எனவே நாங்கள் செய்யப்போகின்ற சிபாரிசுகளில் ஆட்சித்துறைப் பணியாளர்களின் தரத்தையோ தகுதியையோ குறைத்து மதிப்பிடும் எண்ணம் ஒரு சிறிதும் இல்லை.

அரசிலயமைப்பின் 312-வது விதியில் ஒரு தனிப்பட்ட பகுதி உள்ளது. "ராஜ்ய சபையின் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி நாட்டின் நலனைக் கருதித் தேவை இருக்குமேயானால் பாராளு மன்றம் சட்டத்தின் மூலம் ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அகில இந்தியப் பணியாளர் துறையை யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் பொதுவாக ஏற்படுத்தலாம். இந்தப் பகுதியில் சொல்லப் பட்ட மற்ற பிரிவினைகளுக்கு (அதாவது அரசியலமைப்பின் 14-வது பகுதி ஒன்றும் அத்தியாயம்) உட்பட்டு இந்தப் பணியாளர் துறையில் ஆளைத் தெரிவு செய்யும் முறை பணியின் கட்டுப்பாடுகள் ஆகியவை இருக்கும்", இதே விதியின் இந்தத் துறைப் பணிகள் அரசியலமைப்பின் தொடக்கத்தில் "இந்தியன் அட்மினிஸ்ட்ரேட்டிவ் சர்வீஸ்" என்றும், "இந்தியன் போலீஸ் சர்வீஸ்" என்றும் அழைக்கப்பட்டுப் பாராளு மன்றத்தினால் தொடங்கப் பட்ட பணிகளாக இருக்கும். இதன்பிறகு "தி ஆல் இந்தியா சர்விசெஸ் ஆக்ட் 1951" என்ற பெயருடன் பாராளு மன்றம் ஒரு சட்டத்தை நிறை வேற்றியுள்ளது. இதன்படி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகியவற்றின் தெரிவு முறை முதலியன ஆளப்படுகின்றன. அரசியலமைப்புப் யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் பொதுவாக உள்ள பணிகளையும் "சென்ட்ரல் சர்விசெஸ்" என்று சொல்லப்படும் யூனியனுக்கே உரித்தான பணிகளையும் வேறுபடுத்து

இன்றது என்பது அறியப்படவேண்டும். மத்திய துறைப் பணி (சென்ட்ரல் சர்விசெஸ்) க்குரிய சட்ட திட்டங்கள், தெரிவு முறைகள் ஆகியவை எல்லாம் யூனியன் அரசாங்கத்தைச் சேர்ந்தவையாகும். இந்தப் பணிகளுக்கு எல்லாம் சேர்ந்த முறையில் "சேர்ந்த பரீட்சைகள்" வைப்பதனுடைய நோக்கம் சௌகரியத்தை முன்னிட்டேயாகும். 1947-க்கு முன்னர் ஐ.சி.எஸ். ஐ.பி. (தற்போதைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகியவற்றின் பழைய பெயர்கள்) ஆகிய இரண்டிற்கும் வெவ்வேறு பரீட்சைகளே இருந்து வந்த தோடு மத்தியத் துறைப் பணிகளுக்கும் வேருகவே பரீட்சை இருந்து வந்தது. சேர்ந்த பரீட்சைகள் 1947-லிருந்து நடைபெறுகின்றன. அகில இந்தியப் பணியாளர் துறைக்கும், மத்தியத் துறைப் பணியாளருக்கும் உள்ள இந்த வேற்றுமை மிகவும் முக்கியமானது.

ராஜ்யப் புனர்அமைப்புக் கழகம் தான் மேற்கொண்ட பல்வேறு சீர்திருத்தங்களில் அகில இந்தியப் பணியாளர் துறை பற்றியும் சில சிபாரிசுகளைச் செய்துள்ளது. "தனியே பிரிந்து நிற்கும் எண்ண வளர்ச்சியைத் தடுப்பதற்கும், ராஜ்யங்களிடையே ஒருமைப்பாட்டை நிலவச் செய்வதற்கும், அகில இந்தியக் கொள்கைகளை நல்முறையில் நிறைவேற்றுவதற்கும்" உதவியாக இந்தச் சிபாரிசுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்கள் கருத்துப்படி "அகில இந்தியப் பணியாளர் துறை ஏற்படுத்துவதன் நோக்கம் என்னவென்றால் ஆட்சித்துறையின் பொறுப்பைத் தாங்கும் கடமையுடைய இப்பணியாளர்கள் அகில இந்திய நோக்கம் உடையவர்களாக வளர்ச்சியடையவேண்டும்" என்பதாகும். கூடுமான வரை அகில இந்தியப் பணித்துறைகளில் புதிதாக உள்நுழைபவர்களில் 50 சதவிகிதம் அந்த ராஜ்யத்தின் வெளியே இருந்துவருபவர்களாக இருத்தல் வேண்டும். இந்த 50 சதவிகிதத்தைக் கணக்கிடும்பொழுது அந்த ராஜ்யத்திலுள்ள மொத்த உத்யோகங்களில் அடுத்த தர உத்யோகங்களிலிருந்து இந்த உத்யோகங்களுக்கு உயர்வு செய்யப்படுபவர்களின் எண்ணிக்கையைக் கழித்துவிட்டு மிதமுள்ளதில் இந்தக் கணக்கு எடுக்கவேண்டும். ஏனைய அகில இந்தியப் பணித்துறைகளின் அமைப்பில் கீழ்க்கண்ட சிபாரிசுகளைச் செய்துள்ளார்கள்.

"856. இந்திய ஆட்சித்துறை பணியாளர் துறை, இந்தியக் காவல் இலாக்காத்துறை ஆகிய இரண்டையும் தவிர இன்னும் சில அகில இந்தியப் பணியாளர் துறைகளும் ஏற்படுத்தவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். அகில இந்திய வகுப்புகளைத் திருத்தி அமைக்க விரும்புவதாகவும், சிறப்பாக அகில இந்திய பொறியியலார் துறையைத் திருத்தி அமைக்கும் நோக்கம் யூனியன் அமைச்சுக்களினிடம் இருந்து வருவதாகவும் எங்களுக்குத்தெரிகிறது. யூனியன் அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்களுடன் வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றிலும் ஒத்துழைக்கவேண்டி இருத்தலின் இவற்றிற்குரிய தொழில் நுட்ப வல்லுநர்கள் ஒரு பொது அடிப்படையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதும், ஒரே மாதிரியான தரமும் தகுதியும் உடையவர்களாக இருக்குமாறு தேர்ந்தெடுக்கப்படுவதும் இன்றியமையாததாகும். மேலும் இங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் தாங்கள் ஒரு முக்கியமான பணியாற்றும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணம் உடையவர்களாக இருத்தல்வேண்டும்."

"857. எனவே அகில இந்தியப் பொறியாளர் துறை, அகில இந்தியக் காட்டு இலாக்காத் துறை, அகில இந்திய மருத்துவ உடல் நலத்துறை ஆகிய அகில இந்தியப் பணியாளர் துறைகளை இப்பொழுது ஏற்படுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்கிறோம்."

இந்தச் சிபாரிசுகளின் போக்கிலிருந்து நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு என்பவற்றை இந்த அகில இந்தியப் பணியாளர் துறைகள் எவ்வளவு தூரம் பாதிக்கின்றன என்பது விளங்கும். இந்த அடிப்படையில் இருந்து தான் இந்தப் போட்டிப் பரீட்சைகளில் மொழி மாற்றம் செய்யவேண்டுமா என்பது பற்றியும், செய்யவேண்டும் என்றால் எப்படிப்பட்ட மாற்றங்கள் செய்யவேண்டும் என்றும் ஆராயவேண்டும்.

இந்த நிலையில் இந்த விஷயத்தின் அடிப்படைகள் சில பற்றி அனைவரும் கவனிக்கவேண்டும் என்று விரும்புகிறோம். போட்டிப் பரீட்சைகள் மாணவனின் பொது அறிவு விளக்கத்தையும் மன வளர்ச்சியையும் சோதிப்பதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆட்சித்துறைப் பணிகள் ஓரளவு தரத்தோடு கூடிய அறிவு விளக்கம் பெற்றவர்களை அவாவி நிற்பதால் மாணவர்களின் இந்தத் தரத்தைச் சோதிப்பதற்கே இப்பரீட்சைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால்தான் பல்கலைக் கழகங்களில் பட்டப் படிப்பிற்கு எடுத்துக்கொள்ளப்படும் அத்தனை பாடங்களும் இந்தப் பரீட்சைகளிலும் விருப்ப பாடமாக அமைக்கப்பட்டுள்ளன. எனவே ஒரு தனிப்பட்ட பாடத்தைப் பொறுத்த மட்டில் எவ்வளவு அறிவுத் திறம் பெற்றிருக்கின்றனரென்றோ மொழித் துறையில் எந்த நிலையை அடைந்துள்ளார் என்றோ இந்தப் பரீட்சையில் ஒருவரும் சோதிக்கப்படுவதில்லை. என்றாலும் அத்துறைகளிலும், மொழித்துறையிலும் ஓரளவு தகுதி பெற்றிருப்பது தேர்வில் எடுக்கப்படுவதற்கு பொருத்தமுடையன என்று கருதப்படுவதால் தான் ஒரு சில பாடங்களைக் கட்டாய பாடமாக இப்பரீட்சைகளில் வைத்திருக்கிறார்கள். மேலும், "ஆளுமை" (Personality) முதலியவற்றை அறிந்து கொள்வதற்கே வாய் மொழிப் பரீட்சை அமைக்கப்படுகிறது. இம்மாதிரிப் பரீட்சைகளில் மாணவர்கள் பின்னர் ஏற்றுக்கொள்ளப்போகின்ற கடமைகளுக்கு ஏற்ப ஓரளவு மொழித் திறமையும் பெற்றிருக்க வேண்டும். அதாவது இப்பொழுதைய நிலைமையில் ஹிந்தி, ஆங்கிலம் ஆகியவற்றில் அறிவு பெறலாம். இதனை அடுத்து அறிவுத் திறமையை ஆராய்வதற்குரிய பொதுப் பரீட்சையாக இருத்தல் வேண்டுமே தவிர மொழியறிவு முதலானவற்றிற்கு அளவு மீறிய மதிப்புக்கொடுக்கக்கூடாது.

எழுத்துப் பரீட்சை முறையில், அறிவுத் திறனை ஆராய்வதற்கும், அந்தப் பரீட்சையின் முடிவைக் கொண்டு அவர் எந்த வேலைக்கு ஏற்றவர் என்று முடிவுசெய்வதற்கும் அந்த வேலையைச் செய்யும் தகுதியுடையவரா, என்பதை ஆராய்வதற்கும தவறாத வழிகாட்டி என்று சொல்லமுடியாதபடி குறைகள் இம்முறையில் உள்ளன; என்பதை நாங்கள் அறிவோம். வாய் மொழி பரீட்சை வைத்திருப்பது, இப்பரீட்சை முறையில் முக்கியமானது என்றும், இக்குறைகளை ஓரளவு போக்குவதற்காக ஏற்பட்டுள்ளது என்றும் நாங்கள் கருதுகிறோம். இந்தப் பரீட்சை முறைகளில் உள்ள அடிப்படைக் குறைவு நிறைவுகளை ஆராய்ந்து, உதாரணமாக எழுத்துப் பரீட்சைக்கு உள்ள மதிப்பை ஓரளவு குறைத்துக் கொண்டு ஆளுமை, மனோ தத்துவம் ஆகியவற்றிற்கு அதிக மதிப்புக் கொடுப்பதே சிறந்த பணியாளர்களைப்பொறுக்குவதற்குரிய வழி என்பன போன்றவற்றை நாங்கள் சொல்ல வேண்டியதில்லை. எத்தனை காலத்திற்கு எழுத்துப் பரீட்சைக்கு இன்று கொடுக்கப்படும் மதிப்புக் கொடுக்கப்படுகிறதோ அது வரையில் இந்தப் பரீட்சை பற்றி நாங்கள் சொல்லிய கருத்துக்கள் நியாயமானவையாக இருக்கும்.

எல்லாத் துறைகளுக்கும் சேர்ந்த போட்டிப் பரீட்சைகளில் எழுத வரும் மாணவர்கள் மிகச் சமீபத்தில் பல்கலைக் கழகத்திலிருந்து பட்டம் பெற்று வந்தவர்கள். எனவே அவர்களுடைய அறிவுத் திறமை, மன வளர்ச்சி என்பவற்றை அவர்கள் எடுத்துக் கொண்ட பாடத்தின் மூலம் ஆராய்வதற்கு இந்தத் திறமைகளைச் சிறந்த முறையில் வெளியிடும் இடைநிலை மொழியும் ஒரு கருவியாகும். இந்தப் போட்டிப் பரீட்சைகளுக்கு உரிய மொழி எது என்றால் பல்கலைக் கழகங்களில் அந்தந்தப் பாடங்களை எந்த மொழியில் கற்கின்றார்களோ அந்த மொழியே ஆகும். கீழே இது பற்றி இன்னும் விரிவாக ஆராய்கின்றோம்.

அகில இந்தியப் பணியாளர் போட்டிப் பரீட்சைகள் நம்முடைய நாட்டிலுள்ள பட்டதாரிகளை மட்டும் மிகுதியும் கவர்ந்திருக்கிறது என்பதோடு அல்லாமல் நம் காலத்திலுள்ள சிறந்த அறிஞர்களையும், அரசியல் வாதிகளையும் கூட இது கவர்ந்திருக்கிறது. ஏனென்றால் மிக முக்கியமானதும், அடிப்படையானதுமான மொழி போன்ற பிரச்னைகளை ஆராயும்போதுகூட இந்த ஆராய்ச்சியில் அவர்கள் பெரும் பங்கு கொள்கிறார்கள். நமு

நிலைமையோடு இதனை ஆராயும்பொழுது சூழ்நிலையில் அவர்களுக்கு உரிய இடம் எது என்பதை நாங்கள் எடுத்துக் காட்ட விரும்புகிறோம். ஐ.ஏ.எஸ். போன்ற ஒன்றில் ஒவ்வொரு மொழிப் பிராந்தியத்திலிருந்தும் ஒவ்வொரு ஆண்டுக்கும் எடுக்கப்படும் தொகையைச் சென்ற சில வருஷங்களாகக் கணக்கிட்டுப் பார்த்து வீதாசார முறையில் பார்த்தால் நாலு அல்லது ஐந்துக்கு மேல் இருக்க முடியாது[1] இந்த நிலையில் ஒரு ராஜ்யத்தின் மொத்த நலனை ஆராயும்பொழுது ஆட்சித் துறையின் மிக உயர்ந்த நிலைமையில் உள்ள இந்தச் சில உத்தியோகங்கள் தங்களுடைய பிராந்தியத்திலிருந்து வருகின்றவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைப்பதை விட மிகச் சிறந்தவர்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று நினைப்பது நலமில்லையா என்று ஆராயவேண்டும். தகுந்த முறையில் இந்தப் பிரச்னையை எடுத்துக் கூறினால் விடை எதுவாக இருக்குமென்று நாங்கள் ஐயுறவே இல்லை. இந்தத் துறையில் பணியாற்ற வருகின்றவர்கள் ஆட்சி அமைப்பில் மிக உயர்ந்த பதவியைப் பெற்ற அவர்களுடைய அறிவுத் திறத்தால் மிகப் பலருக்கு நன்மை விளைவிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள். முன்னர் நாங்கள் சொல்லியது போல, நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் இக்காலத்துக்கும் இனி வருங்காலத்துக்கும் கூட நல்ல ஆட்சி நல்ல அரசாங்கத்தின் உறுப்பாகவே இருந்து வரும். அவ்வாருனால் ஆட்சியாளர்கள் ஆட்சிக் கருவியின் தரத்தை நிர்ணயிப்பவர்களாக இருப்பார்கள். அகில இந்தியப் பணியாளர் தேர்வில் முக்கியமாகக் கருதப்பட வேண்டியது " தரமே " தவிர மொத்தம் கிடைக்கக்கூடிய உத்தியோகங்களில் நம்முடைய பங்கு எவ்வளவு என்பதன்று. " உத்தியோகம் என்பது அதற்குரிய இடத்தைப் பெற்றிருந்தாலும் " தரத்தை "ப் பற்றிக் கவலைப்படாமல் அதிகப்படியான எண்ணிக்கை உள்ளவர்கள் தேவைப் படுகின்ற இடத்தில்தான் இந்தக் கணக்கு செல்லுபடியாகும். இது கருதியேதான் யூனியன் ஊழிய பதவிகளுள் ஏனைய நிலைகளில் ஊழியர் நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும் என்றும், ஆள் பொறுக்கும் வேலையில் அனைத்தும் மத்திய அரசாங்கத்தின் கையில் இல்லாமல் பிரித்து விடப்படவேண்டும் என்றும் கூறினோம். ஏனென்றால் அதிகப்படியான உத்தியோகங்கள் உள்ள ஒரு துறையில் யூனியன் அலுவல்களுக்கு அந்தந்தப் பிராந்தியத்தில் உள்ள இளைஞர்கள் உள் நுழைய வழி செய்யவேண்டும்.

6. இந்தப் போட்டிப் பரீக்ஷைகளுக்கு ஹிந்தி மொழியை ஒரு பாடமாக வைப்பது பற்றி இனி ஆராய வேண்டும். யூனியன் மொழியாகவும், ராஜ்யங்களுள் வழங்கவேண்டிய மொழியாகவும் அரசியலமைப்பினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹிந்தி மொழியில் இப் பரீக்ஷைக்கு வரும் மாணவர்கள்

---

[1] அகில இந்திய ஆட்சித் துறைப் பணியிலும், இந்தியக் காவல் துறைப் பணியிலும் 1947 முதல் 1954 வரை பரீக்ஷைகளின் மூலம் எடுக்கப்பட்டவரின் எண்ணிக்கை வருமாறு :—

வருஷம்.	அகில இந்திய ஆட்சித் துறைப்பணி.	இந்தியக் காவல் துறைப்பணி.
1947	33	39
1948	33	22
1949	35	31
1950	29	33
1951	38	38
1952	32	39
1953	42	44
1954	49	31

இதன் எதிராக இந்திய அரசாங்கத்தின் ஏனைய துறைகளில் எத்தனை வேலைகள் உள்ளன என்பதை அறிய வேண்டுமேயானல் பிற்சேர்க்கை பதினைந்தைக் காணவும்.

ஓரளவு பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்று அரசாங்கம் எதிர் பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை. அவருடைய கடமையை நன்கு நிறைவேற்று வதற்கு, யூனியன் அரசாங்கத்தில் அவர்கள் இருந்தாலும், அகில இந்தியப் பணிகளில் ஒரு பாகமாகிய ராஜ்ய அரசாங்கங்களில் இருந்தாலும் இத் துறைப் பணியில் ஊழியம் செய்பவர்கள் ஹிந்தி மொழியில் பயிற்சி உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். யூனியன் அரசாங்கத்தைப் பொறுத்த வரை உயர்ந்த ஆட்சிப் பொறுப்பு நிலையில் இப்பணியாளர்கள் நியமிக் கப்படுவார்கள் ஆதலின், 1965-க்குப் பிறகு ஆங்கிலம் அகன்று ஹிந்தி ஆட்சி மொழியாக வரப்போகின்றது ஆதலால் அதற்கு ஒரு தொடக்கமாக ஹிந்திப் பயிற்சி மிக விரைவில் தொடங்கப்பட வேண்டும். ராஜ்ய அரசாங் கங்களிலும், இரண்டு ராஜ்யங்களிடையே தொடர்பு கொள்வதற்கு ஹிந்தி அறிவு தேவையாதலால் இந்த ராஜாங்க அரசாங்கங்களில் ஏனைய ராஜ்யங்க ளோடும், யூனியனோடும் தொடர்பு கொள்ள வேண்டிய நிலையிலுள்ள அதிகாரிகள் ஹிந்தி மொழி அறிந்திருக்க வேண்டும். யூனியன் அரசாங் கம் இப்பொழுது ஊழியம் செய்யும் அதிகாரிகளுக்கு ஹிந்தி கற்பிக்கும் ஒரு திட்டத்தைத் தொடங்கி நாளாவட்டத்தில் யூனியன் விவகாரங்களில் அதிகப்படியான அளவு ஹிந்தி மொழி பயன்படுத்தப்படும்பொழுது இவர்களை அதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்க முயன்று வருகிறது. இந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் ராஜ்ய அரசாங்கங்களும், ஏனைய ராஜ்யங்களோடு உறவு கொள்ள வேண்டிய கடப்பாடுடைய அதிகாரிகளுக்கு இங்ஙனம் ஹிந்தி கற்பிக்கும் ஒரு திட்டத்தைத் தொடங்கி நடத்தவேண்டும் என்று கூறியுள்ளோம். ஆதலால் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு எழுத வரும் மாணவர்கள் ஓரளவு ஹிந்தி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும். எனவே இப்பரீட்சைக்கு வரும் மாணவர்களுக்கு முன்னறி விப்புச் செய்து விட்டு ஹிந்தி மொழியில் ஒரு கட்டாய வினாத்தாளை ஹிந்தி மொழி பேசாத மாணவர்களுக்கு ஏற்படுத்துவது நியாயமானது என்றே நாங்கள் கருதுகிறோம்.

ஹிந்தி பேசாத மாணவர்களின் நலங்கள் கேடடையாமல் இருக்க இது பற்றிக் கீழ்க்கண்ட முறைகளைச் சிபார்சு செய்கிறோம். தொடக்கத்தில் தேவைப்படுகின்ற ஹிந்தி அறிவு மிகக் குறைவாக வைத்துக் கொள்ள லாம். குறைவை நிறைவு செய்து கொள்ள அந்த மாணவன் உத்தி யோகம் ஏற்றுள்ள காலத்தில் மேற்கொண்டு ஹிந்தி போதனை செய்யப்பட லாம். நாளாவட்டத்தில் இந்தப் பரீட்சைகளில் ஹிந்தியின் தரத்தை உயர்த்தலாம். மேலும் தொடக்கத்தில் ஹிந்தி மொழி பேசாத மாணவர் களுக்கு இத்தகைய வினாத்தாளால் ஒரு குறைவும் நேராதபடி பார்த்துக் கொள்வதற்கு இந்த வினாத்தாளில் பெறுகின்ற அம்சங்களை மொத்தக் கணக்கோடு கூட்டாமல் இதனை வெறும் "தகுதிச் சோதனை" யாக வைத்துக் கொள்ளலாம். பின்னர் தகுந்த முன்னறிவிப்பு செய்யப்பட்ட வுடன் மற்றைய கட்டாயப் பாடங்களைப் போல இதனையும் வைத்து இதில் பெற்ற அம்சங்களை மொத்த மார்க்குகளுடன் கூட்டி மதிப்பிடலாம். மேலும் தென்னாட்டு மொழிகள் நான்கினுள் ஏதாவது ஒன்றைப் பேசும் மாணவர்கள் இப் பரீட்சையில் அதிகத் தொல்லை அடையாமல் இருப்பதற் காக ஹிந்தி மொழியோடு தொடர்புடைய, ஆனால் ஹிந்தி அல்லாத மொழி பேசும் மாணவர்களுக்கு அவர்களுடைய ஹிந்தி வினாத்தாளில் இரண் டொரு மிகக் கடினமான வினாக்களைக் கொடுத்து அந்த வினாக்களைத். தென்னிந்திய மாணவர்கள் எழுத வேண்டாம் என்று கட்டளை இடலாம்.

7. ஹிந்தி பேசாத மாணவர்கள் எழுதுகின்ற கட்டாய ஹிந்தி வினாத் தாளோடு ஒப்பக்கூடிய நிலையில் ஹிந்தி பேசும் மாணவர்களுக்கு என்ன செய்யலாம் என்று ஆராய வேண்டும். இதனைச்சரி செய்வதற்காக ஹிந்தி பேசாத மாணவர்கள் ஹிந்தி வினாத்தாளுக்கு விடை அளிப்பது போல, ஹிந்தி பேசும் மாணவர்கள் ஹிந்தியல்லாத ஏதாவது ஒரு பிராந்திய மொழி வினாத்தாளுக்கு விடை அளிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இன்னும் சிலர் இந்த ஹிந்தி பேசும் மாணவர்கள் நான்கு திராவிட மொழிகளுள் ஏதாவது ஒன்றைத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்

என்றும் அவ்வாறில்லாவிடின் அவர்கள் எடுத்துக்கொள்ளும் திராவிட மொழிகளை அல்லாத ஏனைய மொழிகள் ஹிந்தியோடு தொடர்பு கொண் டுள்ளன என்றும் சிலர் கூறினார்கள். இடைநிலைக் கல்விக் காலத்தில் பொதுவாகக் கல்வி முறையில் செய்யப்படவேண்டிய சில திட்டங்கள் பற்றி ஆறுவது பகுதியில் நாங்கள் கூறியுள்ளவற்றை மீண்டும் நினைவு படுத்த விரும்புகிறோம். அதே காரணங்களினால் இம்மாதிரி செய்வது பொருத்த மில்லாதது என்று நம்புகிறோம். ஹிந்தி பேசாத மாணவர்களுக்கு ஹிந்தியில் ஒரு கட்டாய வினத்தாளைத் தருவதன் நோக்கம் அவர்களுக்கு அதிகப்படியான பாரத்தை சுமத்த வேண்டும் என்பதன்று. அதற்குப் பதிலாக அவர்கள் மேற்கொள்கின்ற ஊழியக் கடமைகளுள் ஹிந்தி மொழியோடு ஓயாது தொடர்பு கொள்ள வேண்டியிருத்தலின் இவ்வாறு செய்தோம். ஹிந்தி பேசும் மாணவர்கள் இதற்குப் பதிலாக ஹிந்தி அல்லாத மொழியில் (குறுகிய நோக்கத்தோடு திராவிட மொழி) பரீக்ஷை எழுத வேண்டும் என்று சொல்லுதல் தேவையற்றதும், பொருத்தமற்ற தும் ஆகும். பெருவாரியான மாணவர்களை இப் பரீட்சைகளில் ஹிந்தி அல்லாத மொழியில் ஒரு பரீட்சை எழுதுமாறு செய்வதனால் யாதொரு பயனும் ஏற்படாது. ஏனென்றால் அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள மொழி அவர்கள் ஊழியம் ஏற்றுக்கொண்டு செல்லும் ராஜ்யத்தில் பேசப்படாத தாகவும் இருக்கலாம். இவ்வாறு செய்வது பெரும்பான்மையான மாண வர்களுக்கு நியாயமல்லாத முறையிலும், பயனற்ற முறையிலும், சக்தி யைச் செலவழிக்கத் தூண்டுவதாகும். தென்னாட்டு மொழிகளையும், இலக்கியங்களையும், பண்பாடுகளையும் பல்கலைக் கழகங்களில் படிக்க வேண்டி யதும், படிக்கத் தூண்டுவதும் முக்கியமாக வடநாட்டில் செய்யப்படவேண் டும் என்று நாங்கள் கருதுகிறோம். இந்த அறிக்கையின் மற்றொரு பாகத்தில் அதற்குரிய தேவைகளை வெளியிட்டிருக்கிறோம். ஆனால் அதற் காக அகில இந்திய துறைப் பணிகளுள் நுழைய வேண்டும் என்று பரீட்சை எழுத வருகின்ற மாணவர்களை இங்ஙனம் கட்டாயப் படுத்துவது பொருத்த மானதன்று. இத்தகைய கல்விக்கு ஊக்கம் கொடுப்பதற்குரிய இடம் பல்கலைக் கழகமே ஆகும். அவ்விடங்களில்தான் இப்பாடங்களைப் பலரும் அறிந்துகொள்ளச் செய்யலாம்.

எனவே ஹிந்தி பேசாத மாணவர்கள் ஹிந்தி மொழியில் எழுதும் வினத்தாளுக்கு பதிலாக ஹிந்தி பேசும் மாணவர்கள் ஏதாவது ஒரு தாளை எழுத வேண்டிய இன்றியமையாமையை முன்னிட்டு ஒரு வழி காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஹிந்தி பேசும் மாணவர்கள் கீழ்க் கண்ட பாடங்களில் ஏதாவது ஒன்றைப் பற்றி அவர்கள் ஏனைய தாள்களை எழுதும் அதே மொழியில் எழுதலாம் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம் :

மானிட வகுப்பு சரித்திரம், தென்னிந்திய வரலாறு, தென்னிந்திய இலக்கியங்கள் அல்லது இவை போன்ற தென்னாட்டைப்பொறுத்த "பண் பாட்டுப் பாடங்கள்" பற்றியோ அல்லது எட்டாவது ஷெட்யூலில் குறிப் பிடப்பட்டுள்ள ஹிந்தி அல்லாத ஒரு மொழியையோ எடுத்துக்கொண்டு பரீட்சை எழுதலாம்.

இப்பொருள்களைப் பற்றிப் படித்து அறியும் அறிவு அந்த மாணவர் களுக்குப் பொதுவான முறையில் அவர்கள் எங்கே ஊழியம் செய்ய நேரிட்டாலும் மிகுதியும் பயன்படும். இந்தத் தேர்வில் அவர்கள் தோல்வி யடைந்து வேறு அலுவல்களைத் தேடிக்கொண்டாலும் இந்த அறிவு அவர்கட்கு மிகுதியும் பயன்படும். ஹிந்தி பேசும் மாணவர்கள் மத்திய அரசாங்கத்திலோ அல்லது பல்வேறு ராஜ்யங்களிலோ வேலைக்குப் புகுந்த வுடன் தொடர்புடைய அந்தப் பிராந்திய மொழியைக் கற்றுக்கொள் வார்கள்.

8. யூனியன் மொழியாகவும், ராஜ்யங்களிடையே தொடர்புகொள்ளும் மொழியாகவும் இப்பொழுதுள்ள ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி மொழி பெற்றபிறகு கூட இன்னும் பல காலத்திற்கு பெரிய ஆட்சித்

துறைகளில் அலுவல் பார்க்கும் அதிகாரிகள் ஆங்கில அறிவை வேண்டிய அளவு பெற்றிருக்க வேண்டும் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். எனவே இந்தப் போட்டி பரீட்சைக்கு வரும் மாணவர்களை ஆங்கிலத்தில் சோதனை செய்ய, அவர்கள் ஹிந்தி மொழியில் எல்லாப் பரீட்சைகளையும் எழுதினாலும், அதிகச் சிரமமின்றிப் பல வழிகளை மேற்கொள்ளலாம்.

9. இனி இப்போட்டிப் பரீட்சைகளில் இடைநிலை மொழி எதுவாக இருத்தல் வேண்டும் என்பது பற்றி ஆராயவோம். இப்பிரச்னை மிகத் தொல்லையுடையதும் கருத்து வேற்றுமைகளுக்கு இடம் தருவதுமாகும். யூனியன் வேலைகளுக்கும், ராஜ்யங்களுடையே தொடர்புகொள்ளும் வேலைக்கும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு நாளாவட்டத்தில் ஹிந்தி மொழியை ஏற்படுத்துகின்ற சூழ்நிலையில் இந்தப் பரீட்சைகளில் எது இடைநிலை மொழியாக இருத்தல் வேண்டும் என்பதே நம்முடைய ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய விஷயமாகும். மேலும் அந்த நிலையில் கல்வி முறையிலும் பல்கலைக் கழகங்களிலுமகூட ஹிந்தியோ அன்றிப் பிராந்திய மொழிகளோ போதனை மொழியாக அமைந்துவிடும். இந்நிலையில் இரண்டேவழிகள்தான் உண்டு. ஒன்று ஹிந்தி மொழியில் மட்டும் இந்தப் பரீட்சை நடத்துவது, இன்றேல் ஹிந்தி உள்பட அந்த அந்தப் பிராந்தியங்களில் வழங்கும் மொழிகளில் நடத்துவது என்பதாகும். இது எவ்வாறுயினும் மொழி மாற்றக் காலத்தில் இவை இரண்டிலும் அல்லாமல் ஆங்கிலத்தில் இப்பரீட்சை எழுதும் உரிமை மாணவர்களுக்கு உண்டு.

பல்வேறு பிராந்தியங்களிலும் வழங்குகின்ற மொழிகளை எல்லாம் இந்தப் போட்டிப் பரீட்சைக்கு இடைநிலை மொழிகளாக வைத்துவிட்டால் 'மிதப்படுத்துதல்' (மாடீரேஷன்) இயலாத ஒன்றாகிவிடுகிறது. வட மொழியை நீக்கி விட்டுப் பார்த்தாலும் பிராந்திய மொழிகள் ஹிந்தி உள்பட 13 உள்ளன. அரசியல் அமைப்பின் 8-வது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளாகும் இவை. பரீட்சையளவில் புதிதாக சேர்க்கப்படுகிற ஒவ்வொரு மொழியும் விடைத்தாள் திருத்துகின்றவர்கட்கு ஒரு புதிய பிரச்னையை உண்டாக்கும். இத்தனை இடைநிலை மொழிகளை பரீட்சையில் ஏற்றுக்கொள்வதால் ஒருமுகப் பட்ட மிதப்படுத்துதல் மிகக் கடினமான காரியம். இதைப் பற்றி நன்கு ஆராய்ந்து முடிவு சொல்லக்கூடிய தகுதியும் அனுபவமும் உடைய யூனியன் பொதுப் பணி ஊழியர் கழகத்தை விசாரித்தபொழுது இம்முறையில் மிதப்படுத்தும் வேலை நன்கு நடைபெற முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதாவது இந்த 12 அல்லது 13 மொழிகளில் விடைத் தாள்கள் வருமேயானால் இவை ஒவ்வொரு மொழிக்கும் ஏற்ப திருத்துபவர்களை நியமித்தால் இந்த விடைத்தாள்களின் தரத்தை ஒப்பு நோக்கி அவற்றிற்கு ஏற்ற அம்சங்கள் கொடுப்பது நடைபெற முடியாத காரியமாகும். சாதாரணமாக இரண்டு அல்லது மூன்று பிராந்திய மொழிகளில் தேவையான அளவு அறிவு பெற்றவர்களைத் தேடிப் பிடிப்பதே கடினம். அவர்களுக்கும் மொழியறிவு மட்டும் இருந்துவிட்டால் இந்தப் பாடங்கள் சம்பந்தமான விடைத்தாள்களைத் திருத்துமளவிற்குத் தகுதியுடையவர்களாக அவர்கள் இருப்பதும் கடினம். இடைநிலை மொழிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்து விடைத்தாள்களைத் திருத்துபவர்கள் தகுதியுடையவர்களாகவும் கிடைத்தால் நலமாக இருக்கும். அப்பொழுதுதான் மிதப்படுத்தும் வேலை ஓரளவு கடினமாய் இருப்பினும் நடைபெறக் கூடியதாக இருக்கும். இடைநிலை மொழிகள் இந்த எல்லையை மீறிப் போகும்பொழுது கட்டுப்பாட்டை மீறிவிடும். பன்னிரண்டு இடைநிலை மொழிகள் இருக்கும் பொழுது மிதப்படுத்துதல் நடைபெற முடியாது என்று சொல்வது நியாயமானதே. என்றாலும் ஓரளவு கடினமாக இருப்பினும் நான்கு அல்லது ஐந்து இடைநிலை மொழிகள் இருந்தால் மிதப்படுத்தும் வேலை ஓரளவு செய்யப்படலாம். தேர்வு செய்யும் அதிகாரிகளாகிய யூனியன் பொதுப் பணி ஊழியர் கழகந்தான் எத்தனை மொழிகளை வைத்துக்கொள்ளலாம் என்று கூற முடியும். தேவைப்பட்ட விடைத்தாள் திருத்துவோர் பற்றிய உண்மை அவர்களுக்குத் தெரியும் ஆதலால் அவர்களுடைய அனுபவத்தைக்கொண்டு அவர்களே இதனைச் சொல்ல வல்லவர்கள்.

எங்களைப் பொறுத்த வரையில் இன்று நடைபெறுகின்ற முறையில் இப்பரீட்சைகள் நடைபெற்றாலும் நாட்டிலுள்ள எல்லாப் பிராந்திய மொழிகளிலும் இது நடைபெற்றாலும் சரியான தரத்தை ஆராய்வதும் சிறந்த முறையில் மிதப்படுத்துதலும் இயலாது என்றே நாங்கள் கருதுகிறோம். மிதப்படுத்துதலில் கிடைக்கின்ற தர நிர்ணயம் ஒருபுறம் இருக்க இப்பரீட்சைகளின் தகுதியை நிலைநாட்டுவதற்கேனும் இப்பரீட்சைகள் பற்றிய நம்பிக்கையும் நடுவு நிலைமையும் காப்பாற்றப்பட வேண்டும். பல பிராந்திய மொழிகளில் இப்பரீட்சைகள் நடத்தப்பெற்றால், பல்வேறு வகையான பரீட்சகர்கள் நியமிக்கப் பெற்றால், இவற்றுள் தர ஒப்புமை செய்வது கடினம் என்பது ஒருபுறம் இருக்க ஒருவருக்கொருவர் புரியாத பிராந்திய மொழிக்காரர்கள் இப்பரீட்சைகளின் நடுவு நிலைமை பற்றிக்கூட பிராந்தியப் பரிவு ஏற்பட்டு விட்டதோ என்று ஐயுறுவார்கள். இந்த முறையில் "மிதப்படுத்துதல்" செய்வதற்கும், ஒரே மொழியில் பல்வேறு பாடங்கள் பற்றி எழுதப்பெற்ற விடைத்தாள்களைத் திருத்தி மிதப்படுத்துதலுக்கும் ஒரே மொழியில், ஒரே பாடத்தில் அதிக விடைத்தாள்கள் இருக்கும் பொழுது அவற்றைத் திருத்தும் பல பரீட்சைகர்கள் தரும் பல மார்க்குகளையும் மிதப்படுத்துதலுக்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணரவேண்டும். அதிகப்படியான எண்ணிக்கையுள்ள விடைத்தாள்களைப் பலரும் திருத்திக் கொடுக்கின்ற அம்சங்களை மிதப்படுத்துதலுக்குப் பல பல்கலைக் கழகங்களும் மேற்கொண்டுள்ள பல வழிகள் உண்டு. பல்வேறு பாடங்களையும் மிதப்படுத்துதலில் ஓரளவு சிக்கல் உண்டு. இந்தப் போட்டிப் பரீட்சைகளில், கலைத்துறை விஞ்ஞானத்துறை ஆகிய பல துறைகளிலுள்ள பல பாடங்களை பிரத்தியேகமாகப் படித்து பட்டம் பெற்றுவரும் மாணவர்கள் வேண்டுமான பாடங்களை எடுத்துக்கொண்டு விடை எழுத வாய்ப்புக்கள் தரவேண்டி விரிந்து கொடுக்குமளவில் விருப்பப் பாடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில்கூட பல்வேறு பாடங்களில் பல்வேறு பரீட்சகர்கள் ஒரே மாதிரியான முறையில் அம்சங்கள் தருகிறார்கள் என்று சொல்ல முடியாது. உதாரணமாக ரசாயன சாத்திரத்திலும் சரித்திரத்திலும் வெவ்வேறு ஆசிரியர்கள் திருத்துவதனால் மாணவர்களின் அறிவுத் தரத்தை அளக்கக் கூடிய முறையில் அம்சங்கள் தரப்படுகின்றன என்று சொல்ல முடியாது. பல்கலைக் கழகங்களில் பல்வேறு பாடங்களைத் திருத்தும்பொழுது இப்படிப்பட்ட போட்டிப் பரீட்சைகளில் பல்வேறு பாடங்களைத் திருத்தும்பொழுதும் ஏற்படுகின்ற "இப்பிழையை"த் தவிர்க்க முடியாது. இதையல்லாமலும் கூடுமான வரை ஒரே தரத்தில் இம்மாதிரி சந்தர்ப்பங்களில் அம்சங்கள் கொடுக்கக்கூடிய பல வழிகளைப் பல்கலைக் கழகங்களிலும் மேற்கொண்டுள்ளார்கள். எவ்வாறாயினும் அம்சங்கள் கொடுப்பதில் ஏற்படுகின்ற தாரதம்மியங்களை மொழிப் பற்றினாலோ பிராந்தியப் பரிவினாலோ செய்யப்பட்டது என்று யாரும் கூறமாட்டார்கள். குறிப்பிட முடியாத பொதுவான இந்தப் பிழை இப்பரீட்சைகளின் போட்டித் தன்மையை அடிப்படையில் கெடுத்து விடுகின்ற அளவுக்குச் செல்வதில்லை.

10. பல பிராந்திய மொழிகளை இப்போட்டிப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக ஏற்படுத்தினால், இந்த அகில இந்தியப் பணிகளுக்கு "பங்கு முறை" வரவேண்டிய சூழ்நிலை வந்துவிடும். அகில இந்தியப் பணிகளுக்கு பங்கு முறை வைப்பது பலருக்கு வெறுப்பை உண்டாக்கும். அவ்வாறு உண்டாவதும் நியாயமே. இந்த அகில இந்தியப் பணி நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதற்குரிய முக்கியமான ஒரு தொடர்பு ஆதலால் இதற்கு ஆள் பொறுக்கும் முறையில் துண்டாடுகின்ற எந்தச் செயலும் வெறுப்பையே விளைவிக்கும். மேலும் இவ்வளவு காலமாக அகில இந்திய நிலையிலிருந்த இந்தப் போட்டியில் இப்பொழுது சிறு பிரிவினைகள் செய்வது பொருத்த மற்றதாகும். இந்தக் கருத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டாலும் பங்கு முறையில் எல்லா வகைகளையும் நடுவு நிலையோடு ஆராய்வது இன்றியமையாதது என்று கருதுகின்றோம். பிற்சேர்க்கை 11-ல் பங்கு முறையின் பல்வேறு வகைகளையும் அவற்றின் விளைவுகளையும் ஆராய்ந்துள்ளோம். இவ்வாறில்லாமல் அகில இந்திய

வுக்கும் உள்ள இந்த ஒரே போட்டிப் பரிட்சையை இரண்டாகப் பிரித்து விடலாம் என்றும் அதனுல் பங்கு முறை செய்வதன் தீமையை நீக்கி விடலாம் என்றும் அதே நேரத்தில் பல்வேறு மொழிகளையும் இந்த இரண்டு நிலைகளில் ஏதாவது ஒரு நிலையில் வைத்துக் கொள்ளலாம் என்றும் எங்களுக்குச் சொலலப்பட்டது. இப்படிப்பட்ட புத்திமதிகள் திட்டங்கள் ஆகியவற்றைப் பிர்சேர்க்கை 11-ல் நாங்கள் ஆராய்ந்துள் ளோம். மேலும் பல்வேறு பிராந்திய மொழிகளிலும் பரீட்சை நடத்திப் பரிட்சையின் முறையை ஓரளவு மாற்றிஞல் இது பயன்படக் கூடிமா என்றும் ஆராய்ந்துள்ளோம்.

பங்கீட்டு முறையை ஆராய்ந்து பார்த்தால் இங்ஙனம் பொறுக்கி எடுக்கப் படும் அதிகாரிகள் எந்தப் பிராந்தியங்களிலிருந்து எடுக்கப்படுகிறுர்களோ அந்தப் பிராந்திய ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுகிறுர்கள் என்ற உறுதி யும் இல்லை. ராஜ்ய புனரமைப்புக் கழகம் சிபாரிசு செய்தபடி ஒரு ராஜ்யத்தில் 50 சத வீதம் (அல்லது ஏதாவது ஒரு அளவு முறை) அந்த ராஜ்யத்தின் வெளியிலிருந்து வருபவர்களாக இருக்க வேண்டும், என்ற சிபாரிசை ஒப்புக்கொண்டால் கூட, இந்தப் பங்கு முறைப்படி அதனையும் நிறைவேற்ற முடியும் என்றுலும், மொழிவாரிப் பங்கு முறை என்ற ஒன்றை ஏற்படுத்தி விட்டால் இவ்விதம் ஒரு கொள்கையைக் கொண்டு செலுத்த முடியுமா என்பது சந்தேகத்திற்குரியது?. மேலும் பங்கு முறையில் (பிற்சேர்க்கை 11-ல் குறித்துள்ளபடி) தரக்குறைவு ஏற் படாதபடி எவ்வளவு பாதுகாவல்களை ஏற்படுத்திஞலும் பல்வேறு மொழி களில் தேர்வு எழுதினவர்களைத் தரவாரியாகப் பிரித்துப் பட்டியல் தயா ரிக்க வேண்டிவரும். இங்ஙனம் அனைவரையும் ஒன்றுகச் சேர்த்துத் தரவாரிப் பட்டியல் சொய்தாலும் பல்வேறு மொழிகளிடையே தாரதம்மியம் செய்ததில் உண்டான பிழை இருந்தே தீரும். இவ்வாறு செய்தால் ஒவ்வொரு மாணவனுடைய அம்சம் பெறும் நிலையிலும் இப்பிழை நேரா மல் பார்த்துக்கொண்டாலும் ஒரு சிலரைச் சேர்ப்பதிலும் விட்டுவிடுவதி லும் இப்பிழை நேர இடமுண்டு. இவற்றை யல்லாமல் மேலும் சில வலுவான காரணங்களைக் கொண்டும் அகில இந்தியப் பணிகளுக்கு பங்கு முறை பயனற்றது என்று சொல்ல விரும்புகிறேம். பொருளாதாரம், இன்னும் மற்றத் துறைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத்த அரசாங்கம் புதியத் திட்டங்களை அமைத்துக் கொண்டிருப்பதனுல் இந்த நிலையில், ஆட்சி செய்யும் அதிகாரிகள் பொறுப்பு மிகுதப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் இம்மாதிரி பங்கு முறையில் ஆட்களைப் பொறுக்கி எடுப்பதில் தரக் குறைவு ஏற்படும். இந்தச் சந்தர்ப்பத்தில் அகில இந்திய காவல் துறைப் பணிக்கு மாகாண முறையில் போட்டிகள் ஏற்படுத்தி, அதனை இப்பொழுது விட்டு விட்டதை நினைவு கூற வேண்டும். ஏனைய காரணங்களோடு, சிறந்த வர்களை பொறுக்குகின்ற வாய்ப்பு இம்முறையில் குறைவாக இருந்ததே இதனை விட்டுவிடக் காரணமாயிற்று. அகில இந்தியபணித் துறைக்குப் பங்கு முறையில் ஆளைப் பொறுக்குவதனுல் எந்த முறையைக் கையாண் டாலும் அது துண்டாடும் முறையாக மாறிப் பல்வேறு மாகாணப் போட்டி களாக இருந்து ராஜ்ய பொதுப் பணி கழகம் நடத்தும் போட்டிப் பரிட்சை களுக்கும் இதற்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும். மாகாணப் பணி களில் உள்ளவர்கள் அகில இந்தியப் பணிகளுக்கு உயர்ந்து செல்ல அனுமதிக்கப்படுகிறுர்கள். அதாவது மாகாணப் பணிகளிலுள்ளவர்களை அகில இந்தியப் பணிகளிலுள்ள காலி ஸ்தானங்களுக்கு உயர்ந்து செல்லச் செய்வதாகும். அகில இந்தியப் பணிகளுக்கு பங்கு முறையை நுழைத் தல் ஏறத்தாழ மாகாண ஆட்களை அகில இந்தியப் பணிகளுக்கு உயர்த்து வதாகவே முடியும். இந்தக் காரணங்களை யல்லாமல் பங்கு முறை என பது அரசியல் அமைப்பின் 16-வது விதிக்குக்கூட எதிராகவுள்ளது என்றே, நாங்கள் கருதுகிறேம். ஏனென்றல் அந்த விதியின்படி அனை வருக்கும் சமமான உரிமை வழங்கப்படுவதோடு ராஜ்யத்திலுள்ள ஒவ் வொருவருக்கும் வேலை அல்லது உத்தியோகத்தைப் பொறுத்த வரையில் சமயான உரிமை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி "எந்த ஒரு பிரஜையும்

பிறப்புக் காரணமாகவோ, பிறந்த இடம் காரணமாகவோ, தங்கியுள்ள இடம் காரணமாகவோ, ராஜ்யத்தின் எந்த ஒரு வேலைக்கும் தகுதியற்றவர் என்று சொல்லப்படமாட்டார்".

11. பரிட்சைக்குப் பல்வேறு மொழிகளையும் இடைநிலையாகக் கொள்வதின் தரும சங்கடமான நிலையைத் தவிர்ப்பதற்கும் சிறந்த முறையில் "மிதப்படுத்துதலை"ச் செய்வதற்கும் சில வழிகள் கூறப்பட்டுள்ளன. அவற்றைக் குறிக்க வேண்டுமென்பதற்காகவே கீழே குறிப்பிட்டுள்ளோம். அந்த வழிகளின் மூலம் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியாது என்றாலும் வேறு வழிகளைக் கையாண்டு இதனை தீர்க்க முயன்றுள்ளோம்.

முதலாவது வழி என்னவென்றால் தேர்வு செய்கின்றவர்கள் விடைத்தாள்களைத் திருத்தும் பொழுது விஷயத்தைப் பற்றி மட்டும் எடுத்துக்கொண்டு எழுதப்பட்ட மொழியைப் பற்றி ஒரு சிறிதும் கவலைப்பட வேண்டாம் என்பதாகும். இதன் மூலம் எந்த இடைநிலை மொழியில் மாணவன் எழுதினாலும் அதனால் விளைகின்ற பயனை, இல்லாமல் செய்துவிடலாம். இந்த வழி எடுத்த எடுப்பில் நல்லது போலத் தோன்றினாலும் நடைமுறைக்கு இயலாததாகும். ரசாயனம், கணிதம் போன்ற பாடங்களில் விடை எழுதும்பொழுது இடைநிலை மொழி ஒன்றும் பெரிதாகப் பயன்படப் போவதில்லை. ஏனைய பாடங்களில் பொதுவாகவும், சிறப்பாக கலைத்துறைப் பாடங்களிலும் மொழியும் பொருளும் மிகவும் பிரிக்க முடியாதபடி இருப்பதனால் இவற்றைப் பிரித்து ஒன்றை ஏற்றுக்கொண்டு மற்றொன்றை தள்ளுதல் இயலாத காரியம். இலக்கிய சம்பந்தமான பாடங்களையெல்லாம் சரித்திரம், அரசியல், சமுதாய பாடம் ஆகியவைகளில்கூட மொழியையும் பொருளையும் பிரித்து ஆராய்வது இயலாத காரியம். எனவே எழுதப்படும் மொழியைப் பற்றிக் கவலைப்படாமல் திருத்துவதே சிறந்த வழி என்ற இந்த வழி நடைமுறைக்கு ஏற்றதன்று.

அடுத்துள்ள வழி பரிட்சை எழுதவேண்டிய மொழியில் பயிற்சிக் குறைவான மாணவர்களுக்கு "அதிகப்படியான" அம்சங்கள் கொடுத்து இந்தக் குறைவை நிறைவு செய்வது என்பதாகும். இந்த வழியின்படி ஹிந்தியிலேயே பரிட்சை எழுதவேண்டி நேரிட்டால் ஹிந்தி அல்லாதபிற தாய்மொழிகளையுடைய மாணவர்கட்கு அதிகப்படி அம்சங்கள் கொடுக்க வேண்டும். இவ்வாறு அதிகப்படி அம்சங்கள் கொடுக்கும் வழியில் கூட ஹிந்திக்கு தொடர்பான மராத்தி, குஜராத்தி, வங்காளி, பஞ்சாபி ஆகிய மொழிகளைத் தாய் மொழிகளாக உடையவர்கட்கும் ஹிந்தியோடு தொடர்பில்லாத தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவற்றைத் தாய் மொழியாக உடையவர்கட்கும் அதிக மார்க்குக் கொடுப்பதில் வேறுபாடு காட்ட வேண்டும் போல் இருக்கிறது. அதிக மார்க்கு கொடுப்பதில் ஒரு நல்ல வழியைக் கையாள்வதாக இருந்தால்கூட அடிப்படையான தவறுதலின் பேரில் இவ்வழி பேசப்படுகிறதாதலின் இது நடைமுறைக்கு இயலாத ஒன்றாகும். ஒரு மாணவன் ஒரு மொழியில் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க முடியவில்லை என்பதை ஒரு சில மார்க்குகளை அதிகப்படியாகத் தருதலின் மூலம் நேர் செய்துவிட முடியாது. இந்தப் புதிய இடைநிலை மொழி, அவன் அறிந்த பாடத்தின் அல்லது அறிவுத் திறத்தின் எல்லை, எவ்வளவு என்பதை காட்டவே பயன்படாது. இந்தக் குறைபாடு ஒரு மாணவனுக்கும் மற்ற மாணவனுக்கும் வேறுபடக்கூடிய அளவில் உள்ளது. அன்றியும் ஒரே மாணவனிடத்தில்கூட பாடத்திற்குப்பாடம் மாறுபடக் கூடியது. எனவே இவற்றை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு அதிக மார்க்குக் கொடுக்கும் ஒரு வழியைக் கண்டு பிடிப்பது முற்றிலும் இயலாத காரியம்.

மூன்றாவது சொல்லப்பட்ட வழி பல்வேறு பிராந்திய மொழிகளில் எழுதப்பட்ட விடைத்தாள்களை எல்லாம் ஒரே மொழியில் மொழி பெயர்த்து இந்த மொழிபெயர்ப்பைக் கொண்டு அதனை மதிப்பிடலாம் என்பதாகும். இம்முறையில் உள்ள குறைபாடு என்னவென்றால் விடைத்தாளின்

தரத்தை மதிப்பிடும்பொழுது "மொழி பெயர்த்தவரின் சக்தியையும்" மதிப்பிட வேண்டிய தொல்லை ஏற்படுகின்றது. ஒரு மாணவனுடைய தரத்தை மதிப்பிட மற்றொருவரால் மொழி பெயர்க்கப்பட்ட விடைத்தாளை வழியாகக் கொள்வது பொருத்தமற்ற ஒன்று.

இந்த வழிகளில் மாறுபாடுடைய வழிகளும் பல வேறுபட்ட வழிகளும் இருக்கலாம். இந்த விஷயத்தைப் பற்றித் தீர ஆராய்ந்த பிறகு பல்வேறு மொழிகளில் பரீட்சை எழுதப்பட்டால் சிறந்த முறையில் மிதப்படுத்துதலும் தரம் பிரித்தலும் இயலாத காரியம் என்றும், இப்பொழுது நடைபெறுகின்ற முறையிலேயே மேலும் நடத்தப்பட்டால் அதுவும் நடைபெற முடியாது என்றும் நாங்கள் தீர்மானிக்க வேண்டியுள்ளது. இத்துறையில் முடிவு கூறக் கூடிய தகுதி வாய்ந்த யூனியன் பொதுப் பணிக் கழகமும் இதே கருத்தைத்தான் கொண்டுள்ளது.

12. இந்தப் போட்டிப் பரீட்சைகளுக்கு ஹிந்தியை இடைநிலை மொழியாக விருப்பமானால் வைத்துக்கொள்ளலாம் என்பதை மேலும் ஆராய வேண்டும். இதனை இரண்டு அடிப்படையில் நின்று ஆராயலாம்.

1965–லிருந்து ராஜ்யங்களிடையே வழங்கும் மொழியாகவும் யூனியன் மொழியாகவும் ஹிந்தி இருந்தாக வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமேயானால் தகுந்த சமயங்களில் அதாவது இந்தக் குறிப்பிட்ட தேதிக்கு முன்னரே பல துறைகளில் ஹிந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் ஆட்சிக் கருவியில் இப்புதிய இடைநிலை மொழியால் ஏற்படும் தொல்லையைத் தவிர்க்க முடியும். மத்திய அரசாங்கமும், சில ராஜ்ய அரசாங்கங்களும் தங்கள் கீழ் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ஹிந்தி போதனையை ஏற்கனவே கொடுக்கத் தொடங்கி விட்டார்கள். எனவே மத்தியப் பணிகளுக்கு ஆட்களை எடுக்கும் பொழுது யூனியன் பொதுப் பணி கழகம் ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியையும் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழியாக உடனடியாக வைத்தால் அதில் தவறு ஒன்றும் இல்லை. இரண்டாவதாக அங்ஙனம் விருப்ப மொழியாக ஹிந்தி மொழியை வைப்பதற்கு ஏற்ற முறையில் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் பல பல்கலைக் கழகங்களில் பல துறைகளுக்குப் போதனா மொழியாக ஆங்கிலத்தைவிட்டு ஹிந்தியை வைத்துள்ளார்கள். பல்கலைக் கழகக் கல்விக் கழகம் 1949–ல் கொடுத்த அறிவுரையின்படி ஆங்கில மொழியை இடைநிலை மொழி நிலைமையிலிருந்து நீக்கி இந்திய மொழிகளை அந்த இடத்தில் வைத்துவிட்டால் அதன்படி பயின்று வருகின்ற மாணவர்கள் அகில இந்தியப் பணிகளுக்குப் போட்டிப் பரீட்சைகள் எழுதும்பொழுது அதனால் தொல்லைப்படக்கூடாது. இடைநிலை மொழியை இந்திய மயமாக்கும் வேலை பல்கலைக்கழகங்களில், ஏனைய பிராந்தியங்களைவிட ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் மிகுதியாக நடைபெற்றுள்ளது. சென்ற சில ஆண்டுகளாகவே இங்ஙனம் ஹிந்தி மொழியின் மூலமே கல்வி கற்பிக்கும் பல பல்கலைக் கழகங்கள் அகில இந்தியப் போட்டிப் பரீட்சைகளுக்கு ஹிந்தியை இடைநிலை மொழியாக ஆக்க வேண்டும் என்றும் அவ்வாறு செய்யாமையின் தங்கள் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளிவருகின்ற மாணவர்கள் துன்பம் அடைகிறார்கள் என்றும் சொல்லி வருகிறார்கள்.

ஹிந்தி மொழி பேசாத மாணவர்கள் இதே போன்ற ஒரு நிலைமையை மேற்கொண்டு தாங்கள் விரும்பினால் ஆங்கில மொழியின் மூலம் விடை எழுத உரிமை கோரினால் அதனைத் தடுக்க வேண்டாம், என்ற ஒரு கருத்தும் உண்டு. இது விஷயமாக உள்துறை அமைச்சின் அமைச்சர் ஸ்ரீ பி. என். தத்தர் கூறியவற்றை இங்கே சொல்ல விரும்புகிறோம். ஆங்கிலத்தோடு ஹிந்தியையும் இடைநிலை மொழியாக வைக்கவேண்டும் என்ற யோசனைக்குத் தெற்கேயுள்ள ராஜ்ய அரசாங்கங்கள் வேறு பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக வைக்கவேண்டும் என்று கூறவில்லை என்றும், அவர்கள் விரும்புவதெல்லாம் ஹிந்தியோடு சேர்த்து ஆங்கிலமும்

இடைநிலை மொழியாக இருந்துவிட்டால் போதுமானது என்பதே என்றும் கூறியுள்ளார். ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலிருந்து வரும் மாணவர்களுடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க ஹிந்தியோடு சேர்த்து ஆங்கிலத்தை மட்டும் வைப்பது போதுமானதென்று எங்களில் சிலர் கருதுகின்றோம். மேலும் ஏனைய பிராந்திய மொழிகளை இடைநிலை மொழியாக ஆக்காமல் ஆங்கிலத்திற்கு மட்டும் இந்த உரிமையைத் தந்து நாட்டின் எல்லா பாகங்களிலிருந்தும் வருகின்ற பட்டதாரிகள் தகுந்த அளவு ஹிந்தி மொழியில் வளர்ச்சியடைகின்ற வரையில் இந்த முறையைக் கையாளலாம் என்றும் எங்களில் சிலர் கருதுகின்றோம்.

எந்தக் கால அளவு வரையில் இந்த உரிமை வழங்கப்பட வேண்டும் என்று நாங்கள் நிர்ணயிக்கவில்லை என்றாலும் ஹிந்தி மொழி பேசாத வர்கட்குக் கட்டாய ஹிந்தி வினாத்தாள் ஒன்றும் (ஹிந்தி பேசுகின்றவர்கட்கு இதை "சரி செய்கின்ற" முறையில் ஒரு வினாத்தாளும்) கொடுக்கின்ற முறை இடைநிலை மொழியில் ஹிந்தியை கொண்டு வருவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டும் என்பதே எங்கள் கருத்தாகும். மேலும் இந்த உரிமை வழங்கும் நாளை 1965–க்கு பின்னர்த் தள்ளிப் போடுவது பொருத்த மற்றது என்றும் சொல்ல விரும்புகின்றோம். இந்த உரிமை வழங்குவது பற்றி மாணாக்கருடைய நன்மையைக் கருதி மிகவும் முன்னரே அறி விப்புச் செய்யப்பட வேண்டும். ஹிந்தி மொழியின் மூலம் பரிட்சை எழுதும் வசதியைப் பல்கலைக் கழகங்களில் ஹிந்தி மொழி மூலம் கல்வி கற்ற வர்களே மேற்கொள்வார்கள்.

13. இந்த சந்தர்ப்பத்தில் பிராந்திய மொழிகளை (ஹிந்தியை யல்லாத) இந்தப் போட்டிப் பரிட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக வைக்கின்ற பிரச்னை அடுத்துத் தோன்றப் போவதில்லை என்பதையும் அறிவிக்க விரும்பு கிறோம். பிராந்திய மொழிகளைப் பட்டப் படிப்பு வரையில் இடைநிலை மொழியாக வைக்கும் முறை இதுவரையில் எங்கும் நடைபெற வில்லை யாதலால் இந்தப் பிரச்னை இப்பொழுது தோன்றப்போவதில்லை. கல்வி முறையில் ஹிந்தி பெறவேண்டிய இடம் பற்றி நாங்கள் செய்துள்ள சிபாரி சுகளில் ஹிந்தி மொழியை விருப்பமானால் பிராந்திய மொழிகளோடு சேர்த்துப் போதனா மொழியாக கொள்ளலாம் என்றும், பல்கலைக் கழக நிலை வரையில் இதைச் செய்யலாம் என்று சொல்லியுள்ளோம். இந்த முறையின்படி ஹிந்தி மொழி பேசாத மாணவன் அகில இந்தியப் போட் டிப் பரிட்சைகளில் உட்கார விரும்பினால் பல்கலைக் கழக நிலையில் ஹிந்தி தியைப் போதனா மொழியாகக் கொண்டு பயில்வதன் மூலம் தகுதி பெற்று விடலாம். எவ்வளவு ஹிந்தி மொழியை கற்பிக்க வசதி செய்து கொடுத் தாலும் ஹிந்தி மொழி பேசாத மாணவன் அந்த மொழியை கற்க வேண்டி இருத்தலினால் அவனைவிட ஹிந்தி மொழி பேசும் மாணவனுக்கு அதிகப்படியான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் ஒரு வாதம் பேசப்படுகிறது. இந்த வாதத்தில் உண்மை இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதற்குரிய காலம் இன்னும் வரவில்லையாதலால் இதுபற்றி எங்கள் கருத்தைக் கூற விரும்பவில்லை. இந்த நிலையில், பழங்காலத்தில் ஐ.சி.எஸ். பரிட்சைகள் ஆங்கில மொழியில் லண்டனில் நடைபெற்றபொழுது ஆங் கிலத்தை ஆரம்பக் கல்வியின் பிறகு கற்றுக்கொண்ட இந்திய மாணவர் கள் ஆங்கில மாணவர்களோடு போட்டியிட்டு வெற்றியும் பெற்றார்கள் என்பதையும் இந்திய மாணவர்கட்கு இந்தியப் பல்கலைக் கழகங்களில் கிடைத்த போதனை ஆங்கிலப் பல்கலைக் கழகங்களில் கிடைத்த போதனை யோடு மாறுபட்டவை என்பதையும், வாய் மொழிப் பரிட்சையில் இந்திய மாணவர்கட்கு இருந்த தவிர்க்க முடியாத குறைபாட்டையும் நினைவுறுத்த விரும்புகிறோம். இந்திய வாழ்வு முறைக்கு முற்றிலும் வேறுபட்ட ஆங்கில மொழியிலேயே இவ்வாறு இருக்குமேயானால் ஹிந்தி மொழியை மேற்கொள்வதில் ஹிந்தி பேசாத மாணவர்கட்கு இக்குறைபாடு எப் பொழுதும் இருக்கும் என்று சொல்வதற்குத் தகுந்த காரணங்கள் உண்டா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆரம்பக் கல்வி நிலையில் பொதுப்படையான அனுபவங்களை எடுத்துப் பேசுகையில் புரிந்துகொள்

வதற்குத் தாய்மொழி உதவியாக இருக்கிறது என்பது போக மேற்படிப்புக்களில் ஒரு பொருளைப் பற்றிப் பிரத்தியேகமாக அறிவைத் தேடுகின்ற பொழுது தாய்மொழி மூலம் அதனைத் தேடுவதனால் அதிகப்படியான லாபம் உண்டா என்பது ஆராய்ச்சிக்குரியது. எவ்வாறு இருப்பினும் ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள ஒவ்வொரு மாணவனும் (இவர்களில் பலர் போஜ்புரி, மைதிலி, ராஜஸ்தானி முதலிய பல்வேறு தாய்மொழிகளை உடையவர்கள்) ஏனையவர்களைப் போலவே ஹிந்தி மொழியின் இலக்கிய உபயோகங்களை அவன் கல்விக் காலத்தில் கற்க வேண்டியுள்ளது. இலக்கணம், சொல்லாட்சி என்பவை ஒருபுறம் இருக்க ஏனையவை எல்லாம் அதாவது இயற்கை, சமுதாய வழக்கம், பண்பாட்டின் மதிப்புக்கள் ஆகியவை இந்திய அடிப்படையிலிருந்தே எடுக்கப்படுதலின் அவை ஹிந்தி மொழி பேசும் பையனுக்கும் பேசாத பையனுக்கும் பொதுவாகவே உள்ளன. உண்மையில் வேறுபாடு காணவேண்டுமேயானால், எளிதில் சரி செய்துகொள்ளக்கூடிய சொல்லாட்சியைத் தவிர இந்திய மாணவனுக்கும் ஆங்கில மாணவனுக்கும் லண்டன் ஐ.சி.எஸ் பரிட்சையில் இருந்த வேறுபாடே பெரிய குறைபாடாகும். எனவே ஹிந்தி பேசாத மாணவனுக்கு இந்தப் போட்டிப் பரிட்சையில் எதிர் காலத்தில் ஹிந்தி இடைநிலை மொழி என்றுமே தவிர்க்கமுடியாத ஒரு குறைபாடாக இருந்துவரும் என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அப்படியே ஏதேனும் சிறு குறைபாடு இருக்குமேயானால் அதனைச் சரி செய்யும் முறையில் ஹிந்தி பேசும் மாணவர்கட்கு ஏதாவது ஒரு அதிகப்படி வினாத்தாளை வைத்து இதனைச் சரி செய்துவிடலாம்.

14. இந்திய ஆட்சித்துறைப் பணிகளுக்கும் சேர்த்து நடத்தப்படும் இப்போட்டிப் பரிட்சைகள் இரண்டு வகைப் பணிகளுக்கு, உரியனவாகும். அதாவது (1) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். என்ற இரண்டும் யூனியன் ராஜ்யத் தேவைகளுக்கு உரியனவாகும், (2) மத்தியத்துறைப் பணி என்பது, அதாவது இந்திய வெளிநாட்டு பணி, இந்தியன் பாதுகாவல் துறை கணக்குப் பணி, இந்தியன் ரயில்வே கணக்குத் துறைப் பணி, இந்தியன் சுங்க கலால் துறைப் பணி முதலியவை பிரத்தியேகமாக மத்திய அரசாங்கத்தில் மட்டும் உள்ள துறைகளில் பணியாற்றுவதாகும். இந்தியக் கணக்குத் தணிக்கைப் பணி ஏனைய மத்தியப் பணித்துறைகளிலிருந்து தொழில் முறையில் மாறுபட்டாலும், அத்துறைப் பணி ராஜ்யங்கட்குப் பயன்படாமல் மத்திய அரசாங்கத்தின்கீழ் இந்தியத் தணிக்கைத் தலைவரின் கீழ் உள்ள கணக்கு தணிக்கை இலாக்காவைச் சேர்ந்தது ஆதலின் அதுவும் மத்திய பணித்துறையின் பகுதியாகவே சொல்லப்படலாம்.

இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த பணிகளை அகில இந்தியப் பணிகளிலிருந்து சட்ட முறையில் வேறுபடுத்திக் காட்டலாம். இந்த இரண்டாவது பணிகளைப் பொறுத்த மட்டில் யூனியன் அரசாங்கமே வேலை அதிகாரியாதலால் இந்தப் பணிகளைப் பொறுத்த தேவைகளை நிர்ணயிப்பதும் யூனியன் அரசாங்கத்தின் உரிமையேயாகும். அரசியல் அமைப்பின் 309-வது விதியின்படி பொதுப் பணிகளுக்கும் யூனியன் சம்பந்தமான உத்தியோகங்களுக்கும் உள்ள பணித்தேவைகள், ஆள் பொறுக்கி எடுத்தல் முதலியவற்றை ஜனாதிபதி இயற்றும் சட்டங்களின் மூலமே நிர்ணயிக்கிறார்கள்; அதாவது மத்திய அரசாங்கமே இதனைச் செய்கிறது. இந்தியக் கணக்குத் தணிக்கைப் பணித் துறையைப் பொறுத்த மட்டில் அரசியல் அமைப்பு 148 (5) விதியின்படி ஜனாதிபதியானவர் இந்தியத் தணிக்கைத் தலைவரின் விருப்பத்துக்கிணங்க இந்தப் பணித் தேவைகளை ஆணையிடுகிறார். இந்த எல்லா ஊழியங்களிலும் ராஜ்யங்கள் இவர்களை "ஊழியம் செய்ய" நியமிக்கிறது என்பது தவிர வேறு இல்லை. இந்தச் சந்தர்ப்பத்தில், அரசியல் அமைப்பின்படி ஒரு குறிப்பிட்ட தேதியில் ஹிந்தி யூனியன் மொழியாக ஆகிவிடும் என்பதும் அதற்குரிய பல வழிகள் இப்பொழுதே எடுக்கப்பட்டுள்ளன என்பதும், தேவையான அளவு ஹிந்தி அறிவை விருத்தி செய்வதற்கு இன்னும் பல காரியங்கள் யூனியன் அரசாங்கக் கீழ்நிலை ஊழியர்களைப் பொறுத்த மட்டில்

எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் நினைவு கூர்வதற்குரியன. சட்ட முறைப்படி இந்த இரண்டு துறைப் பணிகளும் வெவ்வேறனவை என்றாலும் இந்த இரண்டு பணிகளுக்கும் பல்கலைக் கழகப் பட்டதாரிகளே வருகிறார்கள் ஆதலாலும் இவை இரண்டிற்கும் சேர்த்தே பரீட்சைகள் வைக்கப்படுகின்றன ஆதலாலும் பல மாணவர்கள் அகில இந்தியப் பணித் துறைக்கும் வெவ்வேறு மத்திய அரசாங்கப் பணித் துறைகளுக்கும் பரீட்சை எழுதுகிறார்கள். எனவே இந்திய அரசாங்கம் பரீட்சைகளின் இடைநிலை மொழியைப் பொறுத்த மட்டில் இந்த பரீட்சைகளையும் அகில இந்தியப் பணித் துறை பரீட்சைகளையும் ஒன்றாகவே கருதுகின்றது.

அகில இந்தியப் பணித் துறைகளை, அதாவது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் இப்பணிகள் ராஜ்யங்கள், யூனியன் அரசாங்கம் ஆகிய இரண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே உள்ளன. எனவே ராஜ்ய அரசாங்கம் ஆட்களை பொறுக்கும் முறையில் நேரிடையான பொறுப்பைக் கொண்டுள்ளது. 1951 வருஷ அகில இந்தியப் பணித்துறைச் சட்டம் "மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களைக் கலந்து ஆலோசித்து அகில இந்தியப் பணித் துறைகளுக்கு ஊழியர்களைப் பொறுக்கும் முறையையும், இப்பணிகளின் சட்ட திட்டங்களையும் வகுக்க வேண்டும்" என்று கூறுகிறது. ராஜ்யங்களின் கருத்துக்களை அறிந்துகொள்ளவேண்டும் என்று சொல்வதனால் இப் பணிகளில் ராஜ்ய அரசாங்கங்களின் அக்கறையையும் கவனித்துக் கொள்கிறது என்பது தெரிகிறது.

இவை எல்லாப் பணிகளையும் பொறுத்த மட்டில் அதாவது அகில இந்தியப் பணித்துறைகள் மத்திய அரசாங்கப் பணித் துறைகள் ஆகிய அனைத்திலும் ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து ஆங்கில இடைநிலை மொழியோடு விருப்பமானால் ஹிந்தியையும் இடைநிலை மொழியாக இப் பரீட்சைக்குப் போகின்றவர்கள் ஏற்றுக்கொள்ளலாம் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

முன்னரே நாட்டின் பல்வேறு பல்கலைக் கழகங்களில் இருந்து வெளிவரும் பட்டதாரிகள் ஹிந்தி இடைநிலை மொழி மூலம் கற்று வருகிறார்கள் ஆதலின் இந்தப் பரீட்சைகளிலும் ஹிந்தி இடைநிலை மொழியை வைக்க வேண்டும் என்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். மற்றப் பிராந்திய மொழிகளை இப்பரீட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக ஆக்குவது பற்றிய வினாத் தோன்றலாம். ஏதாவது ஒரு பிராந்திய மொழி பல்கலைக் கழக அளவில் இடைநிலை மொழியாக வந்து வேண்டுமான அளவு முன்னேற்றம் அடைந்துவிட்டால் அப்பொழுது இதற்குரிய வழிகளை ஆராயலாம். இப்பொழுது நிலைமை உறுதியாக இல்லாமையாலும் பல்கலைக் கழக படிப்பிற்கு எத்தனை மொழிகள் இடைநிலை மொழிகளாக வரக்கூடும் என்ற உறுதி இல்லாமையாலும் இது பற்றி இப்பொழுது சிந்திக்க வேண்டியது இல்லை. இந்நிலை ஏற்படும்பொழுது இம் மொழிகளின் எண்ணிக்கையும் மிகுதியாக இல்லாமல் "மிதப்படுத்துதலுக்கு" இடையூறும் உண்டாக்காமல் இருக்குமேயானால் பிரச்னைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டாம். இதற்காக உள்ள மொழிகளின் எண்ணிக்கை அளவில் மிகுந்துவிடுமேயானால் யூனியன் அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் இப்பிரச்னையைத் தீர்க்க முயலவேண்டும். பங்கு முறையின் மூலம் அகில இந்தியப் பணித் துறைகளை நிரப்புவதா அல்லது அவர்களுக்குள் கூடி இந்த இடைநிலை மொழிகளின் எண்ணிக்கையை ஓரளவுக்குள் நிறுத்திக்கொண்டு இந்தப் பரீட்சைகளின் இயல்பை ஓரளவுக்கு மாற்றியமைக்கலாமா என்றும் முடிவு செய்ய வேண்டும்.

இந்த மொழிகளின் எண்ணிக்கை அளவு மிஞ்சி ஏற்படுகின்ற காலத்தில் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் வெளிவருகின்ற பல்கலைக் கழகப்

பட்டதாரிகள் மிக உயர்ந்த அளவுக்கு ஹிந்தி அறிவு பெற்றுவிடுவார்கள் ஆதலின் இடைநிலை மொழிகளில் மாற்றம் செய்யவேண்டிய தேவையே இல்லாமல் போய்விடலாம். இந்தப் பிரச்னையை ஆராயும்பொழுது போட்டிப் பரீட்சைகளுக்கு ஒரு மொழி இடைநிலை மொழியாக அமைந்தால்தான் அதனுடைய "மதிப்பு" நிலைப்பெற்றிருக்கும் என்ற முறையில் சிந்திக்கக்கூடாது. அவ்வாறு இல்லாமல் போட்டிப் பரீட்சைகளுக்கு அவர்களுடைய பிராந்திய மொழிகளை இடைநிலை மொழியாக வைக்காவிட்டால், ஹிந்தி மொழி பேசாத மாணவர்களின் நலன்கள், பாதிக்கப்படுமா படாதா என்ற முறையிலேயே சிந்திக்கப்படவேண்டும்.

இன்னும் சிறிது காலத்திற்கு அதிகப்படியான பிராந்திய மொழிகள் இடைநிலை மொழிப் போட்டிக்கு வராத வரையில் ஆங்கில இடைநிலை மொழி ஒன்றே ஹிந்தி மொழி பேசாத மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை கவனித்துக்கொள்வதற்குப் போதுமானது. அதன் பிறகு அதிகப்படியான பிராந்திய மொழிகள் இடைநிலை மொழிகளாக ஆக்கப்படுவதற்குரிய தகுதியையும் அடைந்து அந்த இடத்தை அடைய அவை போட்டியிடுகின்ற காலத்திற்குள் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி மொழியின் வளர்ச்சி ஒரு தகுந்த அளவு வந்துவிடுமாதலின் இந்தப் பிரச்னைக்கே இடம் இல்லாமல் போய்விடும். எவ்வாறாயினும் இன்றைய நிலையில் இந்த பிரச்னை தோன்றவில்லை ஆதலால் அதற்கேற்ற காலம் வரும்பொழுது பிராந்திய மொழிகளை ஹிந்தி மொழி பேசாத மாணவர்களின் நலன்களைக் கவனிப்பதற்குப் பிராந்திய மொழிகளைப் புகுத்த வேண்டிய தேவையே இல்லாமல் போய்விடும் என்று எங்களில் சிலர் கருதுகின்றோம். அவ்வாறு இல்லையானால் இவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கு இப்பரீட்சைகளின் தன்மையையே மாற்றக்கூடிய முறையில் வேறு வழிகளைக் கண்டுபிடிக்கலாம். எனவே பல்வேறு மொழிகளை இடைநிலை மொழிகளாகக் கொள்வதால் ஏற்படும் பயன்களை இங்கே எடுத்துக் காட்டுவதோடு நிறுத்திக்கொண்டு, இப் பிரச்னைக்கு முடிவான சிபாரிசு ஒன்றையும் நாங்கள் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் அதற்குரிய காலம் இப்பொழுது இல்லை யாதலாலும் அக் காலம் வரும்பொழுது மேற்கொண்டு இது பற்றிச் சிந்திக்க வாய்ப்பு இருக்கும் ஆதலாலும் இப்பொழுது விட்டுவிடுகிறோம். 1960-ல் இத்துறை முழுவதையும் ஆராய்வதற்கு மற்றொரு கழகம் நியமிக்கப்படும் ஆதலின் சூழ்நிலை அப்பொழுது ஓரளவிற்குத் தெளிவடைந்திருக்கும் என்று நம்புகின்றோம்.

இன்றுள்ள அறுதியிட்டுச் சொல்ல முடியாத சில எண்ண ஓட்டங்கள் தாமாகச் சென்று முடிந்தால் அன்றி எதிர் காலத்தில் இப் பிரச்னைகளைப் பற்றிச் சிந்திக்க முடியாது. விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டும் என்ற கருத்தினால் இந்த விஷயத்தில் இரண்டு கட்சிகளையும் எடுத்து எழுதியுள்ளோமே தவிர இது பற்றிய முடிவான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பல்வேறு மொழிகளை இப்போட்டிப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக ஆக்குவது பொருத்தமற்றது என்று நினைக்கிறோம். ஏனென்றால் அகில இந்தியப் பணித்துறைகளை இம்முறை துண்டாடிவிடும் என்று கருதுகிறோம்.

15. இது சம்பந்தமாகப் பாராளு மன்றத்தில் 1955 மே மாதம் 2-ந் தேதி இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சர் வெளியிட்ட அறிக்கையில் கீழ்வருமாறு சொல்லப்பட்டுள்ளது :—

"இந்த விஷயத்தில் அரசாங்கம், காங்கிரஸ் செயற் குழுவினால் 1954 ஏப்ரல் மாதம் 5-ந் தேதி 'அகில இந்தியப் பணித்துறைப் பரீட்சைகள்' என்ற தலைப்பில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டியே நடந்துகொள்ள முடிவு செய்துள்ளது."

இது சம்பந்தமான செயற் குழுவின் தீர்மானத்தின் வேண்டுமான பகுதி வருமாறு :—

"அகில இந்தியப் பணித் துறைகளைப் பொறுத்த மட்டில் பரீட்சைகளின் இடைநிலை மொழிகளாக ஹிந்தி, ஆங்கிலம் என்பவற்றோடு முக்கியமான பிராந்திய மொழிகளும் இருந்துவரும். மேலும் இப்பரீட்சைகளுக்கு எழுத வரும் மாணவர்கள் இம்மொழிகளுள் எதை வேண்டுமானாலும் பயன்படுத்தும் உரிமையைப் பெறுவார்கள் என்று செயற்குழு சிபாரிசு செய்கிறது."

மேலும் அது சொல்வதாவது :

"சமீபத்தில் அமைக்கப்பட போகின்ற ஹிந்திக் கழகத்தை கலந்து ஆலோசித்துத் தேவைப்பட்டால் இது பற்றிய ஒரு திட்டத்தை அரசாங்கம் தயாரிக்கும்."

இந்த அறிக்கைபற்றிக் கீழ்க்கண்ட முறையில் இந்திய அரசாங்கத்தினிடம் ஒரு வினாவை எழுப்பினோம் :—

"பல்வேறு பிராந்திய மொழிகளில் விடைத்தாள்கள் இருக்குமேயானால் பரீட்சையின் முடிவை 'மிதப்படுத்துதல்' சரியான முறையில் செய்வது கடினம் ஆதலால் இதிலுள்ள நடைமுறைத் தொல்லைகளை உத்தேசித்துப் பல்வேறு மொழிகளிடையே ஒரு பங்கு முறை வைக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இவ்வாறு வைப்பதனால் உண்டாகின்ற பயன்களைப்பற்றியும் தற்பொழுதுள்ள அகில இந்தியப் பணித்துறைகள் இதனால் பாதிக்கப்படுவதைப் பற்றியும் ஆராயப்பட்டதா ? அவ்வாறு ஆராய்ந்திருந்தால் தற்பொழுதுள்ள அகில இந்தியப் பணித்துறையின் அமைப்புகளில் என்ன மாற்றம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது ?"

இவ் வினாவிற்கு விடை அளிக்கும் முறையில் இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சு கீழ்க்கண்டவற்றை அறிவித்தது :—

"அகில இந்தியப் பணித் துறைக்கும் யூனியன் பணிகளுக்கும் மொழிவாரிப் பங்கு முறையை ஏற்படுத்துவதுபற்றி இந்திய அரசாங்கம் என்றுமே சிந்திக்கவில்லை. அவ்வாறு செய்வது அகில இந்தியப் போட்டி என்ற அடிப்படைக்கே முற்றிலும் முரணாகிவிடும் ஆதலால் அவ்வாறு சிந்திப்பதே பொருத்தமற்றது. இவ்விடைத்தாள்கள் பல மொழிகளில் எழுதப்பட்டால் அவற்றை மிதப்படுத்துதலிலுள்ள தொல்லையை இந்திய அரசாங்கம் நன்கு தெரிந்திருக்கிறது. இந்தத் தொல்லைகள் தவிர்க்க முடியாதவையா என்பதையும் பல்வேறு மொழிகளில் விடை எழுதும் எண்ணத்தையே விட்டுவிட வேண்டுமா என்பதையும், இந்தத் தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு உரிய ஏதாவது ஒரு வழியைக் காண முடியுமா என்பதையும் அவ்வாறானால் இன்ன இன்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதையும் ஆட்சிமொழிக் கழகம் தன் கருத்தைத் தெரிவித்த பிறகு இந்திய அரசாங்கம் ஆராய வேண்டி இருக்கும். இந்த நிலையில் கழகமே இந்தப் பிரச்னைகளை ஆராய்ந்து அதன் சிபாரிசுகளைச் செய்யவேண்டும்."

இந்த அறிக்கை செய்யப்படுகின்ற காலத்தில் போட்டிப் பரீட்சைகளுக்குப் பல்வேறு இடைநிலை மொழிகளை மேற்கொள்வதால் விளையக்கூடிய தொல்லைகள்பற்றி இந்திய அரசாங்கத்திற்கு யாரும் எடுத்துச் சொல்லவில்லை போல் இருக்கிறது. இது பற்றி முன்னரே தீர்மானிக்கப் பட்டபடியாலும் இந்திய அரசாங்கம் தன் கருத்தை ஏற்கெனவே வெளியிட்டிருக்கிறபடியாலும் இவ்வாறு பல்வேறு மொழிகளை இப்போட்டிப் பரீட்சைகளில் இடைநிலை மொழிகளாகப் புகுத்தினால் நல்ல முறையில்

மிதப்படுத்த முடியாது என்பதை மட்டும் நாங்கள் சொல்ல விரும்புகின்றோம். எனவே யூனியன் அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் தம்முள் கலந்து ஆலோசித்துக் கீழ்க்கண்ட வழிகளுள் ஏதாவது ஒன்றை மேற்கொள்ள வேண்டும். அதாவது அகில இந்தியப் போட்டிப் பரீட்சை என்ற அதனுடைய இயல்பு மாறும்படியாக அதனைத் துண்டாடிவிடுவது, அல்லது இப் பரீட்சையின் அமைப்பு முறையை மாற்றிவிடுவது, அல்லது இடைநிலை மொழிகளின் எண்ணிக்கையைத் தகுந்த அளவில் குறைத்து வைத்துக்கொள்வது என்ற மூன்றில் ஏதாவது ஒன்றை மேற்கொள்ளலாம்.

16. 9-வது பாரா முதல் 15-வது பாரா வரையில் உள்ள வாதங்களின் பயனாக உள்ள எங்கள் முடிவுகளையும் சிபாரிசுகளையும் கீழே சுருக்கித் தருகிறோம்.

(அ) அகில இந்தியப் பணித் துறைகள், மத்தியப் பணித்துறைகள் (இது போன்ற இன்னும் ஏதாவது பணித்துறைகள் ஏற்படுத்தினாலும் அவற்றிற்கும் இதுவே பொருந்தும்) ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் இப்பொழுதுள்ள ஆங்கில இடைநிலை மொழியோடு ஹிந்தி இடைநிலை மொழியையும் தகுந்த அறிவிப்புச் செய்துவிட்டு மேற்கொள்ளலாம். மற்றப் பிராந்திய மொழிகளைப் பொறுத்த மட்டில் அவை பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு வரையில் பிராந்திய மொழிகளாக இன்று ஹிந்தி மொழி உள்ளதைப் போல் அமைந்துவிட்ட பிறகு ஏனைய பிராந்திய மொழிகளை இப்பரீட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக வைப்பதுபற்றி ஆராயலாம்.

இந்தப் பணிகளுக்கு ஒரு மொழியை இடைநிலை மொழியாக வைப்பதனுடைய தகுதியைப்பற்றி ஆராய்வதன் முன்னர் அந்த மொழி பல்கலைக் கழகப் படிப்பில் எவ்வளவு தூரம் இடைநிலை மொழியாக இருந்து தரத்தைப் பெற்றிருக்கிறது என்பதைப் பற்றி முடிவு செய்த பின்னரே இது பற்றி ஆராயவேண்டும்.

ஆங்கிலம் இடைநிலை மொழியாக இருப்பதை இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தேவைப்படுகிறதோ அவ்வளவு காலத்திற்கு நீட்டிக் கொள்ளலாம். இறுதியாக இந்த ஆங்கிலத்தை நீக்கக்கூடிய நேரம் வரும்பொழுது நீண்ட கால அறிவிப்புச் செய்த பின்னரே அதனை நீக்க வேண்டும்.[1]

(ஆ) பல மொழிகள் இடைநிலை மொழிகளாக இருப்பினும் "மிதப் படுத்துதலை" ஓரளவு செய்யக்கூடுமேனும், விடைத் தாள் திருத்துவோர் இரு மொழி அல்லது பன்மொழி கற்றவர்களாக, ஏனைய தகுதிகளும் உடையவர்களாகக் கிடைப்பார்களா என்பதை ஆராயும்பொழுது, இந்த ஒன்றின் காரணமாக மேற்கொண்டு புதிய இடைநிலை மொழிகளை இப் பரீட்சைகளுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்ற நிலையும் ஏற்படலாம்.

---

[1] இங்கே கண்டுள்ள முடிவுகளிலும் சிபார்சுகளிலும் கீழ்க்கண்ட அளவுக்கு டாக்டர் ஆர். பி. திருபாதி மாறுபடுகின்றார்:—பிராந்திய மொழிகளை யூனியன் பணி ஊழியர் பரீட்சைக்கு இடைநிலை மொழிகளாக வைத்திருப்பதை அவர் மறுக்கிறார். ஆங்கிலமோ ஹிந்தியோ மட்டும் தான் இடைநிலையாக இருக்கவேண்டும் என்கிறார். ஆங்கில இடைநிலை மொழிக்காரர்கள் ஹிந்தியிலும், ஹிந்திக்காரர்கள் ஆங்கிலத்திலும் ஒரு பரீட்சை எழுதவேண்டும். பத்து அல்லது பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியை மட்டும் வைக்கலாம்.

சர்தார் தேஜா சிங் ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியை இடைநிலை மொழியாக ஆக்கும் பொழுது அந்த நிலையை அடையக்கூடிய தகுதியுடைய பிராந்திய மொழிகளைப்பற்றியும் சற்று சிந்திக்கவேண்டும் என்று கூறுகிறார். ஹிந்தி ஏனைய பிராந்திய மொழிகள் ஆகிய இரண்டுமே இப்பரீட்சைக்கு இடைநிலை மொழியாக வைப்பதற்கு ஒரே தகுதியுடன் கவனிக்கப்படவேண்டும். ஏனென்றால் பல்கலைக் கழக இடைநிலை மொழிகளாக இவை இரண்டுமே வளர்வதற்கு நாம் இடம் தந்துள்ளோம்.

இத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்னரே யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் தங்களுக்குள் கலந்து கீழ்க்கண்டவற்றுள் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும். (1) அகில இந்தியப் பணித் துறைகளுக்கு ஊழியர் எடுக்கும் முறையில் ஒரு மாற்றத்தைச் செய்ய இருவரும் ஏற்றுக் கொள்ளவேண்டும். (2) இன்றேல் இப் பரீட்சைகளுக்குரிய இடைநிலை மொழிகளின் எண்ணிக்கையைக் குறைக்க ஒப்புக்கொள்ள வேண்டும். (3) இன்றேல் இப் பரீட்சையின் அமைப்பு முறைகளில் தகுந்த மாறுதல்களைச் செய்யவேண்டும்.

(இ) “ ஆ ” பகுதியில் சொல்லப்பட்ட சூழ்நிலை வருவதற்கு முன்னர் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ள மாணவர்கள் வேண்டுமான அளவு ஹிந்திப் பயிற்சி பெற்று ஹிந்தி பேசும் மாணவர்களோடு போட்டியிடக்கூடிய அளவு தகுதி பெற்றுவிடுவார்கள் என்று நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

அதுவரையில் ஹிந்தி பேசாத மாணவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இப்பொழுதுள்ள ஆங்கில இடைமொழியே போதுமானது என்று நினைக்கிறோம். இறுதியாக எங்களுள் சிலர் யூனியன், ராஜ்ய அரசாங்கங்களுக்கு “ ஆ ” பிரிவில் இரண்டாவது பாராவில் சொல்லப்பட்ட மூன்றில் ஒரு வழியை மேற்கொள்ளும் அவசியமே ஏற்படாது என்று நம்புகிறோம்.[1]

17. அடுத்தபடியாக மத்திய செயலாளர் அகத்திற்கும் அதனோடு தொடர்புடைய ஏனைய அலுவல்களுக்கும் ஏற்பட்டுள்ள ஊழியர் தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சைபற்றிக் கவனிப்போம். மேலே ஒன்றாவது பாராவில் சொல்லியபடி இதற்கு ஆளெடுக்கும் முறையிலும், மத்திய அரசாங்கத்தின் விரிந்து பரந்துள்ள பெரிய இலாகாக்களுக்கு ஊழியர் பொறுக்கும் முறையிலும் அதிகம் மாறுபாடில்லை. மத்திய செயலாளர் அகத்திற்கு ஆள் எடுப்பதற்கு நாங்கள் எவ்வெவற்றைச் சொல்லி இருக்கிறோமோ அவை ஏனைய பகுதிகளுக்கும் ஆள் எடுப்பதற்குப் பொருந்துவதாகும்.

மத்திய செயலாளர் பணித்துறையின் கீழ் உள்ள பல்வேறு வகுப்புகளுக்கும் ஆள் எடுக்க வைக்கப்படும் போட்டிப் பரீட்சைகளுக்குக் கீழ்க்கண்டவற்றைச் சொல்ல விரும்புகிறோம். இத்துறைகளுக்குப் பரீட்சை எழுத வருகிறவர்கள் விரும்பினால் ஹிந்தி மொழியில் பரீட்சை எழுத அதிகம் தடையிராது என்றே நினைக்கிறோம். ஹிந்தி பேசாத மாணவர்கள் இப்பரீட்சைகளுக்கு வரவிரும்பினால் அவர்களுக்கு ஆங்கில இடைநிலைமொழி இருந்துவருகிறது. இத்துறைகளில் ஊழியம் செய்ய வருபவர்கள் முற்றிலும் ஹிந்தி அறிந்திருக்கவேண்டிய சூழ்நிலையில் உள்ளவர்கள். ஏனென்றால் யூனியன் சம்பந்தமான கடமைகளில் இவர்கள் ஈடுபட்டிருப்பார்கள். யூனியனைப் பொறுத்த மட்டில் ஆட்சி மொழியாக ஹிந்தி மொழி இருந்துவரும். ஏனைய துறைப் பணிகளைப் பொறுத்த மட்டில் அவை மத்திய ஆட்சியின் கீழ் இல்லாமல் அந்தப் பிராந்தியங்களிலேயே இருந்துவரும். இந்தப் பரீட்சைகளில் கட்டாயமாக வைக்கப்படுகின்ற ஹிந்தி வினாத்தாளைப்பற்றி மட்டில் கீழ்க்கண்ட சில கொள்கைகளைச் சொல்ல விரும்புகிறோம்.

---

[1] சர்தார் தேஜா சிங் டாக்டர் டி. கே. பாரிஜா ஆகியவர்களை உள்ளிட்ட சில உறுப்பினர்கள் இந்தப் போட்டிப் பரீட்சைகளை இரண்டு நிலைகளாகப் பிரிக்கலாம் என்று கருதுகிறார்கள். இவ்வாறனால் இப்பரீட்சைகளில் எத்தனை இடைநிலை மொழிகள் இருந்தாலும் மிதப்படுத்துதலால் பிரச்னையை எளிதாக்கி விடலாம் என்று கருதுகிறார்கள். பல்வேறு பிராந்திய மொழிகளிலும் புகுமுகப் பரீட்சை நடத்திப் பெருவாரியான மாணாக்கர்களை ஒதுக்கிவிடலாம். இதில் வென்று வருகின்றவர்களுக்கு ஒரே மொழியில் இறுதிப் பரீட்சை ஒன்றை வைக்கலாம். வாய் மொழிப் பரீட்சை ஒன்றை வைக்கும்பொழுது அவை பிராந்திய மொழிகளிலேயே இருத்தல் வேண்டும். இவைபற்றி அதற்குரிய அதிகாரிகள் நன்கு சிந்திப்பார்கள் என்று நம்புகிறோம்.

இன்னும் சில ஆண்டுகளுக்கு, ஹிந்தி பேசாதவர்கள் உத்தியோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகும்கூட ஹிந்திமொழியைக் கற்றுக்கொள்ளலாம். ஏனென்றால் இவர்கள் பரீட்சை எழுதும்பொழுது உள்ள கட்டாய ஹிந்தி வினாத்தாள் குறைந்த தரமுடையதாக இருக்கும். கட்டாய ஹிந்தி வினாத்தாளில் எதிர்பார்க்கப்படும் தரம், நம்முடைய புதிய திட்டத்தில் மத்திய அரசாங்கத்தின் கருத்துப்படி ஹிந்தி பேசாத மாணவர்களுக்கு எந்த அளவில் இருக்கவேண்டுமோ அந்த அளவில் குறைந்து விடக் கூடாது. அதாவது மத்திய அரசாங்கம் ஹிந்தி பேசாத ஊழியர்களுக்கு ஹிந்தி மொழியில் பயிற்சி கொடுக்க முயற்சி எடுக்கும் காலத்தில், புதிதாக ஊழியம் செய்ய வருபவர்கள் ஏற்கெனவே உள்ள ஹிந்தி பேசாத ஊழியர்களைவிடக் குறைந்த ஹிந்தியறிவு உடையவர்களாக இருக்கக் கூடாது என்று எதிர்பார்ப்பதில் தவறு ஒன்றும் இல்லை. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு முதல் சில வருஷங்கள் கட்டாய ஹிந்தி வினாத்தாளை வெறும் தகுதித் தாளாக மட்டும் வைத்துக்கொள்ளலாம். நாளாவட்டத்தில் இவ்வினாத்தாளின் தரத்தை உயர்த்திப் போட்டிக் குரியதாகவும், தரத்தை நிர்ணயிப்பதற்கு உரியதாகவும் செய்துவிடலாம்.

18. யூனியன் பொதுப் பணிக் கழகத்தார் நடத்தும் போட்டிப் பரீட்சைகளில் விருப்ப பாடமாக உள்ளவைபற்றி ஒன்று சொல்ல விரும்புகிறோம். உண்மையில், ஏறத்தாழ இதே நிலைதான் ராஜ்யங்கள் நடத்தும் பொதுப் பணிக் கழக போட்டிப் பரீட்சைகளிலும் உள்ளன. அனுபந்த நூலில் (அச்சிடப்படவில்லை) 4-வது பகுதியில் யூனியன் பொதுப் பணிக் கழக, ராஜ்ய பொதுப் பணிக் கழக பரீட்சைகளில் பிராந்திய மொழிகள், இலக்கியங்கள் என்பவை விருப்பப் பாடங்களில் எந்த நிலையில் உள்ளன என்பது பற்றி அறிவித்துள்ளோம். வேறு பல இடங்களில் பல்வேறு பிராந்திய மொழிகளையும், அவற்றின் இலக்கியங்களையும் கற்பிப்பதற்கு இடைநிலைக் கல்வி முறையில் எவ்வளவு வசதிகள் செய்து தரவேண்டும் என்று பேசியுள்ளோம். பொதுப் பணி கழகப் பரீட்சைகளில் விருப்ப பாடமாக அமைக்கப்பட்டவற்றுள் இந்தப் பிராந்திய மொழிகளும், அவற்றின் இலக்கியங்களும் தகுந்த இடத்தைப் பெறவில்லை என்பதை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். கல்வி முறையில் உள்ள பாடத் திட்டத்துக்கு ஏற்பவே பொதுப் பணிக் கழகப் பாடத் திட்டங்களும் அமையவேண்டும். நம்முடைய நாட்டில் உள்ள பல்வேறு மொழிகளின் இலக்கிய வளத்தை உத்தேசித்து ஒவ்வொரு ராஜ்யத்தின் கல்வி முறையிலும், பிற ராஜ்யத்தின் பிராந்திய மொழிகளைக் கற்பிக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தியுள்ளோம். அதே போலப் பொதுப் பணிக் கழகப் பரீட்சைகளிலும் விருப்ப பாடங்களை ஆராய்ந்து பல்வேறு பிராந்திய மொழிகளிலும் உள்ள இலக்கியம் முதலானவற்றிற்கு அதிக இடம் கொடுப்பது பற்றி அந்த அதிகாரிகள் சிந்திக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

19. அகில இந்தியப் பணித் துறை, அதனோடு ஒத்த ஏனைய துறைகளில் யூனியன் பொதுப் பணிக் கழகத்தால் நடத்தப்பெறும் போட்டிப் பரீட்சைகளுக்கு எந்த இடைநிலை மொழி வேண்டும் என்பது பற்றிய எங்கள் சிபார்சுகளைப் போலவே ராஜ்யப் பொதுப் பணிக் கழகங்கள் நடத்தும் பரீட்சைகளிலும் விருப்பமானால் ஹிந்தி மொழியில் பரீட்சை எழுத சிபார்சு செய்கிறோம்.[1] யூனியன் பொதுப் பணிக் கழக பரீட்சை எழுதுபவர்கள் விருப்பமானால் ஹிந்தி இடைநிலை மொழியில் பரீட்சை எழுத ஒரு வாய்ப்பும், பல்கலைக் கழகங்களில் விருப்பமானால் ஹிந்தியில் எழுதும் ஒரு வாய்ப்பும் கொடுக்கப்பட்டு விட்டால் ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் உள்ள மாணவர்களில்கூடப் பெரும்பாலோர் ஹிந்தி மொழியில் பல்கலைக் கழகங்களில் பரீட்சை எழுத விரும்புவார்கள். ஏனென்றால் பின்னர் யூனியன் பொதுப் பணிக் கழகப் போட்டிப் பரீட்சைகளுக்குத் தம்மைத் தயார் செய்துகொள்ள இது ஏதுவாகும். இம் மாணவர்கள்

---

[1] இந்த வசதி ஒரு இடைக்காலத் தேவையாகத்தான் இருக்கும் என்று டாக்டர் பி. கே. பருவா நம்புகிறார். அதாவது அந்த ராஜ்யப் பிராந்திய மொழி யூனியன் பொதுப் பணிக் கழகப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழியாக வருகின்ற வரையில்தான்.

தங்களுடைய ராஜ்யங்களில் நடைபெறும் பொதுப் பணிக் கழகப் பரீட்சைகளுக்குத் தோன்ற விரும்பினுல் அதற்கும் அவர்களுக்கு வசதி வேண்டும். பீஹார், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் ராஜ்யப் பொதுப் பணிக் கழகங்கள் நடத்தும் போட்டிப் பரீட்சைகளில் ஆங்கில மொழியோடு, விருப்பமுள்ளவர்கள் ஹிந்தி மொழியிலும் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுகிருர்கள். நாங்கள் மேலே கூறிய வழிகள் யூனியன் மொழி சம்பந்தமாகத் தரப்படுகின்ற ஒரு விருப்ப நிறைவேற்றமாகும். மேலும், ஒரு விருப்ப நிறைவேற்றம் செய்வதில் நடைமுறைத் தொல்லே ஒன்றும் இராதென்றே நினைக்கின்ருேம். தங்களுடைய ராஜ்ய மாணவர்களில் அகில இந்தியப் போட்டிப் பரீட்சைக்குச் செல்லும் தகுதியுடையவர்கள் விரும்பினுல் ராஜ்யங்களுக்குள்ளேயே வேலே தேடிக் கொள்ள அவர்கட்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் இதனே, ராஜ்ய அரசாங்கங்களே செய்து கொடுக்கும் என்று நம்புகிருேம்.

பகுதி XIII.

ஹிந்தி, பிராந்திய மொழிகள் ஆகியவற்றின் வளர்ச்சியும், பரப்புதலும்.

வளர்த்தல், பரப்புதல் ஆகிய துறைகளில் இதுவரை நடைபெற்ற முயற்சிகள்.

யூனியன் விவகாரங்களில் ஹிந்தியைப் பயன்படுத்தும் முறையில் எந்த அளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது பற்றியும், பல்வேறு ராஜ்யங்களின் ஆட்சித் துறையில் பிராந்திய மொழிகள் ஏற்றுக் கொள்ளப் பெற்று எந்த அளவு அது வளர்ச்சி அடைந்திருக்கின்றது என்பது பற்றியும் பிறிதோர் இடத்தில் எடுத்துக் கூறியுள்ளோம். யூனியன் ஆட்சி முறையில் மேலும் ஹிந்தியை வளர்ப்பதற்குரிய முதல் தேவைகள் யாவை என்பது பற்றியும் ஆராய்ந்துள்ளோம். நாங்கள் கூறிய வழிகளே பல்வேறு ராஜ்யங்களிலும் பிராந்திய மொழிகளை ராஜ்ய விவகாரங்களில் புகுத்துவதற்கும் ஏற்ற வழிகளாகும். "யூனியன் மொழியும் கல்வி முறையும்" என்ற பகுதியில் கல்வி முறையில் ஹிந்தியை ஏற்றுக் கொண்டுள்ள வளர்ச்சி எவ்வளவு என்றும், பிராந்திய மொழிகளின் வளர்ச்சி எவ்வளவு என்றும், போதனு மொழித் துறையில் ஆங்கிலத்தின் இடத்தை இந்திய மொழிகள் பெறுவதற்கு எவ்வளவு வளர்ந்துள்ளன என்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளோம். அதே பகுதியில் இந்திய அரசியலமைப்புக் கூறும் மொழிக் கொள்கையை நிறைவேற்றக் கல்வி முறையில் எவ்வளவு தூரம் குறைந்த அளவு ஹிந்தி போதனை நடைபெற வேண்டும் என்றும் கூறியுள்ளோம். "கலைச் சொற்கள் பற்றியும்," அவை ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் எவ்வாறு வரவேண்டும் என்பது பற்றியும் ஐந்தாவது பகுதியில் ஆராய்ந்துள்ளோம். இந்தப் பகுதியில் ஹிந்தி, பிராந்திய மொழிகள் இவற்றைப் பரப்புவதைப் பற்றியும், இவற்றின் வளர்ச்சியில் இதுவரையில் பேசப்படாத சில கருத்துகளையும் ஆராய விரும்புகிறோம்.

2. ஹிந்தி மொழி பேசாத மக்கள் வாழ்கின்ற பிராந்தியங்களில் யூனியன் மொழியாகிய ஹிந்தியைப் பரப்புவது பற்றி முதலில் ஆராய்வோம். அரசியலமைப்பின் ஷரத்துக்களின்படி யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தி மொழி மக்களின் வாழ்க்கை முறையில் "தேசிய வாழ்வின் உள் துறைகளில்கூட" ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமேயானல் ஹிந்தி மொழி பேசாத மக்களிடையே பெருவாரியான அளவுக்கு ஹிந்தி மொழியைப் பரப்ப வேண்டும். தேசீய மொழிக் கொள்கையைச் சரியான முறையில் கொண்டு செலுத்த இதுவே வழியாகும். அரசியலமைப்பு, யூனியனின் எல்லா விவகாரங்களுக்கும் ஹிந்தியை இடைநிலை மொழியாக்கும் காலம் 1965-ம் வருஷம் என்று குறிப்பிட்டிருக்கவும் அதன் பிறகு கூட பல காலத்திற்கு நம்மிடையே ஹிந்தி மொழி அறியாத வயது வந்தவர்களின் ஜனத்தொகை மிகுதியாக இருக்கும். இந்த மக்கள் கூட்டம் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை 14 வயதுவரைப் பெருத கூட்டமாகும். அக்கல்வியைப் பெறுபவர்களுக்குக் கட்டாய ஹிந்தி போதனை நடத்த வேண்டும் என்று நாம் குறிப்பிட்டிருக்கும் கல்வி முறையிலுள்ள வசதி கிட்டாமல் போய்விடும். ஆகவே பள்ளிக்கூடம் போகாத இந்த மக்கள் கூட்டத்தின் நன்மையைக் கருதி இவர்களிடையே ஹிந்தி மொழியைப் பரப்பவேண்டிய கடமை மிக முக்கியமானதாகும். அரசியலமைப்பின் மொழிக் கொள்கையை நிறைவேற்றச் சிறந்த வழி இதுவாகும்.

1918-ம் ஆண்டிலேயே எதிர் காலத்தை முன்னேக்கியது போல மகாத்மா காந்தி தொடங்கிய ஆக்கவேலையின் காரணமாக ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி மொழியைப் பரப்புவதற்கு ஏராளமான வேலை செய்யப்பட்டுள்ளது. இத்துறையில் தாமே விரும்பித் தொழிற்படும் அமைப்புக்கள் ஹிந்தி மொழியைப் போதிப்பதற்கு 6,700 இடங்களையும், ஏறத்தாழ 4,300 பரீட்சை நடத்தும் இடங்களையும், வைத்துள்ளதோடு,

29 பலவேறு தரமுடைய பரீட்சைகளையும் வைத்து இதுவரை 71 லக்ஷம் மாணவர்களுக்கு ஹிந்தி கற்றுத் தந்துள்ளது. எந்த முறையில் பார்த்தாலும் தாமே விரும்பி இயங்கும் இந்த அமைப்புக்கள் அரசாங்கத்திலிருந்து அதிகப்படியான உதவி ஒன்றும் இல்லாத பொழுதும் சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலும் செய்துள்ள இந்த வேலை மிகவும் வியக்கத்தக்கதேயாகும். இந்தத் துறையில் சிறிதும் தன்னலம் கருதாது பொதுப் பணிக்காக உழைத்த ஊழியர்களைப் பெரிதும் பாராட்டவேண்டும். சில சமயங்களில் முற்றிலும் கௌரவ முறையிலும், இன்னும் சில, சமயங்களில், சிறிதும் பற்றாத மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்றுக்கொண்டும் இவ் வூழியர்கள் உழைத்துள்ளார்கள். இத்துறையில் நடந்த வேலைகள் அனைத்தும் அந்தந்த பிராந்தியங்களில் உள்ளவர்களின் சுய முயற்சியாலேயே நடைபெற்றுள்ளன என்பதும் அந்தப் பிராந்தியங்களிலுள்ள பொருளையும் ஆட்களையும் வைத்துக்கொண்டே நடைபெற்று வந்துள்ளன என்பதும் குறிப்பிடத் தகுந்தவை. நாட்டின் விடுதலை கண்ணுக்குத் தெரியாத காலத்திலும், இந்த ஊழியர்கள் அமைதியாக ஆடம்பரமும், படாடோபமும் இன்றித் தேசிய வாழ்க்கையில் எவ்வித புகழும் கிடைக்காத இத்துறையில் சென்ற 20 அல்லது 30 ஆண்டுகளாக உழைத்தார்கள். இதன் பயனைத்தான் 1949-ல் இந்திய மக்கள் அரசியல் அமைப்பு அவையில் கூடி இந்தியாவின் அரசியலமைப்பைத் தங்களுக்குத் தாங்களே படைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கின்ற காலத்தில், யூனியன் ஆட்சி விவகாரங்களுக்காவது ஒரு பொது மொழியை அகில இந்திய மொழியாகக் கொள்ள வேண்டும் என்று நினைக்கவாவது முடிந்தது. இப்பொழுது இந்தப் பொறுப்பின் அடிப்படை முழுவதும் அதிகார வட்டாரத்துள் நேரடியாக "எடுத்துக் கொள்ளப்படுகிறது" என்றாலும் ஹிந்தி மொழியைக் கற்பிப்பதும், அதனை பரப்புவதும் இத்துறையில் இதுவரையில் உழைத்து சிறந்த அனுபவத்தைப் பெற்று இதற்குத் தேவையான கருவி காரணங்களையும், வசதிகளையும், ஆட்களையும் பெற்றுள்ள இந்தத் தாமே விரும்பி இயங்கும் அமைப்புக்களிடமே இருந்துவருமாறு விட்டுவிடவேண்டும். ராஜ்ய அரசாங்கம் இதற்குரிய பண உதவி, ஏனைய உதவிகள் ஆகியவற்றைச் செய்து இந்த அமைப்புக்களால் செய்யப்படும் வேலையை, மேல் பார்த்து இவற்றினுடைய வேலைகளையெல்லாம் ஒருமைப் படுத்தி விரைவாகப் பரப்பும் வேலையை மேற்கொள்ளச் செய்து போதனையின் தரத்தை உயர்த்தி, இதுபோன்ற காரியங்களைச் செய்யவேண்டும்.

3. ஒருமுகப்படுத்தும் பிரச்னை பற்றி ஏற்கனவே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. 1951-ம் ஆண்டு ஜூலை மாதம் பிரசித்தி பெற்ற ஹிந்தி அமைப்புக்களெல்லாம், மற்றவற்றோடு சேர்ந்து ராஷ்டிரபதி பவனத்தில் டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் தலைமையில் கூடின. இந்தக் கூட்டத்தில் மத்திய அரசாங்க அரசியலமைப்பில் கூறப்பட்டபடி ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் ஹிந்தியைப் பரப்பும் பொறுப்புப் பற்றி அறிவுரை கூற ஒரு அறிவுரைக் குழு ஏற்படுத்த முடிவு செய்யப்பெற்றது. இதன்படி ஹிந்தி சிக்ஷா சமிதி ஏற்படுத்தப்பட்டு அது மறுபடியும் இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் 1954-ம் வருஷம் அக்டோபர் 13-ந்தேதியிட்ட தீர்மானம் என்.எப். 2-36/54-எச் 4-ன்படி திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது இந்தக் குழுவில் தலைவருள்பட 24 உறுப்பினர்கள் உள்ளார்கள். இவர்களுள் ஹிந்தி வழங்காத ராஜ்யங்கள் 17-க்கும் ஒவ்வொரு உறுப்பினர் விதமும், லோக் சபை, ராஜ்ய சபை ஆகிய இரண்டுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியும் பிரசித்திபெற்ற ஹிந்தி அமைப்புக்களின் பிரதிநிதிகளாக இருவரும் ஹிந்தி பேசும் ராஜ்யங்களின் பிரதிநிதிகளாக இருவரும் ஆக 24 பேர்கள் இருக்கின்றனர். இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காகவும், ஹிந்தியை வளர்ப்பதற்குரிய திட்டங்களை வகுப்பதற்காகவும் இக் குழு அடிக்கடி கூடுகிறது. மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சுக்கு இங்ஙனம் ஆலோசனை சொல்லக்கூடிய ஒரு குழு அமைக்கப்பட்டது சிறந்த ஒன்றாகும். ஹிந்தி மொழியை வளர்க்கும் வழிகள், தகுந்த முறையில் நிறுவப்படவும், அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட ஏற்பாடு

களின் முக்கியத்துவத்திற்கு ஏற்பவும் இக்குழு அமைக்கப்பட்டது பொருத்த முடையதே ஆகும். இனி நாங்கள் ஆராயப் போகின்ற பல விஷயங்கள் ஹிந்தி சிக்ஷா சமிதியின் கவனத்தில் முன்னரே இருந்து வருகின்றன என்றாலும் எங்கள் கவனத்தில் இருந்துவருகின்ற சிலவற்றைச் சுருக்கமாக இங்கே தெரிவிக்க விரும்புகிறோம். அவையாவன :—

(1) பல்வேறு அமைப்புக்களின் வேலையும் ஒருமுகப் படுத்தப்பட வேண்டும். அவற்றின் வேலைக்கு எல்லைகள் வகுக்கப்படவேண்டும்.

(2) அவைகள் நன்கு வளர்ச்சி அடைந்து தத்தம் துறைகளில் நன்கு தொழிற்பட அவைகளின் தேவை என்ன என்று பார்க்கவேண்டும்.

(3) பரீட்சைகளின் தரத்தில் ஒப்புமை செய்யக்கூடிய ஒருமைத் தன்மையைப் புகுத்துதல். இப்பரீட்சைகளின் நடைமுறையில் செம்மையான வழிகளும் கல்வித் தரமும் குறையாமல் இருக்கப் பார்த்துக் கொள்ளுதல்.

(4) கற்பிக்கும் முறைக்குத் தேவையான கருவி கரணங்கள், ஆசிரியப் பயிற்சிகள் முதலியவற்றை மிகுதிப் படுத்துதல்.

(5) நாட்டின் பல்வேறு பிராந்தியங்களுக்கு ஏற்பத் தரம் பிரித்து எழுதப் பெற்ற பாடப் புத்தகங்கள் கிடைக்குமாறு செய்தல். மேற்கொண்டு படிப்பதற்குரிய ஹிந்தி இலக்கியங்களையும், புதிதாகக் கற்பவர்கள் குழந்தைகள், பெண்கள் ஆகியவர்களுக்கு ஏற்ற இலக்கியகளையும் தயாரித்துக் கொடுத்தல்.

(6) புதிதாக ஹிந்தி கற்றுக் கொண்டவர்களின் வளர்ச்சியைக் கருதிப் படிப்பகங்களும் நூல் நிலைய வசதிகளும் செய்து தருதல்.

பி.கு.—இந்த அமைப்புக்களின் நடைமுறைகளையும், வேலைகளையும் பற்றி கிடைத்த எல்லாத் தகவல்களையும் சேகரித்து அவற்றிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு கட்டுரை அனுபந்த நூல் 6-வது பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. (அச்சிடப்படவில்லை.)

மேற்கண்டவை பற்றி எங்கள் கருத்துக்களைச் சுருக்கிக் கீழே தருகிறோம் :—

பல்வேறு அமைப்புக்களும் தொழில் படும்பொழுது ஒன்றினுடைய எல்லையில் மற்றொன்று புகாமல் தடுத்து அவ்வவற்றின் எல்லையிலேயே அந்தந்த அமைப்புக்கள் நன்கு தொழிற்படும் வேலையை ஒருமைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு அமைப்பும் அதனுடைய எல்லைக்குள் இன்னும் விரிந்து தொழிற்படுவதற்குத் திட்டங்கள் வகுக்க வேண்டும். பல அமைப்புக்கள் ஏற்கெனவே இத் திட்டங்களை வகுத்து வைத்துள்ளன ஆதலால் அவற்றைச் சரிப்பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வேலை விரைவாக நடைபெறுவதற்காகக் கல்வி இலாகாவின் கீழுள்ள பள்ளிக்கூடங்கள் போன்றவை பள்ளிக்கூடம் இல்லாத நேரத்தில் ஒரு சிறு தொகையை வாங்கிக் கொண்டோ அன்றி இலவசமாகவோ தம் கட்டிடங்கள் முதலியவற்றை இந்த அமைப்புக்களுக்குத்தந்து உதவவேண்டும். இந்த அமைப்புக்கள் நடத்தும் பரீட்சைகளில் பல ரகங்கள் இருப்பதாகத் தெரிகிறது. யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் இந்தப் பரீட்சைகளில் சிலவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வது நலம் பயக்கும் என்று நம்புகிறோம். அரசாங்க ஊழியர்கள் தேவையான ஹிந்தி அறிவைப் பெறுவதற்கு இந்தப் பரீட்சைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதானால் இப் பரீட்சைகளுள் ஒரு ஒற்றுமைத் தன்மை இருத்தல் வேண்டும். பல்வேறு பிராந்தியங்களைப் பொறுத்தமட்டில் தேவை என்று சொல்லப்படும் அளவில் தர வேறுபாடுகள் இருக்கலாம். அதாவது திராவிடத் தாய் மொழி உடையவர்களுக்குக் குறைந்த தரமுடைய பரீட்சையையும், ஹிந்தியோடு தொடர்புடைய தாய் மொழியாளர்க்குக் கொஞ்சம் உயர்ந்த தரமுடைய பரீட்சையையும்

ஏற்படுத்தலாம். என்றுலும் ஒரு பிராந்தியத்தில் உள்ளவர்களுக்குப் பல அமைப்புக்கள் நடத்தும் பல பரீட்சைகளுள்ளும் ஒரு ஒப்புமைத் தன்மை இருத்தல் வேண்டும்.

இந்த அமைப்புக்களின் வேலே முறைகளே ஆராயும்பொழுது பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் தேவை மிகுதியாக இருப்பதைக் கண்டோம். இந்தத் தேவை ஏற்கெனவே தெரிந்து கொள்ளப்பட்டு ஆந்திராவில் உள்ள அகில பாரதீய ஹிந்தி பரீஷத்து என்ற ஸ்தாபனம் பொருளுதவி செய்து ஹிந்தி ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்கும் ஒரு நிலையத்தை ஏற்படுத்தி உள்ளது. ஆசிரியப் பயிற்சிக்கு வருகின்றவர்கட்குத் தகுந்த ஊதியம் கொடுக்க முடியாமையிஞலேயே வேண்டுமான அளவு ஆசிரியர்கள் முன் வரவில்லே என்றும் தெரிகிறது. ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலிருந்து வருகின்ற ஆசிரியர்கள் அவர்களுடைய ஹிந்தி உச்சரிப்பை வளர்த்துக் கொள்வதற்காக ஹிந்தி பேசப்படும் பிராந்தியங்களில் சென்று பயிற்சி பெறவேண்டும். எந்த அமைப்புக்களில் ஆசிரியப் பயிற்சி தரக் கூடிய வசதிகள் இருக்கின்றனவோ அவ்வசதிகளே வளர்த்துக் கொள்ளக் கூடிய வழிகளே ஆராய வேண்டும். இந்த அமைப்புக்கள் பலவும் தாமே தங்களுக்கு வேண்டிய பாடப் புத்தகங்களே வெளியிட்டுக் கொள்கின்றன என்றுலும் பாடப் புத்தகங்கள் பற்றி இன்னும் விரிவான முறையில் ஆராய வேண்டும். பல்வேறு பிராந்தியங்களில் உள்ளவர்கள் ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்வதற்கு அந்தந்த மொழிகளின் வழியே ஹிந்திப் பாடப் புத்தகங்கள் எழுதப்பட வேண்டும். ஹிந்தி கற்றுக் கொள்ளும் பல்வேறு தகுதியுடையவர்களுக்குத் தகுந்தபடியும் இப் புத்தகங்கள் அமைக்கப்படவேண்டும். இவற்றை யல்லாமல் எல்லாப் பாடப் புத்தகங்களும் ஒரே மாதிரியான எழுத்துக் கூட்டுதல் இலக்கண அமைப்பு என்பவற்றேடு குற்றம் குறைகள் இல்லாமலும் அச்சிடப்பட வேண்டும். இந்த அமைப்புகளுள் பல, வயது வந்தவர்கட்கும் கற்றுத்தரும் முறையில் ஹிந்தி வகுப்புக்களே நடத்த வேண்டும். பாடப் புத்தகங்களும், கற்பிக்கும் முறையும் தேவைக்கு ஏற்றபடி அமைக்கப்பட வேண்டும். படிப்பகம், நூலகம் தேவையான இலக்கியங்கள் ஆகியவை தகுந்த முறையில் விருத்தி அடைய வேண்டும் என்று சொல்லத் தேவையில்லே.

4. அரசியலமைப்பின் 351-வது விதி "ஹிந்தி மொழியைப் பரப்புதல் யூனியனின் கடமையாகும்" என்று தெளிவாகச் சொல்கிறது. என்றுலும் கல்விப் பகுதி, ராஜ்யங்களின் அதிகார எல்லேக்குள் அமைந்துள்ளது. மேலும் யூனியன் அரசாங்கத்தைக்காட்டிலும் இத்துறையில் தேவையான வழிகாட்டி பல்வேறு அமைப்புக்களுக்கும் ஹிந்தியை வளர்க்க அந்தந்தப் பிராந்தியங்களில் உதவி செய்யும் தகுதி ராஜ்ய அரசாங்கங்களிடமே மிகுதியும் இருந்துவருகின்றன. இவற்றை எல்லாம் மனத்துட்கொண்டு பார்த்தால் ராஜ்ய அரசாங்கங்களே ஹிந்தியை வளர்ப்பதற்குரிய தகுதியுடன் உள்ளன என்பதும், மத்திய அரசாங்கம் தேவையான பண உதவியை இம்முறையில் தொழில் படும் அமைப்புக்களுக்கு ராஜ்ய அரசாங்கங்களின் மூலம் தரவேண்டும் என்பதும் நன்கு விளங்கும். இம்முறையே நேர்மையானதும், வசதியானதும் என்றுலும் சில அமைப்புக்களே அகில இந்தியத் தன்மையுடையனவாக ஆக்கி மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் கொண்டு வருவதனுல் தவறில்லே என்றே நினேக்கிறேம்.

இப்பொழுது இயங்கும் ஹிந்தி வளர்க்கும் அமைப்புக்கள் தங்களால், முடிந்த அளவு வளர்ச்சியடைய முடியாமல் இருப்பதற்கும், போதிப்பதில் தரத்தை உயர்த்த முடியாமல் இருப்பதற்கும் முக்கியமான குறைபாடு பணக் குறைவே என்று அறிகின்றேம். மத்திய அரசாங்கம் முழு மனத்தோடு இவர்கட்கு வேண்டுமான பண உதவி செய்து மேலும் வளர்ச்சி அடைய உதவவேண்டும் என்று சிபார்சு செய்கிறேம். நாட்டில் இப்பொழுதுள்ள சூழ்நிலேயில் இந்த வேலே மிக உயர்ந்த தேசீய முக்கியத்துவம் பெற்றது. பொருளாதார வளர்ச்சிக்குரிய ஐந்தாண்டுத் திட்டங்களில் இணைய

காரியங்களுக்குத் தரப்பட்டுள்ள மிகப் பெரும் பணத்தோடு யூனியன் மொழியையும், பிராந்திய மொழிகளையும் வளர்ப்பதற்குத் தேவையான பணத்தின் அளவை ஒப்பிட்டால் இது மிகவும் குறைவாகவே இருக்கும். அங்ஙனம் செலவழித்தால் இதனால் கிடைக்கின்ற பயன் மிகமிகப் பெரிதாகும்.

5. விரைவாகவும், விரிவாகவும் ஹிந்தி அறிவைப் பரப்பவேண்டிய கடமை அரசியலமைப்பை நிறைவேற்றும்பொழுது ஏற்படுகிறது. ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் மற்ற மொழிகள் பற்றிய அறிவை வளர்த்துச் சிறப்பாக ஏனைய இலக்கியங்கள், பண்பாட்டு முறைகள் ஆகியவற்றை அவர்கள் அறிந்து கொள்ளுமாறு செய்யவேண்டியதும் நீண்ட கால திட்டத்துக்கு ஏற்றதாகும். உண்மையைக் கூறுமிடத்து ஹிந்தி பேசும் பிராந்தியங்களுக்கும், நாட்டின் மற்ற பகுதிகளுக்கும் இடையே ஏற்படவேண்டிய தொடர்புமட்டும் அன்று இது. ஒரு பிராந்தியத்தில் உள்ளவர்கள் நாட்டின் மற்ற எல்லாப் பகுதிகளிலும் உள்ளவர்களின் பண்பாடு முதலியவற்றை அறிய வேண்டியதே தலையாய கடமை.

மற்ற மொழிப் பிராந்தியங்களில் உள்ளவர்களின் பண்பாட்டு வகையைப் பரிவோடு அறிந்து கொள்வதுதான் ஒரு தேசீய இனமாக நாம் தங்கி வாழ்வதற்கு முதல் தேவையாகும். அதிகார பூர்வமான முறையில் அகில இந்திய நிலையில் தேவைப்படும் ஒரு சூழ் நிலைக்கு ஏற்ற உணர்ச்சி நிலையும் ஒன்று உண்டு. வடநாட்டைப் பொறுத்தமட்டில் கல்லாதவர்கள் ஒரு புறமிருக்க, கற்றறிந்தவர்களிடம் கூடத் தென்னிந்திய சரித்திரம், தென்னிந்தியப் பண்பாடுகள், மொழிகள், இலக்கியங்கள் என்பவைப்பற்றி வருந்தத் தகுந்த அறியாமை நிரம்பியுள்ளது. சரித்திரம் கற்பிக்கும் பாடப் புத்தகங்களே இதற்கு ஓரளவு பொறுப்பாளி. இப்புத்தகங்கள் சென்ற சில நூற்றாண்டுகளில் இந்திய ராஜ்யங்கள் தோன்றி மறைவதற்குக் காரணமாக இருந்த வடநாட்டைப் பற்றியே அளவுக்கு மிஞ்சிப் பேசுகின்றன. இதற்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் தென்னாட்டின் வரலாறு இந்தப் பாடப் புத்தகங்களிலும், பள்ளிக்கூடங்களிலும் கற்பிக்கப்படுவதில்லை. ஹிந்துக்களினுடைய இந்தியாவின் கலப்பற்ற பண்பாட்டு வகைகள் சில தென்னாட்டு பழக்கவழக்கங்களில்மட்டுமே இன்றும் இருந்து வந்தபோதிலும்கூட இப் புத்தகங்கள் அவைப்பற்றிக் குறிக்கவில்லை. வடநாடு நிலையில்லாத அரசியல் குழப்பத்தில் அல்லலுற்ற காலத்திலும்கூட இந்நாட்டு பண்பாட்டையும், கலையையும் வளர்ப்பதற்குத் தென்னாடு ஏற்றுக் கொண்டது. எனவே தென்னிந்தியன் ஒருவன் ஹிந்தி மொழியையும், அதனுடைய இலக்கியங்களையும், பண்பாட்டு வழக்கங்களையும் கட்டாயமாக படிக்க வேண்டிய இன்றைய சூழ்நிலையில் வடக்கில் உள்ளவர்கள் விருப்பமானால் தென்னாட்டு மொழிகளை கற்கலாம் என்பது இப்பிரச்னையை தீர்க்க முடியாது. எனவே வடநாட்டில் உள்ள எல்லா அமைப்புக்களும் தென்னாட்டு மொழிகளையும், வரலாறு, கலை, பண்பாட்டு வகைகள் ஆகியவற்றை இந்தியா முழுவதிலும் பரப்புவதோடு சிறப்பாக வடக்கே பரப்பவேண்டும்.

இதைக் கருதியே பிறிதோர் இடத்தில் பொதுப் பணிக் கழகப்போட்டிப் பரீட்சைகளில் பல்வேறு இந்திய மொழிகளையும், இலக்கியங்களையும் படிப்பதற்குரிய சிறந்த இடம் தரப்படவேண்டும் என்று கூறியுள்ளோம். ஏனைய இந்திய மொழிகளை இடை நிலைப் பள்ளிகளிலேயே கற்றுத் தரக்கூடிய வசதிகளை எல்லாப் பிராந்தியங்களிலும் செய்யப்படவேண்டும் என்றும் கூறியுள்ளோம். பல்கலைக் கழகங்களிலும் கூடப் பிற பிராந்திய மொழிகள், இலக்கியங்கள் ஆகியவற்றைக் கற்பிக்கும் பகுதிகள் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் எல்லாப் பிராந்திய மொழிகளையும் கற்பிக்கும் வசதி செய்து தரப்பட முடியாது என்றாலும், ஒவ்வொரு பிராந்தியமும் இரண்டு அல்லது மூன்று ஏனைய பிராந்திய மொழிகளைக் கற்பிக்கும் வசதியைச் செய்துதரலாம். ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் ஹிந்தி மொழியைக் கற்பிக்கும் ஒரு பகுதி இன்றியமையாதது. ஆதலின் அதனோடு சேர்த்து இவையும் இருக்கலாம். ஏனைய பிராந்திய மொழிகளில்

மேற்கொண்ட படிப்பை விரும்புகின்ற சில மாணவர்கட்கு ஒன்று அல்லது இரண்டாண்டுகளுக்கு உபகாரச் சம்பளம் தந்து அந்த மொழி வழங்கும் பிராந்தியங்களிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பலாம். அதாவது ஹிந்தி பேசும் மாணவன் தெலுங்கு மொழி, இலக்கியம் ஆகியவற்றைக் கற்க விரும்பினால் தெலுங்குப் பிராந்தியத்தில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் தெலுங்குப் பகுதியில் சென்று கற்குமாறு உபகாரச் சம்பளம் தரலாம். இங்ஙனம் பல்வேறு பிராந்தியங்களில் உள்ளவர்களும் மற்றவர்களுடைய மொழிகளையும், இலக்கியங்களையும் கற்கும் வாய்ப்பைப் பெறவேண்டும். பல்வேறு பல்கலைக் கழகங்களுக்கும் இந்தச் சிறந்த காரியத்தைச் செய்வதற்காக மத்திய அரசாங்கம் நிறைந்த அளவில் பண வசதி செய்துதரவேண்டும்.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் ஏனைய இந்திய மொழிகளை விரிந்த அளவில் கற்பிக்கவேண்டுமானால் இதுவரையில் இருந்தது போகச் சிறந்த போதனா முறைகள் தயாரிக்கப்படவேண்டும். இத்தனை துறைகளிலும் கற்பிக்கும் வேலைகளைச் செய்யத் தகுந்த முறையில் ஆசிரியப் பயிற்சி அமைப்புக்கள் நிறுவி இப்பொழுதுள்ள ஆசிரியப் பயிற்சிக் கூடங்களிலும் விரிவுகள் செய்யவேண்டும். இந்திய மொழிகளை மற்ற இந்திய மொழிகளின் மூலமாகப் போதிப்பதற்குரிய வழிகளை வகுப்பதற்கு அகில இந்திய அமைப்பு ஒன்று வேண்டும். இத்தகைய ஒரு அமைப்பை அமைப்பதற்குரிய தேவைகளைப் பற்றி “ தேசிய மொழித் திட்ட நிறைவேற்ற அமைப்புக்கள் ” என்ற பகுதியில் விரிவாகக் கூறியுள்ளோம்.

இசைத் தட்டுகளையும், ஒலிப்பதிவு யந்திரங்களையும் பிற இந்திய மொழிகளைக் கற்பிப்பதற்குரிய கருவிகளாகப் பயன் படுத்துதல் நலமுடையதாகும். இது பற்றி அதிகாரிகள் கவனிப்பார்கள் என்று கருதுகிறோம். மற்றவர்களுடைய இலக்கியம், பண்பாட்டு வழக்கங்கள் என்பவற்றை அறிவிப்பதற்கு அகில இந்திய ரேடியோ சிறந்த சாதனம். பீ.பீ. சீயில் வெளிநாட்டுக்காரர்களுக்கு ஆங்கிலம் போதிக்கும் முறையையொட்டிப் பல்வேறு இந்திய மொழிகளையும் அகில இந்திய ரேடியோ ஒலிபரப்பு மூலம் கற்பிக்கலாம். இவைபற்றி இன்னும் விரிவாக ஆராயப்படவேண்டும்.

பல்வேறு பிராந்தியங்களிலுள்ள கற்றறிந்தவர்களினிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள இலக்கியக் கழகங்கள் இன்னும் தமக்குள் நெருங்கிய முறையில் உறவு கொள்ளவேண்டும். ஒவ்வொரு பிராந்திய மொழிக்கும் சாகித்திய சம்மேளனத்தைப் போலப் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு இலக்கியக் கழகம் இருக்கிறது. அடுத்த பகுதியில் இந்திய மொழிகளின் தேசீயக் குழு அமைப்பது பற்றி நாங்கள் பேசும் பொழுது இக்கழகங்கள் கூடும் வகை பற்றிப் பேசியுள்ளோம். சாகித்திய சம்மேளனங்கள் அவற்றினுடைய சாதாரண, சிறப்புக் கூட்டங்களை மற்ற மொழிப் பிராந்தியங்களில் கூட்டுவதைக் கேள்விப்பட்டுள்ளோம். இவ்வாறு கூடும் பொழுது பொதுமக்கள் பயனடைவதைப் போலவே இந்தச் சம்மேளனத்தில் பங்கு கொள்பவர்களும் பயனடைவார்கள். ஆதலால் இன்னும் விரிந்த முறையில் இதனைச் செய்ய வேண்டிக்கொள்கிறோம்.

6. ஹிந்தி மொழியை வளர்க்கவும் வளம் படுத்தவும் பிராந்திய மொழிகளை வளர்க்கவும், யூனியன் அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கமும் செய்துள்ள வேலையைச் சுருக்கமாகக் காண்போம். இதில் சொல்லப்பட்ட மெய்மைகள் இந்தக் கழகத்தினருக்கு அதிகாரிகளால் தரப்பெற்றனவையாகும்.

கலைச் சொற்களின் ஆக்க வேலை பற்றிப் பிறிதோர் இடத்தில் குறிப்பிட்டுள்ளோம். ஹிந்தி மொழி, இலக்கியம் ஆகியவற்றை வளர்ப்பதற்கு யூனியன் அரசாங்கம் வேறு சில வழிகளையும் மேற்கொண்டுள்ளது. பல்வேறு துறைகளிலும் எழுதப்பெற்றுள்ள சிறந்த ஹிந்தி நூல்களுக்குப்

பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஹிந்திக் கலைக் களஞ்சியத்தைப் பத்துப் பகுதிகளாகத் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று அந்த வேலை காசி நாகரி பிரசாரிணி சபாவினிடம் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. புதிதாக ஹிந்தி கற்பவர்களுக்கு ஏற்ற முறையில் நூல்கள் எழுதும் வேலையும் சில காலமாக நடைபெற்று வருகிறது. குழந்தைகள் நூலகங்களுக்கு ஏற்ற ஹிந்திப் புத்தகங்களுக்கும் தயாராகின்றன. சாதாரண மக்களுக்குப் புரிகின்ற எளிய ஹிந்தியில் எழுதப்பெற்ற பொதுமக்கள் கலைக் களஞ்சியம் ஒன்றும், பல அகராதிகளும், இலக்கண நூல்களும் எழுதப்படுகின்றன. இலக்கியத் துறையில் நேஷனல் அகடமி ஆப் லெட்டர்ஸ் என்ற பெயருடன் இந்திய அரசாங்கத்தால் 1954-ம் வருஷம் மார்ச்சு மாதம் 12-ந் தேதி ஒன்று தொடங்கப் பெற்றது. இது " ஒரு தேசீய அமைப்பாக இருந்து இந்திய இலக்கியங்களின் வளர்ச்சிக்காகவும், இலக்கியங்களில் உயர்ந்த தரத்தை ஏற்படுத்துவதற்காகவும் இந்திய மொழிகள் பலவற்றுள்ளும், இந்திய ஒற்றுமையை வளர்க்கும் முறையில் இலக்கியங்கள் தோன்றுமாறு உதவுவது, " இதன் கடமையாகும். அரசாங்கத்தால் நிறுவப் பெற்றாலும் இந்த அகடமி தானே இயங்கும் ஒரு அமைப்பாகும். பல்கலைக் கழகங்களில் ஹிந்திப் பிரிவுகளை வளர்ப்பதற்குப் பொருளுதவி செய்யப்படுவதோடு பல்கலைக் கழகப் பண உதவிக் கழகத்தின் மூலமாக ஏனைய பிராந்திய மொழித் துறைகளை வளர்ப்பதற்கும் பண உதவி செய்யப்படுகிறது. யூனியன் அரசாங்கம் இத்துறையில் இதுவரையில் செய்துள்ள வேலைகளையும் ஹிந்தி மொழி வளர்ச்சிக்காகச் செய்துள்ளவற்றையும் பார்க்கும்பொழுது இத்துறையில் மிகக் குறைவான அளவே வேலை நடைபெற்றிருக்கிறது என்பது எங்களில் சிலருடைய கருத்தாகும்.

ஹிந்தி, பிராந்திய மொழிகளில் வளர்ச்சிக்குரிய வேலை, ராஜ்யங்களிலும் நடைபெற்று வருகிறது. உதாரணமாகச் சில ராஜ்யங்களில் இதுவரை செய்யப்பட்டுள்ள வேலையைக் கீழே குறிப்பிடுகிறோம்.

ஹிந்தி இலக்கியத்தை வளர்த்து, வளம் படுத்துவதற்காக உத்தரப் பிரதேச ராஜ்ய அரசாங்கம் 1947-ல் " ஹிந்தி இலக்கிய நிதி " என்ற பெயருடன் இலக்கிய கர்த்தாக்களுக்கும், சிறந்த நூல் எழுதுபவர்களுக்கும் உதவி செய்வதற்காக ஒரு நிதியை ஏற்படுத்தியுள்ளது. 1955-ம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து ஹிந்தி இலக்கிய வளர்ச்சிக்காக ஒரு " வெளியீட்டுத் திட்டத்தையும் " ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி இக்காலத்திலுள்ள புதுமையான விஷயங்கள் அனைத்தைப்பற்றியும் ஹிந்தியில் நூல்கள் தயாரிக்க ஏற்பாடாகியுள்ளது. இத்திட்டம் வருகின்ற ஐந்தாண்டுகளில் 300 புத்தகங்களை வெளியிடும். அவற்றுள் 100 மூல நூல்களாகவும், 100 சிறந்த இலக்கியங்களின் மொழிபெயர்ப்புகளாகவும், அடுத்த 100 பொது விஷயங்கள் பற்றிய நூல்களாகவும் இருக்கும். இந்தத் திட்டம் முழுவதற்கும் 25 லட்சம் செலவு செய்யப்படுகிறது. சிறந்த குழந்தை இக்கியத்தையும் ஹிந்தி மொழியில் ஏற்படுத்த முடிவு செய்து இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 60 புத்தகங்களை வெளியிடக் கருதியுள்ளார்கள்.

மத்திய பிரதேச அரசாங்கம் ஹிந்தி மராத்தி எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முறையில் பரிசு முதலியன தந்து முதல் நூல்களும் மொழிபெயர்ப்பு நூல்களும் இவ்விரண்டு மொழியிலும் மிகுதியாக வருவதற்காக " ஷாசன் சாஹித்திய பரிஷத் " என்ற பெயரில் ஒரு அமைப்பைத் தொடங்கியுள்ளது. மொழிபெயர்ப்பு முறையில் ஏனைய ஹிந்தி இந்திய மொழிகளுலுள்ள சிறந்த நூல்களையும் உலகத்திலுள்ள சிறந்த மொழிகளுலுள்ள முக்கியமான நூல்களையும் மொழிபெயர்க்க ஏற்பாடு செய்வதுடன் இலக்கிய மாநாடுகள், கூட்டங்கள் முதலியவற்றை ஏற்பாடு செய்வதற்கும் இந்த அமைப்பு பொறுப்பேற்றுக்கொள்கிறது. குறையாத தன்மையுடைய ஒரு லக்ஷ ரூபாய் நிதியை இந்தக் காரியங்களுக்காக 1953-54-ல் ஏற்படுத்தினார்கள். ஆண்டு தோறும் இந்த நிதியில் ஒரு லக்ஷ ரூபாயைச் சேர்த்து விடுகிறார்கள். நாக்பூர் பல்கலைக் கழகம் படிப்படியாக ஹிந்தி

மராத்தி ஆகிய் இரண்டையும் போதனு மொழிகளாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருத்தலின் மத்தியப் பிரதேச அரசாங்கம் விஞ்ஞானக் கலைச் சொற்களை இவர்களுக்குத் தயாரித்துத் தரவும் தேவைப்பட்ட பாடப் புத்தகங்களை ஏற்படுத்தித்தரவும் முயன்று வருகிறது.

ஹிந்தி மொழியைப் பரப்பவும் அதனுடைய இலக்கியத்தை வளம் படுத்தவும் பீஹார் அரசாங்கம் " பீஹார் ராஷ்டிர பாஷா பரிஷத் " தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் செய்யும் வேலைகளுக்குப் புறம்பாகப் பல்வேறு வகைப்பட்ட தனி அமைப்புக்கள் ஹிந்தி மொழியின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றன. ஏனைய பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு, மிகுதியாகவோ குறைவாகவோ, பல்வேறு அமைப்புக்கள் பாடுபடுவதைப் போலவே இதுவும் நடைபெற்று வருகிறது. 1893-ல் காசியில் ஏற்படுத்தப் பட்ட காசி நாகரி பிரசாரிணி சபா, ஹிந்தி மொழியை வளர்ப்பதற்காகப் பழைய ஹிந்தி நூல்களைப் புதுமுறைப் பதிப்புக்களில் வெளியிடவும் எந்த விஷயங்கள்பற்றி ஹிந்தியில் நூல்கள் இல்லையோ அந்த விஷயங்கள் பற்றிப் புதிய நூல்கள் எழுதவும் ஏற்பட்டது. இதுவரை அந்த அமைப்பு, ஹிந்தி சப்த சாகர் என்ற நூல் உள்பட 400 ஹிந்தி நூல்களை வெளி யிட்டுள்ளது. 1910-ல் அலகாபாத்தில் தோற்றுவிக்கப்பட்ட ஹிந்தி சாஹித் திய சம்மேளனம் ஹிந்தியில் வெளிவந்த சிறந்த இலக்கியங்களுக்குப் பரிசு வழங்குவதுடன் பல்வேறு பரிட்சைகளையும் நடத்துகிறது. காசியி லுள்ள காசி வித்யா பீட், சரித்திரம், பொருளாதாரம், சமுதாயம், தத்துவ சாத்திரம், மனோதத்துவம் ஆகிய விஷயங்கள் பற்றி உயர்ந்த நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ளது. அலகாபாத்தில் உத்திர பிரதேச அரசாங்கத்தார் 1927-ல் நிறுவப்பெற்ற ஹிந்திஸ்தானி அகாடமி, ஹிந்தி, உருது இலக்கியங்களை வளர்த்துப் பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளது. 1942-ல் அலகாபாத்தில் தோற்றுவிக்கப்பெற்ற ஹிந்திஸ்தானி கல்ச்சர் சொஸைட்டி பெயரையும் இங்குக் குறிப்பிடப்படலாம். 1914-ல் அலகாபாத் தில் நிறுவப்பட்ட விஞ்ஞான் பரிஷித்தின் பெயரும் அது வெளியிட்ட பல விஞ்ஞான நூல்களுக்காக இங்குக் குறிப்பிடப்படலாம். 1942-ம் அலகா பாத்தில் நிறுவப்பெற்ற பாரதிய ஹிந்திப் பரிஷித் ஏனையவற்றோடு விரி வான முறையில் விஞ்ஞானக் கலைச் சொற்களைக்கொண்ட ஒரு ஹிந்தி ஆங்கில அகராதியை வெளியிட்டுள்ளது. மேலும் இந்த அமைப்பின் மூலமே ஹிந்தி போதிக்கின்ற ஆசிரியர்களும் ஹிந்தி மூலம் ஏனைய பாடங் களைப் போதிக்கின்ற ஆசிரியர்களும் கூடித் தங்கள் கருத்துக்களை விவாதம் செய்துகொள்கிறார்கள்.

ஆங்கிலத்திலும் ஏனைய ஐரோப்பிய மொழிகளிலும் வெளிவந்துள்ள விஞ்ஞான நூல்களை ஹிந்தியிலும் பஞ்சாபியிலும் நல்லமுறையில் மொழி பெயர்ப்பதற்காக ஒரு மொழிபெயர்ப்பு அமைப்பை பஞ்சாப் அரசாங்கம்[1] நியமித்தது. மேலும் 1955-ம் விஞ்ஞானக் கலைக் சொற்களை ஹிந்தியிலும் பஞ்சாபியிலும் மொழிபெயர்ப்பதற்காக ஒரு இலாகாவை ஏற்படுத்தியது. இதனுடன் ஹிந்தி பஞ்சாபி மொழிகளில் முக்கியமான நூல்களை வெளி யிடுவதற்காகவும் ஒரு இலகாவை ஏற்படுத்தியுள்ளது. இது செய்த வேலைகளுள் " பஞ்சாபி மொழி அகராதி " " பஞ்சாபி எழுத்துக்களின் வரலாறு " என்பவை முக்கியமானவை.

பஞ்சாபியில் பயனுள்ள இலக்கியங்களை வெளியிட ஓராண்டுக்கு முன்னர் பஞ்சாபி சாஹித்திய அகாடமி ஏற்படுத்தப்பட்டது.

---

[1] பல்வேறு ராஜ்யங்களிலும் அவற்றின் பிராந்திய மொழிகளை வளர்ப்பதற்குச் செய்யப் படும் முயற்சிகளை எடுததுக் காட்டவே இது இங்கே சொல்லப்படுகிறது. எல்லாவற்றையும் இங்கே காட்டியதாகக் கொள்ளவேண்டாம். (இந்தக் கழகத்துக்குக் கிடைத்த தகவல்களை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளோம்.) இந்த ராஜ்யங்களிலேயேகூட இங்கே குறிப்பிடப்படாத பல அமைப்புகள் வேலை செய்யவும்கூடும்.

சென்ற 150 வருஷங்களில் மராத்தி இதழ்களில் வெளியான கட்டுரைகளுக்கு ஒரு முதற் குறிப்பு அகராதி தயார் செய்யுமாறு பம்பாய் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஏற்பாட்டின்படி ஒரு பகுதி வெளி வந்துவிட்டதாகவும் இரண்டாவது பகுதி தயாராவதாகவும் தெரிகிறது.

பம்பாய் அரசாங்கம் அதனுடைய பிராந்திய மொழிகளாகிய குஜராத்தி, மராத்தி, கன்னடம் ஆகிய மூன்றிலும் அடிப்படைச் சொற்களைத் தயார் செய்யுமாறு அந்த மொழிகளின் சாஹித்திய பரிஷத்களைக் கேட்டுள்ளது. முதல் இரண்டு மொழிகளைப் பற்றிய வேலை முடிந்துவிட்டது. கன்னடம் பற்றி இன்னும் தொடங்கப்படவில்லை.

இந்த மூன்று பிராந்திய மொழிகளிலும் குழந்தை இலக்கியம் தயாரித்து வெளியிடும் பிரச்னையை ஆராய ஒரு குழுவை நியமித்துள்ளது.

அரசாங்கத்தைத் தவிரச் சொந்த முறையில் இயங்கும் அமைப்புக்களும் பயனுள்ள வேலைகளைச் செய்துள்ளன. சென்ற 12 வருஷங்களாக மஹாராஷ்டிர சாஹித்திய பரிஷத் மராத்தியில் விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைச் சொற்களைத் தயாரித்து வருகிறது. ஏழு பகுதிகளாக மராத்திய இலக்கிய வரலாற்றை வெளியிட ஏற்பாடு செய்து வருகிறது. பூனாவிலுள்ள பிரசாத் பிரக்ஷன் 6 பகுதிகளில் சுலப "விஷ்வ கோஷாவை" (கலைக் களஞ்சியம்) வெளியிட்டுள்ளது.

பல்கலைக் கழகப் பரிட்சைகட்கு ஏற்ற பாட புத்தகங்களை தயாரிப்பதற்காகப் பூனா பல்கலைக் கழகம் வருஷந்தோறும் ரூபாய் 50,000 ஒதுக்கியுள்ளது.

குஜராத் பல்கலை கழகம் குஜராத் வித்யாபீட்டும் விஞ்ஞான தொழில் நுட்ப கலைச் சொற்களை ஏற்படுத்தும் வேலையை ஏற்றுக்கொண்டுள்ளன. குஜராத் வித்யா சபா ஏற்கனவே சிறிய கலைச்சொல் அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளது. வித்யாபீட்டும் பல அகராதிகளை வெளியிட்டதோடு இப்பொழுது குஜராத்தியில் கலைக்களஞ்சியத்தை வெளியிட திட்டமிடுகிறது. பழைய பரோடா ராஜ்யம் விஞ்ஞானப் பகுதிகளில் பல கலைக் சொற்களை குஜராத்தியில் வெளியிட்டுள்ளது. சௌராஷ்டராவிலுள்ள பழைய கோண்டால் ராஜ்யம் அகராதியாகவும் கலைக் களஞ்சியமாகவும் பயன்படும் 9 பகுதியாகவுள்ள நூலை "பகவத்-குமண்டால் கோஷ்" என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

மைசூர் பல்கலைக் கழகம் அதனுடைய வெளியீடாகிய "பிரபுத்த கர்நாடக" வில் பல்வேறு விஷயங்கள் பற்றிய கன்னடக் கலைச் சொற்களை வெளியிடுவதுடன் விஞ்ஞான விஷயங்களைப் பற்றியும் கன்னட மொழியில் நூல்கள் வெளியிடுகிறது.

மைசூர் அரசாங்கம் கன்னடக் கலைக் களஞ்சியத்தை வெளியிடத் திட்டமிடுகிறது.

ராஜ்ய மொழிகளில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஏற்ற விஞ்ஞானத் தொழில் நுட்பக் கலைச் சொற்களைத் தயாரிக்குமாறு சென்னை அரசாங்கம் 1940-ல் ஒரு குழுவை நியமித்தது. இக்குழு தயாரித்த கலைச் சொற்களே 1948–49 முதல் அந்த ராஜ்ய பள்ளிக்கூடங்களில் பயன்படுத்தப்பெற்று வருகின்றன. விஞ்ஞான விஷயங்கள் பற்றி எழுதப்படும் பாட புத்தகங்களுக்கு அரசாங்கம் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கின்றது.

10 பகுதிகளில் தமிழ்க் கலைக்களஞ்சியத்தை வெளியிட ஏற்றுக்கொண்டு தமிழ் வளர்ச்சிக் கழகம் மூன்று பகுதிகளை இதுவரையில் வெளியிட்டுள்ளது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஆட்சிச் சொல் அகராதி ஒன்றையும் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் 5,000 ஆட்சிச் சொற்களைக் கொண்ட பட்டியல் ஒன்றையும் வெளியிட்டுள்ளன.

1937-ல் கல்கத்தா பல்கலைக் கழகம் நியமித்த பரிபாஷா கமிட்டி வங்காளியில் பல விஞ்ஞான விஷயங்கள் பற்றி நூல்களை வெளியிட்டுள்ளது. அந்த பல்கலைக் கழக ஆட்சிக்குழு இவ்விஷயத்தை மேற்கொண்டு ஆராய மற்றொரு குழுவையும் சமீபத்தில் நியமித்துள்ளது. வங்காளியில் விஞ்ஞான தொழில் நுட்பக் கலைச் சொற்களைச் சேகரிப்பதற்கு வங்கிய விஞ்ஞான பரிஷத் முயலுகிறது. வங்கிய சாஹித்திய பரிஷத், வங்கிய விஞ்ஞான பரிஷத்தும் விஸ்வ பாரதியும் விஞ்ஞான விஷயமாகப் பல நூல்களை வெளியிட்டுள்ளன. வங்கிய சாஹித்திய பரிஷத் 22 பகுதிகளாகவும் கலைக் களஞ்சியத்தை வெளியிட்டுள்ளது.

ஒரியா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு, ஆட்சிச் சொல் அகர வரிசையில் முதல் பகுதியை ஏற்கனவே வெளியிட்டுள்ளது.

ஹிந்தி மொழியின் வளர்ச்சி மற்றப் பிராந்திய மொழிகளின் வளர்ச்சியோடு மாறுபட்டதன்று. உண்மையில் எந்த ஒரு இந்திய மொழி வளர்ச்சியடைந்தாலும் மற்ற இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு அது உதவியாகவே இருக்கும். இவை அனைத்தின் வளர்ச்சியும் ஒன்று சேர்ந்து நடைபெற வேண்டியவை. எங்கள் நிர்மாணக் கோரிக்கைகளின்படி யூனியன் மொழியாகவுள்ள ஹிந்தியை யூனியன் விவகாரங்கட்கும், அகில இந்தியத் தொடர்புகொள்வதற்கும், சட்டங்கள் இயற்றுவதற்கும், உயர் நீதி மன்றம், மிக உயர் நீதி மன்றம் ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கும் வழி வகுப்பதே எங்கள் வேலை. என்றாலும் ஏனைய மொழிகளைப் பற்றிக் கவனிப்பதும் ஹிந்தி மொழியின் வளர்ச்சி ஏனைய பிராந்திய மொழிகளின் வளர்ச்சியோடு பெரிதும் தொடர்ப்பு கொண்டிருப்பதால் தேசீய மொழிக் கொள்கையை நிறைவேற்றும்பொழுது ஹிந்தியோடு ஏனைய மொழிகளையும் வளர்ச்சியடையச் செய்யவேண்டுமாதலால் நாங்கள் இவற்றையும் கவனித்துள்ளோம்.

யூனியன், ராஜ்ய அரசாங்கங்களின் ஹிந்தி, பிராந்திய மொழிகளின் வளர்ச்சியைக் கருதுகின்ற, தாமே இயங்கும் அமைப்புகளின் சிறந்த வேலையைப்பற்றி நினைவு தோன்றியுள்ளது. இந்தியாவிலுள்ள வளம்பட்ட பல்வேறு பண்பாடுகளைப் போலவே வளமுடைய பல்வேறு மொழிகளும் இருந்து வருகின்றன. மொழியியல், மொழிநூல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சிகள் நடத்தவேண்டுமேயானால் இந்தியாவில் கிடைப்பது போல உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு மூலப் பொருள்கள் கிடைக்கமாட்டா. இதுபற்றிய பெரும் பகுதி வேலை இன்னும் நடைபெறவில்லை. அத்தகைய வேலைகளுள் சிலவற்றை இங்கே குறிக்கிறோம். ஒவ்வொருஇந்திய மொழியிலுமுள்ள சிறந்த இலக்கியங்களை ஏனையமொழிகளில் மொழிபெயர்த்தல்: வரிசைப்படுத்தப்பட்ட[1] அடிப்படைச் சொற்களை ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் தயாரித்தல், இலக்கணம், சொல்லாட்சி, தனிப்பட்ட சொற்கள் ஆகியவற்றில் பல்வேறு இந்திய மொழிகளின் இடையேயுமுள்ள ஒற்றுமை, ஒருமைத் தன்மைகளை வெளியிடுதல்: பல்வேறு மொழிகளிலுமுள்ள மதிப்புடைய ஏடுகளைச் சேகரித்து வெளியிடுதல் முதலியனவாம். இவற்றுள் சில கல்வித் துறை அளவில் பயன்படும் என்றாலும் ஒரு சில தேசிய மொழிக் கொள்கையின் முன்னேற்றத்துக்ம் உதவக்கூடும். இவற்றைச் செய்வதால் ஏற்படுகின்ற அறிவு வளர்ச்சி ஒருபுறமிருக்கப் பல்வேறு மொழிகளைப் பொறுத்தமட்டில் இவற்றைச் செய்வதால் நாட்டின் பலபடியான பண்பாட்டு வரலாற்றையும் அறிந்து வளர்க்க இது உதவும். ஆதலால் இந்த ஆராய்ச்சி யூனியன், ராஜ்ய அரசாங்கங்களால் ஊக்கப்படவேண்டியவை.

---

[1] ஹிந்தி சிக்ஷா சமிதி இரண்டு உட்குழுக்களை நியமித்து 2,000 அடிப்படை ஹிந்திச் சொற்களைத் தயாரித்து அவற்றை ஆரம்பப் பாடபுத்தகங்களில் பயன்படுத்தவும் 500 அடிப்படைச் சொற்களை ஹிந்தியில் தயாரிக்கவும் ஏற்பாடு செய்துள்ளது. இவற்றை அறிந்தால் குறைந்த அளவு ஹிந்தி அறிவு பெற்றதாகக் கருதப்படும்.

இப்பொழுது வழங்கப்படும் பிராந்திய மொழிகளில்லாமல் வட மொழி, பாலி, பிராகிருதம், அபப்பிரம்மம் ஆகிய மொழிகளிலும் நிறைந்த அளவு வேலை செய்யப்படவேண்டியுள்ளது, என்பது சொல்லத் தேவையில்லை. முக்கியமாக, வட மொழியும் ஏனையப் பழைய மொழிகளும் இன்றுள்ள இந்திய மொழிகளை ஓரளவுக்குப் பாதித்துள்ளன. எனவே இவற்றைக் கற்பது இன்றுள்ள பேச்சு முறைகளை ஆராய்வதற்குப் பெரிதும் பயன்படும். வடமொழிப் படிப்பை முறையான அடிப்படையில் அமைப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது என்று அறிகிறோம். மொழியியல் அமைப்பொன்றை ஏற்படுத்தி அதனுடைய பல்வேறு வேலைகளுடன் இம்மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்று அறிகிறோம்.

அரசாங்கம் நேஷனல் புக் டிரஸ்ட் ஒன்றை ஏற்படுத்திச் சிறந்த புத்தகங்களை எளிய விலைக்குக் கிடைக்கமாறு எல்லா மொழிகளிலும் ஏற்படுத்த போவதாக அறிகின்றோம். 6-வது பகுதியில் நாங்கள் குறிப்பிட்டுள்ளபடி மேற்கோள் இலக்கியங்களையும் அதுபோன்ற ஏனைய இலக்கியங்களையும் வெளியிட்டால் பல்வேறு மொழிப் பிராந்தியங்களிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு வசதி ஏற்படுமாதலால் இவ்வாறு வெளியிடும் அமைப்புப் பலராலும் போற்றப்படும் என்று கருதுகிறோம்.

7. இந்தியாவிலுள்ள இடைநிலை மொழிகள் பலவாக இருப்பது அவமானமாகக் கருதப்பட்டு மறைக்கப்பட வேண்டியதில்லை. இந்த நாட்டின் விஸ்தீரணத்தை நோக்க, நம்முடைய பழைய வரலாற்றையும் பல்வேறுபட்ட பண்பாடுகளையும் வாங்கிச் சீரணித்து ஒன்றுக வெளியிடக்கூடிய முறையில் இவை அமைந்துள்ளன. இது பற்றி நாம் கர்வம் கொள்வதில் தவறில்லை.

இதுவரைக் கல்வித் துறையிலுள்ள புலவர்களால்மட்டுமே செய்யப்பெற்று வந்த மொழியியல் ஆராய்ச்சிகள் இப்பொழுது நாட்டின் சூழ்நிலைக்கு ஏதோ தேவையுள்ளதாகவே இருக்கிறது. இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளிடையே யுள்ள ஒருமைப் பாட்டினை வளர்க்கவும் பண்பாடுகள் அரசியல் வாதங்கள் ஆகியவற்றினிடையேயுள்ள வேறுபாடுகளை நீக்கி ஒருமைப்பாட்டை உண்டாக்குகின்ற ஒரு சந்தர்ப்பம், இந்திய மொழியியல்காரர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. வரலாற்றின் வேறு எந்தப் பகுதியிலும் மொழியியல்காரர்களுக்கும் மொழி நூல்காரர்களுக்கும் இத்தகைய ஒரு பெரிய கடமை வந்ததே இல்லை.

இந்திய எழுத்துக்களைத் தரப்படுத்துதல்.

8. இந்தப் பிரிவில் இந்திய எழுத்துக்களைத் தரப்படுத்தும் பிரச்னையை ஆராயப் போகிறோம். அதாவது இந்திய மொழிகள் அவ்வவற்றிற்குரிய வரிவடிவத்தோடு இப்பொழுது எழுதப்படுவதைவிட்டு எல்லா மொழிகளுக்கும் பொதுவான ஒரு வரிவடிவில் எழுதப்பட முடியுமா என்பதை ஆராயப் போகிறோம். தேவநாகரி எழுத்தைச் **சீர்திருத்தம்** செய்கின்ற முயற்சிக்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. யூனியன் ஆட்சிமொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹிந்தி மொழி தேவநாகரி எழுத்தில் எழுதப்படுகிறது. தற்காலத்திலுள்ள அச்சு வேலை, தட்டெழுத்து, தொலை எழுத்து ஆகியவற்றின் வசதிக்கேற்ப இந்தத் தேவநாகரி எழுத்துக்களில் சில சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்றன. இந்தப் பகுதியின் மற்றொரு பிரிவில் அதைப் பற்றிப் பேசியுள்ளோம்.

இந்திய மொழிகளினிடையேயுள்ள அடிப்படையான பொதுத் தன்மையையும் ஒற்றுமைத்தன்மையையும் மேலேயுள்ள பல பொருள்கள்

மறைத்திருப்பதுபோலப் பல்வேறு நூற்றாண்டுகளில் நாட்டின் பலபாகங்களிலும் அந்தந்த மொழிகளை எழுதுவதற்காக வேண்டித் தோன்றிய எழுத்துக்கள் நாளாவட்டத்தில் இந்திய எழுத்துக்களின் அடிப்படை ஒற்றுமையை மறைத்துவிட்டன.

மனித வளர்ச்சியின் ஏதோ ஒரு காலத்தில் சொற்களை எழுதும் வழக்கம் ஏற்பட்டது. அங்ஙனம் எழுதும்பொழுது குறிப்பிட்ட ஒலிகளையும ஒலியியல் மதிப்புகளையும் குறிப்பிட்ட அடையாளங்களால் தெரியப்படுத்தினார்கள். பொம்மை எழுத்துக்களாகத் தொடங்கிய எழுத்து முறைகள், இத்தகைய வரிவடிவு எழுத்துக்களைக் கண்டவுடன் இதனுடைய அபூர்வ வன்மையைக் கருதி இம்முறைக்கு மாறிவிட்டது. நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை வரிவடிவில் எழுதிய மிகப் பழைமையான எழுத்து முறை போனிஷியன் எழுத்துக்களாகும், என்று கூறினார்கள். மேலும் உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் உள்ள எழுத்து முறை போனிஷிய எழுத்து முறையிலிருந்தே தோன்றிற்று என்றும் நம்பப் படுகிறது. இது எவ்வாறாயினும் பழைய இந்தியாவில் " பிராமி " எழுத்து முறை " கரோஷ்டி " எழுத்து முறை என இரண்டு முறைகள் இருந்துள்ளன. இரண்டாவது சொல்லிய முறை இந்நாட்டின் வடமேற்குப் பகுதிகளிலேயே இருந்து வந்தது. மூன்றாவது ஒரு வகை " வட்டெழுத்து " என்பதிலிருந்து தென்னிந்தியாவில் தோன்றியதாகவும் சொல்லப்பட்டு மேலே கூறிய இரண்டையும் அல்லாமல் இது தனியே வளர்ந்தது என்றும் அறிஞர்களால் சொல்லப்படுகிறது. இந்திய மொழிகளிலுள்ள எல்லா எழுத்துக்களும் பிராமி எழுத்து முறையிலிருந்து பிறந்தன. சிந்துநதிப் பள்ளத்தாக்கு எழுத்துக்கள் இன்னும் நன்கு அறியப்பட்டு பொருள் செய்யப்பட்டால், இதனோடு அது சமகாலத்ததா அல்லது முன்னரே வளர்ந்ததா என்பதையும் எல்லா எழுத்துக்களும் போனிஷ் எழுத்துக்களிலிருந்துதான் தோன்றினவா என்பதையும் ஆராய்ந்து முடிவுகட்ட முடியும்.

இது பற்றி முடிவாக எத்தகைய ஆராய்ச்சி வெளிப்பட்டாலும் இந்தியாவிலுள்ள பிராந்திய மொழி எழுத்துக்கள் ஒரு பொது இடத்திலிருந்து வந்தன என்பதற்கும் இவற்றினிடையே ஒரு பொதுத் தொடர்பு உள்ளது என்பதற்கும் எவ்வித ஐயமும் இல்லை. தமிழ் மொழி நீங்கலாக எல்லா இந்திய மொழி எழுத்துக்களும் ஒரே யளவு நெடுங்கணக்கைப் பெற்றுள்ளன. அதாவது உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை ஒன்றாகவே உள்ளது. இவற்றை எழுதும் முறையில் ஓரளவு மாறுபாடு இருப்பினும் கூட நெடுங் கணக்கு எழுத்து வரிசையும்கூட ஏறத்தாழ ஒன்றுதான். தமிழுலுங்கூட சில எழுத்துக்கள் இல்லாவிடினும் வரிசை முறை இதுவேதான். சில இந்திய மொழிகளில் அந்த மொழிகளுக்கே சிறப்பான சில குறியீடுகளும் உள்ளன. ஆனால் இந்த அதிகப்படியான குறியீடுகளின் எண்ணிக்கை அளவால் சிறியனவே. எழுத்துக்களின் குறியீடுகளும் இலக்கணங்களும் பல்வேறு மொழிகளில் இருப்பதைக் கொண்டு அவற்றினிடையேயுள்ள தொடர்பை அறிய முடியும். ஒரு அடிப்படையிலிருந்தே இம்மாறுபாடுகள் தோன்றியுள்ளன என்பதையும் கூற முடியும்[1]. அதாவது சில எழுத்துக்களில் வரிவடிவம் வளைந்த இயல்புடன் காணப்படுகிறது. இன்னும் சிலவற்றில் அழகான கையெழுத்து முறை வளர்ச்சி அடைந்தது. சிலவற்றில் எழுத்துக்களின் மேலேயுள்ள கோடு அதாவது " शिरोरेखा " வைத்துக் கொள்ளப்பட்டு, சிலவற்றில் ஒதுக்கியும் விடப்பட்டது. வேகமாக எழுதுவதற்காக இன்னும் சில மொழிகளில் இன்னும் சில மாறுபாடுகள் செய்யப்பட்டன. எந்த எந்தப் பொருள்களில், அதாவது பனை ஓலை, பார்ச்மெண்ட் போன்றவைகளில் எழுதுவதற்கேற்றமுறையில் எழுத்திலும் மாறுபாடுகள் ஏற்பட்டன. வாணிக, வியாபாரத்தொடர்பு காரணமாகவும் சரித்திரங் காரணமாகவும் அரசியல் குழப்பங்கள் காரணமாகவும், தனிப்பட்டவர்கள் விருப்பு வெறுப்புக் காரணமாகவும், எழுத்து முறையில் மாறுபாடுகள் ஏற்பட்டதுண்டு. இம்மாறு

---

[1] பிற்சேர்க்கை 14 காண்க.

பாடுகளே நாளாவட்டத்தில் தனிப்பட்ட வரிவடிவங்களாக மாறி ஒருவருக் கொருவர் புரிந்துகொள்ள முடியாத இன்றுள்ள எழுத்து முறைகளாக அமைந்து விட்டன. தற்கால விஞ்ஞான வளர்ச்சியில் இயந்திர சாதன அச்சு முறை வந்தவுடன், அப்பொழுது வழக்கில் இருந்த எழுத்துக்களின் வடிவங்களையே ஏற்றுக்கொண்டு விட்டது. இதன் பயனாக நாடு முழுவதி லும் அரசியல் அமைப்பின் 8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள ஏறத் தாழ 12 மொழிகளும், பல்வேறு வரிவடிவங்களைப் பெற்றுள்ளன.

9. இந்த வரிவடிவங்களுள் தேவநாகரி வடிவம் ஒரு தனியான இடத் தைப் பெற்றுள்ளது. பல காலமாக வடமொழி, ஹிந்தி ஆகிய மொழி களை எழுதப் பயன்பெற்ற இந்த தேவநாகரி வரிவடிவம் யூனியன் ஆட்சிமொழியாக உள்ள ஹிந்திக்கும் ஏற்றுக்கொள்ளப் பெற்றுள்ளது. ஹிந்தியை யல்லாமல் மராத்தி மொழியும் தேவநாகரி எழுத்துக்களிலேயே எழுதப்படுகின்றது. குஜராத்தி எழுத்துக்களும் தலைக்கோடு இல்லாத தேவநாகரியோடு மிகவும் நெருங்கியுள்ளது. குர்முகி, வங்காளி எழுத் துக்களும் தேவநாகரி எழுத்துக்களோடு மிகுதியாக ஒற்றுமை உடையன. இவற்றை அல்லாமல் வடமொழி எழுதுவதற்கும் தேவநாகரி பயன்பட்டது. தென் பகுதியில் வடமொழியை எழுத அவர்களுடைய பிராந்திய மொழிகளை விட்டுவிட்டு இதனையே பயன்படுத்தியுள்ளார்கள் இதனால் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளும் வரிவடிவில் தேவநாகரி எழுத் துக்களாலேயே பெரும்பான்மை எழுதப்படுகின்றன என்று தெரிகிறது. அதாவது இந்திய ஜனத்தொகையில் ஹிந்தி மொழி பேசுவோரின் எண் ணிக்கை மிகுதியாக இருப்பது போலவே இதுவும் உள்ளது. அப்படி யானால் இந்திய மொழிகள் அனைத்தையும் எழுதக்கூடிய ஒரு பொது எழுத்து முறை தேவை என்றால், எண்ணிக்கையைக் கொண்டு கணக்கு செய்வதனால். இந்திய எழுத்துக்களுள் தேவநாகரி எழுத்தே இந்த உரிமையைப் பெறவேண்டும்.

10. பல்வேறு இந்திய மொழிகளின் இடையேயுள்ள ஒப்புமையையும் உறவையும் ஆராய்ந்த பல பெரியவர்களும் அறிவாளிகளும் நாட்டிற்கு சுதந்திரம் வந்த பிறகு இந்தியா முழுவதற்கும் ஒரு பொதுவான இடை நிலை மொழியும் நாட்டின் எல்லா மொழிகளையும் எழுதும் பொதுவான ஓர் எழுத்து முறையும் தேவை என்று கருதி அதனை வெளியிட்டார்கள். உதாரணமாக, பொதுவான எழுத்து முறை தேவை என்பதைக் கண்டு இந்த கிளர்ச்சியை தொடங்கியவர் நடுவணர் சரச்சந்திரன் மித்ரா. அவர் இதற்காகச் செய்த அமைப்பின் பெயர் "ஏக் லிப்பி விஸ்தார் பரிஷத்" நடுவணர் சரச்சந்திர மித்ரா அலகாபாத்தில் 1910-ல் பொது எழுத்து மாநாடு கூட்டிய பொழுது நடுவணர் வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமை யுரை நிகழ்த்தினார். தம்முடைய காலத்தில் மிகச் சிறந்த சட்ட வல்லுந ராகவும் சிறந்த கல்விமானாகவும் வட மொழி அறிஞராகவும் இருந்த இவர் அகில இந்தியாவுக்கும் ஒரு பொது மொழி தேவை என்றும், பொது எழுத்துத் தேவை என்றும் தம் தலைமையுரையில் குறிப்பிட்டார். அவர்களுடைய தலைமை உரையிலிருந்து ஒரு பகுதியை இங்கே குறிப்பிடு கிறோம்:

> "இருபது எழுத்து முறைகள் உள்ள ஒரு நாட்டில் ஒரு பொது எழுத்து முறையை எதிர் பார்ப்பதும், 140 மொழிகள் பேசப்படும் ஒரு நாட்டில் ஒரு பொது மொழியை எதிர் பார்ப்பதும், இயலாதது போலவே தோன்றும். ஆனால் இந்தப் பிரச்னையை மிக உயர்ந்த நிலையிலிருந்து காணுகின்ற பெரியவர்கள் இன்று கனவு போலக் காணப்படுகின்ற ஒன்று நாளை எதிர்ப்பார்க்கப்படுகின்ற ஒன்றாக மாறி, நாளை மறுநாள் நடைபெறும் மெய்மையாகவே ஆகி விடுவதை அறிவார்கள். மேலும் கடவுளினுடைய அகராதியில் இயலாதது என்று ஒன்றும் இல்லை. (கேளுங்கள் கேளுங்கள்), இரு நூற்றுபத்தொன்பது மிலியன் மக்கள் இன்று இந்தோ-ஆரியக் கிளை

மொழிகளைப் பேசுகின்றார்கள். ஐம்பத்தாறு மிலியன் மக்கள் ஆரிய மொழியிலிருந்து வேறு பட்டதாகச் சொல்லப்படுகின்ற திராவிட மொழிகளைப் பேசுகின்றார்கள். நூற்று நாற்பத்தியேழு மொழிகளைப் பேசுகின்ற இவர்கள் அவர் அவர்களுடைய தாய்மொழியோடு மற்றொரு பொது மொழியையும் அறிந்துக்கொள்ள வேண்டும் என்று சொல்வது இத்தனை மொழிகளையும் அழித்துவிட வேண்டும் என்று சொல்வதாகாது. இவர்கள் அறிந்துள்ள பல்வேறு எழுத்து முறைகளோடு மற்றும் ஒரு பொது எழுத்து முறையையும் அறிந்துக் கொள்வதில் தவறில்லை. பல்வேறு எழுத்து முறைகளைக்கொண்டு இருப்பதனால் இன்று நமக்குள்ள அதிகப்படியான குறைப்பாட்டை நினைந்து பார்க்குமாறு உங்களை வேண்டிக்கொள்கிறேன். மொழிகள் வேறுபட்டனவாக இருப்பினும் எழுத்துக்கள் ஒன்றாக இருந்தால் இந்திய மொழிகளுள் பல ஆரிய அடிப்படையில் தோன்றிய காரணத்தால் ஒரு கூட்டத்தாரின் மொழியை மற்றொரு கூட்டத்தார் ஒரு சில வார்த்தைகளைக் கொண்டாவது புரிந்து கொள்ளமுடியும். ஒருவர் வீட்டினுள் பேசுகின்ற மொழி மாறுபட்டதாக இருப்பினும் இவ்வெழுத்து ஒற்றுமை காரணமாக ஒருவரையொருவர் புரிந்து கொள்ளமுடியும். பெரியோர்களே! இன்று நம்முடைய இந்திய மொழிகள் சிலவற்றில், சிறந்த எழுத்தாளர்கள் எழுதும்பொழுது இம் மொழிகள் எல்லாம் பழைய ஆரிய இலக்கியங்களோடு தொடர்புடையன என்பதை மனத்திற் கொண்டு பார்த்தால், ஒரு மொழியில் தோன்றுவது மற்றொரு மொழிக்குக் கிடைக்க வேண்டும் என்றே கருதுவோம். ஒரு பொது எழுத்து மொழி இருக்குமானால் அவை எவ்வளவு எளிதாக முடியும்? . . . . ஓர் இனத்தில் சமயக் கொள்கைக்கும் அதனுடைய எழுத்து முறைக்கும் எவ்வித மான தொடர்பும் இல்லை. எந்த எழுத்து முறையும் அந்த நாட்டு மக்களின் சமயத்தோடு என்றுமே தொடர் கொண்டுள்ளதாக நான் கருதவில்லை".

லோகமானிய திலகர் 1905-ல் காசியில் நாகரி பிரச்சாரிணி சபாவில் தேவநாகரி எழுத்தை இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளுக்கும் பொது எழுத்தாக ஆக்க வேண்டும் என்று கீழ்க் கண்டவாறு பேசினார் :—

"இந்தத் தொல்லையைப் போக்குவதற்கு (இந்திய மொழிகளை எழுதும் பல்வேறு எழுத்து முறைத் தொல்லை) ஒரு காலத்தில் ரோமன் எழுத்துக்களை நாம் மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லப் பட்டது. அதற்கு ஒரு காரணம் ஆசியா, ஐரோப்பா ஆகிய இரண் டிற்கும் அது பொதுவாக இருக்கும் என்று சொல்லப்பட்டது.

"பெரியோர்களே, இந்த முறை மிகவும் கேலிக்கிடமானதாக எனக்குத் தோன்றுகிறது. ரோமன் எழுத்துக்களும் நெடுங் கணக்கும் மிகவும் குறைபாடு உடையனவாகவும் நாம் பயன்படுத் தும் ஒலிகளைக் குறிக்கப் போதாதனவாகவும் உள்ளன. சில சமயங்களில் ஒரே எழுத்திற்கு மூன்று அல்லது நான்கு ஒலிகளும் இன்னும் சில சமயங்களில் ஒரே ஒலிக்கு இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களும் பயன்படுத்தப்படுகின்றன. இதனோடு அல்லாமல் நம்முடைய மொழிகளிலுள்ள ஒலிகளைக் குறிப்பதற்கு வேண்டு மான எழுத்துக்களைத் தேடுவதிலும் உள்ள எழுத்துக்களுக்குக் குறியீடுகள் போட்டு எழுதுவதையும் நினைத்துப் பார்த்தால் இந்த யோசனை எவ்வளவு நகைப்புக் கிடமானது என்று விளங்கும்.

"ஒரு பொது எழுத்து முறை தேவைப்பட்டால் ரோமன் எழுத்து முறையை விடச் சிறந்த ஒரு எழுத்து முறை தேவை என்பது நன்கு விளங்கும். ஐரோப்பிய வடமொழியினர்கள் ஐரோப்பா விலுள்ள எழுத்து முறையைக் காட்டிலும் தேவநாகரி எழுத்து

முறை சிறந்தது என்று கூறுகிறார்கள். இந்த முடிவை அறிந்து கொண்ட பிறகு கூட இந்தியாவிலுள்ள ஆரிய மொழிகளுக்கு ஒரு பொது எழுத்தைத் தேடி வெளியே செல்வது தற்கொலைக் கொப்பாகும். இன்னும் ஒரு படி மேலே சென்று பாணினி எழுத்துக்களை வகைப்படுத்திய முறையும் அவற்றிற்கு ஒலியைத் தந்த முறையும் உலகத்தில் வேறு எந்த மொழியிலும் இல்லை என்று கூடச் சொல்வேன். பல்வேறு வகையான ஒலிகளை வெளியிடுவதற்குத் தேவநாகரி எழுத்து முறை சிறந்தது என்று சொல்வதற்கு இதுவும் ஒரு காரணம். ‘சேக்ரட் புக்ஸ் ஆப் தி ஈஸ்ட்’ என்ற வரிசையில் வெளிவந்துள்ள நூல்களின் கடைசிப் பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு எழுத்துக்களைப் பார்த்தால் நான் சொல்லுவது பற்றி உங்களுக்கு நம்பிக்கை ஏற்படலாம். ஒரு எழுத்துக்கு ஒரு ஒலியும், ஒரு ஒலிக்கு ஒரு எழுத்துமே நம்மிடம் உண்டு. எனவே எந்த எழுத்து முறையை நாம் பயன்படுத்த வேண்டும் என்பது பற்றிச் சந்தேகம் இருப்பதற்கில்லை. பல்வேறு மாகாணங்களில் எழுத்துக்களின் வரிவடிவம், பல்வேறு வடிவையும், இயல்பையும் பெறுகின்றன. முன்னமே பழைமை பற்றி ஆராய்ச்சி செய்து, இதனை முடிவு செய்ய முடியாது என்று கூறியுள்ளேன்.”

இந்திய மொழிகளுக்குத் தேவநாகரி எழுத்துக்களைப் பயன் படுத்த வேண்டும் என்று மகாத்மா காந்தி சொல்லியது அனைவரும் அறிந்ததே. 1947-க்கு முன்னர் இருந்த சூழ்நிலையையும் ஒட்டி, இந்தியாவை இந்தியா என்றும் பாகிஸ்தான் என்றும் பிரித்த நிலையில் ஹிந்தி ஹிந்துஸ்தான் என்ற இரண்டையும் வளர்க்கும் முறையில் உருது எழுத்துக்களையும், தேவநாகரி எழுத்துக்களையும் பயன் படுத்த வேண்டும் என்று சொல்லிய அவர், பின்னர்ச் சொல்லப்பட்ட எழுத்துக்களை அகில இந்திய மொழிகளுக்கும் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னார். சென்னையில் நடைபெற்ற பாரதீய சாஹித்திய பரீஷத்தில் மகாத்மா காந்தி தம் தலைமை உரையில்[1] கீழ்வருமாறு குறிப்பிட்டார் :—

“ஒவ்வொருவரும் அவரவருடைய தாய் மொழியை நன்கு அறிந்திருப்பதோடு ஏனைய இந்திய மொழிகளிலுள்ள சிறந்த இலக்கியங்களையும், ஹிந்தி மொழியின் வாயிலாக அறிந்திருக்க வேண்டும். இந்த மாநாட்டின் நோக்கங்களுள் ஒன்று ஏனைய மாகாணங்களிலுள்ள மொழிகளைப்பற்றி அறிந்து கொள்ள மக்களைத் தூண்டுவதாகும். அதாவது குஜராத்திகள் தமிழையும், வங்காளிகள் குஜராத்தியையும் அறியவேண்டும். மற்றொரு இந்திய மொழியைக் கற்றுக்கொள்வது கடினமே அல்ல என்று என்னுடைய அனுபவத்திலிருந்து சொல்கிறேன். ஆனால் இவ்வாறு செய்வதற்கு ஒரு பொது எழுத்து முறை தேவை. இதனைத் தமிழ் நாட்டில் செய்வது மிகவும் எளிமையானது. இந்த எளிய உண்மையை கவனித்துப் பாருங்கள். நம்முடைய மக்களில் 90 சதவிகிதம் கல்வியறிவு இல்லாதவர்கள். அவர்களைப் பொறுத்தமட்டில் ஆதியிலிருந்தே நாம் தொடங்க வேண்டும். ஒரு பொது எழுத்து முறையைக் கொண்டே அவர்களைக் கற்றவர்களாக நாம் ஏன் ஆக்கக் கூடாது? ஐரோப்பாவில் பொது எழுத்து முறையை வெற்றிகரமாகக் கையாண்டுள்ளார்கள். ஐரோப்பாவிலுள்ள ரோமன் எழுத்து முறையை நாம் கையாள வேண்டும் என்று கூடச் சிலர் சொல்கிறார்கள். இது பற்றி நிறைந்த விவாதம் நடந்த பிறகு, தேவநாகரி எழுத்தைத் தவிர வேறு ஒன்றையும் பயன் படுத்தக் கூடாது என்ற ஒரு பொதுவான முடிவு ஏற்பட்டுள்ளது. இதற்குப் போட்டியாக உருது மொழி இருக்கிறது என்று சிலர் நினைத்தாலும்

[1] 1937-ம் ௵ ஏப்ரல் ௴ 3-ம் ௳ “ஹரிஜன்” காண்க,

தேவநாகரியில் இருப்பது போல எழுத்துக்களின் ஒலிச் சக்தி உருதுவிலும், ரோமனிலும் இல்லை. உங்களுடைய மொழிக்கு எதிராக நான் ஒன்றும் சொல்லவில்லை என்பதைத் தயவு செய்து நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவை இருந்து கொண்டேதான் இருக்கும். ஆனால் இப்பிராந்தியங்களிலுள்ள கல்வியறிவு இல்லாதவர்களுக்கு தேவநாகரி எழுத்துக்களின் மூலம் இந்த மொழிகளை ஏன் போதிக்கக்கூடாது? நாம் அடைய விரும்பும் தேசீய ஒற்றுமைக்காகத் தேவநாகரி எழுத்துக்களைப் பொது எழுத்தாக மேற்கொள்வது அவசியமாகிறது. இங்கே குறுகிய மாகாண மனப்பான்மையையும், குறுகிய மனப்பான்மையையும் விட்டுவிட வேண்டும் என்பது தவிர வேறு தொல்லை ஒன்றும் இல்லை. தமிழ் எழுத்துக்களையோ உருது எழுத்துக்களையோ எனக்குப்பிடிக்காது என்பது இல்லை. எனக்கு இரண்டுமே தெரியும். ஆனால் தாய் நாட்டுச் சேவை செய்வதை என்னுடைய வாழ்நாள் முழுவதும் குறிக்கோளாகக் கொண்டுள்ளேன். ஆதலின் அதில்லாமல் என் வாழ்வு பூர்த்தியடையாது. அந்த சேவை நம்முடைய மக்களின் மேல் சுமந்திருக்கும் அவசியமற்ற பாரத்தை எடுப்பதே ஆகும். பல்வேறு எழுத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய பாரம் அவசியமற்றதும் போக்கிவிடக் கூடியதுமாகும். எல்லா மாகாணங்களிலுமுள்ள கற்றறிந்த பெரியவர்களும், இது விஷயத்தில் தம் கருத்து வேறுபாட்டை நீக்கி இம்முக்கியமான விஷயத்தில் ஒற்றுமைப் படுவார்கள் என்று நினைக்கிறேன். அப்பொழுதுதான் பாரதீய சாஹித்திய பரிஷத் வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.”

மேலும் 1939 பிப்பரவரி 11-ந் தேதி “ஹரிஜனில்” அவர் கீழ்வருமாறு எழுதினார்:—

“விருப்பமும், விஞ்ஞானமும் கூட ரோமன் எழுத்துக்களுக்கு எதிராக உள்ளன. அதனுடைய ஒரே சௌகரியம் அச்சு எழுத்துக்கும், தட்டெழுத்துக்கும் அது வசதியாக இருக்கிறது என்பதுதான். ஆனால் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு ஏற்படப்போகும் தொல்லையை நினைக்க இது ஒரு பெரியகாரியமன்று. அவர்களுடைய சொந்த இலக்கியத்தை அவர்களுடைய மாகாண எழுத்திலோ தேவநாகரி எழுத்திலோ படிக்க வேண்டிய பல லக்ஷக்கணக்கான மக்களுக்கு இதனால் யாதொரு பயனும் இல்லை. தேவநாகரி எழுத்துக்களைக் கற்றுக்கொள்வது லக்ஷக்கணக்கான ஹிந்துக்களுக்கு எளிதாகும். முஸ்லீம்களுக்குக் கூட அவ்வாறே. ஏனென்றால் மாகாண எழுத்துக்கள் பெரும்பாலும் தேவநாகரியிலிருந்தே பெறப்பட்டவை ஆகும். ஆனால் ஹிந்துக்களாயினும், முஸ்லீம்களாயினும் லக்ஷகணக்கான மக்கள் ஆங்கிலம் கற்கவேண்டியிருந்தால் ஒழிய ரோமன் எழுத்துக்களை விரும்பமாட்டார்கள். அதேபோலத் தங்கள் சமய நூலைப்படிக்க விரும்புகின்ற ஹிந்துக்கள் தேவநாகரி எழுத்துக்களைக் கற்றுக்கொள்வார்கள். எனவே தேவநாகரி எழுத்துக்களைப் பரப்பும் கொள்கை நல்ல அடிப்படையில் தோன்றியதாகும். ரோமன் எழுத்து முறையைப் புகுத்துவது என்றும் பரவமுடியாத ஒருஅதிகப்படி பாரமாகும். எந்த அதிகப்படி பாரமும் பொது மக்கள்விழித்து எழும் பொழுது உதறி எறியப்படும். பலரும் எதிர்பார்க்கின்ற அறிந்த காரணங்களால், இது ஏற்படும் என்று எதிர்பார்க்கும் முன்பே, இது நடைபெற்றுவிடும்.”

1935-ல் ஹிந்தி சாஹித்திய சம்மேளனத்தில் இது பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி ஸ்ரீ காகா சாஹிப் கலேல்கரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளது :—

“பல்வேறு எழுத்து முறைகள், சகோதர மொழிகளைக் கற்றுக் கொள்வதையும், சகோதர மாகாணங்கள் ஹிந்தியைக் கற்றுக்

கொள்வதையும் அவசியமில்லாத பெரும்பாரமாக ஆக்கிவிட்டுள்ளது. எதிர்காலச் சந்ததிகளைப் பல்வேறு எழுத்து முறைகளைக் கற்றுக் கொள்ளவேண்டிய அனுவசியத் துயரத்திலிருந்து தடை செய்யலாம். மாகாண மொழிகளின் முக்கியத்துவம் இதனால் குறைந்துவிடும் என்று யாரும் நினைத்துவிட வேண்டா. உண்மையில் ஐரோப்பா விலுள்ள மொழிகள் பொது எழுத்து முறையைக் கையாண்டதால் முன்னேற்றமடைந்ததைப் போல இங்கேயும் முன்னேற்றம் தோன்றி மாகாணங்களுக்குள் உறவாடுதலை எளிதாக்கும்.

இந்திய மொழிகள் சிலவற்றை அவற்றின் எழுத்து முறையோடு கற்ற வர்கள் புதிய எழுத்து முறைகளைக் கற்பது எவ்வளவு கடினமானது என்பதை நன்கு அறிவர். நாட்டின் மேல் கொண்ட அன்பு காரணமாகப் பல்வேறு எழுத்து முறைகளையும் கற்றுக் கொள்வது அதிகத் தொல்லை என்றோ வீணில் செலவழித்த காலம் என்றோ யாரும் கருதவேண்டியதில்லை. ஆனால் நாட்டிலுள்ள லக்ஷக் கணக்கான மக்களும் இவ்வாறு நினைப்பார்கள் என்று சொல்ல முடியாது. தேசியத் தலைவர்கள் அவர்கட்கு எளிய முறைகளை அறிவிக்க வேண்டும். எனவே அகில இந்தியாவுக்கும் பொருந்தக் கூடிய ஓர் எழுத்து முறையைக் காணவேண்டியது அவசியமாகும். அவ்வாறானால் தயாரித்துள்ள தேவநாகரி எழுத்தைப்போல் வேறு எதுவும் அவ்வளவு பொருத்தமாக இல்லை."

ஒரு காலத்தில் தாம் ரோமன் எழுத்துக்களால் கவரப்பட்டதாக பண்டித ஜவர்லால் நேரு தம்முடைய சுய சரித்திரத்தில் குறிக்கிறார் :—

"துருக்கியிலும், மத்திய ஆசியாவிலும், அது பெற்ற வெற்றியால் மிகுதியும் கவரப்பட்ட நான் அதனை ஆமோதித்துச் சொல்லப்பட்ட வாதங்களில் உண்மை இருப்பதாகக் கருதினேன். அப்பொழுதும்கூட நான் முழுவதும் மனமொப்பிவிடவில்லை. அப்படி ஒப்பியிருந் தாலும் இன்றைய இந்தியாவில் அதற்கு ஒரு துளியளவுகூட சந்தர்ப்பம் இல்லை என்பதை நன்கு அறிவேன். இந்தியாவில் அதற்குத் தேசிய வாதிகள், சமய வாதிகள், ஹிந்து, முஸ்லீம், பழையவர் புதியவர் ஆகிய அனைவரிடத்திலிருந்தும் கடுமையான எதிர்ப்புத் தோன்றும். அந்த எதிர்ப்பு வெறும் உணர்ச்சியி லிருந்து மட்டும் தோன்றியது என்று நான் கருதவில்லை."

அவர் மேலும் சென்று கீழ்க் கண்டவாறு குறிக்கிறார் :—

"இந்தப் பிரச்னை ஆராய்ச்சி அளவில் கூட இன்று இந்தியாவில் இல்லை. எழுத்துச் சீர்திருத்தத்தில் அடுத்துள்ளபடி வட மொழி களில் மக்கள் மொழிகளாக உள்ள அனைத்திற்கும் ஒரு பொது எழுத்து முறையை ஏற்றுக் கொள்வதேயாகும். அவையாவன : ஹிந்தி, வங்காளி, மராத்தி, குஜராத்தி ஆகியவைகளாம். இன்றுள்ள நிலைமையில் இம்மொழிகளின் எழுத்துக்கள் ஒரே அடிப்படையிலிருந்து தோன்றி அதிகம் வேறுபாடு இல்லாமல் இருப்பதினால் ஒரு பொது முறையைக் காண்பது கடினமன்று. சகோதர மொழிகளாக உள்ள இந்த நான்கு பெரிய மொழிகளை யும் இது மிக அருகே கொண்டு வந்துவிடும்."

11. இந்திய மொழிகளுக்கு ரோமன் எழுத்துக்களைப் பொது எழுத் துக்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்பவர்கள் சிலர் உண்டு. இங்ஙனம் கூறுகின்றவர்கட்கு ஆதாரமாக இரண்டு வாதங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்றின்படி, உலகத்திலேயே மிகப் பலவான மொழி கள். சிறப்பாக ஐரோப்பாவிலுள்ள மொழிகள் ரோமன் எழுத்துக்களினு லேயே, அல்லது ஒரு சிறிது வேறுபட்ட வகைகளினாலேயே எழுதப்படு கின்றன என்பதாம். பிற்காலத்தில் துருக்கியும், மொழிச் சீர்திருத்த முறையில் ரோமன் எழுத்துக்களை ஏற்றுக் கொண்டது. சென்ற உலக

யுத்தத்தின் பிறகு இந்தோனேஷியா கூட மொழிப் பிரச்னையை ஆராய்ந்து அதனுடைய "பாஷா இந்தோனேஷியாவுக்கு" ரோமன் எழுத்துக்களை ஏற்றுக் கொள்ள முயன்று வருகிறது. இங்ஙனம் உலக மொழிகளுள் பலவற்றாலும் மேற்கொள்ளப்பட்ட ரோமன் எழுத்துக்களை மேற்கொள்வது உலகிலுள்ள வேறு மொழிகளைக் கற்கவேண்டிய அவசியமுள்ள இந்தியர்களுக்கு அந்த எழுத்துக்களை கற்றுக் கொண்டு காலம் போக்காதபடி நலம் பயக்கும். கட்டாய இலவச ஆரம்பக் கல்வி நிலைக்கப்பாலும், அதாவது 14 வயதுக்குப் பிறகும் பள்ளிப் படிப்பை விரும்புகின்ற மாணவர்களுக்கு இடைநிலைக் கல்விக் காலத்தில் ஆங்கிலக் கல்வியைப் போதிக்க வேண்டும் என்று நாங்களும் சொல்லியுள்ளோம். அப்படி இருப்பினும் கூட மேல் நாட்டு மொழி யொன்றைக் கற்கும் மாணவர்கட்கு இந்த ரோமன் எழுத்துக்களைக் கற்றுக் கொள்வதனால் ஏற்படும் கால மிச்சத்தையும் மிக அதிகப்படியான மாணவர்கள் அகில இந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ளும்பொழுது தேவநாகரி மூலம் கற்றுக் கொள்வதால் ஏற்படும் கால மிச்சத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் பின்னது மிக அதிகப் படியானதாக இருக்கும்.

கற்றுக் கொள்ளப்படும் மொழிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருக்கும்பொழுது பொது எழுத்து முறை மிகுதியும் உதவி செய்கிறது. முற்றிலும் வெளி நாட்டு மொழி ஒன்றைக் கற்கும்பொழுது, அதனுடைய சொற்கள், மரபுகள், சொல்லாட்சிகள், கருத்துக்களைத் தெரிவிக்கும் விதம் என்பவற்றை, அந்த மொழிக்கு முற்றிலும் புறம்பான ஒருவர் கற்றுக் கொள்ளும் பொழுது அந்த மொழியின் எழுத்தைக் கற்கும் காலம் மிகச் சுருங்கியதேயாகும். இம்மொழிகள் தொடர்புடையனவாக இருக்கும்பொழுது இதில் செலவழிக்கப்படுகின்ற சக்தி, மொத்த சக்தியில் பெரும் பங்காகும். ஒரு புது மொழியை கற்கத் தொடங்கும் பொழுது ஏற்படுகின்ற ஒரு அனுபவம் துன்பத்தைத் தருவதொன்றாகும். இந்தப் பயிற்சியின் தொடக்கத்திலேயே எழுத்தைக் கற்றுக்கொள்கின்ற தொல்லை இல்லாமல் போகுமேயானால் ஒரு இந்தியன் மற்றொரு இந்திய மொழியைக் கற்றுக் கொள்ளும்பொழுது மிகுதியான சௌகரியத்தை உண்டாக்கும். இதனால்தான் மகாத்மா காந்தி எல்லா இந்திய மொழிகளுக்கும் பொதுவாகத் தேவநாகரி எழுத்து முறை இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்.

தேவநாகரி எழுத்துக்களுக்கு விரோதமாகவும், ரோமன் எழுத்துக்கு சாதகமாகவும் சொல்லப்படுகின்ற இரண்டாவது காரணத்தை ஆராய்ந்து பார்த்தால் அது தேவநாகரி எழுத்துக்கு சாதகமாகவும் ரோமன் எழுத்துக்கு பாதகமாகவும் இருக்கிறது என்பது விளங்கும். அதாவது ரோமன் எழுத்துக்கள் குறைவான வரிவடிவுகளைப் பெற்றிருப்பதால் அச்சு, தட்டெழுத்து முதலியவற்றிற்கு அதனை ஏற்றுக்கொள்வதனால் அதிக நன்மை உண்டு என்று பேசப்படுகிறது. தேவநாகரி எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்து இந்த நவீன கருவிகளுக்கு ஏற்பச் சீர் செய்வது பற்றி அடுத்த பகுதியில் பேசப்பட்டுள்ளது. அதனை முற்கூட்டிச் சொல்ல வேண்டுமேயானால் தட்டெழுத்து யந்திரங்களுக்கு ஏற்றமுறையிலும், அச்சு சாதனங்களுக்கு ஏற்ற முறையிலும் தேவநாகரி எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்ய முடியும் என்று சொல்லிவிடலாம். அந்தப் பகுதியில் தட்டெழுத்து யந்திரத்தில் தேவநாகரி எழுத்துக்களை விரைவாக அடிக்க முடியாது என்ற வாதத்திற்கும் விடையளித்துள்ளோம். இப்படிப்பட்ட சிறு குறைபாடுகளைக் குறைபாடுகள் என்றே நாங்கள் கருதவில்லை. ஆனாலும், எந்த எழுத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற பெரிய பிரச்னையை ஆராயும்பொழுது அது பெரிதாகப்படுவதில்லை. அச்சு சாதனங்களிலும், தேவநாகரி எழுத்தை அச்சடிப்பவர்கள் ஒரே வேலைக்குப் பல்வேறு வகைப்பட்ட நிறைந்த அளவுள்ள எழுத்துக்களை வைத்திருக்க வேண்டியுள்ளது என்று சொல்வதும் இப்பிரச்னையை நோக்கச் சிறிதாகவே கருதப்படும். இந்திய மொழிகளை ரோமன் எழுத்துக்களில் எழுதுவதில் உண்டான கஷ்டம் மிக முக்கிய

மானதும் கவனிக்கவேண்டியதும் ஆகும். இந்திய மொழிகளிலுள்ள ஒலி வேறுபாடுகளை எல்லாம் குறைந்த எழுத்துக்களையுடைய ரோமன் எழுத்துக்களில் அதிகப்படியான குறியீடுகளை உபயோகப்படுத்தினால் ஒழிய எழுதவே முடியாது. இந்தக் குறியீடுகள் அழிந்து போகாதபடி சேர்க்கப் பட்டால் குறைந்த எழுத்துக்கள் உள்ளன என்ற வாதம் அடிபட்டுப் போய் விடும். அவ்வாறில்லாமல் சிறு புள்ளிகளை அங்கும் இங்கும் எழுத்துக் களில் சேர்த்துப் பல்வேறு ஒலி வேறுபாடுகளையும் உண்டாக்கலாம் என்றால் அது பர்சிய மொழியிலுள்ள "நுக்தாஸ்" போல மாறிவிடக் கூடிய நிலைமை அடைந்துவிடும். மேலும் இந்திய மொழிகளை ரோமன் எழுத்துக் களில் எழுதினால் நாளாவட்டத்தில் இம்மொழிகளின் உச்சரிப்பு முறை கெட்டுவிடும் என்று சிலர் அஞ்சுவது நியாயமான அச்சமே என்று நாங்கள் கருதுகிறோம். இவற்றையெல்லாம் ஆராயும்பொழுது இந்திய மொழி களுக்கு ரோமன் எழுத்துக்களைக் கையாள்வதினால் எந்த விதமான சிறப் பான லாபமும் ஏற்படும் என்று நாங்கள் கருதவில்லை. 1947-ல் இந்தியா என்றும், பாகிஸ்தானம் என்றும் பிரிவினை ஏற்படுவதற்கு முன்னர் உருது மொழிக்குள்ள பர்சிய எழுத்துக்களுக்கும், ஹிந்தி மொழியிலுள்ள தேவநாகரி எழுத்துக்களுக்கும் நடுவு நிலைமையாக ரோமன் எழுத்துக்களை கையாளவேண்டும் என்று சொல்லப்பட்டு வந்தது. 1950-ல் அரசியலமைப்பு தொடங்கப்பட்டு யூனியன் மொழியாகிய ஹிந்தி மொழி தேவநாகரி எழுத் துக்களில் எழுதப்பட வேண்டும் என்று சொல்லி இந்த வாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அகில இந்திய மொழிகளுக்கும் ஒரே எழுத்துத் தேவை என்றால் ஏனையவை அனைத்தையும் விட தேவநாகரி எழுத்துக்களின் உரிமை சந்தேகமில்லாமல் மிகப் பெரியது என்றே கருது கிறோம்.

தேவநாகரி எழுத்து முறையையும், மற்றைய இந்திய எழுத்து முறை யையும் அடிப்படையாகக் கொண்ட இந்திய ஒலியியல் முறை உலக ஒலி யியல் முறையோடு ஒப்பு நோக்கும் பொழுது, அதனுடைய விரிந்த இயல் பாலும், விஞ்ஞான முறைப்படி அடுக்கப்பட்டுள்ள எழுத்து முறையாலும் உயிரெழுத்துக்கும், மெய்யெழுத்துக்கும் உள்ள வேறுபாட்டாலும் இவற் றைச் செவ்விய முறையில் சேர்த்துப் பல்வேறு ஒலிகளை உண்டாக்கும் முறையாலும், அந்த உலக ஒலியியல் முறையில் இந்திய முறை மிக உயர்ந்த இடத்தைப் பெறுகிறது என்று சொல்லலாம். மனிதனுடைய பேச்சுக் கருவிகளில உண்டாகின்ற பல்வேறு சப்தங்களையும், வெளியிட இந்திய ஒலியியல் முறையில் வசதி இருப்பதுபோல் ஏனைய எழுத்து முறை களில் அவ்வளவு வசதிகள் இல்லை. மேலும் ரோமன் எழுத்து முறை யோடு இந்திய ஒலியியல் முறையை ஒப்பிட்டுப் பார்த்தால் அறிவுக்குப் பொருத்தமாகவும், விஞ்ஞான ரீதியிலும் இந்த முறை அமைக்கப்பட்டுள்ள தும், திருப்பித் திருப்பி வருகின்ற எழுத்துக்களின் எண்ணிக்கை குறை வாக இருப்பதும் ஒவ்வொரு எழுத்தும் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்வதும் நன்கு விளங்கும். இதன் காரணமாகத்தான் தேவநாகரி எழுத்துக்களை "உலகத்திலேயே சிறந்த முறையில் அமைக்கப்பட்ட மிகச் செம்மையான எழுத்துக்கள்" என்று மோனியர் வில்லியம்ஸ் குறிப்பிட்டார். எந்த ஒரு எழுத்தும் மனிதனுடைய கண்டம் எழுப்புகின்ற அத்தனை ஓசையையும் குறிப்பிட முடியாது. ஒரு சில எழுத்துக்களைச் சேர்ப்பதன் மூலம் தேவநாகரி எழுத்துக்களால் இந்திய மொழிகள் உண்டாக்கும் அத்தனை ஓசைகளையும் ஏற்றுக் கொள்ளுமாறு செய்யலாம். இந்தியாவில் பலராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஒரு இந்திய எழுத்தை, நாட்டின் பல்வேறு இலக்கியங்களும் எழுதப்பட்டுப் பல நூற்றாண்டுகளாக வழங்கி வரும் ஒரு எழுத்தை, உலகத்திலேயே சிறந்த விஞ்ஞான முறையில் அமைக்கப்பட்ட ஒலியியலோடு கூடிய ஒரு எழுத்தை மாற்றிவிட்டு, எல்லா இந்திய மொழிகளுக்கும் அவற்றின் ஒலிகளுக்கும், என் பொதுத் தன் மைக்கும் கூட மாறுபட்டுள்ள ஒரு புது வகை எழுத்தை, அதிலும், பல குறைபாடுகளை உடைய ஒரு எழுத்து முறையை மேற்கொள்வதால் என்ன பயன் என்று கேட்கப்படலாம்?

யுத்த காலத்தில் இந்தியப் படைகளில் ஹிந்துஸ்தானியை எழுதுவதற்கு ரோமன் எழுத்துக்களை கையாண்டது பற்றி இங்கே குறிப்பிட வேண்டும். 1951-முதல் இந்த முயற்சி கைவிடப்பட்டு அந்த இடத்தில் தேவநாகரி எழுத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்களாதலால் படைகள் கல்விப் பரீட்சையில் ஹிந்தி/ஹிந்துஸ்தானி பரீட்சைகளைத் தேவநாகரி எழுத்துக்களிலேயே எழுதுகிறுர்கள்.

யூனியன் மொழியாகிய ஹிந்தியைச் சில காரியங்களுக்காவது ரோமன் எழுத்துக்களில் எழுதுவது நலம் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. உதாரணமாக இந்தோனேஷ்யாவில் குடியிருக்கும் இந்திய மக்கள் அங்கே பாஷா இந்தோனேஷியாவிறகு ரோமன் எழுத்துக்களை மேற்கொண்டுள்ளமையால் ஹிந்தி மொழியை ரோமன் எழுத்துக்களில் எழுதுவது இந்தோனேஷியாவில் உள்ள இந்தியர்கள் ஹிந்தி கற்றுக் கொள்வதற்கு எளிதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. மேலும் பல நூற்றுண்டுகளாக இந்தியாவிற்கும் இந்தோனேஷியாவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள கலாசார, மொழி தொடர்புகளுக்கு ஏற்ற முறையில் இந்தோனேஷியர்களே ஹிந்தியைக் கற்றுக் கொள்ள விரும்பினுல் இந்திய இலக்கியங்கள் ரோமன் எழுத்தில் எழ்தப்பட்ட ஹிந்தி மொழியில் கிடைப்பது மிகவும் நலம் பயக்கும் என்றும் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட பிரத்தியேகமான காரணங்களுக்குத் தேவைப்படும் பொழுது ரோமன் எழுத்தில் எழுதப்பட்ட ஹிந்திப் புஸ்தகங்களை ஆக்குவதில் யாதொரு தடையும் இராது. அரசியலமைப்பால் ஒப்புக் கொள்ளப்பட்ட யூனியன் மொழி தேவநாகரியில் எழுதப்படும் ஹிந்தியாகவே இருக்கும் ஆதலால் யூனியன் மொழியைக் கற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தேவநாகரியில்தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

12. மற்றெரு பொதுப்படையான கருத்தையும் அறிவிக்க விரும்புகிறேம். பழங்கால இந்தியர்கள் தங்களுக்குள் பொதுவாக இருந்த பிராமிய எழுத்துக்களிலிருந்து தங்கள் மொழிக்கு ஏற்ற எழுத்து முறைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். தங்கள் தேவைக்கு ஏற்றபடியும், சிறப்பான எழுத்து முறைக்கு ஏற்றபடியும் தாட்-பத்ரா, போஜ்-பத்ரி ஆகிய முறைகளில் பிராமி எழுத்துக்களை மாற்றியமைக்கும் தைரியம் அவர்களிடமிருந்தது. ஆனுல் இன்று நமக்குத் தேவைப்படுகின்ற காரணங்கள் வேறுபட்டுள்ளமையால் நம்முடைய எழுத்துக்களை மாற்றி தட்டெழுத்து யந்திரத்தின் கீபோர்டுக்கும் ஏற்ற முறையில் மாற்றி அமைக்க வேண்டும். அகில இந்திய மொழிகளுக்கும் ஒரே எழுத்து முறையை மேற்கொள்வதுதான் இப்பொழுது மிகமிக முக்கியமான தேவையாகும். நம்முடைய முன்னேர்களைப் போல நாமும் அறிவும், முன்னேற்ற நோக்கமும் கொண்டிருந்தால் இந்த மாற்றத்திற்கு மாறு சொல்ல மாட்டோம். ஒரு மொழியைப் பொறுத்த மட்டில் அது அம்மொழி பேசும் இனத்தாருடைய பண்பாடு, சரித்திரம், எண்ண வளர்ச்சி, நடைமுறை ஆகியவற்றை எடுத்துக் காட்டும் உயிருள்ள சான்றுகும். ஆனுல் எழுத்துக்களைப் பொறுத்த மட்டில் இது இவ்வாறில்லை. எழுத்துக்கள் என்பது ஒரு மொழியை எழுதுவதற்குரிய சௌகர்யமான கருவியே தவிர வேறில்லை. ஒரு மொழியைத் தாயிடமிருந்து குழந்தை கற்றுக் கொள்கிறது. ஆனுல் எழுத்து என்பது தேடிப்பிடிக்கும் ஒரு சொத்தாகும். எழுத்து முறையைச் சீர்திருத்த வேண்டும் என்ற கொள்கை நடுவு நிலைமையோடு நோக்கப்பட்டால் மொழியைப் பற்றிப் பேசப்படும் பொழுது ஏற்படுகின்ற இனகௌரவத்தையும், மற்றவற்றையும் தூண்டக்கூடாது. இப்பொழுது செய்யப்படும் சீர்திருத்தத்தில் "ஒன்று எல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டும் அன்றேல் எல்லாவற்றையும் தள்ளிவிட வேண்டும்" என்ற முறை இல்லை என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இப்பொழுது பல்வேறு எழுத்துக்களில் எழுதப்படும் ஏனைய மொழிகளைத் தேவநாகரியில் எழுதச்செய்யும் ஒவ்வொரு முயற்சியும் ஓரளவு உதவியையே செய்யும். அதாவது முதலில் இந்தோ ஆரிய மொழிகளுக்கெல்லாம் இந்த எழுத்துக்களை மேற்கொண்

டாலும் அல்லது இன்னும் குறுகிய முறையில் சகோதரி மொழிகளாகவுள்ள வங்காளி, குஜராத்தி ஆகிய இரண்டின் எழுத்துக்களும் தேவநாகரியோடு மிகவும் தொடர்பு கொண்டு உள்ளமையால் அவற்றில் இந்த சீர்திருத்தத்தைச் செய்தாலும் அந்த அளவுக்கு அது உதவியாகும். அப்பொழுது ஹிந்தி, மராத்தி (இப்பொழுதே இது தேவநாகரியில்தான் எழுதப்படுகிறது) வங்காளி, குஜராத்தி, அசாமிஸ் (இதன் எழுத்துக்கள் வங்காளி எழுத்துக்களேயாகும்) ஆகிய இத்தனை மொழிகளும் ஒரே வகையான எழுத்து முறையைக் கைக்கொள்ளும். இப்பொழுது ராஜ்ய அரசாங்கங்கள் அரசியல் அமைப்பை ஒட்டிக் கட்டாய இலவச ஆரம்பக் கல்வியை வழங்க முற்பட்டுள்ளமையின் இம்முறையில் தொடக்கஞ் செய்வதற்கு இதுவே ஏற்ற காலமாகும். சீனுவிலுள்ள மொழிப் பிரச்னை இந்தியாவிலுள்ளதை விட அதிகச் சிக்கல் வாய்ந்ததாகத் தெரிகிறது. அவர்களுடைய எழுத்து முறை இயல்பாகப் பல தொல்லைகளை உடையது என்றாலும் சீன நிலைமை ஒரு முறையில் நன்மை பயப்பதுபோல் தெரிகிறது. மிகப் பரந்துபட்ட ஒரு நாட்டில் இயல்பாக நடைபெறுவது போலவே சீனுவின் பல்வேறு பிராந்தியங்களில் கிளை மொழிகள் தோன்றி வளர்ந்து கடைசியில் ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முடியாதவைகளாக அவைகள் ஆகிவிட்டன. என்றாலும் நாடு முழுவதற்கும் ஒரே எழுத்து முறை இருத்தலின் பொதுவான இலக்கிய, பண்பாட்டுப் பரம்பரைச் சொத்தைக் காப்பாற்றுவதற்கு இந்த எழுத்து முறை வலிமையுடையதாக இருந்து வருகிறது. இந்தப் பாடத்தை நாம் லாபகரமான முறையில் ஏற்றுக்கொள்ளலாம்.

இவை எல்லாவற்றையும் ஆராயந்த பிறகு யூனியன் மொழிக்கு மட்டும் அல்லாமல் ஏனைய இந்திய மொழிகளை எழுதுவதற்கும் கூட விருப்பப்பட்டால் தேவநாகரி எழுத்துக்களை ஏற்றுக்கொள்ளலாம். நாங்கள் கல்வி முறையில் சொல்லிய ஆலோசனைகளின்படி இடைநிலைப் பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு மாணவனும் அரசியல் அமைப்பில் சொல்லப்பட்டபடி யூனியன் மொழியாகிய ஹிந்தியைத் தேவநாகரி எழுத்தில் கற்றுக்கொள்ளவேண்டும். நாளாவட்டத்தில் ஒவ்வொரு கற்றறிந்த இந்தியனும் ஹிந்தி மொழி அறிவையும் தேவநாகரி எழுத்தையும் பெற்றிருப்பானாதலின் தேவநாகரி எழுத்தை வேண்டுமானால் பிற இந்திய மொழிகளுக்கும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் மிகுதியாக இருக்கும். இந்த முறையில் அதிகார பூர்வமான தொடக்கம் செய்யப்பட்டுவிட்டால் ஹிந்தி மொழியைப் பரப்ப ஏற்பட்டுள்ள அமைப்புக்களும் ஏனைய பிராந்திய மொழி அமைப்புக்களும் மிகவும் ஆர்வத்தோடு தேவநாகரி எழுத்துக்களை அந்த அந்தப் பிராந்திய எழுத்துக்களோடு பரப்பும் வேலையை மேற்கொண்டு இந்த நாட்டின் பல்வேறு மொழிக் கூட்டங்களும் ஒன்றையொன்று புரிந்துகொள்ளும் வேலையை விரைவில் செய்யும்[1].

---

[1] சர்தார் தேஜாசிங், ஒவ்வொரு மொழியினுடைய சிறப்பும் அதனுடைய சொந்த எழுத்தின் மூலமே வெளிப்பட முடியும் என்று கூறுகிறார். இது சம்பந்தமாகப் பண்டித ஜவர்ஹர்லால் நேரு ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியதை எடுத்துக் காட்டுகிறார் :

> "வளமான பழமையோடு கூடிய எந்த ஒரு மொழிக்கும் எழுத்தில் மாற்றம் செய்வது மிகவும் முக்கியமான ஒரு மாற்றமாகும். ஏனென்றால் அந்த இலக்கியத்தோடு மிகவும் தொடர்புடைய ஒன்றாகும், அதனுடைய எழுத்து முறை. எழுத்துக்களை மாற்றி அமைத்துவிட்டால் வேறுபட்ட ஒலிகளும், வேறுபட்ட கருத்துக்களும், வேறுபட்ட சொல்லோவியங்களும் தோன்றத் தொடங்கிவிடும். பழைய இலக்கியத்திற்கும் புதிய இலக்கியத்திற்கும் தாண்ட முடியாத ஒரு பெரிய தடை ஏற்பட்டுப் பழைய இலக்கியம் வேற்று மொழி இலக்கியமாக ஆகி நாளாவட்டத்தில் இறந்துவிடுகிறது."

சர்தார் தேஜாசிங் அவர்கள் கருத்துப்படி தேவநாகரி எழுத்தை எல்லா இந்திய மொழிகளும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறவர்கள் ஒரு நோக்கம் பற்றியே (இந்த அறிக்கையில் அவ்வித நோக்கம் இல்லை) பேசுகிறார்கள். இவர்கட்கு வசதியான முறையில் மொழி வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கம் இல்லை. ஹிந்தியோடு தொடர்புடைய உருது, பஞ்சாபி போன்ற மொழிகள் தனியே வழங்காமல் தங்கள் தனித் தன்மையை இழக்கவே இதனைச் செய்கிறார்கள். உருது, பஞ்சாபி போன்ற மொழிகளைத் தனியே வழங்காமல் இருக்கச் செய்யும் வழிக்கு இது முதல்படி என்று யாரும் தவறாக நினைத்துவிடாமல் இருப்பதற்காக, தேவநாகரி எழுத்துக்களை விருப்பமானால்கூட இம்மொழிகளுக்கு வழங்க வேண்டாம் என்று அவர் கூறுகிறார். மேலும இம்மொழிகளின் தனித் தன்மை எக்காரணத்தைக் கொண்டும் அழிந்துவிடக்கூடாது என்று கூறுகிறார்.

இந்த சந்தர்ப்பத்தில் உருது மொழி பெரும்பாலும் எழுதப்படுகின்ற பர்ஸிய எழுத்துக்களைப் பற்றியும் வங்காளி எழுதப்படுகின்ற வங்காளி எழுத்துக்கள் பற்றியும் ஒரு சில சொல்லவேண்டும். எழுத்துக்கள் உருது பேசப்படும் பாகிஸ்தானேடும் பர்ஸிய எழுத்துக்கள் உள்ள வடமேற்கு இந்திய பிராந்தியங்களோடும் உள்ள தொடர்பாகும். வங்காளி எழுத்துக்கள் தம் மொழி பேசுகின்ற கிழக்குப் பாகிஸ்தானில் உள்ளவர்களோடு கொள்ளும் தொடர்பாகும். இப்பொழுது தேவநாகரி எழுத்தை ஏனைய இந்திய மொழிகளுக்கு விருப்பப்பட்டால் பயன்படுத்தலாம் என்று மட்டுமே நாங்கள் சொல்கின்றபடியால் இந்தத் தொடர்புகளுக்கு எவவிதமான கோளாறும் வராது என்றே கருதுகிறோம்.

இந்திய ஒலியில் முறையும், இந்திய எழுத்துக்களும், சிறிதளவு மாற்றங்களையோ பிறப்பு முறையையோ பெற்று இந்திய எல்லைக்கப்பாலுள்ள நேபாளம் இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலும் இருந்து வருகின்றன. எல்லா இந்திய மொழிகளுக்கும் ஒரே மாதிரியான எழுத்து முறையை (விருப்பப்பட்டால் ஏற்றுக்கொண்டால் கூட) மேற்கொள்வதனுல் இந்த நாடுகளுக்கெல்லாம் அது ஒரு கருத்தை அறிவிக்கும்

நாட்டிலுள்ள சிந்தனையாளர்களும் பொறுப்புடைய கருத்தைத் தெரிவிக்கின்ற பலரும் இங்ஙனம் ஒரு பொது எழுத்து முறையை இந்தியாவின் பல்வேறு மொழிகளுக்கும் கையாள்வது பல்வேறு மொழி இனத்தாரையும் ஒற்றுமைப்படுத்தச் சிறந்த வழியாகும் என்று கூறுவதைக் கண்டு நாங்கள் பெரிதும் வியந்துள்ளோம், இதனைச் சொல்லிய மக்களுள் பெரும்பாலோர் தேவநாகரி எழுத்துக்கள் வழங்கப்படாத பிராந்திய மொழிப் பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள் ஆவர். என்றாலும்கூட இப்படிப்பட்ட ஒரு சீர்திருத்தத்தை வேண்டுமானுல் அந்த அந்தப் பிராந்தியங்களிலுள்ள மக்களில் பெரும்பாலானவர்களுடைய விருப்பதை அறிந்து ஏற்றுக்கொள்ளுமாறு செய்யவேண்டும். எனவே கட்டாயப்படுத்துகின்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லாமல், பிராந்திய மொழிகளை அந்தப் பிராந்திய எழுத்துக்களில் எழுதும் பொழுதே இந்த எழுத்துக்களையும் ஓரளவு பயன்படுத்தி இரண்டும் சேர்ந்தே வளருமாறு செய்யவேண்டுகிறோம்.

தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தம்.

13. தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தப் பிரச்னே மிக நீண்டகாலமாக தனிப்பட்டவர்கள் பலருடைய கவனத்தையும் பல அமைப்புக்களின் கவனத்தையும் கவர்ந்து வந்துள்ளது. அரசியல் அமைப்பில் யூனியன் மொழியாக உள்ள ஹிந்தி, தேவநாகரி எழுத்துக்களில் எழுதப்படவேண்டும் என்பது வந்தவுடன் இது பற்றிய முயற்சி தனிப்பட்டவர்கள், அமைப்புக்கள் ஆகியவற்றின் முயற்சியாக மட்டுமில்லாமல் ராஜ்ய அரசாங்கங்களும் யூனியன் அரசாங்கமும் இது பற்றிச் சிந்திக்க வேண்டிய நிலைமை வந்துள்ளது. அச்சு யந்திரம், தட்டெழுத்து யந்திரம் தொலை அச்சு யந்திரம் ஆகிய வாழ்க்கை வசதிகள் தற்கால வாழ்வின் முக்கியமான பகுதிகளாக ஆகிவிட்டன. எனவே இந்த யந்திர வசதிகள் யூனியன் மொழிக்கும் இந்தியாவின் பிராந்திய மொழிகளுக்கும் ஏற்பட்டால் அன்றி, இம்மொழிகள் நாளாவட்டத்தில் நாட்டின் தேசிய வாழ்க்கையின் பல துறைகளில் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அதன் இடத்தை அடையமுடியாது.

சாதாரண முறையில் இந்தக் கருவி வசதிகளை எழுத்துக்களின் தேவைக்கேற்ப ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்றே யாரும் கருதுவார்கள். என்றாலும் இம்முறையில் சில குறைபாடுகள் உண்டு என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். தட்டெழுத்து யந்திரத்தைப் பொறுத்தமட்டில் தட்டெழுத்து அடிப்பவர் எந்திரத்தின் முழு கீ போர்டையும் விரல்களால் தொட்டு அடிக்க வேண்டியவர் ஆகிருர். ஆதலால் இதற்கு ஒரு எல்லை உண்டு. இதனை அல்லாமல் தொலை அச்சு யந்திரம் போன்றவைகளிலும் கூட ஒரு எல்லை உண்டு. அது வசதியுடையதாக இருக்க வேண்டுமானுல

சாத்தாரணத் தட்டெழுத்து யந்திரத்தைப்போல இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஒரே தகவலை இரண்டு முறை வெவ்வேறு விதமாக அடிக்கும் தொல்லையிலிருந்து நீங்கலாம்.

தேவநாகரி எழுத்துக்கள் வளர்க்கப்பட்ட அந்த நூற்றாண்டுகளில் இந்த யந்திர சாதனங்கள் அறியப்படாமல் இருந்தன. தேவநாகரி நெடுங்கணக்கும் ஒற்றெழுத்துக்களை சேர்த்து எழுதும் முறையும், உயிரெழுத்துக்களைக் கூட்டி எழுதும் முறையும் மிக அதிகப்படியான புது எழுத்துக்களை உண்டாக்கி இந்த நவீன காலத்திய யந்திர வசதிகளுக்குள் அவற்றை அடக்க முடியாதபடி அவ்வளவு மிகுதியாக உள்ளன. ரோமன் நெடுங்கணக்கில் மிகக் குறைவான எழுத்துக்கள் இருந்து, உயிரெழுத்துக்களையும் மெய்யெழுத்துக்களையும் கூட்டெழுத்துக்களாக எழுதும் முறை இல்லாமல் இருந்து, உயிரெழுத்துக்களை மெய்யெழுத்துக்களின் பக்கத்தில் தனியே எழுதும் பழக்கம் இருந்து வருகிறது. மேலும் தேவநாகரி எழுத்துக்களில் உயிர் மெய் எழுத்துக்களை எழுதும்பொழுது அது நடுக்கோட்டிற்கு மேலேயும் கீழேயும் செல்வதையும் ரோமன் எழுத்துக்களில் அவ்வாறு இல்லாமல் இருப்பதையும் ஒப்பு நோக்க வேண்டும். இவற்றின் பயனாக ரோமன் எழுத்து முறை தேவநாகரி எழுத்து முறையை விட இந்நவீன யந்திர வசதிகளுக்கு ஏற்றதாக அமைந்துள்ளது. தேவநாகரிக்குச் சொல்லப்பட்ட இத்தனையும் ஏறத்தாழ இந்தியாவிலுள்ள ஏனையப் பிராந்திய மொழி எழுத்துக்களுக்கும் ஒக்கும்.

சுருக்கெழுத்து முறையைப் பொறுத்த மட்டில் ஹிந்தியிலோ அல்லது பிராந்திய மொழிகளிலோ இதனை வளர்ப்பதற்கு எவ்விதத் தடையும் இல்லை. சுருக்கெழுத்து முறை என்பது வார்த்தைகளின் ஒலி மதிப்பை வைத்து அவற்றைக் குறிகளால் எழுதுவதாகும். மேலும் இத்துறையில் சிறந்த சுருக்கெழுத்தாளர் நாளாவட்டத்தில் தமக்கே உரிய சில குறியீடுகளை பழகிக்கொள்கிறார். சுருக்கெழுத்து முறை ஒலிகளை வைத்துக் குறியீடுகளை ஏற்படுத்திக்கொள்வதாதலின் எந்த ஒரு மொழியும் சுருக்கெழுத்து வசதிக்கு ஏற்றதாகாது என்று சொல்வதற்கு இல்லை.

14. தேவநாகரி எழுத்துக்களை நவீன யந்திர வசதிகளுக்கு ஏற்ப மாற்றியமைப்பது என்றால் அதிலுள்ள பல்வேறு கூட்டெழுத்துக்களைத் தட்டெழுத்து யந்திரத்தின் கீபோர்டின் எல்லை கு உட்பட்டதாகச் செய்வதாகும். காசி, நகரி பிரச்சாரிணி சபா இதற்கேற்ற ஒரு எழுத்து முறையைக் கண்டுள்ளது. உத்திரப் பிரதேச அரசாங்கம் 1947-ல் ஆச்சாரிய நரேந்திர தேவின் தலைமையில் தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தக் குழு ஒன்றை நியமித்து நாகரி பிரச்சாரிணி சபாவின் இந்தச் சீர்திருத்தத்தைப் பரிட்சித்துப் பார்க்குமாறு கூறியது. இந்தக் குழுவின் அறிக்கை 1950 மே மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்குள் இந்திய அரசியல் அமைப்பு தொடங்கி அரசியல் அமைப்பு சபை ஸ்ரீ காக்கா சாயிப் கலேல்கர் தலைமையில் ஒரு குழுவை நியமித்துச் சுருக்கெழுத்து தட்டெழுத்து ஆகியவற்றின் பிரச்னையை ஆராயுமாறு செய்தது. இந்த இரண்டு குழுக்களும் தம்முள் கலந்து ஆலோசித்து ஏறத்தாழ ஒரே மாதிரியான முடிவுகளைத் தெரிவித்தன. உத்திரப் பிரதேச அரசாங்கம் நரேந்திர தேவா குழுவின் முடிவுகளை அப்போதைக்கு ஏற்றுக்கொண்டு 1953 நவம்பரில் லக்னோவில் இந்திய உப ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு மாநாட்டைக் கூட்டியது. இம்மாநாட்டில் பல்வேறு ராஜ்யப் பிரதிநிதிகளும் சிறந்த மொழி நூல் வல்லவர்களும், பன்மொழியாளர்களும் மத்திய அரசாங்க அமைச்சர்களும் கல்வி அமைச்சின் செயலாளரும் பங்கு கொண்டார்கள். இந்த மாநாடு தேவநாகரி எழுத்தை ஒரு வகையில் சீர்படுத்தியது. அது இப்பொழுது "லக்னோ மாநாட்டு முடிவுகள்" என்ற பெயரில் வழங்கி வருகிறது. இந்த மாநாடு ஹிந்தியில் பயன்படுத்தும் நிறுத்தக் குறியீடுகளையும் கணக்குக் குறியீடுகளையும் ஹிந்தி தட்டெழுத்து யந்திரத்துக்கு ஏற்றவாறு வெளியிட்டுள்ளது. லக்னோ மாநாட்டின் சிபாரிசுகளை இந்திய அரசாங்கமும்

மேற்கண்ட ராஜ்ய அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. ராஜ்ய அரசாங்கங்களாவன, பம்பாய், மத்தியப் பிரதேசம், பஞ்சாப், உத்திரப் பிரதேசம், ஐதராபாத், ராஜஸ்தானம், மத்திய பாரதம், பெப்சு, சௌராஷ்டிரம்போபால், கூர்க் விந்தியப் பிரதேசம் என்பவைகளாம்.

1954 அக்டோபரில், விஞ்ஞானக் கலைச்சொற்கள் கழகம், இந்திய அரசாங்க அச்சுத்தொழில் அச்சுக் கருவிகள் தலைவர், தபால் தந்தி இலாகா பொது ஆணையர், ஆகிய இருவரையும் உள்ளிட்ட ஒரு குழுவை நியமித்துத் தேவநாகரி எழுத்தைத் தட்டெழுத்து யந்திரத்திற்கு ஏற்ப அமைக்குமாறு நியமித்தது. அந்தக் குழு ஒரு வகையான கீ போர்டை கண்டது. இந்தக் கீ போர்டைப் பற்றி இந்திய அரசாங்கம் இன்னும் ஆராய்ந்து முடிவு சொல்ல வேண்டும்.

ஹிந்திச் சுருக்கெழுத்து முறையை ஆராய, ஸ்ரீ கலேல்கர் தலைமையில் ஒரு குழுவை 1950-ல் அரசியல் அமைப்பு சபை நியமித்தது. ஹிந்திச் சுருக்கெழுத்தைப் பொறுத்தமட்டில் நான்கு வேறுபட்ட முறைகள் இப்பொழுது இருந்து வருகின்றன. ஹிந்தியை ஏறத்தாழ ஆட்சி மொழியாகக் கொண்டுள்ள ராஜ்யங்களில் இது பற்றி எங்களுக்குச் சான்று பகர்கின்றவர்கள் தேவைப்படும்பொழுது வேண்டுமான அளவு ஹிந்திச் சுருக்கெழுத்தாளர்களைக் கண்டுபிடிப்பது அவ்வளவு கடினமான காரியமன்று என்று கூறியுள்ளார்கள்.

லக்னோ மாநாட்டில் தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தம் பற்றிச் செய்யப்பட்ட முடிவுகளுள் சிறப்பாக குறில் உயிரெழுத்தாகிய "इ" எழுத்தின் மாத்திரைப் பற்றிச் செய்யப்பட்ட முடிவைச் சிலர் குறை கூறியுள்ளார்கள். இந்திய அரசாங்கத்தால் இப்பொழுது ஏற்றுக் கொள்ளப் பெற்ற கீ போர்டில் இந்தக் குறைகள் சிலவற்றைப் போக்கியுள்ளார்கள். லக்னோ மாநாட்டில் பங்கு கொண்டவர்கள் நிலைமை பற்றி, அதாவது அரசியல் வாழ்க்கையிலும் பொது வாழ்க்கையிலும் பங்கு கொண்டவர்களே மிகுதியாக இருந்தார்கள் என்றும் பன்மொழியாளர்களும், மொழி நூல் வல்லவர்களும், இலக்கியம் வல்லவர்களும், குறைவாகவே இருந்தார்கள் என்றும் ஒரு பொதுவான குறைபாடு சொல்லப்பட்டது.

இந்நிலையில் லக்னோ மாநாட்டின் முடிவுகள்தாம் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய முடிவான முடிவகள் என்று கருதவேண்டாம், என்பதை மட்டும் சொல்ல வேண்டும். இம்மாநாடு இது பற்றி மேலும் ஆராய்வதற்கு மற்றொரு மாநாட்டைக் கூட்டவேண்டும் என்ற முடிவைத் தெரிவித்தது. என்றாலும் லக்னோ மாநாட்டின் பயனுகப் பல கருத்துக்கள், மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களால் பெரிதும் ஏற்றுக்கொள்ளப் பட்டிருத்தலின் இதுவே இத்துறையில் முன்னேறுவதற்கு ஒரு சிறந்த அடையாளம் என்றும், சரியான தலைமை இல்லாததனால் இது வரையில் அல்லல்பட்ட இத்துறையில் இப்பொழுது முன்னேற்றம் கண்டது சிறந்தது என்றும் கூறலாம். குறிப்பிடாத ஒரு எதிர்காலத்தில் மிகச் சிறந்த ஒரு முடிவைக் காண்பதைக் காட்டிலும் இப்பொழுது தேவையான பலரும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் பல நல்ல முடிவுகளைக் காண்பது மிகவும் பயனுடையதாகும் என்று கருதுகிறோம்.

லக்னோ மாநாடு மேற்கொண்ட சீர்திருத்தங்களை விரிவான முறையில் ஆராய்வதும் தட்டெழுத்து யந்திரத்தின் கீ போர்டை பற்றி அவர்கள் கூறியுள்ள முடிவுகளின் குறைவு நிறைவுகள் பற்றி நாங்கள் ஆராய்வதும் இப்பொழுது தேவை இல்லை. நாங்கள் சொல்வதெல்லாம் இந்தக் கீ போர்டைப் பற்றி விரிவான ஒரு முடிவுக்கு வந்து தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தத்தை உடனடியாக அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். முன்னரே முடித்திருக்கப்பட வேண்டிய இந்தப் பிரச்னையை விரைவில் முடித்தாலொழிய அரசியல் அமைப்பின் மொழிக்

கொள்கையைப் படிப்படியாக கொண்டு செலுத்த முடியாது. ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள ராஜ்ய அரசாங்கங்கள் படிப்படியாக ஆங்கிலத்தை நீக்கிவிட்டுப் பிராந்திய மொழியாகிய ஹிந்தியை ஏற்றுக்கொண்டுள்ளபடியால் அந்தப் பிராந்தியங்களில் இந்தக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து அதிகார பூர்வமான முடிவுகள் ஒன்றும் தெரிவிக்கப்படாமையினால் தங்கள் கொள்கை நிறைவேற்றம் தடைப்படுகிறது என்று எங்களிடம் பல முறை குறை கூறப்பட்டது. இவ் விஷயத்தில் தலைமை வகித்து, அதிகார பூர்வமான முடிவுகளைச் சொல்ல வேண்டிய கடமை, மத்திய அரசாங்கத்தின்பால் பட்டது.

15. தட்டெழுத்து யந்திரத்தின் கீ போர்டைப் பற்றிய ஒரு பிரச்னை, போக்கு வரத்தமைச்சின் பிரதிநிதிகளால் எங்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டது. தட்டெழுத்து யந்திரத்தின் கீ போர்டும், தொலை எழுத்து யந்திரத்தின் கீ போர்டும் ஒன்றாக இருக்குமேயானால் ஒரே தட்டெழுத்தாளர் தாம் அடிக்க வேண்டிய தகவலை நேரிடையாக அடித்துவிடக் கூடுமே என்றும் கூறப்பட்டது. இப்பொழுது தட்டெழுத்து யந்திரத்தை ஏற் படுத்த ஏற்றுக்கொண்டுள்ள அதிகாரிகள் இதனோடு தொலை-போக்கு வரத்து அதிகாரிகளினுடைய தேவைகளையும் அறிந்து அதற்கேற்ப இவ் வியந்திர சாதனங்களைக் கைக்கொள்வார்கள் என்று நினைக்கிறோம்.

ஹிந்தியில் தந்திகளை அனுப்புவதற்குரிய வசதிகளை இன்னும் விரிவான முறையில் செய்து தர வேண்டும் என்றும் எங்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது. ஹிந்தியில் தொலை எழுத்து யந்திரம் கண்டுபிடிக்கப்பட வேண்டியதோடு இந்தப் பிரச்னையும் சம்பந்தமுடையது ஆதலால் கால தாமதம் ஆகிறது என்று நினைக்கிறோம்.

தேவநாகரி எழுத்துக்களை நவீன யந்திர சாதனங்களுக்கு ஏற்ப அமைத்துக்கொள்வதில் எவ்விதமான நீக்க முடியாத தடையும் இல்லாதது போலவே ஏனையப் பிராந்திய மொழி எழுத்துக்களை பொறுத்த மட்டிலும் தவிர்க்க முடியாத தடை ஒன்றும் இராது என்று நினைக்கிறோம். மெய்ம்மையைக் கூறுமிடத்து பல்வேறு இந்தியப் பிராந்திய மொழிகளைப் பொறுத்தமட்டில் தட்டெழுத்து யந்திரங்கள் இப்பொழுது அகப்படுகிறதாகவே அறிகிறோம். அந்த அந்த மொழிகளுக்குரிய கீ போர்டுகள் செய்யப்பட்ட பிறகு வேண்டுமான அளவு தேவை இருந்து வருமேயானால் இந்த யந்திரங்களை உற்பத்தி செய்வதில் தடை ஒன்றும் இராது.

எந்த ஹிந்தி ?

அரசியல் அமைப்பின் 351-வது விதியைப் பற்றிய ஆராய்ச்சி.

16. 351-வது விதி கீழ்வருமாறு கூறுகிறது :—

"ஹிந்தி மொழியை வளர்த்துப் பரப்புதலும், இந்தியாவிலுள்ள பல்வேறு பண்பாடுகளையும் வெளியிடக் கூடிய இடைநிலையாக அது பயன்படுமாறு செய்தலும், அதனுடைய மரபு கெடாதபடி அதனை வளம் படுத்த வேண்டி ஹிந்துஸ்தானியிலும் 8-வது ஷெட்யூலில் குறிக்கப் பெற்றுள்ள ஏனைய இந்திய மொழிகளிலிருந்தும் வடிவங்கள், நடைகள், சொல்லாட்சிகள் ஆகியவற்றைப் பெற்று ஜீரணித்து ஹிந்தியை வளர்த்தலும், தேவையான இடங்களில் விருப்பம் இருந்தால், அதனுடைய நெடுங் கணக்கை வளர்க்க வேண்டி முக்கியமாக வடமொழியிலிருந்தும், அடுத்த படியாக ஏனைய மொழிகளிலிருந்தும் வேண்டுமானவற்றைப் பெற்று வளம் படுத்தலும் யூனியனின் கடமையாகும்."

இந்த விதியைப் பற்றி அரசியல் அவை ஆராயும்பொழுது ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி ராவ் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிந்தார் :—

"ஷெட்யூல் 7-எ பிரிவில் சொல்லப்பட்ட ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பிரதிநிதியைக் கொண்ட ஒரு கழகத்தைக் கீழ்க் கண்ட காரியங்களுக்காக ஜனாதிபதி நியமிப்பார் :—

(அ) அகில இந்தியாவிற்கும் பொது இடைநிலை மொழியாக ஹிந்தி மொழி வளர்வதைக் கவனித்து உதவி செய்வதற்காகவும் ;

(ஆ) ஷெட்யூல் 7-எ பிரிவில் சொல்லப்பட்ட ஹிந்தியில் மட்டுமல்லாமல், எல்லா மொழிகளிலும் கூடப் பொதுவான கலைச்சொற்களை விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம் என்பவற்றோடு ஏனைய தொழில் நுட்பத் துறைகளிலும் பயன்படுத்தக் கூடிய முறையில் உண்டாக்குதல் ;

(இ) இந்தியாவின் தொடர்புடைய எல்லாப் பகுதிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொதுவான சொற்களைத் தயாரித்தல்."

காலஞ் சென்ற ஸ்ரீ கோபாலசாமி ஐயங்கார் இவ்விஷயம் பற்றிக் கீழ் வருமாறு பேசினார் :—

"நேற்று சில திருத்தங்களை முன்மொழிந்த நண்பர்களுக்கு நான் வாக்களித்துள்ளபடி ஒன்றே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதிலும் சிறப்பாக ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி ராவ் முன்மொழிந்த திருத்தத்தையும் அதனையொட்டி அவர் பேசிய சிறந்த அறிவோடு கூடிய பேச்சையும் பொறுத்த மட்டில், நான் ஒன்று சொல்ல வேண்டும். அரசியல், விஞ்ஞானம், தொழில்நுட்பத் துறைகள் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் கலைச்சொற்களைப் பொறுத்த மட்டில் வேண்டுமான அளவு ஹிந்தி மொழியில் கிடைக்காமையினால் இந்த அரசியல் அமைப்பு அமலுக்கு வந்தவுடனேயே ஒரு கழகத்தை ஏற்படுத்தி நாட்டில் பல்வேறு பாகங்களிலும் இம்மொழியைப் பயன்படுத்தும் முறையை ஆராய்ந்து, சொற்களையும் சொல்லாட்சிகளையும் ஒருநிலைப்படுத்த அவர் கோரினார். தற்பொழுதுள்ள சூழ்நிலையில் அது மிகவும் பயனுடைய ஆலோசனை என்றே நினைக்கிறேன். இது பற்றி அவர் ஒரு திருத்தத்தை முன்மொழிந்தாலும் உங்கள் முன் நான் சமர்ப்பித்திருக்கிற மூலத்திலேயே அவர் கூறியவற்றை கொண்டு செலுத்தும் பகுதி இருக்கிறதாதலின் இத்திருத்தத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ராஜ்யங்களுக்கு வழிகாட்டும் பகுதியில், கீழ்க்கண்டவற்றில் அந்த ராஜ்யங்கள் ஈடுபடவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது, ஹிந்தி மொழியை வளர்த்து வளம்படுத்துவதற்காக ஹிந்துஸ்தானி மொழியிலிருந்தும், நாட்டிலுள்ள ஏனைய மொழிகளிலிருந்தும் சொற்களையும் சொல்லாட்சிகளையும் நடைகளையும் பெற்றுக் கொண்டு ஹிந்தி மொழியை வளம்படுத்த வேண்டும் என்றும், முதலாவதாக வடமொழியிலிருந்தும் அடுத்தபடியாக உலகின் ஏனைய மொழிகளிலிருந்தும் தேவைப்பட்டால் சொற்களைக் கடன் வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இந்த விரிவான வழிகாட்டிதான் பகுதி 14-எ பிரிவில் உள்ளதாகலின் இந்த அரசியல் அமைப்பு அமலுக்கு வந்த பிறகு எந்த ஒரு அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தாலும் இந்தக் குறிப்பிட்ட காரியத்தை நிறைவேற்ற வேண்டுமான முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமதலால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவின் ஆலோசனைகளையும் நிறைவேற்றும் என்று நான் நம்புகிறேன்".

17. எனவே 351-வது விதியின் பிரகாரம் செய்யப்படவேண்டிய வேலையைக் கவனிப்பதற்கு நிலையாக ஒரு கழகத்தை நியமிப்பது என்று ஒரு காலத்தில் நினைக்கப்பட்டதாகத் தெரிகிறது. அத்தகைய ஒரு கழகம் அமைக்கப்படவில்லை. ஹிந்தி மொழியை ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் வளர்ப்பதற்கு ஓரளவு வேலை நடைபெற்றதும், ஓரளவு ஹிந்தியில் கலைச் சொற்களை சேகரிப்பதும் உண்மைதான். எனவே அந்த அளவுக்கு இவ்விதி நிறைவேற்றப்பட்டது உண்மைதான்.

ஹிந்தி மொழியை வளர்க்கும் வேலை, அதே போல மற்ற மொழிகளின் வளர்ச்சியைக் கருதிச் செய்யப்படும் வேலைகளோடு நடைபெற்றால் இந்த விதியின் கட்டளையை நன்கு நிறைவேற்றியதாக நாங்கள் கருதுவோம். 14-வது பகுதியில், இந்த வேலைகளைக் கொண்டு செலுத்தக் கூடிய அமைப்புக்கள் பற்றியும் எல்லா மொழிகளுக்கும் பொதுவான கலைச்சொற்களை சேகரிப்பது பற்றியும் குறிப்பிட்டுள்ளோம். ஆதலால் அந்த அமைப்புக்களே இவ்விதியை நிறைவேற்றத் தகுந்த அமைப்புகளாகும். இதற்காகப் புதிய அமைப்புகளை உண்டாக்க வேண்டிய தேவை இருப்பதாக நாங்கள் கருதவில்லை.

சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்தும் போக்குவரத்தில் ஏற்பட்டு, இன்னும் நெருங்கிய முறையில் வாணிக அரசியல், பொருளாதாரத் தொடர்பு ஏற்பட்டிருக்குமேயானால் அந்நிலையில் அச்சுச் சாதன வசதிகள் மட்டும் வளரவில்லை என்று வைத்துக்கொண்டால் இன்றியமையாமையைக் கருதி எல்லா நிலைகளிலும் அகில இந்திய முறையில் ஒரு புதிய இடைநிலை மொழி ஏற்பட்டிருத்தல் கூடும். உண்மையைக் கூறுமிடத்து இதற்கு முந்திய காலங்களில் உருது மொழியும் ஹிந்தி மொழியும் இதுபோன்ற ஒரு சூழ்நிலையில்தான் வளர்ச்சி அடைந்தன. அப்படித் தோன்றுகிற அகில இந்திய இடைநிலை மொழி எல்லா மொழிகளிலிருந்தும் ஒரு சிறு பகுதியை பெற்று வளரும். ஆதலால் அப்படி கிடைக்கின்ற மொழி, அரசியல் அமைப்பின் 351-வது விதி எங்ஙனம் ஹிந்தியை பல்வேறு பிராந்திய மொழிகளிலிருந்தும் சொல்லாட்சி முதலியவை பெற்று வளர்க்க வேண்டும் என்று கருதிற்றோ அந்த மொழியிலிருந்து அதிகம் மாறுபட்டு இருக்கப் போவதில்லை. அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளும் 351-வது விதியும் வருங்காலத்தை எதிர்ப்பார்த்துச் செய்யப் பட்டவையே யாகும். அதாவது சூழ்நிலையின் அவசியத்திற் கேற்ப நீண்ட காலம் பொறுத்திருந்து அந்தச் சூழ்நிலையை அதன் இயல்பில் விட்டுவிட்டால் இறுதியில் அதனால் என்ன பயன் விளையுமோ அந்தப் பயனை வேண்டும் என்றே குறுகிய கால அளவில் செய்ய முயல்வதாகும் இது.

18. இந்த விதியில் எதிர்பார்க்கப்பட்டபடி ஹிந்தி மொழியை ஆக்குவதற்குச் சில குறிப்பிட்ட பகுதிகளைக் கவனிக்கவேண்டும் என்பதை நாங்கள் சொல்ல விரும்புகிறோம்.

எங்களுடைய விசாரணையின் போது இப்போழுது ஹிந்தி மொழி வளர்கின்ற இயல்பு பற்றியும் குறிப்பிட்ட சாட்சியாளர்களின் கருத்துப்படி இந்த மொழி எங்ஙனம் வளர வேண்டும் என்பது பற்றியும் எங்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டன. அனைவருமே இந்த மொழி எளிமையானதாகவும் விரைவில் புரிந்துகொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். வேறு வகையாக கூறியிருக்க முடியாது. என்றாலும் "எளிமை" "கடுமை" என்பவற்றின் பொருள் பற்றியும் "புரியக்கூடியது" "புரியக்கூடாதது" என்பவற்றின் பொருள் பற்றியும் மிகக் கடுமையான கருத்து வேறுபாடுகள் இருந்து வந்தன. உதாரணமாக டெல்லி–பஞ்சாப் பகுதிகளில் எல்லை மீறிய வடமொழிச் சொற்களை ஹிந்தியில் புகுத்துவிட்டபடியாலும் "பல்லை உடைக்கும்" புதிய சொற்களை இலக்கிய ஹிந்தியில் புகுத்திவிட்ட படியாலும் புரிந்துகொள்ள முடியாத நிலையில் போய்விட்டது என்று குறை கூறினார்கள். இதன் மாறுதலையாக, ஏனைய பிராந்தியங்களில் அதிகம் பழக்கம் இல்லாத, உருது பர்ஸ்ய சொற்களை சேர்க்காமல் அதிகப்படியான வடமொழிச் சொற்களை சேர்த்தால் எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது என்றும் கூறினார்கள். இதனுடைய உண்மை என்னவென்றால் நம்முடைய நாட்டைப் போன்ற பலவேறு மொழிகளையுமுடைய ஒரு பரந்துபட்ட நாட்டில் ஒரு பகுதியில் எளிமையானது, புரிந்துகொள்ளக் கூடியது என்று சொல்லப்படுகின்ற ஒன்று, மற்றொரு பகுதியில் உண்மையிலேயே கடுமையுடையதும் புரிந்துகொள்ள முடியாததும் ஆக இருக்கிறது.

உருது மொழியிலிருந்தோ வட மொழியிலிருந்தோ சுருங்கிய எளிய வார்த்தைகளைக் கைக்கொள்வதா அல்லது நீண்ட கடினமான வார்த்தைகளைக் கைக்கொள்வதா என்ற பிரச்னை எழும்பொழுது அந்த பிரச்னை ஒரே ஒரு வார்த்தையைப் பற்றி இருக்குமானால் அதிகத் தொல்லை இல்லை. இரண்டு வார்த்தைகளும் எளிமையாக இருந்து, ஆனால் முன்னையப் பழக்கம் காரணமாக ஒரு பகுதியில் ஒருவார்த்தை நன்குபுரியக்கூடியதாகவும் மற்றொரு பகுதியில் மற்றொரு வார்த்தை நன்கு புரியக்கூடியதாகவும் இருக்கும்பொழுதுதான் கடுமையான பிரச்னை வருகிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் இவை இரண்டு வார்த்தைகளையுமே ஒரு பொருள் உடையனவாக, அல்லது ஒரே பொருளை அறிவிக்கும் மாற்றுச் சொற்களாக நெடுங்கணக்கில் சேர்ந்துவிடலாம் என்பதே எங்கள் கருத்து. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் அதிக வடமொழித் தொடர்புடைய ஒரு கிளையுடனும், அதிக உருது தொடர்புடைய ஒரு கிளையுடனும் ஹிந்தி மொழி இரண்டு கிளைகளில் வளர்ச்சி அடைந்தால் அதனால் தவறில்லை என்றே நினைக்கிறோம். சாதாரணப் பேச்சு நடையில் இப்படிப்பட்ட பொருத்தமின்மைகளைப் பெரிதாக எடுத்துக் காட்டுவது இயல்புதான் என்பதை மறந்துவிட வேண்டாம். பொதுமக்கள் எப்பொழுதுமே புலவர்களுடைய உயர்ந்த நடைக்கும் கடுமையான சொல்லாட்சிகளுக்கும் தாங்கள் உட்படுவதாக கருதிக்கொண்டு பேசுவது வழக்கம். குறிக்கோளை மறவாமல் நல்ல மனப்பான்மையோடு இது சொல்லப்பட்டால் இதிலிருந்து கிடைக்கின்ற ஒரு பொழுதுபோக்கை அனுபவித்து விட்டுவிடுவதில் தவறொன்றுமில்லை. என்றாலும் இவ்விஷயங்கள் பற்றிய கொள்கை வகுக்க வேண்டியவர்கள் உருது, வடமொழி ஆகிய இரண்டிலும் உள்ள உயர்ந்த சொற்கள் என்று சொல்லப்படுபவற்றை நீக்கிவிட்டுப் பார்த்தால் பொதுமக்களுக்கு தேவையான சொற்களைப் பொறுக்குவதில் தொல்லை ஒன்றும் இராது என்றும் சொல்லலாம். ஏதாவது சிறு தொல்லை ஏற்பட்டாலும் அதனைப் போக்குவதற்கு இரண்டு வார்த்தைகளையுமே விருப்பமானால் பயன்படுத்திவிடலாம்.

நம்முடைய நாட்டைப் போன்ற ஒரு பெரிய நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பரவியுள்ள யூனியன் மொழியில்கூட மொழி நடையில் சிறு சிறு மாறுபாடுகளும் வேறுபாடுகளும் வழக்கில் இருப்பது இயல்பே. ஹிந்தியோடு தொடர்புடைய கிளை மொழிகளை வீடுகளில் பேசும் பல பிராந்தியங்களில் ஹிந்தியைப் பொது மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றாலும் அவ்விடங்களிலும் கூட இவ்வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லாப் பகுதிகளிலும் ஏறத்தாழ நிலையான பேச்சு மொழியையுடைய ஐக்கிய அமெரிக்காவிலும்கூட பல்வேறு பகுதிகளில் பல்வேறு இனத்தாருடைய பேச்சு மொழிகளும் குறிப்பிட்ட வேறுபாடுகளைப் பெற்றுள்ளன. உண்மையைக் கூறுமிடத்து இங்கிலாந்தைப் போன்ற சுருங்கிய இடத்தையும் ஒரே வகையான மக்களையும் கொண்டுள்ள பகுதிகளில்கூட இது இவ்வாறுதான் இருந்து வருகிறது. நம்மிடையே யுள்ள ஹிந்தியில் கிளை மொழி வேறுபாடுகள் எவ்வளவு இருப்பினும் அடிப்படையில் தரமான இலக்கிய ஹிந்தி அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நிலையில் "கறிபோலி"யின் அடிப்படையில் தோன்றியதாக இருத்தல் வேண்டும். பெரும்பாலான மக்களால் புரிந்துகொள்ளக்கூடியதும், "**அனைத்திந்திய மொழியாக**" ஏற்கனவே இருந்து வருவதும், புகைவண்டி நிலையங்களிலும், பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து கூடுகின்ற யாத்திர ஸ்தலங்களிலும், பலரும் புரிந்துகொள்ளக் கூடியதும் ஆகிய இந்த ஹிந்தி மொழியைத்தான் யூனியன் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதையல்லாமல் சில சமயங்களில் வடமொழி வார்த்தைகளைத் **தத்பவமாகக்கூட** ஏற்றுக்கொள்ளாமல், **தத்சமமாகவே** ஏற்றுக்கொள்ளும் வடமொழி ஹிந்தியையோ இதன் மாறுதலையாக அரபியாக்கப்பட்டு அதனுடைய கதைகள் புராணங்கள் முதலியவற்றோடு தொடர்புடைய ஹிந்தியையோ யூனியன் மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை.

இந்த ஹிந்தி மொழி பல்வேறு பிராந்திய மொழிகளிலிருந்தும் சொற்களையும் சொல்லாட்சிகளையும் ஏற்றுக்கொண்டு அதற்கேற்ற கலைச்சொற்களை

யும் பெற்று இருப்பதனால் தரமான இலக்கிய மொழியன்று என்று யாரும் இதனைக் குறைக் கூற மாட்டார்கள். இந்த முறைகளில் "வளம்படுத்தப்படுவதோடு" அல்லாமல் புதிய கலைச்சொற்களையும் பிரத்யேகமாக தொழில் நுட்பச் சொற்களையும் பெற்று எதிர்காலத்தில் ஹிந்தி மொழி வளர்வதோடு மற்றொரு வகையிலும் மாறுதல் அடையும். அதாவது அகில இந்திய நிலையில் இது இடைநிலை மொழியாக ஆகப்போவதனால் ஹிந்தி அல்லாத பல்வேறு தாய்மொழிகளுடைய பிராந்தியங்களில் உள்ளவர்களும் பேசப் போகின்ற காரணத்தால், இதில் சில மாறுதல்கள் ஏற்படலாம். எதிர்காலத்தில் ஒவ்வொரு இந்தியனுக்கும் ஹிந்தி மொழி பொதுவாகவே இருக்கும் ஆதலால் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகள் காரணமாகவும் பெரும் பகுதியான மக்கள் என்ற காரணத்திற்காகவும் ஹிந்தி பேசாத மக்கள் யூனியன் மொழியாகிய ஹிந்தியை ஓரளவு மாற்றி அமைக்கவும் முற்படலாம்.

போகிற போக்கில் மற்றொன்றையும் குறிப்பிட வேண்டும். இந்தப் பெரிய துணைக் கண்டத்தில் யூனியன் மொழியை உச்சரிக்கும் முறையில் பிராந்திய வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். யுனைடட் கிங்டம் ஆகிய மிகச் சிறிய ஒரு பகுதியில் கூட இத்தகைய வேறுபாடுகள் ஏற்படத்தான் செய்கின்றன. எதிர்காலத்தில் வளரக்கூடிய ஹிந்தி, இந்தியாவில் பல்வேறு மொழி பேசுபவர்களாலும் புதிய உச்சரிப்புடனும் அழுத்தத்துடனும் பேசப்படும் ஆதலால் பல்வேறு வகைப்பட்ட உச்சரிப்பு முறைகளை எதிர்பார்க்கலாம். தவிர்க்க முடியாத இதனை ஏற்றுக்கொள்ளும்பொழுது ஒரே தரமாக உச்சரிப்பு முறை ஒன்றை ஏற்படுத்தி, ஆங்கில மொழிக்கு "கிங்ஸ் இங்கிலிஷ்" இருப்பதுபோல இதற்கும் ஒன்றைச் செய்ய முயலலாம். இத்தகைய ஹிந்தியில் உச்சரிப்பு முறையை அகில இந்திய ரேடியோவின் ஒலி பரப்பின் மூலம் பரப்பலாம்.

19 351-வது விதியோடு தொடர்புடையது அன்று என்றாலும் ஹிந்தி மொழியின் வளர்ச்சியைப் பற்றி பேசும்பொழுது மற்றொரு ஆலோசனையையும் சொல்ல விரும்புகிறோம். ஹிந்தி மொழி பேசாதவர்கள் இம்மொழியைக் கற்றுக்கொள்ளுவதற்கு சௌகரியம் செய்யும் முறையில் இம்மொழியின் இலக்கணத்தில் சில சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று எங்களிடம் கூறப்பட்டது. இது பற்றிச் சொல்லப்பட்ட இரண்டு முக்கியமான கருத்துக்களை கீழே தருகிறோம் :—

ஹிந்தி மொழி வழங்காத மற்றப் பிராந்தியக்காரர் இம்மொழியைக் கற்றுக்கொள்ளும்பொழுது அனுபவிக்கின்ற தொல்லையின் பெரும் பகுதி ஹிந்தியின் பால் பிரிவினையிலுள்ள சிக்கல்தான் என்று எங்களிடம் சொல்லப்பட்டது. ஹிந்தியின் பால் பிரிவினை வல்லான் வகுத்தத் அமைந்தது அஃறிணைப் பொருள்களும்கூட ஆண்பால் பெண்பால் பிரிவினைப் பெற்றுள்ளன. மேலும் பெயர்ச் சொற்களைத் தழுவி வரும் உரிச்சொற்கள்கூட இந்தப் பால் பிரிவினைக்கேற்ப மாறி வரும் இயல்பைப் பெற்றுள்ளன. வினைச் சொற்களும் கூட இப்பால் பிரிவினைக்கேற்ப வேற்றுமை மாற்றங்கள் அடைகின்றன. எனவே ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் தேவைப்பட்டால் ஒரே ஒரு பாலை மட்டும் அதாவது ஆண்பால் வடிவத்தை மட்டும் பயன்படுத்த உரிமை வழங்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டது. அதாவது ஹிந்தி மொழியை அறியாதவர்கள் பேசும்பொழுது ஹிந்தி மொழி அறிந்தவர்கள் பெண்பாலாக குறிப்பிடும் பொருள்களைக்கூட ஆண்பாலாகவே குறிப்பிட்டு பேசலாம் என்பதாகும் இ . இது பற்றி மேலும் கூறுகையில் ஹிந்தி மொழி பேசாத மக்கள் பன்மையைக் குறிக்குமிடத்தும் கூட ஒருமைச்சொற்களை பயன்படுத்தலாம் என்றும் ஆலோசனைச் சொல்லப்பட்டது. அதாவது ஹிந்தி மொழி பேசாத மக்கள் "எக் ஆத்மி ஆயா" என்றும் "தஸ் அவுத் ஆயா" என்றும் சொல்ல உரிமை வழங்க வேண்டும் என்பதாகும். இதுபோன்ற எளிமை முறைகளை ஹிந்தி இலக்கணத்தில் புகுத்துவது நடைமுறைக்கு ஏற்றதா இல்லையா என்பது பற்றியும், அப்படி புகுத்தினால் அது

செம்மையான ஹிந்தி வழக்கத்தோடு ஏற்றுக்கொள்ளப்படுமா என்பது பற்றியும் நாங்கள் ஒன்றும் முடிவு செய்ய விரும்பவில்லை. இந்த வாதத்திலுள்ள சில குறைப்பாடுகளை மட்டும் நாங்கள் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். "பிழைகள்" என்று கருதப்படுகின்ற இலக்கண பிழைகளைக் குறிப்பிட்ட சில கூட்டத்தார் மட்டும் செய்து கொண்டிருக்கும் உண்மை தருவதோ சட்டஞ் செய்வவதோ அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஒரு ஹிந்தி எழுத்தாளர் அவருடைய தாய்மொழியில் எழுதும்பொழுது இப்படிப்பட்ட இலக்கண பிழைகளைத் தொடர்ந்து செய்வாரேயானால் அவருடைய எழுத்து நல்ல இலக்கியமன்று என்று சொல்லப்படும். அது தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த பிழையை ஹிந்தி அறியாத ஒருவர் ஹிந்தியைக் கற்றுச் செய்வாரேயானால் இலக்கிய ஹிந்தியே அறிந்தவர்கள் அதனை தவருக எடுத்துக்கொள்வதை எந்தச் சட்டமும் மாற்ற முடியாது. இத்தகைய ஹிந்தியை நல்ல அறிஞர்கள் கூடி இதுதான் "நல்ல ஹிந்தி" என்று ஒப்புக்கொண்டு இதையே இலக்கிய வடிவம் என்று ஏற்றுக்கொண்டால் ஒழியத் தனிப்பட்டவர்களுக்குச் சில சலுகைகளை வழங்குவது நிலைமையை மாற்றிவிடப்போவதில்லை. யார் இவ்வாறு எழுதினுலும் ஹிந்தி அறிந்தவர்கள் இதனைத் தவருன ஹிந்தி என்றே கூறுவார்கள். இத்தகைய "எளிமையாக்கப்பட்ட ஹிந்தியை" நல்ல ஹிந்தி என்று ஏற்றுக்கொள்ளாத வரையில் அதனை ஹிந்தி மொழி அறியாதவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதனுல் யாதொரு பயனும் இல்லை.

எனவே ஹிந்தி இலக்கணத்தை அனைவருக்கும் ஒத்த முறையில் எளிமைப்படுத்த முடியுமா என்பதுதான் இப்பொழுதைய பிரச்னை. ஒரு மொழியின் இலக்கணத்தை வேண்டுமான பொழுது மாற்றிவிட முடியாது. நாளாவட்டத்தில் பெருவாரியான ஹிந்தி மொழி பேசாதவர்கள் அதனைக் கற்றுக்கொண்டு அம்மொழியில் பேசும்பொழுது அம்மொழியின் சொற்கள், சொல்லாட்சி, இலக்கணம் ஆகியவற்றில் ஏதாவது வேறுபாடுகள் ஏற்படுமா என்பது பற்றி யாருமே இப்பொழுது ஒன்றும் கூற முடியாது.

செய்தித்தாள் நிலையங்களும் இந்திய மொழிகளும்.

20. நாட்டின் மொழிப் பிரச்னையே ஆராயும்பொழுது செய்தித்தாள் நிலையங்கள் தேசிய வாழ்க்கையின் "அகத்துறை பிரிவில்" ஒரு முக்கியமான பகுதி என்று. பகுதி 4-ல் குறிப்பிட்டுள்ளோம். செய்தித்தாள் நிலையங்கள் அரசாங்க அலுவல்களுக்கு அப்பாற்பட்டதாயினும் இந்தியாவைப் பொறுத்த மட்டில் உள்ள இந்நிலையங்களைப் பற்றி இந்த சந்தர்ப்பத்திற்கேற்ப ஒன்று சொல்லவேண்டியதாக உள்ளது. அதாவது செய்திகளை ஹிந்தி மொழியின் மூலமாகவும் இதுமானல் ஏனைய பெரிய பிராந்திய மொழிகளின் மூலமாகவும் இந்திய மொழி செய்தித்தாள்களுக்குத் தருவதாகும்.

செய்தித்தாள் கழகம் சமீபத்தில் இந்திய அரசாங்கத்தால் நிறுவப்பெற்று செய்தித்தாள்கள் இதழ்கள் ஆகியவற்றின் நிலையை ஆராய்ந்துள்ளது. அந்தக் கழகத்தின் கணக்குபடி இப்பொழுது வெளியிடப்படும் 330 தினசரித் தாள்களில் 40 ஆங்கிலத்திலும் ஏனைய இந்திய மொழிகளிலும் உள்ளனவாம். ஹிந்தியில் 76-ம் உருதுவில் 70-ம் செய்தித்தாள்கள் உள்ளன. 25 லட்சம் சந்தாத்தாகளில் 7 லட்சம் ஆங்கிலத்திற்கும் 3·79 லட்சம் ஹிந்திக்கும் 2·13 லக்ஷம் உருதுவுக்கும் ஏனையவை ஏனைய பிராந்திய மொழிகளுக்கும் இருக்கிருர்கள். இந்தக் கழகம் தான் நடத்திய விசாரணையில் இந்த நாட்டிலுள்ள தினசரி செய்தித்தாள்கள் பெரும்பாலும் நகரங்களிலிருந்தே நடத்தப்படுவதால் இந்தியாவின் ஜனத்தொகையில் பெரும் பகுதியைக் கொண்டுள்ள கிராமங்களுக்குள் குறைவாகவே நுழைத்துள்ளன என்றும் கூறியுள்ளார்கள். ஒப்புமை முறையில் பேச வேண்டுமானுல் ஆங்கிலச் செய்தித்தாள்கள் அதிகம் நகரப் பகுதிகளிலும், இந்திய மொழிச் செய்தித்தாள்கள் கிராமப்பகுதிகளில் மிகுதியாகவும் செல்கின்றன. கல்வி அறிவு வளர்ச்சி அடையும்பொழுது செய்தித்தாள்கள் படிப்பவர்களின்

எண்ணிக்கை நகரப் பகுதிகளைக் காட்டிலும் கிராமப்பகுதிசளில் மிகுதியும் விருத்தி அடையும். ஆங்கிலப் பத்திரிகைகளில் சந்தாக்களை விருத்தி செய்வதற்கு அதிக சந்தர்ப்பம் இல்லை. ஆனால் இந்திய மொழிப்பத்திரிகைகள் நிறைந்த வாய்ப்புக்களைப் பெற்றுள்ளமையின அடுத்த சில வருஷங்களில் இன்றுள்ளதைப்போல் இரண்டு பங்கு சந்தாதார்களைப் பெறக்கூடும்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் செய்தி வழங்கும் அமைப்புக்கள் பற்றியும் இந்திய மொழிப் பத்திரிகைகளுக்கு இந்திய மொழிகளின் மூலமாகச் செய்திகளை வழங்கும் பிரச்னை பற்றியும் ஆராய வேண்டும். இந்தியாவின் இரண்டு பெரிய அமைப்புக்கள் பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியாவும யுனைட்டட் பிரஸ் ஆப் இந்தியாவும் ஆகும். இந்த இரண்டு நிலையங்களும் உள்நாட்டுச் செய்தியையும் வெளிநாட்டுச் செய்திகளையும் எல்லா பத்திரிகைகளுக்கும் ஆங்கிலத்தில் வழங்கி வருகின்றன. இதன் பயனாக இந்திய மொழிப் பத்திரிகைகள் இந்த செய்திகளை ஆங்கலத்திலிருந்து மொழி பெயர்க்கப் பெருவாரியான ஊழியர்களை நியமிக்க வேண்டியுள்ளது. இங்ஙனம் மொழி பெயர்ப்பதனால் ஏற்படுகின்ற பெரும் செலவையும் தொல்லையையும் நினைத்து, இனி எதிர்காலத்தில் இந்திய மொழிப் பத்திரிகைகளுக்கு உள்ள வளர்ச்சியையும் நினைத்து, செய்திகளை இந்திய மொழிப்பத்திரிகைகளுக்கு ஒரு இந்திய மொழியின் மூலமாகவோ அல்லது பல இந்திய மொழிகளின் மூலமாகவோ வழங்கும் பிரச்னை பெரிதாக எழுந்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு வசதி செய்து தரக்கூடுமானால் இந்திய மொழிப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு அது ஒரு பெரிய தூண்டுதலாகும். இத்தகைய செய்தி அமைப்புக்களை மாற்றி அமைப்பது பற்றியோ அதனுடைய தொழில் தன்மையை மாற்றுவது பற்றியோ அல்லது வேறு சில புதிய அமைப்புக்களை ஏற்படுத்துவது பற்றியோ அந்த அமைப்புக்கள் எங்ஙனம் செய்திகளை பரப்பவேண்டும் என்பதைப் பற்றியோ நாங்கள் ஒன்றும் கூறவில்லை. இவற்றை எல்லாம் செய்தித்தாள் கழகம் ஆராய்ந்துள்ளது. அன்றியும் இந்தச் செய்தி அமைப்புக்கள் தங்களுடைய வாடிக்கைக்காரர்களுக்கு எந்த முறையில் செய்திகளை அனுப்பவேண்டும் என்ற தொழில் முறை பற்றியும் நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. நாங்கள் சொல்வதெல்லாம் இந்திய இடைநிலை மொழி (களின்) மூலமாகச் செய்தி அனுப்பும் முறையை மேற்கொண்டால் இந்திய மொழிப் பத்திரிகைகளுக்கு இது பேருதவியாக இருக்கும் ஆதலால் இது பற்றி ஆராய்ந்து இதைச் செயற்படச் செய்யும் கடமை அரசாங்கத்திற்கு உரியது என்பதை மட்டும் நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

ஒன்றுக்கு மேற்பட்ட இந்திய மொழியின் மூலம் செய்திகளைச் சேகரித்து அனுப்புவது எவ்வளவு தூரம் லாபகரமானது என்பது பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லமுடியாது. ஒவ்வொரு நிலையிலும் செய்தி அமைப்புக்கள். அவ்வாறு வழக்கம் உண்டானால் ஒரு அதிகப்படியான இந்திய மொழியின் மூலம் செய்தி தருவது சரியே. இந்தச் செய்திகள் ஒரே ஒரு இந்திய மொழியின் மூலமாகத்தான் அனுப்ப முடியும் என்றால் அது ஹிந்தியாகத்தான் இருக்கும். செய்தி அனுப்பினாலும் கூட ஒரு இந்திய மொழியிலுள்ள அதனை மற்றொரு இந்திய மொழியில் மொழி பெயர்ப்பது ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்ப்பதைக்காட்டிலும் எளிமையானதாகும். எனவே இந்திய மொழியின் மூலம் செய்திகளை தருவது, அது ஒரே ஒரு இந்திய மொழியின் மூலம் தரப்படினும், எல்லா இந்திய மொழிப் பத்திரிகைகளுக்கும் பெரிய உதவியாகவே இருக்கும்.

மேலும் தேவநாகரி எழித்துக்களில், ஏனைய இந்திய மொழிகளில் செய்தியை தருவது அந்த அந்தப பிராந்திய மொழி எழுத்துக்களில் செய்திகளைத் தருவதைக் காட்டிலும் மிகவும் வசதியாக இருக்கும். இன்றைய நிலையில் ஆங்கிலத்தில் செய்திகளைத் தருவதோடு அல்லாமல் **ரோமன்** எழுத்துக்களில் அந்த அந்தப் பிராந்திய மொழிகளிலும்கூடத் தரப்படுகின்றன. அதே போல ஹிந்தியில் செய்திகளை அனுப்பும்பொழுது தேவநாகரி எழுத்துக்களிலும் பிராந்திய மொழிகளில் அனுப்பும்பொழுது அதே எழுத்துக்களிலும் அனுப்பப்படலாம். மேலும் இந்தியாவிலுள்ள எல்லா

மொழிகளையும் உச்சரிப்பதற்குத் தேவநாகரி எழுத்துக்கள் நன்கு இடம் தருமாதலால் இம்முறையில் நல்ல வசதி இருக்கும் என்றே நினைக்கிறோம். ஒரு மொழியின் உள்விஷயம் என்ன என்பதைப்பற்றி ஆராயும் பொழுதும் இப்பிரச்னையில் ஒரு பகுதியைக் கவனிக்க வேண்டியுள்ளது. தினசரி செய்தித்தாள்களும் ஏனைய இதழ்களும் இலக்கிய மரபுகளை நிலை நிறுத்துவதற்குப் பெரிதும் உதவுகின்றன. ஒரு ஹிந்தி அமைப்பு இந்திய மொழியின்மூலம் செய்திகளைப் பரப்புவதால் பல்வேறு சொற்களையும், சொல்லாட்சிகளையும், யூனியன் மொழியிலும் ஏனைய பிராந்திய மொழிகளிலும் நிலையான பொருளோடு வழங்குமாறு செய்யலாம். வேறு பயன் ஒன்றும் இல்லாவிட்டாலும் இந்த ஒரு காரியத்தைக் கருதியேனும் இந்திய மொழியின்மூலம் செய்தி தருவதை ஏற்றுக்கொண்டு அதற்கான உதவிகளை அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்.

பகுதி XIV

தேசிய மொழித் திட்டத்தை நிறைவேற்றும் அமைப்புகள் முதலியன.

1. இந்தப் பகுதியில் தேசிய மொழிகளில் திட்டங்களை நிறைவேற்றுதற்குரிய அமைப்புக்கள் பற்றி ஆராயகின்றோம்.

ஆட்சித்துறையில் மொழி மாற்றம் செய்யக் கருதும்பொழுது, ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் ஒரு திட்டப்படி படிப்படியாக ஆங்கிலத்தை நீக்கி, ஹிந்தி மொழியைப் புகுத்தி இருக்கிறார்கள் ஆதலின் அவர்களுடைய அனுபவங்களிலிருந்து சில படிப்பினைகளை அறிய வேண்டும். இந்த ராஜ்ய அரசாங்கங்களுள் சில, அவைகளினுடைய மொழிக்கொள்கையை நிறைவேற்றுதற்கு வசதியாகச் செயலாளர் அலுவலங்களில் சில பகுதிகளை ஒதுக்கிவிட்டு இக்காரியத்தை மேற்பார்க்கச் செய்துள்ளன. மொழி மாற்றம் செய்வதனால் இதற்கெனப் பல செயல்களை மேற்கொள்ள வேண்டும். அதாவது, அதற்குரிய ஊழியர்களைப் பொறுக்கிப் பயிற்சி தருதல், சுருக்கெழுத்து, தட்டெழுத்து முறைகளை ஒழுங்குப்படுத்துதல், இதற்கேற்ற கருவி முதலியவற்றைப் புதிய மொழி மாற்றத்திற்கு ஏற்ற முறையில் அமைத்தல், ஆட்சித்துறை, சட்டத்துறைகளில் கலைச் சொற்களை ஆக்குதல், அந்த இலாக்காக்குரிய சட்ட நூல்கள், ஒழுங்கு முறை நூல்கள் முதலியவற்றை மொழி பெயர்த்தல் என்பன போன்ற வேலைகளாம். இறுதியாக அரசாங்கத்தின் எந்த ஒரு பகுதியிலாவது இம்மொழி மாற்றம் செய்வதில் தொல்லைகள் ஏற்பட்டால் அதனைப்போக்குவதற்குரிய ஓர் அமைப்பை ஏற்படுத்தி அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அனைவரும் கடைப்பிடிக்கும்படியாகச் செய்யும் ஒரு அமைப்புத் தேவை.

யூனியன் அரசாங்கத்திலும் இடைநிலை மொழி மாற்றம் செய்யப்படும்பொழுது இவை போன்ற வேலைகள் அனைத்தும் தோன்றத்தான் செய்யும். இவற்றை அல்லாமல் ஏனைய ராஜ்யங்களில் இது போன்ற மொழிக்கொள்கையை நிறைவேற்றம் செய்வதற்கு யூனியன் அரசாங்கமே முன்மாதிரியாக அமைய வேண்டி இருத்தலின், யூனியன் அரசாங்கம் இவ்வேலைகளை எல்லாம் தேவையான அளவுக்கு ஒருமைப்படுத்தவும் முன்வர வேண்டும். உதாரணமாகச் சுருக்கெழுத்து முறையை நிர்ணயித்தல், தட்டெழுத்து கீ போர்டை நிர்ணயித்தல், ஆட்சித்துறைக் கலைச்சொற்களை நிர்ணயித்தல், குறிப்பு எழுதல், கடிதப்போக்குவரத்துச் செய்தல் ஆகியவற்றில் ராஜ்ய அரசாங்கங்களுக்கும் யூனியனுக்கும் ஒருமைப்பாடு இருத்தல் அவசியம் ஆதலின் இவை பற்றிய ஆரம்ப வேலை யூனியனிலேயே நடைபெற வேண்டும். ஒருமைப்படுத்தும் வேலை ஒருபுறம் இருக்க யூனியன் அரசாங்கத்திற்குள்ளேயே இம்மொழி மாற்றத்தை அமைதியாக மேற்கொள்ள வேண்டுமானாலும் கூட, யூனியன் அரசாங்கத்தின் பல்வேறு வகையான இலாக்காக்களையும் வேலைச் சிக்கல்களையும் நினைத்துப் பார்க்கும்பொழுது அது மிகப் பெரிய தொன்றாகவே தோன்றுகிறது. மிகப் பெரிய அளவில் அன்றாட அரசாங்க அலுவல் நடைபெறவேண்டிய சட்டங்கள், கட்டளைகள், ஒழுங்கு முறைகள் ஆகிய நூல்களை மொழி பெயர்த்து ஆக வேண்டும். இவற்றின் முதல் மொழி பெயர்ப்புக்களை அந்த அந்த அமைச்சுக்களும் ஆட்சித் துறைகளும் தயார் செய்து இவற்றுள் ஒரே தன்மையான சொல்லாட்சி இருந்ததற்காக ஓர் அமைப்பினிடம் கொடுத்து அதனைச் சரிசெய்து பின்னரே ஏற்றுக் கொள்ள வெண்டும்.

அடுத்தபடியாக இவற்றோடு தொடர்புடைய சட்ட மன்றத்திலும், நீதி மன்றத்திலும் மொழி மாற்றம் செய்யும்பொழுது நிறைந்த அளவ தொடக்க வேலை செய்ய வேண்டி நேரிடும். அவையாவன. சட்ட அகராதி தயாரித்தல், சட்ட நிறைவேற்றங்களை ஹிந்தியில் செய்தல், நீக்கப்படாத

மத்திய சட்டங்களை ஹிந்தியில் மொழி பெயர்த்தல், பல்வேறு ராஜ்யங்களில் நிலைச்சட்ட நூல்களை ஹிந்தியில் மொழி பெயர்த்தல் ஆகிய இவை எல்லாம் செய்யப்பட வேண்டும். இவற்றை அல்லாமல் இரண்டு வகை வேலைகள் மத்திய ஆட்சியின்கீழ் செய்யப்படவேண்டும். அவையாவன. கல்வித் துறையில் நடைபெற வேண்டிய வேலைகளையும், யூனியன் மொழியையும், பிராந்திய மொழிகளையும் வளர்த்தற்கான வேலைகளையும் செய்தலாம்.

கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் ராஜ்ய அரசாங்கங்களும் பல்கலைக் கழகங்களும் அந்த அந்தத் துறையில் முடிவு செய்யவேண்டும். மேலும் அரசியல் அமைப்பின் 7-வது ஷெட்யூலில் யூனியன் பட்டியலில் சொல்லப் பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றவேண்டி, அதாவது “உயர்தரக் கல்வி, ஆராய்ச்சிப் பகுதி, விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைப்புக்கள் ஆகியவற்றில் தரங் குறையாமல் ஒருமைப்பாடு செய்ய வேண்டும்” என்ற பகுதியை நிறை வேற்றுவதற்காக இந்த முக்கியமான பகுதியில் தேசீய மொழிக்கொள் கையை ஓயாமல் மத்திய அரசாங்கம் கண்காணித்து வரவேண்டும். அன் றியும் புதிய கலைச் சொற்களில் ஒரே மாதிரியான தன்மை இருக்கவேண்டும் என்றால், அதுவும் மத்திய அரசாங்கத்தின் கீழேயே செய்யப்படவேண்டும். கல்வித்துறையில் பல்கலைக் கழக நிலையில் மொழி மாற்றம் செய்ய வேண்டுமானால் பாடப் புஸ்தகங்கள், துணை இலக்கியங்கள் ஆகியவற்றைத் தயார் செய்யும் பெரிய வேலை இருக்கிறது. இத்துறையில் மத்திய அரசாங் கத்தின் உதவியைப் பெற்று ஒருமைப்பாட்டையும் அதன்கீழ் பெறுவது அனைவருக்கும் உதவியாக இருக்கும்.

இறுதியாக ஹிந்திப் பேசாத பிராந்தியங்களில் ஹிந்தியையும் ஹிந்திப் பேசும் பிராந்தியங்களில் ஏனைய மொழிகளையும் பரப்புவதற்குரிய வேலை இருக்கிறது. சென்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி, ஹிந்தியையும் பிராந் திய மொழிகளையும் வளர்த்தற்குரிய வேலையும் அரசியல் அமைப்பின் 351-வது விதியில் சொல்லப்பட்ட வேலைகளும் எஞ்சியுள்ளன.

2. ஆட்சித் துறையைப் பொறுத்த மட்டில் அவ்வேலையின் பல்வகைச் சிக்கல்கள், இடையூறுகள், பல துறையான வேலைகள், அமைப்புக்கள், என்பவற்றைக் கருதி உயர்ந்த அதிகாரி ஒருவரின்கீழ் இந்த எல்லா பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட வேண்டும். “யூனியன் மொழி அமைச்சு” என்ற பெயரிலாவது, இன்னும் பரந்த முறையில் “இந்திய மொழிகள் அமைச்சு” என்ற பெயரிலாவது அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நிறைவேற்றும் ஒரு தனி அமைச்சை ஏற்படுத்த நாங்கள் சுபாரிசு செய்ய வேண்டும் என்றும் எங்களுக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. குறிப்பிட்ட ஒரு பகுதியினரின்கீழ் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதைத் தவிர இதனை ஒரு அமைச்சின் கீழோ அன்றி ஒரு பகுதியின்கீழோ எவ்வாறு ஒப்படைக்க வேண்டும் என்பதை அரசாங்கப் பொறுப்பிலேயே விட்டுவிடுகிறோம். எத்தனை அமைச்சுக்களை அமைத்து வேலைகளை எங்ஙனம் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்பதையும் அரசாங்கமே முடிவு செய்ய வேண்டும். இவற்றை நிர்ணயித்து நிறைவேற்றும் வேலை ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பதையும், அப்பகுதிக்கு தலைமைத் தாங்குபவர் தேவையான தகுதியுடைய ஒரு அதி காரியாக இருக்கவேண்டும் என்பதையும் தவிர ஏனையவற்றை அரசாங்கமே முடிவு செய்ய விட்டுவிடுகிறோம்.

நீதித் துறையைப் பொறுத்த மட்டில் இதனை நிறைவேற்றச் செய்யும் பொழுது அரசாங்கம் மிக உயர்நீதி மன்றத்தையும் அதன் பிரதிநிதிகள் என்ற முறையில் சில உயர் நீதி மன்றங்களையும் கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமா என்பதையும் முடிவு செய்யவேண்டும்.

ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தியைப் பரப்பும் முறையில் இந்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சுக்கு ஆலோசனைகள் கூற விரிவான

முறையில் சமீபத்தில் மாற்றி அமைக்கப்பட்ட ஹிந்தி சிக்ஷா சமிதி இருக்கின்றது. ஹிந்திப் பிராந்தியங்களில் ஏனைய மொழிகளைப் பரப்புவதற்குக் கல்வித்துறையின் மூலமே முடியும் ஆதலால், யூனியன் கல்வி அமைச்சே இதனைத் தலைமை ஏற்று நடத்தவேண்டும்.

3. சட்டம், ஆட்சி என்ற இரு துறைகளிலும் மொழிக் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு ராஜ்யங்களின் பிரதிநிதிகளோடு கூடிய ஒரு ஆலோசனைக் கழகத்தை மத்திய அரசாங்கத்தில் ஏற்படுத்திக்கொள்வது இவ் வேலைகளில் ஒருமைப்பாட்டைக் காண்பதற்கு நலமாக இராதா என்பது ஆராயப்படவேண்டிய ஒன்று ? ஹிந்தி பேசாத ராஜ்யங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஹிந்தி சிக்ஷா சமிதி ஹிந்தியைப் பரப்பும் பிரத்யேகமான துறையை கவனித்துக்கொள்ள ஏற்ற அமைப்பாகும். ஆட்சி, சட்டம் ஆகிய இரு முக்கியமான துறைகளிலும் பொதுவான ஒருமைப்பாட்டைக் காண்பதற்கும் பல மொழிகளின் மூலம் நடைபெறும் வேலையை ஒருமைப்படுத்தவும் இடைவிடாத தொடர்பான ஆலோசனைகள் வேண்டும். அத்தகைய ஒரு ஆலோசனைக் குழு ராஜ்யங்களின் பிரதிநிதிகளோடு மத்திய அரசாங்கத்தில் இருப்பது நன்மை செய்யும் என்று நாங்கள் கருதுகிறோம். இனி நாங்கள் சொல்லப் போகின்ற, ஓரளவு கல்வித் துறை சம்பந்தமானதும், ஓரளவு தானே இயங்கக்கூடியதுமான ஒரு அமைப்பு கலைச் சொற்களின் வளர்ச்சியைக் கவனிக்க ஏற்படுத்தப்பட்டால் முன்னர் சொல்லப்பட்ட ஆலோசனைக் கழகம் இதனால் பாதிக்கப்பட வேண்டியதில்லை.

கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் அகிலப் பல்கலைக் கழகக் கழகம் பல்வேறு பல்கலைக் கழகங்களையும் கலந்து ஆலோசிக்க இருக்கின்றது ஆதலில் ராஜ்ய அரசாங்கங்களைக் கலந்து ஆலோசிக்க அதுவே போதுமானது.

4. கலைச் சொற்களை ஆக்கும் வேலையைப் பொறுத்த மட்டில் மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள ஓர் இலாக்காவைக் காட்டிலும் தாமே இயங்கும் ஓர் அமைப்பு இதனை இன்னும் நல்ல முறையில் செய்யக்கூடும் என்று பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர். தற்பொழுதுள்ள முறையில் விஞ்ஞானக் கலைச்சொல் கழகம் தயாரித்த சொற்களை ஏற்றுக்கொள்ளுமுன், அமைச்சர் குழுவுக்கு ஒப்புதலுக்கு அனுப்புவதாக அறிகிறோம். இனியும் கூட இது போன்ற கலைச் சொற்களைப் பிராந்திய மொழிகளில் தயாரிக்கும் பொழுது அவற்றோடு இதனையும் ஒருமைப்படுத்த வேண்டுமேயானால் அரசாங்கத்தின் ஓர் இலாக்கா இதனைக் கவனிப்பதைவிட யூனியன் அரசாங்கத்தின் கீழுள்ள ஒரு தனிப்பட்ட அமைச்சே இதனைக் கண்காணிப்பது நலமுடையதாகும். முதன் முதலாகக் கலைச் சொற்களை ஆக்கும் விஞ்ஞானக்கலைச் சொல் கழகத்தில் நல்ல பயிற்சியுடைய விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பல்வேறு துறைகளில் பயிற்சி உடையவர்கள் ஆகிய இவர்கள் நிறைந்த அளவில் பங்குகொள்ள வில்லை என்று எங்களிடம் குறை கூறினதை அப்படியே நாங்கள் சமர்ப்பிக்கிறோம். இந்தக் கலைச்சொற்களை ஆக்கும் அமைப்புக்கள் இன்னும் விரிவான முறையில் அமைக்கப்பட வேண்டுமா என்பதை அரசாங்கமே முடிவு செய்யவேண்டும் இவ்வாறு இதனைப் பெருக்குவதைக் காட்டிலும் ஒரே இலாக்காவின்கீழ் ஹிந்தி, பிராந்திய மொழிகள் ஆகிய அனைத்திற்கும் உரிய கலைச் சொற்களை ஆக்கும் வேலை ஒப்படைக்கப்பட்டால் அதிகப்படியான ஒருமைப்பாடு இருக்கும் எனவே அவ்வாறு செய்வது நலமா என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும். இந்த வேலையைத் தவிர, சென்ற பகுதியில் நாங்கள் குறிப்பிட்டுள்ள வளர்ச்சித் துறை வேலைகளைக் கவனிப்பதற்கு ஓரளவு தாமே இயங்குகின்ற, கல்வித் துறையோடு ஓரளவு சம்பந்தமுடைய அமைப்புக்களினிடம் இவ்வேலையை ஒப்படைப்பது நலமுடையதாகாதா ? என்பதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

கலைச்சொற்களின் வேலை, அரசியல் அமைப்பின் 351-வது விதியில் சொல்லப்பட்ட வேலை, யூனியன் பிராந்திய மொழிகளை வளர்க்கும் வேலை

ஆகியவற்றைக் கவனிப்பதற்கு "இந்திய மொழிகள் கழகம்" என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன்கீழ் இவ்வேலைகளை ஒப்படைப்பது சிறந்தது என்று நாங்கள் கருதுகிறோம். இந்தக் கழகத்தில் யூனியன் அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்கள், பல்கலைக் கழகங்கள், தொழில்முறை அமைப்புக்கள், இலக்கிய அமைப்புக்கள் ஆகிய நாட்டின் பல்வேறு துறைகளில் பல்வேறு மொழிகளில் வேலை செய்கின்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும். இந்த அமைப்பின் ஒரு பகுதியில் கலைச்சொற்களின் வேலை நடைபெற வேண்டும். பல்வேறு விஷயங்களைப் பொறுத்த மட்டில் பல்வேறு குழுக்கள் இதனை ஆராயும். இந்தக் குழுக்களில் மொழி வல்லுநர்களும், பண்டிதர்களும், அந்தத் தொழில் துறை சம்பந்தமான பிரதிநிதிகளும், பல்வேறு மொழிகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள் ஆதலால் கூடுமான வரை யூனியன் பிராந்திய மொழிகள் ஆகியவற்றிற்குப் பொதுவான சொற்கள் சேகரிக்கப்படும். உதாரணமாகச் சட்ட அகராதி தயார் செய்வதற்கு வழக்கறிஞர்களும் நடுவணர்களும் மொழி வல்லுநர்களோடுகூடி அந்தக் குழுவில் இருப்பார்கள். இதே போல மற்றத் துறைகளிலும் இருக்கும். இந்தக் கழகத்தின் ஏனைய வேலைகள ஹிந்தி, பிராந்திய மொழிகளை வளர்ப்பதற்கும் இந்தக் கழகமே பல்கலைக் கழகப் படிப்பு முறைக்கேற்ற பாடப் புத்தகங்களைத் தயார் செய்து கிடைக்குமாறு செய்வது ஆகியவற்றையும் கண்காணிக்கலாம். அன்றியும் பல்வேறு மொழிகளில் இத்தகைய பாடப் புத்தகங்களைத் தயாரித்தல் போன்ற வேலையை பல்வேறு பல்கலைக் கழகங்களின் உதவி கொண்டு இந்தக் கழகமே நடத்தலாம். இந்த அமைப்பே விஞ்ஞான இலக்கியங்களையும் ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் தயாரித்து வெளியிடலாம். இந்தக் கழகம் நேரிடையாகத் தானே இவ்வேலைகளைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் நினைக்கவில்லை. பல்வேறு பல்கலைக் கழகங்களும் இந்தக் கழகத்தின் ஆதரவில் இவ்வேலையைச் செய்யலாம். இன்னும் சில வேலைகளைப் பிறர் செய்யுமாறு இக்கழகம் தூண்டலாம். இதற்குரிய அமைப்பு வசதிகள் மிகக் குறைவாக இருத்தலின் உள்ள வசதிகள் அனைத்தையும் இக்காரியத்திற்கு முற்றிலும் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் அலுவல்களுக்கு ஹிந்தி மொழி எந்த அளவு தேவைப்படுகிறதோ அந்த அளவில் பிரத்யேகமான முறையில் அதனை வளர்த்துக்கொள்ள மத்திய அரசாங்கம் முன் வரவேண்டும். அன்றியும் ராஜ்யங்களைப் பொறுத்த வரையில், ஹிந்தி யூனியன் மொழியாக மட்டும் அல்லாமல் அகில இந்திய ஆட்சிக் கடித போக்குவரத்துச்கு உரிய மொழியாதலின் ராஜ்யங்களும் இதனை வளர்ப்பதில் ஈடுபட வேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் பிராந்திய மொழியில் ஆட்சி நடத்தப் போகின்ற சாகலின் அதன் வளர்ச்சியையும் கவனித்துக்கொள்ள வேண்டும். பண்பாட்டு முறையைப் பொறுத்த மட்டில் எல்லா மொழி இலக்கியங்களையும் வளர்ப்பது மத்திய அரசாங்கத்தின் கடமை என்பதை நாங்கள் நினைவூட்டுகிறோம். யூனியன் அரசாங்கம் ஹிந்தி மொழியை ஆதரிக்கிறது என்றும், ராஜ்யங்கள் அந்த அந்தப் பிராந்திய மொழிகளை ஆதரிக்கின்றன என்றும் தவறாகக் கருதப் பட்டமையின் ஓரளவு தொல்லை ஏற்பட்டுள்ளது என்பதை நாங்கள் சொல்ல விரும்புகிறோம். உண்மையில் இங்கே கூறப்பட்ட ஒவ்வொரு அரசாங்கமும் இரண்டிலுமே கருத்துடையன. அதாவது மத்திய அரசாங்கம் எல்லா மொழி இலக்கியங்களையும் வளர்க்கும் கருத்துடையது. ராஜ்ய அரசாங்கங்கள் ஹிந்தி மொழியை வளர்க்கவும் இடை நிலைக் கல்விமுறையில் ஹிந்தியைக் கற்பிக்க ஏற்பாடு செய்யவும் உள்ள பொறுப்பை ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. எல்லா மொழிகளையும் பொறுத்த வளர்ச்சி வேலையை, யூனியன் மொழி உள்பட, ஒரு பொது அமைப்பின் கீழ் கொண்டுவந்து யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் அதில் பங்கு கொள்ளுமேயானால் இந்தப் பிரத்யேகமான சலுகை என்பது, அதாவது, யூனியன் ஹிந்தியையும் ராஜ்ய அரசாங்கங்கள் பிராந்திய மொழிகளையும் ஆதரிக்கின்றன, என்ற குறைபாடு போய்விடும். இதனை வெளியிட வழி "இந்திய மொழிகளின் தேசியக் கழகம்" அமைப்பதேயாகும்.

நாட்டின் தேசீய மொழிக் கொள்கையை நிறைவேற்றும் இந்த அமைப்பில் ராஜ்யங்களும் யூனியனும் பங்காளிகளாக இருக்கும். இந்தக் கழகத்தில் பங்குகொள்வதைத் தவிர ராஜ்ய அரசாங்கங்கள் பொருள் உதவியும் செய்ய வேண்டுமா என்பது பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

கல்வித் துறையாளர்களும், இலக்கியத் துறையாளர்களும் புதிய கலைச் சொற்களின் ஆக்கத்திலும் மொழி வளர்ச்சி முறைகளைச் செய்வதிலும் முழு உரிமை பெற வேண்டும். தீர்க்க முடியாத கருத்து வேறுபாடுகள் வருமேயானால் இந்தக் கழகத்தின் மேலதிகாரியாக இருந்து மத்திய அரசாங்க மொழிக் கொள்கையைப் பற்றியும் மேற்கொண்டு செய்யப் படவேண்டிய வேலை பற்றியும் தன் கருத்துக்களைத் தெரிவித்து அதன்படி தேசீயக் கழகத்தை நடக்குமாறு செய்ய மத்திய அரசாங்கத்திற்கு பிரத் யேகமான அதிகாரம் இருத்தல் வேண்டும்.

இத்தகைய ஒரு கழகம் நிறுவப்பட்டுவிடுமேயானால் அரசாங்கம் மொழிக் கொள்கைபற்றி ஆலோசனை வேண்டும்போது எல்லாம், கல்வித் துறையில் உள்ளவர்களின் ஆலோசனையை இந்தக் கழகத்தின் மூலம் எப்பொழுது வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளலாம். இந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதானால் கழகத்தின் அமைப்பு முதலியவற்றை அரசாங்கமே தெரிவு செய்துகொள்ளலாம். என்றாலும் இரண்டு ஆலோசனைகளைக் கூற விரும்புகிறோம். இந்தக் கழகம் குறிப்பிட்ட கால எல்லையில்தான் மேற் கொண்டுள்ள முக்கியமான அலுவல்களைக் கவனிப்பதற்குத் தகுந்த ஊழி யர்களை நியமிக்கவேண்டும். அதன்படி பல்கலைக் கழகங்களிலிருந்தும் இலக்கியத் துறைகளிலிருந்தும் ஏனைய அலுவல் துறைகளிலிருந்தும் பலரை இக்கழகம் நேரிடையாக நியமிக்க வேண்டும். அடுத்த படியாக இந்தக் கழகம் அமைக்கப்பட வேண்டிய பொருத்தமான இடம் பற்றியும் ஒன்று சொல்ல விரும்புகிறோம். இயலுமானால் நாட்டின் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஓரிடத்தில் இதனை அமைக்கலாம். 5 அல்லது 6 முக்கியமான பிராந்திய மொழிகள் சந்திக்கின்ற ஹைதராபாத் போன்ற இடம் இந்திய மொழிகளின் தேசீயக் கழகம் அமைப்பதற்கு நல்ல இடமாகும். காலியான கட்டடங்கள் முதலிய வசதிகள் இருக்கின்ற னவா என்று பார்க்கத் தொடங்குதல் நலம்.

5. இந்திய மொழிகளின் தேசீயக் கழகமாகிய இதனோடு, இந்த துறை யில் வேலை செய்யக்கூடிய மேலும் இரண்டு அமைப்புக்களை உண்டாக்க வேண்டும் என்று எங்களுக்கு ஆலோசனை சொல்லப்பட்டது. 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா மொழிகளிலும் உள்ள இலக்கியங் களைப் பெற்றுள்ள ஒரு மத்திய நூலகம் மிகவும் தேவைப்படுகின்றது என் றும் இப்பொழுதுள்ள எந்த அமைப்பும் இந்தக் குறையை நிவர்த்திக்க வில்லை என்றும் எங்களிடம் சொல்லப்பட்டது. அடுத்தபடியாக மொழி யாசிரியர்கள் பயிற்சி தரும் தேசீய அமைப்பு ஒன்றும் தேவை என்பதும் ஆலோசனைகளில் சொல்லப்பட்டது. இந்த அமைப்பு ஹிந்தி, ஆங்கிலம், ஏனைய பிராந்திய மொழிகள் ஆகியவற்றைப் போதிப்பதற்கு உதவும். இந்தியாவில் இடைநிலைக் கல்வி முறையில் பெருவாரியான குழந்தை களுக்கு மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட மொழிகளைக் கற்பிக்க வேண்டிய அவசியம் ஏற்படுதலின் குறைந்த கால அளவில் சிறந்த முறை யில் மொழியைப் போதிக்கும் வழி துறைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. இத்தகைய ஓர் அமைப்பை இந்திய மொழிகளின் தேசீயக் கழகத்தின் பக்கத்திலேயே அமைக்க வேண்டுமா அல்லது இன் னும் லாபகரமான முறையில் வேறு எங்கேயாவது அமைக்கலாமா என் பதை ஆட்சித் துறையாளர்களே முடிவு செய்ய விட்டுவிடுகிறோம்.

6. ஆண்டுதோறும் அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட மொழிக் கொள்கை அதனோடு சம்பந்தமுடைய ஏனைய பகுதிகள் ஆகியவற்றில் எந்த

அளவு நிறைவேற்றம், வளர்ச்சி ஆகியவை செய்யப்பட்டுள்ளன என்பதைப் பாராளு மன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டும். இத்துறைகளில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் எந்த அளவிற்குச் செல்லுகிறதோ அந்த அளவிற்கு அறிக்கை சமர்ப்பித்தால் போதுமானது. தேசிய வாழ்க்கையின் பல்வேறு துறைகளையும் மொழிக் கொள்கை பாதிப்பதாதலின் இது பற்றி இடைக்காலத்தில் விடாமல் சிறந்த முறையில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆதலின் இத்துறைகளில் ஒவ்வொரு ஆண்டிலும் எந்தத் துறையில் எந்த அளவில் வேலை நடைபெற்றுள்ளது என்பதை மத்திய அரசாங்கம் ஜனநாயக பீடமாகிய பாராளு மன்றத்திற்கு அறிவிப்பது நன்மையே யாகும்.

மொழிகளைப் பற்றிய தேசியக் கொள்கையைப் பொது மக்கள் அறிந்து கொள்ளச் செய்தல்

7. இவ்விடத்தில், சிறியதாயினும், அதிக மதிப்புடைய எங்கள் ஆலோசனை ஒன்றைக கூற விரும்புகிறோம். மொழிப் பிரச்னையை அரசியல் அமைப்பு எங்ஙனம் முடிவு செய்துள்ளது என்பது பற்றியும் அதனுடைய பலா பலன்கள் யாவை என்பது பற்றியும் பொதுமக்களிடம் தகுந்த அளவு அறிவிக்கப்படவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். ஹிந்தி யூனியன மொழியாகும்பொழுது அரசியல் அமைப்பின்படி பிராந்திய மொழிகளின் இடம் யாது என்பது பற்றிப் பொதுமக்களிடம் தவறான எண்ணங்கள் நலவி வருவதாகத் தெரிகிறது. எல்லா மொழிகளினுடைய தேவைகளும் ஒருசேரக் கவனிக்கப்படுகின்றன என்ற எண்ணம் பலரிடம் இல்லை. யூனியன் விவகாரங்களுக்கும், யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையேயுள்ள விவகாரங்களுக்கும், யூனியன் மொழி எவ்வளவு தேவைப்படுகிறதோ அவ்வளவு முக்கியமான ஒரு நிலையைப் பிராந்திய மொழிகளும் பெற்று இருக்கும் என்பது பலராலும் அறியப்படவில்லை. இந்திய மொழிகளின் சூழ்நிலையில் ஹிந்தியின் இடம் யாது என்பதைப் பொறுப்புள்ள அதிகாரிகளும் கூடச் சில சமயங்களில் நன்கு உணர்ந்துகொள்ளாமல் பேசுவதால் இதனைப் பொது மக்கள் நன்கு புரிந்துகொள்ள முடிவதில்லை. ஹிந்தி மொழி பிராந்திய மொழிகளை எல்லாத் துறைகளிலுமோ அன்றிச் சில துறைகளிலோ நீக்கி விட்டுத்தான் புகுந்துவிடும் என்பது அரசியல் அமைப்பில் மறைவாகவோ குறிப்பாகவோ வெளிப்படையாகவோ குறிக்கப்படவேயில்லை. அவ்வவற்றிற் குரிய துறைகளில் ஹிந்தி மொழியும் பிராந்திய மொழிகளும் ஒன்றுக் கொன்று உதவியாக அணித்து அணித்தாக வாழ்ந்துவர வேண்டும் என்பதே அரசியல் அமைப்பின் முடிவாம். ஆராய்ந்து பாராமல் ஹிந்தி மொழிக்கு ஆக்கந் தேடுபவர்களாலேயே அம்மொழிக்கு மிகப் பெரிய தீமை விளைவிக்கப்படுகிறது. ஆங்கில மொழியைப்பற்றிய தேசீயக் கொள்கை யாது என்பது பற்றியும் தவறான கருத்துக்கள் இருந்து வருகின்றன. பொதுப் போதனை மொழியாக இருக்கின்ற நிலையிலிருந்தும், ஆட்சித் துறை, சட்டத் துறை, நீதித் துறை ஆகியவற்றிலிருந்தும் ஆங்கிலம் நீக்கப்பட்ட பிறகுங் கூட ஆங்கில அறிவு இருந்துவரும் என்பதும், தம் கடமையை நிறைவேற்று வதற்கு யாருக்கு இந்த ஆங்கில அறிவு தேவைப்படுகிறதோ அவர்கட்கு அது வழங்கப்படும் என்பதும் பலரால் அறியப்படவில்லை. இந்திய மொழி களால் ஆங்கிலத்தின் இடத்தைப் பிடித்துக்கொள்ள முயலுவதன் மூலம் பழைமையைப் புதுப்பிக்கவேண்டும் என்றோ, அன்றி, மேல் நாட்டு விஞ் ஞான அறிவிலிருந்து முறித்துக்கொள்ள வேண்டும் என்றோ விரும்பவில்லை என்பதைப் பலரும் அறியச் செய்ய வேண்டும். "பழைய இந்தியாவிற்கு மீட்டும் அழைத்துச் செல்லுதல்" என்பதன் பொருள் அறியாத பலரும் குறை கூறுவது போல, இக்காரியம் செய்யப்படவில்லை. ஆனால் ஆங்கில அரசியல் அறிவும் மேல் நாட்டு நாகரிகமும் இந்த இரண்டு நூற்றாண்டு களாக இந்திய சமுதாயத்தில் தாக்கியதின் விளைவாக ஏற்பட்ட ஜனநாயக உணர்ச்சிக்கு வடிவு கொடுப்பதற்கே இது செய்யப்படுகிறது. ஆங்கில மொழி யின் மேல் கொண்டுள்ள விரோதத்தினால் இக்காரியம் செய்யப்படவில்லை. ஹிந்தி மொழியை ஆங்கிலத்தின் இடத்தில் வைப்பதற்கு ஏற்றுக்

கொள்ளுகின்ற காரணம் அம்மொழி நன்கு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதனுலோ, கருத்துக்களை வெளியிட நன்கு பயன்படும் இடைநிலை மொழி என்பதனுலோ, இலக்கிய வளம் நிறைந்தது என்பதனுலோ அல்ல. மற்றோர் இடத்தில் விளக்கி இருப்பது போல ஹிந்தி மொழியைப் பொறுக்கி எடுத்தது நடுவு நிலைமையோடு வசதி பற்றி ஆராய்ந்து கண்ட முடிவினுலேயே ஆகும். மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் இந்தியாவின் மொழிக் கொள்கை இங்ஙனம் இருப்பதற்குரிய காரணம் யாது .என்பது பற்றிப் பொதுமக்கள் அறியும்படி நன்கு எடுத்துச் சொல்ல வேண்டும். செய்திப் படங்கள் மூலமாகவோ, **அந்தர் பாரதி** அல்லது இந்திய மொழிகள் **சம்மேளனங்கள்** ஆகியவற்றை அமைப்பதனுலோ துண்டுப் பிரசுரங்கள் இலக்கியங்கள் வெளியிடுவதனுலோ எந்த முறையில் இந்தக் கருத்தை இந்திய மக்களிடம் பரப்பலாம் என்பதை மத்திய, ராஜ்ய அரசாங்கங்களின் விளம்பர இலாக்காக்கள் கவனித்துச் செய்யவேண்டும்.

பகுதி XV

முடிவுரை

1. சென்ற பகுதியில் இந்திய மொழியியலை இன்றுள்ள நிலைமையில் ஒருவாறு அளந்து கண்டோம். மேலும் யூனியன அலுவல்களிலும் ராஜ் யங்களுக்குள் நடைபெறவேண்டிய அலுவல்களிலும் கருத்துப் பரிமாறிக் கொள்ளத் தேவையான இடைநிலை மொழியின் தேவை பற்றியும், அத் தேவை இந்திய மொழியியலை எங்ஙனம் பாதிக்கின்றது என்பது பற்றியும் ஆராய்ந்தோம். ஜனத்தொகைக் கணக்கில் பல்வேறு மொழிகள், கிளை மொழிகள் பேசப்படுவதாக, வழக்கமாக குறிப்பிடப்பட்டிருப்பினும் அரசியல் அமைப்பின் 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள பன்னிரண்டு பெரிய மொழிகள்தாம் ஏறத்தாழ இந்தத் துணைக் கண்டத்தில் வழங்கி வருகின்றன என்றும் கண்டோம். இவற்றுள் பெரும்பாலான மொழிகள் நிறைந்த இலக்கிய வளம் பெற்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட நாகரிக மரபையும் இலக்கிய மரபையும் பெற்றுள்ளன என்றும் அறிகிறோம். இந்த நாட்டின் பரப்பையும் ஜனத்தொகையையும் கண்டு இம்மொழி களினிடையே உள்ள நெருங்கிய தொடர்பையும் கண்டு இம்மொழிகள் இரண்டு மூன்று குடும்பங்களுள் அடங்கிவிடுகின்றன என்பதையும் கண்டால் இவற்றி லுள்ள வேறுபாடு பெரிதாகப்படாமல் பொது இயல்பும் நெருங்கிய தொடர் புமே பெரிதாகப்படும். பொது இயல்பும் நெருங்கிய தொடர்பும் எக் காரணத்தால் உள்ளன என்பதை எளிதாகக் கூறிவிட முடியும். முதலாவது, இந்தோ ஆரியன், திராவிடக் குடும்பங்கள் இரண்டுமே தேவைப்பட்டபொழுது வடமொழியிலிருந்து வேண்டுமான அளவு பெற்றுக்கொண்டுள்ளன. திராவிட மொழிகள் உள்பட நம்முடைய மொழிகள் எல்லாம் இவைகள் வாழ்ந்து வருகின்ற இத்தனை நூற்றாண்டுகளிலும் மிகுதியாகவோ குறை வாகவோ சொற்களையும், மரபுச் சொற்களையும், கருத்துக்களையும் நிரப்பப் பெற்றுள்ள வடமொழிக் கருவூலத்திலிருந்து பெற்றுக்கொண்டுள்ளன. எப்பொழுது புதிய கருத்தையோ புதிய பொருளையோ தெரிவிக்கவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்ட பொழுதெல்லாம் இதனைச் செய்துள்ளன. இதனாலேயே இந்திய மொழிகளின் இலக்கிய மரபுகளில் இவ்வளவு ஒற்றுமைத்தன்மை காணப்படுகிறது. வடமொழியிலுள்ள இராமாயணம், மகாபாரதம், புராணங்கள், சாஸ்திரங்கள், இலக்கியங்கள், நாடகங்கள் ஆகிய அனைத்தும் கருத்துக்களையும், உணர்ச்சிகளையும், நீதிக் கதைகளையும் இந்த இந்திய மொழிகளுக்கு தந்ததோடு இம்மொழி இலக்கியங்கள் அழகைப் பெறவும் உதவின. அன்றியும், சமுதாயத்தில் நடந்து கொள்ளும் முறை, ஒழுக்க முறை ஆகியவற்றோடு, சுருங்கக் கூறுமிடத்து, இந்திய மக்களின் அறிவு வளர்ச்சியைப் பெறுவதற்குரிய கருவூலமாகவும் இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது வடமொழி. இந்தி யாவைப்பற்றி எழுதிய வெளிநாட்டு அறிஞர்[1] ஒருவர் கீழ்வருமாறு கூறி யுள்ளார், "இந்தியாவில் பேச்சு மொழிகள் 500-க்கும் மேற்பட இருப்பினும் இந்துக்களால் ஜாதி, மத, மொழி, வேறுபாடுகள் பாராட்டாமல் போற்றப் படுகின்றவை ஒரு மொழியும் ஒரு இலக்கியமும்தான். அந்த ஒரு மொழி வடமொழி; அந்த ஒரு இலக்கியம் வடமொழி இலக்கியம். அறிவு என்ற பொருள்படும் வேதந்தான் அனைத்திற்கும் கொள்கலம். இந்த வேதத்தில்தான் இந்து சமயத்தின் கொள்கைகள், தத்துவங்கள், சட்டங் கள், சமயக் கதைகள் ஆகிய அனைத்தும் உள்ளன. பல்வேறுபட்ட மக்களி னுடைய கொள்கைகள், கருத்துக்கள் பழக்க வழக்கங்கள் ஆகியவை அனைத்தும் பிரதிபலிக்கப்படுகின்றன. மேலும் அந்த நாட்டிலுள்ள ஏனைய மொழிகளை வளர்ப்பதற்குத் தேவையான மூலப் பொருள்கள் கிடைக்கும் இடமும் இதுவேதான்; முக்கியமான சமயக் கருத்துக்களையும், விஞ்ஞானக் கருத்துக்களையும் அறிவிக்கும் பகுதியும் இதுவேதான்".

[1] மோனியர் வில்லியம்ஸ் அவர்களினுடைய "இண்டியிஸம்"

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஆங்கிலம் வருகின்றவரையில் அறிவுத் துறையின் எல்லாப் பகுதிகளிலும் நுண்மையான கலைச் சொற்கள் அனைத்தும் அது எந்த இந்திய மொழியில் வழங்கப்பட்டாலும் வடமொழியிலிருந்தோ அல்லது வடமொழி இலக்கியங்களிலிருந்தோதான் பெறப்பட்டன. இந்தியாவில் இன்றுள்ள பல மொழிகளுக்கும், முன்னர் இருந்த பல மொழிகளுக்கும் வடமொழியே தாயாகவும், சிலவிடங்களில் தாயாக இல்லாவிடினும் செவிலித் தாயாகவேனும் இருந்து அம்மொழிகளை வளர்த்துள்ளது. இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களிலுள்ள மக்களும் அந்த அந்தப் பிராந்தியங்களைப் பொறுத்த மட்டில் தங்களுக்குரிய பிராகிருதத்தையோ அல்லது தங்களுக்கே உரிய அன்றாட மொழியையோ பேசிக் கொண்டிருந்தாலும், கல்வி அறிவுத் துறைகளில் பிராந்தியங்களினிடையே கருத்துப் பரிமாறிக்கொள்ள வழங்கப்பட்ட மொழி வடமொழியேயாகும். ஏனைய மொழிகள் அப்பொழுதுதான் வளர்ந்துகொண்டிருந்த காரணத்தால் அடிக்கடி மாறுதல் அடைந்துகொண்டு இருந்தபொழுதுகூட வடமொழியைப் பொறுத்த மட்டில் நிலைபெற்ற இலக்கண வடிவைப் பெற்றிருந்தது. வடமொழி இலக்கணத்தில் உள்ள பல்வேறு நுணுக்கங்கள் இலக்கியத் தேவைக்கு மிகுதியும் வளைந்து கொடுக்கக்கூடியனவாக இருந்தன. நாளாவட்டத்தில் இங்ஙனம் இலக்கியத்தில் பயன்பட்ட காரணத்தால் சீரிய எண்ணங்களை எந்தத் துறையில் வெளியிட நேர்ந்தாலும் இந்த மொழியையே அனைத்திற்கும் பயன்படுத்தினார்கள். இந்தியாவில் இன்றுள்ள பல்வேறு பிராந்திய மொழிகளினிடையே பொதுத் தன்மையையும் ஒற்றுமையையும் உண்டாக்க இக்காரணங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்துதான் உதவின.

வடமொழியே அல்லாமல் பார்ஸிய, அராபிய மொழிகளும் ஏனைய மொழிகளும் கூடப் பிராந்திய மொழிகளின் நெடுங்கணக்கை வளர்ப்பதில் வெவ்வேறு அளவில் பயன்படலாயின. சில சந்தர்ப்பங்களில் பிராந்திய மொழிகளின் இலக்கண வடிவங்கள்கூட இம்மொழிகளால் பாதிக்கப் படலாயின.

அடுத்து இப்பிராந்திய மொழிகள் இன்று எழுதப்படும் எழுத்துக்களும் வடிவங்களும்கூட தம்முள் நெருங்கிய தொடர்புடையன. பிராந்திய மொழிகளின் ஒலியியல் முறை பெரிதும் அடிப்படை ஒற்றுமை உடையது. ஏனென்றால் இவை அனைத்தும் ஒரு பொது மூலத்திலிருந்து பெறப்பட்டவையேயாகும். உண்மையைக் கூறுமிடத்து உருது மொழியை அல்லாத ஏனைய பிராந்திய மொழிகள் அனைத்தும் பிராமி எழுத்துக்களிலிருந்தே தம் எழுத்துக்களின் வரிவடிவங்களைப் பெறலாயின.

2. இந்த இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் பேசப்படும் பல்வேறு மொழிகளின் இடையேயுள்ள ஒற்றுமை இந்நாட்டின் பொதுப் பண்பாட்டு மரபின் மேல் தோன்றிய ஒன்றாகும். அந்தப் பொது மரபை, பொதுக் குறிக்கோளை, பொது மதிப்பைச் சுருக்கிக் கூறவேண்டுமேயானால் "இந்திய வாழ்வு முறை" என்று சொல்லலாம். இந்திய இனத்தில் வேறுபாடுகளினிடையே, மொழி வேற்றுமைகளினிடையே, பண்பாடுகளினிடையே காணப்படுகின்ற ஒற்றுமைத் தன்மை ஆகும் இது. இந்தியத் துணைக்கண்ட முழுவதிலும் சரித்திர காலம் தொடங்கி சமுதாய, சமய, தத்துவ, சாத்திர ஆலோசனைகளில் பெரிதும் கொடுக்கல் வாங்கல்கள் இருந்துவந்தன. பல்வேறு பகுதிகளிலும் தோன்றி வளர்ந்த இவ்வெண்ணங்கள் ஏனைய பகுதிகளுக்கு ஓடிப் பாய்ந்து அவற்றை பாதித்துள்ளன. இமயமலையின் தெற்கே பரந்து விரிந்துள்ள இப்பகுதி ஏனைய மூன்று திசைகளிலும் கடலால் சூழப்பட்டிருப்பினும் பூகோள முறையில் ஒரே பகுதிதான் என்பதை சரித்திரம் பல முறை விளக்கிக்கூறியுள்ளது. இந்தப் பகுதியினிடையே தாண்ட முடியாத தடைகள் ஒன்றுமில்லாது இருப்பினும் ஆசிய கண்டத்திலிருந்து இப்பகுதி இயல்பான எல்லைகளால் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, இந்த நாட்டிற்குள்ளே ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு மக்களும் கருத்துக்களும் செல்லத் தடை ஒன்றும் இல்லை என்றாலும் ஆசியாவில் தோன்றி வளர்ந்த பெரும் புரட்சிகள்

எல்லாம் இந்த நாட்டினுள் புகவில்லை. வெற்றி பெற்ற காலத்திலும், வன்மை காரணமாக திணிக்கப்பட்ட காலத்திலும் தவிர, இக்கொள்கைகள் இந்நாட்டினுள் புகவில்லை. மேலும் இந்த நாட்டின் உள்ளேயே ஏற்பட்ட அரசியல் சூதாட்டத்தால் அடிக்கடி எல்லை மாற்றம் முதலியன, ஏற்பட்ட காரணத்தால் மக்களின் பண்பாட்டு வாழ்க்கையில் சிறு சிறு மாற்றங்கள் ஏற்படலாயின. எல்லாவற்றையும் நோக்குமிடத்து இந்தத் துணைக் கண்டத்தின் எல்லைக்குள்ளேயே மனித முயற்சியிலும் அறிவுத் துறையிலும் வாணிகம், கலை, கைத்தொழில், ஆகிய துறைகளிலும் கொடுக்கல் வாங்கல்கள் இருந்துவந்தன. மேலும் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லும்பொழுதும், சமய, தத்துவ, சாத்திர ஆலோசனைகள் செய்யும் பொழுதும், ஒழுக்கம் பற்றிய கொள்கைகளிலும், வாழ்வு முறையிலும் இக்கலப்பு இருந்து வந்தது. பல நூற்றாண்டுகளில் விடாது நடைபெற்றுவந்த இக்கலப்பின் காரணமாக "இந்திய வாழ்வு முறை" என்று சொல்லப்படும் ஒரு பொது வாழ்வு இதிலிருந்து தோன்றி வெளிப்படலாயிற்று. ஒரு மொழி என்பது ஒரு இனத்தாரின் வரலாற்றைக் காட்டுவதோடு அந்த இனத்தாரின் அப்பொழுதைய பண்பாட்டையும் அனுபவத்தையும் வெளியிடும் கருவியுமாகும். எனவே இந்தியாவின் மொழியியல் அதனுடைய பண்பாட்டின் வடிவத்தையே பெற்றுள்ளது. பிராந்திய முறைகளில் வியக்கத்தகுந்த அளவு பல்வேறு மொழிகள் இருப்பினும் தப்ப முடியாத ஒற்றுமைத் தன்மை இவ்வேறுபாட்டின் அடியில் இருப்பதைக் காணலாம்.

சரித்திரத்தில் கழிந்துவிட்ட பல நூற்றாண்டுகளில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் ஆட்ட பாட்டங் காரணமாக இந்தப் பண்பாட்டு உரிமை பல சமயங்களில் மறக்கப்பட்டதுண்டு. இந்தியா முழுவதும் ஒரே அரசியல் அதிகாரத்தின் கீழ் இருக்கவேண்டும் என்ற எண்ணம் மிகப் பழங்காலந் தொட்டே இருந்து வந்தது. மிகப் பழைய சரித்திரம் இந்த துணைக்கண்ட முழுவதிலும் தங்கள் ஆட்சியை நிறுவிய பல அரசர்களின் பெயரைக் குறிக்கின்றது. இந்த அரசியல் ஒற்றுமை பல நூற்றாண்டுகளாக மறைந்து மீட்டும் 19-வது நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கில அதிகாரத்தின்கீழ் மறுபடியும் வெளிப்பட்டது. எனவே, இந்திய ஒற்றுமை என்பது சமீப காலத்தில் ஆங்கில அரசாட்சியின் பயனாக வெளிவந்த ஒன்றுதான் என்றும் இல்லையானால் பல்வேறு இனங்களை உள்ளடக்கிய ஒரு "பூகோள அமைப்பு" என்றும் சொல்வது பொருத்தமில்லை. இந்நாட்டின் மிகப் பெரிய பரிமாணத்தையும், இதிலுள்ள பல்வேறு வகையான பண்பாட்டு வகைகளை மீறிக் கூட, பல நூற்றாண்டுகளாக இந்நாட்டில் அரசியல் ஒற்றுமை இல்லாதிருந்துங்கூட, இந்தியாவின் பல்வேறு பிராந்தியங்களிலும் அடிப்படையான பண்பாட்டு ஒற்றுமை இருப்பதை நன்கு அறியலாம்.

3. இந்தியா விடுதலை அடைந்த 1947-ம் ஆண்டுக்குப் பிறகு சுதேசி மன்னர்களின் ராஜ்யங்களை எல்லாம் ஒன்று சேர்த்ததனால் ஏற்பட்ட அரசியல் ஒருமைத் தன்மை ஏறத்தாழ 2,000 ஆண்டுகளாக காணப்படாது இருந்த ஒன்றாகும். பரப்பாலும் ஆழத்தாலும் இத்தகைய ஒற்றுமைத் தன்மை ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில்கூட இல்லை என்றே சொல்லிவிடலாம். ஆங்கில ஆட்சியில்கூட, சிறியதும் பெரியதுமான 500 சுதேசி மன்னர்களின் ராஜ்யங்கள் அவ்வாட்சியில் உள்ளடங்கி இருக்கவில்லை. மேலதிகாரிகள் என்ற முறையில், ஆங்கிலேயர்கள் இந்த சமஸ்தானங்களின் பாதுகாப்பு, வெளி விவகாரம், அகில இந்தியப் போக்குவரத்து என்ற பகுதிகளில் தம் அதிகாரத்தைச் செலுத்தினாலும் மொழி, பண்பாட்டுக் காரியங்களுக்கு இந்த சமஸ்தானங்கள் தாமே பொறுப்பாளியாக இருந்து வந்தன. ஆங்கில அரசாட்சியின் சென்ற 150 ஆண்டுகளாக ஓரளவு நாடு அரசியல் ஒற்றுமையில் வளர்ச்சி அடைந்து வந்தது. இந்தக் காலத்தில் ஆட்சியாளர்களின் நாட்டு மொழியாகிய ஆங்கிலம் பிரிட்டிஷ் இந்தியா என்று சொல்லப்படும் பகுதிகளில் மட்டுமாவது ஆட்சி மொழியாக இருந்து அதற்குரிய செல்வாக்கையும் மதிப்பையும் பெற்றது. சமஸ்தானங்களில்கூட நீதிமுறை வழங்கும்பொழுது ஆங்கில ஆட்சியின் கீழுள்ள முறையையே பின்பற்றப்பட்டது. சில ராஜ்யங்களில் அந்தப் பிராந்திய மொழியே ஆட்சி

விவகாரங்களில் வழங்கப்பட்டாலும், இப்புறநடை தனித்த ஒரு கொள்கையாக வளராமையால் நீதி முறையில் அப்பிராந்திய மொழி வளர்ச்சி அடையாமலே நின்றுவிட்டது. நாளாவட்டத்தில் அகில இந்திய நிலையிலுள்ள ஆட்சித் துறையிலும் ஏனையத் துறைகளிலும் ஆங்கில மொழி பிராந்திய மொழிகளை எல்லாம் மெல்ல மெல்ல அமுக்கிவிட்டு ஆட்சித் துறை, உயர்தர கல்வித் துறை ஆகியவற்றில் மட்டுமல்லாமல் ஏனைய வாழ்வின் முக்கியமான பகுதிகளிலும் புகலாயிற்று. இந்தக் காலத்தில் பிராந்திய மொழிகள் தேசீய வாழ்க்கையின் உயர்ந்த பகுதிகளில் பயன்படுத்தப்படாதகாரணத்தால் பல்வேறு குறைபாடுகளைப் பெறலாயிற்று. 1947-ல் நாடு விடுதலை பெற்றபொழுது அதற்கு முன்னர் நாட்டின் பல்வேறு பிராந்திய மொழிகளையும் தாய் மொழியாக உடையவர்கள் ஒன்று கூடினால் எந்த மொழியில் தம்முள் பேசிக்கொண்டார்களோ அதே ஆங்கில மொழியில்தான் இப்பொழுதும் பேசிக்கொண்டார்கள். சென்ற 150 ஆண்டுகளில் இதுவரைக் காணப்படாத அளவு விஞ்ஞான வளர்ச்சியும் தொழில் துறை வளர்ச்சியும் நடைபெற்று உலக முழுவதிலும் வாழ்வு முறையில் பெரு மாற்றங்கள் ஏற்படலாயின. சந்தர்ப்பத்திற்கும் சமுதாய கூட்டுறவிற்கும் ஏற்பவே தேவைப்படும்பொழுது மொழிகள் வளர்ச்சி அடைகின்றனவாதலால் இக்காலத்தில் இந்திய மொழிகளுக்கு இத்தகைய தூண்டுதல் இன்மையினால் இம்மொழிகள் வளர்ச்சி அடையவில்லை. அதாவது இவற்றின் நெடுங்கணக்கில் மாறுபட்ட சூழ்நிலைக்கேற்ற கலைச் சொற்கள் தோன்றாமல் போய்விட்டன. எனவே இந்தியாவில் இன்றுள்ள மொழிப் பிரச்னை என்னவென்றால் இன்றுள்ள நம்முடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் இந்திய மொழிகளில் வெளியிடக்கூடிய அளவிற்கு இம்மொழிகளை வளர்க்கவேண்டும் என்பதாகும். அப்பொழுதுதான் ஆங்கிலம் நீக்கப்படுகின்றபொழுது விஞ்ஞான வளர்ச்சி, கல்வி ஆகியவற்றிற்கும் தேசீய வாழ்க்கையின் ஒற்றுமைக்கும் கேடு வராதபடி ஆங்கிலத்தை நீக்க முடியும். சிறப்பாக அகில இந்திய ஆட்சித் துறையில் புதிதாகக் கண்ட இந்த நாட்டின் அரசியல் ஒற்றுமையை வளர்ப்பதற்குத் தகுந்த முறையில் பிராந்தியங்களினிடையேயும் ராஜ்யங்களினிடையேயும் வழங்கக்கூடிய ஒரு பொதுவான இடைநிலை மொழியைக் காணவேண்டும். பரந்த முறையில் இந்தியாவின் நிலைப்பெற்ற பண்பாட்டு ஒற்றுமையை வெளியிடக்கூடிய ஒரு இடைநிலை மொழியைத் தேடும்பொழுது இந்திய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் தேவைப்படுகின்ற ஒரு மொழியாகவும் அது இருக்கவேண்டும். இன்று வளர்ச்சி அடைந்துள்ள போக்குவரத்து வசதிகளும் மிக உயர்ந்த வாணிகத் துறையும் பொருளாதார, தொழில் துறைகளும் ஒன்றையொன்று நம்பி இருக்கின்றன ஆதலாலும், இந்திய ஜனநாயகத்தின் அரசியல் அமைப்பு, வயது வந்தவர் வாக்குரிமை பெரும் கொள்கையை அடிப்படையில் கொண்டது ஆதலாலும், ராஜ்யங்களின் ஆட்சி முறையில் வயது வந்தவர்கள் அனைவரும் பங்கு கொள்வார்கள் ஆதலாலும் இதற்கு ஏற்ற முறையில், தேவையான முறையில் ஒரு பொது இடைநிலை மொழியின் அவசியம் ஏற்படுகிறது. இதுதான் இந்தியாவின் மொழிப் பிரச்னையாகும்.

இந்த நாட்டின் வரலாற்றில் இதற்கு முன்னர்க் காணப்படாத பிரச்னை ஆகும் இது என்று கருதவேண்டாம். பழங்காலத்தில், பல நூற்றுண்டுகளாகப் பிராந்தியங்களின் இடையே கற்றறிந்தவர்களின் பொது மொழியாக, வடமொழியும், அதனுடைய இலக்கியங்களும் இருந்து வந்தன என்று முன்னரே கூறியுள்ளோம். அந்தப் பல நூற்றுண்டுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ள முடியாத பல்வேறு மொழிகளும் தோன்றி வளர்ந்த காலத்தில் மிகவும் நாகரிகமுடைய தரத்தோடு கூடிய ஒரு மொழி வடமொழி என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டு நாடு முழுவதிலும் உள்ள அறிவாளிகள் தமக்குள் பேசிக்கொள்ளும் மொழியாக இருந்து வந்தது. அதே போல ஆங்கிலர் வருகைக்கு முன்னர் முஸ்லீம்கள் இந்தியாவை ஆட்சி செய்த நூற்றுண்டுகளில் பர்சிய மொழி ஆட்சி நடத்தும் மொழியாகவும் நீதி வழங்கும் மொழியாகவும் நாட்டிலுள்ள முஸ்லீம்கள் அல்லாத பகுதிகளில்கூட இடைநிலை மொழியாகவும் இருந்து வந்துள்ளது. இந்தத் தொடரில்

அகில இந்திய மொழியாக இறுதியாக இருந்து வந்தது ஆங்கில மொழியாகும். இன்றைய நிலையில் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக மட்டும் இல்லாமல், பல பகுதிகளில் உயர்தரக் கல்வி தரப்படும் மொழியாகவும் இந்தியாவின் பல மொழிப் பிராந்தியங்களின் இடையே வழங்கப்படும் மொழியாகவும் இருந்து வருகிறது. இம்மொழியை எளிதாக வழங்கக்கூடியவர்கள் மொத்த ஜனத்தொகையில சிறு பான்மையினரே என்றாலும் நாட்டின் ஒவ்வொரு மொழிப் பகுதிகளிலும் உள்ள அறிவாளிகள் கூட்டத்தில் பெரும் பகுதியினராக உள்ளனர். அகில இந்திய மொழிகள் தொடரில் கடைசியாக வந்த ஆங்கிலத்தின் தனிச் சிறப்பு என்னவென்றால் தனிப்பட்ட ஜாதி, மதம், இனம் என்று யாருக்கும் சொந்தமாக இல்லாமல அகில இந்தயப் பொது மொழியாக இருந்ததுதான். எல்லாப் பிராந்தியங்களிலும் உள்ள ஜாதி மத அறிவாளிகள் கூட்டத்திலும் இதற்கு முன்னர் இருந்த அகில இந்திய இடைநிலைக்கு இல்லாத முறையில் இம்மொழிக்கு ஒரு சிறப்பு இருந்து வந்தது. இன்றைய சூழ்நிலையில், இம்மொழிக்கு உள்ள தவிர்க்கமுடியாத ஒரு குறைபாடு என்னவென்றால் இந்திய இனத்தின் பொதுமக்கள் வாழ்வோடு தொடர்பில்லாத ஒரு மிகச் சிறு கூட்டத்தாரே இம்மொழியை அறிந்துள்ளார்கள். இன்றுள்ள நிலைமைக்குப் பொதுவான அகில இந்திய இடைநிலை மொழியின் தேவை வேறு. ஜனநாயக ரீதியில் பார்க்கும்பொழுது இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பிரதிநிதியும் எங்கே இருந்தாலும் அகில இந்திய நிலையில் அரசாங்கம் நடத்தும் ஒவ்வொரு செயலையும் அறிந்துகொள்ளவேண்டிய தேவை இன்றியமையாதது ஆதலின், இவ்வகில இந்திய மொழித் தேவை மிகவும் ஆழமான கருத்துடையதாக இருக்கிறது. இப்பொழுது வேண்டப்படும் இடைநிலை மொழி சிலருக்கே உரித்தான வடமொழி, பர்ஷியன், ஆங்கில மொழிகளைப் போல் அல்லாமல் தேவைப்படுகின்றவர்கள் அனைவருக்கும் தேவையான அளவிற்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். எனவே இத் தேவையின் தனித் தன்மை மிகவும் முக்கியமானது என்றாலும் சரித்திரத்திலேயே இத்தகைய ஒரு நிலை வந்ததில்லை என்று சொல்வது பொருத்தமில்லை என்பதை மட்டும் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

4. ராஜ்யங்களின் இடையேயும் அகில இந்திய நிலையிலும் ஆட்சித் துறையில் வழங்க வேண்டிய மொழி எது என்பது பற்றிப் பேசும்பொழுது தான், ஹிந்தி மொழியையே யூனியன் மொழியாகவும் ராஜ்யங்களின் இடையே வழங்கும் மொழியாகவும் இருத்தல் வேண்டும் என்று அரசியல் அமைப்பு கூறியுள்ளது. ராஜ்யங்களின் இடையே ஆட்சி முறைத் தேவைக்காகவும், யூனியன் ஆட்சித் தேவைக்காகவும் ஹிந்தி மொழி வேண்டும் என்று சொல்வது இப்பெரிய பிரச்னையின் ஒரு கோணமேயாகும். பல்வேறு பிராந்தியங்களின் இடையே ஏற்படப் போகின்ற தொடர்புகளிலும், ஆட்சித் துறையைப் போலவே ஒரு பொது இடைநிலை மொழி தேவைப்படும். அனைவருக்கும் தெரிந்த காரணங்களினால், ஆட்சித் துறை அளவிலேயே தன்னுடைய ஏற்பாடுகளை இந்திய அரசியல் அமைப்பு நிறுத்திக்கொண்டுள்ளது. இந்த ஆட்சித்துறை அளவில் ஏற்படும் தேவைகளைப்பற்றி ஆராயவேண்டும் என்றுதான் இந்தக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கையும் விரும்புகின்றது. என்றாலும் இந்த அறிக்கையின் சென்ற பகுதிகளில் அடிக்கடி குறிப்பிட்டுள்ளதைப் போல ஆட்சித் துறையோடு தொடர்புடைய அடிப்படையான பல்வேறு பிரச்னைகளை நாங்கள் ஆராய நேரிட்டது. யூனியன் அலுவல்களுக்கும், ராஜ்யங்களின் இடையே வழங்கப்படும் மொழிக்கும் மெல்ல ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்துவதற்கும் அது சம்பந்தமான விஷயங்களுக்கும் இந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில் ஒரு வளர்ச்சி அட்டவணை முறையையும் இந்தக் குறிக்கோளை அடைவதற்குரிய நிகழ்ச்சி நிரலையும் தந்துள்ளோம். ஆட்சி முறையைப் பொறுத்தமட்டில் இந்திய அரசியல் அமைப்பின் ஏற்பாடுகள் கொள்கை அளவில் இதனை முடிவு செய்துவிட்டது ஆதலின் அதனைக் கொண்டு செலுத்தும் முறை ஒன்றுதான் இனி எஞ்சியிருக்கின்றது. அரசியல் அமைப்பின ஏற்பாடுகள், இம்மொழி மாற்றம் செய்யும்பொழுது தனிப்பட்ட காரணங்களுக்காகத் துரிதப்படுத்தவோ, மெல்லச் செல்லவோ கூடிய முறையில், விரிந்து கொடுக்கும் இயல்புடைய

வையாக உள்ளன. அதிகார பூர்வமல்லாத துறைகளில், அதாவது கல்வித் துறை போன்ற பகுதியில் இந்தியாவின் மொழிப் பிரச்னை இன்னும் நன்கு தெளியப்படவில்லை. நாட்டின் பெரிய காரியங்களுக்கு ஆட்சி இடைநிலை மொழி ஏற்பட்ட பின்னர், ஒரு பொது இடைநிலை மொழியைக் காண வேண்டும். உண்மையைக் கூறுமிடத்து இந்த இரண்டு காரியங்களும், பிரிக்க முடியாது தொடர்பு கொண்டுள்ளன ஆதலால், எங்கள் சிபாரிசுகளிலும் முடிவுகளிலும் முன்னதை வளர்க்கவும் பின்னதை கொண்டு செலுத்தவும் வழி துறைகள் கூறியுள்ளோம்.

5. யூனியன் பொதுப் பணிக் கழகம் அகில இந்தியப் பணிகளுக்கு நடத்தும் போட்டி பரிட்சைகளில் எந்த இடைநிலை மொழியைக் கையாள வேண்டும் என்பது பற்றியும் சிபாரிசுகள் செய்துள்ளோம். இந்தச் சிறிய பிரச்னை, மிகப் பெரியதும் முக்கியமானதுமான பல்கலைக் கழகப் போதன மொழிப் பிரச்னையைத் தொட்டுக்கொண்டு நிற்கிறது. இந்தப் பிரச்னைகளில் பலகலைக் கழகங்களின் பல்வேறு பாடங்களின் பல்வேறு நிலைகளில் போதன மொழியாக இருக்கவேண்டியவை பிராந்திய மொழிகளா, ஹிந்தியா ஆங்கிலமா என்பதேயாகும்? பல்கலைக் கழகத்தின் போதன மொழி பற்றிய பிரச்னை, பல்கலைக் கழக அதிகாரிகளின் முடிவுகளைப் பொருத்ததே. இந்திய அரசாங்கம், பல்கலைக் கழகங்களின் போதன மொழிப் பிரச்னையில் தான் தலையிட்டு அவற்றின் சுதந்திரத்தில் தலையிடப் போவதில்லை என்று அதிகார பூர்வமாக அறிவித்துவிட்டது. பல்கலைக் கழகங்கள் அறிவு வளர்ச்சிக்காகவும் கல்வி வளர்ச்சிக்காகவும் அந்த அறிவிலும் கல்வியிலும் மாணவர்கள் விருப்பம் கொள்வதற்காகவுமே நடத்தப்படுகின்றன. இந்நிலையில் போதன மொழிப் பிரச்னை என்பது பல்கலைக் கழகங்களுக்கும், பொது வாழ்வுக்கும் முக்கியமான பிரச்னை என்றாலும் அறிவைத் தருவதற்குரிய கருவியாக உள்ளது என்ற காரணத்தால் இரண்டாந்தர இடத்தையே பெறுகிறது. பல்கலைக் கழகக் கல்வியில் போதன மொழி அடிப்படையான காரணங்களினால் இரண்டாந்தரமாகவே கருதப்படும். போதன மொழி பற்றிப் பல்கலைக் கழகங்கள் செய்யும் முடிவு போதன மொழியின் வளர்ச்சியையும், அம்மொழியில் அகப்படுகின்ற பாடப் புத்தகங்களையும் துணை இலக்கியங்களையும் பொறுத்தேயாகும். இது பற்றிய முடிவைப் பல்கலைக் கழகங்களுக்கு விட்டுவிட வேண்டும் என்ற கருத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டு வலியுறுத்துகின்றோம். அதுவே நியாயமானது என்றும் கூறுகிறோம். பல்கலைக் கழக அதிகாரிகள் கல்வியின் தரங் குறையாத முறையில் ஆங்கிலத்தை நீக்கி இந்திய போதன மொழிகளுக்கு மாறக்கூடிய காலம் வந்து விட்டது என்று நினைக்கும்பொழுது அவர்களே மாற்றிவிடுவார்கள் என்பதில், எங்களுக்கு ஐயம் இல்லை. நாட்டுப் பற்றுக்காக மட்டும் அல்லாமல், இந்திய இடைநிலை மொழிகள் மூலம் கற்கும் மாணவர்களின் புரிந்து கொள்ளும் சக்தியும், வெளியிடும் சக்தியும் மிகவும் வளர்ச்சி அடைந்து விடும் என்பதற்காகவேனும் இந்த மொழி மாற்றம் தேவை. இந்தப் பல்கலைக் கழகங்கள் கலைச்சொல் ஆக்கத்திலும் இந்திய இலக்கியங்களின் வளர்ச்சியிலும் ஈடுபட்டு இம்மொழி மாற்ற காலத்தை விரைவாக்குவதற்கு உதவுவார்கள் என்றே நம்புகின்றோம். அடுத்துள்ள கேள்வி பல்வேறு பாடங்களின் பல்வேறு நிலைகளில் மொழி மாற்றம் செய்யும்பொழுது அம்மொழி **ஹிந்தியா அன்றிப் பிராந்திய மொழியா** என்பதே ஆகும். இந்த அறிக்கையின் முன் பகுதிகளில் தகுந்த இடங்களில் இவ்வாறு மேற்கொள்வதன் வாதப் பிரதிவாதங்களை எடுத்துக் காட்டியுள்ளோம். இது பற்றிப் பேசும்பொழுது தொடக்கத்தில் இது பற்றிய முடிவு செய்யப் பல்கலைக் கழகங்களுக்கு உரிமை தரப்பட வேண்டும் என்றும், பல பல்கலைக் கழகங்களும் தமக்குள் கலந்து ஆலோசித்து இதனைச் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளோம். ஒரு பல்கலைக் கழகம் இத்துறையில் செய்யும் வேலை ஏனைய பல்கலைக் கழகங்களோடு ஒத்துப் போவதாக இருந்தால் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றிக்கொள்ளவும், ஒரு பல்கலைக் கழகம் தரும் பட்டத்தை ஏனைய கழகங்கள் ஏற்றுக்கொள்ளவும் கல்வித் தரத்தில் ஒன்றுக்கொன்று

ஒப்புமை சொல்லக்கூடியதாக இருக்கவும் வசதியாக இருக்கும். இப் பிரச்னைகளில் ஏதாவது ஒன்று தேசீயக் கொள்கையாக வகுக்கப்பட வேண்டிய அளவுக்குத் தேவையும் முக்கியத்துவமும் பெறுமேயானால் அப்பொழுது அரசாங்கம் பல்கலைக் கழகக் கல்வி இன்ன முறையில்தான் இருக்கவேண்டும் என விரும்புமேயானால், அம்முறையில் தேசீயக் கொள்கைகளை வகுப்பதற்கு அரசாங்கத்திற்கு வழிகளைக் காண்பது எளிதாகும்.

பல்கலைக் கழகக் கல்வியில் ஆங்கில மொழிப் போதனையைப் பொறுத்த மட்டில், கல்வித் தரத்தை ஒரு நிலையில் நிறுத்தவும் பட்டம் பெற்று வருகின்றவர்களை விஞ்ஞான, சட்ட, தொழில் நுட்பத் துறைகளில் தகுந்த அளவு ஆங்கில அறிவு பெற்றிருக்குமாறு செய்வதும் பல்கலைக் கழகங்களின் கடமையாகும். ஏனென்றால் இப்பொழுது இத்துறைகளி லுள்ள அறிவுக் களஞ்சியத்தை எட்டுவதற்குரிய "சாவியாக" இந்திய மொழிகள் அமையவில்லை ஆதலால், ஆங்கிலத்திலோ அன்றி வேறு ஏதாவது ஒரு வெளிநாட்டு மொழியிலோ பட்டதாரிகளுக்கு அறிவு வழங்கப்பட வேண்டும். பல்கலைக் கழகங்கள் இதனைச் செய்யும்பொழுது ஒரு இந்திய மொழியைப் போதனா மொழியாக ஆக்குவது பிற நாட்டு மொழியை வைத்துக்கொள்வதைவிட நலம் பயக்கும் என்பதையும் அறிந்திருக்கிறதென நம்புகிறோம். இன்னும் பல காலத்திற்கு விஞ் ஞானத் துறைகளிலும் தொழில் நுட்பப் பகுதிகளிலும் பட்டம் பெற்று வரும் மாணவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கும் இத்துறைகளில் ஏற்படும் முன்னேற்றத்தோடு ஒருங்கு செல்லவும் ஆங்கில மொழியிலோ அல்லது ஏதாவது ஒரு மேல் நாட்டு மொழியிலோ தகுந்த அறிவு பெற்றிருக்கவேண்டும். ஏனென்றால் தேவைப்பட்ட அளவிற்கு ஹிந்தி யிலோ அல்லது பிராந்திய மொழிகளிலோ இத்துறை சம்பந்தமாக நூல்கள் கிடைக்கமாட்டா. பல்கலைக் கழகங்கள் தங்களிடம் பட்டம் பெறும் மாணவர்கள் தாங்கள் விரும்பினால் ஏனைய நாடுகளில் வளர்ச்சி அடையும் புத்தம் புதிய விஞ்ஞானத் துறைகளைப் பற்றி வெளிவரும் தாள்களையும், ஆராய்ச்சித் தாள்களையும் படித்துப் புரிந்துக்கொள்ளக் கூடிய அப்பிற மொழியில் ஓரளவு வன்மை பெற்றவர்களாக இருப்பதற் காக வேண்டியவற்றைச் செய்யும் என நம்புகிறோம்.

கல்வித் துறையைத் தவிர, தேசிய வாழ்க்கையின் ஏனைய பகுதி களில் பல்வேறு பிராந்திய மொழிகள் இயல்பாக வளர்ச்சி அடையும் பொழுது எந்த நிலையை அடையக் கூடுமோ அவற்றை அவைகள் தாமே அடையுமாறு விட்டுவிடவேண்டும். ஆட்சிப் பகுதி அல்லாத பிற பகுதி களில் ஏற்படும் பிரச்னைகள் பற்றி நாங்கள் ஒன்றும் ஆராயவில்லை. என்றாலும் இந்திய மொழிகளின் வளர்ச்சி பற்றி நாங்கள் வகுத்திருக் கின்ற திட்டம் இப்பகுதியையும் ஓரளவு பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

6. யூனியன் மொழிக்கும், பெரிய பிராந்திய மொழிகளுக்கும் இடையே "வெறுப்புணர்ச்சியோ" அன்றிப் பொருத்தமில்லாத போட்டியோ இருக் கின்றது என்று நினைப்பது மிகவும் தவறான ஒரு கருத்தாகும். அர சியல் அமைப்பின் 351-வது விதி, பிற மொழிகளிலுள்ள வடி வங்கள், நடைகள், சொல்லாட்சிகள், முதலியவற்றை ஏற்றுக்கொண்டு வளர்ச்சி அடைய வேண்டும் என்றும் மேலும் தேவைப்பட்டால் இந்திய மொழிகளின் தாயாகிய வட மொழியிலிருந்து தன்னுடைய நெடுங் கணக்கை வளர்த்துக்கொள்ளலாம் என்றும் கூறுகிறது. யூனியன் மொழி யாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஹிந்தி மொழியின் இயல்பும், ஏனைய மொழி களோடு மிகவும் தொடர்பு கொண்டிருத்தலின் அந்த மொழியின் வளர் ச்சி ஏனைய மொழிகளின் வளர்ச்சியோடு பெரிதும் தொடர்பு உடையதாக, நன்மை பயப்பதாக இருக்குமே தவிரத் தடையோ தீமையோ விளைவிக்காது. எந்த எந்தப் பகுதிகளில் யூனியன் மொழியும் பிராந்திய மொழிகளும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில்தான் ஓரளவு கருத்து வேற்றுமைக்கு இடம்உண்டு. பல்வேறு காரணங்களையும் பொதுவான முறையில் ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டிய ஒரு பிரச்னையாகும் இது. நாட்டிலுள்ள

எல்லா மொழிகளும் வளர்க்கப்பட வேண்டும் என்றும், அவற்றின் வளர்ச்சி ஒன்றுக்கொன்று விரோதமானதன்று என்றும், ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்றும், ஒன்றின் வளர்ச்சி மற்றவற்றிற்கு நன்மையே பயக்கும் என்றும் அறிந்துகொள்ளப்படுமேயானால் நடைமுறைத் தேவைக்கு ஏற்ற பிரச்னைகளை ஆராயும்பொழுது விருப்பு வெறுப்புக்கள் இடையே புகவேண்டிய அவசியம் இல்லை. ஒரு மொழி என்பது அது வளரும் சூழ்நிலையிலுள்ளவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடச் சிறந்த கருவியாதலின் வளம்பொருந்திய இந்திய மொழிகளை அல்லாத எந்த ஒரு வளர்ச்சி அடைந்த மொழியும்கூட அதனைப் பேசும் இனத்தார் கருத்துக்களை வெளியிடத் தகுதியுடையதாகவே இருக்கும். மகாத்மா காந்தி எதிர்காலத்தில் தோன்றக் கூடிய இந்தப் பிரச்னையைத் தம்முடைய கூர்ந்த மதியினால் கண்டு 1928–லேயே "ஒரு குறிப்பிட்ட மொழி வளர்ச்சி அடைந்து நுண்மையான கருத்துக்களையும் விஞ்ஞானக் கருத்துக்களையும் வெளியிட முடியாது என்று சொல்வதைக் காட்டிலும் மூட நம்பிக்கை வேறில்லை" என்று கூறினார்.

எனவே இந்தியாவிலுள்ள பல்வேறு பிராந்திய மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் ஒப்பிட்டு வேறுபாடு கற்பிப்பதைப் பற்றி நாங்கள் குறைகூற வேண்டியுள்ளது. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு முறையில் சிறப்பும் குறைபாடும் இருக்கும். அம்மொழி இலக்கியம் என்பவை, கவிதை, நெடுங்கதை, திறனாய்வு, விஞ்ஞான வெளியீடுகள், ஆழ்ந்த கருத்துடைய நூல்கள் போன்ற பல துறைகளில் இருக்கலாம். எனவே ஒருகாலத்தில் ஓர் இலக்கியம் இத்துறையில் ஏதாவது சிலவற்றில் வளர்ச்சி அடைந்திருக்கலாம். என்றாலும் இத்துறைகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கணக்குப் போட்டு முக்கியமான இம்மொழிகளுள் ஏதோ ஒரு மொழி மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தது என்றோ மட்டமானது என்றோ சொல்ல முடியாது. பெரும்பாலும் இங்ஙனம் குறைகூறுபவர்கள் அனைவரும் மற்ற மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் பற்றி ஒன்றும் அறிந்துக்கொள்ளாமலேயே குறை கூறுகிறார்கள். எவ்வாறு இருப்பினும் இம்மொழிகளிலுள்ள இலக்கியங்களை ஒப்பு நோக்குவது நம்முடைய கருத்தன்று. அவ்வற்றிற்குரிய துறைகளில் பிராந்திய மொழிகளையும் யூனியன் மொழியையும் ஏற்றுக்கொள்ளும்பொழுது, கருத்தை வெளியிடுவதற்குரிய சக்தியை இம்மொழிகள் ஏற்றுக்கொள்ளக் கூடுமா என்பதே இப்பொழுது ஆராய்ச்சிக்குரிய விஷயம்.

பிறிதோர் இடத்தில் நாங்கள் குறிப்பிட்டுள்ளபடி ஒரு மொழி என்பது அதனைப் பேசும் இனத்தாருடைய பண்பாடு, அனுபவம் என்பவற்றை எடுத்துக்காட்டும் ஆவணமாக இருந்து வருகிறது என்றும் கூறியுள்ளோம். மொழி என்ற இந்தத் தறியில்தான் நம்முடைய நாகரிக வடிவங்கள் நெய்யப்படுகின்றன ஆதலின் நம்முடைய பொதுப் பண்பாட்டு மரபைப் போற்றுகின்ற நாம், எல்லா மொழிகளையும் போற்றி வளர்ப்பதுடன் சிறப்பாக அரசியல் அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முக்கியமான மொழிகளைப் பெரிதும் வளர்க்க வேண்டும். பல்வேறுபட்ட பண்பாடுகளையும் ஒற்றுமைப்படுத்துதல்தான் இந்திய மரபின் அடிப்படைக் கொள்கையாகும். எனவே ஒவ்வொரு மொழியினிடத்தும் நாம் செல்லும்பொழுது, வரி வடிவம் இல்லாத மலை ஜாதியினரின் மொழியாக இருக்கின்ற ஒன்றினிடம் கூட, மிகவும் வணக்கத்துடன் செல்ல வேண்டும். ஏனென்றால் அந்த ஒரு மொழி கூட அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தாரின் பண்பாட்டை வெளியிடும் கருவியாக உள்ளது. இந்தியப் பண்பாட்டின் பல்வேறு வடிவங்களையும் நாம் போற்றி வளர்க்க வேண்டும். இந்நாட்டின் ஒவ்வொரு மொழியும் அந்த இனத்தாரின் கருத்துக்களை இன்னும் சிறந்த முறையில் வெளியிடக்கூடிய கருவியாக மாற்றி அமைக்கவும், ஒற்றுமைப்பட்ட இந்தியப் பண்பாட்டின் ஓர் உறுப்பாக அது அமையவும், உதவவேண்டும்.

7. யூனியன் மொழியாக உள்ள ஹிந்தியின் வளர்ச்சியைப் பற்றிச் சிறப்பாகவும் ஏனைய பிராந்திய மொழிகளைப் பற்றிப் பொதுவாகவும்

வளர்ப்பதற்குரிய வழி துறைகளைப் பற்றி விரிவாக எங்களுடைய சிபாரிசுகளைச் செய்துள்ளோம். ஹிந்தியும் அரசியல் அமைப்பின் 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள பெரிய மொழிகளும் இன்று ஒரே வகையான குறைபாட்டால் வருந்துவதுடன் ஒரே வகையான பிரச்னையையும் பெற்றுள்ளன. சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் வெளியான விஞ்ஞானப் புதுமைகள் இயல்பான முறையில் நம்மைத் தாக்கி இருக்கிமேயானால் அந்தத் தேவைக்கேற்றபடி நம்முடைய பிராந்திய மொழிகளும் வளர்ந்து இப்புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் விஞ்ஞானங்களையும் தொழில் நுட்பங்களையும் வெளியிடக் கூடிய தகுதியைப் பெற்றிருக்கும். வளர்ச்சி பற்றியுள்ள பிரச்னை, யூனியன் மொழிக்கு மட்டுமல்லாமல் ஏறத்தாழ எல்லாப் பிராந்திய மொழிகளுக்குமே இருந்து வருகிறது.

இப்பொழுது எல்லாப் பெரிய இந்திய மொழிகளையும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்னைகளும், இம்மொழிகளின் இடையே காணப்படும் வலுவான ஒற்றுமையும் பொதுத் தன்மையும் ஒருபுறம் இருக்க, இன்னும் சில அடிப்படைகளை நன்கு ஆராய்ந்து பயன்படுத்தினால் நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளையும் அவற்றின் இலக்கியங்களையும் இன்னும் மிகுதியாக ஒற்றுமைப்படுத்த முடியும். இந்திய மொழிகள் இப்பொழுது எழுதப்படும் எழுத்துக்களின் வரி வடிவங்களை ஆராய்ந்து அவை எல்லாவற்றிற்கும் பொதுவான தேவநாகரி எழுத்து முறையை தேவைப்பட்டால் இரண்டாவது எழுத்து முறையாக மேற்கொள்ளலாம் என்றும், அவ்வாறு செய்வது ஒருவர் மற்றவர்களுடைய இலக்கத்தையும் மொழியையும் எளிதில் அறிந்துகொள்ள உதவும் என்றும் பொதுமக்களிடையே பல்மொழி அறிவை வளர்ப்பதற்கு இது உதவும் என்றும் கூறியுள்ளோம். முன் பகுதி ஒன்றில் யூனியன் மொழியிலும், ஏனைய பிராந்திய மொழிகளிலும் விஞ்ஞானக் கலைச்சொல் ஆக்கம் செய்வது பற்றிக் குறிப்பிட்டு அங்ஙனம் செய்யும்பொழுது அது மிகப் பெரும்பாலான மொழிகளுக்குப் பொதுவானதாக அமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளோம். இம்முடிவைத் தகுந்த முறையில் நடைமுறையில் நிறைவேற்றக்கூடிய அமைப்புக்கள், ஆட்சித் துறை அமைப்புக்கள் எவை எவை என்பது பற்றியும் சிபாரிசு செய்துள்ளோம். இதனை அல்லாமலும் பிறிதோர் இடத்தில் அரசியல் அமைப்பின் 351-வது விதியில் சொல்லப்பட்டபடி ஹிந்தி மொழியை "இந்தியாவின் பல்வேறுபட்ட பண்பாடுகளையும் எடுத்து வெளியிடும் கருவியாக அமைக்க" என்ன வழிகளைக் கையாள வேண்டும்? என்று சிபாரிசுகள் செய்துள்ளோம். பல்வேறு பிராந்திய மொழிகளிலும் பொதுச் சொற்களில் அதிக அளவு ஒற்றுமை ஏற்படுத்தும் வழிகளைச் சிபாரிசு செய்துள்ளோம். மேலே சிபாரிசு செய்துள்ள வழிகளை எல்லாம் கையாள்வதற்கு விரைவான முயற்சிகள் செய்யப்பட்டால் மிகச் சில வருஷங்களில் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளின் இடையேயுள்ள "தூரம்" என்பது குறைக்கப்பட்டு, மொழிகளின் இடையேயுள்ள போராட்டம் ஓரளவு குறைக்கப்படும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

பல்வேறு மொழிகளும் புது நோக்கோடு ஒற்றுமைபடுவது ஒருபுறம் இருக்க, பல்வேறு பிராந்தியங்களிலுள்ளவர்களும் பிற பிராந்திய மொழிகளையும், இலக்கியங்களையும், பண்பாட்டு வடிவங்களையும் நன்கு புரிந்கொள்வதற்குப் பல வழிகளைக் கூறியுள்ளோம். இடைநிலைக் கல்வி முறையில் ஏனைய இந்திய மொழிகளை அறிந்துகொள்வதற்குரிய வழிகளை வகுக்குமாறு சிபாரிசுகள் செய்துள்ளோம். ஒவ்வொரு பிராந்திய மொழியிலுமுள்ள சிறப்பான இலக்கியங்களை ஏனைய மொழிகளில் மொழிபெயர்த்துப் பரப்பச் சிபாரிசுகள் செய்துள்ளோம். ஒரு பிராந்திய மொழியின் மூலம் ஏனைய பிராந்திய மொழிகளை நன்கு கற்றுக் கொடுப்பதற்குரிய வழி துறைகளையும் பாடப் புத்தகங்களையும் தயாரிப்பதற்குரிய வழிகளைக் கூறியதோடு, பல்வேறு பகுதிகளிலுள்ள பல்கலைக் கழகங்கள் ஆசிரியர்களையும் மாணவர்களையும் மாற்றிக் கொள்வதையும் சிபாரிசுகள் செய்துள்ளோம். எல்லா இந்திய மொழிகளிலுமுள்ள நூல்களையும் பெற்

றுள்ள மத்திய நூலகங்களின் தேவையையும் எடுத்துக் கூறியுள்ளோம். இவற்றை எல்லாம் கடைப்பிடித்தால் அரசியல் அமைப்பில் சொல்லப் பட்டபடி ஹிந்தி மொழியானது யூனியன் மொழியாக ஆவதுடன் ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலும் நன்கு பரப்பப்பட்டுவிடும். அன்றியும் ஹிந்தி பேசும் மக்களிடம் கூட ஏனைய மொழிகளையும் அவற்றின் இலக்கியங் களையும் பண்பாட்டு வடிவங்களையும் புரிந்துகொள்ளக்கூடிய சக்தி பெரிய அளவில் ஏற்படும்.

8. மற்றொரு முக்கியமான விஷயம்பற்றிக் குறிப்பிட விரும்புகிறோம். மொழிப் பிரச்னையைத் தீர்க்க நாம் காணும் முடிவுகளில் அதிகத் தொல்லை யையும் இடையூறுகளையும் இக்காலத் தலைமுறை மட்டுமே காண்பார்கள். வரப்போகின்ற தலைமுறைகள் இதே யளவில் இந்த இடையூறுகளைக் காண மாட்டார்கள். மொழி என்பது பிறக்கும்பொழுதே வருகின்ற ஒன்றன்று. ஆனால் நாளாவட்டத்தில் பள்ளிக்கூடத்திலும், பல்கலைக் கழகத்திலும் செலவழிக்கின்ற நீண்டகாலப் பயிற்சியால் பெறுகின்ற ஒன்றாகும். எனவே எந்த ஒரு முடிவையும் ஏற்றுக்கொண்டு அந்த முடிவை முறையாகவும் வன்மையாகவும் கொண்டு செலுத்தினால் இந்தத் தலைமுறை வேறு வகையில் பழக்கப்பட்டிருத்தலின் இது மறைந்த பிறகு, புதிய தலைமுறை இந்தப் புதிய ஏற்பாட்டிற்கு அதிகம் ஒத்துப்போகக்கூடியதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த முறையில் நடைமுறை முடிவுகளை எவ்வளவு மாற்றி அமைத்தாலும் நீண்டகால நோக்கத்துடன் செய்யப்பட்டால், அவை நடைமுறைக்கு ஏற்றதாகவே அமைந்துவிடும். என்றாலும் தற்பொழுது தேவையான முடிவுகளைப்பற்றி யாரும் ஒதுக்கிவிட முடியாதாதலின் இதனுடைய முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்த நாங்கள் எங்கள் முடிவு களால் விளையக்கூடிய நன்மை தீமைகளை நன்கு ஆராய்ந்து, அதனை ஏற்றுக்கொள்ளும்பொழுது என்ன பயன் விளையும் என்பதையும் மிகுந்த சிரமத்துடன் ஆராய்ந்து, இறுதியில் மிகச் சிறந்தவை என்று கருதப்பட்ட முடிவுகளையே தந்துள்ளோம். மொழிகளின் பிரச்னை மிகவும் சிக்கலான ஒன்று. இப் பிரச்னை பற்றிய முடிவுகள் சில ஆராய முடியாத அடிப் படையில் இருந்து தோன்றுபவை. எனவே நேர்மையான கருத்து வேற்று மைகள் பல இருக்கக்கூடும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இது எவ்வாறு இருப்பினும் சிறிய பிரச்னைகளுக்காக அல்லது முடிவிலே யுள்ள சிறிய தவறுகளுக்காகப் போட்டிப் போட்டுச் சண்டை செய்வதைக் காட்டிலும் தீவிரமாக ஆராய்ந்து முடிவு செய்யப்பட்ட முடிவுகளையும் திட்டங்களையும் நாடு முழுவதிலும் அனைவரும் முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டு அந்த அந்தத் துறை அதிகாரிகள் அதனைக் கொண்டு செலுத்த முயல வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். மேலும் நாட்டின் மொழிக் கொள்கை என்பது அரசியல் கட்சிகளின் சதுரங்க மேடையாக ஆய்விடக் கூடாது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

9. இவ் விஷயத்தின் மற்றொரு பகுதி பற்றியும் சில கருத்துக்களை வலியுறுத்த விரும்புகிறோம். மொழிப் பிரச்னையில் முடிவு காண்பதில் யூனியன், ராஜ்ய அரசாங்கங்களையல்லாமல், பல்கலைக் கழகங்கள், நீதித் துறை, சட்டத் துறை, செய்தித் தாள்கள் என்பவற்றோடு கற்றவர்கள், கல்லாத சாதாரண மனிதரும்கூடப் பெரிதும் ஈடுபட்டுள்ளார்கள். எனவே இறுதியான முடிவை நாம் காணும்பொழுது வலிவுடையதாக இருப்பினும் அரசாங்கத்தின் உதவியை மட்டும் அதிகமாக நம்பிவிடாமல் இதில் சம்பந் தப்பட்ட அனைவருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துச் செய்ய வேண்டும். நாம் காணும் முடிவுகள் இவர்களுடைய ஒத்துழைப்பை தாமே பெறக்கூடி யனவாக இருப்பதோடு பொதுமக்களினுடைய அடிப்படையான நல்லெண் ணத்தைப் பெறக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். நாம் வெளியிடக் கூடிய சிக்கலான மொழிப் புரட்சி அரசாங்கச் சட்டத்தின் மூலம் நிறை வேற்றக்கூடிய தன்று. தேசீய வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள எல்லா முக்கியப் பகுதிகளும், எல்லா அமைப்புக்களும் முழு மனத்தோடு ஒத்துழைக்க வேண்டிய பகுதியாகும் அது. நடுவு நிலைமையில் இருந்து பார்த்தால் நம்முடைய குறிக்கோள்கள் அனைவருக்கும் பொதுவானதாகவும்,

நல்லெண்ணம் உடைய இந்தியர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தாகவும் இருப்பதோடு, ஆறரை ஆண்டுகளுக்கு முன்னர் நாம் நன்கு ஆலோசித்து ஏற்றுக்கொண்ட அரசியல் அமைப்பில் இடம் பெற்றுள்ள தாகவும் இருக்கின்றன. இப்பொழுது பிரச்னை என்னவென்றால் ஏற்றுக் கொண்ட இந்த முடிவைக் கொண்டு செலுத்தத் தகுந்த வழியையும் கருவிகளையும் வேகத்தையும் முடிவு செய்வதேயாகும்.

10. மொழிப் புரட்சி செய்வதில் பல்வேறு அதிகாரிகளும் பங்கு கொள்ள வேண்டும் என்பது ஒரு புறம் இருக்க, இதனை அமைதியான முறையில் முடிப்பதற்குப் பொது மக்களினுடைய அன்போடு கூடிய ஒத்துழைப்பும், தாமே இயங்கும் ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பும் தேவை என்பதோடு கூட, மொழிப் பிரச்னை என்பது பெரும்பாலான மக்களின் முடிவையே பொறுத்தது, என்பதையும் வலியுறுத்த வேண்டும். ஒரு வார்த்தை நிலை பெறுவது என்பதும், மொழி வளர்ச்சி அடைவது என்பதும், புதிய சொற்கள் வளர்ச்சி அடைவது என்பதும், பொது மக்கள் அன்றாடப் பேச்சு வழக்கிலும், எழுத்திலும், பயன்படுத்தி நிலைக்கச் செய்வதால் ஏற்பட வேண்டுமே தவிர, அரசாங்கச் சட்டத்தாலும், அகராதி வகுப்பவர்களாலும், மொழி நூல் வல்லார்களாலும் அல்ல. உயிருள்ள மொழி என்பது அன்றாடப் பேச்சுவழக்கிலும், கடைவீதியிலும் நிலை பெறுகிறதே தவிர அகராதிகளிலும், கலைக் களஞ்சியங்களுளிலும் இல்லை. சாதாரணமாக வாழ்கின்ற மொழி, அந்தந்த சமுதாய அனுபவங்கள், சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் ஆகியவற்றின் தேவைக்கு ஏற்பப் புதிய சொற்களை உண்டாக் கியும், கடன் வாங்கியும், பழைய சொற்களைப் புதிய பொருளில் பயன் படுத்தியும் வளர்ச்சியைப் பெறுகிறது. அங்ஙனம் உண்டாக்கப்பட்ட மொழி கள் நிலைபெறுவதும், ஏனையவற்றோடு கலப்பதும் அவற்றினுடைய பொருத் தத்தையும், பொதுமக்கள் அம்மொழிகளை ஏற்றுக்கொள்வதையும் பொறுத்ததாகும். எனவே இன்று இந்திய மொழிகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் சந்தர்ப்பக் கோளாறினால் ஏற்பட்டுள்ளவையாதலால் நிவர்த் திக்கக்கூடிய பொருத்தமான முயற்சி எடுத்துக்கொண்டால் அதனைப் போக்கி விட முடியும். என்றாலும் அங்ஙனம் உண்டாக்கப்படும் புதிய சொற்கள் தற்காலிகமாக இருந்து தேவையான காரியங்களுக்குப் பொதுமக்கள் அவற்றை ஏற்றுக்கொண்டு பயன் படுத்துகிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்தே அவற்றை முடிவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இதைக் கருதித்தான் இந்திய மொழிகளில் இப்பொழுது தேவைப்படுகின்ற புதிய சொற்களை ஆக்கும்பொழுது அடிக்கடி அவற்றைப் பரிசீலனை செய்து தரப் படுத்த வேண்டும் என்று கூறியுள்ளோம்.

முன்னொரு பகுதியில் இந்திய மொழிகளை வளர்க்கும் திட்டத்தில் புதிய கலைச் சொற்களையும், சொல்லாட்சிகளையும் ஆக்கும் காரியம் எவ்வளவு முக்கியமானது என்று குறிப்பிட்டுள்ளோம். நாம் அங்ஙனம் செய்யும் முயற்சியின் வெற்றி அப்புதிய சொற்கள் எவ்வளவு பொருத்தமாக உள்ளன என்பதையும், பொது மக்களால் எவ்வளவு விரைவாகவும் எளிமையாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதையும் பொறுத்த தாகும். அதே நேரத்தில் பல்வேறு பிராந்தியங்களில் இச்சொற்கள் எவ்வளவு எளிதாக இருக்க வேண்டும் என்றும், ஒரே சொல்லுக்குப் பல் வேறு விதமான பொருள் கொள்ள வேண்டும் என்றும், பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுதலினால் எப்படித் தொல்லைகள் உண்டாகின்றன என்றும் விவரித்துள்ளோம். இந்த வேலையில் உள்ள தொல்லைகளை நாங்கள் அறிந்திருந்தபோதிலும் மொழி நூல் வல்லவர்களும், அறிஞர் களும், அப்புதிய சொல்லாக்கத்தில் ஈடுபடும்பொழுது நடுவு நிலைமையோடு இதில் ஈடுபட வேண்டும் என்றும் கூறுகிறோம். புதிய கலைச் சொற்கள் எந்தத் தேவைக்காக ஏற்பட்டனவோ அந்தத் தேவைகளுக்கு எளிய முறையில் பயன்படக்கூடியனவாக இருக்க வேண்டுமே தவிர மொழியின் "தூய்மையைக்" காப்பற்றவோ அன்றிப் புலமையை வெளியிடவோ உண்டாக்கப்படக் கூடாது. வாழுகின்ற மொழிகள் அனைத்தும் நிறைந்த

அளவில் பிற சொற்களையும், சொல்லாட்சிகளையும் கடன் வாங்குகின்றன. இவ்வாறு கடன் வாங்கி ஜீரணித்துக்கொள்ளப்பட்ட சொற்களால் அம்மொழி மேலும் வெற்றியடைகிறதே தவிரப் பாதிக்கப்படுவதில்லை. புதிய சொற்களைக் கடன் வாங்கும்பொழுது அவை எளிமையுடையனவா, மக்களிடம் எளிதாக பழகக் கூடியனவா, இம்மொழியில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தகுதியுடையனவா என்று மட்டும் பார்க்க வேண்டுமே தவிர அந்தச் சொல் எந்த இனத்தாரிடமிருந்து கடன் வாங்கப்படுகிறது என்றோ, ஏனையவற்றையோ கருத வேண்டியதில்லை. பழைமையைப் புதுப்பிக்க வேண்டும் என்ற கொள்கைக்கும் இங்கு இடமில்லை. சாதாரண மனிதன் மொழியின் " தூய்மைக் " கொள்கைகள்பற்றிக் கவலைப்படுவதில்லை. அவனுடைய இந்தக் கருத்துச் சரியானதுதான் என்பது ஒரு புறம் இருக்க, இந்த விஷயத்தில் அவனே முடிவான கருத்தைத் தெரிவிக்கக் கூடியவன் என்பதையும் கருத வேண்டும்.

11. இந்த விஷயம் பற்றி மற்றொரு குறிப்பையும் நாங்கள் சொல்ல விரும்புகிறோம். ஒரு இடைநிலை மொழியிலிருந்து மற்றொன்றுக்கு மாறும் பொழுது, அது ஆட்சித் துறையாயினும் சரி, கல்வித் துறையாயினும் சரி அம்மாற்றம் புதிய இடைநிலை மொழி மாற்றம் செய்வதற்கு முற்றிலும் தகுதி பெற்ற பின்பே ஏற்பட வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். இந்தக் கருத்து தவறான கருத்து என்பதோடுகூட நடைமுறைக்கு இயலாததும் ஆகும். இவ்வாறு சொல்வது நீந்தக் கற்றுக்கொள்ள விரும்புகின்ற ஒருவனை, கற்றுக்கொண்ட பிறகே தண்ணீரில் இறங்க வேண்டும் என்று சொல்வது போல் ஆகும். மொழி என்பது வாழுகின்ற ஓர் உயிராகும். அது நிலைபெறுவதற்கு இலக்கியக் களத்தில் அல்லது சோதனைச்சாலையில் தயார் செய்ய முடியாது. அன்றாட வாழ்க்கையின் தேவைகள், தூண்டுதல்கள் என்பவற்றிற்கு ஏற்ப அவை தாமே வளர வேண்டும். அவற்றை வளர்ப்பதற்குரிய முயற்சி செய்யப்படும் அதே நேரத்தில் தேவைக்கு ஏற்றபடி தானே வளரும்படியாகவும் இடந்தர வேண்டும். வாழுகின்ற மொழி என்பது அறிஞனின் அகராதியிலுள்ள சொல் கூட்டத்தில் இல்லை. இந்த அகராதி தேவைப்படும்பொழுது எடுத்துக்கொள்ளக்கூடிய கருவூலமாக இருப்பது உண்மை என்றாலும், மொழியின் வாழ்க்கை அன்றாடப் பேச்சிலும், எண்ணப் பரிமாறுதலிலுமே இருக்கிறது. எனவே கலைச் சொற்களையும், சொல்லாட்சிகளையும் தயாரித்து மக்களிடையே வழங்கவிட்டு அன்றாட அனுபவத்தின்மேல் அவற்றைச் சரி செய்துகொள்ள வேண்டும்.

12. இந்திய அரசியலமைப்பில், மொழிகள்பற்றிச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் சூழ்நிலையில், அந்த எல்லையில் நின்று எங்களுடைய விசாரணை நடைபெற்றுள்ளது. பகுதி 4-ல் நாங்கள் விளக்கியுள்ளபடி அரசியலமைப்பின் ஏற்பாடுகள் விரிந்து கொடுக்காதவைகள் அல்ல. அடிப்படையான சில கொள்கைகளுக்கு மாறுபடாமல் எவ்வளவு வேண்டுமானாலும் எந்தத் திசைகளிலும் மாற்றி அமைத்துக்கொள்ளக்கூடிய முறையில் வேண்டுமென்றே இவைகள் சொல்லப்பட்டுள்ளன. முன்னர் நாங்கள் அறிவித்தபடி அரசியலமைப்பின் ஏற்பாடுகள் இவற்றை யெல்லாம் எதிர்பார்த்து, பிரச்னையின் சிக்கல்களையும் எதிர்பார்த்து, இப்பிரச்னையில் நிகழக்கூடிய எதிர்பாராத சில முக்கியமான காரணங்களையும் முன்னிட்டு விரிவாக அமைக்கப்பெற்றுள்ளன. இந்த ஏற்பாடுகள் நாட்டின் பல்வேறு மொழிப் பிராந்தியங்களிலிருந்து அரசியல் சபைக்கு வந்த அங்கத்தினர்கள் தம்முள் பெரிதும் ஆராய்ந்து இறுதியாக ஏற்றுக்கொண்ட முடிவுகளாகும். அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகளையும் ஆராய்கின்றபொழுது தனிப்பட்ட எந்த ஒரு ஏற்பாடாவது நடைமுறைக்கு ஏற்றதன்று என்று நாங்கள் கருதியிருந்தால் அதனை எவ்வாறு மாற்றியமைக்க வேண்டும் என்று சிபார்சு செய்ய நாங்கள் தயங்க மாட்டோம். அவ்வாறில்லையாதலால் எங்களுடைய சிபார்சுகளையும், முடிவுகளையும் இந்த ஏற்பாடுகளுக்கு ஏற்ப அமைக்க முற்பட்டோம். இவற்றையல்லாமலும் 1960-ல் ஜனாதிபதியின் மற்றொரு கழகம் இதுபற்றி மேலும் ஆராயப் போகிறது. யூனியன்

மொழியாக இப்பொழுதுள்ள ஆங்கிலத்தை மாற்றி ஹிந்தியைப் புகுத்தும் கால அட்டவணை தயாரிப்பதற்கு, அந்த அட்டவணையின் நடைமுறைத் தேவைகளை அறிந்துகொள்ள முடியவில்லை யாதலால் அட்டவணையும் தயாரிக்கப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட வேலை முடியுமா, முடியாதா என்பதும் இந்த இடைக் காலத்தில் செய்யப்படும் முயற்சியைப் பொறுத்தது. ஆதலால் இதுபற்றியும் எங்களுடைய முடிவைச் சொல்லாமல் விட்டுவிட்டுள்ளோம்.

இந்திய அரசியலமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டே எங்களுடைய கடமையைப் பிற துறைகளிலும் செய்துள்ளோம். உதாரணமாக ராஜ்யங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் வேலை அரசியலமைப்பின்படி யூனியன் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. நாங்களும் ராஜ்யங்களின் கணக்குத் தணிக்கை வேலை மத்திய அரசாங்கத்தின் வேலையாகவே இருந்துவரும் என்று கருதித்தான் அதிலுள்ள மொழிப் பிரச்னையை தீர்க்க முயன்றுள்ளோம். சில சாட்சியங்கள் இதில் ஏற்படும் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ராஜாங்கக் கணக்குத் தணிக்கைகளை ராஜ்யங்களே செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள். ராஜ்ய அரசாங்கங்களின் கணக்குகளும், ராஜ்ய ஆட்சியும் பிராந்திய மொழிகளில் இருக்கும் ஆதலால் மத்திய அரசாங்கத்தின்கீழ் உள்ள தணிக்கைப் பகுதி அகில இந்திய அமைப்பாக இருந்து இந்தியக் கணக்கு தணிக்கை இலாக்காவால் செய்யப்படும்பொழுது இந்த மொழிப் பிரச்னை ஏற்படும் என்றும் கூறினார்கள். எங்களைப் பொறுத்த வரை "வெறும் கருவி" என்று சொல்லப்படக் கூடிய ஒரு மொழியின் சௌகரியத்தை உத்தேசித்து அரசியல் ஏற்பாட்டில் பெரியதொரு மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்று கூறுவது பொருந்தாது என்று கருதுகிறோம். இதேபோல உயர் நீதி மன்றங்கள் யூனியன் பட்டியலில் இருப்பதனாலும் அதற்குக் கீழ்பட்ட நீதி மன்றங்கள் ராஜ்யப் பட்டியலில் இருப்பதனாலும் இவற்றிற்குரிய மொழிகளையும் பட்டியலுக்கு ஏற்பச் சிபார்சு செய்துள்ளோம். இதே போல இடைநிலைப் பள்ளிகளில் ஹிந்தி மொழி போதனையின் இடத்தைப்பற்றி ஆராயும்பொழுது அரசியலமைப்பின் 45-வது விதியிலுள்ள முக்கியமான ஏற்பாட்டை மனத்துட் கொண்டே செய்துள்ளோம். அதன்படி "ராஜ்யங்கள் அரசியலமைப்பைத் தொடங்கி பத்து வருஷங்களுக்குள், 14 வயது முடிகின்ற வரை எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய, இலவசக் கல்வி வழங்க வேண்டும்". இறுதியாக ஆங்கில மொழி எல்லாக் காலத்திற்கும் அகில இந்திய இடைநிலை மொழியாக இருப்பது நடைமுறையில் சாத்தியமில்லை என்பதை நாங்கள் குறிப்பிட ஒரு காரணமுண்டு. அரசியலமைப்பு அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கி, ஓட்டளிக்கும் அனைவரும் நாட்டின் ஆட்சி முறையில் பங்கு கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. ஆதலால் இம்முடிவு ஆங்கிலத்தைப் போக்க வேண்டும் என்ற எங்களுடைய சிபார்சுக்கு மிகுதியும் காரணமாக இருந்தது.

ஒரு கூட்டமைப்பின் அரசியல் ஏற்பாட்டின்படி யூனியனுக்கும், கூட்டமைப்பில் உள்ள பகுதிகளுக்கும் ஓர் உயிருள்ள அரசியல் தொடர்பு இருந்து வருகிறது. ஒவ்வொரு உறுப்பும் சுய ஆட்சி முறைக்கும், கூட்டமைப்பின் அதிகாரத் தேவைக்கும் இடையே ஒரு நடுநிலைமை வகுத்துக் கொள்கிறது. எங்களைப் பொறுத்தவரை உறுப்புக்களுக்கும், யூனியனுக்கும் இடையே வழங்கப்படுவதற்குரிய கருவியாக உள்ள "மொழியைப்பற்றி மட்டுமே" பேச வேண்டியுள்ளது. இதுபற்றிப் பேச வந்த நாங்கள் அரசியலமைப்பில் மாற்றம் செய்ய வேண்டும் என்று கூறினால் அது செருப்புக் கடிக்கு மருந்தாகக் காலையே வெட்டிவிட வேண்டும் என்று சொல்வதுபோல் ஆகும். மொழி என்பது சட்டை போன்றதாகும். அரசியல் உடம்புக்கு ஏற்ற முறையில் சட்டையை வெட்டித் தைக்க வேண்டுமே தவிர சட்டையின் அளவிற்கு ஏற்றபடி அரசியலின் உடம்பை வெட்டிவிடக்கூடாது.

13. அரசியலமைப்பின் ஏற்பாடுகள் எந்த முடிவுகளை அடைய வேண்டும் என்பதையும், வளர்ச்சிக்குரிய முக்கியமான வழிகளையும், அந்த வழிகளில்

முன்னேறுவதற்குரிய முயற்சிகளையும் அறுதியிட்டுக் கூறுகிறது. இத்தகைய காரியங்களில் முடிவை அனைவரும் ஏற்றுக்கொண்ட பிறகு, திருப்தி அளிக்காத மாற்றக் காலத்தைக் குறைப்பதற்காக எவ்வளவு விரைவில் முடிவை அடைய முடியுமோ அவ்வளவு விரைவில் அடைய முயல வேண்டும். என்றாலும் எதிர்பாராத நிகழ்ச்சிகளை உத்தேசித்தும், உறுதி யுடனும், தேவைப்பட்ட பொழுது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை யுடனும் முன்னேற்றம் நடைபெற வேண்டும். நாம் கொண்டுவரவேண்டிய மொழிப் புரட்சியில் பல்வேறு துறைகளிலும் ஏற்பட வேண்டிய முடிவு களைப் பொறுத்த மட்டில் எந்த ஒரு அதிகாரியும் வளைந்து கொடுக்காத ஓர் எல்லையை ஏற்படுத்தி அதற்குரிய கால அட்டவணையையும் தயாரித்தல் என்பது இயலாத காரியம். இதன் மறுதலையாகக் குறிக்கோள் ஒன்றும் இல்லாவிட்டாலும் அட்டவணை ஒன்று தயாரித்து அதன்படி நடக்காவிட்டா லும், எவ்விதமான வளர்ச்சியும் இல்லாமல் துன்பம் தருகின்ற மாற்றக் காலத்தை எல்லை மீறி நீட்டிக் கொண்டு செல்ல நேரிடும். ஒருவேளை மாற்றக் காலமே முடிவில்லாமல் நீடித்தாலும் நீடிக்கலாம். எனவே குறிக்கோளை வலுவாகப் பிடித்துக்கொண்டு அதனை அடையச் செய்கின்ற வழிகளிலும், ஏனையவற்றிலும் நிறைந்த அளவு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை ஏற்றுக்கொள்வது நலம் பயக்கும். எவ்வளவு தூரம் எதிர் காலத்தை எதிர் பார்க்க முடியுமோ அந்த அளவு திட்டம் வகுத்துக் கொண்டு அதனை முழு மூச்சாகக் கொண்டு செலுத்த வேண்டும்.

இதற்கு ஏற்பவே, உடனடித் தேவைக்கு ஏற்ப நிகழ்ச்சி நிரலைச் சிபார்சு செய்ததோடு நிறுத்திக் கொண்டு அதனைக் கொண்டு செலுத்த வேண்டிய கால அட்டவணை ஒன்றையும் நாங்கள் தரவில்லை. உதாரணமாகப் பல் கலைக் கழகப் படிப்பில் ஆங்கில போதனு மொழியை நீக்கி ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளைப் புகுத்துவது பற்றியும் சட்டத் துறையிலும், நீதித் துறையிலும் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்துவது பற்றியும் ஆரா யும் பொழுது முன்னேற்பாடுகள் முடிகின்ற அளவுக்குத் தான் இக்காரியங் களைச் செய்ய முடியுமாதலால் நாங்கள் ஒன்றும் கால அட்டவணை தயா ரித்துத் தரவில்லை. இப்பகுதிகளில் முடிவுகளைக் காண்பதற்கு முன்னர் மாற்றம் செய்வதற்குரிய முன்னேற்பாடுகள் தேவையாதலால் இந்த முன் னேற்பாடுகளை எவ்வளவு வேகத்துடன் செய்கிறோமோ அவ்வளவு வேகத் துடன் முடிவுகளையும் காண முடியும். எனவே கூடுமானவரை எத்தனை படிகளாக இவற்றைச் செய்யலாம் என்று கூறியுள்ளோமே தவிர எந்தக் குறிப்பிட்ட காலத்தில், எந்த வழியை மேற்கொண்டால் இவற்றைச் செய்து முடிக்கலாம் என்று நாங்கள் அறுதியிட்டுக் கூறவில்லை.

இது போன்ற மற்றொரு அமைப்பை, அரசியலமைப்புத் தொடங்கிய பத்து வருஷ முடிவில் அதாவது 1960-ல் இப்பிரச்னைகளை விசாரணை செய்ய ஜனாதிபதி நியமிப்பார் என்று அரசியலமைப்புக் கூறுகிறது. நாங் களுங்கூட இத்துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஆண்டுக்கொரு முறை பாராளு மன்றம் விசாரித்தறிய வேண்டுமென்று கூறியுள்ளோம். இவற்றையெல்லாம் உத்தேசித்தும் இவ்விஷயம் மாற்றத்துக் குரியது என்பதை உத்தேசித்தும் நேரடியாக உள்ள காலத்தைத் தவிர அதற்கப்பாலுள்ள காலத்திற்கும் அட்டவணை வகுப்பது கூடாது என்று விட்டுவிட்டோம். என்றாலும் அவ்வப்பொழுது விடாமல் நிலைமையைக் கண்காணித்து மேற்கொண்டு நடைபெற வேண்டிய காரியங்களைச் சூழ் நிலைக்கு ஏற்ப முடிவு செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்து கிறோம். எப்பொழுதும் மாற்ற காலம் தவிர்க்க முடியாத சில குறை பாடுகளை உடையது என்பதையும், அதற்காகவே இம்மாற்ற காலத்தை விரைவாகக் கடக்க வேண்டும் என்பதையும் மனத்துட் கொள்ளவேண்டும். இளைய தலைமுறை கல்வித் துறையில் பட்டப் படிப்பு பெறுகின்றவரை ஏறத்தாழ பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளைக் கழிக்கின்றதாதலின், அதற்கான நிலையில் இவர்கள் சில தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்றால் அது பற்றி நாம் முன்னரே முடிவு செய்ய வேண்டும். இம் முடிவைச் செய்ய நாம் செய்கின்ற தாமதமெல்லாம் முடிவு செய்யாமல்

இருக்கின்ற குற்றம் காரணமாகப் பெரும்பாலான மக்களுக்குத் தீமை புரிகின்றது. எனவே தேவையான முடிவுகளை உடனே மேற்கொண்டு விளக்கமான முறையில் அதனை வெளியிட்டு, அந்தந்த துறைகளில் இந்த காலத்தில் இந்த அளவு முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதை வெளியிட்டு, முறையாக அதனை அடைய எற்பாடு செய்ய வேண்டும். எங்களுடைய கருத்துப்படி ஆங்கிலத்தை நீக்குவதற்கு ஒருமைப் படுத்தப் படாத பல வழிகளைக் கூறியமையால் அனாவசியமான எரிச்சலும், தவறான கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவ்வழிகள், பெற்றோர்களுக்கு மிகவும் முக்கியமானதாகிய குழந்தைகளை வளர்க்கும் முறையில் ஏதோ " சோதனை " செய்வது போலவும், அதை எளிதாக எண்ணுவது போலவும் உள்ள வழிகளாகும். உதாரணமாகச் சில இடங்களில் அரசாங்கம் இடை நிலைக் கல்வி முறையில் வேண்டுமென்றே ஆங்கில போதனையை குறைத்துவிட்டுள்ளது, என்பதனை புரிந்துகொள்ளாமல் உயர்தரக் கல்வி முறையில் போதனா மொழியாக ஆங்கிலத்தையே வைத்துள்ளதாகத் தெரிகிறது. சில ராஜ்யங்களில் புதிய கல்வித் திட்டத்தின் காரணமாக ஆங்கிலக் கல்வியின் அளவு குறைக்கப்பட்டதைப் பற்றிக் கவலைப் படாமல், பிரத்யேகமான பயிற்சித் துறைகளுக்கு ஆட்களை எடுக்கும் பொழுது போட்டிப் பரீட்சைகளில் ஆங்கிலம் போன்ற இடைநிலை மொழிகள் இருந்து வருவதாகத் தெரிகிறது. இதன் பயனாகச் சில பிராந்தியங்களிலிருந்து வருகின்ற பிள்ளைகள் இந்தப் போட்டிப் பரீட்சைகளில் பாதிக்கப்பட்டு விட்டதாக புகார் சொல்லப்படுகிறது. ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றம் செய்யும்பொழுது ஏற்படுகின்ற கஷ்டத்தையும், மேலே சொல்லப்பட்ட ஒருமைப் படுத்தப்படாத முறையில் நடைபெறுகின்ற காரியங்களையும், வேறுபாடு படுத்தி காணமுடியாத மக்கள் பின்னர் உள்ள காரியத்தைத் தேவையில்லாமல் குறைகூற நேருகிறது. இம்முறையில் மாற்றம் செய்யப்படுவதன் அவசியத்தை நன்கு வலியுறுத்தியுள்ள நாங்கள், ஆட்சித் துறையிலும், கல்வித் துறையிலும் இடைநிலை மொழி மாற்றத்தின் தேவையை வலியுறுத்திய நாங்கள், இம்மாற்றம் செய்யும் பொழுது குறிக்கோள் கெடாதபடி எத்தனை வகையான வேறுபட்ட வழிகளைக் கையாள முடியுமோ அத்தனையையும் கையாள வழி வகுத்துள்ளோம். இத்துறைகளில் சாதாரண மனிதன் ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு செய்கின்ற மாற்றத்தைப் பற்றியே கொள்ளாவிட்டாலும், நாங்கள் பேசுகிறோம். கடுமையான வேலையுடைய அதிகாரிகளும், நடுவணர்களும் தங்கள் வயது முதிர்ந்த காலத்தில் நாட்டிற்குத் தேவையான பெரிய வேலைகளைச் செய்யும்பொழுது புதிய இடைநிலை மொழியில் நல்ல பயிற்சி பெற முடியாது. மொழி மாற்றத்திற்கு இடையூறு உண்டாகாத முறையில் இத்தகைய மக்களை இழந்துவிடுவதைக் காட்டிலும் இவர்களை வைத்துக்கொண்டு, இவர்கள் தொண்டை பெறுவதற்காகத் தனிப்பட்டவர்களைப் பொறுத்த மட்டில் வசதி செய்து கொடுக்கலாம். இப்பொழுதுள்ள தலைமுறை நாளா வட்டத்தில் வாழ்ந்து மறைந்துவிடும். மொழி வன்மை என்பது மிக நீண்டகாலத்திற்குச் செய்யப்படும் முயற்சியால் கிடைப்பது ஆதலின், நூற்றுக்கு நூறு இடைநிலை மொழியில் மாற்றம் என்பது, அப்புதிய இடைநிலை மொழியில் வளர்ந்து வருகின்ற தலைமுறையின் காலத்திலேயே முடியும்.

14. மொழிப் பிரச்னையின் விரிவான இந்த முடிவைக் குறிக்கோள் என்ற முறையில் தெளிவாகவும், நன்றாகவும் புரிந்துகொள்ள வேண்டும். குறிப்பிட்ட பொருத்தமான நிகழ்ச்சி நிரலையும், நடைமுறை அட்டவணையையும் ஒவ்வொரு துறைக்கும் ஏற்படுத்திக்கொண்டு அவ்வத்துறையில் அந்த அட்டவணையைக் கொண்டு செலுத்த முயல வேண்டும். இந்த நிகழ்ச்சி நிரலை நன்கு கவனத்தில் வைத்துக்கொண்டு ஒருமைப் படுத்தப் பட்ட ஒரு தலைமையின் கீழ்ப படிப்படியாக அடைவதற்கு முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அந்தத் தலைமை, தேசீய மொழிக் கொள்கையை நிறைவேற்றும் பொறுப்புத் தன்னிடமுள்ளதாக உணரவேண்டும். சிற்சில துறைகளில் நாம் எதிர்பார்க்கின்ற மொழிப் புரட்சியைச் செய்து முடிப்பதற்கு 20 ஆண்டுகள் கூட ஆகலாம் என்பதை மனத்தில் பதித்துக்

கொள்ள வேண்டும். மொழி வளர்ச்சி என்பது ஜனநாயக முறையில் ஏற்பட வேண்டிய ஒன்று. நவீன காலத்திலுள்ள வசதிகளாகிய செய்தித் தாள்கள், வானொலி, அச்சு யந்திரங்கள், பொதுக் கல்வி முறை ஆகிய இவற்றைக் கொண்டு மிகக் குறைந்த காலத்தில் மிகுதியான வளர்ச்சியை விரைவில் கொண்டு செலுத்த முடியும். என்றாலும் கூட முடிவு என்பது சில ஆண்டுகளின் பின்னரே கிடைக்கக்கூடிய ஒன்றாகும். மொழிக் கொள்கையின் பல்வேறு பகுதிகளையும், நிறைவேற்றம் செய்ய வேண்டு மேயானால் அவை பற்றிய அடிப்படையான வேலைகளைச் சில அமைப்புக் களே செய்ய நேரிடும். இவ்விஷயத்தினை பல்வேறு பகுதிகளில் யூனியன் அரசாங்கம், ராஜ்ய அரசாங்கம், பல்கலைக் கழகங்கள், நீதித் துறை, தொழில் அமைப்புக்கள் ஆகிய பல அதிகாரிகளும் கருத்துக் கொண்டுள் ளார்கள். மொழி மாற்றம் செய்வதற்குரிய அடிப்படையில மிகுதியான முன் வேலைகள் செய்யப்பட வேண்டும். சட்டங்களை ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்த்துப் புதிய சட்ட மூலங்களை மத்திய அரசாங்கத்திலும், ராஜ்யங்களிலும் ஹிந்தியிலேயே கொண்டுவர ஏற்பாடுகள் செய்ய வேண் டும். சட்டங்கள், ஒழுங்கு முறைகள், கைக் குறிப்புகள், நடைமுறை இலக்கியங்கள் ஆகியவற்றை ஆங்கிலத்திலிருந்து தேவையான இடங்களில் ஹிந்தியிலும், ராஜ்ய ஆட்சித் துறையில் ஆங்கிலத்திலிருந்து பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்க வேண்டி நேரிடும். மத்திய அரசாங்க அமைச்சிலும், அவற்றோடு தொடர்புடைய கீழ்நிலை அலுவலகங்களிலும், அவற்றைத் தொடர்ந்த ராஜ்ய அரசாங்கங்களிலுள்ள ஊழியர்களைப் புதிய இடைநிலை மொழியில் பயிற்சி பெறுமாறு செய்ய வேண்டும். பல்கலைக் கழகத்தில் போதனு மொழி மாற்றம் செய்ய வேண்டுமேயானால் பாடப் புத்தகங்கள், துணை இலக்கியங்கள், மேற்கோள் நூல்கள் ஆகிய வற்றையெல்லாம் தயாரிக்க வேண்டிய வேலை இருந்து வருகிறது. இவை எல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஹிந்தியிலும், பிராந்திய மொழிகளிலும் ஆட்சித் துறை, நீதித் துறை, ஆகிய வற்றிலும், பல்கலைக் கழகங்களிலும் போதிக்கப்படும் பல்வேறு விஷயங்கள் பற்றியும் அடிப் படைக் கலைச் சொற்களை ஆக்கும் வேலை இருந்து வருகிறது. இவ்வெல்லா வேலைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருந்து நேரடி யாகவோ மறைமுகமாகவோ ஒன்றையொன்று பற்றி நிற்கின்றன. இவற்றைக் காணும் பொழுது மத்திய அரசாங்கம் இந்தப் பிரச்னையை எடுத்துக்கொண்டு ஏகாக்ர சித்தத்துடன் தொடர்ந்த முறையில் வேலை செய்து ஏனைய அமைப்புக்களையும், அதிகாரிகளையும், துணையாக ஏற்றுக் கொண்டாலொழிய மொழிக் கொள்கையைப் படிப்படியாக நிறைவேற்றி முடிவு காண முடியாது. மேலும் ஒருமைப் படுத்தப்படாத பல முயற்சிகளும் ஒன்றோடொன்று மோதி அவசியமில்லாத தொல்லையை விளைவித்துக் கால தாமதத்தை உண்டாக்கும். அரசியலமைப்பு ஜனவரி 1950-ம் தொடங்கப்பட்ட பிறகு இந்த ஐந்தாண்டுகளில் ஹிந்தி மொழி யைப் பற்றிய அரசியலமைப்பின் ஏற்பாடுகளைக் கொண்டு செலுத்தும் ஓர் ஒழுங்கான கொள்கை இல்லாததைக் குறித்து அதிகாரிகளும், அதி காரிகள் அல்லாதவர்களும் குறை கூறியதை முன்னரே எடுத்துக் காட்டி யுள்ளோம். புதிய கலைச் சொற்களை ஏற்றுக்கொள்வதில் எவ்வளவு கால தாமதமும் முயற்சியின்மையும் இருந்து வருகிறது என்பதை முன்னமே குறித்துள்ளோம். மத்திய அரசாங்கம் கலைச் சொற்களை ஆக்கிக்கொண் டிருக்கும்பொழுது, ராஜ்யங்களும் பல்கலைக் கழகங்களும் கூடத் தம் தம் அளவில் கலைச் சொற்களைத் தயாரித்து வந்துள்ளன. என்றாலும் இவற் றுள் ஒருமைப்பாடு காணும் முயற்சி நடைபெறவே இல்லை. எல்லாப் பிராந்திய மொழிகளுக்கும் தேவைப்படக்கூடிய இந்தப் புதிய கலைச் சொற்களில் பெரும் பகுதியான ஒற்றுமையைப் பல துறையிலுள்ள தக்க வர்களும் தேவை என்று கூறினுங்கூட நடைமுறையில் இது வரையில் இது பற்றிக் கவனித்ததாகத் தெரியவில்லை.

இந்த அறிக்கையின் அந்த அந்த இடங்களில் திட்டத்தை நிறைவேற்று தற்குரிய அமைப்புக்களைப் பற்றிச் சிபார்சு செய்துள்ளோம். திட்டத்தின் சில பகுதிகள் அரசாங்கச் செயலாளர் அலுவலகத்தின் ஓர் இலாகாவில்

இல்லாமல் ஓரளவு சுதந்திரம் பெற்ற அமைப்புக்களால் நல்ல முறையில் கொண்டு செலுத்த முடியும் என்று கூறி அந்த அமைப்புக்களில் அரசாங்க அதிகாரிகள் சிலரும் பிரதிநிதிகளாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளோம். மத்திய அரசாங்கத்தில் ஓர் அமைப்பு இருப்பது ஒருபுறம் இருக்க, ராஜ்யங்களின் உள்ளே அந்த அந்த மொழிக் கொள்கையை நிறைவேற்றம் செய்வதற்கு அந்த ராஜ்யத்தின் செயலாளர் அலுவலகத்தின் ஒரு குறிப்பிட்டப் பகுதி இவ்வேலையைக் கவனித்துக்கொள்வதற்கு என்று நியமிக்கப்படுவது அந்த ராஜ்யத்துக்கே நன்மை பயப்பதாகும்.

15. நாட்டின் பல்வேறு பாகங்களிலும் எங்களிடம் சான்று பகன்ற பெரும்பாலான மக்கள் நாட்டின் ஒற்றுமையையும், நேர்மையையும் காப்பாற்றும் முறையில் மொழிப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்ற கருத்தை மிகவும் அக்கறையோடு எடுத்துக் கூறினார்கள் என்பதை நாங்கள் மறக்க முடியாது. இத்தகைய ஓர் எண்ணம் நாடு முழுவதிலும் இருந்ததோடு சிறப்பாக இப்புதிய இடை நிலை மொழி எந்த பாகத்தில் அதிகப்படியான பாரத்தை இக்காலத் தலைமுறைக்கு உண்டாக்குமோ அந்தப் பகுதியில் உள்ளவர்களும் கூட இதே கருத்தை தெரிவித்தார்கள். சிந்தனா சக்தியுடைய எல்லா இந்தியர்களுக்கும் இப்பொழுது மிகுதியாக இருக்க வேண்டிய ஒரே எண்ணம் நாட்டின் ஒற்றுமைப் பற்றிய உணர்ச்சி ஒருமைப்பாடும்தான் என்பதை அறியும்பொழுது நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். இந்த ஒற்றுமையை அரசியல் முறையில் மட்டும் அல்லாமல் யூனியன் விவகாரங்களில் மட்டும் அல்லாமல் ஏனையவற்றிலும் காண வேண்டும். உண்மையைக் கூறுமிடத்து இது தேசீய வாழ்க்கையின் ஏனைய பகுதிகளை, பண்பாட்டு வாழ்க்கை உள்பட ஏனைய பகுதிகளைத்தான் மிகவும் முக்கியமாகப் பாதிக்கிறது. யூனியனிலுள்ள ராஜ்யங்கள புனர் அமைப்பு செய்யப்பட்டதால் நாட்டின் ஒற்றுமையின் முக்கியத்துவம் நனகு விளங்குவதோடு அகில இந்திய இடை நிலை மொழி இந்தப் புனரமைபுக்கு எவ்வளவு தேவைப்பட்டது என்பதும் தெரிய வருகிறது. பெரும்பாலும் ஒரு மொழி வழங்குகின்ற ராஜ்யங்கள் மத்திய அரசாங்கத்திம் உறுப்புக்களாக அமைந்துவிட்ட பிறகு இந்த ராஜ்யங்களின் ஆட்சின்துறைகளில் மெல்ல ஆங்கிலத்தின் இடத்தைப் பிராந்திய மொழிகள் எடுத்துக்கொள்ளும் நிலை விரைவாக முன்னேறும் என்று எதிர்பார்ப்பது நியாயமே. இவ்வாறு ஆங்கிலம் பயன்படுத்தப்படுகின்ற துறைகள் சுருங்கச் சுருங்க இவ்வளர்ச்சி புரிந்து கொள்ளக்கூடியது என்றாலும், இப்பொழுது இருக்கின்ற பொதுவான இடைநிலை மொழியின் உபயோகம் குறைந்து கொண்டு வருகிறது என்பதை அறிய வேண்டும். அவ்வாறானால் இந்த ஆங்கிலத்தை நாளாவட்டத்தில் நீக்கக்கூடிய ஒரு பொது இடை நிலை மொழியை, அதாவது யூனியன் மொழியை, வளர்க்கும் முயற்சி விரைவில் செய்யப்பட வேண்டும் என்பது தவிர்க்க முடியாத தேவையாகிறது. ஆட்சித் துறையில் அதிகார இடத்தை விரிவடையச் செய்வது பிராந்திய சுயாட்சி முறைக்கும் சுயாட்சிப் பழக்கங்களை வளர்ப்பதற்கும் ஆளப்படுகின்ற மக்களின் அருகிலே அதிகார வர்க்கம் அமைவதற்கும் முக்கியமான தேவையாகும். சமீபத்தில் செய்யப்பட்ட ராஜ்ய புனர் அமைப்பின் பின்னர், இங்ஙனம் விரிவடையச் செய்யப்பட்ட அதிகாரம் இந்தியாவின் மொழிப் பிராந்தியங்களிலேயே அமைய நேரிடும். எனவே அகில இந்திய அலுவல்களுக்கு ஒரு பொது இடை நிலை மொழியைக்கொண்டு வலுவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் முறை தேவைப்படுகிறது. ராஜ்ய உறுப்புக்களை அமைக்கும் பொழுது பிராந்திய மொழிகள் மிகவும் முக்கியமானவை என்று கருதும்படி எவ்வாறு செய்யப்பட்டதோ அதே முறையில் இந்தியாவின் ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்காக யூனியன் மொழியின் தேவையையும் உணர்ந்து அதற்குரிய இடத்தை அதற்கு அளிக்க வேண்டும். இவ்வாறு செய்யாமல் இருப்பது பெருந் தீங்கிற்கு இடமாகும்.

நாம் முதலில் மொழிகளின் வடிவத்தை வளர்த்தால் பின்னர் இந்த மொழிகளின் வடிவம் நம்மை வளர்க்கும்.

எங்களுடைய விசாரணையின்போதும், எங்கள் முடிவுகளையும் சிபாரிசுகளையும் சேர்த்த இந்த அறிக்கையைத் தயாரிக்கும் பொழுதும் நாட்டிலுள்ள ஹிந்தி பேசாத பிராந்தியங்களின் கஷ்டங்களை விடாமல் மனத்தில் கொண்டும் சிறப்பாக ஹிந்தி மொழிக்கு மிகவும் தூரத்திலுள்ள மொழிகள் பேசும் பிராந்தியங்களை மிகுதியாக மனத்துட் கொண்டே இதனைச் செய்துள்ளோம். இந்தப் பிராந்தியங்களிலிருந்து வருகின்ற இக்காலத் தலைமுறையார்கள் சிலருக்கு அளவு மிஞ்சிய பாரம் ஒரு புது இடைநிலை மொழியைக் கற்றுக்கொள்வதில் ஏற்படும் என்பதை யாரும் மறுக்கவில்லை. எங்களால் இயன்ற அளவு இந்தப் பாரத்தைக் குறைக்க முயன்றுள்ளோம். இப்புதிய இடைநிலை மொழியைக் கற்றுக்கொள்வதற்குப் பல்வேறு சௌகரியங்கள் செய்துகொடுத்தும் அதற்கு வேண்டுமான கால அளவை மிகுதிப்படுத்தியும் இன்னும் இதுபோன்ற பல ஆலோசனைகளால் மொழி மாற்ற காலத்தில் தனிப்பட்டவர்களின் தொல்லைகளைப் போக்க முயன்றுள்ளோம். யூனியன் அரசாங்கத்தின் வேலைகளுக்கு ஆள் தேடும் பொழுது இத்தகைய பிராந்தியங்களிலிருந்து வருகின்றவர்களுடைய நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் பல்வேறு வழிகளை எடுத்துக்கூறியுள்ளோம். இவ்வளவு செய்திருந்தும் கூடச் சிற்சிலருக்குப் புதிய மொழியைக் கற்றுக்கொள்கின்ற பெரிய பாரம் இருக்கத்தான் செய்யும் என்பதை நாங்கள் உணர்கின்றோம். இதைவிடக் குறைந்த அளவு இனி ஒன்றும் செய்ய முடியாது ; ஆதலின் நாட்டில் இப்பொழுதுள்ள வேற்று இடைநிலை மொழியை நீக்கிவிட்டு அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்ற உள்நாட்டு இடைநிலை மொழியைத் தேசத்தின் காரியங்களுக்குப் பயன்படுத்த முயலும் இம்மாற்ற காலத்திற்கு நாம் கொடுக்கும் விலையாகவே இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்நிலையில் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் அடைகின்ற கஷ்டங்களை உணர்ந்து பரிவோடு அதுபற்றி பேசிய ஹிந்திப் பிராந்தியங்களில் உள்ளவர்கள் சொல்லியவற்றையும், ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டி நாடு முழுவதற்கும் பொதுவான ஓர் இடைநிலை மொழியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கூறிய சொற்களையும் முன்னரே இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதை, இப்பொழுது நினைவுக்குக் கொண்டு வருகிறோம். மொழி மாற்றம் செய்யப்படுகின்ற இந்த இடைக்காலம் ஒரு சில வகுப்பாருக்கு மட்டும் பாரத்தை உண்டாக்குவது மிகவும் துரதிஷ்டமானதே.

எவ்வாறாயினும் இத்துன்பங்கள் மாறக் கூடிய இயல்புடையனவே. அடுத்த தலைமுறையைப் பொறுத்த மட்டில் கல்வித் துறையில் நாங்கள் சொல்லிய ஏற்பாடுகளைச் செய்தால் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் தொல்லை பெரும்பகுதியும் குறைந்துவிடும். இப்புதிய தலைமுறையில் வருகின்ற பையன்களும், பெண்களும் அவர்கள் பள்ளிக்கூடங்களில் தேவையான குறைந்த அளவு ஹிந்தியை படித்துவிட்டு வருவார்கள், ஆதலால் இந்தத் தொல்லை கொஞ்சம் கொஞ்சமாக மறையும். இடைக்காலத்தில்கூட இந்த இந்திய மொழிகளின் இடையே ஒரு புது ஒற்றுமையை ஏற்படுத்தும் முறையிலும் புது வளர்ச்சி ஏற்படுத்தும் முறையிலும் தக்க ஏற்பாடுகள் செய்யப்படும். இதனால்தான் நாளாவட்டத்தில் நாட்டின் ஆட்சி முறைகளில் பயன்படுத்தப்படும் மொழி, பலருக்கும் புரியக்கூடிய ஒரு மொழியாக இருக்க வேண்டும் என்பதைக் கருதியே இந்த விஷயத்தில் இவ்வளவு அக்கறை செலுத்துகிறோம்.

16. எங்களுடைய விசாரணையின்போது நாங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட விஷயம் சிக்கல்கள் நிறைந்த ஒன்று என்றாலும், சான்று பகர்ந்தவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள் அன்றும் மிகவும் நடுவு நிலையுடனும், சகிப்புத் தன்மையுடனும், ஒரு பக்கம் சாராமலும் சிறந்த முடிவைக் காண ஒத்துழைத்தார்கள் என்பதை இங்கே குறிக்க விரும்புகிறோம். ஹிந்தி, ஹிந்தியோடு தொடர்புடைய மொழிகள் பேசும் பிராந்தியங்களில் உள்ளவர்கள் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்களுக்கு ஏற்படப்போகும் கஷ்டங்களை நன்கு

அறிந்திருந்தார்கள்; பரிவு காட்டினார்கள் என்பதையும், தென் பகுதி மொழிகளையும் அப்பகுதி இலக்கியங்களையும் அவர்கள் நன்கு அறிந்துகொள்ளவில்லை என்றாலும் இப்பரிவு காட்டினதை நாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். தென் பகுதியிலும் ஏனைய ஹிந்தி மொழி பேசாத பகுதிகளிலும், ஏனைய பகுதிகளைப் போல நாட்டின் பண்பாட்டு ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டி ஒரு பொது இடைநிலை மொழியின் தேவையை நன்கு உணர்ந்து இருந்தார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இப்பிரச்னையினால் உண்டான தொல்லைகள் உண்மையானவை யாதலின் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களில் வாழ்கின்றவர்கள் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களின் கஷ்டங்களை நன்கு உணர்ந்தே பேசினார்கள் என்பதை நினைக்கும்பொழுது ஓரளவு ஆறுதல் ஏற்படுகிறது. ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி மொழியை வளர்க்கும் பணியில் இதுவரையில் ஈடுபட்டவர்கள் அப்பிராந்தியங்களில் வாழ்கின்றவர்களே என்பது நன்கு அறியப்பட்ட தொன்றாகும். ஹிந்தி மாணவர்கள் ஏதாவது ஓர் இந்திய மொழியை சிறப்பாகத் தென்னிந்திய மொழி ஒன்றைக் கற்றுக் கொள்வதன் மூலம் ஹிந்தி மொழி பேசாதவர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொள்ளும் பாரத்திற்கு ஈடுசெய்ய முடியும் என்று கூறியவர்கள் வட நாட்டிலுள்ளவர்களே. இவ்வாறு கற்றுக்கொள்வதனால் தென்னாட்டு மொழிகள் இலக்கியங்கள் பண்பாடுகள் ஆகியவற்றை வடவர்கள் அறிந்து கொள்ள வசதியாக இருக்கும் என்று கூறினார்கள். எதிர் காலத்தில் கல்வி அமைப்பில் ஆங்கில மொழியின் இடம் பற்றிப் பெரும்பாலான மக்களும் நேர்மையானதும் நடுநிலைமையுடையதும் சகிப்புத் தன்மையை யுடையதுமான கருத்துக்களைத் தந்தார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம். வேற்று நாட்டு ஆட்சியாளர்களினுடைய மொழி என்பதற்காக ஆங்கிலத்தின்மேல் யாரும் பகைமை பாராட்டவில்லை. ஆங்கில மொழியை வெளியுலகத்தில் நடைபெறும் விஞ்ஞான முன்னேற்றத்தைக் காணும் "ஜன்னலாக" பயன்படுத்துவதற்கும் அதைப் போதனா மொழியாகப் பயன்படுத்துவதற்கும் உள்ள வேறுபாட்டை அனைவரும் அறிந்து போற்றினார்கள். சான்று பகர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலத்தைப் போதனா மொழி நிலையிலிருந்தும் ஆட்சித் துறையிலிருந்தும், அகில இந்திய வழக்கு மொழி நிலையிலிருந்தும் நீக்கிவிடவேண்டும் என்று கூறினாலும், கல்வித் துறையிலோ ஆட்சித் துறையிலோ தரம் குறைந்துவிடாத அளவுக்கு ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறினார்கள். இம்மாற்றத்தைச் செய்வதற்குரிய கால அட்டவணையில் நிறைந்த அளவு கருத்து வேற்றுமை இருந்தாலும் மிகப் பெரும்பாலான சாட்சியங்கள் இப்பிரச்னையை நடுவு நிலைமையோடும் விருப்பு வெறுப்பற்ற தன்மையோடும் ஆராய்ந்தார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். இந்தப் பிரச்னையில் மிகப் பெரும் அளவுக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். பெரும்பாலான கருத்துக்கள் நேர்மையுடனும் நடுவு நிலைமையுடனும் தரப்பட்டன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைத் தந்தவர்களும்கூட உண்மையில் தங்களுக்குப் பட்டதையே தந்தார்கள் என்பதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம். நாங்கள் இங்கே மேற்கொண்ட முடிவுகளுக்குப் பிறர் யாரும் பொறுப்பாளரல்லர்.

17. நாட்டின் மொழிப் பிரச்னையில் உள்ள சிக்கலும் தொல்லையும் நன்கு விளங்குகின்றன. நாட்டின் அரசியல் ஒற்றுமைக்கு எதிரேயுள்ள பண்பாட்டு ஒற்றுமையை வெளியிடக்கூடிய ஒரு பொது இடைநிலை மொழியைத் தேடினோம். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு இந்த ஒற்றுமையை நாடு மறுபடியும் கண்டுபிடித்துள்ளது. இதனைச் செய்கையில் உலகத்தின் வளம் பொருந்திய மொழிகளுள் ஒன்றாகவும், மிகப் பலரால் அறியப்படுவதாகவும், பல சிறந்த தகுதிகள் உடையதாகவும் உள்ள ஆங்கில மொழியைப் பிற நாட்டு மொழி என்ற காரணத்தால் நீக்கிவிடச் சிபாரிசு செய்துள்ளோம். இக்கால சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள

பல்வேறு சந்தர்ப்பங்களையும் ஆட்சித் துறையிலும் பிற துறைகளிலும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களைப் சமாளிக்கக்கூடிய. ஆங்கிலத்தைப்போல் சமாளிக்கக்கூடிய, ஒரு மொழி இன்னும் இங்கு வளர்ச்சி அடையவில்லை. இங்குள்ள பத்துப் பன்னிரண்டு மொழிகளில் சில, ஐரோப்பாவிலுள்ள பல வளர்ச்சி அடைந்த மொழிகள் பேசும் கூட்டத்தாரைக் காட்டிலும் அதிக எண்ணிக்கை உடையவர்களால் பேசப்படுகிறது. எனவே அதிக எண்ணிக்கையுடையவர்களை பேசும் உலக மொழிகளைக் கணக்கெடுத்தால் இந்த மொழிகள் மிக உயர்ந்த ஓர் இடத்தைப் பெறும். ஹிந்தியை யூனியன் மொழியாகத் தேர்ந்தெடுப்பதற்கு உரிய காரணம் பிராந்திய மொழிகளுள் அதுவே மிகப் பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது என்ற ஒரே காரணம்தான். அக்காரணம் போதுமானதென்றே நாங்கள் நினைக்கிறோம். யூ.எஸ்.எஸ்.ஆர்.-ல் ரஷ்ய மொழி சரித்திர காலத்திலிருந்து இன்று வரை அனுபவித்துவரும் இந்த நிலை வர, ஒரு காரணம் உண்டு. ஏனைய பிராந்திய மொழிகளைக் காட்டிலும் இந்த மொழி நாட்டு மொழியாக ஆவதற்குரிய காரணம் இம்மொழியைப் பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது என்பதேயாகும். இப்பிரச்னையை, சுவஸர்லாந்திலும் பெல்ஜியத்திலும், கனடாவிலும் செய்தது போல எல்லா மொழிகளையும் ஆட்சி மொழிகள் என்று ஏற்றுக்கொண்டு தீர்ப்பது முடியாத காரியம். ஏனென்றால் அங்ஙனம் ஏற்றுக்கொள்ளுகின்ற மொழிகள் இரண்டு அல்லது மூன்றாக இராமல் பன்னிரண்டுக்கும் மேற்பட்டிருத்தலால் ஈது இயலாது. இந்திய பிரச்னையிலுள்ள இதுபோன்ற சில பகுதிகள், உலகின் ஏனைய பகுதிகளில் நன்கு தீர்க்கப்பட்டுள்ளன என்றாலும், இவை அனைத்தும் ஒன்றுகூடிய சிக்கலான இந்தப் பிரச்னை இதற்கு முன்னர் எங்கும் காணாத தொன்று. என்றாலும் இதற்கும் ஒரு வெற்றிகரமான முடிவைக் காணமுடியும் என்றும், நல்லெண்ணமும் பரந்த நோக்கமும் இருக்குமேயானால் இதனைச் செய்து முடிக்கலாம் என்றும் நாங்கள் நினைக்கிறோம்.

18. மொழி என்பது ஒரு முறையில் பார்க்கும்பொழுது மிக முக்கியமானதாகவும் மற்றொரு முறையில் காணும்பொழுது பொருளற்ற ஒன்றாகவும் காணப்படுகிறது. கருவியாகப் பயன்படுகின்ற வகையில் அது மிகவும் முக்கியமானது. மக்களின் வாழ்க்கை முறை நெய்யப்படுகின்ற தறி அதுதான். என்றாலும் வெறும் கருவியாக இருத்தலின் அதனால் விளையும் அடிப்படைப் பயன் ஒன்றும் இல்லை. அது தறியே தவிர நெய்யப்படும் துணி அன்று; எண்ணத்தை வெளியிடும் கருவியே தவிர எண்ணமன்று. மக்களினுடைய மரபுகள், பழக்கங்கள், பண்பாட்டு நிலைவுகள் ஆகியவற்றைத் தாங்கி நிற்கும் பொருளே தவிர மொழி என்பது அப்பொருள்கள் அன்று. பள்ளிக்கூடங்களில் எதிர்பார்ப்பது கல்வியே தவிர மொழியன்று. பொது ஆட்சித் துறையில் நல்ல அரசாங்கத்தை எதிர்பார்க்கிறோமே தவிர மொழியையன்று. நீதி மன்றங்களில் நியாயத்தை எதிர்பார்க்கிறோமே தவிர மொழியையன்று. பல்வேறு துறைகளிலும் எவை, அதிகப்படியான வசதியை அளிக்கின்றனவோ அவையே மொழிப் பிரச்னையின் சிறந்த முடிவுகள். எப்பொழுதும் படுகை இல்லாமல் வெறும் கருவியாகவே இருக்கின்ற மொழியைப் பற்றி ஏற்படும் பிரச்னையில் சூடும், உணர்ச்சிக் கொந்தளிப்பும் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

பி. ஜி. கர்,
(தலைவர்).

பி. கெ. பருவா,
(உறுப்பினர்).

சுனிதி குமார் சட்டர்ஜீ*
(உறுப்பினர்)

† மகன்பாய் தேசாய்,
(உறுப்பினர்)

டி. சி. பவதே,
(உறுப்பினர்)

எம். கெ. ராஜா,
(உறுப்பினர்)

‡ பி. சுப்பராயன்,
(உறுப்பினர்)

ஜி. பி. நேனே,
(உறுப்பினர்)

தேஜா சிங்,
(உறுப்பினர்)

எம். சத்தியநாராயணு,
(உறுப்பினர்)

பாபு ராம் சாக்ஸேனு,
(உறுப்பினர்)

அபித் உசேன்,
(உறுப்பினர்)

ராம் தாரி சின்ஹா டின்கர்,
(உறுப்பினர்)

ஆர். பி. திரிபாதி,
(உறுப்பினர்)

பாலகிருஷ்ண ஷர்மா,
(உறுப்பினர்)

மௌலி சந்தர் ஷர்மா,
(உறுப்பினர்)

ஹஸாரி பிரசாத் துவிவேதி,
(உறுப்பினர்)

ஜய் நாராயண் வயாஸ்,
(உறுப்பினர்)

எஸ். ஜி. பார்வே,
செயலாளர்.

ஸ்ரீநகர், 1956-ம் ஆண்டு ஜூலை 19.

---

* சிறுபான்மையோர் அறிக்கை என்று எடுத்துக்கொள்ளக்கூடிய என்னுடைய வரைவை உளப்படுத்தி நான் கையெழுத்திடுகிறேன்.
சுனிதி குமார் சட்டர்ஜீ.

† என்னுடைய விளக்கத்தை உளப்படுத்தி நான் கையெழுத்திடுகிறேன்.
மகன்பாய் தேசாய்

‡ வேறுபாட்டுக் குறிப்பை உளப்படுத்தி.
பி. சுப்பராயன்.

அ. இந்தக் குறிப்பைச் சிறுபான்மையினர் அறிக்கையாகத் தருவதற்குரிய காரணங்கள்.

இந்தக் கழகத்தில் பங்கு கொண்டவன் என்ற முறையில் மரபை ஒட்டி இந்த அறிக்கையில் என் கையெழுத்தை இட்டாலும், அங்ஙனம் கையெழுத்திட்டது, இந்தக் குறிப்பை உளப்படுத்தியே ஆகும். ஆதலால் இதனைச் சிறுபான்மையினர் அறிக்கையாக ஏற்றுக் கொள்ளலாம்.

இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள பல முடிவுகளையும், சிபார்சுகளையும் நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லையே என்பதற்கு வருந்துகிறேன். இத்தனை மாதங்கள் உழைத்தபிறகு என்னோடு உழைத்த பலருடனும் யூனியன் ஆட்சி மொழி என்ற இவ்வளவு முக்கியமான விஷயத்தில் மாறுபட வேண்டியுள்ளதே என்றும் வருத்தமடைகிறேன். இந்த விசாரணையின் பிறகு ஜனாதிபதிக்கு சிபார்சுகளைச் செய்து அதன் பயனாக இந்திய இனத்தின் நன்மையைக் கோரும் இதில் கருத்து மாறுபாடு கொள்வது வருத்தத்தையே விளைக்கிறது. இந்தக் கழகத்திலுள்ள தலைவரும், ஏனைய சக உறுப்பினர்களும் தங்கள் கடமையைச் செய்ய வேண்டும் என்ற நல் ஆர்வமும், கவலையும் கொண்டு நாட்டின் நன்மைக்குத் தங்கள் கடமையைச் செய்துள்ளார்கள். இந்தக் கழகம் அளவில்லாத சான்றுகளைப் பெற்று அவற்றைத் தொகை வகைப்படுத்திச் செய்துள்ள வேலையில், அவர்கள் மேற்கொண்ட வழியை மேற்கொண்டு வேறு யார் உழைத்திருந்தாலும் இன்னும் அதிகப்படியான மெய்மைகளைப் பெற்றிருக்கக்கூடும் என்று நான் சொல்ல முடியாது. இந்தக் கழகம் வேலை செய்ய ஆரம்பித்தபிறகு இந்தியாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும், நிகழ்ச்சிப் போக்குகளையும் நினைத்து பார்க்கும்பொழுது என்னுடைய கருத்து மிகுதியும் மாறுபட்டுவிட்டது. அதன் பயனாக மொழி யியலையும், மொழிப் பிரச்னையையும் பற்றி இந்தக் அறிக்கையில் தரப்பட்டுள்ள முடிவுகளுக்கு முற்றிலும் மாறுபட்ட முடிவுகளுக்கு நான் வந்துள்ளேன். ஏனைய அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தது போல, இந்தக் கழகம் முடிவுகளைச் செய்வதற்கு முன்னர் நானும் என்னுடைய கருத்துக்களை தெரிவித்தேன் என்றாலும், என்னுடைய சக உறுப்பினர்களில் பெரும்பாலானர்கள் என் கருத்துக்களை ஆராய்ந்த பிறகு அதனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. இந்த அடிப்படையான வேற்றுமையை மனத்துக் கொண்டு ஏனைய வழிகளையும், இன்னும் சில சிபார்சுகளையும் செய்துள்ளேன். இந்தப் பிரச்னையை இறுதியாகத் தீர்க்க வேண்டியவர்கள், பிரச்னை பற்றியும், அதற்கு மேற்கொள்ளும் வழிகள் பற்றியும், உள்ள கருத்து வேறுபாடுகளை பற்றியும் அறிந்துகொள்ள வேண்டும். அதனால்தான் இந்தக் குறிப்பை மாறு பாட்டுக் குறிப்பு அல்லது சிறுபான்மையினர் அறிக்கை என்ற முறையில் தரவேண்டியுள்ளது. இன்றேல் கழக உறுப்பினனாக இருந்து என் கடமையைச் செய்யத் தவறியவனாவேன்.

மத்திய அரசாங்கத்திலிருந்து செய்யப்படவேண்டிய சில வேலைகள் பற்றிய நிகழ்ச்சி நிரலைத் தருகின்றதே தவிர இந்த அறிக்கை இந்தியாவிலுள்ள மொழி யியலை நன்கு ஆராய்ந்ததாகவோ மக்களில் பெரும்பான்மையோருடைய எதிர்காலச் செய்கைகள் இதனால் எவ்வாறு பாதிக்கபடுமென்று சிந்தித்ததாகவே தெரியவில்லை. இந்தியாவிலுள்ள ஹிந்தி மொழி பேசாத மக்கள், தாங்கள் நாட்டுப் பற்று உடையவர்களாக இருந்தால். உடனடியாக எவ்வளவு விரைவில் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியை அதனிடத்தில் வைக்க வேண்டுமோ அந்த அளவுக்கு அவர்களுடைய நீதித் துறையிலும், ஆட்சித் துறையிலும், கல்வித் துறையிலும்கூட, சுருங்கச்

சொன்னால் அவர்கள் வீட்டு வாழ்விலும் கூட முழு அளவுக்கு ஹிந்தியைப் புகுத்த வேண்டும் என்று, ஏதோ முடிந்த முடிவாகக் கூறுகிறது இந்த அறிக்கை.

யூனியன் விவகாரங்களில் சிலவற்றைப் பொறுத்த மட்டில் ஹிந்தியை ஆட்சி மொழியாகப் பயன் படுத்தலாம் என்று அரசியலமைப்பு கூறியதை, இந்த அறிக்கை இன்னும் நீட்டி நம்முடைய கல்வித் துறை, சட்டம் வழங்கும் துறை, நீதித் துறை, மத்திய சட்ட மன்றம், பொதுப் பணிகள் ஆகியவற்றில் முழுப் புரட்சி உண்டாகும் முறையில் கூறியுள்ளது. நாட்டின் சிறந்த நலனைக் கருதுகின்றவர்கள் இன்றைய சூழ்நிலையில் இத்தகைய ஒரு புரட்சியைத் தேவை என்று கருதமாட்டார்கள். மத்திய அரசாங்கம் இந்தச் சிபார்சுகளை நிறைவேற்றத் தொடங்கினால் நம்முடைய பொது வாழ்க்கை முழுவதிலும் உடனே குழப்பம் தோன்றிவிடும். ஹிந்தி பேசாத மக்களுக்கு இச்சிபார்சுகள் நிறைவேற்றப்பட்டால் வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் படிப்படியாக ஹிந்தி பாரம் ஏறிவிடும். இந்தியாவிலுள்ள அனைவராலும் ஹிந்தி விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பது போலவும், ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் அகில இந்திய விஷயங்களில் எல்லாத் துறைகளிலும் ஹிந்தி பேசுபவர்களைப் போலவே தாங்களும் ஹிந்தி வேண்டும் என்று விரும்புவது போலவும் ஒரு சூழ்நிலையைக் கற்பித்துக் கொண்டு இந்த அறிக்கை (அரசியலமைப்பின் அடிப்படையில் தோன்றியதாயினும்) தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், முழு ஆட்சித் துறையிலும், சட்டத் துறையிலும், இந்திய அரசியல் வடிவிலும், பெரும்பாலும் கல்வித் துறையிலும்கூட ஆங்கிலத்தை உடனே ஒழிக்காமல் விடுவது தேச விரோதமான ஒரு செயல் என்பது போலவும் கருதிக்கொண்டு இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்ட கருத்துக்கள் யாவும் இந்திய யூனியனில் உள்ள ஹிந்தி பேசுவோரின் கருத்துக்களே ஆகும். உடனடியாகவும், என்றைக்கும் இல்லாவிட்டாலும், மிக நீண்ட காலத்திற்கு இவற்றால் பயன் பெறுகிறவர்கள் ஹிந்தி பேசும் கூட்டத்தாரே ஆவர். இந்த அறிக்கை முழுவதிலும், ஹிந்தி பேசாத மக்கள் தங்களுடைய மொழியை எங்ஙனம் கருதுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று ஒரு சிறு முயற்சியும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஹிந்தி பேசாத மக்கள், ஆங்கிலத்தைப் பொறுத்த மட்டில் இந்திய இலக்கியமும், விஞ்ஞானமும் வளர்ச்சி அடைய மிக முக்கியமானது என்று மனப் பூர்வமாக நம்புவதையும், இந்திய ஒற்றுமையை காப்பாற்றத் தேவை என்று கருதுவதையும், இன்றைய உலகத்தில் இந்தியா தலைமையான இடம் பெறுவதற்கு ஆங்கிலத்தை வைத்துக்கொள்ள வேண்டியது தேவை என்று கருதுவதையும், அவர்களுடைய மனோ நிலையையும் அறிந்துகொள்ள இந்த அறிக்கை ஒரு சிறிதும் முயலவில்லை. இத்தகைய ஒரு முறை ஜனநாயக முறைக்கு முற்றிலும் மாறுபட்டது என்பதோடு அல்லாமல், இந்தியா முழுவதற்கும் இயல்பான பொருத்தமான அரசியல் மனப்பான்மை இதுதான் என்று சொல்லி, ஒரு சாராரின் கொள்கையை மற்றொரு சாராரின்மேல் திணிப்பதேயாகும். நம்முடைய தேசீய வாழ்வில் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு முக்கியத்துவத்தை ஒரு குறிப்பிட்ட மொழிக்குத் தர முயன்றுள்ளார்கள். இந்த அறிக்கையின்படி இந்தியாவின் ஒற்றுமைக்குக் காரணமான ஆங்கிலத்தை நீக்கி அந்த ஒற்றுமைக்குப் பங்கம் வருவதைக்கூட பொருட்படுத்தாமல் ஹிந்தி மூலம் ஒரு வகையான ஒருமைப் பாட்டை தேடுகிறார்கள் என்றே தோன்றுகிறது.

இந்தச் சிபார்சுகளைப் பார்க்கும்பொழுது, இவ்வாறு செய்யவேண்டும் என்று கருத்தில்லாவிட்டாலும், இந்தியப் பிரஜைகளுள் இரண்டுவகையான பிரஜைகளை இது உடனே உண்டாக்கிவிடும் என்று நான் கருதுகிறேன். முதல் வகுப்புப் பிரஜைகள் ஹிந்தியைத் தாய் மொழியாக உடையவர்கள்; தங்கள் மொழி ஒன்றினாலேயே இவர்கள் எல்லையில்லாத பிரத்தியேகமான உரிமைகளைப் பெற்றுவிடுகிறார்கள். இரண்டாம் வகுப்புப் பிரஜைகள்

தங்களுடைய மொழியின் காரணமாக நிலை பெற்ற குறைகளை அனுபவித்துக் கொண்டே இருப்பார்கள். அஸ்ஸாம், வங்காளம், ஒரிஸா, ஆந்திரா, சென்னை, மகாராஷ்டிரா, இன்னும் இவை போன்ற இடங்களில் உள்ள ஹிந்தி பேசாத மக்கள், ஹிந்தி பேசும் மக்களைப் போன்ற முறையில் ஹிந்தியைக் கற்றுக் கொள்கின்ற வரையில் இந்த நிலைமைதான் நீடித்திருக்கும். ஹிந்தி பேசும் மக்கள் ஆங்கிலத்தோடு சேர்ந்தோ அன்றி அதுவும் இல்லாமலோ ஹிந்தி ஒன்றையே கற்றுக் கொள்வார்கள். ஆதலால் அவர்களோடு ஒத்த முறையில் மேலே கூறியவர்களும் ஹிந்தியைக் கற்று அவர்களுக்குச் சமமாக வரவேண்டும். காஷ்மீர் அரசாங்கம் இந்தக் கழகத்தின் கேள்விக்குப் பின்வருமாறு விடையளித்தது. "யூனியன் பொதுப் பணிக் கழகப் போட்டிப் பரீட்சைகளில் ஆங்கிலத்தை நீக்கி, ஹிந்தியை இடைநிலை மொழியாக வைத்தால் ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள், ஹிந்தி பேசும் பிராந்தியங்களோடு ஒப்பு நோக்க, என்றுமே நிலை பெற்ற குறைபாட்டை அனுபவிக்க நேரிடும்." மேலும் அது சொல்வதாவது: "ஹிந்தி பேசாத மக்கள் பேசுகின்றவர்களோடு ஒப்பச் சொல்கின்ற முறையில், போட்டிப் பரீட்சை எழுதும் அளவுக்கு எவ்வளவு விரைவில் ஹிந்தியைக் கற்றுக் கொள்வார்கள் என்று சொல்வது முடியாத காரியம்." அனைவரையும் பொதுவாகப் பாவிக்கின்ற ஒருவருக்கும் சொந்தமில்லாத ஆங்கிலம், இந்தியாவிற்கும், உலகத்திற்கும் தொடர்பு உண்டாக்குவதோடு, இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிப் பிராந்தியங்களினுள்ளேயும் தொடர்பை உண்டாக்கப் பயன் படுகிறதாதலின், மற்ற மொழிகளின் செலவில் ஒரு மொழிக்குப் பிரத்தியேகமான வசதிகள் செய்து கொடுக்கும் சூழ்நிலை இங்கு இல்லை. இப்பொழுது இந்திய மக்கள் அனைவரும் (தெற்கு, வடக்கு, மேற்கு, கிழக்கு ஆகிய நான்கு திசைகளிலிருந்தும்) ஹிந்தி மொழி வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும். அந்த மொழி அறிவுத் துறையிலோ, ஏனைய துறையிலோ மற்ற இந்தியர்களுக்கு எந்தவிதமான பயனையும் இதுவரை அளிக்கவில்லை. பெரும் பொருளை இதற்காகத் தருவதோடன்றி ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் தங்களுடைய மொழிக்கு எவ்விதத்திலும் சிறந்ததல்லாததும், இப்பொழுதுதான் வளம் பெற்றுக் கொண்டிருப்பதும் ஆகிய ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கு எல்லையில்லாத காலத்தையும், சக்தியையும் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று கருதுகிறார்கள். இவர்களைப் பொறுத்த மட்டில், எவ்வளவு நல்லெண்ணமும், ஆர்வமும், கருணையும் காட்டப்படுவதுபோல இருப்பினும், ஹிந்தி அல்லாத ஏனைய இந்திய மொழிகள் இந்த அறிக்கையின் சிபார்சுகளின்படி அந்த மொழிகள் வழங்கும் பிராந்தியங்களில்கூட இரண்டாவது இடத்தைத்தான் பெறும். இத்தகைய ஒரு சூழ்நிலையை அம்மொழி பேசும் மக்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த அறிக்கையின் சிபார்சுகள் சிறப்பாகக் கல்வி, பொதுப் பணிப் பரீட்சைகள், நீதி வழங்கல், ஆகிய துறைகளில் செய்யப்பட்டுள்ள முறையில் தெரிந்தோ, தெரியாமலோ ஹிந்தி பேசாத மக்களின் பண்பாட்டையும், பொது வாழ்க்கையையும் ஹிந்தியாகிய விலங்கால் பற்றிக்கொள்ளுகிறது என்றும், அதன் பயனாக என்றுமே அவர்கள் நாதியற்றவர்களாக ஆகிவிடுவார்கள் என்றும் நினைக்க இடமுண்டு. இதனால் விளையும் பலாபலன்களைப் பற்றி இந்தச் சிபார்சுகள் கவலைப்படுவதாகவே தெரியவில்லை. இந்தியா முழுவதற்கும் ஹிந்தியைக் கொண்டுவருவதில் இந்த அறிக்கை தலைபோகின்ற அவசரத்தைக் காட்டுகின்றது. "இந்திய யூனியனில் ஹிந்தி மொழியைப் புகுத்தி அரசியலமைப்பில் சொல்லப்பட்ட கால வரையறைக்குள்ளாக முழு மொழி மாற்றத்தையும் செய்யும் வேலையில் [illegible] ஒரு கால அட்டவணையையும், வேலை அட்டவணையையும் தர முடியவில்லையே" என்று இந்த அறிக்கை வருந்தினாலும், 1965-யை குறிப்பிட்ட காலவரையறையாகவே ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்குரிய தேதியை ஹிந்தி மொழி பெருமலிருக்கும் நிலையிலும், ஹிந்தி மொழி பேசாதவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத இந்நிலையிலும் இத்தகைய ஒரு புரட்சிகரமான மாற்றத்தை இந்திய விஷயங்களுக்குக் கொண்டுவருவது ஏற்றதன்று, என்று பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன். வாழ்வில்

40 ஆண்டுகளை மொழிப் பிரச்னையை ஆராய்வதிலும், இந்திய மொழிகளைப் போதிப்பதிலும், கற்பதிலும் செலவழித்த நான், அவர்கள் சிறந்த தேச பக்தர்களாக இருப்பினும், சிலர் நினைப்பது போல அல்லாமல் இம் மொழிப் பிரச்னை அவ்வளவு அவசரமானதன்று என்று தீர்மானமாக்க் கருதுகிறேன். எனவே இந்த அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள சிபார்சுகளுக்கு நான் உடந்தையாக இருக்க முடியாது. மேலும் இதில் சொல்லப்பட்ட கருத்துக்களையும், விவாதங்களையும் அதன் பயனாக உள்ள முடிவுகளையும் நான் ஏற்றுக் கொள்ள முடியாது.

அறிவும், அனுபவமும், ஆழ்ந்த சிந்தனையும் இல்லாமல் நான் ஒன்றையும் கூறவில்லை. இந்திய ஆட்சி மொழிகளுள் ஒன்றாக ஹிந்தியை (ஆங்கிலத்தோடு சேர்த்து) ஆக்க வேண்டும் என்று மிக நீண்ட காலமாகச் சொல்லி வந்துள்ளேன். ஆனால் ஆங்கிலத்தை உயர்தரக் கல்வியிலும், சட்ட, ஆட்சி துறைகளிலும் வைத்திருக்கவேண்டும் என்பதோடு ஹிந்தியும், இந்திய மொழிகளும் ஆங்கிலத்தைப் போன்ற வன்மை பெற்று அதன் இடத்தைப் பெறுகின்ற வரை ஆங்கிலத்தையே வைத்திருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன். முதலாவதாக ஹிந்தியின் உபயோகம் “அலங்கார முறையாக” இருக்க வேண்டும் என்றும், அடுத்தபடியாக பொருத்தமாக இருப்பினும் மாகாணங்களுக்குள் தொடர்பு கொள்ளும் மொழியாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளேன். என்றாலும் ஆங்கிலத்தையோ, பிராந்திய மொழிகளையோ முற்றிலும் நீக்கி விட்டு இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று என்றுமே சொல்லியதில்லை. ஹிந்தி பேசும் பகுதியிலுள்ள மாணவர்களை இந்தியாவின் மற்றொரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியதுபோலவே ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் உள்ளவர்கள் விருப்பத்தோடு ஹிந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறிவந்துள்ளேன். வங்காள மக்களுக்குள் ஹிந்தியைப் பரப்பும் வேலையில் நான் மும்முரமாக ஈடுபட்டு வந்துள்ளேன். ஆனால் விரும்பினால் கற்றுக் கொள்ளும் முறையிலேயே இதனை நடத்தியுள்ளேன். சென்ற 10 ஆண்டுகளுக்கும் மேலாக வார்தாவிலுள்ள ராஷ்டர பாஷா பிரசார் சமிதியின் மேற்கு வங்காளக் கிளையின் தலைவனாக இருந்து வந்துள்ளேன். இதன் பயனாக எனது வங்காள நண்பர்கள் என்னை நன்கு புரிந்து கொள்ளாமல் குறை கூறினார்கள். சிலர் வங்காளிக்கு எதிராக ஹிந்தியை ஆதரிக்கிறேன் என்று கருதி என்னை ஏசவும் செய்தார்கள். எல்லா இந்திய மொழிகளுக்கும் ரோமன் எழுத்துக்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கையில் இன்றும் நிற்கிறேன். நம்முடைய நலத்தைக் கருதும் பொழுது இப்பொழுதோ அன்றிச் சில காலம் கழித்தோ, மிகவும் பொருத்தமான செயல் என்று நான் கருதும் இதனை நாம் அனைவருமே செய்வோம் என்று கருதுகிறேன். அதாவது இந்திய மொழிகளுக்கு திருத்தம் செய்யப்பட்ட ரோமன் எழுத்துக்களை ஏற்றுக் கொள்வதாகும். எப்பொழுதாவது ஹிந்தியில் எழுதுகிறேன்; இதுவரையில் பல கட்டுரைகளும் நான்கு புத்தகங்களும் ஹிந்தியில் எழுதியுள்ளேன். பலவிடங்களிலுள்ள ஹிந்தி அறிஞர்கள் பலர் என்னுடைய நெருங்கிய நண்பர்களாக உள்ளார்கள். யூ.பி. அரசாங்கம் என்னுடைய பாரதீய ஆர்ய-பாஷா ஔர் ஹிந்தி என்ற நூலுக்குத் தான் கொடுக்கக் கூடிய மிக உயர்ந்த பரிசை அளித்துள்ளது. ராஜஸ்தானி மொழி பற்றிய மற்றொரு நூலுக்கு, ஹிந்தி சாகித்ய சம்மேளனம், அந்த வருஷத்தில் மொழி பற்றி ஹிந்தியில் எழுதப்பட்ட நூல்களுள் சிறந்தது என்று கருதி ரத்னாகர் பரிசை அளித்துள்ளது. காசியிலுள்ள நாகரி பிரசாரணி சபாவுக்கு கௌரவ அங்கத்தினனாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளேன். ஹிந்தி மொழிக்கு நான் செய்த தொண்டுகளுக்காக ஹிந்தி சாகித்திய சம்மேளனம் எனக்கு சாகித்ய-வாசஸ்பதி என்ற பட்டத்தைத் தந்துள்ளது. 1948-ல் பன்னாட்டு மொழி வல்லுநர் மாநாட்டில் நிலை பெற்ற பன்னாட்டு மொழியறிஞர் குழுவின் (சி.ஐ.பி.எல்.) உறுப்பினன் என்ற முறையில் பங்கு கொண்டேன். உலகத்தில் அதிகப்படியான மக்கள் பேசும் மொழிக் கணக்கில் ஹிந்தி மொழி மூன்றாவதாக இருப்பதாலும், நவீன இந்தியாவின்

பிரதி நிதி மொழி என்ற முறையிலும், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தில் (யு.என்.ஓ.) ஹிந்தி மொழி ஆங்கிலம், பிரஞ்சு, ஸ்பானிஷ், ரஷ்யன், சீன மொழிகளோடு இடம் பெறவேண்டும் என்று கூறியுள்ளேன். ஹிந்தி மொழியினிடம் நான் பெரும் பற்றுக்கொண்டிருப்பது உண்மை என்றாலும், அதனை விரும்பி ஏற்றுக் கொண்ட பொழுது, இந்தியா முழுவதற்கும் சிறந்த பயனளிக்கும் என்று நம்பினாலும், வங்காளி, ஆங்கிலம், வட மொழி ஆகியவற்றை நீக்கும் முறையில் ஹிந்தியினிடம் நான் பற்றுக் கொள்ளவில்லை. இம்முறையில் அகில இந்தியத் தேசீய வாழ்வில் ஆங்கிலத்தோடு ஹிந்திக்கும் ஒரு முக்கியமான இடம் கொடுப்பதையும், அதே இடத்தை ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களில் பிராந்திய மொழிக்குக் கொடுப்பதையும் நான் வரவேற்கிறேன். அதாவது பொது அடையாளப் பலகைகளிலும், ரயில்வே நிலையம், அஞ்சல் அலுவலகம் ஆகியவற்றின் அறிக்கைகளிலும், வெளி நாட்டோடு சம்பந்தமுடைய ராஜ்ய ஆவணங்களிலும் இதனை ஏற்றுக் கொள்வதாகும். இவ்வாறு செய்வதால் நாடு முழுவதிலும் உள்ள மக்கள் ஹிந்தி மொழியில் ஓரளவு பழக்கப்படுவதோடு இந்திய ஐக்கிய ராஜ்யங்களினிடையே உள்ள ஒற்றுமைத் தன்மையை எடுத்துக் காட்டவும் இது பயன் படும்.

இத்தனை அடிப்படைகள் இருந்தும், இந்தக் கழகம் வேலை தொடங்கிய பின்னர் இந்தியாவில் சமீபத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் போக்கைக் கொண்டு பார்க்கும் பொழுது மிக உயர்ந்ததாகிய இந்திய ஒற்றுமையை, எப்பாடு பட்டாயினும் காக்கவேண்டிய அவசியத்தை உணர்கிறேன். ஆதலின், எந்த அளவுக்கு எந்த வேகத்தில் ஹிந்தியைப் புகுத்தி ராஷ்டிர பாஷாவாக ஆக்க வேண்டும் என்பதில் கருத்துவேறுபாடு கொள்கிறேன். சிறப்பாக மத்திய அரசாங்கமும், ஹிந்தி ராஜ்யங்களும், காங்கிரஸ் கூட்டத்தாரும் ஹிந்தியைப் பற்றியும், ஆங்கிலத்தைப் பற்றியும் சொண்டுள்ள அதிகார நோக்கத்தை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் எனக் கருதுகிறேன். இதனை மேற்கொண்டால் ஒருவகையான "ஹிந்திப் பேரரசுக் கொள்கை" நிலைத்துவிடும் என்றும், அது மிகுதியும் தேச விரோதமானதாக இருக்கும் என்றும் மனப் பூர்வமாக நம்புகிறேன். வெறும் எண்ணிக்கையில் தவிர ஏனைய இந்திய மொழிகளோடு ஒப்பிடும் பொழுது ஹிந்தி மொழி எந்தத் தனி சிறப்பையும் பெற்றிருக்கவில்லை. ஹிந்தி ராஜ்யங்களிலுள்ள பண்பாட்டோடு கூடிய அறிவாளிகள் அதிலிருந்து விடுபட்டுள்ளார்கள்; அவர்களுள் சிலர் இது பற்றித் தங்கள் கவலையையும் தெரிவித்தார்கள். ஆனால் அரைகுறைப் படிப்புடையவர்களும், கல்வியறிவில்லாதவர்களும் வேறுவிதமாகக் கருதுகின்றார்கள். நன்கும் அறிந்து கொண்டு சகிப்புத் தன்மையோடு இருக்க வேண்டிய இது போன்ற முக்கியமான விஷயங்களில் சாதாரண மனிதர்கள், அதாவது பொது மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதே முக்கியமானது. எல்லா மக்களையும் போல, ஹிந்தி பேசும் மக்களும் மொழி வெறியிலிருந்து விடுதலை பெறவில்லை. அவர்களுடைய ஆசையை மிக உயர்ந்த அளவுக்குத் தூண்டி விட்டாய் விட்டது. இது பற்றி நன்கு சிந்தித்துத் தெளிந்த பிறகு நம்முடைய கல்வி முறையிலும், பொது வாழ்விலும் ஆங்கிலத்தை இரண்டாவது இடத்திற்கு தள்ளுவதன் மூலம் நாட்டின் நன்மையைத் தேடவில்லை என்பதை உறுதியாக நம்புகிறேன். எனவே இக்கழகத்தின் அறிக்கையின் முடிவுகளிலிருந்தும், சிபார்சுகளிலிருந்தும் மாறுபட உரிமையை வேண்டிக் கொள்கிறேன்.

எது நியாயமானதென்றும், முறையானதென்றும் நான் கருதுகிறேனோ அதனை ஜனாதிபதிக்கு என்னுடைய சிபார்சுகளாகக் கீழே தருகின்றேன். இந்த முறைகளைக் கூறுவதற்கு காரணங்களையும் சுருக்கித் தந்துள்ளேன். நாட்டின் எல்லாப் பாகங்களிலும் உள்ள ராஜ்யங்கள் சட்ட மன்றங்கள் பொது மக்கள் ஆகிய அனைவரிடமும் அது வழங்கப்படும். இம்முறையில்தான் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களைப் பிற மக்களை கட்டியாளும் விதியுடையவர்கள் அறிந்து கொள்ள முடியும்.

ஆ. சிபார்சுகள்

இந்திய அரசியலமைப்பின் 344-வது விதியில் குறிப்பிட்டுள்ள ஐந்து விஷயங்கள் பற்றி "ஜனாதிபதிக்கு இந்தக் கழகம் சிபார்சு செய்ய வேண்டும்" என்ற நிர்மாணக் கோரிக்கையை ஒட்டியும், அவ்வாறு செய்யும் பொழுது "இந்தியாவின் தொழில் துறை, பண்பாடு, விஞ்ஞான முன்னேற்றம் ஆகியவற்றை மனத்துட் கொண்டும் ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் உள்ளவர்கள் பொதுப் பணிகளில் நுழைவதற்குரிய தேவைகளைக் கவனித்தும் "செய்யப்படுகின்ற சிபார்சுகளில்—ஜனாதிபதியவர்கட்குக் கீழ் கண்ட சிபார்சுகளை வணக்கத்துடன் தெரிவிக்கிறேன்.

(அ) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு ஹிந்தி மொழியை வழங்குவதானால், அம்மொழி பிராந்திய மொழியாகவும், தாய் மொழியாகவும் உள்ள ஹிந்தி பேசும் இனத்தார் ஹிந்தி பேசாத இனத்தாரைக் காட்டிலும், இயல்பாகவே நிலையான பல நன்மைகளை பெற்றுவிடுவார்கள். இதன் பயனாக இந்தியாவில் பொது வாழ்க்கையிலும் ஆட்சித் துறையின் எல்லா இலாக்காக்களிலும் ஹிந்தி பேசும் இனத்தார் என்று சொல்லப்படும் சலுகை பெற்ற ஒரு இனம் உண்டாகிவிடும்.

அடுத்தபடியாக உடனடியாக ஹிந்தி பேசாத மக்களின் மொழி பற்றிய துறைகளில் அகில இந்திய நிலைமையிலும், ராஜ்ய நிலைமையிலும் கூட ஆதார உரிமைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு விடும். இப்பொழுது உள்ள அரசியல் சூழ்நிலையில் இந்தியாவிலுள்ள பல்வேறு ராஜ்யங்களிலும் மொழிப் பொறுமையும், எல்லைப் பொறுமையும் உச்சஸ்தாயையிலிருந்து வருவதால் பல்வேறு மக்களினுடைய மொழி உரிமைகளைப் பாதிக்கக்கூடிய நீண்ட முடிவுகள் எதனையும் செய்வதற்கு இப்பொழுது சந்தர்ப்பம் சரியாக இல்லை. அதிலும் இம்மக்கள் ஹிந்தி வட்டத்தின் அப்பாற் பட்டவர்களாக இருந்தால் இம்மாற்றம் செய்வதற்கு சந்தர்ப்பம் முற்றிலும் சரியில்லை.

யூனியனுக்குள்ளாக மிகவும் வருந்தத் தகுந்த சிக்கல்களை அனாவசியமாக ஏற்படுத்திவிடும் என்ற காரணத்தால், யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தியை நுழைக்கின்ற பிரச்னையை இப்பொழுதைக்கு ஒதுக்கி வைக்க வேண்டும். மேலும் அரசியலமைப்பு 344-வது விதி (4)-வது பிரிவின்படி அமைக்கப்படுகின்ற குழு நாட்டில் நிலவும் இந்தச் சூழ்நிலையைக் கவனிக்குமாறும், கல்வி வளர்ச்சியையும், ஆட்சி வன்மையையும் கவனிக்குமாறும், ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள மக்களின் விருப்பத்தை ஆராயுமாறும், அதன் பின்னரே அவர்கள் சிபார்சுகளை செய்யவேண்டும் என்றும், அக் குழுவுக்கு அறிவிக்க வேண்டும். ஜனாதிபதி இந்த அறிக்கையின் பிரகாரம் வழிதுறைகளை வகுக்கும் முன்னர் நாட்டில் மாற்றம் கொண்டுள்ள சூழ்நிலையை நன்கு கவனிக்க வேண்டும் என்று மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) நாட்டின் ஒற்றுமை, சகோதரத்துவம் என்பவற்றைக் கருதியும், ஆட்சி நன்கு நடைபெற வேண்டும் என்பதைக் கருதியும், இந்திய மக்கள் விஞ்ஞான, தொழில் துறைகளில் முன்னேற வேண்டும் என்பது கருதியும், கலைத் துறையில் முன்னேற்றம் கருதியும், யூனியன் ஆட்சி விவகாரங்களில் சிலவற்றிலாவது ஆங்கிலத்தின் உபயோகத்தைக் குறைக்க வேண்டும் என்ற முடிவையும், இன்னும் கொஞ்சக் காலத்திற்குத் தள்ளி வைக்க வேண்டும். இதே காரியத்தை 344-வது விதி (4-வது பிரிவின்படி) அமைக்கப்படுகின்ற குழுவும் கவனிக்க வேண்டும்.

(அ) பிரிவும் (ஆ) பிரிவும் ஒரே பிரச்னையின் இரண்டு பகுதிகளாகக் கருதப்பட வேண்டும்.

(இ) இப்பொழுதைக்கு அரசியலமைப்பின் 348-வது விதியில் சொல்லப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும் இப்பொழுது உள்ளதுபோலவே ஆங்கில மொழியைத் தொடர்ந்து பயன் படுத்துவதோடு, ராஜ்யங்கள் தேவைப்பட்டு

பொழுது பிராந்திய மொழி மொழிபெயர்ப்போடு ஆங்கிலத்தைப் பயன் படுத்த முழு உரிமை வழங்கப்படவேண்டும். ஹிந்தி பேசாத ராஜ்யங்கள் விருப்பப்பட்டால் இந்திய ஒற்றுமையின் அடையாளமாக, வரையறுக்கப்பட்ட சில் காரியங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்போடும் அல்லேல் பிராந்திய மொழி மொழி பெயர்ப்போடும் ஹிந்தியைப் பயன் படுத்தலாம்.

(ஈ) சௌகர்யம் கருதியும், எளிதாகப் பரிமாறிக் கொள்ளக்கூடியது என்பதற்கு மட்டும் அல்லாமல் விஞ்ஞானப் பயனகளைக் கருதியும், ஒரு முறை ஒப்புக் கொள்ளப்பட்ட இந்திய எண்களின் பன்னாட்டு வடிவங்களையே அகில இந்திய ஹிந்தியிலும் பயன் படுத்தவேண்டும். ஆனால் ஹிந்தியைப் பிராந்திய மொழியாக உபயோகப் படுத்தும்பொழுது எண்களின் ஹிந்தி வடிவத்தையே பயன்படுத்தலாம். ஆனால் பன்னாட்டு எண்களை உடனுவது அன்றி ஒன்றுவிட்டொன்றுவது பயன்படுத்த வேண்டும்.

(உ) நாம் விருப்பப் படுகின்ற முறையில், கட்டளையிட்டு ஒரு மொழியை வளர்க்க முடியாது. எனவே ஒரு மொழி வளர்ச்சி அடைவதற்கு முன்னர் ஒரு கால அட்டவணை தயார் செய்வது பயனற்றதும் வருத்தத்தை விளைவிப்பதும் ஆகும். ஸ்ரீ கே. எம். முன்ஷி “ கற்றறிந்தவர்கள் கையில் வலிமை பொருந்திய கருத்தை வெளியிடும் கருவியாக ஹிந்தி மொழி ஆனல் ஒழிய சக்தி வாய்ந்த ஆங்கிலம் போன்ற ஒரு மொழியை அது நீக்க முடியாது ” என்று சிறந்த முறையில் கூறினர். மக்களின் மனம் முதவில் புதுப்பிக்கப் பட்டு விஞ்ஞானம், பண்பாடு ஆகிய துறைகளில் நல்ல முன்னேற்றம் அடைந்தாலொழிய அவர்கள் பயன் படுத்தும் மொழி அவர்கள் கருத்தை அரசியல் துறையிலும், வாழ்வின் ஏனைய பகுதிகளிலும் சிறந்த முறையில் வெளியிடும் கருவியாக அமையாது.

பிராந்திய மொழிகளை வழங்கும் பல்வேறு ராஜ்யங்களும் தாமாகவே விரும்பி ஹிந்தி மொழியை ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த ராஜ்யங்களிலுள்ள அறிஞர் கூட்டத்தில் ஹிந்தி மொழி பரவிய பிறகு எந்த அளவுக்கு யூனியனுக்கும், ராஜ்ய அரசாங்கங்களுக்குமிடையே ஹிந்தியை வழங்கலாம் என்பது பற்றியும், ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்குமிடையே இந்த மொழியை வழங்கலாம் என்பது பற்றியும், கடைசியாக, அந்த ராஜ்யங்களே முடிவு செய்யுமாறு விட்டுவிட வேண்டும்.

இந்த அறிக்கையின் பெரும்பான்மையோர் குறிப்பிட்டபடி மேற்கண்ட காரியத்திற்குக் குறிப்பிட்ட கால அட்டவணை தயார் செய்யும் நோக்கத்தைத் தற்பொழுதைக்கு நிறுத்திவைக்க வேண்டுமென்றே நான் சிபார்சு செய்கிறேன். இப்பொழுதைக்கு ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ராஜ்யங்கள் சுய முயற்சியின் மூலம் ஹிந்தியைப் பரப்பும் வேலையில் ஈடுபட வேண்டும். ஹிந்தி பேசும் மக்களும், ஹிந்தியைப் பேசும் ராஜ்யங்களும் ஹிந்தியை வரையறுக்கப்பட்டதும், ஆக்க வேலையுடையதுமான அறிவுத்துறைகளில் வளர்க்க வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவின் ஒற்றுமைக்கு அறிகுறியாக இந்தியா முழுவதும் ஒரு இந்திய மொழியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும். இந்தச் சூழ்நிலையில் இவ்விஷயத்தில் வடமொழிக்கு இருக்கின்ற உரிமைகளை மறந்துவிடக் கூடாது. இந்நிலையில் ஒவ்வொரு ஹிந்தி பேசாத ராஜ்யமும் ஹிந்திப் படிப்பை ஊக்குவிக்க வேண்டும். இப்பொழுது ஹிந்தி பேசாத மக்கள் ஹிந்தியைக் கற்றுக் கொள்வதனால் பண்பாடு, அறிவுத் துறை ஆகிய ஒன்றிலும் எவ்வித மதிப்பையும் அடைய முடியாது என்றாலும், இதனை ஊக்குவிக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்தி, உருது, அல்லாத தற்கால இந்திய மொழி ஒன்றை ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ளவர்கள் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று செய்வது ஹிந்தி பேசாத பிராந்தியத்திலுள்ளவர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொள்வதற்குப் பெரிதும் தூண்டுதலாக இருப்பதோடு இம்மொழி இனத்தார் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளவும் உதவியாக

இருக்கும். இதனால் ஏற்கெனவே ஆங்கிலத்தின் மூலமாகவும், வடமொழியின் மூலமாகவும் கடைத் தெரு ஹிந்துஸ்தானி (வட இந்தியாவில் நகரங்களிலுள்ள ஆரிய மொழி பேசுவோரால் பேசப்படுவது) மூலமாகவும் அமைந்துள்ள அகில இந்திய ஒற்றுமை மேலும் வலுவடையும்.

இ. காரணங்களும் விவாதங்களும்

(அ) சில முக்கியமான ஆலோசனைகள்.

இந்தச் சிபாரிசுகள் எனக்குத் தெரிந்த வரையில் இந்திய மக்களின் சிறந்த நலன்களை உத்தேசித்துச் செய்யப்படுகின்றன. இவற்றைச் செய்வதில் ஒரு குறிக்கோள் பற்றியோ உணர்ச்சி பற்றியோ செய்யாமல் தேவைகளை ஒட்டியும் நடைமுறையை ஒட்டியும் செய்யப்படுகின்றன. ஆங்கிலம் புகுந்துள்ள எல்லாத் துறைகளிலும் ஹிந்தியைப் புகுத்துவதில் எத்தனை இடைஞ்சல்கள் தோன்றுகின்றன என்பதை ஆராய வேண்டியது அவசியம். பல்வேறு ஹிந்தி வழங்காத ராஜ்யங்களில் இப்பொழுது ஆட்சித் துறை, கல்வித் துறை முதலானவற்றில் இடம் பெறுகின்ற பிராந்திய மொழிகள் இந்த இடங்களுக்குப் போட்டி போடுவதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஐம்பது சதவிகிதம் எதிர்ப்பு இருந்து கூட அரசியல் சபையில் ஹிந்தி மொழியை ஏற்றுக்கொண்ட சூழ்நிலையையும் இப்பொழுது மறுபடியும் ஆராய வேண்டும். இப்பொழுது வளர்ச்சியடைந்து வருகின்ற மொழி விஷய சகிப்பின்மை அல்லது மொழி வெறி சென்ற சில ஆண்டுகளாகவே வளர்ந்துவந்து (சிறப்பாகச் சென்ற சில மாதங்களில்) இப்பொழுது இந்தியப் பொது வாழ்வில் அச்சத்தை உண்டாக்கக் கூடிய நிலையை அடைந்து இந்திய ஒற்றுமையின் அடிப்படையையே குலைத்துவிடும்போல் உள்ள நிலையையும் ஆராய வேண்டும்.

பல மொழிகள் வழக்கத்திலிருக்கும் இந்தியாவைப் போன்ற எந்த ஒரு நாட்டிலும் மொழிக் கொள்கையைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது ஐந்து குறிக்கோள்களை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

(1) தேசிய ஒற்றுமையைப் பாதுகாத்தல்,

(2) ஆட்சித் துறையில் சாமர்த்தியத்தைப் பாதுகாத்தல்,

(3) மக்களின் எல்லாப்பகுதியினர் இடையேயும் அறிவு வளர்ச்சி பெற முயற்சித்தல்,

(4) எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான உரிமை இருக்குமாறு பாதுகாத்தலும், எந்த ஒரு தனிப்பட்ட இனத்திற்கும் அதிக உரிமை வழங்காதிருத்தலும்.

(5) சுதந்திரம் பெற்ற மக்கள் என்ற முறையில் இந்தியாவின் தன்மானத்தைப் பாதுகாத்தல்.

இந்தியா பல மொழிகளும் பல சமயங்களும் கொண்ட ஒரு இனமாகும். இந்நாடு ஓர் இனமாக நிலைத்து வாழ வேண்டுமேயானால் மொழிகளிலும் சமயங்களிலும் உள்ள வேற்றுமையின் இடையே ஓர் ஒற்றுமையைக் கண்டு அதனை வலுப்படுத்துவதன் மூலமே இது நடைபெற முடியும். எந்த ஒரு மொழியும் இந்த ஒற்றுமையை வளர்த்துப் பரப்ப உதவினால் ஒழிய இந்தியப் பொது வாழ்க்கையில் அம்மொழிக்கு ஒரு மதிப்பு இருக்கமுடியாது.

(ஆ) அரசியல் அமைப்பில் இந்தியாவின் ஆட்சி மொழியாக ஹிந்தி எங்ஙனம் இடம் பெற்றது ?

அரசியல் அமைப்பின் 8-வது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள 14 முக்கிய மொழிகளுள் இருந்து அரசியல் சபை ஹிந்தி மொழியை பொறுக்கி

எடுத்துக் கொண்டது. இவ்வாறு எடுத்தது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளு மன்றம் அன்று என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் உள்ள மக்கள் சிலர் மகிழ்ச்சியோடும் சிலர் சந்தேகத்தோடும் ஹிந்தி மொழியை ஏற்றுக் கொண்டதற்கு முக்கியமான ஒரு காரணம் உண்டு. சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டிற்கு மிகவும் முக்கியமான தேவை என்று கருதப்பட்ட மொழி ஒற்றுமை இந்தியாவில் இல்லையோ என்று அவர்கள் கொண்ட சந்தேகமே இதனை ஒத்துக்கொள்ளச் செய்தது. விடுதலை பெற்ற இனம் என்ற முறையில் இந்த இனத்தின் தேசிய ஒற்றுமையைக் காட்டவும் ஆட்சி மொழி என்ற மதிப்பைத் தரவும் ஒரு இந்திய மொழியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தார்கள். அரசியல் அமைப்பு அமலுக்கு வந்த பிறகு இந்த நிலைமை மாறிவிட்டது: சிறப்பாக மேற்கு வங்காளத்திலும் சென்னையிலும் பெரும்பாலான மக்கள் ஆங்கிலத்தையே இந்தியாவின் ஆட்சி மொழியாக வைத்துக்கொள்ள விரும்பினார்கள். தங்கள் தங்கள் மொழிக்கு ஆங்கிலத்தால் கிடைத்த நன்மையைக் கருதியும் இந்திய ஒற்றுமையைக் கருதியும் இவர்கள் அங்ஙனம் நினைத்தார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை (சுவஸர்லாந்தில் மூன்று மொழி இருப்பது போல) ஆட்சி மொழிகளாக இந்தியா போன்ற பெரிய நாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அப்பொழுது ஆழ்ந்து ஆராயவில்லை. இயல்பாகவும் வசதியாகவும் உயர்தரக் கல்வியிலும் இந்திய ஆட்சித் துறையிலும் வழங்கப்பட்ட ஆங்கில மொழியோடு பழகிவிட்ட காரணத்தாலும் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிக் கூட்டங்களை ஒன்று சேர்க்க இம் மொழி பயன்பட்டதாலும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டுப் பல்வேறு மொழிகளை அதன் இடத்தில் வைக்க வேண்டிய தொல்லையைப் பற்றி யாருமே சிந்திக்கவில்லை. அந்நிலையில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய ஏதாவது ஒரு மொழியின் தனித் தன்மையும், அதனோடு சேர்ந்துகொண்டு மாகாண வெறியும், கேடு செய்யும் இயல்புகளும் குழப்பம் செய்யும் என்பதை யாரும் கனவுக்கூடக் காணவில்லை. ஹிந்தியோ அல்லது ஹிந்துஸ்தானியோ ஆங்கில மொழியின் இடத்தைப் பெறுவது என்பது ஒரு சட்டையை மாற்றிவிட்டு மற்றொரு சட்டையை அணிவது போல எளிதான காரியம் என்று அப்பொழுது நினைத்தோம். வடநாட்டில் பெரும்பாலான மக்கள் புரிந்து கொள்ளுகின்ற மொழி என்ற காரணத்திற்காகவும் வடநாட்டிலிருந்து தென்னாட்டில் குடியேறிய குடியாளர் கூட்டங்களில் பயன்படுகின்ற மொழி என்ற காரணத்தாலும் ஹிந்தியை ஏற்றுக்கொண்டோம். (தென்னாட்டில் புக முனைந்த ஹிந்தி அரசியல் காரணங்களினால் ஹைதராபாத்தில் ஓரளவு இடம் பெற்றதே தவிரத் தென்னாட்டுப் பொது மக்களின் இடையே பரவ முடியவில்லை.) அப்பொழுதுதான் இரண்டு தலைமுறைகளாக நடத்திய போராட்டத்தின் பிறகு ஆங்கில நுகத்திலிருந்து விடுதலை பெற்றோம். ஆகலால் வெளியார் ஆதிக்கத்தின் மேல் கொண்ட வெறுப்பினால் பலர் அவர்கள் மொழியின் மேலும் ஒரு வகையான வெறுப்பை அடைந்திருந்தனர். இதனோடு கூட சமய சம்பந்தமான சில எண்ணங்களும் இம்மனோ நிலையை வளர்க்க உதவி செய்தன. அந்நிலையில் சிறந்த தேசபக்தர்கள் பலரும் ஆட்சித் துறையில் வெளியார் மொழியை மேலும் பயன்படுத்துவது இந்த இனத்தின் தன்மானத்திற்கு இழுக்கு என்று கருதினார்கள். ஹிந்தியை எடுப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம் அம்மொழி நாகரி எழுத்துக்களில் எழுதப்பட்டதுமாகும். (சென்ற 100 ஆண்டுகளில் பல்கலைக் கழகங்கள் மூலமாக ஆங்கிலம் செலுத்திய செல்வாக்கின் காரணமாக சமஸ்கிருதத்திற்கு நாகரி எழுத்துக்கள் அகில இந்தியாவிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.) ஹிந்தியிலுள்ள வடமொழி வார்த்தைகள் இந்திய தேசீய மனப்பான்மையை எடுத்துக் காட்டவும் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளக்கவும் பயன்படலாயின. பெரும்பாலான மக்களுக்கு வடநாட்டிலும் பிற பகுதிகளிலும்கூட ஹிந்தி மொழி ஹிந்து சமய சனாதன அடையாளமாகவும் உருது மொழி இஸ்லாமிய அடிப்படையோடு தொடர்புடையதாகவும் காணப்பட்டது. இத்தகைய ஒரு மனப்பான்மையை மகாத்மா காந்தி அவர்களே பெரிதும் வருந்தி எதிர்த்தார்கள்.

எனவே வெற்றியும் தோல்வி மனப்பான்மையும் கலந்த ஒரு சூழ் நிலையில், மகிழ்ச்சியும் அச்சமும் கலந்த நிலையில் நம்பிக்கையும் நம்பிக்கை யின்மையும் கலந்த ஒரு நிலையில் வட இந்தியாவின் ஹிந்தி பேசும் காங் கிரஸ் உறுப்பினர்களின் தொந்தரவினாலும் இந்திய அரசியல் அமைப்பில் இந்திய யூனியனின் ஆட்சி மொழி என்ற ஒரு நிலை ஹிந்தி மொழிக்குத் தரப்பட்டது. அப்பொழுதே ஹிந்திக்குப் பதிலாக உள்ள ஆங்கிலம் நாளா வட்டத்தில் குறைக்கப்பட வேண்டும் என்பதையும், இந்தியப் பொது வாழ்க்கையிலிருந்து இறுதியாக அது ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் அரசியல் அமைப்பில் கண்டார்கள்.

(இ) இன்று ஹிந்தியின் நிலை (1) இந்திய அரசியல் கொள்கைகளிலும (2) வளர்ந்து வருகிற மொழிக் கொள்கைகளிலும்.

பொதுவாக இந்திய நிகழ்ச்சிகளின் போக்கும், சிறப்பாகச் சுதந்திரத்திற் குப் பிறகு சென்ற சில ஆண்டுகளாக நடைபெறும் நிகழ்ச்சிகளின் போக்கும் மிகுந்த கவலையை உண்டாக்குவதாக இருக்கிறது. பிராந்தியப் பற்று, குறுகிய இனப்பற்று ஆகியவற்றைக் கடந்தும் அப்பால் காணக்கூடிய பரந்த நோக்கமுடைய இந்தியத் தலைவர்களும் தேசீயவாதிகளும் நாட்டின் உள்ளேயும் வெளியேயும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளின் பயனைப் பெரிதும் கவலை கொண்டுள்ளார்கள். இந்த எட்டு ஆண்டுகளாக இதுவரையில் இந்திய யூனியனில் வழங்கப்பட்ட சாதாரண மொழிகளுள் ஒன்றாக இருந்த ஹிந்தியை (வடநாட்டில் பெரும்பாலான மக்களால் இலக்கண மரபில்லாத போது இம்மொழி புரிந்துகொள்ளப்படுகிறது என்றாலும்) "சமமான மொழி களுள் தலையாய இடம் பெற்றதாக" ஆக்க முயற்சிகள் செய்யப்பட்டு வரு கின்றன. அரசாங்கத்தின் உதவி கொண்டும் ஹிந்திப் பிராந்தியங்களின் உள்ளேயும், வெளியேயும் இருக்கும் மக்களின் துணைகொண்டும் ஹிந்தி மொழியை இந்தியாவின் கலப்புப் பண்பாட்டை வெளியிடும் மொழியாகவும் நவீன வாழ்க்கைக்குரிய விஞ்ஞானம், தொழில் நுட்பம், எண்ணம், இலக் கியம் ஆகியவற்றை வெளியிடும் சிறந்த கருவி மொழியாகவும் ஆக்கிவிட லாம் எனக் கருதப்பட்டது. ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி அறிவை வளர்க்கவும் முயற்சிகள் செய்யப்பட்டன. ஹிந்தி மொழியை வளர்க்கவும் கருத்தை வெளியிடும் நவீன மொழியாக ஆக்கவும், அதை பரப்பவும் மத்திய அரசாங்கமும், சில ராஜ்யங்களும் பெருவாரியான பணத் தைச் செலவு செய்துள்ளன.

இதனிடையில் செய்தித் தாள்களும், சொற்பொழிவு மேடைகளும் இந்திய தேசீயத் தன்மைக்கு இன்றியமையாத ஒரு தூண், ஹிந்தி மொழி தான் என்றும் மக்களிடையே ஒரு எண்ணத்தைப் பரப்பின. எந்த ராஜ்யங்களில் ஹிந்தி மொழி, கல்வி இடைநிலை மொழியாகவும் பொது வாழ்விலும் இலக்கியத்திலும் இடைநிலை மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப் பட்டதோ அந்த ராஜ்யங்கள் இந்தக் கருத்தை பெரிதும் ஆதரித்தன. இதே நேரத்தில் ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலிருந்து விடாப் பிடியான மறுப்புகளும், எதிர்ப்புகளும் கல்வித் துறையிலும் பொது வாழ்வுத் துறை யிலும் உள்ள தலைவர்களிடமிருந்து வந்துகொண்டே இருக்கின்றன. மத்திய அரசாங்கம் அதிகார பூர்வமாக இதனை ஏற்றுக்கொண்டுள்ளதனாலும் ஹிந்தியைப் பயன்படுத்தும் ராஜ்யங்கள் இதனை ஏற்றுக்கொண்டுள்ளதனாலும் இவர்கள் செய்யும் சப்தத்தின் எதிரே இந்த மறுப்பொலிகள் கேட்கப்படவே யில்லை. ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள சில நல்லவர்கள், எவ்விதமான கட்டாயமும் இல்லாமல் ஹிந்தி மொழியை பரப்பும் வேலை, அகில இந்தியாவி லுள்ள பிரஜைகளைச் சேர்ந்தது என்றும், அவர்கள் எந்த மொழி பேசு பவர்களாக இருந்தாலும் இதனைச் செய்ய வேண்டும் என்றும் கருதுகிறார் கள். இதன் எதிராகத் தங்கள் மனக்கருத்தைக் கூறக்கூடாதென்றும், ஹிந்தியை ஏற்றுக்கொள்ளாத வேற்று மொழி பேசுபவர்களும்கூட, ஆங் கிலத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லக்கூடாதென்றும், இவ்வாறு கூறினால் அவை தேசத் துரோகமான செயல்கள் என்றே இந்த

நல்ல மனிதர்கள் கருதுகிறார்கள். ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் சிலர், இத்தகைய எண்ணங்கொள்வது தவறானது என்று மனப்பூர்வமாகக், கூறினாலும் அப்பிராந்தியங்களிலுள்ள மக்களிடையே, அதுவும் அறிவாளிகளின் இடையே இவ்வெண்ணம் வலுப்பெற்றுவிட்டது. பரந்தநோக்கமுடைய கல்விமான்களும், வாணிகர்களும், பெருந்தொழிலாளர்களும், அரசியல் வாதிகளும், அரசியல் தலைவர்களும் இக்கொள்கையை ஓரளவு மனப்பூர்வமாக மறுக்கிறார்கள். சமீப காலத்தில் மிக விறுவிறுப்போடு சில பிராந்தியங்களில் வெளிக்காட்டப்படும் மொழி வெறி ஹிந்தியல்லாத ஏனைய மொழி பேசும் மக்களின் இடையே எதிர்ப்பையும், வருத்தத்தையும் விளைவித்துள்ளது. ஹிந்தி மொழியை வலுவாக ஆதரித்து இதுவரையில் வளர்ந்து வந்தமையால், ஹிந்தி பேசும் மக்களிடம் பெருமதிப்பைப் பெற்றிருந்தார்களே இங்ஙனம் எதிர்ப்பவர்கள்.

இந்நிலையில் மேலே கூறிய காரணங்களினாலும் இன்னும் பல காரணங்களினாலும் ஹிந்தி மொழி பேசாத மக்கள் ஆட்சி மொழி பற்றியும் அதனைக் கொண்டு செலுத்த வேண்டியது பற்றியும் என்ன நினைக்கிறார்கள் என்பதைக் கூற வேண்டியுள்ளது. மேலே கூறப்பட்ட காரணங்களுள் முக்கியமாக உள்ளவை, இந்தியாவின் ஒற்றுமையைக் காத்தலும், ஆட்சித் துறையின் சாமர்த்தியத்தை நிலைநிறுத்தலும், இந்திய மக்களின் அறிவு வளர்ச்சியைப் போற்றுதலும், ஒரு மொழி இனத்தாருக்கு அதிகச் சலுகை தராமல் நாட்டின் எல்லாப் பிரஜைகளுக்கும் சமமான உரிமை வழங்குதலும், உலக இனத்தார்களுள் இந்தியாவின் தன்மானத்தை நிலைநிறுத்தலும் ஆகியவைகளே.

1948-ம் ஆண்டில் அரசியல் அமைப்பில் ஹிந்தியை ஏற்றுக்கொண்டது உற்சாகத்தோடு செய்யப்பட்டதாயினும் சாதாரணமாகச் செய்யப்பட்டதாயினும் மிகச் சாதாரணமான ஒரு காரியம் என்றே கருதப்பட்டது. இப்பொழுதுதான் இந்நிகழ்ச்சியின் உண்மையான இயல்பு நேருக்கு நேர் விளங்குகிறது. மத்திய அரசாங்கமும் ஹிந்தி பேசும் ராஜ்யங்களும், ஹிந்தியை நிலைநிறுத்தும் முயற்சிகளைச் செய்யச் செய்ய, இதுவரையில் அதிக முக்கியத்துவமும் அவசரமும் இல்லாததாகக் கருதப்பட்ட மொழிப் பிரச்னை ஏதோ ஒரு மிகுதியான முக்கியத்துவத்தைப் பெற்றதுபோலக் காணுமாறு (நாட்டின் சில பகுதிகளிலுள்ளவர்கள்) செய்துவிட்டார்கள். இப்பொழுது ஹிந்திக்கும் (ஹிந்தி பேசும் ராஜ்யங்களின் பிராந்திய மொழி) ஹிந்தி பேசாத ராஜ்யங்களின் பிராந்திய மொழிகளுக்கும் இடையே ஒரு போட்டி மனப்பான்மையும், ஆங்கிலத்திற்கும் பிராந்திய மொழிகளுக்கும் இடையேயும் ஆங்கிலத்திற்கும் ஹிந்திக்கும் (பிராந்திய மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் வரப்போகின்ற ஹிந்தி) இடையேயும் இதே போன்ற ஒரு போட்டி ஏற்பட்டுள்ளது. இந்த மூன்றாவது வகைப் போட்டியில் ஹிந்தி பேசாத ராஜ்ய மக்களுக்கும் ஹிந்தி பேசும் ராஜ்ய மக்களுக்கும் அதிகக் கருத்து வேறுபாடு உண்டு. ஆராய்ந்து பாராமல் ஆர்வங் காட்டிய எங்களுக்கு மிக முக்கியமான சில விஷயங்கள் இப்பொழுது எதிரே நிற்கின்றன. இந்த விஷயங்கள் இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையையும் அதனுடைய அறிவுத் தலைமைப் பதவியையும் அழித்து, ஆட்சித் துறையிலும் தரத்தைக் குறைத்துவிடும்போல் இருக்கிறது.

எப்பொழுதுமே மனிதர்கள் நல்ல அறிவினால் உந்தப்படாமல், உணர்ச்சியாலும், வெறியாலும் தூண்டப்படுகிறார்கள். உலகிலுள்ள பெரும்பாலன மக்களைப்போல இந்தியாவில் இப்பொழுதுள்ள மக்களும் அறிவுக்கு இடம் கொடுத்து அதன்படி நடவாமல் உணர்ச்சிக்கே இரையாக முந்துகிறார்கள். இந்திய ஒற்றுமையையும் ஒருமைத்தன்மையையும் கலைப்பதற்கு ஹிந்திப் பிராந்தியம் உள்பட இந்நாட்டின் பல்வேறு மொழி பிராந்தியங்களிலும் இப்பொழுது தலைக்காட்டுகின்ற மொழிக் கூச்சலும், உணர்ச்சியோடு கூடிய மொழி வெறியுமே போதுமானது.

ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியை அதனிடத்தில் அமர்த்த வேண்டும் என்று சொல்லி அதன் பயனாக ஹிந்தி வழங்காத பகுதிகளில் ஹிந்தி மொழிக்குப் பிரத்யேகமான உரிமையைத் தந்ததன் நேரிடையான பயனாகும் இது.

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ கே. எம். முன்ஷி கூறியவற்றை இங்கே தருகிறோம் :

“வாழ்க்கையின் பல்வேறு துறைகளில் விரைவாக ஆங்கிலத்தை நீக்கும் கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. இந்த வேகத்தில் ஹிந்தி மொழி ஆங்கிலத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. இந்த இடைப்பட்ட வெற்றிடத்தைப் பிராந்திய மொழிகள் நிரப்புகின்றன. ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்ற அதிக உற்சாகத்தின் பயனாக ஹிந்தி மொழி லாபம் அடையாமல் நஷ்டத்தையே அடைந்தது. தேசீயத் தன்மை மறைந்துவிட, பிராந்திய மனப்பான்மை வளர்ச்சி அடைந்து வருகிறது.

“சாதாரண மனிதனுக்கு ஆங்கிலத்தை போக்கிவிடும் செயல் தேச பக்தி நிறைந்த செயலாகக் காணப்பட்டாலும் இன்று நம்மை நோக்கிவரும் பெரிய ஆபத்து, செயற்படுகின்ற பிராந்திய மொழிப் பற்றாகும். அது பிராந்திய கர்வத்தை வளர்த்துப் பிடிவாதத்தை உண்டாக்குகிறது. என்னுடைய மொழி பேசும் என்னுடைய பிராந்திய மக்கள், மற்ற மொழி பேசும் மற்ற மக்களிடமிருந்து வேறானவர்கள் என்ற வேற்றுமையை மனோ தத்துவ ரீதியாக அது உண்டாக்குகிறது. இந்திய நாட்டில் துண்டாடும் மனப்பான்மையை (பால்கனைசேஷன்) பெரிதாக வளர்த்து பெரும் துன்பத்தை இது கொண்டுவரும்”.

இத்தனை ஆண்டுகளாக நம்முடைய காங்கிரஸ் தலைவர்கள் இந்தியா ஒரு கூட்டமைப்பு நாடு என்றும், சுயேச்சையான ராஜ்ய உறுப்புக்களைக் கொண்ட ஒரு யூனியன் என்றும், இந்த ராஜ்யங்கள் மொழி வாரியாகத் தனித்தனியான இலக்கணம் அமைந்தவை என்றும், சொல்லிக் கொண்டு வந்தபொழுது இன்றைய ஒரு நிலை வரும் என்று எதிர்பார்க்கவே இல்லை. இத்தகைய ஒரு கொள்கையைப் போதிப்பதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் பற்றி முற்றிலும் அவர்கள் புரிந்துகொள்ளவும் இல்லை; எதிர்பார்க்கவும் இல்லை. எப்பொழுதோ ஒவ்வொரு சமயம் எழுந்த மறுப்புக்கள், எச்சரிக்கைகள் வலுவுடையனவாக இல்லை. மொழி வாரிச் சிறுபான்மை இனங்கள் (ஒரு இனத்தினுள்ளே காணப்படுகின்ற சிறுபான்மை மொழிக் கூட்டத்தினின்றும் மாறுபட்டது) என்று பொதுவுடைமை நாடுகளில் அதிகார பூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த எண்ணங்களை இந்நாட்டில் வளர்த்து வந்துள்ளது.

(ஈ) மொழி வழி சகிப்பின்மை : இந்திய ஒற்றுமைக்குப் புதிய ஆபத்து.

உலகில் பல பாகங்களிலும் வாழ்ந்த மக்களைப் போல இந்திய மக்களும் தங்கள் நீண்ட வரலாற்றில் மொழி மனப் பான்மையில் சிறப்பான முறையில் சகிப்புத் தன்மை இல்லாதவர்களாகவோ தனித்தன்மை பாராட்டுபவர்களாகவோ இருந்தார்கள் என்று சொல்ல முடியாது. புரட்சிக்கு முற்பட்ட ஐரோப்பாவில் பண்பாடு, சமயம் என்ற இரண்டு துறையிலும் லத்தீன் மொழியை ஏற்றுக் கொண்டது போலப் பழங்கால, இடைகால இந்தியாவில் வடமொழியை கட்டுப்பாடு இன்றி ஏற்றுக் கொண்டார்கள். கி.பி. 1000-த்திற்குப் பிறகு புதிய இந்தோ-ஆரிய மொழிகள் வட இந்தியாவில் நன்கு நிலை பெற்ற நிலையில், வளர்ச்சியடைந்த திராவிட மொழிகள் தென் பகுதியில் தங்கள் சரித்திரத்தின் இரண்டாவது நிலையை அடைந்து, இலக்கிய வாழ்வில் புகுந்த நிலையில், சில மொழிப் பிராந்தியங்களில் அவரவர்கள் மொழி பற்றிய நியாயமான கர்வம் தலை தூக்கலாயிற்று. ஆனால் இந்தக் கர்வம் சகிப்புத் தன்மை அற்றதாகவோ தனித்தன்மை உடையதாகவோ என்றும் இருந்ததில்லை. ஆனால் இன்று இந்தியாவின் சில பகுதிகளில் சகிப்புத் தன்மை அற்ற ஒரு மனோ நிலை ஆங்கிலச் சொல்லாகிய “ லிங்விஸம் ” என்ற சொல்லால் குறிக்கப்படும் அளவிற்கு வளர்ந்துள்ளது.

ஹைதராபாத் சமஸ்தானத்தில் சுதந்திரத்திற்கு முன்னர் மொத்த ஜனத் தொகையில் 11 சத விகிதமே பேசும் உருதுமொழியை சமஸ்தான மக்கள் பொது வாழ்விலும், உயர்தரக் கல்வியிலும் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று திணிக்கப்பட்ட பொழுது பெருவாரியான மறுப்பு இருந்ததாகத் தெரியவில்லை. அன்றைய நிலையில் இதனுடைய விளைவு என்ன என்பதை யாரும் அறிந்து கொள்ள வில்லை. சுதந்திரத்திற்குப் பிறகு மாகாணப் போட்டிகளும், பொறுமைகளும் மொழியின் மூலமாகவே மிகுதியும் வெளிப்பட்டன. சில இந்திய ராஜ்யங்களில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மத்திய அரசாங்கத்தை ஒன்றும் செய்யவில்லை. சிறுபான்மையினருடைய மொழி களைப் பரிவோடு கவனிக்க வேண்டிய சூழ்நிலை சில ராஜ்யங்களில் ஏற்பட் டாலும் சகிப்புத் தன்மையற்ற ஒருகெட்ட பண்பாக இது மாறாத நிலை அப்பொழுது இருந்து வந்தது. சில குறிப்பிட்ட ராஜ்யங்களில் சிறுபான் மையினர் பேசும் மொழி கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் தகுந்த அளவு கவனிக்கப்படவில்லை. மொழிவாரி ராஜ்யங்கள் கொள்கை அளவில் பிரிந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு இப் பிரச்னை வடிவெடுத்தது என்றாலும் சில சந்தர்ப்பங்களில் அறைகுறையாகவே நிறைவேற்றப்பட்டது. ராஜ்யப் புனரமைப்புக் கழகம் சிறு பான்மை மொழியினரின் பாது காப்புக்கள் பற்றிச் செய்த சிபார்சுகள் நன்கு கவனிக்கப்பட வில்லை. இதன் பயனாகத் தேச விரோதமானதும், சமூக விரோதமானதும் ஆன சமய வெறி போன்ற மொழி வெறி, திடீரென்று வெளிப்படலாயிற்று. ஹிந்தி பேசும் ராஜ்யங்களிலுள்ள பொறுப்பு வாய்ந்த பலரும் கூட இவ்வெறியி லிருந்து விடுபட்டார்கள் என்று சொல்வதற்கில்லை. ராஜ்யப் புனரமைப்புக் கழக சிபார்சுகளின் பிறகு சில ராஜ்யங்களில் இதன் பயனாக நிகழ்ந்த சமுதாய விரோதமான நிகழ்ச்சிக்களைக் கண்டு நம்முடைய தலைவர்கள் சிலர்கூட அச்சம் கொண்டார்கள். நம்முடைய செயலால் ஒரு பிசாசை உண்டாக்கி விட்டோம் ; இன்று அதன் எதிரே அஞ்சி நடுங்குகின்றோம். பிசாசை மூடி இருந்த பெட்டியிலிருந்து அதனை வெளியே விட்டுவிட்டோம் : இப்பொழுது அது உள்ளே போக மறுக்கிறது.

ஹிந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டுள் ளோம் : ஆனால் அதன் தொண்டர்கள் எல்லாவிடங்களிலும் பல படிகள் மேலே செல்ல விரும்புகிறார்கள். அவர்கள் அம்மொழியை இந்தி யாவின் தேசிய மொழி என்று வர்ணிக்கிறார்கள். இன்னும் சிலர் இந்தியாவின் மொழிகளுள் எல்லாம் தலை சிறந்தது என்ற கருத்தில் ஹிந்தி மொழியின் பெயரை மாற்றி “ பாரதி ” என்று பெயரிட விரும்பு கிறார்கள். இன்னும் சிலர் “ ஹிந், ஹிந்து, ஹிந்தி இம்மூன்றும் ஒன் றேதான் ” என்ற ஒரு மொழியையும் உண்டாக்கிவிட்டார்கள். நம்முடைய பிரதம மந்திரி பல முறையும் இந்தியா, ஒரு தேசிய மொழியை அல்லாமல் பதினான்கு தேசிய மொழிகளை உடையது என்று தம் கருத்தை வெளியிட்டு வருகிறார். அவர் ஹிந்தி மொழிக்குத் தனி மதிப்பு ஒன்றையும் தருவதில்லை; அது நியாயமே. இப்பொழுது ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் உள்ள வர்கள் ஹிந்தி மொழியைக் கற்று அதன் மூலம் ஆங்கிலத்தை நீக்க வேண்டும். ஆதலால், அவர்கள் ஏதோ ஒரு தெய்வீகக் கடமையைச் செய்வது போல ஹிந்தி மொழியை வளர்க்க வேண்டுமென்று மெதுவாகச் சொல்லப்படுகிறது. இதன் பயனாக அவர்கள் மனங்குழம்பி ஹிந் தியைப் பற்றிய தங்கள் எண்ணத்தைப் புனராலோசனை செய்கிறார்கள்.

(உ) நவீன இந்தியாவில் ஹிந்தியின் (கரிபோலி) இடம் : ஒரு பின்னோக்கம்.

ஹிந்தி வட்டத்தின் அப்பால் உள்ள மக்கள், ஆங்கிலத்தை நீக்கு வதற்குரிய வளர்ச்சியை ஹிந்தி மொழி பெறவில்லை என்று நினைக் கிறார்கள். ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள மிக ஆழ்ந்த ஹிந்தித் தொண்டர் கள்கூடக் கருத்தை வெளியிடும் சிறந்த கருவியாக ஆவதற்குரிய நிலையில் இம் மொழியினிடத்துள்ள பல்வேறு குறைபாடுகளையும் உணர்கின்றார்கள்.

உயர்தரச் சொற்களில்இம்மொழி இன்னும் நிலையான கொள்கையே மேற்கொள்ள வில்லை என்பதை அதனை பேசும் அனைவருமே ஒத்துக் கொள்கிறார்கள். ஒன்றுக் கொன்று முரணான மூன்று நான்கு கட்சிகள் வலுவான ஆதரவாளர்களைப் பெற்று இம்மொழியின் வளர்ச்சியைத் தடை செய்கின்றன. பெரும்பாலான இந்திய மொழிகளுக்கு இத்தகை போராட்டம் ஒன்றும் இல்லை. அதனுடைய வளர்ச்சி வளர்ச்சியடைந்த இந்திய மொழிகளோடு ஒப்பிடும் பொழுது எந்த விதத்திலும் உயர்ந்த தாகத் தெரியவில்லை. வளர்ச்சியடைந்த இந்த இந்திய மொழிகளைப் பேசுபவர்கள் ஹிந்தி மொழியைக் கற்றுக் கொண்டபிறகு சில சந்தர்ப் பங்களில் இம்மொழியைக் காட்டிலும் கருத்தை வெளியிடத் தங்கள் மொழியே சிறந்தது என்று கருதுகிறார்கள். தங்கள் மொழி என்ற காரணத்தால் இக்கூற்றுகளில் பாரபட்சமான முடிவுகள் இருப்பினும் இந்த எண்ணம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

இந்திய மொழிகளுள், மிக இளைய மொழிகளுள், ஒன்றாகும் ஹிந்தி. அரசியலமைப்பில் ஆட்சி மொழியாகவும் கருதப்பட்டு, இந்தியாவின் தேசீய மொழியாகவும் வரவிரும்புகின்ற மொழி கரிபோலி ஹிந்தியாகும். இப்பிரச்னையின் விஞ்ஞான அடிப்படையைப் பற்றி இந்த சந்தர்ப்பத்தில் ஆராயத் தேவையில்லை. 1850-க்கு முன்னர் இன்று கரிபோலி ஹிந்தி என்று வழங்கப்படும் ஒன்று காணப்பட்டதாகவே தெரியவில்லை சென்ற நூற்றாண்டின் இரண்டாவது, மூன்றாவது கால் நூற்றாண்டுகளில் இந்த ஹிந்தி தடுமாறிக் கொண்டிருந்தது. இந்தக் காலத்தில்தான் உருது மொழியையும், வடமொழிச் சொற்களையும் (பல தவறான சொற்களையும்) வங்காளியிலிருந்து எடுத்து இதனை ஒரு மொழியாக அமைத்தார்கள். பஞ்சாபிலும், உத்தரப் பிரதேசத்திலும் ஆர்ய சமாஜ் கிளர்ச்சி வலுவடைய, வங்காளத்தில் அரசியல் காரணங்களுக்காக ஹிந்திப் பற்று மிகுதிப்பட, உருது மொழிக்கும், ஹிந்திக்கும் ஒரு வகையான போராட்டம் தொடங் கியது. பாகிஸ்தான் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணங்களுள் ஒன்றாக இருந்த இந்த ஹிந்தி-உருதுப் போராட்டம் பாகிஸ்தான் ஏற்பட்டும் கூட இன்னும் தீர்ந்த பாடில்லை. சென்ற நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கரிபோலி ஹிந்தி ஓரளவு எண்ணத்தை வெளியிடும் கருவியாக வளர்ச்சி யடைந்து இறுதியாக வங்காளி, குஜராத்தி, மராத்தி, ஒரியா, அஸ்ஸாமிஸ், தமிழ், என்ற ஏனைய மொழிகளோடு ஒத்த மதிப்பைப் பெற்றது. குஜராத்தி, வங்காளி, பஞ்சாபி, ஆகிய மொழி வல்லுநர்கள் ஹிந்தி மொழியைக் கற்று, உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஆங்கிலம் கற்ற வர்களோடு சேர்ந்து பீஹாரிலும், ராஜஸ்தானிலும், இதனை வளர்த்தார்கள். இதில் பீஹார், ராஜஸ்தானில் உள்ளவர்கள் உருது, அடிப்படையில் உள்ள வர்கள்.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் காசியில் நாகரி பிரசாரினி சபா ஏற்பட்ட பிறகுதான் வட நாட்டிலுள்ள மக்கள் ஹிந்தி மொழியைப் பற்றி விழித்துக் கொண்டார்கள். வங்காள அரசியல் வாதிகள் சுவதேசி இயக்கக் காலத்தில் (இந்த நூற்றாண்டின் முற்பகுதியில்) இவ்வளர்ச்சிக்கு ஊக்கம் அளித் தார்கள். எல்லாவற்றையும் விட ஒத்துழையாமைக் காலத்தில் மகாத்மா காந்திதான் ஹிந்தி மொழியை நம்முடைய அரசியல் வாழ்வில் இன்றுள்ள நிலைக்கு, சிறப்பாக வட இந்தியாவில், கொண்டு வந்து சேர்த்தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபதை அடுத்த ஆண்டுகள் வரையில் கரிபோலி ஹிந்தி என்பது இந்திய மொழிகளின் பின்னே தயங்கித் தயங்கி வருகின்ற தொண்டனாக இருந்து வந்தது. இந்த இடைக் காலத்தில் ஹிந்தியோடு தொடர்புடைய நான்கு ஐந்து மொழிகளில் எழுதப்பட்ட எல்லா இலக்கியங்களையும் தனதாக ஆக்கிக் கொண்டது. மொழி இலக்கண முறையில் பார்த்தால் இந்த நான்கு அல்லது ஐந்து மொழி களும் அதாவது ராஜஸ்தானி, கோஸால் அல்லது அவதி, போஜ்புரி, மைதிலியும் கூட முழுத் தன்மை பெற்ற மொழிகளே தவிர கிளை மொழிகள் அல்ல, மைதிலி மொழியைச் சென்ற இரண்டு தலைமுறைக்கு

முன்னர்த் தான் ஹிந்தி வட்டத்தின் உள்ளே சேர்த்துவிட்டார்கள். (மேற்கத்திய ஹிந்தியின் கிளை மொழிகளான பிரஜ்-பாஷா ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் நிலைமை வேறு விதம். இம்மொழிகள் கரிபோலி யிலும், டில்லியிலுள்ள பேச்சு மொழியிலும் உரை நடையிலும், கவிதை யிலும், காலத்திற்கேற்பத் தாம் மாறுபடுவதற்கு வசதியான முன் மாதிரியைக் கண்டு கொண்டன.)

உண்மையைக் கூறுமிடத்து வட இந்தியாவிலுள்ள பல்வேறு மொழி களையும், கிளை மொழிகளையும் பேசும் மக்கள் இம்மொழிகளில் ஓரளவு கவிதைகளை வளர்த்துக் கொண்டார்களே தவிர, அன்றாட வாழ்க்கைக்கும் ஆட்சி விவகாரங்களுக்கும் உரைநடை தேவைப்பட்ட பொழுது 19-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து (வீட்டில் பேசும் இலக்கணமற்ற சில உரைநடைகளைத் தவிர) உருதுவையே மேற்கொண்டிருந்தார்கள். சென்ற நூற்றாண்டில் இடைநிலைப் பள்ளிகளிலும், உயர்தர ஆங்கிலப் பள்ளிகளிலும உருதுவையே கற்பித்து ஆட்சித் துறைப் பணிகளுக்கும் சட்டம், பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளுக்கும், பின்னர் நீதி மன்றங்களுக்கும் மாணவர்களைத் தயாரிக்கும்பொழுது பஞ்சாபிலும், உக்கரப் பிரதேசத்திலும், பிஹாரிலும் சென்ற நூற்றாண்டின் பெரும் பகுதியில் உருதுவையே பலரும் ஏற்றுக் கொள்ளும் மொழியாகச் செய்தார்கள். இந்திய தேசீய மனப்பான்மை அல்லது ஹிந்து மனப்பான்மை என்பதன் உடனடி விளைவாக நாகரி எழுத்துக்களும், வடமொழிச் சொற்களும் வளர்ச்சி யடைந்தபொழுது ஆங்கில அரசாங்கம் உத்திரப் பிரதேசத்திலும், பிஹாரி லும் நாகரி எழுத்தை ஏற்றுக் கொண்டதனால் உருதுவிலிருந்து புதிய மொழியாகிய இந்த ஹிந்திக்கு மாற்றம் ஏற்படலாயிற்று. நாளாவட்டத்தில் ஹிந்தி மூலம் பத்திரிகைகள் வளர்ச்சியடைந்தன. இதனால் வளர்ச்சி பெற்ற ஹிந்தி உரைநடை பள்ளிக் கூடங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தது. பல்வேறு மொழிகளையும், கிளை மொழிகளையும் பேசுகின்ற இவர்கள் கரிபோலிக் கவிதை முறை நன்கு வளர்ச்சியடையாத வரையில் உரைநடைக்குக் கரிபோலி மொழியையும், கற்பதற்கும், கவிதை இயற்று வதற்கும் பிரஜ்-பாஷா அல்லது அவதி, ராஜஸ்தானி அல்லது மைதிலி யையும் பயன் படுத்தும் விநோதமான நிலையில் இருந்தார்கள். இந்த முறையில்தான் இளம் மொழியாகிய கரிபோலி ஹிந்தி பிறந்தது. ஹிந்துஸ் தானி என்ற சட்டை அணிந்து உருதுவின் சிதைந்த வடிவத்தை மேற் கொண்டு வட நாட்டின் நகரக் "கடைத் தெருக்களில்" இலக்கண மற்ற முறையில் இம் மொழி வளர்ந்துவந்தது. மொகலாயர்களால் வட இந்தியாவில் விட்டுச் செல்லப்பட்ட இது, பஞ்சாபிலிருந்து பீஹார் முடிய உள்ள நகர வாழ்க்கை வாழும் ஹிந்துக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப் பட்ட மொழியாகும். 1740-முதல் டில்லியைச் சுற்றி வளர்ந்த ஹிந்துஸ் தானி அல்லது உருது மொழி இதற்கு முன்னரே வட இந்தியாவின் பெரும் பகுதிகளில், நகரப் புறங்களில் பரவலாயிற்று முஸ்லீம் பிரபுக் களும், ஆட்சி இனத்தாரும், அவர்களோடு தொடர்புடைய காயஸ்த இனத்தாரும், அவர்களுடைய ஹிந்துத் தோழர்களும் டில்லி அரசாங்கத் தோடும், டில்லியிலுள்ள உயர்ந்த சமூகத்தினரோடும் ஆட்சித் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் தொடர்பு கொண்டிருந்தமையின் அவர்களி னிடையே வழங்க உருது மொழியையே ஏற்றுக் கொண்டார்கள். உருது மொழி வகுத்து விட்டுபோன வழியில் கரிபோலி ஹிந்தி புகுந்து கொள்வது எளிதாக இருந்ததால் சிறப்பாகக் கிழக்கு உத்தரப் பிரதேசத்திலும், பீஹாரிலும், மத்திய பாரதத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் இது புகுந்து கொண்டது. நாகரி எழுத்துக்களை மேற்கொண்டதாலும், பழைய பிரஜ்ய, அவதி, மைதிலி இலக்கியங்களைப் போல வட மொழியோடு தொடர்பு கொண்டதாலும், வளர்ந்து வருகின்ற வங்காளி இலக்கியத்தைப் போல உரைநடையை மேற்கொண்டதாலும் வட நாட்டு ஹிந்தி மீட்சியாளர் களுக்குக் கரிபோலி ஹிந்தி உணர்ச்சிக்கு இரையிடும் சிறந்த மொழியாக இருந்தது. பர்சிய-அராபிய எழுத்துக்களுக்கும், பர்சிய-அராபிய சொற் களுக்கும் இடந் தந்துள்ள உருது மொழியைப் பிடிக்காதவர்கட்கும் இந்தக்

கரிபோலி ஹிந்தி வரப்பிரசாதமாக அமைந்துவிட்டதோடு பார்சிய மொழியையும், உருது மொழியையும் தங்களுடைய மொழிகளாக மேற்கொண்டிருந்தவர்கள்கூட மீட்டும் வடமொழிப் பண்பாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று நினைக்கும்பொழுது இந்த ஹிந்தி அவர்கட்கும் வரப்பிரசாதமாகவே அமைந்தது. இந்த இரண்டு கட்சிக் காரர்களுக்கும், நாகரி எழுத்தில் எழுதப்பட்ட வடமொழி ஹிந்தி, இலக்கிய மொழியாக வளர்ப்பதற்குரிய இடைநிலைப் பொருளாக அமைந்தது.

நிலைமை கீழ்க் கண்டவாறு அமைந்தது. பிரஜ்-பாஷா, அவதி, போஜ்புரி, ராஜஸ்தானி, கர்வாலி முதலிய பல மொழிகள் பேசும் வட இந்திய மக்கள் முதலில் ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் தொடங்கியவுடன் உருது மொழியை மேற்கொண்டு அடுத்து அவர்களுடைய மொழிகளில் உரைநடை இன்மையால் பள்ளிக்கூடங்களில், நகரங்களில் போதிக்கப்பட்டு வந்த கரிபோலி ஹிந்தியை மேற்கொண்டார்கள். இப்பொழுது பள்ளிக் கூடங்களில் கரிபோலி ஹிந்தியைப் பேசியும், எழுதியும் வருவதால் தங்களை "ஹிந்தி பேசும் மக்கள்" என்று நினைத்துக் கொண்டு வீட்டில் பேசும் மொழிகளை "ஹிந்தியின் கிளை மொழிகள்" என்று நம்புகிறார்கள். உண்மையில் தங்கள் தாய் மொழியை ஹிந்திக்காக அமிழ்த்தி விட்டார்கள். நியாயத்தைக் கூறுமிடத்து ஹிந்தி மேற்கத்திய உத்தரப் பிரதேசம், கிழக்குப் பஞ்சாப், மத்திய பாரதத்தின் சில பகுதிகள், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தானம் ஆகிய இடங்களுக்கே உரியது. இந்த இரு மொழி வழக்காளர்கள், அதாவது ஒரு மொழியை (கிளை மொழியல்லாத ஒன்று) வீட்டிலும், மற்றொரு மொழியைப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், இலக்கியங்கள், பொது வாழ்வு ஆகியவற்றில் பயன் படுத்தும் இவர்கள், வங்காளி, ஒரியா, அஸ்ஸாமிஸ், குஜராத்தி, மராத்தி, பெரிய திராவிட மொழிகள் ஆகிய மொழிகளைத் தாய் மொழியாக உடையவர்கள் எவ்வளவு ஆழ்ந்த அன்போடு தங்கள் மொழிகளை நேசிக்கிறார்கள் என்பதை அறியவே முடியாது. இத்தகைய ஒரு மனோநிலையைப் எதிர்ப்பவர்களும் உண்டு. அறைகுறையான முறையிலும், பெரும் ஆதரவில்லாமலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள, வைகேந்திரி காணு என்று ரகுல சங்கிருத்யாயன என்பவராலும், பனாரஸ் சீதாஸ்சதுர்வேதி முதலானவர்களாலும் உண்டாக்கப்பட்ட கிளர்ச்சிகள், ஹிந்தியின் கிளை மொழிகளைத் தனியான இலக்கிய மொழிகளாகக் கருத வேண்டும் என்ற கிளர்ச்சிகளைக் காண்க. ராஜஸ்தானி மொழியையும் (மார்வாரி), மைதிலி, போஜ்புரி, மாகை, சத்தீஷ் கர்ஹி, அவதி ஆகிய மொழிகளையும் கரிபோலி ஹிந்தி வட்டத்திலிருந்து பிரித்துத் தனிமொழிகளாக ஆக்க வேண்டும் என்ற கிளர்ச்சிகளையும் காண்க.

இந்தக் கரிபோலி ஹிந்தியைக் பரம்பரையாகப் பெற்று, இதனையும் இதனோடு தொடர்புடைய கிளை மொழிகளையும் பேசும் மக்கள் சென்ற 250 ஆண்டுகளாக பார்சிய-அராபிய வார்த்தைகளினிடத்து அதிக விருப்பம் கொண்டுள்ளார்களாதலால் இப்பொழுது அகில இந்திய ஆட்சி மொழியாக ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹிந்தியில் அதிகப்படியான வடமொழி வார்த்தைகள் புகுத்தப்படுவதை இவர்கள் விரும்ப வில்லை. வீடுகளில் வழக்கமாக ராஜஸ்தானி, அவதி, பகேலி, போஜ்புரி, மைதிலி, மத்திய பஹாரி ஆகிய மொழிகளைப் பேசும் மக்கள் தாம் இப்பொழுது கரிபோலி ஹிந்தியில் மொழியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் உண்மை ஹிந்தியையோ (மேற்கத்திய ஹிந்தி) வடமொழி மரபையோ அறியாதவர்கள். இந்த விநோதமான சூழ்நிலை ஹிந்தி மொழி இயல்பாகவும், சரளமாகவும், வளருவதற்குப் பெருந்தடையாக இருக்கும். இயல்பாக இதனைப் பேசுகின்றவர்கள் ஒரு வழியிலும், இம்மொழியை ஏற்றுக் கொண்டவர்கள் ஒரு வழியிலும் போவார்கள். இதன் பயனாக விளைவது மொழிக் குழப்பமாகும். இந்த மொழிக் குழப்பத்தைத் தான் இந்தியாவின் எஞ்சிய பகுதிகளுக்கு இப்பொழுது அனுப்ப விரும்புகிறார்கள். இந்த மொழிக் குழப்பத்தை, வேறுபாட்டில் ஒற்றுமை என்ற பெயரிட்டு, இந்தியா

வின் ஆட்சி மொழியும், தேசீய மொழியும் இதோ ஆக்கப்படுகிறதென்று கூறி, ஆங்கிலத்தின் உபயோகத்தை அழித்து, ஏனைய மொழிகளின் உபயோகத்தையும் ஓரளவு குறைக்க, இதனை வழங்குகிறார்கள். நன்கு, வளர்ச்சியடைந்த மொழிகளை, சென்ற 1000 ஆண்டுகளாகத் தொடர்ந்து இலக்கியத்தைப் பெற்றுள்ள வங்காளி, அஸ்ஸாமிஸ். ஒரியா, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம் போன்ற மொழிகளையும், பஞ்சாபி மைதிலி போன்றவற்றையும் தாய் மொழியாக உடையவர்கள் இந்தப் புதிய படைப்பை ஏற்றுக் கொள்ள அஞ்சுகிறார்கள். அதிலும் சிறப்பாக நேரடியாகவோ, மறைமுகமாகவோ இதனைத் திணிக்க முயலும் பொழுது அவர்கள் மேலும் அஞ்சுகிறார்கள்.

இதுதான் ஹிந்தியின் அடிப்படை வரலாறு. எனவே இன்றை நாளில் அம் மொழியில் தோன்றும் இலக்கியங்கள் இந்தியாவின் ஏனைய மொழிகளில் தோன்றும் இலக்கியங்களைவிட உயர்ந்ததாக இருக்கும் என்று யாரும் நினைக்கமுடியாது. அதனுடைய நவீன இலக்கியம் வளர்ந்து வருகிறது என்றாலும் எதிர்பார்க்கின்றபடி வாழ்வைத் திறனாய்வு செய்கின்ற புதினமாகவும், சிறு கதையாகவும், கவிதையாகவும் வளர்ந்து வருகின்றது. என்றாலும் இப்பொழுது அம்மொழியில் சிறந்த முதல் நூல்களாகச் சரித்திர நூல்களும், தத்துவ நூல்களும், யாத்திரை நூல்களும் திறனாய்வு நூல்களும் தோன்றியுள்ளன என்பதைச் சொல்லவேண்டும். அம்மொழியில் விஞ்ஞான இலக்கியம் என்று ஒன்றும் இல்லை. தமிழ், குஜராத்தி, வங்காளி, தெலுங்கு, ஒரியா, கன்னடம் முதலிய மொழிகளைப் பேசுகின்ற மக்களுக்கு, ஹிந்தியாயினும், பர்சிய-அராபியச் சொற்களை மிகுதியாகப் பெற்று மேற்கு உத்தரப் பிரதேசத்தில் வளர்ந்த உருது மொழியாயினும், பண்பாட்டு முறையிலோ அறிவுத் துறையிலோ எந்தவிதமான முக்கியத்துவமும் பெற்றவையல்ல. ஆனால் பழைய சமயப் பாடல்களை உடைய பழைய அவதி, பழைய பிரஜ், பழைய ராஜஸ்தானி என்பவற்றைப் பொறுத்த மட்டில் நிலைமை வேறுவிதம். துளஸிதாஸ் ராமாயணம், சூர்தாஸரின் இசைப்பாடல்கள், மீராபாயின் பக்திப் பாடல்கள் ஆகியவற்றை இவர்கள் வேறுவிதமாகக் காண்பார்கள். செய்தி தருகின்ற முறையிலும், சக்தி வாய்ந்தது என்ற முறையிலும், எல்லையற்ற இலக்கியங்களையுடைய ஆங்கிலத்தின் எதிரே ஹிந்தி மொழி எந்தவிதமான உரிமையயும் பாராட்ட முடியாது. ஓர் இந்தியனின் அறிவுத் துறை வளர்ச்சிக்கு அவனுடைய ஹிந்தியறிவைக் காட்டிலும் ஆங்கில மொழி இலக்கிய அறிவு பெரிதும் துணை செய்வதில் எவ்வித ஐயமும் இல்லை.

(ஊ) இந்தியாவும், ஆங்கில மொழியும்.

இக்கால உலகத்திலும், இந்தியாவிலும் ஆங்கிலத்தின் முக்கியத்துவம் பற்றி ஒரு மிகப் பெரிய நூலே எழுதிவிடலாம். வெளி யுலகத்துவுள்ள காற்றையும், ஒளியையும் நாம் பெறுவதற்குரிய ஜன்னலாக ஆங்கில மொழி அமைந்துள்ளது என்று உலக முழுவதும் ஒப்புக்கொண்டுள்ளது. நம்முடைய பல்கலைக் கழக வாழ்க்கையில் இன்னும் சில வருஷங்களுக்கு மட்டும் அல்லாமல் பலப்பல ஆண்டுகளுக்கு நீக்க முடியாத மொழியாக ஆங்கிலமே இருந்து வரவேண்டும். இந்திய அரசியலமைப்பில் குறிப்பிட்டுள்ளபடி இவ்விஷயங்களில் ஒரு கால எல்லையை அமைப்பது அர்த்தமற்ற செயலாகும். அகில உலகத்திற்கும் ஒரே பண்பாடு வேண்டும் என்று சொல்கிற குறிக்கோள் இன்றைய உலகில் இருந்துவருகிறவரை இத்தகைய ஒரு கிளர்ச்சி பயனற்றதும், பிற்போக்குடையதும் ஆகும். ஆங்கிலத்தின் மூலமாக அறிவுத் துறையில் மட்டும் அல்லாமல் ஆன்மீகத் துறையிலும் கூட மனித சமுதாயம் முழுவதிலிருந்தும் நாம் பயனைப் பெறமுடியும். மிகப் பெரும்பாலான மக்களுக்கு மிக உயர்ந்த நன்மைகளைக் கொண்டு வருவதற்கு மிகச் சிறந்த வழியை ஆங்கிலம் நமக்கு தருகிறது. சென்னை அரசாங்கம் அதனுடைய மொழிக் கொள்கையில் கல்வித் துறையில் தாய் மொழியாகத் தமிழையும், பண்பாட்டு மொழியாக ஆங்கிலத்தையும் கட்டாய

மொழிகளாக ஆக்கி ஹிந்தியை விருப்ப மொழியாகச் செய்து, அது பற்றிக் கீழ்வருமாறு சொல்லியுள்ளது. நவீன ஆக்க எண்ணங்களுக்கு நேரடியான வழியை ஆங்கிலம் வகுக்குமே தவிர ஹிந்தி மொழி வகுக்க முடியாது. இந்த உண்மை அறிய வேறு ஆதாரம் தேவையில்லை. இதனை மறுக்கவும் முடியாது.

இந்தியாவிலுள்ள பள்ளிச் சிறுவர்களனைவரும் ஆங்கில பாடத்தைக் கட்டாயமாகப் படிக்க வேண்டியதில்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றார்கள். ஆனால் அறிவுத் துறையில் தலைவர்களாகவும், இந்திய வளர்ச்சியின் பொறுப்பாளர்களாகவும் இருக்க வேண்டியவர்கள் நவீன அறிவுத் துறைக்கும், பண்பாட்டுத் துறைக்கும் கருவியாக உள்ள இம் மொழியறிவு பெற்றிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் உலகத்தோடு ஒட்ட ஒழுக முடியும். இங்ஙனம் தலைமையேற்று நடத்தும் அறிவாளிக் கூட்டம் மொத்த ஜனத்தொகையில் ½ சதவிகிதம் கூட இருக்கமுடியாது. ஆனால் அவர்கள்தாம் நவீனத்தின் ஆணியாகவும், வளர்ச்சியின் அடிப்படையாகவும் இருக்கிறார்கள். பொது மக்களைப் பொறுத்த மட்டிலும், சாதாரண மக்களைப் பொறுத்த மட்டிலும் தாய் மொழிகள் உள்ளன. இந்த எண்ணம்தான் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள மக்களின் மனத்தில் இருந்து வருகிறது. இக்கூட்டத்தார் ஹிந்திப் பிராந்தியங்களைச் சுற்றி ஒரு வளையமாக கிழக்கிலும், தெற்கிலும், தென் மேற்கிலும், வட மேற்கிலும் இருந்து வருகிறார்கள்.

எந்த வகையான கல்வித் துறையிலும் சிறந்த முறையில் கருத்துக்களை வெளியிடுவதற்கு ஆங்கிலத்தைப் போன்ற பண்பட்ட மொழி உதவுவதையும், மனப் பண்பாட்டிற்கு அது உதவுவதையும், நாம் மறந்துவிடக் கூடாது. ஆங்கிலத்தை நீக்கி விட்டால் நம்முடைய மாணவர்கட்கு இது மறுக்கப்படும். இக்காலத்திய இந்தியக் கல்வி முறையில் பள்ளிக் கூடமாயினும் சரி, கல்லூரியாயினும் சரி, இந்தக் கட்டுப்பாட்டை மீறிய காரணத்தால் ஏற்பட்டுள்ள அறிவுத்துறைப் பிற்போக்கு அஞ்சத் தகுந்த ஒன்றாக உள்ளது.

ஆங்கிலக் கல்வி பொது மக்களிடமிருந்து தன்னைப் பிரித்துக்கொள்ளும் தனித் தன்மையை வழங்கிவிடுகிறது என்று பலராலும் சொல்லப்படுகிறது. ஒரு சில தவறான முறையில் உற்சாகம் கொண்ட இளைஞர்களைப் பொறுத்த மட்டில் இது உண்மையாக இருக்கலாம். (சென்ற நூற்றாண்டின் 40-வது வருஷங்களில் "இளைய வங்காளம்" மாணவர்களைக் காண்க.) ஆனால் ஆங்கில அறிவு பெற்ற அறிஞர்கள் மக்களினிடையே ஆரவாரமின்றிக் கொண்டுவந்து சேர்த்த அறிவு வளர்ச்சியையும், சுதந்திர இயக்கத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் தேசீய வளர்ச்சியை செய்ததையும் நாம் அறிந்துகொண்டு வணக்கம் செய்யாவிட்டால் நன்றிகெட்டவர்களாக ஆகி விடுவோம். உயர்தரப் பண்பாடு எப்பொழுதுமே மனிதர்களைப் பிரித்து விடுகிறது. வடமொழிப் பண்டிதர்களும் பொது மக்களிடமிருந்து தம்மை உயர்ந்தவர்களாகக் கருதிக்கொண்டு தனித்தன்மை பாராட்டினார்கள். அதே போல அகில இந்தியாவிலும் அறிவாளிகள் வழங்கும் மொழியாக ஹிந்தி மொழி வரும்பொழுது ஹிந்தி மொழி அறிந்தவர்கள் தங்களுடைய இனத்தினுள்ளேயே ஹிந்தி அறியாதவர்களைவிடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற தனித்தன்மை பாராட்டிக்கொள்வார்கள் என்பதற்குரிய அறிகுறிகள் இப்பொழுது இல்லாமலில்லை. இத்தகைய ஓர் உயர்வு மனப்பான்மை இப்பொழுதேகூட ஹிந்திப் பிராந்தியங்களில் இருந்துவருவதைக் கவனிக்க வேண்டும். கரிபோலி ஹிந்தியைப் பள்ளிக் கூடத்தில் படிக்கவும், எழுதவும் கற்றுக் கொண்டவர்கள், (வீட்டில் தாங்கள் பேசும் தாய் மொழியை மறந்து விட்டவர்கள்) இப்பொழுதும்கூட சாதாரணப் பேச்சு மொழி மட்டும் அறிந்த மக்களிடத்தில் தங்கள் உயர்வு

மனப்பான்மையை காட்டிக் கொள்ளத் தவறுவதில்லை. இதற்காக ஆங்கிலத்தினால்தான் இது வந்தது என்று குறைகூறுவது மெய்மைக்கு மாறானதோடு, தவறான கருத்தினால் வந்ததென்றும் சொல்ல வேண்டும்.

ஆங்கிலம்தான் நம்முடைய அறிவை வளர்க்கும் மிகச் சிறந்த கருவியாகும். அது ஐரோப்பாவிலிருந்து நாம் பெற்ற செல்வமாகும். ரயில்வே, மோட்டார்கார், தந்தி, வான் ஒளி (டெலிவிஷன்) போன்ற வசதிகள் நவீன நாகரிகத்தின் பயனாகக் கிடைத்தது போல, ஆங்கில மொழிக் கருத்துப் பரிமாறிக்கொள்ளவும், அரசியல் (பண்பாட்டு) ஒற்றுமையை இந்தியாவிற்குக் கொண்டு வரவும், விஞ்ஞானத் துறையில் இந்தியா முன்னேற்றம் காணவும் உதவியுள்ளது. பிறர் சொல்வது போல ஆங்கில அரசாட்சி இந்தியாவில் இருட்டை உண்டாக்கிய மேகம் ஆனால், ஆங்கில மொழி அந்த மேகத்தினிடையே தோன்றிய மின்னல் கீற்றாகும். நம்முடைய நவீன மொழிகளில் மறைந்து கிடைக்கின்ற சிறப்புக்களை எல்லாம் நவீன எழுத்தாளர்கள் வெளிக்கொணருமாறு உதவியது அந்த எழுத்தாளர்கள் ஆங்கிலத்தை நன்கு அறிந்திருந்த காரணமேயாகும். வங்காளி மொழியைப் பொறுத்தமட்டிலும் நான் பேசுகிறேன் என்றாலும் ஏனைய இந்திய மொழிகளைப் பொறுத்த மட்டிலும் இது உண்மையாகும் என்றே நினைக்கிறேன்.

சிலர் தனித்தன்மையின் எல்லையில் நின்று ஆங்கிலத்தை விஷம் என்றே கூறுகிறார்கள். ஆனால் இந்தியாவிலுள்ள கடுமையான சில கொள்கையாளர்களைத் . தவிரப் பெரும்பான்மையான மக்களுக்கு முழுத்தன்மை பெற்ற, உயிரை வளர்க்கின்ற உணவாகவே ஆங்கிலம் இருந்து வருகிறது.

கல்வித் துறையிலும், பொது வாழ்க்கையிலும் ஆங்கில மரபு சென்ற நூறு வருஷங்களாக இந்தியாவுக்கு எல்லையற்ற நன்மையைச் செய்துள்ளது. இந்தியாவின் ஏனைய பகுதிகளுக்கு ஹிந்தி மொழி இனிமேல்தான் மரபை உண்டாக்க வேண்டும் ; அன்றியும் அதனுடைய வாழ்க்கையே 150-வருஷங்களாகத்தான் இருந்து வருகிறது.

அகில உலக நாகரிகத்திற்குப் பொது மொழியாக ஏறத்தாழ இப்பொழுது ஆங்கிலம் வந்துவிட்டது. இந்தியா விடுதலை அடைந்த இத்தருணத்தில், வெளியுலகத்தோடு பெரிதும் தொடர்பு கொள்ள வேண்டிய இந்நேரத்தில், இந்திய மக்கள், சிறப்பாக இந்தியப் பொது வாழ்வின் தலைவர்களாக உள்ளவர்கள் தங்கள் கல்வித் துறையிலும், அரசியலிலும், வாணிகம் முதலிய பலவற்றிலும் ஆங்கிலத்தின் தேவையை மிகுதியாக வேண்டுவார்கள். இப்பொழுது ஆங்கிலம் ஆங்கிலேயனுடைய தனிச் சொத்தன்று. ஆங்கிலோ-அமெரிக்க மொழியாகமட்டும் அது இல்லை. எல்லாவிடங்களிலும் கருத்தைத் தெரிவிக்கும் கருவியாகவும், ஒருவர் எண்ணத்தை மற்றவர் அறிந்துகொள்ளும் கருவியாகவும் அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சிறந்த கருத்துக்களையும், வழிகளையும் கொண்டு செலுத்தும் ராஜ பாட்டையாக அது ஆகிக்கொண்டு வருகிறது. ரஷ்யாவில்கூட ஆங்கிலம் தான் முதல் வெளி நாட்டு மொழியாகக் கற்றுத் தரப்படுகிறது. இந்தோனேஷியாவில்கூட டச்சுக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் ஆட்சி மொழிகளாக (1) மலாய் மொழியும், (2) டச்சு மொழியும் இருந்துவந்தன. இப்பொழுது மலாய் மொழியே இந்தோனேஷியாவின் தேசிய மொழியாக (பாஷா-இந்தோனேஷியா) உயர்த்தப்பட்டுள்ளது. என்றாலும் இந்தோனேஷியாவிலுள்ள உயர்தரப் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. ஜப்பானிலும் ஏனைய மொழிகளைக் காட்டிலும் ஆங்கிலமே இருந்துவருகிறது. சீனாவிலும்கூட சீனக் குடியரசு, மக்கள் அரசாங்க அமைப்பாளர்கள் ரஷ்ய மொழியை ஊக்குவித்தாலும், இன்றும்கூட சீன அறிஞர்கள் வெளியுலகத்தோடு தொடர்பு கொள்ளும்போதும் தூரப் பகுதிகளிலுள்ள சீனப் பகுதிகள் ஒன்றோடொன்று தொடர்புகொள்ளும்பொழுதும் ஆங்கிலத்தையே பயன்படுத்து

கின்றன. கருப்பு ஆப்ரிகாவின் பெரும் பகுதிகளில் (சஹாராவின் தெற்கே உள்ள பகுதி) ஆங்கிலமே இருந்து வருகிறது. எகிப்திலும், லிபியாவிலும் பிரஞ்சு மொழியைக் காட்டிலும் இப்பொழுது ஆங்கிலமே இருக்கிறது. லாட்டின் அமெரிக்கா முழுவதிலும் அமெரிக்க வாணிகம் அரசியல், பண்பாட்டுத் தொடர்ச்சியால் ஆங்கிலத்தின் கை ஓங்கி நிற்கிறது. ஐரோப்பாக் கண்டம் முழுவதும் ஆங்கிலம் விரைவாகப் பரவி வருகிறது.

அறிவைத் தேடுவதற்குரிய சிறந்த வழியாக ஆங்கிலத்தை நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும். நம்முடைய கல்வித் துறையில் ஒரு நிலையில் அனைவருக்கும் இந்த ஆங்கிலம் கிடைக்குமாறு செய்ய வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய மொழிகளையெல்லாம்—ஹிந்தியை மட்டும் அல்ல—வளர்த்துத் தேவைப்பட்ட இடங்களிலெல்லாம் அவற்றைப் பயன் படுத்திப் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளவேண்டிய இடத்திலும், பெரும் பான்மையான மக்களுக்குக் கல்வி வழங்கவேண்டிய துறையிலும் நம்முடைய மொழிகளை வளர்க்கவேண்டும். மிக நீண்ட காலத்திற்கு முன்னர் ரவீந்திரநாததாகூர் கூறிய சில குறிக்கோள்கள் இந்த அறிக்கையில் இடம் பெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அதாவது **கல்வியைப் பிரித்தல்**—ஒரு வழி மேற்கொண்ட படிப்புக்களுக்குச் செல்லாதவர்களுக்கு ஏற்பட்டது. இவர்களுடைய கல்வி தாய் மொழியளவிலேயே நின்றுவிடும். (இத்தகையவர்களுக்கு ஹிந்தி மொழியைக் கற்பிப்பதன் நோக்கம் என்னவென்றே எங்களுக்குப் புரியவில்லை. ஏனென்றால் இவர்கள் தங்கள் ராஜ்யத்தை விட்டு வெளிக் கிளம்பாதவர்கள்,) அடுத்த பகுதியில் தாய் மொழியோடு ஆங்கிலமும் கட்டாயமாகப் போதிக்கப்படும்.

சிறப்பாக ஹிந்தி மொழி பேசாத பிராந்தியத்தில் உள்ள நாம் அனைவரும் ஆங்கிலத்தை வேண்டுகிறோம். அறிவின் அடிப்படைப் பகுதிகளை ஆங்கிலத்தின் மூலம் கற்றுக்கொண்டு பயனடைந்தால் அப்பயன் நம்முடைய மொழிக்கும் வரும் என்ற காரணத்தால், நாம் ஆங்கிலத்தை விரும்புகிறோம். ஐரோப்பிய நாகரிகத்திலும், நவீன நாகரிகத்திலும், ஆங்கில மொழியின் மூலமாக நாம் நுழைந்தது, இந்திய தேசீய நாகரிகத்தில் நாம் வேரூன்றி நிற்கும் நிலைமையை வலுப்படுத்தியது. இந்தியாவில் தோன்றிய உலகத் தலைவர்களாகிய ராஜாராம் மோஹன் ராய், ஸ்வாமி விவேகாநந்தா, ரவீந்தரநாத் தாகூர், எம். ஜி. ரானடே, மகாத்மா காந்தி, ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார், பகவன் தாஸ், ஜவஹர்லால் நேரு, எஸ். இராதாகிருஷ்ணன் போன்ற பெரு மக்கள் உலக மனித சமுதாயத்தின் அடிப்படையில் இந்தியப் பண்பாட்டை உலகிற்கு எடுத்துக்கூற முடிந்தது அவர்கள் பெற்ற ஆங்கிலக் கல்வியினாலேயே ஆகும். இதே காரியம் இந்தியர்களாகிய நமக்கும் பெரும் தொண்டாக இருந்தது. இந்தியப் பல்கலைக் கழகங்கள் விஞ்ஞானக் கல்வி முறையை மேற்கொண்ட பிறகுதான், அதுவும் ஆங்கிலத்தின்மூலம் அதனைக் கற்ற பிறகுதான், பிரசித்தி பெற்ற அகில உலகப் புகழ் பெற்ற ஜே. ஸி. போஸ், பி. ஸி. ரே, எஸ். இராமானுஜம், மேகனுத் சஹா, ஸி.வி. ராமன், கே.எஸ். கிருஷ்ணன், பிர்பால் ஷானி, போன்ற பலரை உண்டாக்க முடிந்தது. ஆங்கில ஏகேச் சாதிகாரத்தை எதிர்த்து நாம் தொடங்கிய சுயராஜ்யப் போராட்டத்தில் ஆங்கிலேயனுடைய மொழியாகிய ஆங்கிலம்தான், நமக்குப் பேருதவியாக இருந்து சுதந்திரம் பெற வேண்டிய உறுதிப்பாட்டையும், அதனை அடைய வேண்டிய வழிகளையும் வகுத்துத் தந்தது. நம்முடைய மொழிகளை நாம் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றவரையில் ஆங்கிலத்தையும் சேர்த்துப் பயன் படுத்துவதில் அதுவும் அறிவின் கருவியாக அதனைப் பயன் படுத்துவதில் சுதந்திரமுடைய மக்களாகிய நாம் வெட்கப்பட வேண்டியதில்லை.

ஆங்கிலக் கவிஞன் இவ்வாறு கூறினான் :

"அன்பே ! கௌரவத்தை அதிகப்படியாக காதலிக்கவில்லையானால், உன்னையும் அந்த அளவு காதலித்திருக்கப் போவதில்லை."

நம்முடைய வங்காளியையோ, தமிழையோ, மராத்தியையோ, அஸ்ஸாமிய மொழியையோ, விரும்பவில்லையானல், ஆங்கிலத்தையோ, வடமொழியையோ இவ்வளவு விரும்பப்போவதில்லை.

ஆங்கிலத்தைத் தேச விரோதமானதென்றே, தேசீய விரோதமானதென்றே கருதுவது மிகக் குறுகிய தேசீயப் பற்றும் நாட்டுப் பற்றும் ஆகும். ஆங்கிலத்தை வைத்துக்கொண்டே இதுவரையில் ஆழ்ந்த தேசப் பற்று உடையவர்களாக இருந்தோமாதலின் இனியும் அவ்வாறே இருந்து வருவோம். இன்னும் சிறந்த முறையில் இந்தியர்களாக இருப்பதற்கு ஆங்கிலம் நமக்குத் துணை செய்யும். ஏனென்றல் நம்முடைய நாகரிகத்தின் அடிப்படையை அறியவும், அதனைப் போற்றவும், அறிவுத் துறையின் சிறந்த் கருவியான இந்த ஆங்கிலம் இல்லையானல் இங்ஙனம் போற்றுதல் இயலாத காரியம். ஏனென்றல் நம்மைப் பொறுத்த மட்டில், நமக்கு மட்டும் அல்லாமல் மனித சமுதாயத்தின் பெரும் பகுதியான அளவுக்கு ஆங்கிலம் இவ்வளவு இன்றியமையாததாகின்றது.

நமக்கு இதுவரையில் கிடைத்துள்ள ஆங்கில மரபும், சொத்தும், ஆங்கில மொழியின் மூலமாக நம்மவர்களே நமக்குத் தந்த சொத்து என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும். "நவீன இந்தியாவின் தந்தை" என்று மதிக்கப்படும் ராம் மோஹன் ராய் போன்றவர்கள் விட்டுச் சென்ற சொத்தாகும் இது. ஆதலால் இந்த சொத்துக்கள் இன்றும் நம்மால் பெரிதும் மதிக்கப்படுகின்றன. இந்தியாவிலுள்ள மக்களின்மேல் ஆங்கில மொழி என்றுமே கட்டாயப்படுத்தப்படவோ திணிக்கப்படவோ இல்லை. இன்றைய சூழ்நிலையில் இந்தியர்கள் தாங்களே ஆங்கிலத்தின் மதிப்பை உணர்ந்து எல்லாவிடங்களிலும் உள்ளவர்களும் ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்று விரும்பியது போல இந்த நாட்டில் உள்ள அறிஞர்களும் இதனைக் கற்றுக்கொள்ள முன் வந்தார்கள். என்றலும் இம் மொழியைக் கற்றல் கௌவரமான அரசாங்க உத்தியோகங்கள் கிடைக்கும் என்ற சலுகையும், தனிப்பட்ட உத்தியோகங்கள் கிடைக்கும் என்ற சலுகையும், எந்தத் துறையிலும் ஒரு கௌரவமான முறையில் வாழலாம் என்ற சலுகையும், அடிப்படையில் தூண்டுதலாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது. ஆனல் ஆங்கிலக் கல்வியில் முதன் முதலாகப் புகுந்த இந்தியர்களைப் பொறுத்த மட்டில் இப்பயன்கள் பெரிதாக இல்லாமல் அக்கல்வியைப் பெறுதலே அதன் பயனக இருந்து வந்தது. இதுதான் நவீன இந்தியாவின் பண்பாட்டிற்கும், மனே நிலைக்கும் ஊக்கம் தருவதாகும். இந்தியாவிலும், ஐரோப்பாவிலும், உள்ள சிறந்தவற்றை எடுத்து ஒன்று சேர்ப்பதைக் குறிக்கோளாகக்கொண்ட ஓர் இயல்பாகும் இது.

யாரொருவன் ஒரு மொழியைக் கற்று, அதனைத் தனக்கும் தன்னைச் சேர்ந்தவர்களுக்கும் பயன்படுத்திக் கொள்கிருனே அவனைச் சேர்ந்ததாகும் அம் மொழி. இந்தியாவில் தற்காலத்தில் உள்ள அறிவாளிகளில் பெரும் சதவிகிதம் இந்த அருமையான கருவியை எண்ணத் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் தங்களுடைய சொந்தக் கருவியாகவே ஆக்கிக் கொண்டார்கள். அதனைத் தூர எறிந்துவிடாமல் நம்முடைய தேசிய நலனை வளர்ப்பதற்கு மேலும் பயன்படும்படி இதனை வளர்க்க வேண்டும். இன்றைய நிலையில் சரித்திர அடிப்படை கொண்டும் சரித்திரத் தேவையைக் கொண்டும் ஆங்கிலத்தைப் பொது மொழியாகப் பயன் படுத்தினல் இந்தியாவின் தன் மதிப்புக்கு எவ்விதக் குறைவுமில்லை என்று நினைக்கின்ற ஆயிரக் கணக்கான இந்தியர்கள் இன்றும் உண்டு. நம்முடைய நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்களும், தலைவர்களும் இதே எண்ணத்துடன் இருந்து வருகிருர்கள் என்பதும் ஆராய்வதற்குரியது.

(ஏ) இந்தியாவின் பரம்பரைச் சொத்தாகிய ஆங்கிலம்—அதனுடைய பரந்த இயல்பு

நம்முடைய அரசியல் வாதிகளில் பலரும், தேசீய மொழிப்பற்றுக் கொண்டவர்கள் பலரும் ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று கூச்சல் இடும்பொழுது ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிடுகின்றனர். வட இந்தியாவிலோ, வங்காளத்திலோ, மகாராஷ்டிரத்திலோ, தமிழ் நாட்டிலோ இருக்கின்ற ஒரு இந்திய அறிவாளி ஆங்கிலத்தை நம் கல்வித்துறையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறும்பொழுது, பிற்போக்கு மனப் பான்மையினுலோ, நாட்டுப்பற்று இன்மையினுலோ, ஒரு இனத்தாரை செல்வாக்குடையவர்களாக ஆக்க வேண்டும், என்ற கருத்தாலோ அவனுடைய நாட்டுப் பண்பாட்டை மதிக்க மறந்துவிட்ட நிலையினுலோ செய்யவில்லை என்பதை நினைவு கூறவேண்டும். இவ்வாறு கூறும் பொழுது அவனை அறிந்தோ அறியாமலோ ஆங்கில மொழியின் மூலமாக உலகத்தின் மிகச் சிறந்த குறிக்கோளைக் காண முடியும் என்றும், அதன் மூலமாக அவனுடைய அந்தராத்மாவைத் திருத்திக்கொள்ள முடியும் என்றும், மனித சமுதாயத்தின் முருகியல் வெளிப்பாட்டையும் உயர்ந்த எண்ணங்களையும் அறிந்துகொள்ள அம்மொழி எளிதாக உதவுகிறது என்றும் அவன் நினைக்கிருன். அம்மட்டோடின்றிப் பெரும் பகுதியான விஞ்ஞான அறிவை அம்மொழி மூலம் அறிய முடியும் என்பதும் மற்ருெரு காரணம் ஆகும். இங்ஙனம் சொல்வதன் அடிப் படையில் அவனுடைய நாட்டின் அடிப்படையும் சூழ்நிலையில், அதாவது வடமொழியும் இடைக்கால, தற்கால இந்திய மொழிகளும் தரும் உயர்ந்த கொள்கைகளுக்கு எவ்விதமான முரண்பாடும் இல்லை என்பதையும் அறிய வேண்டும். அறிவுத் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் பெறும் இந்த மதிப்புக் குழந்தைப் பருவத்திலிருந்து அறிந்துள்ள தாய் மொழியின் மூலம் கிடைக்கின்ற உணர்ச்சி இன்பத்திலும் மாறுபட்டது. சுருக்கி இதனை ஒரு வார்த்தையில் கூற வேண்டுமானுல் ஒரு புது வகையான "அறிவுப் பசி" என்று கூறலாம். இந்தியர்கள் மனத்தில் ஆங்கிலத்தோடு தொடர்பு கொண்டதால் ஏற்பட்ட பயனுகும் இது. பத்தொன்பது, இருபதாவது நூற்ருண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட அறிவுப் புரட்சியின் அடிப்படை இதுவே. நம்முடைய தேசீயப் பண்பாட்டிலுள்ள யோகமும், ஷேமமும் (அதாவது மதிப்புடைய பொருள்களைச் சேகரித்தல் யோகம் என்றும், நிலை பெறக் கூடிய பொருள்களை பாதுகாத்தல் ஷேமம் என்றும் சொல்லலாம்)—வளர்ச்சி மனப்பான்மையும் நிலைநிறுத்தும் மனப்பான்மையும் ஆங்கிலம் நமக்கு அளித்த "அறிவுப் பசியால்" கொடுக்கப்பட்டவையே. இந்த "அறிவுப் பசி"யை நிரப்புவதற்கு ஆங்கிலத்தை அல்லாத ஹிந்தியாலோ அன்றி இந்திய மொழிகளாலோ முடியாது என்பது உறுதி. இதனை, அறிவுத் துறையில் குறிக்கோள் தன்மை பெறவேண்டும் என்று தோன்றும் விருப்பம் என்றும், மனித சமுதாயம் முழுவதையும் ஒன்ருகக் காணும் பரந்த மனப்பான்மை என்றும், அகில உலக உண்மைகளைக் காட்டும் சமய அடிப்படையை விரிவுபடுத்திக் காணுகின்ற பரந்த நோக்கம் என்றும் கூற லாம். இன்றைய இந்தியாவிலுள்ள பெரிய அரசியல் வாதிகளும் பெரிய தத்துவ வாதிகளும், தலையான விஞ்ஞானிகளும் (குறிக்கோள் இல்லாத உண்மை விஞ்ஞானி இல்லை) ஆங்கிலத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று கூறுவதன் அடிப்படை நோக்கம் இதுவேயாகும். நம்முடைய நாட்டின் எதிர்காலத்தைக் காணும் தீர்க்கதரிசிகளும், ஞானிகளும் இவர் களே யாவார்கள் ஆதலால் இவர்களுடைய அறிவுரைகளை நாம் வணக்கத் தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்பொழுதுமே காரியஞ் செய்கின்ற வர்கள், தீர்க்க தரிசனமும் அறிவு விளக்கமும் பெற்றவர்கள் காட்டுகின்ற வழியை மேற்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வளர்ச்சி, வெற்றி, இன்பம், நிலைத்த கொள்கை என்பவை கீதை சொல்வது போல உறுதி யாகக் கிடைக்கும்.

"யோகேசுவரக் கிருஷ்ணனும் தனுசைத் தாங்கிய பார்த்தனும் எங்களரோ ஆங்குத் திருவும், வெற்றியும், பெருகும்; நிலைத்த நீதியும் உளவென்பது என் கொள்கை". (கீதை 18—78.)

காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகரில் கழகம் விசாரணை நடத்திய பிறகு பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் உள்ள அறிவு நிறைந்த மூத்த மாணவர்களிடம் சான்று கேட்டு எடுப்பது நலம் பயக்கும் என்பது எங்களில் சிலருக்குத் தோன்றிற்று. ஆங்கிலத்தைப் போதன மொழியாகவும் கட்டாய மொழியாகவும் வைப்பது பற்றிச் சாதாரண நிலையிலுள்ள மாணவர்கள் ஒன்றும் சொல்லப் போவதில்லை என்பதை என்னுடைய அனுபவத்தின் மூலம் அறிந்திருந்தேன். கெட்டிக்காரத்தனம் குறைவாகவும், முயற்சி குறைவாகவும் உள்ள மாணவர்கள் தாய் மொழி மூலம் கற்கவே விருப்பப்படுவார்கள். சோம்பரும் சக்தியின்மையும் சில சமயங்களில் தேச பக்தியின் துணையை நாடும். ஆனால் மாணவர்களில் உயர்ந்தவர்களாக உள்ளவர்கள், அறிவாளிகளாக உள்ளவர்கள், பல்கலைக் கழகங்கள் இன்றுள்ள நிலையில், வெறும் பட்டத்தை மட்டும் வாங்கிக்கொண்டு போக வேண்டும் என்று இல்லாமல், உண்மை அறிவைப் பெற வேண்டும் என்று நினைக்கின்ற மாணவர்கள், நிச்சயமாக ஆங்கிலத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றே கூறுவதோடு தேவைப்பட்டால் தாய் மொழியையும் அதனுடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றே கூறுவார்கள் என்று நம்புகிறேன். இத்தகைய உயர்தர மாணவர்கள்தாம் இந்த அறிவுப் பசிக்கு இலக்காகிறார்கள். எனவே, நம் நாட்டின் எதிர்காலத்திற்கு இவர்களே சிறந்த முதலீடு ஆவார்கள்.

பெரும்பான்மையோரின் இந்த அறிக்கை ஆங்கிலத்தை நீக்கி யூனியன் விவகாரங்களில் ஹிந்தி மொழியை எவ்வளவு விரைவாகப் புகுத்த முடியுமோ அவ்வளவு விரைவாகப் புகுத்தவேண்டும் என்று சொல்வதில் மிகவும் கவலை கொண்டிருந்தாலும் கூட, இந்தியாவின் உயர்தரக் கல்வி முறையிலும் சட்டத் துறையிலும் ஆட்சித் துறையின் இன்னுஞ் சில பகுதிகளிலும் மிக நீண்டகாலத்திற்கு ஆங்கிலத்தை வைத்திருப்பதன் தேவையையும் அவசியத்தையும் நன்கு உணர்ந்திருக்கிறது.

இந்திய அடிப்படையில் ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று தோன்றுகிற ஆசை இரண்டு மனோநிலையில் தோன்றுவதாகும்: (1) இந்திய மொழியை யல்லாத ஆங்கிலத்தை இன்னும் நாம் பயன்படுத்தினால் ஏனைய நாடுகளின் எதிரே நம்முடைய மதிப்புக் குறைந்துவிடும் என்ற தாழ்வு மனப்பான்மை; (2) இந்தியா ஒரு பல மொழி நாடு என்றும், அனைவரும் போற்றி மதிக்கக்கூடிய ஒரு பொதுவான மொழியை பெற்றிருக்கவில்லை என்ற உண்மைகளை வேண்டும் என்றே பார்க்க விருப்பமில்லாமல் நாம் கண்களை மூடிக்கொள்கிறோம். இவற்றை யல்லாமல் இந்து அல்லது முஸ்லீம் மதக் கொள்கை என்ற மூன்றாவது ஒரு மன நிலையும் எங்கும் பரவியுள்ளது. இந்த மனோநிலை ஐரோப்பிய நாகரிகத்தில் எந்த நன்மையும் இருக்கும் என்பதை நம்ப மறுப்பதோடு அந்த நாகரிகத்தை ஐரோப்பாவிலிருந்து கடன் வாங்க மறுக்கின்ற மனோநிலையுமாகும். இந்தியப் பண்பாட்டு வளர்ச்சி முறையில் ஒரு தனித் தன்மை இருக்கவேண்டும் என்றும், வெளியாரோடு உறவு கொள்ளும்பொழுது வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ளாமல் இருக்க வேண்டும் என்றும் கூறும் மனநிலை. விடுதலை பெற்ற இந்தியாவின் வளர்ச்சி முறைக்குக் கால தேச வர்த்தமானங்களால் இம்மனநிலை பொருத்தமற்றுக் காணப்படுதலின் இந்த மூன்றாவது நிலையை நாம் ஒதுக்கிவிடலாம். ஆனால் வடமொழியையும், ஓரளவு பர்சிய மொழியையும் பொறுத்தமட்டில், நிலைமை வேறு விதம். பல மொழி வழங்கும் நாட்டில், ஒரு மொழி இல்லாத பகுதிகளில் அக் காரியங்களைச் செய்ய நம்முடைய மொழிகள் தகுந்த அளவு வளர்ச்சி பெறாத நேரத்தில்

ஆங்கிலத்தைப் பயன்படுத்தினால் அதற்காக நாம் மனமுடைந்து போக வேண்டியதில்லை. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு ராஜ்யமும் தன்னுடைய மொழியை எல்லாக் காரியங்களுக்கும் பயன்படுத்த வேண்டும் என்றும் ஆங்கிலத்தைத் தேவைப்பட்டால் பயன்படுத்திக்கொள்ள வேண்டி தூரத்தில் வைத்திருக்கவேண்டும் என்றும் கருதுகிறது. நவீன பரி சோதனை விஞ்ஞானத்தை அப்படியே சோதனைச் சாலை, கலைச் சொற்கள் ஆகியவற்றோடு முழுவதும் ஐரோப்பாவிலிருந்து எடுத்துக்கொண்டதைப் போல ஆங்கில மொழியிலிருந்து நம்முடைய சட்டத்துறை, நீதித்துறை, பொது ஆட்சி முறை ஆகியவற்றையும் எடுத்துக்கொண்டோம் ஆதலின் இவற்றோடு சேர்ந்து அந்த மொழியும் வந்தது. எவ்வளவு காலத்திற்கு ஆங்கிலச் சொத்தாகிய விஞ்ஞானம், சட்டம், நீதி, பொது ஆட்சி ஆகிய வற்றை இங்கிருந்து தள்ள முடியாதோ அதுவரை ஆங்கிலத்தையும் வைத்துக்கொள்ளத்தான் வேண்டும். இவற்றை மேற்கொண்டதால் இந்தியாவில் நல்முறையில் ஆட்சி செலுத்த முடிகிறது. (சந்தர்ப்பத்தின் உண்மை நிலையை ஆராய்ந்து) நம்முடைய தேசீயக் குறிக்கோள் **சத்தியம் ஏவ ஜயதே** என்பதை நினைவில்கொண்டு ஆங்கில ஆட்சி முறைக்கு நன்றி பாராட்டுவதினால் தேச பக்தியில் குறைந்தவர்களாகவோ இன பக்தியில் குறைந்தவர்களாகவோ ஆகிவிடமாட்டோம். ஐரோப்பிய வாழ்வு முறை எல்லா விடங்களிலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. நம்முடைய உடை, அன்றாடப் பழக்க வழக்கங்கள், சமுதாயச் சூழ்நிலை, நமது பண்பாட்டின் பரந்த மனப்பான்மை—இந்திய தேசீய வாழ்வின் அடிப்படையை விடாமல் பற்றிக்கொண்டு இருக்கும் நிலையிலும்—ஆகியவைகள் எல்லாம் இருக்கி ன்றன. இவ்வாறு இந்திய நாட்டின் காலக் கணக்கு, பஞ்சாங்கம் முதலியவைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு விதமாக இருப்பினும் அவற்றை எல்லாம் மாற்றி இந்திய வாழ்க்கையில் ஐரோப்பிய காலக் கணிதம் நிலைபெற்றுவிட்டது. தேவைப்படும் இடங்களில் உண்மை யான பயன் விளையுமானால் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதைத் தவறு கவோ தேசீயப் பற்றுக்கு விரோதமானதாகவோ யாரும் கருத வேண்டிய தில்லை.

மனப் பக்குவத்தையும் நடைமுறையையும் பொறுத்த ஒன்றுதான் இது. நம்முடைய இளைய தலைமுறையில் முற்றிலும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அவர்களுடைய மனோநிலையையும் மாற்றிவிடலாம். ஆனால் ஆங்கிலம் இருந்த இடத்தை எதனைக் கொண்டு நிரப்புவது? இதன் பயனாக விளையும் விளைவுகளில் நாம் மகிழ்ச்சியடைய முடியுமா? இன்றைய இந்தியக் கல்வி முறையில் ஆங்கிலத்தைக் குறைத் ததனாலும் ஒதுக்கியதனாலும் தரம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். விடுதலை பெற்ற இந்தியாவில் அறிவுத்துறை மேலும் வளர்ச்சி அடைந்துகொண்டு செல் வதற்குப் பதிலாக நம்முடைய உயர்தரப் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரி களிலும் உள்ள மாணவர்கள் அறிவுத் திறத்தில் படிப்படியாகச் சுருங்கிக் கொண்டே வருகிறார்கள். இது அஞ்சத் தகுந்த நிலைமைக்குச் செல்கிறது. உலக நிகழ்ச்சிகளிலும் அகில இந்திய நிகழ்ச்சிகளிலும்கூட (குறிப்பிட்ட ஒரு சில மாணவர்களைத் தவிர) பெரும்பாலானவர்கட்கு ஆர்வம் ஏற்படாததோடுகூடப் பிராந்தியப் பற்றும் ராஜ்யப் பற்றும் மிகுதியாகி விளக்கத்தோடு கூடிய தேசீயப் பற்றையும் பண்பாட்டோடு கூடிய பன்னாட்டுப் பற்றையும் குறைத்துவிடுகிறது. இக்குறுகிய மனப் பான்மையைக் காட்டும் சொற்றொடர்களும் அவர்களை அமிழ்த்திவிடுகிறது. ஆங்கிலத்தை முறையாகப் போதித்தால் ஒரு மன விழிப்பும் எல்லா வற்றிலும் ஆர்வம் கொள்ளக் கூடிய அறிவு விளக்கமும், தர உயர்வும் ஏற்படுவதைக் காணலாம். ஆங்கிலத்தின் மேல் குற்றஞ் சாட்டுவதை இது முற்றிலும் பொய்ப்பித்துவிடுகிறது. சிறந்த முறையில் தாய் மொழி யையும் ஆங்கிலத்தையும் கலந்து போதிப்பதால் மிக உயர்ந்த பயனைப் பெற முடியும். விடுதலை பெற்ற இந்தியாவில் **எந்த போதனு மொழியில்**

கற்பித்தாலும் உயர்ந்த முறையில் அறிவு, விளக்கம் பெறுவதை, இந்திய மொழி என்று சொல்லுகின்ற ஒன்றுக்காக இரண்டாம் தரம் ஆகிவிடக்கூடாது. இந்திய மொழியின் மேல் கொண்ட அதிகப் பற்று காரணமாகவோ, மான உணர்ச்சி காரணமாகவோ அறிவைப் பெறக் கூடிய சிறந்த இடைநிலையாகிய ஆங்கிலத்தைக் குறைக்கவோ ஒழிக்கவோ செய்தால் நமக்கு நாமே தீமையைத் தேடிக்கொள்வோம். இக்கழகத்தின் வினவிற்கு காஷ்மீர் அரசாங்கம் தந்த விடையில் குறிப்பிட்டுள்ள பின்வரும் பகுதி முற்றிலும் பொருத்தமானது: "ஆங்கிலத்தைத் தொடர்ந்து கட்டாய மொழியாக இடைநிலைக் கல்வியிலும் பல்கலைக் கல்வியிலும் வைத்திருப்பதால் கற்றறிந்த இனத்தாரின் மனப்பான்மையைப் பரந்ததாக ஆக்குவதோடு, இந்திய மொழிகளின் மூலம் தேசீயப் பண்பாட்டை வளர்க்கவும் இது சிறந்த உதவி செய்யும்". எதிர்காலத்தில் மிகப் பெரிய நிகழ்ச்சிகளை நாம் எதிர்ப்பார்க்கும்பொழுது உலக நாகரிகத்தோடு நமக்குள்ள தொடர்பு ஆங்கிலத்தின் மூலமே இருத்தலினால் அதனை நம் மொழிகளுக்குக் கொண்டுவராதபடி ஆங்கிலம் நீக்கப்பட்டால் இத்தொடர்பு வெட்டப்பட்டுவிடும். இத்தகைய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குப் போதும் ஹிந்தியை பல்கலைக் கழகங்களிலும், ஆட்சித் துறையின் உயர் பகுதிகளிலும் கொண்டு வந்து, இந்திய அறிவு வாழ்வில் ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று கருதுகிறார்கள். நன்கு நிலை பெற்றுள்ள ஒரு அறிவு மரபை இதுவரையில் நிலைபெறாத ஒன்றினால் மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள் (அதிலும் சிலர் எவ்வளவு விரைவாக இதனை செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாகச் செய்ய வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள்). இந்தியாவின் ஏனைய பகுதிகளில் இது பற்றி நாம் அவ்வளவு ஆர்வமாக இல்லை.

(ஏ) இந்தியாவின் அறிவுத் துறை, அரசியல் துறை வாழ்வில் ஹிந்தி மரபு என்ற ஒன்று (ஹிந்திப் பிராந்தியங்களில் கூட) இன்மை.

ஹிந்தி மொழியோடு சம்பந்தப்படுத்தக் கூடிய எந்த அறிவு மரபும் இதுவரையில் தோன்றவில்லை. அன்றியும் ஹிந்தி மொழியில் பண்பாட்டுச் சிறப்போ, அரசியல் சிறப்போ எதுவும் இதுவரையில் தோன்றவில்லை. ஒரு குறிப்பிட்ட மொழியில் நிறைந்த சொல்லாட்சிகளைத் தந்து அதில் இலக்கியத்தையும் வளர்க்கவேண்டிய கடமை, அதனைப் பேசுபவர்களைச் சேர்ந்ததே தவிர, அம்மொழியைக் கற்று அதன் பயனாக உத்தியோகம் சம்பாதிக்க வேண்டியவர்களுடைய கடமை அன்று. ஹிந்தி மொழி பேசாதவர்கள் அம்மொழியைக் கற்றுத் தம் ஒத்துழைப்பை நல்குவதன் மூலம் ஹிந்தி மொழியை வளர்க்கவேண்டும் என்று அர்த்தமற்ற ஆவேசப் பேச்சுக்கள் பேசப்படுவதைக் கேட்கின்றோம். ஹிந்தி மொழி பேசாதவர்களைக் கட்டாயப்படுத்தி ஹிந்தியைக் கற்றுக்கொள்ளச் செய்வதால் இது எங்ஙனம் சாத்தியமாகும்? ஹிந்தி மொழி பேசாத வங்காளி, குஜராத்தி, மகாராஷ்டிரர், பஞ்சாபி எழுத்தாளர்கள் பலர் சிறந்த முறையில் ஹிந்தியில் எழுதியுள்ளார்கள் என்பது உண்மைதான். இதேபோலப் பல வெளி நாட்டார்கள் ஹிந்திக்கும், தமிழுக்கும், வங்காளிக்கும், ஒரியாவுக்கும், மராத்திக்கும் தொண்டு செய்துள்ளார்கள். ஹிந்தி மொழியை வளர்க்க வேண்டிய பொறுப்பை ஹிந்தி மொழி பேசாதவர்கள் பெருந்தன்மையோடு செய்ய வேண்டும் என்றும், இதனைக் கற்றுக்கொள்வதோடு அதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மிக உயர்ந்த ஸ்தானத்தில் அதனை வைக்க உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் படுகிறது. ஆனால் ஹிந்தி மொழியை நவீன மொழியாக்கி, நவீன விஞ்ஞானக் கருத்துக்களையும் கலைத்துறைப் பகுதிகளையும் நல்ல முறையில் வெளியிடும் கருவியாக ஆக்கி முருகியலிலும், உணர்ச்சித் துறையிலும், அறிவுத் துறையிலும் திருப்திகரமான ஒரு மொழியாக ஆக்க வேண்டிய

தலையாய கடமை இம்மொழியை பரம்பரைச் சொத்தாகப் பெற்றுப் பேசிப் புரிந்துகொள்ளும் மக்களைச் சேர்ந்ததே யாகும். இம்மொழியின் நுணுக்கங்களையும், அர்த்த வேறுபாடுகளையும் அவர்கள் மட்டுமே அறிந்திருக்க முடியும். அறிவுத் துறையில் ஹிந்தி தலையிடத்தைப் பெறுவது என்பது இன்னும் எதிர்காலத்தின் கருப்பைக்குள்ளேயே இருந்துவருகிறது. இது வெளிவந்து ஹிந்தி பேசும் மக்களையல்லாமல் எல்லாவிடங்களிலும் உள்ள இந்தியர்கள் இதனைப் புரிந்துகொள்ளுகின்ற நிலை வருகின்ற வரையில் ஆங்கிலத்தை ஹிந்தியால் நீக்க முயல்வது பயனற்ற செயலாகும். நவீன இந்தியாவின் எண்ணம், பண்பாடு, விஞ்ஞானம் ஆகியவற்றைச் சிறந்த முறையில் ஹிந்தி மொழியில் வெளியிட வேண்டுமேயானால் ஹிந்தி பேசும் மக்கள் இத்துறைகளில் தலைமை வகிக்கவேண்டும். நவீன நாகரிகம் என்பது எல்லாப் பொருள்களையும் அறிவால் ஆராய்ந்து பார்ப்பதாகும். அதாவது எல்லாக் காலத்திலும் எல்லாவிடத்திலும் மனிதனால் சிந்திக்கப்பட்டனவும் செய்யப்பட்டனவுமான அனைத்தையும் அவை நல்லவைகளாக இருப்பின் மனிதன் தன்னுடையவைகளாக ஆக்கிக்கொண்டு, மற்றவர்களுடைய இடத்தில் நம்மை வைத்து அவர்களுடைய கருத்துக்களைப் புரிந்துகொள்வதே "மாடர்னிஸம்" எனப்படும் இன்றைய நாகரீகமாகும். ஹிந்தி பேசும் மக்கள் ஹிந்தி மொழியை உலக மொழிகளுள் சிறந்த ஒன்றாக ஆக்க வேண்டுமேயானால் அவர்கள் (இந்தியாவிலுள்ள, ஏன், உலகிலுள்ள அனைவருமேகூட) இக்கால நன்னெறிகளாகிய "இன்டெலக்ச்சுவலிஸம்" "யுனிவர்ஸலிஸம்" என்பவற்றை வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வளர்க்க வேண்டும். இந்தியாவில் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்தவேண்டும் என்று நினைக்கின்ற ஹிந்தி பேசுபவர்களின் பெரும் பொறுப்பாகும் இது. ரவீந்திரநாத தாகூர் செய்த பிரார்த்தனையை அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்: "உன்னுடைய கொடியை யாரிடம் ஒப்படைக்கின்றாயோ அவர்களுக்கு, அதனைத் தாங்கும் சக்தியையும் அளித்தருளுவாயாக".

இன்று நாம் காணுகின்ற சூழ்நிலை விநோதமாக இருக்கின்றது. ஏனைய இந்திய மொழிகளோடு ஒப்பிடும்போது எவ்விதத்திலும் உயர்ந்ததாக இல்லாத ஒரு மொழி இங்கிருக்கிறது. அதனுடைய மிகச் சிறந்த ஆதரவாளர்கள் உள்பட அனைவருமே, அம்மொழி ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமையைச் செய்வதற்கு, இதுவரை அம் மொழி தகுதி பெறவில்லை என்பதை வருத்தத்தோடு ஏற்றுக்கொள்கின்றனர். வரையறுத்ததும், விளக்கமாக உள்ளதும், உதவியாக இருந்ததும் ஆகிய ஒன்றைப் பின்னே விட்டுவிட்டு இதில் குதிக்க வேண்டுமாம். இன்றைய ஹிந்தி கருத்தை வெளியிடுவதற்கு வரையறுத்த பொருளை உடையதாகவோ வளர்ச்சி அடைந்ததாகவோ இல்லை என்றாலும் இந்தியாவில் கலைத் துறைகளையும் விஞ்ஞானப் பகுதிகளையும் வெளியிட உடனடியாக அது தயாரிக்கப்பட வேண்டுமாம். இன்றியமையாத கலைச் சொற்கள் மட்டுமல்லாமல் சாதாரணச் சொற்களைப் பொறுத்தமட்டிலும்கூட மூன்று நான்கு முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன. ஹைதராபாத் ராஜ்யத்தில் நிஜாம் ஷாகியின் ஆட்சியின் இறுதிக் காலத்தில் உருது மொழிக்கு நேர்ந்த அவலத்திலிருந்து நாம் ஒரு பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். அதுபற்றி ஸ்ரீ கே. எம். முன்ஷி கீழ் வருமாறு கூறினார் :—

"ஹிந்தி மொழியின் நன்மையை உத்தேசித்தும், இந்தியாவின் ஒற்றுமையை உத்தேசித்தும், கால எல்லைபற்றிய பிரசாரத்தை மிகவும் அழுத்தமாகச் செய்யக்கூடாது. அதே நேரத்தில் அறிவு விளக்கத்தில் உலகத்தாரோடு இந்தியாவும் போட்டியிட வேண்டுமேயானால் இரண்டாந்தர மொழி ஒன்றை, அதுவும் இப்பொழுதுதான் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற ஒரு மொழியை வைத்துக்கொண்டு ஒன்றுஞ் செய்ய முடியாது என்பதை மறந்துவிடக் கூடாது".

(ஐ) பிராந்திய மொழியாகவும் இந்திய ஆட்சி மொழியாகவும் ஏற்பட இருக்கும் ஹிந்தி மொழியின் ஜெக்கில்—ஹைடு இயல்பினால் நாட்டில் மொழிக் குழப்பம் ஏற்படுதல்.

ஹிந்தி பேசும் ராஜ்யங்களில், அரசியல் தலைவர்களும் ஏனைய தலைவர்களும் இவ்வளவு ஆவேசத்துடன் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தியைப் புகுத்தியதில் அகில இந்திய தேசீயப்பற்று ஒன்றும் இல்லை. ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலுள்ளவர்களா ஹிந்தியைப்பற்றி எவ்வித ஆர்வமும் இன்மையினால் ஹிந்திப் பேச்சாளர்கள் தங்களுடைய மொழியை இந்திய யூனியன் மொழியாக ஆக்குவதில் தங்களுடைய லாபத்தையே கருதிச் செய்கிறார்கள் என்று நினைத்தால் அதில் தவறு ஒன்றும் இல்லை. இதைப்பற்றி அவர்கள் நன்கு புரிந்துகொள்ளாமல் இருக்கலாம் என்றாலும் இதைத் திருப்பி திருப்பி அவர்களிடம் சொல்ல வேண்டியதில்லை. அவ்வாறு சொன்னால் அவர்கள் அதனை மறுப்பது இயல்பானதே. ஆனால் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தியைக் கொண்டுவருவதனால் இந்தியாவின் ஒற்றுமையை வளர்ப்பதாக அவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. நிச்சயமாக நமக்கு லாபகரமான ஒன்றை ஓர் உயர்ந்த குறிக்கோளோடும் சேர்த்துச் சொல்லக்கூடுமேயானால் நம்முடைய மனச்சாட்சியைத் திருப்தி செய்துகொள்ள அது சௌகரியமாகும். உடனடியாகவும் நீண்ட காலத்திலும் தங்களுக்குக் கிடைக்கின்ற சௌகரியங்களைக் கருதி ஹிந்தி பேசும் மக்கள் ஹிந்தியை ஏற்றுக்கொள்ள முன்வருகிறார்கள். ஆனால் அவர்கள் காட்டும் அதே ஆர்வத்தை ஹிந்தி மொழி பேசாத மக்கள் காட்டவில்லை என்பதற்காக ஹிந்தி பேசுவோர் ஆத்திரப்படுவது தங்களுடைய நாட்டிலுள்ள சகோதரர்களில் பெரும்பாலானவர்களுடைய மனக் கருத்தை அறிந்துகொள்ள விரும்பாத, அறிந்துகொள்ள முடியாத ஹிந்தி பேசும் மக்களின் மனநிலையை எடுத்துக்காட்டும் வருந்தத் தகுந்த சூழ்நிலையாகும். என்றாலும் ஹிந்தி பேசாத மக்களிடம்கூட ஹிந்தியை ஆதரிக்கும் சிலர் உண்டு என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். இவர்கள் ஆங்கிலத்தைப் பிடிக்காதவர்கள். ஆனால் அவர்களும்கூட அவர்கள் ராஜ்யக் கல்வி, பொது ஆட்சித்துறை ஆகியவற்றில் அவர்களுடைய தாய் மொழிக்கு முதல் இடம் தருபவர்களே.

ஹிந்தி பேசும் மக்கள் இந்தியாவின் முன்னர் சொல்லுகின்ற உதாரணம் வியக்கத் தகுந்த தொன்று. "எந்த மொழிக்கும் முன்னர் நம்முடைய சொந்த மொழி" என்பதே அவர்கள் கோஷம். ஹிந்தி பேசுவர்கள் கிளப்பிவிட்ட இந்தக் கோஷத்தின் அடிப்படையில் இதை அப்படியே பின்பற்றி ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களிலுள்ளவர்கள் தங்களுடைய மொழிக்கு முதலிடம் வேண்டும் என்று கேட்பார்களேயானால் ஹிந்தி மொழி ஆதரவாளர்கள் இது பற்றி வருந்தவோ, கோபிக்கவோ கூடாது. ஏனென்றால் அவர்கள் வகுத்த வழியிலேயே ஏனையோர் செல்கின்றனர். ஹிந்தி ராஜ்யங்களில் அவர்களுடைய தாய் மொழியில் அனைத்தையும் செய்யத் தொடங்கியதன் தர்க்க முறை முடிவை எல்லா ஹிந்திப் பேசாத ராஜ்யங்களும் கையாளத் தொடங்கினால் அதில் தவறுகூற ஒன்றுமில்லை. ஹிந்தி பேசும் ராஜ்யங்களில், பொதுமக்களை, அதாவது நம்முடைய புதிய எஜமானர்களை, அவர்கள் தாய் மொழியின் மூலமே நாம் சந்திக்க வேண்டும் என்ற வாதம் தொடங்கப்பட்டது. இதே வாதத்தை யொட்டி ஏனைய மொழிகள் வழங்கும் ராஜ்யங்களில் ஆட்சி மொழியாகவும் பொது மக்களோடு தொடர்புகொள்ளும் மொழியாகவும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பிராந்திய மொழிகளைப் பயன்படுத்தினால் அதில் தவறு கூற ஒன்று மில்லை. இதர ராஜ்யக்காரர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் ஒன்று (ஹிந்தி) வளர்ச்சியடையாத மொழி. மற்றொன்று (ஆங்கிலம்) எல்லா நவீன அறிவையும் வழங்கக்கூடிய வழியாக உள்ளது. ஹிந்தி இந்திய மொழியாக இருத்தலின் அதனை ஏற்றுக்கொண்டு ஆங்கிலம் பிற நாட்டு

மொழியாக இருத்தலின் அதனை ஒழித்துவிட வேண்டும் என்று சொல்லும் வாதத்திற்கு அவர்கள் அசைந்து கொடுப்பதில்லை. ஹிந்தி ராஜ்யங்களில் பிடாப்பிடியாக ஹிந்தியை உபயோகப்படுத்துவதனால் இந்தியா பல்வேறு சுதந்திரமுள்ள மொழிவாரி ராஜ்யங்களாகத் துண்டாடப்படும். இந்த நிலையில் நம்முடைய பொது வாழ்விலிருந்து ஆங்கிலத்தை நீக்கினால், அரசியல் அமைப்பையும் அதில் சொல்லப்பட்ட பத்து, பதினைந்து அல்லது இருபது ஆண்டுகளில் கல்வி முறையை மாற்றினால் பல்வேறு மொழிகளிலிருந்தும் இன்று இந்தியாவில் நிலைப்பெற்றுள்ள ஒற்றுமை, அடிப்படையில் ஆட்டங் கண்டு அழிந்துவிடும்.

இன்றைய குழப்பமான நிலையைக் கவனிக்கும்பொழுது, இந்தியப் பிராந்திய மொழிகள், ஹிந்தி, ஆங்கிலம் என்பவற்றினிடையே எத்தகைய உறவு ஏற்படும் என்பதை உறுதியாக இப்பொழுது சொல்ல முடியாது. ஒரு காலத்தில் ஹிந்தி மொழி விஞ்ஞானத்தையும் ஏனைய கருத்துக்களையும் வெளியிடும் சிறந்த கருவி மொழியாக ஆகி, அகில இந்தியாவிலும் விருப்பத்தோடு செலுத்தப்படும் மரியாதையைப் பெறலாம்; அப்பொழுது ஆங்கிலத்தைத் நீக்கக்கூடிய சக்தி அதற்கு ஏற்படலாம். இத்தகைய ஒரு முடிவை முழு மனத்தோடு விரும்புகிறோம். இவ்வாறு இல்லாமல் ஆங்கிலமும் ஹிந்தியும் அதன் அதன் துறையில் வளரலாம்; அதுவுமன்றி உயர்தர ஆட்சித் துறையிலும், கல்வித் துறையிலும், நடைமுறைக்கு பொருத்தமானது என்று கருதி ஆங்கிலத்தையே வைத்துக் கொள்ளும் நிலையும் ஏற்படலாம். இது எவ்வாறு இருப்பினும் இன்றைய நிலையில் நம்முடைய கொள்கையாக மேற்கொள்ள வேண்டியது, மெல்ல ஆனால் நிச்சயமாக ஏற்படும் கூர்தல் முறையே தவிர, நிச்சயமற்று ஆனால் விரைவாக நடைபெறும் புரட்சி முறையன்று. குறைந்த எதிர்ப்புள்ள வழியைப் பின்பற்றி ஆங்கிலத்தையே தொடர்ந்து நடத்தி வரலாம். ஹிந்தி பிராந்திய மொழியாக இருந்து அதனுடைய எல்லைக்குள் மட்டும் பயனுடையதாக இருந்து, அகில இந்திய ஆட்சி மொழியாகும்பொழுது பிரத்யேகமான மதிப்பைப் பெறுவதானால், ஹிந்தியும் இந்த இரட்டை நிலைகளில் நிச்சயமாக மொழிச் சண்டையை உண்டாக்கும் எனவே அதனைத் தவிர்க்க வேண்டும். நம்முடைய மொழிகளை எல்லாம் வளர்த்துக் கொண்டு அகில இந்தியாவிலும் விருப்ப முறையில் ஹிந்தியை வளர்ப்போமாக.

(ஒ) சட்டத் துறையிலும் நீதித் துறையிலும் ஆங்கிலமும் ஹிந்தியும்.

சட்ட, நீதித் துறைகளில் அது பற்றிப் பேச தகுதியுள்ளவர்கள் ஆழ்ந்த யோசனையின் பிறகு உடனடியாக ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி எடுத்துக் கொள்ள முடியாது என்று கூறியுள்ளார்கள். உண்மையைக் கூறுமிடத்து இன்னும் மிகமிக நீண்ட காலத்திற்கு இது நடைபெற முடியாது. முதலாவது முறையான தொழில் நுட்பக் கலைச்சொல் ஆக்கப்பட வேண்டும். பல தலைமுறைகளாகப் பயன்படுத்தியதனால் ஆங்கிலம் பெற்றுள்ள இதனை, அதாவது ஒரு குறிப்பிட்ட கலைச் சொல்லுக்குள்ள வரையறுத்த பொருளை, பொழுது விடிவதற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஹிந்தி வார்த்தையினுள் நுழைத்துவிட முடியாது. இத்துறையில் காலவரையறை செய்ய யாருமே துணியவில்லை. மேலும் அனைவருமே சட்டங்கள் அனைத்தும் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுச் சட்ட இதழ்கள் ஹிந்தியில் வெளியிடப்படும் காலம் வரை ஆங்கிலத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றே கூறியுள்ளார்கள். இதன் பயன் என்ன ஆகும் என்று ஒருவரும் சொல்ல முடியாவிட்டாலும் இதனை முயன்று பார்ப்பது நலம் என்றே அனைவரும் ஒப்புக் கொள்வர். ஆனால் இதைத் தொடங்கும் பொழுது ஹிந்தி ராஜ்யங்களில் மட்டுமல்லாது மற்ற ராஜ்யங்களிலும் தொடங்க வேண்டும். ஹிந்திமொழி பேசாத ராஜ்யங்களில் சட்டங்களைப் " பொதுமக்கள் அறியச் செய்வதற்கு " அவற்றைப் பிராந்திய மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டும். பெரும்பாலாக மிக உயர்நீதி மன்றத்திலும், உயர்நீதி மன்ற நிலையிலும் ஹிந்தி

மொழி (ஏனையப் பிராந்திய மொழிகளோடு) தகுதி பெற்று மொழி மாற்றம் செய்யத் தயாராகின்றவரை ஆங்கிலமே இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆங்கிலத்தின் இன்றைய நிலை மிகவும் எளிதாக உள்ளது; மேலும் அது அமைதியாக வேலை செய்து வருகிறது. தரையில் நடந்து செல்பவன் காலில் புழுதி படியாமல் இருக்க வேண்டுமேயானால் அவன் காலைத் தோல் செருப்பால் மூடிக்கொள்வதுதான் வசதியுடையதே தவிர பூமி முழுவதையும் தோலால் மூடிவிடுவது சாத்தியமன்று. சட்டம் முதலிய தொழில் துறைகளில் பிரத்யேகமான கல்வி பெற வேண்டியவர்கட்கு ஆங்கிலம் கற்றுக் கொடுப்பதுதான் வசதியே தவிர, ஆங்கிலத்திலுள்ள சட்ட இலக்கியங்கள் அனைத்தையும் ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்ப்பது பொருத்த மாகாது. நம்முடைய சட்ட முறையும் சட்ட ஞானமும் ஆங்கிலத்தோடு தொடர் பில்லாமல் வளர்ந்திருக்குமேயானால் அது வேறு விஷயம். நம்முடைய சட்ட அமைப்பில் இன்னும் பல காலத்திற்கு ஆங்கிலமே கடைகாலகவும் அடிப்படையாகவும் இருந்து தீரும். பயனற்றதும் வீணாகப் போகக்கூடியதுமான ஒரு காரியத்திற்குக் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்க வேண்டும் என்று சொல்லும்பொழுது நமக்கு அச்சம் உண்டாகின்றது. இன்று நாட்டிலுள்ள பொருளாதார நிலையைச் சிந்தித்துத்தயாராக இல்லாமல் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு மொழிக்குத் தேவையற்றதும் நேர்மையற்றதுமான இந்த முக்கியத்துவத்தைக் கொடுக்கவேண்டாம்.

ஆனால் ஜாக்கிரதையான முறையில் ஒரு தொடக்கத்தை இப்பொழுது செய்யலாம். அதாவது இனிச் செய்யப்படுகின்ற சட்டங்களையும் சட்ட மூலங்களையும் (வரையறை கருதி ஆங்கிலத்தில் அவை தயாரிக்கப்பட்டாலும்) ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கலாம்.

> " சுண்டெலிகளும் மனிதர்களும் செய்கின்ற சிறந்த திட்டங்கள்
> அடிக்கடி ஒரே கூட்டாக அழிந்துவிடுகின்றன ".

அரசாங்கத்தின் அதிகார எல்லைக்கு அப்பாற்பட்டுள்ள விஷயங்களைத் தேவையும் இன்றியமையாமையும் எங்ஙனம் உருவாக்குகின்றனவோ அங்ஙனமே விட்டுவிடுவது அறிவுடைமையாகும். இதன் எதிராக, உணர்ச்சி வேகம் மிகுதிப்பட்டிருக்கின்ற நிலையில், இன்னும் தங்களைத் தயாரித்துக் கொள்ளாத ஒரு மக்களை, மறைந்து கிடக்கும் குறுகிய நோக்கத்தோடும் இனப்பற்றோடும் இருக்கும் ஒரு மக்களை, அரசாங்கம் தூண்டித் தொழிற்படுத்துவது தொல்லை விளைக்காதா என்று அஞ்சுகிறேன். மொழி மாற்றம் செய்வதற்குத் தேவையான அடிப்படை மன நிலையையும் ஆன்ம அடிப்படையையும் கொண்டு பார்க்கும்பொழுது 5, 10, 15 அல்லது 20 ஆண்டுகளில் இதனைப் படிப்படியாகச் செய்ய வேண்டும் என்றெல்லாம் படிகள் வகுப்பதும் இதனை விரைவாகச் செய்ய வேண்டும் என்று சொல்வதும் பொருளற்ற ஒன்றுகவே காணப்படுகிறது.

(ஓ) பொது ஆட்சி முறையும் தொழில், வாணிகமும்.

பொது ஆட்சித் துறையில், கணக்கு, தணிக்கை போன்ற உயிர்நாடியான பணிகளிலுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், சில ஹிந்தி பேசும் அதிகாரிகள் உள்பட, இம்மொழி மாற்றத்தைப் பற்றித் தங்கள் ஐயத்தை வெளியிட்டதோடு இது பற்றி அவர்கள் மகிழ்ச்சி அடையவுமில்லை. ஹிந்தி அல்லாத பிற மொழி பேசும் அதிகாரிகள் அழுத்திக் கேட்கப்பட்டாலொழியத் தங்கள் கருத்தைத் தெரிவிக்க விரும்பவில்லை. மத்திய அரசாங்கத்தில் ஹிந்தியை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற இந்த ஏற்பாடு ஹிந்தி மொழியல்லாத பிற மொழி பேசும் தலைமை அதிகாரிகள் பலருடைய மனத்திலும் ஓரளவு அச்சத்தை உண்டாக்கியிருக்கிறதென்பதில்

எவ்வித ஐயமுமில்லை. அவர்கள் மனத்தில் உண்டான எண்ணங்களை வெளியிட விரும்பவில்லை என்பது நியாயமானதே. ஹிந்தி மொழியை நிலை நிறுத்தும் பொழுது ஏற்படுகின்ற இடையூறுகளைப் போக்குவதற்குரிய வழி துறைகளை இந்த அறிக்கை கோரியுள்ளது. தரக் குறைவு ஏற்படுவதையும், ஆட்சித்துறையில் பிற்போக்கு ஏற்படுவதையும், பெரும் பொருள் வீணுவதையும் கருதினுல் இந்த விஷயத்தில் ஒன்றுக்கு இரண்டு முறையாக சிந்திக்க வேண்டும், என்று தோன்றுகிறது.

தொழில், வாணிகத் துறைகளில் தேசீயப் பகுதிகளும், தனியார் பகுதிகளும் இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் பக்கம் பக்கமாக இருந்து தொழிற்படும். வெளிநாட்டிலிருந்து இத்துறைகளில் பங்கு கொள்பவர்கள் அரசாங்க அமைப்புக்களோடும், தனியார்கள் அமைப்புக்களோடும் ஒத்துழைப்பார்கள். ஆதலால் ஆங்கிலத்தை வைத்துக்கொள்வது மிகவும் இன்றியமையாததாகிறது. நாட்டிலுள்ள பல்வேறு வாணிக மன்றங்களும், ஆங்கிலத்தையே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் தேவைப்படும் பொழுது அதனுடன் சேர்த்து ஹிந்தியையும் வைத்துக் கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறியுள்ளன.

(ஔ) அகில இந்தியப் பணிப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழி—ஆங்கிலம், ஹிந்தி, பிராந்திய மொழிகள்.

முடிவாக அகில இந்தியப் பணிப் பரீட்சைகளுக்கும், ஏனைய பணிப் பரீட்சைகளுக்கும் ஹிந்தி ஒரே மொழியே இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது ஹிந்தி மொழி பேசுபவர்களும், அதனைப் பயன் படுத்துபவர்களும் ஏனைய மொழி பேசுபவர்களைக் காட்டிலும் அதிகப்படியான ஒரு சலுகையைப் பெறுவார்கள். அதன்படி ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள பொதுப் பணிப் பரீட்சைகளுக்கு அமர்ந்து ஹிந்தியில் அப்பரீட்சைகளை எழுதும் சட்ட பூர்வமான உரிமைகளைப் பெறுவார்கள். எந்த அளவு வரையில் ஹிந்தி மொழி பேசாதவர்கள் ஹிந்தியைத் தம்முடைய சொந்த மொழியாக ஆக்கிக் கொள்ளவில்லையோ அந்த அளவு வரையில் ஹிந்தி பேசுவபர்களின் எதிரே அவர்கட்குப் பெரும் குறைபாடு இருந்துக்கொண்டு தான் இருக்கும். இந்தச் சிபார்சை மத்திய அரசாங்கம் நிறைவேற்றினுல் அதன் விளைவு என்ன ஆகும் என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பஞ்சாபிலிருந்து பீஹார் வரையிலும், ஹிமாலய்ப் பிராந்தியங்களிலிருந்து தக்காணம் வரையிலும் உள்ள ஹிந்தி பேசுபவர்கள் மேற்கு வங்காளத்திலும், அஸ்ஸாமிலும், ஒரிஸாவிலும், ஆந்திரா, சென்னை, கேரளம், கர்நாடகம், மகாராஷ்ரம், குஜரத் ஆகிய இடங்களிலும் நடைபெறும் ராஜ்யப் பொதுப் பணிப் பரீட்சைகளில் அமர்வதற்கு உரிமை பெறுவார்கள். இம் முறையில் அகில இந்தியாவும் அவர்களுக்குச் சொந்தமான பகுதியாக ஆகிவிடும். ஏனைய மொழி பேசுவோர், எவ்வித உதவியுமின்றி இதனைப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறென்றும் செய்ய முடியாது. ஏனைய ராஜ்யங்களில் நடைபெறும் ராஜ்யப் பொதுப் பணிப் பரீட்சைகளில் இவர்களும் உட்காரலாம் என்ற சட்டபூர்வமான அதிகாரம் அர்த்தமற்ற ஒன்று. ஏனென்றல் தாய் மொழியையும், ஆங்கிலத்தையும் காற்றில் பறக்க விட்டு வேண்டுமான அளவு ஹிந்தியைக் கற்றுக் கொள்ளும் பொழுதுதான் இது நடைபெறக் கூடிய காரியம். ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் இதனைச் செய்வதால் உடனடியாகத் தோன்றும் விளைவுகள் நாட்டின் ஒற்றுமையை குலைத்துவிடும். அதாவது, தற்காப்புக் காரணமாக, வேறு ராஜ்யங்களிலிருந்து வருகின்ற இந்தியப் பிரஜைகள் இந்த ராஜ்யத்தின் பொதுப் பணிப் பரீட்சைகளில் உட்காரக் கூடாதென்று மொழியினடிப்படையிலும், குடியேற்ற அடிப்படையிலும் செய்யப்பட்டுவிடும். ஹிந்தி பேசும் ராஜ்யங்கள் உட்படச் சில ராஜ்யங்களில் இப்பொழுதேகூட இது அமலில் இருந்து வருகிறது. இங்ஙனம் ஒருவர்க்கொருவர் தனித்தன்மை பாராட்டுவதும், சகிப்புத் தன்மை அற்றுப் போவதும் முன் யோசனை யில்லாமல் ஹிந்தியைத் திணிக்க விரும்புவதால் ஏற்படுகின்ற பலன்களாகும். **இந்திய ஒற்றுமைக்கு இது ஒரு பெரும் தீங்காகும்.**

ஹிந்தியை அல்லாத ஏனைய மொழிகளைத் தாய் மொழிகளாக உடைய எல்லா இந்தியர்கட்கும், இழைக்கப்படும் பெருத்த அநீதியாகும். அகில இந்திய சிவில் பணிகளுக்கும், மற்றப் பரீட்சைகளுக்கும் யூனியனிலுள்ள பதினாலு மொழிகளையும் பயன் படுத்தினால் உயர்தர அதிகார வர்க்கத்தின் மூலம் பெறப்படும் இந்திய ஒற்றுமை அழிந்து போகும். ஏனென்றால் இப்பரீட்சைகளில் எவ்விதமான தரக் கணிப்பும் செய்வது இயலாது போய் விடும். அதேபோல ஒவ்வொரு மொழிப் பிராந்தியத்திற்கும் பங்கீட்டு முறை வகுப்பதும், மட்டமாகிவிடும். ஹிந்தி பேசாத மாணவர்கள் மொழி வன்மை யின்மையைச் சரிப்படுத்துவதறுற்காக ஹிந்தி பரீட்சா மொழியாக வரும்பொழுது ஓரளவு மார்க்குகளைத் தர்ம மார்க்காகக் கொடுத்துவிடலாம் என்றால் இம்முறை கேலிக் கூத்தான ஒன்றாகும்.

ஆட்சித் துறை வன்மையும், இந்திய ஒற்றுமையும் ஹிந்தியின் முன்னர் இங்ஙனம் பலியிடப்படக்கூடாது. இத்தனையும் மீறி, ஹிந்தி பேசுபவர்கட்காக, அகில இந்தியப் போட்டிப் பரீட்சைகளில் இடைநிலையாக இருக்கும் உரிமை ஹிந்திக்கு வழங்கப்பட்டால், பிற மொழி பேசுவோர் இவ்வுரிமையை விரும்பினால் மறுப்பது கடினமாகிவிடும். சில காலத்திற்கு முன்பு இம்முறையை ஆதரித்துக் காங்கிரஸ் செய்த தீர்மானத்தின்படி பிற மொழியாளர் இதனைக் கேட்கலாம். இம்முறை இந்திய ஆட்சித் துறை ஒற்றுமையை அடியோடு அழித்துவிடும்.

என்னைப் பொறுத்தவரை இன்னும் பலப்பல ஆண்டுகளுக்கு அகில இந்தியப் பணிப் பரீட்சைகளுக்கு ஆங்கிலம் ஒன்று மட்டுமே இருக்க வேண்டுமென்றும், ஹிந்தி உள்பட யூனியனிலுள்ள வேறு எந்த மொழியும் இருக்கப்படாது என்றும் நினைக்கிறேன். ஹிந்தி மொழி பேசாத மாணவர்கட்குக் கட்டாய ஹிந்தி வினாத்தாள் ஒன்றிருக்க வேண்டும். அதை ஈடு செய்கின்ற முறையில் அரசியல் அமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்ட மொழிகளுள் ஏதாவது ஒரு மொழியில் (உருது நீங்கலாக) ஒரு கட்டாய வினாத்தாள் ஹிந்தி பேசும் மாணவர்கட்கு இருத்தல் வேண்டும். எந்தப் பல்கலைக் கழகங்கள் ஆங்கில போதனையைக் குறைத்துக் கொண்டு ஹிந்தி, குஜராத்தி, ஒரியா, தெலுங்கு போன்ற பிராந்திய மொழிகளில் போதனை செய்கின்றனவோ அந்தப் பல்கலைக் கழகங்கள் தங்கள் மாணவர்கள் அகில இந்தியப் போட்டிப் பரீட்சைக்கு செல்லத்தகுதி பெறும்படி ஆங்கிலத்தைப் போதிக்கப் பிரத்தியேகமான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பணிகளின் மூலம் இந்தியாவின் ஒற்றுமையைக்காக்க இது ஒரே ஒரு வழிதான் உண்டு.

இந்த அறிக்கையில் எதிர்பார்க்கின்றபடி ஹிந்தி மொழியை நிறுவி விட்டால் ஹிந்தி மொழி பேசுபவர்கள்—(1) அவர்களுடைய முழுக் கல்வியையும், அகில இந்தியப் பணிப் பரீட்சைகளையும் அவர்கள் தாய் மொழியிலேயே பெற முடியும், (2) இவ்வறிக்கையின் கருத்துப்படி இந்த வசதிக்கு எதிராக ஈடுசெய்யும்படி அவர்கள் வேறு எந்த இந்திய மொழியையும் கற்றுக் கொள்ளத் தேவையில்லை. பிற மொழி பேசுவோர் எவ்வித அறிவு மதிப்பும் பயனுமில்லாத இந்த ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டிய பாரத்தைப் பெறுவார்கள். இந்த நேரத்தை ஹிந்தி மொழி பேசுவோர் பிறிதொரு பாடத்தையோ, பாடங்களையோ கற்றுக் கொள்ளப் பயன்படுத்தி அதனால், அறிவு, பண்பாட்டுத் துறைகளில் பிற மொழி பேசுவோரைக் காட்டிலும் அதிக வசதியைப் பெறுவார்கள். பிற இந்திய மொழிகளைப் படிப்பதற்குப் பதிலாக வடமொழியையோ அன்றி ஓர் ஐரோப்பிய மொழியையோ ஹிந்தி மொழி பேசுவோர் படிக்கும்படியாகக் கட்டாயப்படுத்தப்படலாம் என்று இந்த அறிக்கை மிகப் பெருந்தன்மையோடு கூறுகிறது. அவர்கள் விரும்பினால் இந்த மொழிக்குப் பதிலாக பண்பாட்டுப் பாடமொன்றை எடுத்துக் கொள்ளலாம் என்றும், அதன் மூலம் பிற மொழி மாணவர்கள் எழுதும் கட்டாய ஹிந்தி வினாத்தாளை ஈடுசெய்யலாம் என்றும் சொல்லப்படுகிறது. மிக அழகான யோசனைதான் இது. இதன்படி ஹிந்தி மொழி பேசுபவர்கள் ஒரு பண்பாட்டுப் பாடத்தில்

அறிவுத் துறையில் பிற மொழியாளர்களைவிட முன்னேற்றம் அடைந்து
விடுவர். ஏற்கெனவே ஒரு அனாவசியமான பாரத்தைத் தாங்கும் பிற
மொழி பேசுவோர் இந்த நஷ்டத்தையும் தாங்க வேண்டும். இவர்கள்
இருவரையும் ஒப்பிட்டால் வேறுபாடு மிகுதியாக இருக்கும் : (1) பரீட்சையின்
இடைநிலை மொழி ஹிந்தியாக இருக்குமாதலால் பிற மொழியாளர் அனைத்
தையும் ஹிந்தியின் மூலம் படித்து ஹிந்தியின் மூலமே பரீட்சை எழுத
வேண்டும். இது நிலையான குறைபாட்டை அவர்கட்கு உண்டாக்கும். (2)
அறிவுத் துறையில் எவ்விதப் பயனுமில்லாத ஹிந்தி மொழியைக் கற்ப
தற்காக வேறு ஒரு பயனுள்ள பாடத்தைப் படிக்காமலும், ஹிந்தி மொழி
யாளர்களைப் போல ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளைக் கற்க
முடியாமலும் இவர்கள் அவதிப்படுவர். இத்தகைய ஒரு சூழ்நிலையைப்
பிற மொழியாளர் வாயை மூடிக்கொண்டு ஏற்றுக்கொள்ள முடியாது.

அறிவுத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் எத்தகைய பிரத்தி
யேகமான சிறப்பையும் பெற முடியாத ஒரு பிராந்திய மொழி, அதிகப்
படியான மக்களால் பேசவும், புரிந்து கொள்ளவும் படுகிறது என்ற ஒரே
காரணத்தால் கூட்டமைப்பின் மொழியாக ஏதேச்சையாக வைக்கப்படுகிறது.
அன்றியும் அந்த மொழியைப் பண்பாட்டு மொழியாகவும், அதிகார
மொழியாகவும் உயர்த்துவதற்குரிய முயற்சிகளும் நடைபெறுமலில்லை.
இந்த இரண்டு நிலைகளுக்கும் அதனைத் தயாரிப்பதற்காக யூனியன் அர
சாங்கம் முழுப் பணத்தையும் தரச் சித்தமாக இருக்கிறது. உங்களையும்,
உங்கள் மொழியையும், பண்பாட்டையும், உங்கள் உலகியல் வசதிகளையும
என்றைக்குமே மற்றொரு மொழியின் அடிமையாகவும், அந்த மொழி பேசு
வோரின் அடிமையாகவும் வைத்துப் பராமரிப்பதற்கு நீங்கள் வரி கட்ட
வேண்டும். இப்படித்தான் பிறமொழி பேசும் மக்களின் சிந்தனை செல்லும்.
ஆங்கிலத்திற்கோ அன்றித் தாய்மொழிக்கோ அன்றிப் பிராந்திய மொழிக்கோ
எதிர்மொழியாக, ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் ஹிந்தியை ஏற்றுக்கொள்வது
என்பது முடியாத காரியம். இன்றுமட்டும் அல்ல ! மிக நீண்ட எதிர்
காலத்திலும் கூட இது இயலாத காரியம். இந்த ஒரு கருத்தைத் துர
திர்ஷ்டவசமாக இந்த அறிக்கை கவனிக்கவே இல்லை. உடனடியாகவோ
எதிர்காலத்திலோ ஒரே தேசிய மொழியாக ஹிந்தி ஆக முடியாவிட்டாலும
அதனை ஏனைய மொழிகளை விட உயர்ந்த மொழியாக ஆக்கி விடுவதில்
இந்த அறிக்கை திருப்தி அடைந்துவிடுகிறது.

(க) மத்திய சட்ட சபையின் மொழி—பிறமொழி பேசுவோரின் தொல்லைகளும் வசதி இன்மையும்.

சான்று பகர்ந்தவர்களில் ஹிந்தி மொழி பேசுவோர் அனைவரும், இன்
னும் சிலரும் கூட மிகத் தீவிரமான முறையில் மத்தியப் பாராளு மன்றத்
தில் ஹிந்தி மொழியே இருக்க வேண்டுமென்று கூறியுள்ளார்கள். அவர்
களே மிக்கப் பெருந்தன்மையுடன் பல்வேறு ராஜ்யச் சட்ட சபைகளிலும்,
கூடுமான அளவிற்கு பிராந்திய மொழிகளைப் பயன் படுத்தலாம் என்றும்
விட்டுக் கொடுத்துள்ளார்கள். பிராந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும்
கூட மத்திய சட்ட மன்றத்தில் பேச்சுக்கள் நிகழ இடமுண்டு. ஆங்கிலம்
நீக்கப்பட்ட பிறகு மன்றத் தலைவரின் ஆணையின் வண்ணம் இது நிகழ
லாம். மிக்கப் பொருள் செலவில் பதினாலு மொழியிலும் மொழி
பெயர்க்கும் வாய்ப்பை அளித்தால் ஒழிய இம்முறை பயனற்ற குழப்பத்தை
விளைவித்து ஒவ்வொரு படியிலும் பாராளு மன்ற வேலையைத் தடை
செய்யும். இத்தனை மொழிகள் இருக்கும்பொழுது அந்த மொழி
பெயர்ப்பு வேலைகூட நடைமுறைக்கு ஒத்து வருவதன்று. இவ்வாறு
செய்வதானால் இந்தியப் பாராளு மன்றமும், ராஜ்ய சபையும் பல மொழி
களையுடைய யூ.என்.ஓ. போலவே தொழிற்பட வேண்டி நேரிடும். பிற
மொழியாளர்கள் வேண்டுமான அளவு ஹிந்திப் பயிற்சி பெற்றால் ஒழியப்
பாராளுமன்றத்தில் ஹிந்தியில் நடைபெறும் விவாதங்களைப் புரிந்துகொள்ள
முடியாது ; பங்கு கொள்ளவும் முடியாது. மக்களின் பிரதிநிதிகள்

அடங்கிய ஒரு சபையில் பெரும்பாலான பிரதிநிதிகள் புரிந்து கொள்ளாத ஒரு மொழியில் தேசத்தின் காரியங்களை நடத்துவது முற்றிலும் தேச விரோதமானதென்றே சொல்ல வேண்டும். மத்திய சட்ட அமைப்புக்களில் உள்ள அங்கத்தினர்களில் 80 சத விகிதம் தாங்களாகவே ஹிந்தியில் பேச விரும்பினுல் ஒழியப் பாராளு மன்றத்தில் ஹிந்தியை மட்டும் பயன் படுத்த வேண்டுமென்று சொல்வது தற்கொலையாகும்.

ஆங்கிலம் தெரிந்த ஹிந்தி மொழியாளர்கள் வேண்டுமென்றே ஹிந்தியில் பேசிப் பிற மொழியாளர்கள் என்ன நடைபெறுகிறது என்பதை அறிந்துகொள்ள முடியாமல் செய்கிருர்கள். இதிலிருந்தே வருங்காலத்தில் தங்களுடைய நிலை எவ்வளவு தாழ்வு அடைந்து விடும் என்பதைப் பிற மொழியாளர்கள் ஓயாது நினைக்கும்படியே, இக்காரியங்கள் செய்யப்படுகின்றன. ஹிந்தியில் நடைபெறும் பேச்சுக்களை புரிந்து கொள்ள முடியவில்லை என்று அங்கத்தினர்கள் கேட்கும் பொழுது சில சமயங்களில் பாராளுமன்றத்திற்கு வருவதற்கு முன்னர் ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டியது அவர்களுடைய கடமை என்பதைச் சுட்டிக் காட்டுகிருர்கள். ஹிந்தியின் மூலம் இந்திய ஒற்றுமைக்யைக் கொண்டு வருவதற்கு இந்த மனப்பான்மை அவ்வளவு உகந்ததன்று. கவனக் குறைவால் சில சமயங்களிலும், வேண்டுமென்றே சில சமயங்களிலும் இக் காரியம் செய்யப்படுகின்றது. எவ்வாறு செய்தாலும் இவ்வாறு செய்வதன் பயன் ஒன்றுகவே இருக்கும்.

பிற மொழி பேசுவோரின் மனத்தில் தோன்றி இருக்கின்ற அச்சத்தைப் போக்க இறுதியாக ஹிந்தியை ஏற்றுக் கொள்ளும் பொழுது என்ன வழிகள் கையாளப்படும் என்பதைப் பற்றி இந்த அறிக்கை கவலைப்படவேயில்லை. இப்பொழுதே கூடப் பொது மாநாடுகளிலும் கூட்டங்களிலும் ஹிந்தி பேசுவோர் ஒரு வகையான, ஆட்சி செய்வோருக்குரிய இயல்பை மேற்கொள்கிருர்கள். தெற்கு அல்லது கிழக்குப் பிராந்தியங்களிலிருந்து செல்லுகின்ற ஒருவர் ஹிந்தியில் பேசப்படுவதை புரிந்து கொள்ள முடியவில்லை என்று கூறினுல் அவருக்குக் கிடைக்கின்ற விடை ஒரு தலையசைப்புத்தான். அந்த துர்திருஷ்டம் பிடித்த மனிதர் ஹிந்தி "தேசீய மொழியாக" வந்துவிட்டமையின் அதனைக் கற்றுக் கொள்ள வேண்டியது தம்முடைய கடமை எனபதை நினைவூட்டப்படுகிருர். இன்னும் கூட வட இந்தியாவுக்குப் பேச வருகின்றவர்கள் ஹிந்தியை அல்லாத பிற மொழியில் பேசும் பொழுது தடை செய்யப்படுகிருர்கள். எதிர் காலத்தை நன்கு அறிந்த தலைவரோ, அன்றிக் கூட்டத் தலைவரோ கருணை கூர்ந்து அவர்களைக் கண்டிக்கும் பொழுதுதான் ஹிந்தியல்லாத பிற மொழியில் பேசும் பேச்சை, அதுவும், போனுல் போகிறதென்று கேட்கும் நிலைமை இருந்துவருகிறது.

முன்னறிவும், நியாயமும், நடுவு நிலைமையும் உடைய அரசியல் வாதிகள் இவற்றை நன்கு கவனிக்க வேண்டும். எந்த வழியில் என்ன வோட்டம் சென்று கொண்டிருக்கிற தென்பதற்கு இத் தக்க அடையாளமாகும். தொடக்கத்திலிருந்தே நாம் கவனமாக இருத்தல் வேண்டும். சில சமயங்களில் கவனக் குறைவாலோ, அல்லது எதிர் காலத்தை அறியும் அறிவின்மையாலோ இது நடைபெற்று விட்டால், தொல்லையை உண்டாக்கிக், குறைந்த அளவு கருத்து வேற்றுமையாவது ஏற்படுத்திவிடுகிறது. ஹிந்தியில் சட்டக் கலைச் சொற்களை நல்ல நிலையில் ஆக்கக் கூடிய சூழ்நிலை, ராஜ்ய உயர்நீதி மன்றங்களும், மத்திய மிக உயர்நீதி மன்றமும் தங்களுடைய நடவடிக்கைகளை ஹிந்தியில் நடத்தும் பொழுது தான் முடியும். இதை ஒரு காரணமாகச் சொல்லி மாகாண உயர்நீதி மன்றங்களில் ஹிந்தியில் நடவடிக்கைகள் நடைபெற வேண்டும் என்று சொல்லப்பட்டது. அம்மாகாணங்களில் இன்னும் ஹிந்தி புரிந்துக் கொள்ளப்படவில்லை என்பதை இந்தத் திட்டத்தை வெளியிட்டவர்கள் கவனித்தாகவே தெரியவில்லை. மேலும் இத்திட்டத்தால் பிராந்திய மொழிகளின்

செலவில் ஹிந்தி மொழி வளர்ச்சியடையும் என்பதனைப் பிற மொழி பேசுவோர் மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வார்கள் என்றும் சொல்வதற்கில்லை.

(ங) இரண்டு படங்கள்—ஒற்றுமை, வேற்றுமை விவரம்.

இந்தியாவில் ஆட்சி மொழியாக நவீன இந்திய மொழிகளுள் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி, இரண்டு முற்றிலும் வேறு பட்ட ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்கள் இந்திய மக்கள் மனத்தில் இருந்து வருவது அறிந்ததே. ஒரு விஷயத்தைப் பொறுத்த மட்டில் இந்த இரண்டு கட்சியினிடையேயும் அடிப்படை ஒற்றுமை இருந்து வருகிறது. அதாவது தாய் மொழி அல்லது பிராந்திய மொழி இந்திய யூனியனில் உள்ள எல்லா ராஜ்யங்களிலும் முதன்மை இடம் பெற வேண்டும் என்பதாகும். இந்தக் கருத்துக்களைக் கீழ்க்கண்ட முறையில் எடுத்துக் காட்டலாம்.

ஹிந்தி பேசும் ராஜ்யங்கள்.	ஹிந்தியை அல்லாத பிற பிராந்திய மொழிகளைப் பேசும் ராஜ்யங்கள்.
1. ஹிந்தியைத் தாய் மொழியாகவாவது, பிராந்திய மொழியாகவாவது முடிந்த அளவுக்கு ராஜ்ய விவகாரங்களில் பயன் படுத்துதல். இதன் மூலம் உண்மையான ஜனநாயக அரசை நியமிக்கலாம்.	1. தமிழையோ, வங்காளியையோ ஒரிய மொழியையோ, குஜராத்தி மொழியையோ கூடுமான அளவு ராஜ்ய விவகாரங்களில் பயன் படுத்துதல். இதுவே உண்மையான ஜனநாயக அரசை உண்டாக்கும்.
2. ராஜ்யத்திலுள்ள மொழிச் சிறுபான்மையினரை எல்லாம், ஹிந்தி மொழி ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் வந்துவிட்டபடியால், ஹிந்தி கற்றுக் கொள்ளுமாறு செய்ய வேண்டும்.	2. ஆங்கிலமே ஆட்சி மொழியாகவும், உயர் கல்வி மொழியாகவும் இருத்தலினால் கொஞ்சம் விரிந்த மனப்பான்மை இருக்கிறது. இப்பொழுது ஹிந்தி ராஜ்யங்கள் காட்டிய முன் மாதிரியால் நிலைமை மாறுகிறது. சிறு பான்மையினர் பிராந்திய மொழியைக் கற்குமாறு கட்டாயப்படுத்தப் படலாம்.
3. ஹிந்தியைப் பயன் படுத்தும் ராஜ்யங்களிலிருந்தும், ஆங்கிலத்தை நீக்கிப் பிற மொழி ராஜ்யங்களிலிருந்தும் அதனை நீக்க வேண்டும். இதுவே மொழி ஒற்றுமையைக் கொண்டு வருமாதலால் பிற மொழி ராஜ்யங்கள் இதனை மகிழ்ச்சியோடும், நன்றியோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.	3. ஹிந்தியைப் போன்ற ஒரு பிராந்திய மொழியை அகில இந்திய மொழியாக ஆக்கி ஆங்கிலத்தின் இடத்தைத் தருதல் ஆபத்துகள் நிறைந்தது ஆதலால் அது நடைமுறைக்கு ஏற்றதன்று. பிற மொழியாளர்களைப் பொறுத்த மட்டில், ஹிந்தி மொழியில் அறிவு மதிப்போ, பண்பாட்டு மதிப்போ எதுவும் இல்லை.
4. பிற மொழி ராஜ்யங்களில் ஹிந்தி யூனியன் ஆட்சி மொழியாக வருவதனால், அவர்களுடைய தேவைகள் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது. அவர்கள் கவலைப்பட்டால் அவையனைத்தும் கற்பனையே. ஆங்கிலம் கற்பதைவிட விரைவாகவும், எளிதாகவும் ஹிந்தியைக் கற்றுக்கொள்ளலாம்.	4. கேள்வித் தாளிலும், சிபார்சுகளிலும் அகில இந்திய மொழியாக ஏற்றுக் கொள்ளக் கருதப்படுகின்ற ஹிந்தி இந்தியாவில் பிற மொழி வளர்ச்சியை மிகவும் பாதிக்கும். தென் பிராந்தியங்களைப் பொறுத்த மட்டில் ஹிந்தியில் பல வட மொழி வார்த்தைகள் இருந்துங்கூட அது பிற நாட்டு மொழியாகவே உள்ளது. இந்நிலை வங்காளத்தில் ஓரளவு மாறுதலடைந்து ஒரிஸா, அஸ்ஸாம், மகராஷ்ட்ரா என்ற இடங்களிலும் சிறிது மாறுதலையடையலாம். மக்கள் ஹிந்தியைக் கற்பதை விட ஆங்கிலம் கற்பதையே விரும்புவார்கள். ஏனென்றால் ஆங்கிலத்தின் மூலம் அவர்கட்கு கிடைக்கின்ற அறிவுச் செல்வத்தைக் கருதி.

ஹிந்தி பேசும் ராஜ்யங்கள்.	ஹிந்தியை அல்லாத பிற பிராந்திய மொழிகளைப் பேசும் ராஜ்யங்கள்.
	மேலும் ஹிந்தியைப் பயன் படுத்துவதால் ஹிந்தி மொழி பேசாதவர்கள் இந்தியக் குடியரசில் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கருதப்படுவர்; அதுவும் மொழி ஒன்றின் காரணமாகவே.
5. எல்லாப் பிற மொழியாளர்களுக்கும் கூடுமானால் ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தும், நிச்சயமாக இடைநிலைக் கல்வி நிலையிலிருந்தும் ஹிந்தியைக் கட்டாயமாகப் போதிக்கவேண்டும். ஆனால் ஹிந்தி பேசுவோர் வேறு எந்த இந்திய மொழியையும் கற்றுக்கொள்ளவேண்டியதில்லை. அவர்கள் "ஆட்சி மொழி" மக்கள் ஆதலின் இந்த அனாவசியமான பாரம் அவர்களுக்குத் தேவையில்லை. இந்தப் பாரம் இல்லாததனால் அதில் கிடைக்கின்ற காலத்தை அவர்கள் வடமொழி, ஆங்கிலம், ரஷ்யன் போன்ற பயனுள்ளவற்றைக் கற்கலாம்.	5. பிற மொறி ராஜ்யங்களில் ஹிந்தியைக் கற்பிப்பதானால் அது உயர்நிலைப் பள்ளி நிலையிலும், கல்லூரி நிலையிலும் விருப்ப பாடமாகவே அமைய வேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் அதனுடைய மக்களுக்கு எது நலம் பயக்கும் என்பதைக் காண வேண்டும். மேற்கு வங்காளப் பிரச்னையும் குஜரத்திற்கும், மகாராஷ்டிரத்திற்கும் மாறுபடும். அதேபோலச் சென்னைக்கும் கேரளத்திற்கும் ஆம். இடைநிலைப் பள்ளிக் காலங்களில் ஹிந்தியல்லாத பிற இந்திய மொழிகளைக் கற்க வேண்டாம் என்று சொல்வதனால் ஹிந்தி பேசுபவர்கள் ஹிந்தியல்லாத பிற இந்திய மொழிகளில் மேல் கொண்டுள்ள மதிப்பு வெளியாகிறது. "கொடுத்து வாங்க வேண்டும்" என்ற எண்ணம் இவர்களிடம் இல்லை என்பதை இது தெரிவிக்கிறது. இரண்டு பக்கங்களிலும் சரியான அளவுக்கு அனைத்தும் இருக்க வேண்டும். வடமொழி, ஆங்கிலம், ரஷ்யன் போன்றவற்றில் எதாவது ஒரு மொழி பிற மொழிப் பிராந்தியங்களில் இல்லாமற் போவதை ஹிந்தி மொழி ஈடு செய்துவிட முடியாது.
6. ஹிந்தியை யல்லாத பிராந்தியங்களிலுள்ளவர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை ஏற்றுக்கொண்டு அதனைச் சிறந்த மொழியாக வளர்ப்பதற்குக் காலம், பணம், சக்தி இவற்றை நிரம்பச் செலவழிக்க வேண்டும்.	6. ஹிந்தியை யல்லாத ராஜ்யங்கள் இதனால் ஒரு பயனும் விளையும் என்று கருதவில்லை. உண்மையில் அவர்கள் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியைக் கற்பது காலத்தையும், சக்தியையும் வீணடிப்பதாகும் என்று கருதுகிறார்கள்.
7. இந்திய வாழ்வின் ஒவ்வொரு பொதுத் துறையிலும் (பொருந்துமானால் சமுதாயத் துறையிலுங்கூட) ஹிந்தியை தலைமை பெற்ற மொழியாக ஆக்க வேண்டும்.	7. வடமொழிக்குப் பதிலாக, வடமொழி—ஹிந்தியை இந்திய ஒற்றுமையின் அடையாளமாக அழகை முன்னிட்டு அகில இந்தியச் சடங்குகளில் ஏற்றுக் கொள்ளலாம் என்றாலும் அது ஆங்கிலத்திலும், பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு வழங்கப்பட வேண்டும்.
8. அகில இந்திய எழுத்தாக எல்லா மொழிகளுக்கும் நாகரி எழுத்துக்களே வர வேண்டும். ரோமன் எழுத்துக்களை ஒதுக்கிவிட வேண்டும்.	8. இந்த விஷயத்தை. அவ்வளவு சுலபமாக ஒதுக்கிவிட முடியாது. அந்த அந்தப் பிராந்திய எழுத்துக்களை வைத்துக்கொள்வதற்கு வலுவான காரணங்கள் உண்டு. விருப்பமானால் அதிகப்படியான எழுத்துக்களாக நாகரி எழுத்துக்களை இந்த அறிக்கை சிபார்சு செய்வது போல எடுத்துக் கொள்ளலாம் என்றாலும் அது விருப்பமுள்ளவர்கள் செய்யவேண்டிய காரியம்.

ஹிந்தி பேசும் ராஜ்யங்கள்.	ஹிந்தியை அல்லாத பிற பிராந்திய மொழிகளைப் பேசும் ராஜ்யங்கள்.
	பிற மொழிப் பிராந்தியங்களில் உள்ளவர்கள் பலரும் ஹிந்திப் பிராந்தியங்களில் உள்ளவர்கள் சிலரும் சிக்கலான நாகரி எழுத்துக்களை விட எளிமையான ரோமன் எழுத்து வடிவங்களை இந்திய மொழிகளுக்கு ஏற்றுக்கொள்வதால் ரோமன் எழுத்துக்களுக்குள்ள நவீன வசதிகள் அனைத்தும் இந்திய மொழிகளுக்கும் கிடைக்கும் எனக் கருதுகின்றனர்.
9. இந்தியாவின் சொந்தப் பண்பாட்டுக்கு இயல்பாக உள்ள வாரிசு ஹிந்தி மொழியேயாகும். அதுவே அப்பண்பாட்டை எல்லாவிடங்களிலும் பரப்பும். எல்லா மொழிகளும் இந்த அகில இந்தியப் பண்பாட்டின் கீழே வந்துவிட ஹிந்தியாகிய கருவியே முக்கியமாகப் பயன்பட வேண்டும்.	9. ஹிந்தியையல்லாத மக்கள் இது பற்றி மிகவும் சந்தேகிக்கிறார்கள். இதை ஹிந்தி மனப்பான்மை, உருது மனப்பான்மை, இந்துஸ்தானி மனப்பான்மை என்று சொல்லலாம். இதே போல வங்காளி, ஒரியா, அஸ்ஸாமீஸ், மராத்தி, தமிழ், தெலுங்கு மன்ப்பான்மைகள் என்பவையும் உண்டு. இம்மனப்பான்மைகள் அந்த மொழியோடும் இலக்கியத்தோடும் தொடர்பு கொண்டு தனித் தன்மை வாய்ந்தவையாக உள்ளன. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து அகில இந்திய மனப்பான்மையாக ஆக வேண்டுமே தவிர ஒரு மனப்பான்மை தலை தூக்கியிருப்பது பொருத்தமில்லை. எல்லா இதழ்களும் ஒழுங்காக இருக்கும்பொழுது தான் பூவின் அழகும் வாழ்வும் உண்டு. ரவீந்திரநாத தாகூரின் உவமையை மேற்கொண்டு சொல்ல வேண்டுமேயானால் அழகிய பூக்களோடு நிறைந்துள்ள பச்சைக் கம்பளம் விரிந்தது போன்ற புல்வெளி மிக உயர்ந்ததாகக் கருதப்படும். பசுஞ் சாணத்தால் மூடி விடுவதால் பயன் ஒன்றும் இல்லை. புல்வெளியின் அழகை இங்ஙனம் மறைக்கக்கூடாது.
10. அரசியல் அமைப்பு ஹிந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாகச் செய்து அதனைப் பரப்பவும் வளர்க்கவும் ஏற்பாடு செய்திருப்பதால் அந்த அரசியல் அமைப்பை மீற முடியாது. அரசியல் அமைப்பைத் தொடுவது பாபமான காரியம். ஆதலால் தவிர்க்கமுடியாத ஒன்றை ஏற்றுக் கொள்ளுங்கள்.	10. அரசியல் அமைப்பில் ஹிந்தி இப்பொழுது பெற்றுள்ள இடத்தைப் எந்த மாதிரிச் சூழ்நிலையில் பெற்றது என்பதை நாங்கள் அறிவோம். தேர்வு முறையில் ஏற்பட்ட பாராளு மன்றம் ஹிந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை. நாம் உண்மையாகவே ஜனநாயக முறைப்படி நடப்பதாக இருந்தால் அடுத்த பொதுத் தேர்தலில் ஹிந்திப் பிரச்னையை வைத்துக்கொண்டு காங்கிரஸ் அபேட்சகர்கள் தங்களுடைய சொந்த முடிவுகளையோ அல்லது அவர்கள் ஆதரவாளர்களின் முடிவுகளையோ ஏற்றுக்கொள்ளலாம் என்று விட்டுவிட வேண்டும். இந்நிலையில் ஹிந்தி பேசாத மக்களின் மனப்போக்கு ஹிந்திக்கு ஆதரவாக இல்லையானால் அரசியல் அமைப்பை (பல்வேறு சந்தர்ப்பங்களில் இது வரையில் மாற்றி அமைத்தது போல) மாற்றி அமைக்க வேண்டும். பிறகு இந்தியாவின் ஆட்சி அல்லது ராஜ்ய மொழி என்ற பிரச்னையை இப்போதைக்கு எடுக்காமல் தள்ளி வைத்து விட வேண்டும்.

(ச) எங்ஙனம் நடத்த வேண்டும்—கையில் உடனடியாக உள்ள வேலை.

ஆண் வாத்துக்கு உணவாக இருப்பதே பெண் வாத்துக்கும் உணவாக இருத்தல் வேண்டும். ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் பிற மொழியின் போட்டி இல்லாமல் தங்களுடைய மொழியையே ராஜ்ய மொழியாக அமைத்துக்கொண்டதனால் ஏற்பட்ட மகிழ்ச்சியும் மன ஊக்கமும் ஏனைய ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் அப்படியே பின்பற்றப்பட்டால் அதில் தவறு ஒன்றும் இல்லை. இப்பொழுதைக்கு ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலுள்ள மக்கள் சொல்வதெல்லாம் இதுபற்றி ஒன்றும் அவசரப்படாமல் குறிப்பிட்ட கால எல்லை வகுக்காமல் இருக்க வேண்டும் என்பதுதான். இந்துஸ்தானியிலும், உருதுவிலும், ஹிந்தியிலுங்கூட உள்ள பழமொழி "அவசரமான காரியம் சாத்தானிடமிருந்து தொடங்குகிறது" என்பதாகும். அதாவது 'அவசரம் வீணாகும்' என்ற ஆங்கில பழமொழிப் போன்றது. அதிக தூரமில்லாத எதிர்காலத்தில் ஹிந்தி மொழியானது இந்தியாவில் மிகவும் அதிகமான மக்களால் அறிந்துகொள்ளப்படக்கூடிய மொழியாகும் என்ற ஒரு குறிக்கோளை வைத்துக்கொள்வோம். அப்பொழுதுங்கூட அது அவர்களாக விரும்பி ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருத்தல் வேண்டும். அந்நிலையில் ஹிந்தி பேசும் மக்கள் கலையிலும், விஞ்ஞானத்திலும் பெற்றுள்ள சிறப்புக் காரணமாக ஆங்கிலத்திற்குப் போட்டியாக ஹிந்தி வரும்பொழுது அகில இந்தியாவும் அதனை விருப்பத்தோடு ஏற்றுக் கொள்ளும். இப்பொழுதுள்ள நிலை குதிரைக்கு முன்னர் வண்டியை வைப்பது போல உள்ளது. இந்நிலையில் குறைந்த அளவு எதிர்ப்புள்ள வழிகளிலேயே நாம் செல்ல முடியும். ராஜ்யப் புனரமைப்புக் கழகம் தன்னுடைய சிபார்சுகளை வெளியிட்டவுடன் மிகுதியான மன உளைச்சலும், விரோதமும் போராட்டமும் ஏற்பட்டது அச்சத்தை உண்டாக்குகிறது. நம்முடைய அரசியல் வாதிகளில் பலர் ராஜ்யப் புனரமைப்பையும், ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியை மத்திய அரசாங்கத்தில் புகுத்துவதையும், சில காலத்திற்குத் தள்ளி வைக்கலாம் என்று கூறினார்கள். இது எவ்வாறாயினும் ஹிந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள சட்ட மன்றங்களைக் கலந்து பல்வேறு பிராந்திய மொழிகளையும் பேசுகின்ற மக்களினுடைய மனநிலை இவ்விஷயம் பற்றி எவ்வாறு இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளாமல் மத்திய அரசாங்கம் ஒன்றுஞ் செய்யக்கூடாது. அந்த ராஜ்யங்களின் மனக் கருத்தை யறிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜ்ய சட்ட மன்றங்கள் தகுந்த இடங்களாகும்.

ஜனாதிபதிக்கு நான் தெரிவிக்க விரும்பிய சிபாரிசுகளை மேலே கூறியுள்ளேன். ஆங்கிலத்தை ஹிந்தியின் மூலமாக மத்திய அரசாங்கத்தில் ஒதுக்கிவிட வேண்டும் என்று மனப்பால் குடிக்கின்றவர்கட்கு இது பெரிய இடியாக இருக்கும். மேலும் ஹிந்தி பேசாத ராஜ்யங்களில்கூட இது ஓரளவு அதிர்ச்சியை உண்டாக்கும் என்றால் ஹிந்தி பேசும் ராஜ்யங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதே யில்லை. ஹிந்தியை வளர்ப்பதற்கும் கற்பிப்பதற்கும் அரசாங்கம் வலுவான ஓர் அமைப்பை உண்டாக்கியிருக்கிறது. இதனால் விளைந்த பயன் மிக அற்பமானது, என்பதோடு அந்தப் பயனின் தரம் சொல்வதற்குரியதாகவும் இல்லை. இது விஷயத்தில் அரசாங்கம் குற்றவாளி யன்று. குற்றம் வேறொரு இடத்தில் இருக்கிறது. மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள ஆர்வம் இன்மையும், அறிவுத் துறையில் ஏற்பட்டுள்ள மந்தமும், செயல் செய்பவரின் தகுதியின்மையையுமே காரணங்களாம். மேலும் வாழ்க்கையில் அதிகம் வழங்கப்படாத கலைச்சொற்களையும், சொல் ஆட்சிகளையும் தனியே ஓரிடத்தில் அமர்ந்து அகராதி வகுப்பதன் மூலம் ஒரு மொழியை நவீன வடிவு பெற்றுவிடச் செய்ய முடியாது.

அகில இந்தியப் பொதுப் பணிகளில் இப்பொழுது உள்ளவர்களெல்லாம் மிகக் குறைந்த கால அளவில் ஹிந்தி மொழி வல்லவர்களாக ஆகிவிட வேண்டும் என்று அனாவசியமாக வலியுறுத்துதல் பல்வேறு இலாக்காக்

களிலும் தரக் குறைவையே உண்டாக்கப்போகிறது. இப்பொழுது உள்ள நிலையில் அகில இந்தியப் பணிகளிலுள்ள ஹிந்தி மொழி அறியாதவர் கட்குத் தினம் ஒரு மணி நேரம் வீதம் கடமைகளிலிருந்து விடுதலை அளித்து, ஒரு வாரத்தில் பல மணிகளை இங்ஙனம் தந்து, ஹிந்தி கற்றுக் கொள்ளச் சொல்கிறார்கள். சில சமயங்களில் ஹிந்தி வகுப்புக்கள் வேறொரு கட்டடத்தில் நடைபெறுவதால் ஒரு மணியோடு அல்லாமல் ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரங்கள், போக்குவரத்துக்கும் வகுப்புக்கும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மிக உயர்ந்த சம்பளத்தோடு அதிகப்படியான ஆசிரியர்கள் இவர்களுக்கு ஹிந்தி கற்றுக்கொடுப்பதற்காக நியமிக்கப் படுகிறார்கள். முதலாவது ஹிந்தி பேசும் ஆசிரியர்கள் பெருத்த லாபத்தை இதனால் அடைகிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களை நடத்துவதற்கு இன்னும் வேறு செலவுகள் உண்டு என்பதை மறக்கலாகாது. பணம், காலம், சக்தி என்பவற்றால் விரயமாவதைக் கணக்கிட்டுப் பார்த்தால், 'மலை கெல்லி எலி பிடித்த' கதையாகத்தான் இருக்கும். ஹிந்தியைக் கற்றுக் கொள்ளாவிட்டால் கிடைக்கக் கூடிய தண்டனை பற்றிய—வேலை காயமாதல், சம்பள உயர்வு முதலியவை நிறுத்தப்படுதல் அல்லது தள்ளி வைக்கப் படுதல்—அச்சம்தான் ஹிந்தி பேசாத அரசாங்க ஊழியர்களை ஹிந்தி வகுப்புக் களுக்கு "விருப்பத்துடன்" செல்லச் செய்கிறது. அறிவுள்ளவர்கள் ஆங்கிலத்தை விரும்பி கற்பது போன்ற விருப்பம் இங்கே இல்லை. ஒரு குறிப் பிட்ட மொழியை ஆட்சி பீடத்தில் ஏற்றுவதற்கு எவ்வகையான விலையையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. இம்மொழி ஆட்சி பீடத்தில் ஏற்றப்படும்பொழுது இயல்பாகவே அம்மொழி பேசுபவர்களும் அம்மொழியைத் தங்கள் இலக்கிய, பண்பாட்டு மொழியாக ஏற்றுக்கொண்டவர்களும் ஆட்சிபீடத்தில் ஏறுவார்கள் என்பதில் ஐய மில்லை.

என்னுடைய கருத்துப்படி, ஹிந்தி மொழி பலவிடங்களில் பரவி இருப் பதனாலும் நாளாவட்டத்தில் இன்னும் அதிகமான மக்கள் ஹிந்தியை அறிந்துகொள்வார்கள் ஆதலாலும் அதனைப் பரப்பி ஹிந்தி பேசாத மக்கள் அதனைக் கற்றுக்கொள்ளும்படி தூண்டுவதே, அறிவுடைய செயலாகும். முன்னர்ச் சொல்லப்பட்டபடி ஹிந்தி பேசும் மக்கள் இந்தியாவின் ஒற்றுமைக் காக ஒரு நல்ல தியாகத்தைச் செய்ய விரும்பினால் (நாட்டிலுள்ள சிறந்த மொழிகளுள் ஒன்றைக் கற்றுக்கொள்வதை "தியாகம்" என்று சொல்ல கூடுமேயானால்) ஏனையப் பிராந்தியங்களிலுள்ள மக்களிடத்துத் தங்கள் நட்புரிமையை காட்டும் தோரணையில் நவீன இந்தியாவில் உள்ள ஹிந்தி மொழியல்லாத ஒரு மொழியை (உருதுவை நீக்கி) கற்றுக்கொள்ள வேண்டும். வட இந்தியாவிலுள்ள மக்கள் பலரும், அதுவும் ஹிந்தி ராஜ்யங்களில் இதனை உபயோகமற்ற பாரமாகக் கருதுகிறார்கள். இவ்வாறு சொல்வதில் அவர்களுடைய சகிப்புத்தன்மையின்மையும் அலட்சிய மனப் பான்மையும் வெளியிடப்படுகின்றது. ஆதலால், பலர் இதனை மிகவும் கண்டித் துள்ளார்கள். இந்த மக்களின் மனப்பான்மைக்கு இந்த அறிக்கை ஒத்துப் பாடியுள்ளது. இந்த முறையில் அவர்கள் இருந்தால் ஹிந்தி பேசாத மக்கள் இதே முறையில் ஒரு பதிலைத் தர முடியும். இதன் மறுதலையாக ஹிந்தி ராஜ்யங்களி லுள்ளவர்களும் மத்திய அரசாங்கத்திலுள்ள ஹிந்தி பேசுபவர்களும் இம்முறையைக் கடைப்பிடித்து இந்திய யூனியனிலுள்ள பிற மொழிகளைக் கற்றுக்கொள்வார்களே யானால் அவர்கள் கூற்றுப்படி அவர்கள் மொழியை வளர்க்கவும் அது உதவும். இம்முறை அரசியல் அமைப்பின் 351-வது விதியில் சொல்லப்பட்டுள்ளது. அவ்விதியின்படி நெடுங்கணக்கு அளவிலாவது, ஒரு புது முறை ஹிந்தியை எதிர்காலத்தில் அகில இந்திய மொழியாக ஆக்க வேண்டும். ஹிந்தி பேசும் மக்கள் இந்தியாவிலுள்ள பிற மொழிகளைக் கற்று அவற்றிலுள்ள சிறந்த இலக் கியங்களை மொழி பெயர்ப்பார்களே யானால் ஹிந்தி மொழியே மிகுதியும் வளப்பமடையும். இங்ஙனம் மொழி பெயர்ப்பாளர்களை மிகுதிபடுத்துவதற் காக ஹிந்தி பேசுபவர்கள் கட்டாயமாக ஹிந்தியை யல்லாத பிற மொழிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று செய்வது மொழிகளின் மூலம் இந்தியா வின் ஒற்றுமையை வளர்ப்பதாகும். ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள

அறிஞர்கள் பலரும் இதனை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். காலஞ்சென்ற ஆசாரிய நரேந்திர தேவா போன்ற பெரியவர்கள் ஹிந்தி மாணவர்கள் கற்கும் ஹிந்தியல்லாத இந்த மொழிகள் கட்டாயமாக தென் பகுதியிலுள்ள நான்கு பெரிய மொழிகளுள் ஒன்றாகவே இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். ஆனால் ஹிந்தி பேசுபவரிடமிருந்து இதனை எதிர்பார்ப்பது இயலாத காரியம். வட இந்திய மொழிக்குள் ஒன்றைக் கற்கும் எளிய பாரத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டாலே நாம் நன்றி பாராட்டலாம்.

அரசியல் அமைப்பு இதற்குக் குறுக்கே நிற்கப் போவதில்லை. எந்த அரசியல் அமைப்பும் அசைக்கப்பட முடியாத கட்டுக்கோப்புடையது அன்று. இதற்குள்ளாகப் பல முறை நாம் எவ்வித நடுக்கமும் இன்றி அரசியல் அமைப்பை மாற்றியுள்ளோம். மிக அடிப்படையான விஷயமாகிய இந்திய ஆட்சிமொழி பற்றியும் அதனை அழுத்தமான முறையில் வளர்க்கும் வழி பற்றியும் நிகழ்த்தப்படும் செயல்கள் இதுவரையில் நம்மைப் பிணைத்திருந்த கட்டுக்களைத் தளர்த்துமே யானால் அப்பொழுது தேவைப்பட்டால் அரசியல் அமைப்பை மாற்றுவதில் தவறில்லை. இந்தப் பிணைப்புக்கள் இந்தியாவின் இன்றைய மொழிகளைப் பொருத்தவை யல்ல என்பதை மனத்தில் கொள்ளவேண்டும். டாக்டர் ஹரிகிருஷ்ண மஹ்தாப் கூறிய படி "ஆங்கிலத்தைப் போக்கும் எதிர்மறை வேலையைச் செய்வதைக் காட்டிலும் ஹிந்தியை வளர்த்துப் பரப்பும் உடன்பாட்டு வேலையில் அதிகக் கவனத்தைச் செலுத்த வேண்டும்" என்பது நலம் பயக்கும். காஷ்மீர் அரசாங்கமும் "ஆங்கிலத்திற்குத் தடை போடுவதைவிட ஹிந்தியை வளர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்" என்று கூறியுள்ளது. இன்றைய நிலையில் எவ்வித குழப்பமும் செய்யாமல் உள்ளதை அப்படியே வைத்துக் கொண்டு ஹிந்திப் பிராந்தியங்களிலும் ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களிலும் என்ன நிகழ்கிறது என்பதைக் கவனிக்கலாம். எப்பொழுதுமே ஒரே கருத்தை விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டுள்ள வெறியர்கள் உண்டு ஆதலின் மற்றவர்கள் செய்கின்ற காரியத்தைத் துரிதப்படுவத்துவதிலேயே அவர்கள் கருத்தாக இருப்பார்கள். இத்தகைய வெறியர்கள் எதனையும் தலைமை வகித்து நடத்தவிடக் கூடாது. மொழிக் கொள்கையில் உடனடியாக வேறுபாட்டைக் கொண்டுவந்த காரணம் இந்த ஹிந்தி விஷயம்தான் என்பதை நடுவு நிலையாளர்கள் அனைவரும் அறிய முடியும். விஷயங்களை நேர்மையாக அறிந்துகொள்ளும் நல்ல அறிவு பெறுவோமாக! இந்தியாவில் தோன்றுவிட்டாலும் இன்று மனித சமுதாயத்தின் பெரும் பகுதியினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக்க பயன்படக்கூடிய ஒரு மொழியை நீக்கிவிடுவதன் மூலம்தான் நம்முடைய நாட்டுப் பற்றையும் இனப் பற்றையும் காட்ட முடியும் என்ற தவறான எண்ணம் நீங்குவதாக.

ஆங்கிலம் செல்வாக்குள்ளதும் வளர்ச்சியடைந்ததுமான ஆங்கிலோ-இந்தியச் சிறுபான்மைக் கூட்டத்தின் வீட்டு மொழியாகவும் இந்தியக்-கிறிஸ்துவர்கள் சிலரும் இந்திய-யூதர்கள் சிலரும் வழங்கும் வீட்டு மொழியாகவும் இருப்பதனால் ஏறத்தாழ இந்திய மொழிகளுள் ஒன்றாக ஆங்கிலம் அமைந்துவிட்டது. இதைவிட முக்கியமானது என்னவென்றால் : இன்றுங்கூட அகில இந்தியாவையும் பிணைத்து நவீனமாக்கும் கருவியாகவுள்ளதும் ஆங்கிலமே. ஏனைய இந்திய மொழிகளோடு ஹிந்தியும் வளரட்டும். எல்லா இந்திய மொழிகளிலும் கலைச் சொற்களை வளர்க்க மத்தியத் தொழில் துறை கலைச்சொற்கள் கழகம் வேலை செய்யட்டும். ஆனால் இப்பொழுதுள்ள கல்வி, ஆட்சி, சட்டம், நீதித் துறைகளையும், சட்ட மன்றங்களையும் இந்தியா முழுவதிலும் நடைபெறுகின்ற வழியிலேயே விட்டுவிட்டால் நம்முடைய அரசியல், பண்பாட்டு இன ஒற்றுமை பாதிக்கப்படாது.

(ஞ) வரையறுக்கப்பட்ட சில யோசனைகள்.

இந்தக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளின்படி (மேலேயுள்ள 'பி' பிரிவு) ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்வதன் எதிராக, நான் இந்தியப் பாராளு மன்றத்தின் கவனத்தையும் அகில இந்தியாவிலுள்ள மக்களின்

கவனத்தையும், சிறப்பாக ஹிந்தி பேசாத பிராந்தியங்களிலும், ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் வேண்டுமான அளவு காணப்படுகின்ற நடுவு நிலைமையாளர்களின் கவனத்தையும் கீழ்க்கண்ட சில விஷயங்களைப்பற்றி, இழுக்க விரும்புகிறேன் :—

(1) ஆங்கிலத்தை மாற்றுவதற்கு ஹிந்தியைப் பொறுக்கியது மிகவும் அவசரப்பட்ட முடிவாகும். அது இந்திய யூனியனிலுள்ள மற்றப் பெரிய மொழிகளைக் காட்டிலும் எந்த விதத்திலும் வளர்ச்சியோ வளப்பமோ பெறவில்லை. மேலும் ஆங்கிலம் செய்கின்ற காரியங்களை எல்லாம் அம் மொழி இப்பொழுது செய்ய முடியாது. ஹிந்தி மொழியை வளர்ப்பதற்கும் பரப்புவதற்கும் அகில இந்தியாவிலிருந்தும் பொதுப் பணம் வாரி வழங்கப் படுகிறது. இதனை ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்கள் வெறுக்காமல் இருக்க முடியாது.

ஒரு வகையில் இது மொழிக் கூச்சலை வளர்ப்பதோடு "ஹிந்தி ஏதேச்சாதிகாரம்" என்று சொல்லப்படும் நிலையையும் வளர்க்கிறது. மற்றொரு வகையில் ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களில் மொழிப் பொறாமையையும், உணர்ச்சி வேகத்தையும் உண்டாக்குகிறது. இந்திய ஒற்றுமையை இது குலைத்துவிடும். எவ்வாறுயினும் இதனைத் தடுக்க வேண்டும்.

(2) இந்திய மக்களின் சுதந்திர நலன்களுக்கு ஆங்கிலத்தை வைத்துக் கொண்டிருப்பது எவ்வகையிலும் ஊறு விளைவிக்காது. பண்பட்ட நாகரிக மொழியாகிய ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருப்பதால் நம்முடைய மொழி களையும் இன்னும் சில காலத்திற்கு வளர்த்துக்கொள்ள ஏதுவாகும். எத்துறைகளில் கடமையைச் செய்ய நம்முடைய மொழிகள் இன்னும் தயாராக வில்லையோ அத்துறைகளில் ஆங்கிலத்தை வைத்துக்கொண்டிருப் பது தேச விரோதமான காரியமோ அன்றி இன விரோதமான காரியமோ அன்று. இந்தியாவிலுள்ள மொழிகள் சிறியனவாக இருப்பினும் பெரியன வாக இருப்பினும் அவற்றோடு சேர்த்து ஆங்கிலத்தை வைத்துக்கொண் டிருப்பதே பல மொழிகளையுடைய நம்முடைய நாட்டில் அடிப்படை ஒற் றுமையைக் காப்பாற்றி அதே நேரத்தில் ஒரு தனிப்பட்ட மொழிக்கு அதிக இடம் தராமல் எல்லா மொழிகளையும் வளர்ப்பதற்குரிய வழியாகும்.

(3) ஹிந்தியை (வடமொழியோடு சேர்த்து) இந்திய ஒற்றுமையின் அடையாள மொழியாக ராஜ்ய சடங்குகளிலும் ஏனைய அலங்காரக் காரியங் களிலும் பயன்படுத்தலாம். ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்களிலுள்ள பையன்களும், பெண்களும் இடைநிலைப் பள்ளிக்கூடங்களிலோ கல்லூரி களிலோ தங்கள் தாய் மொழியிலும் ஆங்கிலத்திலும் ஓரளவு வன்மை பெற்ற பிறகு வேண்டுமானால் ஹிந்தியை அவர்கள் விருப்ப பாடமாக ஏற்றுக்கொள்ளலாம். இம்முறையில் ஒவ்வொரு ராஜ்யமும் ஒரு வழி யைக் கையாளும். பிற மொழி பேசும் ராஜ்யங்களில் ஹிந்தியைக் கட்டாயப் படுத்துவது அவசியம் என்று பட்டால் ஹிந்தி ராஜ்யங்களில் ஏதாவது ஒரு இந்திய மொழியை (உருது நீக்கலாக) கட்டாய மொழியாக ஏற்படுத்த வேண்டும். ஹிந்தி பேசும் மாணவர்கள் உருது படிக்கலாம் என்று சொல்வது இக்கொள்கையை ஒதுக்கிவிட்டுச் செல்வதாகும். உருது மொழி பேசும் மாணவர்களும் இதே நிலையில் உள்ளார்கள். என்றாலும் அவர் களுக்கு அதிகத் துன்பம் விளையாதபடி, அவர்களுடைய பிரத்யேகமான சூழ்நிலையை உத்தேசித்துத் தகுந்த வழி ஒன்றைக் கண்டுபிடிக்க வேண்டும். இந்திய ஒற்றுமையின் அடையாளமாக ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி படிப்பதை ஊக்குவிக்க வேண்டும்.

(4) ஆங்கிலம் இன்றுள்ளது போலப் பொது ஆட்சி முறையிலும் அதாவது அகில இந்தியப் பணிப் பரீட்சைகளிலும் மிக உயர்நீதி மன்றம் ஆகியவற்றிலும், மத்திய சட்ட மன்றத்திலும், இடைநிலை மொழியாக இருப்பதோடு ஹிந்தி மொழி பேசாதவர்கள் தாங்களாக விரும்பி அதை ஏற்றுக்கொள்ளாத வரையிலும், ஹிந்தி மொழி அத்தகைய ஒரு தரத்தை

அடையாத வரையிலும் அப்படியே இருத்தல் வேண்டும். உயர்தரத் தொழில் நுட்பத் துறையிலும் அகில இந்திய நிலையிலும் ஆங்கிலமே இருந்து வர வேண்டும். பிராந்திய மொழிகளும் ஆங்கிலமும் எவ்வளவு தூரம் இடம் பெற வேண்டும் என்பதைப் பல்வேறு ராஜ்யங்களும் தாமே முடிவு செய்துகொள்ள வேண்டும். ராஜ்யங்களில் உயர்தரக் கல்வியில் இரட்டை மொழிகள் (ஆங்கிலமும் பிராந்திய மொழியும்) பயிலப்பட வேண்டும். இதில் கலைத் துறையிலும் (பொருளாதாரம், அரசியல், தத்துவ சாஸ்த்திரம், மொழியியல், சமுதாயயியல், வரலாறு, சட்டம் முதலிய வற்றில்) விஞ்ஞானத் துறையிலும் (பொது, பொறியியல், போரியல், விமானத் துறையியல்) ஆங்கிலத்திற்கே அதிக இடம் இருத்தல் வேண்டும்.

நமது பல்கலைக் கழக படிப்பின் அகில இந்திய நிலையை நிலைநிறுத்த வேண்டுமானால் நம்முடைய நாட்டின் இளம் ஆண்களும் பெண்களும் உயர்தரக் கல்வியில் அறிவு வளர்ச்சி பெறவேண்டுமேயானால் போதனா மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டும் என்றும், தேவைப்பட்டபொழுது தாய் மொழியையும் பயன்படுத்திக்கொள்ள நாடு முழுவதிலும் வழி செய்ய வேண்டும் என்றும் உறுதியாக நம்புகிறேன். இவ்வாறு செய்யாவிட்டால் இந்தியாவிலுள்ள ஆசிரியர்களும், பேராசிரியர்களும் ஆறு தலைமுறைகளாகத் தங்களையே பரித்தியாகம் செய்து கொண்டு கட்டிய இக்கோட்டை அழிந்துவிடும். மேலும் பல காலத்திற்கு அறிவு, கல்வித் துறைகளில் வலுவடைந்த ஒன்று காணப்பட முடியாமலே போய்விடும். நம்முடைய தேசீய வாழ்க்கையில் மிக முக்கியமான இந்த சந்தர்ப்பத்தில் நல்ல பயன்களைத் தராத புதிய பரிசோதனைகளை நடத்துவது தகாது.

ஆங்கிலத்தைப் போன்ற ஒரு மொழி கல்லூரியில் நான்கு ஆண்டுகளும், அதற்கு முன்னர் ஆறு ஆண்டுகளும் ஆகப் பத்து ஆண்டுகள் பயிலப்பட வேண்டும். தாய் மொழி முதன் மொழியாகவும் ஆங்கிலம் இரண்டாம் மொழியாகவும் கல்லூரிகளில் கலைத் துறையில் கற்பவர்கள் இவை இரண்டின் மேற்பட்டு ஒரு உயர் தனிச் செம்மொழியையும் கற்க வேண்டும் என்பது என்னுடைய யோசனை. ஹிந்தி பேசாத மாணவர்கட்கு ஹிந்தியும், ஹிந்தி பேசும் மாணவர்கட்கு ஏதாவது ஒரு நவீன இந்திய மொழியும் விருப்ப பாடமாக அமைக்கப்பட்டு அதனைக் கற்க அவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

(5) ஹிந்தி மொழி வழங்காத ராஜ்யங்களைக் கலந்து ஆலோசித்துப் பிறகு தேவைப் பட்டால் இந்திய அரசியல் அமைப்பில் இந்திய யூனியனின் ஆட்சி மொழி என்ற பகுதி திருத்தி அமைக்கப்பட வேண்டும். ஆனால் ஆங்கிலத்திற்கு முழு வசதியும் அளித்து, ஹிந்தியை மெல்லமாகவும் படிப்படியாகவும் விருப்ப பாடமாகவும் மேலே கூறியபடி அமைத்துவிட்டால் அரசியல் அமைப்பை மாற்றி அமைக்க வேண்டிய தேவையே ஏற்படாது;

(6) ஆங்கிலம் இந்தியாவிலுள்ள ஒரு முக்கியமான இனத்தாரின் மொழியாக இருத்தலினால் 8-வது ஷெட்யூலில் இடம் பெற வேண்டும். இந்தியப் பிரஜைகளில் அளவால் குறுகியதும் ஆனால் மிக்க வளர்ச்சி அடைந்ததுமான ஒரு இனத்தாருக்கு நாட்கழித்தாவது செய்யப்படுகின்ற நியாயமாகும் இது. மேலும் நவீன இந்தியாவில் ஒரு மொழியாக கருதப்படும் தனி உரிமை ஆங்கிலத்திற்கும் உண்டு. அது வெளிநாட்டில் தோன்றியதேனும், இந்தியாவின் ஒற்றுமையை அரசியல் துறையிலும், அறிவியல் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் நிலைநிறுத்திய உதவி செய்ததனால் அம்மொழிக்கு ஒரு சிறப்பான உரிமையுண்டு.

(7) ஏனைய இந்திய மொழிகளையும், அம்மொழிகளைப் பேசுவோரின் விருப்பத்தைக் கருதியும் அவற்றின் முக்கியத்தைக் கருதியும் இந்த ஷெட்யூலில் சேர்க்க வேண்டும். அவையாவன சிந்தி, நேப்பாளி (கோர்க்களி அல்து கஷ்குரா அல்லது பற்பத்தியா) முடியுமானால் மைதிலி ராஜஸ்தானி (மார்வாரி) இறுதியாக போஜ்புரி மஹையும், சத்திஷ் கர்ஹி

ஆகிய மொழிகள். ஆசிய மொழிகளை அல்லாத சிலவற்றையும் அதாவது மணிப்புரி, நேவாரி (திபத்தோ-சீன மொழி) காஸி, சாந்தலி, முண்டரி (ஆஸ்ட்ரிக்-மோன்-கேமர், கோல் அல்லது முண்டா) குரு, கோண்டி, ஒரான் (திராவிட மொழி) ஆகியவற்றையும் இறுதியாகச் சேர்க்க நேரிடலாம். இது பற்றி இந்தியப் பிரதமரின் கருத்துக்களை இந்த அறிக்கையின் கடைசிப் பகுதியில் சேர்த்துள்ளதை கவனிக்கவும்.

(8). அகில இந்திய ஆட்சி மொழியாகிய ஹிந்தியை ரோமன் எழுத்துக்களில் எழுதவும் அச்சிடப்படவும் உரிமை வழங்கப்படவேண்டும். ரோமன் எழுத்துக்களை இந்திய மொழிகளுக்குத் தேவையான சில அடையாளங்களைச் சேர்த்து, இந்திய எழுத்து முறையில் வரிசைப்படுத்திவிட்டால் (இவ்வாறு வரிசைப்படுத்துவதுதான் எழுத்துக்களைப் பொறுத்த மட்டில் "அறிவியல் முறை" யாகும்) உலகத்திலுள்ள எல்லா எழுத்து முறையைக் காட்டிலும் இந்திய எழுத்து முறை மிகச் சிறந்தது என்று கருதப்படும். அத்தகைய எழுத்து முறை விஞ்ஞான ரீதியில் காணப்பட்டு எளிய வடிவினை உடையதாய் யாரும் எளிதில் எழுதவும், படிக்கவும் கூடியதாய் அமையும். அது வரையறுத்த இயல்புடையதாய் முழுத் தன்மை பெற்றதாய் உலகத்திலுள்ள பெரும்பான்மையான மக்களோடு நம்மைச் சேர்த்துவிடும். இதுவரையில் இன்னும் அழிந்துவிடாமல் இருந்துகொண்டு மறுபடியும் வெளியே தலை தூக்கப் பார்க்கும் ஹிந்தி, உருது போராட்டத்தைத் தவிர்க்க வேண்டுமேயானால் இவ்விரண்டு மொழிக்கும் பொதுவான ரோமன் எழுத்துக்களை மேற்கொண்டு இரண்டு மொழிகளையும் இதில் எழுதவும் அன்றேல் இரண்டையும் அடுத்த மூன்றாவது எழுத்து முறையாக வேண்டுமானால் பயன்படுத்திக்கொள்ளவும் ஏற்பாடு செய்யலாம். நாகரி எழுத்துக்களுக்கும் பாரஸிய அராபிய எழுத்துக்களுக்கும் இடைப்பட்ட ரோமன் எழுத்துக்களால் ஹிந்தி இந்துஸ்தான்-உருது ஆகிய மூன்றுக்கும் இடைப்பட்ட ஒரு பொது மொழி காணப்பட்டு இந்த மூன்று மொழி பேசுவோரும் அறிந்துகொள்ளக் கூடிய ஒரு பொது மொழியும் ஏற்படலாம். இந்திய மொழிகளிடையே அதிகப்படியான ஒற்றுமையை ஏற்படுத்தக் கூடிய ரோமன் எழுத்துக்களை அகில இந்திய ஹிந்தியில் முதலில் தொடங்கி, தேவையானால் எல்லா மொழிகளும் இதனை ஏற்றுக்கொள்ளலாம் என்பதை வலுவாக முன்மொழிகிறேன்.

(ட) ஆங்கிலத்தின் உதவி பெற்ற பரந்த தேசிய மனப்பான்மையும் தேவை.

மற்றொரு கருத்தையும் இங்கே சொல்லலாம். எதேச்சாதிகாரத்தின் கீழ் அடங்கிக் கிடந்த இந்திய மக்களுக்கு, சுதந்திர உணர்ச்சியையூட்டக் காரணமாக இருந்தது தேசிய இனப் பற்றும். தேசிய இனப்பற்று இக்காலத்தில் எல்லா நாடுகளிலும் அதற்குரிய பரந்த மனப்பான்மையை இழந்து சகிப்புத்தன்மையை இழந்து அமைதி முதலான அடிப்படை நல்லியல்புகளையும் இழந்துவருகிறது. சகிப்புத்தன்மையற்றதாய் தனித்தன்மையுடையதாய் தலைமைதிகாரம் உடையதாய் அது மாறி வருகிறது. இந்தியாவிலுள்ள நாம் இந்த ஆபத்திலிருந்து இன்னும் விடுதலை பெறவில்லை. மேலும் பல்வேறு தேசிய இனங்களாக சுயேச்சையுடையனவாக இந்தியா பிரிந்து விடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. தேசிய ஒற்றுமை என்ற பெயரில் ஒரு பிராந்திய மொழிக்கு அளவு மீறிய சிறப்புத் தருவதால் இந்த ஆபத்து மிகுந்துவிடும்: எனவே அதனைத் தடை செய்ய வேண்டும். பஞ்ச-சீலக் கொள்கை (தனி மனிதனுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னர் புத்தராலும், ஒரு இனத்திற்கு இந்தோனேஷிய தலைவர் சுகர்னோவால் 1945லும் பண்பட்டு அமைதிக்கு 1954-ல் பிரதமர் ஜவஹர்லால் நேருவாலும் எடுத்துக் கூறப்பட்டது) இந்தப் பரந்த மனப்பான்மையை நிலைநிறுத்த நமக்கு உதவும் எந்த வழியிலாவது எந்த விலை கொடுத்தாவது மொழி ஒற்றுமை இல்லா நிலையில் ஒரு மொழி ஒற்றுமையை உண்டாக்கவேண்டும் என்று நினைப்பது

பரந்துபட்ட தேசிய மனப்பான்மையை இந்தியாவில் உண்டாக்க உதவாது. இந்திய மனம் ஆங்கிலத்தின் பரந்த இயல்பில் பொருத்தமான நிலைக் களத்தைக் கண்டது. அம்மொழி ஐரோப்பா நமக்கு தரக்கூடிய வற்றில் சிறந்த பகுதியைத் தந்தது. இதனோடு சேர்ந்து சில விரும்பத் தகாத பொருள்களும் வந்தது உண்மைதான். ஆனால் நம்முடைய தேசீய அறிவு, ஆன்மீக வளர்ச்சிகளைத் தடைச் செய்யக்கூடிய பொருள்களை உதறி எறிய நமக்குச் சக்தியுண்டு. முன்னரும் இதனைச் செய்துள்ளோம். இம்முறையில்தான் ஜனநாயக அடிப்படையிலுள்ள பாராளு மன்ற முறை ஆங்கிலத்தின் மூலமே நமக்குக் கிடைத்தது. மேலும் ஆங்கில மொழியின் மூலம்தான் பாராளு மன்றங்களின் தாயாகிய ஆங்கிலப் பாராளு மன்றத்தோடு நம்மை இணைத்து அதனால் பரந்த பாராளு மன்ற மரபு ஒன்றும் இந்தியாவில் மத்தியிலும் ராஜ்யங்களிலும் வளர்ந்து கொண்டு இருக்கிறது. இந்திய ஆங்கிலத் தொடர்பு, மொழி இலக்கிய பண்பாடு என்பவற்றின் மூலம் ஏற்பட்டபொழுது, அதனால் விளைந்த பரந்த மனப்பான்மை நமக்கு நன்மை செய்யுமேயானால் நிலைநிறுத்தப்பட வேண்டும். அனைத்தையும் சேர்த்து அகில இந்திய மனப்பாங்கு ஆங்கிலத்தின் மூலம் வருமேயானால் ராஜ்ய மொழி வேறுபாடுகளின் இடையே ஓர் ஒற்றுமைத் தன்மையைக் காணலாம். சரித்திர காலத்திலிருந்து வரும் இந்தியப் பொதுப்பண்பாடு, வடமொழியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இப்பண்பாடு, இந்திய மக்கள் அனைவரையும் ஒரு இனமாக் கருதும் இப்பண்பாடு ஆகிய இதனை ஆங்கில எண்ணப் பண்பாட்டின் மூலமாக இக்காலத்தில் வலுப்படுத்தலாம்.

(ண) முடிவுரை—இந்தியப் பிரதமரின் கருத்துக்கள்.

என்னுடைய இந்த அறிக்கைக்கு ஏற்ற முடிவுரையாக நம்முடைய பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு சில நாளைக்கு முன்பு டில்லியில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசியதாக வந்துள்ள பகுதியை அப்படியே எடுத்துக் கொடுக்கிறேன். ரேடியோ லைப்ரரி போரம் விழாவைத் தொடங்கி வைக்கும் பொழுது, சாப்ரு ஹவுஸில் 1956 ஏப்ரல் மாதம் 29–ந் தேதி (1956 ஏப்ரல் மாதம் 30–ந் தேதி கல்கத்தா, "அமிர்த பஸார்" பத்திரிகாவைக் காண்க) பிரதமர் ஆங்கிலத்தைப் பற்றி ஒரு குறிப்புக் கொடுக்கத் தொடங்கி ஆங்கிலத்தை ஏனைய இந்திய மொழிகளோடு ஒரு நிலையில் வைப்பது அவர்களுடைய வேலை இல்லை என்று கூறினார். என்றாலும் ஆங்கிலம் பாராளு மன்றத்திலும் ஏனைய இடங்களிலும் பயன்படுத்தப் படுகிறது. சிலருக்கு இது பிடிக்கவில்லை என்றாலும் நிகழ்ச்சிகளின் வற்புறுத்திலின்பேரில் அவர்கள் ஆங்கிலத்தில் இறங்க வேண்டியுள்ளது. "நம்முடைய குறிக்கோள் பற்றித் தெளிவாக இருந்தால், நாம் எந்தத் திசையில் செல்கிறோம் என்பதை அறிந்திருந்தால், ஏன் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது பற்றி அஞ்சவேண்டும் என்று எனக்கு விளங்கவில்லை."

மொழிப் பிரச்னை என்பது அரசியல் வாதத்திற்கு வெளியே வைக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ நேரு கூறினார். மொழிகளை அவ்வவற்றின் தகுதியைக்கொண்டே ஆராயவேண்டும். "எனவே ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தை இரண்டு காரணங்களுக்காக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்."

"முதலாவது காரணம் இப்பொழுதுகூட நாம் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கும் சிறப்பாக வடக்கிலும் தெற்கிலும் உள்ளவர்களும் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்களும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் இம்மொழி உதவுகிறது. இந்தத் தொடர்பை வைத்துக் கொள்ள விரும்புகிறோம்."

"மற்றொரு காரணம் என்னவென்றால் இந்தியாவுக்கும் வெளி நாட்டுக்கும் உள்ள தொடர்பாகவும் இம்மொழி அமைவதாலும் இந்தத்

தொடர்பை மிக முக்கியமானது என்று போற்றி நாம் வைத்துக்கொள்ள வேண்டியதாலும் வெளியுலகத்திலிருந்து நம்மைத் துண்டித்துத் தனிப் படுத்திக் கொள்ளக்கூடாது. ஆதலாலும் இதனை வைத்துக் கொள்ள வேண்டும்.

உலகம் விரைவாக மாறிக்கொண்டு வருகிறதென்றும் இந்திய மக்கள் உலகின் இந்த மாறுபாட்டை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்றும் ஸ்ரீ நேரு குறிப்பிட்டார். விஞ்ஞானத் துறையிலும் தொழில் நுட்பத் துறையிலும் இந்த மாறுதல் எவ்வளவு விரைவாக நடைபெறுகிறது என்றால் தொழில் நுட்ப நூலொன்று அச்சிலிருந்து வெளிவருவதற்கு முன்னர் அது காலங் கடந்த ஒன்றாய், பழமையுடையதாய் ஆகிவிடுகிறது. ஒரு விஞ்ஞானி விரைவாக இந்த மாறுதல்களை அறிந்து கொள்வதற்காக நூற்றுக் கணக்கான இதழ்களைப் படிக்க வேண்டியுள்ளது. எனவே ஒரு விஞ்ஞானி பல மொழிகளை அறிந்திருக்க வேண்டும்; குறைந்த அளவு அவற்றைப் படிக்கும் அறிவையாவது பெற்றிருக்க வேண்டும்.

"மிக விரைவாக மாறும் உலகத்தில் நாம் வாழ்கிறோம் ஆதலின் ஒருவர் கருத்தை மற்றவர் அறிந்திருக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதோடு மாறும் உலகத்தின் கருத்துக்களையும் நாம் அறிந்திருக்க வேண்டும். உண்மையைக் கூறுமிடத்து விஞ்ஞானத் துறையிலும் ஏனைய பகுதிகளிலும் நாம் கொண்டுள்ள கருத்து ஓரளவுக்கு உலகில் மாற்றத்தை உண்டாக்கி இருக்கிறது. வேண்டுமான அளவுக்கு நாம் இந்த ஆக்கப் பொருள்களை வைத்திருந்தால் சந்தேகமில்லாமல் ஏனையோர் நம்மிடம் வந்து நம்முடைய மொழியில் சொல்லப்பட்டுள்ள அக்கருத்துக்களை அறிந்துகொள்வதற்காக நம்முடைய மொழிகளைக் கற்பார்கள்."

ஸ்ரீ நேரு மேலும் தொடர்ந்து, "எனவே இந்த உலகத்தில் நமக்கு ஓர் இடத்தை விரும்பினால் பிற மொழிகளை நாம் அறிந்திருப்பது, வேண்டுமான அளவு அறிந்திருப்பது மிக மிக இன்றியமையாத தொன்றாகும். இந்நிலையில் நமக்குத் தெரிந்த ஆங்கிலத்தையே மேலும் தொடர வேண்டும் என்பது சொல்லத் தேவையில்லை. பிரெஞ்சு, ரஷ்யன், ஜர்மன், சீனம் போன்ற மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். எனவே ஆங்கில மொழியைப் பொறுத்த மட்டில் விரோத மனப்பான்மை பாராட்டுவது தேவையில்லை. நமக்கு மிகவும் ஆதாரமான நம்முடைய மொழியை வளர்க்கும்பொழுது ஆங்கிலம் குறுக்கே வரும் என்றோ வரப்போகின்றதென்றோ நாம் அஞ்சவேண்டியதில்லை" என்றும் கூறினார்.

இதன் பிறகு பிரதமர் இந்திய மொழிகளின் வளர்ச்சியைக் குறித்துப் பேசுகையில் அரசியலில் கண்டுள்ள 13 மொழிகளை மட்டுமல்லாமல் இந்தியாவிலுள்ள ஏனைய சிறுபான்மை மொழிகளையும் அவற்றினிடையேயுள்ள தொடர்பு அற்றுப் போகாமல் இருக்க, வளர்க்க வேண்டும் என்று கூறினார்.

1956-ம் ஆண்டு ஜூலை மீ 4உ. **சுனதி குமார் சட்டர்ஜி.**

கருத்து வேறுபாட்டுக் குறிப்பு.

டாக்டர் பி. சுப்பராயன்.

முகவுரை.

இந்த அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளை ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். ஆட்சி மொழிக் கழகத்தில் பங்குகொள்ள என்னை அழைத்தபொழுது, நாட்டிலுள்ள பல்வேறு கருத்துக்களையும் ஆராய்ந்து, நாட்டின் நலனைப் பாதுகாக்கும் முறையில் ஏகமனதான அறிக்கையைத் தர முடியும் என்று நினைத்தேன். ஜனாதிபதிக்கு ஏகமனதாக சிபாரிசுகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்தோடு சக ஊழியருடன் பல மாதங்கள் உழைத்த பிறகு என் சக ஊழியர்கள் பலரினும் மாறுபட்டு நிற்க வேண்டியதை நினைக்கும்பொழுது வருத்தமடைகிறேன். இந்தக் கழகம் மதிப்புக்குரிய தலைவர் ஸ்ரீ பி. ஜி. கர் அவர்களின் தலைமையில் மிகுதியான அளவு சான்றுகளைப் பெற்று அவற்றை வரிசைப்படுத்தி பெரும் வேலையைச் செய்துள்ளது. துரதிர்ஷ்ட வசமாக இக்கழகத்திலுள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் தெரிவித்த கருத்துக்களை, சிறப்பாக சரித்திரத்திலும், பரப்பு, ஜனத்தொகை, பொது முன்னேற்றம் ஆகிய எல்லாத் துறைகளிலும் முக்கியத்துவம் வாய்ந்த வங்காளம், சென்னை, மைசூர் போன்ற பிராந்தியங்களிலுள்ளவர்கள் தந்த சான்றுகளை ஏற்றுக்கொள்ளவில்லை. இக்கழகம் தொழிற்படும்போது விளக்கமாகத் தந்த என் கருத்துக்கள் சக ஊழியர்கள் பலருடைய கருத்துக்களிலும் மாறுபட்டு இருக்கக் கண்டேன். இக்கருத்தை மாற்றிக் கொள்ளும் முறையில் எவ்வித நிகழ்ச்சியும் நிகழவில்லை. அதற்கு எதிராக வங்காளம், சென்னை, மைசூர் ஆகிய இடங்களிலும் ஏனைய இடங்களிலும் உள்ள மதிப்பு வாய்ந்த பெருமக்கள் கல்வியும், பொது வாழ்வில் அனுபவமுமுடைய பெரு மக்கள் என்னுடைய கருத்தை ஆதரித்தார்கள். என்றாலும் என்னுடைய சக ஊழியர்கள் தங்கள் முடிவுகளுக்கு வரும் முன்னர் என் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுத்தமையின் நான் பெரிதும் ஏமாற்றம் அடைந்தேன். என்றாலும் டாக்டர் எஸ். கெ. சட்டர்ஜி அவர்களும் நானும் பிரச்னையையும் சான்றுகளையும் ஒரே மாதிரியான பரிவோடும் தெளிவோடும் ஆராய்ந்தோமாதலால் எங்கள் இருவருக்கும் இடையே தன்மையும் அடிப்படையில் ஒற்றுமையும் இருந்தது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய நாட்டின் ஆட்சி மொழி எதுவாக இருக்க வேண்டும் என்ற இவ்வளவு முக்கியமான பிரச்னையை ஆராயும்பொழுது இன்னும் அதிகப்படியான சான்றுகளைப் பெற்று அதிகமான சிந்தனையைச் செலவழித்திருக்கவேண்டும். தேவையான வழி துறைகள் யாவை? ஆட்சித் துறையிலும் உயர்தரக் கல்வி நிலையிலும் இந்த மொழியைப் படிப்படியாக எங்ஙனம் புகுத்துவது என்பது பற்றியும் இன்னும் சிந்தித்திருக்கவேண்டும். உதாரணமாக ஒவ்வொரு ராஜ்யத்திலும் பல்கலைக் கழகங்களில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் இம்முடிவுகளால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் ஆதலால் அம்மாணவர்களை விசாரித்திருக்க வேண்டும். விஞ்ஞானம், தொழில் துறை, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றை வெளியிட இன்னும் வளர்ச்சியடையாத ஒரு மொழியின் மூலம் கற்பதற்கு அவர்கள் அதிகக் கஷ்டம் அடைவார்கள்.

இந்தியாவில் சமீபத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் போக்கைக் கவனிக்கும் பொழுது என்னுடைய கருத்துக்கள் உறுதியடைந்துள்ளன. அதன்படிக் மொழிப் பிரச்னையைப் பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயம் இந்த

அறிக்கையில் இறுதியாகச் சொல்லப்பட்டதோடு பல இடங்களில் மாறுபடுகிறது. இம்மாறுபாடு காரணமாக வேறு சில சிபாரிசுகளை நான் கூற விரும்புகிறேன். இவ்விஷயத்தில் இறுதியாக முடிவு காண வேண்டியவர்கள் இப்பிரச்னையின் பல்வேறு பகுதிகளையும் ஆழ்ந்து சிந்தித்து முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன். இக்காரணத்திற்காகவேனும் என்னுடைய கருத்துக்களை அவர்கள் முழுமையும் அறிந்திருக்க வேண்டும். எனவே இந்தக் கருத்து வேறுபாட்டுக் குறிப்பை நான் இதனுடைய அனுபந்தமாகச் சேர்க்காவிட்டால் கழகத்தின் உறுப்பினனாக இருந்து என் கடமையைச் செய்தவனாகமாட்டேன். இந்தக் கருத்து வேறுபாட்டுக் குறிப்பை உளப்படுத்தியே கழக அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளேன்.

அறிக்கை.

2. இந்த அறிக்கை இந்தியாவிலுள்ள மொழி நிலை பற்றிய உண்மையான இருப்பை அறிந்துகொள்ள முயலாமலும், நம்முடைய மக்களுள் பெரும்பாலானவர்களின் இடையே எம்மாதிரியான எதிர்ச் செயல்கள் உண்டாகும் என்பதைப் பற்றிக் கவலை கொள்ளாமலும் மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய நிகழ்ச்சி நிரல், சட்டங்கள், திட்டங்கள் யாவை என்று ஆராயத் தொடங்குகிறது. இந்தியாவிலுள்ள ஹிந்தி மொழி பேசாதவர்கள் உடனே ஹிந்தியின் மூலம் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அவர்களுடைய நீதி, ஆட்சி துறைகளிலும், கல்வி அமைப்பிலும், அதன் பயனாக வாழ்வின் எல்லாத் துறைகளிலும் முழு அளவுக்கு ஹிந்தியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை ஏதோ முடிந்த முடிவாகக் கூறி, இவ்வாறு அவர்கள் செய்வதே தேசத்துக்குச் செய்யும் கடமை என்றும், உடனடியாகச் செய்யவேண்டிய சீர்திருத்தம் என்றும் பேசுகிறது. நம்முடைய நாட்டிடிற்கு, கடைசியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய ஆட்சி மொழி நன்கு வளர்ச்சி அடைந்த ஒரு மொழியாக இருக்கவேண்டும் என்றும் அதுவரையில் ஆங்கிலத்தை நாம் பயன்படுத்த வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். ஆதலின் இந்தக் கருத்தை ஒத்துக்கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன். ஒரு நாடு சுதந்திரத்தைக் காப்பாற்றி வாழவேண்டுமேயானால் அதனுடைய பொருளாதார, தொழில் துறைகள் நன்கு வளர்ச்சி அடைவது மிக முக்கியமானது. ஆங்கிலத்தை அல்லாத பிற மொழிகளை ஆட்சி மொழியாக நாம் புகுத்தும்பொழுது அவ்வாறு புகுத்துவது பொருளாதார, தொழில் துறைகளுக்குத் தடையாக இருக்குமா என்று ஆராயவேண்டும்.

அடிப்படையானவையும் உயிர் நாடியானவையுமான பிரச்னைகளின் முக்கியத்துவம்.

3. இந்த அறிக்கையில் சில அடிப்படையானவையும் உயிர்நாடியானவையுமான பிரச்னைகளை முற்றிலும் கவனிக்க விட்டுவிட்டார்கள் என்றே நான் கருதுகிறேன். அரசியல் அமைப்பில் யூனியன் ஆட்சி விவகாரங்களில் சில சந்தர்ப்பங்களில் ஹிந்தி மொழியைப் பயன்படுத்தலாம் என்று கூறியுள்ளதை இந்த அறிக்கை நம்முடைய கல்வித் துறை, சட்ட நீதித் துறைகள், மத்திய சட்ட மன்றம், பொதுப் பணிகள் ஆகியவற்றில் திடீர் என்று முழுப் புரட்சியை கொண்டுவரும் அளவிற்கு இந்த அறிக்கை நீட்டிக் கொண்டுவிட்டது. இந்த அறிக்கையின் சிபாரிசுகள் நிர்மாணக் கொள்கைகளின் அப்பாலும் வெகு தூரம் சென்றுவிடுகிறதென்றே நான் நம்புகிறேன். இந்தக் கோரிக்கைகளை அப்படியே யூனியன் அரசாங்கம் நிறைவேற்ற விரும்பினால் அதன் பயனாக ஹிந்தி பேசாத மக்களின் மேல் ஹிந்தியைத் திணித்து அதனால் பொது வாழ்க்கையில் குழப்ப மிகுதியையே உடனடியாக விளைவிக்கும். இந்த அரசியல் அமைப்பில் அகில இந்தியாவும் ஏதோ தாங்களாகவே விரும்பி ஹிந்தியை ஏற்றுக்கொண்டதுபோலவும், ஹிந்தி பேசாத மக்கள் அதனைப் பேசுபவர்கள் போலவே அதனை வளர்க்க ஆர்வம் கொண்டு இருப்பது போலவும் ஹிந்தியின் மூலம் [illegible]

ஆங்கிலத்தை நீக்காவிட்டால் அது ஏதோ தேசத் துரோகமான காரியம் போலவும் கருதிக்கொண்டு, இந்த அறிக்கை தாயரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் மூலம் உடனடியாகவும் நீண்ட காலத்திற்கும் நன்மை பெறப் போகின்ற ஹிந்தி பேசுபவர்களின் கருத்தை மட்டும் இந்த அறிக்கை தெரிவிக்கிறது என்று ஒரு சிலர் கருதலாம். இந்த அறிக்கை முழுவதிலும் இந்தியாவிலுள்ள ஹிந்தி பேசாத மக்களைப் பற்றிப் புரிந்துகொள்ளவோ, அறிந்து கொள்ளவோ, பரிவு காட்டவோ, எவ்விதமான முயற்சியும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. ஹிந்தியைக் காட்டிலும் மிக முற்பட்டவையும், வளர்ச்சியடைந்தவையுமான பல மொழிகள் இந்தியாவில் வழங்கி வருகின்றன என்பதையும், அம்மொழி பேசுவோர் அம்மொழிகளினிடத்து எல்லையற்ற அன்பும், பரிவும் கொண்டுள்ளார்கள் என்பதையும் இந்த அறிக்கை புரிந்துகொண்டதாகவே தெரியவில்லை. ஹிந்தி பேசாத மக்கள், ஹிந்தி மொழி வளர்ச்சி அடைகின்ற வரையில் ஆங்கிலத்தை நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று விரும்புவதும், நாட்டில் கலையையும், இலக்கியத்தையும் வளர்ப்பதற்கு ஆங்கிலம் பேருதவியாக இருக்கும் என்பதையும், இன்றைய சூழ்நிலையில் இந்தியாவின் பெருமை குன்றாமல் காப்பாற்றுவதற்கு ஆங்கிலம் தேவை என்பதையும், இப்பிற மொழியாளர் உண்மையாகவே நம்புகிறார்கள் என்பதையும் இந்த அறிக்கை, அறியவோ புரியவோ முயலவேயில்லை.

ஹிந்தி மொழி பல இந்திய மொழிகளைப் போல, சிறப்பாக வங்காளி, அல்லது தமிழ் மொழியைப் போலப் பழமையோ, வளமையோ உடையதன்று, என்னைப் பொறுத்த வரை தமிழர்களுக்கு ஹிந்தி மொழி எவ்வளவு வேற்று மொழி என்று கூறினால் ஹிந்தி பேசுபவர்கட்கு தமிழ் எவ்வளவு வேற்று மொழியோ அவ்வளவு என்று கூறுவேன். ஒரு சில தமிழர்களைப் பொறுத்த மட்டில் ஹிந்தியைக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும் ஆங்கிலத்தை எளிதாகக் கற்றுப் புரிந்துகொள்ளலாம் என்ற எண்ணம் இருந்து வருகிறது. முன்னமேயே தமிழர்கள் தங்கள் மேல் ஹிந்தி திணிக்கப்படுவதை வெறுக்கிறார்கள் என்பதையும், அதிலும் இவ்வளவு விரைவில் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைத் திணிக்க விரும்புவதை மிகுதியும் வெறுக்கிறார்கள் என்பதையும் யாரும் தெரிந்துகொள்ளலாம். தமிழர்களைப் பொறுத்தமட்டில் உலக மொழியாகிய ஆங்கிலத்தை முன்னமே கற்றுப் பெரிதும் பயன் அடைந்துள்ளார்கள். தங்கள் கையிலிருக்கும் முதல்தரமான ஒரு மொழியை விட்டுவிட்டு இரண்டாந்தரமான நன்கு வளர்ச்சியடையாத ஒரு கருவியை ஏன் கைக்கொள்ள வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள்? நம்முடைய ஜனாதிபதி டாக்டர் இராஜேந்திர பிரசாத்தும் நம்முடைய பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவும், சென்னை ராஜ்யத்திலுள்ள இந்த எண்ணத்தை நன்கு அறிந்துள்ளமையின் அங்கே பேசும் பொழுது பல முறையும் மக்கள் விருப்பத்திற்கு மாறாக ஹிந்தி மொழி திணிக்கப்படமாட்டாது என்று பேசியுள்ளார்கள். இந்த அறிக்கையில் ஜனநாயக முறைக்கு முற்றிலும் மாறான போக்கே உள்ளது. மக்களின் இடையே எவ்வளவு கருத்து வேறுபாடுகள் இருப்பினும், ஒரு கருத்தை அனைவர் மேலும் திணிக்கின்ற ஒன்றுதான் இவ்வறிக்கையில் உள்ளது. இந்தியா பல மொழி நாடு என்பதும் இங்கு வாழ்கின்றவர்கள் தங்கள் மொழியில்கொண்ட பற்றால் ஆழ்ந்த கர்வம் பாராட்டுகிறார்கள் என்ற உண்மையும் இந்த அறிக்கையில் கவனிக்கப்படவே இல்லை. நம்முடைய தேசீய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட மொழி அனைத்திற்கும் மேலாகச் சலுகை பெறுகிறது. என்னுடைய கருத்துப்படி, ஹிந்தியின் மூலம் மொழிகளில் ஒற்றுமையைக் காணவேண்டும்; அதுவும் மிக விரைவாகக் காண வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய உணர்வுக்குத் தோன்றியுள்ளது.

புரட்சியைவிடக் கூர்தல்-முறையே வேண்டப்படுவது.

4. இந்தச் சிபாரிசுகளை நிறைவேற்றுவதனால் ஏற்படப்போகும் எதிர்ச் செயல்களைப் பற்றி இந்த அறிக்கை கவலைப்படுவதாகவே தெரியவில்லை.

அகில இந்தியாவிற்கும் ஹிந்தி மொழியைக் கொண்டுவருவதற்கு உயிர் போகின்ற அவசரத்தை இவ்வறிக்கை வெளியிடுகிறது. இந்த அறிக்கை யின்படி 1965-ம் ஆண்டு இன்னும் குறிப்பிட்ட நாளாகவே இருந்து வரு கிறது. ஹிந்திப் பிராந்தியங்களிலும், பிற மொழிப் பிராந்தியங்களிலும் விசாரணை நடத்திய பிறகு ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங்கள் இதில் கண் டுள்ள முறைக்குத் தம்மைத் தயாரித்துக்கொள்ள ஒன்பது ஆண்டுகள் நிச்சய மாக போறாது என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன். இந்தக் கேள்வியை இந்த அறிக்கை முற்றிலும் மறந்து விட்டது. ஹிந்தி மொழி தயாராக இல்லாமலும் பிற மொழிப் பிராந்தியங்களிலுள்ளவர்கள் தயாராக இல்லா மலும் உள்ள இந்நிலை, இந்திய அலுவல்களுக்கு இப்புரட்சியைக் கொண்டு வருவதற்கு முற்றிலும் பொருத்த மில்லாத காலம் என்று நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சியைக் காட்டிலும் கூர்தல் முறையே (evolution) சிறந்தது என்றும் நான் நம்புகிறேன்.

இந்திய ஒற்றுமை.

5. இந்தியாவின் பல பாகங்களிலும் அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் மிக மதிப்பு வாய்ந்த இந்திய ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டிய மிக இன்றியமையாத தேவையை எனக்கு அறிவுறுத்துகிறது. எனவே எந்த அளவுக்கு ஹிந்தியைப் புகுத்தலாம்; என்ன வேகத்தில் புகுத்தலாம் என்பது பற்றி மறுபடியும் புனராலோசனை செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பெரும்பான்மையான மக்கள் இப்பொழுதே கூட "ஹிந்தி ஏதேச்சாதிகாரம்" வந்துவிட்டது என்றும், அம்மொழிக்கு ஆள் எண் ணிக்கையைத் தவிர வேறு எவ்விதமான சிறப்பும் இல்லையாதலால் இதன் பயனாக அதிகப்படியான இன விரோதமான எண்ணமே வளர்ச்சியடையும் என்றும் நம்புகிறார்கள். ஹிந்தி பேசும் மக்கள் ஏனையோர்களைப்போல மொழிப் பற்றை மிகுதியாக உடையவர்கள். அவர்களுடைய ஆசைகள் எல்லை மீறி வளர்க்கப்பட்டுவிட்டன. எனவே அவர்கள் எதிர்பார்க்கின்ற அவைகளும் மிகப் பெரிய காரியங்களாகும். பலவற்றையும் கூர்ந்து கவ னித்ததாலும் நன்கு சிந்தித்துப் பார்த்ததாலும் நம்முடைய கல்வித் துறையிலும் பொது வாழ்க்கைத் துறையிலும் ஆங்கிலத்தை இரண்டாவது இடத்திற்குத் தள்ளிவைப்பது நாட்டின் நன்மைக்கென்று என்று உறுதியாக நம்புகிறேன். இதனால் இந்தக் கழகத்தின் பெரும்பான்மையோர் கண்ட முடிவுகளை ஏற்றுக்கொள்ளாமல் என்னுடைய முடிவுகளைத் தனியே தருகின்றேன்.

என் சிபாரிசுகளுக்குரிய அடிப்படை,

6. இந்தியாவிலுள்ள மக்களின் சிறந்த நலன்களை மனத்தில் எண்ணியே இந்தச் சிபாரிசுகள் செய்யப்படுகின்றன. ஆதலின் அவை வாழ்வோடு பொருந்தியனவாகவும், நடைமுறைக்கு ஏற்றவையாகவும் உள்ளனவே தவிர, உணர்ச்சி வசப்பட்டதாகவும் அடையமுடியாத குறிக்கோளாகவும் இல்லை எல்லாத் துறைகளிலும் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தியைப் புகுத்துவதில் ஏற்படுகின்ற இடையூறுகளை எல்லாம் புகுந்து பார்க்கவேண்டிய அவசியம் இருக்கிறது. மேலும் பல்வேறு பிற மொழி ராஜ்யங்களில் ஆட்சித் துறை, கல்வித் துறை, முதலியவற்றிற்குப் பல்வேறு பிராந்திய மொழிகளைப் பயன்படுத்துகிறார்கள். ஆதலால் ஹிந்தி நுழைகின்ற துறைகளில் அந்தப் பிராந்திய மொழிகளுக்குள்ள உரிமையையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும். சென்ற சில ஆண்டுகளாக, சிறப்பாகச் சென்ற சில மாதங்களாக நாட்டில் நிலவிவரும் மொழி வெறி பெரியதோர் வடிவெடுத்து இந்தியப் பொது வாழ்வில் பெரிய பிரச்னையாகி இந்திய ஒற்றுமையை வேரோடு கெல்லிவிடும் நிலைமையை அடைந்துள்ளதாகலின் இவை பற்றி நடுவு நிலைமையோடு சிந்திக்க வேண்டும்.

ஆட்சி மொழியின் முக்கிய குறிகோள்கள்.

7. இந்தியாவின் ஆட்சி மொழியைப் பொறுத்த மட்டில், அல்லது வேறு எந்த நாடாக இருப்பினும் அங்கே பல இலக்கிய மொழிகள் வழங்குமேயானால் அவற்றைப் பொறுத்த மட்டிலுங் கூட நான்கு முக்கியமான குறிகோள்களைக் கவனிக்கவேண்டும்.

(அ) தேசிய ஒற்றுமையைப் பாதுகாத்தல் ;

(ஆ) ஆட்சித் துறையின் திறத்தைப் பாதுகாத்தல் ;

(இ) எல்லாப் பகுதி மக்களும் அறிவு வளர்ச்சி பெறுமாறு செய்தல் ;

(ஈ) நாட்டிலுள்ள பல்வேறு பகுதியிலும் வாழ்கின்ற பிரஜைகளுக்கு சம சந்தர்ப்பங்கள் கிடைக்குமாறு செய்தல்.

இந்தியா பன்மொழி வழங்கும் தேசமாதலால் இந்நாடு ஓர் இனமாக வழங்க வேண்டுமேயானால் இம்மொழிகளின் வேற்றுமையின் அடிப்படையில் உள்ள ஒற்றுமையைக் காப்பாற்றி வலுப்படுத்துவதனாலேயே முடியும். எந்த ஒரு குறிப்பிட்ட மொழியும் இந்தியப் பொது வாழ்வில் மதிப்புப் பெறவேண்டுமேயானால் அது இந்த அடிப்படை ஒற்றுமையை எவ்வளவு தூரம் அது பாதுகாத்து வளர்க்கின்றதோ அந்த அளவுதான் முடியும்.

அரசியல் சபை எவ்வாறு ஹிந்தியைத் தேர்ந்தெடுத்தது.

8. அரசியல் அமைப்பின் 8-வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள 14 முக்கிய மொழிகளிலிருந்து ஹிந்தி மொழியை இந்தியாவின் அரசியல் சபை தேர்ந்தெடுத்ததே தவிர மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக்கொண்ட பாராளு மன்றம் இத்தேர்வைச் செய்யவில்லை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அரசியல் சபையில் இதன் ஆதரவாளர்கள் (பெரும்பாலும் ஹிந்தி பேசுபவர்களே) இவ்வாறு செய்வதே ஒற்றுமைக்கு வழி என்று கருதினார்கள். பிற மொழி வழங்கும் பிராந்தியங்களில் உள்ளவர்கள் முழு மனத்தோடு இல்லாவிட்டாலும் மிக நீண்ட காலம் அரசியல் விடுதலைக்குச் செய்த போராட்டத்தின் வெற்றியைக் கண்டு, விடுதலை பெற்ற மக்களுக்கு ஒற்றுமையைத் தரக் கூடிய ஒரு மொழி இல்லையே என்பதையும் கருதி, ஹிந்தியை ஏற்றுக்கொள்ள உடன்பட்டார்கள். அப்பொழுது, விடுதலை பெற்றுள்ள இந்தியாதான் ஒரு தனி இனம் என்பதைக் காட்ட ஒரு மொழியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அதனை ஆட்சி மொழியாக உயர்த்த வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. சுவிஸர்லாந்தைப் போல மூன்று மொழிகளையும் பெல்ஜியம், கனடாவைப் போல இரண்டு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக வைத்துக் கொண்டால் என்ன என்று யாரும் அப்பொழுது சிந்திக்கவில்லை.

எனவே வெற்றியும் தோல்வி மனப்பான்மையும் கலந்த ஒரு சூழ்நிலையிலும், மகிழ்ச்சியும் அச்சமும் கலந்த ஒரு நிலையிலும், நம்பிக்கையும் நம்பிக்கையின்மையும் கலந்த ஒரு நிலையிலும், அரசியல் சபையில் உள்ள ஹிந்தி மொழி பேசுவோரின் தொந்தரவினாலும், அரசியல் அமைப்பில் இந்திய யூனியன் ஆட்சி மொழி என்ற ஒரு நிலை ஹிந்தி மொழிக்குத் தரப்பட்டது. அப்பொழுதே கூட ஹிந்திக்குப் பதிலாக உள்ள ஆங்கிலம் நாளாவட்டத்தில் குறைக்கப்படவேண்டும் என்பதையும் இந்தியப் பொது வாழ்க்கையிலிருந்து இறுதியாக அது ஒதுக்கப்பட வேண்டும் என்பதையும் அரசியல் அமைப்பில் கண்டார்கள்.

சுதந்திரத்தின்பின் நிகழ்ச்சிகளின் போக்கு.

9. சுதந்திரத்தின் பின்னர்ச் சென்ற சில ஆண்டுகளாக இந்தியாவில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளின் போக்கைக் கவனிக்கும் அளவில் நம்முடைய நாட்டிலுள்ள, பிராந்திய எல்லை, இனப் பிரிவு ஆகியவற்றைக் கடந்து அப்பாலும் காணக் கூடிய சில மக்களுக்கு இந் நிகழ்ச்சிகளின் போக்கு மனத்தில் ஒரு வகை அச்சத்தை உண்டாக்கியுள்ளது. இந்த எட்டு ஆண்டுகளில் நாட்டிலுள்ள பல மொழிகளில் ஒன்றாகிய ஹிந்தியை இந்தியாவிலுள்ள “பல்வேறு மொழிகளுள்ளும்” “தலைமை பெற்ற மொழியாக” ஆக்குவதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இம் மொழி இலக்கணமற்ற அதன் பல்வேறு வடிவங்களில் வட இந்தியாவிலுள்ள பெரும்பாலன மக்களால் பேசப்பட்டும் புரிந்துகொள்ளப்பட்டும் உள்ள ஒரு நிலையை உடையது. அரசாங்கத்தின் உதவியினாலும் ஹிந்திப் பிராந்தியங்களிலும் அதற்கு வெளியிலுமுள்ள மக்களின் தூண்டுதலினாலும் ஹிந்தி மொழியை இந்தியாவின் கலப்புப் பண்பாட்டை வெளியிடும் கருவியாகவும் நவீன விஞ்ஞான, தொழில் நுட்பங்களையும் இலக்கியங்களையும், வெளியிடும் கருவியாகவும் எளிதாக மாற்றிவிட முடியும் என்று கருதினார்கள். பிற மொழிப் பிராந்தியங்களில், ஹிந்தி அறிவைப் பரப்புவதற்குரிய முயற்சிகள் செய்யப்பட்டன. ஹிந்தி மொழியைத் தற்காலத்திற்கேற்ற நவீன மொழியாக வளர்ப்பதற்கும் அதனைப் பலரிடையே பரப்புவதற்கும் மத்திய அரசாங்கமும், சில ராஜ்யங்களும் பெருவாரியான பணத்தைச் செலவழித்த போதிலும் பயன் முன்மாதிரியே இருந்து வருகிறது.

ஹிந்திக்கு விளம்பரம்.

10. இதற்கிடையில் இந்திய தேசீயத் தன்மையின் அடிப்படையே ஹிந்தி மொழிதான் என்று செய்தித்தாள்களும், சொற்பொழிவு மேடைகளும் ஒரு குரல் எழுப்பின. ஏற்கெனவே ஹிந்தியை கல்வித் துறையிலும் பொது வாழ்விலும் ஏற்றுக்கொண்ட ராஜ்யங்களிலுள்ள மக்கள் மிக்க ஆர்வத்தோடு இக்கருத்தை ஆதரித்தார்கள். இருந்தாலும் பிற மொழிப் பகுதிகள் பலவற்றிலும் இருந்து விடாப் பிடியாக மறுப்புக்களும், எதிர்ப்புக்களும் வந்து கொண்டே இருந்தன. கல்வித் துறையிலும் பொது வாழ்வுத் துறையிலும் உள்ள மதிப்பு வாய்ந்த பெரியவர்களும் இதனை எதிர்த்தார்கள். என்றாலும் அரசாங்கமும் ஹிந்தி பேசும் ராஜ்யங்களும் போட்ட கூச்சலில் இம்மறுப்புக்கள் நன்கு தெளிவாக்கப்படவில்லை. ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள பல நல்லவர்கள் எவ்விதமான கட்டுப்பாடுமில்லாமல் அகில இந்தியாவிலும் ஹிந்தி மொழியை வளர்ப்பது எல்லா இந்தியப் பிரஜைகளுடைய தவிர்க்க முடியாத கடமை என்று நம்பத் தொடங்கினார்கள். அந்தப் பிரஜைகள் வேறு எந்த மொழி பேசினாலும் இங்ஙனம் வளர்ப்பதற்கு மறுப்பு கூறுவது, அவர்கள் ஹிந்தி மொழியை ஏற்றுக் கொள்ளாமல் வேற்று மொழியைப்பேசுபவர்களாக இருப்பினும் கூட இந்த வளர்ச்சிக்கு மறுப்புக் கூறுவது தேசத் துரோகமான காரியம் என்று ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ளவர்கள் நினைக்கத் தொடங்கி விட்டார்கள். இத்தகைய ஒரு மனோநிலை, நடைமுறையைப் பற்றி ஒரு சிறிதும் அறிந்து கொள்ளாத, அறிந்துகொள்ள விரும்பாத, கற்பனையற்ற அறிவுக் குறைவையே காட்டுகிறது. சில ஹிந்திப் பிராந்தியங்களில் மிகுந்த கூக்குரலோடு வெளிவருகின்ற இந்த நிலை ஹிந்தியையல்லாத பிற மொழி பேசுபவர்களின் உள்ளத்தில் மாறுபாட்டையும் எதிர்காலம் பற்றிய அச்சத்தையும் உண்டாக்கியுள்ளது. நேரிடையாகவும் அதிக விருப்பத்தோடும் ஹிந்தியை ஆதரித்து வந்த ஸ்ரீ சி. இராஜகோபாலாச்சாரி போன்றவர்கள் கூட இப்பொழுது இதனை மறுக்கத் தொடங்கி விட்டார்கள். ஒரு காலத்தில் இவர்கள் ஹிந்திக்காகச் செய்த தொண்டை ஹிந்தி பேசும் மக்கள் கூட ஆதரித்தார்கள்.

இன்றைய நிலையில் ஹிந்தியை ஏற்றுக்கொள்வது எளிதான காரியமன்று.

11. அரசியல் சபையில் ஹிந்தியை ஏற்றுக்கொண்ட பொழுது சில அவசர முடிவுகளின் மேலும் நம்பிக்கைகளின் மேலும் அது செய்யப் பட்டது என்றும், அதன் ஆதரவாளர்கள் மிக எளிதாக அதனைச் செய்து விடலாம் என்று நம்பினதன் மேலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதையும் முன்னரே அறிவித்துள்ளேன். நிகழ்ச்சிகள் நேரிடையாக இப்பொழுது நம்மைச் சந்திக்கின்றன. நம்முடைய நாட்டில் இதுவரையில் முக்கியத்துவம் பெறுதிருந்த, அவசரம் என்று கருதப்படாதிருந்த மொழிப் பிரச்னை, மத்திய அரசாங்கமும் ஹிந்தி ராஜ்யங்களும் ஹிந்தியை நிலை நாட்டுவதற்கு எல்லை மீறி அவசரத்தையும் பிடிவாதத்தையும் காட்டத் தொடங்கிவிட்டமையின் மிக முக்கியமான பிரச்னை போல (சில பகுதிகளி லாவது) காட்டப்படுகிறது. இப்பொழுது ஹிந்தி ராஜ்யங்களில் பிராந்திய மொழியாகவுள்ள ஹிந்திக்கும் பிற மொழி ராஜ்யங்களிலுள்ள பிராந்திய மொழிகளுக்கும் இடையே யுள்ள போட்டியாகவும், ஆங்கிலத்திற்கும் ஆட்சி மொழியாக வரப் போகின்ற ஹிந்திக்கும் இடையேயுள்ள போட்டியாகவும் இது வடிவெடுத்துள்ளது. இப்போட்டிகளில் கடைசியாக உள்ள போட்டி பற்றித் தான் ஹிந்தி ராஜ்யங்களுக்கும், பிற மொழி ராஜ்யங்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது. அவசர மகிழ்ச்சியின் காரணமாக மிக இன்றியமையாத சில காரியங்களை அப்பொழுது கவனிக்க மறந்து விட்டோம். இப்பொழுது அவைகள் தோன்றி இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையையும் அறிவுத் திறத்தையுங்கூட ஆட்டங் காணச் செய்வதோடு ஆட்சித் துறையில் தரக் குறைவையும் காட்டத் தொடங்கிவிட்டது.

அறிவை மறைக்கும் உணர்ச்சியும் வெறியும்.

12. பல சமயங்களில் மனிதர்கள் அறிவை மறைக்கும் உணர்ச்சியாலும் வெறியாலும் உந்தப்படுகிறார்கள். இன்றைய நிலையில் இந்தியாவிலுள்ள மக்கள் உலகிலுள்ள பெரும்பான்மையான மக்களைப் போலவே அறிவுக்கு இடம் கொடுப்பதை விட உணர்ச்சிக்கு இடம் கொடுக்கும் நிலையில் உள்ளார் கள். இந்திய ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டுக்கும் இடையூறாக வெளி வரக் கூடியவை, வலுவான மொழி உணர்ச்சியும் கூச்சலுமாகும். இந்தி யாவின் பல்வேறு மொழிப் பிராந்தியங்களிலும், ஹிந்திப் பிராந்தியங்கள் உள்பட இங்ஙனம் தோன்றும் இது, தொல்லையை விளைவிக்கும்.

இந்நிலையில் வழக்கறிஞர் தொழிலிலும், பொது வாழ்விலும் நல்ல அனுபவம் பெற்றவரும் ஹிந்தி, ஆங்கிலம் என்ற இரு மொழியையும் நன்கு அறிந்தவருமான ஸ்ரீ கெ. எம். முன்ஷி இந்தக் கழகத்துக்குத் தந்த குறிப்பில் கூறியவற்றை மீட்டும் நினைவூட்ட விரும்புகிறேன் :

“ வாழ்க்கைத் துறையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆங்கிலத்தை நீக்கிவிடக் கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. இதே வேகத்தில் ஹிந்தி அவ்விடங்களை நிரப்ப முடியாது. ஆதலால் அவ் விடத்தைப் பிராந்திய மொழிகளே நிரப்பிக் கொள்ளும். ஆங் கிலத்தை நீக்க வேண்டும் என்ற அளவு மீறிய உற்சாகத்தால் ஹிந்தி லாபம் அடையாமல் நஷ்டத்தையே அடைந்தது. தேசிய ஒற்றுமை மறைந்துவிட, பிராந்திய மனப்பான்மை வளர்ந்து வருகிறது. சாதாரண மனிதனுக்கு ஆங்கிலத்தைப் போக்கிவிடு வது தேச பக்தியான காரியம் போலக் காட்சியளித்தாலும் இன்னும் நமக்குள்ள பெரிய ஆபத்து வலிமை பொருந்திய பிராந்திய மொழிக் கொள்கையாகும். பிராந்திய கர்வத்தையும் தடித்தனத் தையும் அது தூண்டிவிடும். “ என்னுடைய ” மக்கள் பேசும் “ என்னுடைய ” மொழி வேறு “ மற்ற ” மக்கள் பேசும் “ மற்ற ”

மொழி வேறு என்ற ஒரு குறுக்குச் சுவரை அது உண்டாக்கி விடுகிறது. மொழி முறையில் இந்தியாவைத் துண்டாடுவது பெருத்த தீமையையே கொண்டுவரும்."

இன்று நாட்டிலுள்ள நிலையை இந்தப் பேச்சு விரிவாகவும் வரையறுத்தும் தெரிவிக்கின்றது என்று நான் நம்புகிறேன்.

மொழி அல்லது சமயம் பற்றி இந்திய மக்கள் என்றுமே சகிப்புத்தன்மை அற்று இருந்ததில்லை.

13. இந்திய மக்களுடைய வரலாற்றில் அவர்களுடைய மொழி மனப் பான்மையில் தனித் தன்மையைப் பாராட்டியதாகவோ சகிப்புத் தன்மை அற்றிருந்ததாகவோ தெரியவில்லை. ஆனால் சுதந்திரம் பெற்ற நாளி லிருந்து மாகாணப் போட்டிகளும், பொறாமைகளும் மொழியின் மூலமாக மிகவும் அதிகப்பட்டு வருகின்றன. இப்பொழுதேகூட சிறுபான்மையினர் மொழி விஷயத்தில் சில ராஜ்யங்களைப் பொறுத்த வரைப் பரிவுக் குறைவு ஏற்பட்டுள்ளது என்றாலும், சகிப்புத் தன்மையற்ற கொடிய நிலை இன்னும் வரவில்லை யென்றே சொல்லலாம். சில குறிப்பிட்ட ராஜ்யங்களைப் பொறுத்த மட்டில் நாங்கள் விசாரணை நடத்திய பொழுது மொழிவாரிச் சிறுபான்மையினர் பள்ளிக்கூடங்களிலும், தகுந்த அளவு தங்கள் மொழி கவனிக்கப்பட வில்லை என்று குறை கூறினார்கள். மொழிவாரி மாகாணங் கள் அமைக்கப்பட ஏற்பாடு நடைபெற்று, சில விடங்களில் அரை குறையாக அதை நிறைவேற்றம் செய்தவுடன் இவ்விஷயம் அதிகப்பட்டு விட்டது. இதன் பயனைக் கண்டிக்கத் தகுந்த முறையில் மொழி வெறி மிகுந்து மதவெறியைப்போல் சமுதாய விரோதமான, சமூக விரோதமான வெளிப் பாடாக தோன்றியது. ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் பொறுப்பு வாய்ந்த பலரும் இதிலிருந்து விடுபடவில்லை. ராஜ்யப் புனரமைப்புக் கழகச் சிபார்சு கள் வெளிவந்தவுடன் சில ராஜ்யங்களில் நடைபெற்ற சமுதாய விரோத மான நிகழ்ச்சிகள் அறிவுடைய பெரு மக்களை அதிரச் செய்தது. இந்த அறிக்கையில் சிபார்சு செய்யப்பட்டுள்ளவைகளை நிறைவேற்றினால் அரசாங் கத்திற்குத் தொல்லை விளைவிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்படலாம். ஏற்கனவே ஒரு கடுமையான பிரச்னை அவர்களைப் பாதித்துக் கொண்டிருக்கிற தாதலின் ராஜ்யப் புனரமைப்பில் ஏற்பட்டது போன்ற ஒரு நிலை ஆட்சி மொழி விஷயத்திலும் ஏற்படக் கூடாதென்று பெரிதும் கவலைப்படுகிறேன். ஜாடிக்குள்ளிருந்து வெளியே விடப்பட்ட ஒரு பிசாசு உள்ளே போக மறுக் கின்ற நிலையில், மற்றொரு பிசாசையும் வெளிப்படுத்தி அதனால் நாட்டுக் குப் பெரும் தீங்கை விளைவித்துக் கொள்ள வேண்டாம்.

ஆட்சி மொழியாக ஹிந்தி.

14. ஹிந்தியை இந்தியாவின் ஆட்சி மொழியாக மட்டும் கூறியிருக்கிறது என்றாலும் அதன் ஆதரவாளர்கள் எல்லா விடங்களிலும் இந்த எல்லை யைத் தாண்டிச் சென்றுவிடுகிறார்கள். அதனை இந்தியாவின் தேசீய மொழி என்று கூறி எல்லா மொழிகளையும் விட அது உயர்ந்தது என்ற எண்ணத்தையும் உண்டாக்கி ஆட்சி மொழியாக இருப்பதற்கு அதுவே பல்லாற்றானும் சிறந்தது என்ற முறையில் பேசுகிறார்கள். நம்முடைய பிரதமர் இந்தியாவில் ஒரு தேசீய மொழி இல்லையென்றும் பதினான்கு தேசீய மொழிகள் உள்ளன என்றும் கூறுவதால், நியாயமான முறையில் அவர் ஹிந்திக்கு என்று தனிப்பட்ட மதிப்பு ஒன்றையும் தருவதாகத் தெரியவில்லை. இப்பொழுது பிற மொழிப் பிராந்தியங்களில் உள்ளவர்கள் ஆங்கிலத்தின் இடத்தைப் பெற வைப்பதற்காக ஹிந்தி மொழியைக் கற்றுக் கொள்ளும் கடமையை மேற்கொள்ள வேண்டியிருந்தலினாலும், ஹிந்தி மொழியை வளர்க்க வேண்டியது அவர்களுடைய தெய்வீகக் கடமை என்று சொல்லப்படுவதனாலும் மிகவும் அச்சமடைந்து, அதிர்ச்சி அடைந்து ஹிந்தியைப் பற்றிய தங்கள் எண்ணத்தைப் புனராலோசனை செய்கிறார்கள்.

ஹிந்தி வளர்ச்சியடையாத ஒரு மொழி.

15. ஹிந்தி வட்டத்தின் அப்பால் இருக்கின்ற மக்கள் அது இன்னும் நன்கு வளர்ச்சி அடைந்த மொழி என்றும் ஆங்கிலத்திற்கு இணையாக அது [illegible] ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கருதுகிறார்கள். ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள மிகப் பெரிய ஹிந்தி ஆதரவாளர்களுங்கூட கருத்துக்களை வெளியிடக்கூடிய சக்தியில் அம்மொழி குறைபாடுடையது என்பதை நன்கு அறிந்திருக்கிறார்கள். உயர்தரச் சொற்களைப் பொறுத்த மட்டில் அம்மொழியைப் பேசும் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலையான கொள்கை இன்னும் தோன்றவில்லை. வலுவான ஆதரவாளர்களைப்பெற்ற மூன்று நான்கு கட்சிகள் ஒன்றுக்கொன்று முரணான வழிகளில் சென்று அம்மொழி வளர்ச்சியைத் தடை செய்கின்றன. ஏனைய இந்திய மொழிகளில் பலவற்றிற்கு இம்மாதிரி மாறுபட்ட கருத்து வேற்றுமைகள் இல்லை. இந்தியாவிலுள்ள வளர்ச்சியடைந்த மொழிகளைக் காட்டிலும் இம்மொழி வளர்ச்சி உயர்ந்ததாகவும் தெரியவில்லை. வளர்ச்சியடைந்த பிற மொழிகளைப் பேசும் இந்தியர்கள் பலர் ஹிந்தியை அறிந்த பிறகு சில விஷயங்களில் தங்கள் மொழியே ஹிந்தியைச் விடச் சிறந்த கருவியாக இருக்கிறது என்று கூறுகின்றனர். சொல்கின்றவர்களுடைய மனோ நிலைக்காக ஓரளவு தள்ளிவிட்டாலும் இத்தகைய ஒரு எண்ணம் இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

நன்கு வளர்ச்சியடைந்தனவும், ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்ந்த இலக்கிய வரலாற்றை உடையனவும் ஆன வங்காளி, அஸ்ஸாமி. ஒரியா, மாராத்தி. குஜராத்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம், பஞ்சாபி போன்ற மொழிகளைத் தாய் மொழிகளாக உடையவர்கள் இந்த ஆட்சி மொழிக் கொள்கையை, அது நேரடியாகவும், மறைமுகமாகவும் அவர்கள் மேல் திணிக்கப்படும் பொழுது, அதனை ஏற்றுக்கொள்ளக் கூசுகிறார்கள்.

பல்கலைக் கழகத்தில் மொழி.

16. நம்முடைய பல்கலைக் கழக வாழ்க்கையில் விடமுடியாத மொழியாக ஆங்கிலம் சில ஆண்டுகளுக்கு மட்டும் இல்லாமல், மிகப் பல காலத்திற்கு இருந்து வரவேண்டும். ஸ்ரீ ஸீ. ராஜகோபாலாச்சாரியார் கூறியபடி ஆங்கிலம் எல்லா அறிவுத் துறைக்கும் ஜன்னலாக இருந்து வருகிறது. இப்பொழுது செய்ய முயன்றுள்ளதைப் போல, ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதற்கு ஒரு கால வரையறை செய்வது அர்த்தமற்ற செயலாகும். இப்பொழுது எதிர்ப்பார்க்கப்படுவதைப் போல அகில உலகத்திற்கும் ஒரு பொதுப் பண்பாடு வேண்டும், என்று விரும்பினால் இத்தகைய ஒரு செயல் பயனற்றுப் போவதோடு பிற்போக்காகவும் முடியும். பெரும்பான்மையான மக்களுக்கு மிகச் சிறந்த நன்மையை அளிப்பதற்கு ஆங்கிலமே மிகச் சிறந்த இடைநிலையாகும். சென்னை அரசாங்கம் கல்வித் துறையில் மொழிக் கொள்கையைச் சொல்லும் பொழுது தாய் மொழியையும் ஆங்கிலத்தையும் கட்டாயமாக ஆக்கி, ஹிந்தியை விருப்ப பாடமாக வைத்து "ஆக்கத் தன்மையுள்ள நவீன எண்ண வளர்ச்சிக்குரிய வழியை ஆங்கிலம் வகுக்குமே தவிர; ஹிந்தி வகுக்காது" என்று கூறினார்கள். ஹிந்தி மொழி ஆங்கிலத்தை நீக்குவதற்குரிய முழுத் தகுதியையும் பெறுகின்ற வரையில் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலமே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று உறுதியாக நம்புகிறேன். பிராந்திய மொழிகளைப் போதனா மொழியாகத் தற்காலிகமாகவோ கடைசி முடிவாகவோ கொள்வதும் கூடாது. [illegible]

[illegible] இடைநிலைக் கல்வி வகுப்புகளில் ஆங்கில போதனையை நீக்கி விடுவதற்குரிய கிளர்ச்சி இருந்து வருகிறது. இந்த அறிக்கை, அறிவுத் துறையில் தலைவர்களாக இருந்து இந்தியாவைப் பல துறைகளிலும் வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்பவர்களே நவீன அறிவியல் வாழ்க்கைக்கும் பண்பாட்டுக்கும் கருவியாக உள்ள இம்மொழியைப் பெற்றிருக்க வேண்டும்

என்றும், அவர்களே ஏனைய உலகத்தோடு சமமாக நிற்கவேண்டியவர்கள் என்றும், அத்தகையவர்களின் எண்ணிக்கை மொத்த ஜனத் தொகையில் 3 அல்லது 2 அல்லது 1 அல்லது ½ சதவிகிதமாகக் கூட இருப்பினும் நவீன வளர்ச்சிக்கு அவர்கள் தேவையான அடிப்படை என்றும் கூறுகிறது. நம்முடைய இளைஞர் கூட்டத்தில் இத்தகைய நிலையை அடையக் கூடியவர்கள் யார் என்று எவ்வாறு முன்னமே கூறமுடியும்? அன்றியும் அவர்கள் இடைநிலைக் கல்வி நிலையிலேயே ஆங்கிலத்தில் தகுந்த அஸ்திவாரத்தைப் பெறாவிட்டால் பிற்காலத்தில் எவ்வாறு இந்தக் கருவியைப் பெற முடியும்?

ஆங்கிலம் அறிவைத் தரும் சாதனம்.

17. அறிவைத் தருகின்ற சிறந்த சாதனங்களுள் ஆங்கிலமே தலை சிறந்தது. இந்தச் சொத்தை ஐரோப்பாவிலிருந்து ரயில்வே, மோட்டார், தந்தி போன்ற நவீன நாகரிகத்தின் வசதிகளைப் போல நாம் பெற்றுள்ளோம். கருத்துப் பரிமாறிக் கொள்ளச் சிறந்த கருவியாக ஆங்கிலம் இருத்தலினால் நம்முடைய இந்திய ஒற்றுமையை உண்டாக்குவதற்கும் நவீன காலத்தில் விஞ்ஞானத்தில் நாம் ஓர் உயர்ந்த நிலையை அடைவதற்கும் உதவியாக இருந்தது. நம்முடைய சமுதாய, சமயத் துறைகளில் சிறந்த சீர்திருத்த வாதிகளாக இருந்த ராஜாராம் மோகன் ராய் போன்றவர்களுக்கும், அரசியல் தலைவர்களுக்கும் இந்த ஆங்கில அறிவு ஒரு ஊக்கத்தைக் கொடுத்தது என்பதோடுகூட அரசியல் விடுதலை கிடைப்பதற்கும், தேசிய மனப்பான்மையை வளர்ப்பதற்கும் உதவியுள்ளது. இன்றைய உலகின் பெரியவர்களாகக் கருதப்படுகின்ற ராஜாராம் மோகன்ராய், ஸ்வாமி விவேகாநந்தர், இரவீந்தரநாத் தாகூர், மகாத்மா காந்தி, ஸ்ரீனிவாச சாஸ்திரி, சர். ஸி. வி. ராமன், டாக்டர் ராதாகிருஷ்ணன், ஸ்ரீ ஜவஹர்லால் நேஹ்ரு போன்றவர்கள் இந்தியப் பண்பாட்டையும், இந்திய அறிவையும், உலகைப்பற்றி இந்தியா கொண்டுள்ள எண்ணத்தையும் வெளியிடுவதற்கு ஆங்கிலம் பேருதவி புரிந்துள்ளது. நம்முடைய தேசிய போராட்டத்தில் யாரை எதிர்த்துப் போராடினோமோ அவர்களுடைய மொழியாக ஆங்கிலம் இருப்பினும், பேருதவியைப் புரிந்துள்ளது. ஆங்கிலத்தின் சரித்திர அடிப்படை இவ்வாறு இருத்தலினால் நம்முடைய மொழிகளையும் பயன்படுத்திக் கொண்டு அறிவைப் பெறுவதற்கு ஆங்கிலத்தையும் தொடர்ந்து பயன்படுத்தினால் அதனால் அவமானம் ஒன்றுமில்லை. அன்றியும் நாம் இப்பொழுது ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுள்ளோம். இனி ஆங்கில மொழி ஆங்கிலேயனுடைய தனிப்பட்ட சொத்தன்று. அது இப்பொழுது உலக மொழியாக ஆகி எல்லா விடங்களிலும் கருத்தை வெளியிடுவதற்கும், அறிந்து கொள்வதற்கும் சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. கல்வித் துறையிலும், பொது வாழ்விலும் ஆங்கில மரபு மிக உயர்ந்த தரத்தை உடையது. நம்முடைய நாட்டிலும் கூட, ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்டு அது மிகுந்த நன்மையை செய்துள்ளது. ஹிந்தி மொழி இனி மேல்தான் வளர்ந்து ஒரு மரபை உண்டாக்க வேண்டும் என்பதோடுகூட ஏறத்தாழ 150 வருஷங்களாகத்தான் அது வாழ்ந்தும் வருகிறது.

ஆங்கிலத்தை நீக்குந் தன் அடிப்படை உணர்ச்சி.

18. இந்தியச் சூழ்நிலையிலிருந்து ஆங்கிலத்தை நீக்க வேண்டுமென்ற விருப்பம் இரண்டு மனோ நிலைகளிலிருந்து பிறக்கிறது.

(1) ஆங்கிலத்தைப் பயன்படுத்தினால் ஏனைய இனத்தாரின் எதிரே நாம் தலை குனிய நேரிடும் என்ற தாழ்வு மனப்பான்மை. (2) ஆங்கிலத்தைத் தேசிய விரோதமானது, இந்திய விரோதி, என்று கருதினால் பல மொழி வழங்கும் நாடாகிய இங்கு, எல்லோருடைய மரியாதையையும் பெறக்கூடிய தகுதிவாய்ந்த ஒரு பொது மொழி இல்லை என்பதை நன்கு அறிந்து கொள்ளாத மனப்பான்மை. பழங்காலத்தில் ஆங்கிலத்தைப்

பொதுமொழியாக வைத்துக்கொண்டே மிக ஆழ்ந்த தேசபக்தர்களாக இருந்து வந்தோம்; இன்றும் இருந்து வருகிறோம். நம்முடைய நாகரீகத்தின் அடிப்படையையும் நிலையையும் புரிந்துகொள்ள ஆங்கிலத்தின் உதவியை எளிதாக நாடினோம். பெரும்பாலான இந்தியர்கள் இன்றைய நிலையில் ஆங்கிலத்தின் பழைய வரலாற்றையும் இந்தியாவில் அதன் அடிப்படையையும் சிந்தித்துப் பார்த்தால் இன்றைய நிலையில் அதனைப் பொது மொழியாக வழங்குவதால் இந்தியாவின் தன்மானத்திற்கு ஒன்றும் குறைவில்லை என்பதை நன்கு அறிந்து கொள்வார்கள். நம்முடைய நாட்டிலுள்ள மிகச் சிறந்த அறிவாளிகள் பலரும் இதே கருத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதை நான் அறிவேன். சென்னையிலும் வங்காளத்திலும் உள்ள சான்று பகர்வோர் அனைவரும், பிற ராஜ்யங்களிலுள்ள மிகச் சிறந்த அறிஞர்கள் பலரும், அவர்கள் கல்வித் துறையிலும், இந்தியப் பொது வாழ்வுத் துறையிலும், அறிவுத் துறையிலும் பெரிதும் உதவி இருக்கிறார்கள் என்றாலும் இந்தக் குறிப்பில் நான் சொல்லியவற்றை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். உதாரணத்திற்காக ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி, ஸ்ரீ சி. பி. ராமசாமி ஐயர், ஸ்ரீ லக்ஷ்மணசாமி முதலியார், ஸ்ரீ பி. வி. ராய், ஸ்ரீ கே. எம். முன்ஷி, ஸ்ரீ எம். ஆர். ஜெயகர் என்பவர்களோடு பிரசித்தி பெற்ற விஞ்ஞானிகளாகிய ஸ்ரீ வி. வி. ராமனையும், டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனையும் குறிப்பிடுகிறேன்.

ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளக் காரணங்கள்.

19. நம்முடைய அரசியல் வாதிகள் பலரும், ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்று கூச்சலிடுகின்ற மொழித் தேசிய வாதிகளும், புரிந்துகொள்ளத் தவறிவிட்ட ஒரு விஷயம் உண்டு. இந்திய அறிவாளி எவனும், அவன் வட இந்தியா, வங்காளம், மகாராஷ்டிரம், தமிழ்நாடு ஆகிய எந்த இடத்திலிருந்தாலும், நம்முடைய கல்வித் துறையிலும், பொது வாழ்வின் உயர்ந்த நிலையிலும் ஆங்கிலத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறினால், அது கோணல் புத்தியினாலோ, தேச பக்திக் குறைவினாலோ அல்லது ஓர் இனத்தாரை அதிகாரிகளாக்கும் எண்ணத்தாலோ அல்லது அவனுடைய தேசீயப் பண்பாட்டை அறியாததனாலோ அன்று. அதற்குப் பதிலாக நடைமுறையே நன்கு அறிந்தமையாலும், மனித சமுதாயத்தின் குறிக்கோளை நன்கு அறிந்தமையாலும் அவன் அவனுடைய ஆன்மீகத் துறை வளர்ச்சியை நன்கு செய்துகொள்ள ஆங்கிலத்தின் மூலம் ஒரு வழியைக் காண்கிறான் ஆதலாலும், அகில உலகத்திலும் உள்ள மிகச் சிறந்த எண்ணங்களுக்கும் அறிவியல் வெளிப்பாட்டுக்கும் ஆங்கிலத்தை ஒரு வழியாகக் காண்கிறான் ஆதலாலும் அதனை விரும்புகிறான். அன்றியும் “நிறைந்த விஞ்ஞான அறிவை” அம்மொழி பெற்றிருப்பதும் ஒரு காரணமாகும்.

இன்றைய நிலையில் இந்தியக் கல்வி முறையில் ஆங்கிலத்தை ஹிந்தியினாலோ அன்றிப் பிராந்திய மொழிகளினாலோ குறைத்தோ அல்லது ஒழித்தோ இருப்பது, மிகுதியாகத் தரக் குறைவை உண்டாக்கியிருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கினறனர். ஹிந்தியோ அல்லது பிராந்திய மொழிகளோ விஞ்ஞான், தொழில் துறை, தொழில் நுட்பக் கலைக் கருத்துக்களை நன்கு வெளியிடுவதற்குரிய வளர்ச்சியைப் பெறுமையினாலும், இன்னும் சொல்லப்போனால் பொது ஆட்சித் துறையில்கூட அவை தக்க வளர்ச்சியை அடையாமையினாலும், இந் நிலை வந்தே தீரும். ஆங்கிலத்தை முறையாக போதித்தால் மன விழிப்பையும், அறிவோடு கலந்த ஆர்வத்தையும், உயர்ந்த தரத்தையும் தரக்கூடிய கருவி மொழி, இது வரையில் நமக்குக் கிடைத்துள்ள அது ஒன்றுதான் என்பதையாவது அனைவரும் ஒத்துக் கொள்ளவேண்டும். விடுதலை பெற்ற இந்தியாவில் சுதந்தரமான அறிவு வளர்ச்சி எந்த இடைநிலை மொழியின் மூலம் கிடைப்பதானாலும் அதைத் தான் முதலாவதாகக் கருதவேண்டுமே தவிர, இந்திய மொழி என்பதற்கு அடுத்தபடியாக இதனை வைக்கக்கூடாது. எனவே உணர்ச்சியின் காரண

மாக இன்று நமக்குக் கிடைத்துள்ள அறிவைப் பெறுவதற்குச்சிறக்குப் கருவியாக உள்ள ஆங்கிலத்தை நீக்கி விட்டால் அதுவே நம பேராபத்தாக முடியும்.

இன்றைய நிலைமை.

20. இன்று காணும் நிலைமை மிக விநோதமான ஒன்று. இந்தியா விலுள்ள எந்த மொழிகளுக்கும் மேற்பட்ட ஒரு சிறப்பைப் பெருத ஒரு மொழி இருக்கிறது. அம்மொழியைப் பேசுவோர், அதற்குப் பேராதரவு தருவோர் உள்ளிட்ட அனைவருமே, அது செய்ய வேண்டிய கடமைகளுக்கு ஏற்ற தகுதியை இன்னும் பெற வில்லை என்பதை ஏற்றுக் கொள்கின்றார் கள். நாம் நன்கு அறிந்ததும் நமக்கு உதவியாக இருப்பதுமான ஒன்றை விட்டு அறியப்படாத இதில் குதிக்க வேண்டியது அவசியம்தானு?

சட்டமும் நீதியும்.

21. நீதித்துறையைப் பொறுத்த மட்டில், அரசியல் அமைப்பில் 348-வது விதி வேண்டுமென்றே செய்யப்பட்டது. பெரும்பாலான நடுவணர்களும், இது பற்றிப் பேச தகுதியும், உரிமையும் உடையவர்களும் பகர்ந்த சான்று களிலிருந்து ஆங்கிலத்தின் இடத்தை இத்துறையில் ஹிந்தி மொழி எடுத்துக் கொள்ள முடியாதென்பதும், மிக உயர் நீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றங் களிலும் இன்று வழங்குகின்ற ஆங்கில மொழியில் மிக மிக நீண்ட காலத் திற்கு யாருமே தலையிடக் கூடாதென்றும் விளங்குகிறது. முறையான தொழில்நுட்ப அகராதிகளை மொழிபெயர்க்கும் வேலை அவசரப்பட்டுச்செய்யக் கூடிய தன்று.

இந்தத் துறையில் ஆங்கிலத்தின் நிலை மிக எளியதாகவும் அமைதி யான முறையில் வேலை செய்துகொண்டும் இருக்கிறது. ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை நிறுவ வேண்டுமேயானல் அல்லது ஏதாவது ஒரு பிராந்திய மொழியை வைக்கவேண்டுமானல் கூட மிகுதியான வெளியீடு களையும், அறிக்கைகளையும் இந்த மொழிகளில் மொழி பெயர்க்க வேண்டி நேரிடும். அத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபட்டால் பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிக்க வேண்டிவருமா லால் இந்தியாவில் இன்றுள்ள பொருளாதார நிலையில் இத்தகைய ஒரு காரியத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அதிலும் இன்னும் தயாராகிக் கொண்டிருக்கிற ஒரு மொழிக்கு நியாயமல்லாத முறையில் இப்படி ஒரு முக்கியத்துவத்தைத் தரவேண்டுமா என்பதும் ஆராய்வதற் குரியது. நம்முடைய சட்ட முறையும், சட்ட ஞானமும் ஆங்கிலத்தோடு தொடர்பில்லாது இருந்திருப்பின் அது வேறு விஷயமாக இருக்கும். ஆனல் இன்றைய சூழ்நிலையில் நம்முடைய சட்ட முறையில் பலப்பல ஆண்டு களுக்கு ஆங்கிலமே அஸ்திவாரமாகவும், அடிப்படையாகவும் இருக்கவேண் டும்.

அறிக்கையில் கண்டுள்ள சட்டங்களும் திட்டங்களும்.

22. மக்களினுடைய மன நிலை மிகவும் ஆழமாக இருக்கும் இந்நேரத் தில் மறைந்திருக்கின்ற பொருமையும், குறுகிய மனப்பான்மையும், மாகாணப் பற்றும், நிறைந்திருக்கின்ற இந்நிலையில், இந்த அறிக்கை ராஜ் யங்கள் பலவிதமான சட்டங்களையும், திட்டங்களையும் ஏற்படுத்தி ஹிந்தியை இன்னும் விரைவாக வளர்க்க வேண்டும் என்று கூறுவதைப் பார்க்கும் பொழுது வருந்தாமலிருக்க முடியவில்லை. 5, 10, 15, 20 ஆண்டுகள் என்று வரையறை செய்து கொண்டு படிப்படியாக மாற்றம் செய்வதற்கு மிக விரைவான முறையில் வழிகளைச் சொல்வதெல்லாம் மக்களினுடைய மனோநிலை சரியாக இல்லாததையும், நடைமுறையில் இடையூறுகள்

ஏற்படுகின்றதையும் கவனித்துப்பார்க்கும்பொழுது இந்த முறையில் மொழி மாற்றத்தை விரைவாகச் செய்ய வேண்டும் என்று கருதுவது அர்த்தமற்ற தாகவே ஆகிவிடுகிறது.

23. யூனியன் பொதுப் பணிக் கழகம் நடத்தும் அகில இந்தியப் பணிப் பரீட்சைகளை அல்லாமல் முதல் வகுப்பு மத்தியப பணிப் பரீட்சை அதாவது ஐ.எப்.எஸ்., ஐ.ஏ. அண்டு ஏ.எஸ். இன்னும் பாதுகாப்புப் பணியிலுள்ள அதிகாரத் துறைப் பரீட்சைகள் ஆகிய அனைத்திலும் இன்னும் பல ஆண்டுகளுக்குப் பரீட்சை இடைநிலை மொழி ஆங்கிலமாகவே இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆங்கிலம் பெற்றுள்ள தகுதியை ஹிந்தி மொழி அடைந்த பிறகு மாணவர் விரும்பினால் எடுத்துக்கொள்ளக்கூடிய இடைநிலையாக அதனை அமைக்கலாம். ஆனாலும் ஹிந்தி மூலம் பரீட்சை எழுதும் மாணவனை ஒன்று அல்லது இரண்டு கடினமான ஆங்கில வினாத் தாள்களை எழுதுமாறு கட்டாயப் படுத்தவேண்டும். அதேபோல ஆங்கிலத்தில் எழுதும் மாணவன் ஒன்றிரண்டு வினாத்தாளை ஹிந்தியில் எழுத வேண்டும் என்றாலும் இன்னும் பல ஆண்டுகளுக்கு ஹிந்தி வினாத்தாள் எளிமையானதாக இருத்தல் வேண்டும். இந்தப் பரீட்சைகளில் இடை நிலை மொழிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தக்கூடாதென்று உறுதியாக நம்புகிறேன். ஹிந்தியைப் புகுத்தும் முறையில் ஏற்படுகிற இடையூறுகளை நீக்குவதற்கு இந்த அறிக்கை வழிதுறைகளைக் கூறியிருக்கின்றது. ஆட்சித் துறையில் ஏற்படக் கூடிய பிற்போக்கு, வன்மைக் குறைவு என்பவற்றோடு பண விரயம் ஆகியவைகள் ஒருமுறைக்கு இரண்டு முறையாக இது பற்றிச் சிந்திக்கச் செய்கின்றன.

இத்துறையில் முடிவு செய்வதற்கு உரிய பொறுப்பை எதிர்காலத்தில் அமைக்கப்படுகின்ற மற்றொரு கழகத்திற்கு தள்ளவிடாமல் இப்பொழுதே இப்பிரச்னையை எதிர்த்து இதற்கு ஒரு முடிவு காணவேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்தக் கழகம் இவ்விஷயங்களை ஆராயும் பொழுது இப் போட்டிப் பரீட்சைகள் விஷயத்தில் இரண்டு கட்சிகள் இருப்பதையும், ஒன்று ஹிந்தியை ஆதரித்தும், மற்றொன்று பிராந்திய மொழிகளை ஆதரித்தும் இருப்பதைக் கண்டு நான் மிகவும் அஞ்சி விட்டேன். இந்த இரண்டு மாறுபட்ட கருத்துக்களையும் உடையவர்களுடைய மொழிவெறி இந்தியாவின் ஒற்றுமைக்கும், ஒருமை பாட்டுக்கும் உலை வைத்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். இதனை இப்பொழுதே நிறுத்தவேண்டுமென்றும், அகில இந்தியப் பரீட்சைகளுக்கும் முதல் வகுப்பு மத்தியப் பணிப் பரீட்சைகளுக்கும் பல மொழிகளை இடைநிலைகளாக வைக்கின்ற கொள்கையை ஏற்றுக்கொள்ளவே கூடாதென்றும் சிபார்சு செய்கிறேன்.

அளவு மீறிய அவசரம் அறிவுடைமை ஆகாது.

24. இப்பொழுது உள்ள நிலையில் பிற மொழிப் பிராந்தியங்களில் உள்ளவர்கள் கூறுவதெல்லாம் இந்த விஷயத்தைப் பற்றிய அவசரம் கூடாதென்பதும், கால வரையறை செய்வது நடைமுறைக்கு ஏற்றதன்று என்பவையுமாம். எதிர்காலத்தில் ஹிந்தி மொழி இந்தியாவிலுள்ள பெரும்பான்மையானவரால் அறிந்து கொள்ளப்பட்டு அனைவராலும் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய ஒரு நிலை நம்முடைய சிறந்த குறிக்கோளாக இருக்கட்டும். அப்பொழுது ஹிந்தி பேசும் மக்கள் அவர்களுடைய வன்மையால் கலை, விஞ்ஞானம் ஆகிய இரண்டு துறைகளிலும் நல்ல வளர்ச்சி பெற்று ஆங்கிலத்தோடு போட்டியிடக்கூடிய ஒரு நிலையை ஹிந்திக்கு அளிப்பார்கள். அப்பொழுதுதான் பிற மொழி பேசுவோர் இந்தியை இந்நிலை பயிற்சியோடு ஏற்றுக்கொள்ளும். இப்பொழுது இதனைச் செய்வது குதிரைக்கு முன்னர் வண்டியை வைப்பதாகும். குறைந்த அளவு எதிர்ப்புடைய வழிகளிலேயே இப்பொழுது செல்வோம். ராஜ்யப் புனரமைப்புக் கழகத்தின்

சிபார்சுகள் எல்லையற்ற மன வேறுபாட்டையும், விரோத மனப்பான்மையையும் வளர்த்திருக்கின்றதாதலின் அஞ்சுவதற்கு மிகுதியான காரணங்கள் உள்ளன. நம்முடைய அரசியல் வாதிகளில் பலர் ராஜ்யப் புனரமைப்புக் கொள்கையையும், மத்திய அரசாங்கத்தில் ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை ஏற்றுக் கொள்வதையும் அவ்வளவு முக்கியமானவை அல்ல என்று கூறிச் சில நாட்களுக்கு தள்ளி வைக்கக் கூறினார்கள். எவ்வாறாயினும் பிற மொழி பேசுகின்ற ராஜ்யங்களின் சட்ட மன்றங்களின் மூலம் பிற மொழி பேசுகின்ற மக்களின் கருத்தை அறிந்து கொள்ளாமல் மத்திய அரசாங்கம் ஒன்றையும் செய்துவிடக்கூடாது.

அரசியல் அமைப்பு.

25. எங்களுடைய விசாரணையின்பொழுது அரசியல் அமைப்பு ஹிந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளதை ஏதோ ஒரு தெய்வீகச் சட்டமாகக்கருதி அதனை மாற்றக்கூடாதென்று அதன் ஆதரவாளர்கள் கூறியதைக் கண்டேன். எந்த அரசியலமைப்பும் மாற்ற முடியாததன்று ; நம்முடைய அரசியலமைப்பும் தேசத்தின் நலத்தை ஒட்டி மாற்றப்படக்கூடியதே. இதற்கு முன்னரே பலதடவை அரசியலமைப்பை மாற்றியுள்ளோம். இவ்வாறு மாற்றத்தைக்கூடாது என்று தடை செய்பவர்கள் ஹிந்தி யூனியன் மொழியாக ஆவதற்குரிய தகுதியைப் பெற வேண்டும் என்பதை அறிந்து கொள்ளவில்லை. இன்றுள்ள அரசியலமைப்பின் ஏற்பாட்டில் அவர்கள் மகிழ்ச்சி அடையும் பொழுது, பிற மொழி பேசுபவர்களைக் கட்டாயப்படுத்தும்பொழுது ஹிந்தி மொழி பேசும் தாங்களும் தங்களுடைய மொழியும்கூட அதற்கு ஏற்ற நிலையில் இல்லை என்பதையும் கவனிக்க மறந்துவிடுகிறார்கள். இந்தியாவின் ஆட்சிமொழி போன்ற மிக உயிர்நாடியான விஷயத்தில் அது பிற மொழி பேசுபவர்களை மிகுதியும் பாதிக்கின்ற காரணத்தால் அரசியல் அமைப்பு உறுதியாக மாற்றப்படக்கூடியதே. மேற்கு வங்காளத்தில் சான்று பகர்ந்தவர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள் உள்பட, 1965-ல் ஹிந்தியைப் புகுத்துவதற்கு உறுதியாகத் தம் எதிர்ப்பை அறிவித்தார்கள். அதே போலவே சென்னை மாகாணத்திலும் முதலமைச்சர் உள்பட அநேகமாக எல்லோருமே இம் மறுப்பை அறிவித்தார்கள். மைசூர் ராஜ்யத்திலும் முதலமைச்சர் உள்பட அனைவருமே இக்கருத்தைத் தெரிவித்தார்கள். சென்னை அரசாங்கம் 1965-க்குப் பிறகும் ஆங்கிலம் இருந்து வரலாம் என்று சாதாரண முறையில் முதலில் கூறிவிட்டு அடுத்த கடிதத்தில் அரசியல் அமைப்பை இவ்வாறு திருத்துவது அவர்களால் வரவேற்கப்படும் என்பதையும் தெரிவித்துள்ளது.

என்னுடைய குறிப்பிட்ட சிபார்சுகள்.

26. என்னுடைய கருத்தைச் சுருக்கமாகத் தெரிவித்த பிறகு நாட்டில் இன்றுள்ள நிலைமையை நன்கு கவனித்துக் கீழ்க்கண்ட குறிப்பிட்ட சிபார்சுகளை நியாயமானதென்று கருதிச் செய்கிறேன். அவை நாட்டிலுள்ள அரசாங்கங்கள், சட்ட மன்றங்கள், மக்கள் ஆகிய அனைவரிடமும் வழங்கப்பட வேண்டும். இம்முறையில்தான் மக்களின் தலையெழுத்தை நிர்ணயிப்பவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும்.

இந்தக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கையின்படி "அரசியலமைப்பின் 344-வது விதியில் சொல்லப்பட்ட ஐந்து விஷயங்கள் பற்றி ஜனாதிபதிக்குத் தன்னுடைய சிபார்சுகளைச் செய்ய வேண்டும். அங்ஙனம் செய்யும்பொழுது இந்தியாவின் தொழில், பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சியையும் பிற மொழி பேசுகின்ற பிராந்தியங்களிலுள்ள மக்கள் பொதுப் பணிகளில் ஈடுபடுவதற்குரிய தேவையையும் மனத்தில் கொண்டு சிபார்சுகள் செய்ய வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு ஜனாதிபதியவர்கட்கு மிக்கப் பணிவுடனும், மரியாதையுடனும் கீழ்க்கண்ட சிபார்சுகளைச் செய்கிறேன் :—

(1) ஓர் இனத்தாருக்குப் பிராந்திய மொழியாக உள்ள ஹிந்தியை, மற்ற இனத்தாராகிய பிற மொழி பேசுவோர் ஹிந்தி மொழியிலே

தக்க வசதியும், வன்மையும் அடைவதற்குள்ளாக யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் பயன் படுத்தினால், ஹிந்தி பேசும் மக்கள் பிற மொழி பேசும் மக்களைக் காட்டிலும் அதிகப்படியான சலுகை ஒன்றைப் பெறுவார்கள். அவ்வாறு செய்யப்பட்டால் அதன் பயனாக இந்தியாவில் பொது வாழ்விலும், ஆட்சித் துறையிலும், எல்லா இலாக்காக்களிலும் சலுகை பெற்ற இனமாகிய ஹிந்தி பேசும் இனம் என்ற ஒன்று உண்டாகிவிடும். மேலும் அதன் பயனாகப் பிற மொழி பேசும் மக்களின் மொழி விஷயத்தில் அவர்களுடைய ஆதார உரிமைகள் நிச்சயமாகப் பாதிக்கப்படும். இது அகில இந்தியச் சூழ்நிலையிலும், அவர்கள் ராஜ்யங்களைப் பொறுத்த மட்டிலும் ஏற்பட்டுவிடும். மேலும் இன்றைய அரசியல் சூழ்நிலையை நோக்கும்பொழுது இந்தியாவிலுள்ள பல்வேறு ராஜ்யங்களிலும், மொழிப் பொறுமையும், எல்லைப் பொறுமையும், போட்டியும் மிகுந்திருத்தலினாலும், நிலைமை குழப்பம் அடைந்துள்ளதாதலாலும் நீண்ட கால மாறுபாடு எதனையும் இப்பொழுது செய்வதற்கில்லை. குறிப்பாக அந்த மக்கள் ஹிந்தி வட்டத்தின வெளியே இருப்பவர்களானால் அவர்களுடைய மொழி, மற்ற உரிமைகளையும் இந்த மாறுதல்கள் பாதிக்கும், ஆதலாலும் இப்பொழுது எத்தகைய நீண்ட கால மாறுதலையும் செய்யக்கூடாது.

(அ) யூனியன் ஆட்சி விவகாரங்களில் படிப்படியாக ஹிந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்ற பிரச்னையை இப்பொழுதைக்கு ஒத்திவைக்க வேண்டும். ஏனென்றால் யூனியனுக்குள்ளாக அனாவசியமான பல குழப்பங்களை அது உண்டாக்கும். மேலும் அரசியலமைப்பின் 344-வது விதி (4)-வது பிரிவின் படி அமைக்கப்படுகின்ற கழகம் நாட்டில் உண்டான இநத நிலையைக் கவனித்துத் தாங்கள் சிபார்சுகளைச் செய்யும்பொழுது கல்வித் துறை வளர்ச்சி, ஆட்சித் துறையில் தரம், இந்தியாவிலுள்ள பிற மொழி பேசுவோர்களின் மனக் கருத்து ஆகியவற்றையும் ஆராய்ந்து சிபார்சுகளைச் செய்யவேண்டுமென்று உத்திரவு இட வேண்டும். ஜனாதிபதியவர்களும் நாட்டிலுண்டான இந்த மாறுபட்ட நிலையை நன்கு சிந்தித்து அறிக்கையின்படி ஆணையிடுவதற்கு முன்னர் இவற்றிற்கு ஏற்ப ஆணையிட வேண்டுமென்று வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளப்படுகிறார்.

(ஆ) யூனியன் விவகாரங்களில் எல்லாவற்றிற்குமோ அன்றிச் சிலவற்றிற்கோ ஆங்கிலம் பயன் படுவதைப் படிப்படியாகக் குறைக்க வேண்டும் என்பதையும், இந்தியாவின் ஒற்றுமையைக் கருதியும், ஆட்சித் துறையின் தரத்தைக் கருதியும் இந்திய மக்கள் விஞ்ஞானத்திலும், தொழில் துறையிலும், கலைத் துறையிலும் அடைய வேண்டிய முன்னேற்றத்தைக் கருதியும் இப்பொழுதைக்கு ஒத்திவைக்க வேண்டும். மேலும் அரசியலமைப்பின் 344-வது விதி (4)-வது பிரிவின்படி அமைக்கப்படுகின்ற கழகம் மேலே (அ) பிரிவில் கூறியபடி தொழிற்படவேண்டும்.

(2) இன்னும் பல காலத்திற்கு அரசியலமைப்பு 348-வது விதியில் கூறப்பட்ட எல்லாக் காரியங்களுக்கும் ஆங்கிலத்தின் உபயோகத்தையே தொடர்ந்து மேற்கொள்வதோடு உயர்நீதிமன்றங்களிலும், மிகஉயர் நீதிமன்றத்திலும் இதையே செய்யவேண்டும். ராஜ்யங்களைப் பொறுத்த மட்டில் கீழ்நிலை நீதி மன்றங்களில் ஆங்கிலத்தோடு சேர்த்து அவற்றின் பிராந்திய மொழிகளைப் பயன் படுத்த உரிமை வழங்கவேண்டும். மத்தியப் பாராளு மன்றத்திலும், ராஜ்யச் சட்டமன்றங்களிலும் இன்னும் பல காலத்திற்கு ஆங்கிலமே தொடர்ந்து இருந்துவருவதோடு ஆங்கிலத்தில் பழக்கமில்லாதவர்கள் விரும்பினால் பிராந்திய மொழியையோ அல்லது ஹிந்தியையோ பயன் படுத்த உரிமை இப்பொழுதுள்ளது போலவே

வழங்க வேண்டும். ராஜ்யங்கள் அவைகளின் பிராந்திய மொழிகளை ஹிந்தியோடும், ஆங்கிலத்தோடும் கலந்து பயன் படுத்த உரிமை வழங்கவேண்டும்.

(3) அகில இந்தியாவிலும் ஏற்படக் கூடிய வசதியைக் கருதியும், எளிதாகப் பரிமாறிக்கொள்ளக்கூடிய நலத்தை உத்தேசித்தும், விஞ்ஞானக் காரியங்களை நினைத்தும் இந்திய எண்களின் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட பன்னாட்டு வடிவத்தை நாடு முழுவதிலும் எல்லா மொழியிலும் பயன் படுத்த வேண்டும். இதில் மாறுதல் செய்வது குழப்பத்திற்குக் காரணமாகும்.

(4) ஒரு மொழியை நம்முடைய இஷ்டம்போல் வளர்க்க முடியாது; ஆதலால் அந்த மொழி உண்மையாக வளர்ச்சி அடைவதற்கு ஒரு கால அட்டவணையைத் தயாரித்தல் அர்த்தமற்ற செயலாகும். மேலும் பயனைப்பற்றி உறுதியாக ஒன்றும் சொல்ல முடியாது. ஆதலால் இக்கால அட்டவணைத் தயாரிப்பு மன உளைச்சலையே உண்டாக்கும். விஞ்ஞானத் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் மக்கள் மனம் நன்கு முன்னேறினால் ஒழிய அவர்கள் பயன்படுத்தும் மொழி தேவையான அளவு கருத்தை வெளியிடும் கருவியாக அமையமுடியாது. இது அரசியல் துறையாக இருப்பினும், வாழ்வின் வேறு எந்தத் துறையாக இருப்பினும் இதே முடிவுதான்.

பல்வேறு பிராந்திய மொழிகளையும் பயன் படுத்தும் ராஜ்யங்கள் தாமாக விருப்பப்பட்டு ஹிந்தியை நன்கு வளர்த்து அவர்கள் பிராந்தியம் முழுவதிலும் ஹிந்தி மொழி நன்கு பரவியபிறகு யூனியனுக்கும், அந்த ராஜ்யங்களுக்குமிடையேயும், ஒரு ராஜ்ய அரசாங்கத்துக்கும் மற்ற ராஜ்ய அரசாங்கத்திற்கும் இடையேயும் எந்த அளவு ஹிந்தியைப் பயன் படுத்தலாம் என்பதை அந்த ராஜ்யங்களே முடிவு செய்யவேண்டும்.

எனவே இப்பொழுதைக்கு மேற்கண்ட காரியத்திற்கு ஒரு கால அட்டவணை தயாரிப்பதை நிறுத்திவைக்க வேண்டுமென்றும் பிற மொழி பேசும் ராஜ்யங்களைப் பொறுத்தவரை ஹிந்தியைப் பரப்பும் முறையை அந்தந்த ராஜ்யங்கள் தாமாகவே விரும்பி ஏற்றுக் கொண்டு விருப்ப முறையில் பரப்ப வேண்டுமென்றும் நான் சிபார்சு செய்கிறேன்.

(5) பல்கலைக் கழக நிலையில் ஆங்கிலத்தை இடைநிலை மொழி நிலையிலிருந்து நீக்குகின்ற அளவுக்கு ஹிந்தி மொழி தன்னைத் தயாரித்துக் கொள்கின்றவரை ஆங்கிலமே போதன மொழியாக இருந்து வரவேண்டும். உறுதியாக ஹிந்தி மொழி இடை நிலையாக வந்துவிட்டாலும்கூட விஞ்ஞானம், தொழில்துறை, தொழில் நுட்பப் பாடங்கள், அரசியல், பொருளாதாரம் ஆகிய பாடங்களுக்கு இன்னும் மிகுதியான காலத்திற்கு ஆங்கிலமே போதன மொழியாக இருந்து வரவேண்டும். இதனால் இந்தியாவிலுள்ள பல வேறு பல்கலைக் கழகங்களிலும், பிராந்திய மொழிகளைப் படிப்பதற்கும், வளர்ப்பதற்கும் எவ்வித இடையூறும் ஏற்படாது.

(6) அகில இந்தியப் பணிகளுக்கும், மேலே குறிப்பிடப்பட்ட மத்திய பணிகளுக்கும் நடைபெறுகின்ற போட்டிப் பரீட்சைகளில் இன்னும் பல காலத்திற்கு ஆங்கிலமே பரீட்சைக்குரிய இடைநிலை மொழியாக இருந்துவரவேண்டும். அதன் பிறகு ஹிந்தியை மாற்று இடைநிலை மொழியாகக் கொள்ளலாம் என்றாலும், மேலே நான் குறிப்பிட்டுள்ள அதிகப்படியான வினாத் தாள்களை எழுதும் கட்டுப்பாட்டுக்கு உள்ளடங்கியே இது இருத்தல் வேண்டும்.

(7) ராஜ்யங்களைப் பொறுத்தவரை எல்லா ராஜ்ய விவகாரங்களுக்கும் தேவை என்று பட்டாலும் செய்வது எளிது என்று கருதினாலும் அந்தப் பிராந்திய மொழியைப் பயன்படுத்தலாம். ராஜ்யங்கள்

நடத்தும் பொதுப்பணிக் கழகப் பரீட்சைகளில் பிராந்திய மொழி களோ இடைநிலை மொழிகளாக இருப்பதோடு மாணவர்கள் விரும்பி ணல் ஆங்கிலத்தையோ அல்லது ஹிந்தியையோ இடைநிலை மொழி யாகக் கொள்ளலாம்.

(8) யூனியன் ஆட்சி விவகாரங்களில் ஆங்கிலத்தை நீக்குவதற்குரிய தகுதியை ஹிந்தி மொழி பெறுதவரையில் ஆங்கிலமே யூனியன் ஆட்சி மொழியாக இருந்து வரவேண்டும். இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஹிந்தி மொழியைப் போதனு மொழியாக ஏற்றுக்கொள்ளாத வரையிலும் ஆங்கிலமே யூனியன் விவகாரங்களுக்கு இருந்து வரவேண்டும். ஆதலால் அரசிய லமைப்பின் 8-வது ஷெட்யூலில் இந்தியாவிலுள்ள மொழிகள் என்ற வரிசையில் ஆங்கிலமும் இடம் பெறவேண்டும்.

முடிவுரை

27. முடிவாக ஏகோபித்த ஒரு முடிவைச் சொல்ல முடியாமைக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய தலைவரும், ஏனைய சக ஊழியர்களும் என்பால் காட்டிய அன்பை நான் போற்றுகிறேன் என்ருலும் அடிப்படையான கொள்கைகள் பற்றி ஏற் பட்டுள்ள கருத்து வேறுபாடுகளில் நான் சமாதானம் செய்து கொள்ள முடியவில்லை. கழகத்தின் உறுப்பினன் செய்யவேண்டிய கடமை என் பது பற்றியும், நாட்டின் முன்னேற்றம் கருதியும், ஒற்றுமை ஒருமைப்பாடு என்பவற்றின் தேவையைக் கருதியும் இந்த விஷயத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்த பிறகு, குறிப்பிட்ட சில சிபார்சுகளை செய்திருக்கின்றேன். இந்தச் சிபார்சுகளைச் செய்யும்பொழுது கீழ்க்கண்ட நான்கு குறிக்கோள் களும் என் மனத்தை விட்டு அகலவில்லை என்பதை மறுபடியும் கூற விரும்புகிறேன். அவையாவன :—

(1) தேசிய ஒற்றுமையைக் காப்பாற்றுதல்,

(2) ஆட்சித் துறையின் வன்மையைக் காப்பாற்றுதல்,

(3) எல்லாப் பகுதி மக்களினிடையேயும் அறிவை வளர்த்தல்,

(4) நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள எல்லாப் பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பம் கிடைக்குமாறு செய்தல், என்பவைகளாம்.

மொழிப் பிரச்னை பற்றிக் கடைசி முடிவுகளைச் செய்ய வேண்டியவர்கள் இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களையும், நன்கு ஆராய்வார்கள் என்று நம்புகிறேன்.

பி. சுப்பராயன்.

பம்பாய்

ஆட்சி மொழிக் கழகத்தின் அறிக்கையோடு

(இந்திய அரசாங்கம்)

பிற்சேர்க்கையாகச் சேர்ப்பதற்குரிய தனிப்பட்ட குறிப்பு

மகன்பாய் பி. தேசாயினுடையது.

பொருளடக்கம்

முகவுரை

(இந்தக் குறிப்பு ஏன் ?)

1. மிகுதியான பொறுப்பை உணர்ந்து வேண்டா வெறுப்பாக இந்தக் குறிப்பை வரைகின்றேன். 1956-ம் வருஷம் ஜுன் மாதம் 19-மதேதி ஸ்ரீநகரில் என்னுடைய சக ஊழியர்கள் (ஆட்சி மொழிக் கழகத்தின்) ஜனாதிபதிக்கு இந்திய அரசியல் அமைப்பின் 344 (2) வது விதியின்படி சமர்ப்பிக்கப்படுகிற இந்த அறிக்கையில் கையெழுத்திடவேண்டும் என்று கேட்டார்கள். தனியே நான் தருகின்ற அறிக்கையை உளபபடுத்தி என் கையெழுத்தை இட்டேன். இப்பொழுது அறிக்கையில் சேர்ப்பதற்கு இந்தக் குறிப்பைத் தருகிறேன்.

(அ)

2. இந்திய அரசியல் அமைப்பின் 344 (1) விதியின்படி ஜனாதிபதி எங்களை நியமித்தார். இந்த விதியின் அடுத்த பகுதி அதாவது விதி 344 (2) ஆட்சி மொழிக் கழகத்தில் எங்கள் கடமை என்ன என்பதை அறிவிக்கிறது. அது ஜனாதிபதிக்கு இந்தக் கழகம் செய்யவேண்டிய ஐந்து சிபார்சுகளை (எ), (பி), (சி), (டி), (இ), என்ற ஐந்து பிரிவுகளாகக் கொண்டுள்ளது. இவைகளே ஆட்சி மொழிக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளாகும்.

3. இதனை அடுத்துள்ள பகுதி அதாவது விதி 344 (3) ஆட்சி மொழிக் கழகத்திற்கு (சுருக்கங்கருதி இனி ஆ. மொ. க. என்று கூறுவோம்) வழி சொல்லும் முறையில் "இந்தியாவின் தொழில், பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சிகளுக்கும் இடையூறு உண்டாகாமலும், பிற மொழிப் பிராந்தியங்களில் உள்ளவர்கள் பொதுப்பணித் தேவைகளுக்குக் குறை ஏற்படாமலும் கடமையைச் செய்ய வேண்டும் ; விதி 344 (2)-ன்படி சிபாரிசுகள் செய்ய வேண்டும்" என்று கூறுகிறது. இந்த வழிகாட்டி இரண்டு பாதுகாவல்களை அதாவது (1) பலவகையான தேசீய வளர்ச்சி, (2) பிற மொழிப் பிராந்தியங்களின் வசதிகளைப் பாதுகாத்தல், சிறப்பாக பொதுப் பணிகளில் இவற்றைப் பாதுகாத்தல் என்பவற்றை வெளியிடுகிறது.

4. இந்த விதியில் இந்தியாவின் ஒற்றுமையை ஒரு வழிகாட்டியாகச் சொல்லவேண்டிய தேவை இருந்ததில்லை என்பதை கவனிக்க வேண்டும். தேசீய ஒற்றுமை என்பது அரசியல் அமைப்பில்தானே அடங்கியிருப்பதாகலின், அது முழுவதிலும் இவ்வொற்றுமையைக் காணலாம். எனவே எத்தகைய ஒரு மொழி வடிவத்தைக் கண்டாலும் மொழிப் பிரச்னையை எங்ஙனம் முடிவு செய்தாலும் அது இந்தியாவின் ஒற்றுமையோடு ஒத்துப் போவதாகவே இருத்தல் வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. மற்றொரு வகையாகக் கூறுமிடத்து அரசியல் அமைப்பில் கண்ட மொழிப் பிரச்னையின் முடிவும் வடிவமும் அத்தகைய தேவைகளை அடிப்படையில் கொண்டே செய்யப்பட்டனவாதலின் நம்முடைய தேசீய வாழ்வின் இந்த அடிப்படையோடு ஒத்துப்போவதாகவே இருக்கும். எனவே ஆ. மோ. க. தன்னுடைய சிபார்சுகளைச் செய்யும்போழுது அரசியல் அமைப்பில் கண்ட இந்த வடிவத்திற்கு ஒத்துப்போகுமாறு செய்திருப்பின் அது நாட்டின் ஒற்றுமைக்குத் தீமை செய்வதாக இராது.

(ஆ)

5. விதி 344 (2) உடைய முதல் நான்கு துணைப் பகுதிகளையும் அதாவது (2) (எ), (பி), (சி), (டி) உடன் விதி 344 (3) என்று மேல் பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றை அப்படியே அரசியல் அமைப்பிலிருந்து எடுத்து ஆ. மொ. க. வின் நிர்மாணக் கோரிக்கைகளாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்மாணக் கோரிக்கையின் ஐந்தாவது பகுதியாகப் பேசப்பட்டுள்ள கால

அட்டவணை அரசியல் அமைப்பின் 344 (2) (இ) ஆவது விதியின்படியாகும். அவ்விதி ' யூனியன் ஆட்சி மொழி பற்றியும், யூனியனுக்கும் ராஜ்யத்துக்கும் இடையேயும், ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையேயும் தேவைப்படுகின்ற மொழிப் பற்றியும் வேறு ஏதாவது தகவல்கள் தர வேண்டும் என்று கழகத்தைக் கேட்கப்பட்ட பொழுது" என்று கூறுகிறது.

6. இந்த 344 (2)-வது விதியின் துணைப் பகுதியின்படியே ஜனாதிபதி ஆ. மொ. க. வின் நிர்மாணக் கோரிக்கையின் ஐந்தாவது கோரிக்கையைக் கேட்டுள்ளார். அதன்படி ' யூனியன் ஆட்சி விவகாரங்களில் ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்துவதற்கு ஒரு கால அட்டவணை தயாரிப்பது பற்றியும், யூனியனுக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்கும் இடையேயும், ராஜ்ய அரசாங்கங்களுக்கு இடையேயும் வழங்கும் மொழியாக ஹிந்தியை ஏற்படுத்துவது பற்றி ஒரு கால அட்டவணை தயாரிப்பதுபற்றியுமாகும்.

7. இந்தத் துணைப் பகுதி ஆ. மொ. க. விற்கு ஒரு குறிப்பிட்ட கடமையைத் தருகிறது. அதாவது இக்கழகம் ஜனாதிபதிக்கு வரையறுக்கப்பட்ட ஒரு கால அட்டவணையைச் சமர்ப்பிக்க வேண்டும். யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கும் ராஜ்யங்கள் யூனியனோடும் ஒன்றோடொன்றும் வழங்கிக்கொள்ளுகின்ற மொழியாகிய ஹிந்தியைப் படிப்படியாக புகுத்துவது பற்றிய நிகழ்ச்சி நிரலையும் தயாரிக்க வேண்டும்.

8. இந்தக் குறிப்பு மிகவும் முக்கியமானது. இதன்படி ஆங்கிலத்தை இப்பொழுது யூனியன் மொழியாக வழங்கிக்கொண்டு இருக்கின்ற நிலைமையிலிருந்து படிப்படியாகக் குறைத்து ஹிந்தியை அவ்விடங்களில் நுழைப்பதற்குரிய ஒரு கால அட்டவணையை ; தயாரிக்கவேண்டும்.

(இ)

9. மேலே குறிக்கப்பட்டுள்ள ஆ. மொ. க. வின் ஐந்தாவது நிர்மாணக் கோரிக்கை மேலும் ஒன்று இரண்டு நிகழ்ச்சிகளோடு சேர்த்தே விளங்கிக் கொள்ளப்பட வேண்டும். அதாவது "அரசியல் அமைப்புத் தொடங்கி ஐந்து வருஷங்களின் முடிவில் இக்கழகம் தொடங்கப்படுகிறது" என்பதையும் கவனிக்க வேண்டும். மேலும் இதே போன்ற கடமைகளுடன் 1960-ல் மற்றொரு ஆ. மொ. க. வேலை செய்யத் தொடங்கும். இத்தகைய ஒரு கால அட்டவணையைத் தயாரிக்கும்பொழுது ஆங்கிலத்திலிருந்து மொழி மாற்றம் செய்கின்ற வேலை 1965-ல் ஏறத்தாழ முடிந்து போகின்ற முறையில் ஒழுங்குபடுத்தி வரையறுத்து அமைக்கப்படவேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. எனவே ஆ. மொ. க. தன் விசாரணையின் பிறகு 1965-க்குள் இதனைச் செய்ய முடியாது என்று கருதினால் அதனை வெளிப்படச் சொல்லி இதற்கேற்ற ஒரு கால அட்டவணையைத் தயாரித்துக் கொடுக்கலாம். என்னுடைய கருத்து என்னவென்றால் நம்முடைய சிபார்சுகள் வரையறுத்த கொள்கைகளையும் நிகழ்ச்சி நிரலையும் தர வேண்டும். அதன்படி நடந்தால் அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட கால எல்லைக்குள் அக்காரியம் முடிவு பெறும் நிலையை அடைய வேண்டும்.

10. மேலும் கால அட்டவணையைத் தயாரிக்கும்பொழுது இது பற்றி மற்றொரு பகுதியையும் கவனிக்க வேண்டும். நாம் முதலாவது ஆ. மொ. க. வாக அமைக்கப்பட்டாலும் அடிப்படையிலிருந்து தொடங்கவில்லை. 1950-க்குப் பிறகு ஐந்து வருஷங்கள் கழிந்து மொழிப் பிரச்னையைப் பற்றிப் பேச வருகிறோம். இந்த ஆண்டுகளில் யூனியன் அரசாங்கமும், ராஜ்யங்களும் ஹிந்தி மொழியை வளர்த்துப் பரப்ப வேண்டிய காரியங்களைச் செய்து வருகின்றன. மேலும் ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்குத் தம்முடைய அலுவல்களை மொழி மாற்றம் செய்து வருகின்றன. என்னுடைய கருத்துப்படி இக்காரியங்களில் ஆ. மொ. க. தொடக்கத்திலிருந்தே தொடங்க வேண்டியதில்லை. இவ்விஷயங்களில் அரசாங்கங்கள் நகரத் தொடங்கிவிட்டன. யூனியன் நிலையிலும் ராஜ்யங்கள் நிலையிலும்

அரசியல் அமைப்பில் கூறப்பட்ட மொழி மாற்றத்தை அரசியல் கடமை என்ற முறையில் அவை செய்து வருகின்றன. இத்துறையில் ஆட்சியாளர் அல்லாத பிறபகுதியினரும் அவர்களுக்குரிய முறையில் தொழில்படுகின்றார்கள் என்பதைக் கவனித்து அவர்கள் வழங்கும் ஒத்துழைப்பை நாம் வரவேற்க வேண்டும்.

11. எனவே ஆ. மொ. க. வின் விசாரணைகளும் பிரச்னைகளும் அதனுடைய சிபாரிசுகளும் சென்ற ஐந்து ஆண்டுகளில் நடைப்பெற்றுள்ள வேலையின் அடிப்படையிலேயே தொடங்க வேண்டும். எனவே சென்ற ஐந்து ஆண்டுகளில் அதாவது 1950–55–ல் நடைப்பெற்றுள்ள நிர்மாண வேலைகளை ஆட்சித் துறையிலும் வெளித் துறையிலும் மதிப்பிட வேண்டியது அவசியமாகிறது. இவ்வேலைகளில் ஏற்பட்ட இடையூறுகள், தடைகள், ஏமாற்றங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து எதிர்காலத் திட்டம் வகுக்கும்பொழுது, கொள்கை வகுக்கும்பொழுது இவற்றை வெல்வதற்குரிய வழி துறைகளையும் ஏற்படுத்தலாம்.

(ஈ)

12. ஆ. மொ. க. இம்முறையில் தன் விசாரணையை நடத்தி அதனுடைய முடிவுகளையும் இந்த அறிக்கையில் தந்துள்ளது. இது திருப்திகரமானதாக இல்லை. சென்னை அரசாங்கம் ஆ. மொ. க. விற்குத் தந்த விளக்கக் குறிப்பில் "மத்திய அரசாங்கத்தில் ஆங்கிலத்திலிருந்து ஹிந்திக்கு மாறும் மொழி மாற்றப் பிரச்னைகள் அதிகமாகவும், சிக்கல் நிறைந்ததாகவும் பல்வேறு வகைப்பட்டதாகவும் உள்ளன" என்று சொல்வது போலவே உள்ளன. நம்முடைய நாட்டைப் போல பல மொழிகளுடைய பகுதிகளில் இத்தகைய பிரச்னைகளை சமாளிப்பது மிகவும் கஷ்டம் தான், என்றாலும் அந்தக் குறிப்பு இது பற்றிச் சொல்லுகின்ற வார்த்தைகளை, அதாவது "இந்தப் பிரச்னைகளை இன்னும் சரியாக முழுவதும் ஆராய்ந்து எடுத்து விளக்கக்கூட வில்லை; இன்னும் இதற்குரிய முடிவுகளை ஆராய்ந்து காண வேண்டும். குறிப்பிடப்பட்ட பதினைந்து ஆண்டுகளில் ஐந்து ஆண்டுகள் கழிந்துவிட்டாலும் மொழி மாற்ற வேலை தொடங்கப்படக்கூட இல்லை" என்பவற்றை இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

13. 1950–55 இடைக்காலத்தில் நடைப்பெற்ற வேலையை விசாரித்த பொழுது மேலே சொல்லப்பட்ட சொற்கள் மிகவும் உண்மையானவை என்று எவ்வித மறுப்பும் இல்லாமல் சொல்லலாம். இந்திய நாட்டில் மொழி மாற்றம் செய்வதற்குரிய வேலை அகில இந்திய நிலையில் தொடங்கப்பட்டுவிட்டது என்று சொல்வதற்குரிய எந்த ஒரு நிகழ்ச்சியையும் காண வில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஆ. மொ. க.வின் சிபாரிசுகளைக் கொண்டு 1965–ல் இவ்வேலை முடிந்துவிடும் என்று சொல்லக் கூடிய நிலையும் இல்லை. ஆ. மொ. க-வால் தயாரிக்கப்பட வேண்டிய கால அட்டவணை சென்ற ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற வேலையையும் உள்ப்படுத்தி அகில இந்திய அட்டவணையாக இருக்க வேண்டும் என்றே ஜனாதிபதி கோரியுள்ளார்.

(உ)

14. முதலாவது ஆ. மொ. க. வின் விசாரணை எல்லைக் குட்பட்ட காலத்தில் அதாவது 1956–60 கால எல்லையில் நடைபெற வேண்டிய கால அட்டவணை வரையறுத்ததாக இருக்க வேண்டும் என்று சொல்லும் பொழுது மற்றொரு மிக முக்கியமானதும் அறிந்துகொள்ளப்பட வேண்டியதுமான ஒன்றைக் கவனிக்க வேண்டும். அரசியல் அமைப்பின் 344 (1) விதி, ஜனாதிபதி ஆ. மொ. க. வை நியமிக்கும்பொழுது அரசியல் அமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளின் பிரதி

நீதிகளைக் கொண்டே அமைப்பார் என்று சொல்லுகிறது. இந்த விதியை ஆராய்ந்து பார்த்தால் இங்ஙனம் நியமிக்கப்பட்ட அமைப்பு ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றம் செய்வதில் தொடக்க வேலையையும் செய்ய உரிமை பெற்றுள்ளது என்பது தெரியவரும். இந்த அமைப்பின் சிபாரிசுகளை விதி 344 (4)–ன்படி அமைக்கப்பட்ட பாராளுமன்றக் குழு ஆராய்ந்து தந்த முடிவுகளை ஜனாதிபதி தம் இறுதி ஆணைகளுக்குப் பயன்படுத்துவார். இதன்படி பார்த்தால் பாராளுமன்றக் குழுவோ ஜனாதிபதியோ ஆ. மொ. க. வின் சிபாரிசுகளுக்குமேல் புதியதாக ஒன்றையும் சேர்க்கமாட்டார்கள் என்று தெரிகிறது. ஒரு வகையில் இந்திய மொழிகளின் ஜனநாயகத்துக்கு, மொழி மாற்றத்தை இல்லாமல் செய்யும் சக்தியையும் இது வழங்குகிறது. மத்திய அரசாங்கம் கட்டாயபடுத்துதல் திணித்தல் என்ற எந்தக் காரியத்தையும் மொழிப் பிராந்தியங்களில் செய்ய முடியாது என்றும் தெரிகிறது.

15. இந்தச் சந்தர்ப்பத்தில் இக்கழகம் கேட்ட ஒரு வினாவிற்கு ஹிந்தி பேசாத பிராந்தியத்தில் ஒரு முக்கியமான சாட்சி தந்த குறிப்பிடத்தகுந்த விடையை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ராஜ்யங்களோடு தொடர்பு கொள்ளும் முறையில் மத்திய அரசாங்கம் ஹிந்தியில் எழுதினால் நீங்கள் எவ்வாறு விடை தயாரிப்பீர்கள்! என்ற கேள்விக்கு "அது என்மேல் திணிக்கப்பட்டால் நான் யூனியனிலிருந்து விலகிவிடுவேன்" என்ற விடை தரப்பட்டது. (வாய் மொழி மூலம் தரப்பட்ட சான்றுகளுக்கு என்னிடம் நகல் இன்மையினால் இந்த வினாவையும் விடையையும் என் சொந்த வார்த்தைகளில் என் ஞாபகத்திலிருந்தே எழுதுகிறேன்).

16. இத்தகைய ஒரு நிலை நம்முடைய கொள்கையின் கால அட்டவணையைத் தயாரிக்கும்பொழுது சிறப்பாக ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்கள் அதனை ஏற்றுக்கொள்ளும் நிலைமையிலும் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. சிறப்பாக வங்காளமும், தமிழ் நாடும் ஆங்கிலத்தை நீக்குவதற்குப் பதிலாக அதனை இப்பொழுதைக்கு நிறுத்திக்கொள்ளுவது பற்றியே பேசின. அவற்றின் காரணங்களை இந்த நிலையில் நான் கவனிக்கப் போவதில்லை. தெற்கிலும் கிழக்கிலும் உள்ள இந்த எண்ணத்தை நம்முடைய சிபாரிசுகளின் மூலம் முதலில் மாற்றி விட்டு அதன் பயனாக அகில இந்தியாவிலும் செல்லுபடியாகக் கூடிய சிபாரிசுகளையே செய்ய வேண்டும். அகில இந்தியக் கால எல்லையையும் அதற்கேற்ற கால அட்டவணையையும் பரந்த முறையில் மொழி மாற்றக் காலத்திற்கு அமைத்துக் கொண்டால்தான் இது இயலும்.

17. இந்தச் சந்தர்ப்பத்தில் என் சக ஊழியர்களான டாக்டர் பி. சுப்பராயன் தம்முடைய குறிப்பில் கூறியுள்ள "1965–க்குள் யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு ஹிந்தியைப் புகுத்துவதற்குரிய கால அட்டவணையை தயாரிக்க வேண்டிய முயற்சிகளை இந்த அறிக்கை செய்வது போலக் காணப்பட்டாலும் நான் எதிர்பார்த்தபடி எவ்விதமான கால அட்டவணையும் இதில் இல்லை" என்ற வார்த்தைகளை நான் முழுவதும் ஆமோதிக்கிறேன். ஆ. மொ. க.விற்கு இதனைச் செய்யவேண்டும் என்று இந்திய அரசாங்கம் யோசனை கூறவில்லை என்று சொல்வதால் பயனில்லை. இது குதிரையின் முன்னர் வண்டியை வைப்பதாகும். அரசியல் அமைப்பின்படி ஆ. மொ. க. வே இவற்றைத் தொடங்கி வைக்க வேண்டும். நம்முடைய கடமைகளுள் ஒன்றாக இதனைச் செய்து தரும்படி ஜனாதிபதியே குறிப்பாகக் கேட்டுள்ளார்.

(ஊ)

18. சென்னை அரசாங்கத்தின் விளக்கக் குறிப்பில் (பாரா 12 காண்க) மொழி மாற்றம் செய்வதற்குரிய வேலை இன்னும் தொடங்கவில்லை.

என்று கூறியதைக் குறிப்பிட்டுள்ளேன். மேலும் அந்தக் குறிப்பு "ராஜ்யப் புனரமைப்புக் கழகத்தின் சிபாரிசுகளின்படி ராஜ்யங்கள் மாற்றி அமைக்கப்பட்டு முடிகின்ற வரையில் இந்த வேலையைத் தொடங்க முடியாது. அன்றியும் ஆ. மொ. க. வும் பாராளு மன்ற ஆட்சிமொழிக் குழுவும் விரிவான முறையில் தம் வேலைகளைச் செய்து முடித்த பிறகு தான் இவ்வேலை தொடங்கப்படமுடியும்" என்றும் சொல்லுகிறது.

19. இரண்டு முக்கியமான விஷயங்களை இந்தக் குறிப்பு அறிவிக்கிறது. அவையாவன : மொழி மாற்றமும், ராஜ்யப் புனரமைப்பும் ஒன்றுக்கொன்று கொண்டிருக்கும் அடிப்படையான தொடர்பு. அடுத்துள்ளது ஆங்கிலத் திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றஞ் செய்வது பற்றிய விரிவான ஒரு திட்டம். இவை இரண்டுமே மக்களின் முன்னர் இப்பொழுது வைக்கப் படும். ராஜ்யப் புனரமைப்புச் சட்ட மூலம் பாராளு மன்றத்தில் இருந்து வருகிறது ; ஆ. மொ. க.வின் வேலைகள் முடிந்து அவற்றின் சிபாரிசுகளும் அடுத்த மாதத்தில் ஜனாதிபதியின் முன்னர் சமர்ப்பிக்கப்படும். இதில் முக்கிய மானது என்னவென்றால் ஆட்சி மொழிக் கழகமாகிய நாம் இம்மொழி மாற்ற வேலைகள் பற்றி "விரிவான முடிவுகளை" சமர்ப்பிக்க வேண்டும்.

20. இந்நிலையில் மாற்றம் என்பது ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங் களிலேயே தொடங்கப்பட்ட வேண்டும்[1]. அவர்கள்தாம் ஹிந்தியைக் கற்றுக் கொள்ளத் தொடங்கி ராஜ்யங்களின் இடையேயும், யூனியன் ராஜ்யங் களின் இடையேயும் உள்ள காரியங்களுக்கு அதனை பயன்படுத்தத்தயாராக வேண்டும். ராஜ்யங்களின் ஆட்சி மொழி, அல்லது மொழிகளின் மூல மாக ஆங்கிலத்தை மாற்ற முடிவு செய்து ராஜ்யங்களே இதனைத் தொடங்க வேண்டும். இதுவரையில் பல ராஜ்யங்கள் இது பற்றி முடிவு செய்யவே இல்லை.

21. சில ராஜ்யங்களில் அவர்களின் பிராந்திய மொழிகளை ராஜ்ய ஆட்சி மொழிகளாக வைத்துக்கொள்வது என்று முடிவு செய்தாலும் ஆங்கிலத்தையும் நிறுத்திக்கொள்வதென்றே வலுவான எண்ணம் இரு ந்து வருகிறது. ஏன் இப்படிப்பட்ட ஒரு வேண்டா வெறுப்பு நிலை இருந்து வருகிறதென்பதைச் சென்னை அரசாங்கம் தந்த விளக்கக் குறிப்பில் மேலே தந்துள்ள பகுதியிலிருந்து நன்கு அறிய முடியும். "ராஜ்யத்தின் ஆட்சி மொழி விவகாரத்தில் ஏன் இது வரை மாற்றஞ் செய்வதற்குரிய வழிகள் கையாளப்படவில்லை" என்ற பிரச்னையை ஆராயும்பொழுது அக் குறிப்பு,

"யூனியன் ஆட்சி மொழி பற்றிய முடிவுகளைப்பற்றிக் கவலைப்படாமல் ராஜ்யத்தின் ஆட்சி மொழி பற்றிய முடிவுகள் செய்யப்படலாம் என்பது உண்மையானாலும் இதனால் ராஜ்ய ஆட்சி முறையிலும், ராஜ்யக் கல்வி முறையிலும் ஏற்படுகின்ற விளைவுகள் பற்றி நன்கு சிந்தித்து அவற் றிற்கு இடம் விட்டுவைக்க வேண்டும்,............ ஆ. மொ. க. இந்தப் பிரச்னையை ஆராய்ந்து முடிவு கூறுகின்ற வரையில் மத்திய அர சாங்கத்திலும் எந்த முடிவும் ஏற்பட வழியில்லை" என்று கூறுகிறது.

22. இதன்படி பார்த்தால் சென்னை அல்லது வங்காளம் அல்லது எந்தப் பிற மொழிப் பிராந்தியமும் ராஜ்ய ஆட்சி முறை, கல்வி முறை களில் தங்களுடைய கவனத்தை செலுத்தவில்லை என்று சொல்ல முடி யாது. அவைகள் ஒரு முடிவுக்கு வந்தால் அம்முடிவுகளை ஆ. மொ. க. ஏற்றுக்கொள்ளுமா அல்லது ஆ. மொ. க. வின் சிபாரிசுகள் வேறு விதமாக இருந்தால் அதனை ஏற்றுக்கொண்ட மத்திய அரசாங்கம் ராஜ்யங் களின் முடிவுகளை நிறைவேற்றுவதற்குக் குறுக்கே நிற்குமா என்றே

---

1. ஹிந்தி பேசும் ராஜ்யங்களும் ஏனைய ராஜ்யங்களைப்போல ராஜ்ய அளவில் ஆங்கிலத்தை நீக்க முயலவேண்டும். இதில் ஒரு வேறுபாடு என்னவென்றால் பிறமொழி ராஜ்யங்களைப்போல ஹிந்தி ராஜ்யங்கள் புதிதாக ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டிய இல்லை.

அஞ்சுவதாகத் தெரிகிறது. எனவே ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் சிறப்பாகத் தெற்கிலும், கிழக்கிலும் மொழி மாற்ற நிலை திரிசங்கு சொர்க்கமாக இருப்பதே இன்று நாட்டிலுள்ள நிலவரம். யூனியன் ஆட்சி விவகாரங்களில் ஹிந்தி மொழி பற்றிப் பேசும் அரசியல் அமைப்புப் பகுதிகளை இந்த ராஜ்யங்கள் ஏற்றுக்கொள்ளுகின்றன. அதனோடு கூட ராஜ்ய அளவில் ஆங்கிலத்தையும் ஆட்சித் துறையிலும் கல்வித் துறையிலும் வைத்துக்கொள்ள வேண்டும் என்றே அவைகள் விரும்புகின்றன. உண்மையாகக் கூறுமிடத்து அகில இந்திய நிலையில் மொழி மாற்றம் செய்யும் வேலைக்கு இது ஒரு பெரிய தடையாகும். இதனைப் போக்க வேண்டும். இந்த வேலையை 1960–61-ல் வரப் போகின்ற ஆ. மொ. க. விற்குத் தள்ளப் போடுவதால் எவ்வித இலாபமும் இல்லை. அதனால் இன்னும் ஐந்து ஆண்டுகளை நாம் இழக்க நேரிடும்.

23. எனவே தேசம் முழுவதிலும் அதாவது யூனியன் நிலையிலும், ராஜ்ய நிலையிலும் மொழி மாற்றம் செய்ய வேண்டிய வலிமை பொருந்திய ஒரு கிளர்ச்சியை நம்முடைய சிபாரிசுகளின் மூலம் உண்டாக்கித் தொழிற்பட விட வேண்டும். அதாவது பிற மொழிப் பிராந்தியங்களில் நம்முடைய சிபாரிசுகளின் பேரில் வரப் போகின்ற மொழி அமைப்பும் அதனுடைய இயல்பும் எவ்வாறு இருக்குமோ என்று ஏற்பட்டுள்ள அச்சத்தையும் சந்தேகத்தையும் போக்குகின்ற முறையில் நம்முடைய சிபாரிசுகள் அமைய வேண்டும் என்பதே சுருங்கக் கூறினால் இப்பொழுது தேவைப்படுகின்ற காரியம். இப்பொழுது நாம் செய்துள்ள சிபாரிசுகள் இத்துறையில் பெரிதும் குறைபாடு உடையன என்று நான் அஞ்சுகிறேன்.

(எ)

24. இதுவரையில் ஜனாதிபதி நமக்குக் கட்டளையிட்டுள்ள குறிப்பிட்டதும் முக்கியமானதுமான கடமை பற்றி எழுதினேன். இந்தக் கடமையை நிறைவேற்றும் பொழுது இதனோடு சம்பந்தப்பட்ட பல பிரச்னைகளையும், அவைகள் இக்கழக நிர்மாணக் கோரிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாக இருப்பினும் ஆ. மொ. க. அவற்றையும் ஆராயவேண்டியுள்ளது என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

25. அப்பாற் பட்டுள்ள விஷயங்களாக உள்ள உயர்தரக் கல்வியின் போதனா மொழி, ஹிந்தியையும், ஏனைய மொழிகளையும் வளப்பதற்குரிய வாய்ப்புகள், நாட்டின் கல்வி முறையில் ஆங்கிலத்திற்குள்ள இடம் ஆகிய இவைகளை ஆ. மொ. க. ஆராய்ந்துள்ளது. என்றாலும் ஆ. மொ. க. வின் நிர்மாணக் கோரிக்கைகளுள் இவை நேரடியாக வரவில்லை. இவற்றுள் பெரும்பாலானவை ராஜ்ய விஷயங்களாதலால் ராஜ்யங்களிலுள்ள ஆட்சித் துறை, அல்லாத துறை ஆகிய அமைப்புக்களின் அதிகாரங்களுக்குட்பட்டதே யாகும். அடிக்கடி சொல்லப்படுவது போல இவ்விஷயங்கள் இந்திய ஒற்றுமையைப் பாதிப்பதாக இருப்பின் இந்திய அரசியலமைப்பு இவற்றையும் ஆராய்ந்து தக்க முறையில் வழிகாட்டியிருக்கும். நாம் காணுகின்ற வரையில் அரசியலமைப்பு இவ்வாறு ஒன்றும் செய்யவில்லை. சுதந்தரம் பெற்ற உலகம் இவ்விஷயங்கள் பற்றி சந்தேகத்திற்கு இடமில்லாமல் தன்னுடைய கருத்தைத் தெரிவித்துள்ளது. இப்பொழுது நாம் சுதந்திரம் பெற்ற மக்களாக ஆய்விட்டபடியின் அதற்கேற்றபடி நம் வீட்டைச் சீர்திருத்தம் செய்துகொள்ளவேண்டும்.

26. மேலும் கோரிக்கைகளுக்கு அப்பாற்பட்டுள்ள பெரும்பாலான இவ்விஷயங்களில் ஆ. மொ. க. தலையிடுமாறு நேர்ந்துள்ளது. மேலே நாம் கூறியபடி இவ்விஷயங்களைப் பற்றித்தான் ராஜ்யங்கள் அதிகக் கவலைப்பட்டு இவ்விஷயங்கள் பற்றி ஆ. மொ. க. எவ்விதமான சிபாரிசுகளைச் செய்யுமோ என்று ஆதங்கப்படுகின்றன. இந்திய அரசாங்கம் அதற்குள்ள நிறைந்த அதிகாரத்தின் மூலமாக, எல்லாவற்றையும் மீறுகின்ற அதிகாரத்தைப் பல்வேறு வழிகளிலும் செலுத்தக் கூடியதாதலாலும் அதனுடைய அதிகாரத்தை, அதாவது கட்டாயப் படுத்துகின்ற அதிகாரத்தை

எங்ஙனம் செலுத்துமோ என்று ராஜ்யங்கள் அஞ்சுகின்றன. நான் முன்னே சொல்லியபடி இந்த ஒரு காரியம்தான் மொழி மாற்றத்தைத் தொடங்கி நடத்துவதற்குத் தடையாகவுள்ளது. இந்த விஷயத்தில் ஆ. மொ. க. அறிக்கை தன்னுடைய நிர்மாணக் கொள்கைக்கு " மேலே போய்விட்ட தல்லாமல் " அவற்றையும் தாண்டி மேலே கண்ட அச்சத்தை போக்குவதற்குரிய நிலைமை இல்லாமல் தன்னுடைய சிபாச்சுகளையும், ஆலோசனைகளையும் கூறியுள்ளது.

27. ஹிந்தி வழங்காத ராஜ்யத்திலுள்ள மிக முக்கியமான ஒரு வருடைய (வி. ஐ. பி.) வாய் மொழிச் சான்றையே கொடுத்துளளேன். ஒரு வழியில் அந்த உதாரணம் நமக்கு அறிவிப்புச் செய்கிறது. மற்றொரு ஹிந்தி வழங்காத ராஜயத்தில் முக்கிய மனிதர் ஒருவர் கொடுத்த சாட்சியம் இதற்கு நேர்மாறாக உள்ளது. இவ்விஷயத்தைப் பற்றிய எதிர் மாறான கருத்தைத் தெரிவித்த அவர் ஆட்சித் துறையிலும், அல்லாத துறைகளிலும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தையும், சக்தியையும் வைத்துக் கொண்டு ஹிந்தி வளர்ச்சித் திட்டத்தைத் கொண்டு செலுத்த வேண்டும் என்று கூறினார். (மறுபடியும் என் நினைவிலிருந்தே இதனை எழுதுகிறேன் என்பதைச் சொல்லுகிறேன்.) இப்படிப்பட்ட கருத்துக் களும், பிரச்னைகளும் போகின்ற முறைதான் " ஹிந்தியைத் திணித்தல் " என்ற அச்சத்தை உண்டாக்குகின்றது.

28. நான் முன்னே சொல்லியபடி ஆ. மொ. க. தொடர்புள்ள விஷயங் களைப் பற்றி விசாரணை செய்யத்தான் செய்யும். முதலாவது கழகமாக இருத்தலின் மொழிப் பிரச்னைகள் பற்றிய பொதுவான கருத்துக்களைச் சொல்லி அதற்குரிய முடிவுகளின் முக்கியப் பகுதிகளையும் அது வெளி யிடும். நான் சொல்ல வருவது என்னவென்றால் இவை அனைத்துமே அதனுடைய முக்கியமான கடமையை ஒட்டித்தான் ஏற்படும். அதாவது ஆங்கிலத்தை மாற்றி அமைப்பதும் படிப்படியாக ஆட்சிக் காரியங்களுக்கு ஹிந்தியைப் பயன் படுத்துவதும்தான்.

(ஏ)

29. ராஜ்ய நிலைமைகளிலும் கூட ஆங்கிலத்தை நீக்க வேண்டிய பிரச் சனை மத்திய அரசாங்கத்திலிருப்பது போலவே இருந்துவருகிறது. ஆங் கிலம் ராஜ்யங்களுக்குள்ளும், ராஜ்யங்கள் யூனியனோடும், பிற ராஜ்யங் களோடும் வழங்குகின்ற இடை நிலை மொழியாக இருப்பதோடு கல்வித் துறையிலும் போதனா மொழியாகவும் இருந்து வருகிறது. ராஜ்யங்களுக் குள் ஆங்கிலத்தை மாற்றி அமைப்பட வேண்டுமா என்பது பற்றி ஆராய ஆ. மொ. க. கோரப்பட வில்லை. என்றாலும் ஆங்கிலத்தை நீக்கு வது என்பது அகில இந்தியாவிலும் நடைபெற வேண்டிய ஒன்று ஆத லின் ராஜ்ய நிலைமையில் அதை ஒதுக்கி வைக்க முடியாது. இன்னும் சொல்லப் போனால் இது வெற்றியடைய வேண்டுமானால் இங்கேதான் தொடங்கவேண்டும்.

30. ராஜ்ய நிலைமையில் ஆங்கிலத்தை நீக்குவது என்பது இரண்டு தலையுள்ள கிளர்ச்சியாகும். ஒரு புறத்தில் ஆட்சித் துறையிலும், கல்வித் துறையிலும் அந்த ராஜ்யம் ஏற்றுக்கொண்டுள்ள ஆட்சி மொழியாலும் அல்லது மொழிகளாலும் ஆங்கிலம் நீக்கப்படும். அடுத்த புறத்தில் ஹிந்தியை ராஜ்யங்களிடையேயும், யூனியன்–ராஜ்யத்தின் இடையேயும் வழங்க ஏற் றுக் கொள்வதால் மாற்றக் காலத்தில் இடைவெளி ஒன்றும் இராது. இந்த இரண்டு திட்டங்களும் ஒரு முழுத் திட்டத்தின் இரண்டு பிரிவுகளாக ஒரே நேரத்தில் தொடங்கப்பட வேண்டும். இந்த முறையில்தான் அகில இந் திய மாற்றம் என்பதை நடைமுறைத் திட்டமாகச் செய்ய முடியும். மொழி மாற்றத்தின் இந்த வளர்ச்சிப் பகுதியை ஆ. மொ. க. அறிக்கை சொல்லவேண்டிய அளவு சொல்லவில்லை என்றே நான் கருதுகிறேன்.

31. இவ்விஷயத்தில் மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். நாட்டில் ஒரு பகுதியாளர்கள் இந்தியாவின் ஒற்றுமையைக் காட்டி ராஜ்ய ஆட்சி முறையிலும், கல்வியிலும் கூட நிறைந்த அளவு ஹிந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று கூறுகிறார்கள். இது சம்பந்தமாக ஆ.மொ.கா. அறிக்கை சிலவற்றைக் கூறி அவற்றை "முடிவுகள்" என்ற பெயரில் அதாவது "சிபார்சுகள் அல்லாத முறையில்" கூறியுள்ளது. சிபார்சுகள் எனப்பட்டவை நிர்மாணக் கோரிக்கையை ஒட்டிப் பேசப்படுபவை. இந்த "முடிவுகளை" இன்னும் அடக்கமான முறையில் பொருத்தமான வகையில் "கண்டவைகள்" என்று கூறலாம், என்று நினைக்கிறேன். இந்த முடிவுகளெல்லாம் ஒன்றுகூடி எங்கெங்கே ராஜ்யங்களின் பிராந்திய மொழிகளோடு ஹிந்தி மொழி மோதும் என்று எதிர்பார்க்கிறோமோ அங்கே எல்லாம் தவறே இழைத்துள்ளன. தள்ளிவிடக் கூடிய இந்த முரண்பாடு நாம் எதிர்பாராத முறையில் மொழிக் கூட்டங்களின் உணர்ச்சியைத் தூண்டி நாட்டின் உணர்ச்சியை குலைத்துவிடும்.

(ஐ)

32. யூனியன் மொழியாகிய ஹிந்தியைப் படிப்படியாக நுழைக்கவேண்டிய இந்த நிலையில் அதனுடைய நிலை பற்றியும், இயல்பு பற்றியும் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். இன்றைய நிலையில் ஹிந்தி மொழி எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்ட மொழிகளுள் ஒரு மொழியாகும். யூனியன் மொழியாக உள்ள ஹிந்தி என்பது இனிமேல்தான் வாழப்போகின்ற ஒன்று. மேலும் ஹிந்தி ஆங்கிலத்தைப் போல வளர்ச்சியடைந்த மொழி அன்று. ஆதலால் அதனை அப்படியே ஆங்கிலத்திற்குப் பதிலாக உபயோகப்படுத்த முடியாது. மேலும் இலக்கியம், அறிவு, முதலான துறைகளுக்கு அம்மொழியில் வளம் இல்லையாதலால் அதனை யாரும் விரும்பமாட்டார்கள். என்றாலும் அகில இந்தியாவுக்கும் பொது மொழி என்று நம்முடைய அரசியலமைப்புத் தீர்மானித்துவிட்டதால் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்களும் அதனைக் கற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால் நான் முன்னர்க் குறிப்பிட்டுள்ளபடி இந்த விஷயம் முழுவதும் இன்னும் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறது. இப்பிரச்னை உயிருள்ள பிரச்னையாக ஆக வேண்டுமேயானால் இந்தப் பிராந்தியங்கள் கல்வித் துறையிலும், ஆட்சித் துறையிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாக இம்மொழியை உபயோகப்படுத்தும் பொழுதுதான் இது முடியும். ஹிந்தி மொழி தேவைப்பட்ட அளவு வளர்ச்சி அடையும் பொழுதுதான் இது நடைபெறும்.

33 மேலும் யூனியன் ஆட்சி மொழியாக உள்ள மொழிக்கும், வட இந்தியாவில் ஒரு பகுதியில் பிராந்திய மொழியாக உள்ள ஒரு மொழிக்கும் பொதுவாக ஹிந்தி என்று பெயரிடுவதால் நம்முடைய நினைவில் குழப்பம் உண்டாக்கி உடனடியாகச் செய்ய வேண்டிய பல முடிவுகளில் தவறுதல்களை உண்டாக்குகிறது. உதாரணமாக அகில இந்தியப் பணிப் போட்டிப் பரீட்சைகளுக்கு ஆங்கிலத்தோடு சேர்ந்து ஹிந்தியும் ஒரு இடைநிலை மொழியாக இருக்கும் என்று கூறினால் வட இந்தியாவிலுள்ள ஹிந்தியைப் பிராந்திய மொழியாக உள்ள ஒரு சிலருக்கே இது நன்மை செய்யும் என்று கருதுவார்கள். ஏனென்றால் யூனியன் மொழியாகிய ஹிந்தி இன்னும் நிலை கொள்ளவில்லை. ஆங்கிலத்தை நீக்க வேண்டுமென்று நாம் ஆலோசனை கூறினால் நியாயமான முறைப்படி எல்லாப் பிராந்திய மொழிகளுக்கும் இக்காரியத்திற்கும் சமமான உரிமை வழங்கவேண்டும். ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் ஹிந்தி உயிருள்ள துணை மொழியாக வழங்கப்படும் பொழுது தான் ஹிந்தி மட்டும் என்று சொல்ல இடமுண்டு. ஆட்சி விவகாரங்களுக்கு ஹிந்தியைப் பயன் படுத்தவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் பொழுதுதான் ஹிந்தியின் இந்த இரட்டைத் தன்மையும், அதனை வளர்த்துப் பண்படுத்தி ஆங்கிலத்தை நீக்குவதற்குரிய சக்தியைத் தரவேண்டும் என்று சொல்வதும் நியாயமான கோரிக்கையாகும்.

34 ஆ.மொ.க. அறிக்கை ஹிந்திப் பிரச்னையை ஆராயும் பொழுது அகத் துறை, புறத்துறை என்று இரண்டு துறைகளைப் பேசியது பொருளாதாரத்

திட்டப்படி த்வருன உவமைகளாகும். பொதுத் துறை என்பது ஆட்சித் துறைப் பகுதியாகும். அல்லாத துறை என்பது மக்கள் கல்வி யிலும் பொது வாழ்விலும் மொழியைப் பயன்படுத்துகின்ற துறையாகும். பிற்பகுதியில் சொல்லப்பட்டதே உண்மையில் "தேசீயப் பகுதியாகும்". இப்பகுதியில் யூனியன் ஆட்சி மொழியாகிய ஹிந்தி வழங்காமல் தேசியப் பொது மொழியாகிய ஹிந்தி, இந்தியாவின் ஆன்தர் பாஷா, வழங்கும். ஹிந்தியின் இரு புறங்களைப் பற்றி முன்னர்க் குறிப்பிட்டது போல அகில இந்திய நிலையிலும், இவை இருக்கும்.

35. இந்த இரண்டு துறைகளிலும் ஆங்கிலத்தை நீக்க விரும்புகிறோம். இவை ஒன்றுக் கொன்று தொடர்புடையன என்றாலும் இவற்றைத் தனித் தனியே ஆராய வேண்டும். ஆட்சி மொழியாக உள்ள ஹிந்தி, அரசாங்கம் வெளியிடுகின்ற கலைச் சொற்கள் முதலியவற்றைப் பெற்று ஓரளவுக்கு வளருமேனும் தேசீய மொழியாக உள்ள ஹிந்தி நம்முடைய மக்கள் அனைவருடைய முயற்சியின் பேரில் சுதந்தரமாக வளரும். பின்னர்க் கூறப்பட்ட இது முன்னர் கூறப்பட்ட மொழி வளர்ச்சியை வலுப்படுத்தும். இதன் பயனாக முன்னருள்ள மொழி வெறும் ஒலிக் கூட்டங்களாக இல்லாமல் அரசாங்கத்தால் ஒரு வழியில் வளர்க்கப்பட்டாலும் வாழும் மொழியாக இருந்துவரும். ஆங்கிலத்தை ஹிந்தியின் மூலம் போக்கும் பிரச்னை வெறும் அரசாங்க முயற்சியாக இல்லாமல் இந்தியாவிலுள்ள மக்கள் அனைவரும் பல்வேறு மொழிகள் பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் அனைவருடைய முயற்சியாகவும் இது இருந்துவரும். இந்தப் பெரு முயற்சியில் அரசாங்கம் முன்னடத்திச் செல்வதோடு மக்களாலும் நடத்திச் செல்லப்படும்.

36. இந்திய யூனியனிலுள்ள எல்லாப் பிரிவினர்களின் நல்லெண் ணத்தைப் பெற்று இதனைத் தொடங்குவது நாட்டின் முன்னே உள்ள மொழிப் பிரச்னையாகும். இந்திய அரசியலமைப்பு இம்முயற்சியைச் செய் வதற்குரிய வழிகளைக் காட்டியுள்ளது. இந்த வழிகளைப் பின்பற்றியே ஒரு நிகழ்ச்சி நிரலையும், கால அட்டவணையையும் அடுத்த ஐந்து ஆண்டு களுக்குத் தர வேண்டும் என்று ஆ.மொ.க. கேட்கப்பட்டது. ஆ.மொ.க. அறிக்கை இந்தப் பிரச்னையைத் தகுந்த வழிகளில் இயன்ற அளவு சோதித்து விடை கூறியதாக நான் கருத முடியவில்லை. என் குறிப்பினுடைய முக வுரையில் என் இவ்வாறு நான் கருதுகிறேன் என்பதையும் நம்முடைய வேலைகளின் பல பகுதிகளையும் காட்டியுள்ளேன். அவற்றுள் முக்கியமான பகுதியை விரிந்த முறையில் ஆராய எடுத்துக் கொள்கிறேன்.

பகுதி 1

அரசியல் அமைப்பின் கீழ் மொழியின் வடிவம்.

1. அரசியலமைப்பின் 17-வது பகுதியில் விதிகள் 343 முதல் 351 வரை இது விளக்கப்பட்டுள்ளது. இந்த விதிகளை நான்கு பகுதிகளாகப் பிரித்துக் கீழ்க்கண்ட தலைப்புக்கள் தரப்பட்டுள்ளன :—

(1) யூனியன் மொழி (விதிகள் 343-4) ;

(2) பிராந்திய மொழிகள் (விதிகள் 345-7) ;

(3) மிகஉயர் நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் மொழிகள் (விதிகள் 348-9) ;

(4) பிரத்தியேக வழிகாட்டிகள் (விதிகள் 350-1).

2. இவற்றை யல்லாமல் விதிகள் 344-ஐயும், 351-ஐயும் ஒட்டிய எட்டாவது ஷெட்யூல் உள்ளது. இந்த இரண்டு விதிகளிலும் சொல்லிய காரியங்களுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள "இந்திய மொழிகளை" இது கூறுகிறது.

3. இந்த ஐந்தையும் மொழி, கல்வி, பண்பாடு முதலியவற்றின் ஆதார உரிமைகளையும் சேர்த்து ஆராய்ந்தால் இவ்வடிவின் முழுத் தன்மையை அறியலாம்.

(அ)

4. அரசியல் சபையிலுள்ள நாம் இந்தியாவை சுதந்திரம் பெற்ற ஜனநாயகக் குடியரசாக அமைக்க முடிவு செய்தோம். எனவே மொழிப் பிரச்னைக்கு அது கண்ட முடிவு அடிப்படையில் ஜனநாயகமாகவே இருக்கும். நம்முடைய பண்பாடு, கல்வி வளர்ச்சிக்குப் பொருந்தும் முறையிலும் நல்லதோர் ஆட்சி முறைத் தேவைகளுக்கேற்பவும், குடியரசு ஜனநாயகத்திற்கேற்பவும், ராஜ்யப் பகுதிகளால் ஆகிய பல மொழி வழங்கும் யூனியன், நிலைமைக்கு ஏற்பவும் இம்மொழிப் பிரச்னை முடிவு செய்யப்பட்டது.

5. ஒவ்வொரு பிரஜைக்கும் அடிப்படையான பண்பாட்டையும், கல்வி உரிமையையும் அது உத்தரவாதம் அளித்து, மக்களில் எந்த ஒரு பிரிவினரும் அவர்களுடைய பிரத்தியேகமான மொழி, எழுத்து, பண்பாடு ஆகியவற்றைக் காப்பாற்றிக்கொள்ள உரிமை வழங்குகிறது. (விதி 29-1.)

6. எந்த ஒரு பிரஜைக்கு அவனுடைய சமயம், இனம், ஜாதி, மொழி என்பவை காரணமாக அரசாங்கம் நடத்தும் அல்லது அரசாங்கம் உதவும் எந்த அமைப்பிலும் இடம் இல்லையென்று மறுக்கப்படக் கூடாது. (விதி 29-2.)

7. மேலும் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டி யூனியன் அல்லது ராஜ்ய அதிகாரிக்கு விண்ணப்பம் செய்யும் பொழுது முறையே யூனியனில் வழங்கும் மொழிகளிலும், ராஜ்யங்களிலும் வழங்கும் மொழிகளிலும் விண்ணப்பத்தை எழுதலாம். (விதி 350.)

8. சமீப கால சரித்திரத்தில் நம்முடைய மக்கள் முதன் முறையாகப் பெற்ற மொழி உரிமை பற்றிய சாஸனப் பத்திரம் இது என்று கூடச் சொல்லிவிடலாம். யூனியனுக்கும், அதனுடைய கிளைகளுக்கும் ஆட்சி

விவகாரங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியின் வடிவத்தை இந்த அடிப் படையில் நின்று அறிந்து கொள்ள வேண்டும். அது ஜனநாயக அடிப் படையில் பரந்த மனப்பான்மையுடையதாக உள்ளது என்பதைக் கீழே காணலாம். அது ராஜ்யங்களைப் பொறுத்த மட்டில் விரும்பிய ஆட்சி மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குரிய உரிமையை வழங்கி, யூனியனைப் பொறுத்த மட்டில் அதிகப்படியான மக்களுக்குத் தெரிந்துள்ள உள் நாட்டு மொழியாகிய ஹிந்தி என்பதை ஆட்சி மொழியாக அறிவிக்கிறது.

(ஆ)

9. அரசியலமைப்பு நம்முடைய நாட்டில் வழங்கும் பல்வேறு மொழி களைக் கவனித்து அவற்றைப் "பிராந்திய மொழிகள்" என்று ஏற்றுக் கொள்கிறது. இவை எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள 14 மொழி கள் மட்டும் அல்ல. அவை ஏனைய மொழிகளையும், கிளை மொழிகளையும் அதாவது மைதிலி, போஜ்புரி, அவதி, ராஜஸ்தானி, தோக்ரி, லடாகி, கட்சி, கொங்கனி, புத்தேளி முதலியவைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளன. விதி 345-ன் கீழ் இவை அனைத்துமே எந்த ராஜ்யங்களில் பிராந்திய மொழிகளாக உள்ளனவோ அந்த ராஜ்யங்களில் ஆட்சி மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

10. இந்த ஏற்பாட்டின் பொருளையும், தத்துவத்தையும் அறியவேண்டு மேயானால் விதி 347-ஐக் காண வேண்டும். "இது சம்பந்தமாகக் கோரப் பட்டால், ஜனாதிபதி, ஒரு ராஜ்யத்திலுள்ள அதிக எண்ணிக்கை உள்ள மக்கள், அவர்களால் பேசப்படுகின்ற எந்த மொழியையும், அந்த ராஜ்யம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கோரினால் ஜனாதிபதி அந்த மொழியை அந்த ராஜ்யம் முழுவதிலும் அல்லது அந்த ராஜ்யத்தின் ஒரு பகுதியில் ஆட்சி பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆணையிடலாம்" என்ற அதிகாரத்தை ஜனாதிபதிக்கு இவ்விதி வழங்குகிறது.

11. இம்முறை பற்றியே ஜம்முவும், காஷ்மீரும், தோக்ரி, லடாகி, காஷ் மீரி ஆகிய மூன்றையும் ஏற்றுக்கொண்டு உருதுவை ராஜ்ய மொழியாகப் பயன்படுத்துகிறது. இதன் மறுதலையாக யூ.பி.-யிலும், பீஹாரிலும் பிராந்திய மொழிகளில் ஒன்றாக உள்ள உருது ஏற்கப்படவில்லை யாதலால் அம்மொழியை 347-வது விதியின்படி ஹிந்தியோடு சேர்த்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஜனாதிபதியை வேண்டிக்கொண்டுள்ளார்கள். இவ்விடங்களில் ஹிந்தி மட்டுமே ராஜ்ய மொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

(இ)

12. நம்மிடையே உள்ள உள்நாட்டுப் "பிராந்திய" மொழிகளுள் ஒன்றுகூட அகில இந்தியாவிலும் பொதுமொழியாக வழங்கும் நிலையில் இல்லை. எனவே அகில இந்தியாவிலும் ஆட்சித்துறை, அல்லாத துறை ஆகிய இரண்டிலும் ஆங்கிலமே வழங்கப்பட்டு வருகிறது. அரசியல் அமைப்பு யூனியன் மொழியாகத் தேவ நாகரி எழுத்தில் எழுதப்படும் ஹிந்தி இருக்க வேண்டுமென்றும், எண்களைப் பொறுத்தவரை "இந்திய எண்களின் பன்னாட்டு வடிவமே" பயன்படுத்தப்பட வேண்டுமென்றும் கூறுகிறது. (விதி 343-1.)

13. நாடு முழுவதிலும் ஆங்கில மொழியைப் போலப் பள்ளிக்கூடங்களில் ஹிந்தி மொழி போதிக்கப்படாமையினாலும், ஹிந்தி பேசும் பிராந்தியங் களுக்கு வெளியே இம்மொழி அறியப்படாமையினாலும் ஆங்கிலத்தின் இடத்தை உடனடியாக எடுத்துக்கொள்ளும் அளவுக்கு நன்கு வளர்ச்சி அடைந்து பண்படாமல் இருக்கின்ற காரணத்தினாலும் மொழி மாற்றக் காலமாக 15 ஆண்டுகள் அதாவது 1965-வரை கால அளவு

திரப்பட்டுள்ளது. இந்த இடைக் காலத்தில் எல்லா யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கும் இதுவரை இருந்து வந்தது போலவே ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன் படுத்தவேண்டும். (விதி 343-2.)

14. ஆட்சித் துறையின் இடைநிலை மொழியாகவுள்ள ஆங்கிலத்தைத் திடீரென்று மாற்றி விடவேண்டுமென்று அரசிலயமைப்பு எதிர்பார்க்க வில்லை என்பதையும், இதனால் இடைவெளி ஏற்படவேண்டும் என்பதை யும் அரசியலமைப்பு எதிர்பார்க்கவில்லை என்பதையும் இதன் மூலம் அறிந்துகொள்ளலாம். இதனால் தேவை ஏற்பட்ட பொழுது கால எல்லை யாகிய 15 ஆண்டுகள் கழித்தும்கூடச் சட்ட பூர்வமாக அறிவிக்கப்படும் சில காரியங்களுக்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என்றும் (விதி 343-3) கூறுகிறது.

15. ஆனால் ஹிந்தி மொழி ஆங்கிலத்தின் இடத்தை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கும்பொழுது ஆங்கிலத்தின் உபயோகம் குறைக்கப்பட வேண்டு மென்பதை அரசியலமைப்பு எதிர் பார்க்கிறது. இயன்ற பொழுது ஹிந்தி யில் மாற்றம் செய்யப்பட வேண்டுமென்பதை விதி 343-2-ன் மூலமாகவும் அறியலாம். இவ்விதி இந்த மொழி மாற்ற காலமாகிய 15 ஆண்டு களிலேயே ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியை வழங்க ஜனுதிபதிக்கு ஆணையிட வாய்ப்பளிக்கிறது. இந்தக் கால எல்லை முடிந்தவுடன் ஹிந்தி யூனியன் மொழியாக வந்துவிட்ட பின்னர் பாராளு மன்றம் சிறப்பாகச் சட்டம் செய்தால் ஒழிய ஆங்கிலம் தொடர்ந்து இருந்து வர முடியாது.

16. எனவே மாற்றக்காலத்தில் ஆங்கிலம், ஹிந்தி என்ற இரண்டை யும் யூனியனில் பல்வேறு விவகாரங்களுக்குப் பயன்படுத்திக்கொள்வதற்கு இடம் இருக்கிறது. ஆனால் இந்த இரண்டு இடைநிலைகளையும் ஒன்றை "முக்கியமானது" என்றும் மற்றொன்றை "அடுத்தபடியானது" என்றும் செல்வது தவருகும். ஆ. மொ. க. விற்குச் சென்னை அரசாங்கம் அளித்த விளக்கக் குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. செம்மையான முறை யில் இதனை கூற வேண்டுமேயானால் ஆங்கிலத்தை **சென்றுகொண்டிருக் கின்ற** யூனியன் ஆட்சி மொழி என்றும் ஹிந்தியை **வந்துகொண்டிருக்கின்ற** ஆட்சி மொழி என்றும் கூறவேண்டும். அரசியல் அமைப்பின்கீழ் ஆங் கிலத்தைப் போதன மொழியாக வைத்துக்கொண்டிருப்பது என்ற பிரச்னையே இல்லை. அதில் ஆங்கிலத்தைக் குறைத்துக் குறைத்து உபயோகப் படுத்தி நாளாவட்டத்தில் அதனை நீக்கிவிடுவதைப் பற்றியே பேசுகிறது.

17. இந்த முடிவைக் கொண்டு செலுத்துவதற்காகவே அரசியல் அமைப்பு ஜனநாயகமுறையில் ஒரு ஆ. மொ. க. வை ஏற்படுத்தியுள்ளது. அந்தக் கழகத்தின் கடமை முன்னர் நாம் சொல்லியது போல ஆங்கிலத்தை நீக்குவதற்குரிய கொள்கையையும், வழியையும் வகுப்பதாகும். (விதி 344.)

(ஈ)

18. மொழிப் பிரச்னையில் ராஜ்யங்களின் நிலையும் யூனியன் நிலையும் வெவ்வேருகும். யூனியனைப்போல் தேச முழுவதுமாக இல்லாமல் பற்பல ராஜ்யங்கள் இப்பொழுதே ஒரு மொழிப் பகுதிகளாக இருப்பதோடு விரைவில் அவை புனரமைப்புச் செய்யப்பட்டு எல்லா ராஜ்யங்களுமே பொதுவாக ஒரு மொழி ராஜ்யங்களாக விரைவில் ஆகிவிடும். அந்நிலையில் அந்த ராஜ்யங் களின் சட்ட மன்றங்களின் மூலமாக அந்தப் பிராந்திய மொழிகளையே ஆட்சி மொழிகளாகச் செய்ய அவை முடிவு செய்துவிடும். எனவே அரசியல் அமைப்பு (விதி 345) ராஜ்யங்கள் இன்று போலவே ஆங்கிலத்தைப் பயன் படுத்தலாம் என்று சொல்லிவிட்டு அந்த ராஜ்யங்கள் இந்திய மொழிக ளுக்கு மாற்றஞ் செய்கின்ற கால வரையறையைக் குறிப்பிடவில்லை.

ஏனென்றால் ராஜ்யங்கள் அவற்றின் பிராந்திய மொழிகளை உள் விவகாரங்களுக்கு உபயோகப்படுத்தி விதி 345-ன் படி உடனே ஆங்கிலத்தை நீக்கிவிட முடியும்.

19. என்றாலும் ராஜ்யங்களின் வெளி விவகாரங்களுக்கு, அதாவது பிற ராஜ்யங்களோடும் யூனியனோடும் தொடர்பு கொள்ளும்பொழுது இவ்வாறு செய்ய முடியாது. அவைகள் இந்தக் காரியத்திற்கு அகில இந்தியப் பொது மொழி ஒன்றைக் கொள்ளவேண்டும். இப்படிக் கொள்ள வேண்டிய மொழியாகத் தற்பொழுதைக்கு யூனியனில் இருந்து வருகின்ற ஆங்கிலமே இருக்கலாம் என்றும் நாளாவட்டத்தில் ஹிந்தி அதனைப் போக்குகின்ற பொழுது அதுவே ராஜ்யங்களில் வெளி விவகாரங்களுக்குப் பயன்பட வேண்டும் என்றும் அரசியல் அமைப்புக் கூறுகிறது. (விதி 346.)

20. விதி 346-ல் இரண்டோ அல்லது மேற்பட்ட ராஜ்யங்களோ அவைகளின் இடையே வழங்குவதற்கு ஹிந்தியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று கருதினால் யூனியன் ஆட்சி மொழியாக ஆங்கிலம் இருக்கையிலேயே இந்த ராஜ்யங்கள் ஹிந்தியைப் பயன்படுத்தலாம் என்று சொல்லியிருப்பது ஹிந்திக்கு மொழி மாற்றம் செய்வதில் இருக்கக்கூடிய அவசரத்தை எடுத்துக்காட்டுகிறது.

21. மேலே காட்டிய விளக்கம் ராஜ்யங்களெல்லாம் மாற்றத்தைச் செய்யும் பொழுது இரண்டு வகைப்பட்ட நிகழ்ச்சி நிரலைக் கடைப்பிடிக்க வேண்டும் என அரசியல் அமைப்புக் கூறுவதைத் தெரிவிக்கிறது. இதில் தனிச் சிறப்பு என்னவென்றால் இதனை உடனே தொடங்க வேண்டிய சிறப்பு ராஜ்யங்களினிடம் இருக்கின்றதே தவிர யூனியனில் இல்லை. தொடக்க முயற்சி அவைகளிடமே உள்ளது.

22. ராஜ்யங்களுக்குள்ள இரு வகையான வேலைகள் வருமாறு. ராஜ்ய உள் விவகார ஆட்சி வேலைகளுக்கு ஆட்சி இடைநிலை மொழியை அவைகள் மாற்ற வேண்டும். இரண்டாவதாக ராஜ்ய வெளி விவகாரங்களுக்கு அதாவது ஏனைய ராஜ்யங்களோடும் யூனியனோடும் தொடர்பு கொள்ளும்பொழுதும் ஹிந்தியைப் பழகிக்கொள்வதனாலும் அவற்றின் ஊழியர்கள் அதனை கற்றுக்கொள்ளச் செய்வதனாலும் ஆங்கிலத்தை மாற்றஞ் செய்தல். இவ்வாறு இல்லாமல் யூனியனைப் பொறுத்த மட்டில் ஒரே காரியத்தைத்தான் செய்ய வேண்டும். அதாவது மத்திய செயலாளர் அலுவலகத்தில் உள் விவகாரங்களை ஹிந்தியில் செய்யத் தொடங்கவேண்டும். மத்திய அரசாங்கம் பிற மொழி வழங்கும் ராஜ்யங்களோடோ பொது மக்களோடோ தொடர்பு கொள்ளும்பொழுது அவர்கள் ஹிந்தியில் தொடர்பு கொள்ளத் தயாராவதை எதிர்பார்த்து இருக்கவேண்டும். இம்முறையில் யூனியன் ராஜ்யங்களோடு சேர்ந்து செய்ய வேண்டிய வேலையாகும் இது. இதற்கு மக்களிடையே ஹிந்தி பரப்பப்படும் நிலைமை தேவைப்படுகிறது. மொழி மாற்றத்தின் இயக்க வேலையை இதனுடன் விட்டுவிடுகிறேன்.

(உ)

23. அரசியல் அமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள மொழிகளைப் பற்றி இப்பொழுது ஆராய்வோம். அவை எல்லாம் சேர்ந்து பதினான்கு உள்ளன. அவை அனைத்தும் இந்தியாவிலேயே தோன்றி வளர்ந்த மொழிகள். அகில இந்தியாவிலும் பரவிய நம்முடைய பழமையான வடமொழியைத் தவிர மற்றவை யெல்லாம் நவீன இந்தியப் பிராந்திய மொழிகளாகும்.

24. மேலே கண்டபடி அவற்றைக் குறிப்பிடும் தேவை விதி 344-லும் 351-லும் ஏற்பட்டது. விதி 344-ஐ ஒட்டி இதனுடைய பொருளும் சிறப்பும்

முன்னரே குறிக்கப்பட்டுள்ளது. (முகவுரை, பாரா 14 காண்க) விதி 351-ஒடு இதன் தொடர்பு மிகவும் அடிப்படையானதும் முக்கியமானதுமாகும். அதாவது மொழிப் பிரச்னை, சிறப்பாக ஹிந்தி மொழிப் பிரச்னை என்பதாகும்.

25. யூனியன் ஆட்சி மொழியாகிய ஹிந்தியை விதி 351 விளக்கஞ் செய்கிறது. அவ்வாறு செய்கையில் மொழிப் பிரச்னையின் பல்வேறு பகுதிகளை அது பேசுகிறது. யூனியன் ஹிந்தியின் வடிவம், எல்லை, ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள 14 இந்திய மொழிகளோடு அதற்குள்ள தொடர்பு, அகில இந்தியப் பொது மொழி பிரச்னை ஆகியவற்றை எல்லாம் அது பேசுகிறது. அவற்றை எல்லாம் மிக ஆழ்ந்து படித்தாலொழிய நாட்டில் மொழி மாற்றத்தைத் தொடங்க முடியாது. இப்பொழுது இவ்விஷயத்தில் சோம்பல்பட்டு முடியாது. நம்முடைய அறிக்கையில் 13-வது பகுதியிலும் (ஹிந்தியையும் பிராந்திய மொழிகளையும் வளர்த்தலும் பரப்புதலும்) கூறப்பட்டுள்ள "தேசத்தின் மொழிக் கொள்கையின் எல்லாப் பகுதிகளையும் அனைவரும் அறிந்துகொள்ளும் முறையில் விளம்பரம் செய்து இவ்விஷயத்தைப் பற்றிய நியாயமான கருத்தைப் பலரும் அறிந்துகொள்ளச் செய்தல்" என்ற பகுதியை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன்.

(ஏ)

26. விதி-351 யூனியனுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது. அது வருமாறு :—"ஹிந்தி மொழியைப் பரப்பி இந்தியாவிலுள்ள பல்வேறு பண்பாடுகளையும் வெளியிடும் இடைநிலையாக அதனை வளர்க்கவேண்டிய கடமை யூனியனைச் சேர்ந்ததாகும். அம்மொழி மரபு கெடாதபடி இந்துஸ்தானியிலிருந்தும் ஏனைய இந்திய மொழிகளிடமிருந்தும் வடிவங்களையும், நடைகளையும், சொல்லாட்சிகளையும் எடுத்து ஜீரணித்து ஹிந்தியில் சேர்த்துக்கொள்வதுடன் தேவைப்பட்ட பொழுதெல்லாம் அதனுடைய நெடுங்கணக்கை முக்கியமாக வடமொழியிலிருந்தும் அடுத்தபடியாக ஏனைய பிராந்திய மொழிகளிலிருந்தும் கடன் வாங்கி வளர்க்கலாம்."

27. பதினான்குமொழிகளும்"இந்திய மொழிகள்"என்று குறிக்கப்பட்டுள்ளனவே தவிரப் "பிராந்திய மொழிகள்" என்று குறிக்கப்படவில்லை. ஏனென்றால் இந்த விதியின் காரியங்களுக்கு அது மிகவும் பெரிதாகிவிடும். யூனியன் ஹிந்தி ஜீரணிப்பதற்கு "ஹிந்தியின் மரபு கெடாதபடி" வடிவங்களும், நடைகளும், சொல்லாட்சிகளும், சொற்களும்கூட[1] தேவைப்படும்பொழுதெல்லாம் வருவதற்குரிய மொழிகளாக இவை குறிக்கப்பட்டுள்ளன.

28. யூனியன் ஹிந்தியானது "இந்தியாவின் கலப்புப் பண்பாட்டின்[2] எல்லாப்பகுதிகளையும் வெளியிடும் இடைநிலையாக" வளர வேண்டும் என்று

---

[1] ஹிந்தி மொழியை வளப்படுத்துவதற்குத் தேவையான சொற்களை முக்கியமாக வடமொழியிலிருந்தும் அடுத்தபடியாக ஏனைய மொழிகளிலிருந்தும் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளலாம் என்று விதி 351 சொல்வதைக் கவனிக்கவேண்டும். இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஏனைய மொழிகள் என்று சொல்லப்பட்டவை அந்த 14 மொழிகளையல்லாமல் எல்லா மொழிகளையுமே உள்படுத்தியதாகும். எனவே ஆங்கிலம் போன்ற ஏனைய உலக மொழிகளோடு நாம் தொடர்பு கொண்டிருந்தால் அவற்றிலிருந்தும்கூடச் சொற்களை எடுப்பதைத் தடை செய்யவில்லை. ஏனைய மொழிகள் என்று சொல்லும்பொழுது அவை இந்திய மொழிகளாக இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்படவில்லை. ஹிந்தியில் மரபு கெடாதபடி வார்த்தைகளை நிரம்ப ஏற்றுக்கொள்ளலாம். வட நாட்டில் இப்பொழுது சாதாரண மனிதன் பேசும் ஹிந்தியில் பயின்று வந்திருந்தால்கூட "வெளிச்" சொற்களை நீக்கிவிடவேண்டும் என்று தோன்றி இருக்கிற கிளர்ச்சியை இந்தச் சந்தர்ப்பத்தில் கவனிக்கவேண்டும். வார்த்தைகளை முழுவதும் வடமொழி மயமாக்குவதும் அரசியல் அமைப்பில் கண்டதற்கு விரோதமாகும்.

[2] இந்த விஷயத்தில் பஞ்சாப் ராஜ்யத்தின் ஹிந்தி போதனைக் குழுவின் அறிக்கையிலிருந்து மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.—

இந்த விதி எதிர்பார்த்துக் கட்டளையிடுகிறது. இதிலிருந்து விதி 351-ல் குறிக்கப்பட்ட யூனியன் ஹிந்தி வெறும் செயற்கையான "ஆட்சி முறை கிளை மொழியாக"வோ, "கூச்சலாகவோ"[1] இருக்கக் கூடாது என்றும் வளருகின்ற உயிருடைய மொழியாக இருக்கவேண்டும் என்றும் எல்லா மொழிகளும் சேர்ந்து முயலும் முயற்சியின் பயனாக இருக்கவேண்டும் என்றும் தெரிகிறது. அவ்வாறானால் தேச முழுவதும் செய்யும் முயற்சியில் பொதுவான தேசீய "ஆன்தர் பாஷா" ஹிந்தி அல்லது ஹிந்துஸ்தானி தோன்றும். அங்ஙனம் வரும் மொழி உணர்ச்சி முறையில் தேசத்தின் எல்லா மொழி இனத்தாராலும் ஏற்றுக்கொள்ளப்படும். இந்த ஆன்தர் பாஷா அம்மொழிகளுள் ஒன்றின் மேல் வளர்க்கப்பட்டாலும் அதனுடைய அடிப்படையும், மரபும் வடநாட்டிலுள்ள பல பிராந்திய மொழிகள் கிளை மொழிகளின் பொதுச் சொத்தாகும்.

"இந்தியாவின் பண்பாடு பல நூற்றாண்டுகளாக வளர்ந்த ஒன்று. அது வடமொழி, பிராகிருதம், பிற தேசீய மொழிகள் என்பவற்றால் மட்டுமன்றி பார்ஸியன், அராபி, ஆங்கிலம் என்பவற்றாலும் பாதிக்கப்பட்டுள்ளது. எந்தப் பிராந்தியத்தில் எந்த மொழியின் ஊடே அது வளர்க்கப்பட்டதோ அதற்கேற்றபடி பல்வேறு வடிவங்களை ஏற்றுக்கொண்டுள்ளது. உள்நாட்டு மரபும் வரலாறும் இந்தப் பொது வளர்ச்சிக்குத் தங்களுடைய பங்கைத் தந்துள்ளன. சமய ஆசிரியர்களும், கவிஞர்களும், நீதி செய்தவர்களும், தத்துவ ஞானிகளும் அதனுடைய வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டுள்ளார்கள். சரித்திர காலந் தொடங்கி இந்திய ஆசிரியர்கள் ஒரு உலக மனப்பான்மையை வளர்த்து அதன் மூலம் இந்திய மக்களின் வாழ்வை வளம்படுத்தி அம்மக்கள் மனிதத் தன்மையுடையவர்களாய், சமாதானப் பிரியர்களாய் சட்டத்திற்கு அடங்கி நடக்கும் நேர்மையாளர்களாய்ச் செய்துள்ளது. நல்லவர்கள் அனைவரையும் சகோதர வாஞ்சையோடு வரவேற்று இங்குத் தங்க வசதி அளித்தார்கள் அவர்கள். இந்தப் பழைய பூமியில் இதன் பயனாக ஒரு அழகிய கலப்புப் பண்பாடு தோன்றவே அதனை மிக்க அன்போடும் ஆதரவோடும் வளர்த்து வந்தார்கள். "வாழ், வாழவிடு" என்ற கொள்கையைச் செயலிலும், சொல்லிலும் நிறைவேற்றினார்கள்.

"வெற்றிகரமாக இந்தக் கலப்புப் பண்பாட்டை அவர்கள் வளர்த்ததன் அடிப்படை ஒன்றுண்டு. அதாவது ஒற்றுமைக்கும், ஒரே தன்மைக்கும் இடையேயுள்ள வேற்றுமையை அவர்கள் நன்கு உணர்ந்து அதனை வலியுறுத்தினார்கள். முன்னதை விரும்பினார்கள். பின்னதை ஒதுக்கினார்கள்."

"யூனியனால் வளர்க்கப்படும் ஹிந்தி இந்தியக் கலப்புப் பண்பாட்டின் எல்லாப் பகுதிகளையும் வெளியிடும் கருவியாக அமைய வேண்டும். நம்முடைய கடமையின் இந்தப் பகுதியை எப்பொழுதுமே நினைவில் வைத்துக்கொண்டு செயற்படும்பொழுது ஹிந்தியைப் போதித்தல், பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகங்கள் தயாரித்தல் என்பவை போன்ற காரியங்களில், செயலில் காட்ட வேண்டும்."

[1] என்றாலும் யூனியன் மொழி என்பதும் தேசீய மொழி என்பதும் ஒரு வேறுபாட்டையுடையது என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். முதலில் சொன்னது ஆட்சி பற்றியது. அடுத்துச் சொன்னது ஆட்சியை யல்லாத பொதுமக்களைப் பற்றியது. இந்த வேறுபாடு மிக முக்கியமானது. இதிலுள்ள உண்மையை எடுத்துக்காட்ட ஆசிரியர் குழு (பம்பாய் ராஜ்யம்) அறிக்கையிலிருந்து எடுத்துக்காட்ட விரும்புகிறேன். யூனியன் ஆட்சி மொழி பற்றி அது கீழ்வருமாறு கூறுகிறது :—

"அரசாங்க விவகாரங்களுக்கு அதற்குரிய மொழிகளை ஏற்படுத்துக்கொள்ள வேண்டும். குறுகிய பொருளுடையதும், இங்ஙனம் தனிப்பட்ட முறையில் இயற்றப்பட்டதுமான ஹிந்திச் சொற்களே இந்தியாவின் ஆட்சி மொழியாக அமையும். எல்லா இலாக்காகளிலும் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக அவர்களுக்கே உரிய குறிப்பிட்டதும், வரையறுக்கப்பட்டதுமான கலைச் சொற்கள் இருத்தல் வேண்டும். இலாக்காக்களுக்குக் குறிப்பிட்ட பெயர்கள் இருத்தல் வேண்டும். வடிவங்கள், எழுத்து மொழியின் வடிவங்கள் முதலானவை ஐயத்திற்கும் குழப்பத்திற்கும் இடமின்றியும் வரையறுத்த மொழியில் வழங்கப்படவேண்டும். இதுவே விதி 343-ல் சொல்லப்பட்ட ஆட்சி மொழி . . . . ஹிந்தி. "உயர்ந்த ஹிந்தி" (எட்டாவது ஷெட்யூலில் ஹிந்தி என்று குறிக்கப்படுவது) ஒரு பிராந்தியத்தில் மேலும் தொடர்ந்து "வீட்டு மொழியாக" 30 அல்லது 50 மிலியன் மக்களுக்குப் பயன் பட்டு வரும், எனவே அதனுடைய அதிகார எல்லையில் வரம்புகளில்லை. "351-வது விதியில் சொல்லப்பட்ட ஹிந்தி இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் பொது இடைநிலையாக அவர்கள் பொதுக் குறிக்கோளுக்குப் பயன் பட்டுவரும். பொதுப்பணி செய்வோர், தலைவர்கள், அமைச்சர்கள், தூது செல்வோர், அறிஞர்கள், ஆசிரியர்கள், பத்திரிகாசிரியர்கள், பத்திரிகை நிருபர், வானொலி மக்கள், உழவர்கள், தொழிலாளர்கள் ஆகிய இவர்களெல்லாம் ஒன்றாகக் கூடி மாநாடுகளிலோ சங்கங்களிலோ அகில இந்தியக் குறிக்கோளை வெளியிடவும், ஆராயவும், பேசவும் இம்மொழி பயன்படும். இந்த ஹிந்தி பரந்துபட்ட நிலையில் அனைத்தையும் உள்படுத்தி நிற்குமே தவிர

(எ)

29. எட்டாவது ஷெட்யூலில் "இந்திய மொழிகள்" என்று சொல்லப்பட்டதன் அடிப்படைப் பொருளை மேற்கண்ட சூழ்நிலையில் ஆராயவேண்டும். இந்தியாவின் பல்வேறு பெரிய பிராந்தியங்களிலும் வழங்கிவரும் இலக்கிய மொழிகளாகும் அவை. அவை நம்முடைய மக்களின் ச்வபாஷாக்களாகும். அதனால்தான் நம்முடைய பிரதமர் அவை அனைத்தையும் இந்தியாவின் தேசீய மொழிகள் என்று சமீப காலந்தொட்டுக் கூறிவருகிறார்.

30. இந்த மொழிக் கூட்டத்தின் பெயர் மாற்றம் இப்பொழுது தேவைப்படுகிறது. ஏனென்றால் இன்றைய சூழ்நிலையில் இம்மொழிகளிடையே ஏற்பட்டுள்ள தொடர்பைக் கருதியாகும். இக்கருத்து சென்னை அரசாங்கம் அளித்த விளக்கக் குறிப்பால் நன்கு தெரிகிறது. இது முன்னமே காட்டப்பட்டிருப்பினும் என்னுடைய கருத்தை விளக்க மறுபடியும் இங்கே தருகிறேன் :—

31. "அரசியலமைப்பு, ஹிந்தியை இந்தியாவின் 'தேசீய மொழி' என்று கூறி ஏனையவற்றைப் 'பிராந்திய மொழிகள்' என்று சொல்லி, மற்றவற்றைக் கவனிக்காமல் விட்டுவிட்டது, என்ற ஒரு எண்ணம் நாடு முழுவதிலும் பரவியுள்ளது. இந்த எண்ணம் தவறானது. ஹிந்தியை இந்தியாவின் தேசீய மொழி என்று யாரும் **கூறவில்லை.** அது இந்திய யூனியன் ஆட்சி மொழியாக மட்டுமே உள்ளது. ஆட்சி மொழியும், தேசீய மொழியும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. இந்தியாவிலுள்ள **எந்த** ஒரு ராஜ்யத்திலும் வழங்குகின்ற **எந்த** ஒருமொழியும் "பிராந்திய மொழி" என்றே கூறப்படுகிறது. இப்பெயருள் ஹிந்தியும் அடங்குகிறது. மேலும் பெயர் சொல்லப்படாத எந்த மொழியையும் இது **விலக்கவில்லை.**

"சமீப காலத்தில் வளர்ச்சி அடைந்து வருகின்ற மொழிப் பிராந்திய எண்ணங்களுக்கு அரசியல் அமைப்பில் யாதொரு காரணமும் காணப்படவில்லை. இத்தகைய ஓர் எண்ணம் வளர்வதற்குத் 'தேசீய மொழி' என்ற சொல்லைப் பொருள் விளங்காமலும், கண்டபடியும் பயன் படுத்தியது ஒரு காரணமாகும். இவ்வாறு பயன்படுத்துவதை மாற்றவேண்டும். இந்தியா தேசம் என்றுமே பன்மொழி நாடாக இருந்ததோடு இன்னும் அப்படியே இருந்துவரும். தேசீயச் சோற்றில் மறைக்கும் பூசனிக்காய் அன்று இது. பரம்பரையாகப் பெற்ற இப்பண்பாட்டிற்குத் தேசம் கர்வமடையவேண்டும். இந்தியப் பிராந்தியங்களில் எந்த இனத்தாராலும் தாய் மொழியாகப் பேசப்படும் எந்த **ஒரு** மொழியும் இந்திய தேசீய மொழி என்றே குறிக்கப்பட வேண்டும். . . ."

(ஏ)

32. மேலே கூறப்பட்ட வார்த்தைகள், ராஜ்ய பாஷாவாக **உள்ள** ஹிந்தி, யூனியன் ஆட்சி மொழியாக, அகில இந்தியப் பொது மொழியாக, அதாவது ஆன்தர் பாஷாவாக இருக்க முடியாது என்பதை வெளிப்படுத்தும். இதே போல எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்ட "உயர்ந்த ஹிந்தியாகவும்" அது இருக்க முடியாது. இந்த வேறுபாடு அரசியல் அமைப்பின் 351-வது விதியை எட்டாவது ஷெட்யூலோடு சேர்த்துப் படித்தால் நன்கு விளங்கும்.

ஆழ்ந்த நிலையில் தனித்தன்மை பெற்று நில்லாது. இது எவ்வளவு எளிமையாக இருக்க முடியுமோ அவ்வளவு எளிமையாக இருக்க வேண்டும். எந்தெந்தப் பகுதிகளிலிருந்து அதற்குரிய ஆகாரம் கிடைக்குமோ அவை அனைத்தையும் அச்சமின்றி ஏற்றுக்கொள்ளலாம். அதனுடைய ஒரே குறிக்கோள் அனைவராலும் அது எளிதாகவும், விரைவாகவும் புரிந்து கொள்ளப்படவேண்டும் என்ற **ஒன்று தான். அது ஜாதி, சமய, தேச, தொடக்க, வேறுபாடுகள் எதனையும் கருதாது.**"

33. விதி 353-ம், அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூலேயும் சேர்த்துப் படிக்கும்பொழுது மிகவும் காரசாரமான ஒரு வாதத்தை அது கிளப்பிவிடு கிறது. அதாவது "இரண்டு ஹிந்திகள்" என்று சில சமயம் சொல்லப்படு வதையே நான் குறிப்பிடுகிறேன். நம்முடைய தேசீய வாழ்வில் சென்ற 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஊறி வருகின்ற காரணங்களால் ஹிந்திக் கல்வி யுடையவர்கள் இதனை ஆதரிக்கவில்லை. ஆனால் இந்தப் பிரச்னை அடிப்படை ஆனது. அரசியலமைப்பின்படி யூனியன் ஆட்சி மொழியாக வரப்போகின்ற ஹிந்தியின் வடிவம், இயல்பு என்பவற்றைப் பொறுத்தது இது. அரசியலமைப்பு ஏற்படுவதற்கு முன்னரும் கூட அதாவது 1950-க்கு முன்னர் இருந்த பிரச்னையில் வேற்று வடிவம்தான் இது. அதாவது தேசீய மொழியின் இயல்பும், வடிவமும் யாவை ? ஹிந்தி அல்லது இன் னும் சரியாகச் சொல்லப்போனால் ஹிந்துஸ்தானி என்பதற்கும் ஹிந்தி அல்லது உருதுவுக்கும் உள்ள தனித்தனி இயல்புகளை குறிப்பிட்டுக் காட்டும் பிரச்னைதான் இது. இவை இரண்டையும் ஒரு பொது மொழியிலி ருந்து கிடைத்த இரண்டு கிளைகள் என்றே கூறப்பட்டது. (அரசியலமைப்பு இவை இரண்டையும் இரண்டு மொழிகள் என்று குறிப்பிட்டுள்ளதே தவிர ஒரு பொது மொழியின் இரண்டு வடிவங்கள் என்று குறிப்பிடவில்லை.)

34. யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு உள்ள மொழியை ஹிந்தி என்று அரசியலமைப்புக் கூறுகிறது. எட்டாவது ஷெட்யூலிலும் "இந்தியாவின் மொழிகள்" என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதியிலும் இதே பெயர் வழங்கு கிறது. எனவே இவற்றினுடைய அடிப்படை யாது என்ற பிரச்னை ஏற்படு கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் "இரண்டு ஹிந்திகள்" என்ற பெயரும் வருகிறது.

35. எட்டாவது ஷெட்யூல் உருது, குஜராத்தி, மராத்தி ஆகியவற்றோடு ஹிந்தியையும் கொண்டுள்ளது. 351-வது விதி ஹிந்தி மொழியானது, எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பெற்ற ஹிந்தி உள்பட எல்லா மொழிக ளிலிருந்தும் வடிவங்கள், நடை, சொல்லாட்சிகள் ஆகியவற்றைப் பெற்றுத் தன்னை வளம்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறது. இங்கே ஹிந்தி மொழி வளம்படுத்தப்படவேண்டும் என்று சொல்வது, 343-வது விதியில் யூனியன் ஆட்சி மொழி என்று சொல்லப்பட்ட ஹிந்தியைக் குறித்தே யாகும். அம்மொழியை யூனியன் ஆட்சி விவகாரங்களுக்காகப் பெருக்கி வளர்த்துப் பயன் படுத்தவேண்டும். அதற்குரிய வழிகளும் அந்த விதி யிலே சொல்லப்பட்டுள்ளன. எட்டாவது ஷெட்யூலைக் குறிப்பிட்டு, இந்த விதி ஹிந்தி மொழியானது ஹிந்தியிலிருந்தும், உருது, குஜராத்தி முதலிய வற்றிலிருந்தும் வடிவம், நடை முதலானவற்றைப் பெற்றுப் பயனடைய வேண்டும் என்று சொல்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் ஹிந்தி மொழியிலிருந்து நடை, சொல்லாட்சிகள் முதலியவற்றை, ஹிந்தி மொழி பெறவேண்டும்! இது பயத்தியக்காரத்தனம். எனவே மீற முடியாத தருக்க முறையில் இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்தி என்று சொல்வது இரண்டு ஹிந்திகளைக் குறிக்காவிட்டால் 351-வது விதி அர்த்தமற்ற விதியாகும். உண்மையை ஆராயும் இடத்து அது அவ்வாறுமில்லை. எனவே எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்ட ஹிந்தி என்பது விதி 343, 351 இவற்றில் குறிக் கப்பட்ட யூனியன் மொழியாகிய ஹிந்தியாக இருக்கமுடியாது. இந்த இரண்டு சொற்களும் பார்ப்பதற்கு ஒன்றுபோலத் தோன்றினாலும் ஒன்றுக் கொன்று தொடர்புடைய இரண்டு வேறுபட்ட கொள்கைகள். ஒருவகையான இரட் டைத் தன்மை பெற்ற ஒருமை இங்கே இருக்கிறது. இது வெறும் அலங்கார முறையிலோ, சட்ட முறையிலோ அல்லது அறிவு முறையிலோ இல்லாமல் அடிப்படையாகவே இது இருக்கிறது என்பதைச் சென்ற 40 ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்திய தேசீய மொழிக் கிளர்ச்சியை ஆராய்ந்து பார்த்தால் விளங்கும். இதனை இம்மட்டோடு நிறுத்துகிறேன்.

36. மேலும் எட்டாவது ஷெட்யூலில் ஹிந்தி என்று சொல்லப்பட்டது பொருத்தமற்ற முறையில் "மிகப் பெரும்பாலான ஒரு கூட்டத்தாரால்

நாட்டில் பேசப்படும் மொழி" என்று சொல்லப்படும் மொழியைக் குறிப்பதன்று என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். மிகப் பரந்து பட்ட முறையில் இதனைச் சொல்ல வேண்டுமேயானால் வட இந்தியாவில் மிகப் பெரிதாக உள்ள ஒரு இனம் பேசும் பல்வேறு மொழிகளையும், பல்வேறு கிளை மொழிகளையும் குறிக்கும் ஒரு பெயராகும் இது. இந்த இனத்தை ஹிந்தி பேசும் இனம் என்று சிலர் சொல்கிறார்கள், புரிந்துகொள்கிறார்கள். இந்தப் பல்வேறு வட இந்தியப் பிராந்திய மொழிகளின் பொதுவான அடிப்படைப் பண்பை அல்லது மரபைத்தான் நாம் யூனியன் மொழியை வளப்படுத்த வேண்டும் என்று சொல்லும்பொழுது குறிக்கின்றோம். அதற்குப் பெயரும் ஹிந்திதான்.

37. மேலே கூறிய பாராக்கள், ஹிந்தி மொழிக்கு இரட்டை இயல்பு இருப்பதை அறிவிப்பதோடு, யூனியன் மொழியாக வரும்பொழுது ஒரு புதிய இயல்பையும் பெறுகிறது என்றும் குறிக்கின்றன. அரசியலமைப்பில் உருதுவினும் வேறாகக் குறிக்கப்பட்டுள்ள ஹிந்தி மொழியின் இயல்பை இங்கே நான் கூறவில்லை. யூனியன் ஹிந்திக்கு இத்தகைய வேறுபாடுகள் இருப்பதற்கில்லை.

38. இறுதியாக இம்மொழி வடிவில் ஒரு பகுதி ஆராய்வதற்கு எஞ்சியுள்ளது. 345-வது விதி ஹிந்தியை ராஜ்ய மொழி என்று குறிப்பிடுகிறது. அந்த விதி ஒரு ராஜ்யத்தின் சட்ட மன்றம், அந்த ராஜ்யத்திலுள்ள ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளையோ ராஜ்ய ஆட்சி விவகாரங்களுக்குப் பயன்படுத்தலாம் **அல்லது** ஹிந்தியைப் பயன் படுத்தலாம் என்றும் கூறுகிறது. பிராந்திய மொழிக்குப் பதிலாக இங்கு ஹிந்தி என்று குறிப்பிடுவது யூனியன் ஹிந்தி அதாவது இந்தியாவின் ஆன்திர பாஷாவையே ஆதலால், இந்த ஏற்பாடு பெரிதும் ஹிந்தி பேசாத ராஜ்யங்களையே பற்றியது.

39. இந்த விஷயம்பற்றி பம்பாய் ராஜ்யத்தை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நான்கு வருஷங்களுக்கு முன்னர் ராஜ்ய சட்ட மன்றம் இந்த ராஜ்ய விவகாரங்களுக்கு (சட்ட மன்றங்கள் உள்பட) தாலுகா அல்லது மாவட்ட நிலைமைக்கு மேற்பட்ட பகுதிகளில் ஹிந்தியை ஆட்சி மொழியாகக் கொள்ளலாம் என்று ஒரு சட்டம் கொண்டுவர முயன்றது. ஏனைய நிலைகளில் குஜராத்தி, மராத்தி, கன்னடம் ஆகிய மொழிகள் இந்த ராஜ்யத்தின் பிராந்திய மொழிகள் ஆதலால் அவ்வவற்றின் துறைகளில் அவை பயன் படலாம் என்றும் கூறப்பட்டது. இவ்வாறு கொண்டுவருவதற்குரிய காரணங்களைச் சொல்லும்பொழுது பம்பாய் பல மொழி ராஜ்யமாக இருத்தலின் யூனியன் மொழியாகவும் ராஜ்யங்களின் இடையே வழங்கும் மொழியாகவும் உள்ள ஹிந்தி உயர்தர நிலைகளில் ஆட்சிக் காரியங்களுக்குத் தகுந்த கருவி என்று கூறப்பட்டது. பலரும் அதை எதிர்த்த காரணத்தால் தீர்மானம் கைவிடப்பட்டது.

40. உத்தரப் பிரதேசம் மற்றொரு வகையான உதாரணமாகும். யூனியன் மொழியாகிய ஹிந்தியைத்தான் ஏற்றுக்கொள்வதாக நினைத்து ஹிந்தி ஒன்றை மட்டுமே அது ராஜ்ய மொழியாக ஏற்றுக்கொண்டது. இவ்வாறு நினைத்ததால் பிராந்திய மொழியைப்பற்றிய பிரச்னை எழவில்லை என்று அது கருதியது. இக்கருத்துத் தவறானதே. அது ஏற்றுக்கொண்ட ஹிந்தி ஏனைய மொழிகளைப்போல, ஒரு பிராந்திய மொழியேயாகும். முன்னர் நாம் குறிப்பிட்டபடி உருது மொழியை ஏற்றுக்கொள்ளாமையினால் யூ.பி. யிலுள்ள மக்கள் விதி 347-ன்படி ஜனாதிபதிக்கு விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

41. இந்த இரண்டு உதாரணங்களும் ஹிந்தியை இவ்வாறு உபயோகப் படுத்துவதிலுள்ள தொல்லையை நன்கு எடுத்துக் காட்டுகின்றன. 345–6 விதிகளின்படி ஒரு ராஜ்யம் எந்த ஒரு பிராந்திய மொழியையும் அல்லது மொழிகளையும் நீக்கி விட்டு ஹிந்தியை ராஜ்ய மொழியாகக் கொள்ளலாம்.

இவ்வாறுதான் உத்தரப் பிரதேசம் உருதுவை ஏற்றுக்கொள்ள மறுத்து ஹிந்தியை மட்டும் ஏற்றுக்கொண்டுள்ளது. அல்லது பிராந்திய மொழிகளை ஒரு நிலை வரையிலும் ஒரு சில காரியங்களுக்கு ஒதுக்கி வைத்துவிட்டு மற்றவற்றிற்கு ஹிந்தி மொழியை ஏற்றுக் கொள்ளலாம். இவ்வாறுதான் பம்பாய் செய்ய முயன்றது.

42. அரசியல் அமைப்பிலுள்ள இந்த ஏற்பாடு, ராஜ்ய மொழிக்குப் பதிலாக ஹிந்தியை வைத்து அந்த ராஜ்யத்திலுள்ள மக்களுக்கு வெறுப்புணர்ச்சியை ஊட்ட வேண்டுமென்று நிச்சயமாக அரசியலமைப்பின் ஏற்பாடுகள் கருதியிருக்க முடியாது. விதிகள் 345–346ஐ இவ்வாறு பயன்படுத்தினால் பிராந்திய மொழிகளுக்கும் யூனியன் மொழிக்கும் இடையே தாங்கமுடியாத ஒரு போட்டி உண்டாகத்தான் செய்யும்.

43. இந்த சந்தர்ப்பத்தில் டாக்டர் ஆபீத் ஹுசேன் சமீபத்தில் எழுதிய "இந்தியாவின் தேசீயப் பண்பாடு" என்ற நூலில் எழுதிய ஒரு குறிப்பை எடுத்துக் காட்டுவது நலம். அந்தப் புத்தகத்தின் 195-வது பக்கத்தில் அவர் சொல்வதாவது :—

> "விதி 345 ஒவ்வொரு ராஜ்யத்திலுமுள்ள பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழியை ராஜ்யத்தின் ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறுகிறது. ஆனால் அதே சமயத்தில் சிறுபான்மையினர் பேசும் மொழிகளுக்கும் சம அந்தஸ்துத்தர வேண்டும் என்பதை, ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்சி மொழிகளை ஏற்றுக்கொள்ளலாம் என்று சொல்லும் பொழுது, குறிப்பாகப் பெறவைக்கிறது."

இந்த விதியின் தத்துவத்தை இங்ஙனம் கூறிவிட்ட பிறகு அவர் மேலும் தொடர்ந்து சொல்வதாவது:—

> "ஆனால் ராஜ்யத்தில் வழங்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள், என்ற சொற்றொடருக்குப் பின்னர், அல்லது ஹிந்தி என்ற சொல் காணப்படுவது, ஆபத்தானது. ஹிந்தி மொழி வழங்காத ராஜ்யங்களிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்கள் மொழியை விட்டு விட்டு ஹிந்தி மொழி வழங்க வாக்குரிமை வழங்க மாட்டார்கள். ஆதலால் இதில் நடைமுறை முக்கியத்துவம் ஒன்றுமில்லை என்று சொல்லப்படலாம். இருந்தாலும் கூட ஹிந்தி மொழி வழங்காத ஒரு ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக வரும் விஷயத்தில் அந்த ராஜ்ய மொழியோடு ஹிந்தி போட்டி போடலாம் என்பதைக் குறிப்பாகச் சொல்வதுகூட ஆபத்தை விளைவிக்கும். ஏனென்றால் ஹிந்தி பக்தர்கள் அறிவைக்காட்டிலும் ஆர்வம் மிகுதியாக உடையவர்களாதலால் பிராந்திய மொழியை நீக்கிவிட்டு ஹிந்தியை வைக்க வேண்டுமென்று முயன்று அதன் பயனாக மொழி ஜாதித்துவத்தை விசிறி ஒரு பெரிய நெருப்பாகவே ஆக்கிவிடுவார்கள்."

> "எனவே அரசாங்கமும், ஏனைய பொறுப்புள்ள அமைப்புக்களும் ஹிந்தி மொழியைப் பரப்பப் பாடுபடும்பொழுது பிராந்திய மொழிகளுக்குள்ள நியாயமான உரிமையையோ, இடத்தையேயோ பறிப்பதாக உத்தேசம் இல்லை என்பதை நன்கு விளக்கிவிட வேண்டும். ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் மனத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் பயம் என்னவென்றால் ஹிந்தியைத் தங்கள் பிராநதியத்தில் நுழைப்பது 'ஹிந்தி ஏதேச்சாதிகாரத்தின்' தொடக்கம் என்பதாகும். இத்தகைய ஒரு விஷயம் தேசீய அமைப்பில் பரவிப் புதிதாக முளைத்து வருகின்ற ஒற்றுமையை அழித்து விடாமல் பாதுகாக்கவேண்டும். இந்த ஒற்றுமையின் மேல்தான் நம்முடைய சுதந்திரமும், தேசீய இனம் என்ற நிலைமையும் கட்டப்பட்டுள்ளன."

44. பம்பாயிலும், உத்தரப் பிரதேசத்திலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் டாக்டர் அபீத் ஹுசேன் தம்முடைய நூலில் எழுதிய குறிப்புக்கள் நியாய மானவை என்பதை எடுத்துக்காட்டப் போதுமான சான்றுகள். ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தியை ராஜ்ய மொழியாகவும் பயன்படுத்த லாம் என்று 345-வது விதியை தவருகப் பொருள் செய்து கொண்டால் மேலே கூறிய நிகழ்ச்சிகள் போன்றவை வருவது இயல்புதான். இந் நிலையில் குஜராத் பல்கலைக் கழகச் சட்டத்தில் இங்ஙனம் ஒரு ஏற்பாட்டைச் செய்தது உயர்தரக் கல்வி முறையில் போதன மொழி பற்றிய தவிர்க்கக் கூடிய ஒரு குழப்பத்தை உண்டாக்கியது. குஜராத் பல்கலைக் கழகச் சட்டம் "குஜராத்தி மொழியையும் (அந்தப் பிராந்திய மொழி) அல்லது தேவ நாகரி எழுத்தில் எழுதப்பட்ட ஹிந்தியையும் அல்லது அவை இரண்டை யுமே போதன மொழிகளாகவும், பரீட்சைக்கு இடைநிலை மொழிகளாகவும் கொள்ளலாம்" என்று கூறுகிறது. இது அரசியலமைப்பின் 345-வது விதியை ஒட்டியதாகும். அவ்விதி ஒரு ராஜ்யத்தின் ஆட்சி விவகாரங் களுக்கு எந்த மொழியையும் ஏற்றுக் கொள்வது பற்றிய ஒரு குறிப்பாகும். இங்கே குறிப்பிடக்கூடிய பொருத்தமான மற்றொரு நிகழ்ச்சி குஜராத்தில் சமீபத்தில் நிறுவப்பட்ட வல்லப் வித்யாபீட் என்பது பற்றியதாகும். அந்தப் பல்கலைக் கழகச் சட்டம் ஹிந்தி மொழி ஒன்று மட்டுமே போதன மொழியாகவும், பரீட்சை மொழியாகவும் இருக்க வேண்டும் என்று கூறு கிறது. இந்த உதாரணங்கள் யூனியன் மொழியாக உள்ள ஹிந்தி மொழி ஹிந்தி மொழி பேசாத பிராந்தியத்தில் அல்லது ராஜ்யத்தில் ஆட்சி மொழி யாகவும் போதன மொழியாகவும் இருக்க வேண்டிச் செய்யப்படும் முயற்சியை குறிக்கும்.

45. இவ்வாறு செய்தால் ஆட்சித் துறையில் மட்டும் அல்லாமல் கல்வி, பண்பாட்டுத் துறைகளிலும்கூட ஹிந்தியைத் திணிக்கிருர்கள் என்று நினைக்க இடமேற்படும். ராஜ்ய மொழியாக வேண்டுமாஞல் ஹிந்தியைப் பயன் படுத்தலாம் என்று அரசியலமைப்பு இடந்தருகிறது. என்றாலும் ஒரு ராஜ்யத்தில் இயல்பாகவும், நியாயமாகவும் உரிமையுடைய பிராந்திய மொழிகளை முற்றிலும் நீக்கிவிட்டு, ராஜ்ய மொழியாகவும், போதனமொழி யாகவும் ஹிந்தியைக் கொள்வது மிகவும் தவருனது. நிச்சயமாக அரசிய லமைப்பு சற்றும் விரும்பாத முறையில் யூனியன் மொழிக்கும் பிராந்திய மொழிகளுக்கும் இடையே விரும்பத்தகாத போராட்டத்தை இது உண் டாக்கிவிடும். இத்தகைய ஒரு முரண்பாடு நம்முடைய மக்களிடையே "மொழி–உணர்ச்சி" ஒற்றுமையை உண்டாக்க முடியாமல் தேசீய ஒற்று மையைக் குலைக்கும்.

46. ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையேயும், ஒரு ராஜ்யத்திற்கும் யூனியனுக்கும் இடையேயும் வழங்கப்படும் மொழியாக ஹிந்தி இருந்து தீர வேண்டும். என்றாலும் ஒரு ராஜ்யத்தின் உள்ளேயே கூட இது வழங்க சந்தர்ப்பங்கள் உண்டு. உதாரணமாக அரசாங்க ஊழி யத்திலும், வெளியிலும் இருப்பவர்கள் அந்தப் பிராந்திய மொழியை அறியாவிட்டால் அல்லது மிகக்குறைவாக அறிந்திருந்தால் அவர்கள் யூனியன் மொழியாகிய ஹிந்தியை வழங்குவார்கள். பல மொழிகளையுடைய நம்முடைய நாட்டில் இவ்வாறு ஹிந்தியைப் பொது இடைநிலையாகப் பயன் படுத்துவது நியாயமானது மட்டும் அன்று; அவசியமானதும் ஆகும். இவ்வாறு செய்வது அந்தப் பிராந்தியத்தை அல்லது அந்த ராஜ்யத்தைச் சேராத மக்கள் தாங்கள் புரிந்துகொள்ள முடியாத பிராந்திய மொழி வழங்குகின்ற ராஜ்யத்தில்கூட வந்து ஊழியம் செய்வதற்குத் தகுதிதரும். இப்பொழுது அவர்கள் ஆங்கிலத்தைப் பயன்படுத்துகிருர்கள். ஆங்கிலத்தை ஹிந்தி மொழி நீக்கும் பொழுது இம்மக்கள் இதே நிலையில் ஹிந்தியைப் பயன்படுத்துவார்கள். இவ்வாறு அதனை உணர்ந்து கொண்டால் ஹிந்தி மொழி வழங்காத ராஜ்யங்களில் ராஜ்ய மொழியாக உள்ள ஹிந்தி ஒரு வித முறண்பாட்டையும் உண்டாக்காது. அதற்குப் பதிலாக பிராந்திய மொழிகளுக்குத் துணைசெய்யும் மொழியாக இருந்து பல்வேறு மொழிச்

கூட்டங்களிடையே ஒற்றுமையையும் ஒருமைப் பாட்டையும் அது வளர்க்கும். 351-வது விதியைக் குறிப்பாக நோக்கினல் யூனியன் மொழி இப்படிப்பட்ட சிறப்பான ஒரு ஒற்றுமை இயல்பை நம்முடைய வாழ்வில் உண்டாக்கவே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரியும். இதேபோல நம்முடைய பல்கலைக் கழகங்களும், சட்ட மன்றங்களும், நீதிமன்றங்களும்கூட அவை ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் இருந்தால்கூட அந்தப் பிராந்தியத்தைச் சேராதவர்கள் ஹிந்தி மொழியை வழங்கவும், பிராந்திய மொழிகளோடு சேர்த்து இவற்றை வழங்கவும் முடியும். பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் ஹிந்தியை இரண்டாம் மொழியாகக் கற்பார்களாதலால் இப்படிப்பட்ட ஒரு நிலையை உண்டாக்குவது கடின மன்று. இந்த ஏற்பாடு யூனியன் மொழியாக ஹிந்தியை நம் கல்வி முறையில் கட்டாயப் படிப்பாகச் செய்வதை எதிர்பார்த்து நிற்கிறது. படிப்படியாக ஹிந்தியை வளர்த்து அதன் மூலம் ஆங்கிலத்தை நீக்குவதற்குரிய முதற்படியும், முக்கியமான படியும் இதுவேயாகும்.

பகுதி 2

அரசியல் அமைப்பின்படி சட்டஞ் செய்யும் மொழியும் நீதி மன்றங்களில் வழங்கும் மொழியும்.

(அ)

1. அரசாங்கத்தின் ஆட்சிக் காரியங்கள் பலவற்றுள் சட்டஞ் செய்யும் வேலையும் நீதி மன்ற வேலையும் தனி இயல்பும் முக்கியத்துவமும் வாய்ந்தவை. அமைதிக் கால ஆட்சியைக் கொண்டு செலுத்தும் நிர்வாகத்தையும்விட இவை முக்கியமானவை. அரசியல் அமைப்பு (விதி 348) இந்த இரண்டு வகை விவகாரங்களிலும் ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றம் ஏற்படும்பொழுது குழப்பமோ ஆட்டமோ காணுதபடி நன்கு பாதுகாக்கிறது.

2. இப்பாதுகாவலின் அடிப்படை என்னவென்ருல் இந்திய மொழிகளும் யூனியன் ஹிந்தியும் நன்கு வளர்ச்சியடைந்து, புறையே ராஜ்யங்களிலும் யூனியனிலும் தம் கடமையை மேற்கொள்ளக்கூடிய சக்தியைப் பெறுகின்ற வரையில் மிக இன்றியமையாதது தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் வரையறுத்த பொருளேயும், குறிப்பிட்ட கருத்தையும் தெரிவிக்க வேண்டி ஆங்கிலத்தையே பயன்படுத்தலாம் என்று சொல்கிறது.

3. இப்பாதுகாவலேப் பற்றிப் பேசும்பொழுது மற்றென்றையும் கவனிக்க வேண்டும். பாராளுமன்றத்திலும், ராஜ்ய சட்ட மன்றங்களிலும் சட்டங்கள் பற்றி நடைபெறும் விவாதத்திற்கும், உண்மையிலேயே, சட்டங்களே இயற்றுவதற்கும் ஒரு வேறுபாட்டை இந்திய அரசியல் அமைப்புச் செய்கிறது. அதே போல நீதித் துறையிலும் சட்ட மன்றங்களில் நடைபெறுவதற்குரிய மொழியையும், தீர்ப்பு வழங்குவதற்குரிய மொழியையும் ஆணை முதலியன இடுவதற்குரிய மொழியையும் வேறுபாடு படுத்திக் காட்டுகிறது.

4. மேலே காட்டியுள்ள இந்த வேறுபாடுகள் ராஜ்யங்களேப் பொறுத்த மட்டில் நியாயமான ஆட்சிக் காரியங்களுக்கு அந்தப் பிராந்திய மொழிகளேயே முழுவதும் பயன்படுத்த உரிமை தருவதையும் அதேபோல அகில இந்திய, ராஜ்யங்களிடையே நடைபெறுகின்ற விஷயங்களுக்கு யூனியன் மொழியை முற்றிலும் பயன்படுத்த வேண்டிய உரிமையைத் தருவதையும் எடுத்துக்காட்டவே விதி 348 வழி கூறுகிறது.

(ஆ)

5. யூனியன் நிலேயில் மிக உயர் நீதி மன்றம் தன்னுடைய காரியங்களிலும், பாராளு மன்ற சட்ட மூலங்களிலும், ஆங்கிலத்தையே தொடர்ந்து பயன்படுத்தவேண்டும் என்றும் பாதுகாவல் செய்யப்பட்டுள்ளது. பாராளு மன்றம் வேறு வகையாகச் சட்டம் செய்தாலொழிய இதுவே நடைபெறும். அதாவது விதி 343 (3)-ன்படி 15 ஆண்டுகளின் முடிவில் ஆங்கிலத்தை நீக்கவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லே. விதி 349-ஐ யொட்டிப் பாராளு மன்றம் இந்த இரண்டு இடங்களிலும் ஹிந்தியைப் பயன்படுத்தலாம் என்று தனியே சட்டஞ் செய்கின்ற வரையில் ஆங்கிலமே இருந்து வரும்.

6. ஜனதிபதி தனியே ஆணேயிட்டாலொழிய 1965 வரை பாராளு மன்றம் இவ்விஷயத்தில் ஒன்றும் செய்ய முடியாது. ஜனதிபதியும்கூட ஆட்சி மொழிக் கழகத்தின் சிபாரிசுகளேயும், விதி 344-ஐ யொட்டி இந்தச்

சிபார்சுகளை ஆராய ஏற்படுத்தப்படுகின்ற பாராளு மன்றக் குழுவின் அறிக்கையை யொட்டியுமே, இதனைச் செய்ய முடியும். இந்தியாவில் அரசியல் அமைப்புத் தொடங்கிய 15 ஆண்டுகளுக்குள் விதி 348-ஐ திருத்துவதற்குரிய தேவை ஏதாவது உண்டா என்பதை ஆ. மொ. க. ஆராய வேண்டும்.

7. ஹிந்தி மொழி நன்கு வளர்ச்சியடைந்து வளம்பெற்ற பின்னரே ஆங்கிலத்தை ஹிந்தியின் மூலம் மாற்றலாம், என்பதைப் பாராளு மன்றம் சிந்திக்க முடியும். விதி-351, ஹிந்தி மொழி அன்றுடத் தேவைக்குரிய சக்தியையும் வரையறுத்த பொருளையும் பெற்றுத் தானுகவோ அல்லது ஆங்கிலத்திற்குப் பதிலாகவோ ஏறத்தாழப் பயன்படலாம், என்று சொல்லும் நிலையை அடையும்பொழுதுதான் இதனைச் செய்யலாம் என்று கூறுகிறது.

8. ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள உயர் நீதி மன்றங்களும் ராஜ்ய சட்ட மன்றங்களும் ஹிந்தியைச் சிறப்பாகப் பயன்படுத்தத் தொடங்கி இக்காரியங்களுக்கு ஏற்ற ஒரு கருவியாக அதனை வளர்க்கும்பொழுதுதான் அத்தகைய ஒரு திருப்தி ஏற்பட முடியும். இந்த வளர்ச்சியையும், வளப் பத்தையும் இந்திய அரசியல் அமைப்பின் விதி 351-ன்படி அவர்கள் செய்ய வேண்டும். இவ்வாறு செய்து யூனியனில் சட்டஞ் செய்வதற்கும், மிக உயர் நீதி மன்றத்தை நடத்துவதற்குமுரிய தகுதியை ஹிந்தி மொழி பெற்று விட்டது என்று பிறர் ஓரளவு தைரியம் கொள்ளுமாறு செய்யவேண்டியது இவர்கள் கடமையாகும்.

9. இந்த அறிக்கையின் முற்பகுதியில் யூனியன் ஹிந்தி என்பது பிரத்தியேகமான ஒரு கொள்கை என்று குறிப்பிட்டுள்ளேன். விதி 351-ன் வழிகாட்டி, பிராந்திய ஹிந்தியை வளர்ப்பதற்குப் பிடிக்காமல் இருக்கலாம். உதாரணமாக யு.பி. யில் உருது மொழியை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள். "ஸுத்த ஹிந்தி" என்ற பெயரில் வடமொழிச் சொற்களை ஏற்றுக்கொண்டு "பிற மொழிச் சொற்கள்"* என்பவற்றை ஒதுக்கிவிட ஒரு கிளர்ச்சி நடந்து வருகிறது இம்மாதிரி சொற்களுள் वक्त, फ़कीर, जवाना முதலிய சொற்களும் உள்ளன. வருந்தத் தகுந்த இவ்விஷயத்தில் நாம் இதற்கு மேல் பேசவில்லை. ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ளவர்கள் பரந்த மனப்பான்மையோடு விதி 351-ல் சொல்லப்பட்டபடி தங்கள் மொழியை வளர்க்கவில்லையாகுல் அந்த விதியில் சொல்லப்பட்டபடி ஒரு வகையான ஹிந்தியைத் தயாரித்து வழங்கும் முயற்சியில் தோல்வியடைவார் கள் என்பதை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தியை வழங்கும் வேலை தடைப்படும். துரதிர்ஷ்டவசமாக அரசியல் அமைப்புத் தொடங்கியதிலிருந்து ஹிந்தியைப் பரப்பும் விஷயத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தையும், அச்சத்தையும் மேலும் தொடர்ந்து இருந்து வரும்படியாக இச்செயல், தன்னையுமறியாமல் செய்து விடும்.

10. ஹிந்தி பேசும் பிராந்தியங்களைப் போலவே பிற மொழிப் பிராந்தி யங்களும் தங்கள் எல்லையிலுள்ள உயர் நீதி மன்றங்களிலும் சட்ட மன்றங்களிலும் அவ்வவ்வற்றின் ஆட்சி மொழிகளைப் பயன்படுத்தத் தொடங் கும் என்று இந்திய அரசியல் அமைப்புக் கூறுகிறது. நியாயமாக அவை

---

* 1922-ல் வெளியிட்ட (3-பதிப்பு) ஒரு அகராதியில் பிற்சேர்க்கையாக ஏறத்தாழ 6,000 வார்த்தைகள் "பிற வார்த்தைகள்" என்ற தலைப்பின் கீழ்த் தரப்பட்டு, அவற்றை இம்மொழி யிலிருந்து ஒதுக்கிவிட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. நான் மேலே கொடுத்துள்ள வார்த்தைகள் இந்தப்பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டவையே.

கள் ஏற்றுக்கொண்ட பிராந்திய மொழிகளையே சட்டஞ் செய்வதற்கும் நீதி வழங்குவதற்கும் பயன்படுத்துவார்கள். இந்த மொழிகள் முழு வளர்ச்சி அடைய வேண்டுமேயானால் இவ்விடங்களில் இம்மொழிகளைப் பயன்படுத்தத் தான் வேண்டும். இந்தத் துறைகளிலும் ஹிந்தியைத் திணிப்பது எக்காரணத்தைக் கொண்டும் கூடாது.

11. மிக உயர் நீதி மன்றத்தைப் போலப் பிற மொழிப் பிராந்தியங்களிலுள்ள உயர்நீதி மன்றங்களும், யூனியன் மொழியாகிய ஹிந்தியை, விரும்பினாலுங் கூட, மாற்றமைப்பாகவோ, கட்டாயமாகவோ அது தகுதி பெற்ற ஒரு இடை நிலை மொழியாக வளருகிற வரை பயன்படுத்த முடியாது. மிக உயர் நீதி மன்றம் ஹிந்திக்கு மாறும் நிலையைப் பாராளு மன்றம் சட்டஞ் செய்கின்ற காலத்தில் தான், இந்த நீதி மன்றங்களிலும் ஹிந்தி மொழி வரும். அது வரையில் இவைகளில் 148–வது விதியின் படி ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வருவதோடு, அந்த ராஜ்யத்தில் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியும் பயன்படலாம்.

(இ)

12. ராஜ்யங்களைப் பொறுத்த வரை அவற்றின் சட்ட மன்றங்களிலும், நீதித் துறையிலும் என்ன பாதுகாவல்கள் செய்யப்பட்டுள்ளன என்று பார்க்கும்பொழுது உயர்நீதி மன்றங்களில் நடைமுறைகளும் சட்ட மன்றங்களில் சட்டங்களை நிறைவேற்றுவதும் ஆங்கிலத்தில் தான் இருக்க வேண்டும் என்று விதி 348 (1) கூறுகிறது. என்றாலும் 3-வது பாராவில் கூறப்பட்டபடி இங்கே ஒரு வேறுபாடு காட்டப்பட்டுள்ளது. சட்ட மன்றம், நீதி மன்றம் ஆகிய இரண்டிலும் விவாத அளவில் ராஜ்யத்தின் ஆட்சி மொழியையோ அல்லது ஹிந்தியையோ பயன்படுத்தலாம், (விதி 348-2-3) காண்க. ஆனாலும் சட்டம் நிறைவேற்றும் மொழியும் உயர் நீதி மன்றங்களில் வழங்கப்படுகின்ற தீர்ப்புகள், ஆணைகள் முதலியனவும் ஆங்கிலத்திலேயே இருத்தல் வேண்டும்.

13. ராஜ்ய நிலைமையில் உள்ள இந்தப் பாதுகாவல் யூனியன் நிலையில் உள்ளவற்றைப் போலவேயாகும். இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் யூனியன் நிலையைப் பொறுத்த மட்டில் ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாறும் ஒரு மாற்ற காலம் ஏற்பாடு செய்யப் படவில்லை. ஏனென்றால் எல்லா ராஜ்யங்களிலும் ஒரே காலத்தில் அந்த ராஜ்யங்களின் குறிப்பிட்ட மொழிகளில் இவ்வேலை தொடங்கப்படலாம். எனவே இவ்வாறு தொடங்குவது தான் இறுதியாக யூனியன் நிலையில் ஹிந்தி மொழியை ஏற்றுக்கொள்வதற்கு உதவும்.

(ஈ)

14. மேலும், விதி 348 (3), எந்த ஒரு ராஜ்யமாவது ஆங்கிலத்தை அல்லாத மொழியில் அதனுடைய சட்ட மூலங்களைத் தயாரிப்பதானால் அவற்றிற்குரிய ஆதாரபூர்வமான ஆங்கில மொழி பெயர்ப்பையும் விதி 348 (1)-ஐ திருப்தி செய்யும் முறையில் செய்ய வேண்டும் என்று கூறுவதைக் கவனித்தல் வேண்டும். ஆனால் நீதி மன்றத் தீர்ப்புக்கள், ஆணைகள் முதலானவற்றை அதிகார பூர்வமான முறையில் மொழி பெயர்க்க வேண்டும் என்று கூறப்படவில்லை. அந்த மொழி அந்த ராஜ்யத்தில் ஏனைய ஆட்சிக் காரியங்களுக்கு ஆட்சி மொழியாக இருப்பினும் உயர்ந்த நீதி மன்றங்களில் அது பயன்படுவதில்லை.

15. பாராளு மன்ற ஆணையின் வண்ணம் ஆங்கிலம் ஹிந்தியாக மாறும்போது உயர் நீதி மன்றத் தீர்ப்புகளைப் பற்றி என்ன செய்ய வேண்டும்

என்பதைச் சிந்திக்க வேண்டும். சட்டங்களைப் பற்றிக் கூறியுள்ளது போல் உயர் நீதி மன்றத் தீர்ப்புக்கள் முதலானவைகளும் பிராந்திய மொழிகளிலேயே செய்யப்பட்டு அவற்றினுடைய ஆதார பூர்வமான ஹிந்தி மொழிப் பெயர்ப்பை மேல் வழக்காடுதல் முதலிய செயல்களுக்குத் தரலாம். ஒரு நடுவணர் விரும்பினால் தம்முடைய வேலைகள் அனைத்தையும் ஹிந்தியில் செய்யலாம். ஆனால் ஹிந்தியில் தான் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு இருக்கக்கூடாது.

16. வழக்கறிஞர்களில் பெரும்பான்மையானவர்கள் உயர் நீதி மன்ற நிலைக்குக் கீழ் நிலைகளிலேயே வேலை செய்கிறார்கள். அதாவது அவர்கள் பிராந்திய இடை நிலை மொழிகளின் மூலமே வேலை செய்கிறார்கள். எனவே சட்டக் கல்வியும் அந்தப் பிராந்திய மொழிகளின் மூலமே தரப்பட வேண்டும். ஹிந்தியும் ஆங்கிலமும் கட்டாய மொழிகளாக இருக்கும். மொழி மாற்றக் காலத்தில் ஆங்கிலச் சட்டப் புத்தகங்களைப் பார்ப்பதற்கு இது உதவி செய்யும்.

17. ஆங்கிலத்திலிருந்து இந்திய மொழிகளுக்கு மாற்றம் செய்யும் பொழுது இதற்கு முன்னேற்பாடாக எல்லாச் சட்டங்களையும், வழக்குச் சட்டங்களையும் முதலில் பிராந்திய மொழிகளிலோ ஹிந்தியிலோ மொழி பெயர்க்க வேண்டும் என்ற தேவை இல்லை. வழக்கறிஞர்கள் ஆங்கிலத்தைக் கட்டாயமாகப் பயின்றிருப்பார்கள் ஆதலின் அவர்கள் அதனையே பயன்படுத்தலாம். இறுதியாக ஹிந்தியிலுள்ள சட்டங்களைப் பயன்படுத்துவதிலும் வழக்கறிஞர்களுக்கும் கஷ்டம் இராது. ஏனென்றால் அவர்கள் ஹிந்தியையும் கட்டாய பாடமாகப் பயின்றிருப்பார்கள் ; எனவே ஹிந்திச் சட்டப் புத்தகங்களையும் பயன்படுத்த முடியும்.

பகுதி 3

தேசியக் கல்வியில் ஹிந்தி, ஆங்கிலம் இவற்றின் இடம்.

(அ)

1. இயல்புக்கு மாறாகவும், தவறான முறையிலும், நாட்டின் ஆட்சி மொழியாகவும், உயர்தரக் கல்வியின் போதனா மொழியாகவும் இப்பொழுது உள்ள ஆங்கிலத்தை மாற்ற முயல்வதுதான் நாம் இப்பொழுது மேற் கொள்கிற தேசீய முயற்சியாகும். இந்த முயற்சியின் பயனாகத் தேசீய வாழ்விலேயே ஒரு புரட்சி ஏற்படும். இது வரையில் இந்தியாவின் வரலாற்றிலேயே வடமொழி, பர்ஷியின், ஆங்கிலம் என்பவை அகில இந்தியப் பொது மொழியாக இருந்து வந்தன. அவற்றை அறிந்தவர்களும், மிக மிகக் குறைந்த எண்ணிக்கை உடையவர்களே. எனவே அத்தகைய ஒன்று இன்று நாம் நிறுவ விரும்புகிற ஜனநாயக முறைக்கு ஏற்றதன்று. நம்முடைய வரலாற்றிலேயே முதன் முறையாக இப்பொழுது தான் சாதாரண மனிதனுடைய மொழியை அவனுடைய அரசாங்கத்துக்கும் கல்விக்கும் கருவியாக ஆக்குகின்ற ஜனநாயக பரிசோதனையைத் தொடங்கி யுள்ளோம்.

2. பல மொழி பேசும் நாடாதலின் இத்தகைய ஒரு பரிசோதனையைச் செய்வதற்கு இதனோடு தொடர்ந்து ஒரு ஆந்திர பாஷா இருத்தல் வேண்டும். அதன்படி நம்மவர்களுள் மிகப் பெரும்பாலானவர்களுக்குரிய ஹிந்தி மொழியை ஏற்றுக்கொள்வதென்று முடிவு செய்துள்ளோம். அவைகள் எவ்வளவு வளர்ச்சியடைந்த மொழியாக இருப்பினும், வட மொழியைப் போலவோ, பர்ஷியனைப் போலவோ, ஆங்கிலத்தைப் போலவோ இல்லாமல் ஹிந்தி மொழி மிக மிகப் பெரிய எண்ணிக்கை உள்ளவர்களால் பேசப்படும். இந்த முடிவு பெரும் பொறுப்பைச் சுமத்துகிறது. இம்முயற்சியைச் செய் வதில் நாம் வெற்றி பெற்றால் நம்முடைய கனவின்படி ஒரு புதிய இந்தியா தோற்றுவிக்கப்படும். ஒரு ஜனநாயக சமுதாயம் அமைக்கப்படும். அரசிய லமைப்பில் காணப்பட்ட மொழியமைப்பு, புரட்சிகரமானதாய், சுதந்திர முள்ளதாய், ஜனநாயகமான ஆக்கம் நிரம்பியதாய், அனைவருக்கும் சமத்துவம் வழங்குகின்ற ஒரு புதிய இந்தியாவை ஸ்தாபிக்கும்.

3. மேலே கூறிய அமைப்புக் காட்டுவது போல, இந்த முயற்சி நம்முடைய பெரிய தேசீய மொழிகளையும், இம்மொழிக் கூட்டத்தோடு புதிதாகச் சேர்க்கப்படுகின்ற ஆந்திர பாஷா ஹிந்தியையும் சிறந்த முறை யில் பயன்படுத்தி, ஆங்கிலத்தை நீக்குவதன் மூலமே இது செய்யப்படும். இந்த முயற்சி வெற்றியடைய வேண்டுமானால் தேசத்தின் எல்லா மொழிக் கூட்டங்களும் போட்டி மனப்பான்மையோ, உயர்வு மனப்பான்மையோ தங்களுக்குள் இல்லாமல் எல்லா மொழியினங்களும் ஒன்று சேர்ந்து முயல வேண்டும். ஆந்திர பாஷா ஹிந்தியை ஒரு கூட்டம் தங்களுடைய பிராந்திய மொழியாகக் கொண்டிருத்தலின் மற்றவர்களைவிட உயர்வு பாராட்டிக் கொள்ளக்கூடாது. மக்களினுடைய ஏனைய மொழிகளின் வளர்ச்சியை இது குறைத்து விடக்கூடாது. இதனை இங்கே சொல்ல வேண்டிய தேவை என்னவென்றால் நாட்டின் அறிவாளர் கூட்டத்தில் ஒரு கூட்டம் பழைய ஆங்கில முறையைப் பின்பற்றி ஆந்திர பாஷா ஹிந்தியே ஆட்சி செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. அரசியலமைப்பு இவ்வாறு நினைக்கவும் இல்லை கருதவுமில்லை என்பது மிகுதியும் தெளிவாகிறது, நிச்சயமாக ஆங்கில மொழி செய்த சமுதாய அமைப்பை ஹிந்தியின் மூலம் செய்யக்கூடாது.

4. இந்தக் கூட்டத்தாரின் எதிரே, ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங் களில் இன்றைய நிலைமையையே நிலை நிறுத்தி, ஆங்கிலத்தை எப்படியா

வது வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லும் ஒரு கட்சியும் உண்டு. அந்தக் கட்சி ஆங்கிலத்தை நிறுத்திக்கொண்டு அதனோடு கூட மற்றொரு பொது மொழியாக ஹிந்தியையும் வைத்துக்கொள்ள விரும்புகிறது. இந்தக் கட்சி இன்றுள்ளது போலவே, ஆங்கிலக் கல்வி, பள்ளிக்கூடங்களில் வழங்கவேண்டும் என்று கூறி, அரசியலமைப்பில் ஹிந்தி மொழி பற்றிச் சொல்லப்பட்டிருப்பதற்கு ஒரு இடங் கொடுக்கின்ற முறையில் அதனைக் கற்றுக்கொள்ள விரும்புகிறவர்களுக்குக் கற்றுத் தர ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனால் அதனைக் கட்டாயமாக்க விரும்பவில்லை. அதாவது, மொழி மாற்றம் செய்வதை எவ்வளவு தூரத்திற்குத் தள்ளி வைக்க முடியுமோ அவ்வளவு தூரம் வைக்க விரும்புகிறது. அவர்களுடைய வாதமெல்லாம் நம்முடைய முன்னாள் ஆட்சியாளர்கள் நமக்குக் கொடுத்துவிட்டுப் போன தேசீயப் பரிசிலாகும் ஆங்கில மொழி என்று சொல்வது போலவே உள்ளது. நவீன அறிவை, சிறப்பாக விஞ்ஞான அறிவை நமக்குக் கொண்ர்ந்து தரும் "குழாயாக" ஆங்கிலம் இருந்து வந்தது. இதுபற்றி இங்கே நான் ஆராய விரும்பவில்லை என்றாலும், உலகத்தில் எத்தனை மக்கள் இருக்கின்றார்களோ அத்தனை குழாய்கள் உண்டு என்றும், ஆனால், உயிர் நாடி என்பது ஒன்றே ஒன்று தான் என்றும் அது அந்த மக்களின் உள் நாட்டு மொழியாகத்தான் இருக்க முடியும் என்றும் சொல்கிறேன். நம்மிடமுள்ள சிறப்புக்கள் வளர்ச்சியடைந்து பூக்கவேண்டுமேயானால் அது இந்த வழியாகத்தான் முடியும். எனவே அந்த உயிர் நாடியை நாம் மீட்டால் திசை தெரியாமல் இருக்கின்ற நம்மை அது மீட்கும்.

5. ஆங்கிலத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற கட்சியும் முதற் கட்சியைப் போல அவ்வளவு பிழை செய்கிறது. அரசியலமைப்பில் மொழி பற்றிய பகுதியையும் உடைத்து, ஐம்பது வருஷங்களாக வளர்ந்த ஒரு தேசீய மொழியை, நம்முடைய சொந்த மொழிகளுக்கு உதவியாக இருக்கும் என்று கருதிய ஒரு தேசீய மொழியைக் கொண்டு வர வேண்டுமென்று செய்த முயற்சிகளை யெல்லாம் உடைக்கத் தயாராக இருந்தால் ஒழிய ஆங்கிலத்தைக் வைத்துக்கொள்வதில் அர்த்தமே இல்லை. இந்த இடை நிலை, நம்முடைய அடிப்படை ஒற்றுமையை, வாழ்ந்து காட்டுவதற்குரிய கருவியாகும். ஆனால் எல்லாவற்றையும் தரை மட்டமாக ஆக்கும் ஒற்றுமையாக இது இல்லாமல், ஆக்கம் நிரம்பியதாய், இந்தியாவின் அடிப்படை ஒற்றுமையை வெளியிடும் உயிர்த் துடிப்பு நிரம்பிய ஒற்றுமையை உண்டாக்கும் ஒன்றாகும் இது.

(ஆ)

6. அரசியலமைப்பில் மேலே கண்டுள்ள குறிக்கோள் நம்முடைய நாடு முழுவதற்கும் ஒரு ஆக்கத் திட்டமாக இப்பொழுது நடை முறையில் கொண்டு செலுத்தப்பட வேண்டும். முதலாவது செய்யப்படவேண்டிய காரியம் அரசியலமைப்பில் சொல்லப்பட்ட, 14 வயது வரையில் அனைவருக்கும் கட்டாயமாக, இலவசமாக வழங்கப்படும் ஆரம்பக் கல்வியில் ஆந்தர் பாஷாவைக் கட்டாயமாகப் படிக்கச் செய்யவேண்டியது முதற் கடைமையாகும். அத்தகைய ஒரு முயற்சி ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியை வளரச் செய்வதற்கு ஒரு நீண்ட காலத் திட்டமாகும். குறுகிய காலத் திட்டப்படி உடனடியாக இந்திய அரசாங்கத்தில் மொழி மாற்றம் செய்வதற்கு ஏற்ற முறையில் ஆட்சி அதிகாரிகளை ஹிந்தி கற்றுக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். இதுவும் கட்டாய முறையில் செய்யப்படவேண்டியதே. முற் பகுதி அதிகாரத் துறையல்லாத பொதுமக்களின் பகுதியாகும். இரண்டாவதுள்ளது ஆட்சித் துறைப் பகுதியாகும். எனவே இது அரசாங்கத்தில் அதிகாரத்திற்குட்பட்டே நடைபெறும். இங்கு முதற் பகுதியைப் பற்றி முன்னர் ஆராய்வோம்.

7. 351-வது விதி யூனியனுக்கு வழிகாட்டி முறையில் "ஹிந்திமொழியை வளர்த்துப் பரப்ப வேண்டும்" என்று கடமைவகுக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில்

மேற்கண்ட நிலை யூனியனின் தள்ளாத கடமையாக ஆகிவிடுகிறது. எனவே நாடு முழுவதிலும் ஹிந்தி மொழி கட்டாய பாடமாக வந்தால் தான் அரசியலமைப்பின்படி யூனியன் அரசாங்கம் தன் கடமையைச் செய்ததாக்க் கருதப்படும். அரசியலமைப்பில் சொல்லப்பட்ட மொழி மாற்றம் ஏற்படுவதற்கு இது முதற்படியாகும். இவ்விடத்தில் ஸ்ரீ சி. ராஜ கோபாலாச்சாரி "இதனைச் செய்வதற்குரிய முதற்படியை அரசியலமைப்பு உண்டாக்கக்கூடிய நிலையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும்............ அதாவது புதிய ஆட்சி மொழி எல்லாப் பிராந்தியங்களிலும் பரவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று சொல்லியதை நான் ஏற்றுக்கொள் கிறேன்.

(இ)

8. சிலர் இங்ஙனம் கட்டாயப்படுத்துவதை மறுத்துச் சென்னையில் நடைபெறும் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைச் சுட்டிக் காட்டி இதற்கு எதிராக வாதம் செய்வார்கள். இதனைச் சரியான முறையில் சந்திக்கவேண்டும். இரண்டு வகைக் கட்டாயங்கள் உண்டு: (1) தேசியக் கல்வி முறை ஒன்றை நிறுவி, அதில் கட்டாயக் கல்வி முறை ஒன்றை நிறுவி நாட்டின் ஜனநாயக அமைப்பில் கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடையக்கூடியதாக அது இருக்குமாறு செய்தல் வேண்டும். ஜனநாயக முறையில் ஒரு ராஜ்யத்தின் நியாயமான கடமை இது என்று கருதலாம். ஸ்ரீ ராஜாஜி மற்றொரு சந்தர்ப்பத்தில் "எல்லாப் பள்ளிக்கூடக் கல்வியும் ஓரளவு கட்டாயத்தின் பேரிலேயே நடைபெறுகிறது" என்று கூறியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு கட்டாயத்தை யாரும் எதிர்க்கமாட்டார்கள். மறுப்புக் கூறக்கூடிய கட்டாயம் இரண் டாவது வகையைச் சேர்ந்தது. அதாவது, ஹிந்தி மொழி பேசாத ராஜ்யங் களில் எங்கே நியாயமான முறையில் பிராந்திய மொழி இடம் பெற வேண்டுமோ அந்தவிடத்தில் ஹிந்தி மொழியை இடைநிலையாகப் புகுத்து வதுதான் மறுப்புக்கு இடந்தரும். அதாவது போதன மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் ஹிந்தியைச் செய்தல். உண்மையில் இது ஜன நாயக முறைக்கு மாறுபட்டதும் ஓரளவு கட்டாயப்படுத்துவதுமாகும். இதனை மறைமுகமாகவோ நேர்முகமாகவோ திணித்தால் கல்விக்கும், பண்பாட்டுக் கும் கேடு உண்டாக்கி, அரசியல் பிரிவினைகளை உண்டாக்கி, ஹிந்தி வளர்ச் சிக்கே தற்கொலையாக முடிந்துவிடும். அது ஆட்சி மொழிக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைக்கே விரோதமாகச் சென்று அதில் சொல்லப்பட்ட பண்பாட்டு வளர்ச்சிக்கு மாறாக முடியும். யூனியன் அரசாங்கம் இது பற்றிய ஆ. மொ. க.-வின் சிபார்சுகளைப் பெற்று, ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் இதுபற்றிய தன் கொள்கையை விளக்கமாகத் தந்து, இரண்டாவது வகையான கட்டாயம் நிச்சயமாகத் தவறான கொள்கை என்ற முறையில் ஒதுக்கிவிடப்படும் என்று விளம்பரப்படுத்தினால் இத்தகைய உறுதிமொழி அந்த ராஜ்யங்களில் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலு கட்டாய ஹிந்தியைத் தொடங்குவதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும். ஜனாதிபதியும், பிரதமரும் சமீப காலங்களில் ஹிந்தி மொழியைச் சட்ட முறையாகவோ, ஆட்சி முறையாகவோ அரசியலமைப்பின்படி ராஜ்ய மொழிகள் வழங்க வேண்டிய இடங்களில் எக்காரணத்தைக் கொண்டும் திணிக்கப்படமாட்டாதென்று பலமுறையும் சொல்லி உள்ளார்கள். பிராந்திய மொழிகள் வழங்குவதற்குரிய பகுதிகள் யாவை என்பதை ஆ. மொ. க. வரையறுத்து விரிவாகச் சொல்லவேண்டும். அங்ஙனம் கூறுவ தொன்றுதான் ஆங்கிலத்தை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்ற கூச்சலை நிறுத்தி, மொழி மாற்றத்தைத் தொடங்கி அடுத்த ஐந்தாண்டுகள் வரையிலாவது மொழி மாற்றத்தை ஒத்திப் போடவேண்டும் என்னும் நிலையையும் மாற்றும். ஹிந்தியைக் கற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்லுகின்ற கட்சியில் எந்த அளவு நியாயம் இருப்பது போல் தோன்றி னாலும் இவ்வாறு செய்தால் இந்த நியாயம் அடிபட்டுப்போகும்.

9. பிராந்திய மொழிகள் எந்தெந்தப் பகுதியில் பயன்படும் என்பது சென்னை மேல் சபையில் ஆ. மோ. கா. வின் கேள்விகளுக்கு அனுப்ப

வேண்டிய பதிலை தயாரித்தபொழுது ஒரு திருத்தப் பிரேரேபணையாகக் கொடுக்கப்பட்டது. வங்காளத்திலும், ஏனைய பிற மொழிப் பிராந்தியங்களிலும் எங்களுக்குத் தரப்பட்ட சான்றுகள் சென்னையின் இந்தக் கருத்தை ஒத்துக் கொண்டுள்ளன. சென்னை மேல் சபையில் தரப்பட்ட திருத்தத்தை இந்தப் பகுதியில் கடைசியில் அப்படியே ஒரு பிற்சேர்க்கையாகத் தந்துள்ளேன். அங்கே சொல்லப்பட்ட கருத்து அரசியலமைப்புக் கூறும் மொழியமைப்போடு முற்றிலும் ஒத்துச் செல்வதைக் கவனிக்கவேண்டும்.

(ஈ)

10. ஆட்சி மொழிக் கழக அறிக்கை (பகுதி 4 பாரா. 15 முதல்) மேற்கண்ட மொழி பற்றிய உறுதி மொழிகளை "அரசியலமைப்பில் பாதுகாக்கப்பட்ட ஒற்றுமைக்கு மொழித் தேவைகள்" என்று சொல்கிறது. அதையே மறுபடியும் "ஆங்கில மொழியானது படிப்படியாக இப்பொழுது இருக்கின்ற நிலையிலிருந்து பல பகுதிகளில் நீக்கவும், பிராந்திய மொழிகள் அவற்றிற்குரிய நியாயமான இடத்தைப் பெற்றுக்கொள்ளவும்" என்று கூறி மேலும் "ஆட்சித் துறை, கல்வித் துறை இன்னும் ஏனைய துறைகளிலும் பிராந்திய மொழிகளைப் பயன்படுத்துவது வேகமாக நடைபெறும்" என்றும் சொல்கிறது.

11. என்றாலும் பகுதி 6-ல் ஹிந்தி, ஆங்கிலம் ஆகியவற்றின் பயன்களைப் பற்றி ஆலோசனைகள் கூறும்பொழுது இந்த "மொழித் தேவைகள்" யாவை என்று கூறாமல் மேலே சொல்லிய முறைக்கு மாறாகச் செல்கிறதென்று நான் கருதுகிறேன். அறிக்கையில் கூறப்பட்டுள்ள இதனை ஆராயவோ, விவாதிக்கவோ நான் விரும்பவில்லை. ஆனால் நம் நாட்டில் ஆங்கிலத்தின் மூலம் வளர்க்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனம் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று சொல்வதை இந்த அறிக்கை சற்றும் கவனமில்லாமல் வளர்க்கிறது, என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

(உ)

12. ராஜ்யங்களைப் பொறுத்தமட்டில் பள்ளிக் கூடங்களில் கட்டாய ஹிந்தியைப் புகுத்துவது ஒரு கடமை என்பதை யூனியன் அரசாங்கம் வலியுறுத்த வேண்டும். தாய் மொழியின் மூலமாக போதனை நடைபெறுவதைப் பாதுகாவல் செய்வதற்காக ஒரு சட்டம் செய்ய வேண்டும் என்று ராஜ்யப் புனரமைப்புக் கழகம் ஆலோசனைக் கூறியதுபோல ஆ. மொ. க. ஒரு சட்டம் செய்ய ஆலோசனை சொல்லவேண்டும். அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள கட்டாய இலவசக் கல்வி அளிக்கும் கடைசி மூன்று ஆண்டுகளில் எல்லா ராஜ்யங்களும், எல்லா அமைப்புக்களும் கட்டாய ஹிந்தியைக் கற்றுத் தரும் வசதிகளைச் செய்யவேண்டும் என்ற முறையில் அந்தத் தீர்மானம் இருக்கலாம். இவ்விஷயத்தில் தேவையான அறிவிப்புக்களை ஜனாதிபதி ராஜ்யங்களுக்குத் தெரிவிப்பார்.

13. இன்றைய நிலையில் இந்தியாவிலுள்ள பள்ளிகளில் இந்த ஆண்டுகளில் ஆங்கிலமே பொதுவாகக் கற்பிக்கப்படுகிறது. நம்முடைய தேசியக் கல்வி முறையில் மொழிகளுக்கு உள்ள இடத்தில் ஆங்கிலம் இருக்கும்; இரண்டாம் மொழியிடம் ஹிந்திக்குக் கொடுக்கப்படவேண்டும். ஆங்கில போதனை யாருக்கு ஆங்கிலம் தாய் மொழியாக இருக்கிறதோ அவர்களைத் தவிர மற்றவர்களுக்குக் கட்டாயக் கல்வி நிலைக்கு அப்பால் உயர்தர இடை நிலைக் கல்வி நிலையில் தொடங்கப்பட வேண்டும். அரசியலமைப்பில் காணப்பட்ட கல்வி முறையில் பள்ளிக் கூடத்தின் ஐந்தாவது வருஷத்தில் பிராந்திய மொழியே ஹிந்தியோடு சேர்த்து வழங்கப்படும். அதாவது இந்த இரண்டு மொழிகளுமே அக்கல்வி முறையில் இடம் பெறலாம் என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆ.மொ.க. அறிக்கை இரண்டு "கிளைகள்" என்ற ஒரு வாதத்தை கிளப்பிக் கொண்டு ஆங்கிலம்

14 வயதுவரை கொடுக்கப்படுகின்ற கட்டாயக் கல்வியில் ஹிந்தி முதலில் தொடங்கப்படலாம் என்று சொல்கிறது. ஆ.மொ.க. மொழி மாற்றம் செய்வது பற்றிச் சிபாரிசு செய்ய வேண்டும் என்று கேட்கப்பட்டதற்கு இந்த பதில் முற்றிலும் அவசியமில்லாததும், கேட்கப்படாததுமாகும். ஆங்கிலத்தினிடத்தில் அங்ஙனம் அன்பு பாராட்டிப் பேசுவது இன்றுள்ள நிலையே நீடிக்குமாறு செய்து, ஹிந்தியை வளர்ச்சியடையாமல் தடை செய்துவிடும். ஆங்கில மொழிப்படிப்பை மாற்றி நாட்டில் இன்றுள்ள சூழ்நிலையில் ஹிந்திப் படிப்பை ஏற்படுத்துவது நாம் முடிவு செய்து கொண்ட மொழிப் புரட்சியைச் செய்வதற்கு எவ்வளவு சித்தமாக இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும். கல்வி முறையாகவும், பண்பாட்டு முறையாகவும் பார்த்தால் நாம் செய்ய வேண்டிய முதலாவது கடமை இது என்று தெரியும். ஆதலால் இதுபற்றி மேலும் பேச விரும்பவில்லை. நம்முடைய கல்வி முறையைப் பொறுத்தமட்டில் மாற்றமைப்புச் செய்யவதற்கு இதையே பொதுக் கொள்கையாக ஏற்றுக் கொண்டால் ஒழிய மொழி மாற்றம் தொடங்குவதற்குரிய நல்ல சூழ்நிலை ஏற்படாதென்றும் மகிழ்ச்சியுடன் அது தொடங்காதென்றும் உறுதியாக நம்புகிறேன். மேற்கண்ட கொள்கை ஆதாரக் கல்வி முறையோடு முற்றிலும் பொருந்தியதாகும். நாட்டில் ஆதாரக் கல்வி முறையைப் புகுத்த நாம் முடிவு செய்துள்ளோம். மேலும் ஹிந்தி, ஆங்கிலம் என்பவற்றைப் பொறுத்த மட்டில் மேற்கண்ட கொள்கையை நம்முடைய கட்டாயக் கல்வி அமைப்பில் ஏற்றுக் கொண்டாலொழிய ஆதாரக் கல்வி வந்து, இருந்து வளரவே முடியாது, என்பதையும் குறிப்பிடவேண்டும்.

14. 1957-லிருந்து மேலே சொல்லிய முறைகள் அகில இந்திய நிலையில் தொடங்கப்பட வேண்டும். அவ்வாருனுல் 1965-ல் பள்ளிக் கூடங்கள் ஹிந்தியைக் கீழ் வகுப்புக்களில் அல்லாமல் மேல் வகுப்புக்களிலும் கூட அதாவது 7 அல்லது 8 ஆண்டுகளுக்குப் போதித்துக் கொண்டிருக்கும். அரசியலமைப்பில் கட்டாய இலவசக் கல்வித் திட்டப்படி பிள்ளைகளின் 14 வயது முடியக் கிடைக்கும் ஆரம்பக் கல்வியில் ஒவ்வொருவனும் ஹிந்தியை 3 அல்லது 4 ஆண்டுகளாவது கற்றுக்கொள்வான்.

(ஊ)

15. கல்வித் துறையில் நடைபெறும் இந்த முயற்சியோடு சேர்த்து இதேபோன்ற ஒரு முயற்ச்சியை நாட்டிலுள்ள எல்லா அரசாங்கங்களும் அவர்கள் வேலைக்குத் தேவைப்பட்ட முறையில் அவர்கள் ஊழியர்களை ஹிந்தி பயலச் செய்யும் முயற்சியைச் செய்ய வேண்டும். இது 1960-க்குள் முடிந்து விடுவதால் ஏறத்தாழ 3 ஆண்டுக் காலம் போதுமான அவகாசமாகும். இதற்குரிய திட்ட அமைப்பு இப்பொழுதே ஏற்றுக் கொள்ளப்பட்டால் 1957 வாக்கில் இதனை நிறைவேற்றத் தொடங்கலாம். ஆ.மொ.க. வின் அறிக்கை பகுதி 7 பிரிவு (2) ல் எல்லா அரசாங்க இலாக்காக்கள் பற்றியும் விரிவாகப் பேசியிருக்கிறதாதலின் இந்தியக் கணக்குத் தணிக்கை இலாக்காக்களில் இதனைச் செய்வதற்குரிய முயற்சியை உடனடியாகத் தொடங்கி இவை ஒவ்வொன்றுக்கும் குறிக்கோளும், கால அட்டவணையும் தயாரிக்கப்படவேண்டும். ஒவ்வொரு அரசாங்கங்கமும் ஒரு ஐந்து வருஷத் திட்டத்தை மேற்கொண்டு மொழி மாற்றத் துறையில் 1960-க்குள் முழு மொழி மாற்றம் செய்துவிட வேண்டும்.

16. இவ்வாறு வேலை செய்தால் யூனியனிலும் ராஜ்யங்களிலும் உள்ள ஊழியர்கள் 1960-ல் ஹிந்தியை மட்டுமோ அல்லது ஆங்கிலத்துடன் சேர்த்தோ இடை நிலைமொழியை பயன்படுத்தத் தயாராகிடுவார்கள். மேல் உள்ள ஐந்தாண்டுகளை அவர்களுடைய மொழித் தேவைகளை மேலும் பூர்த்தி செய்துகொள்ளப் பயன் படுத்தலாம். அதே நேரத்தில் கல்வித் துறையில் செய்யப்படுகின்ற முயற்சிகள் பல்வேறு வழிகளிலும் உதவி செய்யும். இவ்வாறு செய்தால் 1965-வாக்கில் நம்முடைய அரசாங்க

உள் விவகார வேலைகளை ஹிந்தி மூலம் செய்ய எதிர்பார்க்கலாம். அரசாங்கத்தில் வெளி விவகாரங்களில் அதாவது அரசியல், வாணிகம், தொழில் துறை முதலியவற்றில் ஹிந்தி மொழிக்குத் தேவையான புண்ணூட்டுக் கொள்கை வருகின்றவரையில் ஆங்கிலத்திலேயே தொடர்ந்து நடத்தலாம்.

சேர்க்கை.

(மேலே உள்ள ஒன்பதாவது பாராவில் குறிப்பிடப்பட்டது.)

1955-ம் வருஷம் செப்டம்பர் மாதம் சென்னை அரசாங்க மேல் சபை இந்திய மொழிப் பிரச்னை பற்றி ஆராய்ந்தது. அரசாங்கம் தோற்றுவித்த "ஆட்சி மொழிக் கழகம் (இந்திய அரசாங்கம்) வெளியிட்டுள்ள கேள்விகளை ஆராய எடுத்துக் கொள்வோம்" என்ற தீர்மானத்தை ஒட்டி இது நடைபெற்றது.

தீர்மானத்தில் இறுதியில் சேர்க்கப்பட வேண்டுமென்று கீழ்க்கண்ட திருத்தம் மேல் சபையில் முன் மொழியப்பட்டது.

"இது பற்றி ஆராய்ந்து இந்த மேல் சபை, சென்னை அரசாங்கம் தன்னுடைய விடையைத் தயாரிக்கும் பொழுது அந்த விடையில் கீழ்க் கண்ட கொள்கைகளையும், ஆலோசனைகளையும் சேர்த்துக் கொள்ளுமாறு இந்தச் சபை முடிவு செய்கிறது :—

(1) ஆட்சி விவகாரங்களுக்கு இந்த ராஜ்யம் பிராந்திய மொழியையோ அல்லது மொழிகளையோ கடைசியாகப் பயன் படுத்துமாதலால் இந்த விஷயங்களுக்கு ஹிந்தியை ஏற்றுக் கொள்ள முடியாது.

(2) மத்திய அரசாங்கத்தோடும், ஏனைய ராஜ்யங்களோடும் கடிதப் போக்குவரத்துச் செய்வதற்கு மொழிபெயர்ப்பாளர்களையும், பெயர்த்துக் கூறுபவர்களையும், தேவையான அளவுக்கு நியமித்துக் கொள்ளலாம்.

(3) யூனியன் பொதுப் பணிக் கழகப் பரீட்சைகளைப் பொறுத்த மட்டில் அரசியல் அமைப்பில் கூறப்பட்டபடி ஹிந்திப் பிராந்தியத்தில் உள்ளவர்களுக்கும், பிற மொழிப் பிராந்தியங்களில் உள்ளவர்களுக்கும் சம்மான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டுமேயானால் அம்மாணவர்கள் அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள எந்த மொழியையாவது அல்லது மொழிகளையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை வழங்குவதோடு அம்மொழி பேசுவோரின் எண்ணிக்கைக்கு ஏற்ற முறையில் விதாசார முறையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(4) நீதி மன்றங்களைப் பொறுத்த மட்டில் பிராந்திய மொழியோ, மொழிகளோ ராஜ்ய நீதி மன்றங்களிலும் உயர் நிதி மன்றத்திலும் வழங்கலாம்.

(5) ராஜ்ய சட்ட மன்றங்களைப் பொறுத்த மட்டில் பயன் படுத்தும் மொழி அல்லது மொழிகள் பிராந்திய மொழி அல்லது மொழிகளாக இருக்க வேண்டும். பாரளு மன்றத்தைப் பொறுத்தவரை பல்வேறு ராஜ்யங்களிலிருந்து வரும் பிரதிநிதிகள் அரசியலமைப்பில் சொல்லப்பட்ட அவர்களுடைய பிராந்திய மொழிகளில் பேசுவதற்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து தரப்பட வேண்டும்.

(6) மத்திய அரசாங்கப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுப் பணியாளர்கள் அப்பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு

அவர்கள் பிற மொழி வழங்கும் பிராந்தியங்களிலிருந்து வந்தால் ஹிந்தியில் ஒரு பரீட்சையையோ அல்லது பரீட்சைகளையோ எழுதுமாறு செய்வதுடன் ஹிந்திப் பிராந்தியங்களிலிருந்து வந்திருந்தால் அரசியலமைப்பில் கூறப்பட்ட மொழிகளுள் ஒன்றில் மேற்படி பரீட்சைகள் எழுதவேண்டும்.

(7) எண்களைப் பொறுத்தமட்டில் அவற்றின் பன்னாட்டு வடிவங்களோடு தேவநாகரி வடிவத்தையும் சேர்த்து எழுதவேண்டிய தேவையில்லை.

(8) ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், இடைநிலைப் பள்ளிக்கூடங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் போதனு மொழியைப் பற்றிச் சிறந்த கல்வித் துறை வல்லுநர்கள் கூறியுள்ளவற்றை ஒட்டி இயல்பான இடைநிலையாக உள்ள தாய் மொழியையே படிப்படியாகப் பயன்படுத்தவேண்டும். ஆங்கிலத்தை நீக்க வேண்டிய தேவை ஏற்படும் பொழுது அந்தப் பிராந்தியத்திலுள்ள பிராந்திய மொழியினுலேயே இது நீக்கப்பட வேண்டும்.

(9) இறுதியாகப் பொருத்தமான ஒரு பிராந்திய மொழியின் மூலமாக ஆங்கிலத்தை நீக்குவது பற்றி இந்தச் சபையின் கருத்து வருமாறு :—அந்தப் பிராந்திய மொழி போதனைக் காலத்தில் பல்வேறு படிகளிலும் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை நோக்கி உயர்தரக் கல்வியிலும் தொழில் துறை, தொழில் நுட்பத் துறை ஆகியவற்றிலும் அதனைப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பத்தையும் நோக்கி இந்த உயர்தரப் படிப்பு முறைகளில் மாறுபட்ட சூழ்நிலைக்கு ஏற்பக் கல்வி புகட்ட கூடிய தகுதி வாய்ந்த மக்கள் கிடைப்பார்களா என்பதை நோக்கியும் இதற்கு ஏற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

(10) தாய் மொழியைப் போதனு மொழியாக ஏற்றுக் கொண்ட பிறகும் கூடப் பல்கலைக் கழகப் படிப்பிலும், உயர்தரக் கல்வியிலும் பன்னாட்டு மொழியாகிய ஆங்கிலப் படிப்புக்குத் தகுந்த முக்கியத்துவம் தரவேண்டும்."

இது பற்றி நடைபெற்ற விவாதத்தில், இந்தத் திருத்தத்தில் பொதுவான முறையில் பல்கலைக் கழகம், சட்ட மன்றம், அரசாங்கம் ஆகிய மூன்றினுடைய ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயன்களெல்லாம் சேர்க்கப்பட்டுள்ளன என்று சொல்லப்பட்டது. சுருங்கக் கூறுமிடத்து ஹிந்தி மொழி வழங்காத ஒரு ராஜ்யம் தன்னுடைய பிராந்திய மொழியை அந்த ராஜ்யத்தின் கல்வி, ஆட்சி, நீதி, சட்ட மன்றம் ஆகிய துறைகளில் எவ்வாறு வழங்க விரும்புகிறதென்பதை இது எடுத்துக் காட்டுகிறது. இந்தத் திருத்தம் மேலே கூறிய எல்லாத் துறைகளிலும் தமிழ் நாட்டில் தமிழை வழங்கவேண்டுமென்று விரும்புகிறது.

பகுதி 4

போதனு மொழி.

(அ)

1. இந்த அறிக்கையின் முற்பகுதியில் பல்வேறு இடங்களில் இது பற்றிக் குறித்துள்ளேன். உண்மையைக் கூறுமிடத்து ஒரு மாணவனின் பள்ளி வாழ்கையில் எல்லா நிலைகளிலும் எது இடைநிலை மொழியாக இருக்க வேண்டும் என்பது பற்றிக் கேள்வி எழுவதற்கே நியாயமில்லை. காந்திஜி "ஒரு நாட்டின் ஆண்களும் பெண்களும் எந்த மொழியில் கற்பிக்கப்படவேண்டும் என்பது பற்றிச் சுதந்தரம் பெற்ற நாடுகள் அனைத்துமே எற்கெனவே முடிவு செய்துவிட்டன" என்று சொல்வதை ஆ. மொ. க. அ. பகுதி 6-ல் எடுத்துக் காட்டியுள்ளது. எனவே அவர் மிக்க மனோதிடத்தோடு முன் சென்று "இந்த நாடு உண்மையில் விடுதலை அடையும் பொழுது இடைநிலை மொழி பற்றிய பிரச்னை ஒரு வகையாக முடிவு செய்யப்படும்" என்று கூறியுள்ளார். அந்த ஒரு வகை, அவர் நினைக்கின்றபடி ஒவ்வொருவருடைய தாய் மொழி வகையாகவே இருக்கும். என்றாலும் துரதிர்ஷ்ட வசமாக இப்பிரச்னையை முடிவு செய்வது அவ்வளவு எளிதாகவும் இல்லை, காந்திஜி நினைத்ததுபோல அவ்வளவு விரைவாகவும் செய்ய முடியவில்லை.

2. சென்ற நூற்றுண்டுகளில் நம்முடைய நாட்டில் கற்றறிவுடைய இனம் விடாது பற்றிக்கொண்டிருக்கிற ஒரு தீய வழக்கம் என்னவென்றால் ஆங்கிலக் கல்வி முறையில் வெளிநாட்டு மொழியையே போதனு மொழியாகக் கொண்டமையின் போதனு மொழி பற்றி இன்று உண்மையை ஆராயக்கூட நாம் சக்தியை இழந்து நிற்கிறோம். இவர்கள் யூனியன் மொழியாகிய ஹிந்தியை எல்லா இடங்களிலுமோ அல்லது இயன்ற அளவுக்கோ ஒரே இடைநிலை மொழியாக நாடு முழுவதிலும் வைக்க விரும்புகிறார்கள். இந்தியா போன்ற பல் மொழி வழங்கும் நாட்டில் இங்ஙனம் ஒரே போதனு மொழியை முடிவு செய்யும் முறை உலக முழுவதிலும் கல்வி, பண்பாடு என்பவை பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளுக்கு முற்றிலும் மாறானதாகும்.

3. ஜனநாயக முறையிலுங் கூட சுதந்திரம் பெற்ற ஓர் இனத்திற்கு இத்தகைய ஒரு மொழியைத் தந்து அவர்களுக்கே உரிய மொழியில் போதனு மொழி இல்லாமற் செய்வது தீமை பயக்கும். மக்கள் சபையின் தலைவராகிய காலஞ் சென்ற ஸ்ரீ ஜி. வி. மாவலங்கர் ஆ. மொ. க. வின் வினாக்களுக்குத் தந்த விடைகளில் "எல்லா நிலைகளிலும் போதனு மொழிகள் பிராந்திய மொழிகளாகவே இருத்தல் வேண்டும். அந்த மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல் அந்த மக்களினுடைய அறிவு வளர்வதற்கும் இது தேவை. மக்களினுடைய அறிவை, எல்லாத் துறைகளிலும் எல்லா விஷயங்களிலும் வளர்க்க வேண்டியது நம்முடைய கடமை என்பதை நினைக்கும்போது பிராந்திய மொழிகளை யல்லாத வேறு எந்த மொழியையும் என்னுல் நினைக்கவே முடியவில்லை. கற்றறிந்தவர்கள் வாக்காளர்களாக வருகின்ற வரை வயதுவந்தவர்கட்கு ஓட்டுரிமை வழங்கிய நம்முடைய ஜனநாயகம் வெற்றி பெறுவது கடினம். அது தனி நாயகமாகவோ கூட்டு நாயகமாகவோ மாறிவிடக் கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு". 21-வது கேள்விக்கு விடை அளிக்கும்பொழுது பல்கலைக் கழக நிலையில் போதனு மொழி என்பது பற்றி அவர் சொல்லுகையில் "ஒரு மாணவனின் ஆளுமையை முற்றிலும் கற்பிப்பதற்கே நம்முடைய கல்வி முற்றிலும் பயன்பட வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அக்கல்வியை மூன்றாகப் பிரித்து முதல் நிலை, இடைநிலை, உயர்நிலை என்று

பிரிப்பதெல்லாம் அந்த மாணவனின் பல்வேறு வயதுகளில் தேவைப் படுகின்ற கல்வியைக் குறிப்பதன்றி வேறில்லை. தாய் மொழியின் மூல மாகப் கற்பிக்கின்ற கல்வியே சிறந்த முறையில் போதிக்கப்படுவதாகும் என்பது பலரும் அறிந்த ஒன்ருகலின் எந்த ஒரு நிலையிலும் போதனு மொழியை மாற்ற வேண்டும் என்பதை நான் நினைக்கக்கூட முடியவில்லை.

(ஆ)

4. ஆ. மொ. க. அறிக்கை, உலகத்தார் அனைவரும் ஏற்றுக்கொள்ளு கின்ற மேலே கூறப்பட்டுள்ள முடிவுகளை ஏற்றுக் கொள்ளாமல் துரதிர்ஷ்ட வசமாகப் போதனு மொழியைப் பற்றித் தானே சில பல வழிகளைச் சொல்லத் தொடங்கியுள்ளது. இதனைச் செய்வதானல் ஹிந்தி வளர்ச்சி தடைப்படுவதோடு ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ளவர்கள் கொண்டுள்ள தவருன எண்ணங்களையும், சந்தேகங்களையும் மேலும் வளர்க்கவே ஏதுவாகும். ஆந்தர்பாஷா ஹிந்தியினுடைய அடிப்படைக் காரணம் விரிவு, தேவை என்பவை நாட்டின் அரசியலில் என்ன செய்யப் போகின்றனவோ என்று அவர்கள் ஏற்கெனவே ஐயங்கொண்டுள்ளார்கள். இந்த அறிக்கையின் முன்பகுதியில் ஆ. மொ. க. செய்ய வேண்டிய வேலை பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். யூனியன் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு ஹிந்தி மொழியைப் பற்றித் தான் கொண்டுள்ள கொள்கை யாது என்பதை விளக்கமாகவும், விரிவாகவும் எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த அந்த ராஜ்யங்களில் அந்த அந்தப் பிராந்திய மொழிகளைப் பயன் படுத்துவதற்கு எவ்விதமான தடையும் இராது என்பதை யூனியன் அரசாங்கம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று ஆ. மொ. க. அதற்குச் சிபாரிசுச் செய்ய வேண்டும். ஆனல் இதன் மறுதலையாக ஆ. மொ. க. அறிக்கை தேவை இல்லாத முறையில் சில ஆலோசனைகளைக் கூறியுள்ளது. அந்த ஆலோசனைகள் இன்று நாம் போக்க வேண்டும என்று சொல்லிக்கொண்டு இருக்கின்ற அச்சத்தை வளர்ப்பதற்குரியனவாக உள்ளன.

5. பல்கலைக் கழகங்களின் சுதந்திரம் பற்றியும் ஒன்று இரண்டு வார்த் தைகள் சொல்ல வேண்டும். அரசியல் அமைப்பின் கீழ் ராஜ்யங்கள் அந்தப் பிராந்தியங்களில் வழங்குகின்ற மொழியையோ மொழிகளையோ ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்வதற்கு உரிமை பெற்றிருப்பதுபோலவே பல்கலைக் கழகங்களும் அவைகளுக்குரிய போதனு மொழியைப்பற்றி முடிவு செய்துகொள்வதற்கு உரிமை வழங்கப்பட வேண்டும். பல்கலைக் கழகங்களுக்கு இத்தகைய உரிமை உண்டு என்பதை ஆ. மொ. க. ஏற்றுக் கொண்ட போதிலும் அந்தப் பல்கலைக் கழகங்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள "முடிவுகளை" யொட்டி ஹிந்தியைப் போதனு மொழியாகக் கொண்டால் ஒழிய அந்தப் பல்கலைக் கழகங்களை ஆ. மொ. க. மதிப்பதாகத் தெரியவில்லை. ஆ. மொ. க. வின் அறிக்கையில் "பல்கலைக் கழகங்களில் எது போதனு மொழியாக இருக்க வேண்டும் என்ற விஷயத்தில் இந்திய அரசாங்கம் தன்னுடைய கொள்கையாக யாதொன்றையும் தெரிவிக்கப் போவதில்லை" என்று ஒரு இடத்தில் குறிப்பிடப்பட்டிருப்பினும் கூட, அந்த அறிக்கை, பல்கலைக் கழகங்களின் இவ்விஷயத்தில் மத்திய அரசாங்கத்தை உடனே தலையிடுமாறு வேண்டிக் கொள்கிறது. ஆ. மொ. க. அறிக்கை இவ்வாறு செய்யும் பொழுது கல்வித் துறைக்கு மாருகத் தான் சிபாரிசு செய்யும்பொழுது மகாத்மா காந்தியைத் தனக்கு உதவியாக எடுத்துப் பேசுவதுதான் விந்தையானது. ஆனல் இங்ஙனம் மகாத்மா காந்தியை மேற்கோள் காட்டும்போது அவருடைய வாக்கியங்களில் அடுத்த வாக்கியத்தை எடுத்துக் காட்டாமல் தனக்கு வசதியாக வேண்டியதை மட்டும் கூறிவிட்டு வாளாயிருந்துவிடுகிறது. அந்த வாக்கியத்தை இந்தப் பகுதி யின் முதற் பகுதியில் எடுத்துக்காட்டியுள்ளேன்.

6. ஆ. மோ. க. அறிக்கை இன்னும் ஒருபடி மேலே சென்று மறை முகமாக மத்திய அரசாங்கம் இவ்விஷயத்தில் இந்திய அரசியல் அமைப்

பின் ஒரு குறிப்பிட்ட பிரிவின்படி தலையிடலாம் எனப் பேசுகிறது. அந்தப் பிரிவு மத்திய அரசாங்கம் "உயர்தரக் கல்வி விஷயங்களில் ஓர் ஒருமைப் பாட்டையும் தரத்தையும் முடிவு செய்ய வேண்டிய" விஷயங்களை பற்றி பேசுகின்ற ஒரு பகுதியாகும். ஆனால் இடைநிலை மொழி என்பதும் மேலே சொல்லிய தரங்கள் என்பவையும் முற்றிலும் வேறானவை என்பதை அனைவரும் அறிவர். தன்னுடைய மொழியல்லாத பிற மொழியைப் போதனா மொழியாகக் கொள்வது தரத்தைக் குறைத்துக்கொள்ள வழி யாகும், என்று நினைக்கலாம்[1] இந்தப் பிரிவு இடைநிலை மொழியைப் பொறுத்து ஒன்றும் முடிவு செய்ய உதவாது. எனவே ஆ. மொ. க. அறிக்கைக்கூட இதனைப் பற்றிக் கூறும்பொழுது "ஒருமைப்பாடு முதலிய வற்றைக் கவனிக்கின்ற விஷயங்களின் கீழ் இதுவும் வரும்போல் இருக் கிறது" என்றே கூறியுள்ளது.

7. இவ்விஷயம் பற்றி ஆ. மொ. க. அறிக்கை சொல்வது பற்றி நான் மேற்கொண்டு ஆராயப் போவதில்லை. ஆனால் இவ்விஷயத்தை அது பேசியுள்ள விதம், நிர்மாணக் கோரிக்கைகளை எவ்வளவு தூரம் ஆ. மொ. க. மீறிச் சென்றுள்ளது என்பதற்கு உதாரணமாகச் சொல்ல முடியும். ஜனாதிபதி பிராந்திய மொழிகளுக்குக் கொடுத்துள்ள வாக்கை மீறக் கூடிய நிலையில் இவர்களுடைய முடிவுகள் உள்ளன என்றும் சொல்ல விரும்பு கிறேன்.

(இ)

8. அகில இந்தியாவிலும் ஹிந்தி மொழியை மட்டும் ஒரே போதனா மொழியாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்தை பேசுகின்றவர்கள் இன்று ஹிந்தி நம்முடைய மொழி வளர்ச்சியில் ஒரு பிராந்திய மொழியாக மட்டுமே உள்ளது என்பதையும் அவ்விதமே இந்திய அரசியலமைப்பில் ஏனைய மொழிகளோடு சேர்த்துச் சொல்லப்பட்டுள்ளது என்பதையும், மறந்து விடுகிறார்கள். நான் முன்னர்க் குறித்தபடி, மற்றொரு ஹிந்தி, அதாவது அரசியல் அமைப்பின் 351-வது விதியில் எதிர்பார்க்கப்படுகிற ஹிந்தி இப்பொழுதைக்குக் கருத்தளவிலேயே இருந்து வருகிறது. இந்த ஹிந்தியைத்தான் இடை நிலை மொழியாக உயர்தரக் கல்வியில் சிபாரிசு செய்துள்ளார்கள் என்று நம்புகிறேன். எனவே இந்த ஹிந்தி என்று கூறினால் அது பிராந்திய ஹிந்தியை ஏற்றுக் கொள்வதாகவே குறிக்கும்; இது நியாயமான தன்று. அப்படி இருந்தும்கூட ஹிந்தி மொழியானது, ரஷ்ய மொழி அவற்றின் பிராந்திய மொழிகளின் நடுவே விளங்குவது போல இருக்குமேயானால், அதாவது அதிக வளமுடையதாகவும், மிகவும் வளர்ச்சியடைந்ததாகவும், உயர்தரக் கல்விக்கு ஏற்றதாகவும் இருக்குமே யானால் அதனை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இது இவ்வாறில்லை. நம்முடைய மொழிகளனைத்தும் பிற நாட்டு இடைநிலை மொழிகளின் காலடியில் சிக்கி துன்பப்பட்டமையின் இன்று அனைத்துமே வளர்ச்சியை நாடிக் காத்துக்கொண்டுள்ளன.

9. இந்த விடத்தில் இப்பொழுது தயாராக உள்ளதும், ஏனைய வசதிகள் நிறைந்ததுமான ஓர் இடைநிலை மொழி வேண்டும் என்று கூறினால் ஆங்கிலத்தின் உரிமையை யாரும் மறுக்க முடியாது. எனவே ஆங்கிலத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறவர்கள் போதனா மொழியைப் பொறுத்த மட்டில் ஹிந்தி மொழியைக் காட்டிலும் தாங்கள் சொல்லும் ஆங்கில மொழி நிச்சயமாக நற்பயனை அளிக்கக்கூடியது என்று கூறலாம். ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் போதனா மொழி யாகக் கொள்ளும் அளவுக்கு அம்மொழியை நன்கு அறியவில்லையாதலால் ஹிந்தியைப் போதனா மொழியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று யாரேனும் ஆலோசனைகள் கூறினால், அது, ஆங்கிலமே இருக்கட்டும் என்று

[1] இதுபற்றிய விவரங்களுக்குக் கீழே பாரா 14-ஐ காண்க.

சொல்கின்ற முறையில்தான் முடியும். இது பற்றி இங்குப் பேசவேண்டிய அவசியமில்லை. நடைமுறை சாத்தியமாக ஆங்கிலத்தை நீக்க வேண்டியது இப்பொழுதுள்ள மொழிப் பிரச்னையாகும். ஏனென்றால் நாடு முழுவதி லும் ஆங்கில அறிவுத்திறன் அதனை அறிந்த ஒரு சதவிகித ஜனத் தொகை யிலேயும் கீழே போய்க் கொண்டிருப்பதை நாம் அறிவோம்.

10. நம்முடைய உண்மையாயன பிரச்னை என்ன வென்றால் ஹிந்தி யைப் போதனு மொழியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற பிரச்னை கூட இல்லை. அதன் மறுதலையாகப் போதனு மொழியாக உள்ள ஆங்கிலத்தை விரைவாகவும், நல்ல முறையிலும் நீக்க வேண்டும் என்பதே இப்பொழுதைய பிரச்னை. இதனை நன்கு செய்ய வேண்டுமானால் ஹிந்தி உள்பட எல்லாப் பிராந்திய மொழிகளும் தங்களுடைய ராஜ்யங்களில் ஒரே நேரத்தில் இந்த வேலையைத் தொடங்க வேண்டும். இந்த முறை உடனே தொடங்கப்படலாம். ஆங்கிலத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறவர்களும் கூட இந்த வழிக்கு ஒப்புக் கொள்கிறார்களாத லின் அகில இந்தியாவிலும் இதனைத் தொடங்கினால் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். எனவே ஹிந்தியே போதனு மொழியாக வரவேண்டும் என்று நினைக்கின்ற கூட்டத்தார்கூட இப்பொழுதைக்கு “வருங்காலத்தில் எல்லா மாகாணங்களிலும், எல்லாக் கல்வி நிலைகளிலும் போதனு மொழி பிராந்திய மொழிகளாகவே இருக்க வேண்டும்” என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். (ராதாகிருஷ்ணன் அறிக்கை, பக்கம் 323, பாரா 51.)

11. எனவே நம்முடைய பல்கலைக் கழகங்களில் போதனு மொழியை உடனடியாக மாற்றும் வேலை இப்பொழுது மிகுதியும் தேவைப்படுகிறது. 1957-வாக்கில் அவர்கள் ஆரம்பித்தால் 1965-ல் இவ்வேலையை முடித்து விடலாம். அரசியலமைப்பு எதிர்பார்க்கின்ற மொழி மாற்று அமைப்பின் பொது இயல்பில் இது ஒரு முக்கியமான பகுதியாகும்.

12. இதனோடு சேர்த்துப் பல்கலைக் கழகங்கள் முதல் பட்டப் பரீட்சை வரையில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கவேண்டும். இவ்வாறு செய்வது நம்முடைய பட்டதாரிகளை அகில இந்தியக் காரியங்களுக்கும், ராஜ்யங்களுள் கடித போக்குவரத்துச் செய்வதற்கும் வேண்டுமான அளவு தயாரித்துவிடும்.

13. இவ்விதமான ஒரு வேலை உடனடியாகச் செய்யக்கூடியதொன் ருகும். இவ்வாறு செய்யப்பட்டால் ராதாகிருஷ்ணன் அறிக்கையில் குறிப் பிட்டுள்ளபடி அது மிகவும் திருப்தி அளிக்கும் ஒன்றுகும். அதனை இங்கே குறிக்கிறோம்.

14. நாட்டிலுள்ள கற்றறிந்த இளைஞர்களில் சிலர் யூனியன் ஊழியத் திற்கும், அரசியலுக்கும் நுழைவதற்குரிய வாயிலாக இருப்பது உயர்தரக் கல்வியாகும். ஆனால் மிகப் பெரும்பாலானவர்கள் அந்த ராஜ்யத்திலேயே தங்கிவிடுவார்கள். அவர்களுடைய கல்வி முதலியனவற்றை நோக்கும் பொழுதும், ஜன நாயக சமுதாயத்தின் பொது நலத்தை உத்தேசிக்கும் பொழுதும் பிராந்திய மொழியின் மூலமாகவே அவர்கள் கல்வி இருக்க வேண்டும் என்று சொல்வது மிக இன்றியமையாத தாகிறது. பிராந்திய மொழிகளில் கல்வி போதிப்பதால் அந்தப் பிராந்தியத்திற்கு அவர்கள் உதவுவார்கள் என்பது ஒரு புறம் இருக்க, அந்தப் பகுதியிலுள்ள இலக் கியத்தையும் பண்பாட்டையும் வளர்க்கவும், அக்கல்வி பயன் படும். இயல் பாக உள்ள பிராந்திய மொழிகளில் போதிக்கப்படுவதனுல் அவர்கள் கல்வித் துறையிலும் சிந்தனு சக்தியிலும் ஏனையோரைவிட உயர்ந்த தரத்தை[1] பெற்றிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. அன்றியும் அறிவுத்

[1] இவ்விடத்தில் அதாவது இடைநிலை மொழித் தரத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதல் என்பது பற்றிச் சற்றுச் சிந்திப்பது இலாபகரமானது. இந்தப் பகுதி 6-வது பாராவைக் காண்க.

துறையின் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும் அவர்கள் தக்க தூண்டுகோலாக இருப்பார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இங்ஙனம் யூனியன் ஆட்சி மொழியாக உள்ள மொழியில் தேவையான அறிவைப் பெற்றுள்ள மாகாணங்களிலிருந்து வருகின்ற மாணுக்கர்கள் அகில இந்திய அமைப்புக் களில் நுழைவதிலும், தொல்லை ஒன்றும் இல்லை. பிராந்தியங்களி லிருந்து வருகின்ற அறிஞர்களே இவற்றில் பயிற்சி ஆசிரியர் வேலையையும் செய்யலாம். (பக்கம் 323, பாரா 50.)

15. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை பற்றி ஹிந்தி இடைநிலை மொழி வேண்டுமென்று கூறுகிறவர்கள் என்ன அச்சம் கொண்டுள்ளார்கள் என் பதை இங்கே சொல்ல விரும்புகிறேன். டெல்லியில் உள்ள மி.மு.ம. (மிக முக்கிய மனிதர்) (வி.ஐ.பி.) ஒருவரால் இது சான்ருக எங்களுக்குச் சொல்லப்பெற்றது. பிராந்திய மொழிகள் உடனே வேண்டுமானுலும் ஆங்கில மொழியை நீக்கி விட்டுச் சிறந்த முறையில் இடைநிலை மொழிகளாக ஆதல் கூடும், என்பதை அவர் ஏற்றுக் கொண்டார். ஆனுல் அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் பிராந்திய மொழிகளே இவ்வேலையை நன்கு செய்துவிட்டால் பிறகு பிராந்திய மொழிகளை நீக்கிவிட்டு ஹிந்தி மொழி அங்கு நுழைவதற்குரிய சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும் என்பது தான் அவருடைய அச்சமாக இருந்தது. ஹிந்தி போதனு மொழி வேண்டு வோரின் கட்சியிலுள்ள மிக மென்மையான பாகம் இதுதான். ஹிந்தி யைக் கட்டாய பாடமாகவும் கற்றுக் கொண்டு, அவர்களுடைய பிராந்திய மொழியிலும் அதனை போதனு மொழியாகக் கொண்டு செலுத்தக் கூடுமே யானுல், பின்னர் அதனுடைய சகோதர மொழிகள் இருக்க வேண்டிய இடத்தில் அவற்றை நீக்கி விட்டு ஹிந்தியை கொண்டுவரவேண்டும் என்று சொல்வதன் காரணமென்ன? உண்மையைக் கூறுமிடத்து ஆந்திர பாஷா வாக உள்ள ஹிந்தி நன்கு புரிந்து கொள்ளப்படவோ பிராந்திய மொழி களுக்குப் போட்டியாக கருதப்படவோ கூடாது. நம்மைப் பொறுத்தவரை "இரட்டை மொழிக் கொள்கையை [1]" செம்மையான முறையில் நம் மிடையே புகுத்தினுல் ஆங்கிலத்தை நீக்கி விட்டு மத்திய மொழியின் மூலம் அந்த இடத்தை நிரப்புதல் என்பது எளிதாக முடியும். ராதா கிருஷ்ணன் அறிக்கை பக்கம் 322, பாரா 49.

---

[1] நான் எங்கே இருந்து இந்த வாக்கியத்தை மேற்கோள் காட்டினேனே அந்த ராதா கிருஷணன் அறிக்கையிலிருந்தே இரு மொழிக் கொள்கை என்ற சொல்லின் பொருளைக் கீழே தர விரும்புகிறேன்.

> "யூனியன் மொழியை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் இடைநிலையில் போதித்துப் பல்கலைக் கழக அளவிலும் தொடர்ந்து நடத்துவதை விரும்புகிறோம். தேவையான எல்லா அளவுக்கும் யூனியன் மொழியைப் பற்றிய பொதுவான அறிவை இதன் மூலம் நாம் பெற முடியும். இதனுடன் கூட இம்மொழியில் தனியான வன்மை பெற வேண்டும் என்று விரும்புகிறவர்கட்கு ஆழ்ந்த முறையில் படிப்பதற்குரிய வசதி களும் செய்து தரப்பட வேண்டும். ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள மாண வர்கள் மற்றொரு இந்திய மொழியைக் கற்றுக்கொள்வது மிகவும் நலம் பயக்கும். ஏனைய பிராநதியங்களில் உள்ள மாணவர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொள்வதைச் சரி செய்யும் முகமாக மட்டும் இது சொல்லப்படவில்லை. இப்பிராந்தி யங்களில் உள்ள இளைஞர்கள் இந்த நாட்டின் பலவேறு பகுதிகளிலும் சென்று பணியாற்றுவதற்கும், பல்வேறு பிராந்தியங்களிடையே ஹிந்தியில் செய்ய வேண்டிய அலுவலைச் செய்து கொடுப்பதற்குரிய தகுதி பெற்ற ஊழியர்களைத் தரவும் இவர்கள் இவ்வாறு கற்றுக் கொள்வது நலம் பயக்கும். மேற்படி பக்கம் 322, பாரா 49.

ஆ. மொ. அறிக்கை இது விஷயத்தை ஆராய்ந்து ஹிந்தி மொழிப் பிராந்தியங்களில் உள்ளார்கள் மற்றொரு இந்திய மொழியை அறிந்து கொள்வது பற்றியும், ஆராய்ந்துள்ளது. இது விஷயமாக இக்கழகம் பேசியுள்ளவற்றை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்விஷயத்தில் ராதாகிருஷணன் அறிக்கை கூறுவதே நியாயமானது. ராஜ்யங்களிலுள்ள கல்வித்துறை இலாக்காக்களுக்கு மொழிக்கல்வி பற்றி யூனியன் அரசாங்கம் தந்துள்ள அறிக்கையில் இதனைச் சரி என்று அவர்கள் ஏற்றுக் கொள்வதாக அறிய முடிகிறது. (இந்திய அரசாங் கத்தின் கல்வி யமைச்சின் பொருட்டாக அகில இந்தியக் இடைநிலைக் கல்விக்குழு, உயர்தர இடைநிலைப் பள்ளிக்கூடங்களுக்கு ஏற்பத் தயாரித்த பாடத் திட்டம்) இவ்வாறு நாம் ஒருவருடைய மொழியை மற்றவர் படிப்பது இந்திய ஒற்றுமையை வளர்ப்பதோடு மற்ற வருடைய வாழ்வு முறையையும் பண்பாட்டையும் அறிந்து கொள்ளவும், ஒரே ஆந்தரபாஷா ஹிந்தியின் மூலம் இதனை ஒன்ருக்கவும் இது உதவும்.

16. மேலே குறிக்கப்பட்டுள்ள ராதாகிருஷ்ணன் அறிக்கையில் ஒரு பகுதி மத்திய ராஜ்யப் பொதுப் பணிகளில் இடைநிலை மொழி என்பது பற்றிப் பேசுகிறது. இனி மற்றொரு பகுதியைப் பேசுவதற்காக இதை இப்படியே விட்டுவிட்டு இடைநிலை மொழி பற்றிய இந்தச் சிக்கலான பிரச்னை பற்றி காந்திஜியின் கருத்து யாது என்பதை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். ஏன் இவ்வாறு செய்கிறேன் என்றால் எங்களுடைய விசாரணையின் போது பல்வேறு விதமான மக்களும் அவருடைய கருத்தை எடுத்துப் பேசினார்கள். ஏனென்றால் நம்முடைய கவனத்தைக் கவர்ந்து கொண்டிருக்கின்ற தேச வளர்ச்சிக் காதாரமான காரியங்கள் அனைத்தும் அந்தச் தச்சனாலேயே செய்யப்பட்டன என்பதை நினைத்துப் பார்த்தால் இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

17. இந்த நிகழ்ச்சிகளில் காந்திஜியினுடைய கருத்துக்கள் எவ்வாறு இருக்கும் என்பதைப் பலர் எவ்வாறு நினைக்கின்றார்கள் என்பதே விநோதமான ஒன்றாகும். உதாரணமாக இப்பொழுது காந்திஜி நம்மிடையே இன்மையினாலும் அவர் வாழ்ந்து சிந்தனை செய்த காலத்தில் நாடு விடுதலை பெறாமல் அடிமைப் பட்டிருந்த காரணத்தினாலும், மொழிப் பிரச்னை பற்றி அவர் சொல்லியவற்றை நாம் சிந்திக்கவே கூடாது என்று சொல்கிறவர்களும் உண்டு. இதன் எதிராக இன்று காந்திஜி உயிரோடு இருந்தால் எல்லாவற்றிற்கும் இடைநிலையாக ஹிந்தியையே வைத்திருப்பார் என்று சொல்கிற கூட்டமும் உண்டு. இவை இரண்டையும் எதிர்த்து இரண்டுக்கும் நடுவழியில் புகுந்து காந்திஜி தாய் மொழி இடைநிலையைத் தான் கூறினார். ஆனால் அது ஆரம்பப் பள்ளிகளுக்கு மட்டுமே என்று சொல்கிறவர்களும் உண்டு.

18. இவைகளெல்லாம் அவரவர்களுடைய விருப்பத்தை எடுத்துக் காட்டுபவனவாக அமைந்துள்ளனவே தவிர இவற்றைச் சொல்வோருக்கும் எவ்வித பயனையும் அளிக்காமல் நாட்டின் தந்தைக்கும் எவ்வித மரியாதையையும் இது செலுத்தவில்லை. உண்மையாக அவருடைய கருத்தை அறிந்து கொள்ள நாம் விரும்பினால் அவர் உண்மையாக என்ன எழுதினாரோ அவற்றைப் படித்து அதிலிருந்து நமக்கு ஏற்றுக் கொள்வதாக இருப்பினும் அல்லாததாக இருப்பினும் ஒரு முடிவுக்கு வரலாம். இக்கருத்தில் நின்று உடனடியாக யாவரும் கவனித்துக் கொள்வதற்காக அவருடைய வார்த்தைகள் சிலவற்றை இடைநிலை மொழி பற்றி மட்டும் அல்லாமல் மிக அடிப்படையான கேள்வியாகிய ஆங்கிலத்தை நம்முடைய வாழ்வு முறையின் அடிப்படையிலிருந்து நீக்கும் விஷயத்தைப் பற்றியும் அது பேசுகிறது. இதில் சிறப்பு என்னவென்றால் அவர் இவற்றைச் சொல்லிய காலம் ஏறத்தாழ நாட்டில் அரசியல் விடுதலையைப் பற்றி நாம் ஓரளவு அறிந்து கொண்ட காலமாகும். அதாவது 1938-ல் ஒரு பகுதியும், 1947-ல் ஒரு பகுதியும் ஆகும்.

சேர்க்கை.

(காந்திஜியின் கருத்துக்கள்.)

(அ)

அது முன்னரே முடிவு செய்யப் பெற்றது.

உடனே போதனா மொழியை மாற்ற வேண்டும். எப்பாடு பட்டாலும் மாகாண மொழிகள் அவற்றிற்குரிய நியாயமான இடத்தைப் பெற வேண்டும். இன்று அன்றாடக் கல்வி முறையில் ஏற்படுகின்ற கொடுமையான நஷ்டத்தைவிட ஓரளவுக்கு உயர்தரக் கல்வியில் குழப்பம் ஏற்படுவதைக் கூட நான் வரவேற்கிறேன்.

மாகாண மொழிகளின் மதிப்பை உயர்த்துவதற்கும், அவற்றின் பெருமையை அறைகூவுவதற்கும் அந்த மாகாணத்தில் நீதி மன்றங்கள் எங்கே உள்ளனவோ அங்கே யெல்லாம் அந்த மாகாண மொழியையே நீதி மன்ற மொழியாகவும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்வேன். மாகாணச் சட்ட மன்றங்களில் நடைமுறைகள் அனைத்தும் அந்த மாகாண மொழியிலேயே நடை பெறுவதோடு அந்த மாகாணத்தின் எல்லையில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் இருக்குமானால் அந்த மொழிகளில் மாகாண சட்ட மன்றங்கள் நடப்பதை நான் விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் நன்கு முயற்சிப்பார்களேயானால் ஒரு மாதத்திற்குள்ளாக அவர்களுடைய மாகாணங்களில் வழங்கும் மொழியை அறிந்து கொள்ளலாம். ஒரு தமிழன் எளிதான முறையில் தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தமிழோடு தொடர்புடைய மொழிகளில் ஓரளவு இலக்கணத்தையும் சில நூறு வார்த்தைகளையும் அறிந்து கொள்வதை யாரும் தடை செய்ய முடியாது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் ஹிந்துஸ்தானியே முழு ஆட்சி செலுத்த வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை கல்வி வாதிகள் முடிவு செய்ய வேண்டிய விஷயமன்று இது என்பேன். ஓர் இடத்திலுள்ள ஆண்களும், பெண்களும் எந்த மொழியின் மூலம் கல்வியைப் பெற வேண்டும் என்பதை முடிவு செய்ய அவர்களுக்கு உரிமை இல்லை. உலகின் சுதந்திரம் பெற்ற நாடுகள் அனைத்தும் அவர்களுக்காக இந்தப் பிரச்னையை முடிவு செய்து வைத்துள்ளன. அன்றியும் எந்தெந்தப் பாடங்களைப் போதிக்க வேண்டும் என்பதையும் அவர்கள் முடிவு செய்ய முடியாது. அதுவும் அந்த நாடு எவற்றைத் தேவை என்று கருதுகிறதோ அத்தேவைகளைப் பொறுத்தே முடிவு செய்யப்பட வேண்டும். அந்த இனத்தின் முடிவான கருத்தை மென்மையான முறையில் கொண்டு செலுத்துவதே கல்வி வல்லுநர்களின் தனிப்பட்ட உரிமைகளாகும். இந்த நாடு உண்மையாகவே விடுதலை பெறும் பொழுது இடைநிலை மொழி பற்றிய பிரச்னை ஒரே வகையில் முடிவு செய்யப்படும். அதற்கேற்ற முறையிலேயே கல்வி வல்லுநர்கள் பாடத்திட்டத்தையும், பாடப் புத்தகங்களையும் தயாரிப்பார்கள். விடுதலை பெற்ற இந்தியாவில் கல்வி கற்பவர்கள் அந்த விடுதலை பெற்ற நாட்டின் தேவைக்கு ஏற்பக் கல்வியைப் பெறுவார்கள். நம்மைப் போலப் படித்தவர்கள் மட்டும் இந்தப் பிரச்னையோடு போராடிக் கொண்டிருந்தால், நாம் கனவு காணுகின்ற விடுதலை பெற்ற வலிமையான இந்தியாவை ஸ்தாபிக்கவே முடியாது. நம்முடைய அடிமைத் தளையிலிருந்து கல்வி, பொருளாதாரம், சமுதாயம், அரசியல் ஆகியவை எந்தத் துறையில் வளர்வதானாலும் பெரு முயற்சியோடு வளரவேண்டும். இந்த முயற்சியே போராட்டத்தின் முக்கால் பகுதியாகும்.
(ஹரிஜன் 9-7-1938.)

(ஆ)

விரைந்து தொழிற்படுவதன் அவசியம்.

இடைநிலை மொழியை மெள்ள மெள்ள மாற்றுமல், உடனே மாற்றி விட்டால் நம்புதற்கு முடியாத மிகக் குறுகிய கால அளவில் பாடப் புத்தகங்களும், ஆசிரியர்களும் அந்தத் தேவையை நிரப்புவதற்கு வருவதைக் காணலாம். நல் முறையில் காரியம் செய்வதானால் ஓராண்டுக் காலத்துக்குள் இவ்வளவு காலமாகப் பிற மொழியின் மூலமாகவே நாட்டின் கல்வியையும், பண்பாட்டையும் கற்றுக் கொண்டு வந்தோமே இதனால் தேசத்தின் சக்தியும், காலமும் எவ்வளவு விரயமாயின என்பதை நினைத்து இதற்கு நாம் உடந்தையாக இருந்திருக்க வேண்டியதில்லை என்பதையும் அறியலாம். வெற்றி பெறுவதற்குரிய முக்கிய காரணங்களுள் அந்தந்த மாகாண மொழிகளை அரசாங்க அலுவலகங்களிலும், நீதி மன்றங்களிலும் உடனே புகுத்திவிட வேண்டும். சீர்திருத்தத்தின் தேவையை நாம் நம்பினால் கண்மூடிக் கண் திறப்பதற்குள் அதனைப் பெற்று விடுவோம்.
(ஹரிஜன் 30-7-1938.)

தாய் மொழியின் மூலமாகத் தொழில் துறைக் கல்வியைப் போதிப்பதற்கு மிகுதியான ஆராய்ச்சியும், தயாரிப்பும் தேவை என்று சொல்லப்பட்டதை காந்திஜி ஏற்றுக் கொண்டதே இல்லை. அவ்வாறு விவாதம் செய்தவர்கள் நம்முடைய கிராமங்களிலுள்ள கிளை மொழிகளில் புதைந்து கிடக்கும் சொல்லாட்சி பற்றியும், செல்வம் பற்றியும் அறியாதவர்களே ஆவார்கள். காந்திஜியின் கருத்துப்படி புதிய சொற்களைக் காண்பதற்கு வட மொழிக்கோ, பர்ஷிய மொழிக்கோ செல்ல வேண்டியதில்லை. சம்பிரானில் அவர் இருந்த பொழுது அந்தக் கிராமத்து மக்கள் வெளி நாட்டு மொழி, அல்லது மரபுச் சொல் ஒன்றின் உதவிகூட இல்லாமல் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை எளிதாகச் தெரிவிக்கக்கூடிய வசதியைப் பெற்றிருந்தார்கள். அதற்கொரு உதாரணமாக அவர்கள் பயன்படுத்திய "ஹவகாடி"[1] என்ற சொல்லை அவர் எடுத்துக் காட்டினார். இச்சொல்லின் பொருள் மோட்டார்கார் என்பதாகும். எனினும் இச்சொல்லை அவர்களே உண்டாக்கினார்கள். மேலும் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கூட இத்தகைய ஒரு அழகான கவிதை வாசனையோடுகூடிய சொல்லை உண்டாக்க முடியுமா என்றும் அவர்களிடம் சவால் விட்டார்.

(இ)

ஜாக்கிரதை.

ராஜ்யங்களும், செயலாளர் அலுவலகங்களும் ஜாக்கிரதையாக இருந்தால் ஒழிய ஹிந்துஸ்தானியின் இடத்தை ஆங்கிலம் பற்றிக் கொள்ளும். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் என்றுமே ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ளப் போவதில்லை யாதலால் அவர்களுக்கு எல்லையில்லாத தீங்கை விளைவிக்கும் இது. என்றாலும் மாகாண அரசாங்கங்கள் தேவையான ஊழியர்களை வைத்துக் கொண்டு மாகாண மொழியிலும், மாகாணங்களுக்குள் வழங்கவேண்டிய மொழியிலும் காரியம் செய்யக்கூடிய ஊழியர்களைப் பெறுவது எளிமையான தென்றே கருதுகிறேன். இரண்டாவது கூறிய மொழி நாகரி எழுத்திலோ, உருது எழுத்திலோ எழுதப்பட்ட ஹிந்துஸ்தானியாகத்தான் இருக்க வேண்டுமென்பதில் எனக்கு ஐயமில்லை.

இந்த முக்கியமான மாற்றத்தைச் செய்வதில் காலந் தாழ்த்துகின்ற ஒவ்வொரு நாளும் தேசத்தின் பண்பாட்டு நஷ்டத்தில் ஒரு நாளாகும். முதன் முதலில் செய்யப்பட வேண்டிய முக்கியமான கடமை வளம் பொருந்திய மாகாண மொழிகளை மீட்டும் உயிர் பெருமாறு செய்தலாகும். நம்முடைய நீதி மன்றங்களிலும், பள்ளிக் கூடங்களிலும், செயலாளர் அலுவலகங்களிலும் கூட இம்மாதிரி மாற்றம் செய்வதற்கு ஒரு சில ஆண்டுகளாகும் என்று சொல்வது மனச் சோம்பேறித் தனத்தைத் தவிர வேறொன்றும் இல்லை. பல மொழி பேசும் மாகாணங்களாகிய பம்பாய், சென்னை போன்றவைகளில் இது பற்றிச் ஓரளவு தொல்லை இருக்கலாமேனும் மாகாண அரசாங்கங்கள் இதற்கொரு வழியைக் கண்டு இந்த மாகாண மக்களை அமைதிப்படுத்தலாம்.

மாகாணங்களினிடையே வழங்கும் மொழி நாகரி அல்லது உருதுவில் எழுதப்பட்ட ஹிந்துஸ்தானியாக இருக்க வேண்டுமா அல்லது நாகரியில் எழுதிய ஹிந்தியாக இருக்க வேண்டுமா என்று யூனியனே முடிவு செய்து சொல்லட்டும் என்று நினைத்து மாகாணங்கள் சும்மா இருக்க வேண்டியதில்லை. அவர்கள் விரும்பிய திருத்தங்களைச் செய்வதற்கு இது குறுக்கே நிற்கவேண்டியதில்லை. அனாவசியமான இந்தப் போராட்டம் ஆங்கிலம் நுழைவதற்குரிய கதவை திறந்து வைப்பதாக இருக்கிறது. முதல் படியாகவுள்ள மாகாண மொழியை எல்லாப் பொதுஸ்தானங்களிலும் உடனடியாக ஏற்படுத்தினால் மாகாணங்களினிடையே வரவேண்டிய மொழி பின்னா

[1] அப்படியே கூறவேண்டுமானால் காற்று, வண்டி என்ற சொல், ஒரு வண்டி காற்றின் உதவிகொண்டு காற்றிலே செல்வது என்பதைக் குறிக்கும்.

தானே தொடரும். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில் மாகாணங்களே அதனைக் கொண்டு செலுத்த வேண்டும். அவ்வாறானால் மத்திய அரசாங்கம் நாட்டிலே உள்ள ஆங்கிலங் கற்ற ஒரு சில இந்தியர்கள் இந்தியாவில் பொதுவாக வழங்கப்படுகின்ற ஒரு மொழியை அறிந்து கொள்ள சோம்பற்படுவதானால் அந்தச் சோம்பலுக்கு இடங்கொடுத்து நாட்டிலுள்ள அனைவரையும் வரிபோடத் தான் விரும்பவில்லை என்பதை உடன் அறிந்துகொள்ளும்.

ஆங்கிலேயர்கள் அரசியல் துறையில் எவ்வாறு துரத்தியடிக்கப்பட்டார்களோ அதேபோலப் பண்பாட்டுத் துறையில் ஆங்கிலத்தைத் துரத்த வேண்டுமென்று நான் வேண்டிக் கொள்கிறேன். வளம் பொருந்திய ஆங்கில மொழி பன்னாட்டு வாணிக மொழியாகவும், ராஜ தந்திர மொழியாகவும் என்றுமே இருந்துவரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

(ஹரிஜன், 21–9–1947.)

பகுதி 5

பொதுப்பணிப் பரிட்சைகளின் இடைநிலை மொழி.

(அ)

1. இந்தியச் சூழ்நிலையில் இது ஒரு விநோதமான பிரச்னையாகும்; என்றாலும் மிக முக்கியமானதாகும். இந்திய அரசியல் அமைப்பு ஆ.மொ.க. விற்கு இது பற்றியே ஒரு தனிப்பட்ட வழிகாட்டியை " கழகம் தனது சிபாரிசுகளைச் செய்யும்பொழுது.... பிற மொழி வழங்கும் பிராந்தியங்களிலுள்ளவர்களுடைய நியாயமான கோரிக்கைகளையும் பொதுப் பணிகளில் அவர்களுக்குரிய தேவைகள், கோரிக்கைகள் என்பவற்றையும் நன்கு கவனிக்க வேண்டும் " என்ற முறையில் தந்துள்ளது என்றால் இதனுடைய முக்கியத்துவம் நன்கு விளங்கும்.

2. இந்தியாவிலேயே பொதுப் பணிகள் (சுருக்கமாக பொ. ப.) அதிலும் சிறப்பாக மத்திய, அகில இந்தியப் பணிகள், வெளியார்களின் ஆட்சிக்காலத்தில் தன் தகுதிக்கு மீறின மதிப்பை மக்களினுடைய சமுதாய, பொருளாதார வாழ்வில் பெற்றுவிட்டன. அப்பரிட்சைகள் ஆங்கிலக் கல்வி முறையோடு பெரிதும் தொடர்பு கொண்டிருந்தமையால் இன்று வரையிலும் அவை வலுப்பெற்று எங்ஙனம் கல்வி போதிக்க வேண்டும் என்பதற்குக் கூட வழிகாட்டிகளாக அமைந்துவிட்டன. இது பற்றி இங்கே அதிகம் பேசுவது தேவையில்லை. நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட விஷயத்தோடு தொடர்புடைய ஒரு சில விஷயங்களை மட்டும் இங்கே குறிக்கிறேன்.

3. ஆட்சித் துறையிலும் கல்வித் துறையிலும் ஆங்கில இடைநிலை மொழியை மாற்றப் புறப்பட்டுவிட்டோம். அவ்வாறு மாற்றும்பொழுது ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தியை மட்டுமே இடைநிலை மொழியாக கொண்டு வருவோமேயானால் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்களைப் பொறுத்த மட்டில் ஒரு விதேசி மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாறுவதாகவே யுள்ளது. அவ்வாறு செய்யவோமேயானால் இன்றையக் கல்வி முறையிலுள்ள ஒரு பெரும் தவறு மறுபடியும் ஹிந்தியின் மூலமாக நீண்ட காலத்திற்கு வாழ முடியும். இது நடைபெறாமல் பாதுகாப்பதே இன்று நம்முடைய கடமையாகும். அதே நேரத்தில் கல்வித் துறையிலும், பண்பாட்டுத் துறையிலும் நம்முடைய நாட்டின் வளர்ச்சியை அது தடைசெய்யாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

4. ஆங்கிலக் கல்வி முறையின் ஆணிவேராக உள்ளதும் இன்றும் நம்முடைய நாட்டில் விடாது இருந்துகொண்டு இருப்பதும் ஆகிய ஒன்று ஆங்கில இடைநிலை மொழியேயாகும். ஆங்கிலம் கற்றவரிடையே ஒரு வகையான ஒற்றுமை இருப்பது போன்ற ஒரு கானல் நீரை இது உண்டாக்கியுள்ளது. அதன் பயனாக இன்று மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள ஒரு கல்வி முறை ஏற்பட்டது என்பதோடு, இக்கல்வி முறையைப்பற்றி 1871-ல் ஓர் ஆங்கிலேயர் கீழ்வருமாறு கூறினார் :—

> " பெரும்பான்மையான மக்கள் ஆழமில்லாத முறையிலும் மேல்போக்காகவும் கல்வியைக் கற்றுப் பல்கலைக் கழகப் பட்டங்களையும் பெற்றுவிடுகிறார்கள். இங்ஙனம் பட்டம் பெறுவது கல்வியைக் கற்காமல் உத்தியோகம், அல்லது வெகுமானம் முதலியவற்றைக் கருதியே கற்பதால் ஐரோப்பியக் கருத்துப்படி இங்குள்ள பல்கலைக் கழகப் பட்டதாரிக்கு எவ்வித மதிப்பும் இல்லை."

(ஜேம்ஸ் எழுதிய " இந்தியாவில் கல்வியும் அரசியல் நிலையும்" என்பதிலிருந்து.)

5. இந்த முறையும் கூட இக்காலத்தில் அழுகிவிட்ட நிலையில் உள்ளது. விடுதலை பெற்ற இந்தியாவின் புதிய தேவைகளால் உந்தப்பட்டு இம்முறை தன்னுடைய பயனற்ற கனத்தினால் தானே அழிந்துவிடும் நிலையில் இருந்து வருகிறது. எனவே இம்முறை அழிந்து அதனுடைய இடத்தில் சூனியம் ஏற்பட்டுவிடாமல் பாதுகாக்கும் முறையில் புதியதொரு கல்வி முறையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு நம்முடைய தேசியத் தலைவர்களுக்கு இருக்கிறது.

6. இந்தக் கல்வி முறையை இன்றும் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு தூண், எது எனில் கல்விக்கும் நல்ல வேலைகளுக்கும் இடையேயுள்ள பிணைப்புத்தான். பொதுப் பணிப் பரிட்சைகள் பலவற்றிற்கு அடிப்படைத் தேவையாயுள்ளது பல்கலைக் கழகங்கள் வழங்கும் பட்டங்களேயாகும். இந்தப் பட்டங்களை வழங்கும் ஏகபோக உரிமை சில பல்கலைக் கழகங்களுக்கே உண்டு. பொ. ப. பரிட்சைகளுக்கு இடைநிலை மொழியாக வர வேண்டிய மொழியைப் பற்றி அனாவசியமான குழப்பங்களும் தொல்லைகளும் ஏற்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்தின் ஒரு குழு இந்தப் பிரச்னையை இப்பொழுது ஆராய்ந்து நிலைமையை மாற்றுவதற்குரிய வழிதுறைகளை ஆராய்ந்து வருகிறது. பல்கலைக் கழகப் பட்டங்கள் இந்நிலைமையை இழந்துவிடுமேயானால் பல்கலைக் கழகங்கள் அனுபவித்துவரும் இந்தப் பொருளாதார மதிப்பு அழிந்துவிடுமேயானால் பல்கலைக் கழகத்திற்கே இது ஒரு நல்ல மாறுதல் என்று கூறலாம். அன்றியும் பொதுப் பணிப் பரிட்சைகளுக்குப் புதிய முறையில் ஆட்களைத் தேர்வு செய்யும் வழிகளைத் காண முயலலாம். நம்முடைய பழைய ஆட்சியாளர்கள் பொக்கிஷமாக விட்டுச் சென்ற அதே வழி துறைகளைப் பின்பற்றித்தான் இன்றும் அப் பரிட்சைகளுக்குத் தேர்வு செய்யும் முறைகள் இருந்து வருகின்றன. ஏனைய பல விஷயங்களைப் போல விடுதலை பெற்ற நம்முடைய நாட்டில் இவற்றிற்கும் சில அடிப்படை மாறுதல்கள் தேவைப்படுகின்றன. அவற்றுள் ஒன்று பொதுப் பணி ஊழியர்கள் ஜனநாயக ஆட்சி முறையில் வேண்டுமான அளவு மொழியறிவு பெற்றிருப்பதாகும்.

(ஆ)

7. எனவே மேலே கூறிய அனைத்தும் பொ.ப. போட்டிப் பரிட்சைகளில் வர வேண்டிய இடைநிலை மொழிகளைப் பொறுத்த மட்டில் மிகவும் பாதிக்கும். என்றாலும் அவைகளை எல்லாம் ஒருபுறம் இருத்திவிட்டு ஆ.மொ.க. இப்பிரச்னையை ஒரு முறையில் ஆராய வேண்டும். 15 ஆண்டுகளில் ஆங்கிலத்தை நீக்கிவிட வேண்டிய அந்தக் குறிக்கோளை மனத்தில் கொண்டு இதனை ஆராய வேண்டும். ஆ.மொ.க அறிக்கை இந்த முக்கியமான வினாவை விட்டுவிட்டு உயர்தரக் கல்வியில் எது போதனா மொழியாக இருக்கவேண்டும் என்பது பற்றி ஆராயத் தொடங்கி அப்படியே சென்றுவிட்டது. எனவே இது பற்றி அது தந்த முடிவுகளும் இதே குறைபாடுகளைப் பெற்றுள்ளன. இவைபற்றிச் சென்ற பகுதியில் குறிப்பிட்டுள்ளவற்றையே மீண்டும் இங்கு எடுத்து எழுத நான் விரும்பவில்லை. என்றாலும் உத்தியோகங்களைப் பொறுத்த மட்டில் யாரும் உணருவார்கள் ஆதலால் இதிலுள்ள குறைபாடுகள் பொதுமக்கள் மனத்தை மிகவும் பாதிக்கும் என்பதை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

8. சிலர் இந்தப் பிரச்னையைக் கீழ்க்கண்ட முறையில் எளிதாகத் தீர்த்து விடலாம் என்று பைத்தியக்காரத் தனமாக நம்புகிறார்கள்:—இந்திய அரசியல் அமைப்பு யூனியன் ஆட்சி மொழியாக ஹிந்தியை ஏற்படுத்தியுள்ளது. எனவே மத்திய, அகில இந்தியப் பணிப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழியாக ஹிந்தி இருக்கவேண்டும் ஆதலால் அதனை உடனே ஏற்றுக் கொள்ளவேண்டும். இதனை அடுத்து எல்லாப் பல்கலைக் கழகங்களும் ஹிந்தி இடைநிலை மொழியை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அழுத்திப் பேசுகிறது. இத்தகைய ஒரு விவாதத்தின் தர்க்க முறை பழைய ஆங்கிலக் கலவி முறையில் பிறந்தது, என்பதை நாம் நன்கு அறிவோம்.

9. இதிலுள்ள போலி நியாயம் நன்கு விளங்கக் கூடியதே. யூனியன் ஹிந்தி என்பது இன்னும் வரவேண்டிய நிலையிலேயே உள்ளது. இப்பொழுது இருந்துகொண்டு இருக்கின்ற ஹிந்தி என்பது ஒரு பிராந்திய மொழியே தவிர வேறில்லை. மேலும் வட இந்தியாவின் ஒரு பாகத்தில் போதனு மொழியாகவும் இந்தப் பிராந்திய ஹிந்தி பயன்பட்டு வருகிறது. இங்ஙனம் ஹிந்தியைப் பயன்படுத்துவது குஜராத்தி, மராத்தி முதலியவற்றை அந்த அந்தப் பிராந்தியங்களில் போதனு மொழியாகப் பயன்படுத்துவதோடு ஒப்பு நோக்கக்கூடியதே. என்றாலும் வடக்கேயுள்ள பல்கலைக் கழகங்கள் இம் மாதிரி நினைக்கவில்லை என்று நன்கு விளங்குகிறது.

(இ)

10. ஆ. மொ. க. அறிக்கை ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள் தங்கள் போதனு மொழியை ஹிந்திக்கு மாற்றிவிட்டமையால் "ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தியையும் தக்க அறிவிப்புச் செய்துவிட்டு ஓர் இடைநிலை மொழியாக ஆக்கவேண்டும்" என்று குறிக்கிறது. பிற மொழிப் பிராந்தியங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள் அந்தப் பிராந்தியமொழிகளை ஏனைய காரியங்களுக்குப் பயன்படுத்தத் தொடங்கினாலும் ஏன் ஆங்கில இடைநிலையை மாற்ற விரும்பவில்லை என்பதை ஆ. மொ. க. ஆராயவில்லை. காரணம் எளிதில் விளங்கக்கூடியதே. அந்தப் பிராந்தியங்களில் வழங்காத ஹிந்தியை அவர்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவே மதில் மேல் பூனையாக அமர்ந்துகொண்டு இன்றுள்ள நிலையே நீடிக்குமாறு செய்து அவர்கள் விருப்பப்படி நிலைமை மாறுகின்றபொழுது வேண்டுமான இடைநிலை மொழிக்கு மாற்றிக்கொள்ளலாம் என்று காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அனைவரும் விரும்புகின்ற முறையில் பிராந்திய மொழிகளோடு ஹிந்தியும் வளருவதற்குரிய சந்தர்ப்பமும் ஊக்கமும் அளிக்கப்படுமேயானால் ஆ. மொ. க. ஜனாதிபதிக்கு இத்தகைய சிபாரிசுகளைச் செய்யும் பொழுது பிற மொழி வழங்கும் பிராந்தியங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள் அவ்வவ்வற்றினுடைய பிராந்திய மொழிகளையே இடைநிலை மொழிகளாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை உண்டாக்குமாறு செய்யவேண்டும். இதற்குரிய நேரான வழி பொ. ப. பரிட்சைகளில் அந்த அந்த மொழிகளை இடைநிலை மொழிகளாக ஆக்குவதேயாகும். இவ்வாறு செய்வதால்தான் ஹிந்தி வழங்காத பிராந்தியங்களிலுள்ள மக்களின் நியாயமான கோரிக்கைகள், தேவைகள் என்பவை பாதுகாக்கப்படும்.

11. ஆ. மொ. க. அறிக்கை போதனு மொழியைப்பற்றிப் பேசும் பொழுது ஹிந்தியைப் போதனு மொழியாகவுடைய சில அமைப்புக்களை ஏற்படுத்தவேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளது. பொதுப் பணிகளுக்கு நடைபெறும் பரீட்சைகளுக்கு ஹிந்தி இடைநிலை மொழியாக வந்துவிடுமேயானல் பிராந்திய மொழி அமைப்புக்களைக் காட்டிலும் ஹிந்தி போதனு மொழி அமைப்புக்கள் அதிகப்படியான ஒரு லாபத்தைப் பெற்றுவிடும். முன்னர் ஆங்கில இடைநிலை மொழிக்கு நடைபெற்றதுபோல ஹிந்தியையும் இயற்கைக்கு மாறுன ஒரு முறையில் தள்ளிக்கொண்டு போகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். ஹிந்தி மொழி போசாத பிராந்தியங்களில் அதனை இடைநிலை மொழியாக ஏற்றுக் கொள்வதனுல் மறுபடியும் ஹிந்தியைப் பொறுத்த மட்டிலாவது சரித்திரம் மீட்டும் மீட்டும் வந்துசேரும். அத்தகைய ஒரு வழியை மேற்கொண்டால் அது திணிப்பதாகக் கருதப்பட்டு ஹிந்தியின் மேல் ஒரு வகையான வெறுப்பை வளர்த்து ஆங்கிலம் நீடிக்கவே வழி செய்யும். ஆங்கிலத்தை நாம் நீக்கக் கருதினுல் அதற்கு மிகச் சுருங்கியதும் விரைவானதுமான வழி பிராந்திய மொழிகளின் மூலம் செய்வதேயாகும். அன்றியும் முன்னர் நாம் குறிப்பிட்டபடி ஹிந்தியை இப்பிராந்தியங்களில் பரப்புவதே சிறந்த வழியாகும்.

(ஈ)

12. இந்திய தேசீயக் காங்கிரசின் செயற்குழு இன்றைய சூழ்நிலையின் தேவையை உத்தேசித்து 1954-ல் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது: போதனு மொழிபற்றிய மிகவும் கருத்து மாறுபாடுள்ள இப்பிரச்னைக்குக் கல்வி முறையில் போதனு மொழிபற்றியும், பொதுப் பணிபரீட்சைகளில் இடை நிலை மொழிபற்றியும் பேசும் இரண்டு தீர்மானங்களாகும் அவை.

13. இந்திய அரசாங்கம் இதனை ஏற்றுக்கொண்டு அதனுடைய கொள்கைகள் என்ற முறையில் வெளியிட்டதாவது :—

(1) பல்கலைக் கழகங்களில் போதனு மொழியாக எது இருக்கவேண்டும் என்ற பிரச்னையை அரசாங்கக் கொள்கைகளுள் ஒன்ருக ஆக்கப் போவதில்லை. இங்ஙனம் கூறுவதால் பிராந்திய மொழிகளே இடைநிலை மொழிகளாக இருத்தல்வேண்டும் என்பதைத் கூறினதாயிற்று.

(2) "படிப்படியாக அகில இந்தியப் பணிப் பரீட்சைகள் ஹிந்தி, ஆங்கிலம், முக்கியமான பிராந்திய மொழிகள் என்பவற்றில் நடைபெறும். பரிட்சை எழுதும் மாணவர்கள் இப்பரிட்சைகளில் மேலேயுள்ள மொழிகளில் எதனை வேண்டுமானுலும் பயன்படுத்தலாம்".

14. 1950–55 இடைக்காலத்தில் ஆங்கிலத்தைப் படிப்படியாக நீக்கிவிட்டு ஹிந்தியைப் பயன்படுத்தவேண்டும், அன்றியும் எல்லா இந்திய மொழிகளையும் நன்கு வளர்ந்துச் சிறப்படைய உதவி புரியவேண்டும் என்ற இரண்டு கொள்கைகளையும் நிறைவேற்றம் செய்யும் முறையில் இந்திய அரசாங்கம் செய்த பெரிய உதவி என்னவென்ருல் மேலே கூறிய ஒன்றுதான். இதனுல் பிறமொழி பேசும் பிராந்தியங்களிலுள்ள பல்கலைக் கழகங்கள் ஆங்கில இடைநிலை மொழியிலிருந்து பிராந்திய மொழிகளுக்கு மாற்றம் செய்து கொண்டன. இவ்வாறு செய்தது நம்முடைய பல்கலைக் கழகங்களில் மிகுதியும் தேவைப்பட்ட சீர்திருத்தங்களை ஓரளவு செய்ததோடு ஜனநாயக முறையில் நாம் நன்கு முன்னேறவும் பயன்படுகிறது. ஆட்சி மொழிக் கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளில் கூறப்பட்ட பாதுகாவல்களுக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது.

(உ)

15. எனவே ஆ. மொ. க. அறிக்கை இந்த இரண்டு முடிவுகளையும், அரசாங்கம், பாராளு மன்றத்தில் செய்ததாகலின் அரசாங்கக் கொள்கை பற்றிய முக்கியமான இந்த விஷயத்தை மிகுதியும் வரவேற்கும் என்று எதிர்பார்க்கலாம். இவ்வாறு வரவேற்பதை விட்டுவிட்டு ஆ. மொ. க. அறிக்கை, யூனியன் பொதுப்பணிக் கழகம் தான் நடத்தும் பரிட்சைகளில் பல மொழிகள் இருப்பின் மிதப்படுத்துதல் நல்ல முறையில் செய்யமுடியாது, என்று கூறியதையே பெரியதாகக் கொண்டு தன்னுடைய வெறுப்பை இவ்விஷயத்தில் காட்டியுள்ளது. தொழில் முறையில் வல்லுநர்கள் சிலர் மிதப்படுத்துதலைப்பற்றி கூறியவற்றை வைத்துக்கொண்டு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகிய இம்மாதிரி விஷயத்தில் ஒரு முடிவுக்கு வருவது தவருனது என்று நான் கருதுகிறேன். அதற்குப் பதிலாகப் பல மொழி பேசும் நம்முடைய நாட்டில் ஏற்பட்டுள்ள பல புதிய தேவைகளில் இந்தப் பரிட்சை முறையையும் மாற்றியமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவே நம்முடைய வல்லுநர் கருதி இதற்கு ஏற்ப ஒரு வழி காணவேண்டும். இப்பொழுதைக்குத் தகுந்த முறை ஒன்றை ஏற்றுக்கொண்டு நாளாவட்டத்தில் கிடைக்கும் அனுபவத்தின் பேரில் அதனை திருத்திக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அதனை இப்பொழுதே ஏற்றுக்கொள்ளவேண்டும். இத்தகையை ஒரு கருத்தை ஆ.மொ.க. அறிக்கை ஏற்றுக்கொள்ளாமல் யு.பி.எஸ். ஸியின் கருத்தைப் பெரிதுபடுத்தியதைக் கண்டு நான் வருந்து

கிறேன். இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரே இடைநிலை மொழிப் பரீட்சைக்குக்கூட மிதப்படுத்துதல் பற்றிப் பல தொல்லைகள் உள்ளன.

16. ஒன்றுக்கு மேற்பட்ட இடைநிலை மொழிகள் வருமேயானால் விடைத் தாள்களைத் திருத்தி மதிப்பிடும் வேலை மிகவும் சிக்கலாகிவிடுகிறது என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனால் இது முடியவே முடியாது என்று சொல்வது பொருத்த மில்லாத ஒன்று. இவ்விஷயத்தில் ராதாகிருஷ்ணன் கழக அறிக்கையையும் சற்றுக் காணவேண்டும். இரட்டை மொழியைப்பற்றி ஆராய எடுத்துக்கொண்ட அந்த அறிக்கை (பக்கம் 322, பாரா 49) :—

> "இந்தியப் பொதுப்பணிகளுக்கு அதிகாரிகளைத் தேர்வு செய்யும் பொதுப் பணிக்கழகம் பல்வேறு மொழிப் பிராந்தியங்களிலிருந்து வருகின்றவர்கட்கும் ஒரேமாதிரியான சந்தர்ப்பம் அளிக்கும் முறையில் பரிட்சைகளை ஏற்படுத்துவது என்பது இக்கழகத்தின் சாமர்த்தியத்துக்கு அப்பால்பட்ட தன்று."

அதாவது இந்தப் பிரச்னையை நடைமுறையில் தீர்த்துவைக்க முடியும் என்பதேயாகும்.

17. ஆ. மொ. க. வின் கேள்வித்தாளிலுள்ள 5, 6 வினாக்களுக்கு வங்காள அரசாங்கம் கீழ்க்கண்ட விடையை அளித்துள்ளது:—

"யூனியனிலுள்ள எல்லாப் பெரிய மொழிகளையும் பொதுப்பணிப் பரிட்சைகளுக்கு இடைநிலை மொழிகளாக வைப்பது தேவை, விரும்பத் தகுந்தது, கூடியதுமாகும்" மேலும் அந்த விடைகளை மிதப்படுத்துதல் பற்றிக் கூறுவதாவது.

"ஒரு பொதுப் பணிக் கழகம் தான் நடத்தும் பரீட்சைகளுக்கு ஒரு தரத்தை வகுப்பதும் விடைத்தாள்களைப் பொறுத்த மட்டில் ஒரு தரத்தை வகுத்து அதனை விடாமல் விடைத்தாள் திருத்துவோர் மேற்கொள்ள வேண்டும் என்று கட்டுப்பாடு செய்வதும் இயலாத தல்ல."

மொழிகளைக் கற்பிக்கும் பல்கலைக் கழகங்களில் இம்முறை வெற்றியுடன் நடைபெற்று வருகிறது. எந்த ஒரு மொழியிலாவது பல மாணவர்கள் முதல் வகுப்பில் வெற்றி பெறுவதும், மற்றொரு மொழியில் பல வருஷங்களுக்குச் சிறப்பு வெற்றியே இல்லாமற் போதலும் அடிக்கடி நடைபெறுவதில்லை. விடைத்தாள் திருத்துவோருடைய எண்ணத்தைப் பற்றிக் கவலைப்படாமலே பொதுப் பணிக் கழகம் மிதப்படுத்தும் குழு ஒன்றை நியமித்து, அக்குழுவில் ஒவ்வொரு மொழிக்கும் பிரதிநிதியாக ஒருவரை நியமிக்கலாம். அக்குழுவில் வினாத்தாள்களைத் திருத்தும் முறையே நன்கு ஆராய்ந்து ஓர் ஒருமுகப்பட்ட திருத்தும் முறையை மேற்கொண்டு அதற்கேற்றபடி அம்சங்களை மாற்றிக்கொள்ளலாம்.

18. யூனியன் பொதுப் பணிக் கழகம் இது பற்றி ஆழ்ந்து சிந்திக்குமேயானால் மிதப்படுத்தும் இந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவை அது காண முடியும் என்று நான் நம்புகிறேன். ஆ.மொ.க. விற்கு அது, கொடுத்த விடையில் அளவு மீறிய பரீட்சகர்களை வைத்துக்கொள்வது ஒரு தொல்லைதான் என்று அது குறிப்பிட்டிருந்தது. இதற்கேற்ற பொருத்தமான முறையை மேற்கொண்டு இத்தொல்லையைப் போக்கிக்கொள்வது என்பது இயலாத தன்று.

19. மேலும் பல இடைநிலை மொழிகளையுடைய பரிட்சைகள் நம் நாட்டைப் பொறுத்தமட்டில் புதியவையல்ல. உதாரணமாகப் பம்பாய் ராஜ்யம் நடத்தும் எஸ்.எஸ்.சி.இ. பரீட்சையில் ஏறத்தாழ 7 இடைநிலை மொழிகள் உள்ளன. எனவே இடைநிலை மொழிகள் விஷயத்தில் ஒரு முடிவைக் காண்பது அவ்வளவு கடினமானதன்று என்று வலியுறுத்த விரும்புகி

றேன். இவ்வாறு நம்பியே இவ்விஷயத்தில் ஆ. மொ. க. விற்கு ஒரு தனி அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன். இது பற்றிய முக்கியமான ஆவணங்களில் ஒன்றாகலின் அதனை அப்படியே கீழே தருகின்றேன். இந்தப் பகுதியின் முடிவாக அது அமைந்துள்ளது.

(ஊ)

20. மேலே கண்ட தொல்லையைப் போக்குவதற்குப் பங்குமுறை சிறந்த வழியாகும் என்று ஆலோசனைக் கூறப்பட்டது. அதாவது பிராந்திய முறையில் ஒவ்வொரு மொழிக்கும் இவ்வளவு இடம் என்று ஒதுக்குவதாகும். இந்திய அரசியல் அமைப்பு (விதி 16/4) பிற்பட்ட சமூகங்களுக்கு மட்டும் இடம் ஒதுக்குவது பற்றிச் சிந்திக்கிறது. எனவே மொழிவாரி அடிப்படையில் இடம் ஒதுக்குவது அரசியல் அமைப்பின்படி சரியானதா என்பது ஆராய்ச்சிக்குரியது. ஆ. மொ. க. அறிக்கை இந்தப் பங்குமுறையை ஒதுக்கிவிட்டது பற்றி மகிழ்ச்சியடைகின்றேன். இதனை ஒதுக்குவதற்குரிய காரணத்தை ஒரே பாராவில் சொல்லிவிட்டு அதோடு அந்த அறிக்கை நின்றிருக்கலாம். அதுவும் போகிற போக்கில் நான் குறிக்க விரும்பிய ஒன்றாகும்.

21. இதனோடு நான் தர விரும்பிய தனிப்பட்ட அறிக்கைப்பற்றிய விவாதத்தை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இறுதியில் ஹிந்தி இயக்கம் பற்றிய ஒரு பகுதியைச்சேர்க்க விரும்புகிறேன். ஏனென்றால் என்னுடைய விவாதத்துக்கும் நாட்டிலுள்ள மொழிப் பிரச்னைக்கும் அது ஒரு நல்ல அடிப்படையாக இருத்தலின் அது பற்றிப் பேசவேண்டும். ஆ. மொ. க. அறிக்கை இது பற்றிப் பேசவேயில்லை. எனவே ஆவண விஷயங்களுக்காவது நான் இதனைக் கூறுவது தேவைப்படலாம். ஆ.மொ.க. வின் முன்னர் இதனை வைத்தேன். இப்பொழுது என்னுடைய அறிக்கையை முடிக்கும் முகமாகச் சில சிறு திருத்தங்களுடன் இங்கே புதிய ஒரு பகுதியாக இதனைச் சேர்த்துள்ளேன்.

சேர்க்கை

பல இடைநிலை மொழிப் பரிட்சையில் மிதப்படுத்துதல் பற்றிய ஒரு குறிப்பு.

1. யு.பி.எஸ்.சி. யின் சார்பில் ஒரு புகுமுகப் போட்டிப் பரீட்சை நடத்தலாம். இது மொழிவாரியாக அமைக்கப்படலாம். இப்பரிட்சைகளுக்கெல்லாம் ஏற்ற முறையில் தகுந்த பாடத்திட்டத்தை அமைத்துக்கொள்ளலாம்.

2. இப்புகுமுகப் பரிட்சையின் பயன் என்னவென்றால் ஒவ்வொரு மொழி மாணவர்கள் கூட்டத்திலிருந்தும் கடைசித் தேர்வு எழுதுவதற்குரிய சிறந்த தகுதியுடையவர்களைப் பொருக்கி எடுத்துக்கொள்ள முடியும். அளவு மிஞ்சிய மாணவர்களை இறுதிப் பரிட்சைக்கு வைத்துக்கொள்ளாமல் வசதிப்படுகின்ற அளவில் இந்த எண்ணிக்கையைக் குறைப்பதற்கே முதல் பரீட்சை பயன்படும்.

3. இப்பரீட்சையில் ஓர் அளவுக்கு மேற்பட்ட அம்சங்களைப் பெறுவோர்களையே அதாவது 65 சதவிகிதம் அம்சங்களுக்கு மேல் பெறுவோர்களையே இறுதிப் பரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளலாம்.[1]

4. இப்பரீட்சை ஒவ்வொரு இடைநிலை மொழியிலும் குறைந்த அளவு மாணவர்களைத் தரும் ஆதலால் இறுதிப் பரீட்சையில் அவர்களுடைய வேலைத் தரத்தை நன்கு கவனித்து முடிவு செய்ய ஏதுவாகும்.

5. பரீட்சகர்கள் மூன்று மொழி இல்லாவிட்டாலும் நிச்சயமாக இரு மொழி கற்றவர்களாக இருந்தே தீரவேண்டும். அவருள் அனைவருக்கும் பொதுவாக ஆங்கில மொழி இருந்து தீரும்.

[1] ஒவ்வொரு மொழிக் கூட்டத்திலிருந்தும் எவ்வளவு பேர் இதற்கு வரலாம் என்று கேட்கப்படலாம். ஒவ்வொரு மொழியிலிருந்தும் சம எண்ணிக்கை யுள்ளவர்களே வரவேண்டும்

6. ஆங்கிலத்தில் எழுதப்படும் விடைத்தாள்கள் ஓரளவு நல்ல முறையில் இன்று மிதப்படுத்துதல் செய்யப்பெற்று வருகிறது. இதே முறையைப் பின்பற்றி ஏனைய மொழிகளுக்கும் ஒருவழியை மேற்கொள்ளலாம். ஒவ்வொரு பிராந்திய மொழிப் பரிட்சகரும் நன்கு திருத்தி மிதப்படுத்தப்பட்ட ஓர் ஆங்கில விடைத்தாளை வைத்துக்கொண்டு பிராந்திய மொழி விடைத்தாளைத் திருத்தலாம். எல்லாப் பிராந்தியமொழி விடைத்தாள்களையும் திருத்தி ஒரு பொதுவான தரத்தை உண்டாக்குவதற்கு இம்முறை பெரிதும் பயன்படும்.

7. ஒவ்வொரு பிராந்திய மொழி விடைத்தாளும் இருவரால் திருத்தப்பட வேண்டும். ஒருவர் அந்த மொழி பேசும் அந்தப் பிராந்தியத்தாராகவும் மற்றவர் அந்த மொழியை அறிந்த ஆனால் பிற பிராந்தியத்தாராகவும் இருத்தல் வேண்டும். ஒழுங்கான முறையில் மிதப்படுத்த இது தேவை. வேண்டுமானால் அந்த விஷயத்தை மிதப்படுத்தும் முறையில் மூன்றாவது ஒரு பரீட்சகரும் அதனைத் திருத்தலாம்.

8. இவ்வகையில் பரீட்சை எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக இராதாகலின் நடுவுநிலைமையோடு திருத்தம் செய்வதற்கு மேலே கூறிய முறையில் அதிகத் தொல்லை இல்லாமல் மேற்கொள்ளலாம். மேலும் தேவைப்பட்ட கட்டுப்பாடுகளையும் மேற்கொள்ள விரும்பினால் அதிக சிரமமின்றி ஏற்றுக்கொள்ளலாம்.

9. மேலே குறிக்கப்பட்டுள்ள திருத்தும் முறையும் மிதப்படுத்தும் முறையும் பல மொழி அடிப்படையில் நிகழ்பவையல்ல. இரு மொழி, தவறினால் மும்மொழி அடிப்படையிலேயே, இது நிகழும். எல்லாப் பல்கலைக் கழகப் பரீட்சைகளிலும் கூட இனி வருங்காலத்தில் பிராந்திய மொழி, ஆங்கிலம், யூனியன் மொழி ஆகிய மூன்றும் இருக்குமாதலின் இம்மும்மொழி முறை புதுமையானதன்று. அகில இந்தியப் பரிட்சைகளை நடத்தும் யூனியன் பொதுப் பணிக் கழகம் எல்லாப் பிராந்தியங்களிலும் ஒரே நேரத்தில் இதனை நடத்தும். அந்த அந்தப் பிராந்திய மொழிகள்தாம் மாறுபடுமே தவிர வேறில்லை. 12 அல்லது 13 பல்கலைக் கழகங்கள் தொழிற்படுவதற்குப் பதிலாக ஒரே ஓர் அமைப்பு இந்த வேலையை மேற்கொள்ளும்.

10. ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ளவர்களின் பொதுப் பணிக் கழக நுழைவுக்குரிய உரிமைகளும், தேவைகளும் பாதுகாக்கப்பட்ட வேண்டும்" என்றால்,—உயர்தரக் கல்வி முறைக்கு பிராந்திய மொழிகளை இடைநிலை மொழிகளாக வைத்து அவற்றை வளர்க்கவேண்டும் என்றால்—இவை இரண்டையும் நாம் செய்து தீரவேண்டும் என்பதில் சந்தேகமில்லை. மேலே கூறிய முறையில் ஒரு மிதப்படுத்தும் முறையை அல்லது இதுபோன்ற ஒரு முறையை மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. அரசியல் அமைப்பு விதி 16-ல் சொல்லப்பட்டபடி ஊழியங்களுக்கு நுழையக்கூடிய சந்தர்ப்பம் அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்றால் இத்தகைய ஒரு முறையை மேற்கொண்டாலொழிய வேறு வழியில்லை.

11. இந்தக் குறிப்பின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் பல இடைநிலை மொழிப் பரிட்சை என்பது முடியாத காரியமன்று என்பதையும் அதில் மிதப்படுத்துதல் இயலாத ஒன்று அன்று என்பதையும் தெரிவிப்பதேயாகும். இன்றைய சூழ்நிலையில், தேச நிலையில் இதனை எவ்வாறாவது வளர்க்க முயலவேண்டும்.

பகுதி 6

ஹிந்தியைப் பரப்பும் அமைப்பு—அதனுடைய அடிப்படையைப் பற்றிய ஆராய்ச்சி.

1. விடுதலை பெற்ற இந்தியாவில் அரசியல் அமைப்பு வகுத்துள்ள மொழியின் வடிவம் ஓர் உயிருள்ள அடிப்படையோடு கூடியது. அந்த அடிப்படை நம்முடைய மக்கள் தமக்குள் முயன்று ஒரு பொதுத் தேசிய மொழியைத் தங்களுக்குள் தந்துகொள்ளவேண்டும் என்று நினைப்பதேயாகும். இந்த முயற்சிகள் இதுவரையில் ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலமாக நடைபெற்று வருகின்றன. என்றாலும் இதனுடைய வரலாற்றை இன்னும் நன்கு எழுதவில்லை. இந்தியாவின் அரசியலமைப்பின்படி ஏற்பட்டுள்ள இந்த மொழி வடிவை நன்கு புரிந்து கொள்ளவேண்டுமேயானால் நம்முடைய தேசிய முயற்சியின் பயனாக உள்ள இதனைப்பற்றிப் பெரும் போக்காகவேனும் அறிந்திருக்கவேண்டும். இதனை நன்கு புரிந்து கொண்டால்தான் நான் முன்னே கூறியபடி விடுதலை பெற்ற ஐந்தாண்டுகளில் அதாவது 1950 முதல் 1955 வரை அரசியலமைப்பின்படி ஹிந்திக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்பினோமோ, என்ன செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டதோ அதனைச் செய்ய முடியாமல் போனமைக்குரிய காரணங்களை நாம் அறிந்து கொள்ளமுடியும்.

(அ)

2. இந்தியாவில் ஹிந்தியைப் பரப்பும் இந்த அமைப்பின் வரலாற்றை எழுதவேண்டுமேயானால் நம்முடைய தேசிய வாழ்க்கையில் மகாத்மா காந்தி இத்துறையில் செய்த முயற்சிகளின் வரலாற்றைச் சொல்வதாகவே முடியும். என்றாலும் இந்திய அரசியல் உலகில் அவர் தோன்றிய 1915-க்கு முன்னரே மேற்கு, கிழக்கு இந்தியாவில் வட இந்தியாவில் பேசப்படும் ஒரு மொழிதான் நம்முடைய பொது மொழியாக இருக்கக்கூடிய தகுதியைப் பெற்றது என்று சொல்லிக்கொண்டிருந்த சிலர் உண்டு. என்றாலும் 1909-ம் ஆண்டு வாக்கில் தம்முடைய "ஹிந்த் சுவராஜ்ஜில்" பகுதி 18-ல் கீழ்க்கண்ட முறையில் மகாத்மாஜீதான் இந்தக் கொள்கையை விரித்துரைத்தார்.

"கேள்வி : அவ்வாறானால் எத்தகைய கல்வியை நாம் வழங்க வேண்டும் ?

ஆசிரியர் : இது பற்றி முன்னரே ஆராய்ந்துள்ளோம் என்றாலும், இன்னும் சற்று அதிகமாக இங்கே ஆராய்வோம். நம்முடைய மொழிகள் அனைத்தையுமே மேலும் வளர்க்கவேண்டு மென்று நான் கருதுகிறேன். இவற்றின் மூலம் என்ன என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பது பற்றி இங்கே விரித்துப் பேசவேண்டிய அவசியமில்லை. மிகவும் பயனுடைய ஆங்கிலப் புத்தகங்களைப் பல்வேறு இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்துக்கொள்வோம். பல்வேறு விஞ்ஞானங்களையும் கற்றுக்கொள்வதாக நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதை விட்டுவிடுவோம். சமய சம்பந்தமான, அதாவது ஒழுக்க சம்பந்தமான கல்விதான் முதல் இடத்தைப் பெறும். பண்பாடு உடைய ஒவ்வொரு இந்தியனும் தன்னுடைய மாகாண மொழிக்கு அடுத்தபடியாக ஒரு ஹிந்துவானால் வட மொழியையும் ; முகமதியனானால் அராபிய மொழியையும் ; பார்சியானால் பர்சிய மொழியையும் ; கற்பதோடுகூட அனைவரும் ஹிந்தியைக் கற்கவேண்டும். சில ஹிந்துக்கள் அராபிக், பர்சியன் ஆகிய இரண்டையும் கற்பதோடு சில முகமதியர்களும், பார்சிகளும்

வட மொழியைக் கற்கவேண்டும். பல வடவர்களும், மேற்கத்தியார்களும் தமிழ் மொழியைக் கற்கவேண்டும். அகில இந்தியாவுக்கும் பொது மொழியாக ஹிந்தி மொழி இருத்தல் வேண்டும். அதனைப் பர்சிய அல்லது நாகரி எழுத்துக்களில் எதில் வேண்டுமாயினும் எழுதலாம். ஹிந்துக்களும் முகமதியர்களும் நெருங்கிய ஒற்றுமை கொள்வதற்காக இந்த இரண்டு வகை வரிவடிவத்தையும் மேற்கொள்ளலாம். இதனை நாம் செய்யக்கூடுமேயானால் ஆங்கில மொழியை மிகக் குறுகிய காலத்தில் அதனிடத்திலிருந்து விரட்டிவிடலாம். அடிமைகளாக உள்ள நமக்கு இவை அனைத்தும் தேவை. நம்முடைய அடிமைத்தனத்தின் காரணமாக நம்முடைய இனமே அடிமைப் பட்டுள்ளதாதலின் நம்முடைய விடுதலையோடு சேர்ந்து இனமும் விடுதலை அடையவேண்டும்"

3. அவ்வளவு பழைய நாளிலேயே இந்தியாவின் மொழிப் பிரச்னையைத் தீர்க்க ஆங்கிலத்தை இந்திய மொழிகளின் மூலமாகப் போக்கி, வட நாட்டில் மிகுதியும் பேசப்படுகின்ற ஹிந்தி மொழியின் அடிப்படை வடிவின் பேரில் ஒரு தேசியப் பொது மொழியைக் கட்டவேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்ததை நன்கு கவனிக்கவேண்டும். டாக்டர் எம். எஸ். பாடில் தாம் கலைஞர் பட்டம் பெறுவதற்குரிய கட்டுரையில் அதாவது "மகாத்மா காந்தியின் கல்வித் தத்துவம்" என்ற நூலில் கீழ்க் கண்டவாறு சுருக்கிக் கூறியுள்ள பகுதியை எடுத்துத் தருகிறேம் :—

"இருபதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் கற்றறிந்த இந்தியர்கள் அனைவரும் இந்தியாவின் ஆட்சி மொழியாக மட்டும் அல்லாமல் கல்வித் துறையின் எல்லாப் பகுதிகளிலும் போதனு மொழியாகவும் ஆங்கிலமே வந்துவிட்டதென்றும், அதுவே நிலைத்து நிற்கப்போகிறதென்றும் நம்பிவிட்டார்கள். தங்களுடைய வெளிநாட்டு எஜமானர்களின் நடை, உடை பாவனைகளைக் காப்பி அடிப்பது மிகவும் கௌரவம் என்று கருதப்பட்டதோடு ஆங்கில மொழியை நன்கு பேசத் தெரியாதவர் அவருடைய சகோதரர்களாலேயே கௌரவக் குறைவாகக் கருதப்பட்டார். தனிப்பட்ட மனிதர்களை அல்லாமல் தேசத்தின் கற்றறிந்த இனம் முழுவதுமே இரட்டை மனப்பான்மையுடன் அதாவது "பாபு மனப்பான்மை" உடன் வளர்ந்து வந்தனர். பிற நாட்டு மொழி யொன்று இன்னூட்டு மக்களினுடைய வாழ்வில் தலையான இடம் பெறுவதனால் ஏற்படக்கூடிய பெருந்தீங்கையும், அதனுல் விளையும் பயன்களையும் காந்திஜீ போன்ற மிகச் சில இந்தியர்கள் முன்கூட்டியே கண்டனர். எனவே பழைய காலமாகிய 1909-கூட இந்திய மொழிகள் ஒதுக்கப்படுவதையும், ஆங்கிலம் அளவுமீறி போற்றப்படுவதையும் கண்டித்து காந்திஜி தம்முடைய மறுப்பில் தெரிவித்தார். காந்திஜியும் அவர் போன்ற ஒரு சிலரும் உருட்டிவிட்ட இப்பந்து நாற்பது ஆண்டுகளுக்கு உருண்டுகொண்டே சென்று 1949-ல் இந்திய அரசியல் அமைப்பினுல் ஒருவாறு ஓய்வைப் பெற்றது. இதனிடைக்காலத்தில் மொழிப் பண்டிதர்களினிடையே ஒரு பெரும் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தின் ஆழம் ஜாதி வெறியாலும், அதனை விசிறிய வெளிநாட்டு ஆட்சியாளர்களாலும் மிகவும் வலுப்பெற்றது." (பக்கம் 221-222.)

(ஆ)

4. இந்தியாவிலுள்ள ஹிந்தி அமைப்பைப் பற்றி, முதன் முதலாக, காந்திஜி, குஜராத் கல்வி மாநாட்டில் 1917-ம் ஆண்டு தம்முடைய முடிவுகளைப் பேசினூர். ஆங்கிலத்தை உதறிவிட்டு இந்தியாவின் ஆந்தர் பாஷாவாக இந்தியாவுள்ள பல்வேறு மொழிகளிலும் ஹிந்தியை மட்டும் எடுக்கவேண்டிய காரணத்தை அவர் விளக்கிக் கூறினூர்.

" ஒரு தேசிய மொழியின் இலக்கணம் என்ன ?

(1) ஆட்சியாளர்களுக்கு எளிதாகக் கற்றுக்கொள்ளக்கூடியதாக அது இருக்கவேண்டும்.

(2) இந்தியா முழுவதிலும், சமய, வாணிக, அரசியல் நிகழ்ச்சிகள் அனைத்தும் அதன் மூலம் செய்யப்பட வாய்ப்பளிக்கவேண்டும்.

(3) இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மக்களால் பேசப் படும் மொழியாக அது இருக்கவேண்டும்.

(4) நாடு முழுவதிலும் உள்ளவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ளக் கூடியதாக அது அமையவேண்டும்.

(5) இந்தப் பிரச்னையை ஆராயும்பொழுது அந்த நேரத்திலும், குறுகிய காலத்திலும் இருக்கக்கூடிய சூழ்நிலைகளைப் பெரிதென மதிக்கக்கூடாது.

மேலே சொன்ன எந்த ஒரு கட்டுப்பாட்டையும் ஆங்கில மொழி நிறை வேற்றவில்லை என்பதைக் காந்திஜி எடுத்துக்காட்டினார். அவரு டைய கருத்துப்படி " இந்த ஐந்து கட்டுப்பாடுகளையும் நிறைவேற்றக் கூடிய மொழி ஹிந்தியைத் தவிர வேறில்லை." முகமதிய ஆட்சி யாளர்களின் கீழ்க்கூட ஹிந்தி நம்முடைய தேசிய மொழியாக இருந்து வந்தது. அவர்கள்கூட பர்ஷிய மொழியையோ, அராபிய மொழியையோ தேசிய மொழியாக ஆக்க முடியவில்லை.

5. அடுத்த ஆண்டு அதாவது 1918-ல் இந்தோரில் கூடிய ஹிந்தி சாகித்ய சம்மேளனத்தில் சுருக்கமாக (ஹெச். எஸ். எஸ்.) அவர் தலைமை வகித்தார். அலஹாபாத்தில் கூடிய இக்கூட்டத்தில் இந்த ஹெச்.எஸ்.எஸ். ஸ்தாபனம் ஹிந்தியைப் " பரப்புவதில் " அதிகக் கவனம் எடுக்கவேண்டும் என்று உபதேசித்தார். அந்த நேரத்தில் தோன்றிய இந்தக் கிளர்ச்சியின் முதற் பகுதி 1935-ல் முடிந்து, இரண்டாம் பகுதி தொடங்கியது. இம்முதல் பகுதியில் நடைபெற்ற கிளர்ச்சி ஹிந்தி மொழி நமக்கு எவ்வாறு இருக்கு மென்றும், என்ன செய்ய முடியும் என்றும் ஒருவாறு அறிவித்தது. இந்த அமைப்பிற்குத் தலைமை வகித்த காரணத்தால் காந்திஜி நமக்கு ஹிந்தி எதுவாக இருக்கவேண்டும், என்ன செய்யவேண்டும் என்பவற்றை நன்கு விளக்கினார், அவர் தந்த இலக்கணம் பின் வருமாறு :—

" ஹிந்தி மொழி என்பது வடநாட்டில் ஹிந்துக்களும், முஸ்லீம்களும் பேசுகின்ற மொழி என்றும், அது நாகரி அல்லது பர்ஷிய எழுத்துக் களில் எழுதப்படும் என்றும் நான் பல முறை கூறியுள்ளேன். இந்த ஹிந்தி அதிகமான வட மொழித் தொடர்போ பர்ஷிய மொழித் தொடர்போ பெற்ற தன்று. கிராமங்களில் நான் கேட் கும் ஹிந்தியின் இனிமை லக்னோவில் வாழும் முஸ்லிம்கள் பேசும் ஹிந்தியிலோ, பிரயாகையிலுள்ள ஹிந்திப் பண்டிதர்களின் பேச்சுக்களிலோ காணப்படவில்லை. மக்கள் கூட்டத்தால் நன்கு புரிந்துகொள்ளப்படக்கூடிய ஒரு மொழியே சிறந்தது எனப்படும். கிராம ஹிந்தியை அனைவரும் எளிதாகப் புரிந்துகொள்ளலாம். மொழி என்ற ஆற்றின் தொடக்கம் மக்கள் என்ற இமயத்தில் தொடங்குகிறது. எக்காலத்தும் அது அங்ஙனமே இருக்கும். இம யத்தில் தொடங்குகின்ற கங்கை என்றுமே ஓடிக்கொண்டிருக்கும். கிராமத்தில் வழங்குகின்ற ஹிந்தியும் என்றுமே ஓடிக்கொண்டி ருக்க, வட மொழியாலும் பர்ஷிய மொழியாலும் ஆக்கப்பட்ட ஹிந்தி நாளாவட்டத்தில் சிறு குன்றிலிருந்து புறப்படும் நீரோடை யைப் போல விரைவில் காய்ந்துவிடும்.

" ஹிந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையே செய்யப்படுகின்ற வேறுபாடு ஆதாரமற்றது. இதேபோன்ற பொய்மையான வேறு பாடுதான் ஹிந்திக்கும், உருதுவுக்கும் இடையே பேசப்படுகிறது.

ஹிந்துக்கள் பார்ஸியச் சொற்களை உதறுவதும், முஸ்லீம்கள் வட மொழி சொற்களை அவர்களுடைய பேச்சிலிருந்து நீக்குவதும் தேவையில்லை. இவை இரண்டு மொழிகளும் கங்கையையும், யமுனையும் போல ஒன்று சேர்வது மிக்க அழகுடன் என்றும் நிலைத்திருப்பதற்குக் காரணமாகும். ஹிந்தி உருது போராட்டத் தில் நுழைந்து நம்முடைய சக்தியை வீணடிக்க நான் விரும்ப வில்லை. வரி வடிவ எழுத்துக்களைப் பொறுத்தமட்டில் ஓரளவு தொல்லை இருப்பது உண்மைதான். இன்றுள்ள நிலைமையில் முஸ்லீம்கள் அராபிய எழுத்துக்களையும், ஹிந்துக்கள் நாகரி எழுத்துக்களையுமே ஏற்றுக்கொள்வார்கள். எனவே இரண்டு வகை எழுத்துக்களும் அவற்றிற்குரிய. மதிப்பைப் பெறவேண்டும். அதிகாரிகள் இரண்டு எழுத்துக்களையுமே நன்கு அறியவேண்டும். இதில் ஒன்றும்தொல்லை யில்லை. கடைசியாக இதில் எளிமையான எழுத்து எதுவோ அது நிலைத்துவிடும். இந்தியாவின் பல்வேறு பாகங்களினிடையே ஒருவருக்கொருவர் பழகுவதற்கு ஒரு பொது மொழி தேவை என்பதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை."

ஹிந்தி சாகித்திய சம்மேளனத்தால் அப்பொழுது இது ஒப்புக் கொள்ளப்பட்டது.

6. ஹிந்தி என்ற சொல்லின் இலக்கணம் யாது என்பது பற்றி இன்று வரையும் கருத்து வேறுபாடு இருந்துவருதலினால் அது பற்றிக் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும். 1945-ல் மகாத்மா காந்தி ஹிந்துஸ்தானி பற்றித் தாம் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்துப் போடும் ஒரு நூலின் முகவுரையாகக் கீழ் கண்டவாறு ஹிந்தியில் எழுதினார்:

1917-ம் ஆண்டில் நான் எனது முதலாவது சொற்பொழிவை நிகழ்த்தி னேன். அன்றிலிருந்து அவ்வப்போது நான் வெளியிட்டு வந்த கருத்துக் களே இன்னும் நிலைத்திருக்கின்றன. அக்கருத்துக்கள் இன்று இன்னும் உறுதியடைந்து அதிகத் தெளிவான உருவத்தைப் பெற்றுள்ளன என்பது தான் வித்தியாசம். ஹிந்தி, உருது இரண்டையும் ஒன்றாகவே பாவித்து வந்துள்ளேன். ஹிந்துஸ்தானி என்ற சொல்லையும் தாராளமாக உபயோகித்து வந்திருக்கிறேன். 1918-ம் ஆண்டு இந்தோரில் நடந்த ஹிந்தி ஸாஹித்திய ஸம்மேளனத்தில் என்ன கூறினேனோ அதையேதான் இன்னும் கூறுகிறேன். ஹிந்துஸ்தானி என்றால் உருது என்பது கருத்தல்ல; ஹிந்தி, உருது இரண்டின் அழகிய சேர்க்கையையே நான் குறிப்பிடுகிறேன். வட இந்திய மக்கள் புரிந்துகொள்ளக் கூடியதும், நாகரி, உருது இரண்டு (லிபிகளிலும்) எழுத்துக்களிலும் எழுதக் கூடியதுமான மொழி இதுவே தான். இதுவே முழு உருவம் பெற்ற தேசீய மொழியாகும்; மற்றதெல்ல லாம் அறைகுறை யானதுதான். தேசீய மொழியைப் பூர்த்தியாகக் கற்க விரும்புபவர்கள் இரண்டு (லிபிகளையும்) எழுத்துக்களையும் கற்கவேண்டும்[1] இரண்டு வடிவங்களையும் அறிந்துகொள்ளவேண்டும். நாட்டுப் பற்றின் கோரிக்கை இது. இதையறிந்தவர் பயன் பெறுவர்; அறியாதார் நஷ்டமடைவர்.

(இ)

7. இன்றைய உலகம் காந்திஜியை மிக நுண்மையான அறிவும், கூர்த்த மதியும் உடைய ஒரு பிரசாரகர் என்பதை நன்கு அறிந்துள்ள

[1] 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 25-ந் தேதியில் வெளியான ஹந்தி ஹரிஜன பத்திரிகையில் அவர் தெளிவாக எடுத்துரைத்திருப்பது வருமாறு:—"நாகரி, உருது இரண்டு (லிபிகளுக்குள்) எழுத்துக்களுக்குள் கடைசியில் வெற்றி நாகரி லிபிக்கே கிடைக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதே விதமாக, லிபியைப்பற்றிய எண்ணத்தை விட்டுவிட்டு மொழியை மட்டும் கருத்தில் கொண்டால், வெற்றி ஹிந்துஸ்தானிக்குத்தான்."

தாதலின் அவர் இந்தியாவின் பொது மொழியாக ஹிந்தி மொழி வர வேண்டுமேயானுல் நம்முடைய நாட்டிலுள்ள நான்குதிராவிட மொழி களைப் பேசுகின்ற இனத்தார்களால் ஹிந்தி மொழி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதை அன்றே கண்டு பிடித்தார். இவர்கள் இப்புது மொழியைக் கற்றுக் கொள்ள ஒப்புக்கொண்டால்தான் ஹிந்தியின் கட்சி வெற்றி யடையும். எனவே இங்கேதான் செயல் தொடக்கம் ஏற்பட வேண்டும். ஆதலால் 1918-லேயே தக்ஷண பாரத ஹிந்தி பிரசார் சபா என்ற அமைப்பு, ஹிந்தியைப் பொதுத் தேசீய மொழியாகப் பரப்புவதற்கு இந்த நான்கு பிராந்திய மொழிப் பகுதிகளிலும் சென்னையைத் தலை நகராகக் கொண்டு தொடங்கியது.

8. 1919–20-ல் அவர் **நவஜீவனத்தையும்**, ஆமதாபாத்தில் குஜராத் வித்யாபீடத்தையும் தோற்றுவித்தார். தேசீயக் கல்வி பற்றிப் பிரசாரம் செய்வதோடு தேசீய மொழியைப் பரப்புவதையும் இவ்விரண்டு அமைப் புக்களும் தம் கருத்தாகக் கொண்டிருந்தன. குஜராத் வித்தியா பீடத்தின் அமைப்பு முறையில் கீழ்க்கண்ட இரண்டு கொள்கைகளும் தேசீயக் கல்வி வளர்ச்சிக்குரிய கொள்கைகளாக வரையப் பெற்றிருந்தன.

"1. வித்யா பீடத்தின் பாடத் திட்டத்தில் தேசீய மொழியாகிய ஹிந்தி-ஹிந்துஸ்தானியைப் போதிப்பது கட்டாயமாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—ஹிந்தி-ஹிந்துஸ்தானி என்பது வட இந்தியாவிலுள்ள ஹிந்துக்களும், முஸ்லீம்களும் பொதுவாகப் பேசுவதும், நாகரி அல்லது பர்ஷிய எழுத்துக்களில் எழுதப்படுவதும் ஆகிய மொழி.

2. அந்தந்த மாகாணத்தின் சுவ பாஷாக்கள் வித்யா பீடத்தின் முக்கிய இடத்தைப் பெற்று எல்லாப் பாடங்களுக்கும் போதன மொழியாக இருந்து வரும்."

(ஈ)

9. சில வட்டாரங்களில், இன்றுகூட, மகாத்மாக காந்தி உயர்தரக் கல்விக்கு ஹிந்தியைப் போதன மொழியாக ஆக்க விரும்பினரா? என்பதை ஐயப்படுகிறவர்கள் உண்டு. மேலே கூறிய கருத்துக்கள் தேசீயக் கல்விக் கிளர்ச்சிக்காக அவர் கூறியவை. அதன் மூலம் போதன மொழி யாக ஸ்வபாஷாகள் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பியதையும், பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஹிந்தி-ஹிந்துஸ்தானி கட்டாய பாட மாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினர் என்பதையும் அறிய முடிகிறது.

10. இதுபற்றிய அவருடைய சொற்களை மேலும் மேற்கோள் காட்ட வேண்டும் என்ருல் டில்லியில் 1948-ம் ஞூ ஜனவரிமீ 25ல பிரார்த் தனைக் கூட்டத்தில் அவர் பேசிய விபரம் வருமாறு :—

"மாகாண மொழிகள் முற்றிலும் வளர்ந்து பயனடைய வேண்டு மாயின் மாகாணங்களை மொழிவாரியாகப் பிரிப்பது அவசியம் ஆகிறது. ஹிந்துஸ்தானி இந்தியாவின் தேசீய மொழியாக, ராஷ்டிர பாஷாவாக இருக்க வேண்டும் என்ருலும் அது மாகாண மொழிகளின் இடத்தை எடுத்துக்கொள்ள முடியாது. **மாகாணங் களில் அது போதனமொழியாக ஒரு நாளும் இருக்க முடியாது.** ஆங்கிலமும் அவ்வாறே. அதனுடைய கடமை என்னவென்ருல் இந்தியாவிலுள்ள அடிப்படை ஒற்றுமையை எடுத்துக்காட்டப் பயன் பட வேண்டும். வெளி யுலகம் அவர்களைப்பற்றிப் பேசும்பொழுது குஜராத்தி என்ரே மராத்தி என்ரே தமிழர் என்ரே பேசாமல் இந்தியர்களென்றே பேசுகிறது. எனவே இந்த ஒற்றுமையைக்

குலைக்கும் மனோ நிலைகளை யெல்லாம் கட்டுப்பாடாக விரட்டிவிட்டு இந்தியர்கள் என்ற முறையில் உறுதியோடு நடந்துகொள்ள வேண்டும். இந்த முக்கியமான கொள்கையை மறந்துவிடாமல் மொழிவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிக்கும் வேலை, கல்வித் துறையிலும் வாணிகத் துறையிலும் நடைபெற வேண்டும்" (டில்லி நாட்குறிப்பு பக்கம் 379—1948-ம் ஞ ஜனவரி மீ 25.)

11. டாக்டர் எம். எஸ். படேல் தாம் எழுதிய நூலில் இவ்விஷயத்தில் காந்திஜியின் கொள்கை என்னவென்று ஆராய்ந்து அதுபற்றிக் கீழ்ப் கண்டவாறு எழுதுகிறார் :—

"எப்பாடு பட்டாயினும் போதனா மொழியை உடனே பிராந்திய மொழிகளுக்கு மாற்றி அதன் மூலம் பிராந்திய மொழிகள் முழு வளர்ச்சியை அடைய உடனே உதவ வேண்டும் என்று காந்திஜி விரும்புகிறார். நாள்தோறும் காலம் தாழ்த்துவதால் ஏற்படுகின்ற கால விரையத்தைக் காட்டிலும் ஓரளவு உயர்தரக் கல்வியில் இவ்வாறு மாற்றம் செய்வதால் ஏற்படும் குழப்பமே சிறந்தது என்று கருதுகிறார். கல்வியின் எல்லா நிலைகளிலும் குழந்தை யின் தாய் மொழியே சிறந்த போதனா மொழியாக இருக்க முடியும் என்று அவர் நம்புகிறார். பண்டிட் ஜவஹர்லால் நேஹ்ரு இதே கருத்தைக் கொண்டுள்ளார். அவர்கள் இருவரும் உயர் தரக் கல்வியில் இந்தியா முழுவதிலும் இன்றுள்ள ஆங்கிலத்தைப் பிராந்திய மொழிகள் அல்லாமல் ஹிந்தி மொழி கூட எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கருதுகிறார்கள்.

"ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ளவர்களுக்கு, ஹிந்தி மொழி பிறநாட்டு மொழியாக இல்லாதிருப்பினும், ஓரளவு புதுமை யான மொழியே யாகும். எனவே அதனைப் போதனா மொழியாக ஆக்குவது கல்வித் துறையில் தவறான வழி என்பதோடு கூட மனோதத்துவ ரீதியிலும் தவறானதே யாகும். குழந்தை பிறர் சொல்வதை புரிந்து கொள்வதும் தன் கருத்தை வெளியிடுவதும் தாய் மொழியில் செய்யப்படும்பொழுது எளிதாகச் செய்ய முடியும்.

"காந்திஜி ஆங்கிலம் நம்முடைய நாட்டின் தேசீய மொழியாகவோ போதனா மொழியாகவோ இருக்க முடியாது என்று நம்புகிறார். ஆங்கிலத்தின் பெருமையையும் அதன் இலக்கியச் சிறப்பையும் அவர் நன்கு அறிந்திருக்கிறார் என்றாலும் பல மொழி பயில்வோர் மட்டுமே அதனைக் கற்க வேண்டும் என்று நம்புகிறார். பன்னாட்டு வாணிகத்திற்குத் தேவைபடுகின்ற ஒரு மொழியாக ஆங்கிலத்தை அவர் ஏற்றுக்கொள்கிறார். தேவநாகரியிலோ உருது விலோ எழுதப்பட்ட ஹிந்துஸ்தானி தான் இந்தியாவின் தேசீய மொழியாக இருக்க முடியும் என்று காந்திஜி உறுதியாகச் சொல்லுகிறார். பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில் அது ஒரு கட்டாயப் பாடமாக இருக்கும். என்றாலும் ஹிந்தி மொழி பேசாத பிராந் தியங்களில் கல்வித் துறையின் எல்லா நிலைகளிலும் பிராந்திய மொழிகளே போதனா மொழிகளாக இருக்குமே யல்லாமல் ஹிந்தி மொழி அந்த இடத்தை எடுத்துக்கொள்ளாது." (பக்கம் 232.)

12. காந்திஜியின் கருத்துப்படி ஹிந்தி இந்தியாவின் ஆந்தர் பாஷா வாக அதாவது மாகாணங்களிடையே வழங்கும் அகில இந்திய மொழியாக இருக்க வேண்டும் என்றே தெரிகிறது. எனவே ஹிந்திமொழி பேசாத பிராந்தியங்களில் அதனைப் போதனா மொழியாக ஆக்கும் எண்ணம் இல்லவே யில்லை. இந்திய அரசாங்கத்தாலும் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள பல்கலைக் கழகங்களாலும் இந்நிலை இப்பாழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(உ)

13. ஹிந்தி வளர்ச்சி இயக்கத்தின் வரலாற்றைத் தொடர்ந்து காண்போம். 1924–25-ல் அகில இந்திய காங்கிரஸ் ஹிந்துஸ்தானியை அதனுடைய ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்டு ஹிந்திப் பிரசார வேலையை தேசத்தின் வளர்ச்சித் திட்டங்களுள் ஒரு வேலையாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு காந்திஜி செய்தார்.

14. இந்நேரத்தில் "ஹிந்துஸ்தானி" என்ற சொல்லை ஹிந்தி என்ற சொல்லோடு சேர்த்தே காந்திஜி பயன்படுத்தினார் என்பதைக் கவனிக்க வேண்டும். குஜராத்தி வித்யா பீடத்தின் அமைப்புச் சட்டங்களில் ஹிந்தி-ஹிந்துஸ்தானி என்ற சொல்லைக் கூட அவர் பயன்படுத்தினார். அழகுக்காக இவ்வாறு செய்யவில்லை. உருதுவிலிருந்து வேறு பிரிந்துள்ள ஹிந்தியை அவர் தேசீய மொழி என்று ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. இந்த அடிப்படையில்தான் ஹிந்திப் பிரச்சார இயக்கம் நடைபெற்று வந்தது. பொது மொழியாக பேசப்பட்டுவந்த ஹிந்தி, கலப்புப் பண்பாடு உடையதாக இருத்தல் வேண்டும். எல்லா மக்களினுடைய சொல்லாட்சிகளையும், கருத்துக்களையும் கொண்டிருத்தல் வேண்டும். இந்தக் கருத்து அரசியல் அமைப்பின் 351-வது விதியில் மிக நன்றாகப் பதிக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அறிய முடியும். இவ்விதியின்படி இங்குள்ள எல்லா இனத்தாரும் ஒன்று கூடிப் பொதுவான ஒரு இடைநிலை மொழியை ஸ்தாபிப்பதோடு அந்த இடைநிலை மொழி இந்நாட்டிலுள்ள எல்லா மொழிகளின் கலப்பாகவும் இருக்க வேண்டும் என்று அந்த விதி கருதுகிறது. அரசியல் அமைப்புப் பேசுகின்ற முறையில் ஹிந்தி மொழி என்பது "இந்தியாவின் கலப்புப் பண்பாட்டிலுள்ள எல்லா உறுப்புக்களையும் வெளியிடும் கருவியாக இம்மொழி அமைய வேண்டும். . . ." (விதி 351) எனவே இந்த நாட்டிலுள்ள பெருவாரியான மக்களையும் ஒன்று சேர்க்கும், ஒருமைப்படுத்தும் அடையாளமாகவே ஹிந்தி இயக்கம் இருந்து வந்தது. ஒற்றுமை என்று சொல்லும்பொழுது அனைத்தையும் சமமாக்கும் சூழ்நிலையைப் பேசவில்லை. நம்முடைய மொழிகள், சமயங்கள், கொள்கைகள், சமூகங்கள் ஆகியவற்றினிடையே உள்ள பல வேறுபாட்டினும் ஓர் ஒற்றுமையைக் காண்பதையே இங்கு ஒற்றுமை என்று பேசுகிறோம். ஹிந்திப் பிரசார இயக்கத்தின் முதலாவது கொள்கை இதுதான் என்பதை ஹிந்தியின் இலக்கணம் பேசும்பொழுதே குறிப்பிட்டார்கள்.

(ஊ)

15. ஹிந்தி இயக்கம் தொடங்கப்பட்ட காலத்தில், மற்றொரு முக்கியமான சிறந்த கொள்கையும் கைக்கொள்ளப்பட்டது. அது என்னவெனில், ஆந்தர் பாஷாவாகிய இம்மொழி பல்வேறு பிராந்தியங்களுள்ள இலக்கிய வளம் நிறைந்த ஸ்வபாஷாக்களை எக்காரணத்தைக் கொண்டும் . நீக்குவதற்குப் பயன்படுத்தப்பட மாட்டாது என்று ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ள மக்களுக்கு உறுதிமொழி தரப்பட்டது. அந்த மொழிகளின் இடையே ஒரு பொது இடைநிலை மொழியை அமைத்து அவற்றிற்கு உதவுவதே இதனுடைய வேலை என்றும் சொல்லப்பட்டது. அந்த இயக்கத்தின் முதல் கொள்கை என்று மேலே சொல்லப்பட்ட இந்த முறையில், அந்த இயக்கம் வளர்ந்தாலொழிய பொது மொழி என்ற கடமையை இது செய்யவே முடியாது.

16. இந்த இயக்கத்தின் இரண்டாவது கொள்கை காந்திஜியாலும் அவரோடு வேலை செய்தவர்களாலும் பல முறை நன்கு எடுத்துப் பேசப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தை உண்டாக்கிவர்கள் தந்த உறுதிமொழிகளின் மேல்தான் சென்னையில் தக்ஷிணபாரத ஹிந்திப் பிரசார சபா இன்றுங்கூட இருந்து வேலையைச் செய்ய முடிகிறது. ஸ்ரீ சி. ஆர்., ஸ்ரீ சி. பி. ராமசாமி ஐய்யர் போன்ற பிரமுகர்கள் அக்காலத்திலேயே

இதில் சேர்ந்து முக்கியமான பங்கெடுத்துக்கொண்டு இதனை வளர்த்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் சுதந்திரத்திற்குப் பிறகு இந்த சபா இக்கொள்கையை கீழ்க்கண்ட இரண்டு வழிகளில் மிகவும் அழுத்தமாகச் சொல்லி இருக்கிறது.

1. ஹிந்திப் பரீட்சை எழுதும் ஒரு மாணவன் தென்னாட்டு மொழிகள் ஒன்றிலும் ஒரு பரீட்சை எழுத வேண்டும் என்று கட்டாயப்படுத்தி யுள்ளது.

2. ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள மக்களும்கூடப் பொது இடநிலை மொழியை வளர்க்கும் இந்த வேலையில் ஒரு நியாயமான பங்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சபை அறிவிக்கிறது.

சுதந்திரத்தின் பின்னர் இந்த இயக்கத்தின் வளர்ச்சியில் இந்த இரண்டு கருத்துக்களும் மிக முக்கியமானவை. இந்த இயக்கத்தின் இப்பகுதி 1935-ல் தொடங்கிய அதன் இரண்டாவது பிரிவில் முக்கியத்துவத்தை அடைந்தது. ஆதலால், மறுபடியும் அதனைப்பற்றி பேசச் சந்தர்ப்பம் உண்டு.

17. இந்த இயக்கத்தின் இந்த இரண்டாவது கொள்கையையும் அரசியல் அமைப்பு ஏற்றுக்கொண்டு கௌரவிக்கிறது. ஹிந்தி மொழியைப்பற்றிய அரசியல் அமைப்பின் வழிகாட்டிப்பகுதிகளை நிறைவேற்றம் செய்யும் பொழுது இதுபற்றி ஏற்பட்டுள்ள குழப்பத்தையும், சந்தேகத்தையும் போக்கும் முறையில் இன்னும் விரிவாக விளக்கமாகச் செய்திருக்கலாம். முன்னரே இந்தக் குறிப்பில் நான் கூறியது போல அரசியல் அமைப்பு பிராந்திய மொழிகளைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது ஹிந்தியை ஒரு பிராந்திய மொழியாகவும் குறிப்பிட்டுள்ளது சந்தேகத்திற்கு இடத்தை உண்டாக்கி உள்ளது. அரசியல் அமைப்பு போதனா மொழிப் பிரச்னையைப்பற்றி ஒன்றும் பேசவில்லை. என்றாலும் இயல்பான போதனா மொழியான ஸ்வபாஷாக்கள் ஏன் ஹிந்திக்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதுபற்றி சந்தேககங்கள் தோன்றியுள்ளன.

18. இந்திய அரசியல் அமைப்பின் 345-வது விதியில் ஒரு ராஜ்ய ஆட்சி மொழிக்குப் பதிலாக ஹிந்தி மொழி இருக்கலாம் என்று சொல்லப்பட்டது. மேலே குறிக்கப்பட்டுள்ள உறுதிமொழிகளோடு சேர்த்து எண்ணப்படுமே தவிர அந்த உறுதிமொழிகளை மீற வேண்டும் என்ற கருத்தால் இங்ஙனம் பேசப்படவில்லை. எனவே இதனை அதிகார பூர்வமான முறையில் மிக அழுத்தமாக அனைவரும் அறியும்படியாக விளக்கிச் சொல்லிவிட வேண்டும். அவ்வாறு இல்லையானால் யூனியன் மொழியாகவும் ராஜ்யங்களின் இடையே வழங்கும் மொழியாகவும் ஹிந்தியை ஏற்றுக்கொள்வது என்பது மிகப் பிற்போக்கான நிலையை அடைய நேரிடும். மேலும் ஆங்கிலத்தை நீக்க வேண்டும் என்ற திட்டம் நேரிடையாக எதிர்க்கப்படாவிட்டாலும் மிக நீண்ட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே வரும். இதன் பயன் தெற்கிலும், கிழக்கிலும் இன்று நன்கு வெளிப்பட்டுள்ளது போல, ஆங்கிலத்தைத் தொத்திக்கொண்டு இருக்கும் நிலை நீடிக்கும்.

19. முன்னர் நான் குறிப்பிட்டுள்ளபடி இவ்வியக்கத்தின் முதற் பகுதி 1918-ல் தொடங்கி 1935-ல் முடிவடைந்தது. அக்காலத்தில் திராவிட மொழி பேசும் மக்கள் ஹிந்தியைக் கற்றுக்கொள்வது தாண்ட முடியாத ஒரு தடை அன்று என்பது நிரூபிக்கப்பட்டது. ஹிந்தி இயக்கம் வளர்வதற்கு ஒரு நல்ல சூழ்நிலையை இது ஏற்படுத்தியது. ஆனால் இரண்டாவது பகுதியில் தோன்றிய தடை இன்னும் கடினமாக இருந்ததாதலின் இனி அதனை ஆராய்வோம்.

(எ)

20. ஹிந்தி சாஹித்திய சம்மேளனத்தில் மறுபடியும் மகாத்மா காந்தி தலைமை வகித்தபோதுதான் இவ்விரண்டாவது பகுதி தொடங்கியது. 1935-ல் இண்டோரில் இக்கூட்டம் நடைபெற்றது. பதினெட்டு வருஷங் களுக்கு முன்னர் அவர் ஹிந்தி மொழிபற்றிக் கூறிய இலக்கணத்தை மட்டும் எடுத்துக் கூறி மக்களை அதனை ஏற்றுக்கொள்ளுமாறு செய்தார். ஹிந்தி சாஹித்திய சம்மேளனம் அதனை ஏற்றுக்கொண்டாலும், அதனை அடுத்த சில ஆண்டுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளால் மிகக் குறுகிய காலமட்டும் நிலைபெற்ற ஒன்றாக இது ஆகிவிட்டது. ஹிந்தி சாஹித்திய சம்மேளனத்தின் தலைவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ பி. டி. தாண்டனுக்கும் ஹிந்திப் பிரச்சார இயக்கத்தின் தந்தையாகிய மகாத்மா காந்திக்கும் இடையே இவ்விஷயம்பற்றி மிகுதியான கருத்து வேறுபாடு தோன்றிற்று.

21. இந்தக் கூட்டத்தில் இந்த இயக்கத்தின் குறிக்கோளை நிறை வேற்றும் முறையில் மகாத்மா காந்தி மிகப் பெரியதொரு வழியைக் கூறினார். சென்னையிலுள்ள ஹிந்திப் பிரச்சார சபையைப் போல மேற் கிந்தியாவிலும், கிழக்கிந்தியாவிலும் வேலை செய்யக்கூடிய ஓர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறினார். சென்னையிலுள்ள இந்த சபா வுக்கு ஒரு லக்ஷ ரூபாய் வசூல் செய்தார்.

22. இப்புதிய அமைப்பை ஏற்படுத்திய உடன் கருத்து வேற்றுமைகள் தொடங்கின. மேற்கிந்தியாவிலும், கிழக்கிந்தியாவிலும் பிரச்சார வேலை செய்வதற்கு ஓர் அமைப்பு வேண்டும் என்று மகாத்மா காந்தி கூறினார். அவ்வாறு சுதந்திரம் பெற்ற அமைப்பு ஏற்படுமேயானால் இந்த சம்மேள னத்தில் ஏற்படும் மாறுதல்களைப்பற்றிக் கவலைப்படாமல் அந்த அமைப்புத் தனித்து வேலை செய்யலாம் என்று கருதப்பட்டது. இரண்டாவது கட்சி யார்கள் இந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ளாமல் சம்மேளனத்தின் கீழ் அதனுடைய ஆணையின் வண்ணம் வேலை செய்யும் ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். வார்தா சமிதி என்று அழைக்கப்படும் அமைப்பு இதன் பயனாகத் தோன்றியது. இந்த சமிதியின் வேலைகளை வார்தாவைத் தலை நகராகக் கொண்டு காக்கா சாஹெப் கலேல்கர் கவனிக்கத் தொடங்கினார். அப்பொழுது காந்திஜியும் வார்தாவில் தங்க முடிவு செய்திருந்தார்.

23. இந்திய அரசியல் சூழ்நிலை பெரிதும் மாறுபட்டுக் கொண்டிருந்த காலம் இது. 1935-ம் வருஷத்திய சீர்திருத்தச் சட்டப்படி மாகாண சுய ஆட்சி நடைபெற்று வந்தது. இதன் பயனாகக் காங்கிரசின் ஆக்க வேலை களுக்கு ஒரு பெரிய வாய்ப்பு அளிக்கப்பட்டது. சிறப்பாக ஹிந்தி இயக்கம் பெரிதும் பயனடைந்தது. காங்கிரஸ் அமைச்சரவைகள் ஹிந்தியைப் பள்ளிக் கூடங்களில் எல்லாம் புகுத்தின. [1]பம்பாயில் ஸ்ரீ பி. ஜி. கர் அவர்களின் தலைமையின்கீழ் இவ்வேலை தொடங்கப்பட்டது. மேற்கிந்தியாவில்தான் சரியான முறையில் இவ்வேலை தொடங்கியது. மேலே குறிக்கப்பட்டுள்ள இரண்டு அடிப்படையான கொள்கைகளின் கருத்துக்களையும் நன்கு விளங் கிக்கொள்ள இங்கேதான் தொடக்கம் செய்யப்பட்டது. தேசத்தின் ஹிந்தித் திட்டத்தை மேற்கிந்தியாவில் மக்களும் காங்கிரஸ் அரசாங்கமும் நிறை வேற்றத் தொடங்கியவுடன் இத்திட்டத்தின் இரண்டு முக்கியப் பகுதிகளும் பெரிதும் முக்கியத்துவம் அடைந்தன. எனவே மகாத்மா காந்தி 1942-ல் யு.பி. ஹிந்தி சாஹித்திய சம்மேளனத்திலிருந்து விடை பெற்றுக்கொள்ள நேரிட்டது. ஏனென்றால் அப்பொழுது இப்பிரச்னை ஓரளவு வலுப்பெற்று விட்டது. 1935 முதல் 1945 வரையுள்ள இடைக்காலம் இந்த இயக்கத்தின்

[1] சென்னையில் ஸ்ரீ ராஜாஜி பள்ளிக்கூடங்களில் ஹிந்தி போதனையை துவக்குகிறார். இதனை திர்த்து மிகப் பெரிய அளவில் மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். இன்றுவரை யிலும் கூட இக் கிளர்ச்சி ஏறத்தாழ இதே நிலையில் இருந்து வருகிறது.

மிக வருந்தத்தக்க காலம் ஆதலின் அதுபற்றி நான் ஒன்றும் சொல்ல வில்லை. இப்புதிய அமைப்பில் அதாவது விடுதலை பெற்ற நாளில் இன்று பொருத்தமாகவுள்ள சில பிரச்னைகளைபபற்றித்தான் இப்பொழுது பேச வேண்டும்.

(ஏ)

24. 1935-க்குப் பிறகு ஹிந்தி பிரச்சார வேலை இரண்டு துறைகளில் நடைபெற்றது. முற்பகுதியைப் போல் அல்லாமல் அரசாங்கமும் அதில் பங்குகொள்ள ஆரம்பித்தது. அரசாங்கமே இதில் பங்கு கொண்டபடியால் அதற்குரிய பயன்களும் ஏற்படலாயிற்று. அதிகார பூர்வம் இல்லாதவர்கள் செய்ததைக் காட்டிலும் நல்ல முறையில் ஆக்க வேலைகள் நடைபெற்றன.

25. 1935-ம் ஆண்டு அஹமதாபாத்திலுள்ள குஜராத் வித்யா பீடம் ஹிந்திப் பகுதியைத் தொடங்கியது. இரண்டு வகை எழுத்துக்களின் மூல மாகவும், வித்யா பீடத்தின் கீழுள்ள அமைப்புக்களில் ஹிந்தி-ஹிந்துஸ் தானி படிப்பை நடத்துவதோடு மட்டும் அல்லாமல் குஜராத்திலுள்ள பள்ளிக்கூடங்களின் மூலமாகவும் ஹிந்தியை வளர்க்கப் பாடுபட்டது. குஜராத் மக்களின் தேவைக்கு ஏற்ப ஹிந்தி வெளியீடுகளையும் செய்யத் தொடங்கியது.

26. ஸ்ரீ கலேல்கரின் தலைமையின் கீழ்த் தொடங்கப்பட்ட வார்தா சமிதி தரவாரியாகப் பிரிக்கப்பட்ட ஹிந்திப் பரீட்சைகளை மேற்கத்திய இந்தியாவில் தொடங்கிற்று. இதனுடைய உடனடியான திட்டம் என்னவென்றால் இந்தோர் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டபடி தேவ நாகரி எழுத்தில் ஹிந்தி மொழியைக் கற்பிப்பதேயாகும். இரண்டாவது எழுத்து முறையாகிய உருது எழுத்து முறையையும், நாளா வட்டத்தில் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தார்கள். இந்த நிலையில் குஜராத் வித்யா பீடம் இப்பரீட்சை வேலைகளை நேரடியாக எடுத்துக்கொள்ளாமல் இதனை நடத்துவதற்கு வேண்டுமான உதவிகளை மட்டும் செய்து வந்தது. இந்த வேலையை நேரடியாக கவனித்தவர் காகா சாகிப் கலேல்கராவார்.

27. பம்பாய் ராஜ்யம் அதனுடைய முதலமைச்சர் ஸ்ரீ பி. ஜி. கர்ரின் தலைமையில் ஹிந்துஸ்தானி கற்பிக்கும் குழு என்ற ஒன்றை 1937-ம் வருஷம் தொடங்கியது. இதற்குத் தலைவராக ஸ்ரீ காகா கலேல்கர் இருந்தார். இதனுடைய நோக்கம் என்னவென்றால் அந்த மாகாணத்திலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் ஐந்தாவது வகுப்புத் தொடங்கி இந்த மொழியைக் கற்பிக்க முயன்றதாகும். இந்தோர் மாநாட்டில் ஹிந்திக்கு இலக்கணம் வகுக்கப்பட்டபடி இது நடைபெற்றது. அதாவது ஹிந்தியை உருது நடையிலும், எழுத்திலும்கூட இப்பாடத் திட்டத்தில் ஏற்றுக்கொண்டார்கள்.

28. மற்றொரு புறத்தில் முன்னர்க் கூறியபடி இந்தக் கொள்கையை நன்கு நிறைவேற்றும் செய்வதற்காக ஸ்ரீ காகா சாகிப் கலேல்கர் தம் முடைய முயற்சிகளைத் தொடங்கினார். அதாவது ஹிந்தி சாகித்ய சம் மேளனத்தின் கிளையாக உள்ள வார்தா சமிதி குஜராத்திலும், மஹா ராஷ்டிரத்திலும் வேலை செய்யத் தொடங்கியது. ஹிந்திப் பிரசார வேலையில் இதுவரை இருந்த ஒற்றுமை இப்பொழுது பிளவு பட்டுக் காணப்படலாயிற்று. ஹிந்தி சாகித்ய சம்மேளனம் இக்கொள்கையை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அது உருதுவிலிருந்து ஹிந்தி வேறுபட்டது என்று சொல்லி அதிலும் நாகரி எழுத்து ஒன்றை மட்டும்தான் தாங்கள் ஏற்றுக்கொள்ள முடியும் என்றும், அதனைத்தான் பரப்ப முடியும் என்றும் கூறிவிட்டது.

29. இந்த இரண்டிற்கு மிடையே ஒரு அமைதியை உண்டாக்க விரும்பிய காந்திஜி வார்தா சமிதிக்கு ஒரு உரிமையை வழங்கி ஹிந்தி, உருது என்ற இரண்டிற்கும் இடையே ஒரு நடுநிலையான வழியை மேற்கொள்ள முயன்றார். இவ்வாறு இருக்குமேயானால் ஹிந்தி சாகித்ய சம்மேளனம் வேண்டுமான பொழுது முடிந்த அளவுக்கு வார்தா சமிதிக்கு உதவியும்

புரியலாம் இதுபற்றி 1940-41 வரையில் ஹி சா.ச. எவ்விதமான முடிவும் செய்யாமல் இருந்து கடைசியாக மகாத்மாஜியின் யோசனைகளை மறுத்தே விட்டது. மேலும் ஹி சா.ச. வார்தா சமிதியைத் தன்னுடைய நேரடி அதிகாரத்திலிருந்து அப்பால் செலுத்தவும் விரும்பவில்லை. எனவே காந்திஜி, பண்டிட் ஜவஹர்லால் நேஹ்ரு, மௌலானா ஆஸாத், பாபு ராஜேந்திரப்பிரசாத் போன்ற பல பெரியோர்கள் ஹி. சா. ச. விலிருந்து ராஜினமாச் செய்து விட்டு வார்தா ஹிந்துஸ்தானி பிரசார் சபா என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார்கள். இப்பொழுது விவகாரம் முற்றிக் கட்சி இரண்டாக ஆகிவிட்டாலும் இரண்டு கூட்டத்தாரும் காந்திஜியின் பெயரைப் பயன் படுத்திக் கொள்ள அஞ்சவில்லை. ஹிந்தி மொழியை ராஷ்டிர பாஷாவாகப் பிரசாரம் செய்வதற்கு இரண்டு கட்சியாளர்களுமே காந்திஜியின் பெயரைப் பயன் படுத்திக் கொண்டார்கள். காந்திஜி இக்கொள்கை அரைகுறையானது என்று கூறி, உடம்பிலே உள்ள ஒரு கண் இது என்றும் சொல்லி, மற்றொரு கண்ணாக உள்ளது உருது என்றும் கூறினார்கள். ஹி. சா. ச. இன்றுவரையிலும் கூட ஹிந்தி உருதுவிலிருந்து வேறுபட்டது என்று சொல்லி அதுவே அகில இந்தியா விளங்கும் பொது மொழியாக இருக்க வெண்டுமென்றும் சொல்லி வருகிறது. எனவே காந்திஜி ஹிந்துஸ்தானியைப் பற்றிப் பேசுவதெல்லாம் யு. பி. யிலுள்ள ஹிந்தி பேசும் மக்களின் மொழியையெல்லாம் கெடுத்துவிடுகிறதென்று ஹி. சா. ச. ஆதரவாளர்கள் சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

30. ஹி.சா.ச.தைச் சேர்ந்த சிலர் இப்போது சொல்லிக்கொண்டு வந்த தன் விளைவாக "இரண்டு ஹிந்திகள்" என்ற எண்ணம் மெள்ள வளரலாயிற்று. அது இந்திய அரசியலமைப்பிலும் கூட வந்துவிட்டது. ஹி. சா. ச. சொல்லுகின்ற ஹிந்தி வேறு என்றும், காந்திஜி சொல்லிய ஹிந்தி–ஹிந்துஸ்தானி வேறு என்றும் பிரித்துக் காட்டப்பட்டது. இந்த வேறுபாட்டை ஹிந்துஸ்தானி பிரசார[1] சபா மேற்கோண்ட தேசீய மொழியின் இலக்கணம் பற்றிய பேச்சில் விவரமாகக் கூறப்பட்டுள்ளது. யு. பி.-யில் மட்டும் நிலைபெற்றுள்ள ஹி. சா. ச.-க்காரர்களின் ஹிந்தியைக் காட்டிலும் இது பரந்தும் விரிந்தும் உள்ள ஒரு கொள்கையாகும். இப்பொழுது பிராந்திய ஹிந்தி என்றும், யூனியன் ஹிந்தி என்றும் சொல்லும் பொழுது உள்ள வேற்றுமை பொருளுடையதாகும். 1950–லிருந்து ஹிந்தி அமைப்பின் மூன்றாவது பகுதி தொடங்கிகுறது என்று கூறலாம்.

(ஐ)

இந்தக் கிளர்ச்சியின் மூன்றாவது பகுதி.

31. ஹிந்திக் கிளர்ச்சியின் மூன்றும் காலப் பகுதி என்பது 1949-ல் அரசியலவை மொழிப் பகுதியை ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து தொடங்குவதாகக் கூறலாம். அதாவது சென்ற இரண்டு காலப் பகுதிகள் வெற்றிகரமாக வேலை செய்ததின் பயன் இது என்று சொல்லலாம். டாக்டர் எம். எஸ். படீல் தம்முடைய நூலில் (பக்கம் 229) கூறுகிறார்:—

"இந்தியாவின் அரசியலவை இந்தியாவின் கூட்டமைப்பு மொழியாக ஹிந்தி மொழி இருக்க வேண்டுமென்று முடிவு செய்து விட்டது.

---

[1] வட இந்திய நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் ஹிந்து முஸ்லிம் ஆகிய அனைவரும் பேசிப் புரிந்து கொள்வதுடன் பரஸ்பரத் தொழில் முறையில் கையாளுவரும் மொழியே ஹிந்துஸ்தானி எனப்படுவது; நாகரி லிபி, பாரசீக லிபி (உருது லிபி) இரண்டு எழுத்துக்களாலும் எழுதிப் படிக்ககூடிய இநத மொழியின் இலக்கிய உருவமே தற்போது ஹிந்தி, உருது என்ற பெயர்களால் அறியப்படுகிறது.

இந்திய அரசியல் சட்டத்தின் 351-வது பிரிவை யொட்டி 1950-ல் பின்வரும் வார்த்தைகள் மேற்கண்ட இலக்கணத்தோடு சேர்க்கப்பட்டன—

"தன் சக்தியை விருத்தி செய்து கொள்வதற்காக பிரதேச (பிராந்திய) மொழிகளிலிருந்து தேவையான சொற்களையும் மரபுச் சொற்றொடர்களையும் அவ்வப்போது தனதாகக் கொண்டு வருவது" (மூலம் ஹிந்தி).

இன்றுள்ளதை விட வளம் பொருந்தியதாக அது வளர்ச்சியடைந்து ஹிந்துஸ்தானியிலிருந்து அது வேறுபாடு தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு வளர்ந்துவிடும்.

காந்திஜியின் அடிப்படையான கருத்துக்களில் சிலவற்றை அரசியலவையும், ராதாகிருஷ்ணன் கழகமும் கூட ஏற்றுக்கொள்ள முடிந்தது என்பது கவனிப்பதற்குரியது. இந்தக் கழகத்தில் இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலுள்ள சிறந்த கல்வி வல்லுநர்கள் பலரும் இருந்தார்கள்."

32. அரசியலமைப்பின் 351–வது விதி மத்திய அரசாங்கமும் ராஜ்ய அரசாங்கங்களும் ஹிந்தியை வளர்க்கும் பணியில் ஈடுபடுமாறு செய்கிறது. எனவே ஹிந்திப் பிரசார வேலை அரசாங்கத்தின் வேலைகளில் ஒன்றாகும். அதனைப் பதினைந்து ஆண்டுகளுக்குள் யூனியன் ஆட்சி மொழியாக உள்ள ஆங்கிலத்தை நீக்கக்கூடிய அளவுக்கு வளர்க்க வேண்டுமென்று அரசாங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

33. ஐந்து ஆண்டுகள் இதில் செலவழிந்துவிட்டது. இந்த இடைக் காலத்தில் எந்தப் பயனுடைய வேலையும் செய்யப்பட்டதாகச் சொல்வதற்கில்லை. பேராசிரியர் இந்திரா தம்முடைய வாய் மொழிச் சான்றில் கூறியது போல இதற்குப் பல காரணங்கள் உண்டு.

34. உயர்தர ஆட்சி செய்யும் வகுப்பாருக்கு ஆங்கில மொழியின் மேல் ஆழமான ஓர் அன்பு இருந்து வருகிறது. அவர்களைப் பொறுத்த மட்டில் ஆங்கில மொழி சொந்த லாபத்தைத் தந்து அவர்கள் சமுதாயத்தைப் பாதுகாக்கும் ஒரு பொருளாக இருந்து வருகிறது. சர் ஐவர் ஜன்னிங்ஸ் ஆக்ஸ்போர்டில் தம்முடைய சொற்பொழிவில் 1949–ல் இவ்வாறு குறிப்பிட்டார். (தி காமன் வெல்த் இன் ஏஷ்யா, பக்கம் 43) "இன வேறுபாட்டைக் காட்டுவதற்கு ஆங்கிலம் பயன் படுகிறது. ஏனென்றால் அம் மொழி பொருளாதாரத் துறையில் உயர்ந்த ஓர் இனத்தின் உறுப்பினன் என்பதை எடுத்துக் காட்டுகிறது. . . . . . .[1]

---

[1] இந்திய சமுதாயத்தின்மேல் ஆங்கில மொழி செலுத்தும் செல்வாக்கைப்பற்றி சர் ஐவர் சொல்லும் ஏனைய கருத்துக்களும் சுவை பயனப்பனவாகும்.

"மெக்காலேயும் விக் கட்சியினரும் எதிர்பார்த்ததற்கு மாறாக ஆங்கிலக் கல்வி குறைந்த அளவில் பண்பாட்டுச் செல்வாக்கை செலுத்தியது. முகலாய சாம்ராஜ்யத்தைக் காட்டிலும் மிகுதியான அளவில் ஒரு வகையான இன வேறுபாட்டை அது உண்டாக்கிற்று. பொது மக்களில் பெரும்பான்மையானவர்களுடைய அனுபவத்திற்கு முற்றிலும் புறம்பான கருத்துக்களை இது பேசி வந்தது என்றாலும் அரசியல் அறிவு பெற்ற ஓர் இனத்தை உண்டாக்கி ஒரே மொழி பேசும் இனமாக அதனைச் செய்த அளவில் இந்த ஆங்கிலக் கல்வி ஓரளவு ஒற்றுமை வேலையைச் செய்துள்ளது. இது ஜாதிப் பிரிவினையை உண்டாக்கியது என்று சொல்வது இரண்டாந்தர நிகழ்ச்சியேயாகும். ஏனென்றால் மேற்கத்தியக் கருத்துக்களை சிக்கலான இந்திய சமுதாயத்திற்குச் செலுத்த முயன்றால் அதன் விளைவு இதுவாகத்தான் இருக்கும். (பக்கம் 17–18)

ஆங்கிலத்தைப் பிராந்திய மொழிகளின் மூலம் நீக்குவது பற்றி அவர் இங்ஙனம் கூறினார். ',ஆங்கிலத்தைப் பிராந்திய மொழிகளின் மூலம் நீக்க வேண்டுமேயானால் பெரிய பல்கலைக் கழகங்களை (கல்கத்தா, சென்னை, பம்பாய்) சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துப் பல் வேறு மொழிகளைப் பேசும் பல்வேறு பல்கலைக் கழகங்களாக அமைத்துக்கொள்வதே சிறப்புடையது. அவ்வாறு செய்வதன் பயன் பல்கலைக் கழகங்களை மட்டும் துண்டாடாமல் ஏனைய தொழில், வாணிபம் முதலியவற்றையும்கூட துண்டாடுவதாக முடிந்துவிடும். ஹிந்திபோன்ற ஒரு பொதுவான இரண்டாவது மொழி இல்லையானால் இந்நிலைமை துண்டாடும் முறையிலேயே மேலும் இருந்து வரும். இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால் இத்தகைய ஒரு நாட்டில் இயல்பாக எதிர்பார்க்கப்படுகின்ற வேற்றுமைகளிடையே ஒரு பொதுத் தொடர்பை உண்டாக்கும் இணைப்பாக இந்தியாவின் இரண்டாவது மொழியாக ஹிந்தி மொழியை ஏற்றுக்கொள்ளவேண்டும் வேறுபாடுகளின் இடையே கூட நாம் இம்முறையில் ஒற்றுமையைக் காண முடியும். சர் ஐவர் ஹிந்தி ஒன்றுதான் இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. இதனை இரண்டாம் மொழியாக இருக்கவேண்டும் என்றுதான் அவர் கூறுகிறார். முதலாவது மொழி பிராந்திய மொழியாகவே இருக்கும்.

எனவே இந்த இனத்தார் தங்களுக்கு வசதி செய்து கொடுக்காத ஒரு மொழியின் மூலம் இந்த மொழியை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. மேலும் கொடுக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் இவ்வளவு மாற்றத்தைச் செய்து முடிக்க முடியாது ஆதலால் கால எல்லை நீடிக்கப்படும் என்றும் எதிர் பார்க்கிறார்கள். அரசாங்கமும் இதில் அவ்வளவு தீவிரமாக இல்லை. ஆட்சித் துறையில் இதனைக் கொண்டு செலுத்தும் அதிகாரிகளிடமும் அவ்வளவு நம்பிக்கையும், உற்சாகமும் காணப்படவில்லை.

35. வட இந்தியாவிலுள்ள ஹிந்தி பேசும் மக்கள் நடந்துகொள்ளும் முறையினால் "ஹிந்தி ஏதேச்சாதிகாரம்" "ஹிந்தி முக்கியத்துவம்" என்பன போன்ற சிக்கலான பல பிரச்னைகள் தோன்றியுள்ளன. அவர்கள் யூனியன் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹிந்தி தங்களுடைய மொழியே என்ற ஒரு சூழ்நிலையைப் பிரசாரஞ் செய்தார்கள். ஹி.சா.ச. யூனியன் ஹிந்தியின் இந்த நிலையை, அரசியல் அமைப்பில் சொல்லப்பட்டுள்ள இந்த நிலையை, ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு ஏற்றுக் கொண்டாலும் அரைகுறை மனப்பான்மையோடு ஏற்றுக்கொண்டது. எண்களின் ஏற்பாட்டை முழு மூச்சாக அது எதிர்த்தது. இந்தக் கட்சியின் முக்கியமான ஆதாரவாளர்களுள் ஒருவராகிய ஸ்ரீ கே. எம். முன்ஷியே 1952-ல் பம்பாயில் கூடிய ஹிந்தி ஸாஹித்திய ஸம்மேளனத்திற்குச் செய்த தம் தலைமையுரையில் ஹிந்தி இலக்கியம் பற்றிப் பின்வருமாறு பேசினார்.

"இது ஒரு விநோதமான கதை. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர்க் கற்றறிந்தவர்களே ஹிந்தியின் விதையை விதைத்துவிட்டார்கள். வடநாட்டில் கற்றறிந்தவர்கள் பேசும் மொழியாக இருந்த உருதுவை எதிர்த்தார்கள். . . . . இன்று ஹிந்தி வெற்றியடைந்து விட்டது. அன்றாடப் பேச்சுக்கும் எழுத்துக்கும் பயன்படுவது ஹிந்தி மொழியே."

மற்றொரு சந்தர்ப்பத்தில் காந்திஜியினுடைய ஹிந்துஸ்தானி மிக ஆழமாகப் புதைக்கப்பட்டுவிட்டதென்றும் இனி அது வாழ முடியாது என்றும் ஸ்ரீ முன்ஷியே சொல்லியுள்ளார். எனவே ஸ்ரீ முன்ஷியும் ஹி.சா.ச. வும் எந்த ஹிந்தியை எடுத்துப் பேசுகிறார்களோ அது யூனியன் ஹிந்தியன்று என்று கூறலாம். ஏனென்றால் விதி 351 சொல்லும் யூனியன் ஹிந்தி உருது மொழிக்கோ ஹிந்துஸ்தானிக்கோ எதிராக இருக்க முடியாது.

36. இந்த மூன்றாவது பகுதியில், சுதந்திர இந்தியாவில் தோன்றிய புதிய பிரச்னை என்னவென்றால் ஹிந்தி ஒரு அரசியல் வடிவத்தையும் பெற்றுவிட்டது. வடநாடு உருதுக்கும் ஹிந்துஸ்தானிக்கும் வேறாகவுள்ள தங்களுடைய ஹிந்தி மொழிதான் யூனியன் மொழியாக இருக்கும் என்று கருதினால் பாராளு மன்றம் முதலிய அமைப்புக்களும் அதன்படியே வேலை செய்யும். அலகாபாத்திலுள்ள ஹி.சா.ச. ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் இந்த ஹிந்தியை வளர்ப்பதற்காகவே தன்னுடைய வார்தா சமிதி மூலம் வேலை செய்து வருகிறது. வார்தா சமிதியின் மூலம் நடைபெறும் வேலையைச் சுருசுருப்பாயோடு வைத்திருப்பதற்குப் பாக்கிஸ்தானுக்கு விரோதமாகவுள்ள எண்ணங்களும் மற்றவைகளும் நன்கு பயன்படுத்திக்கொள்ளப்பட்டன. இதன் எதிராக அந்த அந்தப் பிராந்தியங்களில் வேலை செய்த மஹாராஷ்டிர ராஷ்ட்ர பாஷா சபா, அஹமதாபாத் குஜராத் வித்தியாபீடம் போன்ற அமைப்புக்கள் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. அரசியல் அமைப்பின் கீழ்ப் பேசப்படும் ஹிந்திக்கும் ஹி.சா.ச. பரப்பும் இந்த ஹிந்திக்கும் வேறுபாடு உண்டு என்பதை யாரும் துணிந்து எடுத்துச் சொல்லவில்லை. அத்தகைய ஒரு எதிர்ப்பு முதன் முதலாகப் பம்பாய் ராஜ்யத்திலிருந்துதான் வந்தது. இது பற்றி இனிப் பேசுவேன்.

37. இங்கே கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. அரசியல் அமைப்பின் மொழிக் கொள்கை எங்ஙனம்

தங்களுடைய கல்வி, பண்பாட்டுத் துறைகளை பாதிக்குமோ என்று ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களுக்கு ஒரு அச்ச மனப்பான்மை ஏற்பட்டது. மேலும் பொதுப் பணிகளுக்குச் செல்லக்கூடிய தங்கள் உரிமை ஹிந்தியி லிருந்து ஆங்கிலத்திற்கு மாறும்பொழுது எவ்வாறு பாதிக்கப்படுமோ என்ற அச்சமும் சிறப்பாக இருந்து வந்தது. இத்தகைய ஒரு மாற்றம் மச்சனி னுடைய சமூதாய வாழ்க்கையிலும் ஒரு புரட்சியை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. சர் ஐவர் ஜென்னிங் தம்முடைய சொற்பொழிவில் குறிப் பிட்டதைப் போல அது இன்னும் அதிகமான ஒரு காரியத்தைச் செய்தது.

"ஹிந்தி மொழி தேசிய மொழியாகுமேயானால் வட நாட்டிலுள்ள ஹிந்திப் பேசும் மக்கள் இன்றுள்ள ஆங்கிலம் பேசும் மக்களைப் போல அதிகாரஞ் செய்கின்ற இனமாக ஆகிவிடுவார்கள். ஆங்கிலத்தைப் பொறு த்த மட்டில் ஒருவருக்கும் சொந்தமில்லாமையால் அனைவரும் சம உரிமையோடு அதனைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால் ஹிந்தி ஒரு சிலருக்கு வசதி செய்துவிட்டு ஒரு சிலருக்குப் பயன்படாமற் போய்விடும்." (ஷெ பக்கம் 48)

38. இத்தகைய ஒரு சூழ்நிலை கிழக்கிலிருந்தும் தென்னிந்தியாவி லிருந்தும் புறப்பட்ட இரண்டு மறுப்புக்களை எதிர்நோக்கி நின்றது. (1) ஆங்கிலத்தை நிறுத்திக்கொள்வதனால் எவ்விதமான மதிப்புக் குறைவும் இல்லை என்று சொல்லப்பட்டு, ஹிந்திக்கு எதிர் மொழியாக எக்காலத் திலும் அது இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. (2) வட மொழியையாவது ஆந்தர பாஷாவாகக் கொள்ளலாம். ஏனென்றால் அத னைக் கற்றுக்கொள்ள வேண்டிய நிலை அனைவருக்கும் பொதுவாக இருக்கும். பழமையை மீட்டும் உயிர் உண்டாக்கும் ஒரு முயற்சியும் இதில் அடங்கியுள்ளது.

இவை அனைத்தும் தோல்வி மனப்பான்மையையும் பிரச்னையை விட்டு ஓடிப்போகும் மனப்பான்மையையும் காட்டுகின்றன ஆதலால் இவை சூழ்நிலையைத் தெளிவுபடுத்தப் பயன்படமாட்டா. இந்தப் பிராந்தியங்களில் ஹிந்தி மொழியைப் போதித்துப் படிப்படியாக வளர்ப்பதற்குரிய உண்மை யான முயற்சிகளை இது தடை செய்தது. யூனியன் நிலையிலும் ராஜ்யங் கள் நிலையிலும் அகில இந்திய முறையில் ஒரு திட்டத்தை மேற்கொள்ள ளவோ விதி 351-ன்படி ஒரு திட்டத்தை வகுக்கவோ கொண்டு செலுத்த வோ முடியாமற் போயிற்று.

(ஓ)

39. மேற்கிந்தியாவில் ஸ்ரீ பி. ஜி. கர் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ அரசாங்கம் நல்ல முறையில் பணியாற்றியது. நாம் குறிப்பிட்ட படி ராஜ்யத்திலுள்ள பள்ளிக்கூடங்களில் ஹிந்தி போதனை தொடங்கப் பட்டது. இப்பொழுது அரசியல் அமைப்பே இவ்வேலையைச் செய்ய ஏற்றுக் கொண்டது. அன்றியும் விடுதலை பெற்ற இந்தியாவின் மொழிக் கொள்கையையும் அது எடுத்துக் கூறியது. இவ் விஷயத்தில் பம்பாய் அரசாங்கம் சும்மா இருந்துகொண்டு தன் காலின் கீழ் வெள்ளத்தை ஓடவிடவில்லை. அது ஹிந்தி போதனைக் குழு (மே 1950) என்ற ஒரு குழுவை ஏற்படுத்தி "இந்த ராஜ்யத்தில் ஹிந்திப் படிப்பை வளர்ச்சி அடையச் செய்வதற்கு வேண்டிய சிபார்சுகளைச் செய்ய" அக்குழுவை வேண்டிக்கொண்டது. மேலும் அக்குழு "அரசியல் அமைப்பின் 343-351 விதிகளையொட்டி" சிபாரிசுகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்திய அரசியல் அமைப்பு வருவதற்கு முன்னரே கூட பம்பாய் அரசாங்கம் ஹிந்தி மொழிக் கொள்கை பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தது. எனவே 1949-க்கு முன்னர் கூட வார்தா சமிதியால் பரப்பப்பட்ட பிராந்திய ஹிந்தி மொழியை வேண்டா மென்று மறுத்து காந்திஜீயால் முன் மொழியப்பட்டுக் காங்கிரஸால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹிந்தி-ஹிந்துஸ்தானி மொழியையே ஏற்றுக்கொள்ள விரும்பியது. என்றாலும் அரசியல் சபை இவ்விஷயத்தில் செய்யப் போகும் முடிவை எதிர்பார்த்து பம்பாய் அரசாங்கம் தன்னுடைய இந்தக்

கொள்கையை நிறைவேற்றுமல் விட்டு வைத்தது. 1950-ம் ஆண்டு இது இடைத்தவுடன் மேலே கூறிய ஒரு குழுவைப் பம்பாய் அரசாங்கம் உடனே நியமித்தது.

40. அரசியல் அமைப்பின்படி ஹிந்தி மொழியை வளர்க்க வேண்டிய நிலைமையை எடுத்துக்கூறும் அறிக்கை ா• இன்று வரையில் இந்தக் குழுவின் அறிக்கை ஒன்றுதான் இருந்து வருகிறது என்று சொல்லலாம். இது வரையில் இந்த ஆவணத்திறகுக் கொடுக்கப்பட்ட மதிப்பைக் காட்டிலும் அதிகமாகத் தந்து இதனை நன்கு கவனிக்க வேண்டும். இன்றுள்ள ராஜ்யங்களும் யூனியனும் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டிய மிக முக்கியமான விஷயங்கள் சிலவற்றை இது சிபார்சு செய்கிறது. (1) ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் பள்ளிக்கூடங்களில் ஹிந்தி மொழியைக் கற்பிக்கும் முறை அமைப்பு ஆகியவற்றை இது பேசுகிறது. (2) பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படவேண்டிய ஹிந்தியின் இயல்பைப் பற்றிப் பேசுதல்: அதாவது அரசியல் அமைபபில் சொல்லப்பட்ட ஹிந்தியின் இயல்பும் வடிவமும். (3) ஹிந்தி போதிக்கும் ஆசிரியர்களையும் பாடப் புத்தகங்களையும், பாடத் திட்டங்களையும் தயாரிக்கும் பிரச்னை முதலியன.

41. ராஜ்யத்தில் ஹிந்திப் பிரசாரம் செய்து வருகின்ற அதிகார பூர்வமல்லாத அமைப்புக்களை எந்த முறையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது பற்றிய சிபார்சுகளையும் இக்குழு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அரசாங்க ஊழியர்கள் அரசியல் அமைப்பின்படி தேவைப்பட்டால் தங்களுடைய வேலைகளை ஹிந்தி மொழியில் செய்வதற்குரிய பயிற்சியைப் பெறுவதற்கு எத்தகைய அதிகார பூர்வமல்லாத ஹிந்தி பரீட்சையை அரசாங்க ஊழியர்கள் எழுத வேண்டும் என்பது பற்றியும் இக்குழு சிபார்சு செய்ய வேண்டிக் கொள்ளப்பட்டது.

42. இந்தக் குழுவின் சிபாரிசுகள் இப்பிரச்னைகளுக் கெல்லாம் முடிவு காணும் முறையில் செய்யப்பட்டபொழுது அது ஓர் உண்மையை வெளியிட்டது. அதாவது அரசியல் அமைப்பில் விதி 343–351 வரையில் சொல்லப்பட்ட ஹிந்தி மொழி அதே அரசியல் அமைப்பில் 8–வது ஷெட்யூலில் சொல்லப்பட்ட பிராந்திய ஹிந்தி மொழியினும் வேறுபட்டது என்பதேயாகும். அரசியல் அமைப்புக் கூறும் இந்த ஹிந்தியைத்தான் பள்ளிக்கூடங்களில் கற்றுத் தரவேண்டும். அதிகார பூர்வமற்ற ஹிந்திப் பிரசார அமைப்புக்கள் இந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு கடைப்பிடித்தனவாதலால் அதனையே அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

43. பம்பாய் அரசாங்கம் இந்தக் குழுவின் சிபார்சுகள் அனைத்தையும் ஒப்புக்கொண்டு ராஜ்யத்தில் நடைபெறும் ஹிந்தி வேலையை அதற்கேற்றபடி மாற்றி அமைக்கத் தொடங்கியது. 5-ம் வகுப்பிலிருந்து 11-ம் வகுப்பு வரை எஸ். எஸ். எல். ஸி. பகுதியில் ஹிந்தி போதனை கட்டாயமாக்கப்பட்டது. அரசாங்க ஊழியர்கள் ஹிந்தியில் ஒரு குறிப்பிட்ட பரீட்சையை எழுத வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டார்கள். இந்தக் குழுவை மீண்டும் உயிர்ப்பித்துச் சில ஆட்சிச் சொற்களுக்கு ஏற்ற ஹிந்தி வார்த்தைகளைக் கண்டு பிடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. 351-வது விதியில் கூறப்பட்டபடி ஹிந்தி மொழியின் மரபு கெடாதபடி ஏனைய மொழிகளிலிருந்து வேண்டுமான வார்த்தைகளை எடுத்து சீரணித்துக்கொள்ளவேண்டும் என்ற கருத்தை மனத்தில் வாங்கிக்கொண்டே இக்குழு வேலை செய்யத் தொடங்கியது.

(ஓ)

44. இதில் முக்கியமான சமாசாரம் என்னவென்றல் அரசியல் அமைப்பில் சொல்லப்பட்ட ஹிந்தியைப் பற்றிய முக்கியமான சிபார்சை ஏற்றுகொண்டதாகும். இக்குழு இவ்விஷயம் பற்றிக் கண்ட விஷயங்களை "நம் மொழிப் பிரச்னை" என்ற என்னுடைய நூலின் பக்கம் 26 முதல் 41 வரை உள்ள பகுதிகளில் காணலாம். இந்நூலின் ஒரு பிரதியை ஆ.மொ.க. உறுப்பினர்களுக்குத் தந்துள்ளேன். ஆதலின் இங்கே அதனைச் சேர்க்க வேண்டிய தேவையில்லை. அந்நூலைப் படித்து அறிந்துகொள்ளுமாறு அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

45. இந்த குழுவின் சிபாரிசுகள் அந்தப் பிராந்தியத்துக்கு மட்டும் தேவைப்படுபவை என்பதோ டல்லாமல், அகில இந்தியாவுக்கும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதுமாகும். "இரண்டு ஹிந்திகள்" என்ற கொள்கை இக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டது. வட நாட்டிலுள்ள ஹிந்தி ஆதரவாளர்களிடையே இது பெரியதொரு எதிர்த்தாக்குதலை உண்டாக்கிற்று.

46. ராஜ்யத்தின் முதல் அமைச்சர் ஸ்ரீ பி. ஜி. கர் தம்கூரில் (மைசூர்) 1951 ஜூன் 12-ந்தேதி நடைபெற்ற பிரமணபத்தர் வித்ராஜேத்ஸ்வ விழாவில் தலைமை வகித்து அரசியல் அமைப்பில் காணப்பட்ட ஹிந்தியைப் பற்றிக் கீழ் வருமாறு கூறினர் :—

"அதிர்ஷ்டவசமாக அரசியல் அமைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாட்டின்படி தேசீய மொழியின் பெயர், வரி வடிவம், ஆகியவை பற்றிய போராட்டம் இப்பொழுது ஒழிந்தது. ஆனால் மற்றுமொரு பெரிய ஆபத்து நம்மை நோக்கி உள்ளது ஆதலின் அதிலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்ளவேண்டும்.

"நம்முடைய தேசீய மொழியின் பெயர் ஹிந்தி என்றிருப்பதனால் ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ளவர்கள் அவர்களுடைய சொந்த ஹிந்தியை நாடு முழுவதிலும் தேசீய மொழி என்ற பெயரில் சுமத்திவிட விரும்புகின்றார்கள். ஆனால் முழுத் தன்மையின் இடத்தை என்றுமே குறைத் தன்மை நிரப்ப முடியாது. இந்தப் பிராந்திய நண்பர்கள் அரசியலில் கூறப்பட்ட ஹிந்தி, உத்தர பிரதேசம், பீஹார், மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளிலுள்ள ஹிந்தியோடு தொடர்புடையது அன்று என்பதையும் வேறுபட்டது என்பதையும் அது மெள்ள வளர வேண்டிய இயல்புடையது என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். இவை அனைத்தும் தேசீய மொழியின் ஆக்கத்திற்குப் பெரிதும் உதவி செய்யுமேதவிர அவை 'தேசீய' மொழியாக ஆக முடியாது. இந்த வேறுபாட்டை நன்கு வெளிக்காட்டவே தேசீய மொழியை ஹிந்தி-ஹிந்துஸ்தானி அல்லது ஹிந்துஸ்தானி என்றே மகாத்மா காந்தி குறிப்பிட்டார்........." (ஹரிஜன் ஜூலை 14, 1951, பக்கம் 170).

47. "அரசியல் அமைப்புக் கூறும் ஹிந்தி" என்ற தலைப்பில் 1951, ஜூன் மாதம் 23-ந்தேதி ஹரிஜனில் நான் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். அதைக் குறிப்பிட்டு சி. பி. யிலுள்ள ஸ்ரீ கன்ஷியாம் சின்ஹா குப்தா 1951, செப்டெம்பர் 22-ம் தேதி ஹரிஜனனில் கீழ் வருமாறு எழுதினார் :—

"1951 ஜூன் 23-ம் தேதி ஹரிஜனில் ஸ்ரீ எம் பி. தேசாய் எழுதிய கட்டுரையை மிகவும் கவனத்தோடு படித்தேன். அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள ஹிந்தி வேறு என்பதை அவருடன் சேர்ந்து நானும் ஒப்புக்கொள்ளுகிறேன். அது சர்வ தேசீய பாஷையே தவிர டில்லி, லக்னோ, அலகாபாத், ராய்ப்பூர் போன்ற இடங்களில் பேசப்படும் பிராதேச மொழியன்று. அது இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளிடமிருந்தும் கடன் வாங்கிக் கொண்டு நன்கு வளர வேண்டிய ஒரு மொழியாகும்......"

48. ஸ்ரீ பி. டி. தாண்டனுக்கும் ஸ்ரீ காக்கா சாஹேப் கலேல்கருக்கும் இது பற்றி நடந்த ஓர் உரையாடல் பெரிய உண்மை ஒன்றைத் தெரிவிக்கிறது. காக்கா சாஹேப் அவருடைய பத்திரிகையாகிய மங்கல் பிரபாதத்தில் 1952-ல் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில நாட்களுக்கு முன்பு தான் வர்தாவில் மதிப்புக்கு உரிய தாண்டன் அவர்களைச் சந்திக்கும் பேறு கிடைத்தது. எவ்வளவோ ஆண்டுகளுக்கு பிறகு இருவரும் ஒன்றாய் அமர்ந்து மனம் விட்டுப் பேச முடிந்தது.

இந்தச் சந்திப்பின்போது தாண்டன் அவர்கள், ஒரு கேள்வியைக் கிளப்பினர்.—"ஐக்கியப் பிரதேசத்தின் (உத்திரப் பிரதேசத்தின்) பிரதேச மொழியாக வழங்கும் ஹிந்தி வேறு, தேசம் முழுவதுக்கும் பொதுவான ஹிந்தி வேறு என்று சிலர் பொய்ப் பிரசாரம் ஏன் ஆரம்பித்திருக்கிறார்கள்? அரசியல் சட்டத்தில் அடங்கிய சொற்களை எமது எழுத்து அர்த்தம் செய்துகொண்டு ஹிந்தி ஒரு மொழியல்ல, இரண்டு மொழிகள் என்று கூறுவது எவ்வளவு தூரம் பொருந்தும்?"

அதற்குப் பதிலாக நான் கூறியதாவது.—"பிரதேச ஹிந்தி மொழி, தேசீய ஹிந்தி மொழி என்ற பாகுபாடு இவர்கள் ஆரம்பித்த தன்று. பேராசிரியர் தீரேந்திர வர்மா என்றோ அதை ஆரம்பித்து வைத்து விட்டார். 'தேசீய மொழி' என்ற மகுடத்தைச் சூட்டுவதற்காக எங்கள் ஹிந்தியின் உருவத்தையே நீங்கள் மாற்றுவதாயிருந்தால், அந்த மகுடம் எங்களுக்குத் தேவையில்லை. எங்கள் பிரதேச ஹிந்தி எப்படி இருக்கிறதோ அப்படியே இருக்க விட்டு விடுங்கள். மகுடம் வேண்டுமென்ற ஆசையால் எங்கள் உடலையே சிதைப்பதற்கு நாங்கள் யாரையும் அனுமதிக்க மாட்டோம். தேசீய பாஷையை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் உருவாக்கிக்கொள்ளுங்கள். ஆனால் எங்கள் ஹிந்தியைக் கெடுத்து விடாதீர்கள்" என்று அவர் கூறினர். அச்சமயம் காந்திஜி ஹிந்துஸ்தானி என்ற சொல்லைக்கூட உச்சரித்ததில்லை. அவர் ஸம்மேளனத்திற்கு உட்பட்டே இருந்தார். எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் இயல்பைப் பற்றியே அவர் பிரஸ்தாபித்து வந்தார். (மூலம் ஹிந்தி.)

மஹாமஹோபாத்யாய போந்தார், மதிப்பக்குரிய மகன் பாயி தேஸாயி ஆகியோர் அரசியல் சட்டத்திற்கு விதிகளுக்கும் ஆணைகளுக்கும் (ஏற்பாடு கட்டும்) செய்துகொள்ளும் அர்த்தத்தை மறுக்க முடியாது. பிரதேச ஹிந்தி. தேசீய ஹிந்தி என்ற இரு மொழிகளை அவர்கள் கற்பித்து கொண்டிருப்பது வெளிப்படை. இருந்தபோதிலும் நீங்களாவது வேறு யாராவது உடல் நலம் குன்றிப் போகும்படியான கலக்கமடையும்படியான வேற்றுமை இவ்விரண்டு ஹிந்திகளிடையே ஏற்பட்டு விடாது. (மூலம் ஹிந்தி.)

49. யூனியன் ஹிந்திக்கும் பிராந்திய ஹிந்திக்கும் உள்ள இந்த அடிப்படையான வேறுபாட்டைக் குறிப்பிட்டுள்ள பல முக்கியமான மனிதர்களும் உண்டு. இன்னும் சில மேற்கோள்களைத் தெளிவாக்குவதற்காக இங்கே தருகிறேன.

அகில பாரதீய ஹிந்தி பரிஷத் என்ற பெயரில் 1950-ல் அகில இந்திய அமைப்பு உருவாக்கப்பட்டது. அரசியல் அமைப்பு விதி 351-ல் கூறியுள்ள ஹிந்தியை வளர்ப்பதற்காகவே இவ்வமைப்புத் தோன்றியது. லோக் சபாவின் தலைவராயிருந்த காலஞ் சென்ற ஸ்ரீ ஜி. வி. மாவலங்கர் அதனுடைய தலைவராக இருந்தார். 1950 ஜூன் 24, 25, 26 தேதிகளில் பம்பாயில் கூடிய பஸ்ஹிம பாரத் ராஷ்டிர பாஷா ஸம்மேளனத்திற்கு தலைமை வகித்து அவர் பேசியதாவது —

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், தேசீய மொழியின் பெயர் ஹிந்தி என்பதாக வைக்கப்பட்டபோதிலும், அது உத்தரப் பிரதேசம், ராஜஸ்தானம் முதலிய பகுதிகளில் எந்த உருவத்திலும், முறையிலும், நடையிலும் பேசப்படுகிறதோ, அதே ஹிந்திதான் நமது தேசீய மொழி என்று நினைப்பதோ, பிடிவாதம் பிடிப்பதோ பெரிய தவருகும். அரசியல் சட்டத்தில் ஹிந்தியின் வடிவம், நோக்கம் இவற்றை விவரிக்கும் பகுதியைக் கவனியுங்கள்—

"ஹிந்தி மொழியை மேலும் மேலும் பரவச் செய்து அதை வளம் பெறச் செய்வதால் அது பாரதத்தின் (குறிப்பிட்ட பிரதேசத்தின் அல்ல) ஒன்று கலந்த பண்பாட்டின் எல்லா அம்சங்களையும் பிரதிபலிக்கும் கருவியாக அமைய முடியும்."

ஒவ்வொரு பிரதேசத்திலும் நடையுடை பாவனை, உணவு முறை, இலக்கியம், காவியம், கலை முதலியவற்றில் என்னென்ன விசேஷத் தன்மைகள் உள்ளனவோ அவற்றை வெளியிடும் சக்தி தேசீய ஹிந்தி மொழிக்கு இருக்க வேண்டும். அவ்வளவு பரந்த முறையில் தேசீய ஹிந்தியின் உருவம் அமையாத வரைக்கும் பூர்த்தியான அளவில் பாரதத்தில் ஒருமைப்பாடு எட்டாக் கனியாகவே இருக்கும். ஹிந்தி மொழியைப் பேசுபவர்கள் மற்றப் பிரதேச மொழிகளை ஆக்ரமிக்கப் பார்க்கிறார்கள் என்ற எண்ணத்திற்கு இடமே இருக்கக்கூடாது. பாரதத்தின் முழுமையான கட்டுக்கோப்புக்கு இது பெரிய இடையூறாக முடியும். ஆகவே, தேசீய ஹிந்தி மொழியின் வடிவம் உத்தரப் பிரதேச மக்களின் தாய் மொழியான ஹிந்தியிலிருந்து வேறுபட்டிருப்பதும், வெவ்வேறு பிரதேச மொழிகளின் தன்மைக்கு அது உட்படுவதும், வெவ்வேறு பிரதேசங்களில் அதன் வடிவம் சிறிது வெவ்வேறாயிருப்பதும் இயல்பேயாகும். இதில் அஞ்சவேண்டிய விஷயம் எதுவும் இல்லை. தேசிய ஹிந்தியில் இவ்வித வேறுபாடுகள் ஏற்படுவதற்குக் கட்டாயம் இடமிருக்கிறது. இதனால் இயற்கையான முறையில் இம்மொழி மலர்ச்சியடைவதோடு, பரஸ்பர நேசமும் மதிப்பும் அதிகரித்து வரும். பிரதேச மனப்பான்மை வேரூன்ற முடியாது. (மூலம் ஹிந்தி).

50. அகில இந்திய காங்கிரஸின் செயற்குழு போன்ற ஒரு முக்கியமான அமைப்புகூட இவ்விஷயம் பற்றிச் சென்ற ஆண்டுகளில் பேச நேரிட்டது. 1954 ஏப்ரல் மாதம் 4-ம் தேதி கூடிய அதனுடைய கூட்டத்தில் மொழிக் கொள்கை பற்றி இரண்டு முக்கியமான தீர்மானங்களை அது நிறைவேற்றியது. நாட்டிலுள்ள சூழ்நிலையைத் தெளிவுபடுத்திப் போதனா மொழி பற்றியும், பொதுப் பணிப் பரிட்சைகளுக்குரிய இடைநிலை மொழி பற்றியும் இவ்வாறுதான் செய்ய வேண்டும் என்று நாட்டுக்கு வழி காட்டும் முறையில் அவை அமைந்துள்ளன. அத் தீர்மானங்கள் மிக உறுதியாக, இவைகள் பிராந்திய மொழிகளிலேயே இருக்க வேண்டும் என்று விரிவாகச் சொல்லியுள்ளன. கூடவே கீழ்க்கண்ட முறையில் ஹிந்தியைப் பற்றியும் அதன் வளர்ச்சிப் பற்றியும் அதே தீர்மானம் பேசிற்று.

> "அரசாங்கம் தன்னுடைய கல்வி முறையாலும், ஏனைய சாதனங்களாலும் ஹிந்தி மொழியைப் பிராந்திய மொழி என்ற முறையிலும் அகில இந்திய மொழி என்ற முறையிலும் ஆட்சித் துறைக்கும் மற்றத் துறைகளுக்கும் வளர்த்துக்கொள்ள வேண்டிய குறிக்கோளைப் பெற்றிருக்க வேண்டும். அதே நோக்கில் அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள ஏனைய பிராந்திய மொழிகளும் வளர்ச்சி அடைவதற்குப் பெரிதும் உதவ வேண்டும். இந்தக் குறிக்கோள் என்னவென்றால் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளின் மூலமாகவும் ஒரு அகில இந்திய இலக்கியத்தை வளர்த்து வதேயாகும். ஆதலால் இம்மொழிகள் ஒன்றோடொன்று பெரிதும் தொடர்பு கொண்டு இருத்தல் வேண்டும். ஹிந்தி மொழி அகில இந்திய தேசிய மொழியாக இருத்தலில் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் கட்டாய பாடமாக ஆக்கப்படுவதோடு ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ளவர்கள் குறைந்த அளவு மற்றொரு இந்திய மொழியை யாவது கற்றுக் கொள்ள வேண்டும்."

51. இந்நாட்களில் இவ்விஷயம் பாராளுமன்றத்திலும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 1954 ஏப்ரல் ஸ்ரீ பி. டி. தாண்டனும், ஸ்ரீ கோவிந்த தாஸும் உருது மொழி இந்தியாவிற்கு வெளியிலிருந்து வந்த பிற நாட்டு மொழி என்றும் அதனை ஆதரித்தால் இந்தியப் பண்பாடு கெட்டுவிடும் என்றும் மிகவும் வலுவாகப் பேசினார்கள். மொழிப் பிரச்னைக்கு இத்தகைய முறையில் முடிவு காணப் புறப்பட்டதை பலரும் வெறுக்க நேரிட்டது.

52. இந்நாட்களில் காங்கிரஸ் பாராளு மன்றக் கட்சி இரகசியமாக இப் பிரச்னைப் பற்றி ஆராய்கின்றது என்று பத்திரிகைகள் கூறின. பிரதம மந்திரி இக்கூட்டத்தில் பேசினர். முக்கியமானதும அடிப்படையானதுமான இப்பிரச்னையின் பல்வேறு பகுதிகளையும் அவர் எடுத்துக் காட்டினர். அரசி யல் அமைப்பில் காணப்பட்ட ஒரு பொது மொழி என்பதை "பல்வேறு இடையூறுகளும் நிறைந்துள்ள இப்பிரச்னையை இவ்வளவு அதிகப்படியான மக்கள் ஒப்புக்கொள்ளும் முறையில் நிறைவேற்றியது மிகப் பெரிய சாதனை" என்று அவர் கூறினர். மேலும் அவர் வட நாட்டிலுள்ள மக்கள் " இன்னும் வேண்டுமான அளவு நீங்கள் ஒன்றுஞ் செய்யவில்லை" என்று சப்தமிடுவதில் பயனில்லை என்றும் எச்சரிக்கை செய்தார். மிக நீண்ட முறையில் ஹிந்தியின் இயல்பு வடிவம் எது என்பது பற்றியும் அவர் ஆராய்ந்து பேசினர். "ஹிந்தியைப் பிராந்திய மொழி என்ற முறையில் எல்லாப் பிராந்திய மொழிகளோடும் சமமாக வைத்து ஒரு முறையிலும் அகில இந்திய ஆட்சி மொழி என்ற ஒரு தனிப்பட்ட முறையிலும் ஆக இரண்டு வகையிலும் அதனைக் கருத வேண்டும். இவை இரண்டும் ஓரளவு தொடர்புடையன என்றாலும் ஓரளவு மாறுபட்டன. பிராந்திய மொழி என்ற முறையில் ஒரு பிராந்திய மொழிக்குள்ள வளப்பம் அதனிடம் இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால் அதே வளப்பத் தை அகில இந்திய மொழியாக உள்ள அதனிடம் ஏற்ற விரும்பினல் மற்றவர்களுக்குப் பெருந் துன்பம் உண்டாகும்." இவ்வாறு சொல்வ தனல் அகில இந்திய மொழி என்பது "பல்வேறு மொழிகளின் கலப்படம் அன்று" என்பதையும் அவர் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் "செயற்கை முறையில் தயாரிக்கப்படும் ஒரு கலப்படம் மொழித் துறையி லும், பண்பாட்டுத் துறையிலும் மிகவும் ஆபத்தான ஒன்றாகும். கலப் படத்தை நான் விரும்புகின்றேன்; அதனை வரவேற்கின்றேன். ஆனல் அவை தாமாக வளர்ந்து ஆக்க முறையில் வர வேண்டுமே தவிரச் செயற்கை முறையில் திணிக்கப்படக்கூடாது."

(1954 மே மாதம் 17-ந் தேதி வெளியான **டைம்ஸ் ஆப் இந்தியா** பத்திரிகை பிரதமரின் சொற்பொழிவை வெளியிட்டுள்ளதை அப்படியே இங்கே எடுத்துக் கூறியுள்ளேன).

(ஔ)

53. ஹிந்தி வளர்க்கும் அமைப்பின் வரலாறு 1955-ல் ஜனதிபதி ஆட்சி மொழிக் கழகத்தை நிர்மாணித்தவுடன் முடிந்துவிடுகிறது. அக்கழகத்தி னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலை வரையறுத்த முறையில் உடனடியாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று. "யூனியன் ஆட்சி மொழியாக ஆங்கிலத்தைப் படிப்படியாக நீக்கிவிட்டு ஹிந்தி மொழியைப் புகுத்துவதற்குரிய கால அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும்படியும், ராஜ்யங்களின் இடையேயும், ராஜ் யங்களுக்கும் யூனியனுக்கும் இடையேயும் கருத்துப் பரிமாறிக் கொள்ளும் மொழியாகவும் ஹிந்தியை ஏற்றுக்கொள்வதற்குரிய கால அட்டவணை ஒன்றையும் இக்கழகம் தயாரிக்க வேண்டும் என்று ஜனதிபதி கட்டளையிட்டார். ஆட்சி விவகாரங்கள் என்று சொன்னதில் இந்திய அரசி யல் அமைப்பின் 348-வது விதியில் சொல்லப்பட்ட சட்டங்கள், நீதிமன்றங் கள் ஆகியவைகளும் அடங்கும். 1956 முதல் 1960 முடிய உள்ள 5 ஆண்டுகளுக்கு இடையே நடைபெற வேண்டிய வேலை பற்றியும் இக்கழகம் அறிவிக்கும். அடுத்த கழகம் 1965-ல் இவ்வேலை முடிவடைவதற்குரிய முறையில் சமர்ப்பிக்கும். கல்வித் துறைப் பிரச்னைகள் ஆ.மொ.க. வின் வேலைகளில் ஒன்று அன்று. என்றாலும் பொதுப் பிரச்னையை ஆராயும் பொழுது அப்பிரச்னைக்கு அடிப்படையாகவுள்ள விஷயங்களும் வினக்களும் வந்து சேருமாதலால் அவற்றையும் ஓரளவு ஆராய வேண்டி இருந்தது. அதற்குமேல் அதிகப்படியான தொடர்பு ஒன்றும் இல்லை.

54. கல்வித் • துறையில் உள்ள பிரச்னைகளை இரண்டு முக்கியமான அமைப்புக்கள் இதுவரை ஆராய்ந்து அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. உயர்தரக் கல்வி பற்றி ராதாகிருஷ்ணன் கழகமும், இடைநிலைக் கல்வி பற்றி முதலியார் கழகமும் வெளியிட்ட அறிக்கைகளையே இங்கே குறிப்பிடுகிறேன். மேலும், கல்வி என்பது பிராந்திய மொழிகளோடு பெரிதும் தொடர்புடைய ராஜ்ய விஷயமேயாகும். விரைவில் ராஜ்யங்கள் மொழி வாரி அடிப்படையில் மாற்றி அமைக்கப்படப் போகின்றன. எனவே அவற்றின் மொழிகளை வளர்க்கும் உரிமையும் அவற்றிற்கு வேண்டும். இதனைத்தான் அரசியல் அமைப்பும் விரும்புகிறது. அவ்வவற்றிற்குரிய துறைகளில் யூனியன் மொழியோடு சேர்ந்து போரிட்டு அவற்றிற்குரிய நிலைகளில் இம்மொழிகள் பரவ முயல வேண்டும். தேசிய வளர்ச்சிக்காக நிறுத்திக் கொண்டு பயன்படுத்தவேண்டும் என்று நினைக்கும் ஆங்கில மொழியோடு இப்போராட்டம் நடைபெற வேண்டும்.

55. ஹிந்தியைத் தேசிய ஆட்சி விவகாரங்களுக்கு ஆந்தர் பாஷாவாகப் பயன் படுத்தும் பிரச்னை ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் மட்டும் தோன்றுகின்ற பிரச்னை அன்று. அவர்களைப் பொறுத்த மட்டில் அம் மொழியைக் கற்றுக்கொள்ளும் வேலை தொடங்கப்பட வேண்டும். அவ்வாறு செய்யும்பொழுது ராஜ்ய ஆட்சி விவகாரங்களிலும் கல்வித் துறையிலும் அவர்களுடைய பிராந்திய மொழிகள் முழுவதும் பயன்படும் என்ற ஓர் உறுதிமொழியை அவர்களுக்குத் தர வேண்டும். ராஜ்ய எல்லையில் அவர்களுடைய பிராந்திய மொழிகளால் ஆங்கிலத்தை நீக்கவும், அதற்குமேல் தேவையான சூழ்நிலை ஏற்பட்டவுடன் ஹிந்தியைக் கற்றுக் கொண்டு ஹிந்தியால் ஆங்கிலத்தை ஓரளவு நீக்கவும் அவர்கள் தயாராக வேண்டும்.

56. ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ளவர்கள் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான வேலையும் உண்டு. மற்றவர்களைப் போலவே அவர்களும் அவர்கள் பிராந்திய மொழியாகிய ஹிந்தியை அவர்கள் விருப்பம்போல் வளர்க்கவேண்டும். விதி 351-ல் கூறப்பட்ட புத்திமதிகளை அவர்கள் அறிந்து நடந்துக்கொள்வது மிகவும் பயனுடையதாகும். அகில இந்தியக் காரியங்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய முக்கியமான பணி யாதெனில் அவர்கள் பிராந்திய மொழியாகிய ஹிந்தியைப் பிற மொழிப் பிராந்தியங்களில் பரப்பாமல் இருக்கவேண்டும். அத்தகைய ஒரு காரியம் இப்பொழுது தேவையில்லை. இன்றுள்ள தேசிய மனப்பான்மை இவ்வாறு அம் மொழி பரப்பப்படுவதை வெறுக்கின்ற சூழ்நிலையில் இருக்கின்றது. அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு இந்திய மொழியும் அதன் அதனுடைய சூழ்நிலையில் நன்கு வளர்ச்சியடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படவில்லையா? எல்லா மொழிகளும் நவீன மொழிகளுக்குரிய முழு வளர்ச்சியும் பெற்று மனித சமுதாயத்திலுள்ள அறிவுத்துறை அனைத்தையும், நிகழ்சிகள் அனைத்தையும் எடுத்துக் கூறக்கூடிய அளவு வளம் பெற வேண்டும். இதற்கேற்ற முறையில் அவை அனைத்தும் ஒன்றோடொன்று கைகோர்த்துச் செல்வது நலம் பயக்கும்.

பேராசிரியர் " தின்கர் " அவர்களுடைய கருத்துக்கள்

57. இந்த விஷயத்தில், ஹிந்தி பேசும் மக்களுக்கு, ஸ்ரீ தின்கர் அவர்கள் சென்ற பிப்ரவரி மாதம் நடைப்பெற்ற பீஹார் ஹிந்தி சாஹித்திய சம்மேளனதில் கீழ்வருமாறு பேசினார் :—

" சமீபகாலமாக ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் ஒரு அச்சம் மிகுந்து வருகிறது. ஹிந்தி அரசாங்க மொழியாகுமானால் ஹிந்தி பேசும் மக்களுக்கு அதனால் ஒரு பெரிய இலாபம் எற்படும். அம்மக்கள் தங்களுடைய அதிகப்படியான எண்ணிகை என்ற ஒன்றையே வைத்துக்கொண்டு நாட்டின் பிற பகுதிகளில தங்கள் கருத்துக்களைத் திணிக்க முற்படுவார்கள் என்ற அச்சந்தான் அது.

ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள நாம் அவ்வாறு செய்ய விரும்பவில்லை என்பதை அறிவோம். என்றாலும் இந்த சந்தேகம் அவர்கள் மனத்தில் இருக்கத்தான் செய்கிறது. எனவே இப் பிரச்னை வரும்பொழுது நாம் வாய்மூடி மௌனிகளாக இருந்து விடவேண்டும். அப்பொழுதுதான் பிற மொழிப் பிராந்தியங் களிலுள்ளவர்கள் அரசாங்க மொழியின் பாதுகாவலர்களாகத் தாமே இருப்பதாக நினைந்து கொள்வார்கள். . . . "ஹிந்தி மொழி பேசும் நாம் ஏனைய மக்கள் விரைவாக ஹிந்தி மொழியை ஏற்றுக் கொள்ள வில்லை என்ற காரணத்திற்காக அவர்களைவிட நாம் மேம்பட்டவர்கள் என்று நினைப்போமேயானால் தவறு இழைத்தவர்களாக ஆவோம். இவ்விஷயத்தில் அவர்களை விட வசதியான நிலைமையில் இருக்கின்ற காரணத்தால் நாம் அவ்வாறு செய்யலாமா?...."

"இப்பிரச்னையை மற்றொரு கோணத்திலிருந்தும் ஆராயலாம். அதாவது கட்டாயப் படுத்தும் ஒரு கோணத்திலிருந்தும் ஆராயலாம். விடுதலை பெற்ற இந்தியா ஜனநாயக முறையை ஏற்றுக்கொண்டுள்ளது........... ஜனநாயக முறையில் பெரும்பான்மையோர் தாம் அனேகமாக ஆட்சி செய்கிறார்கள். என்றாலும் அடிப்படைப் பிரச்னைகளாகிய மொழி, சமயம், பண்பாடு என்பவற்றில் சிறு பான்மையினருக்கு இடந்தருவதோடு மட்டுமல்லாமல் அவர்கள் நன்கு வளர்ச்சியடையப் பெரிதும் உதவியும் செய்ய வேண்டும்..... இந்தியா முழுவதையும் ஒரே மொழியின் கீழ்க் கொண்டு வருவது இயலாத காரியம். எல்லாவகை மக்களின் இடையேயும்; ஒரே அரசாங்கத்தின்கீழும் வாழ வேண்டும் என்ற ஓர் எண்ணம் இருந்து வருவது கண்டு நாம் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் கொள்கிறோம். ஆங்கிலத்தை நீக்கி அரசாங்க மொழியாக ஹிந்தியைக்கொண்டு வர வேண்டும் என்ற முடிவையும் பெரும்பான்மையானவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இந்த முடிவு நடைமுறையில் மக்கள் விரும்பிச் செய்கின்ற ஒன்றாக இருக்க வேண்டுமே தவிரக் கட்டுப் பாட்டாலும், திணிப்பதனாலும் வரக்கூடிய ஒன்றன்று......."

"நம்முடைய தாய் மொழியாகவுள்ள காரணத்தால் ஹிந்தி மொழியை வளம்படுத்திப் பெருக்குவதில் நமக்கு முழு உரிமையும் உண்டு. என்றாலும் யூனியன் மொழியாகவுள்ள ஹிந்தி மொழியை வளர்ப் பதற்குத் தலைமை தாங்காமல் இருந்துவிடுவது இந்திய ஒற்று மைக்கு நாம் செய்கின்ற பெரிய உபகாரமாகும். இதற்குரிய காரணம் என்னவென்றால் அரசாங்க மொழியாகவுள்ளது, ஹிந்தியைத் தாய் மொழியாக உடையவர்களின் சொந்த சொத்தன்று. அது தேச மக்களின் உடைமையாகக் கைமாறிவிட்டது. எனவே அதற் குரிய தலைமைப்பதவியை நாம் மேற்கொள்ளும்பொழுது பிற மொழிப் பிராந்தியங்களிலுள்ளவர்கள் மிகுந்த அச்சத்தோடு இதனைக் கவனிக்கின்றார்கள். எனவே ஹிந்தியைத் தங்கள் மேல் திணிப்பதாகவும் அதன் மூலம் வடநாடு தென்னாட்டின்மேல் ஆட்சி செலுத்த முயல்வதாகவும் அவர்கள் கருதுகிறார்கள்."

58. பீஹாரில் பிரசித்தி பெற்ற ஹிந்திக் கவிஞராகவும், பேராசிரியராகவும், உள்ள ஸ்ரீ தின்கர்ஜி தந்துள்ள இந்தப் புத்திமதிகள் தென்னாட்டிலும் கிழக்கிலும் ஹிந்தியைப் பற்றி மக்கள் கொண்டுள்ள கூர்மையான ஆழ்ந்த உணர்சிகளை நன்கு எடுத்து விளக்குகிறது. இந்தப் பிராந்தியங்களிலுள்ள வர்கள் "பெரும்பான்மையோர் தலைமை வகிக்க முயல்வது சிறுபான்மை யோரை நசுக்குவதாகும் என்றும், சிறப்பாக அரசியல் காரியங்களுக்கு அப்பாற்பட்டுள்ள பண்பாட்டு விஷயங்களில் ஒரு கட்டாயத்தை கொண்டு வர முயல்வது நசுக்கும் வேலையேயாகும்" என்றும் கருதுகிறார்கள். அத்தகைய ஓர் எண்ணம் முற்றிலும் தவறானதாய், தேவையற்றதாய் இருக்கலாம்.

என்றாலும் அத்தகைய ஓர் எண்ணம் இருக்கும் வரையில் அதற்கேற்ற வகையில் காரியங்கள் செய்யப்பட வேண்டும். நமது பிரதமர் சொல்லியதைப்போல நம்முடைய மக்கள் அனைவரும் சேர்ந்து தங்கள் பொது அறிவினாலும் அரசியல் திறமையினாலும் அரசியல் சபையில் வகுத்துள்ள மொழிக் கொள்கை "ஒப்பற்ற சாதனையாகும்". அரை நூற்றாண்டாக நடைபெற்ற ஓர் இயக்கத்தில் கிடைத்த ஒப்பற்ற பரிசில் என்று கருதி இதனை நன்கு பாதுகாக்க வேண்டும்.

59. சுயராஜ்யத்தின் முக்கியமான உறுப்புக்களில் இந்தச் சாதனையும் ஒன்றாகும். ஆங்கில மொழியை அகில இந்தியாவுக்கும் பயன்படும் பொது மொழியாக வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லும் கட்சி இன்றும் இருந்து வருகிறது. "நம்மிடம் உள்ள இதனை உதறி எறிந்துவிடக் கூடாது" என்று அவர்கள் கருதுகிறார்கள். ஹிந்திக் கிளர்ச்சி பொதுமொழி யாகவுள்ள ஆங்கிலத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக ஏற்பட்டதே தவிர ஆங்கில மொழியால் ஏற்பட்ட இலாபங்களை இழப்பதற்காக அன்று. இவ்வாறு பேசுகின்றவர்கள் ஆங்கிலத்தை நம்முடைய அந்தர் பாஷாவாக வைத்திருப்பதால் பொதுமக்களிக்கிடையே நம்முடைய தனமதிப்பு குறைந்துவிடுகிறது என்பதை விரைவில் உணர வேண்டும். நம்மிடையே ஆங்கிலம் தெரிந்த மிகக் குறைவானவர்கள், அகில இந்தியாவிலும் உள்ள ஜனத்தொகையில் ஒரு சத விகிதம் கூட இம்மொழியை நன்கு அறிந்துக் கொள்ளவில்லை என்ற பேருண்மையை மறந்துவிடக் கூடாது. இந்திய தேசிய வாதத்தின் அடிப்படைகளுள் ஒன்றாக இருந்தது ஆங்கில ஆட்சியை நீக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், நம்முடைய கல்வி, சமுதாயம், அரசியல், பொதுவாழ்வு ஆகிய துறைகளில் ஆங்கிலத்தின் ஆட்சியை நீக்க வேண்டும் என்பதுமாகும். தேசத் தந்தையாகிய மகாத்மா காந்தி இது பற்றி 1921 பிப்ரவரி 2-ம் தேதி "யங் இந்தியா" வில் எழுதியதை இங்கே எடுத்துக்காட்டி முடிக்கிறேன்.

> "ஆங்கில மொழியின் உதவி ஒரு சிறிதும் இல்லாமல்கூட இந்திய மனம் முழு வளர்ச்சியை அடைய முடியும். நம்முடைய நாட்டிலுள்ள ஆண்களும், பெண்களும் ஆங்கில மொழியின் உதவி இல்லாமல் சிறந்த சமுதாயத்திலோ கூட்டத்திலோ வாழ முடியாது என்று நினைப்பதும், அவர்களை அவ்வாறு நினைக்குமாறு தூண்டுவதும், அவர்களுக்கு இழைக்கின்ற பெரிய துரோகமாகும். சகிப்பதற்கு முடியாத மிகவும் கேவலமான எண்ணமாகும் இது ஆங்கிலத்தின் மேல் கொண்ட இந்த வெறியை ஒழிப்பது சுயராஜ்யத்தின் அடிப்படைகளுள் ஒன்று."

எம். பி. தேசாய்,
உறுப்பினர்,
ஆட்சி மொழிக் கழகம்.

அஹமதாபாத்,
ஜூலை 14, 1956.

பிற்சேர்க்கை 1

முடிவுகள் சிபாரிசுகள் ஆகியவற்றின் சுருக்கம்

குறிப்பு.—பகுதி 1-ல் 3 பாராவில் விளக்கியுள்ள காரணங்களுக்காகப் பின்வரும் சுருக்கங்களில் இக்கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளுக்குட் பொருத்தமான "சிபாரிசுகளையும்", மொழிக் கொள்கையின் ஏனைய பகுதிகள் பற்றிய விஷயங்களை இக்கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகளின் கீழ் வராவிட்டாலும் தொடர்புடையன என்பதற்காக அவைகளை "முடிவுகள்" என்ற தலைப்பிலும் தந்துள்ளோம். சிபாரிசுகளைத் தடித்த எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம்.

அறிக்கையில் சில பாராக்களின் அடியில் அடிக் குறிப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகளும் பின்னர் தரப்பட்டுள்ள மூன்று அறிக்கைகளும் சுருக்கித் தரப்படவில்லை.

பகுதி 2

நவீன உலகில் மொழியின் இடம்

1. பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் உள்ள மொழி என்பது சமுதாய அமைப்பு முறைக்கு மிகவும் தேவைப்படுகின்ற ஒரு கருவியாக இருப்பதோடு மனித அறிவு வளர்ச்சிக்கும் ஓர் அடிப்படைத் தேவையாகும். நவீன சமுதாயங்களில் தொழில் நுட்ப வளர்ச்சிக்கும் வாழ்க்கைத்தர உயர்வுக்கும் மிகவும் தேவைபடுவது பெரும்பான்மையான மக்களின் கல்வி அறிவாகும். (பாரா 1.)

2. தேசிய மனப்பான்மைக்கு மொழி என்பது ஒரு முக்கியத் கருத்தாகும். நவீன அரசாங்கங்கள், சமுதாயத்தில், மக்கள் வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளில் தலையிடுகின்றன ஆகலின் "ஆட்சி விவகாரங்களுக்குரிய" ஒரு இடைநிலை மொழி மிக முக்கியமான ஒன்றாக இருப்பதுடன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகவும் அமைந்துவிடுகிறது. (பாரா 3.)

3. சுவிஸர்லாந்து, கானடா, பெல்ஜியம் போன்ற சில நாடுகளில் மொழிப் பிரச்னை என்பது மூன்று அல்லது நான்கு மொழிகளுக்குள்ளாக ஏற்படுதலினால் பரந்துபட்ட நிலையில் பல மொழிகளையும் ஏற்றுக்கொண்டு இப்பிரச்னையை தீர்த்துள்ளார்கள். யு.எஸ்.எஸ்.ஆர்.-இல் ரஷ்ய மொழியின் தனிச் சிறப்புக் காரணமாக இந்தியாவிலுள்ளது போலல்லாமல் அந்நாட்டில் மொழிப் பிரச்னை எளிதாகத் தீர்க்கப்பட்டுவிட்டது.

ஜப்பானிலும் துருக்கியிலும் தீவிரமான மொழிச் சீரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றைத் தேசீய மொழிக் கொள்கைகளாக நிறைவேற்றியுள்ளார்கள். சீனாவில் நடைபெற்ற முக்கியமான மொழிச் சீர்திருத்தம் சீன மொழிக்கு ஒரு முறையான வரி வடிவை வழங்கியதாகும். (பாராக்கள் 4-ம், 5-ம்.)

4. பன்மொழி நாடுகள் பலவற்றிலுமுள்ள பிரச்னைகளைப் போல் அல்லாமல் இந்திய மொழிப் பிரச்னை அவற்றை எல்லாம் கடந்திருத்தலின் சகிப்புத் தன்மையோடு கூடியதும் சாத்திர முறையில் காணப்பட்டதும், நாட்டின் மாறுபட்ட பண்பாடுகளை எல்லாம் அறிந்து மதிப்புக் கொடுப்பதும் ஆகிய ஒரு வழி காணப்பட்டால்தான் பயன்படும். (பாரா 6.)

5. பல்வேறு நாடுகளில் உலகத்தில் நடைபெறும் விஞ்ஞான வளர்ச்சியை அறிந்துகொள்வதற்காகக் கல்வி முறையில் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ள ஒரு பிற நாட்டு மொழியை முறையாக இரண்டாம் மொழியாகக் கற்பிக்கின்றார்கள். உலகத்திலுள்ள பல நாடுகளில் இவ்வாறு இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுவது ஆங்கிலமேயாகும். (பாரா 7.)

பகுதி 3

இந்தியாவில் பல்வேறு மொழிகளின் நிலை

6. இந்தியாவாகிய இப்பெரிய துணைக் கண்டம் சரித்திர காலம் முழுவதிலும் பல்வேறு பட்ட இனத்தாரும், நாட்டாரும் ஒன்றுகூடுவதற்குரிய நிலைக் களமாக இருந்துவந்தமையின் இந்த நாட்டில் இத்துணை அளவு வேறுபட்ட பேச்சு வழக்கு இருப்பதில் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை. (பாரா 1.)

இந்தியாவின் மொழிக் கணக்கெடுப்பில் கணக்கெடுக்கப்பட்டுள்ள மொழிகள், கிளை மொழிகளின் எண்ணிக்கை பெரிதாக இருப்பினும், வளர்ச்சி அடைந்து இன்று வழங்குகின்ற மொழிகள் மிகச் சிலவே. மேலும் இம் மொழிகள் அனைத்தினிடையேயும், ஒரு பொதுத் தன்மையும் ஒற்றுமையும் இருக்கக் காண்கிறோம். இந்தியாவின் மொழிப் பிரச்னையில் கவனிக்கப்பட வேண்டிய மொழிகள் மொத்தம் 13 பிராந்திய (வட மொழியை நீக்கி) மொழிகளேயாகும். இவை அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ளன. (பாரா 6.)

7. ஆங்கிலர் ஆட்சிக்குப் பிறகு நாட்டில் தோற்றுவிக்கப்பட்ட பொதுக் கல்வி முறை இந்திய மொழி யியலைப் பெரிதும் பாதித்தது. இந்திய அரசாங்கம் 1835-ல் நிறைவேற்றிய பிரசித்தி பெற்ற ஒரு தீர்மானத்தின்படி ஆங்கில இலக்கிய, விஞ்ஞானம் என்பவை பற்றி இந்தியர்களுக்கு அறிவு புகட்டப்படவேண்டும் என்றும் குறிக்கப்பட்டது. 1854-ம் ஆண்டு உட்ஸ்-டெஸ்பாட்சில் குறிக்கப்பட்ட கொள்கைகளின்படி இந் நாட்டின் கல்வித் திட்டம் பல காலம் இருந்து வந்தது. இந்த டெஸ்பாட்சின்படி உள்ள நாட்டு மொழிகளின் சிறப்பு நன்கு அறிந்து கொண்டிருக்கப்பட்டிருப்பினும், கல்வித் துறையில் இம்மொழிகளை வளர்க்க வேண்டிய இன்றியமையாமை பற்றிப் பேசப்பட்டிருப்பினும் கல்வி முறையில் போதனை மொழியாக இம்மொழிகள் இடம் பெறவே இல்லை. அரசியலார் இம்மொழிகளைப் புறக் கணித்தது ஒரு புறம் இருக்க, இப்பழங்காலத்தில் அரசியலறிவு பெற்ற இந்தியர்களும் கூட ஆங்கிலத்தைக் கற்பதற்கு மேலும் சந்தர்ப்பங்கள் வேண்டும் என்று ஓயாது கேட்டார்கள். ஏனென்றால் விஞ்ஞானத் துறையிலும், ஏனைய துறைகளிலும் நாடு முன்னேற்றமடைவதற்கு ஆங்கிலமே ஒரு சிறந்த "வழி" என்று கருதி சமுதாய விடுதலைக்கும் இதையே வழி எனக் கருதினார்கள். (பாராக்கள் 4-ம், 5-ம்.)

8. சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து வந்த ஆங்கில மொழி இறுதியாக மிக முக்கியமான துறைகளாகிய பொது ஆட்சித் துறை, உயர் கல்வித் துறை, ஏனைய தொழில் துறை, பொது வாழ்வு ஆகிய அனைத்திலும் இந்திய மொழிகளை மறையச் செய்துவிட்டது. இவ்வாறு அமுக்கப்பட்ட காரணத்தால் இம்மொழிகள் நன்கு வளர்ச்சியடையாமல் இருந்து இப்பொழுது இக்குறைபாடுகள் நீங்கினால் ஒழிய அவ்வத் துறைகளில் ஆங்கிலத்தை நீக்க முடியாது என்ற நிலையை அடைந்துள்ளன. (பாரா 4).

9. இவை அனைத்தும் நீங்கலாக, இந்திய மொழிகள் இந்த இடைப்பட்ட காலத்தில் நல்ல வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன 19-ம்

நூற்றுண்டு அச்சு யந்திரம் ஏற்பட்டதாலும், ஆங்கில இலக்கியத்தோடு தொடர்பு ஏற்பட்டதாலும், மேலே நாட்டு நாகரிகம் இந்திய சூழ்நிலை யில் தாக்கியதாலும் இந்திய மொழி வளர்ச்சியில் ஒரு பெரிய புரட்சியைக் கண்டது. இந்திய மொழிகளில் ஏற்பட்ட இப்புரட்சியின் காரணமாக இது நாள் வரையில் எந்தத் துறைகளில் இந்திய மொழிகள் இல்லையோ அவற்றி லெல்லாம் கூட இப்பொழுது இந்திய மொழிகளைக் கையாளலாமா என்று நாம் கருதுகின்ற நிலைமைக்கு வந்துள்ளோம். (பாரா 5.)

10. ஜனக்கணக்கெடுக்கும் அதிகாரிகள் அடுத்த ஜன சங்கியையிலும், அதற்கு அடுத்து எடுக்கப்படுகின்ற கணக்கிலும் ஹிந்தி மொழி பேசாதவர் கள் கணக்கெடுக்கும் பொழுது அவர்கள் ஹிந்தி மொழியில் எவ்வளவு தூரம் வன்மை பெற்றிருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டக்கூடிய முறையில் ஏதாவது ஒரு வினவைக் கேட்கவேண்டும் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். (பாரா 6.)

பகுதி 4

இந்திய மொழிப் பிரச்னையும் அதற்குக் காணும் முடிவின் உருவமும்

11. பிராந்திய மொழிகளை அவ்வவற்றிற்குரிய துறைகளில் மேற் கொள்ளுமாறு செய்துவிட்டு அகில இந்தியத் தொடர்புக்கு ஆட்சித் துறை யிலும், மற்றத் துறைகளிலும் தேவைப்படுகின்ற காரியங்களில் ஒரு பொது இடைநிலை மொழியை உண்டாக்குவதே இந்தியாவின் மொழிப் பிரச்னை யாகும். (பாரா 1.)

12. அரசியலமைப்பின் கீழ்க் காணப்பட்ட ஜனநாயக முறைப்படி ஆங்கிலம் அகில இந்திய இடைநிலை மொழியாக இருக்க முடியாது. ஏறத் தாழ ஜனத் தொகையில் ஒரு சதவிகித மக்கள்தாம் ஆங்கிலத்தில் தக்க அளவு அறிவு பெற்றிருக்கின்றனர். அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ள கட்டாய ஆரம்பக் கல்வி என்பது இந்திய மொழிகளைப் பொறுத்துத்தான் முடியுமே தவிர வேறில்லை. (பாரா 3-ம், 4-ம்.)

13. இம்முடிவுகள் வேற்று மொழியின் மேல் கொண்ட வெறுப்பால் பெறப்பட்டவை யல்ல. அம்மொழியில் கிடைக்கின்ற ஒப்பற்ற இலக்கியங்களை மதிக்காமலோ, விஞ்ஞான அறிவை வெறுத்தோ வெறும் தேச பக்தி என்ற உணர்ச்சியினுல் தூண்டப்பட்டோ இம்முடிவுகள் பெறப்படவில்லை. கல்வித் துறையில் உயர்ந்த தரத்தை நிலை நிறுத்தவும், சிறப்பாக விஞ் ஞான, ஆராய்ச்சித் துறைகளில் தரத்தைப் பெறவும், விஞ்ஞான வளர்ச்சி யில் அகில உலகத்தோடு பங்கு கொள்ளவும், பன்னுட்டுக் கூட்டுறவு கொள்ளவும், தூதுவராலய மொழியாகக் கொள்ளவும், ஆங்கில மொழி என்றுமே வைத்துக் கொள்ளப்படும். என்றாலும் வெளிநாட்டு மொழி யாகிய ஒன்றை குறிப்பிட்ட சில காரியங்களுக்கு "இரண்டாம் மொழியாக" வைத்துக் கொள்வதற்கும், கல்வித் துறையில் இடைநிலை மொழியாகவும், முதல் மொழியாகவும் வைத்துக் கொள்வதறகும் நாட்டின் அன்றாட வேலைகளையும் ஆட்சியையும் நடத்துவதற்கு முதல் மொழியாக வைத்துக் கொள்வதற்கும் வேறுபாடு மிகுதியும் உண்டு. இந்தப் பகுதியைத்தான் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறோம். (பாரா 3.)

14. அகில இந்தியக் காரியங்களுக்குத் தேவையான இடைநிலை மொழி ஹிந்தி மொழியே என்று சொல்லத் தேவையில்லை. ஹிந்தி மொழி யூனியன் மொழியாகவும், ராஜ்யங்களின் இடையே வழங்கும் மொழி

யாகவும் எற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று அரசியலமைப்புக் கூறு கிறது. எனைய பிராந்திய மொழிகளோடு இம்மொழி பேசுபவர்களின் எண்ணிக்கையை ஒப்பிட்டு இதனைப் பேசுவோர் அதிகம் இருத்தலினால் இதனை அரசியலமைப்பு எற்றுக் கொண்டதே தவிர இது எனைய பிராந்திய மொழிகளைவிட வளர்ச்சி பெற்றதென்றோ, இலக்கியச் செல்வம் உடைய தென்றோ கருதி இதனை யாரும் எற்றுக்கொள்ளவில்லை. (பாரா 6.)

15. யூனியன் மொழிகளாக இந்தோ-ஆரியக் குடும்பத்திலிருந்து ஒன்றை யும், திராவிடக் குடும்பத்திலிருந்து ஒன்றையும் ஆக இரண்டு மொழிகளை எற்றுக் கொள்ளுதல் நடைமுறைக்கு எற்றதன்று. இதற்கு வட மொழி யைப் பயன்படுத்தலாமா என்று நினைப்பதும் பொருத்தமற்றது. (பாரா 7.)

16. இவை அனைத்தையும் கருதிப்பார்க்கும் பொழுது யூனியன் விஷயங் களுக்கும், யூனியன்-ராஜ்யங்களினிடையேயும், ராஜ்யங்களினிடையேயும் வழங்கக்கூடிய மொழி ஹிந்தி ஒன்றுதான் என்பது நன்கு விளங்கும். (பாரா 8.)

17. வாழ்வின் பல்வேறு துறைகளிலும், ஆங்கிலத்தைப் பொது இடை நிலை மொழி நிலையிலிருந்து நீக்கியவுடன் அதன் வாரிசாக வரவேண் டியவை யூனியன் மொழி மட்டும் அல்லாமல் யூனியன் மொழியோடு பிராந்திய மொழிகளும் ஆம். (பாரா 6.)

18. ஆங்கில மொழியின் இடத்தை ஹிந்தி மொ'ழி ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் பெற முடியும். முழுவதும் ஆங்கிலத்தின் இடத்தை ஹிந்தி மொழி பெருது. எனென்றல் பிராந்திய மொழிகளுக்கு உரிய இடங்கள் அவற்றுல் பெற்றுக் கொள்ளப்படும். மற்றொரு வகையில் கூறும் பொழுது கட்டாயக் கல்வி முதலானவற்றில் நாடு ஈடுபடும் பொழுது இன்று ஆங்கில மொழியைக் கற்றவர்களைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான மக்கள் யூனியன் மொழியாகிய ஹிந்தியால் பயனடைவார்கள். ஆங்கி லத்தை அல்லாத வேறு எந்த வெளி நாட்டு மொழியும்கூட ஹிந்தியின் இந்த இடத்தைப் பெற முடியாது. (பாரா 10-ம், 18-ம்.)

19. நாட்டின் ஆட்சி விவகாரங்களில் இன்றுள்ள ஆங்கிலத்தை இந்திய மொழிகளால் நீக்க வேண்டும் என்று அரசியலமைப்புச் சொல்வதோடு நிறுத்திக் கொள்கிறது. எனருலும் "தேசீய வாழ்க்கையின்" "உள் துறை" ஆகிய பகுதிகளில் அகில இந்திய நிலையிலும் தேவைப்படும் ஒரு இடைநிலை மொழியின் அவசியத்தை மறந்துவிடக் கூடாது. இத்துறை களில் ஒரு மொழிக் கொள்கை பற்றி ஒன்றும் சட்டம் செய்ய முடியாது. இத்துறைகளில் மக்களின் விருப்பத்திற்கும், தேவைக்கும் எற்ப மொழி வடிவம் தானே அமையுமாறு விட்டுவிடுவதே பொருத்தமுடையதாகும். யூனியன் மொழி வளர்ச்சிக்கும், பிராந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் தேவையான முயற்சிகளை எடுத்துக் கொண்ட பிறகு பல்வேறு பிராந்திய மொழிகளும் அவ்வவ்வற்றின் துறைகளில் எற்படுகின்ற தேவையின் அளவு வளர்ச்சியடையுமாறு விட்டு விடலாம். நாளா வட்டத்தில் ஒரு மொழிச் சமநிலை தானே வரும். (பாரா 15.)

20. அரசியலமைப்பின் எற்பாடுகள் ஆட்சி விவகாரங்களுக்கு உரிய துறைகளில் எவ்வளவு குறைந்த அளவு தேவை என்பதை மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்கின்றன. நம்முடைய அளவில் இந்தத் தேவை யினளவு சொல்லி நிறுத்தி, இதற்குத் தேவையான மொழி எற்பாடுகள் யாவை என்பது பற்றி மட்டும் சொல்லியுள்ளோம். (பாரா 15.)

21. அரசியல் அமைப்பின் எற்பாடுகள் இந்தச் சூழ்நிலைக்கு எவ்வளவு தூரம் குறைந்த அளவு தேவை என்று கருதுகின்றனவோ அதனை முழு மனத்தோடு எற்றுக்கொண்டு அதற்கப்பால் ஒவ்வொரு மொழியும் ஆங்கிலம் உள்பட தேசிய வாழ்வில் வேண்டுமான இடம் பெறக்கூடிய மொழி "ஜன நாயகத்தையே" நாங்கள் எற்றுக்கொண்டுள்ளோம். (பாரா 15.)

22. அரசியலமைப்பில் மொழிபற்றிச் சொல்லப்பட்டுள்ள ஏற்பாடுகள் மிகவும் புத்திசாலித்தனத்தோடும், பரந்த மனப்பான்மையோடும் சொல்லப் பட்டுள்ளன. குறிக்கோள் யாவை என்று விவரித்த பிறகு யூனியன் மொழியை வளர்ப்பதற்குரிய வழிகள், நீதி மன்றங்களுக்கும், சட்ட மன்றங் களுக்கும் ஏற்பட்டுள்ள தனித் தேவைகள் மொழி மாற்ற காலத்தில் ஏற் படும் தொல்லைகள் ஆகியவற்றை விளக்கமாகப் பேசுகின்றன. இவை விரிந்துகொடுக்கக்கூடிய தன்மை உள்ளன ஆதலாலும் சூழ்நிலையின் வளர்ச்சிக்கேற்றபடி இவையே விரிந்து கொடுக்கும் ஆதலாலும அரசிய லமைப்பை மாற்ற வேண்டிய தேவையிராது. (பாரா 8.)

23. பொறுப்புடைய எல்லாக் கட்சியார்களும் அரசியலமைப்பின் முடிவை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு சிலர் தயாரிப்புக் காலமாக ஒதுக்கப் பட்டுள்ள 15 ஆண்டுகள் போதுமானதா என்பது பற்றி ஐயம் கொள்கிறார் கள், என்றாலும் ஒரு சிலர் பொதுவான முறையில் மொழி மாற்றம் செய்ய இந்தப் பதினைந்து ஆண்டுகளில் மிகச் சுருசுருப்பான முயற்சிகள் எடுத்துக் கொண்டால் இக்கால அளவு போதுமானதெனறே கருதுகிறார்கள். என்றாலும் இக்கழகம் இவ்விஷயத்தில் ஒரு முடிவையும் சொல்லத் தேவை யில்லை ; சொல்லவும் முடியாது. (பாரா 9 .)

24. அரசியலமைப்பின் எட்டாவது ஷெட்யூலில் சிந்தி மொழியையும், ஆங்கிலத்தையும் சேர்க்கவேண்டும் என்ற கோரிக்கைகள் பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லக்கூடவில்லை. அதற்குரிய காரணம் என்னவென்றால் ஷெட்யூலில் ஒரு மொழியையோ அன்றிப் பல மொழிகளையோ சேர்ப்பது பற்றி எங்கள் நிர்மாணக் கோரிக்கைகள் ஒன்றும் பேசவில்லை. மேலும் எங்கள் முயற்சியின் கடைசிக் காலத்தில் மட்டுமே இது பற்றி பேசப்பட்ட தாதலின் மற்றையோருடைய கட்சியை அறிய முயலவில்லை. (பாரா 19.)

25. யூனியன், ராஜ்யங்களின் மொழி பற்றி அரசியலமைப்புச் செய்யும் ஏற்பாடுகளுக்கு அப்பாற்பட்டுச் சிறுபான்மையினரின் பண்பாட்டு, கல்வி உரிமைகள் பற்றியும் சில பாதுகாவல்களை அரசியலமைப்புச் செய்கிறது. அவர்களுடைய மொழி, எழுத்துக்கள் ஆகியவை பற்றியும் இப்பாதுகாவல் உள்ளது. அரசியலமைப்பின் ஆட்சி மொழி பற்றிய ஏற்பாடுகள் எவ்வளவு பரந்த நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளனவோ அதே பரந்த நோக்கத்துடன் செய்யப்பட்டுள்ளதை அறியவேண்டும். இந்தியப் பண் பாட்டின் பல்வேறு வகைகளையும் ஏற்றுக் கொண்டு இது அமைக்கப் பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலும் அந்த மொழிகளைப் பற்றிய சிறிய பிரச்னைகள் ஏற்படலாம். இப்பிரச்னைகள் எங்களுடைய ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை ஆதலாலும், இந்தப் பிரச்னைகள் அனை வருக்கும் திருப்தி ஆன முறையில் தீர்த்து வைக்கமுடியும் என்று நாங்கள் நம்புகிறோம் ஆதலாலும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளில் மொழி, பண் பாடு ஆகியவைகளின் பாதுகாவல் பற்றி எவ்வளவு சகிப்புத் தன்மை யோடும், பரந்த மனத்தோடும் செல்கிறதோ அதே முறையில் சென்றால் இப்பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்க்கலாம் ஆதலாலும் நாங்கள் இவற்றைப் பெரிதெனக் கருதவில்லை. (பாரா 20.)

பகுதி 5

கலைச் சொற்கள்

26. யூனியன் மொழி, பிராந்திய மொழிகளைப் பொறுத்த மட்டில் முக்கியமான அடிப்படை வேலை என்னவென்றால் வேண்டுமான அளவு தொழில் நுட்பக்கலைச் சொற்களை ஆக்கித்தருதேயாம் (பாரா 1.)

27. கலைச் சொற்களை உண்டாக்கும்பொழுது தெளிவு; வரையறுத்த தன்மை, எளிமை ஆகியவற்றை முக்கியமாகக் கருத வேண்டும். "மொழித் தூய்மை" என்பது பற்றி அதிகம் கவலைப்பட வேண்டாம். *(பாராக்கள் 2-ம், 5-ம்.)*

28. பழங்காலத்தில் நடைமுறையில் இருந்துவந்த விஷயங்களில் இன்று கலைச் சொற்களைச் சேகரிப்பதற்குரிய மூலப் பொருள மிகுதியாக உண்டு. அன்றியும் இன்றுள்ள கைத்தொழில் முதலிய தொழில்களைச் செய்வோரிடம் அன்றாட வாழ்க்கையில் பயன்படும் பல சொற்களும், சொல்லாட்சிகளும் கலைச் சொற்களை ஆக்கப் பயன்படும், இவற்றையும் நன்கு ஆராயவேண்டும். பொருத்தமான இடங்களில் பன்னாட்டுக் கலைச் சொற்களை அப்படியே ஏற்றுக்கொண்டோ, இந்திய மொழிகளின் மரபுக்கேற்றபடி மாற்றி அமைத்தோ பயன் படுத்தவேண்டும், *(பாராக்கள் 6-ம், 8-ம்.)*

29. கலைச் சொற்களை ஆக்கும்பொழுது கூடுமானவரை எல்லாப் பிராந்திய மொழிகளுக்கும் பொதுவாக இருக்கின்ற சொற்களைப் பொறுக்குவதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். *(பாரா 7.)*

30. யூனியன் மொழிக்கும், பிராந்திய மொழிகளுக்கும் இந்தக் கலைச் சொற்களை ஆக்கும்பொழுது இவற்றினிடையே ஓர் ஒருமைப் பாட்டைக் காணும் முறையில் தேவையான அளவு வழிதுறைகளை வகுத்துக்கொள்ளவேண்டும். *(பாரா 12.)*

31. இதுவரை இந்திய அரசாங்கத்தின் கல்வி யமைச்சு இம்முறையில் செய்திருக்கின்ற வேலைகளை ஆராயுமிடத்து இன்னும் விரைவாகவும், ஒருமைப்பாட்டுடனும் பல்வேறு அமைப்புகளும் சேர்ந்து இவ்வேலையைச் செய்யலாம் என்று நினைக்க இடம் ஏற்படுகின்றது. *(பாரா 11)*

32. இங்ஙனம் ஆக்கப்பட்ட கலைச் சொற்கள் இவ்விந்திய மொழிகளால் நன்கு சீரணிக்கப்படுவதற்கு முன்னர் இரண்டு நிலைகளைக் காணவேண்டும். ஒன்று, புதிய கலைச் சொற்களை உடனே பயன்படுத்தத் தொடங்கவேண்டும். இரண்டு, அடிக்கடி குறிப்பிட்ட காலத்தில் இச்சொற்களின் வரையறுத்த பொருளைக் கணிக்க வேண்டும். (பாரா 12)

பகுதி 6

யூனியன் மொழியும், கல்வி முறையும்

33. மொழிக் கல்விப் பிரச்னை, போதனு மொழிப் பிரசனை ஆகிய இரண்டும் நம்முடைய கல்வி முறையில் எந்த அளவில் உள்ளன என்பது பற்றி ஆராயும் பொழுது இந்த அறிக்கை நாட்டின் மொழிப் பிரச்னையை ஆராய எவ்வளவு தேவையோ அந்த அளவோடு நிறுத்திக்கொண்டுள்ளது. (பாரா 1.)

இந்திய அரசியலமைப்பின் ராஜ்யக் கொள்கைகள் வழிகாட்டிப் பகுதியில் விதி 45-ன்படி "ஒவ்வொரு ராஜ்யமும் அந்த ராஜ்யத்திலுள்ள குழந்

தைகள் 14-வயது முடிகின்ற வரை கட்டாய ஆரம்பக் கல்வியை வழங்க முற்படவேண்டும்". கல்வி முறை 14-வயதுக்குள்ளான குழந்தைகள் அனைவரும் ஹிந்தி மொழியில் தகுந்த அளவு அறிவு பெற ஏற்ற முறையில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு பிரஜையும் தேவைப்பட்டாலோ, விரும்பினாலோ யூனியன் அரசாங்க விவகாரங்களையும், அகில இந்திய விவகாரங்களையும் நன்கு புரிந்துக் கொள்ளக்கூடிய நிலைமையைப் பெறவேண்டும். (பாரா 3.)

34. அரசியலமைப்பின் 45-வது விதியின்படி கட்டாயக் கல்வியை 14-வது வயது வரைப் பெறுகின்ற குழந்தைகள் ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் பள்ளிக்கூடக் கல்வியைப் பெறுவார்கள். அந்த எட்டு ஆண்டுகளிலும் அவர்கள் பிராந்திய மொழியைப் போதன மொழியாகவும், ஒரு பாடமாகவும் கற்றிருப்பார்கள். இப்பகுதியில் பின்னர் உள்ள காலத்தில் குறைந்த அளவு மூன்று அல்லது நான்கு ஆண்டுகளாவது ஹிந்தியில் அவர்கள் கல்வி பெறவேண்டும். (பாரா 5.)

35. நம்முடைய பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம் போதன மொழியாக இல்லாத காலத்தில்கூட மிக நீண்ட காலத்திற்குப் பல்கலைக் கழகத்திலிருந்து வெளிவரும் பட்டதாரிகள் சிறப்பாக விஞ்ஞானப் பட்டதாரிகள் வேண்டுமான அளவு ஆங்கில மொழிப் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். அவரவர்கள் மேற்கொண்ட துறைகளில் கிடைக்கின்ற எல்லா வளர்ச்சிகளையும் புரிந்தும், அறிந்தும் கொள்ளக்கூடிய நிலையில் புதிய வெளியீடுகளையும், நூல்களையும் அவர்களுக்குக் கிடைக்குமாறு செய்யவேண்டும். (பாரா 6.)

36. நாட்டின் கல்வி முறையில் ஆங்கிலம் பயன்படும் பல்வேறு காரியங்களையும் உத்தேசித்து இப்பொழுது ஆங்கில மொழியைப் போதிக்கின்ற முறை, இயல்பு ஆகிய இரண்டையும் மறுபடியும் ஆராயவேண்டும். இனிமேல் ஆங்கிலத்தைப் "புரிந்து கொள்ள வேண்டிய மொழியாக மட்டும்" போதிக்க வேண்டும். விருப்பப்பட்டுத் தனிப்பட்ட முறையில் படிக்க வேண்டிய மொழியாக அதனை ஏற்றுக் கொண்டாலொழிய இலக்கிய மொழியாக அதனைப் போதிக்க வேண்டியதில்லை. (பாரா 9.)

37. அதிகாரிகள், கல்வித் துறையில் மிக நீண்ட ஆராய்ச்சி செய்து மாணவர்களுக்கு இடைநிலைக் கல்விக் காலத்திலும், அதற்குப் பின்னரும் ஆங்கில அறிவு எவ்வளவு தூரம் தேவை என்பதைக் கல்வித்துறை வல்லுநர்களின் உதவி கொண்டு ஆராயவேண்டும். தற்பொழுதைக்கு எஸ்.எஸ்.எல்.சி. வகுப்புக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்னால் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் இதனைத் தொடங்கினால் போதுமென்று நினைக்கிறோம். (பாரா 9.)

38. பதினான்காவது வயதுக்கட்டத்தைத் தாண்டிய உடன் மேற்கொண்டும் படிக்க விரும்பிச் செல்கின்ற மாணவர்களையும், அதோடு கல்வியை நிறுத்தி விடுகின்ற மாணவர்களையும் வேறு பிரிக்க முடியுமாதலால் மேற்கொண்டு தொடரக்கூடிய மாணவர்களுக்கு மட்டுமே ஆங்கிலக் கல்வி வழங்கப்பட முடியும். (பாரா 10.)

39. உயர்தரப் பள்ளிக் கூடங்களில் இருக்கின்ற மாணவர்களுக்கு எந்த அளவுக்கு ஹிந்தி அறிவு இன்றியமையாதது என்று கருதுகிறோமோ அந்த அளவு அறிவை அவர்கள் பெற வேண்டுமேயானால் ஆரம்பப் பள்ளி நிலையின் முடிவில் இதனைத் தொடங்கி எஸ்.எஸ்.எல்.சி. முடிவு வரையில் இதனைக் கொண்டு சென்றால் அது போதுமானது. (பாரா 11.)

40. எங்களுடைய கருத்துப்படி நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளில் ஹிந்தி கட்டாய மொழியாக ஆக்கப்பட வேண்டும். இதற்குக் காட்டப்படுகின்ற காரணங்கள் மிக வலுவானவை. என்றாலும் விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மையைக் கருதி அந்தந்த பிராந்தியங்களில் எப்பொழுது இதனைக் கட்டாயப் படுத்தலாம் என்கின்ற முடிவுகளைச் செய்வதை அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களுக்கு விட்டுவிடலாம். (பாரா 12.)

41. ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள உயர்தரப் பள்ளிக் கூடங்களில் கற்கும் மாணவர்கள் “ஈடு செய்யும் முறையில்” மற்றொரு இந்திய மொழியைக் (ஒரு தென்னிந்திய மொழியை) கற்க வேண்டும் என்று சொல்கின்ற ஆலோசனை ஆராய்ந்து வேண்டாம் என்று முடிவு செய்யப் பட்டது.

என்றாலும் ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள கல்வித் துறை அதிகாரிகள் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வரையில் பிற இந்திய மொழிகளை அறிந்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களை வழங்குவதோடு, அரசாங்கமும் இக்காரியத்திற்குக் குறிப்பிட்ட உதவிகளைச் செய்யலாம். (பாரா 13.)

42. பல்வேறு காரணங்களுக்காக நாளாவட்டத்தில் ஆங்கிலம் இந்திய மொழியினாலேயோ அன்றி மொழிகளினாலேயோ உயர்தரக் கல்வி, இடைநிலை மொழி நிலையிலிருந்து நீக்கப்படவேண்டும். வெளி நாட்டு இடைநிலை மொழியால் ஏற்படுகின்ற சக்திச் செலவு அறிவு வளர்ச்சிக்கு அது போடுகின்ற தடை நாட்டின் இளைஞர்கள் சொந்தமாகச் சிந்திப்பதற்கு இடங் கொடுக்காத ஒரு சூழ்நிலை ஆகியவற்றை யெல்லாம் கருத்துட்கொண்டு இதனைக் காணவேண்டும். இவற்றின் பயனாகக் கற்றறிந்த இளைஞர் கூட்டம் பொது மக்களிலிருந்து வேறு பிரிக்கப்படுவதால் இந்த இடைநிலை மொழி மாற்றம் மிகவும் தேவைப்படுகிறது. அத்தகைய ஒரு மொழி மாற்றம் நன்கு ஆலோசனை செய்யப்பட்டுத் தேவையான முன்னேற்பாடுகளுடன் செய்யப்பட்டால் நாட்டின் கல்வித் தரத்தில் எவ்விதமான மாறுபாட்டையும் ஏற்படுத்தி விடாது என்பதோடு கூட நாளாவட்டத்தில் சிறந்த வளர்ச்சியையும் இது உண்டாக்கும். (பாராக்கள் 7, 14, 15, 17.)

43. பல்கலைக் கழகப் படிப்பில் போதனா மொழியாகவுள்ள ஆங்கிலத்தை நீக்க வேண்டும். ஆனால் அதனை ஒரே போதனா மொழியாகவுள்ள ஹிந்தியின் மூலம் நீக்க வேண்டுமா அல்லது பல்வேறு பிராந்தியங்களிலுள்ள பிராந்திய மொழிகளின் மூலம் நீக்க வேண்டுமா என்பது பற்றி ஆராய வேண்டும். பல்கலைக் கழகப் படிப்பைப் பொறுத்த மட்டில் நாடு முழுவதிலும் ஒரே வகையான போதனா மொழி இருப்பதனால் பல நன்மைகள் உண்டு. அதே நேரத்தில் ஆங்கிலத்தைப் பிராந்திய மொழிகளின் மூலமே நீக்க வேண்டும் என்று நினைப்பதற்கும் கூறுவதற்கும் தக்க காரணங்கள் உண்டு.

போதனா மொழி மாற்றம் ஒரே நேரத்தில், ஒரே மாதிரியாக எல்லாவிடங்களிலும் வரவேண்டும் என்ற தேவையில்லை. கலைப் பகுதிகள் போன்ற பகுதிகளில் பிராந்திய மொழிகளின் மூலம் போதனை தொடங்கலாம். இன்னுஞ் சில பகுதிகளில் எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே போதனா மொழி இருப்பதன் தேவை மிக முக்கியமானது. இன்னுஞ் சிலவற்றில் உயர்தரக் கல்வி முறையில் ஆங்கில இடை நிலை மொழியை வைத்துக் கொள்வதே நலம் உடையது என்று தோன்றுகிறது. இன்னுஞ் சில பகுதிகளில் கீழ்நிலைக் கல்வியில் பிராந்திய மொழிகளை வைத்துக் கொண்டு பட்டப்படிப்புக்கு மேற்பட்ட படிப்பில் பொது இடைநிலை மொழியை அதாவது ஆங்கிலம் அல்லது ஹிந்தி மொழியை ஏற்றுக் கொள்ளலாம். பல்கலைக் கழகங்கள் இவை பற்றி முடிவு செய்யும்பொழுது ஆசிரியர்கள், பாடப் புத்தகங்கள், மேற்கோள் இலக்கியங்கள் ஆகியவை கிடைக்கின்ற சூழ்நிலையைப் பொறுத்து இம்முடிவுகளைச் செய்யும்.

சூழ்நிலை இன்னும் தெளிவடையாமல் இருப்பதால் பல்கலைக் கழகங்களுக்குள்ளாக இது பற்றிக் கலந்து ஆராய்ந்து எந்த இடைநிலை மொழி அல்லது மொழிகளை வைத்துக் கொள்ளலாம் என்று அவைகளே முடிவு செய்யவேண்டும். (பாராக்கள் 17, 18.)

44. நாட்டிலுள்ள மொழிப் பிரச்னையை நோக்கச் சில அடிப்படையான திட்டங்கள் மிகுதியும் தேவை என்று எங்களுக்குப் படுவதால் அவற்றைக் கீழே தருகிறோம் :—

எல்லாப் பல்கலைக் கழகங்களும் எந்த நிலையிலும் மாணவர்கள் ஹிந்தி இடைநிலை மொழி மூலம் பரிட்சை எழுத விரும்பினால் அவர்களுக்குரிய வாய்ப்பை அளிக்க வேண்டும்.

ஒரு பல்கலைக் கழகத்தின் எல்லையில் அமைந்துள்ள எந்த ஒரு கல்லூரியாவது ஹிந்தி இடைநிலை மொழி மூலம் கல்வி போதிக்க விரும்பினால் அந்தப் பல்கலைக் கழகம் அந்தக் கல்லூரிக்கு இந்த உரிமை வழங்க வேண்டும்.

இதற்கும் அப்பாற்பட்டு ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் ஹிந்தியைப் போதனு மொழியாகக் கொண்ட பல்கலைக் கழகங்கள் தோன்ற வேண்டும். வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சிக்குட்பட்ட கல்லூரிகளின் ஹிந்தி இடைநிலை மொழி மூலம் போதிக்க விரும்பினால் பல்கலைக் கழகங்கள் அந்தக் கல்லூரிகளுக்கு உரிமை வழங்கவேண்டும். (பாராக்கள் 18, 19.)

45. விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வி வழங்கும் அமைப்புக்களில் நாட்டின் பல்வேறு மொழிப் பிராந்தியங்களிலிருந்தும் பிள்ளைகள் கற்க வருகிறார்கள் ஆதலால் அங்குப் போதனு மொழியாக ஹிந்தி மொழியே இருக்க வேண்டும். ஆனல் எங்கே ஏறத்தாழ ஒரே இனத்திலிருந்து மாணவர்கள் வருகிறார்களோ அங்கே போதனு மொழி பிராந்திய மொழியாக இருக்கலாம். அந்த அந்தத் தனிப்பட்ட சந்தர்ப்பத்தைப் பொறுத்தே இது முடிவு செய்யப்பட வேண்டும். (பாரா 22.)

46. போதனு மொழியைப் பொறுத்த மட்டில் "பல்கலைக் கழகச் சுய உரிமை" என்பது கொஞ்சம் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய தொன்ருகும். இவ்வொரு துறையில் தேசீய மொழிக் கொள்கை என்பதே கடைசியில் நிலைக்க வேண்டும். (பாரா 23.)

47. பல்கலைக் கழகங்களில் ஹிந்தியிலும், பிராந்திய மொழிகளிலும் எழுதப்பட்ட பாடப் புத்தகங்கள் பெரிதும் தேவைப்படும் என்றாலும் இத்துறையில் ஒருமைப்பாட்டோடு காரியங்கள் செய்யப்பட வேண்டும். இம் மொழிகளில் மேற்கோள் இலக்கியம் தயாரிப்பதற்குத் தனிப்பட்ட முயற்சிகள் செய்யப்பட வேண்டும். (பாரா 25.)

பகுதி 7

பொது ஆட்சித் துறையில் மொழி—1

யூனியன் ஆட்சி மொழி

48. யூனியன் ஆட்சி விவகாரங்களில் இடைநிலை மொழியை மாற்றுவதற்குரிய திட்டத்தை இந்திய அரசாங்கம் வகுத்துள்ளது. அது பற்றி ஆராயப்பட்டது. ஆட்சித் துறையில் மொழி மாற்றம் செய்யக் கீழ்க்கண்ட முதல் தேவைகள்பற்றிக் காண வேண்டும் :—

(1) ஆட்சித் துறையில் பயன்படுத்தப்படுகின்ற பிரத்யேகமான கலைச் சொற்களைத் தயாரித்துத் தரப்படுத்துதல்.

(2) ஆட்சித் துறைக்குத் தேவையான சட்டங்கள், ஒழுங்கு முறைகள் கையேடுகள், குறிப்புப் புத்தகங்கள், ஏனைய வழி துறை இலக்கியங்கள் ஆகியவற்றை ஹிந்தியில் மொழி பெயர்த்தல்.

(3) புதிய இடைநிலை மொழியைத் தகுந்த அளவு பரிச்சயத்தோடு வசதியாகப் பயன் படுத்தக் கூடிய முறையில் ஊழியர்கள் அந்த அந்தத் துறைக்கு ஏற்றபடி மொழி வன்மை பெருமாறு பயிற்சி பெற வேண்டும்.

(4) புதிய இடைநிலை மொழிக்குத் தேவையான யந்திர சாதனங்களை விரைவில் தயாரித்து அளித்தல். அதாவது தட்டெழுத்து யந்திரங்கள், சுருக்கெழுத்தாளர், அச்சு யந்திரங்கள், நகல் செய்யும் யந்திரங்கள், தொலை அச்சு யந்திரங்கள் ஆகியவை புதிய இடைநிலை மொழிக்கு ஏற்ப வேண்டும். (பாராக்கள் 3, 4.)

49. மேலே (1-ல்) கூறப்பட்டுள்ளது 5-ம் பகுதியில் ஆராயப்பட்டுள்ள கலைச் சொற்களின் பொதுப் பிரச்னையைப் பொறுத்ததே.

மேலே (2-ல்) சொல்லப்பட்ட முறையில் இந்த இலக்கியங்களை மொழி பெயர்க்கும்பொழுது ஒரு வகையான ஒருமைப்பாடும் ஒரே தன்மையும் கடைப்பிடிக்கப்படவேண்டும். அதற்கேற்றபடி மத்திய அரசாங்கத்தின் ஓர் அதிகாரியினிடத்து இத்துறையின் முழுப் பொறுப்பும் ஒப்படைக்கப்படவேண்டும். (பாரா 5.)

50. மேலே (3-ல்) கூறப்பட்டதற்கு (ஊழியர் பயிற்சி) இப்பொழுது இந்திய அரசாங்கம் தன்னுடைய ஊழியர்கள் தாமே ஹிந்தி கற்றுக்கொள்வதற்குச் செய்துள்ள ஏற்பாடுகளை ஆராய்ந்துள்ளோம்,

இவ்வாறு விரும்பினல் கற்றுக்கொள்ளும் முறையில் தகுந்த அளவு பயன் ஏற்படவில்லை என்று அனுபவத்தின் மூலம் தெரிந்தால் அரசாங்கம் தங்களுடைய மொழிக் கொள்கைக்கு ஏற்ப அரசாங்க ஊழியர்கள் ஹிந்தி மொழியில் இன்ன தகுதி பெறவேண்டும் என்று ஒரு காலவரையறை தந்து கட்டுப்படுத்தலாம், (பாரா 10.)

51. மேலே (4-ல்) சொல்லப்பட்டதற்குத் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் ஆகியவர்கட்குப் பிரத்யேகமான விடுமுறை தந்து பிரத்யேகமான வசதிகளும் செய்து கொடுத்துப் புதிய இடைநிலை மொழியில் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும பழகிக்கொள்ளுமாறும் புதிய யூனியன் மொழியை அறிந்து கொள்ளுமாறும் வசதி செய்து கொடுக்கவேண்டும். (பாரா 14.)

52. ஆட்சித் துறையில் பல்வேறு துறைகளுக்கும் பணிகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுககும்பொழுது ஆங்கிலத்தில் எந்தத் தகுதி பெற்றிருக்கவேணடும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதோ அதே அளவு தகுதி ஹிந்தி மொழியிலும் தேவைப்படும் என்று எதிர்பார்ப்பதில் தவறு இல்லை. மாற்றக் காலத்தில் ஓரளவு குறைந்த தரமாக இருப்பினும் போதுமானது. (பாரா 10.)

53. பொதுவாகக் கூறினல் குறிப்பிட்ட கால அளவில் தகுந்த அளவு ஹிந்திப் பயிற்சி பெருதவர்கட்குத் தண்டனை கொடுப்பது பொருத்தமானதுதான் என்ருலும் குறிப்பிட்ட குறைந்த அளவு தேவைக்குமேல் பெற்றுள்ளவர்கட்கு பரிசு முதலியன வழங்குதல் மிகவும் பொருத்தமுடையது. (பாரா 10.)

54. யூனியன் அரசாங்கத்தின் ஆட்சி யந்திரத்தின் சில பகுதிகளில் தொழில் நுட்ப ஆங்கிலச் சொற்களையே தொடர்ந்து பயன்படுத்தி வரலாம். இந்தியக் கலைச் சொற்களை அத்துறைகளுக்குத் தேடி

எடுக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை. அதேபோல வெளிநாடு களோடு தொடர்பு கொள்ளும் பகுதிகளில் ஆங்கிலத்திலேயே கடிதப் போக்குவரத்து இருந்து வரலாம். (பாரா 6.)

55. இந்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், இலாக்காக்கள் ஆகிய வற்றில் மொழி மாற்றம் நடைபெறுவதோடு ஆட்சி அமைப்புக்கான ரயில்வேக்கள், தபால் தந்தி, கலால், சுங்கம், வருமான வரி ஆகிய அமைப்புக்களிலும் இம்மொழி மாற்றம் நடைபெற வேண்டும். இந்த அமைப்புக்களின் பகுதிகளும், கிளைகளும், நாட்டின் பல்வேறு பாகங் களிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆதலால் இப்பிரச்னை பிரத்தியேக மாக ஆராயப்படவேண்டியுள்ளது. அதாவது ஆட்சிப் பொறுப் புடைய இந்த அமைப்புகள் நிலைபெற்ற முறையில் இரட்டை மொழி பேசும் அமைப்புக்களாகவே இருத்தல் வேண்டும். அதாவது உள்துறை அலுவல்களுக்கு ஹிந்தி மொழியைப் பயன்படுத்திக் கொண்டு பொது மக்களோடு தொடர்பு கொள்ளப் பிராந்திய மொழியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். (பாரா 8.)

56. இந்திய அரசாங்கத்தின் இந்த ஆட்சி அமைப்புகளிலும் இலாக்காக்களிலும் உள்ள ஊழியர்கள் இவ்வாறு இரட்டை மொழித் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டியிருத்தலினால் அதற்கு ஏற்ற முறையில் ஊழியர் அமைப்பு முறை மாற்றியமைக்கப்படவேண்டும். அதாவது ஒருமுகப்படுத்தாமல் பன்முகப்படுத்த வேண்டும். ஆட் களைத் தேர்ந்தெடுக்கும் முறை தகுதி முதலியன அதற்கேற்ற முறை யில் மாற்றி அமைக்கப்பட வேண்டும். (பாரா 9.)

57. வேலை அளிப்பவர் என்ற நிலையிலுள்ள இந்த அகில இந்திய இலாக்காக்களும், அமைப்புக்களும் தன்கீழ் வேலை பார்க்கும் ஊழியர் கள் ஓரளவு ஹிந்திப் பயிற்சி உடையவர்களாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் (தேவைப்பட்ட இடங்களில் அந்தப் பிராந்திய மொழிகளில் பயிற்சி உடையவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நியாயமானதே) சிறு பகுதிகளிலும், பிராந்தியங்களிலும் தேவைக்கு ஏற்றபடி ஹிந்தியின் தரத்தை குறைத்துக்கொள்ளலாம் என்றாலும், தலைமைக் காரியாலத்தைப் பொறுத்த மட்டில் முழுவதும் வேலைகள் ஹிந்தி மொழியில் நடை பெறுமாதலால் அங்குப் பணியாற்றுபவர்கள் பெரிதும் ஹிந்தி அறிவு படைத்தவர்களாக இருக்க வேண்டும். (பாரா 9.)

58. மொழி மாற்றக் காலத்தில் வேலை கிடைக்கும் சந்தர்ப்பம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும் என்பதற்காக எதிர் பார்க்கப்படும் ஹிந்தி அறிவின் அளவை மிகுதியும் குறைத்து வைத்துக்கொள்ளலாம். குறைத்துள்ள ஹிந்தி அறிவை வேலைக்குச் சென்றபின் நிறைவு செய்து கொள்ளலாம். அந்த அந்தப் பிராந் தியங்களில் ஹிந்தி போதனை வளர்ச்சி அடைய அடைய அதற் கேற்றபடி இப்பரீட்சைகளில் எதிர் பார்க்கப்படும் தரமும் உயர்ந்து கொண்டே செல்லலாம். (பாரா 9.)

59. அகில இந்திய ஆட்சி அமைப்புக்களாக உள்ள ரயில்வே, தபால் தந்தி ஆகியவைகள் பொதுமக்களோடு தொடர்பு கொள்ளும் பொழுது அந்தப் பொதுமக்களுக்கு வசதியாகவுள்ள முறையிலேயே மொழியைப் பயன்படுத்தவேண்டும். இந்த இலாக்காக்களை வைத்துக்கொண்டு, பொதுமக்களுக்கு இடையூறாக இருந்தாலும், கவலைப்படாமல் ஹிந்தி மொழியைப் பரப்ப இதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கூடாது. குறியீட்டுப் பலகைகள், கைகாட்டிகள்

ஆகிய இடங்களில் பொதுமக்களுக்குப் பழக்கம் உண்டாக்குவதற்காக ஹிந்தி மொழியைப் பயன்படுத்தினாலும், கூடவே பிராந்திய மொழியிலும் தேவையுள்ள இடத்தில் ஆங்கிலத்திலும் அது எழுதப்பட வேண்டும். (பாரா 8.)

60. புதிதாக ஆக்கப்படும் ஹிந்திக் கலைச்சொற்களை ஆராய வேண்டும். சிறப்பாக அகில இந்திய ஆட்சித் துறையில் பயன்படும் சொற்கள் நாட்டின் பல்வேறு பிராந்தியங்களிலும் வழங்கப்படும் பொழுது அப்பிராந்தியத்தில் அச்சொல்லுக்குள்ள பொருளோடு முரண்படாத முறையில் பயன்படுத்தப்படவேண்டும். பல்வேறு பிராந்தியங்களிலும் பல்வேறு பொருள்களோடு வடமொழி வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆதலால் பொருத்தமற்ற முறையில் இவற்றைப் பயன்படுத்தக் கூடாது. இப்பொருளைத் தெரியாமல் சொற்களை பயன்படுத்துதல் புதிய இடை நிலை மொழியை அவமானப்படுத்துவது போலாகும். (பாரா 8.)

61. இப்புதிய இடைநிலை மொழிப் பயிற்சியை எல்லா ஊழியர்களுக்கும் தருவதை விட்டுவிட்டு மொழி பெயர்புக்குரிய தனிப்பட்ட குழுக்களை ஏற்படுத்துவது பொதுப் பணத்தை வீணடிப்பதாகும். ஆட்சி அமைப்பில் நிலைப்பற்ற முறையிலும், மொழி மாற்றக் காலத்தில் குறிப்பிட்ட கால அளவிலும் மொழி பெயர்ப்பு அமைப்புக்கள் இருக்க வேண்டியது நியாயமென்றாலும், ஊழியர்கள் தங்களுடைய அலுவல்களை நேரடியாக ஹிந்தி மொழியில் செய்வதற்கு இது பதில் முறையாக இருக்க முடியாது. எங்களுடைய கருத்துப்படி, மூல வேலையை ஆங்கிலத்தில் செய்து அதனைப் பொதுப் பணத்தை செலவழித்து பல்வேறு படிகளிலும் ஹிந்தியில் மொழி பெயர்க்கும் முறையை, யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு படிப்படியாக ஹிந்தியைப் பயன் படுத்தும் முறை இதுதான் என்று அரசியலமைப்புக் கூறவில்லை. (பாரா 10.)

62. புதிதாக யூனியன் அரசாங்கப் பணிகளுக்கு வருகின்றவர்கள் குறைந்த அளவு ஹிந்தி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று ஓர் எல்லையை அரசாங்கம் வகுக்குமேயானால், அதற்குரிய அறிவிப்பை முற்கூட்டியே செய்து விடுமேயானால், அப்படி இருந்தும் இருக்கின்ற குறைபாட்டை வேலைக்குச் சென்ற பிறகு பயிற்சி கொடுத்து மாற்றி அமைத்துக் கொள்ளுமேயானால் அவ்வாறு கட்டுப்பாடு செய்வதில் தவறு ஒன்று மில்லை. (பாரா 12.)

63. 45 வயதுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் விஷயத்தில் தேவைப்படுகின்ற ஹிந்தி அறிவு "புரிந்து கொள்ளும் அறிவாக" இருந்தால் போதுமானதென்றும், அவர்களுடைய ஆங்கில அறிவுக்கு ஏற்ற அளவில் ஹிந்தி அறிவு இருக்க வேண்டியதில்லை என்றும் கருதுகிறோம். தேவைப்பட்டால் இவ்விஷயங்களுக்குத் தனிப்பட்ட சோதனைகளை ஏற்படுத்தலாம். (பாரா 13.)

64. இந்திய அரசாங்கத்தின் சட்ட வெளியீடுகள் யூனியன் ஆட்சி மொழியாகிய ஹிந்தியில்தான் இருக்குமென்று சொல்லத் தேவையில்லை. இவற்றுள் பெரும்பாலான வெளியீடுகள் சிறப்பாகப் பொது மக்களுக்குச் செய்தி வழங்கும் வெளியீடுகள் அனைத்தும் இப்பொழுதிலிருந்து ஹிந்தி மொழியில் வழங்கப் படவேண்டும். இவ் வெளியீடுகளின் பிராந்தியமொழிப் பதிப்புகள் தேவையைப் பொறுத்து வெளியிடப்படவேண்டும். (பாரா 15.)

65. யூனியன அரசாங்கத்தின் எந்த ஒரு விவகாரத்திற்கும இப்பொழுது பயன்பட்டு வருகின்ற ஆங்கில மொழியை குறைக்க வேண்டும் என்ற எந்தவிதமான சிபார்சையும் நாங்கள் செய்ய வில்லை. (பாரா 16.)

66. அரசியலமைப்பில் குறிப்பிட்ட கால எல்லைக்குள் யூனியன் ஆட்சி விவகாரங்களில் மொழி மாற்றம் செய்வதற்குரிய ஒரு அட்டவணையைக் கால அடிப்படையில் தருவதற்கு எங்களால் இயலவில்லை. இந்திய அரசாங்கத்தின் அமைச்சுக்களெல்லாம் ஒரு பொது அமைப்பின் உறுப்புக்கள் ஆதலினால் படிப்படியாக ஹிந்தியைப் பயன்படுத்துவது என்பது பல்வேறு அமைச்சுக்களிலும் இலாக்காக்களிலும் ஒரே நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்திய அரசாங்கத்தின் எல்லா அமைச்சுக் களும், இலாக்காக்களும் மேற்கொண்டுள்ள "நடைமுறைத் திட்டம்" பற்றி நாங்கள் ஒன்றும் அறியமுடியவில்லை. எனவே, அவர்களுக் குள்ள பிரத்தியேகமான தொல்லைகள் அடிப்படை வேலையின் அளவு இன்றுள்ள அரசாங்க ஊழியர்களின் மொழியறிவு எல்லை, புதிய இடைநிலை மொழியில் அவர்களனைவரும் பயிற்சி பெறக்கூடிய கால அளவு ஆகியவை பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது. எனவே அடிப்படையான முதல் தேவைகளை நாங்கள் வெளியிட்டுள் ளோம். அவற்றைப் படிப்படியாக நிறைவேற்றம் செய்வது, அவற் றோடு தொடர்புடைய பிரச்னைகளை ஆராய்வது, நடைமுறைத் திட்டம் வகுப்பது, அதற்கேற்ற கால அட்டவணை தயாரிப்பது ஆகிய இவற்றை எல்லாம் தேவையான நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு இந்திய அரசாங்கம் தானே முடிவு செய்ய வேண்டும். (பாரா 17.)

67. இந்தியத் தணிக்கைத் தலைவர் கீழுள்ள இந்தியத் தணிக்கை, கணக்கர் இலாக்காவின் பிரத்தியேகமான நிலையும் ஆராயப் பட்டுள்ளது. ஒரு ராஜ்யம் அதனுடைய பிராந்திய மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்ட பிறகு அந்த ராஜ்யத்தில் வேலை செய்கின்ற இந்திய கணக்குத் தணிக்கை இலாக்காவிலுள்ள ஊழியர் கள் அந்த ராஜ்யத்தில் வழங்கும் மொழியில் தகுந்த அறிவு பெற்றவர் களாக இருந்து தங்கள் கடமையைச் செய்யவும், கணக்குகளைத் தயார் செய்யவும், தணிக்கைகளைச் செய்யவும் தகுதி பெற்றிருக்க வேண்டும். அதாவது ராஜ்யத்திலுள்ள மண்டலக் கணக்கர், அதாவது தணிக்கைத் தலைவரின் பிரதிநிதி அவருடைய அலுவலகத் திற்கு அனுப்பும் பிராந்திய மொழியில் எழுதப்பட்ட கணக்கு களிலிருந்து கணக்குத் தயாரிக்கவும், பிராந்திய மொழியில் குறிக்கப் பட்டுள்ள ஆட்சித் துறை முடிவுகளை அறிந்து கொள்ளவும், தகுதி பெற்றிருக்கவேண்டும். (பாராக்கள் 18-ம், 20-ம்.)

68. இப்பிரச்னையை சமாளிப்பதற்கு "தணிக்கையை ராஜ்ய அதிகாரத்திற்கு உள்ளடக்குதல்" என்பது ஒரு வழியாகக் கூறப் பட்டது. என்றாலும் அத்தகைய ஒரு மறுவழியை அரசியலமைப்பில் பெரியதொரு மாற்றம் செய்து மேற்கொள்ளவேண்டுமாதலால் இப்பொழுது தேவையில்லை என்று கூறுகிறோம். இன்றுள்ள அரசிய லமைப்பின் ஏற்பாடுகளின்படியே இதற்கொரு வழி காணமுடியும் என்று கருதுகிறோம். ஒருவகையில் மண்டலக் கணக்கர்களின் அலுவலகங்களே அந்தந்த ராஜ்யங்களிலுள்ள ராஜ்ய மொழியில் எழுதப்பட்ட கணக்குகளைப் பரிசோதனை செய்ய முடியும். அதே அலுவலகம் யூனியனைப் பொறுத்த மட்டில் கணக்கு, தணிக்கை

செய்யும் வேலையை மேற்கொள்கின்ற இந்தியத் தணிக்கைத் தலைவரின் ஓர் உறுப்பாக இருந்து பணியாற்ற முடியும். இந்திய கணக்கு, தணிக்கை இலாக்காவின் அமைப்பையும், பணியாளர்கள் தேர்ந்தெடுக்கும் நிலையையும், மாற்றி அமைக்கவேண்டும். நாடு முழுவதிலும் பரவியுள்ள மத்திய அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களுக்கும் சொல்லிய முறையிலேயே இந்த மாற்றமும் ஏற்படவேண்டும். (பாராக்கள் 22-ம், 23-ம்.)

பகுதி 8

பொது ஆட்சியில் மொழி—2

ராஜ்ய ஆட்சி விவகாரங்களில் ஹிந்தி மொழியைப் பயன் படுத்துவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி.

69. ஆங்கில இடை நிலையை நீக்கி விட்டு இந்திய மொழி இடை நிலையை மேற்கொள்வதில் ஹிந்திப் பிராந்தியங்களில் உள்ள ராஜ்யங்கள் நாட்டினுள்ள ஏனைய பகுதிகளைவிட அதிகமாக வளர்ச்சியடைந்துள்ளன. என்றும் ஒரு மொழி அடிப்படையில் ராஜ்யப் புனரமைப்பு வேலை நடைபெற்ற பிறகு அந்தந்த ராஜ்யங்களில் ஆங்கில மொழியை அந்தந்த பிராந்திய மொழிகளின் மூலம் ராஜ்ய விவகாரங்களுக்குப் பயன் படுத்தும் வேலை ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலும் நடைபெறும் என நம்புகிறோம். (பாராக்கள் 1-ம், 2-ம்.)

70. தம்மிடம் ஊழியம் செய்யும் எந்த அதிகாரிகள் எந்த நிலையில், எந்த சந்தர்ப்பத்திற்காக யூனியனோடோ அல்லது மற்ற ராஜ்யங்களோடோ வாய் மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ எப்பொழுது உறவுகொள்ள நேரிடும் என்பதை அந்தந்த ராஜ்யங்கள் தாமே முடிவு செய்ய வேண்டும். ராஜ்ய அரசாங்கங்கள் எத்தகைய ஊழியர்களை மேற்கொண்டு ஹிந்தி மூலம் கடிதப் போக்குவரத்துச் செய்வதற்கு எம்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையும், ஊழியர்களுக்கு எத்தகைய பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதையும் அவர்களே முடிவு செய்ய வேண்டும். (பாரா 3.)

71. யூனியன் அரசாங்கத்தைப் போலவே ராஜ்ய அரசாங்கங்களும் தம்மிடம் பணி புரிகின்ற ஊழியர்கள் ஏனைய ராஜ்யங்களொடும், யூனியனோடும் தொடர்பு கொள்ளக்கூடிய தேவை பெற்றிருப்பார்களேயானால் புதிய இடைநிலை மொழியில் அவர்கள் பயிற்சி பெற்றிருக்க வேண்டும் என்று கட்டாயப் படுத்துவது நியாயமானதேயாகும். இதற்கு மேற்பட்ட நிலையில் ஹிந்தி மொழியில் அறிவு பெறுவது என்பது பரிசு கொடுத்தல் மூலம் செய்யப்பட வேண்டுமே தவிரக் கட்டாயப் படுத்தலின் மூலமும், தண்டனை கொடுத்தல் மூலமும் செய்யக்கூடாது என்றாலும் இந்தந்த ராஜ்யங்களே இதனை நன்கு முடிவு செய்யக்கூடிய கருவிகளாகும். (பாரா 4.)

72. யூனியன் அரசாங்கத்திலிருந்து ஹிந்தி பேசும் ராஜ்யத்திற்குச் செல்லும் ஒரு செய்தி அறிக்கை ஆங்கிலத்தில் சென்றாலும், ஒரு ஹிந்தி மொழி பெயர்ப்போடு செல்ல வேண்டும். எப்பொழுதாவது அந்த ராஜ்யம் இங்ஙனம் வேண்டிக்கொண்டால் இது உறுதியாகச் செய்யப்பட வேண்டும். ஆட்சித் துறையில் 1965-க்கு முன்னரே

ஹிந்தியைப் பயன் படுத்துகின்ற இத்தகைய முறை ஏற்படுமேயானால் சொல்லாட்சி முதலியவற்றை அப் புதுமொழியில் காண்பதற்கு இது உதவியாகும். (பாரா 5.)

எண்களின் வடிவம்.

73. எண்களின் பன்னாட்டு வடிவம் என்று சொல்லப்படுவதே இந்தியாவில் தொடங்கப்பட்டதாதலாலும் அதுவே பழைய இந்திய எண்களின் மாறுபட்ட வடிவம் ஆதலாலும், இன்று பல்வேறு வகையான வடிவங்களைப் பெற்று அவற்றிற்குரிய தனிப்பட்ட வரிவடிவ முறையோடு நவீன இந்திய முறைகளில் வழங்கப்பட்டு வருகிறது.

தென்னாட்டில் நான்கு பெரிய திராவிட மொழிகளிலும் எண்களின் இந்தப் பன்னாட்டு வடிவம் அன்றாட உபயோகத்தில் இருந்து வருகிறதென்பதைக் கவனிக்க வேண்டும். அந்தந்த மொழிகளிலுள்ள எண்களின் வரிவடிவங்களோடு மிகுதியாகவும், குறைவாகவும், அவற்றோடு சேர்த்தும் இந்த எண்கள் பயன் படுத்தப்படுகின்றன. (பாரா 7.)

74. ஹிந்தி பேசும் பிராந்தியகளிலுள்ள சில ராஜ்யங்களில் ராஜ்யத்தின் உள் ஆட்சித் துறையில் எண்களின் தேவநாகரி வடிவத்தை மட்டும் பயன் படுத்துவதோடு சில சமயங்களில் பன்னாட்டு வடிவத்தையும் சேர்த்துப் பயன் படுத்துகின்றனர்,

அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களே இதுபற்றி முடிவு செய்ய வேண்டும். யூனியன் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் எந்தெந்த வெளியீடுகள் யாருக்கு வெளியிடப்படுகின்றனவோ அவர்களைப் பொறுத்து தேவநாகரி எண்களைப் பயன் படுத்துவதோடு தேவையானபொழுது பன்னாட்டு வடிவையும் பயன் படுத்தலாம். (பாராக்கள் 8-ம், 9-ம்.)

75. இப்பொழுதிலிருந்து 1960-ல் அடுத்த கழகம் நியமிக்கப்படுவதற்குள்ளாக யூனியன் விவகாரங்களில் பயன் படுத்தப்படும் பன்னாட்டு எண்களோடு சேர்த்து எண்களின் தேவநாகரி வடிவத்தையும் பயன்படுத்த வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி ஜனாதிபதிக்கு நாங்கள் யாதொரு சிபார்சையும் செய்யவில்லை. (பாரா 9.)

பகுதி 9

சட்ட மொழியும், நீதி மன்றங்களும்—1

சட்டம் செய்யும் மொழி.

76. சட்ட மன்றங்களில் நடைமுறைக்குப் பயன் படுத்தப்படும் மொழிக்கும், சட்டம் செய்யும்பொழுது அது செய்யப்படுகின்ற மொழிக்கும் ஒரு வேறுபாட்டைக் காண்டல் வேண்டும். சட்ட மன்றங்களில் விவாதங்கள் நடக்கும்பொழுது தேவைப்படுகின்ற மொழி எளிதில் பேசக்கூடியதாய், அனைவருக்கும் வசதியுடையதாய் இருத்தல் வேண்டும். சட்டங்கள் செய்யப்படும்பொழுது அந்த மொழியின் தேவை வேறு வகைப்படும். அந்த

மொழி வரையறுத்த பொருளுடையதாய், விரிவானதாய், ஐயத்திற்கு இட மில்லாததாய், நாட்டில் பல்வேறு நீதி மன்றங்களும் அதனை எடுத்துப் பொருள் செய்வதற்குரிய தகுதி பெற்றதாய் இருத்தல் வேண்டும். (பாரா 3.)

77. சட்ட மன்றங்களில் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. சிலவிடங்களில் கேள்வி களும், விடைகளும் அந்தச் சட்ட மன்றத்தில் வழங்காத மொழியில் இருக்குமேயானல் உறுப்பினர்கள் தேவைக்கு ஏற்ப மொழி பெயர்த்து எழுத்து மூலம் தரப்படுவதாகவும் தெரிகிறது. இத்தகைய ஒரு பழக்கத்தைப் பொதுவான பழக்கமாக மேற் கொள்ளலாம். (பாரா 2.)

78. குறிப்பிட்ட (அதாவது பாராளு மன்றத்தைப் பொறுத்த வரை 1965 ஜனவரி 25-ந் தேதிக்குப் பிறகு) காலத்திற்கப்பால் பட்டும், பாராளு மன்றத்தில் ஹிந்தியும், ராஜ்யங்களில் அந்த ராஜ்ய மொழிகளும் ஆங்கிலத்தின் இடத்தைப் பெற்ற பிறகும் கூடச் சில சந்தர்ப்பங்களில் ஓர் உறுப்பினர் ஹிந்தியிலோ ராஜ்ய மொழியிலோ அல்லது அவருடைய தாய் மொழியிலோ தம் கருத்துக்களைத் தெரி விக்க முடியாமல் இருக்கலாம். அத்தகைய நேரங்களில் சட்ட மன்றத்தில் தலைமை வகிப்பவர்கள், இத்தகையவர்கள் ஆங்கிலத்தில் தம் கருத்துக்களை வெளியிடலாம் என்று உரிமை வழங்கவேண்டும். (பாரா 2.)

79. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் முறையில் பாராளு மன்றத்திலும் ராஜ்ய சட்ட மன்றங்களிலும் இன்றுள்ள அரசிய லமைப்பு ஏற்பாடு போதுமானதாகவே இருக்கின்றது. (பாராக்கள் 2-ம், 4-ம்.)

80. பாராளு மன்றச் சட்டமும், ராஜ்யச் சட்டமும் நாளா வட்டத்தில் அதிகார பூர்வமான ஹிந்தியிலேயே இருக்க வேண்டும் என்பது எங்கள் கருத்து. அவ்வாறு இருப்பினும் பொதுமக்களி னுடைய நலத்தைக் கருதிப் பல்வேறு பிராந்திய மொழிகளில் மொழி பெயர்ப்புகளை வெளியிடவேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம். ராஜ்யச் சட்ட மன்றங்களைப் பொறுத்த மட்டில் அந்தப் பிராந்தியத் திலுள்ள மொழியில் மொழி பெயர்ப்பதே போதுமானது என்றாலும், பாராளு மன்றச் சட்டங்களைப் பொறுத்த மட்டில் நாட்டிலுள்ள எல்லா முக்கியமான பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட வேண்டும். (பாரா 4.)

81. இம்மொழி மாற்றம் செய்வதற்குரிய காலம் வரும்பொழுது நாட்டிலுள்ள நிலைச்சட்டங்கள் அனைத்தும் ஒரே மொழியில்தான் இருக்க வேண்டுமென்றும், அது ஹிந்தியைத் தவிர வேறொன்றாக இருக்க முடியாதென்றும் நாங்கள் கருதுகிறோம். எனவே ராஜ்யங் களில் நிறைவேற்றப்படும் சட்டங்களும், பாராளு மன்றத்தில் நிறை வேற்றபடும் சட்டங்களும் ஒரே மொழியில் இருக்கவேண்டு மாத லால் நிலையான உத்தரவுகள், ஒழுங்கு முறைகள் முதலானவைகள் ஹிந்தியிலே இருக்க வேண்டும். (பாராக்கள் 5-ம், 6-ம்.)

பகுதி 10

சட்ட மொழியும், நீதி மன்றங்களும்—2

நீதி மன்றங்களில் வழங்கும் மொழி.

82. மத்திய பாரதம், ராஜஸ்தானம், ஹைதராபாத் போன்ற சில ராஜ்யங்களில் ஹிந்தி மொழியை அதாவது பிராந்திய மொழியை, உயர்நீதி மன்ற நடவடிக்கைகளில் தீர்ப்புகள், உத்தரவுகள், ஆணைகள் ஆகியவைகள் தவிர மற்றவற்றில் பயன் படுத்தலாம் என்ற உத்திரவிடப்பட்டுள்ளது. (பாரா 4.)

83. சென்ற சில பத்தாண்டுகளுக்கு முன்னர் நாட்டின் நீதி முறை முழுவதும் ஆங்கில மல்லாத பிற மொழியில் தான் நடைபெற்று வந்தது. ஆங்கிலத்திலிருந்து இந்திய இடை நிலை மொழிக்கு மாற்றம் செய்வது புதுமை போலக் காணப்படலாம். ஏனென்றால் இப்புதிய தலைமுறை நீதித் துறை முழுவதிலும் ஆங்கிலத்தையே காண்கிறது. என்றாலும் ஒரு நாட்டில் நீதி என்பது அதனுடைய உள் நாட்டு மொழியிலேயே வழங்கப்பட வேண்டும். எனவே இந்த மாற்றம் முறையான முறையில் படிப்படியாகக் கொண்டுவரக்கூடுமேயானால் எவ்விதமான அச்சத்தையோ அல்லது கவலையையோ தரவேண்டியதில்லை. (பாரா 6.)

84. மிக உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரை நடைமுறைகளிலும், ஆவணங்களிலும், தீர்ப்புக்களிலும், உத்திரவுகளிலும் ஒரே ஒரு மொழிதான் அதாவது ஹிந்திதான் இறுதியில் நிற்கும். மொழி மாற்றத்திற்கு ஏற்ற காலம் வரும்பொழுது மிக உயர்நீதி மன்றம் ஹிந்தி மொழியில் மட்டுமே தொழிற்பட வேண்டும். மிக உயர்நீதி மன்றத்தில் வழங்கப்படும் தீர்ப்பை அதிகார பூர்வமாக வெளியிடும் பொழுதும் அதனை அந்த மொழியிலேயே வெளியிட வேண்டும். (பாரா 8.)

85. மிக உயர்நீதி மன்றத்தால் வழங்கப்படும் கட்டளைகள் ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியத்தில் வாழும் ஒருவருக்கோ அன்றி ஹிந்தி மொழி பேசாத ஒருவருக்கோ வழங்கப்பட வேண்டுமேயானால் அவருடைய சௌகர்யத்தை முன்னிட்டு ஒரு மொழி பெயர்ப்பபாடு கூடவே அனுப்பப்படலாம். (பாரா 8.)

86. மிக உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்களை ஒவ்வொரு ராஜ்ய மொழியிலும், அதிகார பூர்வமான முறையில் மொழி பெயர்த்து மக்களுக்குக் கிடைக்குமாறு செய்யலாம். (பாரா 8.)

87. நீதித் துறையில் கீழ் நிலையிலுள்ள பஞ்சாயத்து மன்றங்கள், அமைதி, குற்ற நீதி மன்றங்கள் ஆகியவற்றில் மொழி மாற்றம் செய்யப் படும் பொழுது மக்களுக்குப் புரிகின்ற மொழியிலேயே அதாவது பிராந்திய மொழிகளிலேயே மொழி மாற்றம் செய்யவேண்டும். மாவட்ட நிலையிலுள்ள அமைதி நீதி மன்றங்களுக்கும், குற்றநீதி மன்றங்களுக்கும் இதே காரணம் செல்லுபடியாகும். இன்று கூடப் பல்வேறு தரத்தில், பல்வேறு ராஜ்யங்களில், பல்வேறு நீதி மன்றங்களில் பிராந்திய மொழி வழங்கப் பட்டு வருகிறது. (பாரா 9.)

88. மிக உயர் நீதி மன்றம் ஹிந்தியையும், கீழ் நிலையிலுள்ள நீதி மன்றங்கள் பல்வேறு பிராந்திய மொழிகளையும் வழங்குகின்ற நிலையில் இந்தப் பல்வேறு பிராந்திய மொழி வழங்கும் நிலையை மாற்றி அமைத்து ஒரு மொழி நிலையைக் கொண்டு வர வேண்டிய ஒரு இடம் தேவைப்படு

கின்றது. இப் பன்மொழி நிலை, உயர்நீதி மன்ற நிலையில் மாற்றி அமைக்கப் படவேண்டும். உயர்நீதி மன்றத்தில் "இருவகை நிலைகள்" அதாவது மிக உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரை ஹிந்தி மொழியும், கீழ் நிலை நீதி மன்றங்களைப் பொறுத்தமட்டில் பிராந்திய மொழிகளும் வழங்கப்பட வேண்டும். (பாரா 10.)

89. உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரை ஹிந்தி அல்லது பிராந்திய மொழிகளை வழங்குவதைப் பற்றிய நன்மை, தீமை என்ற இரண்டும் மிகவும் கவனமாக ஆராயப்பட்டுள்ளது. மொழி மாற்றம் செய்வதற்குரிய காலம் வரும்பொழுது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்புக்கள், கட்டளைகள், ஆணைகள் ஆகியவைகள் அனைத்தும் நாடு முழுவதிலும் ஒரே பொது இடைநிலை மொழியில் அதாவது ஹிந்தி மொழியில் இருக்க வேண்டுமென்பதற்கு மிக வலுவான காரணங்கள், எங்கள் கருத்துப்படிக் கூறினல், தள்ளமுடியாத காரணங்கள், உள்ளன. (பாராக்கள் 11, 12, 13.)

90. கீழ் நிலை நீதி மன்றங்கள், உயர்நீதி மன்றம் கொடுக்கும் சட்ட வியாக்யானப்படி தொழிற்பட வேண்டியவை ஆதலால் உயர் நீதி மன்ற முடிவுகளை எடுத்து வெளியிடும்பொழுது பிராந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்துத் தரவேண்டும். இந்த மொழி பெயர்ப்புகள் நம்பிக்கைக் குரியனவாக இருக்க வேண்டுமென்பதற்காகக் காலம் வரும்பொழுது ஒவ்வொரு உயர்நீதி மன்றத்திலும் ஒரு "மொழி பெயர்ப்பு அமைப்பை" ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். (பாரா 11.)

91. உயர் நீதி மன்றங்களின் கட்டளைகள், உத்தரவுகள், ஆணைகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் எங்கெங்கே தேவை ஏற்படுகின்றனவோ அங்கேயெல்லாம் ஹிந்தி மூலத்தோடுகூட "அதிகார பூர்வமான மொழி பெயர்ப்பையும்" சேர்த்துக் கொடுக்கலாம் என்று நாங்கள் ஆலோசனை சொல்லுகிறோம். (பாரா 14.)

92. இது போன்ற எல்லா நிலைகளிலும் நீதி மன்றங்களின் இடை நிலை மொழியைப் பொறுத்தமட்டிலும், முழு நிலையிலும் மொழி மாற்றம் செய்வதையே நாங்கள் விரும்புகிறோம். தேவைப்படும் பொழுது தகுந்த காரணம் இருக்குமேயானல் இவ்விதிக்குச் சில விலக்குகள் தருவதில் தவறு ஒன்றுமில்லை. அதாவது மிக உயர் நீதி மன்றத்திற்கு நடுவணராக வரவேண்டிய ஒருவரோ அன்றி உயர் நீதி மன்றத்திற்கு நடுவணராக வரவேண்டியவர்களோ இம்மொழி மாற்றத்திற்கு விலக்கு வேண்டினல் அதை உடனே தருவதில் தவறு ஒன்றும் இல்லை. நீதித் துறை முழுவதிலும் இத்தகைய ஒரு பொதுவான மொழி மாற்றம் ஏற்பட்ட பிறகும்கூடத் தனிப்பட்ட சில நடுவணர்கள் தம்முடைய தீர்ப்புக்களை ஆங்கிலத்தில் வழங்க விரும்பலாம். அவ்வாருனல் அவர்கட்கும் அவ்வாறு செய்ய இடந்தர வேணடும். (பாராக்கள் 8-ம், 15-ம்.)

93. ராஜ்யப் புனரமைப்புக் கழகம் உயர்நீதி மன்ற நடுவணர்கள் பற்றிச் செய்த சிபார்சுகளையும், நாடு முழுவதிலும் ஒரே நீதித் துறை இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்ட ஏற்பாடுகளையும் கவனத்தில் வைத்துக் கொண்டால் உயர்நீதி மன்ற நடுவணர்களைப் பொறுத்தமட்டில் பிராந்திய மொழிகளிலும், ஹிந்தி மொழியிலும் ஓரளவு அறிவு பெற்றவராக இருக்க வேண்டும் என்ற சட்டம் செய்வதில் தவறில்லையோ என்று தோன்றுகிறது. (பாரா 14.)

94. உயர்நீதி மன்ற நடுவணர்கள் தங்கள் தீர்ப்புக்களை வேண்டுமானால் ஆங்கிலத்தில் வழங்கலாம் என்று சொல்லும் உரிமையோடு தேவைப்பட்டால் பிராந்திய மொழிகளிலும் வழங்க உரிமை தரப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்தால் அத்தீர்ப்புக்களின் ஆங்கில அல்லது ஹிந்தி மொழி பெயர்ப்பை அதிகார பூர்வமாக வெளியிட அவர்கள் உடன் படவேண்டும், (பாரா 15.)

95. வழக்கறிஞர்களைப் பொறுத்தமட்டில் மிக உயர்நீதி மன்றத்தில் தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் வழக்கை எடுத்துரைக்கவும், பல்வேறு உயர்நீதி மன்றங்களில் ஆங்கிலத்திலும், பிராந்திய மொழிகளிலும் வழக்கை எடுத்துரைக்கவும் பொதுவான முறையில் மொழி மாற்றம் நடைபெற்ற பிறகும்கூட இம்மொழிகளைக் கையாளுவதற்கு உரிமை வழங்கவேண்டும். (பாராக்கள் 8, 14, 15.)

96. அதற்கேற்ற காலம் வரும்பொழுது மாவட்ட நிலையில் வழக்கறிஞர்கள் விருப்பப்பட்டால் ஹிந்தி மொழியில் தங்கள் நியாயத்தை எடுத்துக் கூறுவதற்குரிய ஓர் உரிமையை அவருக்கு வழங்கவேண்டுமென்று அந்த ராஜ்யங்களுக்குச் சிபார்சு செய்கிறோம். மிகப் பெரிய நகரங்களில் இது தேவைப்படும் என்றே கருதுகிறோம். சிறிய நகரங்களில் இது தேவைப்பட்டால் அச்சட்டத்தைத் தளர்த்துவதன் மூலம் இதையும் செய்து கொடுக்கலாம். (பாரா 16.)

97. பிரத்தியேகமான நடுவணர் மன்றங்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய உத்தரவுகளும் ஆணைகளும் ஒரு தனிப்பட்ட பிராந்தியத்தை மட்டும் பொறுத்ததாக இல்லாமல் இருக்குமேயானால் அது ஹிந்தி மூலத்திலேயே வழங்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் கட்சிக்காரர்களுக்கு மொழி பெயர்த்துத் தரப்படலாம். மொழி மாற்றக் காலத்தில் உயர்நீதி மன்றங்களுக்குச் சொல்லப்பட்டது போலவே இப்பிரத்தியேக மன்ற நடுவணர்களும் பல காலத்திற்குத் தேவைப்பட்டால் ஆங்கிலத்தைத் தம் தீர்ப்பு முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தலாம். (பாரா 17.)

98. சட்டக் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில் என்ன இடை நிலை மொழி, போதன மொழியாக இருக்கவேண்டும் என்பது பற்றி ஆராயும் பொழுது பகுதி 6-ல் இது பற்றி நாங்கள் செய்த சிபார்சுகள் போதுமானதென்று குறிக்கிறோம். பல்கலைக் கழகங்கள் சட்டப் பரீட்சை எழுதும் மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப ஹிந்தியிலோ பிராந்திய மொழியிலோ எழுதும் உரிமையை வழங்க வேண்டும். பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும் போதன மொழியாக ஹிந்தி இருக்க வேண்டுமா அல்லது பிராந்திய மொழி இருக்கவேண்டுமா என்ற பிரச்னைக்கு அதனை அப்படியே விட்டு விட்டால் தேவைக்கேற்றபடி அது வளர்ச்சியடைந்து ஒரு முடிவைக் காணலாம் என்று சொல்லி விட்டுவிடுகிறோம். (பாரா 18.)

பகுதி 11

சட்டமொழியும் நீதிமன்றங்களும்—3

மாற்றத்தின் இயக்க வகை இயல்.

99. சட்டத் துறையிலும், நீதி வழங்கும் துறையிலும் அடிப்படை வேலைகள் நன்கு செய்யப்பட்டாலொழியப் பொது மாற்றம் செய்யப்படக் கூடாது. (பாரா 1).

100. எங்களுடைய கொள்கைப்படி இதே போன்ற மற்ற விஷயங்களி லும்கூட மாற்றம் செய்வதற்குரிய எந்த ஒரு குறிப்பிட்ட தேதியையும் நாங்கள் குறிப்பிடவில்லை. மொழி மாற்றக் காலத்தில் முதல் தேவையாக உள்ள எந்த ஒரு குறிப்பிட்ட வேலையையும் செய்வதற்குச் செலவாகும் காலம் முதலியன பற்றிய எந்த் ஒரு அட்டவணையையும் நாங்கள் தயாரிக்க வில்லை. எங்களுக்குத் தெரிந்த வரையில் முதலாவதாகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் யாவை என்பது பற்றியும், அதனோடு தொடர்புடைய முக்கியமான வேலைகள் யாவையும் என்பது பற்றியும், இவைகள் எவற்றின் பின் எவை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றியும் எங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளோம். (பாரா 1).

101. சட்ட மன்றங்களிலும் உயர்தர நீதித் துறைகளிலும் ஆங்கிலமே இன்னும் நீண்ட காலத்திற்கு இடை நிலை மொழியாக இருக்க வேண்டும் என்று சொன்னவர்களுடைய வாதங்களையெல்லாம் மிகவும் கவனத்தோடு ஆராய்ந்து பார்த்தோம். நீதித் துறையிலும் ஆட்சி துறையிலும்கூட, இம் மொழி மாற்றம் ஏனைய பொது ஆட்சித் துறையிலும், கல்வித் துறையிலும் இத்தகைய ஒரு மாற்றம் வரும் அதே காலத்தில் இந்த மாற்றமும் வர வேண்டுமென்று நாங்கள் முடிவு கூறுகிறோம். (என்றாலும் இதற்கெனவே அரசியலமைப்பின் 348-வது விதிப்படி பாராளு மன்றம் தனிப்பட சட்டம் செய்ய வேண்டியிருத்தலின் மற்றொரு நாளில் இது நடைமுறைக்கு வரலாம்). (பாரா 2).

102. நீதித் துறையிலும், சட்டத் துறையிலும் மொழி மாற்றம் செய்வதற்குரிய அடிப்படைக்குக் கீழ்க்கண்ட முதல் தேவைகள் நடைபெற்று முடியவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம் :—

(1) ஒரே தரமுடைய சட்ட அகராதி ஒன்றைத் தயாரித் தல்.

(2) மத்திய, ராஜ்ய சட்டங்களையெல்லாம் ஹிந்தியில் மொழி பெயர்த்து நிலைபெற்ற சட்டப் புத்தகத்தை வெளியிடுதல். (பாரா 3.)

103. நாட்டின் நீதித் துறை ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்காக நாடு முழுவதிலும் எல்லா மொழிகளிலும் ஒரே வகையான சட்ட மரபுச் சொல் லையும், சட்டச் சொல்லாட்சிகளையும் பயன்படுத்தவேண்டும். (பாரா 4).

104. சட்டக் கலைச்சொல் அகராதி தொகுப்பதைப் பொறுத்த வரைக் கீழ்க்கண்ட ஒரு நடைமுறை அட்டவணையை ஏற்படுத்தி மிக விரைவாக அதனைப் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம் :—

(1) சட்டத் துறையில் இந்திய மொழிகளில் புதிய கலைச்சொற் களை உண்டாக்கும் வேலை இப்பொழுது நடைபெறுவதைக் காட்டி லும் மிக வேகமாக நடைபெற வேண்டும்.

(2) இச்சொற்கள் தயாராக ஆகிக்கொண்டு இருக்கும்போதே அடிக்கடி இவற்றை வெளியிட்டு ஒரு குறிப்பிட்ட அதிகாரியின் கீழ் ஒப்படைக்கப்பட வேண்டும். இவை ஏற்றுக்கொள்ளப் பெறத் தரமுடைய சொற்களாகக் கருதப்பட வேண்டும்.

(3) மத்திய அரசாங்கத்தின் ஆதரவின் கீழ், மத்திய, ராஜ்ய சட்டப் புத்தகங்களை உடனடியாக ஹிந்தியில் வெளியிட வேண்டும். இத்தகைய முறையில் புதிதாக ஹிந்தியில் வெளியிடப் படும் சட்டங்களை அந்த அந்தச் சட்ட மன்றங்கள் மறுபடியும் ஒரு

முறை நிறைவேற்ற வேண்டாமா என்பதை நிர்ணயிக்க வேண்டும். இவை பற்றிச் சரியான முடிவுகளை மேற்கொண்டு மத்திய, ராஜ்ய சட்டங்களை நிர்ணயிக்கவேண்டும். (பாரா 6.)

105 முதல் முறையாகச் சட்டத்தை எழுதும்பொழுதே ஹிந்தியில் எழுதக்கூடிய வன்மையைப் பெறுவதற்காக மக்கள் அதற்குரிய அறிவைப் பெறவேண்டிச் சட்ட வரைவுகளை ஹிந்தி மொழியில் எழுதத் தொடங்கவேண்டும். அதற்காக எந்த ராஜ்யங்களில் இதை ஹிந்தியில் செய்ய விரும்புகிறார்களோ அந்த ராஜ்யங்களுக்கு உத்திரவு கொடுத்து ஹிந்தியிலேயே இதனை வரையச் செய்ய வேண்டும் (பாரா 9.)

106. மொழி மாற்றக் காலத்தில் இந்தியச் சட்டப் புத்தகத்தில் ஒரு பகுதி ஹிந்தியாகவும் ஒரு பகுதி ஆங்கிலமாகவும் இருக்கின்ற ஒரு காலத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அன்றியும் வழக்குச் சட்டங்களும் இங்ஙனம் இரு மொழிகளிலும் இருத்தல் கூடும். நாளாவட்டத்தில் இவ்விரு பகுதிகளுள் ஹிந்திப் பகுதி விரிந்து கொண்டே செல்லும். இத்தகைய மாற்றக் காலத்தில் இவற்றை ஹிந்தி ஆங்கிலம் என்ற இரு மொழிகளிலும் தருவதோடு ஒன்று மூலமாகவும் மற்றொன்று அதனுடைய அதிகார பூர்வமான மொழி பெயர்ப்பாகவும் இருக்குமாறு செய்யலாம், (பாரா 9.)

பகுதி 12

யூனியன் மொழியும் பொதுப் பணிக் கழகப் பரீட்சைகளும்.

107. கல்வி முறையில் எது போதன மொழியாக இருக்கின்றதோ அதற்கேற்ற முறையில் போட்டிப் பரீட்சைகளின் இடைநிலை மொழியும் இருக்கவேண்டும் என்று சொல்லத் தேவை இல்லை. (பாரா 2.)

108. மேற்கொண்ட பயிற்சிகளுக்கு நுழைவு தருவதற்காக ஏற்படுத்தப்படும் இந்தியக் கடற்படை நுழைவுப் பரீட்சை அல்லது தேசியப் பாதுகாப்புக் கழக நுழைவுப் பரீட்சை என்பவை போன்ற பரீட்சைகளுக்கும் ஏனைய ஊழியத் துறைக்கு ஆள் எடுப்பதற்காக நடத்தப்படும் போட்டிப் பரீட்சைகளுக்கும் வேறுபாடு உண்டு. (பாரா 2.)

109. பயிற்சி அமைப்புக்கள் பலவற்றில் போதன மொழியை மாற்றி அமைக்க வேண்டிய வேலை இன்னும் முற்றிலும் நடைபெறவில்லை என்று தெரிகிறது. ஹிந்தியில் மாற்றி அமைக்கக்கூடிய இயல்பு இருப்பினும், ஏறத்தாழ மாற்றி அமைக்கலாம் ஆயினும், இன்னும் ஆங்கிலத்திலேயே அவைகள் இருந்து வருகின்றன. நாட்டில் இடைநிலைக் கல்வியில் ஏற்படுகின்ற மாறுதல்களை ஒட்டியும் இந்தப் பல்வேறு பயிற்சி அமைப்புக்களிலும் உள்ள போதன மொழி ஆகியவற்றை ஒட்டியும், இவற்றிற்குரிய நுழைவுப் போட்டிப் பரீட்சைகளில் தக்க முறையில் போதன மொழியை அமைக்க வேண்டும், (பாரா 3,)

110. இப்போட்டிப் பரீட்சைகளுக்கு இப்பொழுது இடைநிலை மொழியாக உள்ள ஆங்கிலத்தை மாற்றி அமைக்கவேண்டுமானால் இப்பொழுது நாட்டின் பல பாகங்களிலும் இடைநிலைக் கல்வியில்

போதனு மொழியாக இருந்த ஆங்கிலத்தின் இடத்தைப் பிராந்திய மொழிகளே எடுத்துக்கொண்ட காரணத்தால் இப்போட்டிப் பரீட்சைகளுக்கும் ஆங்கிலத்திற்குப் பதிலாகப் பிராந்திய மொழிகளே இடைநிலை மொழிகளாக அமைய வேண்டும். இவ்வாறு செய்வதால் இப்போட்டிப் பரீட்சைகள் அகில இந்தியத் தன்மையைப் பெருமல் பிராந்திய வாரியாக பிரிக்கப்பட்டுவிடும் ஆதலால் ஒரு வகை பங்கீட்டு முறையையே மேற்கொள்வதாக அமையும். பயிற்சி அமைப்புக்களுக்குரிய நுழைவுப் போட்டிப் பரீட்சைகளில் இங்ஙனம் பங்கு முறையை ஏற்றுக்கொள்வதற்கும், அகில இந்தியப் பணிகளுக்குரிய உயர்தர அதிகாரிகளைப் பொறுக்கும் பொழுது பங்கு முறையை மேற்கொள்வதற்கும் நிறைந்த அளவு வேற்றுமை உண்டு. (பாராக்கள் 2-ம், 3-ம்.)

111. அகில இந்தியப் பணிகளிலும், மத்தியத் துறைப் பணிகளிலும் எதிர்காலத்தில் அதிகாரிகளாக வருபவர்களின் மொழியறிவுத் தேவையை உத்தேசித்து ஒரு கட்டாய ஹிந்தி வினுத்தாளை இப் பரீட்சைகளில் ஏற்படுத்துவது தகுதியுடையதென்றே நினைக்கிறோம். ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள மாணவர்கட்கு அதிகத் தொல்லை விளையாத முறையில் மாற்றக் காலத்தில் இவ்வினுத்தாள் மிக எளிமையானதாகச் செய்யப்பெற்று, மேலும் "தகுதித் தாளாக மட்டும்" இதனை வைத்துக்கொள்ளலாம். பின்னர்த் தகுந்த அளவு முன்னறிவிப்புச் செய்துவிட்டு இவ்வினுத்தாளை இன்னும் கடினமானதாக ஆக்கி அம்சங்களைக் கணக்கிடுவதற்கும் இவ்வினுத்தாளை ஏற்றுக்கொள்ளலாம். மேலும் தென்னிந்திய மொழிகளைப் பேசும் மாணவர்கள் இந்த ஹிந்தி வினுத்தாளில் உள்ள ஒன்று இரண்டு கடுமையான வினுக்களுக்கு விடை அளிக்க வேண்டியதில்லை ஹிந்தி மொழியோடு தொடர்புடைய மொழிகளைத் தாய்மொழியாக உடைய மாணவர்கள் இவ்வினுக்களுக்கு விடை எழுதலாம். (பாரா 6.)

112. ஹிந்தி மொழி பேசாத மாணவர்களின் தரத்தையும் ஹிந்தி மொழி பேசும் மாணவர்களின் தரத்தையும் ஒப்புவமை செய்வதற்காக, ஹிந்தி மொழி பேசும் மாணவர்கள் அவர்கள் தாய் மொழியிலேயே கீழ்க்கண்ட விஷயங்களுள் ஏதாவது ஒன்றைப் பற்றி ஒரு வினுத்தாளை எழுதலாம். பல்வேறு விஷயங்களுள் பண்பாட்டுத் தொடர்புடைய சில பாடங்களும் தென்னிந்திய மொழிகள், வரலாறு ஆகியவற்ருேடு தொடர்புடைய பாடங்களும் 8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்ட ஹிந்தி நீங்கலாக உள்ள மற்ற மொழிகளோடு தொடர்புடைய பாடங்களும் இதில் இடம் பெறலாம். (பாரா 7.)

113. ஹிந்தி மாணவர்கள் "ஈடு செய்யும் முறைக்கு" பிராந்திய மொழிகளில் (அதுவும் தென்னிந்திய மொழிகளுள் ஒன்றில்) ஹிந்தி அல்லாத பிற மொழி வினுத்தாள் ஒன்றை எழுதவேண்டும் என்று கூறப்பட்ட ஆலோசனைக்குத் தகுந்த நியாயம் இருப்பதாக நாங்கள் கருதவில்லை. (பாரா 7.)

114. அகில இந்தியப்போட்டிப் பரீட்சைகளில் இடைநிலை மொழி வேறு மொழியாகவோ, அல்லது மொழிகளாகவோ மாற்றப்பட்ட பிறகுகூடத் தேவைப்பட்டால் ஆங்கிலத்தில் சில வினுத்தாள்களை வைத்துப் பரீட்சை செய்வதற்குரிய ஏற்பாடுகளை வைத்துக்கொள்ளலாம். (பாரா 8.)

115. அகில இந்தியப் பணிகளுக்கும் மத்தியத் துறைப் பணிகளுக்கும் நடைபெறுகின்ற போட்டிப் பரீட்சைகளில் இடைநிலை மொழியை மாற்றும்பொழுது ஏற்படுகின்ற முக்கியமான தொல்லை யாது எனில், நாட்டிலுள்ள 13 பிராந்திய மொழிகளும் பரீட்சைக்கு இடைநிலை மொழிகளாக அமையுமேயானால் திருப்தியான முறையில் "மிதப்படுத்துதல்" இயலாத காரியம். இப்பரீட்சைகளின் இடைநிலை மொழிகளின் எண்ணிக்கை தகுந்த அளவு மிதப்படுத்துதலுக்கு அப்பாற்பட்ட முறையில் அதிகப்பட்டுவிடுமேயானால் பங்கு முறை என்பது இன்றியமையாததாகிவிடும்; இன்றேல் இப்பரீட்சையின் இயல்பையே மாற்றி அமைக்க நேரிடும்.

பங்கு முறை என்பது இன்றுள்ள இப்பரீட்சைகளின் அகில இந்திய இயல்பை மாற்றி அமைத்துவிட்டு இவ் அகில இந்தியப் பரீட்சைகளைத் துண்டாடி இப்பரீட்சைகளில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாணவர்களின் தரத்தையும் குறைத்துவிடும். ஆட்சித் துறையில் உள்ளவர்கள் செய்யவேண்டிய கடமைகளை நினைத்துப் பார்க்கும்பொழுது உத்யோகத்திற்கு வருகின்றவர்களின் தரத்தை எவ்விதத்திலும் பாதிக்கக்கூடிய கொள்கைகளை அல்லது திட்டங்களை நாங்கள் விரும்பவில்லை. அகில இந்தியப் பணிகளைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு பிராந்தியமும் தன்னுடைய நலத்தை மட்டும் கவனிப்பதாக இருந்தால் கூட அப்பொழுதும் "தரத்தையே" பெரிதாக மதிக்கும். இக்காரணங்களினால் உயர்தர மத்தியப் பணிகளுள் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் கிடைக்கும் உத்யோகங்களின் எண்ணிக்கை ஒருபுறம் இருக்கத் தரத்தையே பெரிதாகக் கருதவேண்டும் என்று சொல்லத் தேவையில்லை.

இப்பணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள போட்டிப் பரீட்சைகளின் இடைநிலை மொழிகள் பற்றிக் கீழ்க்கண்டவற்றைச் சொல்ல விரும்புகிறோம்;—

(அ) இப்பொழுது உள்ளதும், இனி ஏற்படுத்தப் போவதாக இருப்பினும் அப்பொழுது உள்ளதுமான அகில இந்தியப் பணிகளிலும், மத்தியத் துறைப் பணிகளிலும் உள்ள ஆங்கில இடைநிலை மொழிகளோடுகூட ஹிந்தி இடைநிலை மொழியைத் தகுந்த அளவு முன்னறிவிப்புச் செய்துவிட்டுப் புகுத்தலாம். ஏனைய பிராந்திய மொழிகள் பல்கலைக் கழக நிலைமையிலும் பட்டப் படிப்பு நிலைமையிலும் இன்று ஹிந்தி அடைந்துள்ள நிலையை அடையும்பொழுது அந்தப் பிராந்திய மொழியை இப்பரீட்சைகளுக்கு இடைநிலை மொழியாக ஆக்கவேண்டுமா என்பதைப் பற்றி ஆராயலாம்.

ஒரு மொழி இப்போட்டிப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழியாக ஆவதற்குத் தகுதி பெற்றுவிட்டதா என்பதை அறிவதற்குப் பல்கலைக் கழகக் கல்வி முறையில் போதனு மொழியாக அம்மொழி வந்து எந்த அளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதை அறிய வேண்டும். அவ்வாறு அறிவதற்குத் தகுந்த சில ஏற்பாடுகளைச் செய்து அதனுடைய தகுதியை ஆராயலாம்.

இன்று இடைநிலை மொழியாக உள்ள ஆங்கிலம் தேவையான காலம் வரை இருந்துகொண்டே இருக்கலாம். நாளாவட்டத்தில் ஆங்கிலத்தை நீக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வருமேயானால் அப்பொழுதும் தகுந்த அளவு நீண்ட கால அறிவிப்புச் செய்துவிட்டு இதனை மாற்றி அமைத்துவிடலாம்.

(ஆ) இடைநிலை மொழிகளாக இருக்கப் புகுகின்ற மொழிகள் ஒரு அளவுக்குக் கட்டுப் படுகின்ற வரையில் "மிதப்படுத்துதல்" என்பது இயலக்கூடிய காரியமே. இரட்டை அல்லது மும்மொழி அறிவும் தகுதியும் உடைய பரீட்சகர்கள் கிடைப்பதைப் பொறுத்து இப்போட்டிப் பரீட்சைகளில் அதிகப்படியான இடைநிலை மொழி களைப் புகுத்தலாம். ஓர் அளவுக்கு அப்பாற்பட்டு இது நடை முறைக்கு இயலாததாகிவிடும்.

அத்தகைய ஒரு நிலை ஏற்படுவதற்கு முன்னர் யூனியன் அரசாங் கமும் ராஜ்ய அரசாங்கங்களும் ஒன்றுகூடிக் கீழ்க்கண்டவற்றுள் ஏதாவது ஒரு முடிவை ஏற்கவேண்டும். (1) இந்த அகில இந்தியப் பணிகளுக்கு ஆள் எடுக்கும் முறையில் சில மாற்றங்களைச் செய்ய அவர்கள் உடன்படவேண்டும். அன்றேல், (2) இப்பரீட்சைகளின் இடைநிலை மொழிகளின் எண்ணிக்கையை ஓர் அளவுக்குள் வைக்க அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அன்றேல், (3) இப்பரீட்சை முறைகளிலேயே தேவையான மாற்றங்களைச் செய்ய அவர்கள் ஒப்புக் கொள்ளவேண்டும்.

(இ) மேலே (அ) பிரிவில் சொல்லப்பட்ட சூழ்நிலை ஏற்படு வதற்கு முன்னர் ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களிலுள்ள பட்டதாரி மாணவர்கள் ஹிந்தி மொழியில் தகுந்த அளவு அறிவு பெற்றிருப்பார்கள்; அதலால் ஹிந்தி மொழி பேசும மாணவர்களோடு சமமான முறையில் போட்டி இடுவதற்குத் தகுந்த அளவு வன்மை பெற்றுவிடுவார்கள்.

அந்தச் சூழ்நிலை ஏற்படுகிற வரையில் ஹிந்தி மொழி பேசாத மாணவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு இப்பொழுது இருந்து வருகின்ற ஆங்கில இடைநிலை மொழியே போதுமானதாகும்.

யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் மேலே பிரிவு (அ)-வில் 1, 2, 3 என்ற பகுதிகளில் சொல்லப்பட்ட ஏதாவது ஒன்றை மேற் கொள்ள வேண்டிய சூழ்நிலையும் தேவையும் வராமலே போய்விடும் என்று எங்களில் சிலர் நம்புகிறோம். (பாராக்கள் 9 முதல் 16 வரை.)

116. இந்த நாட்டின் பிரத்யேகமான சூழ்நிலையைப் பொறுத்தும் மிகுதியும் தேவைப்படுகின்ற மொழிக் கல்வி வளர்ச்சியை உத்தேசித் தும் பல்வேறு பொதுப்பணிப் போட்டிப் பரீட்சைகளுக்கும் குறிக்கப் பட்டுள்ள விருப்ப பாடப்பட்டியலில் இன்னும் அதிகமான முறையில் இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளையும், இலக்கியங்களையும் சேர்க்க வேண்டுமென்று நாங்கள் கூறுகின்றோம். (பாரா 18.)

117. யூனியன் பொதுப் பணிக் கழகப் போட்டிப் பரீட்சைகளுக்கு ஹிந்தி இடைநிலை மொழியில் தம்மைத் தயார் செய்துகொள்ளும் மாணவர்கள் துன்பமடையாமல் இருக்கப் பல்வேறு ராஜ்யப் பொதுப் பணிக் கழகப் போட்டிப் பரீட்சைகளிலும் விருப்பமுள்ளவர்கள் ஹிந்தியிலேயே பரீட்சை எழுதத்தக்க ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். அந்நிலையில், இப்பரீட்சை கள் பிராந்திய மொழிகளிலும் ஹிந்தி மொழியிலும் மொழி மாற்றக் காலம் முடிகின்ற வரையில் ஆங்கிலத்திலும் நடைபெறும். (பாரா 19.)

பகுதி 13

ஹிந்தியையும் பிராந்திய மொழிகளையும் பரப்புதலும் வளர்த்தலும்.

118. சென்ற 35 ஆண்டுகளாகப் பிற மொழிப் பிராந்தியங்களில் தொழிற்படுகின்ற தாமே இயங்கும் அமைப்புகள் பலவும் ஹிந்தி மொழியைப் பரப்புவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனுகவே ஓரளவு அரசியலமைப்பு சபை இந்திய மொழிகளுள் ஒன்ருகிய ஹிந்தியை ஆங்கிலத்திற்குப் பதிலாக இன்று உபயோகப்படுத்தலாம் என்று முடிவு செய்ய ஏதுவாயிற்று. (பாரா 2.)

119. அரசியலமைப்பை ஏற்றுக்கொண்ட பிறகு இவ்வேலை புதியதொரு இயல்பை பெற்றுவிட்டதாதலின் இது சம்பந்தமாகச் செய்யப்படும் முயற்சிகள் இப்பொழுது அரசாங்கமே செய்யும் முயற்சிகளாக ஆய்விட்டன. (பாரா 2.)

120. தாமே இயங்கும் அமைப்புக்கள் இத்துறையில் செய்துள்ள வேலையைக் கவனிக்கும் அளவில், இவ்வமைப்புக்களின் வேலைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தி ஹிந்தியை வளர்ப்பதில் மேலும் பெருக்கம் செய்யவேண்டுமேயானல் கீழ்க்கண்ட முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் கருதுகிருேம் :—

(1) பல்வேறு அமைப்புக்கள் செய்கின்ற வேலைகளையும் ஒரு முகப்படுத்துதலும் தேவையான இடங்களில் இவை வேலை செய்தற்கு எல்லை வகுத்தலும் வேண்டும்.

(2) இவைகளுக்கு வகுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் நல்ல முறையில் தொழிற்படுவதற்குத் தேவைகள் யாவை என்று ஆராய்தல்.

(3) இவ்வமைப்புக்கள் நடத்தும் தேர்வுகளுள் ஓர் ஒற்றுமையையும், ஒப்பு நோக்கல் இயல்பையும் கொண்டுவர வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தல். இதற்குரிய வழி துறைகளை ஏற்படுத்தி இவ்வமைப்புக்கள் நடத்தும் பரீட்சைகளில் ஒரே தரம் இருக்குமாறு செய்தல்.

(4) போதன முறையை வளர்ச்சியடையச் செய்வதற்குரிய தேவைகளைப் பெற்றுத் தருவதோடு ஆசிரியப் பயிற்சி அளிப்பதற்குரிய வழி துறைகளையும் செய்து தருதல்.

(5) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு நிலைகளிலும் உள்ளவர்கள் ஹிந்தியில் போதனை பெறுவதற்குரிய பாடப் புத்தகங்கள் முதலியவை கிடைக்குமாறு செய்தல். புதிதாக ஹிந்தி கற்பவர்களும் குழந்தைகள் பெண்கள் ஆகியவர்களும் வேண்டுமான அளவு படிப்பதற்குரிய மேற்கோள் இலக்கியங்கள் கிடைக்குமாறு செய்தல்.

(6) ஹிந்தியைப் பரப்புகின்றதோடு புதிதாக ஹிந்தி கற்றுக்கொண்டவர்கள் தேவையைப் பூர்த்தி செய்கின்ற முறையில் படிப்பகம் நூலகம் ஆகிய வசதிகளைச் செய்து தருதல். (பாரா 3.)

121. மத்திய அரசாங்கம் இப்பொழுது ஹிந்தியைப் பரப்பும் வேலையில் ஈடுபட்டு, தாமே இயங்கும் அமைப்புக்கள் தங்களுடைய வேலையை விஸ்தரித்து முயற்சி செய்யத்தக்க முறையில் வேண்டுமான அளவு தாராளமான பண உதவி செய்யவேண்டும் என்று நாங்கள் சிபார்சு செய்கிருேம். (பாரா 4.)

122. இந்திய அரசாங்கம் பிற மொழிப் பிராந்தியங்களில் ஹிந்தியை வளர்க்கும் வேலையில் ஈடுபடும்பொழுது ஹிந்தி-சிக்ஷா-சமிதி அதற்குரிய

உதவியைச் செய்கிறது. அதாவது பிற மொழி பேசும் ராஜ்யங்களிலிருந்து ஒவ்வொரு பிரதிநிதியும் ஹிந்தி பேசும் ராஜ்யங்களிலிருந்து இரண்டு பிரதிநிதிகளும் இதில் பங்கு கொள்கிறார்கள். (பாரா 3.)

123. யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் ஹிந்தி மொழியை வளர்த்து, வளம்படுத்தும் வேலை (கலைச் சொல் ஆக்க வேலை நீங்கலாக) இங்கே ஆராயப்படுகிறது. (பாரா 6.)

124. பல்வேறு இந்திய மொழிகளினிடையேயும் ஒரு புது மாற்றமைப்பு மிகுதியும் தேவைப்படுகிறது. இப்பல்வேறு மொழிகளிலும் இயல் துறை மொழியிலும், மொழி நூல் துறையிலும் மேலும் கல்வியை வளர்ப்பது இந்தியாவின் பல்வேறு பண்பாட்டையும் வளர்ப்பதற்குப் பயன்படும் ஆதலால் அத்தகைய படிப்பும் ஆராய்ச்சியும் யூனியன், ராஜ்ய அரசாங்கங்களால் மிகுதியும் வளர்க்கப்பட வேண்டும். (பாரா 6.)

125. இந்திய மொழியியல் துறையில் வேலை செய்கின்றவர்கள் நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதற்கு நிறைந்த சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆதலால் இத்துறையில் முயல வேண்டும். (பாரா 7.)

இந்திய எழுத்துக்களின் சீர்திருத்தம்.

126. ஏறத்தாழ எல்லா இந்திய எழுத்துக்களும் பிராமி எழுத்துக்களிலிருந்தே பெறப்பட்டன. ஏறத்தாழத் தமிழ் நீங்கலாக உள்ள மற்ற எல்லா இந்திய எழுத்துக்களும் ஒரே அளவு நெடுங்கணக்கைப் பெற்றுள்ளன. தமிழைப் பொறுத்தமட்டில் முக்கியமான வேறுபாடு என்னவென்றால் வர்க்க எழுத்துக்கள் இல்லாமையேயாகும். (பாரா 8.)

127. இந்தியாவிலுள்ள ஜனத்தொகையில் ஹிந்தி மொழி பேசுவோர் எண்ணிக்கை மற்ற மொழி பேசுவோரின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகுதியாக இருப்பதைப் போலவே இந்தியாவிலுள்ள பல்வேறு எழுத்து முறைகளுள் தேவ நாகரி எழுத்து முறை பல மொழிகளுக்கும் பொதுவாக உள்ளது. எனவே இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் எழுதக்கூடிய ஒரு பொது எழுத்து முறை தேவை என்றால் இந்திய எழுத்து முறைகளுள் தேவ நாகரி எழுத்து முறை அந்த உரிமையை மிகுதியாகப் பெறும். (பாரா 9.)

128. மிக நீண்ட காலமாக இந்தியாவிலுள்ள சிந்தனையாளர்கள் பலரும் இந்நாட்டிலுள்ள எல்லா மொழிகளையும் ஒரே எழுத்து மூலம் கற்பிக்கக் கூடுமேயானால் எல்லா மொழிகளிலுள்ள இலக்கியங்களைக் கற்பதற்கும் நாட்டின் ஒற்றுமையை வளர்ப்பதற்கும் இது எவ்வளவு உதவும் என்று சிந்தித்தார்கள். லோக மான்ய திலகர், மகாத்மா காந்தி, பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற முக்கியமானவர்கள் பலரும் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளார்கள். (பாரா 10.)

129. ரோமன் எழுத்துக்களை இந்திய மொழிகளின் பொது எழுத்தாக மேற்கொள்ளலாமென்று சிலர் கூறுகின்றார்கள். ரோமன் எழுத்துக்களையும் தேவநாகரி எழுத்துகளையும் ஏற்றுக்கொள்வதில் உண்டான நன்மை, தீமைகளை ஆராய்ந்து அவற்றின் முடிவுகளைச் சிந்திக்கும்பொழுது ரோமன் எழுத்துக்களை ஏற்றுக்கொள்வதானால் சிறப்பான நன்மைகள் ஒன்றும் இல்லையென்றும், தேவநாகரியை ஏற்றுக்கொள்வதால் அதிக நன்மை உண்டென்றும் நாங்கள் முடிவு செய்கிறோம். (பாரா 11.)

130. இவை எல்லாவற்றையும் மனத்துட்கொண்டு யூனியன் மொழியை அல்லாத பிற இந்திய மொழிகளை எழுதும்பொழுது விருப்பமானால் தேவ நாகரி எழுத்து முறையை மேற்கொள்ளலாமென்று நாங்கள் சிபார்சு செய்கிறோம். (பாரா 11.)

131. ஒரு மொழி என்பது பண்பாட்டின் அடிப்படை என்றாலும் அம்மொழியின் எழுத்து முறை என்பது நம்முடைய வசதியைப் பொறுத்ததே என்பதை மனத்துட்கொள்ள வேண்டும். எனவே எழுத்துச் சீர்திருத்தத்தைச் செய்யும்பொழுது, மொழிச் சீர்திருத்தம் செய்யும்பொழுது ஏற்படுகின்ற மறுப்புக்கள் முதலியவற்றிற்கு அதிக இடமில்லை. (பாரா 12.)

தேவநாகரி எழுத்து முறைச் சீர்திருத்தம்.

132. தேவ நாகரி எழுத்துச் சீர்திருத்தத்தில் குறிப்பிடப்படாத எதிர் காலத்தில் செய்யப்படப்போகின்ற "மிக உயர்ந்த முடிவுகளைக் காட்டிலும்" "இப்பொழுது செய்யப்படுகின்ற" "பயன் படக்கூடிய முடிவுகள்" மிகவும் தேவை. லக்னோ மாநாடு இத்தகைய சில முடிவுகளைச் செய்து அதனால் ஒரு வகை வளர்ச்சியைச் செய்துள்ளது. (பாரா 14.)

133. தட்டெழுத்து யந்திரத்தின் கீ போர்டைப் பற்றி முடிவுசெய்வது மிக அவசரமான தேவையாகும். மேலும் மத்திய அரசாங்கத்தின் தலைமையின் கீழ் நடைபெற வேண்டிய தேவநாகரி எழுத்துச் சீர்திருத்தமும் உடனடியாகச் செய்யப்படவேண்டிய ஒன்றாகும். (பாரா 14.)

134. ஹிந்தியைப் போலவே பிராந்திய மொழிகளைப் பொறுத்த மட்டிலும் நீடித்த தற்கால யந்திர சாதன வசதிகளுக்கு ஏற்ப எழுத்து முறையை மாற்றி அமைத்துக்கொள்வதில் தொல்லை ஒன்றும் இராது எனக் கருதுகிறோம். அதே போல ஹிந்தியிலோ, பிராந்திய மொழிகளிலோ சுருக்கெழுத்து முறையை ஏற்றுக்கொள்வதிலும் எவ்விதத் தொல்லையும் இராது என்றே கருதுகிறோம். (பாராக்கள் 13-ம், 14-ம்.)

எந்த ஹிந்தி ?

135. அரசியலமைப்பின் 351-வது விதியின் கோரிக்கைகளை முற்றிலும் நிறைவேற்ற வேண்டுமேயானால் ஹிந்தி மொழியையும் ஏனைய மொழிகளையும் நன்கு வளர்க்கவேண்டும்.

பகுதி 14-ல் சிபார்சு செய்யப்பட்ட அமைப்புக்கள் 351-வது விதியில் சொல்லப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றப் போதுமானவைகளாகும். (பாரா 17).

136. வளர்க்கப்படவேண்டிய ஹிந்தி மிகவும் எளிதாகவும், புரிந்துக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டாலும் ஒரு பிராந்தியத்தில் "எளிமை" என்று கருதப்படுவது மற்றொரு பகுதியில் உண்மையாகவே கடுமையானதாகக் கருதப்படுகிறது. இந்நிலை மாறியும் ஏற்படுகிறது. இங்ஙனம் தொல்லை ஏற்படும்பொழுது இரண்டு பிராந்தியத்தாரும் எளிமை என்று கருதும் இரண்டு வார்த்தைகளையுமே நெடுங்கணக்கில் சேர்த்து விடவேண்டும். அதற்கேற்ற முறையில் யூனியன் மொழியை வளர்க்கவேண்டும். (பாரா 18.)

137. ஹிந்தி மொழி பேசுவோர்கள் உட்பட அனைவருக்கும் ஏற்ற முறையில் ஹிந்தி இலக்கணத்தை எளிமையாக்கினால் ஒழியப் பிற மொழி பேசுவோர்கள் ஹிந்தி கற்றுக்கொள்ளும் பொழுது ஏற்படுகின்ற சிரமத்தைக் குறைப்பதற்காகச் செய்யப்படுகின்ற முயற்சிகள் அனைத்தும் பயன்பட மாட்டா. (பாரா 19.)

பத்திரிகைகளும் இந்திய மொழிகளும்.

138. செய்தி வெளியீட்டை ஹிந்தி மொழியிலும், இயலுமானால் ஏனைய பிராந்திய மொழியிலும் செய்வதனால் ஏற்படக்கூடிய பயனைப் பற்றி

ஆராயவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். பிராந்திய மொழி களில் செய்தியை அறிவிக்கும்பொழுது தேவ நாகரி எழுத்து முறையை மேற்கொள்ளுவதானால் அது நலம் பயக்கும் என்று கருதுகிறோம். இவ்வாறு செய்வது இந்திய மொழிப் பத்திரிகை வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்பதோடுகூட ஹிந்தியிலும் பிராந்திய மொழிகளிலும் கலைச் சொற்களையும், சொல்லாட்சிகளையும் வரையறுப்பதற்கு இது பெரிதும் பயன் படும். (பாரா 20.)

பகுதி 14

தேசிய மொழித் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய அமைப்புக்கள் முதலியன.

139. யூனியன் ஆட்சி முறையைப் பொறுத்தமட்டில் மாற்றம் செய்வ தற்கு உள்ள பொறுப்பையும், ஏனைய முயற்சிகளையும் ஒரு தனிப்பட்ட ஆட்சிப் பகுதியினர் ஏற்றுக்கொள்ளவேண்டும். யூனியனிலுள்ள எல்லா இலாகாக்களும், அமைப்புக்களும் செய்கின்ற வேலைகளைக் கண்காணிப்ப தற்கும், அவற்றைக் கொண்டுசெலுத்துவதற்கும், மேற்பார்வை செய்வ தற்கும் அவற்றின் வேலைகளை ஒருமைப் படுத்துவதற்கும் ஓர் அமைப்புத் தேவை. தேவையான அளவு அதிகாரத்தைப் பெற்றிருக்குமேயானால் ஒரு தனி அமைச்சாக இருக்கவேண்டுமா அல்லது அமைச்சின் ஒரு பகுதி யாக இருந்தால் போதுமா என்பதை அரசாங்கமே முடிவு செய்துகொள்ள வேண்டும். (பாரா 2.)

140. எங்களுடைய கருத்துப்படி மத்திய அரசாங்கத்தில் ஒவ்வொரு ராஜ்யத்தின் பிரதிநிதியையும் கொண்ட ஒரு அறிவுரைக் கழகம் ஏற்படுத்து வது நலம் என்று கருதுகிறோம். யூனியனையும், ராஜ்யங்களையும் பொறுத்த மட்டில் சட்டத் துறையிலும், ஆட்சித் துறையிலும் ஏற்படுகின்ற மொழிக் கொள்கை இங்கு மோத நேரிடும். ஆதலால் இவ்வறிவுரைக் கழகம் இவை இரண்டும் செய்கின்ற வேலைகளை ஒருமுகபபடுத்தத் தேவைப்படு கின்றது. (பாரா 3).

141. யூனியன் மொழிக்கும் பிராந்திய மொழிக்கும்கூடத் தேவை யான பாடப் புத்தகங்களையும், மேற்கோள் புத்தகங்களையும் தயாரிப்பதற்கும் இது போன்ற ஏனைய வேலைகளைச் செய்வதற்கும் ஒரு பொதுவான அமைப்பு இந்திய மொழிகளின் தேசீயக் குழு என்ற பெயரில் தனி அமைப்பாக இயங்குவதை நாங்கள் விரும்புகிறோம். இக்குழுவின் ஆட்சிப் பகுதியில் யூனியன் அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்கள், பல்கலைக் கழகங்கள் என்பவற் றோடு ஒப்புக்கொள்ளப்பட்ட தொழில்முறைக் கழகங்கள், இலக்கியக் கழகங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பல்வேறு மொழிப் பிராந்தியங் களிலிருந்தும் இருக்கலாம். (பாரா 4.)

142. கலைச் சொல் வளர்ச்சியிலும், யூனியன் மொழியையும், பிராந்திய மொழிகளையும் வளர்க்கும் முயற்சிகளிலும் கல்வி, இலக்கியத் துறையில் உள்ளவர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறப் பூரண உரிமை வழங்கப் பட்டாலும், மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் தேவையான உத்தரவுகளைப் பிறப்பிக்கக்கூடிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திலேயே இருத்தல் வேண்டும். (பாரா 4.)

143. இந்தக் கழகத்தை அமைப்பதற்கு ஏற்ற இடம் ஹைதராபாத் நகரம் என்று நாங்கள் சிபார்சு செய்கின்றோம். (பாரா 5.)

144. இந்திய மொழிகளிலுள்ள எல்லா இலக்கியங்களையும் பெற்றுள்ள ஒரு மத்திய நூலகமும், இந்திய மொழி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் ஒரு தேசீய அமைப்பும் மிகுதியும் தேவை. இவ்வமைப்புக்களையும், இந்திய மொழிகளின் தேசீயக் கழகத்தோடு சேர்த்தே ஏற்படுத்த வேண்டுமா என்பதை ஆராயவேண்டும். (பாரா 6.)

145. அரசியலமைப்பில் சொல்லப்பட்ட மொழிக் கொள்கையை நிறைவேற்றுவதில் ஓராண்டுக் காலத்தில் எந்த அளவு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை மத்திய அரசாங்கம் ஆண்டுதோறும் பாராளு மன்றத்திற்கு எடுத்துக் கூறவேண்டும். இது மத்திய அரசாங்கத்தின் அதிகார எல்லைக்குள் இருக்கின்ற அளவுக்குப் பேசப்பட்டாலும் போதுமானது. (பாரா 6.)

146. பொது மக்களிடையே பரவியிருக்கும் மொழிக் கொள்கை பற்றிய தவறான எண்ணங்களைப் போக்குவதற்கு ஏற்ற முறையில் விரிந்த அளவு விளம்பரம் தந்து தேசீய மொழிக் கொள்கையை மக்கள் உள்ளவாறு உணரச் செய்யவேண்டும். (பாரா 7.)

பகுதி 15

முடிவுரை.

147. இந்திய மொழியிலும், பண்பாட்டு வகைகளிலும் காணப்படுகின்ற மேம்போக்கான வேறுபாடுகளின் அடியில் வலுவானதும், நெருங்கியதுமான உறவு இருக்கக் காண்கிறோம். இது ஓர் அடிப்படை ஒற்றுமையையும், "இந்திய வாழ்வின் ஒருமைத் தன்மையையும்" எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. (பாராக்கள் 1-ம், 2-ம்.)

148. இந்திய ஒற்றுமை என்பது "பிரிட்டிஷ் அரசாங்கம்" தந்த வெகுமதியன்று அகில இந்தியாவும் அரசியல் முறையில் ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்பது அரசியலறிவு பெற்ற இந்தியர்களின் எண்ணத்தைப் பல காலம் தூண்டி வந்துள்ளது. இந்திய வாழ்வு முறையில் உள்ள பண்பாட்டு ஒற்றுமையின் வெளிப்பாடுதான் இந்த அரசியல் ஒற்றுமையாக வடிவெடுத்துள்ளது. (பாரா 2.)

149. அகில இந்தியாவுக்கும் ஓர் இடைநிலை மொழி தேவை என்று சொல்வது இந்திய சரித்திரத்தில் இதற்கு முன்னர்க் காணாத ஒன்றன்று. பழங்காலத்தில் வட மொழியும், பர்சிய மொழியும், சமீப காலத்தில் ஆங்கில மொழியும் இவ்வாறு அகில இந்திய இடைநிலை மொழிகளாக வழங்கியுள்ளன. (பாரா 3.)

150. நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளுள்ளும் ஒரு "புதுநோக்கத்தை" உண்டாக்க முயற்சி எடுத்துக்கொண்டால் மிக விரைவில் இந்திய மொழிகளின் இடையே உள்ள தூரம் வெகுவாகக் குறைக்கப்படும். (பாராக்கள் 6-ம் 7-ம்.)

151. பன் மொழி பேசும் நாட்டு மக்கள் என்ற முறையில் எல்லாப் பிராந்தியங்களிலுள்ளவர்களும் பல மொழி பேசுவதை நாம் ஆதரித்துப் போற்ற வேண்டும். இதற்கேற்ற முறையில் இடைநிலைக் கல்வி முறையையும், பல்கலைக் கழகக் கல்வி முறையையும் மாற்றி அமைக்கவேண்டும். (பாரா 7.)

152. மொழிப் பிரச்னை என்பது நம் தலை முறையை மட்டும் பாதிக்கக் கூடிய ஒன்றாகும். நியாயமான எந்த ஒரு கொள்கையையும் துணிவோடும்,

விடாப்பிடியோடும் கொண்டு செலுத்தக் கூடுமேயானால் வருங்காலத் தலைமுறையில் அது வேண்டுமான பயனைத் தரும். எனவே மொழிக் கொள்கைக்குத் தேவை என்பது, பலரும் ஒப்புக்கொள்ளவேண்டிய ஒரு சூழ்நிலையே தவிர, சிறந்த ஒரு முடிவு அன்று. (பாரா 8.)

153. மொழிப் பிரச்னைக்கு முடிவு காணும்பொழுது யூனியன், ராஜ்ய அரசாங்கங்களையல்லாமல் பல்வேறு அமைப்புக்களும் இதில் ஈடுபட வேண்டியிருத்தலின் அனைவருடைய ஒத்துழைப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேற்கண்ட அமைப்புக்களையல்லாமல் சொற்களை வழங்கப்போகும் சாதாரண மனிதன்தான் மொழி வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள கலைச் சொற்களையும், புதிய சொல்லாட்சிகளையும் வழங்கப் போகிறானாதலின் அவனே இதற்கு முடிவு கூற வேண்டும். (பாராக்கள் 9-ம், 10-ம்.)

154. ஏனைய மாறுதல்களும் வளர்ச்சிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொழுதே புதிய இடைநிலை மொழியைப் பயன் படுத்தவும் தொடங்க வேண்டும். புதிய சொற்களை ஆக்கி, அதனைப் பயன்படுத்தி இதனால் விளையும் பயனை ஏற்றுக்கொள்ள வேண்டும். (பாரா 11.)

155. ராஜ்யங்களுக்கும், யூனியனுக்கும் இடையே கருத்துப் பரிமாறிக் கொள்ள மொழி என்பது ஒரு கருவியேயாகும். எனவே நாட்டின் அரசியலமைப்புக்குட்பட்டு எங்களுடைய விசாரணையை இவ்விஷயத்தில் பல துறைகளிலும் செய்துள்ளோம். (பாரா 12.)

156. மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் கால அட்டவணை, சிறு பகுதிகள் ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் விட்டுக்கொடுக்க வேண்டும். குறிக்கோளைப் பொறுத்தமட்டில் வலுவாக இருக்க வேண்டும். நிகழ்ச்சி நிரலைப் பொறுத்தமட்டில் குறிப்பாக இருக்கவேண்டும். (பாராக்கள் 12-ம், 13-ம்.)

157. நாட்டின் மொழிக் கொள்கையைப் பொறுத்தமட்டில் எதிர்பார்க்கப்படுகின்ற சிக்கல் நிறைந்த மொழிப் புரட்சி என்பதை ஏற்படுத்த வேண்டுமேயானால் குறிக்கோள் எது என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கொண்டு ஒரு பொது அதிகாரத்தின் கீழ் அக்குறிக்கோளை நோக்கி விடாமல் முன்னேறுவதே ஆகும். (பாரா 14.)

158. எல்லாப் பிராந்தியங்களிலும் சான்று பகர்ந்தவர்களுள் பெரும்பாலானவர்கள் நாட்டின் ஒற்றுமையையும், அதனைப் பாதுகாக்க வேண்டிய இன்றியமையாமை பற்றியும் காட்டிய ஆர்வத்தைக் கண்டு நாங்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம். ஏறத்தாழ அனைவருமே பிரச்னைகளை ஆராயும்பொழுது நடைமுறைக்கு ஏற்ற முறையில் சகிப்புத்தன்மையோடு ஆராய்ச்சியை மேற்கொண்டார்கள் என்று சொல்லலாம். (பாராக்கள் 15-ம், 16-ம்.)

159. மொழி என்பது வெறும் கருவியே ஆதலால் மொழிப் பிரச்னையில் சூடும், ஆத்திரமும் பிறக்கவேண்டியதில்லை. இந்திய மொழிப் பிரச்னையிலுள்ள சிக்கல்களைப் போல் வேறெங்கும் காண முடியாது என்றாலும், நியாயமான முறையில் அதனை நெருங்கினால் நல்ல முடிவுகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்றும், பிரச்னையை வெற்றிகரமாக எதிர்த்து இம்முடிவுகளைப் பெறலாம் என்றும் நாங்கள் நம்புகிறோம். (பாராக்கள் 17-ம், 18-ம்.)

பிற்சேர்க்கை 2

(கோரிக்கை : பகுதி 1. பாரா 1.)

(1)

இந்திய அரசாங்க உள்துறை அமைச்சின் அறிக்கை எண் 43–9–55-பொது–1, புது டில்லி–2, 1955 ஜூன் 7-ம்தேதி.

அரசியலமைப்பின் 344-வது விதியில் சொல்லப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி ஜனாதிபதி இக்கழகத்தை, ஸ்ரீ பி. ஜி. கர் தலைமையில், கீழ்க் கண்டவர்களை உறுப்பினர்களாகக்கொண்டு இயங்குமாறு நியமிக்கிறார். இக்கழகம் ஆட்சி மொழிக் கழகம் என வழங்கப்படும்.

1. டாக்டர் பிரிஞ்சி குமார் பருவா, அசாம் மொழித் துறைத் தலைவர், கௌஹாத்திப் பல்கலைக் கழகம், கௌஹாத்தி, அசாம்.
2. டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி, தலைவர், மேற்கு வங்காள சட்ட மேலவை, கல்கத்தா, மேற்கு வங்காளம்.
3. ஸ்ரீ மகன்பாய் தேசாய், குஜராத் வித்யாபீடம், அஹமதாபாத், பம்பாய்.
4. ஸ்ரீ டி. வி. பவதே, துணை வேந்தர், கர்நாடகப் பல்கலைக் கழகம், பம்பாய்.
5. பேராசிரியர் பி. எஸ். புஷ்ப், அமார்சிங் கல்லூரி, ஸ்ரீநகர், காஷ்மீர்.
6. ஸ்ரீ எம். கே. ராஜா, ஆசிரியர், தீனபந்து, எர்ணகுளம், கேரளம், திருவிதாங்கூர்-கொச்சி.
7. டாக்டர் பி. சுப்பராயன், உறுப்பினர், மக்கள் சபை, சென்னை, சென்னை.
8. ஸ்ரீ ஜி. பி. நேநே, ராஷ்ட்ரபாஷா பவனம், புனா, பம்பாய்.
9. டாக்டர் பி. கே. பரிஜா, கூட்டு வேந்தர், உட்கல் பல்கலைக் கழகம், கட்டாக், ஒரிசா.
10. சர்தார் தேஜா சிங், ஓய்வு பெற்ற முன்னாள் முதல் நீதிபதி, பெப்சு, பாட்டியாலா, பெப்சு.
11. ஸ்ரீ எம். சத்தியநாராயணா, உறுப்பினர், மக்கள் சபை, சென்னை, சென்னை.
12. டாக்டர் பாபு ராம் சாக்சேனா, வட மொழித் துறைத் தலைவர், அலஹாபாத், உத்திரப் பிரதேசம்.
13. டாக்டர் ஹபீத் உசேன், ஜமியா மிலியா, டெல்லி, டெல்லி.
14. டாக்டர் அமர்நாத் ஜா, தலைவர், பொதுப்பணிக் கழகம், பாட்னா, பீஹார்.
15. டாக்டர் ஆர். பி. திருபாதி, துணைவேந்தர், ஷாகூர் பல்கலைக் கழகம், சாகூர், மத்தியப் பிரதேசம்.
16. ஸ்ரீ பாலகிருஷ்ண ஷர்மா, எம்.பி., டெல்லி, டெல்லி.

17. ஸ்ரீ மவுலி சந்தர் ஷர்மா, டெல்லி, டெல்லி.

18. டாக்டர் ஹஷாரி பிரசாத் திவிதி, ஹிந்தித் துறைத் தலைவர், காசிப் பல்கலைக் கழகம், காசி, உத்திரப் பிரதேசம்.

19. ஸ்ரீ ஜெய் நாராயண் வியாஸ், ஜெய்ப்பூர், ராஜஸ்தானம்.

20. ஸ்ரீ எம். அனந்தசயனம் ஐயங்கார், துணைத் தலைவர், மக்கள் சபை, டெல்லி, மதராஸ்.

கீழ்க் கண்டவைகள் பற்றி இக்கழகம் ஜனாதிபதிக்குத் தன் சிபார்சுகளைச் செய்ய வேண்டும் :—

(அ) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துதல்.

(ஆ) யூனியன் ஆட்சி விவகாரங்களில் எல்லாவற்றிற்குமோ அன்றி ஒரு சிலவற்றிற்கோ ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதைக் குறைத்தல்.

(இ) அரசியலமைப்பின் 348-வது விதியில் சொல்லப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டிய மொழியைப்பற்றி ஆராய்தல்.

(ஈ) குறிப்பிடப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட யூனியன் விவகாரங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் எண்களின் வடிவங்களைப் பற்றிக் கூறுதல்.

(உ) யூனியன் ஆட்சி மொழியாகவுள்ள ஆங்கில மொழியைப் படிப்படியாக ஹிந்தியின் மூலம் மாற்றுவதற்குரிய ஒரு கால அட்டவணையையும், வழியையும் தயாரித்துத் தருதல். மேலும் யூனியனுக்கும் ராஜ்யங்களுக்கும் இடையேயும், ராஜ்யங்களிடையேயும் பயன்படுத்தவேண்டிய ஹிந்தி மொழியைப் பற்றி ஒரு கால அட்டவணை தயாரித்தல்.

2. இக்கழகம் தன்னுடைய சிபார்சுகளைச் செய்யும்பொழுது இந்தியாவின் தொழில், பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சிகளை மனத்துட்கொண்டு, ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ள மக்கள் பொதுப் பணிகளில் நுழைவதற்குரிய உரிமைகளைப் பாதிக்காத முறையில் சிபார்சுகளைச் செய்ய வேண்டும்.

3. இக்கழகம் கீழ்க்கண்டவற்றைப் பெறவும், செய்யவும் உரிமை பெறுகிறது :—

(அ) மத்திய அரசாங்கத்திடமிருந்தும், ராஜ்ய அரசாங்கத்திடமிருந்தும், மிக உயர்நீதி மன்றத்தினிடமிருந்தும், உயர்நீதி மன்றங்களிடமிருந்தும், சட்டசபைகளிலிருந்தும், இன்னும் தனிப்பட்ட சங்கங்கள் அமைப்புக்களிலிருந்தும், தனிப்பட்ட மனிதரிடமிருந்தும், தங்களுக்குத் தேவை என்றுபடும் தகவல்களையும், தங்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படும் தகவல்களையும், எழுத்து மூலம் பெறவோ, விசாரித்து அறியவோ, வேறு எந்தெந்த வகைகளில் வேண்டுமானாலும் பெறவோ உரிமை பெறுகிறது.

(ஆ) தாங்கள் செயற்படும் முறையை வகுக்கவும், கூடுகின்ற இடம், காலம் முதலியனவற்றை முடிவு செய்யவும், பிறர் அறியவோ அறியாமலோ கூடவும், வேண்டிய ஏற்பாடுகளைத் தானே செய்துகொள்ள உரிமை பெறுகிறது.

(இ) கழகத்தார் பிரித்துக் கொடுக்கின்ற தனிப்பட்ட அலுவல்களைக் கவனிக்கவும், அதற்குரிய அதிகாரத்தைப் பெறவும், அதைக் கொண்டு செலுத்தவும், தகுதி உடைய துணைக் குழுக்களைத் தன்னுடைய அங்கத்தினர்களிலிருந்தே தெரிவு செய்யும் உரிமை பெறுகிறது.

(ஈ) இந்தியாவின் எந்தப் பாகத்திற்கும் போகவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால் இக்கழகமோ அல்லது இதன் துணைக் குழுக்களோ போக உரிமை பெறுகிறது.

(உ) சட்டத்தில் கூறப்பட்டதற்கும் புறம்பாக எந்த ஒரு அங்கத்தினரும் வாராமல் இருப்பினும், ஒரு ஸ்தானம் காலியாக இருப்பினும் அது பற்றி அக்கறைப்பட வேண்டியதில்லை.

இந்தக் கழகத்தார் தாங்கள் பெறும் சான்றுகளைக்கொண்டு , தங்கள் சிபார்சுகளை ஜனாதிபதி அவர்கட்கு 1956 ஏப்ரல் மாதம் 30-ம் தேதிக்குப் பிற்படாமல் வசதிப்பட்டால் முன்கூட்டியே தெரிவிக்க வேண்டும்.

(ஜனாதிபதியின் உத்திரவுப்படி)

வி. விஸ்வநாதன்,
கூட்டுச் செயலளர்.

---

(2)

இந்திய அரசாங்கம் உள் துறை அமைச்சு அறிக்கை எண் 43–9–55 பொது-1, புது டெல்லி-2, 1955 ஜூலை 22-ம் தேதி.

அரசியலமைப்பு 344-வது விதியில் சொல்லப்பட்ட ஏற்பாடுகளைத் தொடர்ந்து இந்திய அரசாங்கம் உள் துறை அமைச்சு அறிக்கை எண். 43–9–55–பொது-1, 1955 ஜூன் 7-ந்தேதி அறிக்கைக்குக் கீழ்க்கண்ட திருத்தத்தை ஜனாதிபதி செய்கிறார். அதாவது :—

மேலே கண்ட அறிக்கையில் 4-வது பாராவில் உள்ள "1956-வருஷம் ஏப்ரல் மாதம் 30-ந்தேதி" என்பதற்குப் பதிலாக "1956-வருஷம் ஜூலை மாதம் 31-ந்தேதி" என்று மாற்றிக்கொள்ளவும்.

(ஜனாதிபதியின் உத்திரவுப்படி)

வி. விஸ்வநாதன்,
இந்திய அரசாங்கக் கூட்டுச் செயலாளர்.

---

(3)

இந்திய அரசாங்கம் உள் துறை அமைச்சு அறிக்கை எண் 43–9–55-பொது-1, புது டெல்லி-2, 1955 நவம்பர் 25-ந்தேதி.

காலஞ் சென்ற டாக்டர் அமர்நாத் ஜாவுக்குப் பதிலாகப் பேராசிரியர் ராம் தாரிசின்ஹா தின்கர் எம்.பி.-யை ஆட்சி மொழிக் கழகத்தின் உறுப்பினராக ஜனாதிபதி நியமிக்கிறார்.

என். எஸ். மணி,
இந்திய அரசாங்கக் கூட்டுச் செயலாளர்.

பிற்சேர்க்கை 3

(கோரிக்கை : பகுதி 1 பாரா 2)

கேள்விகள்

குறிப்பு.—தயாரிக்கப்பட்டுள்ள கேள்விகள் மிகவும் விரிவான முறையில் உள்ளன. ஆகவே உங்களுக்கு எந்தத் துறையில் பிரத்தியேகமான விருப்பம் இருக்கிறதோ, பிரத்தியேகமான அறிவு இருக்கிறதோ அத்துறையிலுள்ள கேள்விகளுக்கு விடை அளித்தால் போதுமானது. உங்கள் விடைகளுக்கு அரண் செய்யும் முறையில் காரணங்கள் தரப்படவேண்டும்.

பல்வேறு பிரிவுகளுக்கும் விடைகள் தனித்தனியே எழுதப்பட வேண்டும்.

கூடுமான ரை ஆங்கிலத்தில் விடைகள் இருப்பது நலம்.

விடையின் அடியில் எழுதுவோரின் பெயர், முகவரி முதலிய தரப்பட வேண்டும்.

பிரிவு (அ)

பொது

(1) (அ) ஆங்கிலத்தோடு சேர்த்து உங்கள் ராஜ்யத்தில் யூனியனின் எந்த ஆட்சி விவகாரங்களுக்கு எந்த அளவிற்கு ஹிந்தி மொழி இருந்து வருகிறது ?

(ஆ) கீழ்க்கண்ட விவகாரங்களில் ஹிந்தி மொழியைப் படிப்படியாக நுழைக்கவும், ஆங்கிலத்தின் உபயோகத்தைப் படிப்படியாகக் குறைக்கவும் என்ன முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள் ? (1) யூனியனின் ஆட்சி விவகாரங்களில் ஒரு சில பகுதிகளுக்கோ அல்லது அனைத்திற்குமோ, (2) ராஜ்யங்களின் இடையேயும் ராஜ்யத்திற்கும், யூனியனுக்கும் இடையேயும் கடிதப் போக்கு வரத்து செய்ய, (3) ராஜ்யத்தின் ஆட்சி விவகாரங்களில் அனைத்திற்குமோ அன்றி ஒரு சிலவற்றிற்கோ ?

(2) (அ) இன்று உங்களுடைய ராஜ்யத்தில் எந்த அளவிற்குப் பிராந்திய மொழிகள், ஹிந்தி, ஆங்கிலம் என்பவை ராஜ்ய ஆட்சி விவகாரங்களுக்குப் பல்வேறு நிலைகளில் அதாவது கிராம, தாலூகா, தாஸில், மாவட்ட நிலைகளில் பயன்பட்டு வருகின்றன ?

(ஆ) ஆட்சி விவகாரங்களை அல்லாத மற்றக் காரியங்களுக்கு எவ்வாறு ?

(3) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு ஆங்கிலத்தை நீக்கிப் படிப்படியாக ஹிந்தியைப் பயன்படுத்துவதினால் (அ) தொழில் துறை (ஆ) பண்பாட்டுத் துறை, (இ) விஞ்ஞான வளர்ச்சித் துறை ஆகியவற்றை இது பாதிக்குமா ? அவ்வாறானால் எந்த வகையில் ?

இவ்வாறு செய்வது இந்தியா வெளி நாடுகளோடு கொண்டிருக்கும் உறவை வெளி விவகாரத் துறையில் பாதிக்குமா ? பாதிக்குமானால் எந்த வழியில் ? தீங்கு விளைவிக்குமானால் எந்த வழிகளை மேற்கொண்டு அதனைச் சரிப்படுத்தலாம் ?

பிரிவு (ஆ)

ஆட்சித் துறை பொதுப்பணிகள்

(4) (அ) யூனியன் பொதுப் பணிக் கழகப் பரீட்சைகளில் இடை நிலை மொழியாக உள்ள ஆங்கிலத்தை ஹிந்தியாக மாற்றினால் ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் உள்ள மக்களை இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதையும், ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ளவர்களோடு ஒப்பு நோக்கினால் இது எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதையும் தெரிவிக்கவும் ?

(ஆ) நாளா வட்டத்தில் பொதுப் பணிகளில் படிப்படியாக ஆங்கிலத்தை நீக்கி ஹிந்தியைப் புகுத்தும் பொழுது ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் உள்ள மக்களின் நியாயமான உரிமைகளையும், தேவைகளையும் எம் முறையில் பாதுகாக்க வேண்டும் ?

(5) யூனியனில் வழங்குகின்ற எல்லா மொழிகளையும் பொதுப் பணிப் பரீட்சைகளுக்கு இடை நிலை மொழிகளாக வைப்பது தேவையா? விரும்பத் தகுந்ததா ? அல்லது இயலுமா ?

(6) ஒன்றுக்கு மேற்பட்ட இடை நிலை மொழிகளில் பரீட்சைகள் நடைபெறும் பொழுது (அ) ஒரே தரமான பரீட்சைத் தரங்களை உண்டாக்கவும், (ஆ) தேவையான அளவு ஹிந்தி அறிவைப் பெறவும் என்னென்ன வழிகளை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கவும் ? இவ்விஷயம் பற்றி வேறு என்ன ஆலோசனைகளை நீங்கள் சொல்ல முடியும் ?

(7) யூனியனில்—ராஜ்யத்தில் நடைபெறும் பொதுப் பணிக் கழகப் போட்டிப் பரீட்சைகளில் கையாளவேண்டிய மொழி அல்லது மொழிகளின் இறுதியான வடிவம் எதுவாக இருத்தல் வேண்டும் ?

(8) அரசியலமைப்பு (விதி 346) "யூனியன் ஆட்சி மொழி என்றும், யூனியனுக்கும் ஒரு ராஜ்யத்துக்கும் இடையே வழங்கவேண்டிய மொழி என்றும், ராஜ்யங்களிடையே வழங்க வேண்டிய மொழி என்றும்" குறிக்கிறது. ஹிந்தி மொழி வழங்காத பிராந்தியங்களில் உள்ள ஒரு ராஜ்யத்தில் ஆட்சி துறையில் பயன்பட்டு வரும் ஹிந்தி அல்லாத மொழியோடு ஹிந்தியையும் சேர்த்துப் பயன்படுத்துமாறு உதவுவது உங்கள் கருத்துப்படி விரும்பத் தகுந்ததா ? என்பதை அறிவிக்கவும்.

(9) பொதுப் பணிகளில் 1965-ம் வருஷத்திற்குள் தகுந்த அளவு ஹிந்தி மொழியில் தரமும், அறிவும் பெறுவதற்கும், இத்தரத்தை விடாமல் காப்பதற்கும் என்ன முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள் ?

(10) (அ) "யூனியன் ஆட்சி விவகாரங்கள்" என்பவற்றில் எத்தனை வகைகள் உண்டு ?

(ஆ) இத்தனை வகைகளிலும் ஹிந்தி மொழியைப் புகுத்தும் பொழுது ஒரே வகையான கொள்கையை மெற்கொள்ளலாமா அல்லது பல்வேறு நிலைகளை மேற்கொள்ளவேண்டுமா ?

(இ) இம் மொழி மாற்றக் காலத்தில் தேவைப்படும் பொழுது ஆங்கிலத்தைத் தொடர்ந்து உபயோகப்படுத்துமாறு இடந்தருவது சிறந்ததா என்பதை அறிவிக்கவும் ?

பிரிவு (இ)

நீதிமன்ற மொழிகளும் சட்ட மொழிகளும்

(11) மிக உயர்நீதி மன்றத்தில் ஹிந்தி மொழியையும், உயர்நீதி மன்றங்களில் பிராந்திய மொழி அல்லது பிராந்திய மொழிகளை ஹிந்தியோடோ அன்றி ஹிந்தி இன்றியோ புகுத்துவதால் என்ன இடையூறு ஏற்படும்? இவற்றை எவ்வளவு விரைவாக எந்த வழிகளில், எந்த நிலைகளில் வெல்ல முடியும்?

(12) ஏனைய ஆட்சி விவகாரங்களுக்கு ஹிந்தியைப் படிப்படியாக ஏற்றுக் கொள்ளும் சூழ்நிலைக்கும், இதற்கும் என்ன தொடர்பு இருக்கவேண்டும்?

(13) (அ) மிக உயர்நீதி மன்றத்தில் ஆங்கிலம் தவிர்க்கப்படும்பொழுது உயர்நீதி மன்றங்களின் மொழி பிராந்திய மொழி/பிராந்திய மொழிகள்/ஹிந்தி ஆகியவற்றுள் எதுவாக இருத்தல்வேண்டும்?

(ஆ) உயர்நீதி மன்றங்களின் இடைநிலை மொழி பிராந்திய மொழிகளாக இருக்குமேயானால் மிக உயர்நீதி மன்றத்தின் நடைமுறைபற்றி என்ன முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்?

(14) பாராளு மன்றத்திலும், ராஜ்யச் சட்ட மன்றங்களிலும் பிராந்திய மொழி/பிராந்திய மொழிகள்/என்பவற்றோடு/அல்லது என்பவை அல்லாமல் ஹிந்தி மொழி வழங்கலாமா?

பிரிவு (ஈ)

கல்வி

(15) உங்களுடைய ராஜ்யத்தில் ஹிந்தி மொழியைப் போதிக்கும் பரீட்சையின் அளவு தரம் என்பவை (1) ஆரம்பப் பள்ளி, (2) இடைநிலைப் பள்ளிகள், (3) பல்கலைக் கழகங்கள், (4) தொழில் துறை அமைப்புக்கள், (5) ஹிந்தி மட்டும் கற்பிக்கும் அமைப்புக்கள் ஆகியவற்றில் எந்த நிலையில் உள்ளன?

(16) கல்வியின் பல நிலைகளிலும் பல்வேறு கல்வி நிலையங்களிலும் ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் ஆகியவற்றின் இடங்கள் எவ்வாறுள்ளன?

(17) உங்களுடைய ராஜ்யத்தில் ஹிந்தியையும், பிராந்திய மொழிகளையும் போதிக்காமல் ஆங்கிலத்தை மட்டும் போதனு மொழியாகக் கொண்டுள்ள பள்ளிக்கூடங்கள் உண்டா?

(18) கல்வித் துறையில் ஹிந்தியோடு/அல்லாமல்/பிராந்திய மொழிகளை வளர்ப்பதற்குரிய ஏதாவது வேலைகள் உங்கள் ராஜ்யத்தில் நடைபெற்று வருகின்றனவா? இவ்வேலையைச் செய்யும்பொழுது என்ன இடையூறுகள் தோன்றியுள்ளன/தோன்றக்கூடும்?

(19) ஹிந்தித் தாய்மொழி அல்லாத ஒவ்வொரு மாணவனும் ஹிந்தியைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஊக்கம் தருவதை/கட்டாயப் படுத்துவதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அப்படியானால் எந்தெந்த நிலைகளில்?

(20) உங்களுடைய ராஜ்யத்தில் ஹிந்தி ஆசிரியர்களைப் பயிற்சி செய்வதற்கு என்ன பயிற்சித் திட்டங்கள் அமலில் உள்ளன? அல்லது தயாரிக்கப்பட்டுள்ளன?

(21) பல்கலைக் கழக நிலையில் எது போதனு மொழியாக உள்ளது இறுதியாக எது போதனு மொழியாக ஆகவேண்டும் ? பாடப் புத்தகங்கள், ஆசிரியர்கள், பரீட்சகர்கள் ஆகியவர்கள் கிடைப்பதிலுள்ள தொல்லைகள் யாவை ? ஒரு பல்கலைக் கழகத்திலிருந்து மற்ருெரு பல்கலைக் கழகத்திற்கு ஆசிரியரும், மாணவரும் பெயர்ந்து செல்வதில் உள்ள தொல்லை யாது ? போதனு மொழியை மாற்ற முடிவு செய்தால் எந்தெந்த நிலைகளில் மாற்றவேண்டும் ?

ஹிந்தி போதனு மொழியாக அமையாவிட்டால் பல்கலைக் கழகப் படிப்பில் அதற்கு என்ன இடம் கொடுக்கப்படவேண்டும் ?

உங்களுடைய கருத்துக்களை விரிவான காரணங்களுடன் தயவு செய்து கூறுக ?

(22) (அ) யூனியனிலும், ராஜ்யங்களிலும் தொழில் நுட்பக் கலைச் சொற்களையும், ஹிந்தி அகராதியையும் தயாரிக்கும் வேலை எங்கனம் வளர்ந்து கொண்டிருக்கிறது ? இவ்வேலையை விரைவாகச் செய்ய என்ன வழிகளை மேற்கொள்ளவேண்டும் ? இதனைச் செய்து முடிக்க நிலையான அமைப்பு அல்லது சாதனம் ஏதேனும் தேவைப்படுமா ?

(ஆ) தொழில் துறையிலும், விஞ்ஞானத் துறையிலும் ஹிந்தியிலும், பிராந்திய மொழிகளிலும் கலைச் சொற்களை ஆக்கும் பொழுது அவ்வேலைகளை ஒரு முகப்படுத்த என்ன முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் ? யூனியன் அரசாங்கத்தில் இவ்வேலைகளைக் கவனிக்க ஒரு மத்திய அமைப்பு இருக்கவேண்டும் என்பதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா ?

(23) ஆட்சித் துறையில் பயன்படும் மொழி, நீதி மன்றங்களில் வழங்கும் மொழி, பொதுப் பணிப் பரீட்சைகளுக்கு இடைநிலை மொழியாக உள்ள மொழி, பல்கலைக் கழகத்தில் போதனு மொழியாக உள்ள மொழி ஆகிய இவற்றினிடையே ஏதாவது உறவு இருக்கவேண்டுமா ? இருந்தால் எத்தகைய உறவு இருக்க வேண்டும் ?

(24) (அ) ஹிந்தி வழங்காத பிராந்தியங்களில் இப்பொழுது எந்த அளவுக்கு ஹிந்தி பரவியுள்ளது ?

(ஆ) இவ்விஷயத்தில் யூனியன் ராஜ்ய அரசாங்கங்கள் என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டுள்ளன ?

(25) தாமாக இயங்கும் அமைப்புக்கள் இதுவரையில் எந்த அளவு வேலை செய்துள்ளன ? இனி வேலை செய்யத் திட்டம் என்ன வகுத்துக் கொண்டுள்ளன ? அவைகளுக்கு (அ) மத்திய அரசாங்கத்திலிருந்தும், (ஆ) ராஜ்ய அரசாங்கத்திலிருந்தும் என்ன வகையான உதவி தேவைப்படுகிறது ?

(26) ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் ஹிந்தியைக் கற்றுக்கொள்வதை எளிதாகச் செய்ய நீங்கள் என்ன ஆலோசனை கூறுகிறீர்கள் ?

(27) அரசியலமைப்பின் 351-வது விதியில் சொல்லியபடி ஹிந்தி மொழியைப் பரப்பி வளம்படுத்த மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் இதுவரை என்னவழிகளை மேற்கொண்டுள்ளன ? இனி என்ன செய்யவேண்டும் ?

351-வது விதியில் சொல்லப்பட்ட காரியங்களை நிறைவேற்ற நிலையான மத்தியக் குழு ஒன்றை நியமிக்கவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா ?

351-வது விதியின்படி ஹிந்தி மொழியை வளர்த்துப் பரப்புவது யூனியன் அரசாங்கத்தின் கடமையாகும். இந்தியாவின்

கலப்புப் பண்பாட்டிலுள்ள எல்லா அடிப்படைகளையும் வெளியிடுவதற்குரிய தக்க கருவியாக அம்மொழியை வளர்த்து அம்மொழி மரபு கெடாதபடி ஹிந்துஸ்தானி மொழியிலிருந்தும் எட்டாவது ஷெட்யூலில் குறிக்கப்பட்டுள்ள ஏனைய இந்திய மொழிகளிலிருந்தும் நடை, சொல்லாட்சி முதலியவைகளைப் பெற்று சீரணித்து இம்மொழியை வளப்படுத்தவேண்டும். தேவையானபொழுது அதனுடைய நெடுங்கணக்கை வளர்க்கும் முறையில் முக்கியமாக வட மொழியிலிருந்தும் அடுத்தபடியாக ஏனைய மொழிகளிலிருந்தும் வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரிவு (உ)

பலதரப்பட்டன

(28) எண்களின் பண்டைட்டு வடிவத்தோடு தேவ நாகரி வடிவத்தையும் ஏற்றுக்கொள்வது தேவையா ? அப்படியானால் எந்த அளவுக்கு, எந்தக் காரியத்திற்கு இதனைச் செய்யவேண்டும் ?

(29) ஹிந்தி அல்லது உருதுவைத் தாய் மொழியாகக்கொண்ட ஒவ்வொரு மாணவனும் இவை இரண்டு மல்லாத எட்டாவது ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள ஏதாவது ஒரு இந்திய மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று நீங்கள் ஆலோசனை கூறுகிறீர்களா ?

(30) வட மொழியைக் கற்கும் முயற்சியை ஊக்குவதற்கு நீங்கள் என்ன வழியைச் சொல்கிறீர்கள் ?

(31) ஹிந்தியில் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தொலை யெழுத்து, மோர்ஸ் அடையாள எழுத்து ஆகியவற்றில் என்ன வளர்ச்சி ஏற்பட்டுள்ளது? இதுபற்றி நீங்கள் இன்னும் ஏதாவது ஆலோசனை கூறுகிறீர்களா ?

(32) தேவ நாகரி எழுத்துச் சீர்திருத்தம் பற்றி நீங்கள் ஏதாவது கூறுகிறீர்களா ? சிறப்பாக ஹிந்தி மொழி அல்லாத பிற மொழிகளிலுள்ள சப்தங்களை வெளியிடக்கூடிய எழுத்துக்களை இதில் சேர்ப்பதற்கு ஏதாவது ஆலோசனை கூறுகிறீர்களா ?

(33) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கும், யூனியனுக்கும் ராஜ்ய அரசாங்கங்களுக்கும், ராஜ்ய அரசாங்கங்களினிடையேயும் ஆட்சி விவகாரங்களில் படிப்படியாக ஆங்கிலத்தை நீக்கிவிட்டு ஹிந்தி மொழியைப் புகுத்துவதற்குரிய கால அட்டவணை தயாரிப்பது பற்றி நீங்கள் ஏதாவது ஆலோசனை கூறுகிறீர்களா ? பல்வேறு ஆட்சி விவகாரங்களுக்கு, அதாவது யூனியன் ஆட்சி விவகாரங்கள், மிக உயர்நீதிமன்றம், உயர்நீதி மன்றங்கள் ஆகியவற்றின் விவகாரங்கள், சட்ட மன்ற விவகாரங்கள் ஆகியவற்றில் மொழி மாற்றம் செய்யும்பொழுது பல்வேறு அட்டவணைகளைக் கையாளவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா ? கருதினல் குறிப்பாகத் தக்க காரணங்களுடன் இதனைத் தெரிவிக்கவும் ?

(34) இக்கழகத்தின் நிர்மாணக் கோரிக்கைகள்பற்றி நீங்கள் ஏதாவது வேறு ஆலோசனைகள் சொல்ல விரும்புகிறீர்களா ?

பிற்சேர்க்கை 4

(கோரிக்கை : பகுதி 1, பாரா 2.)

ஆட்சிமொழிக் கழகத்திற்கு எழுத்து மூலமாகவோ அன்றி வாய் மொழி மூலமாகவோ சான்றுபகர்ந்த பொதுப் பணி அதிகாரிகள், அமைப்புகள் ஆகியவற்றின் பட்டியல்.

அந்தமான் நிகோபார் தீவுகள்.

தலைமை ஆணையாளர், அந்தமான் நிகோபார் தீவுகள்.

ஆந்திரா.

ஆந்திர அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, ஆந்திர அரசாங்கம்.
பொது நலக் கல்வித் துறை இயக்குனர், ஆந்திர அரசாங்கம்.
ஆந்திரச் சட்ட மன்றம்.
ஆந்திர உயர்நீதி மன்றம்.
ஆந்திரப் பொதுப் பணிக் கழகம்.
துணை வேந்தர், ஆந்திரப் பல்கலைக் கழகம், வால்டேர்.
துணை வேந்தர், ஸ்ரீ வேங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், திருப்பதி.
கல்லூரித் தலைவர், அரசாங்கக் கலைக் கல்லூரி, அனந்தப்பூர்.
கல்லூரித் தலைவர், அரசாங்கக் கலைக் கல்லூரி, ராஜமந்தரி.
கல்லூரித் தலைவர், அரசாங்கக் கலைக் கல்லூரி, கடப்பை.
கல்லூரித் தலைவர், அரசாங்க மகளிர் கல்லூரி, குண்டூர்.
கல்லூரித் தலைவர், அரசாங்க பி.ஆர். கல்லூரி, காகிநாடா.

அஸ்ஸாம்.

அஸ்ஸாம் அரசாங்கம்.
நீதித் துறைச் செயலாளர், அஸ்ஸாம் அரசாங்கம்.
பொது நலக் கல்வித் துறை இயக்குனர், அஸ்ஸாம் அரசாங்கம்.
விளம்பரத் துறை இயக்குனர், அஸ்ஸாம் அரசாங்கம்.
அஸ்ஸாம் சட்ட மன்றம்.
அஸ்ஸாம் உயர்நீதி மன்றம்.
அஸ்ஸாம் பொதுப் பணிக் கழகம்.
கௌஹாத்திப் பல்கலைக் கழகம்.
உறுப்பினர் மாவட்டக் குழு, ஷில்லாங்.
மேலாளர் அரசாங்க ஹிந்திப் பயிற்சிப் பகுதி, மிஸமாரி.
துணைத் தணிக்கையாளர், உடற் பயிற்சித் துறை, கௌஹாத்தி.

போபால்.

போபால் அரசாங்கம்.

பீஹார்.

பீஹார் அரசாங்கம்.
செயலாளர், சட்டத் துறை, பீஹார் அரசாங்கம்.

பொது உறவு இயக்குனர், பீஹார் அரசாங்கம்.
பொது நலக் கல்வித் துறை இயக்குனர், பீஹார் அரசாங்கம்.
பீஹார் சட்ட மன்றம்.
பீஹார் சட்ட கவுன்ஸில்.
பாட்னு உயர்நீதி மன்றம்.
பீஹார் பொதுப் பணிக் கழகம்.
துணை வேந்தர், பீஹார் பல்கலைக் கழகம்.
துணை வேந்தர், பாட்னு பல்கலைக் கழகம்.
மண்டலக் கணக்கர், பீஹார்.
ஹிந்திக் குழு, பீஹார் அரசாங்கம்.

பம்பாய்.

பம்பாய் அரசாங்கம்.
செயலாளர், சட்டத் துறை, பம்பாய் அரசாங்கம்.
விளம்பர இயக்குனர், பம்பாய் அரசாங்கம்.
பொது நலக் கல்வித் துறை இயக்குனர், பம்பாய் அரசாங்கம்.
சபாநாயகர், பம்பாய் சட்ட மன்றம்.
தலைவர், பம்பாய் சட்டக் கவுன்ஸில்.
பம்பாய் உயர்நீதி மன்றம்.
பம்பாய் பொதுப் பணிக் கழகம்.
இரயில்வேப் பணிக் கழகம், பம்பாய்.
துணைவேந்தர், பம்பாய் பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், குஜராத் பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், பூனு பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், மகாராஜா சாயோஜிராவ் பல்கலைக் கழகம், பரோடா.
கர்நாடகப் பல்கலைக் கழகம்.
எஸ்.என்.டி. டி. மகளிர் பல்கலைக் கழகம், பம்பாய்.
ஆவண இயக்குனர், பம்பாய் அரசாங்கம்.
தலைவர், எல்பின்ஸ்டன் கல்லூரி, பம்பாய்.
தலைவர், குஜராத் கல்லூரி, பம்பாய்.
தலைவர், கர்நாடகக் கல்லூரி, தார்வார்.

கூர்க்.

கூர்க் அரசாங்கம்.
சபாநாயகர், கூர்க் சட்ட மன்றம், மெர்க்காரா.
தலைவர், அரசினர் கல்லூரி, மெர்க்காரா.
மாவட்ட நீதிபதி, மெர்க்காரா.
தனி அதிகாரி, கல்வித் துறை, மெர்க்காரா.

டில்லி (மத்திய அரசாங்கம் உள்பட).

சட்ட அமைச்சு, இந்திய அரசாங்கம்.
தொழில், வீடு-துறை அமைச்சு, இந்திய அரசாங்கம்.
இயற்கைப்பொருள், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சு, இந்திய அரசாங்கம்.
போக்கு வரத்து அமைச்சு, இந்திய அரசாங்கம்.
செய்திப் போக்கு வரத்து, இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (வருமான, செலவுப் பகுதி), இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (பாதுகாவல் பகுதி), இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (டில்லி ராஜ்யப் பகுதி), இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (வருமானப் பகுதி), இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (பணி நிலையப் பகுதி), இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (பொருளாதாரப் பகுதி), இந்திய அரசாங்கம்.
நிதி அமைச்சு (கம்பெனிச் சட்ட ஆட்சிப் பகுதி), இந்திய அரசாங்கம்.
வெளி நாட்டு அமைச்சு, இந்திய அரசாங்கம்.

பாதுகாவல் அமைச்சு, இந்திய அரசாங்கம்.
வாணிகம், தொழில் அமைச்சு, இந்திய அரசாங்கம்.
கல்வி அமைச்சு, இந்திய அரசாங்கம்.
செய்தி, ஒலி பரப்பு அமைச்சு, இந்திய அரசாங்கம்.
புகை வண்டிகள் அமைச்சு (இரயில்வே குழு); இந்திய அரசாங்கம்.
சுகாதார அமைச்சு, இந்திய அரசாங்கம்.
உள்துறை அமைச்சு, இந்திய அரசாங்கம்.
நீர்ப்பாசன, சக்தி அமைச்சு, இந்திய அரசாங்கம்.
தொழிலாளர் அமைச்சு, இந்திய அரசாங்கம்.
தயாரிப்பு அமைச்சு, இந்திய அரசாங்கம்.
திரும்ப வழங்கு அமைச்சு, இந்திய அரசாங்கம்.
எஃகு, இரும்பு அமைச்சு, இந்திய அரசாங்கம்.
உணவு, வேளாண்மை அமைச்சு, இந்திய அரசாங்கம்.
தலைமை இயக்குனர், விண் ஆராய்ச்சி நிலையங்கள், இந்திய அரசாங்கம்.
இந்தியத் துணைத் தணிக்கைத் தலைவர்.
இந்திய உதவித் தணிக்கைத் தலைவர்.
இந்திய வழக்கறிஞர் தலைவர்.
இந்திய சொலிஸிடர் ஜெனரல்.
தலைமை இயக்குனர், தபால் தந்திப் பகுதி.
தலைவர், மத்திய வருமானத் துறை.
தலைமை இயக்குனர், அகில இந்திய வானொலி.
இயக்குனர், வழிதுறை அமைப்புப் பகுதி, அமைச்சர் குழுச் செயளாளர், இந்திய அரசாங்கம்.
தலைவர், மத்தியப் படத் தணிக்கைக் குழு, இந்திய அரசாங்கம்.
தலைவர், தேசியப் பாதுகாப்புக் கழகம், கடக்வஸ்லா.
இந்திய இராஜ்ய சேம நிதி.
துணை நில நுல் வல்லுநர், இந்திய நில நுல் அளவுப் பகுதி.
பொருளாதார அறிவுரையாளரும், தலைமைக் கணக்கரும், ஹிராகூட் தொழிற்பகுதி.
தலைமைக் கணக்கர், ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா.
ஆயுள் ஒப்பந்தத் தணிக்கையர், ஒப்பந்தப் பகுதி, இந்திய அரசாங்கம்.
தலைவர், ஐ.ஏ.எஸ். பயிற்சிப் பள்ளி.
இயக்குனர், விஞ்ஞான, தொழில் துறை ஆராய்ச்சிக் குழு.
இயக்குனர், தேசீய பௌதீக ஆராய்ச்சி சாலே.
துணைத் தலைமை இயக்குனர், சுகாதாரப் பணி, சுகாதார அமைச்சு, இந்திய அரசாங்கம்.
மக்கள் சபை, செயலாளர் அகம்.
ராஜ்ய சபை, செயலாளர் அகம்.
இந்திய மிக உயர்நீதி மன்றம்.
யூனியன் பொதுப் பணிக் கழகம்.
டில்லி ராஜ்ய அரசாங்கம்.
சபாநாயகர், டில்லி ராஜ்ய சட்ட மன்றம்.
துணைவேந்தர், டில்லி பல்கலைக் கழகம்.
தலைவர், புது டில்லி நகராண்மைக் குழு, துணை ஆணையர், டில்லி.
மொழிக் குழு, டில்லி ராஜ்ய அரசாங்கம்.

ஹிமாசல் பிரதேசம்.

ஹிமாசல் பிரதேச அரசாங்கம்.
ஹிமாசல் பிரதேச சட்ட மன்றம்.

ஹைதராபாத்.

ஹைதராபாத் அரசாங்கம்.
செய்தி, விளம்பர இலாக்கா இயக்குனர், ஹைதராபாத் அரசாங்கம்.
பொதுக் கல்வித் துறை இயக்குனர், ஹைதராபாத் அரசாங்கம்.

தொழில் துறைக் கல்வி இயக்குனர், ஹைதராபாத் அரசாங்கம்.
சபாநாயகர், ஹைதராபாத் சட்ட மன்றம்.
ஹைதராபாத் உயர்நீதி மன்றம்.
ஹைதராபாத் பொதுப் பணிக் கழகம்.
துணைவேந்தர், ஆஸ்மானியா பல்கலைக் கழகம், ஹைதராபாத்.

ஜம்முவும், காஷ்மீரும்.

ஜம்மு, காஷ்மீர் அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறைப் பகுதி, ஜம்மு-காஷ்மீர் அரசாங்கம்.
ஜம்மு-காஷ்மீர் உயர்நீதி மன்றம்.
ஜம்மு-காஷ்மீர் பல்கலைக் கழகம்.
பொதுப் பணிக் கழகம், ஜம்மு-காஷ்மீர்.
மண்டலக் கணக்கர், ஜம்மு-காஷ்மீர்.

மத்ய பாரத்.

மத்ய பாரத் அரசாங்கம்.
செயலாளர், நிதித் துறை, மத்ய பாரத் அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, மத்ய பாரத் அரசாங்கம்.
செயலாளர், சட்டத் துறை, மத்ய பாரத் அரசாங்கம்.
இயக்குனர், விளம்பரத் துறை, மத்ய பாரத் அரசாங்கம்.
இயக்குனர், கல்வித் துறை, மத்ய பாரத் அரசாங்கம்.
சபாநாயகர், மத்ய பாரத் சட்ட மன்றம்.
மத்ய பாரத் உயர்நீதி மன்றம்.
மத்ய பாரத் பொதுப் பணிக் கழகம்.
தணிக்கை அதிகாரி, மத்ய பாரத்.

மத்யப் பிரதேசம்.

மத்யப் பிரதேச அரசாங்கம்.
இயக்குனர், விளம்பரத் துறை, மத்யப்பிரதேச அரசாங்கம்.
மத்யப் பிரதேச சட்ட மன்றம்.
நாக்பூர் உயர்நீதி மன்றம்.
மத்யப் பிரதேசப் பொதுப் பணிக் கழகம்.
துணைவேந்தர். நாக்பூர் பல்கலைக் கழகம்.
சாகூர் பல்கலைக் கழகம், சாகூர்.

சென்னை.

சென்னை அரசாங்கம்.
இயக்குனர், கல்வித்துறை, சென்னை அரசாங்கம்.
சபாநாயகர், சென்னை சட்ட மன்றம்.
தலைவர், சென்னை சட்டக் கவுன்ஸில்.
சென்னை உயர்நீதி மன்றம்.
சென்னை பொதுப் பணிக் கழகம்.
தலைவர், புகையிரதப் பணிக் கழகம், சென்னை.
மண்டலக் கணக்கர், சென்னை.
இயக்குனர், மத்யத் தோல் ஆராய்ச்சிக் கழகம், சென்னை.
தலைவர், அரசாங்க விக்டோரியா கல்லூரி, சென்னை.
தலைவர், அரசாங்கக் கலைக் கல்லூரி, மங்களூர்.
தலைவர், அரசாங்க பிரண் கல்லூரி, தலைச்சேரி.
தலைவர், அரசாங்கப் பயிற்சிக் கல்லூரி, வேலூர், காட்பாடி.
இயக்குனர், மத்திய மின்-இராசாயன ஆராய்ச்சி நிலையம், காரைக்குடி.
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்.
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

மணிப்பூர்.

மணிப்பூர் அரசாங்கம்.

மைசூர்.

மைசூர் அரசாங்கம்.
தலைமைச் செய்தி அதிகாரி, மைசூர் அரசாங்கம்.
பொதுக் கல்வித் துறைத் துணை இயக்குனர், மைசூர் அரசாங்கம்.
சபாநாயகர், மைசூர் சட்ட மன்றம்.
மைசூர் சட்ட கவுன்சில்.
மைசூர் உயர்நீதி மன்றம்.
மைசூர் பொதுப் பணிக் கழகம்.
இயக்குனர், இலக்கியப் பண்பாட்டுத் துறை, மைசூர் அரசாங்கம்.
மண்டலக் கணக்கர், மைசூர் அரசாங்கம்.
இயக்குனர், மத்ய உணவு ஆராய்ச்சி நிலையம், மைசூர்.

ஒரிஸா.

ஒரிஸா அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, ஒரிஸா அரசாங்கம்.
செயலாளர், சட்டத் துறை, ஒரிஸா அரசாங்கம்.
இயக்குனர், விளம்பரத் துறை, ஒரிஸா அரசாங்கம்.
இயக்குனர், கல்வித் துறை, ஒரிஸா அரசாங்கம்.
தலைவர், நில வருமானத் துறைக் கழகம், ஒரிஸா அரசாங்கம்.
சபாநாயகர், ஒரிஸா சட்ட மன்றம்.
ஒரிஸா உயர்நீதி மன்றம்.
ஒரிஸா பொதுப் பணிக் கழகம்.
வழக்குரைத் துறை முதல்வர், ஒரிஸா.
உதவித் துணைவேந்தர், உட்கல் பல்கலைக் கழகம்.

பெப்ஸு.

பெப்ஸு அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, பெப்ஸு அரசாங்கம்.
செயலாளர், சட்டத் துறை, பெப்ஸு அரசாங்கம்.
இயக்குனர், செய்தித் துறை, பெப்ஸு அரசாங்கம்.
துணை இயக்குனர், கல்வித் துறை, பெப்ஸு அரசாங்கம்.
இயக்குனர், பொதுக் கல்வித் துறை, பெப்ஸு அரசாங்கம்.
சபாநாயகர், பெப்ஸு சட்ட மன்றம்.
பெப்ஸு உயர்நீதி மன்றம்.
பெப்ஸு பொதுப் பணிக் கழகம்.
தணிக்கையர், பெப்ஸு.
வழக்குரைத் துறை முதல்வர், பெப்ஸு.
இயக்குனர், பஞ்சாபித் துறை, பெப்ஸு.

பஞ்சாப்.

பஞ்சாப் அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, பஞ்சாப் அரசாங்கம்.
சட்டத் துறை நினைவாளர், பஞ்சாப் அரசாங்கம்.
இயக்குனர், பொது உறவு, பஞ்சாப் அரசாங்கம்.
இயக்குனர், பொதுக் கல்வித் துறை, பஞ்சாப் அரசாங்கம்.
இயக்குனர், மொழிப் பகுதி, பஞ்சாப் அரசாங்கம்.
சபாநாயகர், பஞ்சாப் சட்ட மன்றம்.
தலைவர், பஞ்சாப் சட்ட கவுன்சில்.
பஞ்சாப் உயர்நீதி மன்றம்.

பஞ்சாப் பொதுப் பணிக் கழகம்.
மண்டலக் கணக்கர், பஞ்சாப்.
துணைவேந்தர், பஞ்சாப் பல்கலைக் கழகம்.
அதிகாரி, நூல்களை அரசாங்க மயமாக்கும் துறை, பஞ்சாப் கல்வித் துறை.

ராஜஸ்தான்.

ராஜஸ்தான் அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, ராஜஸ்தான் அரசாங்கம்.
செயலாளர், சட்டத் துறை, ராஜஸ்தான் அரசாங்கம்.
இயக்குனர், பொது உறவுத் துறை, ராஜஸ்தான் அரசாங்கம்.
இயக்குனர், கல்வித் துறை, ராஜஸ்தான் அரசாங்கம்.
சபாநாயகர், ராஜஸ்தான் சட்ட மன்றம்.
ராஜஸ்தான் உயர்நீதி மன்றம்.
ராஜஸ்தான் பொதுப் பணிக் கழகம்.
மண்டலக் கணக்கர், ராஜஸ்தான்.
துணைவேந்தர், ராஜபுதனப் பல்கலைக் கழகம்.
தலைவர், ராஜஸ்தான் ஆட்சி மொழிக் குழு.

சௌராஷ்ட்ரா.

சௌராஷ்ட்ரா அரசாங்கம்.
இயக்குனர், செய்தித் துறை, சௌராஷ்ட்ரா அரசாங்கம்.
இயக்குனர், கல்வித் துறை, சௌராஷ்ட்ரா அரசாங்கம்.
சபாநயாகர், சௌராஷ்ட்ரா சட்ட மன்றம்.
சௌராஷ்ட்ரா உயர்நீதி மன்றம்.
சௌராஷ்ட்ரா பொதுப் பணிக் கழகம்.
கல்வித் துறைத் துணைப் பரிசோதகர், ராஜ்காட்.

திருவாங்கூர்–கொச்சி.

திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
செயலாளர், கல்வித் துறை, திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
இயக்குனர், பொது உறவு, திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
இயக்குனர், பொதுக் கல்வி, திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
சபாநாயகர், திருவாங்கூர்-கொச்சி சட்ட மன்றம்.
திருவாங்கூர்-கொச்சி உயர்நீதி மன்றம்.
திருவாங்கூர்-கொச்சி பொதுப் பணிக் கழகம்.
அறுவை மருத்துவத் தலைவர், திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
தலைமைப் பொறியர், திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
தணிக்கையர், திருவாங்கூர்-கொச்சி அரசாங்கம்.
துணைவேந்தர், திருவாங்கூர்-கொச்சிப் பல்கலைக் கழகம்.
மாவட்டக் கல்வி அதிகாரி, திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம்.

திரிபுரா.

திரிபுரா அரசாங்கம்.

உத்தரப் பிரதேசம்.

உத்தரப் பிரதேச அரசாங்கம்.
சபாநாயகர், உத்தரப் பிரதேச சட்ட மன்றம்.
தலைவர், உத்தரப் பிரதேச சட்டக் கவுன்சில்.
அலஹாபாத் உயர்நீதி மன்றம்.
உத்தரப் பிரதேசப் பொதுப் பணிக் கழகம்.
மண்டலக் கணக்கர், உத்தரப் பிரதேசம்.
தலைவர், அரசாங்க இடைநிலைப் பள்ளி, காசி.

துணைவேந்தர், அலஹாபாத் பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், ஆக்ரா பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், லக்னோ பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், கூர்க்கு பல்கலைக் கழகம்.
துணைவேந்தர், அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகம், அலிகார்.
பனாரஸ் பல்கலைக் கழகம், பனாரஸ்.

விந்தியப் பிரதேசம்.

விந்தியப் பிரதேச அரசாங்கம்.
விந்தியப் பிரதேசச் சட்ட மன்றம்.
நிதித் துறை ஆணையர், விந்தியப் பிரதேசம்.

மேற்கு வங்காளம்.

மேற்கு வங்காள அரசாங்கம்.
இயக்குனர், பொதுக் கல்வித் துறை, மேற்கு வங்காள அரசாங்கம்.
சபாநாயகர், மேற்கு வங்காளச் சட்ட மன்றம்.
துணைத் தலைவர், மேற்கு வங்காளச் சட்ட கவுன்சில்.
கல்கத்தா உயர்நீதி மன்றம்.
மேற்கு வங்காள பொதுப் பணிக் கழகம்.
இயக்குனர், சுகாதாரப் பணி, மேற்கு வங்காள அரசாங்கம்.
இயக்குனர், இந்தியத் தொழில் துறை அமைப்பு, கரக்பூர்.
தலைவர், வங்காளப் பொறியியல் கல்லூரி, கல்கத்தா.
கல்கத்தா பல்கலைக் கழகம்.
விஸ்வ-பாரதி பல்கலைக் கழகம், சாந்தினிகேதன், மேற்கு வங்காளம்.
ஆட்சியாளர், சந்திரநா கூர்.

பிற்சேர்க்கை 5

(கோரிக்கை I பகுதி 1 (இ) பாரா 2)

ஆட்சி மொழிக் கழகம் வாய் மொழிச் சான்றைச் சேகரிக்கப் பல்வேறு இடங்களில் சென்று தங்கிய அட்டவணை.

நாள்.	தேதி.	கழகம் அமர்ந்த இடம்.	எத்தனை முறைகள் கழகம் அமர்ந்தது. (காலையும், மாலையும் முறையே 10 முதல் 1 மணிவரையும், 3 முதல் 6 மணி வரையும் பணி புரிந்தது.)
(1)	(2)	(3)	(4)
திங்களும், செவ்வாயும் ..	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 10, 11 தேதிகளில்.	ராஜ்காட்	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 10, 11 தேதிகளில் காலையும், மாலையும் (4 முறைகள்).
புதனும், வியாழனும் ..	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15, 16 தேதிகளில்.	அகமதாபாத்	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 12, 13 தேதிகளில் காலையும், மாலையும் (4 முறைகள்).
சனியும், ஞாயிறும் ..	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15 16 தேதிகளில்.	பூனா	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 14, 15 தேதிகளில் காலையும், மாலையும் (4 முறைகள்).
புதன் முதல் வெள்ளி வரை.	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 19 தேதி முதல் 21 தேதி வரை.	நாக்பூர்	1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 19, 20 தேதிகளில் காலையும், மாலையும், 21-ம் தேதி காலை மட்டும் (5 முறைகள்).
சனி முதல் புதன் வரை ..	1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 19 தேதி முதல் 23 தேதி வரை.	கல்கத்தா	1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 19-ந் தேதி கழகம் அனுட்டான முறையை ஆராயக் கூடியது. 21, 22 தேதிகளில் இரண்டு வேளைகளிலும், 23-ம் தேதி காலையில் மட்டும் (5 முறைகள்).
வியாழன் முதல் சனிவரை.	1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 24 தேதி முதல் 26 தேதி வரை.	புவனேஸ்வர்	1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 24, 25-ம் தேதி இரு வேளைகளிலும், 26-ம் தேதி காலையில் மட்டும் (5 முறைகள்).
செவ்வாய் முதல் வியாழன் வரை.	1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 29 தேதி முதல் டிசம்பர் மாதம் 1-ம் தேதி வரை.	ஷில்லாங்	1955-ம் வருஷம் நவம்பர் மாதம் 29, 30 தேதிகளில் இரு வேளைகளிலும், டிசம்பர் மாதம் 1-ம் தேதி இரு வேளைகளிலும் (6 முறைகள்).
திங்கள் முதல் புதன் வரை.	1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12 தேதி முதல் 14 தேதி வரை.	பம்பாய்	1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12, 13, 14 தேதிகளில் இரண்டு வேளைகளிலும் (6 முறைகள்).
வெள்ளி முதல் ஞாயிறு வரை.	1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16 தேதி முதல் 18 தேதி வரை.	ஹைதராபாத்	1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 16, 17 தேதிகளில் இரு வேளைகளிலும், 18-ம் தேதி காலையிலும் (5 முறைகள்).
செவ்வாய் முதல் வியாழன் வரை.	1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 20 தேதி முதல் 22 தேதி வரை.	கர்நூல்	1955-ம் வருஷம் டிசம்பர் மாதம் 20, 21 தேதிகளில் இரு வேளைகளிலும், 22-ம் தேதி காலையில் மட்டும் (5 முறைகள்).

நாள். (1)	தேதி. (2)	கழகம் அமர்ந்த இடம். (3)	எத்தனை முறைகள் கழகம் அமர்ந்தது. (காலையும், மாலையும் முறையே 10 முதல் 1 மணி வரையும், 3 முதல் 6 மணி வரையும் பணி புரிந்தது.) (4)
திங்கள் முதல் வியாழன் வரை.	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 9 தேதி முதல் 12 தேதி வரை.	சென்னை	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 9, 10, 11 தேதிகளில் இரு வேளைகளிலும், 12-ம் தேதி காலையிலும் (7 முறைகள்).
வெள்ளி முதல் ஞாயிறு வரை.	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 13 தேதி முதல் 15 தேதி வரை.	பங்களூர்	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 13, 14 தேதிகளில் இருவேளைகளிலும், 15-ம்தேதி காலையிலும் (5 முறைகள்).
திங்களும், செவ்வாயும் ..	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 16, 17 தேதிகளில்.	எர்ணுகுளம்	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 16-ம் தேதி மாலையும், 17-ம் தேதி காலையும் (2 முறைகள்).
புதனும், வியாழனும் ..	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 18, 19 தேதிகளில்.	திருவனந்தபுரம் ..	1956-ம் வருஷம் ஜனவரி மாதம் 18, 19 தேதிகளில் இரு வேளைகளிலும் (4 முறைகள்).
வெள்ளி முதல் செவ்வாய் வரை.	1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10 தேதி முதல் 21 தேதி வரை.	புது டில்லி.	1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 10, 11, 13 தேதி முதல் 18, 20, 21 தேதிகளில் இரு வேளைகளிலும் (20 முறைகள்).
வியாழனும், வெள்ளியும்.	1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 23, 24 தேதிகளில்.	குவாலியர்	1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 23, 24 தேதிகளில் இரு வேளைகளிலும் (4 முறைகள்).
திங்களும், செவ்வாயும் ..	1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27, 28 தேதிகளில்.	ஜெய்ப்பூர்	1956-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27, 28 தேதிகளில் இரு வேளைகளிலும் (4 முறைகள்).
சனி முதல் திங்கள் வரை ..	1956-ம் வருஷம் மார்ச்சு மாதம் 10 தேதி முதல் 12 தேதி வரை.	பாட்னு	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 10, 11 தேதிகளில் இரு வேளைகளிலும், 12-ம் தேதி காலையிலும் (5 முறைகள்).
செவ்வாய் முதல் வியாழன் வரை.	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 13 14 தேதிகளில்.	லக்னே	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 13-ந் தேதி மாலையிலும், 14, 15 தேதிகளில் இரு வேளைகளிலும் (5 முறைகள்).
சனியும், ஞாயிறும் ..	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 17, 18 தேதிகளில்.	சாந்திகார்	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 17, 18 தேதிகளில் இரு வேளைகளிலும் (4 முறைகள்).
திங்களும், செவ்வாயும் ..	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 19, 20 தேதிகளில்.	பாட்யாலா	1956-ம் வருஷம் மார்ச் மாதம் 19-ம் தேதி மாலையும், 20-ம் தேதி காலையும் (2 முறைகள்).
சனி முதல் புதன் வரை ..	1956-ம் வருஷம் ஜூன் மாதம் 11 தேதி முதல் 20 தேதி வரை.	ஸ்ரீநகர்	1956-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ம் தேதி இரு வேளைகளிலும் 16-ம் தேதி காலையிலும் (3 முறைகள்).

இக் கழகம் தன்னுடைய அறிக்கையை முடிவு செய்ய 1956-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதி முதல் 14-ம் தேதி வரையிலும் 16-ம் தேதி காலையிலும் 18-ம் தேதி முதல் 20-ம் தேதி வரையிலும் கூடிற்று.

பிற்சேர்க்கை 6

ஆட்சி மொழி பற்றி அரசியலமைப்பின் பல்வேறு விதிகளும் கூறுவதை ஒட்டி யூனியன் அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கங்களும் எடுத்துள்ள நடவடிக்கைகள்[1]

யூனியன் அரசாங்கம்

விதி 343

ஜனாதிபதி இவ்வாறு பயன்படுத்த ஆணை இட்டுள்ளார் :—

(அ) ஆங்கிலத்துடன் ஹிந்தி மொழியையும், எண்களின் பன்னாட்டு வடிவங்களுடன் தேவநாகரி வடிவத்தையும் கீழ்க்கண்ட உத்தியோக நியமனத் தாள்களில் உபயோகிக்கலாம் :—

(1) கவர்னர்கள்.
(2) மிக உயர்நீதி மன்ற நடுவணர்.
(3) உயர்நீதி மன்ற நடுவணர்கள்.

(ஆ) ஆங்கிலத்துடன் ஹிந்தியையும் கீழ்க்கண்ட ஆட்சி விவகாரங்கட்குப் பயன்படுத்தலாம் :—

(1) பொதுமக்களுடன் செய்யும் கடிதப் போக்கு வரத்து.
(2) ஆட்சி அறிக்கை, ஆட்சியாளர் செய்தித்தாள்கள், பாராளு மன்றத்திற்கு சமர்பிக்கும் அறிக்கைகள்.
(3) அரசாங்கத் தீர்மானங்களும், சட்ட மன்ற நிறைவேற்றங்களும்.
(4) ஹிந்தியை ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டுள்ள ராஜ்ய அரசாங்கங்களுடன் நடத்தும் கடிதப் போக்கு வரத்துக்கள்.

[1] எங்களுடைய கேள்விகளுக்கு யூனியன், ராஜ்ய அரசாங்கங்கள் கொடுத்த விடையிலிருந்து இது தயாரிக்கப்பட்டுள்ளது.

(5) உடன்படிக்கைகள், ஒப்புதல்கள்.

(6) ஏனைய நாட்டு அரசாங்கங்கள், அவர்கள் தூதுவர்கள், பன்னாட்டு அமைப்புக்கள் இவற்றுடன் செய்யும் கடிதப் போக்குவரத்துக்கள்.

(7) தூதுக் குழுவினருக்குத் தரப்படும் ஆவணங்கள் என்பவற்றுள் பன்னாட்டு அமைப்புக்களில் பங்கு கொள்ளும் இந்தியப் பிரதிநிதிகட்கு வழங்கப்படும் ஆவணங்கள்.

ராஜ்ய அரசாங்கங்கள்

ராஜ்யத்தின் பெயர்.	விதி 345.	விதி 346.	விதி 348.
(1)	(2)	(3)	(4)
ஆந்திரா	இல்லை	இல்லை	இல்லை.
அஸ்ஸாம்	இல்லை	இல்லை	இல்லை.
பீஹார்	1. 1950-ம் வருஷம் பீஹார் ஆட்சி மொழிச் சட்டப்படி ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஏற்பாடுகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளன. 2. 1955-ம் வருஷம் பீஹார் சட்ட மொழிச் சட்டம் சட்ட மன்றத்தில் கொண்டு வரப்படும் சட்ட மூலங்களும், சட்டங்களும் கவர்னரால் பிரகடனம் செய்யப்படும் உத்திரவுகளும், ஆணைகளும், ஒழுங்கு முறைகளும், ராஜாங்கம் வெளியிடும் சட்டங்களும் ஹிந்தியில் இருக்கவேண்டும். இந்த ஏற்பாடு இன்னும் நிறைவேற்றப்படவில்லை.	மத்திய பாரத், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றுடன் ஹிந்தி மூலம் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	இல்லை.
பம்பாய்	இல்லை	இல்லை	இல்லை.
மத்தியப் பிரதேசம்	1. (1950-ம் வருஷம் மத்தியப் பிரதேச ஆட்சி மொழிச் சட்டப்படி ஹிந்தியும், மராத்தியும் ஆட்சி மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இத்திட்டம் ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளது.	உத்திரப் பிரதேசம்; பீஹார், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தானம், போபால், விந்தியப் பிரதேசம்	இல்லை.

(1)	(2)	(3)	(4)
	2. அதே சட்டம் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்படும் எல்லாச் சட்டங்களும், உத்திரவுகளும் கவர்னரது ஆணைகளும், ஒழுங்கு முறைகளும், துணை விதிகளும் ராஜ்ய அரசாங்கம் வெளியிடும் பொழுது ஹிந்தியிலும் மராத்தியிலும் வெளியிடலாமென்று சொல்கிறது. என்றாலும் இதுவரை இச்சட்டம் அமலுக்கு வரவில்லை.	ஆகியவற்றுடன் ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	
சென்னை	இல்லை	இல்லை	இல்லை.
ஒரிஸா	1. 1954-ம் வருஷம் ஒரிஸா ஆட்சி மொழிச் சட்டப்படி ஒரிய மொழி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. என்றாலும் இதுவரை இது அமலுக்கு வரவில்லை. 2. சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டங்கள், சட்ட மூலங்கள், கவர்னரது ஆணைகள், ராஜ்ய அரசாங்கம் வெளியிடும் உத்திரவுகள், ஒழுங்கு முறைகள் துணை விதிகள் ஆகியவை ஒரிய மொழியில் இருக்கலாமென்று இதே சட்டம் இடந்தருகிறது என்றாலும் இது இன்னும் அமலுக்கு வரவில்லை.	இல்லை	இல்லை.
பஞ்சாப்	இல்லை	இல்லை	இல்லை.
உத்திரப் பிரதேசம்	1. 1951-ம் வருஷம் உத்திரப் பிரதேச ஆட்சி மொழிச் சட்டப்படி ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது அமலாக்கப்பட்டுள்ளது. 2. 1950-ம் வருஷம் உத்திரப் பிரதேச மொழி (சட்ட மூலங்களும், சட்டங்களும்) சட்டப்படி சட்ட மன்றத்தில் கொண்டு வரப்படும் எல்லாச் சட்டங்களும், சட்ட மூலங்களும் கவர்னர் நிறைவேற்றும் ஆணைகளும், ராஜ்ய அரசாங்கம் வெளியிடும் உத்திரவுகளும், ஒழுங்கு முறைகளும், துணை விதிகளும் ஆகியவை ஹிந்தியில் இருக்கலாம். இப்பகுதி நிறைவேற்றப் பட்டுள்ளது.	பீஹார், மத்தியப் பிரதேசம், மத்திய பாரத் ஆகியவற்றுடன் ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	இல்லை.
மேற்கு வங்காளம்	இல்லை	இல்லை	இல்லை.
ஹைதராபாத்	இல்லை	இல்லை	உயர்நீதி மன்ற நடவடிக்கையில் உருதுவைப் பயன்படுத்த ராஜப் பிரமுகர் ஆணையிட்டுள்ளார்.

(1)	(2)	(3)	(4)
ஜம்மு-காஷ்மீர்	இல்லை	இல்லை	இல்லை.
மத்திய பாரத்	1. 1950-ம் வருஷம் மத்திய பாரதம் ஆட்சி மொழிச் சட்டப்படி ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பகுதி அமலாக்கப்பட்டுள்ளது.	மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீஹார், ராஜஸ்தானம், ஆஜ்மீர் ஆகியவற்றுடன் ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	உயர்நீதி மன்ற நடவடிக்கைகளில் ஹிந்தியைக் கைக்கொள்ள ராஜப் பிரமுகர் ஆணையிட்டுள்ளார்.
	2. அதே சட்டப்படி சட்ட மன்றத்தில் கொண்டு வரப்படும் எல்லாச் சட்டங்களும், சட்ட மூலங்களும், ராஜப் பிரமுகர் நிறைவேற்றும் ஆணைகளும், ராஜ்ய அரசாங்கம் வெளியிடும் உத்திரவுகளும், ஒழுங்கு முறைகளும், துணை விதிகளும் ஆகியவை ஹிந்தியில் இருக்கலாம். இப்பகுதியும் நிறைவேற்றப்பட்டுள்ளது.		
மைசூர்	இல்லை	இல்லை	இல்லை.
பெப்சு	இல்லை	இல்லை	உயர்நீதி மன்ற நடவடிக்கைகளில் ஹிந்தியையும், பஞ்சாபியையும் வழங்கலாமென ராஜப் பிரமுகர் ஆணையிட்டுள்ளார்.
ராஜஸ்தானம்	1. 1952-ம் வருஷம் ராஜஸ்தான ஆட்சி மொழிச் சட்டப்படி ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதி அமலாக்கப்பட்டுள்ளது.	ஆஜ்மீர், மத்தியப் பிரதேசம், மத்திய பாரதம் ஆகியவற்றுடன் ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	உயர்நீதி மன்ற நடவடிக்கைகளில் ஹிந்தியைப் பயன்படுத்த ராஜப் பிரமுகர் ஆணையிட்டுள்ளார்.
	2. அதே சட்டப்படி சட்ட மன்றத்தில் கொண்டுவரப்படும் எல்லாச் சட்டங்களும், சட்ட மூலங்களும், ராஜப் பிரமுகர் நிறைவேற்றும் ஆணைகளும், ராஜ்ய அரசாங்கம் வெளியிடும் உத்திரவுகளும், ஒழுங்கு முறைகளும், துணைவிதிகளும், ஹிந்தியில் இருக்கலாம். இப்பகுதி அமலாக்கப்பட்டுள்ளது.		
சௌராஷ்டிரா	1950-ம் வருஷம் சௌராஷ்டிரா ஆட்சி மொழிச் சட்டப்படி குஜராத்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதி அமலாக்கப்பட்டுள்ளது.	இல்லை	இல்லை.
திருவாங்கூர்-கொச்சின்	இல்லை	இல்லை	உயர்நீதி மன்ற நடவடிக்கைகளில் மலையாளத்தை வழங்கலாமென ராஜப் பிரமுகர் ஆணையிட்டுள்ளார்.

(1)	(2)	(3)	(4)
ஆஜ்மீர்	1952-ம் வருஷம் ஆஜ்மீர் ஆட்சி மொழிச் சட்டப்படி ஹிந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப் பகுதி ஓரளவு அமலாக்கப்பட்டுள்ளது.	ராஜஸ்தானம், மத்திய பாரதம் ஆகியவற்றோடு ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	இல்லை.
போபால்	இல்லை	மத்தியப் பிரதேசத்துடன் ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	இல்லை.
கூர்க்	இல்லை	இல்லை	இல்லை.
டில்லி	இல்லை	இல்லை	இல்லை.
ஹிமாசலப் பிரதேசம்	1952-ம் வருஷம் ஹிமாசலப் பிரதேச மொழி (சட்ட மூலங்களும், சட்டங்களும்) சட்டப்படி சட்ட மன்றத்தில் கொண்டு வரப்படும் சட்டங்களும், சட்ட மூலங்களும், ஹிந்தியில் இருக்கலாம். இப்பகுதி அமலாக்கப்பட்டுள்ளது.	இல்லை	இல்லை.
கட்ச்	இல்லை	இல்லை	இல்லை.
மணிப்பூர்	இல்லை	இல்லை	இல்லை.
திரிபுரா	இல்லை	இல்லை	இல்லை.
விந்தியப் பிரதேசம்	இல்லை	மத்தியப் பிரதேச அரசாங்கத்துடன் ஹிந்தியில் தொடர்பு கொள்ள ஒப்புதல் நடைபெற்றுள்ளது.	இல்லை.
அந்தமான்-நிகோபார் தீவுகள்.	இல்லை	இல்லை	இல்லை.

பிற்சேர்க்கை 7·

(கோரிக்கை : பகுதி 10. பாரா 3.)

உயர் நீதி மன்றங்கள், நீதிமுறை ஆணையர் மன்றங்கள், கீழ் நிலை நீதி மன்றங்கள் ஆகியவற்றில் வழங்கும் மொழிகளைக்காட்டும் அட்டவணை.[1]

எண்.	ராஜ்யத்தின் பெயர்.	உயர் நீதி மன்றங்களிலும், நீதி முறை ஆணையர் மன்றங்களிலும் பயன்படும் மொழி.	கீழ் நிலை நீதி மன்றங்களில் பயன்படும் மொழி.
(1	(2)	(3)	(4)
		'எ' பிரிவு ராஜ்யங்கள்.	
1	ஆந்திரா	ஆங்கிலம்	நீதி மன்ற மொழி தெலுங்கு. நடைமுறையில் தெலுங்கும் ஆங்கிலமும் பயன்படுகின்றன. தீர்ப்புக்கள், கட்டளைகள், ஆணைகள் ஆங்கிலத்தில் உள்ளன.
2	அஸ்ஸாம் ..	ஷ	எல்லாக் காரியங்களுக்கும் நீதி மன்ற மொழி ஆங்கிலமே. காம்ரூப், நௌகாங், சிப்சாஹர், லக்கிம்பூர் ஆகிய ஜில்லாக்களில் நடைமுறையில் அஸ்ஸாமிய மொழியும், காசர் ஜில்லாவில் வங்காளி மொழியும், கோல்பாரா ஜில்லாவில் இரண்டுமே வழங்குகின்றன.
3	பீஹார்	ஷ	நீதி மன்ற மொழி ஹிந்தி. சாதர் "எ" பிரிவிலுள்ள மான்பம், சாதர், பகூர், ராஜ்மஹால் பகுதிகளிலும் சாந்தல், பர்காணச் ஜில்லாவிலுள்ள ஜமத்ரா பிரிவிலும், வங்காளி இரண்டாவது நீதி மன்ற மொழியாக உள்ளது. பிராந்திய மொழிகளிலேயே நடைமுறைகள் உள்ளன. தீர்ப்புகள், ஆணைகள் முதலியவை ஆங்கிலத்தில் உள்ளன. உத்தரவுகள் ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் உண்டு.
4	பம்பாய்	ஷ	நடைமுறைகள் பிராந்திய மொழிகளில் உள்ளன. அதாவது மராத்தி, குஜராத்தி, கன்னடம் ஆகியவற்றிலும், பம்பாய் நகரத்தில் ஆங்கிலத்திலும் உள்ளன. தீர்ப்புகளும், உத்திரவுகளும் ஆங்கிலத்தில் உள்ளன. ஆணைகள் பிராந்திய மொழிகளிலும், பம்பாய் நகரத்தில் ஆங்கிலத்திலும் உள்ளன.
5	மத்தியப் பிரதேசம்.	ஷ	நீதி மன்ற மொழி ஹிந்தியும், மராத்தியும். தீர்ப்புகள், ஆணைகள், உத்திரவுகள் பிறப்பிக்கப் பெரும்பாலும் ஆங்கிலம் பயன்படுகிறது. குற்றப் பத்திரிகை வாசிக்க, ஜூரிகளுக்கு எடுத்துச் சொல்ல, மருத்துவர் சாட்சி ஆகியவற்றிற்கு ஆங்கிலம் பயன்படுகிறது.
6	சென்னை	ஷ	நீதி மன்ற மொழிகள் பிராந்திய மொழிகளே. அதாவது தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியவைகள். நடைமுறையில் ஆங்கிலத்தோடு பிராந்திய மொழிகளும் பயன்படுகின்றன. தீர்ப்புகள், ஆணைகள், உத்திரவுகள் ஆங்கிலத்திலேயே வழங்கப்படுகின்றன.

[1] நாட்டிலுள்ள பல்வேறு உயர் நீதி மன்றங்களும், நீதி முறை ஆணையாளர் மன்றங்களும் தந்த செய்திகளிலிருந்து இது தயாரிக்கப்பட்டுள்ளது.

(1)	(2)	(3)	(4)
7	ஒரிஸா	ஆங்கிலம்	நடைமுறையில் ஒரிய மொழியோடு ஆங்கிலமும் வழங்கப்படுகிறது.
8	பஞ்சாப்	ஷை	நீதி மன்ற மொழி உருது. நடைமுறையில் உருது வோடு ஆங்கிலமும் பயன்படுகிறது. தீர்ப்புகளும் உத்திரவுகளும் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே உள்ளன. ஆணைகள் அநேகமாக உருதுவில் உள்ளன.
9	உத்திரப் பிரதேசம்.	ஷை	நீதி மன்ற மொழி ஹிந்தி. நடைமுறையும் அதே மொழியில்தான். தீர்ப்புகளும், உத்திரவுகளும் ஆங்கிலத்தில் உள்ளன. ஆணைகள் ஹிந்தியில் உள்ளன.
10	மேற்கு வங்காளம்.	ஷை	ஓரளவு ஆங்கிலமும் அதிகப்படியாக வங்காளியும் நடைமுறையில் வழங்கப்படுகின்றன. தீர்ப்புகளும், உத்திரவுகளும் ஆங்கிலத்தில் உள்ளன. ஆணைகள் ஆங்கிலத்தோடு வங்காளியிலும் உள்ளன.

'பி' பிரிவு ராஜ்யங்கள்.

(1)	(2)	(3)	(4)
11	ஹைதராபாத் ..	தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவை ஆங்கிலத்தில். மற்றவை உருது.	நீதி மன்ற மொழிகள் பிராந்திய மொழிகளே. அதாவது தெலுங்கு, மராத்தி, கன்னடம், உருது ஆகிய மொழிகள். நடைமுறைகள் ஆங்கிலத்திலும், பிராந்திய மொழிகளிலும். தீர்ப்புக்களும், உத்தரவுகளும் ஆங்கிலத்தில்.
12	ஜம்மு-காஷ்மீர் ..	ஆங்கிலம்	நடைமுறை உருதுவிலோ அன்றி ஆங்கிலத்திலோ, நடைபெறுகிறது.
13	மத்திய பாரதம் ..	தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவை ஆங்கிலத்தில், மற்றவை ஹிந்தி.	நீதி மன்ற மொழி ஹிந்தி. நடைமுறையும் அதே மொழியில்தான். மாவட்ட நீதி மன்றங்களிலும், குற்ற இயல் நீதி மன்றங்களிலும், தூக்கு தண்டனை, அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப் படுகின்ற வழக்குகளும், ரூ. 20,000-க்கு மேற்பட்ட மதிப்புடைய வழக்குகளும், சட்டத்தின் பொருள் விளக்கத்தை அடிப்படையில் கொண்டு நடைபெறுகின்ற வழக்குகளும், மிக உயர் நீதி மன்றத்திற்கு செல்லும் ஆதலின் அவை ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன.
14	மைசூர்	ஆங்கிலம்	நீதி மன்ற மொழி ஆங்கிலம். நடைமுறையில் ஆங்கிலமும், கன்னட மொழியும் பயன்படுகின்றன. தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவை ஆங்கிலத்தில் உள்ளன.
15	பெப்ஸு	தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆங்கிலத்தில் உள்ளன. மற்றவை ஹிந்தியும் பஞ்சாபியும்.	நீதி மன்ற மொழி பிராந்தியமொழிகளாக உள்ள ஹிந்தியும் பஞ்சாபியுமாகும். நடைமுறை பிராந்திய மொழிகளிலேயே நடைபெறுகின்றன. தீர்ப்புக்கள், உத்தரவுகள், ஆணைகள் ஆகியவை பெரும்பாலும் ஆங்கிலத்தில்.
16	ராஜஸ்தானம் ..	தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆங்கிலத்தில் உள்ளன. மற்றவை ஹிந்தியில்.	நீதி மன்ற மொழி ஹிந்தி. நடைமுறை அதே மொழியில்தான். மாவட்ட, குற்ற இயல் நீதிபதிகள் சிவில், துணை நீதிபதிகள் இவர்களுடைய தீர்ப்புக்கள், ஆணைகள், உத்திரவுகள் ஆங்கிலத்தில் உள்ளன. ஆணைகள், பெரும்பாலும் ஹிந்தியில் உள்ளன.
[illegible]	சௌராஷ்ட்ரா ..	ஆங்கிலம்	நடைமுறை பெரும்பாலும் குஜராத்தியே. மாவட்ட, குற்ற இயல் நீதிபதிகள் மன்றங்களிலும், துணை, உதவி குற்ற இயல் மன்றங்களிலும் ஆங்கிலம் பயன்படுகிறது. அல்லாமல் ஆணைகள், உத்தரவுகள் முதலியவை பெரும்பாலும் குஜராத்தியிலேயே உள்ளன.

(1)	(2)	(3)	(4)
18	திருவாங்கூர்-கொச்சி.	தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆங்கிலத்தில் உள்ளன. மற்றவை மலையாளத்தில்.	நீதி மன்ற மொழிகள் பிராந்திய மொழிகளாக உள்ள தமிழும், மலையாளமுமே. நடைமுறையிலும், பிராந்திய மொழிகளே பயன்படுகின்றன. தீர்ப்புக்களும், உத்தரவுகளும் ஆங்கிலத்தில் உள்ளன. ஆணைகள் பெரும்பாலும் மலையாளத்திலே உள்ளன.

‘சி’ பிரிவு ராஜ்யங்கள்.

19	ஆஜ்மீர்	ஆங்கிலம்	நடைமுறை ஹிந்தியில். தீர்ப்புக்கள் ஆணைகள், உத்தரவுகள் ஆங்கிலத்தில் உள்ளன.
20	போபால்	ஷ	நடைமுறையில் ஆங்கிலமும், ஹிந்தியும் வழங்குகின்றன. தீர்ப்புக்கள், ஆணைகள், உத்திரவுகள், ஆகியவை ஆங்கிலத்தில் உள்ளன. கௌரவ மாஜிஸ்ட்ரேட்கள் சில சமயங்களில் உருதுவைப் பயன்படுத்துகிறார்கள்.
21	கூர்க்	ஷ	நடைமுறையில் ஆங்கிலமும் கன்னடமும் பயன்படுகின்றன.
22	டில்லி	ஷ	நீதி மன்ற மொழி உருது. ஹிந்தி இரண்டாவது மொழி. நடைமுறையில் ஆங்கிலம், உருது, ஹிந்தி ஆகியவை பயன்படுகின்றன. தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவை ஆங்கிலத்தில் உள்ளன.
23	ஹிமாச்சல் பிர-தேசம்.	ஷ	நீதி மன்ற மொழி ஆங்கிலம். நடைமுறை ஹிந்தியில் நடைபெறுகிறது. தீர்ப்புகள், ஆணைகள் உத்தரவுகள் ஆகியவை பெரும்பாலும் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. சில குற்ற இயல் நீதிபதிகள் மட்டும் ஹிந்தியில் தம் தீர்ப்புகளை எழுதுகின்றார்கள்.
24	கட்ச்	தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் மட்டும் ஆங்கிலத்தில், மற்றவை குஜராத்தியில்.	நடைமுறை குஜராத்தி மொழியில். தீர்ப்புக்கள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவைகளும் குஜராத்தி மொழியிலேயே நடை பெறுகின்றன. மாவட்ட நீதிபதிகளும் மாவட்டக் குற்ற இயல் நீதிபதிகளும் தம் தீர்ப்புகளை ஆங்கிலத்தில் சொல்கின்றார்கள்.
25	மணிப்பூர் ..	ஆங்கிலமும் மணிப்புரியும். தீர்ப்புக்கள் முதலியவற்றிற்கு ஆங்கிலம்.	நடைமுறையில் பெரும்பாலும் மணிப்புரியே பயன்படுகிறது. தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவை ஆங்கிலத்தில் உள்ளன.
26	திருப்புரா ..	ஆங்கிலம்	மாவட்ட நீதிபதிகள், மாவட்டக் குற்ற இயல் நீதிபதிகள், கீழ் நிலை நீதிபதிகள், துணை நீதிபதிகள் ஆகியவர்களுடைய மன்றங்களில் ஆங்கிலமே பயன்படுகிறது. பிராந்திய மொழியாகிய வங்காளி எல்லா சிரியல் (சிவில்) மன்றங்களிலும் வழங்குகின்றது. தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் முதலியவற்றை எழுத வங்காளியும், ஆங்கிலமும் பயன்படுகின்றன. துணைக் குற்ற இயல் நீதி மன்றங்களிலும், குற்ற இயல் நீதி மன்றங்களிலும் ஆங்கிலமும் வங்காளியும் பயன்படுத்தப் படுகின்றன. மாவட்டக் குற்ற இயல் நீதி மன்றம், மாவட்டக் குற்ற இயல் துணை நீதி மன்றம் ஆகிய இரண்டிலும் ஆங்கிலம் மட்டுமே பயன்படுகிறது.

(1)	(2)	(3)	(4)
27	விந்தியப் பிரதேசம்.	தீர்ப்பு முதலியவை ஆங்கிலத்தில் மற்றவை ஹிந்தியில்.	நீதி மன்ற மொழி ஹிந்தி. நடைமுறையும் ஹிந்தியில்தான். தீர்ப்புகள், ஆணைகள்; உத்தரவுகள் ஆகியவை ஹிந்தியிலேயே தரப்படுகின்றன.

' டி ' பிரிவு ராஜ்யங்கள்.

(1)	(2)	(3)	(4)
28	அந்தமான் நிக்கோபார் தீவுகள்.	....	நீதி மன்ற மொழி ஆங்கிலம்தான். ஆனால் கிராமதாசில் நிலைமைகளில் சில காரியங்களுக்கு உருது மொழி பயன்படுகிறது.

குறிப்பு.—நீதி மன்ற ஆணையர் மன்றங்கள் " சி " பிரிவு ராஜ்யங்களாகிய ஆஜ்மீர், போபால், ஹிமாசலப் பிரதேஷ், கட்ச், மணிப்பூர், திருப்புரா, விந்தியப் பிரதேசம் ஆகியவைகளில் மட்டுமே உள்ளன. " டி " பிரிவு பகுதிகளில் இத்தகைய நீதி மன்றங்கள் இல்லை.

பிற்சேர்க்கை 8.

சட்டமன்றங்களில் வழங்கும் மொழிகள் பற்றிய அட்டவணை.

(கோரிக்கை : பகுதி 9, பாரா 2.)

எண்.	சட்ட மன்றங்களின் பெயர்.	அரசியல் அமைப்பு 345-வது விதியின்படி ஏதாவது ஆட்சி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா ?	1954-ல் பல்வேறு மொழிகளில் பேசப்பட்ட பல்வேறு பேச்சுக்களின் சத விகிதம். ஆங்கிலம்.	ஹிந்தி.	மற்ற மொழிகள்.	
(1)	(2)	(3)	(4அ)	(4ஆ)	(4இ)	
1	மக்கள் சபை	அரசியல் அமைப்பின் 348-வது விதிக்கு உள்ளடங்க மக்கள் சபை நிகழ்ச்சிகள் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் நடைபெறுகின்றன. இவை இரண்டிலும் பேச முடியாத அங்கத்தினர் தாய் மொழியில் பேசத் தலைவர் ஆணையிடலாம்.	83·2	16·2	உருது வங்காளி தெலுங்கு தமிழ்	0·4 0·1 0·1 0·1
2	ராஜ்ய சபை	ஷை	85·0	13·1	உருது மலையாளம்	1·84 0·06
1	ஆந்திரா— சட்ட மன்றம்..	345-வது விதியின்படி சட்ட மன்றத்தில் எதையும் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவில்லை.	10·0	இல்லை.	தெலுங்கு	90·0
2	அஸ்ஸாம்— சட்ட மன்றம்	ஷை	89·67	0·18	அஸ்ஸாமி வங்காளி	9·97 0·18
3	பீஹார்— (அ) சட்ட மன்றம்	1955 பீஹார் மொழிச் சட்டப்படி தேவநாகரியில் எழுதப்படும் ஹிந்தி ராஜ்யத்தின் ஆட்சி மொழியாகவும் சட்ட மன்றத்தில் விவாதத்துக்கு உரிய மொழியாகவும் சட்ட மூலம் கொண்டு வரப்படுகின்ற மொழியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	5·0	95·0	இல்லை.	..

	(ஆ) சட்டக் கௌன்சில் ..	ஷை	27·67	72·33	இல்லை.	
4	பம்பாய்— ..					
	(அ) சட்ட மன்றம்	345-வது விதியின்படி சட்ட மன்றத்துக்கு ஆட்சி மொழியாக எதனையும் ஏற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யவில்லை.	50·4	3·2	மராத்தி குஜராத்தி கன்னடம்	40·9 4·5 1·0
	(ஆ) சட்டக் கௌன்சில் ..	ஷை	89·6	1·7	மராத்தி குஜராத்தி	7·3 1·4
5	மத்தியப் பிரதேசம்—					
	விதான் சபா	1950 மத்தியப் பிரதேச ஆட்சி மொழிச் சட்டப்படி தேவநாகரியில் எழுதப்பட்ட ஹிந்தியும், பால்போத் எழுத்தில் எழுதப்பட்ட மராத்தியும் விதான் சபாவில் வழங்கும் மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் சட்ட மூலங்களும் சட்டங்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. மேலும் பொறுக்குக் குழுக்கள் நிதிக் குழுக்கள் சட்டக் குழுக்கள் ஆகியவைகளின் அறிக்கைகள் ஆங்கிலத்திலேயே உள்ளன.	..	..	..	
6	சென்னை—					
	(அ) சட்ட மன்றம்	345-வது விதியின்படி சட்ட மன்ற மொழியாக எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.	52·4	இல்லை.	தமிழ் மலையாளம்	42·2 5·4
	(ஆ) சட்டக் கௌன்சில் ..	ஷை	82·2	இல்லை.	தமிழ் மலையாளம்	17·6 0·2
7	ஒரிஸா—					
	சட்ட மன்றம்	1954 ஒரிஸா ஆட்சி மொழிச் சட்டப்படி ஒரியா மொழி விவாதத்திற்கும் சட்ட மூலங்களை நுழைப்பதற்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	5·0	இல்லை.	ஒரியா	95·0
8	பஞ்சாப்—					
	(அ) விதான் சபா	345-வது விதியின்படி சட்ட மன்ற மொழியாக எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.	0·27	56·7	பஞ்சாபி	43·03
	(ஆ) சட்டக் கௌன்சில் ..	ஷை	34·6	35·6	ஷை	29·8

எண்.	சட்ட மன்றங்களின் பெயர்.	அரசியல் அமைப்பு 345-வது விதியின்படி ஏதாவது ஆட்சி மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா ?	1954-ல் பல்வேறு மொழிகளில் பேசப்பட்ட பல்வேறு பேச்சுக்களின் சத விகிதம். ஆங்கிலம்.	ஹிந்தி.	மற்ற மொழிகள்.	
(1)	(2)	(3)	(4-அ)	(4-ஆ)	(4-இ)	
9	உத்தரப் பிரதேசம்— (அ) சட்ட மன்றம்	1950 உத்தரப் பிரதேச மொழி (சட்ட மூலங்கள், சட்டங்கள்) சட்டப்படி தேவநாகரியில் எழுதப்படும் ஹிந்தியை சட்ட மன்றத்தில் விவாதத்திற்கும் நிறைவேற்றப்படும் சட்டங்களுக்கும் ஏற்ற மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	இல்லை.	100·0	இல்லை.	..
	(ஆ) சட்டக் கௌன்சில்	ஷை	3·0	97·0	இல்லை.	..
10	மேற்கு வங்காளம்— (அ) சட்ட மன்றம்	345-வது விதியின்படி சட்ட மன்ற மொழியாக எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.	50·4	0·5	வங்காளி	49·1
	(ஆ) சட்டக் கௌன்சில்	ஷை	69·3	இல்லை.	ஷை	30·0
11	ஹைதராபாத்— சட்ட மன்றம்	345-வது விதியின்படி சட்ட மன்ற மொழியாக எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.	5·0	21·0	உருது தெலுங்கு மராத்தி கன்னடம்	63·0 8·0 2·0 1·0
12	ஜம்மு காஷ்மீர்— சட்ட மன்றம்	பழைய அரசியல் அமைப்பின்படி ராஜ்ய அரசியல் சபை உருதுவை ஆட்சி மொழியாக வழங்குகிறது.	6·0	0·5	உருது பர்ஷியன் லடாகி	94·0 0·4 0·4
13	மத்திய பாரதம்— விதான் சபா	1950 மத்திய பாரத ஆட்சி மொழிச் சட்டப்படி தேவநாகரியில் எழுதப்படும் ஹிந்தி விதான் சபாவில் விவாதத்திற்கும் சட்டங்கள் நிறைவேற்றுவதற்கும் அதிகார பூர்வமான மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	இல்லை.	100·0	இல்லை.	..
14	மைசூர்— (அ) சட்ட மன்றம்	345-வது விதியின்படி எந்த ஒன்றையும் ஆட்சி மொழியாகச் செய்ய யாதொரு ஏற்பாடும் நடைபெறவில்லை.	45·0	இல்லை.	கன்னடம்	55·0
	(ஆ) சட்டக் கௌன்சில்	ஷை	35·0	இல்லை.	கன்னடம்	65·0

15	பெப்ஸு— சட்ட மன்றம்	345-வது விதியின்படி எந்த ஒன்றையும் ஆட்சி மொழியாகச் செய்ய யாதொரு ஏற்பாடும் நடைபெறவில்லை.	2·7	33·5	பஞ்சாபி	63·8
16	ராஜஸ்தான்— சட்ட மன்றம்	1952 ராஜஸ்தான் ஆட்சி மொழிச் சட்டப்படி தேவநாகரியில் எழுதப்பட்ட ஹிந்தி, சட்ட மன்றத்தில் விவாதத்திற்கும் சட்டங்கள் நிறைவேற்றுவதற்கும் அதிகார பூர்வமான மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.	1·3	98·2	ராஜஸ்தானி	0·5
17	சௌராஷ்ட்ரா— சட்ட மன்றம்	1950 சௌராஷ்ட்ர ஆட்சி மொழிச் சட்டப்படி குஜராத்தி மொழி சட்ட மன்றத்தின் விவாதத்திற்கும் சட்டங்கள் நிறைவேற்றுவதற்கும் அதிகார பூர்வமான மொழியாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.	இல்லை.	இல்லை.	குஜராத்தி	100·0
18	திருவாங்கூர்-கொச்சி— சட்ட மன்றம்	345-வது விதியின்படி எந்த ஒன்றையும் ஆட்சி மொழியாகச் செய்ய யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை.	19·0	இல்லை.	மலையாளம் தமிழ்	78·0 3·0

பிற்சேர்க்கை 9

நாட்டில் இன்றுள்ள கல்விமுறையில் ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் என்பவற்றின் இடம்பற்றிய மதிப்பீடு.

நாட்டில் நிலவும் கல்வி முறையில் உள்ள பல்வேறு நிலைகளையும் குறிப்பிடுகின்ற பெயர்களில் ஒருமைப்பாடு இல்லை. இன்றுள்ள கல்வி முறையில் ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் ஆகியவற்றின் இடம் பற்றி ஆராயப் புகுமுன்னர் இப்பல்வேறு நிலைகளையும் குறுப்பிடுவதற்குரிய பெயர்களை வரையறுத்துக்கொள்ளவேண்டும்.

முதலாவது ஆறு வயத்துக்குட்பட்ட குழந்தைகள் கற்கும் வளர்ப்பிடப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இந்த வகுப்புக்கள் குழந்தைகளுக்குக் குறிப்பிட்ட சிலவற்றைக் கற்பிக்கவேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ளவில்லை. குழந்தைகளுக்குச் சில நற் பழக்கங்களைப் புகட்டி விளையாட்டின் மூலமாகச் சிலவற்றைக் கற்றுக்கொள்ளச் செய்வதே இக்கல்வியின் நோக்கம். வளர்ப்பிடப் பள்ளிக்கூடங்கள் நாட்டில் மிகக் குறைவாகவே உள்ளன. இன்றுவரையிலும்கூட நாட்டின் பொதுக் கல்வி முறையில் இவ் வகைப் பள்ளிக்கூடங்கள் தகுந்த உறுப்பாக அமைந்துள்ளன என்று சொல்வதற்கில்லை.

பொதுவாகக் கூறுமிடத்து குழந்தைகள் கல்வி என்பது ஆரம்பநிலைப் பள்ளிகளில், குழந்தைகள் ஆறு வயதை அடைந்தபொழுது, தொடங்குகிறது. ஆரம்பநிலைக் கல்வியின் இடைநிலைக் காலம் ராஜ்யத்துக்கு ராஜ்யம் மாறுபடுகிறது. பொதுவாகக் கூறுமிடத்து குழந்தையின் ஆரம்பக் கல்வியின் முதல் நான்கு வருஷங்கள் ஆரம்பக் கல்விக் காலம் என்று சொல்லப்படுகிறது. ஆறு முதல் பத்து அல்லது பதினோறு வயது வரை உள்ள குழந்தைகளின் தொகுதியை இப்பிரிவினைக் குறிக்கின்றது. சில ராஜ்யங்களில் இந்த வகுப்புக்களுக்கு "ஆதாரக் கல்வி" என்ற கல்வி முறை புகுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப இவ்வகுப்புக்களை இளைய ஆதாரக் கல்வி வகுப்புக்கள் என்று குறிக்கின்றார்கள். இந்த வகுப்புக்களை "ஆரம்ப வகுப்புக்கள்" என்றும் கல்வியின் இப்பகுதியை "ஆரம்பக் கல்வி நிலை" என்றும் குறிக்கலாம்.

நம்முடைய குழந்தைகளின் கல்வியில் அடுத்த நான்கு ஆண்டுகளும் பொதுவாக "இடை நிலைக் கல்வி" என்று குறிக்கப்படுகின்றது. பொதுவாகக் கூறுமிடத்து பத்து முதல் பதினான்கு அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குட்பட்ட வயதுத் தொகுதியை குறிக்கும் இது. இந்த இடைநிலை வகுப்புக்களைச் சில சமயங்களில் கீழ்நிலை இடைநிலை வகுப்பு என்றும் மேல்நிலை இடைநிலை வகுப்பு என்றும் கூறுகிறார்கள். கீழ்நிலை இடைநிலை வகுப்புக்கள் ஐந்து ஆறும் வகுப்புக்களைக் கொண்டது மேல்நிலை இடைநிலை வகுப்பு ஏழு எட்டு வகுப்புக்களைக் கொண்டது. இடைநிலை வகுப்புக்களுக்கு ஆதாரக் கல்வி முறையை ஏற்றுக்கொண்ட ராஜ்யங்களில் இவை "முதிய ஆதாரக் கல்வி வகுப்புக்கள்" என்று சொல்லப்படுகின்றன. இவ்வகுப்புக்களை "இடைநிலை வகுப்புக்கள்" என்றும் கல்வித் துறையின் இப்பகுதியை "இடைநிலைக் கல்விப் பகுதி" என்றும் குறிப்பிடலாம்.

உண்மையைக் கூறுமிடத்து "ஆதாரக் கல்வி" என்பது போதனையில் ஒருவகைப் போதனையேயாகும். கல்வித் துறையில் எந்த நிலையையும் அது குறிக்கவில்லை. ஆனால் "ஆரம்பம்" என்பதும் "இடைநிலை" என்பதும் கல்வி முறையில் குறிப்பிட்ட இரண்டு நிலைகளைக் காட்டுவனவாகும். எனவே இங்கு இந்த இரண்டு சொற்களையும் நாம் எடுத்துப் பயன்படுத்துகிறோம்.

அடுத்த இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் பல்கலைக் கழக நுழைவுத் தேர்வு, நுழைவுத் தேர்வு, மெட்ரிக்குலேஷன், எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு உயர்தரப்பள்ளிகூடத் தேர்வு என்று பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்ற தேர்வுக்கு மாணவர்களைத் தயாரிக்கும் பரிட்சையாகும். முன்னர்ப் பல்கலைக் கழக நுழைவுக்குத் தகுதி பெறுகின்ற தேர்வாக இது இருந்து வந்தது, இதனால்தான் முதலில் குறிப்பிட்ட இரண்டு பெயர்களும் இத்தேர்வுக்கு வரலாயின. ஆனால் பிற்காலத்தில் சேட்லர் கழகம் என்று பலராலும் குறிக்கப்படும் கல்கத்தா பல்கலைக் கழகக் கழகம் 1917-ல் செய்த சிபாரிசுகளை ஒட்டிச் சில ராஜ்யங்கள் பல்கலைக் கழகத்திலிருந்து இரண்டு வகுப்புக்களை எடுத்துவிட்டமையால் இப்பெயர்கள் பொருத்தமற்றவையாக ஆகிவிட்டன. இப்பரிட்சைக்கு அதிகமாக இப்பொழுது வழங்கும் பெயர் "உயர்தரப் பள்ளிப் பரிட்சை" என்பதாகும். இத்தேர்வுக்குரிய வகுப்புக்களை "உயர்தரப் பள்ளி வகுப்புக்கள் என்றும் இக்கல்வியை "உயர்தரப் பள்ளி நிலை" என்றும் குறிப்பிடலாம். இப் பகுதியில் காணப்படுகின்ற வயதுத் தொகுதி பெரும்பாலும் பதினான்கு முதல் பதினாறு அல்லது பதினேழு வயதுத் தொகுப்புக்கள் ஆகும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளும் இடைநிலைத் தேர்வு என்று சொல்லப் படும் ஒரு தேர்வில் முடிந்துவிடுகின்றன. என்றாலும் இவ்வகுப்புக்களைக் குறிப்பிடும்பொழுது இடைநிலை வகுப்புக்கள் என்றும் உயர்தர இடைநிலை வகுப்புக்கள் என்றும், இவ்வகுப்புக்களை நடத்தும் கல்லூரிகளை இடைநிலைக் கல்லூரிகள் என்றும், அல்லது மிக உயர்தரப் பள்ளிக்கூடங்கள் என்றும் சொல்கிறோம். எனவே இவற்றை இங்கே "இடைநிலை வகுப்புக்கள்" என்றும் இக்கல்வி நிலையை "இடைநிலைக் கல்வி நிலை" என்றும் குறிப்பிட லாம். இவ்விரண்டு வகுப்புக்களிலு முள்ள வயதுத் தொகுதி பொது வாகக் கூறுமிடத்துப் பதினாறு முதல் பதினெட்டு அல்லது பத்தொன்பது வரை உள்ள மாணவர்களின் தொகுதியாகும்.

சமீபகாலத்தில் கல்வியைப் பற்றி ஆராய ஏற்படுத்தப்பட்ட குழுக்களும், கழகங்களும் இவ்விடைநிலை வகுப்பை மாற்றி இதில் இரண்டாவது ஆண்டைப் பல்கலைக் கழகங்கள் நடத்தும் பட்டக் கல்விப் பரிட்சைகளுக்குரிய இரண்டாண்டுகளோடு மூன்றாவது ஆண்டாகச் சேர்த்துவிடவேண்டும் என்றும், இதிலுள்ள முதல் ஆண்டை உயர்தரப் பள்ளிக்கூடங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், இடைநிலைப் பரீட்சையைப் போக்கிவிடவேண்டும் என்றும் சிபாரிசுகள் செய்துள்ளன. பெரும்பாலான ராஜ்யங்களும் பல்கலைக் கழகங்களும் இச்சிபாரிசுகளை இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. ஆதலால் இந்த இடைநிலை வகுப்புக்களும் தேர்வுகளும், கல்லூரிகளும் நாடு முழுவதிலும் இருந்துகொண்டு வருகின்றன.

இக்காலத்தில் இந்தியப் பல்கலைக் கழகங்கள் அனைத்திலும் முதலாவது பட்டத் தேர்வு என்று இருப்பது முன்னே கூறியபடியே இரண்டு ஆண்டுகள் படித்துப் பின்னர்த் தேர்வு எழுதுவதாகும். எல்லா இடங்களிலும் அதன் பெயர் கலை, விஞ்ஞானம், வேளாண்மை, வாணிகம் ஆகிய துறைகளில் தரப்படும் பேச்லர் பட்டமேயாகும். இவற்றில் கற்பவர்கள் ஏறத்தாழ பதினெட்டு முதல் இருபது அல்லது இருபத்தொன்று வயது முடிய உள்ளவர்களாவர். இவ்வகுப்புக்களை இங்கே "முதல்" அல்லது "பேச்லர்" "பேச்லர் பட்டப்படிப்பு" என்றும் இவ்கல்வி நிலையை "முதல்" அல்லது "பேச்லர் பட்ட படிப்பு நிலை" என்றும் குறிப்பிடுவோம்.

இவற்றை அல்லாமல் சட்டம், ஆசிரியப் பயிற்சி, மருத்துவம், பொறி யியல் ஆகியவற்றிலும் பேச்லர் பட்டப்படிப்பு உண்டு. ஆனால் அவற்றிற் குரிய கல்வி முறைகள் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. எனவே இவற்றை எப்பொழுதாவது குறிக்க நேரிட்டால் இவற்றை முழுப்பெயர் களாகவே, அதாவது ஆசிரியப் பயிற்சியில் பேச்லர் பட்டம் என்பது போலவே குறிப்போம்.

இவற்றில் இறுதியாகச் சொல்லப்பட்டவை இரண்டு வருஷ உயர்தரப் பட்டப் படிப்புக்கு அப்பாற்பட்ட கல்வி முறையையும் பெற்றுள்ளது. அதன் பெயர் மாஸ்டர்ஸ் பட்டம் என்பதாகும். இவற்றில் கற்பவர்கள் பொதுவாகக் கூறுமிடத்து இருபது முதல் இருபத்திரண்டு அல்லது இருபத்துமூன்று ஆண்டு நிரம்பியவர்களாவர். இவ்வகுப்புக்களைப் "பட்டப் படிப்புக்கு அப்பாலுள்ள படிப்பு" என்றும் இந்நிலையை "பட்டப் படிப்புக்கு அப்பாலுள்ள நிலை" என்றும் குறிப்போம்.

ஆசிரியப் பயிற்சித் துறை, சட்டம், மருத்துவம், பொறியியல் ஆகியவற்றிலும்கூட மாஸ்ட்டர் பட்டப் படிப்பு உண்டு. என்றாலும் இப்படிப்புகள் இவற்றிலுள்ள பேச்லர் படிப்பு நிலையைப் போலவே பலவகையான முறைகளைப் பின்பற்றி உள்ளது. எனவே தேவைப்பட்டு இவற்றைக் குறிப்பிடும் போதெல்லாம் ஆசிரியப் பயிற்சி அல்லது சட்டக் கல்வியில் மாஸ்ட்டர் பட்டம் என்றே குறிப்பிடுவோம்.

ஆரம்ப நிலை வகுப்புகள்

போதனு மொழி.

ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் ஹிந்தி தாய் மொழியாகவும் பிராந்திய மொழியாகவும் இருத்தலினால் ஆங்கிலோ-இந்தியன் பள்ளிக்கூடங்களைத் தவிர மற்றவற்றில் ஹிந்தியே போதனு மொழியாகவும் இருந்து வருகிறது. மத்தியப் பிரதேசம், பஞ்சாப், பெப்ஸு ஆகியவைபோன்ற இரு மொழி ராஜ்யங்களில் ஹிந்தி பேசும் மாணவர்கட்கு ஹிந்தி இடைநிலை மொழியாகவும், பிராந்திய மொழிபேசும் மாணவர்கட்கு அந்தப் பிராந்திய மொழிகளே இடை நிலை மொழிகளாகவும் உள்ளன.

பிற மொழி பேசும் பிராந்தியங்களிலுள்ள ராஜ்யங்களில் தாய்மொழி அல்லது பிராந்திய மொழியே பெரும்பாலும் போதனு மொழியாக இருந்து வருகிறது. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடங்களில் (ஹிந்திப் பேசும் பிராந்தியங்களில் உள்ளதுபோலவே) ஆங்கிலம் போதனு மொழியாக உள்ளது.

மேற்கு வங்காளம், பம்பாய், சௌராஷ்டிரா, சென்னை, ஹைதராபாத், அந்தமான் நிக்கோபார், ஆகிய பல ராஜ்யங்களில் ஹிந்தியைத் தாய் மொழியாக உள்ளவர்கட்கு ஹிந்தியை போதனு மொழியாகக் கொண்டு உள்ள பள்ளிக்கூடங்களும் சில உண்டு.

மொழிப் போதனை ஒரு பாடப் பகுதி—ஹிந்தி.

ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள ராஜ்யங்களில் ஆரம்பப் பள்ளிகளில் ஹிந்தியைத் தாய்மொழியாக உடைய மாணவர்கள் அனைவர்க்கும் ஹிந்தி மொழியும் ஒரு கட்டாயப் பாடமாகும். அதனை தாய்மொழியாக இல்லாத மாணவர்கட்கும்கூட மூன்றாவது வகுப்புக்குப் பிறகு அது கட்டாய பாடமாக, அதாவது ஆரம்பநிலையில் கடைசி வகுப்புத் தொடங்கி, இருந்து வருகிறது. இரட்டை மொழி பேசும் ராஜ்யமாகிய மத்தியப் பிரதேசத்தில் ஹிந்தி மூலம் கல்வி கற்கும் மாணவர்கட்கு மட்டுமே அது கட்டாய பாடமாகும். பிராந்திய மொழி மூலம் கற்கும் மாணவர்கட்கு அப்பிராந்திய மொழியே கட்டாய பாடமாகும். பாஞ்சாபிலும் பெப்ஸுவிலும் பஞ்சாபி மொழி பேசும் மாணவர்கள் ஹிந்தியையும் ஹிந்திப் பேசும் மாணவர்கள் பஞ்சாபியையும் கட்டாயமாகக் கற்கின்றார்கள்.

ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் ஹிந்தி மொழி மூலம் கற்பிக்கின்ற பள்ளிக்கூடங்களில் தொடக்கத்திலிருந்தே ஹிந்தி மொழி கட்டாய பாடமாகும். பிராந்திய மொழி மூலம் கற்பிக்கின்ற பள்ளிக்கூடங்களில் இந்நிலையில் அது கட்டாய பாடமாக வைக்கப்படவில்லை. ஆனால் அஸ்ஸாம்,

அந்தமான், நிக்கோபார் ஆகிய இடங்களில் 4-ம் வகுப்பு முதல் ஹிந்தி கட்டாயமாக உள்ளது. ஹைதராபாத்தில் ஹிந்தி பேசாத மாணவர்கட்கும் மூன்றும் வகுப்பு முதலே அது கட்டாய பாடம்.

ஆங்கிலம்.

ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் ஆங்கிலோ இந்தியப் பள்ளிக்கூடங்களைத் தவிர மற்றவற்றில் ஆங்கிலம் கட்டாய பாடமன்று.

ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில்கூட ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாகக் கற்பிக்கின்ற நிலை இதேதான். ஆனால் விச்வ பாரதியில் ஆரம்பப் பள்ளியில் கடைசி இரண்டு ஆண்டுகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. அஸ்ஸாமில் நான்காவது வகுப்பில் அது தொடங்கப்படுகிறது.

பிராந்திய மொழிகள்.

ஹிந்தி பேசாத பிராந்தியங்களில்கூட அந்த அந்தப் பிராந்திய மொழிகள் எல்லா ராஜ்யங்களிலும் கட்டாய பாடமாக இருந்து வருகின்றன. பஞ்சாபிலும் பெப்ஸூவிலும் ஆரம்பப் பள்ளியின் இறுதி நிலைகளில் பஞ்சாபி பேசும் மாணவர்கட்கு ஹிந்தியும், ஹிந்திபேசும் மாணவர்கட்குப் பஞ்சாபியும் கட்டாய பாடமாக உள்ளன.

ஹிந்தியோ, ஆங்கிலமோ அல்லது பிராந்திய மொழிகளோ (அப்பிராந்திய மொழிகள் அப்பிராயந்தியத்திற்கு உரியனவாக இருந்தாலொழிய) இந் நிலையில் நாட்டில் எந்தப் பகுதியிலும் விருப்ப பாடமாகக் கற்பிக்கப்படவில்லை. ஆனால் ஒரிஸாவில் மட்டும் ஆரம்பப் பள்ளிகளில் நாலாவது வகுப்பில் ஹிந்தி கற்பிக்கப்படுகின்றது.

இடைநிலைக் கல்விநிலை.

போதனு மொழி.

நாட்டிலுள்ள ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் ஹிந்தி பிராந்திய மொழியாக இருத்தலினுல் அதுவே போதனு மொழியாகவும் உள்ளது.

இரட்டை மொழி ராஜ்யங்களாக உள்ள மத்தியப் பிரதேசம், பஞ்சாப், பெப்ஸூ ஆகியவற்றிலும் ஹிந்தி பேசும் மாணவர்கட்கு அதுவே போதனு மொழியாக உள்ளது.

ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ள ராஜ்யங்களில் ஒருசில நீங்கலாக எல்லாவிடங்களிலும் அந்த அந்தப் பிராந்திய மொழிகளே போதனு மொழியாக உள்ளன. ஹிந்தியைத் தாய்மொழியாக உடைய மாணவர்கள் கற்கும் பள்ளிக்கூடங்களில் மட்டும் ஹிந்தி போதனு மொழியாகவும் இருந்துவருகிறது.

நாடு முழுவதிலுமுள்ள ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடங்களில் மட்டும் ஆங்கிலமே போதனு மொழியாக இருந்து வருகிறது.

மொழிப் போதனை ஒரு பாடப் பகுதி—ஹிந்தி.

ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள ராஜ்யங்களில் ஹிந்தி கட்டாய பாடமாகவும் போதிக்கப்படுகிறது. டில்லியில் மூன்றும் வகுப்பிலிருந்தே ஹிந்தி பேசாத மாணவர்கட்குக்கூட ஹிந்தி கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

இரட்டை மொழி ராஜ்யமாகிய மத்தியப் பிரதேசத்தில் ஹிந்தியைப் போதனு மொழியாக உடைய மாணவர்கட்கு ஹிந்தி கட்டாய பாடமாகும். மராத்தி மூலம் கற்கின்ற மாணவர்கட்கு அம்மொழியே கட்டாய பாடமாகும்.

ஆனால் பஞ்சாபிலும், பெப்ஸுவிலும் டில்லியைப் போலவே பஞ்சாபி மொழி பேசும் மாணவர்கள் ஹிந்தியையும், ஹிந்தி பேசும் மாணவர்கள் பஞ்சாபி யையும் கட்டாய பாடமாகக் கற்கின்றனர்.

பம்பாய், சௌராஷ்டிரா ராஜ்யங்களில் ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே ஹிந்தி மூலம் கற்கின்ற மாணவர்கட்கு ஹிந்தி கட்டாய பாடமாக உள்ளது. என்றாலும் ஹிந்தி மூலம் கற்காத மாணவர்கட்குக்கூட அது ஐந்தாவது வகுப்புத் தொடங்கிக் கட்டாய பாடமாகும்.

மேற்கு வங்காளத்தில் ஹிந்தியைத் தாய் மொழியாக உடையவர்கட்கு மட்டும் அது கட்டாய பாடமாகும். ஏனைய பிராந்திய மொழிகளைத் தாய் மொழியாக உடையவர்கட்கு அம்மொழிகளே கட்டாய பாடமாகும். திரு-வாங்கூர்–கொச்சியில் முதல் பாரம் தொடங்கி விரும்பினால் பிராந்திய மொழிகளையும் கட்டாயமாக ஹிந்தியையும் கற்கவேண்டும்.

ஹைதராபாத்தில் ஆரம்பக் கல்வி நிலையிலிருந்தே ஹிந்தி பேசும் மாணவர்கட்கு ஹிந்தி கட்டாய பாடமாகும். பிராந்திய மொழியைத் தாய் மொழியாக உடையவர்கட்கு ஆரம்பநிலையின் மூன்றாவது வகுப்பி லிருந்தே ஹிந்தி கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

ஒரிஸாவில் 6 முதல் 9 வரை உள்ள வகுப்புக்களுக்கு ஹிந்தி கட்டாய பாடமாக இருந்து வருகிறது. ஆனால் நான்கு, ஐந்தாவது வகுப்புக்களில் விருப்ப பாடமாகவே இருந்துவருகிறது. சென்னை ராஜ்யத்தில் ஹிந்தி "மூன்றாவது மொழியாக" இருப்பதோடு இதனை விரும்பாதவர்கள் மற்றொரு கைத்தொழிலையோ வேறு ஏதாவது ஒன்றையோ ஏற்றுக்கொள்ள லாம். மைசூரில் உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் மூன்று வருஷங்களுக்கு ஹிந்தி விருப்ப பாடமாக வைக்கப்பட்டுள்ளது.

அந்தமான், நிகோபார் தீவுகளில் நான்காவது வகுப்பு முதல் ஹிந்தி கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டுவருகிறது. ஜம்முவிலும், காஷ்மீரிலும் பஞ்சாபி, உருது என்பவற்றோடு இதுவும் விருப்ப பாடமாக இருந்து வரு கிறது.

ஆங்கிலம்.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக் கூடங்களில் மட்டும் ஆரம்பப் பள்ளிகளுக் குக் கீழே உள்ள பகுதிகளில் கூட ஆங்கிலம் கட்டாயப் படிப்பாக இருந்து வருகிறது. இது தவிர எல்லா ராஜ்யங்களிலும் இடைநிலைக் கல்வி நிலையில் தான் ஆங்கிலம் புகுத்தப் பட்டிருக்கிறது. அதுவும் விருப்பப் பாடமாகவோ கட்டாய பாடமாகவோ உள்ளது. ஹிந்தி பேசும் பிராந்தியங்களில் உள்ள ராஜ்யங்களில் பொதுவாகப் பேசுமிடத்து ஆங்கிலம் ஒரு விருப்ப பாடமாக வும், பிற மொழி பேசும் ராஜ்யங்களில் பொதுவாகப் பேசுமிடத்து அது கட்டாய பாடமாகவும் இருந்து வருகிறது.

பிராந்திய மொழிகள்.

ஹிந்திப் பிராந்தியங்களிலுள்ள ராஜ்யங்களில் ஏனைய பிராந்திய மொழி களின் நிலை விருப்ப பாடமாக இருப்பதோடு சரி. ஹிந்தி பேசாத பிராந்தி யங்களிலுள்ள ராஜ்யங்களிலும் பிராந்திய மொழிகளைப் போதனா மொழி யாக உடைய பள்ளிக்கூடங்களிலும், அதாவது இரட்டை மொழி பேசும் ராஜ்யங்களிலும் பொதுவாகப் பேசுமிடத்து பிராந்திய மொழி கட்டாய பாடமாக உள்ளது.

உயர்தரக் கல்வி நிலை.

போதனு மொழி.

ஹிந்தி ராஜ்யங்களில் பொதுவாகப் பேசுமிடத்து ஹிந்தியே போதனு மொழியாகும். சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் ஆங்கில போதனு மொழி ஒப்புக் கொள்ளப்படுகிறது. மத்தியப் பிரதேசம் போன்ற இரட்டை மொழி ராஜ்யங்களில் ஹிந்தி போதனு மொழி விருப்ப மொழியாக அமைந்துள்ளது. பஞ்சாப், பெப்சு, பாம்பாய், சௌராஷ்டிரா ஆகிய ராஜ்யங்களில் ஆங்கிலத் தோடு சேர்ந்து ஹிந்தியும் விருப்ப போதனு மொழியாக இருக்கிறது.

ஹிந்தி பேசாத பிராந்தியங்களில் அநேகமாக அந்தந்தப் பிராந்திய மொழிகளே போதனு மொழியாக இருப்பினும் ஆங்கிலமும் விருப்ப போதனு மொழியாக இருந்து வருகிறது.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் நாடு முழுவதிலும் போதனு மொழியாக இருந்துவருகிறது.

கற்பதற்குரிய பாடம்—ஹிந்தி.

ஹிந்தி, ஹிந்தி பேசும் ராஜ்யங்கள் அனைத்திலும், பம்பாய், ஹைதரா பாத், அந்தமான் நிகோபார் தீவுகளிலும் கட்டாய பாடமாக இருந்துவருகி றது. மைசூரிலும், சாந்தனிகேதனிலுள்ள விஸ்வபாரத் பல்கலைக் கழகத் திலும் அது பரீட்சைக்குத் தேவையில்லாத கட்டாய பாடமாகக் கற்பிக்கப் பட்டு வருகிறது.

ஒரிஸாவில் 9-வது வகுப்புவரை ஹிந்தி கட்டாய பாடம்.

மத்தியப் பிரதேசம், அஸ்ஸாம், திருவாங்கூர்-கொச்சி ஆகிய இடங்களில் ஹிந்தி அந்தப் பிராந்திய மொழிகளோடு கட்டாய பாடமகாக இருந்து வருகிறது.

சென்னை ராஜ்யத்தில் ஹிந்தி "மூன்ருவது மொழி" யாக இருந்து ஒரு கைத்தொழில் அல்லது அது போன்ற தொழிலுக்கு எதிராக இது அமைந்துள்ளது. அன்றியும் இது பரீட்சைக்குத் தேவையில்லாத பாடம்.

ஆங்கிலம்.

யூ. பி., பீஹார், சௌராஷ்டிரா ஆகிய இடங்கிளில் விருப்ப பாடமாக ஆங்கிலம் இருக்கிறது. அல்லாமல் ஏனைய இடங்களில் அது கட்டாய பாடமாகவே இருக்கிறது.

பிராந்திய மொழிகள்.

ஹிந்தி பேசும் ராஜ்யங்களிலும், இரட்டை மொழி ராஜ்யங்களிலுள்ள ஹிந்தி போதனு மொழிப் பள்ளிக்கூடங்களிலும் பிராந்திய மொழிகள் விருப்ப பாடமாக அமைந்துள்ளன.

பிறவிடங்களில் அந்தந்தப் பிராந்திய மொழிகள், பொதுவாக, கட்டாய பாடமாகவே உள்ளன. தென் ராஜ்யங்களான ஆந்திரா, சென்னை ஆகிய இரண்டிடங்களிலும் இவை ஏனைய பல மொழிகளோடு சேர்த்துக் கட்டாய பாடமாக வைக்கப்பட்டுள்ளன. அன்றியும் மொழிக் கல்வி யல்லாத சில வற்ருேடும் இது சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. மத்தியப் பிரதேசம், அஸ் ஸாம், திருவாங்கூர்–கொச்சி ஆகிய இடங்களில் ஹிந்தி, பிராந்திய மொழி கள் ஆகிய இரண்டில் ஒன்று கட்டாய பாடமாகும்.

இடைநிலைக் கல்வி நிலை.

போதனை மொழி.

ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் ஹிந்தியே போதனை மொழி. அநேகமாக விரும்பினால் ஏற்றுக்கொள்ளும் போதனை மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. இரட்டை மொழி ராஜ்யங்களாகிய மத்தியப் பிரதேசம், பஞ்சாப், பெப்ஸு ஆகிய விடங்களில் ஹிந்தியும் அந்தப் பிராந்திய மொழிகளும் விரும்பினால் ஏறறுக்கொள்கிற போதனை மொழிகளாக உள்ளன. ஹிந்தி பேசாத ராஜ்பங்களில் இந்நிலைமை ஒரே மாதிரியாக இல்லை. குஜராத், பரோடா, எஸ்.என்.டி.டி விஸ்வபாரத் பல்கலைக் கழகங்கள் ஹிந்தியை விருப்ப போதனை மொழியாக வைத்துள்ளன. கர்நாடகம், பூனா, கல்கத்தா ஹைதராபாத், ஜம்மு-காஷ்மீர் பல்கலைக் கழகங்களில் பிராந்திய மொழிகளும், ஆங்கிலமும் மாற்று போதனை மொழிகளாக அமைந்துள்ளன. ஏனையவற்றில ஆஙகிலம் மட்டுமே போதனை மொழி. ஆங்கிலோ-இநதியப் பளளிகளில் ஆங்கிலம் மட்டுமே போதனைமொழி.

மொழிக் கல்வி—ஹிந்தி

ஹிந்தி ராஜ்யங்களில் ஹிந்தி கட்டாய பாடமாக அமைந்துள்ளது. டில்லி, பஞ்சாப், பெப்சு ஆகிய இடங்களில் ஏனைய சில மொழிகளோடு சேர்ந்து எதாவது ஒனறு விரும்பி எற்றுக் கொள்ளப்பட்டுக் கட்டாயமாகப் படிக்க வேண்டிய மொழியாக அமைந்துள்ளது.

இரட்டை மொழி ராஜ்யமாகிய மத்தியப் பிரதேசத்தில் இரண்டு நிலைகள் உண்டு. சாகூர் பல்கலைக் கழகத்தில் இடைநிலை வாணிக வகுப்பில் கட்டாய பாடமாகவும், ஏனைய இடைநிலைக் கலை, விஞ்ஞான வகுப்புக்களில் மராத்தி, உருது, ஆங்கிலம் என்பவற்றோடு இதுவும் ஒரு விருப்ப பாடமாக அமைந்துள்ளது. ஆனால் நாக்பூர் பல்கலைக் கழகத்தில் இடைநிலைக் கலைப் பரீட்சைக்கு மராத்தி, உருது, பிரஞ்சு, ஜர்மன் ஆகியவற்றோடு ஹிந்தியும் சேர்க்கப்பட்டு எதாவது ஒன்று கட்டாய பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. ஆனால் இடைநிலை விஞ்ஞானம், வாணிக வகுப்புக்களுக்கு ஹிந்தி மட்டும் கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

பம்பாய் ராஜ்யத்தில் பம்பாய், குஜராத், கர்நாடகப் பல்கலைக் கழகங்கள் ஏனைய நவீன இந்திய மொழிகளோடு இதனையும் சேர்த்து எதாவதொன்றைக் கட்டாய பாடமாக வைத்துளளது. அதுவும் இடைநிலை கலை, விஞ்ஞான வகுப்புக்களுக்கு இவ்வாறுள்ளது. இடைநிலை வாணிக வகுப்புகளுக்கு ஏனைய சில நவீன இந்திய மொழிகளோடு இதுவும் கட்டாயமாக எதாவதொரு மொழி என்ற நிலையில் உள்ளது. பரோடா பல்கலைக் கழகத்தில் இது கட்டாய பாடமாகவும், எஸ்.என்.டி.டி. பல்கலைக் கழகத்தில் இதனைத் தாய்மொழியாக உடையவர்கட்கு மட்டும் இது கட்டாய பாடமாக உள்ளது. இதுபோல கல்கத்தா கௌஹாத்தி, உட்கல் பல்கலைக் கழகங்களில் ஹிந்தியைத் தாய் மொழியாக உடையவர்கட்கு மட்டும் இது கட்டாய பாடம்.

ஜம்மு-காஷ்மீர் பல்கலைக் கழகத்தில் உருது, பஞ்சாபி, ஹிந்தி ஆகிய இவை விருப்ப பாடமாக அமைந்துள்ளன. ஆஸ்மானிய பல்கலைக் கழகம் உள்ப்படத் தென் பிராந்தியப் பல்கலைக் கழகங்களில் கட்டாயமாகப் படிக்க வேண்டிய பாடத் தொகுதிகளுள் ஹிந்தியும் ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. ஹிந்தி பேசும் ராஜ்யங்களில் யூ.பி. நீங்கலாக மற்றப் பகுதிகளில் இடைநிலை கலை வகுப்புக்களில் ஹிந்தி மட்டும் தனியாக ஒரு விருப்ப பாடமாக இருந்து வருகிறது. அன்றியும் ஹிந்தி பேசாத ராஜ்யங்களிலும் பல பல்கலைக் கழகஙகளில் இது தனியே ஒரு விருப்ப பாடமாக இருந்து வருகிறது.

ஆங்கிலம்.

உத்திரப்பிரதேசம் நீங்கலாக எல்லா ராஜ்யங்களிலுமுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலம் இடைநிலை வகுப்புக்களுக்குக் கட்டாய பாடமாக இருந்து வருகிறது. உத்திரப் பிரதேசப் பல்கலைக் கழகங்களில் அது விருப்ப பாடமாக இருந்து வருகிறது.

பிராந்திய மொழிகள்.

ஹிந்தி பேசும் ராஜ்யங்களிலும், இரட்டை மொழி ராஜ்யங்களிலுள்ள ஹிந்தி போதனை மொழிக் கல்லூரிகளிலும் இடைநிலைக் கலை வகுப்புக்களில் ஏனைய பிராந்திய மொழிகள் தனியான விருப்ப பாடமாகவே அமைந்துள்ளன. டில்லி, பஞ்சாப் பல்கலைக் கழகங்களில் பிராந்திய மொழிகள், ஹிந்தி, ஏனைய மொழிகள் ஆகியவற்றுள் ஒன்று கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

நாக்பூர் பல்கலைக் கழகத்தில் மராத்தி கட்டாய பாடமாக அமைவதோடு ஹிந்தி, உருது, பிரஞ்சு, ஜர்மன் ஆகியவற்றுள் ஒன்று இடைநிலைக் கலை வகுப்புக்களுக்கு விருப்ப பாடமாக அமைந்துள்ளது. இடைநிலை விஞ்ஞான, வாணிக வகுப்புக்களுக்கு ஹிந்தி, உருது, துணை ஆங்கிலம் ஆகியவற்றுள் ஒன்று விருப்ப பாடமாக அமைந்துள்ளது. சாகூர் பல்கலைக் கழகத்தில் ஹிந்தி, உருது, துணை ஆங்கிலம் ஆகியவற்றுள் ஒன்று இடைநிலைக் கலை, விஞ்ஞான வகுப்புக்களுக்கு விருப்ப பாடமாக அமைந்துள்ளது. பம்பாய், குஜரத், கர்நாடகப் பல்கலைக் கழகங்களில் அந்தந்தப் பிராந்திய மொழிகள் கட்டாய பாடமாக அமைவதோடு ஹிந்தி ஏனைய இந்திய மொழிகள், ஆங்கிலம் ஆகியவை இடைநிலைக் கலை, விஞ்ஞான வகுப்புக்களுக்கு விருப்ப பாடமாக அமைந்துள்ளன. இடைநிலை வாணிக வகுப்புக்கு ஒரு நவீன இந்திய மொழியில் கட்டுரை வரைதலும் விருப்ப பாடமாக அமைந்துள்ளது.

எஸ். என். டி. டி. பல்கலைக் கழகத்தில் தாய்மொழியோடு சேர்த்து இது விருப்ப பாடமாக அமைந்துள்ளது.

ஆஸ்மானியப் பல்கலைக் கழகத்தில் பிராந்திய மொழி, ஹிந்தி ஆகியவை பழைய மொழி ஒன்றுடன் விருப்ப பாடமாக அமைக்கப்பட்டுள்ளது. உட்கல், ஜம்மு-காஷ்மீர் பல்கலைக் கழகங்களில் ஏனைய பிராந்திய மொழிகளோடு ஹிந்தியும் விருப்ப பாடமாக உள்ளது.

ஏனைய பல்கலைக் கழகங்களில் பிராந்திய மொழிகள் கட்டாய பாடமாக அமைவதோடு ஏனைய சில மொழிகளுடன் விருப்ப பாடமாகவும் அமைந்துள்ளன.

பாச்சலர் ஆப் ஆர்ட்ஸ் (பட்டப் படிப்பு).

போதனை மொழி.

அலிகார், சாகூர், டெல்லி நீங்கலாக ஹிந்தி பேசும் பிராந்தியங்களிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் ஆங்கிலத்தோடு ஹிந்தியும் விரும்பினால் ஏற்றுக் கொள்கின்ற போதனை மொழியாக அமைந்துள்ளது.

பாட்னாவில் ஹிந்தி, ஆங்கிலம் என்பவற்றோடு வங்காளியும், உருதுவும் கூட விரும்பினால் ஏற்றுக் கொள்கின்ற இடைநிலை மொழியாக அமைந்துள்ளன.

நாக்பூர், எஸ்.என்.டி.டி. (பம்பாய்), பம்பாய், ஆஸ்மானியா ஆகிய பல்கலைக் கழகங்களில் ஆங்கிலம், பிராந்திய மொழிகளோடு ஹிந்தியும் விருப்ப போதனை மொழியாக இருந்து வருகிறது.

விஸ்வபாரதியிலும், கல்கத்தாவிலும் பிராந்திய மொழி போதனு மொழியாக இருப்பதோடு ஆங்கிலம் விருப்ப போதனு மொழியாக அமைந்துள்ளது. ஆனுல் கல்கத்தாவில் சில பாடங்களுக்கு மட்டுமே இவ்வாறுள்ளது.

குஜராத், பூனு, கர்நாடகப் பல்கலைக் கழகங்கள் அந்தந்தப் பிராந்திய மொழிகளையே போதனு மொழிகளாக கொள்ள வேண்டும் என்று முடிவு செய்து முதல் ஆண்டு வகுப்புக்களை அந்த இடைநிலை மொழியிலேயே தொடங்கியுள்ளன. முதலாண்டு வகுப்புக்களை அந்த மொழியிலேயே தொடங்கியுள்ளன.

ஏனைய பல்கலைக் கழகங்கள் ஆங்கிலத்தையே போதனு மொழியாகக் கொண்டுள்ளன.

மொழிப் போதனை—தனிப் பாடம்—ஹிந்தி.

ஆக்ரா, லக்னோ, சாகூர் பல்கலைக் கழகங்கள் மட்டுமே ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் போதிக்கின்றன. அலிகாரில் இது கட்டாயமாக இருப்பினும் விரும்பினுல் உருதுவை மாற்றி எடுத்துக்கொள்ளலாம். ஜம்மு-காஷ்மீரிலும் உருது, பஞ்சாபி ஆகியவற்ருேடு விரும்பினுல் ஏற்றுக் கொள்கிற மொழியாக இது இருக்கிறது. பனுரஸ், பீஹார், டெல்லி, பாட்னு, கல்கத்தா, விஸ்வபாரதி, உட்கல், கௌஹாத்தி ஆகிய பல்கலைக் கழகங்களில் ஏனைய பல இந்திய மொழிகளோடு சேர்த்து ஹிந்தியும் கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

ஆஸ்மானியாவில் பிராந்திய மொழிகள், பழைய மொழிகள் என்பவற்ருேடு இதுவும் கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

ஆந்திரா, அண்ணுமலை, சென்னை, மைசூர், திருவாங்கூர், வேங்கடேஸ்வரா ஆகிய பல்கலைக் கழகங்களில் விரும்பினுல் எடுத்துக்கொள்கின்ற "துணை மொழியாக" இது உள்ளது.

பரோடா, குஜராத், கௌஹாத்தி, அண்ணுமலை, திருவாங்கூர், வேங்கடேஸ்வரா ஆகிய பல்கலைக் கழகங்கள் நீங்கலாக எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் விரும்பினுல் எடுத்துக்கொள்கின்ற தனிப் பாடமாக ஹிந்தி உள்ளது.

ஆங்கிலம்.

எல்லாவிடங்களிலும் கட்டாயப் படிப்பிற்குரிய மொழியாகவும், விரும்பினுல் எடுத்துப் படிக்கக்கூடிய தனி மொழியாகவும் ஆங்கிலம் இருந்து வருகிறது.

பிராந்திய மொழிகள்.

அலிகார், பனுரஸ், பீஹார், பாட்னு, டெல்லி, கல்கத்தா, விஸ்வபாரதி, உட்கல், கௌஹாத்தி, ஆஸ்மானியா ஆகிய பல்கலைக் கழகங்களில் பிராந்திய மொழிகள், ஹிந்தி, ஏனைய இந்திய மொழிகள் ஆகியவை கட்டாய பாடமாக அமைந்துள்ளன.

ஆந்திரா, அண்ணுமலை, சென்னை, மைசூர், திருவாங்கூர், வேங்டேஸ்வரா ஆகிய பல்கலைக் கழகங்களில் பிராந்திய மொழிகள் கட்டாயத் துணை மொழியாக ஆக்கப்பட்டு விரும்பினுல் ஹிந்தியை எடுத்துக் கொள்ளலாம் என்றும் இருக்கிறது.

ஏனைய பல்கலைக் கழகங்களில் கட்டாய பாடமாக ஹிந்தி கற்பிக்கப்படவில்லை.

தனிப்பட்ட விருப்ப பாடமாக அநேகமாக எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் போதிக்கப்பட்டு வருகின்றன.

பாச்லர் ஆப் ஸயன்ஸ் அண்டு காமர்ஸ்.

போதனு மொழி.

விஞ்ஞான, வாணிகப் பட்டப் படிப்புக்களுக்குப் பனாரஸ், பீஹார், லக்னோ, பாட்னு, சாகூர், நாக்பூர் பல்கலைக் கழகங்கள் நீங்கலாக ஏனையவற்றில் ஆங்கிலமே போதனு மொழியாக இருக்கிறது. இவற்றில் ஹிந்தியோடு ஆங்கிலமும் விருப்ப போதனு மொழியாகும். ஆஸ்மானியா பல்கலைக் கழகத்தில் ஹிந்துஸ்தானியோடு ஆங்கிலமும் குறிப்பிட்ட அளவுக்கு போதனு மொழியாகும் அலஹாபாத்தில் பி.எஸ்.ஸி.-க்கு மட்டும் ராஜபுதானுவில் பீ. காம். முக்கு மட்டும் அதே ஹிந்தி, போதனு மொழியாக, விருப்பமானுல் தரப்படுகின்றது.

மொழிப் போதனை—தனிப் பாடம்—ஹிந்தி.

சாகூர் பல்கலைக் கழகம் நீங்கலாக வேறு எந்தப் பல்கலைக் கழகத்திலும் பி.எஸ்.சி.-க்கு ஹிந்தி தனிப் பாடமாக இல்லை. இங்கு இது கட்டாய பாடமாகும்.

அலிகாரில் உருதுவோடு இதுவும் விருப்ப பாடமாகும். ஆஸ்மானியாவில் இது பிராந்திய மொழிகளோடும், பழைய மொழிகளோடும் விருப்ப பாடமாக அமைந்துள்ளது.

ஆனுலும், ஆக்ரா, டெல்லி, சாகூர், ஆஸ்மானிய பல்கலைக் கழகங்களில் பீ.காம். படிப்புக்கு ஹிந்தி கட்டாய பாடமாக அமைந்தள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் கட்டாய பாடங்கள் பலவற்றுள் ஹிந்தியும் ஒன்றாக அமைந்தள்ளது.

பீஹார் பல்கலைக் கழகத்தில் மைதிலி மொழியோடு இதுவும் விருப்ப பாடமாக அமைந்துள்ளது.

எந்த ஓர் இடத்திலும் விஞ்ஞான, வாணிகப் பட்டப் படிப்புக்கு இது தனிப்பட்ட விருப்ப பாடமாக அமையவில்லை.

ஆங்கிலம்.

அலிகார், டெல்லி, லக்னோ, பஞ்சாப், நாக்பூர், பம்பாய், ஜம்மு காஷ்மீர், ஆந்திரா, அண்ணுமலை, மைசூர், ஆஸ்மானியா, திருவாங்கூர் வேங்கடேஸ்வரா ஆகிய பல்கலைக் கழகங்களில் பி.எஸ்.சீ.-க்கு ஆங்கிலம் கட்டாய பாடமாக அமைந்துள்ளது.

அதுவே தனிப்பட்ட விருப்ப பாடமாக அலிகார், பனாரஸ் பல்கலைக் கழகங்கள் நீங்கலாக, மற்றவற்றில் இல்லை.

பனாரஸ், வேங்கடேஸ்வரா ஆகியவை போன்ற சில பல்கலைக் கழகங்கள் நீங்கலாக பீ.காம். படிப்புக்கு இது கட்டாய பாடமாக உள்ளது.

ஆக்ரா, அலஹாபாத் பல்கலைக் கழகங்களில் இது ஒரு தனிப்பட்ட விருப்ப பாடமாகவும், பஞ்சாப் பல்கலைக் கழகத்தில் ஏனைய மொழிகளோடு இதுவும் விருப்ப பாடமாக அமைந்துள்ளது.

பிராந்திய மொழிகள்.

பீ. காம்., பி.எஸ்.ஸி. வகுப்புக்களில் அலிகார், ஆஸ்மானிய பல்கலைக் கழகங்கள் நீங்கலாக வேறு எந்த விடத்திலும் பாடத் திட்டத்திலும் பிராந்திய மொழிகள் இடம் பெறவில்லை. இவை இரண்டிலும் மட்டும் பி.எஸ்.ஸி. படிப்புக்கு ஏனைய மொழிகளோடு சேர்த்து பரீட்சைக்கு இதுவும் விருப்ப பாடமாக உள்ளது. இதே போல பீஹார், உட்கல் பல்கலைக் கழகங்களில் பீ.காம். பரீட்சைக்கு இது விருப்ப பாடமாக அமைந்துள்ளது.

பட்டப்படிப்புக்கு மேற்படிப்பு முதலியவை.

போதனு மொழி.

எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பட்டப் படிப்புக்கு மேற்பட்ட படிப்பும், தொழில் நுட்பப் படிப்பும், ஆங்கிலத்திலேயே போதிக்கப் படுகின்றன. இவ்விதியில் ஒரே ஒரு மாறுபாடாக ஆக்ரா, எஸ்.என்.டி.டி. பல்கலைக் கழகங்கள் உள்ளன. ஹிந்தியையும், தாய் மொழியையும் விருப்ப போதனு மொழியாக ஆக்ரா பல்கலைக் கழகம் எம். ஏ., எம். காம். பரீட்சைகளுக்கும், எஸ்.என்.டி.டி. பல்கலைக் கழகம் எல்லாப் பரீட்சை களுக்கும் இம்மொழிகளை ஏற்றுக் கொள்கின்றன.

மொழிப் போதனை—தனிப்பாடம்

ஹிந்தி, ஆங்கிலம், பிராந்திய மொழிகள் ஆகியவை கீழ்க் கண்ட வைகள் நீங்கலாக மற்ற எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் எம். ஏ., பட்டத்திற்கு ஒரு முழுப் பாடமாக போதிக்கப்படுகின்றன. கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களில் ஹிந்தி இவ்வாறு கற்பிக்கப்படவில்லை :—

கௌஹாத்தி, ஜம்மு-காஷ்மீர், அண்ணுமலை, திருவாங்கூர், வேங் கடேஸ்வரா பல்கலைக் கழகங்கள்.

ஜம்மு-காஷ்மீர் பல்கலைக் கழகத்தில் கூட அந்தப் பிராந்திய மொழி யாகிய காஷ்மீரி இவ்வாறு போதிக்கப்படவில்லை.

பின் இணைப்பு-X

குறிப்பு: அத்தியாயம் VIII பாரா 7.

இந்திய எண்களின் சர்வ தேச வடிவங்கள்	1	2	3	4	5	6	7	8	9	0

அரசியலமைப்பின் 8 வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்ட மொழிகளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ள எண்கள் வரிசை

சமஸ்கிருதம்	१	२	३	४	५	६	७	८	९	०
மராத்தி	१	२	३	४	५	६	७	८	९	०
ஹிந்தி (லட்சுமணபுரி மகாநாட்டில் ஒப்புக்கொண்டபடி)	१	२	३	४	५	६	७	८	९	०
குஜராத்தி	૧	૨	૩	૪	૫	૬	૭	૮	૯	૦
பஞ்சாபி	੧	੨	੩	੪	੫	੬	੭	੮	੯	੦
காஷ்மீரி (ஷாரதா லிபியில் எழுத்து முறை)	𑇑	𑇒	𑇓	𑇔	𑇕	𑇖	𑇗	𑇘	𑇙	𑇐
வங்காளி	১	২	৩	৪	৫	৬	৭	৮	৯	০
அஸ்ஸாமி	১	২	৩	৪	৫	৬	৭	৮	৯	০
ஒரியா	୧	୨	୩	୪	୫	୬	୭	୮	୯	୦
கன்னடம்	೧	೨	೩	೪	೫	೬	೭	೮	೯	೦
தெலுங்கு	౧	౨	౩	౪	౫	౬	౭	౮	౯	౦
தமிழ்	௧	௨	௩	௪	௫	௬	௭	௮	௯	ய
மலையாளம்	൧	൨	൩	൪	൫	൬	൭	൮	൯	൦
உருது	۱	۲	۳	۴	۵	۶	۷	۸	۹	۰

பிற்சேர்க்கை 11.

(கோரிக்கை : பகுதி 12, பாரா 10)

அகில இந்தியப் பொதுப் பணிகளில் பங்கு முறை பற்றிய குறிப்பும் அவற்றின் விளைவுகள் பற்றிய ஆராய்ச்சியும்.

1. சாதாரண முறையில் அகில இந்தியப் பணிகளுக்கு ஆள் தேர்வு செய்யும்பொழுது அது அகில இந்தியாவிற்கும் நடைபெறும் ஒரே போட்டிப் பரீட்சை மூலம் நடைபெற்று வருகிறது. அதை மாற்றிப் பங்கு முறை வைப்பதனால் ஏற்படும் பயன்கள் பற்றிக் கீழே ஆராயப்படுகிறது.

ஒவ்வொரு மொழித் தொகுதியிலிருந்தும் அந்த அந்த மொழியை இடைநிலை மொழியாகக் கொண்டு பரீட்சை எழுதும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கையையும், அந்த மொழி பேசும் இனத்தாரின் சென்ற ஜன சங்கியைக்கணக்குப்படி உள்ள மொத்த எண்ணிக்கையையும் கணக்கிட வேண்டும். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டிலும் இந்த உத்தியோகங்களில் ஏற்படுகின்ற மொத்தக் காலி இடங்களை அம்மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பப் பகிர்ந்து அளிக்க வேண்டும். 8-வது ஷெட்யூலில் சொல்லப்பட்டுள்ள பிராந்திய மொழிகளும் அம்மொழிகளைத் தாய் மொழிகளாகப் பேசுவோருமே இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுவர்.

மாணவர்கள் வாங்கிய மொத்த மார்க்குகளின் எண்ணிக்கைப்படி வரிசையாக ஒரு பொதுவான பட்டியல் தயாரிக்கப்படவேண்டும். இப்பட்டியலில் காணப்படுகின்றவர்கள் பல்வேறு இடைநிலை மொழிகளில் இப் பரீட்சை எழுதினார்கள், என்பதும் இம்மார்க்குகள் பல்வேறு மொழிகளின் மூலம் எழுதப்பட்ட விடைத்தாள்களுக்குக் கொடுக்கப்பட்டவை என்பதும் கவனத்திற்குரியன அல்ல. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் 50 காலி இடங்கள் இருக்குமேயானால் பொதுப் பட்டியலில் 100-வது எண்ணிக்கையின் கீழேயுள்ள யாரும் தேர்ந்தெடுக்கப்படமாட்டார் என்று குறிப்பிட வேண்டும். இங்ஙனம் 100-வது எண்ணிக்கைக்குக் கீழே இருப்பவர் அந்தக் குறிப்பிட்ட மொழிக்கூட்டத்தில் பங்குக்குஉட்பட்டவராகவே இருப்பினும் அவர் தேர்ந்தெடுக்கப்படமாட்டார். அவ்வாறு எஞ்சி நிற்கின்ற காலி இடங்கள் அனைத்தும் மொழிவாரிப் பங்கு முறை இல்லாமல் பொதுப் பட்டியலிலிருந்தே நிரப்பப்படும். ஒரு குறிப்பிட்ட மொழிக் கூட்டத்தாருக்கு ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் கிடைக்காமல் போன காலி ஸ்தானங்கள் அடுத்த ஆண்டிற்குக் கொண்டுசெல்லப்படும். எனவே அடுத்த ஆண்டில் அந்த மொழிக்கூட்டத்திற்கு சென்ற வருஷ பாக்கியும் கூடச் சேர்ந்து கிடைக்கும்.

(பி.கு.—கடைசியாகச் சொல்லிய இந்த ஏற்பாட்டை அப்படியே ஏற்றுக்கொண்டாலும் அல்லது வேறுமுறையில் ஏற்றுக்கொண்டாலும் சரியே.)

மொழிவாரிப் பங்கு முறை அலுவலாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டும் பயன்படுமே தவிர அங்ஙனம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் எந்த மொழிக்காரர்களோ அந்த ராஜ்யத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள் என்ற உறுதி இல்லை.

அலுவலாளர்களைக் குறிப்பிட்ட இடத்திற்கு பங்கீடு செய்வதற்கும் அவர்களை தேர்ந்தெடுப்பதற்கும் அதிக வேறுபாடு உண்டு. ஒரு ராஜ்யத்திற்கு பங்கீடு செய்யப்படும் அகில இந்தியப் பணியாளர்கள் வேற்று மொழி இனத்திலிருந்து மொத்தத்தில் $\frac{1}{3}$ அல்லது $\frac{1}{2}$ அளவினர் இருக்க வேண்டும்

என்று சிபாரிசு செய்யப்பட்டதையும் கொண்டு செலுத்த முடியும். இவ்வாறன்றியும் இத்தகைய பணியாளர்கள் நூற்றுக்கு நூறு வேற்றுமொழி இனத்தாரகவே இருக்குமாறும் செய்யமுடியும். அதாவது மராத்தி அல்லாதவர்கள் மகாராஷ்டிராவிலும் ஆந்திரர் அல்லாதவர் ஆந்திராவிலும் வேலைக்கு அனுப்பப்படுவர்.

மேலே குறிப்பிட்டுள்ள முறையில் மொழிவாரி இனங்களுக்குக் காலி இடங்களை ஒதுக்கும் வழி, ஜனத்தொகைக்கு ஏற்ற முறையில் தரப்பட்டுள்ளதே தவிர ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் பல்வேறு ராஜ்யங்களின் தேவை எவ்வளவு என்று பார்த்து அதற்கு ஏற்ப ஒதுக்கப்படவில்லை. இதனால் ஏற்படுகின்ற தொல்லை அதிகம் இல்லை. நடைமுறையில் ஏதேனும் ஏற்பட்டாலும் நாளாவட்டத்தில் சரியாகிவிடும்.

மேலும் காலி இடங்களை ஒதுக்குவதற்குரிய அடிப்படை இடைநிலை மொழிகளாக எத்தனை மொழிகள் பரீட்சைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவோ அந்த அடிப்படையிலேயே யாகும். அந்த மொழி ராஜ்யத்தில் இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கை மட்டும் வைத்து இது நடைபெறுவதன்று. எனவே தெலுங்கர் அல்லாத ஒருவர் தெலுங்கு மொழியை நன்கு கற்று அம்மொழி மூலம் பரீட்சை எழுத விரும்பினால் அதனை யாரும் தடுக்க முடியாது. நடைபெறக்கூடிய சூழ்நிலையை ஆராயும் பொழுது ஹிந்தி பேசாத இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஹிந்தியைக் கற்றுக் கொண்டு அம்மொழி மூலம் பரீட்சை எழுதி ஹிந்தி இனத்தாருக்கு மிகுதியாகக் கிடைக்கும் பங்கில் தானும் நுழையலாம். தமிழர்கள் இப்போட்டிப் பரீட்சைகளில் நன்கு செய்வார்களேயானால், ஹிந்திக்காரர்களுக்கு ஏற்பட்டுள்ள காலி ஸ்தானங்களில் ஏறத்தாழ ஆறில் ஒரு பங்குதான் தமிழர்களுக்குக் கிடைக்குமாதலாலும் ஜனத்தொகை விகிதாச்சாரக் கணக்குப்படி இதுதான் கிடைக்குமென்றாலும் தமிழப் பிள்ளைகள் ஹிந்தியை நன்கு கற்றுக்கொண்டு ஹிந்தி மூலம் இப்பரீட்சையை எழுதவும் விரும்பலாம்.

(பி.கு.—இவ்வறிக்கையில் கல்வி முறைபற்றிக் கூறிய சிபாரிசுகளின்படி இப்பரிட்சைகளுக்கு இடைநிலை மொழியாக ஹிந்தி மொழி நாடு முழுவதிலும் விருப்ப இடைநிலை மொழியாக இருக்கும் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.)

ஓர் உதாரணத்தின் மூலம் இந்நிலைமையை விளக்கம் செய்யலாம்.

ஐம்பது காலி இடங்கள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவ்வாருனால் மொழிக் கணக்குப்படி தமிழ், அஸ்ஸாமீஸ், ஹிந்தி ஆகிய மொழியாளரின் ஜனத்தொகைப்படி காலி இடங்கள் பின்கண்டவாறு பிரிக்கப்படும்.—

	மொழிவாரி ஜனத்தொகை (1951 ஜனக் கணக்குப்படி)	காலி இடங்கள்
தமிழ்	27 மிலியன்	4
அஸ்ஸாமீஸ்	5 ,,	1
ஹிந்தி	170 ,,	25
மராத்தி	..	..
	345 மிலியன்	50

6.8 மிலியன் ஜனத்தொகைக்கு ஒரு காலி இடம் வீதம் மேற்கண்ட முறையில்தான் காலி இடங்கள் ஒதுக்கப்படும்.

பி.கு.—மேலே உள்ள அளவு முறையில் "ஹிந்தி" என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை ஹிந்தி, உருது, ஹிந்துஸ்தானி, பஞ்சாபி (இவற்றுள் மூன்று மொழிகள் ஷெட்யூலில் தனியே பிரித்துக் காட்டப்பட்டுள்ள) ஆகிய நான்கு மொழிகளுக்கும் சேர்ந்தே மொத்த மொழி இன ஜனத்தொகையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக இப் பொதுப் பட்டியலில் அஸ்ஸாமிய மாணவர் தகுதி பெற்றவராக வரவில்லை என்று வைத்துக்கொள்ளலாம். அதாவது

நூறுவது தரம் வரையில் எந்த அஸ்ஸாமிய மாணவரும் வரவில்லை என்று வைத்துக்கொள்வோம். அந்தக் காலி இடம் அடுத்த ஆண்டிற்கு கொண்டு செல்லப்படும். அடுத்த ஆண்டில் மொத்தக் காலி ஸ்தானங்கள் 50 என்று இருக்குமேயானுல் அஸ்ஸாம் ஒன்றுக்குப் பதிலாக இரண்டு இடங்களைப் பெறும். ஏனைய மொழிகளுக்கு 50-க்கு பதிலாக 49 இடங்களே பங்கிடப் படும்.

அஸ்ஸாமிய மாணவருக்கு பதிலாகப் பொதுப் பட்டியலில் அதிகப்படி யான மார்க்குகள் பெற்றும் ஒதுக்கப்பட்ட மாணவர் தேர்ந்தெடுக்கப்படு வார். தமிழ் மாணவர்கள் விரும்பிஞல் ஹிந்தி இடைநிலை மொழியை ஏற்றுக்கொண்டு தங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட நான்கு இடங்கள் மட்டு மல்லாமல் ஹிந்திக்குரிய 25 இடங்களுக்கும் போட்டி இடலாம்.

2. இக்கழக உறுப்பினர்கள் உள்படப் பலர் பல்வேறு மொழிகளில் எழுதப்படும் போட்டிப் பரீட்சை விஞத்தாள்களை மிதப்படுத்துவதற்குப் பல் வேறு வழிகளைக் கூறியுள்ளார்கள்.

முக்கியமாக இந்த எல்லா வழிகளும் அகில இந்தியப் பரீட்சையை இரண்டு பெரும் பிரிவுகளாக பிரிக்கவேண்டுகின்றன. ஒரு பிரிவில் பல் வேறு மொழிகளிலும் முதல் சோதனைப் பரீட்சை நடைபெறும். இப்பரீட்சையை ராஜ்யப் பொதுப்பணிக் கழகமோ அன்றி யூனியன் பொதுப் பணிக் கழகமோ எது வேண்டுமானுலும் நடத்தலாம். இத்தகைய பரீட் சையில் பெருவாரியான மாணவர்கள் ஒதுக்கப்பட்டுவிடுவார்கள். சிறு பான்மையானவர்களே, அதாவது காலி இடங்களின் எண்ணிக்கையைப் போல் இரண்டு அல்லது மூன்று மடங்கு எண்ணிக்கையுள்ளவர்களே மத்திய போட்டிப் பரீட்சைக்கு அனுப்பப்படுவார்கள். இப்பரீட்சை பொது மொழி யாகிய ஹிந்தியில் மட்டுமோ அன்றி ஆங்கிலத்திலுமோ நடைபெறலாம்.

இத்திட்டங்களுள் ஒரு திட்டப்படி முதல் பரீட்சையில் ராஜ்ய நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் ஒரு ஆண்டு வரையில் அவர்கள் ஹிந்தி அறியாதவர்களாக இருந்தால் ஹிந்தி மொழியில் பயிற்சி அளிக்கப்படுவார் கள். இம்முறையில் இறுதிப் பரீட்சை என்பது மிகவும் எளிமையாக்கப்பட்டு உள்ளது. நேரிடைச் சந்திப்பு, "ஆளுமை"த் தேர்வு ஆகியவற்றிற்கு அதிக இடம் கொடுக்கப்படுகிறது. முதல் தேர்வுக்கும் இறுதித் தேர்வுக்கும் இடையே ஓராண்டுக் காலம் இருப்பதனுல் இப்பரீட்சையில் "ஒதுக்கப்படுகின்ற வர்களை" ராஜ்யப் பொதுப்பணிகளில் ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல் லப்படுகிறது.

இரண்டாவது திட்டத்தின்படி முதல் போட்டிப் பரீட்சை ராஜ்ய நிலை அல்லது பிராந்திய நிலை என்ற நிலையில் ஏற்படுத்தாமல் பகுதி நிலையாக அதாவது தொடர்புள்ள மொழிகளை ஒன்றுசேர்த்து ஒரு பகுதியாக ஆக்கி அப்பகுதியிலிருந்து வரும் மாணவர்களுக்குப் பகுதிப் பரீட்சைகளாக வைக்க லாம் என்பதாகும்.

இத்திட்டத்தின் ஏனைய பகுதிகள் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இதில் விளைகின்ற குறைப்பாடுகள் எளிமையாக தீர்த்து வைக்கப்படலா மேனும் ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டியது ஒன்று உண்டு. ஒன்ருக நடைபெறும் அகில இந்தியப் போட்டிப் பரீட்சையை இத்திட்டங்களில் சொல்லப்பட்டபடி இரண்டு பகுதிகளாக பிரிப்பதன் மூலம் மிதப்படுத்துதல் பிரச்னை சரி செய்யப்பட்டுவிடுமா என்பதேயாகும்.

இந்நிலையில் மிதப்படுத்துதலில் உள்ள அடிப்படையை நன்கு கவனிக்க வேண்டும். அதிகப்படியான எண்ணிக்கை உள்ள மாணவர்கள் பரீட்சை எழுதுவதனுல் மிதப்படுத்துதலில் தொல்லை நேர்வதில்லை. ஆனுல் பல்வேறு வேறுபட்ட மொழிகள் இடைநிலை மொழிகளாக அமைந்து அவற் றில் மாணவர்கள் பரீட்சை எழுதிஞல் அப்பொழுதுதான் உண்மையான

பிரச்னை ஏற்படுகிறது. இதை மிதப்படுத்துதலில் உள்ள தொல்லை என்னவென்றால் பல்வேறு மொழி அறிவையும் பாடங்களின் விஷய அறிவையும் ஒரு சேரப்பற்ற பரீட்சகர்கள் கிடைப்பது கடினம். மாணவர்களின் எண்ணிக்கை மட்டும் மிதப்படுத்துதலுக்கு குறுக்கே நிற்பதில்லை. அதிகப்படியான எண்ணிக்கை மிதப்படுத்தும் வேலையை இன்னும் பெரியதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் ஆக்குமே தவிர வேறில்லை. பல்வேறு பல்கலைக் கழகப் பரீட்சைகளில் பத் ாயிரக் கணக்கான மாணவர்கள் பரீட்சை எழுதினாலும் மிதப்படுத்தும் வேலை இப்பொழுது நடைப்பெற்றுக் கொண்டுதான் வருகிறது. எத்தனை மொழிகளில் பரீட்சை எழுதப்படுகின்றதோ அத்தனை மொழிகளையும் அந்த விஷயங்களையும் அறிந்த பரீட்சகர்களைச் சேகரிப்பதிலேயே மிதப்படுத்துதலின் தொல்லை அமைந்துள்ளது.

இப்பரீட்சையை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பதனால் இப்பிரச்னை தீர்ந்துவிடாது. முதல் பரீட்சையின் மூலம் பலர் ஒதுக்கிவிடப்படுவார்கள். ஆதலால் இறுதிப் பரீட்சையில் வரும் விடைத்தாள்கள் இன்றுள்ளது போல ஆயிரக்கணக்கில் அமையாமல் நூற்றுக் கணக்கிலேயே நின்றுவிடும். இறுதிப் பரீட்சை வெறும் "தகுதிப் பரீட்சையாக" இல்லாமல் உண்மையான போட்டிப் பரீட்சையாக அமைவதனால் மிதப்படுத்தும் பிரச்னை இந்த இரண்டாவது பரீட்டையிலும் இருக்கத்தான் செய்யும். திருத்தப்படும் விடைத்தாள்கள் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும் இப்பிரச்னை இருந்தே தீரும் பொதுவான இடைநிலையாகிய ஹிந்தி (அல்லது ஆங்கிலம்) இவற்றில் நடைபெறும் இந்தப் பரீட்சை வெறும் "ஆளுமைத் தேர்வு" ஆக இருந்தாலொழிய எந்த இடைநிலை மொழியின் மூலம் மாணவர் பரீட்சை எழுதுகிறாரோ அந்த மொழியில் அவருக்குள்ள சக்தியை சோதிப்பதாகவே அமைந்துவிடும். இப்பொழுதுள்ளது போல இப்பரீட்சை எழுத்து நிலையில் கடினமாக இருக்குமேயானால் அவருடைய மொழி அறிவையும் சேர்த்தே சோதனை செய்ய நேரிடும். இறுதியாக நடைபெறுகின்ற இப்பரீட்சை முடிவாக அமையவேண்டும். இதுவே முடிவான தேர்வாக அமையுமேயானால் மாணவர்கள் எந்த எந்த மொழியின் மூலம் தம் பாடங்களைக் கற்றார்களோ அந்த மொழியின் மூலம் அவர்கள் இப்பரீட்சையையும் எழுத வேண்டும். அவ்வாறு எழுதினால் "மிதப்படுத்தும்" பிரச்னை முன்னே நிற்கின்றது. இவ்வாறு இல்லாமல் இப்பரீட்சையைத் தகுதிப் பரீட்சையாக மட்டும் வைத்து மாணவர்களுக்குள்ள மொழி அறிவைப் பெரிதாகப் பாராட்டாமலும் விட்டுவிடலாம். (இத்தகைய நிலையில் நடைபெறும் வாய் மொழிப் பரீட்சையும் கூட கூட மாணவருடைய மொழி அறிவைச் சோதிப்பதாகவே இருக்கும். இதனையும் நீக்கிவிட வேண்டுமானால் இவ்வாய் மொழிப் பரீட்சையும் மாணவருடைய சொந்த மொழிகளிலேயே நடைபெற வேண்டும்.). இவ்வாறு பரீட்சையை வெறும் தகுதித் தேர்வாக செய்வதானால் இத்தேர்வு ராஜ்யங்களில் அல்லது பிராந்தியங்களில் நடைப்பெற்றதாகவே கருதப்படும். வேறொரு வகையாகக் கூறுமிடத்து இதனால் விளைந்த பயன் பங்குமுறைத் தேர்வில் விளைந்த பயனாகவே கருதப்படும். இந்தப் பங்குமுறை பிராந்திய அளவில், அல்லது ராஜ்ய அளவில் அல்லது பிராந்திய மொழிகளின் அளவில் எந்த அளவில் வேண்டுமானாலும் நடைப்பெற்று இருக்கலாம். மாணவர்கள் பல்வேறு பிராந்திய மொழிகளின் மூலம் தங்கள் பாடங்களைக் கற்றுள்ளார்கள். அந்தப் பாடங்களில் அவர்கள் பெற்றுள்ள தகுதியை ஒருவரோடொருவர் ஒப்பிட வேண்டுமேயானால் ஒரே பொதுப் போட்டிப் பரீட்சை இருக்கவேண்டும். ஒரு பொதுப் போட்டிப் பரீட்சையில் பல்வேறு மொழிகளின் மூலம் விடைகள் தரப்படுமேயானால் அம்மொழிகள் அனைத்தையும் அறிந்த பரீட்சகர்கள் அகப்படாத நிலையில் மிதப்படுத்துதல் என்பது இயலாத காரியம். முதற் பரீட்சையாக ஒன்றை வைத்து எண்ணிக்கையை குறைத்து விடுவதனால் தர்மசங்கடமான இந்த நிலை குறைந்துவிடப் போவதில்லை.

பிற்சேர்க்கை 12

(விரிவு பகுதி 4, பாரா 4-ம் 18-ம்.)

இந்திய யூனியனின் பல்வேறு ராஜ்யங்களிலும் 1951 ஜனக் கணக்குப்படி "ஆங்கில அறிவு பெற்றவர்" பற்றிய அட்டவணை.

ராஜ்யங்கள்.	ஜனத்தொகை.	கற்றவர்.	ஆங்கிலம் கற்றவர் (எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்குச் சமமான ஒன்று).	மூன்றுவது பகுதியில் 4-வது பகுதியின் சதவிகிதம்.	2-வது பகுதியில் 4-வது பகுதியின் சதவிகிதம்.	குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
அகில இந்தியா ..	356,691,760	59,229,862	3,796,408	6.41	1·06	சந்திர நாகூர் சிக்கிம் நீங்கலாக.
1 ஆந்திரா	..	..	..	..	..	..
2 அஸ்ஸாம்	9,043,707	1,633,753	73,496	4·49	0·81	
3 பீஹார்	40,225,947	4,921,634	263,625	5·35	0·65	
4 பம்பாய்	35,956,150	8,829,528	458,307	5·19	1·27	
5 மத்திய பிரதேஷ்	21,247,533	2,859,187	141,185	4·93	0·66	
6 சென்னை	57,016,002	10,996,348	569,851	5·19	0·10	
7 ஒரிஸா	14,645,946	2,313,431	63,178	2·73	0·43	
8 பஞ்சாப்	12,641,205	2,038,699	324,855	15·93	2·56	
9 உத்தர பிரதேஷ்	63,215,742	6,825,072	518,326	7·59	0·82	
10 மேற்கு வங்காளம்	24,810,308	6,087,797	597,424	9·81	2·41	
11 ஹைதராபாத்	18,655,108	1,708,308	99,033	5·79	0·53	
12 ஜம்மு அண்டு காஷ்மீர்	..	..	..	..	..	

ராஜ்யங்கள். (1)	ஜனத்தொகை. (2)	கற்றவர். (3)	ஆங்கிலம் கற்றவர் (எஸ்.எஸ்.எல்.சி. அல்லது அதற்குச் சமமான ஒன்று). (4)	மூன்றுவது பகுதியில் 4-வது பகுதியின் சதவிகிதம். (5)	2-வது பகுதியில் 4-வது பகுதியின் சதவிகிதம. (6)	குறிப்பு. (7)
13 மத்திய பாரத்	7,954,154	860,402	45,197	5·25	0·56	
14 மைசூர்	9,074,972	1,867,492	131,319	7·03	1·44	
15 பெப்ஸு	3,493,685	418,797	38,022	9·07	1·08	
16 ராஜஸ்தான்	15,290,797	1,285,693	68,311	5·31	0·44	
17 சௌராஷ்ட்ரா	4,137,359	764,107	29,072	3·80	0·70	
18 திருவாங்கூர்-கொச்சின்	9,280,425	4,307,360	162,170	3·76	1·75	
19 அஜ்மீர்	693,372	139,210	18,260	13·11	2·63	
20 போப்பால்	836,474	68,335	3,611	5·28	0·43	
21 கூர்க்கு	229,405	62,430	2,857	4·57	1·24	
22 டெல்லி	1,744,072	669,075	162,678	24·30	9·32	
23 ஹிமாச்சல பிரதேஷ்	1,109,466	85,509	6,776	7·92	0·61	
24 கட்ச்	567,606	96,816	1,570	1·62	0·27	
25 மணிப்பூர்	577,635	65,895	1,638	2·49	0·28	
26 திருப்புரா	639,029	99,197	5,559	5·60	0·86	
27 விந்திய பிரதேஷ்	3,574,690	217,809	9,628	4·42	0·27	
28 அந்தமான் அண்டு நிக்கோபார் தீவுகள்	30,971	7,980	460	5·76	1·48	
தென்னிந்தியா—அதாவது, சென்னை, மைசூர், திருவாங்கூர்-கொச்சின் அண்டு கூர்க்கு.	75,600,804	17,233,630	376,095	5·08	1·15	
சென்னை (ஆந்திரப் பிரிவினைக்குப் பிறகு)	35,734,849	7,800,030	400,175	5·13	1·12	
ஆந்தரா	20,507,801	3,107,958	165,256	5·32	0·81	
மைசூர் (பல்லாரி தாலுக்கா உள்பட)	9,848,684	1,955,852	135,739	6·94	1·38	

பிற்சேர்க்கை 13

இந்திய அரசியல் அமைப்பில் மொழி பற்றிக் குறிக்கப் பட்டுள்ள சில பிரத்தியேகமான எற்பாடுகள்.

பிரிவு 3.

பண்பாடு, கல்வித் துறை ஆகியவற்றின் உரிமைகள்.

29. சிறுபான்மையினரின் அக்கரைகளைப் பாதுகாத்தல்.—(1) இந்திய எல்லையில் வாழ்ந்து வருகின்ற எந்த ஒரு சமுதாயமும் தமக்கெனத் தனிப்பட்ட மொழியும், எழுத்துக்களும், பண்பாடும் பெற்றிருப்பின் அதனைக் காத்துக்கொள்ள உரிமை பெறுகின்றனர்.

(2) ராஜ்யம் நடத்தும் பள்ளிகளிலோ அல்லது ராஜ்யத்தின் பண உதவி பெற்று நடைபெறும் அமைப்புக்களிலோ சேர்ந்து கற்பதற்குச் சமயம், இனம், ஜாதி, மொழி ஆகிய இவற்றுள் ஒன்றோ அன்றி அனைத்தின் காரணமாகவோ எந்த ஒரு பிரஜையும் அனுமதி மறுக்கப்படமாட்டார்.

30. கல்வி அமைப்புக்களை நிறுவவும் அவற்றை ஆட்சி செய்யவும் சிறுபான்மையினருக்குள்ள உரிமை.—(1) எல்லாச் சிறுபான்மையினரும், அவர்கள் சமய ரீதியில் அல்லது மொழி அடிப்படையில் எந்த அடிப்படையில் சிறுபான்மையினராக இருப்பினும் அவர்களுக்கு விருப்பமான கல்வி அமைப்புக்களை நிறுவி ஆட்சி செய்வதற்கு உரிமை பெறுகின்றனர்.

(2) மொழி அடிப்படையிலோ அல்லது சமய அடிப்படையிலோ உள்ள ஒரு சிறுபான்மை இனத்தாரின் ஆட்சிக்கு உட்பட்டு இருக்கிறது என்ற காரணத்தால் ஒரு கல்வி அமைப்புக்கு ராஜ்ய அரசாங்கம் உதவியை மறுக்க முடியாது.

பிரிவு 5.

பகுதி 2—விதி 120.

120. பாராளுமன்றத்தில் பயன்படுத்த வேண்டிய மொழி.—(1) பிரிவு 18-ல் கூறப்பட்டுள்ளவற்றைப் பற்றிக் கவலைப்படாமலும் விதி 348-ஐ ஒட்டியும் பாராளு மன்ற நடை முறைகள் ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் நடைபெறும்.

ராஜ்ய சபைத் தலைவரோ அல்லது மக்கள் சபைத் தலைவரோ அல்லது இவ்விரண்டு தலைமைப் பதவிகளிலும் குறிப்பிட்ட நேரத்தில் யார் அமர்ந்துள்ளார்களோ அவர்கள் ஒரு தனிப்பட்ட நபர் தம்முடைய கருத்தை ஹிந்தியிலோ ஆங்கிலத்திலோ வெளியிட முடியாதபொழுது அவருடைய தாய்மொழியில் பேசுமாறு உத்தரவு இடலாம்.

(2) பாராளு மன்றம் வேறு வகையாகச் சட்டஞ் செய்தாலொழிய அரசியல் அமைப்புத் தொடங்கி பதினைந்து ஆண்டுகள் கழித்து இவ்விதியில் இறுதியாகவுள்ள "அல்லது ஆங்கிலத்திலும்" என்ற சொல் நீக்கப்பட்டதாகவே கருதப்படும்.

பிரிவு 6

பகுதி 3—விதி 210.

210. சட்ட மன்றங்களில் பயன் படுத்தவேண்டிய மொழி.—(1) பிரிவு 18-ல் கூறப்பட்டுள்ளவற்றைப் பற்றிக் கவலைப்படாமலும் விதி 348-ஐ

ஒட்டியும் ஒரு ராஜ்யத்திலுள்ள சட்ட மன்றங்களில் வழங்கப்படும் மொழி அந்த ராஜ்யத்தின் ஆட்சி மொழி (கள்) ஆகவோ அல்லது ஹிந்தியாகவோ அல்லது ஆங்கிலமாகவோ இருக்கலாம்.

சட்ட மன்ற அக்ராசனரோ அல்லது சட்டக் கௌன்சில் தலைவரோ அல்லது இவ்விரண்டு தலைமைப் பதவிகளிலும் குறிப்பிட்ட நேரத்தில் யார் அமர்ந்துள்ளார்களோ அவர்கள் ஒரு தனிப்பட்ட நபர் தம்முடைய கருத்தை மேலே கூறிய மூன்று மொழிகளிலும் தெரிவிக்க முடியாதபொழுது அவருடைய தாய் மொழியில் பேசுமாறு ஆணையிடலாம்.

(2) அந்த ராஜ்யச் சட்ட மன்றம் வேறு வகையாகச் சட்டஞ் செய்தா லொழிய இவ்விதியில் இறுதியாகவுள்ள "அல்லது ஆங்கிலத்திலும்" என்ற சொல் நீக்கப்பட்டதாகவே கருதப்படும்.

பிரிவு 17.

ஆட்சி மொழி.

(விதிகள் 343 முதல் 351 வரை.)

பகுதி 1—யூனியன் மொழி.

343. யூனியன் ஆட்சி மொழி.—(1) யூனியன் ஆட்சிமொழி தேவ நாகரியில் எழுதப்படும் ஹிந்தி மொழியாக இருக்கும்.

யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் பயன்படுத்தும் எண்களின் வடி வங்கள் இந்திய எண்களின் பன்னாட்டு வடிவங்களேயாகும்.

(2) மேலே பிரிவினை (1)ல் கூறியது பற்றிக் கவலைப்படாமல் இந்த அரசியல் அமைப்புத் தொடங்கி 15 ஆண்டுகள் வரை இவ்வமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் யூனியன் ஆட்சி விவகாரங்களில் எந்தப் பகுதி களுக்கு ஆங்கிலம் பயன்பட்டு வந்ததோ அந்தப் பகுதிகளுக்கு ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

மேலே சொல்லிய கால அளவில் ஜனாதிபதி ஆங்கிலத்தோடு சேர்த்து ஹிந்தி மொழியையும் எண்களின் பன்னாட்டு வடிவத்தோடு சேர்த்துத் தேவநாகரி எண்களையும் யூனியன் ஆட்சி விவகாரங்களில் எந்த ஒரு பகுதி யிலாவது பயன்படுத்த விரும்பினால் பிரத்யேகமான ஆணையின்மேல் பயன் படுத்தச் செய்யலாம்.

(3) இவ்விதியில் கூறப்பட்டுள்ளவற்றைக் கவலைப்படாமல் பாராளு மன்றம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு கீழ்க்கண்டவற்றை வழங்குமாறு சட்டஞ் செய்யலாம் :—

(அ) ஆங்கில மொழியையும் அல்லது

(ஆ) எண்களின் தேவநாகரி வடிவங்களையும் சட்டத்தால் குறிப் பிடப்படும் எந்த ஒரு பகுதிக்கும் பயன்படுத்தலாம்.

344. ஆட்சி மொழி பற்றிய கழகமும் குழுவும்.—(1). இந்த அரசியல் அமைப்புத் தொடங்கிய ஐந்து ஆண்டுகள் கழித்தும் அதனை அடுத்து, அரசியல் அமைப்புத் தொடங்கிய பத்து ஆண்டுகள் கழித்தும் ஜனாதிபதி தம் ஆணையின்மேல் ஒரு கழகத்தை நிறுவலாம். 8-வது ஷெட்யூலில் குறிக்கப்பட்ட பல்வேறு மொழிகளின் பிரதிநிதிகளாகவுள்ள உறுப் பினர்களும் ஒரு தலைவரும் அக்கழகத்தில் இருப்பார்கள். அக்கழகம் கீழ்க்கண்ட முறையில் பணியாற்றும்.

(2) ஜனாதிபதிக்குக் கீழ்க்கண்ட விஷயங்கள் பற்றி இக்கழகம் சிபாரிசு செய்ய வேண்டியது கடமையாகும் :—

(அ) யூனியன் ஆட்சி விவகாரங்களுக்குப் படிப்படியாக ஹிந்தி மொழியைப் பயன்படுத்துதல்.

(ஆ) யூனியன் ஆட்சி விவகாரங்களில் ஒரு சிலவற்றிற்கோ அனைத்திற்குமோ இப்பொழுது பயன்பட்டுவரும் ஆங்கிலத்தைப் படிப்படியாகக் குறைத்தல்.

(இ) விதி 348-ல் சொல்லப்பட்டுள்ள காரியங்கள் அனைத்திற்குமோ, சிலவற்றிற்கோ எந்த மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்பதை ஆராய்தல்.

(ஈ) யூனியன் விவகாரங்களில் குறிப்பிட்டவற்றிற்குப் பயன் படுத்த வேண்டிய எண்களைப்பற்றி ஆராய்தல.

(உ) இவற்றை அல்லாமல் யூனியனுக்கும் ஒரு ராஜ்யத்திற்கும் இடையேயும் இரண்டு ராஜ்யங்களின் இடையேயும் பயன்படவேண்டிய மொழி யாது என்பது பற்றியும், இன்னும் யூனியன் ஆட்சி மொழிபற்றி ஜனாதிபதி இக்கழகத்தை ஏதேனும் விசாரிக்க விரும்பினால் அவை பற்றியும் இக்கழகம் சிபாரிசு செய்யவேண்டும்.

(3) உட்பிரிவு (2)-ன்படி இக்கழகம் தன் சிபாரிசுகளைச் செய்யும் பொழுது இந்தியாவின் தொழில், பண்பாடு, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றை மனத்திற்கொண்டு, ஹிந்தி மொழி பேசாத பிராந்தியங்களில் உள்ளவர்கள் பொதுப் பணிகளுள் நுழைவதற்குரிய வசதி முதலானவற்றையும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளையும் மனத்திற் கொண்டு தன் சிபாரிசுகளைச் செய்யவேண்டும்.

(4) 30 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவும் நிர்மாணிக்கப்படும். இக்குழுவில் மக்கள் சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 20 உறுப்பினர்களும் ராஜ்ய சபையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 உறுப்பினர்களும் இருப்பார்கள். மக்கள் சபையும் ராஜ்ய சபையும் இவ்வுறுப்பினர்களைத் தங்களுக்குள்ளாக மாற்று விகிதாச்சார வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுப்பார்கள்.

(5) இக்குழு கழகம் உட்பிரிவு (1)-ன்படி செய்த சிபாரிசுகளை ஆராய்ந்து ஜனாதிபதிக்குத் தன் முடிவுகளைத் தெரிவிக்கும்.

(6) 348-வது விதியில் சொல்லப்பட்டுள்ளவற்றைப் பற்றிக் கவலைப் படாமல் உட்பிரிவு (5)-ல் சொல்லப்பட்ட அறிக்கையை ஆராய்ந்த பிறகு ஜனாதிபதி விரும்பினால் அந்த அறிக்கையை முழுவதும் ஒப்புக்கொண்டோ அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொண்டோ அதன்படி ஆணையிடலாம்.

பகுதி 2—பிராந்திய மொழிகள்

345. ஒரு ராஜ்யத்தின் ஆட்சி மொழி(கள்).—விதி 346-லும், 347-லும் சொல்லப்பட்டவற்றிற்கு இணங்க ஒரு ராஜ்ய சட்ட மன்றம் அந்த ராஜ்யத்தில் வழங்கும் ஒரு மொழியையோ அன்றிப் பலவற்றையோ அன்றி ஹிந்தியையோ அந்த ராஜ்யத்தின் ஆட்சி விவகாரங்களில் ஒன்றிற்கோ அன்றிப் பலவற்றிற்கோ பயன்படுத்தச் சட்டம் செய்யலாம்.

அந்த ராஜ்ய சட்ட மன்றம் வேறு வகையாகச் சட்டம் செய்தாலொழிய இந்த அரசியல் அமைப்பு அமுலுக்கு வருவதற்கு முன்னர் அந்த ராஜ்யத்தின் எந்த விவகாரங்களுக்கு ஆங்கிலம் பயன்பட்டு வந்ததோ அதே முறையில் அந்த ஆட்சி விவகாரங்களுக்கு ஆங்கிலமே தொடர்ந்து பயன்பட்டு வரும்.

346. ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையேயும் அல்லது ஒரு ராஜ்யத்திற்கும் யூனியனுக்கும் இடையேயும் வழங்க வேண்டிய ஆட்சி மொழி.—இந்தச் சமயத்தில் யூனியன் ஆட்சி விவகாரங்களுக்கு எந்த மொழி பயன்படுத்தப்படுகிறதோ அந்த மொழியே இரண்டு ராஜ்யங்களின் இடையேயும் ஒரு ராஜ்யத்திற்கும் யூனியனுக்கும் இடையேயும் ஆட்சி மொழியாகப் பயன்பட்டுவரும்.

இரண்டு ராஜ்யங்களோ அன்றி அதற்கு மேற்பட்டவைகளோ தங்களுக்குள் ஹிந்தி மொழியை வழங்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டால் அவைகள் ஹிந்தி மொழியைப் பயன்படுத்தலாம்.

347. ஒரு ராஜ்யத்திலுள்ள ஒரு பகுதியினரால் பேசப்படும் மொழி பற்றிய தனிப்பட்ட ஏற்பாடு.—ஒரு ராஜ்யத்திலுள்ள ஜனத்தொகையில் தக்க அளவுடைய ஒரு கூட்டம் தாங்கள் பேசும் மொழியை அந்த ராஜ்யம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விரும்பி அதற்கு ஜனாதிபதி ஆணையிட வேண்டும் என்று விரும்பினால், அவ்விருப்பம் நியாயமானதென்று ஜனாதிபதி ஏற்றுக்கொண்டால் அந்த ராஜ்ய முழுவதிலுமோ அன்றி ஒரு பகுதியிலோ ஜனாதிபதி குறிப்பிடும் சில காரியங்களுக்கு அம்மொழியை அதிகார பூர்வமாக அந்த ராஜ்யம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆணையிடலாம்.

பகுதி 3—உயர் நிதிமன்றம், மிக உயர் நிதிமன்றம் ஆகியவற்றின் மொழி

348. மிக உயர் நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றங்களிலும் சட்டங்களுக்கும் சட்ட மூலங்களுக்கும் பயன்படவேண்டிய மொழி.—(1) இப்பகுதியில் மேலே சொல்லியுள்ளவற்றில் எதற்கும் கவலைப்படாமல், பாராளு மன்றம் தனியே சட்டம் செய்கின்ற வரையில்—

(அ) மிகஉயர் நீதி மன்றத்திலும் ஒவ்வொரு உயர் நீதி மன்றத்திலும்,

(ஆ) அதிகார பூர்வமான—

(1) எல்லாச் சட்டங்களும், திருத்தங்களும் மக்கள், ராஜ்ய சபைகளிலும் ஒரு ராஜ்ய சட்ட மன்றம், கௌன்சில் ஆகிய இடங்களில் எங்கு நுழைக்கப்பட்டாலும்,

(2) முறையில் பாராளு மன்றம் நிறைவேற்றுகின்ற சட்டங்களும் ராஜ்யத்தின் சட்ட மன்றம் நிறைவேற்றுகின்ற சட்டங்களும் ஜனாதிபதி அல்லது கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர் ஆகியவர்கள் இடுகின்ற ஆணைகளும்,

(3) பாராளு மன்றமும் ராஜ்ய சட்ட மன்றமும் செய்கின்ற ஆணைகள், உத்தரவுகள், துணைச் சட்டங்கள் ஆகிய அனைத்தும் ஆங்கிலத்திலேயே இருந்துவரும்.

(2) உட்பிரிவு (1) துணைப்பிரிவு (அ) வில் சொல்லப்பட்ட எதனையும் மீறி ஒரு ராஜ்யத்தின் கவர்னரோ அல்லது ராஜப் பிரமுகரோ ஜனாதிபதியின் உத்தரவு பெற்று ஹிந்தி மொழியை அல்லது அந்த ராஜ்யத்தில் வழங்கும் ஆட்சி மொழியை உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் பயன்படுமாறு செய்யலாம் :

ஆனால் இங்குச் சொல்லியுள்ள எதுவும் அந்த உயர்நீதிமன்றம் தரும் தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகிய எதற்கும் செல்லுபடியாகாது.

(3) உட்பிரிவு (1) துணைப்பிரிவு (ஆ)-வில் சொல்லப்பட்ட எதனையும் மீறி ஒரு ராஜ்யத்தின் சட்ட மன்றம் ஆங்கிலத்தை அல்லாத பிற மொழியை அந்தச் சட்ட மன்றம் நிறைவேற்றும் சட்டம், சட்ட மூலம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்துமே யானாலும் அந்த ராஜ்யத்தின் கவர்னர் அல்லது ராஜப் பிரமுகர் ஆணைகளை வெளியிட்டாலும் அந்த உட்பிரிவின் (3) பிரிவின்படி வெளியாகும் சட்டம், ஒழுங்கு முறை, துணைச் சட்டம் ஆகியவை வெளியிடப்பட்டாலும் இவை அனைத்திற்கும் ஆங்கில மொழி பெயர்ப்பு வெளியிடப்படவேண்டும். அந்த ஆங்கில மொழி பெயர்ப்பு கவர்னரின் அதிகார பூர்வமான கையெழுத்தின் கீழ் அந்த ராஜ்யத்தின் கெஜெட்டில் வெளியிடப்பட்டு அதுவே அதிகார பூர்வமானதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

349. மொழி சம்பந்தமான சில பிரத்யேகமான ஏற்பாடுகள்.—இந்த அரசியல் அமைப்புத் தொடங்கி நடைபெறும் 15 ஆண்டு இடைக்காலத்தில் விதி 348 உட்பிரிவு (1)-ல் கூறப்பட்ட எந்த விஷயத்திற்கும் பயன்படுத்த வேண்டிய மொழியைப்பற்றி எந்த விதமான சட்ட மூலத்தையும், திருத்தத்தையும் பாராளு மன்றத்தின் எந்த ஒரு சபையிலும் கொண்டுவரக் கூடாது. அவ்வாறு கொண்டுவருவதானால் ஜனாதிபதியின் உத்தரவு பெற்றே கொண்டுவரவேண்டும். அந்நிலையில் ஜனாதிபதி விதி 344 உட்பிரிவு (1)-ன்படி நிறுவப்பட்ட கழகத்தின் சிபாரிசுகளையும் அதே விதி உட்பிரிவு (4)-ன்படி நியமிக்கப்பட்ட குழு கொடுக்கின்ற அறிக்கையையும் ஆராய்ந்த பிறகே தம் உத்தரவைத் தருவார்.

பகுதி 4—பிரத்யேக வழிகாட்டிகள்

350. துயரம் துடைக்கும் விண்ணப்பங்களில் பயன்படவேண்டிய மொழி.—எந்த ஒரு மனிதனும் தனக்கு நேர்ந்துள்ள எந்தத் துயரத்தை போக்கிக்கொள்ள வேண்டி யூனியனின் எந்த அதிகாரிக்கும் அல்லது ராஜ்யத்திலுள்ள எந்த அதிகாரிக்கும் விண்ணப்பம் செய்வதானாலும் யூனியன் அல்லது ராஜ்யத்தில் வழங்குகின்ற எந்த மொழியிலும் அதனை எழுதலாம்.

351. ஹிந்தி மொழி வளர்ச்சி பற்றிய வழிகாட்டி.—ஹிந்தி மொழியை வளர்த்துப் பரப்பவேண்டியது யூனியன் அரசாங்கத்தின் கடமையாகும். அங்ஙனம் வளர்க்கும்பொழுது இந்தியாவிலுள்ள பல்வேறு கலப்புப் பண்பாட்டின் எல்லா உறுப்புக்களையும் வெளியிடும் கருவியாக அம்மொழி அமையுமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். அம்மொழியின் மரபு கெடாதபடி 8-வது ஷெட்யூலில் குறிக்கப்பெற்றுள்ள எல்லா மொழிகளிலிருந்தும் ஹிந்துஸ்தானி மொழியிலிருந்தும், ஹிந்தி மொழி வளம்பெறக்கூடிய முறையில் வடிவங்கள், நடைகள், சொல்லாட்சிகள் ஆகியவற்றைப் பெற்று வளப்படுத்தவேண்டும். தேவையும் விருப்பமும் உள்ளபொழுது ஹிந்தியின் நெடுங்கணக்கை வளர்க்க முதலாவது வடமொழியிலிருந்தும் அடுத்தபடியாக ஏனைய மொழிகளிலிருந்தும் கடன் வாங்கலாம்.

எட்டாவது ஷெட்யூல்

[விதி 344 (1)-ம், விதி 351-ம்.]

மொழிகள்

1. அஸ்ஸாமிஸ்
2. வங்காளம்.
3. குஜராத்தி.
4. ஹிந்தி.
5. கன்னடம்.
6. காஷ்மீரி.
7. மலையாளம்.
8. மராத்தி.
9. ஒரியா.
10. பஞ்சாபி.
11. சமஸ்கிருதம்.
12. தமிழ்.
13. தெலுங்கு.
14. உருது.

பிற்சேர்க்கை 15

(குறிப்பு.—பகுதி 12-ல் 5-வது பாராவின் கடைசிப் பகுதி.)

ஆண்டுதோறும் இந்திய அரசாங்கத்தில் பல்வேறு அலுவல் துறைகளிலும் இருக்கின்ற அலுவலகளின் எண்ணிக்கைப் பட்டியல்

கீழேயுள்ள இரண்டு பட்டியல்களும் 1954–55 ஆண்டுகளின் இறுதியில் மத்திய அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும் நிரப்பப்பட்டதும், காலியாக இருந்ததுமான இடங்களைக் காட்டுகின்றன. இந்த எண்ணிக்கைகள் ஆண்டுதோறும் மத்திய அரசாங்கத்தில் கிடைக்கும் அலுவல்களின் அளவு பற்றிய ஒரு குறிப்பாகும்.

இந்தக் குறிப்பைத் தரும்பொழுது, இயக்குனர், வேலைச்செய்தி நிலைய மறு ஏற்பாட்டுத் துறை, புது டெல்லி, கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் :—

" . . . . மத்திய அரசாங்க அலுவல்கள் நாடு முழுவதிலும் உள்ளவர்கட்கு ஏறத்தாழச் சமமாகவே பங்கிடப்பட்டுள்ளது. . . இதில் ஓரளவு சதவிகிதமே டெல்லியில் இருக்கிறது. சமீபத்தில் எடுத்த ஒரு கணக்கின்படி டெல்லியிலுள்ள மத்திய அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 90,000 (மொத்த மத்திய அரசாங்க ஊழியர் எண்ணிக்கை 734,000) இதனுடன் டெல்லியில் அமைந்துள்ள வடஇந்திய ரயில்வேயில் 11,000 ஊழியர் அலுவல் பார்க்கின்றனர். எஞ்சியுள்ள ஊழியர்களில் . . . . பொதுப் பணிக் கழகத்தின் மூலமாகவும் பொதுத் தேர்வுகள் மூலமாகவும் அகில இந்திய முறையில் தேர்ந்தெடுக்கப்படும் அலுவல்கள் போக மீதமுள்ளவை நாட்டின் பிற பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கேயே அலுவல் பார்க்கவும் ஏற்பாடு ஆகியுள்ளது."

அட்டவணை 1

(1) 1954-ல் மத்திய அரசாங்க அலுவலகங்களில் வேலை தேடித் தரும் நிலையங்கள் மூலமாகவும் மற்றவை மூலமாகவும் நிரப்பப்பட்ட அலுவல்கள், (2) 1954-ல் காலியாக இருந்த ஸ்தானங்கள். (3) 31-12-1954-ல் மத்திய அரசாங்க அமைப்புக்களிலும் அலுவலகங்களிலும் இருந்த அலுவலாளர் எண்ணிக்கை இவற்றைக் காட்டும் பட்டியல்.

அலுவலின் இயல்பு.	1954-ல் நிரப்பப்பட்ட ஸ்தானங்கள்.[1]	1954 முடிவில் காலியாக இருந்த ஸ்தானங்கள்.[1]	1954 முடிவில் (சீரியல் துறையில் மட்டும்) இருந்த மொத்த அலுவலாளர்.[2]
(1)	(2)	(3)	(4)
1. கெஜட் பதிவு பெற்ற அலுவலர்கள்—			
(அ) ஆட்சித்துறை	792	545	6,145
(ஆ) நிர்வாகத்துறை	1,266	543	7,042
2. பதிவில்லா அலுவலர்கள்—			
(அ) ஆட்சித்துறை	633	94	9,677
(ஆ) நிர்வாகத்துறை	3,028	1,712	33,816

பின் இணைப்பு-XIV

குறிப்பு: அத்தியாயம் XIII. பாரா 8.

இந்திய அரசியலமைப்பின் 8 வது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிகளை எழுதுவதில் உபயோகப்படுத்தப்படும் எழுத்துக்கள்

சமஸ்கிருதம்	अ आ इ ई उ ऊ ऋ ॠ ऌ ॡ ए ऐ ओ औ अं अः क ख ग घ ङ च छ ज झ ञ ट ठ ड ढ ण त थ द ध न प फ ब भ म य र ल व श ष स ह ळ क्ष ज्ञ
மராத்தி	अ आ इ ई उ ऊ ऋ ॠ ऌ ॡ ए ऐ ओ औ अं अः क ख ग घ ङ च छ ज झ ञ ट ठ ड ढ ण त थ द ध न प फ ब भ म य र ल व श ष स ह ळ क्ष ज्ञ
ஹிந்தி (தேவநாகரி)	अ आ इ ई उ ऊ ऋ ॠ ऌ ए ऐ ओ औ अं अः क ख ग घ ङ च छ ज झ ञ ट ठ ड ढ ण त थ द ध न प फ ब भ म य र ल व श ष स ह ळ क्ष ज्ञ
குஜராத்தி	અ આ ઇ ઈ ઉ ઊ ઋ ૠ ઌ ૡ એ ઐ ઓ ઔ અં અઃ ક ખ ગ ઘ ઙ ચ છ જ ઝ ઞ ટ ઠ ડ ઢ ણ ત થ દ ધ ન પ ફ બ ભ મ ય ર લ વ શ ષ સ હ ળ ક્ષ જ્ઞ
பஞ்சாபி	ਅ ਆ ਇ ਈ ਉ ਊ ਏ ਐ ਓ ਔ ਅੰ ਅਃ ਕ ਖ ਗ ਘ ਙ ਚ ਛ ਜ ਝ ਞ ਟ ਠ ਡ ਢ ਣ ਤ ਥ ਦ ਧ ਨ ਪ ਫ ਬ ਭ ਮ ਯ ਰ ਲ ਵ ਸ਼ ਸ ਹ
காஷ்மீரி	𑆃 𑆄 𑆅 𑆆 𑆇 𑆈 𑆉 𑆊 𑆋 𑆌 𑆍 𑆎 𑆏 𑆐 𑆃𑆀 𑆃𑆂 𑆑 𑆒 𑆓 𑆔 𑆕 𑆖 𑆗 𑆘 𑆙 𑆚 𑆛 𑆜 𑆝 𑆞 𑆟 𑆠 𑆡 𑆢 𑆣 𑆤 𑆥 𑆦 𑆧 𑆨 𑆩 𑆪 𑆫 𑆬 𑆮 𑆯 𑆰 𑆱 𑆲 𑆑𑇀𑆰
வங்காளி	অ আ ই ঈ উ ঊ ঋ ৠ ঌ ৡ এ ঐ ও ঔ অং অঃ ক খ গ ঘ ঙ চ ছ জ ঝ ঞ ট ঠ ড ঢ ণ ত থ দ ধ ন প ফ ব ভ ম য র ল ব শ ষ স হ ক্ষ
அஸ்ஸாமி	অ আ ই ঈ উ ঊ ঋ ৠ ঌ ৡ এ ঐ ও ঔ অং অঃ ক খ গ ঘ ঙ চ ছ জ ঝ ঞ ট ঠ ড ঢ ণ ত থ দ ধ ন প ফ ব ভ ম য ৰ ল ৱ শ ষ স হ ক্ষ
ஒரியா	ଅ ଆ ଇ ଈ ଉ ଊ ଋ ୠ ଌ ୡ ଏ ଐ ଓ ଔ ଅଂ ଅଃ କ ଖ ଗ ଘ ଙ ଚ ଛ ଜ ଝ ଞ ଟ ଠ ଡ ଢ ଣ ତ ଥ ଦ ଧ ନ ପ ଫ ବ ଭ ମ ଯ ର ଲ ଵ ଶ ଷ ସ ହ କ୍ଷ
கன்னடம்	ಅ ಆ ಇ ಈ ಉ ಊ ಋ ೠ ಎ ಏ ಐ ಒ ಓ ಔ ಅಂ ಅಃ ಕ ಖ ಗ ಘ ಙ ಚ ಛ ಜ ಝ ಞ ಟ ಠ ಡ ಢ ಣ ತ ಥ ದ ಧ ನ ಪ ಫ ಬ ಭ ಮ ಯ ರ ಲ ವ ಶ ಷ ಸ ಹ ಳ ಕ್ಷ ಜ್ಞ
தெலுங்கு	అ ఆ ఇ ఈ ఉ ఊ ఋ ౠ ఌ ౡ ఎ ఏ ఐ ఒ ఓ ఔ అం అః క ఖ గ ఘ ఙ చ ఛ జ ఝ ఞ ట ఠ డ ఢ ణ త థ ద ధ న ప ఫ బ భ మ య ర ల వ శ ష స హ ళ క్ష ఱ
தமிழ்	அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ க ங ச ஜ ஞ ட ண த ந ப ம ய ர ல வ ஷ ஸ ழ ள ஹ ற ன
மலையாளம்	അ ആ ഇ ഈ ഉ ഊ ഋ ൠ എ ഏ ഐ ഒ ഓ ഔ അം അഃ ക ഖ ഗ ഘ ങ ച ഛ ജ ഝ ഞ ട ഠ ഡ ഢ ണ ത ഥ ദ ധ ന പ ഫ ബ ഭ മ യ ര ല വ ശ ഷ സ ഹ ള ക്ഷ ഴ റ
உருது	ا ب پ ت ٹ ث ج چ ح خ د ڈ ذ ر ڑ ز ژ س ش ص ض ط ظ ع غ ف ق ک گ ل م ن و ہ ی ے

அலுவலின் இயல்பு.	1954-ல் நிரப்பப்பட்ட ஸ்தானங்கள்,[1]	1954 முடிவில் காலியாக இருந்த ஸ்தானங்கள்.[1]	1954 முடிவில் (சீரியல் துறையில் மட்டும்) இருந்த மொத்த அலுவலாளர்.[2]
(1)	(2)	(3)	(4)
3. அமைச்சுத் துறை—			
(அ) துணை, மூத்த எழுத்தாளர்கள்.	3,838	740	85,999
(ஆ) இளைய எழுத்தாளர்களும், தட்டெழுத்தாளர்களும் ..	6,451	3,086	73,390
(இ) விரைவுச் சுருக்கெழுத்தாளர்களும் தட்டெழுத்தாளர்களும்	645	101	4,678
4. நுணுக்கம் இல்லாத் தொழிலாளர்.	11,788	7,300	252,707
5. தொழில் துறை அலுவலர் ..	8,438	7,810	159,282
மொத்தம் ..	36,879	21,931	632,736

குறிப்பு —(1) இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சமாசாரம் சீரியல், பாதுகாவல் அமைப்புக்களிலிருந்து பெறப்பட்ட 1,775 தாக்கல்களிலிருந்து (சராசரி ஒரு மாதமொன்றுக்கு) தயாரிக்கப்பட்டதாகும். ஏறத்தாழ 25 முதல் 30 சத விகிதம் அமைப்புக்கள் தங்கள் தாக்கல்களை ஒழுங்காக அனுப்பாமையால் காலியிடங்கள் பற்றியும், நிரப்பப்பட்டதுபற்றியும் கொடுக்கப்பட்டுள்ள தகவல் முழுத்தன்மை பெற்றவையல்ல.

(2) வேலைச் செய்தி நிலையத்தின் மூலமாக ரயில்வேயில் நிரப்பப்பட்ட ஸ்தானங்களின் எண்ணிக்கை 1954-ம் வருஷத்தில் 17,506. இந்தத் தகவல் வேலைச் செய்தி நிலையம் தந்த விடையிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும்.

(3) 4-வது பத்தியில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை தொடர்ந்து இருந்துவராத அமைப்புக்கள் தவிர ஏனைய மத்திய அரசாங்க அமைப்புக்கள் அனைத்தினுடைய எண்ணிக்கையுமாகும். ஆனால் ரயில்வேயிலும், வெளி நாட்டிலுள்ள இந்தியத் தூதுவராலயங்களிலும் உள்ளவர்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை. பாதுகாவல் பகுதியிலுள்ள சீரியல் ஊழியர்களின் எண்ணிக்கையும் இதில் சேர்ந்துள்ளது.

---

[1] இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகா, ரயில்வே, தொடர்ந்து இராத அமைப்புகள் ஆகியவை நீங்கலாக இக்கணக்குத் தரப்பட்டுள்ளது.

[2] இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகாவின் எண்ணிக்கையை உளப்படுத்தியும், ரயில்வே, தொடர்ந்து இராத இலாக்காக்களைத் தள்ளியும் இது தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2

(1) 1955-ல் மத்திய அரசாங்க அலுவலகங்களில் வேலை தேடித்தரும் நிலையங்கள் மூலமாகவும் மற்றவை மூலமாகவும் நிரப்பப்பட்ட ஸ்தானங்கள், (2) 1955 இறுதியில் காலியாக இருந்த ஸ்தானங்கள், (3) 31-12-1955-ல் மத்திய அரசாங்க அமைப்புகளிலும் அலுவலகங்களிலும் இருந்த அலுவலாளர் எண்ணிக்கை இவற்றைக் காட்டும் பட்டியல்.

அலுவலின் இயல்பு.	1955-ல் நிரப்பப்பட்ட ஸ்தானங்கள்.[1]	1955-ன் முடிவில் காலியாக இருந்த ஸ்தானங்கள்.[1]	1955 முடிவில் (சீரியல் துறையில் மட்டும்) இருந்த அலுவலாளர் எண்ணிக்கை. தரைப்படையிலும் விமானப்படையிலும் இருந்த சீரியல் அலுவலாளர் நீங்கலாக.[2]	தரை, விமானப்படை அமைப்புக்களில் அலுவல் பார்க்கும் சீரியல் ஊழியர்கள்.		4, 5-வது பத்தியின் கூட்டு எண்.
(1)	(2)	(3)	(4)	(5)		(6)
அ. வழிமுறை அமைப்புக்கள்.				அ. வழிமுறை அமைப்புக்கள்.		
1. கெஜட் பதிவு பெற்ற ஊழியர்கள்—						
(அ) முதல் வகுப்பு	1,129	775	5,444	1. ஆட்சித் துறையும், நிர்வாகத் துறையும்.	12,768	
(ஆ) இரண்டாம் வகுப்பு	1,367	819	8,252			
2. பதிவுபெறாத ஊழியர்கள்—வகுப்பு 2—						
(அ) அமைச்சுத் துறை	979	424	15,199	2. அமைச்சுத் துறை ..	20,238	
(ஆ) நிர்வாகத் துறை	230	201	1,686			
(இ) தொழில் நுட்பத் துறை ..	332	343	1,153			
3. பதிவுபெறாத ஊழியர்—வகுப்பு 3.—						
(அ) அமைச்சுத் துறை	14,325	6,140	163,116	3. நிபுணர், அரை நிபுணர் ..	42,778	
(ஆ) நிர்வாகத் துறை	3,718	2,379	24,785			
(இ) தொழில் நுட்பத் துறை ..	6,973	7,133	72,613			
4. வகுப்பு 4.—						
(அ) அலுவலக ஊழியர்கள் ..	7,643	5,155	91,178	4. நிபுணர் அல்லாதவர் ..	100,012	
(ஆ) அரை நிபுணர்கள்	2,859	3,292	33,884			
(இ) ஏனையோர்கள்	5,033	5,405	54,736			
மொத்தம் ..	44,588	32,066	472,045		175,796	647,841

ஆ. வழிமுறை அல்லாத அமைப்புக்கள்—				ஆ. வழிமுறை அல்லாத அமைப் புக்கள்.	8,700	
(அ) இடைபாட்டிலிருந்து ஊதியம் பெறுபவர்.	3,795	111	10,088			
(ஆ) செய்த வேலைக்குக் கூலி பெறு பவர்.	1,894	1,508	16,349			
(இ) அன்றுடக் கூலி	3,001	1,974	29,028			
(ஈ) ஏனையோர்	651	334	11,538			
மொத்தம் ..	9,341	3,927	67,003		8,700	75,703
(அ) வும் (ஆ) வும் சேர்த்த மொத்தம் ..	53,929	35,993	539,048		184,496	723,544

[1] இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகாவும், ரயில்வேயும் நீங்கலாக.

[2] ரயில்வேயை நீக்கி இந்தியக் கணக்குத் தணிக்கை இலாகாவை மட்டும் உளப்படுத்தி.

குறிப்பு.—(1) இந்த அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள சமாசாரம் சீரியல், பாதுகாவல் அமைப்புக்களிலிருந்து பெறப்பட்ட 1,896 தாக்கல்களிலிருந்து (சராசரி மாதமொன்றுக்கு) தயாரிக்கப்பட்டதாகும். ஏறத்தாழ 25 முதல் 30 சத விகிதம் தங்கள் தாக்கல்களை ஒழுங்காக அனுப்பாமையால் காலி இடங்கள் பற்றியும், நிரப்பப் பட்டது பற்றியும் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் முழுத்தன்மை பெற்றவையல்ல.

(2) 1955-ம் ஆண்டில் வேலைச் செய்தி நிலையத்தின் மூலமாக ரயில்வேயில் நிரப்பப்பட்ட காலி ஸ்தானங்கள் 14,261. இந்தத் தகவல் வேலைச் செய்தி நிலையம் தந்த விடையிலிருந்து தயாரிக்கப்பட்டதாகும்.

(3) 4, 5-வது பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிக்கை ரயில்வே, வெளி நாட்டிலுள்ள இந்தியத் தூதுவராலயங்கள் ஆகியவை நீங்கலாக எல்லா மத்திய அரசாங்க அமைப்புக்களினுடைய ஊழியர் எண்ணிக்கையாகும்.

ஆட்சி மொழிக் கழகத்தின் செயளாலர் யு.எஸ்.ஆர். லுள்ள மொழிப் பிரச்னையை அறிவதற்குச் சிறிது காலம் அந்நாட்டுக்குச் சென்றபொழுது தாம் கண்டவைகள் பற்றிக் கூறியுள்ள குறிப்பு.

முகவுரை

1. ஆட்சி மொழிக் கழகம், தன் இந்திய அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் தன செயலாளரை யூ.எஸ்.எஸ்.ஆர்.-க்குச் சென்று இந்தியாவில் தோன்றியுள்ளது போன்ற மொழிப் பிரச்னையை அந்த நாட்டில் எங்ஙனம் தீர்த்து வைத்துள்ளார்கள் என்பதை அறிந்து வருமாறு கட்டளையிட்டது. இந்தியாவைப் போல யூ.எஸ்.எஸ்.ஆர்.-ரிலும் பற்பல மொழிகள் இருந்து வருகின்றமையால் பன் மொழிப் பிரச்னையை மிகவும் வெற்றிகரமாகத் தீர்த்துவைத்த பெருமை யூ.எஸ்.எஸ்.ஆர்.-க்கு உண்டு. எனவே அத்தகைய பிரச்னை இந்த நாட்டில் எழும்பொழுது அந்த நாட்டவர் மேற்கொண்ட வழிகளை நாமும் மேற்கொள்ளலாமென்று முடிவு கண்டார்கள். எனவே கழகத்தின் சௌகரியத்தை உத்தேசித்துக் கழகத்தின் இறுதிக் கூட்டத்திற்கு முதற் கூட்டம் ஸ்ரீநகரில் கூடியதற்கும், இறுதிக் கூட்டம் ஜூலை 25-ந் தேதி நடைபெறுவதற்கும் இடைப்பட்ட இரண்டு, அல்லது மூன்று வரங்களுக்கு நான் சென்று வரவேண்டுமென்று ஏற்பாடாயிற்று. நான் ஜூலை மாதம் 3-ந் தேதி பம்பாயை விட்டுப் புறப்பட்டு 5-ந் தேதி மாலை மாஸ்கோ சென்றடைந்தேன். மீண்டும் 20-ந் தேதி மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு 21-ந் தேதி மாலை பம்பாய் வந்தடைந்தேன். கழகத்தின் இறுதிக்கூட்டம் ஜூலை மாதம் 25-ந் தேதி நடைபெறுவதற்கு முன்னரே நான் வந்து சேர்ந்து விட்டேன். நான் யூ.எஸ்.எஸ்.ஆர்.-ன் விஞ்ஞானக் கழகத்தின் விருந்தினனுகச் சென்றேனுதலின் நான் செல்வதற்குரிய எல்லாப் பிரயாண வசதிகளையும் யூ.எஸ்.எஸ்.ஆர்.-ல் பல அமைப்புக்களையும் அதிகாரிகளையும் தனிப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசுவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும், அந்தக் கழகமே செய்தது.

2. மொத்தம் ஒரு வார காலத்தை மாஸ்கோவிலேயே கழித்தேன். அடுத்து லெனின் கிரேட், கீவ், தாஷ்கண்ட் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் ஓரிரு நாட்கள் கழித்தேன். உக்ரேன் ஜனநாயக யூனியனின் தலைநகராக உள்ளது கீவ் நகரம். அங்கே ரஷ்ய மொழிக்கடுத்த படியாக நன்கு வளர்ச்சியடைந்துள்ளதும், ரஷ்ய மொழிக்கடுத்தபடியாகப் பெரும்பாலான மக்களால் பேசப்படுவதும் ஆகிய உக்ரேனியன் மொழி வழங்கி வருகிறது. யூ.எஸ்.எஸ்.ஆர்.-ன் வட பிராந்தியங்களிலுள்ள பல்வேறு பிற்போக்கான மொழிகளின் வளர்ச்சியைக் கவனித்துக் கொள்வதற்காக லெனின் கிரேட்டில் ஒரு தனி மன்றம் (வட பிராந்திய மக்களின் மன்றம்) என்ற பெயருடன் இருந்து வருகிறது. தெஷ்கண்ட் என்பது ஊஸ்பெக்கிஸ்தானின் தலை நகரம் ஆகும். ஆசிய ஜனநாயக யூனியன்களாகிய உஸ்பெக், காஷாக், கிர்கீஸ், தாஜிக், துர்க்மன் ஆகிய ஐந்து யூனியன்களும் சந்திக்கும் நடுநாயகமான இடமாகும். மாஸ்கோவிலுள்ள மொழியியல் மன்றத்தினுடன் (இத்தகைய விஷயங்களைப்பற்றி ஆராயும் யூ.எஸ்.எஸ்.ஆர். விஞ்ஞானக் கழகத்தின் ஓர் உறுப்பாகும்) பூர்வாங்க ஆலோசனைகள் செய்த பிறகு இந்தியாவிலுள்ள மொழிப் பிரச்னையையும் எனக்குள்ள குறுகிய கால அளவையும் ஒப்பிட்டு இந்தக் குறுகிய கால அளவை மாஸ்கோவிலேயே இருந்து கழித்துவிடாமல் இவ்விஷயங்கள் பற்றிப் பிரத்யேகமாக ஆராய்கின்ற கழகங்களை நேரடியாகச் சென்று பார்ப்பதே நலம் பயக்கும் என்ற முடிவுக்கு வந்தோம். பல்வேறு வகையான மொழிப் பிரச்னைகளும் உள்ள இடங்களை ஓரளவு சென்று பார்க்க முடிவு செய்தோம். மாஸ்கோவில் மொழி இயல் கழக உறுப்பினர்களையும்

பேராசிரியர்களையும் சந்தித்ததோடு அல்லாமல் யூ.எஸ்.எஸ்.ஆர். தேசியப் பள்ளிகளின் அதிகாரிகளையும், கீழ் நாட்டு மொழிக் கல்வி அமைப்புக்களின் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினேன். சட்டத் துறையிலும், நீதி வழங்கும் துறையிலும், மொழிப் பிரச்னை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதை கீவ் நகரத்திலுள்ள விஞ்ஞானக் கழகத்தின சட்டத் துறைப் பிரதிநிதியோடு ஆலோசிக்கவும் செய்தேன். லெனின் கிரேட் நகரத்திலுள்ள வட பிராந்தியப் "பிற் போக்கான" மொழிகளின் வளர்ச்சிக் கழகத்தோடு ஆலோசனை நடத்தினேன். கீவ் நகரத்தில் சட்டத் துறைப் பிரதிநிதியோடு பேசினதல்லாமல் மொழி இயல் கழகத்தாரோடும், உக்ரேனியன் ஜனநாயக இலக்கியக் கழகத்தோடும் பேசினேன். தெஷ்கண்டிலும் விஞ்ஞானக் கழகத்தோடு பேசினேன். இவ்வெல்லாப் பேச்சுக்களிலும் அந்தந்தத் துறையிலுள்ள தலைமையான அதிகாரிகளே என்னுடன் பேசவேண்டுமென்று சோவியத் அரசாங்கம் ஆணையிட்டிருந்தது. நான் கேட்ட எல்லாத் தலவல்களும் மிகவும் விருப்பத்தோடு எனக்கு வழங்கப்பட்டன. வாய் மொழி மூலமாக மாஸ்கோவிலுள்ள மொழி இயல் கழகத்தோடும், தேசியப் பள்ளிக் கழகத்தோடும் பேசியது ஒரு புறம் இருக்க, மொழி பெயர்ப்பாளர் மூலமாகப் பேசிய காரணத்தால் முக்கியமான பகுதிகளில் பிழை நேர்ந்து விடாமல் இருக்கச் சுருக்கமான ஒரு கேள்வித் தாளைத் தயாரித்து எழுத்து மூலமாகவே அதற்கு விடை வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். இதனையும் அவர்கள் விருப்பத்தோடு செய்தார்கள்.

யூ.எஸ்.எஸ்.ஆர்.-ல் நான் கண்டவற்றைப் பற்றிச் சுருக்கமாக எழுதிய அறிக்கை ஒன்று ஜூலை 25-ந் தேதி கூடிய ஆட்சி மொழிக் கழகக் கூட்டத்தில் உறுப்பினர்கள் காணுமாறு வைக்கப்பட்டது. மேலும் கழகத்தின் கூட்டம் நடைபெறும் பொழுது வாய் மொழி மூலமாகவும் நான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் கழகத்தாருக்கு அறிவித்தேன். இந்த அறிக்கை காலமின்மையினால் முன்னரே தயாரிக்கப்படாவிட்டாலும் இப்பொழுது விரிவாகத் தரப்பட்டுள்ளது.

பொது அடிப்படை

3. சார் மன்னர்கள் காலத்தில் ரஷ்ய மொழியைத் தவிர மற்ற மொழிகளையெல்லாம் அடக்கி, ஒடுக்கி வளர்க்கவிடாமல் செய்த ஒரு கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதாக எனக்கு அறிவிக்கப்பட்டது. இடைநிலைக் கல்வியில் பெரும் பகுதிக்கும், உயர்தரக் கல்வி முழுவதற்கும் சட்டம், ஆட்சித் துறை ஆகியவற்றிற்கும் ரஷ்ய மொழியே இடைநிலை மொழியாக இருந்து வந்தது. ரஷ்யப் பேரரசின் எல்லைக்குள் எந்தப் பிற்போக்கான மொழியையும் வளர்க்க வேண்டுமென்ற முயற்சியே நடைபெற்றதாகச் சொல்வதற்கில்லை. இன்றுள்ள ஜன நாயகப் பகுதிகளாகிய உக்ரேன், ஜார்ஜியா, ஆர்மேனியா, பைலோ ரஷ்யா ஆகிய ரஷ்ய நாட்டின் ஐரோப்பியப் பகுதிகளில் பிராந்திய மொழிக்கெதிராக ரஷ்ய மொழியே அன்று திணிக்கப் பட்டது. (இப்பிராந்தியங்களில் மக்கள் மிகவும் முன்னேற்றம் பெற்று நன்கு வளர்ச்சியடைந்த மொழிகளையும் பெற்றுப் பழைமையான வலுவான இலக்கிய மரபையும் பெற்றிருப்பினும் இவ்வாறு நடைபெற்றது.) இந்நிலை ஆசியப் பகுதியிலுள்ள ஜன நாயகப் பிராந்தியங்களிலும், ரஷ்ய நாட்டின் நன்கு வளர்ச்சியடையாத பிராந்தியங்களிலும் இதே நிலை இன்னும் மிகுதியாக இருந்து வருகிறது.

4. ஆட்சியாளர் கணக்குப்படி யூ.எஸ்.எஸ்.ஆர்.-ன் பல்வேறு பிராந்தியங்களிலும், சார் காலத்திலும், இற்றை நாளிலும் கல்வி வளர்ச்சியைப் பற்றித் தரப்படுகின்ற கணக்கு மிகவும் மாறுபாடுள்ளதாக இருக்கின்றது. 1917-புரட்சிக்கு முன்னர் ரஷ்ய நாட்டிலேயே, நகரங்களை அல்லாத பிராந்தியங்களில் கல்வித் துறை வளர்ச்சியடைந்ததாகவும், பரவியிருந்ததாகவும் சொல்லுதற்கில்லை. 1887-ஆண்டு கல்வித் துறை அமைச்சராக இருந்தவர் வௌ

விட்ட ஒரு உத்திரவை இப்பொழுது குறிப்பிட்டுப் பேசினார்கள். அதன்படி "வண்டி ஓட்டுபவர்கள், அது போன்ற அலுவல் பார்க்கின்றவர்கள், சமயல்காரர்கள், சலவை செய்பவர்கள் ஆகியவர்கள் போன்ற கீழ்த்தரத் தொழிலாளரின் குழந்தைகட்கு உண்மையில் தேவையில்லை என்ற காரணத்தால் இடைநிலை, உயர்நிலைக் கல்விகள் கொடுக்கப்படக்கூடாது" என்று அந்தச் சட்டம் பேசிற்று. 1897-ஆண்டு ஜனக் கணக்குப்படி மொத்தம் கல்வியறிவுடையவர்கள் எண்ணிக்கை 24 சத விகிதமாகும். ஆசியப் பகுதியிலுள்ள பிராந்தியங்களில் கல்வியறி வுடையவர்களின் எண்ணிக்கை மிகவும் தாழ்வாக ஏறத்தாழ ஒன்று அல்லது இரண்டு சத விகிதத்தில் இருந்து வந்தது. இதன் மறுதலையாக இன்று இத்தகைய பிற்பட்ட பிராந்தியங்கள் உள்பட எல்லாவிடங்களிலும் அலைவரும் கல்வி பெற்றவர்களாக ஆய்விட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது. இன்றைய நிலையில் யூ.எஸ்.எஸ்.ஆர்.-லிலுள்ள எல்லா மக்களுக்கும் ஏழாம் வகுப்பு முடியக் கட்டாய இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. நடைபெறும் ஐந்தாண்டுத் திட்டத்தினபடி இங்ஙனம் வழங்கப்படும் கட்டாய இலவசக் கல்வி பத்தாம் வகுப்பு முடியத் தரப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பொழுதேகூட நகரங்களிலும், நகரப் பகுதிகளிலும் கட்டாய இலவசக கல்வி பத்தாம் வகுப்பு வரையில் தரப்பட்டு வருகிறது. புரட்சிக்கு முன்னர் மிகச் சில பல்கலைக் கழகங்களே இருந்த பெரிய ரஷ்யப் பகுதியில் இப்பொழுது 33 பல்கலைக் கழகங்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையில் இருந்து வருகிறது. 1914-ம் ஆண்டு சார் காலத்து ரஷ்யாவில் 91 பள்ளிக் கூடங்களில் 112,000 மாணவர்கள் உயர்தரக் கல்வி கற்றார்கள். 1939-ல் 750 அமைப்புக்களில் 620,000 மாணவர்கள் கற்றார்கள். 1953-ல் 900 அமைப்புக்களில் 1,500,000 மாணவர்கள் கற்றுவருகின்றார்கள்.

யூ.எஸ்.எஸ்.ஆர்.-லிலுள்ள பல்வேறு பள்ளிக்கூடங்களிலும், அமைப்புக்களிலும் மொத்தம் 57 மிலியன் மாணவர்கள் கற்று வருவதாகச் சொல்லப்பட்டது. மேலும் "சோவியத் அரசாங்கம் உயர்தரக் கல்வியில் பொதுத் தன்மையை உண்டாக்கும் வேலையை உள்ளபடியே செய்து வருகிறது" என்றும் சொல்லப்பட்டது.

மேலும் "பண்பாட்டை யூ.எஸ்.எஸ்.ஆர்.-ல் வாழும் எல்லா மக்கள் வாழ்க்கையிலும் கொண்டுவரக் கூடிய நிலையில்" பல்வேறு நூலகங்கள், படிப்பகங்கள், காட்சி சாலைகள், சொற்பொழிவு மண்டபங்கள் ஆகியவற்றை ஆக்கியுள்ளதாகவும் சொல்லப்பட்டது.

5. பொதுக் கல்வியை வளர்க்கும் இம்முயற்சி ஒரு காலத்தில் மிகப் பிற்போக் கடைந்திருந்த பல்வேறு பகுதிகளையும், இப்பொழுது உள்ளடக்கி, வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது. புள்ளி விவரங்களின்படி முன்னர்ப் பிற்போக்கடைந்திருந்த பிராந்தியங்களில் அந்தப் பிற்போக்கை ஈடுசெய்கின்ற முறையில் பலவகை வளர்ச்சிகளையும் கல்வித் துறையில் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. உதாரணமாக உஸ்பெக்கிஸ்தானில் பழைய நாளில் ஓர் இடைநிலைப் பள்ளிக்கூடமோ அல்லது பல்கலைக் கழகமோ இருந்ததாகத் தெரியவில்லை. முல்லாக்கள் நடத்திய சமயப் பள்ளிக்கூடங்கள் (இவை நன்கு நடத்தப்படவில்லை என எனது அறிவிப்பாளர்கள் கூறினார்கள்) கல்வி யமைப்புக்களாகப் பணியாற்றின. இப்பொழுது உயர்தரக் கல்விக்குரிய பல்வேறு அமைப்புக்களுடன், இரண்டு பல்கலைக் கழகங்களும் நிறைந்த அளவு ஆரம்ப, இடைநிலை, உயர்தரப் பள்ளிக்கூடங்களும் இருந்து வருகின்றன. புரட்சிக்கு முன்னர்ப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்ற ஒரு உஸ்பெக்கர் கூட இல்லை யென்றும் எனக்குச் சொல்லப்பட்டது. இதன் எதிராக உயர்தரக் கல்வியின் எல்லாத் துறைகளிலும் உஸ்பெக் பகுதியைச் சேர்ந்த அறிஞர்கள் இருக்கின்றார்கள் என்றும், தலைமை இடமாகிய மாஸ்கோ பல்கலைக் கழகத்திலும், அது போன்ற அமைப்புக்களிலும் பல் உஸ்பெக் அறிஞர்கள் உயர்ந்த ஸ்தானங்களை வகித்து

வருகின்றார்கள் என்றும் அறிவித்தார்கள். உஸ்பெக்கிஸ்தானில் ஏறத்தாழ நூறு விஞ்ஞான அமைப்புக்கள் இப்பொழுது தொழிற்படுகின்றன. உஸ்பெக்கிஸ்தானுக்குச் சொல்லியவை அனைத்தும் ஆசியப் பகுதியிலுள்ள ஐந்து குடியரசு நாடுகளுக்கும் பொருந்தும் என்றும் அறிவித்தார்கள். முன்னர்ப் பிற்போக்கடைந்திருந்த எல்லா நாடுகளுக்கும் இது பொருந்தும் என்றும் சொல்லப்பட்டது. உதாரணமாகப் புரட்சிக்கு முந்திய நாட்களில் காகஸஸ் பிராந்தியத்திலோ, ஜார்ஜியா, ஆர்மேனியா, அஸர் பைஜன், காஸாகஸ்தான், உஸ்பெக்கிஸ்தான், கிர்கிஷியா, டாஜிகிஸ்தான், ட்ருக மேனியா ஆகிய பகுதிகள் அமைந்துள்ள மத்திய ஆசியப் பிராந்தியத்தில் ஒரு கல்வி அமைப்புக்கூட இருந்ததில்லை.

யூ.எஸ்.எஸ்.ஆர்.-ல் பொதுக் கல்வி வளர்ச்சியைப் பற்றி அறிவிக்கும் சில புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டினார்கள்.

1926 ஜனக் கணக்குப்படி யூ.எஸ்.எஸ்.ஆர்.-லுள்ள சில பிற்போக்கான இனங்களின் கல்வி வளர்ச்சி வருமாறு :—

	சத விகிதங்கம்.
காஸக்ஸ்	7·1
யாகுட்ஸ்	6·3
கிர்கிஸ்	6·4
உஸ்பெக்ஸ்	3·8
தாஜிக்ஸ்	2·3
ட்ருக்மேனியன்ஸ்	2·3

இதன் மறுதலையாக இப்பொழுது அனைவரும் கற்றுள்ள நிலை ஏற்பட்டுள்ளது. சோவியத் யூனியனின் எந்தப் பகுதியிலும் கல்லாதவர் என்ற பெயரே இல்லாமல் செய்தாகிவிட்டது. அதாவது யூனியன் "ஜன நாயகங்கள்", "உரிமை பெற்ற ஜனநாயகங்கள்", "பிராந்தியங்கள்", "தேசியப் பகுதிகள்" ஆகியவை அனைத்திலும் இந்நிலை பரவியுள்ளது. "பொதுக் கல்வி வழங்கும் பள்ளிக்கூடங்கள்" வளர்ச்சி பற்றிய கீழ்க் கண்ட புள்ளி விவரம் கொடுக்கப்பட்டது :—

இடம்.	1914-15.	1928-29.	1938-39.
தாஜிஸ்தான்	10	382	4,628
உஸ்பெக்கிஸ்தான்	160	2,320	4,684
ஜார்ஜியா	1,762	2,569	4,383

இதற்கேற்ற நிலையில் இடைநிலைப் பள்ளிக்கூடங்களில் கற்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையும், உயர்தரப் பள்ளிக் கூடங்களிலும், ரஷ்யாவில் "உயர்தரக் கல்வி அமைப்புக்கள்" என்று வழங்கப்படும் பல்கலைக் கழகங்களிலும் கற்பவர் எண்ணிக்கை இதற்கேற்றபடி மிகுதிப் பட்டுள்ளது.

6. கல்வித் துறையின் எல்லா நிலைகளிலும் ஆண், பெண் என்ற வேறுபாடு இல்லை. மேலும் சோவியத் நாட்டில் இடைநிலைக் கல்வியும், உயர்தரக் கல்வியும் பெறுகின்ற பெண்களின் எண்ணிக்கை (ஜனத் தொகையில் அவர்களுடைய மொத்த எண்ணிக்கைக்கு ஏற்றபடி இந்த அளவு இருந்து வருகிறது) மிகவும் வளர்ச்சியடைந்துள்ள மேல் நாடுகளையும், அமெரிக்காவையும் ஒப்பு நோக்க மிகவும் அதிகமாகவே தெரிகிறது.

7. ரஷ்ய மொழியை அல்லாத ஏனைய மொழிகள், பண்பாடுகள் ஆகியவை பற்றிப் பழைய அரசாங்கம் கைக்கொண்டிருந்த கொள்கைக்கு மாறாக 1917 புரட்சியின் பிறகு மிகவும் தாராளமானதும், வளர்ச்சியுடையதுமான சில கொள்கைகள் கையாளப்பட்டு வருகின்றன. எனவே மிகவும் பிற்போக்கடைந்திருந்த மொழிகள் பலவும் வளர்ச்சியடைவும். எல்லாப் பிராந்தியங்களிலுள்ள பெரும்பான்மையான மக்கள் கல்வி வளத்தைப் பெற்றதோடு அவர்களுடைய இலக்கிய, பண்பாட்டு வளர்ச்சியும் மிகுதிப்பட்டுள்ளது. ஒவ்வொரு இனத்தாரின் மொழியும் அந்த இனத்

நாரின் ஆட்சி மொழியாகவும், போதனா மொழியாகவும் கல்வி அமைப்புக்களில் கற்பிக்கப்படுகின்ற மொழியாகவும் இப்பொழுது இருந்து வருகிறது. இந்நிலை முன்னர் அவர்கட்கு மறுக்கப்பட்டது. லெனின் கூறிய "மக்களிடத்தில் அவர்களுடைய சொந்த மொழியிலேயே பேச வேண்டும்" என்ற ஒரு முது மொழியை அடிக்கடி எடுத்துக் காட்டினார்கள். புரட்சியின் பிறகு ஏற்பட்ட சோவியத் அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகப் பல்வேறு இனத்தாரும் தங்களுடைய பண்பாடு, மொழி ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள முழு உரிமை வழங்கப்பட்டார்கள். பழங்காலத்தில் உயர்தரக் கல்வி என்பது எட்டியும் பாராத பிராந்தியங்களில் பல்வேறு வகைப்பட்ட பல்கலைக் கழகங்களும், பல அமைப்புக்களும் தோன்றலாயின. சுதந்திரமுடைய பல விஞ்ஞானக் கழகங்கள் பல யூனியன்களிலும் தோன்றியுள்ளன. அன்றியும் யூ.எஸ்.எஸ்.ஆர். விஞ்ஞானக் கழகத்தின் பல்வேறு கிளைகளும் பல பகுதிகளில் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக வட பிராந்தியத்திலுள்ள மக்கள் பேசும் 23 பிற்போக்கு மொழிகள் லெனின் கிரேட்டில் உள்ள அமைப்பில் ஆராயப்பட்டு வருகின்றன. இவற்றுள் பலவற்றிற்கு இப்பொழுது எழுத்துக்களும் ஏனைய வசதிகளும் செய்து கொடுத்துள்ளமையின் அம்மொழிகளில் எந்த அளவு வளர்ச்சி பெறக்கூடுமோ அந்த அளவுக்கு அவற்றைக் கல்வித் துறையில் பயன்படுத்தி வருகிறார்கள். இந்தப் பிராந்தியங்களில் கல்வியை வளர்ப்பதற்குத் தனியாக முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. பல்வேறு பிற்போக்கான சமுதாயங்களுக்குக் கல்வி கற்பிக்கும் பிரத்தியேகமான வழிகளை ஆராய்வதற்கென்றே தனியான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பிற்போக்குப் பிராந்தியங்களின் உபயோகத்திற்கென்றே பிரத்தியேகமான பாடப் புத்தகங்கள் அவர்களுடைய மொழியிலும், ரஷ்ய மொழியிலும் எழுதப்பட்டு வருகின்றன.

8. நாடு முழுவதற்கும் ஒரு பொதுவான இடைநிலை மொழி பற்றிப் பேசும் பொழுது கீழ் வரும் சில முக்கியமான குறிப்புக்களைக் கவனிக்க வேண்டும். சார் மன்னர்கள் காலத்தில் ரஷ்ய மொழியே ஆட்சி, சட்டம், உயர்தரக் கல்வி ஆகியவற்றிற்கு நாடு முழுவதிலும் பயன்பட்டு வந்ததில் வேறு என்ன தீமைகள் ஏற்பட்டிருப்பினும் ஒரு பெரிய நன்மை இருந்து, அதுவும் சோவியத் அரசாங்கத்திற்குக் கிடைத்தது. அதாவது ரஷ்யா தேசம் முழுவதிலும் ரஷ்ய மொழியில் பழக்கமுடைய ஒரு நிலை ஏற்பட்டது. பழைய பகுதிகளில் இது மிகுதியாகவும், புதிய சார் ஏகாதிபத்தியத்தில் புதிதாகச் சேர்ந்த பகுதிகளில் இது குறைவாகவும் இருப்பினும் சமுதாயத்தின் கௌரவமான சூழ்நிலைகளில் இம்மொழிப் பழக்கம் இருந்து வந்தது. அடுத்தபடியாக யூ.எஸ்.எஸ்.ஆர்.-ல் வழங்கும் மொழிகள் அனைத்தையும் காட்டிலும் விஞ்ஞானக் கலை, இலக்கிய வளர்ச்சியில் ரஷ்ய மொழி ஈடு இணையற்று வளர்ந்துள்ளது. உக்ரேன், லடிவியா, பைலோ ரஷ்யா போன்ற பிராந்தியங்களில் பிராந்திய மொழி அறிஞர்களால் விஞ்ஞானத் துறையில் பல ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்றும் சொன்னார்கள். இங்ஙனம் நடைபெறும் ஆராய்ச்சிகள் பலருக்கும் பயன்பட வேண்டி பிறகு ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அனைத்தையும் சேர்த்துக் காணும் பொழுது ரஷ்ய நாடு முழுவதிலும் இடைநிலை மொழியாக விஞ்ஞானத் துறையிலும், இலக்கியத் துறையிலும் ரஷ்ய மொழியே எதிர்ப்பின்றி இருந்த வருகிறது.

எண்ணிக்கை முறையிலும் ரஷ்ய மொழியே வலுவாக இருந்து வருகிறது. மொத்த ஜனத் தொகையாகிய 200 மிலியன்களில் நூறு மிலியன்கள் ரஷ்ய மொழியைத் தாய் மொழியாக உடையவர்கள்.

1939 ஜனக் கணக்குப்படி பல மொழி பேசுகின்றவர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது. (பால்டிக் ஜன நாயகப் பிராந்தியங்களில் உள்ள எல்லை மாறுதல்களுக்கேற்ப இது செய்யப்பட்டுள்ளது) :—

1. ரஷியன்	.. ..	99·0 மிலியன்
2. உக்ரேனியன்	.. .. ..	36·5 ,,

		மிலியன்
3. பைலோ ரஷ்யன்	8·7	,,
4. உஸ்பெக்ஸ்	4·9	,,
5. டார்டர்ஸ்	4·3	,,
6. காஸகஸ்	3·1	,,
7. ஜூஸ்	3·0	,,
8. ஆஸர்பெஜானியன்ஸ்	2·3	,,
9. ஜியோர்ஜியன்ஸ்	2·2	,,
10. ஆர்மேனியன்ஸ்	2·2	,,
11. லிதோனியன்ஸ்	2·0	,,
12. மால்டாவியன்ஸ்	1·8	,,
13. எஸ்தோனியன்ஸ்	1·7	,,
14. லாட்வியன்ஸ்	1·5	,,
15· மார்ட்வீனியன்ஸ்	1·5	,,
16. சுவாஷா	1·4	,,
17. தாஜிக்ஸ்	1·2	,,
18. கிர்கீஸ்	890	ஆயிரங்கள
19. தாகிஸ்தானியன் மக்கள்	850	,,
20. பாஷ்கீர்ஸ்	840	,,
21. டர்க்மென்	812	,,
22. போல்ஸ்	630	,,
23. உட்மூர்டியன்ஸ்	600	,,
24. மார்யனஸ்	480	,,
25. கோமி	410	,,
26. ஆசிடினியன்ஸ்	360	,,
27. கிரேக்கர்	290	,,
28. காரிலியன்ஸ்	250	,,
29. காரகால்பாகின்ஸ்	190	,,

மேலும் உகிரேன், பைலோ-ரஷ்ய மொழிகள் ரஷ்ய மொழிக்கு மிகவும் நெருங்கிய தொடர்பு கொண்டது என்றும் இவற்றுள் எதாவது ஒரு மொழி பேசுபவர் மற்ற இரு மொழிகளையும் அதிக சிரம மில்லாமல் புரிந்து கொள்ள முடியும் என்றும் சொன்னார்கள். ரஷ்ய மொழியையும் அதனோடு தொடர்புடைய மற்ற மொழிகளையும் பேசும் மக்களின் எண்ணிக்கை அதிகப்படியாக உள்ளமையை இவ்வுண்மையும் வலியுறுத்துகின்றது. யூ.எஸ்.எஸ்.ஆர்.-லிலுள்ள ஏனைய மொழிகள் மிகச் சுருங்கிய எண்ணிக்கையுடைய மக்களாலேயே பேசப்படுகிறதென்பது நன்கு விளங்கும்.

எனவே இந்தியாவில் ஹிந்தி மொழி பெற்றுள்ளதைக் காட்டிலும் பெரிய ஒரு இடத்தை ரஷ்ய மொழியியலில் ரஷ்ய மொழி பெற்றிருக்கின்றது, என்பது நன்கு விளங்கும்.

9. கல்வி முறையிலும், மிக ஆரம்ப காலத்திலிருந்தே கட்டாயமாக ரஷ்ய மொழியைப் போதிக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. சோவியத் கல்வி அறிஞர்கள் பழைய காலச் சூழ்நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ரஷ்ய மொழி இலக்கியம் ஆகியவற்றைப் போதிப்பதற்கு இப்பொழுது அதிகப்படியான காலம் செலவழிக்கப்படுவதாகவே கூறுகின்றார்கள், சில பிராந்தியங்களில் முதல் வகுப்பின் இரண்டாவது பகுதியிலேயே (அதாவது 7–8 வயது குழந்தைகளுக்கு) ரஷ்ய மொழிப் போதனை தொடங்கப்படுகிறது. ரஷ்ய மொழி இலக்கிய போதனை பத்தாவது வகுப்பு வரையில் (அதாவது உயர்தரப் பள்ளியின் முடிவு வரையில்) தொடர்ந்து நடைபெற்று வருகிறது. "ஆரம்பப் பள்ளி நிலையை முடிக்கின்ற காலத்திலேயே அதாவது (7 முதல் 11 வயதுக்குள்ளேயே)

யூ.எஸ்.எஸ்.ஆர்-ல் னுள்ள எல்லா இனக்குழந்தைகளும் ரஷ்ய மொழியில் எழுதவும், பேசவும், படிக்கவும் முடிகிறது" என்று கூறுகிறார்கள். உயர் தரக் கல்வி முறையில் பல்கலைக் கழகப் படிப்புக்கு நுழைகின்ற ஆண் களும், பெண்களும் தங்களுடைய உயர்தரக் கல்விப் பரீட்சைக் காலத்தி லேயே ரஷ்ய மொழியில் நல்ல பயிற்சி பெற்றுவிடுகிறார்கள். ஆதலால் கல்லூரியில் நுழையும் பொழுது ரஷ்ய மொழி பேசுபவர்கட்கும் பிற மொழி பேசுபவர்கட்கும் அதிக வேறுபாடு இல்லாத முறையில் அனைவர்க் கும் இம்மொழிப் பழக்கம் வந்துவிடுகிறது. அந்தந்த இனத்தாருக்குரிய மொழியையும் அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்று சொல்லத் தேவையில்லை. யூ.எஸ்.எஸ்.ஆர். முழுவதிலும் கல்வித் துறையில் ரஷ்ய மொழி "வில்லுக்கு இரண்டாவது நாண் அமைந்ததைப் போல" எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கின்ற ஒரு சௌகரியம் இருப்பதினால் யூ.எஸ். எஸ்.ஆர்.-ன் மொழிப் பிரச்னையை இந்த நாட்டின் மொழிப் பிரச்னையோடு ஒப்பிடுவதில் அர்த்தமில்லை. எழுத்து மூலம் கேட்கப்பட்ட இரண்டு கேள்வி களுக்கு அவர்கள் தந்த விடை வருமாறு :—

வினா.	விடை.
பிற மொழி பேசும் இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவன் பல்கலைக் கழகத்தில் நுழைய வரும் பொழுது ரஷ்ய மொழி பேசும் ஒரு மாணவனைப் போல அந்த மொழியில் பேச/எழுத/புரிந்துகொள்ளச் சக்தி பெற்றுவிடு வான் என்று சொல்வது பொருந்துமா ?	முற்றிலும் பொருந்தும். ரஷ்ய மொழி அல்லாத பள்ளிக்கூடங்களில் கற்கின்ற ஆண்களும், பெண்களும் ரஷ்யப் பள்ளிக் கூடங்களில் கற்கின்ற மாணவர்களைப் போலவே அதே பரீட்சையை எழுதித் தேர்வு பெறுகிறார்கள். ரஷ்ய இலக்கியப் படிப்பைப் பொறுத்த மட்டில் அவர்கட்குச் சில சலுகை கள் உண்டு.
வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள் அனைவருமே ரஷ்ய மொழியை நன்கு அறிந்திருக்கிறார்களா ? அதாவது சோவியத் ஆட்சியாளர்கள், மருத்துவர்கள், பொறியர்கள், வழக்கறிஞர் கள், பத்திரிகையாளர்கள் ஆகிய அனைவரும் ரஷ்ய மொழியை அறிவார்களா ?	சந்தேகமில்லாமல்.

பி.கு.—"ரஷ்யப் பள்ளிக் கூடங்கள்" என்றும், "ரஷ்ய மொழி அல்லாத பள்ளிக் கூடங்கள்" என்றும் சொல்லப்படுபவை அந்தந்தப் பள்ளிகளிலுள்ள போதனா மொழியைப் பொறுத்தேயாகும்.

10. உயர்தரக் கல்வி முடிவில் நடைபெறும் பரீட்சையைப் பொறுத்த மட்டில் அதிகார பூர்வமான அறிக்கை கூறுவதாவது :—

"உயர்தரப் பள்ளிக்கூடக் கல்வியை முடிக்கின்ற மாணவர்கள் பள்ளி இறுதி யாண்டுப் பரீட்சைக்கு அமர்கின்றார்கள். கீழ்க் கண்ட விஷயங்கள் பற்றி அவர்கள் சோதிக்கப்படுகின்றார்கள் :—

ரஷ்ய மொழி, இலக்கியம், கணிதம், பௌதீகம், ரஸாயனம், யூ.எஸ்.எஸ்.ஆர். வரலாறு".

"உதாரணமாக ரஷ்ய மொழி இலக்கிய எழுத்துப் பரீட்சையில் மாணவன் விஷயத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் அவனுடைய எண்ணத்தை ஒழுங்காக வெளியிடும் ஆற்றலையும் நல்ல இலக்கணமுடைய மொழியில் வெளியிடுகிறானா என்று சோதிக்கப்படுகிறான். வாய் மொழிப் பரீட்சையில் ரஷ்ய இலக்கிய வரலாற்றையும், இலக்கியத்திலுள்ள சிறந்த நூல்களையும், தலை சிறந்த ரஷ்ய அறிஞர்களுடைய வரலாறுகளையும், இலக்கிய சித்தாந்தங்களின் அடிப்படையையும் அவன் அறிந்திருக்கிறானா என்று சோதிக்கின்றார்கள்."

எனவே பல்கலைக் கழகங்களிலும், உயர்ந்த கல்வித் துறையிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் என்பவர்களைப் பொறுத்த மட்டில் போதனா மொழி அவர்களுடைய தாய் மொழியுடன் மாறுபட்டிருக்கிறது என்ற

பிரச்னை அந்த நாட்டில் வருவதேயில்லை. ரஷ்யாவில் பல பேராசிரியர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று, அந்தப் பல்கலைக் கழகங்களின் போதனை மொழி பிராந்திய மொழியாக இருப்பினும், ரஷ்ய மொழியிலேயே சொற்பொழிவாற்றி வருகின்றார்கள் என்றும் அறிவித்தார்கள்.

11. பல்வேறு ராஜ்யங்களினிடையேயும், ராஜ்யங்களுக்கும் யூனியனுக்கும் இடையேயும் வழங்கப்படும் மொழி ரஷ்ய மொழியே ஆகும். (ரஷ்யச் சூழ்நிலையில் இவற்றினிடையே நடைபெறுகின்ற அனைத்தும் "ஆட்சி சம்பந்தமானவையாகவே" இருக்கும்.) எனவே யூனியன் அமைப்புக்கும், பல்வேறு ராஜ்யங்களிலுள்ள உள்நாட்டு அரசாங்கத்துக்கும் இடையே நடைபெறுகின்ற கடிதப்போக்கு முதலியவை எவ்விதச் சிக்கலும் இல்லாமல் ரஷ்ய மொழியிலேயே நடைபெறுகின்றன. கற்றறிந்த ஒவ்வொருவனும் (கட்டாயக் கல்வியுடைய ரஷ்யாவில் ஒவ்வொரு வயதுவந்தவனும் கற்றறிந்தவனே) ரஷ்ய மொழி அறிந்திருப்பானாதலின் இதில் தொல்லை ஒன்றும் ஏற்படவில்லை. அன்றியும் யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் தலைமைக் காரியாலயத்தில் மொழி பெயர்ப்புக்கு என்றே தனி இலாக்காக்கள் இருக்கின்றன.

உள் நாட்டு ஆட்சி முறையில் ரிபப்ளிகின் மொழி எதுவோ அதே மொழியில் ஆட்சி நடைபெறுகிறது. இதற்குக் கீழ் உள்ள நிலையில் பிராந்திய மொழி மாறுபட்டிருப்பின் அந்த மொழியிலேயே ஆட்சி நடைபெறுகிறது இவர்களுடைய தேவை அனைத்திற்கும் சுருக்கெழுத்து வசதியும் தட்டெழுத்து யந்திர வசதியும் (இம்மொழிகளின் எழுத்துக்கள் ஏறத்தாழ ரஷ்ய எழுத்துக்களோடு தொடர்புடையனவாக இருத்தலின் தட்டெழுத்து யந்திரங்கள் ரஷ்யத் தட்டெழுத்து யந்திரங்களைப் போலவே உள்ளன) செய்து தரப் படுகின்றன.

அறிக்கைகள், கைகாட்டிகள், நமூனுக்கள் ஆகியவற்றில் பயன்படுத்தும் மொழி சூழ்நிலை, தேவை என்பவற்றை ஒட்டியே முடிவு செய்யப்படுகிறது. கீவில் பொது அறிக்கைகள் உக்ரேனியன் ரஷ்யன் என்ற இரண்டு மொழிகளிலும் இருந்தன. இதற்கு எதிராகக் கடைகளின் அறிக்கைப் பலகைகள் இவை இரண்டில் ஏதாவது ஒரு மொழியிலும், சில சமயங்களில் இரண்டு மொழிகளிலும் இருந்தன. ஏறத்தாழ அனைவருமே இரண்டு மொழி அறிந்தவர்களாக இருத்தலின் உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காமல் தேவையைப் பொறுத்து முடிவு செய்து கொள்ளக்கூடிய சூழ்நிலை அங்கே உள்ளது.

ஒரு யூனியன் ரிபப்ளிக்குக்குள்ளாகப் பிற மொழி பேசும் இனத்தார்கள் இருப்பின்—உதாரணமாக கரக்கால்பாக் ரிபப்ளிக்கில் உள்ள கரக்கால் பாக் மக்களைக் காண்க—அந்தப் பிரச்னையை மற்றொரு மொழியைப் புகுத்துவதன் மூலம் முடிவு செய்துவிடுகிறார்கள். இந்தப் பிராந்தியங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் ரஷ்யன் மொழியோடு சேர்த்து உஸ்பெக் மொழியையும் (இது கட்டாயமன்று என்று எனக்குக் கூறினார்கள்) அவர்கள் தாய் மொழியாகிய கரகல்பாக் மொழியையும் கற்பிக்கின்றார்கள். பொது அறிக்கைகள் இந்தப் பிராந்தியங்களில் யாருக்காக வெளியிடப் படுகின்றனவோ அவர்களுடைய மொழித் தேவையைப் பொறுத்து வெளியிடப்படுகின்றன. உதாரணமாக உஸ்பெக்கிஸ்தானில் மாவட்ட அதிகாரிகள் யூனியன் அரசாங்க அறிக்கைகளையும், ஆணைகளையும் பிராந்திய மொழியிலும், உஸ்பெக் மொழியிலும், ரஷ்ய மொழியிலும் வெளியிடுகிறார்கள். பல சமயங்களில் ஆட்சி அறிக்கைகள் நான்கு அல்லது ஐந்து மொழிகளில் வெளியிடப்படுகின்றன.

12. யு எஸ்.எஸ்.ஆர்.-ரின் அரசியலமைப்பின் (ஆதார சட்டம்), 121-வது விதி.—"யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் பிரஜைகள் கல்வி பெறும் உரிமையைப் பெற்றுள்ளார்கள்" என்று கூறுகிறது.

சோவியத் அதிகாரிகள் அவர்கள் நாட்டிலுள்ள இந்த உரிமை உண்மையானது என்று கூறுவதோடு (ஏனைய நாடுகளில் இது சட்ட அளவில் இருப்பினும் உண்மையில் இல்லை என்றும் கருதுகிறார்கள்) கட்டாய இலவசக் கல்விக்கு மேற்பட்ட நிலைமையில் நிறைந்த அளவில் அரசாங்க உதவிச் சம்பளம் முதலியன கொடுக்கின்ற காரணத்தால் மாணவர்கள் பல்கலைக் கழகக் கல்வி முதலியவற்றைப்பெற முடிகிறது.

நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களும் அரசாங்கத்தாலேயே தொடங்கப்பட்டு நடத்தப்பட்டுவருகின்றன. யூனியனிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மிகச் சிறு மாறுதல்களை அல்லாமல் ஏறத்தாழ ஒரே மாதிரியான கல்வி முறை இருப்பதாகவே தெரிகிறது. பாடத் திட்டமும், பாட முறையும் யூனியனிலுள்ள பல்வேறு ராஜ்யங்களிலும் அடிப்படையில் ஏறத்தாழ ஒன்றாகவே இருக்கின்றன.

இங்கு நான் காணச் சென்ற விஷயத்தோடு தொடர்புடையதாதலின் அந்த நாட்டில் அரசியல் கட்சிகள் பற்றியும் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும்.

யு.எஸ்.எஸ்.ஆர். ன் அரசியலமைப்பு "சோவியத் சோஷலிச ரிபப்ளிக்குகளின் யூனியன் தாஙகளாக விரும்பிச் சம உரிமையோடு சேர்ந்துள்ள ஒரு கூட்டு சமஷ்டியாகும்".

ரஷ்யன் சோவியத் பிடரேடிவ் சோஷலிஸ்ட் ரிபப்ளிக்கின் தலைமையில் 16 குடியரசு நாடுகள் "யூனியன் குடியரசுகள்" என்ற பெயரில் உள்ளன.

இந்த யூனியன் குடியரசுகளுள் "தாமே இயங்கும் குடியரசுகள்" என்றும் "தாமே இயங்கும் பிராந்தியங்கள்" என்றும் இரண்டு பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு குடியரசும் யு.எஸ்.எஸ்.ஆர்.ன் அரசியலமைப்போடு முரண்படாத முறையில் தனக்கெனவே ஒரு அரசியலமைப்பை வகுத்துக் கொண்டுள்ளது. அந்தக் குறிப்பிட்ட பிராந்தியத்தின் தேவைகளுக்கு ஏற்ப அந்த அரசியலமைப்பு இருக்கும்.

யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் சோவியத்தில் உள்ள இரண்டு சபைகளும் யு.எஸ்.எஸ்.ஆர். ராஜ்ய அதிகாரத்தின் தலையானவைகளாகும்.

யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் சோவியத் ஒரு தலைவரையும், 16 துணைத் தலைவர்களையும் கொண்ட ஒரு சபையை தேர்ந்தெடுக்கிறது. இந்த சபை (பிரிசிடியம்) யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் அமைச்சர் குழு எடுக்கின்ற முடிவுகளையும், ஆணைகளையும், தனிக் குடியரசுகளிலுள்ள அமைச்சர்கள் செய்யும் முடிவுகளையும், அவை சட்டத்தோடு முரண்படுமேயானால், இல்லாமல் செய்வதற்கு இவர்கட்கு அதிகாரமுண்டு. யு.எஸ்.எஸ்.ஆர். அரசாங்க அதிகாரத்தில் உயர்ந்த நிர்வாக, ஆட்சித் துறையில் இருப்பவர்கள் அமைச்சர் குழுவினராவர். இன்று அமைச்சர் குழு யு.எஸ்.எஸ்.ஆர். மிக உயர் சோவியத்திற்குப் பதில் சொல்லியாகவேண்டும். மிக உயர் சோவியத் கூடாத காலங்களில் பிரிசீடிய சபைக்குப் பதில் சொல்லியாகவேண்டும்.

யூனியன் குடியரசுகளில் உள்ள அமைச்சர்கள் செய்கின்ற முடிவுகளையும், யு.எஸ்.எஸ்.ஆர். அமைச்சர்கள் செய்கின்ற முடிவுகளையும் யு.எஸ்.எஸ்.ஆர். அமைச்சர் குழு மாற்ற அதிகாரம் பெறுகிறது.

யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் அதிகார எல்லையை (அதாவது கூட்டமைப்பின் எல்லையை) அரசியலமைப்பின் 14-வது விதி இங்ஙனம் கூறுகிறது :—

"(ஆர்.) கல்வித்துறை, சுகாதாரத் துறை ஆகிய இரண்டிலும் அடிப்படைக் கொள்கைகளை நிர்ணயித்தல்.

(யு) சிரியல் குற்ற யியல் நீதி மன்றங்களில் நடைபெறும் நீதி முறைகள், நடவடிக்கைகள் ஆகியவை பற்றிய சட்டம் நிறைவேற்றுதல்."

உயர்தரக் கல்வியைப் பொறுத்த மட்டில் மத்திய அரசாங்கத்தின் அதிகாரிகளாலேயே அது நடைபெறுகிறது என்று தெரிகிறது. யு.எஸ்.எஸ். ஆர்.-ன பொதுக் கல்வி பற்றிய அதிகார பூர்வமான ஓர் அறிக்கை இங்ஙனம் கூறுகிறது :—

"இடைநிலைப் பள்ளிகள், தொழிற் பள்ளிகள், உயர்தரக் கல்வி அமைப்புக்கள் ஆகியவற்றை ஒழுங்கு செய்யவும், அங்கு நடைபெறும் வேலை முதலியவற்றைக் கணகாணிக்கவும் உள்ள பொறுப்பு யு.எஸ்.எஸ். ஆர்.-ன் கலவி அமைச்சைப் பொறுத்ததாகும். உயர்தரக கல்வி அமைப்புக்கள் அனைத்தும் (எல்லாப பல்கலைக் கழகங்கள், உயர்தரத் தொழில் நுட்ப கல்வி நிலையங்கள், வேளாண்மை, ஆசிரியப் பயிற்சி அமைப்புக்கள் இன்னும் இவை போன்ற பிறவும்) இந்த அமைச்சின கீழ் வருவதோடு அவற்றின் நடைமுறை, கல்வி முறை, பொருளாதாரம் ஆகியவும் இந்த அமைச்சினாலேயே கவனிக்கப்படுகின்றன. இவற்றையல்லாத ஏனைய உயர்தரக் கல்வி நிலையங்கள் (ஆசிரியப் பயிற்சி, கலை, மருத்துவம் போன்ற சில) இடைநிலை தொழில் நுட்பப் பள்ளிக்கூடங்களும், பொருளாதாரத் துறையில அந்தத் துறை அமைச்சுக்கும் அரசாங்க இலாக்காவிற்கும் உட்பட்டவை."

மாஸ்கோவிலுள்ள மொழி யியல் கழகம் போன்றவை யு.எஸ்.எஸ். ஆர்-ன விஞ்ஞானக் கழகத்தின் கீழ் இயங்குகின்றன. இவை போன்ற ஏனைய அமைப்புக்களும் அவற்றின் வளர்ச்சியைக் கல்வியமைச்சின பொதுவான ஆதரவின்கீழ் தாமே வளர்த்துக் கொள்கின்றன. இவற்றின வளர்ச்சி முறை ஐந்தாண்டுத் திட்டங்களில் திட்டமிடப்பட்டுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து அடிபபடையான அமைப்பு முறை ஒரே மாதிரியாகவும், முக்கியமான கொள்கைகள் வலுவாகவும் அமைக்கப்பட்ட பிறகு, பிற துறைகளில் அந்தந்தச் சூழ்நிலைக்கு ஏறப மாற்றிக்கொள்ள உரிமை வழங்கப் படுகிறதென்றே தெரிகிறது.

கல்வி முறை

13. பள்ளிக்கூடத்திற்கு முற்பட்ட கல்வி நிலையங்கள், மூன்று முதல் ஏழாண்டு வரையில் உள்ள குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதற்கு நிறைந்த அளவில் பெருகியுள்ளன.

இந்த நிலைக்கு மேல் மூன்று நிலைப் பள்ளிக்கூடங்கள், உள்ளன. அவை ஆரம்ப நிலை, இடை நிலை, உயர்தரப் பள்ளி நிலை என்பன்வை. ஆரம்பப்பள்ளி நான்கு பிரிவுகளை உடையது. (இதில் 7 முதல் 11 வயதுவரை உள்ளவர்கள் இருக்கிறார்கள்). இடைநிலைப் பள்ளி நிலை ஏழு வகுப்புக்களையும் (ஏறத்தாழ 7 முதல் 14 வரை உள்ள வயது) உயர்தரப் பள்ளி நிலை பத்து வகுப்புகளையும் (7 முதல் 17 வயது வரை உள்ளவர்கள்) கொண்டுள்ளன. இம்மூன்று நிலைகளிலும் அதாவது ஆரம்பப் பள்ளி, இடைநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே மாதிரியான பாடத் திட்டமும், போதனை முறையும் இருந்து வருகிறது. உயர்தரப் பள்ளி நிலையின் இறுதியில் பள்ளி இறுதித் தேர்வு நடைப்பெற்று அதன் பின்னர் உயர்தரக் கல்வி தொடங்குகிறது. பல்கலைக் கழகங்களும் தனி அமைப்புக்களும், தொழில் நுட்ப அமைப்புக்களும் பல்வேறு தொழில் துறைகளில் உயர்தரக் கல்வியை வழங்குகின்றன. இவ்வமைப்புகளில் கற்கின்ற காலம் 4 முதல் 6 ஆண்டுகளாகும்.

கைத்தொழில் கல்வியிலும், ஆரம்ப கல்வி இடைநிலைப் பயிற்சிப் பள்ளிகள் பொதுக் கல்வி முறையில் இடம் பெற்று அமைந்துள்ளன. ஆபனு அவை பற்றிக் காண வேண்டிய அவசியம் இங்கு இல்லை.

14. அவர்களுடைய கல்வி முறையில், ரஷ்ய மொழியின் இடம், தேசிய மொழியின் இடம், போதனு மொழி ஆகியவை பற்றி மட்டுமே நான் அறிந்து கொள்ள முயன்றேன். போதனு மொழியைப் பொறுத்த மட்டில் தோராயமாகக் கூறுமிடத்துக் கீழ்க்கண்ட முறைத் தலைப்புக்களில் அவையடங்கும் என்று சொல்லலாம் :—

(1) எல்லா வகையான கல்வியும் உயர்தரக் கல்வி உள்பட அதாவது பல்கலைக் கழகங்கள். உயர்தரக் கல்வி வழங்கும் ஏனைய அமைப்புக்கள் ஆகிய அனைத்திலும் பிராந்திய மொழிகளையே போதனு மொழிகளாக உள்ள பிராந்தியங்கள். உக்ரேன், டைலோ ரஷ்யா, ஜார்ஜியா, லட்டியா, லிதோனியா, இஸ்தோனியா, உஸ்பெக்ஸ்தான், ஆஸர் பைஜன் ஆகியவை இதைச் சேர்ந்தவை.

இங்கேயும் கூடப் பிராந்திய மொழிகளைப் போதனு மொழிகளாகவுடைய அமைப்புக்களின் பக்கத்திலேயே கல்வியின் எல்லா நிலைகளிலும் ரஷ்ய மொழியைப் போதனு மொழியாகவுடைய அமைப்புக்களும் இருந்து வருகின்றன. உயர்தரக் கல்வியில் ஒரே அமைப்பில் இரண்டு போதனு மொழிகளையும் உடைய அமைப்புக்களும், இரண்டு வகைப் படிப்புகளில் இரண்டு வகைப் போதனு மொழிகளைக் கையாளுகின்ற அமைப்புக்களும் உள்ளன. ரஷ்ய மொழியை அல்லாமல் பிராந்திய மொழியைப் போதனு மொழியாக உடைய உயர்தரப் பள்ளிக்கூடங்களில் ரஷ்ய மொழி கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டு வருகிறது. இதுவும் ஒன்று இரண்டு பாரங்களில் ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு மணி நேரம் வீதம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

(2) அடுத்துள்ள பிரிவு ஏழாவது பாரம் வரையில் பிராந்திய மொழியைப் போதனு மொழியாக உடைய பள்ளிக்கூடங்களாகும். உதாரணமாக உக்ரோ-பின்னிஷ் கூட்ட மொழிகளைப் பொறுத்த மட்டில் இது பொருந்தும். இந்தப் பிராந்தியங்களில் ஏழாவது பாரத்திற்கு மேல் போதனு மொழி முற்றிலும் ரஷ்ய மொழியே ஆகும். இந்த நிலையில் ஏழாவது பாரத்திற்கு மேல் பத்தாவது பாரத்திற்குள்ளாகப் பிராந்திய மொழிகளை ஒரு பாடமாக இப்பிராந்தியங்களில் கற்றுத் தருகிறார்கள்.

(3) மூன்றாவது பிரிவில் பிராந்திய மொழிகள் நாலாவது பாரம் முடியப் போதனு மொழிகளாக உள்ளன. இதற்கப்பால் முற்றிலும் ரஷ்ய மொழியே போதனு மொழியாகும். வடக்கு காகஸஸ் பிராந்தியங்களிலும், சோவியத் மங்கோலிய ரிபப்ளிக்கிலும் உள்ள மக்கள் இப்பிரிவில் சேர்வார்கள்.

(4) இறுதிப் பிரிவு வட சைபீரியப் பகுதியையும், ஏனைய பிராந்தியங்களையும் பெரும்பாலும் பொறுத்ததாகும். இப்பிராந்தியங்களில் நியோஷிஸ், துங்கோஷி, சுக்சியாஸ் போன்ற மொழிகள் பேசப்படுகின்றன. இந்தப் பிராந்தியங்களில் இருபத்தெட்டு வகையான மக்கள் வாழ்கிறார்கள். இந்தப் பிராந்தியங்களில் உள்ள மொழிகள் (ஒரு சில மொழிகள் ஒரு சில ஆயிரக்கணக்கானவர்களாலேயே பேசப்படுகின்றன) புரட்சிக்குப் பிறகு மிகுதியான ஆதரவைப் பெற்றிருப்பினும் இன்னும் நன்கு வளர்க்கப்படவில்லை. இப்பகுதிகளில் மிகச் சிறிய வகுப்புக்களில் மட்டுமே பிராந்திய மொழிகள் போதனு மொழிகளாக இருக்க அதற்கப்பால் ரஷ்ய மொழியே போதனு மொழியாக இருந்து வருகிறது.

15. ரஷ்ய மொழியைக் கட்டாயமாகப் போதிக்கின்ற நிலை முதல் அல்லது இரண்டாவது பாரத்திலேயே (எழு அல்லது எட்டு வயதில்) தொடங்கப்படுகிறது. முதல் பாரத்தில் தொடங்குகின்ற பகுதிகளில் அது முதல் பாரத்தின் இரண்டாவது காலப் பகுதியிலிருந்து தொடங்கப்படுகிறது. ஏனென்றால் முதல் காலப் பகுதியில் நடைபெறுகின்ற தாய் மொழிப் போதனையோடு இது மோதாமல் இருக்கவே இவ்வாறு செய்யப்படுகிறது. கட்டாயமாக ரஷ்ய மொழியையும், இலக்கியத்தையும் போதிக்கின்ற நிலை பத்தாவது பாரம் முடிய அதாவது பதினேழு ஆண்டுகள் வரையில் நடைபெறுகிறது.

எந்த இன்த்தைச் சேர்ந்த மாணவனாக இருப்பினும் ஒருவன் பல்கலைக் கழகத்தில் நுழைய வரும்பொழுது அவன் ரஷ்ய மாணவனைப் போலவே ரஷ்ய மொழியில் பேசவும், எழுதவும், புரிந்து கொள்ளவும் வல்லவனாகி விடுகின்றான். ரஷ்ய மொழி பேசாத இனத்தைச் சேர்ந்த பல மாணவர்கள் மாஸ்கோ பல்கலைக் கழகத்தில் இருக்கின்றார்கள். ரஷ்ய மொழி பேசும் இனத்தைச் சேர்ந்த மாணவர்களோடு சேர்ந்து ரஷ்ய மொழியைப் புரிந்து கொள்ளவும், அம்மொழியில் பேசப்படும் சொற்பொழிவுகளைத் தொடரவும், அம்மாணவர்களோடு சேர்ந்து பொதுப் பரீட்சைகளில் போட்டியிடவும் அவர்கள் ஒன்றும் தொல்லை அடைவதாகத் தெரியவில்லை.

குழந்தையின் ஆரம்பக் கல்வி நிலையில் இரண்டாவது ஒரு மொழியைத் தொடங்குவது குழந்தையின் மனத்தில் ஒரு வகை "அச்சத்தை" உண்டாக்கிவிடும் என்று மனோ தத்துவ வாதிகள் சொல்லுகிறார்கள். இதனைப் பற்றி அவர்கள் யாது சொல்கிறார்கள் என்ற என் கேள்விக்கு ஒரு பகுதிக் காலம் இடையே கழிவதனாலும், கற்பிக்கும் முறையில் அவர்கள் கையாளுகின்ற புது வழி காரணமாகவும் இவர்களுடைய அனுபவத்தில் இத்தகைய தொல்லை ஒன்றும் விளையவில்லை யென்று கூறினார்கள். ஜார்ஜியா போன்ற பகுதிகளில் பிராந்திய மொழிகளை எழுதுவதற்கு ஒரு தனிப்பட்ட எழுத்து முறையை வைத்துள்ளார்கள். எனினும் அந்தப் பிராந்தியங்களில் கூட இத்தகைய தொல்லை வரவில்லையாம். ஆனால் பிற பிராந்தியங்களில் உள்ள பிராந்திய மொழிகளை ரஷ்யன் எழுத்துக்களாலேயே எழுதுகிறார்கள்.

ஒரு பிராந்தியத்திலுள்ள பேராசிரியர்கள் மற்றொரு பிராந்தியத்திற்குச் சென்று சொற்பொழிவு செய்யவேண்டுமேயானால் அப் பேராசிரியர்களுக்குப் புரியாத பிராந்திய மொழி அப்பகுதிகளில் போதனா மொழியாக இருக்குமேயானாலும் இப்பேராசிரியர்கள் சொற்பொழிவுகள் ரஷ்ய மொழியிலேயே வழங்கப்படுகின்றன. எல்லா மாணவர்களும் அவரவர்கள் தாய் மொழியோடு ரஷ்ய மொழியையும் சேர்த்து அறிந்துள்ளார்களாதலால் இவ்விஷயத்தில் எவ்விதத் தொல்லையும் விளைவதில்லை. மிகப் பழைய காலத்தைச் சேர்ந்த ஒரு சில பேராசிரியர்களே இன்னும் இரட்டை மொழி அறியாதவர்களாக இருக்கிறார்கள். புதிய தலை முறையில் வந்தவர்கள் முற்றிலும் இரட்டை மொழிக் கல்வி பயின்றவர்களாதலால் அவர்களைப் பொறுத்த மட்டில் ரஷ்ய மொழியிலும், அவர்கள் சொந்த மொழியிலும் தகுந்த அளவு வன்மை பெற்றுள்ளார்கள். எனவே அப்பேராசிரியர்கள் எநத மொழியில் பேசினாலும் மாணவர்கள் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. என்றாலும் சில பழைய பேராசிரியர்கள் அவர்களுடைய இளமையில் ரஷ்ய மொழியையே பயின்றுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது தாய் மொழியில் சொற்பொழிவு செய்யும் வழக்கத்தை இழந்துள்ளார்கள். எனவே ரஷ்ய மொழியிலேயே அவர்கள் சொற்பொழிவுகளைச் செய்கிறார்கள்.

ஒரு பிராந்தியத்திலிருந்து மற்றொரு பிராந்தியத்திற்குப் பெருவாரியான ஆசிரியர்களும், மாணவர்களும் குடி பெயர்ந்து செல்வது அங்கே இருந்து வருகிறது. உதாரணமாக மாஸ்கோ பல்கலைக் கழகத்திற்கு பெருவாரியான மாணவர்களும் ஆசிரியர்களும் பிற பிராந்தியங்களிலிருந்து வந்துள்ளார்கள்.

16. போதனா முறை நுணுக்கங்களைப் பற்றி அறிந்துகொள்ள நான் விரும்பவில்லை என்றாலும் ரஷ்ய மொழியை போதிக்கின்ற அளவில் ஒன்று அறிந்துகொண்டேன். கல்வித் துறை முழுவதிலும் ஆரம்பக் கல்வியின் முதல் நிலை தொடங்கி ஏழாவது வகுப்பு முடிய மொத்தம் கற்பிக்கும் நேரத்தில் பெரும்பகுதியை ரஷ்ய மொழியைக் கற்பிப்பதற்கு செலவழிக்கின்றார்கள். ஒன்று முதல் ஏழாவது கிரேட் முடிய மொத்தமுள்ள 6,436 கல்வி மணிகளில் 2,508 மணி நேரம் ரஷ்ய மொழியைக் கற்பதற்கும் படிப்பதற்கும் செலவழிக்கப்படுகிறதென்று அதிகார பூர்வமாக சொல்லப் பட்டது.

17. பிற நாட்டு அல்லது ஐரோப்பிய மொழிப் போதனை ஐந்தாவது பாரத்தில் தொடங்கி பத்தாவது பாரம் முடியச் செல்கின்றது. ஒரு வாரத்திறகு மூன்று அல்லது நான்கு மணி நேரம் இப்போதனை நடைபெறுகிறது. ரஷ்யன் சோவியத் பிடரேடிவ் சோஷலிஸ்ட் ரிபப்ளிக்கில் ரஷ்ய மொழியே தாய் மொழியாக இருத்தலின் பள்ளிக்கூடங்களில் ஏனைய பாடங்களைப் போதிப்பதற்கு அதிக நேரமிருத்தலினால் பிற நாட்டு மொழி போதனை மூன்றாவது பாரத்திலேயே தொடங்கி விடுகிறது. பிற பகுதிகளில் அது ஐந்தாவது பாரத்தில் தான் தொடங்கப்படுகிறது. இப்பிரிவில் இடைக்கின்ற விருப்ப பாடங்களாகிய வெளி நாட்டு மொழிகள், ஆங்கிலம், ஜர்மன், பிரஞ்சு ஆகியவையாகும். லத்தீன் மொழி போதனை சில தனிப்பட்ட பள்ளிக்கூடங்களில் மட்டுமே நடைபெறுகிறது.

பிற நாட்டு மொழியில் ஒரு மாணவன் பெறும் அறிவு, அம்மொழியைப் புரிந்துகொள்ளும் அறிவே தவிர அதில் பேசும் அறிவன்று. ஆங்கிலத்தை மிக நன்றாக புரிந்து கொண்டு ஆனால் அதை ஒரு சிறிதும் பேச முடியாத பலரை நான் சந்திக்க நேர்ந்தது. உயர்தரப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன் பிற மொழிப் படிப்பு முடிந்தவுடன் அகராதியின் உதவியால் அப்பிற மொழிக் கல்வியை நன்கு புரிந்து கொள்ளக்கூடும் என்றே எனக்குச் சொல்லப்பட்டது. மேலும் ரஷ்ய மாணவர்கள் பிற நாட்டு மொழிகளில் பெற்றிருக்கின்ற அறிவுத் திறம் போதாது என்று ரஷ்யக் கல்வி அதிகாரிகள் கருதுகிறார்கள் என்றும் சொன்னார்கள். அம் மாணவர்கள் பெற்றுள்ள தரத்தை மிகுதிப்படுத்தும் முயற்சி நடைபெற்று வருகிறது.

18. ராஷ்ய மாணவர்கட்கு ரஷ்யாவில் வழங்காத பிற மொழிகளைக் கட்டாய பாடமாகப் போதிக்கும் நிலை இல்லை.

பெரும்பாலும் பிராந்திய மொழிகளைக் போதனு மொழிகளாகக் கொண்ட பள்ளிக்கூடங்களில் கூட எல்லா நிலைகளிலும் ரஷ்ய மொழியைப் போதனு மொழியாககொண்ட பள்ளிக்கூடங்கள் இருந்து வருகின்றன. இத்தகைய இரண்டு வகையான பள்ளிக்கூடங்கள் அவற்றில் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற இடங்கள் ஆகியவை தேவைக்குத் தகுந்தபடி பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. இவற்றில் ஒவ்வொன்றின் அளவும் எவ்வளவு என்பதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை யாதலால் அது பற்றிய கணக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

எதிர்பார்க்கப்படுவது போலவே யூனியனிலுள்ள எல்லா ரிபப்ளிக்குகளிலும் பல்வேறு இனத்தாரும் கலந்தே வாழ்கின்றார்கள். இத்தகைய இடங்களில் போதனு மொழியைத் தேர்ந்தெடுக்கும் பிரச்னை ஒரே அடிப்படையில் நடைபெறுகிறது. அதாவது உஸ்பெக்கிஸ்தானில் ஒரு குறிப்பிட்ட நகரத்தில் வேண்டுமான அளவு ஜார்ஜியா மாகாண மக்கள் வசிப்பார்களே யானால் ஜார்ஜிய மொழியைப் போதனு மொழியாக உடைய ஒரு வகுப்போ பள்ளிக்கூடமோ உஸ்பெக்கிஸ்தானில் நடைபெறும். உஸ்பெக்கிஸ்தானில் காஸாக், கிர்கிஸ், கரகல்பாக் ஆகிய மொழிகளைப் போதனு மொழிகளாகக் கொண்ட, அதுவும் ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி ஆகிய பகுதிகளில் கூட போதனு மொழியாகக் கொண்ட, பள்ளிக்கூடங்கள் நிரம்பவுள்ளன. யு.எஸ்.எஸ்.ஆர்.-ரில் வாழ்கின்ற இனத்தாரைப் பொறுத்த மொழிகள் அளவில் தான் இது நடைபெறுகிறது என்று சொல்லவேண்டா. பிற மொழி பேசுகின்ற மக்கள் எங்கே இருந்தாலும் இதே நிலை நடைபெறுகிறது. மாஸ்கோ நகரத்தில் கூட பிரஞ்சு, ஆங்கிலம் இவற்றைப் போதனு மொழிகளாகவுடைய பள்ளிக்கூடங்கள் உண்டு. என்றாலும் இப் பள்ளிக்கூடங்கள் அனைத்திலும் ரஷ்ய மொழி கட்டாய பாடமாக இருந்து வருகிறது.

எல்லா ரிபப்ளிக்குகளிலுமுள்ள மக்கள் ரஷ்ய மொழியைக் கற்பதற்கு மிகவும் ஆவலாக இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. எனவே எந்த ஒரு இனத்தாரையும் கட்டாயப்படுத்த வேண்டிய பிரச்னையே அங்கு இல்லை

என்றும் சொல்லப்பட்டது. ரிப்பப்ளிக்களில் ரஷ்ய போதனு மொழிப் பள்ளிக்கூடங்களை உண்டாக்கவும், காப்பாற்றவும் அதிகாரிகள் எவ்விதத் தயக்கமும் காட்டுவதில்லை என்றும், அந்தப் பிராந்திய மொழிகளுக்கு எதிரான எந்த ஒரு மொழியிலும் புதிய பள்ளிக்கூடங்களை நிறுவ அதிகாரிகள் அஞ்சுவதில்லை என்றும் சொல்லப்பட்டது. பல்வேறு நிலைகளிலுமுள்ள பல்வேறு மொழிகளிடையே எவ்விதமான "போட்டி மனப்பான்மையும்" இல்லை என்றே தெரிகிறது. ஒரு பிராந்தியத்தில் உள்ள பள்ளிக்கூடங்கள் எந்தப் போதனு மொழியைப் பெற்றிருந்தாலும் அந்தப் பிராந்தியத்தின் ரிபப்ளிகினுலேயே ஆதரிக்கப்படுகிறது.

19. பாடப் புத்தகம் முதலியவற்றைப் பொறுத்த மட்டில் நிலைமை ஒவ்வொரு மொழிக்கும் மாறுபடுகிறது. உக்ரேன், ஜார்ஜியா, லத்வியா, லிதுவேனியா, எஸ்தோனியா, பைலோ ரஷ்யா ஆகிய மொழிகளில் நவீனக் கல்வி, விஞ்ஞான அறிவு ஆகியவற்றைப் பொறுத்த மட்டில் நீண்ட கால மரபு இருந்து வந்தமையின் நிறைந்த அளவு இலக்கிய நூல்களும், விஞ்ஞானப் புத்தகங்களும் கிடைக்கின்றன. சில சமயங்களில் முதல் நூல்களாக இம்மொழியிலேயே விஞ்ஞான நூல்கள் தோன்றுகின்றன என்றும் அவற்றை ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்க வேண்டி நேரிடுகிறதென்றும் கேள்விப்பட்டேன். என்றாலும் ரஷ்ய மொழியோடு ஒப்பு நோக்கும் பொழுது இம் மொழிகளில் கலைத் துறை நூல்கள் மிகுதி என்றும், கேள்விப்பட்டேன். மேலும் ரஷ்ய மொழி பேசாத இடை மாணவர்களைப் பொறுத்த மட்டில் பல்கலைக் கழகங்களிலும், உயர்தரக் கல்வி வழங்கும் அமைப்புக்களிலும், கலைத் துறைப் பாடங்களைப் பொறுத்த மட்டில் பிராந்திய மொழிகளையும், விஞ்ஞான பாடங்களைப் பொறுத்த மட்டில் ரஷ்ய மொழியையும் விரும்புகிறார்கள் என்றும் அறிந்தேன்.

பாடப் புத்தகத் தயாரிப்பும், ஒரு மொழியிலுள்ள இலக்கியத்தை மற்ற மொழிகளில் மொழி பெயர்க்கும் வேலையும் முறைப்படி விடாமல் பல்வேறு பிராந்தியங்களிலுள்ள பல்வேறு அமைப்புக்களினுலும் தொடர்ந்து செய்யபடுகிறது என்றும் அறிந்தேன். இத்தகைய நூல்களை வெளியிடுவதற்காக ஏற்பட்டுள்ள அமைப்புக்கள் விஞ்ஞானத் தகவல்களை அடிக்கடி அச்சிட்டு வெளியிடுகின்றன.

பல்வேறு இனத்தாருக்கும் ரஷ்ய மொழியைப் போதிக்க சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்பப் பல்வேறு வகையான பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வழக்கில் இருந்து வருகின்றன.

மொழிகளின் வளர்ச்சி

20. பல்வேறு மொழிகளையும், முன்னர் அவைகள் இருந்த நிலையிலிருந்து மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு அவைகளின் தேவைக்கு ஏற்பப் பெரிதும் உதவிகள் செய்யப்பெற்றுள்ளன உதாரணமாக உஸ்பெக்கிஸ்தானில் தலைநகராகிய தஷ்கண்டில் உஸ்பெக் மொழியின் வளர்ச்சி பற்றியும், அதனுடைய எழுத்து முறை வளர்ச்சி பற்றியும் நான் கேள்விப்பட்டதை இங்கே கூறுகிறேன். (இக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களனைவரும் அவர்கள் பிரத்யேக அறிவு வாய்ந்த அறிஞர்களாயினும், இம்மொழிப் புலவர்களாயினும் அனைவரும் உஸ்பெக்கர்களே) ஐந்து ஆசியா ரிபப்ளிக்களிலும் ஏறத்தாழ நிலைமை இதே மாதிரித் தான் ஆதலின் உஸ்பெக் மொழியைப் பொறுத்த மட்டில் சொல்லப்படுபவை அனைத்தும் ஏனைய காஸாக், கிர்ஜிஸ், உஸ்பெக் மொழிகளையும் பொறுத்த மட்டில் பொருத்தமேயாகும். தேஜிக் மொழி இரானிய அடிப்படையில் தோன்றியதாகும்.

இந்த ஐந்து ஆசிய ரிபப்ளிக்குகளிலும் புரட்சிக்கு முன்னர் ஐந்து மொழிகளும், அராபிய எழுத்திலேயே எழுதப்பட்டன. அனேகமாக

ஏழு அல்லது எட்டாம் நூற்றுண்டு வாக்கில் இப் பிராந்தியங்களில் வாழும் மக்களின் மூதாதையர்கள் மத்திய துர்க்கிஸ்தானிலிருந்து வந்தவர்களாதலின் அவர்களுக்குரிய தனியான எழுத்துக்களைப் பெற்றிருக்கக்கூடும். ஆனால் அராபியப படையெடுப்பிற்குப் பிறகு அராபிய எழுத்துக்களையே இப்பிராந்திய மொழிகளுக்குத் திணிக்கப்பட்டதென்று தெஷ்கண்டில் கூறினார்கள். 1917 புரட்சி வருடம் முடிய இது நடைபெற்று வந்தது. அராபிய எழுத்துக்கள் உஸ்பெக் மொழியிலுள்ள ஒலிகளையெல்லாம் எடுத்துக் காட்ட போதுமானவை யல்ல. ஆதலால் அராபிய எழுத்து முறையை விடடு விட வேண்டும் என்ற கிளர்ச்சி புரட்சிக்குப் முன்னரேகூட இருந்து வந்தது. ஆனால் இந்த எழுத்துச் சீர்திருத்தத்தை முஸ்லீம் மதத்தார்கள் எதிர்த்ததாகச் சொல்லப்படுகிறது. புரட்சியை அடுத்த சில வருஷங்களில் உஸ்பெக்கர்கள் அராபிய எழுத்து முறையைச் சீர்திருத்த முயன்றார்கள். ஆனால் இது திருப்திகரமானதும், போதுமானதுமான அளவு அன்று என்று கருதப்பட்டது. 1929-ல் பெரிய அளவில் அரசியல் நிலையிலும், கல்வியாளர் நிலையிலும் விவாதம் நடைபெற்ற பிறகு லத்தீன் மொழி எழுத்தை ஏற்றுக்கொண்டார்கள். இதனை அடுத்து 1935-ம் ஆண்டை ஒட்டி இப் பிரச்னை மறுபடியும் தோன்றி மிகுந்த அளவு விவாதத்திற்குப் பிறகு ரஷ்ய எழுத்து முறைக்கு மாற்றம் செய்யவேண்டும் என்ற பெருங்கிளர்ச்சி தோன்றிற்று. எனவே 1940-ல் மிகப் பெரிய அளவில் பொது மக்கள் இது பற்றி விவாதித்த பிறகு லத்தீன் எழுத்து முறையை மாற்றி உஸ்பெக் மொழிக்கு ரஷ்ய எழுத்து முறையை மேற்கொண்டார்கள். ரஷ்ய எழுத்து முறையில் அடங்காத ஒலிகளை அவை உஸ்பெக் மொழிக்குச் சிறப்பாக இருத்தலினால் சில குறிகள், அடையாளங்கள் இட்டு வழங்கினார்கள். இன்றைய நிலையில் சாதாரண மாணவர்கள் அராபிக் எழுத்து முறையைக் கற்பதே இல்லை. அவர்கட்கு அது போதிக்கப்படுவதும் இல்லை. மொழி நூல் கற்கின்ற ஒரு சிலரும், பழைய முறையில் முஸ்லீம் மதப் படிப்புப் படிக்கின்ற ஒரு சிலருமே அராபிய எழுத்தை இப்பொழுது அறிவார்கள். எழுத்து முறையை மாற்ற வேண்டுமென்ற பிரச்னை உச்பெக்கிஸ்தான் விஞ்ஞானக் கழகத்தால் சிபார்சு செய்யப்பட்டு யூனியன் ரிபப்ளிக்கில் மிக உயர் சோவியத்தால் தனிப்பட்ட ஒரு கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது.

எல்லாப் பழைய உஸ்பெக் இலக்கியங்களும் இப்புதிய எழுத்துமுறையில் இப்பொழுது மீட்டும் பெருஞ் செலவில் வெளியிடப்பட்டுள்ளன. ரஷ்ய எழுத்து முறை சென்ற 16 ஆண்டுகளாக உஸ்பெக் மொழிக்குப் பயன்பட்டு வருகிறது. இதனால் ஏற்படும் பயனை அனைவரும் திருப்தியோடு ஏற்றுக்கொண்டுள்ளனர். அச்சுமுறை, வேலை மிச்சம் ஆகியவற்றில் பெரிய அளவு இலாபம் ஏற்பட்டு இருப்பதோடு குழந்தைகளுக்கும் இரண்டு மூன்று எழுத்து முறைகளைக் கற்றுக்கொள்ளாமல் ஒரே எழுத்து முறையைக் கற்றுக்கொள்ளுகின்ற ஒருவகையான இலாபமும் இதனால் ஏற்பட்டுள்ளது.

உஸ்பெக் மொழியின் எழுத்துக்கு ஏற்பட்ட இந்த வரலாறு ஏனைய நான்கு ஆசியா ரிபப்ளிக்குகளைப் பொறுத்த மட்டிலும் உண்மைதான். இப்பிராந்தியங்களில் வழங்கும் ஏனைய சிறிய மொழிகளும், ஆரல் கடல் பக்கத்தில் மூன்று இலட்சம் மக்களால் பேசப்படும் கரகல்பாக் மொழியும் இதே முறையில் மாற்றம் பெற்றவையே.

இதே நேரத்தில் யு.எஸ்.எஸ்.ஆர்.-ல் உள்ள எல்லா மொழிகளும் இவ்வாறு ரஷ்ய அல்லது சிரிலிக் எழுத்து முறையை மேற்கொள்ளவில்லை என்பதையும் அறியவேண்டும். லட்வியா, எஸ்டோனியா, லித்தேனியா ஆகிய ரிபப்ளிக்குகள் சரித்திர காரணங்களினால் இன்னும் லத்தீன் எழுத்து முறையையே பயன்படுத்தி வருகின்றன. ஆர்மீனியாவும், ஜார்ஜியாவும் லத்தீன் மொழியிலும் ரஷ்ய மொழியிலும் சேராத தமக்கே

உரிய ஒரு எழுத்து முறையை இன்னும் வைத்துக்கொண்டுள்ளன. இன்றுகூட இம்மொழியில் வெளிவரும் இலக்கியங்கள் ரஷ்ய எழுத்தில் எழுதப்படுவதில்லை.

21. புரட்சிக்கு முன்பு பத்து இனத்தார்கள் தத்தமக்கே உரிய எழுத்து முறையை வைத்திருந்தனர். இன்று எண்பதுக்கு மேற்பட்ட இன மொழிகளுக்கு எழுத்துக்கள் தயாரித்து கொடுத்திருக்கிறார்கள். ரஷ்ய எழுத்து முறையை அடிப்படையாகக் கொண்டு அப்புதிய மொழிகளில் இருக்கின்ற புதிய ஒலி முறைகளுக்கு ஏற்பக் குறியீடுகளை அமைத்துப் புது எழுத்து முறைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் எழுத்து முறை இல்லாதிருந்த மொழிகளுக்குப் புதுமையாக எழுத்து முறை அமைத்துக் கொடுக்கப்பட்டவுடன் அம்மொழி பேசும் மக்களுள் கல்வி வளர்ச்சி விரிவாகத் தொடங்கியது.

22. கலைச் சொற்களையும், தொழில் நுட்பச் சொற்களையும் உண்டாககத் தொடங்கியவுடன் பிரச்னை பெரிதாகத் தோன்றியது. அவற்றை ஆட்சித் துறையின் உயர்ந்த நிலைகளிலும் கல்வித் துறையின் பல்வேறு உயர்ந்த நிலைகளிலும் பயன்படுத்தத் தொடங்கியவுடன் ரஷ்யாவில் வழங்கும் பல்வேறு மொழிகளும் அதனைப் பயன்படுத்த வேண்டி நேரிட்டதால் பிரச்னை பெரிதாயிற்று. உஸ்பெக் மொழியைப் பொறுத்தமட்டில் நடை பெற்றவற்றை எனக்கு எடுத்துக் கூறினார்கள். இதே நிலைதான் ஏறத்தாழ எல்லா மொழிகளுக்கும் ஏற்பட்டது என்றும் சொன்னார்கள். புரட்சி முடிந்தவுடனே அதற்கு முன்னர் இருந்த ரஷ்ய மொழித் திணிப்பை எதிர்த்து அராபியக் கலைச் சொற்களையே வழங்கவேண்டும் என்ற கொள்கை இருந்து வந்தது. உஸ்பெக் மொழியிலும்கூடப் பல்வேறு கலைச் சொற்கள் இருந்தன என்றும் அவை சமீப காலத்தில் பயன் படுத்தாமையினால் அழிந்துவிட்டன என்றும் சொல்லப்பட்டது.

உக்ரேனியன் மொழியைப் பொறுத்தமட்டிலுங்கூடப் புரட்சிக்குப் பிறகு ரஷ்ய மொழியின்மேல் கொண்ட வெறுப்பால் தூய உக்ரேனியன் சொற்களையே அறிஞர்கள் தேடிப் பிடித்துப் பயன்படுத்தினார்கள் என்று கீவ் நகரத்தில் எனக்குச் சொன்னார்கள். சார் மன்னர்கள் காலத்தில் கீவ் பல்கலைக் கழகத்தில் உக்ரேனியன் மொழி அல்லாமல் ரஷ்ய மொழியே போதனா மொழியாக இருந்தமையின் மக்கள் அதனைப் பெரிதும் வெறுத் தார்கள். ஆனால் இம்மனோ நிலை சிறிது காலத்திற்கே இருந்து இப்பொழுது மாறிவிட்டது.

1925-ம் வருஷத்திலிருந்து உஸ்பெக் மொழியை உயர்தரக் கல்வி போதிக்கும் மொழியாகப் பயன்படுத்த வேண்டிப் புதிய கலைச் சொற்களை அம்மொழியில் உண்டாக்க அரும்பாடு படுகிறார்கள். பல்வேறு அதிகாரிகளும், அறிஞர்களும் தாம்தாமே விருப்பப்படிக் கலைச் சொற்களை ஆக்க முயன்றதால் முதலில் குழப்பம் ஏற்பட்டது உண்மைதான். ஆனால் 1930-க்குப் பிறகு இப்பிரச்னையை விஞ்ஞான ரீதியில் முறைப்படி ஆராயத் தொடங்கினார்கள். இப்பொழுது பல்வேறு கலைச் சொற்களையும் கொண்ட தரமான அகராதி கள் தொகுக்கப்பட்டுக் கல்வித் துறையின் பல பகுதிகளுக்கும் வெளி யிடப்பட்டு வருகின்றன. புதிய கலைச் சொற்களை ஆக்கும்பொழுது முன்னர் அவர்கள் தாய்மொழியில் அத்தகைய வழக்கு உண்டா என்று ஆராய்ந் தார்கள். அது இல்லாதபொழுது ரஷ்ய மொழியிலிருந்தோ பன்னாட்டு மொழியிலிருந்தோ கடன் வாங்குகிறார்கள். ஆனால் அங்ஙனம் கடன் வாங்கிய "வேர்ச் சொற்களை" உஸ்பெக் மொழிக்கு ஏற்ப மாற்றிக் கொள்கிறார்கள். யூனியன் ரிபப்ளிக்கின் மிக உயர் சோவியத் கௌன் சில் கலைச் சொல் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மேலும் தேவைப்படுகின்ற விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப வேண்டிய சொற்களை விஞ்ஞானக் கழகம் கவனித்துக்கொள்ளுகிறது.

துருக்கிய இன மொழிகளுள் கலைச் சொற்கள் அனைத்தும் ஒரே மாதிரி யாக உள்ளன. புதிய சொற்களை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர்ப்பல இனத்தார்களும் ஒன்றாகக் கூடி அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுக் கலைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். கூடுமான வரையில் இங்ஙனம் அனைவரும் ஏற்றுக் கொள்வதால் அவற்றைத் தயாரித்த ஒரு பட்டியலை ஒவ்வொரு ரிபப்ளிக்குக்கும் அனுப்புகிறார்கள். பல்வேறு மொழி வல்லுநர்களும் ஒன்றுகூடி இப்பட்டியலை ஆராய்ந்து முடிவுக்கு வருகிறார் கள்.

ஆப்கானிஸ்தானத்தில் ஒரு பகுதியில்கூட உஸ்பெக் மொழி பேசப் பட்டு வருகிறது. ஆப்கானிஸ்தானத்திலுள்ள உஸ்பெக் மொழி பேசு பவர்களுள் பெரும்பான்மையானவர்கள் கல்வி யறிவு இல்லாதவர்கள். எனவே ரஷ்யப் பகுதியில் உஸ்பெக் மொழிக்கு சிரிலிக் எழுத்து முறையை மேற்கொண்டதால் ஆப்கானிஸ்தானப் பகுதியிலுள்ளவர்கட்கு எவ்வித நஷ்டமும் ஏற்படவில்லை.

புரட்சிக்குப் பிறகு பல்வேறு பிராந்தியங்களிலும் அந்தப் பிராந்திய மொழிகளையே ஆட்சித் துறை, கல்வித் துறை ஆகியவற்றிற்குப் பயன் படுத்தத் தொடங்கினார்கள். ஆனால் அது வரையில் இந்த உரிமையை இழந்திருந்த காரணத்தால் இம்மாற்றத்தைக் கண்டவுடன் தேவைக்கு அதிகமான முறையில் கூடத் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்ட முயன் றார்கள். ஆனால் இது ஓரளவு காலமே இருந்து பின்னர் மறைந்து விட்டது. நாளாவட்டத்தில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. ஏனென்றால் ஒவ்வொரு இனத்தாரும் தங்கள் மொழி களை அவற்றின் எல்லைக்கு அப்பால் கொண்டு செலுத்த முயன்றால் அதனால் நஷ்டம் அடைபவர் தாங்களே என்று அறிந்துகொண்டார்கள்.

நீதி மன்றங்கள்

23. நீதி முறையைப் பொறுத்தமட்டில் யு.எஸ்.எஸ்.ஆர்.-ரிலும் இந்தி யாவிலும் உள்ள நீதி முறையைப் பல்வேறு காரணங்களினால் ஒப்பு மைப்படுத்த முடியவில்லை. எனவே அந்நாட்டிலுள்ள நீதி மன்றங்களில் வழங்கும் மொழியை வைத்து நம்முடைய நாட்டிற்கு ஏதேனும் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்வது இயலவில்லை.

இந்திய நீதி முறையில் இடைநிலை மொழியைப் பற்றிய முக்கியமான பிரச்னை உயர் நீதி மன்றங்களில் தீர்ப்புகள், ஆணைகள், உத்தரவுகள் ஆகியவை எந்த மொழியில் இருக்க வேண்டும் என்பதைப் பற்றியே உள்ளன. நம்முடைய நீதி முறையில் (ஆங்கிலோ சாக்ஸன் முறையை யொட்டி) வழக்குச் சட்டங்கள் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. ஆதலால் எல்லா வழக்குச் சட்டங்களும், அவை மிக உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் ஆகிய இடங்களில் எங்குத் தீர்ப்பளிக்கப்பட்டாலும் எல்லா நடுவணர்களுக்கும் புரியக்கூடிய மொழியில் இருக்க வேண்டும். அன்றி யும் கீழ்நிலை நீதிமன்றங்களிலும் நடுவணர் மன்றங்களிலும் உள்ள வர்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்திய முறையில் உள்ள பிரச்னை என்னவென்றால் உயர்நீதி மன்றங்களில் வழங்கும் தீர்ப்புக்கள் இங்ஙனம் எல்லா நடுவணர்கட்கும் பயன்பட வேண்டும் என்பதோடு வழக்காடுகின்ற பிராந்திய மக்கள் புரிந்துகொள்ளக் கூடிய பிராந்திய மொழியிலேயே இருக்க வேண்டும் என்றும் கூறப்படுவதால் ஏற்படுகின்ற பிரச்னையாகும். ரஷ்ய முறையில் இம் முக்கியமான பிரச்னை எழவே இல்லை. ஏனென்றால் நம்முடைய நாட்டில் நீதி முறையில் வழக்குச் சட்டம் பயன்படுவதைப் போல அவர்களுடைய நாட்டில் வழக்குச் சட்ட நீதி முறையில் பயன்படுவதே இல்லை.

24. யு.எஸ்.எஸ்.ஆர்.-ல் நீதி வழங்கும் யந்திரம் பற்றி ஒரு வார்த்தை சொல்லவேண்டும். நீதித்துறையின் முடிவில் யு.எஸ்.எஸ்.ஆ.-ரின்

கூட்டமைப்பு மத்தியில் யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் நீதி மன்றம் இருக்கிறது. இதுவே நாட்டின் மிக உயர்ந்த நீதி மன்றமாகும். ய.எஸ்.எஸ்.ஆர்.-ரிலுள்ள எல்லா நீதி உறுப்புக்களையும் யூனியன் ரிபப்ளிக்குகளில் நடைபெறும் நீதி அலுவல்களையும் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இதனைச் சேர்ந்தது. மிக உயர் நீதி மன்றத்தில் பணியாற்றும் ஏறத்தாழ 30 நடுவணர்கள் மிக உயர் சோவியத்தால் ஐந்து ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு யூனியன் ரிபப்ளிக்கிலும் ஒரு மிக உயர் நீதி மன்றம் இருக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் பிராந்தியத்திலும் சுய உரிமை பெற்ற ரிபப்ளிக்குகளிலும் நீதி மன்றங்கள் உண்டு. யூனியன் ரிபப்ளிக்குகளிலுள்ள மிக உயர் நீதி மன்றங்களில் பணியாற்றும் நடுவணர்கள் அந்த யூனியன் ரிபப்ளிக்கைச் சேர்ந்த மிக உயர் சோவியத்தால் ஐந்து ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதே போலச் சுய உரிமை பெற்ற பிராந்தியங்களிலும் அந்த அந்த சோவியத்துகள் நடுவணர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஒரு யூனியன் ரிபப்ளிக்குக்குள்ளாக நீதி முறை அமைப்புக் கீழ்க்கண்டவாறு இருந்து வருகிறது :—

அந்த யூனியன் ரிபப்ளிக்கைச் சேர்ந்த மிக உயர் நீதிமன்றத்தின் கீழ் பிராந்திய நீதிமன்றங்கள் உள்ளன. ஒவ்வொரு ரிபப்ளிக்கும் சில பிராந்தியங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக உக்ரேன் நாடு 26 பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிராந்தியமும் 40 அல்லது 50 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மக்கள் நீதி மன்றமும் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒரு பிராந்திய நீதி மன்றமும் உள்ளன. இந் நீதிமன்றங்கள் அனைத்தும் சிரியல், குற்ற யியல் ஆகிய இரு முறை வழக்குகளுக்கும் பயன்படுகின்றன. சில சமயங்களில் ஒரே நீதிமன்றம் தனியான முறையில் அமர்ந்து இவ்வழக்குகளைக் கவனிக்கின்றன. மாவட்ட நிலையில் உள்ள நீதிமன்றம் உக்ரேன் நாட்டில் மூன்று நடுவணர்களால் கொண்டு செலுத்தப்படுகிறது. அவர்களுள் ஒருவர் சட்டத் தகுதியுடைய மக்கள் நடுவணர் ஆவார். ஏனைய இருவரும் "மக்களினுடைய பிரதிநிதிகள்" என்ற முறையில் பொது மக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்த மக்கள் பிரதிநிதிகள் பட்டியல் மக்கள் சோவியத்தால் மாவட்ட நிலையில் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தப் பட்டியலிலிருந்து எடுக்கப்படும் இருவர் மக்கள் நடுவணரோடு சேர்ந்து வழக்குகளை விசாரிக்க வருகின்றார்கள். பிராந்திய நிலையிலும் கூட நடுவணர்களும் மக்கள் பிரதி நிதிகளும் அந்த சோவியத்துகளால் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் நீதிமன்றம் யூனியன் ரிபப்ளிக்குகள் உள்பட யு.எஸ்.எஸ்.ஆர்-ன் நீதித் துறை முழுவதிலும் ஆட்சி செலுத்துகிறது.

25. நம்முடைய நாட்டில் நீதித் துறையில் உள்ளது போலவும் ஆங்கிலோ-சாக்ஸன் முறையில் உள்ளது போலவும் வழக்குச் சட்டங்களை எடுத்து நீதி மன்றங்களில் கூறுதல், அதாவது முன்னர் நடந்த வழக்கின் முடிவுகளை எடுத்துக் கூறுதல் இந்நாட்டில் இல்லை. உயர் நீதிமன்றங்களில் கொடுக்கப்படும் தீர்ப்புகள் எந்த வழக்குக்குத் தரப்பட்டனவோ அந்த வழக்கைப் பொறுத்த மட்டிலுமே செல்லுபடியாகும். எனவே, வழக்குச் சட்டங்களுக்கு இங்கு மதிப்பு இல்லை. எந்த ஒரு யூனியன் ரிபப்ளிக்கிலும் உள்ள மிக உயர் நீதிமன்றம் தருகின்ற தீர்ப்புகள் பிற இடங்களில் எடுத்துக் கையாளப்படாமையால் இவ்விஷயத்தில் மொழிப் பிரச்னை தோன்றவே இல்லை. யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர்நீதி மன்றத் தீர்ப்புகள் மிகுதியும் வெளியிடப்பட்டுள்ளன என்றாலும் சட்டஞ் செய்வதற்கு இவை மூலப் பொருளாக அமைவதில்லை. இவை ரஷ்ய மொழியிலேயே வெளியிடப்பட்டுள்ளன. இதே போல யூனியன் ரிபப்ளிக்குகளிலும்

அந்த ரிபப்ளிக்கைச் சேர்ந்த மிக உயர் நீதிமன்றம் தந்த தீர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் அந்த ரிபப்ளிக்கில் கூடக் கீழ் நிலை நீதிமன்றங்களில் அந்த வழக்குகளை எடுத்து மேற்கோள் காட்டுவதில்லை. எனவே அடுத்துள்ள ரிபப்ளிக்கில் இவ்வழக்கை எடுத்துக் காட்ட வேண்டிய பிரச்னை எழுவதே இல்லை.

வழக்காடுபவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் சௌகரியத்தைக் கருதி இடைநிலை மொழியில் எல்லாவிதமான சௌகரியங்களும் செய்து கொடுக்க முயலுகின்றார்கள். புரட்சிக்கு முன்னர் நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்களில் ரஷ்ய மொழியே வழங்கி வந்தது. இப்பொழுது பெரும்பாலாக நீதிமன்றங்கள் எந்த இடத்தில் அமைத்துள்ளனவோ அந்தப் பிராந்திய மொழியையே நீதிமன்றங்களும் பயன்படுத்துகின்றன. ஒரு தனிப்பட்ட சாட்சியோ அன்றிக் குற்றவாளியோ அந்தப் பிராந்திய மொழியை அறியாதவராக இருப்பின் நம்முடைய நாட்டில் நடைபெறுவது போலவே மொழிப் பெயர்ப்பாளரின் மூலம் இப்பிரச்னை தீர்க்கப்படுகிறது. யூனியன் ரிபப்ளிக்குகளில் மிக உயர் நீதிமன்றம் முடியத் தீர்ப்பு முதலிய கொடுக்கப்படுவதற்கு வழங்கும் மொழி அந்த ரிபப்ளிக்குகளில் வழங்கும் மொழியேயாகும். சில சந்தர்ப்பங்களில் யூனியன் ரிபப்ளிக் மிக உயர் நீதிமன்றம் தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகள், அமர்ந்துள்ள நடுவணர்கள் ஆகியவற்றைப் பொறுத்தத் தன்னுடைய தீர்ப்பை ரஷ்ய மொழியில் வழங்குவது உண்டு என்றும் சொன்னார்கள். அநேகமாக உக்ரேன் யூனியன் ரிபப்ளிக்கின் மிக உயர் நீதிமன்றத்தில் எல்லாத் தீர்ப்புகளும் உக்ரேன் மொழியிலேயே வழங்கப்படுகின்றன என்றும் அறிந்தேன்.

சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் யூனியன் ரிபப்ளிக்கின் மிக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகளை எதிர்த்தும் மற்ற நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை எதிர்த்தும் யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் நீதிமன்றத்திற்கு மேல் வழக்காடச் செல்வதும் உண்டு. யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் நீதிமன்ற நடுவணர்கள் தம்மிடம் வரும் தஸ்தவேஜ்களை ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கச் செய்து பிறகு அவற்றை கவனிக்கிறார்கள். பொதுவாகப் பேசுமிடத்து யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் மிக உயர் நீதிமன்றத்தில் 30 அல்லது 35 நடுவணர்கள் இருக்கின்றார்கள். ஆதலாலும் இவர்கள் நாட்டின் பல்வேறு பெரிய மொழிகள் வழங்கும் பகுதிகளிலிருந்தும் வருகின்றவர்கள் ஆதலாலும் தனிப்பட்ட வழக்குகளை விசாரணைக்கு எடுக்கும்பொழுது நடுவணர்களின் மொழி வன்மை முதலியனவும் கவனிக்கப்படுகின்றன.

அரசாங்கத்தார் வைத்து நடத்தும் வாணிக அமைப்புக்களுள் உரிமைப் போராட்டம் நடைபெறுமேயானால் அவற்றை விசாரித்து நீதி வழங்க நடுவணர் மன்றங்கள் சிலவும் இருந்து வருகின்றன. "உற்பத்தி வழிகள்" என்று சொல்லப்படும் அனைத்தும் அரசாங்கத்தின் கையிலேயே இருக்கின்ற காரணத்தால் இந்த அமைப்புக்களுள் ஏற்படுகின்ற பெருந்தொகை பற்றிய வழக்குகள் அனைத்தும் சாதாரண நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் இந் நடுவணர் மன்றங்களுக்கே வருகின்றன. இந் நடுவணர் மன்றங்கள் அரசாங்கத்தின் நிர்வாகத் துறையாரால் நியமிக்கப்பட்டாலும் நிர்வாகத் துறையின் ஒரு பகுதியாகக் கருதப்படாமல் சுதந்திரமுள்ள பகுதியாகவே கருதப்படுகிறது என்றும் சொன்னார்கள்.

யு.எஸ்.எஸ்.ஆர்-ன் அரசியல் அமைப்பு, பகுதி 3, விதி 40-ன்படி யு.எஸ்.எஸ்.ஆர்-ன் மிக உயர் சோவியத் நிறைவேற்றும் சட்டங்கள் அனைத்தும் யூனியன் ரிபப்ளிக்குகளில் வழங்கும் எல்லா மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அதாவது சுப்ரீம் சோவியத்தின் சட்டங்கள் அனைத்தும் 16 மொழிகளில் மொழி பெயர்க்கப்படுகின்றன. அதே போல யூனியன் ரிபப்ளிக்கின் சட்டங்கள் அனைத்தும் அதிகார பூர்வமாக ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு மொழி

பெயர்த்தது சரியான முறையில் உள்ளதா என்பதை எதிர்த்து வழக்காடும் வழக்கம் அந்நாட்டில் இல்லை. இதே போன்ற ஒரு சூழ்நிலை இந்தியாவில் இருக்குமேயானால் இத்தகைய வழக்குகள் மிகுதியாக இருக்கும் என்று நமப இடம் உண்டு. மொழி பெயர்ப்புச் சட்டத்திற்கும் மூல மொழிச் சட்டத்திற்கும் மாறுபாடு ஏற்பட்டு எது அதிகார பூர்வமானது என்ற விவாதம் வருமேயானால் எவ்வாறு முடிவு செய்வீர்கள் என்று கேட்டேன். இத்தகைய ஒரு சூழ்நிலை வரவே போவதில்லை என்று கூறி அப்படி ஒரு வேளை வருமானால் அந்தச் சட்டம் முதலில் எந்த மூல மொழியில் இயற்றப்பட்டதோ அதுவே அதிகார பூர்வமானது என்று கூறினார்கள். உக்ரேன் பகுதியில் கீவ் நகரத்தில் விஞ்ஞானக் கழகத்தில் சட்டத் துறையைக் கண்காணித்து வரும் அறிஞர் கொரோட்ஸ்கி இதைப் பற்றி பேசும் பொழுது தம்முடைய நீண்டகால அனுபவத்தில் மொழி பெயர்ப்பின் மெய்ம்மை பற்றி ஒரு முறை கூட யாரும் கேட்டதாகத் தமக்கு நினைவே இல்லை என்று கூறினார். இத்தகைய ஒரு சூழ் நிலை ரஷ்ய நிலையில் ஏற்படாமல் இருப்பதில் வியப்பொன்றும் இல்லை. அதற்குரிய காரணங்களும் சில உண்டு. முதலாவது கற்றறிந்தவர் அனைவரும் ரஷ்ய மொழியை அறிந்திருப்பார்கள். ஆதலால் துல்லிய மல்லாத மொழி பெயர்ப்பு என்பது அதிகமாக இராது. இரண்டாவது ரஷ்ய நீதிமன்ற முறைப்படி சட்டத்தை அதன் எழுத்துக்களை அப்படியே போற்றும் வழக்கம் நம்முடைய நாட்டில் உள்ளது போல் இல்லாமல் இன்னும் குறைவாகவே இருக்கிறது.

26. யு.எஸ்.எஸ்.ஆர்.-ல் வழங்கப்படும் நீதியையும் நீதிமுறை ஆட்சியையும் கவனிக்கும் அளவில் இந்நாட்டில் அவை இருப்பதற்குப் பெரிதும் மாறுபட்ட முறையில் அந்நாட்டில் உள்ளன என்று கூறலாம். எனவே அவர்களும் பல மொழி பேசும் நாட்டினர் என்ற அடிப்படையில் மொழிப் பிரச்னையை நீதித் துறையில் அவர்கள் எங்ஙனம் சாதித்தார்கள் என்று அறிந்து நம்முடைய நாட்டிற்கு அதனைக் கொண்டு செலுத்துதல் இயலாத காரியம். வழக்குச் சட்டங்கள், பிற வழக்கு மேற்கோள்கள் ஆகிய இரண்டையும் பற்றி முன்னரே குறிப்பிடப்பட்டது. ரஷ்ய நீதிமன்ற மரபு சோவியத் காலத்திலும் புரட்சிக்கு முற்பட்ட காலத்திலுங்கூட நீதியாளர்கள் கூறும் " பேரண்டல் லா " என்பதைத் தழுவியே உள்ளது. அதாவது நீதி மன்றங்கள் சமுதாயத்தில் அமலில் இருந்துவரும் சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து வாழும் மனநிலையை உண்டாக்க முயல்வதாகும். ஒரு அதிகார பூர்வமான மேற்கோளை இங்கே காட்டுகிறேன் :—

"நடுவணர்கள் 'தொழிற்சாலைகளிலிருந்து திருட்டுக்களைத் தடுக்க அதிக முயற்சி எடுக்க வேண்டும்' என்று கட்சி வழிகாட்டிகள் கூறுவதுண்டு. மேலும் தொழிற்சாலையின் கணக்குப் புத்தகங்களை நன்கு வைத்துக்கொள்ளாத நிர்வாகிகளை மிகுதியும் தண்டிக்க வேண்டும் என்றும், கட்சி விரும்பாத சில நிகழ்ச்சிகளை 'அழிப்பதற்கு' நடுவணர்கள் உதவ வேண்டும் என்றும் கட்சி விரும்பும். மேலும் புதிய சட்டங்கள் விரைவிலும் அதிக சிரமமில்லாமலும் இயற்றப்படலாம். எனவே இதன் காரணமாக வழக்குச் சட்டங்கள் மதிப்பிழந்துவிடுகின்றன. கொள்கை மாற்றத்தினால் மரபு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது."

1938-ஆம் ஆண்டு நீதிச்சட்டம், மூன்றாவது விதி, இங்ஙனம் பேசுகிறது:—

"நீதிமன்றங்கள் தங்களுடைய எல்லாச் செயல்களினாலும் யு.எஸ்.எஸ்.ஆர்.-ரிலுள்ள மக்கள் தாய்நாட்டுப் பற்றும், சோஷலிஸத்தில் பற்றும், சோவியத் சட்டங்களை ஒழுங்கு முறை தவறாமல் கொண்டு செலுத்தும் கடமை உணர்ச்சியும், சமுதாயச் சொத்தில் அதிக கவனமும், பொது மக்கள் த்து நேர்மையும், சோஷலிஸப் பொது வாழ்வில் சட்டத்திற்கு மதிப்புக் கொடுத்து நடத்தும் இயல்பும் பெருகும்படியாகப் பார்த்துக் கொள்ளவேண்டும்."

போகிறபோக்கில் நம்முடைய நாட்டு நீதிமுறைக்கும், யு.எஸ்.எஸ்.ஆர்.-ன் நீதி முறைக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுவதற்கு மற்றொரு குறிப்பையும்

எடுத்துச் சொல்லலாம். அதாவது பிரக்யூரேட்டர்-ஜெனரல் என்ற அதிகாரியின் நியமனத்தைப் பற்றிப் பார்க்கலாம். நம்முடைய நீதி முறையில் எந்த அதிகாரியும் செலுத்தும் அதிகாரத்தைப்போல் அல்லாமல் யு.எஸ். எஸ்.ஆர்.-ல் மிக உயர் சோவியத்தால் ஏழு ஆண்டுகளுக்கு நியமிக்கப்படும் இந்த அதிகாரி விசேஷமான சில அதிகாரங்களைச் செலுத்துகிறார். எல்லா அமைச்சுக்களும் அந்த அமைச்சுக்களின் கீழுள்ள எல்லா அமைப்புக்களும் யு.எஸ்.எஸ்.ஆர்.-இலுள்ள பொது மக்களும், அதிகாரிகளும் சட்ட முறைக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றார்களா என்பதைக் கவனிக்கும் பொறுப்பு பிரக்யூரேட்டர்-ஜெனரலைச் சேர்ந்ததாகும். ஏனைய ரிபப்ளிக்குகளிலும் அதற்கு கீழுள்ள பகுதிகளிலும் இத்தகைய கடமைகளைச் செய்யும் பிரக்யூரேட்டர்களை இவரே நியமனம் செய்கிறார். "பிரக்யூரஸி" என்ற இந்த அமைப்பு நம்முடைய நீதி முறையில் இல்லாத ஒரு புதுமையாகும். இந்தப் பிரக்யூரேட்டர்கள் ஆட்சித் துறை முழுவதையும் கவனித்து ஆட்சியாளர்களும் நிர்வாக அதிகாரிகளும் தங்களுடைய எல்லைகளைக் கடவாமல் பார்த்துக் கொள்வது இவர்களுடைய கடமையாகும். மேலும் சோவியத் பிரக்யூரேட்டர்கள் ஆட்சித் துறையாளர்களால் அநீதி இழைக்கப்பட்ட எல்லா நீதி வேண்டும் மக்களுக்கும் காவலாளிகளாகவும் உள்ளனர். யு.எஸ்.எஸ். ஆர்.-ன் மிக உயர்நீதி மன்றத்திற்கு மேல் வழக்காட வருகின்ற வழக்குகள் அனைத்தும் பிரக்யூரேட்டர்-ஜெனரல் மூலமே வருகின்றன. அதாவது, ஒன்று அவராகவே மேல் வழக்காட விரும்புவதன் மூலமோ, அன்றி நடுமன்றம் விரும்பியோ மேல் வழக்காட இவை வருகின்றன.

முடிவுகளின் சுருக்கம்

27 நான் எழுதியுள்ள இந்த அறிக்கையில் இடைநிலை மொழிப் பிரச்னை ஒன்றைப் பற்றியே நான் ஆராய எடுத்துக்கொண்டேன்; ஆதலால் அதை மட்டுமே பேசியுள்ளேன் என்று சொல்லத் தேவையில்லை. கல்வித் துறையிலும் நீதித் துறையிலும் ஓரளவு இதை நன்கு புரிந்துகொள்வதற்குத் தேவையான அளவு எடுத்துக் கூறியுள்ளேன். யு.எஸ்.எஸ்.ஆர்.-இலுள்ள கல்வி முறையின் "உள்ளீடு", "தகுதி" என்பவை பற்றி யாதொரு முடிவும் நான் சொல்லவில்லை. அன்றியும் சோவியத் நாட்டு நீதி முறையைப் பற்றியும் நான் ஒன்றும் சொல்ல வரவில்லை.

28. சுருங்கக் கூறுமிடத்து—இத்துறையில் இரண்டு விஷயங்கள் ஒன்றைபோல் இருப்பதற்கில்லை. எனவே, மற்றொரு நாட்டில் உள்ள சூழ்நிலையில் கிடைத்த அனுபவத்தைக்கொண்டு இந்நாட்டுச் சூழ்நிலைக்கு ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்வதானால் அதை மிகவும் கவனத்தோடு செய்ய வேண்டும். இறுதியாக நம்முடைய நாட்டில் மொழிப் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமேயானால் நம்முடைய தேவைக்குத் தக்கபடி நாம் காணும் ஒரு முடிவாகவே அது இருத்தல் வேண்டும். நம்முடைய பிரச்னையை உடனே தீர்க்கக்கூடிய கைகண்ட ஔடதமாகப் பிற நாட்டில் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது தவறானதாகும்.

என்றாலும் பரந்த முறையில் கூறும்பொழுது பல்வேறு மொழிப் பிரச்னையைக் கூடுமானவரை வெற்றிகரமாகத் தீர்த்துவைத்த அனுபவம் யு.எஸ்.எஸ்.ஆர்.-க்கே உண்டு. ஆதலால் அதிலிருந்து கீழ்க்கண்ட முடிவுகளை நாம் செய்வது தவறாகாது :—

மொழிப் பிரச்னையைத் தத்துவ முறையில் புறக் கொள்கையாகக் கொண்டே கவனிக்கவேண்டும். எல்லா மொழிகளும் பண்பாட்டை வெளியிடும் கருவியாக இருத்தலின் அவற்றின் தகுதிக்கேற்ப இத்தொழிலைச் செய்யக்கூடும் என்பதை உணர்ந்து கொண்டால் மொழிப் பிரச்னையோடு